ஊராட்சி பற்றிய நடைமுறை நூல்

பாகம் I—ஊராட்சிகள்

(1966 அக்டோபர் 1 ஆம் தேதி வரை திருத்தப்பட்டது)

©
தமிழ் நாடு அரசு
1973

விலை ரூ. 11-85 காசு.

தமிழ்நாடு அரசாங்கத்திற்காக தமிழ் நாடு எழுதுபொருள்-அச்சுத்துறை
இயக்குநரால் அச்சிடப்பட்டது
1973

'விதிகளை வெல்வோம்'

ஊராட்சி பற்றிய நடைமுறை நூல்

பாகம் I—ஊராட்சிகள்

(1966 அக்டோபர் 1 ஆம் தேதி வரை திருத்தப்பட்டது)

©
தமிழ் நாடு அரசு
1973

தமிழ்நாடு அரசாங்கத்திற்காக தமிழ்நாடு எழுதுபொருள்—அச்சுத்துறை
யக்குநரால் அச்சிடப்பட்டது
1973

முகவுரை

ஊராட்சி பற்றிய நடைமுறை நூல் என்பது, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படிக்குச் செய்யப்பட்ட விதிகள், அவ் விதிகளின் தொடர்பான செயல் கட்டளைகள் ஆகியவற்றின் தொகுப்பாகும். ஊராட்சி நடைமுறை நூலில் ஏற்கெனவே சேர்க்கப்பட்டு இன்னும் அமலில் இருந்துவருகிற செயல்முறைக் கட்டளைகள் இந்த நடைமுறை நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு பொருளுக்கும் தொடர்பான விதிகள் ஒரு பத்தியின்கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளன; பத்திகளுக்குத் தொடரெண் கொடுக்கப்பட்டுள்ளது. செயல் கட்டளைகளுக்குத் தனியாகத் தொடரெண் கொடுக்கப் பட்டுள்ளது; விதிகளை மேற்கோள் காட்டும் விதம், "1 ஆவது பத்தியின்கீழ் உள்ள 3 ஆம் விதி", "5 ஆவது பத்தியின்கீழ் உள்ள 5 ஆம் விதி" என்பது போன்றிருக்கும். கட்டளைகளை மேற்கோள் காட்டும் விதம், "கட்டளை (3)", "கட்டளை (5)" என்பது போன்றிருக்கும்.

இந்த நடைமுறை நூல், பஞ்சாயத்து நடைமுறை நூலை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக அமலில் இருக்கும்.

இந்த நடைமுறை நூலில் காணப்படும் ஏதேனும் தவறு பற்றி, அல்லது சேர்க்காமல் விடுபட்டுப்போன ஏதேனும் பொருள்பற்றி, "அரசாங்கக் கூட்டுச் செயலாளர், ஊரக வளர்ச்சி–உள்ளாட்சித் துறை, சென்னை-9" என்னும் அலுவலருக்குத் தெரிவிக்கலாம்.

பொருளடக்கம்

பாகம் I—ஊராட்சிகள்	பத்தி.	பக்கங்கள்
அத்தியாயம் I—அமைப்பும் கட்டுப்பாடும்		
மக்கள் தொகை இன்னதென்று நிச்சயிப்பது ..	1	18
ஊராட்சிகளை அமைப்பது பற்றிய அறிவிக்கைகளை எதிர்த்து இன்ன காலத்துக்குள் அரசுக்கு மேல்முறையீடுகளை அனுப்ப வேண்டுமென்பது.	2	18
ஓர் ஊர் அல்லது பேரூரிலிருந்து ஏதேனும் உள்ளாட்சிப் பரப்பினை நீக்கி விடுவது அல்லது அதற்குள் சேர்ப்பது.	3	18
ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை ..	4	20
அட்டவணையில் கண்ட இனங்களின் உறுப்பினர்களுக்காக இடங்கள் ஒதுக்கிவைத்தல். ..	5	21
ஊராட்சிக் குழுக்களை அமைப்பது, அவற்றில் வெளியார்களைச் சேர்த்துக்கொள்வது, அக்குழுக்களிடம் அலுவல்களை ஒப்படைப்பது. ..	6	24
கூட்டுக்குழுக்களின் அமைப்பு, அதிகாரங்கள்; நடைமுறை, முதலியன.	7	25
ஊராட்சிகள், ஊராட்சிக் குழுக்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள்.	8	28
ஊராட்சி உறுப்பினர்கள் தலைவரை இடைக் கேள்விகள் கேட்பது.	9	37
ஊராட்சிக் கூட்டங்களில் தீர்மானங்கள் கொண்டு வருதல்.	10	39
தலைவருடைய அலுவல்களை இன்னொருவருக்கு மாற்றுவதும் ஒப்படைப்பதும்.	11	42
ஊராட்சித் தலைவர்களும் துணைத் தலைவர்களும் உறுப்பினர்களும் விலகுதல்.	12	45
பதவியிலிருந்து விலகும் தலைவர்கள் முதலியவர்களிடமிருந்து ஊராட்சி உடமைகளைக் கைவசப்படுத்திக் கொள்வதற்கான அதிகாரி.	13	46

	பத்தி.	பக்கங்கள்.
ஊராட்சிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் உறுப்பினர்கள் முதலியவர்களுக்குப் பயணப்படி.	14	47
தேர்தல் அதிகாரிகள்.	15	51
வாக்காளர் பட்டிகள் முதலியவற்றை வெளியிடும் செயல்களுக்கான அதிகாரி.	16	52
ஊராட்சிகளின் உறுப்பினர்களின் தேர்தல் நடத்துவது பற்றிய 1964–ஆம் ஆண்டின் விதிகள்.	17	56
பேரூராட்சிகளின் உறுப்பினர்கள் தேர்தல் நடத்துவது பற்றிய 1964–ஆம் ஆண்டின் விதிகள்.	18	74
ஊராட்சிகளின் தலைவர்களையும் துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பது.	19	122
சிலவற்றில் ஊராட்சிகள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது.	20	128
ஊராட்சிகளின் தேர்தல் தகராறுகளைத் தீர்த்துவைப்பது.	21	129
தேர்தல் மறையத்தை (இரகசியத்தை) மீறுதல் ..	22	138
அமலில் இருக்கிற ஒப்பந்தங்களில் அக்கறையுடைய ஊராட்சி உறுப்பினர்களின் தகுதியின்மையை அகற்றுவது.	23	138
உறுப்பினர்களின் தகுதியின்மை பற்றிய ஐயப்பாடுகளைத் தீர்ப்பதற்குரிய நீதித்துறை அதிகாரி. ..	24	143
ஊராட்சிகளின் கட்டுப்பாட்டுக்குபட்ட்ட நிறுவனங்களுக்கு ஊராட்சிகள் விடுமுறைகள் வழங்குவது.	25	156
யாதாயினும் ஒரு பொருள் முதலியவை பற்றித் தகவல் தரும்படிக் கேட்க செயல் அதிகாரிக்குள்ள அதிகாரம்.	26	156
செயல்முறைக் குறிப்புகள் அல்லது பதிவுகளுக்குப் படிகள் வழங்குவது.	27	157
அறிவிக்கை அல்லது அறிவிப்பு வெளியிடும் விதம்.	28	159
ஊராட்சிகளின் செயல் அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியவர்களின் கையொப்ப அச்சுகளைப் பயன்படுத்துவது.	29	162

	பத்தி.	பக்கங்கள்.
நுழைவதற்கும் பார்வையிடுவதற்குமான அதிகாரங்கள் பற்றிய வரையறைகளும் கட்டுப்பாடும். ..	30	167
தணிக்கையாளர்கள், ஆய்வு அலுவலர்கள், கண்காணிக்கும் அலுவலர்கள் முதலியோரின் அதிகாரங்கள்.	31	168
இணை வளர்ச்சி ஆணையாளர், மாவட்ட ஆட்சியாளர் ஆகியவர்களின் நெருக்கடிக்கால நிலை அதிகாரங்களின் பற்றிய கட்டுப்பாடு. ..	32	171
ஊர் அலுவலர்களிடமிருந்து கேட்கப்படக்கூடிய தகவல்.	33	172
செயல் அதிகாரி ஆவணங்களைத் தாக்கல் செய்தல் ..	34	172
ஊராட்சிகளின் செயல் அலுவலர்களின் அலுவல் களைத் தலைவர்கள் செய்யும்போது அவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரையறைகளும் கட்டுப் பாடும்.	35	173

அத்தியாயம் II—வரவு செலவுத் திட்டம் ஆட்சி அறிக்கை தணிக்கை.

ஊராட்சிகள் சம்மந்தமான வரவு செலவுத் திட்டமும் நிதிகள் ஒதுக்கீடும்.	36	175
ஆட்சி அறிக்கைகளைத் தயாரித்தனுப்புதல் ..	37	183
தணிக்கை அறிக்கைகளை வெளியிடுவதும் முடிவு செய்தலும்	38	196
(தணிக்கையின்பேரில்) தண்டம் செலுத்துதலையும் (தணிக்கையில்) ஒப்புக்கொள்ளப்படாத தொகை யையும் பற்றிய விதிகள்	39	198

அத்தியாயம் III-பணியாளர் அமைப்புகள்

பேரூராட்சிகளின் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கு மான தகுதிகள்	40	201
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்காகப் பொதுவான அலுவலரை அல்லது பணியாளரை நியமிப்பது	41	207
ஊராட்சிகளின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோ ருடைய தனிப்பட்ட நடத்தை	42	208

	பத்தி.	பக்கங்கள்.
ஊராட்சிப் பணியாளர் தொகுதிகளுக்குரிய நிலுவைப் பாக்கிகளைக் கொடுப்பது	43	224
ஊராட்சிகளில் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் பணிக்கொடைகள் வழங்குவது	44	226
ஊராட்சிகளின் பணியாளர் அமைப்புப் பற்றிய விதியை அல்லது ஒழுங்கு முறையைத் தளர்த்த அரசுக்குள்ள அதிகாரம் ..	45	238
தமிழ்நாடு ஊராட்சிகளின் (பணியாளர்கள் தேசியப் பாதுகாப்பைப் பேணுவது பற்றிய) 1962–ஆம் ஆண்டின் விதிகள்	46	238
தமிழ்நாடு ஊராட்சிக் கடைநிலைப் பணியாளர்கள்–வேலையாட்களின் வருங்கால சேம–நிதி பற்றிய 1965–ஆம் ஆண்டின் விதிகள்	47	240

அத்தியாயம் IV—வரிகளையும் மற்ற வருவாய்களையும் மதிப்பிடுவதும் வசூலிப்பதும்.

வரிகள் விதிப்பும் வசூலிப்பும்	48	262
வீட்டுவரி	49	306
ஆண்டு அல்லது முதற்பொருள் மதிப்பு அல்லாத வேறு அடிப்படையின் பேரில் வீட்டுவரி விதிப்பது.	50	316
தொழில் வரி—பெரும விதிப்பு வீதங்களும் குறும விதிப்பு வீதங்களும்	51	317
வண்டிக்கு வரி—விலக்கும், பெரும விதிப்பு வீதங்களும் குறும விதிப்பு வீதங்களும்	52	325
சொத்துமாற்றங்களின் பேரில் தீர்வை	53	330
உழவு நிலத்தின் மீது வரி	54	335
ஏதேனும் பொது அல்லது தனியார் அங்காடி சம்பந்தமாக அல்லது அதைப் பயன்படுத்துபவர் சம்பந்தமாக ஊராட்சி அல்லது செயல் அதிகாரி செலுத்தக்கூடிய அதிகாரங்கள் ..	55	337
தனியார் அங்காடிகளின் கணக்குகள் வைப்பதும் தணிக்கை செய்வதும் ஆய்வு செய்வதும் .	56	341
பொதுத் தங்கல் இடங்கள், வண்டி பேட்டைகள் முதலியன	57	343

	பத்தி.	பக்கங்கள்.
கால்நடைகளை வெட்டுவதற்குச் சில இடங்களைப் பயன்படுத்தக்கூடாதென்று தடுப்பதும், அல்லது அவ்வாறு பயன்படுத்துவதை முறைப்படுத்துவதும், கால்நடைகளை வெட்டுகிறவர்களுக்கு உரிமம் வழங்குவதும்	58	347
உரிமங்கள், அனுமதிச் சீட்டுகள் முதலியவற்றின் படிவமும் உள்ளடக்கங்களும்	59	349
இயந்திரங்களை நிறுவுதல்—அனுமதியினின்றும் விலக்கு	60	352
மின்சாரத்தினால் அல்லது வேறு ஆற்றலால் இயக்கப் படுகிற இயந்திரங்களுக்கான பெரும் உரிமக் கட்டணம்	61	353
உரிமங்களுக்காகவும் அனுமதிகளுக்காகவுமான விண்ணப்பத்தின் மீது ஆணைகள் அனுப்புவதற் கான காலவரையறை	62	358
இடுகாடுகள், சுடுகாடுகள் முதலியவற்றிற்காக ஏற்பாடு செய்தல்	63	358
தனியார் கழிப்பிடங்களையும் சாக்கடைத் தொட்டி களையும் துப்புரவு செய்தல்	64	361
குடிமுறை நிலப் பரப்புகளிலுள்ள புறம்போக்குகளைப் பயன்படுத்துவதை முறைப்படுத்துவதற்கான வரை யறைகளும் கட்டுப்பாடும்	65	362
ஜமீன்களிலுள்ள சமுதாய நிலங்களை ஊராட்சி கள் பயன்படுத்துவதை முறைப்படுத்துவது—வரை யறைகளும் கட்டுப்பாடும்	66	388
ஊராட்சிகள் முதலியவைகளிடம் உரித்தாயிருக்கிற அல்லது அவைகளுக்குச் சொந்தமான பொதுச் சாலைகளில் அல்லது வேறு சொத்தில் வளரும் மரங்களுக்கான உரிமையை அறுதி செய்வது ..	67	391
ஊராட்சிகள் குடிமராமத்து ஏற்பாட்டினைச் செயற் படுத்துவது பற்றிய வரையறைகளும் கட்டுப்பாடும் ஊராட்சிகள் கட்டணங்கள் விதிப்பது ..	68	402
குத்தகைதாரர்களும் ஒப்பந்ததாரர்களும் கொடுக்க வேண்டிய வரியைத் தள்ளிக் கொடுத்தல் ..	69	411
ஊராட்சிக்குச் சேரவேண்டிய தொகைகளை வசூலிப்பது	70	412

பத்தி. பக்கங்கள்

வசூலிக்க முடியாத வரிகள், கட்டணங்கள் முதலிய வற்றைத் தள்ளுபடி செய்வதற்கான அதிகாரம்—வரையறைகளும் கட்டுப்பாடும் 71 413

III ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (ii) பகுதியின் செயல்களுக்காகக் நிர்ணயிக்கப் பட்ட அதிகாரி 72 418

உரிமங்களையும் அனுமதிகளையும் வழங்குவதைத் தடுப்பதற்கான அல்லது முறைப்படுத்துவதற்கான விதிகள் 73 418

ஊராட்சிப் பரப்புகளில், நெடுஞ்சாலை—ஊரகப் பொதுப் பணித் துறையினரிடம் உரித்தாக்கப்பட்டுள்ள சாலை ஓரங்களில் போடும் பந்தல்களுக்கும் தற்காலிகக் கட்டுக் கோப்புகளுக்கும் உரிமம் வழங்குதல். 74 434

நாய்களுக்கு உரிமம் வழங்குவதும், உரிமம் வழங்கப் படாத நாய்களை அழித்துவிடுவதும் 75 437

அத்தியாயம் V–வரவினங்களும் செலவும்

வரவினங்களும் செலவும் 76 441

பேரூராட்சிகளுக்குச் சொந்தமான நிலங்களைப் பாது காப்பாக வைப்பதும் முதலீடு செய்வதும் அவைகளை வாங்கும் விதமும் 77 466

வெளியார் ஒப்பளிப்பு இல்லாமல் ஊராட்சிகள் வழக்கு கள் பற்றிச் செய்தற்குரிய செலவுகளுக்கு வரையறை 78 471

வானொலிப் பெட்டிகளை வைத்துப் பேணுவதற்கான செலவு 79 472

வழக்கறிஞர் நியமனமும், சில வழக்குகளில் கட்டணங் கள் செலுத்துவதும் 80 473

அத்தியாயம் VI—பொதுப்பணிகளும் பலவகையும்.

தமிழ்நாடு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் (அமைப்புப் படங்கள், மதிப்பீடுகள் முதலியவற்றைத் தயாரிப்பது பற்றிய) விதிகள், 1963 .. .. 81 474

பாசன அலுவல்களை ஊராட்சிகளுக்கு மாற்றுவது .. 82 484

ஊராட்சிப் பணிகளுக்கான ஒப்ப அறிவிப்புகளை வர வழைப்பதும் ஏற்றுக்கொள்வதும் 83 486

சாமான்கள், சரக்குகள் முதலியவற்றை ஊராட்சி களுக்கு வழங்குவது 84 495

	பத்தி.	பக்கங்கள்.
கட்டிடங்களுக்கு எண் இடுவதற்கான அதிகாரி ..	85	500
குற்றங்களை இணக்கம் செய்து கொள்ளுதல் ..	86	500
பொதுவான அல்லது தனியார் ஊற்றுகள், குளங்கள், கிணறுகள், முதவியவற்றைப பயன்படுத்தக் கூடா தென்று தடுப்பது அல்லது அவ்வாறு பயன்படுத்து வதை முறைப்படுத்துவது	87	505
மேல்முறையீடுகளுக்கான காலவரையறை	88	506
ஊராட்சிகள் துணைச் சட்டங்கள் செய்தல்	89	507
ஒதுக்கப்படாத காடு ஒன்றை ஊராட்சியின் கட்டுப் பாட்டிலிருந்து குறிப்பிட்ட காலம் வரையில் எடுத்து விடலாமென்பது	90	508
அசையாப்பொருளை அடைவதும் மாற்றுவதும் ..	91	511
பொதுச்சாலைகள், சந்தைகள், விழாக்கள் ஆகிய வற்றை வகைபடுத்துவது	92	555
கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவது	93	556
அறிவிப்புகள் அல்லாத வேறு ஆவணங்களைச் சேர்ப் பிக்கும் வீதம்	94	556
ஊராட்சிகளுக்கு உரியதாக்கப்பட்டுள்ள நிலங்களில் கல் வெட்டியெடுக்கும் உரிமைகளைப் பயன் படுத்துவதை முறைபடுத்துவது	95	557
இணை வளர்ச்சி ஆணையாளர் கூட்டு வளர்ச்சி ஆணை யாளர் இவர்களுக்கு அனுப்பும் கேட்புக் கடிதங் களுக்குப் பொருள் கொள்வது	96	558
ஊராட்சியில் பெண் உறுப்பினரைச் சேர்த்துக் கொள்ளுதல்	97	558

ஊராட்சி பற்றிய நடைமுறை நூல்.

பாகம் I—ஊராட்சிகள்

அத்தியாயம் 1—அமைப்பும் கட்டுப்பாடும்.

அ. பொது.

(1) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் பல்வேறு ஏற்பாடுகள் வெவ்வேறு பரப்புகளில் அமலுக்கு வந்த தேதி.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் 1 ஆவது, 176 ஆவது பிரிவுகள், கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டைத் தாலூகாவும் தவிர, இம்மாநிலத்தின் மற்றெல்லாப் பரப்புகளிலும் 1959 சனவரி 31 ஆம் தேதி முதற்கொண்டு அமலுக்குக் கொண்டு வரப்பட்டன.

(1959 சனவரி 30 ஆம் தேதிய உள்ளாட்சித் துறை 188 ஆம் எண் பல்வகை அரசு ஆணை.)

அச்சட்டத்தின் மற்ற ஏற்பாடுகள் மேற்சொன்ன பரப்புகளில் 1960 சனவரி 1 ஆம் தேதி முதற்கொண்டு அமலுக்குக் கொண்டுவரப்பட்டன.

(1959 டிசம்பர் 29 ஆம் தேதிய உள்ளாட்சித் துறை 2182 ஆம் எண் பல்வகை அரசு ஆணை.)

(2) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டின் 28 ஆவது சட்டத்தை அமலுக்குக் கொண்டு வந்த தேதி.—ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மாற்றப்பட்ட பரப்புகளுக்கு, அதாவது 1959 ஆம் ஆண்டின் 56 ஆவது மத்திய சட்டமாகிய 1959 ஆம் ஆண்டின் ஆந்திரப் பிரதேசம்-தமிழ்நாடு (எல்லைகள் மாற்றச்) சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்டுப் பகுதிகளுக்கு, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளைப் பொருந்தச் செய்யும் (தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டின் 28 ஆவது சட்டமாகிய) 1961 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட வளர்ச்சி மன்றங்கள், ஊராட்சிகள்

(சேர்க்கப்பட்ட நாட்டுப் பகுதிக்குப் பொருந்தச் செய்யும்) சட்டம் 1961 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதியில் இருந்து அமலுக்குக் கொண்டுவரப் பட்டது.

(1961 செப்டம்பர் 30 ஆம் தேதிய ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை 2683 ஆம் எண் பல்வகை அரசு ஆணை.)

(1961 செப்டம்பர் 30 ஆம் தேதிய ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை 2684 ஆம் எண் பல்வகை அரசு ஆணை.)

(3) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டின் 27 ஆவது சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்த தேதி.—(தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டின் 27 ஆவது சட்டமாகிய) 1961 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் (மாற்றப்பட்ட நாட்டுப் பகுதிக்குப் பொருந்தச் செய்தல்) ஊராட்சி ஒன்றியம் மன்றங்கள் (முதல் அமைப்புக்கான சிறப்பு ஏற்பாடுகள்) திருத்தச் சட்டம் 1962 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதற்கொண்டு அமலுக்குக் கொண்டுவரப்பட்டது.

(1962 மார்ச் 21 ஆம் தேதிய ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை 683 ஆம் எண் பல்வகை அரசு ஆணை.)

(4) 1950 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகளைப் பொருந்தச் செய்தல்.—முன்னாள் திருவாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து மாற்றப்பட்ட பரப்புகளையும், ஆந்திரப் பிரதேச மாநிலத்திலிருந்து மாற்றப்பட்ட பரப்புகளையும் தவிர, இந்த மாநிலம் முழுவதிலும், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1960 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதியன்று அமலுக்கு வரத் தொடங்கியது. இச்சட்டத்தின் 13 ஆவது பிரிவில் பின் வருமாறு சொல்லப்பட்டிருந்தது. அதாவது, ஊராட்சி ஒன்றியம் மன்றங்கள் ஏற்படுகிற தேதியிலிருந்து மட்டுமே 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் நீக்கப்படுவதாகும். 1958 ஆம் ஆண்டுச் சட்டத்தின் நிறைவேற்று திட்டத்தின்படி ஊராட்சி ஒன்றியம் மன்றங்கள் மூன்று தொகுதிகள் கொண்ட வளர்ச்சிப் படி நிலைக்கிணங்க, இந்த மாநிலத்தில் ஏற்படும். முதலாவது தொகுதி 1960 அக்டோபர் 2 ஆம் தேதியிலிருந்தும், இரண்டாவது தொகுதி 1961 ஏப்ரல் 13 ஆம் தேதியிலிருந்தும், மூன்றாவது தொகுதி அச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குத் தேதியாகிய 1961 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதியிலிருந்தும் உண்டாகும். ஆகவே, 1961 அக்டோபர் 2 ஆம் தேதி வரையில், 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் ஆகிய இரண்டும் இம் மாநிலத்தில் தொடர்ந்து அமலில் இருந்துவரும்.

1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி 106 பொருள்களைப் பற்றி விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நடைமுறை நூல்

வடிவத்தில் இவ்விதிகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. 1891 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொது விதிச் சட்டத்தில் கண்ட 18 ஆவது பிரிவின்படி, இவ் விதிகள் எல்லாம், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பொருத்தமாகி யிருக்கிறவரையில், அதன்படிச் செய்யப் பட்டிருப்பதாகக் கருதப்படும். ஆகவே, 1950 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகள் ஊராட்சிகளுக்குப் பொருந்துகிறவரையில், 1958 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 13 ஆவது பிரிவினால் 1950 ஆம் ஆண்டுச் சட்டம் நீக்கப்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, 1958 ஆம் ஆண்டுச் சட்டம் அமலுக்குவரத் தொடங்கிய பிறகு கூட தொடர்ந்து அமலில் இருந்துவரும். ஆயினும், இந்த விதிகள், நாளடைவில், தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது சட்டத்தின் நிகரான ஏற்பாடுகளின்படி தனித் தனியாக மீண்டும் பிறப்பிக்கப்படும்.

(1960 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் தேதிய உள்ளாட்சித் துறை 1720 ஆம் எண் அரசு ஆணை.)

(5) வெவ்வேறு வருவாய் உள் வட்டங்களில் உள்ள ஊர்களுக்காக ஊராட்சி அமைப்பது.—வெவ்வேறு வருவாய் உள் வட்டங்களில் உள்ள ஊர்களின் தொகுதிக்காக ஊராட்சி அமைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

(1952 ஆகஸ்ட் 29 ஆம் தேதிய உள்ளாட்சித் துறை 32878/52-1 எண் குறிப்பாணை.)

(6) ஊராட்சிகளை அமைப்பதற்காக வருவாய் ஊரைப் பிரிப்பது.—ஆய்வாளர் ஊராட்சிகளை அமைப்பதற்காக ஒரு வருவாய் ஊரைப் பிரிக்கும்போது பின்வரும் கோட்பாட்டினைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்; ஊராட்சிகள் அமைக்கப்பெறும் சிற்றூர்கள் பெரியவைகளாகயிருக்க வேண்டுமென்பதும், மூலக் கிராமத்திலிருந்து இரண்டு அல்லது மூன்று மைல் என்பதைப் போல் அவைகள் சற்றுத் தள்ளியே பிரிந்திருக்க வேண்டும் என்பதுமே அக்கோட்பாடாகும்.

(1951 ஆம் ஆண்டு மார்ச்சு 20 ஆம் தேதி உள்ளாட்சித் துறை 10079/51-1 எண் குறிப்பாணை.)

(7) ஏற்கெனவேயுள்ள ஊராட்சிகளின் ஆட்சி வரம்புக்குள் புதிய ஊர்களைச் சேர்க்க வேண்டியுள்ள ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், வட்டார ஆய்வாளர் (ஆய்வாளர் தம்மிடம் ஒப்படைத்துள்ள அதிகாரங்களின்படி) புதிதாக ஒரு அறிவிக்கை பிறப்பிக்க வேண்டும்; அவ்வறிவிக்கையில் வருவாய் ஊர்கள் கொண்ட புதிய தொகுதியை "ஊர்" என்று அறிவிக்க வேண்டும்; திட்டவட்டமாக ஊரின் பெயரைக் குறிப்பிட வேண்டும்; ஊராட்சி அமைப்புப்பற்றி

முன்பு பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை நீக்கப்படுமென்று தெரிவிக்க வேண்டும்; அந்தப் புதிய ஊராட்சி தொடங்குவதற்கான ஒரு தேதியையும் குறிப்பிட வேண்டும்.

இதன் பொருட்டுப் பயன்படுத்தக் கூடிய எடுத்துக்காட்டான அறிவிக்கையின் நகல் ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

எடுத்துக்காட்டான அறிவிக்கை.

1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 127 (2) பிரிவின்படி தமிழ்நாடு நகராட்சி மன்றங்கள் உள்ளாட்சிக் கழகம் ஆய்வாளரால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு . . . . . சரகத்தில் நகராட்சி மன்றங்கள் உள்ளாட்சிக் கழகம் வட்டார ஆய்வாளர், இதனால்—

(I) மாவட்டத்தைச் சேர்ந்த வட்டத்திலுள்ள வருவாய் ஊர்களை ஒரு தொகுதியாக்கி, அவ்வாறு தொகுக்கப்பட்ட வருவாய் ஊர்கள் மேற்படி சட்டத்தின் செயல்களுக்காக, அச்சட்டத்தில் கண்ட 3 (1) (11) பிரிவின்படி பெயர்கொண்ட ஒரு ஊர் ஆகுமென்று அறிவிக்கிறார்;

(II) (அ) அச்சட்டத்தில் கண்ட 6 (1) பிரிவின்படி, தலைவர் நீங்கலாக ஊராட்சி உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை ஆக இருக்க வேண்டுமென்றும்,

(ஆ) அச்சட்டத்தில் கண்ட 8 (1) பிரிவின்படி, அட்டவணையில் கண்ட சாதி உறுப்பினர்களுக்காக . . . . இடம் (இடங்கள்) ஒதுக்கப்பட வேண்டுமென்றும்,

(இ) அச்சட்டத்தில் கண்ட 9(1) பிரிவின்படி, இணைப்பின் (1) கட்டத்தில் காட்டியுள்ளவாறு ஊராட்சிப் பரப்புத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென்றும், இணைப்பின் (2) (3) கட்டங்களில் காட்டியுள்ளவாறு ஒவ்வொரு வார்டும் ஊராட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனுப்ப வேண்டுமென்றும், கட்டளையிடுகிறார்.

ஊராட்சியினை அமைப்பதற்காக நகராட்சி மன்றங்கள், உள்ளாட்சிக் கழகம் ஆய்வாளர் தேதியன்று பிறப்பித்ததும், தேதியுள்ள மாநில அரசிதழின் 1-அ பாகத்தின் ம் பக்கத்தில் வெளியிடப்பட்டதுமான அறிவிக்கையை இவ்வறிக்கை அகற்றி அதற்குப் பதிலாக அமலில் இருந்து வரும்; இது முதற்கொண்டு அமலுக்கு வரத் தொடங்கும்.

இணைப்பு.

தொகுதியின் பெயரும் விவரமும்.	உறுப்பினர்களின் எண்ணிக்கை.	
	ஒதுக்கப்படாத இடங்களுக்காக.	ஒதுக்கப்பட்ட இடங்களுக்காக.
(1)	(2)	(3)
I....................		
II....................		
III ஒன்று இப்படியே		
மொத்தம் ..		

(1952 ஆகஸ்ட் 17 ஆம் தேதிய உள்ளாட்சித் துறை 1724 எண் பல்வகை அரசு ஆணை.)

(8) ஏற்கெனவேயுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சிகளை ஓர் ஊராட்சியாகச் சேர்க்க வேண்டியிருக்கிறவற்றில் தொடர்புடைய வட்டார ஆய்வாளர் (ஆய்வாளரால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு), தற்போது இரண்டு அல்லது பல ஊராட்சிகளைப் பெற்றிருக்கிற புதிய வருவாய் ஊரை ஓர் ஊர் என்று அறிவித்தும்/இணைக்கப்பட வேண்டிய ஊராட்சிகளில் உள்ள வருவாய் ஊர்கள் எல்லாவற்றையும் ஒன்றாகத் தொகுத்து அவற்றை ஒரு 'ஊர்' என்று அறிவித்தும், ஊரின் பெயரைக் குறிப்பிட்டும், 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 3 (1) (i) பிரிவின்படி

புதிதாக அறிவிக்கை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

3 (1) (ii) பிரிவின்படி

(7) கட்டளையின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள, எடுத்துக்காட்டாக, அறிவிக்கையில் தக்க மாறுதல்கள் செய்து, ஏற்கெனவேயுள்ள இரண்டு அல்லது பல ஊராட்சிகளை இணைப்பதற்குக் கூட பயன்படுத்திக் கொள்ளலாம்.

(1953 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதிய உள்ளாட்சித் துறையின் 38234/53-2-1 ஆம் எண் குறிப்பாணை.)

(9) **அச்சட்டத்தின் கீழ் விதிகள்.**—1953 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் வெவ்வேறு ஏற்பாடுகளின்கீழ் அரசாங்கத்தாருக்குக் கொடுக்கப்பட்டுள்ள விதிகள் செய்வதற்கான அதிகாரங்களுடன்கூட, பற்பல

நிகழ்வுகளைக் குறித்தும் அரசாங்கத்தார் விதிகள் பிறப்பிக்கலாமென்று அச் சட்டத்தின் 178 ஆவது பிரிவில் சொல்லியிருக்கிறது. ஊராட்சி ஒன்றியம் மன்றங்கள் தொடர்பான முதல் தொகுதி விதிகள், 1960 அக்டோபர் தேதிய உள்ளாட்சித்துறை 1677 ஆம் எண் அரசு ஆணையில் பிறப்பிக்கப்பட்டிருக் கின்றன. கீழ்க்கண்ட இணைப்பின் (2) கட்டத்தில் சொல்லப்பட்டுள்ளவற்றைக் குறித்து விதிகளை அல்லது கட்டளைகளைப் பிறப்பிப்பதைப் பற்றி அரசாங்கத் தார் ஆலோசனை செய்ததின் பேரில் அதன் (3) கட்டத்தில் விளக்கப்பட்டுள்ள காரணங்களினால் அவ்வாறு பிறப்பிக்க வேண்டா என்று அவர்கள் தீர்மானித் துள்ளார்கள்.

சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் படியும். சட்டத்தின் 178 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு பொருள்களைப் பற்றியுங் கூட விதிகள் பிறப் பிப்பதற்கு அச்சட்டம் அரசாங்கத்தாருக்கு அதிகாரம் கொடுக்கிறதென்று, தெரியவரும். ஆனால், எல்லாப் பொருள்களைக் குறித்தும் அரசாங்கத்தார் கட்டாயம் விதிகள் பிறப்பிக்க வேண்டுமென்பதில்லை. இது பற்றிய சட்ட நிலை என்னவென்றால்,—சில விஷயங்களைப் பற்றி விதிகள் பிறப்பிக்கப்பட்டால், அவற்றின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை அவ்விதிகளுக்குப் பொருத்த மானவையாயிருக்க வேண்டும்; ஆனால் விதிகள் எவையும் பிறப்பிக்கப்படா விட்டால், நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் அதிகாரம் எப்போதும் உண்டு; எந்த விதமாகத் தான் செயற்பட வேண்டுமென்பது. ஊராட்சி ஒன்றியம் மன்றத்துக்கே விட்டுவிடப்படும். அரசாங்கத்தாரின் எண்ணம் என்ன வென்றால், உள்ளூர்க்காரர்களே முதல் முயற்சி செய்யும்படி விட்டுவிட்டு, பலன் களைக் காணவேண்டும்; விதிகள் செய்வது உகந்ததென்று அனுபவத்திலிருந்து தெளிவாய்த் தெரிந்த பின்னர் தான் அவ்வாறு செய்யவேண்டும்.

இணைப்பு

1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின் பிரிவு. (1)	விதியின் கருவாயுள்ள பொருள். (2)	விதிகள் பிறப்பிப்பதற்கான கருத்துக்களைக் கைவிட்டதற்குக் காரணங்கள். (3)
40 (6)	ஊராட்சிகளின் செயல் அலுவலர்களைத்தேர்ந்தெடுத்து அமர்த்தல், அவர்களுடைய சம்பளம், படிகள் முதலியவை தொடர்பான ஒழுங்கு முறைகள்.	ஊராட்சிகளின் செயல் அலுவலர்களுக்காக அரசுப் பணி ஒன்றை அமைக்கவேண்டுமென, 1960 செப்டம்பர் 8 ஆம் தேதி உள்ளாட்சித் துறை 1906 ஆம் எண் அரசு ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது. செயல் அலுவலர்களைத் தேர்ந்தெடுத்து அமர்த்தல், அவர்களுடைய சம்பளம், படிகள் முதலியவை தொடர்பான விதிகளைப் பிறப்பிப்பது பற்றி ஆலோசனையிலிருந்து வருகிறது. ஆகவே, இது பற்றிய ஒழுங்கு முறைகளைப் பிறப்பிப்பது தேவையல்லவென்று கருதப்பட்டது.
53 (1)	பொது உடல்நலத் துறைப் பணியாளர் அமைப்புப் பதவிகளுக்கு ஒப்பளிப்பது.	1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டம் 57 (3) பிரிவின்படி ஆய்வாளருக்குள்ள அதிகாரங்களை மாவட்ட ஆட்சியில் செலுத்துவது பற்றி எவையேனும் வரையறைகளையோ நிபந்தனைகளையோ, விதிப்பது அவசியமல்லவெனக் கருதப்பட்டது.

1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின் பிரிவு. (1)	கருதியுள்ள விதியின் பொருள். (2)	விதிகள் பிறப்பிப்பதற்கான கருத்துக்களைக் கைவிட்ட திற்குக் காரணங்கள். (3)
63	ஊராட்சிகள் இவ்வள வுக்கு மேற்படாமலும் இவ்வளவுக்கு குறை யாமலும் செலவு செய்யலா மென்று வரையறைகளை அறுதி யிடுவது.	செலவுக்குப் பெரும வரம்பும் குறும வரம்பும் அறுதி யிடுவது உகந்ததல்ல வென்றும் தேவையல்ல வென்றும் கருதப்பட்டது. இத்தகையவற்றில் அரசுத் தொடர்பற்ற நிறுவனங்கள் மீது அலுவலர்கள் வெளி யிலிருந்து கொண்டு கட்டுப் பாடு விதிப்பதும் அவசிய மல்ல வென்று கருதப் பட்டது.
70	உடல் நல வாரம், குழந் தைகள் வாரம் கொண்டாட்டங்களுக்கு நேர்முகச் செலவு.	1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின் படி, மகப்பேறு நிலையங்க ளையும் குழந்தை நல நிலையங்களையும் நிறுவிப் பேணி வருவது, ஊராட்சி ஒன்றியம் மன்றங்களின் கடமையாகும். உடல் நல வாரம், குழந்தைகள் வாரம் கொண்டாட்டங்க ளுக்காகச் செலவு செய் வதற்கு வெளியார் ஒப்ப ளிப்புப் பெறுவது தேவை யல்லவெனக் கருதப் பட்டது.

1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின் பிரிவு.	கருதியுள்ள விதியின் பொருள்.	விதிகள் பிறப்பிப்பதற்கான கருத்துக்களைக் கைவிட்டதற்குக் காரணங்கள்.
(1)	(2)	(3)
70	இரண்டு அல்லது பல ஊராட்சி ஒன்றியங்களைப் பேணி வரவேண்டிய பொது நிறுவனங்கள்.	தற்போதைக்கு ஒரு விதி பிறப்பிப்பது தேவையல்லவென்று கருதப்பட்டது. பொது நிறுவனங்களைப் பேணி வர ஊராட்சி ஒன்றியம் மன்றங்கள் முன் வந்தால், விதிகளைப் பிறப்பிப்பதை மேற்கொள்ளலாம் என்றும் கருதப்பட்டது.
126	நில வருவாய்த் துறைப் பணியாளர் வரிகளையும் கட்டணங்களையும் தண்டல் செய்வது.	1960 ஆகஸ்டு 9 ஆம் தேதி ஊராட்சி வளர்ச்சித் துறை 644 ஆம் எண் அரசு ஆணையில், ஊராட்சி ஒன்றியங்கள் ஊராட்சிகள் சார்பில் ஊர் அலுவலர்கள் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றியும் அவர்களுக்கு ஊராட்சி வளர்ச்சிப்படி கொடுப்பதைப் பற்றியும் குறிப்பிட்டு ஆணையில் பிறப்பிக்கப் பட்டிருப்பதால் இதுபற்றி விதி எதுவும் பிறப்பிப்பது தேவையல்ல எனக் கருதப்பட்டது.
138, 139	ஊராட்சிகள் நிதிகளை ஒதுக்கி வைப்பது.	1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின் படி திட்டவட்டமான செயல்களுக்காக வரிகள் விதித்து வாங்கப்படுகின்றன. ஒதுக்கப்பட்ட நிதிகளிலிருந்து கிடைக்கும் தொகைகளை வேறு செயல்களுக்குத் திருப்பிவிடும் வினா எழாதெனக் கருதப்பட்டது.

(1961 பிப்பிரவரி மாதம் 7 ஆம் தேதி உள்ளாட்சித் துறை 9187 எல் 2/61-1 எண் குறிப்பாணை.)

(10) ஊராட்சி ஆட்சி வரம்பில் மாற்றம்.—செயலாற்றுவதற்காகச் சில காலங்களில் ஊராட்சிகளின் ஆட்சி வரம்பில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன என்றும், செயலாற்றும் எல்லைகளில் அவ்வாறு மாற்றங்கள் செய்வதினால் நாடாளுமன்றம், சட்டமன்றப் பேரவைத் தேர்தல் தொகுதிகளின் பரப்புப் பற்றிய விவரிப்புப் பாதிக்கப்படுகிற தென்றும் இதற்குக் காரணம், சம்பந்தப் பட்ட நாடாளுமன்றம், சட்டமன்றப் பேரவைத் தேர்தல் தொகுதிகளைக் கருத்தில் கொள்ளாமலேயே அம்மாற்றங்களுக்கான கருத்துருக்கள் ஆக்கப்படுவ தேயாகுமென்றும் தெரிய வந்திருக்கிறது. வெவ்வேறு வருவாய் உள்வட்டங் களில் உள்ள ஊர்களின் தொகுதிக்காக ஊராட்சி ஒன்றை அமைப்பதைத் தவிர்க்க வேண்டுமென, 1952 ஆகஸ்ட் 29-ஆம் தேதியன்று உள்ளாட்சித் துறை 32878/58-1 ஆம் எண் குறிப்பாணையில் ஏற்கெனவே கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டிருக்கின்றன. 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவதைக் கருதி ஒரு ஊராட்சியின் ஆட்சி வரம்பு ஒரு ஒன்றியமாகவுள்ள ஒரேவொரு வளர்ச்சி வட்டாரத்திற்குள் இருக்க வேண்டு மென்பதுகூட அவசியமாகும். இது பற்றிய ஆட்சி முறை இடர்ப்பாடுகளைத் தவிர்க்க வேண்டுமானால், ஊராட்சிகள் ஆட்சி வரம்பினை அமைக்கும்போது அல்லது மீண்டும் அமைக்கும்போது அல்லது இரு கூறுகளாகப் பிரிக்கும்போது அல்லது அதனை வேறு விதமாக வரையறுக்கும் போது அவ்வாறு அறிவிக்கை செய்யப்பட்ட ஊராட்சி அப்பொழுது ஏற்பட்டிருக்கிற ஒரேவொரு நாடாளு மன்றத் தேர்தல் தொகுதியினுடையவும் சட்டமன்றப் பேரவைத் தேர்தல் தொகுதியினுடையவுமான எல்லைக்குள் இருக்கும்படி பார்த்துக் கொள்வது அவசியமெனக் கருதப்படுகிறது. மேலும் ஊராட்சிகளை அமைப்பதற்காக அல்லது ஊராட்சிகளின் ஆட்சி வரம்பினை மாற்றுவதற்காக அல்லது ஊராட்சிகளை அமைப்பதற்கு ஊர்களைத் தொகுப்பதற்காக மேலதிகாரி களுக்கோ அரசுக்கோ கருத்துருக்கள் அனுப்பும்போது, அந்தக் கருத்துருக் களில் மற்ற செய்திகளுடன் கூட பின்வரும் தகவல்களும் தவறாமல் அடங்கி யிருக்க வேண்டும்; அவையாவன,—அந்தக் கருத்துருக்களில் அப்பொழுது பகுதியிலிருக்கிற நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றப் பேரவைத் தேர்தல் தொகுதிகளின் எல்லைகள் பாதிக்கப்படுமா என்பது; அப்படிப் பாதிக்கப் படுமானால் அதன் அளவு, அந்தத் தகவலில், பரப்பு, (அரசிறை), பேரிசு பற்றிய விவரங்கள் மாத்திரமேயல்லாமல், 1961 மக்கள் தொகை கணக்குக் குறியீட்டு அலகுகள் பற்றிய விவரங்களும் 1961 மக்கள் தொகை எண்கள் கிடைக்கிற வரையில் 1951 மக்கள் தொகைக் கணக்குப் படியான மக்கள் தொகை பற்றிய விவரங்களும் அடங்கியிருக்க வேண்டும்.

(1961 எப்ரல் 22 ஆம் தேதி உள்ளாட்சித் துறை 72644 எல்1/61-1 எண் குறிப்பாணை.)

(11) ஊராட்சிகளின் பட்டியைத் தயாரிப்பது.—*1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின் படியான ஊராட்சி தற்போதைய அமைப்பு முறையில், மாவட்ட ஆட்சியாளர் ஊராட்சிகளின் ஆய்வாளர்கள் ஆவார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சியாளர்கள் தங்கள் மாவட்டங்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஊராட்சிகளின் பட்டியைத் தயாரித்து அச்சிட வேண்டுமென அரசு கட்டளையிடுகிறது. தயாரித்து அச்சிடப்பட வேண்டிய ஊராட்சிகள் பட்டியின் படிவம் கீழே தரப்பட்டுள்ளது :*

வளர்ச்சி மாவட்டம்.

வருவாய்த் துறைக் கோட்டம்.

ஊராட்சி ஒன்றியம்.

தொடர் எண்.	ஊராட்சியின் பெயர்.	பேரூர் அல்லது ஊர்.	ஆட்சி வரம்பு.	மக்கள் தொகை.	அஞ்சலகம்.	இருப்புப்பாதை நிலையம்.	அமைப்பு எண்ணும், தேதி யும்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)

இடங்கள். ஒதுக்கி வைக்கப் பட்டவை.	இடங்கள். ஒதுக்கி வைக்கப் படாதவை.	இடங்கள். மொத்தம்.	பரப்பு.	வருமானம்.	தொகுதிகளின் எண்ணிக்கை.	செயல் அலுவலர்களின் நியமனத்துக்கு ஆணை அறிவிக்கையின் தேதி.	ஊராட்சிகளுக்குக் கடைசி முறையாக நடந்த பொதுத் தேர்தலின் தேதி.
(9)	(10)	(11)	(1)	2)	(13)	(14)	(15)	(16

இந்தப்பட்டி, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வளர்ச்சி மாவட்டத்திலிருக்கிற வருவாய்த் துறைக் கோட்டம் ஒவ்வொன்றுக்காகவும் ஊராட்சி ஒன்றிய வாரியாக இருக்க வேண்டும். (i) மாவட்ட ஆட்சியாளர்கள், வருவாய்த் துறைக் கோட்ட அலுவலர்கள், மற்ற அரசாங்க அலுவலர்கள் ஆகியவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்காகவும், (ii) பொதுமக்களுக்கும் ஊராட்சிகளுக்கும் விற்பனைக்காகவும், ஒவ்வொரு மாவட்டத்துக்காக அச்சிடப்பட வேண்டிய படிகளின் எண்ணிக்கையை மாவட்ட ஆட்சியாளர் தீர்மானித்துக் கொள்ளலாம். பட்டியைத் தயாரிப்பதற்காக, 1962 சனவரி 'கிராம நலம்' சிறப்பு இதழில் அச்சிடப்பட்டுள்ள வருவாய்த் துறைக் கோட்ட வாரியான ஊராட்சிகளின் பட்டியைக் கூட அடிப்படையாக மாவட்ட ஆட்சியாளர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சென்னை, எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர், மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து செய்தி கிடைப்பதன் பேரில், மாவட்டம் ஒவ்வொன்றுக்காகவும் ஊராட்சிகளின் பட்டியை அச்சிடும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக அப்பட்டியை அச்சிட வேண்டும்.

(1962 பிப்பிரவரி மாதம் 14 ஆம் தேதி ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை 353 ஆம் எண் பல்வகை அரசு ஆணை.)

(12) **ஊராட்சிகளை வகைப்படுத்துவது.**—ஒரு வருவாய் ஊர் அல்லது ஊர்கள் அல்லது ஒரு வருவாய் ஊரின் பாகம் அல்லது இரண்டு அல்லது பல வருவாய் ஊர்கள் அடுத்தடுத்துள்ள பாகங்கள் அடங்கியதும், ஐயாயிரத்துக்குக் குறையாதென்று மதிப்பிடப்பட்ட மக்கள் தொகை கொண்டதும், பத்தாயிரம் ரூபாய்க்குக் குறையாதென்று மதிப்பிடப்பட்ட ஆண்டு வருமானமுள்ளதுமான பகுதியின் பரப்பு ஒவ்வொன்றையும், 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் செயல்களுக்காக ஒரு பேரூராட்சி என வகைப்படுத்தி அவ்வாறே அறிவிக்க, அச்சட்டத்தின் 3 (1) (அ) பிரிவில் ஆய்வாளருக்கு (மாவட்ட ஆட்சியாளருக்கு) அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பகுதிப் பரப்பை ஊராட்சி என அறிவிக்கும் (அதாவது, அமைக்கும்) போது இந்த ஏற்பாட்டின்படி வகைப்படுத்த வேண்டும்.

1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 3-ஆவது பிரிவில் கண்ட (1) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை மேற்படி பேரூர் அல்லது ஊர் நிறைவு செய்கிறதென்று அல்லது நிறைவு செய்யவில்லையென்று அரசு கருதினால், அந்த உட்பிரிவின்படி அறிவிக்கையிடப்பட்ட ஊர்களின் வகைப்பாட்டினை மாற்றுவதற்கு அச்சட்டத்தின் 9 (1) ஆவது பிரிவில் அரசுக்கு

அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவேயுள்ள ஊராட்சிகளை சூழ்நிலைக்கேற்றவாறு பேரூராட்சி அல்லது ஊராட்சிகளென்று மீண்டும் வகைப்படுத்துவற்கு இந்த ஏற்பாடு பொருந்தும்.

இப்போது இந்த மாநிலத்திலுள்ள ஊர்களில் பெரும்பாலும் எல்லாவற்றிற்குமே ஊராட்சிகள் அமைக்கப்பட்டிருக்கிறபடியால், மேற்படி சட்டத்தில் கண்ட 9 (1) பிரிவின்படி மீண்டும் வகைப்படுத்தும் செயல்களைத் தான் செய்ய வேண்டியிருக்கும். அரசு, மேற் குறிப்பிட்ட 9 (1) பிரிவின்படித் தங்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தைச் செலுத்துவதற்கு இணை வளர்ச்சி ஆணையாளருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது.

ஊர், பேரூராட்சியாக மீண்டும் வகைப்படுத்தப்படுமானால், ஊர் வீட்டு வரி ஈட்டு மான்யம் வழங்குவதை நிறுத்திவிட வேண்டியிருக்கும். தணிக்கை அதிகாரி மாறிவிடுவார்; அதாவது உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினர் தணிக்கைப் பணியினை மேற்கொள்ள வேண்டியிருக்கும்; ஊராட்சி வளர்ச்சி அலுவலர் இனிமேல் தணிக்கையாளராக இருக்கமாட்டார். எவ்வளவு காலம் இடைவிட்டு, 9 (1) பிரிவின்படி ஊராட்சிகளை மீண்டும் வகைப்பாடு செய்யும் வேலையை மேற்கொள்ளலாமென்று ஒரு வினா எழுப்பப்பட்டது. நிதி ஆண்டு தொடர்ச்சிக்குள் மீண்டும் வகைப்பாடு செய்ய ஆணை பிறப்பிப்பது உகந்ததன்று; தேவையும் அன்று. ஐந்தாண்டுகளுக்கொரு முறை திரும்பவும் அமைக்கும் காலத்தில் மீண்டும் வகைப்பாடு செய்வதும் சரியன்று. ஆண்டுக்கொருமுறை ஊராட்சியை மீண்டும் வகைப்பாடு செய்யலாம். ஆகையால், வருவாய்த் துறைக் கோட்ட அலுவலர்கள் ஒவ்வோர் ஆண்டிலும் நவம்பர் மாதத்தில் இது பற்றிய கருத்துருக்களை அனுப்பத் தொடங்கலாம்; அப்போது அவர்கள் பின்வரும் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்; இக்கருத்துருக்களை அவர்கள் ஒவ்வோர் ஆண்டிலும் நவம்பர் மாதம் 30-ஆம் தேதியன்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்ப வேண்டும். அவ்விவரங்களாவன :—

(1) 1961 ஆண்டு குடிக் கணக்கின்படி மக்கள் தொகை;

(2) முந்திய மூன்றாண்டுகளில் ஊராட்சியின் சராசரி இயல்பான வருமானம்;

(3) முந்திய மூன்றாண்டுகளில் ஊராட்சியின் சராசரி இயல்பான செலவு;

(4) கருதியுள்ள பேரூராட்சியினை நடத்துவதற்கு இயல்பான வரவுகளும் செலவுகளும் கொண்ட இயல்பான ஒரு வரவு-செலவுத் திட்டம்; இதில் அடியிற் கண்டவைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் :—

(அ) செயல் அலுவலர், முழு நேர எழுத்தர், தண்டல் பணியாளர்கள் முதலியவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளமும் படிகளும்;

(ஆ) ஓர் ஊராட்சி அந்நிலையிலிருந்து பேரூராட்சித் தரத்துக்கு உயர்த்தப்படுமானால், வீட்டு வரி ஈட்டு மான்ய வருமான இழப்பு;

மாவட்ட ஆட்சியாளர்கள் கருத்துருக்களை ஒவ்வோர் ஆண்டிலும் சனவரி 31 அன்று சென்னை-1 இல் உள்ள கூட்டு வளர்ச்சி ஆணையாளருக்கு அனுப்ப வேண்டும்.

சம்பந்தப்பட்ட வருவாய்த் துறைக் கோட்ட அலுவலர்களும் மாவட்ட ஆட்சியாளர்களும் அனுப்பிய கருத்துருக்கள் சரியானவைகளாயிருந்து, கருதியுள்ள பேரூராட்சிக்கான இயல்பான வரவு-செலவுத் திட்டம், நிதி வகையில் திடமுள்ளதாயிருந்தால், செயல்முறைகளுக்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கைச் செயல்களுக்காகவும் அடுத்த நிதி ஆண்டின் தொடக்கத்திலிருந்து வகைப்பாட்டினைச் செயற்படுத்தலாம்.

(1962 மார்ச்சு 2 ஆம் தேதி உள்ளாட்சித் துறைப் பல்வகை 732 எண் அரசு ஆணை.)

(1964 சனவரி 15 தேதிய உள்ளாட்சித் துறை 185244/63-2 ஆம் எண் குறிப்பாணை.)

(13) ஊராட்சிகளின் வகைப்பாட்டினை வெளியிடுவது அல்லது மாற்றுவது.—(1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 9 ஆவது பிரிவில் கருதியுள்ள மாறுதல், அறிவிக்கையிடப்பட்ட வகைப்பாடு பற்றியதாகும். அறிவிக்கை மூலமாக அத்தகைய மாறுதலைச் செய்ய வேண்டுமென்பது, இன்றியமையாது உய்த்துணர வேண்டியதொன்றாகும்.

(1962 ஆம் ஆண்டு மார்ச்சு 1 தேதிய 6160-சி-1/62-1 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை குறிப்பாணை.)

(14) நகராட்சி மன்றம் உள்ளாட்சிக் கழக ஆய்வாளர் 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி ஆய்வாளருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்த வேண்டுமென்பது.—1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படிப் பிறப்பிக்கப்பட்டவையும், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி மீண்டும் பிறப்பிக்கப்பட்டிராதவையுமான விதிகள், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட ஏற்பாடு

களுக்குப் பொருத்தமற்றவையாகயிராத வரையில் அவ் விதிகளில் சொல்லப் பட்டுள்ள 'ஆய்வாளரின்' அதிகாரங்களை நகராட்சி மன்றம்-உள்ளாட்சிக் கழக ஆய்வாளர் செலுத்தலாம்.

(1962 மார்ச்சு தேதி 15377-சி-2/62-2 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(15) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படிப் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகளைச் சட்டமன்றத்தின் முன்னர் வைப்பது.—1960 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 தேதிய 56949-எல் 1/60-8 ஆம் எண் அரசுக் குறிப்பாணையில் (எளிதில் பார்க்கும்பொருட்டு இதன்படி ஒன்று இணைக்கப்பட்டுள்ளது) நகராட்சி மன்ற உள்ளாட்சிக் கழக வட்டார ஆய்வாளர்களுக்குப் பின்வருமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதாவது, 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி அவர்கள் ஒரு மாதத்தில் பிறப்பித்த அறிவிக்கைகளையெல்லாம் அவர்கள் ஒருங்கிணைக்க வேண்டும்; வேண்டிய புறத்தாளுடன், சட்டமன்றத்தின் முன்னர் வைத்ததற்குரிய ஆவணமாக அச்சிடுவதற்கு அவைகளை ஒரு தொகுதியாக எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்; சட்டமன்றப் பேரவை சட்டமன்ற மேலவை ஆகியவற்றின் முன்னர் வைப்பதற்காக 402 படிகள் அனுப்ப வேண்டும். 1961 மே 9 ஆம் தேதிய 8042/எல் 1-61-2 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாங்கக் குறிப்பாணையில், சென்னை எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநரும் பின்வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்; அதவாது, ஒருங்கிணைக்கப்பட்ட அறிவிக்கைகளை அவர் அச்சிட வேண்டும்; சம்பந்தப்பட்ட அவைகளின் முன்னர் வைக்கப்படுவதற்காகச் சட்டசபைத் துறைக்கு 275 படிகளும் சட்டமன்றப் பேரவைத் துறைக்கு 100 படிகளும், இந்தத் துறைக்கு இரண்டு படிகளும் அனுப்ப வேண்டும்.

1960 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் பின்னர் நீக்கப்பட்டிருக்கிறது; 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் இப்போது பெரும்பாலும் இந்த மாநிலம் முழுவதிலுமே செயற்படுகிறது. அச்சட்டத்தின் பெரும்பான்மையான ஏற்பாடுகளின் கீழ் ஊராட்சி பற்றி ஆய்வாளருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்த மாவட்ட ஆட்சியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னையிலுள்ள இணை வளர்ச்சி ஆணையாளர், ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தமாய் ஆய்வாளராகச் சில அதிகாரங்களையும் செலுத்துகிறார். மேற்படி சட்டத்தில் கண்ட சில பிரிவுகளின்படி அரசுக்குள்ள அதிகாரங்கள் கூட, மாவட்ட ஆட்சியாளர்களிடமும் இணை வளர்ச்சி ஆணையாளரிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி மாவட்ட ஆட்சியாளர்கள்

பிறப்பித்த அறிவிக்கைகள் அடங்கிய தாள்களை வைப்பது பற்றிய நடைமுறை சம்பந்தமாக, 1960 ஆகஸ்ட் 9 ஆம் தேதிய குறிப்பாணையில் நகராட்சி மன்றம்-உள்ளாட்சிக் கழகம் வட்டார ஆய்வாளர்களுக்குப் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளை மாவட்ட ஆட்சியாளர்களும் இணை வளர்ச்சி ஆணையாளரும் பின்பற்றலாம்.

மாவட்ட ஆட்சியாளர்களும் சென்னையிலுள்ள இணை வளர்ச்சி ஆணையாளரும் வெளியிட்டவையும் (சென்னையிலுள்ள நகராட்சி மன்றம்-உள்ளாட்சிக் கழகம் ஆய்வாளர் அலுவலகததில் பிறப்பிக்கப்பட்ட) சட்டமன்றத்தின் முன்னர் வைக்கப்படுவதற்காக அச்சிடப்பட்டவையுமான அறிவிக்கைகளை, சட்ட மன்றப் பேரவை, சட்டமன்ற மேலவைத் துறைகளுக்கு நேரடியாக அனுப்பலாமென்று சென்னையிலுள்ள எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநருக்குத் தெரிவிக்கப்படுகிறது. (அவ்வாறு அனுப்புகையில், சட்ட மன்றப் பேரவைத் துறைக்கு 275 படிகளையும் சட்டமன்ற மேலவைத் துறைக்கு 100 படிகளையும், ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறைக்கு இரண்டு படிகளையும் அனுப்ப வேண்டும்.)

(1962 ஜுன் 5 ஆம் தேதிய 90187-சி2/62-2 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(1960 ஆகஸ்ட் 9 ஆம் தேதிய 56749/எல்1/60-3 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

1960 ஆம் ஆண்டு பிப்ரவரி 29 ஆம் தேதிய 126394/59-4 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணையில், சென்னையிலுள்ள எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் பின்வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்; அதாவது— ஊராட்சியின் அமைப்பு, தொகுதிப் பிரிவு முதலியவை சம்பந்தமாக, 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி நகராட்சி மன்ற உள்ளாட்சிக் கழக வட்டார ஆய்வாளர்களாலும் நகராட்சி மன்ற உள்ளாட்சிக் கழக ஆய்வாளராலும் பிறப்பிக்கப்பட்ட எல்லா அறிவிக்கைகளையும் அவர் ஒருங்கிணைக்க வேண்டும்; அவ்வாறு ஒருங்கிணைத்துத் தைக்கப்பட்டவைகளில் 300 படிகளைச் சட்டமன்றப் பேரவைத் துறைக்கும், 100 படிகளைச் சட்டமன்ற மேலவைத் துறைக்கும் இரண்டு படிகளை ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறைக்கும் அனுப்ப வேண்டும்; மாதத்துக்கொரு முறை ஒரு தொகுதியாக இவ்வாறு அனுப்ப வேண்டும். ஒருங்கிணைக்கும் வேலை அச்சகத்தின் பணி எல்லைக்கு அப்பாற்பட்டதென்று சென்னை எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் தெரிவித்திருக்கிறார்; அதோடுகூட ஓர் ஆலோசனையையும் சொல்லியிருக்கிறார்; அதாவது அவையின் முன்னர் வைக்கப்படும் தாளாக அச்சிடுவதற்காக, மாநில அரசிதழில் வெளியிடப்படும் அறிவிக்கைகளையெல்லாம் ஒருங்கிணைக்குமாறு

நகராட்சி மன்ற உள்ளாட்சிக் கழக வட்டார ஆய்வாளர்களுக்குச் சொல்ல வேண்டும்; அவர்கள் அவற்றை அச்சிடுவதற்கான கையெழுத்துப் பிரதியாக எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநருக்கு அனுப்ப வேண்டும். சென்னையிலுள்ள நகராட்சி மன்ற உள்ளாட்சிக் கழக ஆய்வாளர் கூட மேற்படி ஆலோசனையை ஒப்புக்கொண்டிருக்கிறார். அரசு அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்கிறது.

1960 பெப்ரவரி 29 ஆம் தேதிய 126894/59-4 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறியாணையைச் சிறிதுமட்டில் மாற்றி, அரசு கட்டளையிடுவது என்னவென்றால் நகராட்சி மன்ற-உள்ளாட்சிக் கழக வட்டார ஆய்வாளர்கள் தாங்கள் பிறப்பிக்கும் அறிவிக்கைகளையெல்லாம் மாதத்துக்கொரு முறை ஒருங்கிணைத்து, "அவையின் முன்னர் வைக்கப்படும் தாள்" ஆக அச்சிடுவதற்காக அவைகளை ஒரு தொகுதியாய் எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநருக்கு சட்டமன்றத்தின் முன்னர் வைக்கப்படுவதற்காக ஒவ்வொரு அறிவிக்கையிலும் 402 படிகள் அச்சிடுவதற்கு அனுப்ப வேண்டும். ஒருங்கிணைக்கப்பட்ட அறிவிக்கைகளை அச்சிடுமாறு எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்; மேலும், அவர், 300 படிகளை சட்டமன்றப் பேரவைத் துறைக்கும், 100 படிகளை சட்டமன்ற மேலவைத் துறைக்கும், 2 படிகளை ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறைக்கும் அனுப்ப வேண்டும்.

(16) **தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படிக்கான அறிவிக்கைகள், ஆணைகள் முதலியவை, சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் மாற்றப்பட்ட பகுதிகளுக்கும் பொருந்தும்படிச் செய்வது.**—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி 1962 ஏப்ரல் 1 ஆம் தேதிக்கு முன் பிறப்பிக்கப்பட்டு அமலில் உள்ள எல்லா அறிவிக்கைகளும், ஆணைகளும், கூடிய விரைவில், கன்னியாகுமரி மாவட்டத்திற்கும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டத்துக்கும் பொருந்தும்.

(1962 அக்டோபர் 30 ஆம் தேதிய ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை 2354 எண் பல்வகை அரசு ஆணை.)

(17) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி 1961 அக்டோபர் 2 ஆம் தேதிக்கு முன் பிறப்பிக்கப்பட்டு அமலில் இருக்கிற எல்லா அறிவிக்கைகளும், ஆணைகளும், கூடிய விரைவில் (1959 ஆம் ஆண்டின் 56 ஆவது மையச் சட்டமாகிய) 1959 ஆம் ஆண்டின் ஆந்திரப் பிரதேசம்-தமிழகம் (எல்லைகள் மாற்றச்) சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பகுதிகளுக்கும் பொருந்தும்.

(1962 அக்டோபர் 30 ஆம் தேதிய 2355 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

1. மக்கள் தொகை இன்னதென்று நிச்சயிப்பது.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் செயலுக்காக ஓர் ஊர், பேரூர் அல்லது ஓர் உள்ளாட்சிப் பரப்பு அல்லது அந்த ஊர் அல்லது பேரூர் அல்லது உள்ளாட்சிப் பரப்பின் ஒரு பாகத்தின் மக்கள் தொகை பற்றி ஏதேனும் கேள்வி எழுமானால், அடுத்து முந்திய மக்கள் தொகைக் கணக்கின்போது கண்டறிந்தவாறு அந்த ஊர் அல்லது பேரூர் அல்லது உள்ளாட்சிப் பரப்பு ஆகியவற்றின் மக்கள் தொகையையொட்டி அதனைத் தீர்க்க வேண்டும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

2. ஊராட்சிகளை அமைப்பது பற்றிய அறிவிக்கைகளை எதிர்த்து இன்ன காலத்துக்குள் அரசுக்கு மேல்முறையீடுகளை அனுப்ப வேண்டுமென்பது.—ஓர் உள்ளாட்சிப் பரப்பில் அல்லது ஊராட்சியில் வரி செலுத்துபவர் அல்லது வசிப்பவர், அந்தப் பரப்பு அல்லது ஊராட்சி சம்பந்தமாக (1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 3 ஆவது பிரிவில் கண்ட (1) உட்பிரிவின்படி அல்லது (2) உட்பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட ஒரு அறிவிக்கையை ஆட்சேபனை செய்யவேண்டின் அவர், அவ்வறிக்கை வெளியான தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அரசுக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

(1964 அக்டோபர் 9 ஆம் தேதிய 2118 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

3. ஓர் ஊர் அல்லது பேரூரிலிருந்து ஏதேனும் உள்ளாட்சிப் பரப்பினை நீக்கிவிடுவது அல்லது அதற்குள் சேர்ப்பது.—(1) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 3 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படி ஒரு ஊர் அல்லது பேரூரிலிருந்து ஏதேனும் உள்ளாட்சிப் பரப்பை நீக்கிவிடுவது அல்லது அதற்குள் சேர்ப்பது சம்பந்தமாகப் பின்வரும் விதிகளில் கண்ட கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

(2) வேறொரு ஊர் அல்லது பேரூரிலிருந்து ஒரு பரப்பு நீக்கப்பட்டிருந்து அந்தப் பரப்பை யாதேனும் ஒரு ஊர் அல்லது பேரூரில் சேர்ப்பது அவசியமென்றோ உகந்ததென்றோ கருதப்பட்டாலன்றி மற்றப்படி அப்பரப்பை அந்த ஊர் அல்லது பேரூரில் சேர்க்கக் கூடாது.

(3) ஒரு பரப்பைத் தனியாக ஒரு ஊராட்சி அமைப்பதற்காக, அல்லது ஏற்கெனவே ஒரு ஊராட்சியாயிருக்கிற அல்லது ஒரு ஊராட்சி அமைக்கக்

கருதியுள்ள ஒரு ஊர் அல்லது பேரூரில் சேர்ப்பதற்காகவன்றி மற்றப்படி, அப்பரப்பை வேறொரு ஊர் அல்லது பேரூரிலிருந்து நீக்கக் கூடாது.

(4) ஒரு பரப்பை ஒரு ஊர் அல்லது பேரூரிலிருந்து நீக்கிய பிறகு அல்லது அதற்குள் சேர்த்த பிறகு சம்பந்தப்பட்ட ஊர்களின் வருமானம் அந்த ஊர் அல்லது பேரூரின் செயல் முறையைத் திறமையாக நடத்துவதற்குப் போதுமானதாயிருக்குமென்று இணை வளர்ச்சி ஆணையாளர் கருதினாலன்றி மற்றப்படி, அவ்வாறு நீக்கவோ சேர்க்கவோ கூடாது.

(5) ஒரு பரப்பை ஒரு ஊர் அல்லது பேரூரிலிருந்து நீக்குவதனால், ஊராட்சி வருமானம் கணிசமாகக் குறைந்து விடுமென்று இணை வளர்ச்சி ஆணையாளர் கருதினால், அவ்வாறு நீக்கக் கூடாது.

(6) யாதொரு பரப்பை ஒரு ஊர் அல்லது பேரூரிலிருந்து நீக்குவதைப் பற்றியும், மற்றொரு ஊர் அல்லது பேரூரில் சேர்ப்பது பற்றியும், சம்பந்தப்பட்ட ஊராட்சிகளையும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது ஊராட்சி ஒன்றியத்தின் மன்றங்களையும் கலந்தறிந்திருந்தாலன்றி மற்றப்படி அவ்வாறு நீக்கவும் சேர்க்கவும் கூடாது.

(7) தனிக் காரணங்களுக்காகவன்றி மற்றப்படி, ஒரேவொரு வருவாய் ஊரின் மீது மட்டும் ஒரு ஊராட்சிக்கு ஆட்சி வரம்பிருந்தால், அந்த வருவாய் ஊரிலிருந்து எந்தப் பரப்பையும் நீக்கக் கூடாது.

(8) ஊராட்சி ஒன்று இரண்டு அல்லது பல வருவாய் ஊர்களின் மீது ஆட்சி வரம்பு செலுத்தினால், வருவாய் ஊர் ஒவ்வொன்றுக்கும் அல்லது இரண்டு அல்லது பல வருவாய் ஊர்களுக்கும் தனியாக ஓர் ஊராட்சியினை அமைக்கக்கூடிய வகையில் ஏதேனும் ஒரு பரப்பை அவ்வூராட்சி வரம்பிலிருந்து நீக்க வேண்டும்.

(9) ஒரு ஊராட்சி, ஒரு வருவாய் ஊரின் மீதும் வேறொரு வருவாய் ஊர் அல்லது ஊர்களின் பாகம் அல்லது பாகங்களின் மீதும் ஆட்சி வரம்பு செலுத்தி, அப்பாகங்கள் மேற்சொன்ன வருவாய் ஊரைச் சேர்ந்தாற்போலிரா விட்டால், அந்தப் பாகம் அல்லது பாகங்களை அவ்வூராட்சியின் ஆட்சி வரம்பிலிருந்து நீக்கி, சேர்ந்தாற்போலுள்ள பரப்பின் மீது ஆட்சி வரம்பு செலுத்தும் ஒரு ஊராட்சியின் ஆட்சி வரம்புக்குள் சேர்த்துவிட வேண்டும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

(1962 ஜூன் 15 ஆம் தேதிய 1356 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

4. *ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை.*—ஒரு ஊராட்சியில் இருக்க வேண்டிய உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையை, அதன் மக்கள் தொகையையொட்டி, பின்வரும் வீதப்படி உறுதி செய்ய வேண்டும்:—

மக்கள் தொகை.	உறுப்பினர்களின் எண்ணிக்கை.
(1)	(2)
15,000-க்கு மேல்	15
10,000-க்கு மேற்பட்டும் 15,000 உட்பட அது வரையிலும்	14
5,000-க்கு மேற்பட்டும் 10,000 உட்பட அது வரையிலும்	13
3,000-க்கு மேற்பட்டும் 5,000 உட்பட அது வரையிலும்	12
2,000-க்கு மேற்பட்டும் 3,000 உட்பட அது வரையிலும்	11
1,500-க்கு மேற்பட்டும் 2,000 உட்பட அது வரையிலும்	10
1,200-க்கு மேற்பட்டும் 1,500 உட்பட அது வரையிலும்	9
1,000-க்கு மேற்பட்டும் 1,200 உட்பட அது வரையிலும்	8
800-க்கு மேற்பட்டும் 1,000 உட்பட அது வரையிலும்	7
600-க்கு மேற்பட்டும் 800 உட்பட அது வரையிலும்	6
600-ம் அதற்குக் குறைவாகவும்	5

ஆனால், இந்த விதி அமலுக்கு வரத் தொடங்கும் தேதியன்று ஏற்பட்டிருந்த ஒரு ஊராட்சியைப் பொறுத்தவரை, மேற்குறிப்பிடப்பட்ட வீதம் ஏற்கெனவே ஊராட்சிக்குப் பொருந்தும்படிச் செய்யப்பட்டிராவிட்டால், அவ்வூராட்சிக்கு அடுத்தாற்போல் சாதாரணத் தேர்தல்கள் நடத்தப்படுவதிலிருந்துதான் அவ்வீதம் பொருந்தும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

(1965 மே 7 ஆம் தேதிய 1043 ஆம் எண் ஊர வளர்ச்சி-உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

(18) தொகுதிக் கோட்டங்களைப் பற்றிக் கலந்தறிவது.—உறுப்பினர்களும் தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, ஆய்வாளர் உறுதி செய்யும் ஒரு தேதி யிலிருந்துதான் ஒரு புதிய ஊராட்சி ஏற்படும். அத்தேதிக்கு முன் ஊராட்சி எதுவும் இருக்காது. ஆகவே, அதைத் தொகுதிகளாகப் பிரிப்பது பற்றி அதனுடன் கலந்தறிய முடியாது. ஆகையால், தொகுதிகளாகப் பிரிப்பது பற்றி ஊராட்சிகளுடன் கலந்தறிவது, முதல் தடவையாகத் தொகுதிகளைத் திருத்தி யமைக்கும் அல்லது தொகுதிகளாகப் பிரிக்கும் தேதியன்று ஏற்கெனவே ஏற்பட்டிருக்கிற ஊராட்சிகளைப் பொறுத்த மட்டுமே வரையறுக்கப்பட்டதாகும்.

(1951 சனவரி 4 ஆம் தேதிய 17 ஆம் எண் உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

(19) புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்கும் தேதி.—1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 3 (2) (அ) பிரிவின்படி நீக்கப்பட்ட பரப்பில் வசிக்கும் பழைய ஊராட்சி உறுப்பினர்கள், விலக்கப்பட்ட பரப்பிற்கு அமைக்கப்பட்ட புதிய ஊராட்சியின் உறுப்பினர்களாகமாட்டார்கள். புதிய ஊராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்ட பிறகு, அச்சட்டத்தில் கண்ட 22 ஆவது பிரிவின்படி ஆய்வாளர் அறிக்கையிடும் தேதியிலிருந்து ஊராட்சி உறுப்பினர்கள் பதவி ஏற்பார்கள்.

(20) ஊர் அலுவலர்கள் கோட்ட ஊராட்சி அலுவலர்களுக்கு உதவி புரிவது.—ஊராட்சிகளை அமைப்பது அல்லது மீண்டும் அமைப்பது பற்றிய பணிக்காக, துணை ஊராட்சி அலுவலர்களுக்கும் மாவட்ட ஊராட்சி அலுவலர் களுக்கும் வேண்டியுள்ள விவரங்களை உடனுக்குடன் கொடுப்பது மூலமாக அந்த அலுவலர்களுக்கு ஊர் அலுவலர்கள் உதவி புரிய வேண்டும்.

(1951 மார்ச்சு 14 ஆம் தேதிய 451 ஆம் எண் உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

(1952 ஏப்ரல் 2 ஆம் தேதிய 12021/52-1- I எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

5. அட்டவணையில் கண்ட இனங்களின் உறுப்பினர்களுக்காக இடங்கள் ஒதுக்கிவைத்தல்.—(1) அட்டவணையில் கண்ட இனங்களின் உறுப்பினர் களுக்காக ஒரு ஊராட்சியில் ஒதுக்கி வைக்கப்படும் இடங்களின் மொத்த

எண்ணிக்கை, அவ்வூராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஐந்திலொரு பாகத்துக்கு மேற்படக் கூடாது.

(2) அட்டவணையில் கண்ட இனத்தார்கள், கடைசியாக மக்கள் தொகைக் கணக்கெடுத்தபோது சூழ்நிலைக்கேற்ப ஊர் அல்லது பேரூரின் மொத்த மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்களாயிருந்தால், அவர்களுக்காக எந்த ஊராட்சியிலும் இடம் ஒதுக்கக் கூடாது.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

(21) ஒதுக்கி வைப்பதை முறைப்படுத்தும் கோட்பாடுகள்.—அட்டவணையில் கண்ட இனத்தார்களின் மக்கள் தொகை, ஊரின் மொத்த மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டிருந்தால், அவர்களுக்காக இடம் எதையும் ஒதுக்கி வைக்க முடியாது; ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டால் ஒதுக்கி வைக்கக்கூடிய இடங்களின் எண்ணிக்கையானது, ஊராட்சியின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கைகளில் ஐந்திலொரு பாகத்துக்குமேற்படக் கூடாது. அதாவது, மொத்தத்தில் ஐந்து முதல் எட்டுவரையுள்ள உறுப்பினர்கள் கொண்ட ஊராட்சியைப் பொறுத்து ஓர் இடத்துக்குமேற்பட்டும், மொத்தத்தில் 10 முதல் 14 வரையுள்ள உறுப்பினர்கள் கொண்ட ஊராட்சிகளைப் பொறுத்து இரண்டு இடங்களுக்கு மேற்பட்டும், மொத்தத்தில் 15 உறுப்பினர்கள் கொண்ட ஊராட்சிகளைப் பொறுத்து மூன்று இடங்களுக்கு மேற்பட்டும் ஒதுக்க முடியாது. இந்த வரையறைக்குட்பட்டு, ஊரின் மொத்த மக்கள் தொகையில் அட்டவணையில் கண்ட இனத்தாரின் தொகைக்குள்ள விதாசாரத்தையொட்டி, ஒதுக்கி வைக்கக்கூடிய இடங்களின் எண்ணிக்கையை உறுதி செய்யலாம். ஒன்று அல்லது பல தொகுதிகளில் அட்டவணையில் கண்ட இனத்தார்களின் வாக்களிப்பு ஆற்றல், அத்தொகுதி அல்லது தொகுதிகளின் மொத்த வாக்களிப்பு ஆற்றலில் பேர்பாதிக்கு மேற்பட்டிருந்தால், அட்டவணையில் கண்ட இனத்தார்கள் ஒதுக்கீடு இல்லாமலேயே இடம் அல்லது இடங்களைப் பெறலாம். அப்படிப்பட்டவற்றில் அறுதி செய்யப்பட்டவரைவறைக்குள், மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு உறுதி செய்யப்படும் இடங்களின் எண்ணிக்கையிலிருந்து ஒதுக்கீடில்லாமல் பெறக்கூடிய இடங்களின் எண்ணிக்கையைக் கழித்துவிட்டால், ஒதுக்கி வைக்கப்படக்கூடிய இடங்களின் எண்ணிக்கை வரும். எடுத்துக்காட்டாக, ஒரு ஊராட்சியின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 என்று வைத்துக்கொள்வோம்; இதன் காரணமாக அட்டவணையில் கண்ட இனத்தார்களுக்காக மூன்றுக்கு மேற்படாத இடங்களைத்தான் ஒதுக்க முடியும்; ஊராட்சியில் மற்ற இனத்தார்களின்

வாக்காளர்களைக் காட்டிலும் அட்டவணையில் கண்ட இனத்தின் வாக்காளர்கள் மிக அதிகமாயிருக்கிறார்கள். இங்கே ஒதுக்கீடு எதுவும் இல்லாமலேயே அட்டவணையில் கண்ட இனத்தின் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நியாயமான வாய்ப்பிருக்கிறது; அட்டவயில் கண்ட இனத்தார்கள் தங்கள் தொகையின் அடிப்படையின் பேரில் பெறத் தகுதி வாய்ந்த இடங்களின் எண்ணிக்கையிலிருந்து மேற்படித் தொகுதிகளின் எண்ணிக்கையைக் கழித்து விட வேண்டும். இங்குக் காட்டப்பட்ட எடுத்துக்காட்டில், அத்தகைய வார்டு ஒன்றே ஒன்று இருந்தால், ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கையை இரண்டு என்று உறுதி செய்ய வேண்டும்; அத்தகைய வார்டுகள் இரண்டிருந்தால், ஒரே ஓர் இடத்தை ஒதுக்கி வைக்க வேண்டும்; அத்தகைய வார்டுகள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால், இடம் எதையும் ஒதுக்கி வைக்கக் கூடாது.

மேற்சொன்ன அதே எடுத்துக்காட்டில், அட்டவணையில் கண்ட இனத்தார்களின் தொகை மொத்த மக்கள் தொகையில் அரைக்கால் பகுதியாக இருந்தால் ($15/8 = 1\frac{7}{8}$), அட்டவணையில் கண்ட இனத்தார்கள் சட்டத்தின்படி மூன்று இடங்கள் வரையில் ஒதுக்கிவைக்கப் பெறத் தகுதி உள்ளவர்களாக யிருந்தபோதிலும், இரண்டு இடங்களை மட்டுமே ஒதுக்கி வைக்க வேண்டும். இந்த இரண்டிடங்களைக் கூட ஒதுக்கீடின்றிப் பெறக் கூடுமென்றால், சாதாரணமாக ஒதுக்கீடு எதுவும் தேவைப்படாது.

அட்டவணையில் கண்ட இனத்தார்களின் தொகையும் வாக்களிப்பு ஆற்றலும் மிகக் குறைவாயிருப்பதனால் ஒதுக்கீடு செய்வது நியாயமில்லை என்று ஏற்பட்டால், இடங்களை ஒதுக்கி வைக்க வேண்டியதில்லை. அந்த இனத்தாரின் வாக்களிப்பு ஆற்றல் மிக அதிகமாயிருந்தும் அது முழுமையான பெரும்பான்மை கொண்டிராத தொகுதிகளுக்கு ஒதுக்கீட்டு இடங்களை வகுத்துக் கொடுக்க வேண்டும்.

(1951 ஏப்ரல் 3 ஆம் தேதிய 11999/51-1-ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(22) **மதம் மாறிய அட்டவணையில் கண்ட இனத்தார்கள் ஒதுக்கீட்டு இடங்களுக்குப் போட்டியிட உரிமையற்றவர்கள் என்பது.**—அட்டவணையில் கண்ட இனத்தார்கள் கிறித்துவ மதத்துக்கு மாறிவிட்டால், அதற்குப் பிறகு, வாக்காளர் பட்டியல்களில் அவர்கள் பெயர்கள் அட்டவணையில் கண்ட இனத்தார்களாகக் கண்டிருந்தபோதிலும், அட்டவணையில் கண்ட இனத்தார்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட இடங்களுக்கு நடக்கும் தேர்தலில் நிற்கத் தகுதி பெற்றவர்களாக மாட்டார்கள்.

(1953 ஏப்ரல் 9 ஆம் தேதிய 152118/53-2-1 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(23) **இடங்கள் ஒதுக்கி வைக்கப்படும் காலம்.**—1958 ஆம் ஆண்டில் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 15 (2) பிரிவின்படி, அட்டவணையில் கண்ட இனத்தார்களுக்காக இடங்களை ஒதுக்கி வைப்பதானது, 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் அமலுக்குவரத் தொடங்கியதிலிருந்து (அதாவது) 1961 ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து பத்தாண்டுக் காலம் கழிந்த பிறகு ஊராட்சிகளுக்கு முதன் முதலாக சாதாரணத் தேர்தல்கள் நடக்கிற வரையில் மட்டுமே அமலில் இருக்கும். ஊராட்சிகளுக்குக் கடைசித் தடவை யாக 1957-58-இல் சாதாரணத் தேர்தல்கள் நடைபெற்றன; 1962-63-இல் ஊராட்சிகளுக்கு நடக்க வேண்டிய சாதாரண தேர்தல்கள்தான், மேற் குறிப்பிட்ட பத்தாண்டுக் காலம் கழிந்த பிறகு முதலாவதாக நடத்தப்படும் சாதாரணத் தேர்தலாகும்; அத் தேர்தல் வரையில்தான், அட்டவணையில் கண்ட இனத்தார்களுக்கு இடங்கள் ஒதுக்கி வைப்பது அமலில் இருக்கும். அட்ட வணையில் கண்ட இனத்தார்களுக்காக ஊராட்சிகளில் மேற்கொண்டு இடங்கள் ஒதுக்கி வைப்பதற்காக அல்லது வேறுவிதமாகச் செய்வதற்காக ஏற்பாடு செய்யும் பொருட்டு, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 15 (2) பிரிவைத் திருத்துவது பற்றி நாளடைவில் முடிவு செய்யப்படும்.

(1962 ஏப்ரல் 19 ஆம் தேதிய 212230/சி2/62-2 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

6. **ஊராட்சிக் குழுக்களை அமைப்பது, அவற்றில் வெளியார்களைச் சேர்த்துக்கொள்வது, அக்குழுக்களிடம் அலுவல்களை ஒப்படைப்பது.**—ஒரு பேரூராட்சி நியமனக் குழு ஒன்றை அமைக்கலாம்; அதில், பேரூராட்சித் தலைவரும், செயல் அலுவலரும், ஊராட்சி ஆண்டுதோறும் தன் உறுப்பினர் களிலிருந்து தேர்ந்தெடுக்கும் ஓர் உறுப்பினரும் இருக்க வேண்டும். ஊராட் சியில், நியமனக் குழுவில், ஊராட்சித் தலைவரும், அவ்வூராட்சி ஆண்டுதோறும் தன் உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கும் இரண்டு உறுப்பினர்களும் இருக்க வேண்டும். (1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட ஏற்பாடுகளின் படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படி ஊராட்சியின் ஆதிக்கத்திலிருந்து திட்டவட்டமாக நீக்கப்பட்டுள்ள பதவிகள் தவிர) ஊராட்சியில் உள்ள (மற்ற) எந்தப் பதவிகளுக்கான சம்பளம், ஊராட்சி நிதிகளுக்குப் பற்றுக எழுதப்படத் தக்கதாயிருக்கிறதோ அத்தகைய எல்லாப் பதவிகளுக்கும், நியமனக் குழுவின் ஒப்புதலை முன்னதாகப் பெற்றுக் கொண்டு நியமனங்கள் செய்ய வேண்டும்.

2. ஊராட்சி தன்னுடைய கடமைகளையும் அலுவல்களையும் திறம்படச் செய்யும்பொருட்டு, பொதுச் செயல் நோக்குக் குழு ஒன்றையும் அமைத்துக்

கொள்ளலாம். ஊராட்சி குறிப்பிடக் கூடிய எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களும் தமது பதவி காரணமாகத் தலைவரும் இக் குழுவில் இடம் பெறுவார்கள். இக்குழுவில் தலைவரைத் தவிர மற்ற உறுப்பினர்களை ஊராட்சி ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

3. ஒரு ஊராட்சி தான் ஒப்படைக்கக் கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துவதற்காகவும், கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும், அலுவல்களைச் செய்வதற்காகவும் வேறு குழுக்களை அமைக்கலாம்; குழுக்களுக்கு அனுப்பக் கூடிய ஏதேனும் பொருளைப் பற்றி விசாரித்து அறிக்கையிடுவதற்காக அல்லது ஆலோசனை கூறுவதற்காக வேறு குழுக்களையும் அமைக்கலாம்.

4. (1) ஒரு ஊராட்சி, தனது ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களில் பேர்பாதிக்குக் குறையாத பேர்களால் ஆதரிக்கப்பட்ட தீர்மானம் மூலமாக, 3 ஆவது விதியின்படி அமைக்கப்பட்ட ஒரு குழுவின் உறுப்பினர்களாக, ஊராட்சி உறுப்பினர்களாயிராதவர்களும் ஆனால் அக் குழுவில் பணியாற்றத் தனித் தகுதிகள் அல்லது தனி அக்கறை பெற்றுள்ளவர்கள் என்று தான் கருதுகிறவர்களுமான பேர்களை நியமிக்கலாம்; ஆனால் அத்தகையோர்களின் எண்ணிக்கை, அக் குழு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொரு பாகத்துக்கு மேற்படக் கூடாது.

(2) ஊராட்சி உறுப்பினர்களின் கடமைகள், அதிகாரங்கள், பொறுப்புகள், தகவின்மைகள், குறைபாடுகள் ஆகியவை தொடர்பாக, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட ஏற்பாடுகள், ஊராட்சி உறுப்பினர்களாயிராத குழு உறுப்பினர்களுக்குக் கூடிய வரையில் பொருந்தும்.

5. தலைவர், தமது பதவி காரணமாக, இவ்விதிகளின்படி அமைக்கப்படும் குழு ஒவ்வொன்றினுடைய உறுப்பினராகவும் இருப்பார்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

7. **கூட்டுக் குழுக்களின் அமைப்பு, அதிகாரங்கள், நடைமுறை முதலியன.**—(1) கூட்டுக் குழு ஒன்றில், தொடர்புடைய உள்ளாட்சி அதிகாரிக் குழுக்களின் உறுப்பினர்களாயிராதவர்களும், ஆனால் அக்குழுவில் பணியாற்றத் தனித் தகுதிகள் அல்லது தனி அக்கறை பெற்றவர்களென்று அவர்கள் கருதுகிறவர்களுமான பேர்களைச் சேர்க்கலாம்.

ஆனல், அத்தகைய ஆட்களின் எண்ணிக்கையானது, கூட்டுக் குழு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொரு பாகத்துக்கு மேற்படக் கூடாது.

(2) ஒழுங்கு முறை விதிகளைக் கொண்டு கூட்டுக் குழு ஒன்றை அமைக்க வேண்டும்; 5 ஆவது 6 ஆவது விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறவற்றைத் தவிர மற்றப்படி, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அதிகாரிக் குழுக்கள் ஒவ்வொன்றும் அவ்விதிகளை ஏற்றுக்கொண்டால்தான் அவை அமலில் இருக்கும்.

(3) அந்த ஒழுங்குமுறை விதிகள் பின்வருபவைகளை உறுதிப் படுத்தும்:—

(அ) கூட்டுக் குழு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை;

(ஆ) இத்தனை பேர் தொடர்புடைய உள்ளாட்சி அதிகாரிக் குழுக் களின் உறுப்பினர்களாயிருக்க வேண்டுமென்பதும், இத்தனை பேர் வெளியார் களாயிருக்கலாமென்பதும்;

(இ) இன்னர் கூட்டுக் குழுவின் உறுப்பினர்களாயிருக்க வேண்டு மென்பது அல்லது அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அல்லது நியமிக்கப் படவேண்டிய விதம்;

(ஈ) இன்னர் கூட்டுக் குழுத் தலைவராகயிருக்க வேண்டுமென்பது அல்லது அவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அல்லது நியமிக்கப்பட வேண்டிய விதம்;

(உ) உறுப்பினர்கள், தலைவர்கள் ஆகியோரின் பதவிக் காலம்;

(ஊ) தொடர்புள்ள உள்ளாட்சி அதிகாரிக் குழுக்களில் ஒன்றினல், அல்லது பலவற்றினல், செலுத்தப்படத்தக்க அதிகாரங்களில் இன்ன அதிகாரங்களைக் கூட்டுக் குழு செலுத்தலாமென்பது;

(எ) கூட்டுக் குழுவின் நடைமுறை.

(4) 2 ஆவது, 3 ஆவது விதிகளின் படிச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் மாற்றப்படலாம் அல்லது ரத்து செய்யப்படலாம்; ஆனல் தொடபுள்ள விதிகள் மாற்றப்படலாம் அல்லது ரத்து செய்யப்படலாம்; ஆனல் தொடர்புள்ள செய்தலுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(5) 52 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி ஆய்வாளர் நடவடிக்கை எடுத்துக்கொண்டால், அவர், 2 ஆவது, 3 ஆவது விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிற எல்லாவற்றின் அல்லது அவைகளில் ஏதேனும் ஒன்றின் தொடர்பாக தேவையென்று அல்லது உகந்ததென்று தாம் கருதுகிற கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.

(6) முந்திய விதிகளில் யாதொன்றின்படி உள்ளாட்சி அதிகாரிக் குழுக் களிடையே கருத்து வேற்றுமை எழுமானால், அதை ஆய்வாளரின் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

(7) தொடர்புள்ள உள்ளாட்சி அதிகாரிக் குழுக்களில் ஒன்று பாளைய அதிகாரிக் குழுவாகவோ பெரிய துறைமுகமொன்றின் துறைமுக அதிகாரிக் குழுவாகவோ இருந்தால், 52 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி அல்லது முந்திய விதிகளில் ஏதாவது ஒன்றின்படி ஆய்வாளருக்குள்ள அதிகாரங்கள், மாநில அரசின் மூலம் பெறப்படும் மைய அரசின் உடன்பாட்டுடன் மட்டுமே செலுத்தப்படத்தக்கவையாகும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(24) புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி உறுப்பினர்கள், தங்கள் இடங்களை வகிப்பதற்கு முன் அடியிற்கண்ட படிவத்தின்படி இந்தியா வினிடமும் இந்திய அரசியலமைப்பினிடமும் பற்றிணைப்பு உறுதிமொழி கூற வேண்டும்.

"இவ்வூராட்சியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள . . . . என்னும் நான் உளமதித்து ஆணை உறுதி செய்வது (அல்லது மெய்யுறுதி கூறுவது) என்னவென்றால்,—இந்தியாவினிடமும் சட்டப்படி நிறுவப்பட்ட இந்திய அரசியலமைப்பினிடமும் நான் நம்பிக்கையுள்ளவனாகவும் உண்மையான பற்றிணைப்புள்ளவனாகவும் இருப்பேன்; நான் மேற்கொள்ளப்போகும் கடமையை நான் மனமார நிறைவேற்றுவேன்."

(1950 பிப்ரவரி 24 ஆம் தேதிய 7192/1 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

2. ஊராட்சிகள், ஊராட்சிக் குழுக்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகள்.

1. ஊராட்சிகளின் செயல்முறைகள்.—1. ஊராட்சி ஒவ்வொன்றும் அலுவலகம் ஒன்றினை ஏற்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்; அது அங்கே அலுவல்களை நடத்துவதற்காக ஒவ்வொரு மாதத்திலும் குறைந்தது ஒரு தடவையேனும், அது ஏற்பாடு செய்யக்கூடிய நாட்களிலும், காலங்களிலும் மற்றக் காலங்களிலும் எவ்வெப்போது தலைவர் கூட்டம் கூட்டுகிறாரோ அவ்வப்போதும் கூட வேண்டும்.

2. ஊராட்சி விடுமுறை நாள் என்று கொண்டாடும் எந்த நாளிலும் கூட்டம் எதையும் நடத்தக் கூடாது.

3. (1) கூட்டம் நடத்தப்படப் போகும் நாள், காலம், அங்கே நடத்தப் படவிருக்கிற அலுவல்கள் ஆகியவை பற்றிய அறிக்கை, கூட்ட நாளுக்குக் குறைந்தது மூன்று முழு நாட்கள் முன்னதாகக் கொடுக்கப்பட்டிருந்தா லொழிய, கூட்டம் எதையும் நடத்தக் கூடாது.

(2) அவசர நிமித்தம் தலைவர், (1) உள் விதியில் குறிப்பிட்டிருப் பதைக் காட்டிலும் குறுகிய கால அறிக்கை விடுத்து ஒரு கூட்டத்தைக் கூட்டலாம்.

4. (1) அப்போது ஊராட்சியிலிருக்கிற உறுப்பினர்களில் மூன்றில்லொரு பங்குக்குக் குறையாத பேர் எழுத்து மூலமாக வேண்டுகோள் அனுப்புவதன் பேரில், தலைவர் ஊராட்சிக் கூட்டமொன்றைக் கூட்ட வேண்டும்; ஆனால், அக் கூட்டம் நடத்தப்படுவதற்கான (விடுமுறையென்று ஊராட்சியினால் கொண்டா டப்படுகிற நாளாயிராத) நாளினையும் எப்பொழுது எதற்காக என்பதனையும் அவ்வேண்டுகோளில் குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்த வேண்டுகோளை, கூட்டம் நடக்க வேண்டிய நாளுக்குக் குறைந்தது முழு பத்து நாட்களுக்கு முன்னதாக, அலுவலக நேரத்தில் தலைவரிடமோ செயல் அலுவலரிடமோ அப்போது அலுவலகத்தின் பொறுப்பு வகிக்கக் கூடிய வேறு எவரிடமோ கொடுக்க வேண்டும்.

(2) அவ்வேண்டுகோள் கொடுக்கப்பட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குள், அதில் குறிப்பிட்டிருக்கிற நாளிலாவது அதற்குப் பிறகு மூன்று நாட்களுக்குள்ளாவது தலைவர் ஒரு கூட்டம் கூட்டத் தவறினால்,

அவ்வேண்டுகோளில் கையெழுத்திட்ட உறுப்பினர்கள், 3 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியில் சொல்லப்பட்டுள்ள அறிக்கையை ஊராட்சியின் மற்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்து அக்கூட்டத்தைக் கூட்டலாம்.

(3) ஊராட்சி அலுவலகம் இருக்கிற இடமல்லாத வேறெரிடத்தில் (1) உள் விதியின்படியாவது (2) உள்விதியின் கூட்டம் எதையும் கூட்டக் கூடாது.

5. பொதுமக்கள் யாவரும் வருவதற்கேற்றவாறு ஒரு ஊராட்சியின் எல்லாக் கூட்டங்களும் இருக்க வேண்டும். ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியில், பொதுவாகப் பொதுமக்கள் எல்லோரும் அல்லது குறிப்பிட்ட எவரேனும் ஒருவர் கூட்டத்தை விட்டு வெளியேறுமாறு தலைமை வகிப்பவர் கட்டளையிடலாம்.

6. எக்கூட்டத்திலேனும் ஊராட்சிக்கு வரக் கூடிய எல்லாக் கேள்விப் பொருள்களும் அக்கூட்டத்துக்கு வந்திருந்து வாக்களிக்கிற உறுப்பினர்களில் பெரும்பான்மையோரால் தீர்மானிக்கப்பட வேண்டும்; வாக்குகள் சமமாக இருந்தால், தலைமை வகிக்கும் உறுப்பினருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இரண்டாவது அல்லது முடிவு வாக்கை அவர் அளிக்க வேண்டும்; ஒருமனதாக நிறைவேற்றப்படாத தீர்மானத்தைப் பொறுத்தவரை, அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் வாக்களித்த உறுப்பினர்களின் பெயர்களை எழுதி வைத்துக் கொள்ள வேண்டும்.

7. குறைந்தது மூன்று உறுப்பினர்கள், அல்லது அப்போது அந்த ஊராட்சியிலிருக்கிற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொரு பாகத்தினர் ஆகிய இவர்களில் யார் அதிகமாயிருக்கிறர்களோ அவர்கள் வந்திருந்தாலொழிய, ஊராட்சிக் கூட்டத்தில் எந்த அலுவல்களையும் நடத்தக் கூடாது.

8. ஒரு கூட்டத்துக்காகவென்று ஏற்படுத்தப்பட்ட காலத்துக்குப் பிறகு அரை மணி நேரத்துக்குள் கூட்டத்திற்கு ஏற்பட்ட குறைவெண் வரம்புள்ள உறுப்பினர்கள் வந்திராவிட்டால், வந்திருக்கிற உறுப்பினர்கள் எல்லாரும் மேலும் காத்துக் கொண்டிருக்க ஒப்புக் கொண்டாலன்றி, அக்கூட்டம் ஒத்தி வைக்கப்பட வேண்டும்.

9. ஒரு ஊராட்சித் தீர்மானம் எதுவும், அது நிறைவேற்றப்பட்ட பிறகு மூன்று மாதத்திற்குள் மாற்றப்படவோ ரத்து செய்யப்படவோ கூடாது; ஆனல், இதற்கெனத் தனியாகக் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில், ஒப்பளிக்கப்

பட்ட எண்ணிக்கையுள்ள உறுப்பினர்களில் பாதி பேருக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்ட பஞ்சாயத்துத் தீர்மானம் மூலமாக அத்தீர்மானம் மாற்றப்படலாம் அல்லது ரத்து செய்யப்படலாம்.

10. ஊராட்சி செயல்முறைகள் ஆங்கிலத்திலாவது தமிழிலாவது இருக்கலாம். ஒவ்வொரு கூட்டத்தின் செயல்முறைகளைப் பற்றிய நிகழ்ச்சிக் குறிப்புகளை எழுதி, இதற்கென வைத்திருக்கப்படும் புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும்; இதில், தலைமை வகிக்கும் உறுப்பினராவது அவர் வந்திராவிட்டால் அங்கே வந்திருக்கிற உறுப்பினர்களில் யாராகிலும் ஒருவர் கையெழுத்திட வேண்டும். ஊராட்சி உறுப்பினரும், இச்சட்டத்தின்படி ஊராட்சிக்கு வரி செலுத்துகிறவரும், அந்நிகழ்ச்சிக் குறிப்புகளை ஊராட்சி அலுவலகத்தில் நியாயமான எல்லாக் காலங்களிலும் கட்டணமின்றிப் பார்வையிட வசதியாயிருக்க வேண்டும்.

11. குழுத் தலைவர் எவ்வெப்போது கூட்டங் கூட்டுகிறாரோ அவ்வப்போது, ஊராட்சியின் குழு ஒவ்வொன்றும் வேலை நடத்துவதற்காக அலுவலகத்தில் கூடவேண்டும். 3, 6, 7, 8, 10 ஆம் விதிகள், ஊராட்சிக் குழுவின் செயல்முறைகளுக்குத் தக்க மாற்றங்களுடன் பொருந்தும். ஊராட்சி, அதன் உறுப்பினர்கள் அல்லது தலைவர் பற்றிய சுட்டுகள் அனைத்தும், தேவையான இடங்களிலெல்லாம், குழு அதன் உறுப்பினர்கள் அல்லது குழுத் தலைவர் பற்றிய சுட்டுகள் ஆகுமென்று பொருள் கொள்ள வேண்டும்.

12. குழுத் தலைவர் ஊராட்சிக் குழுக் கூட்டம் ஒவ்வொன்றினுடைய செயல்முறைகளின் நிகழ்ச்சிக் குறிப்புகளை, அக்கூட்டத்தின் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள், ஊராட்சித் தலைவருக்கு அனுப்ப வேண்டும்; அத்தலைவர் தாம் அதைப் பெற்றுக்கொண்ட பிறகு நடக்கும் ஊராட்சியின் முதல் கூட்டத்தில் அதை வைக்க வேண்டும்.

13. ஊராட்சிக் குழு ஒவ்வொன்றும், குழுவின் வேலையை நடத்துவதற்காகவும், அது அமைக்கப்பட்டதன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகவும், ஊராட்சிப் பணியாளர்களின் பணிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பொது.

14. ஊராட்சி, அதன் குழுக்கள் ஆகியவற்றின் நடவடிக்கைக் குறிப்புகளையும் பதிவுருக்களையும் செயல் அலுவலர் தன்னுடைய பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும்; மேற்படி சட்டத்தில் கண்ட 178(2) xxvii பிரிவின்

கீழ்ச் செய்யப்பட்ட விதிகளின்படி விதிக்கப்படத்தக்க கட்டணங்கள் செலுத்தப்படுவதன் பேரில், மேற்படி செயல்முறைக் குறிப்புகளுக்கு அல்லது பதிவுருக்களுக்குப் படிகள் வழங்கலாம். 1872 ஆம் ஆண்டின் இந்தியச் சான்றுச் சட்டதின் 76 ஆவது பிரிவில் சொல்லியிருக்கிறபடி, அந்தப் படிகளுக்குச் செயல் அலுவலர் சான்றிட வேண்டும். நகராட்சிக் கழகத்தின் நடவடிக்கைகளை மெய்ப்பிப்பதற்கு மேற்படி சட்டத்தில் கண்ட 78 ஆவது பிரிவைச் சார்ந்த (5) கூற்றின்படி, அக்கழகத்தின் நடவடிக்கைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் அதே விதத்தில், ஊராட்சி அல்லது குழுவின் நடவடிக்கைகளை அல்லது பதிவுருக்களை மெய்ப்பிப்பதற்கு அவ்வாறு சான்றிட்ட படிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 சனவரி 11 ஆம் தேதிய 83 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1966 பிப்ரவரி 25 ஆம் தேதிய 432 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(25) செய்தித்தாள் நிருபர்களுக்கு நிகழ்ச்சி நிரலின் படிகளை வழங்குவது.—ஊராட்சிகளின் நிதி வசதி வரையறுக்கப்பட்டிருப்பதால், அவைகளின் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலின் படிகளைச் செய்தித்தாள் நிருபர்களுக்கு அவைகள் வழங்குவது நடைமுறையில் முடியாததாகும். நிகழ்ச்சி நிரலின் படி ஒன்று ஊராட்சி அறிவிப்புப் பலகையில் காட்டி வைக்கப்படாவிட்டால், செய்தித்தாள் நிருபர்கள், ஊராட்சிக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ள பொருள்களை ஊராட்சியின் செயல் அலுவலரிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஊராட்சிக் கூட்டங்களுக்குச் செய்தித்தாள் நிருபர் உட்பட பொதுமக்கள் வரலாம்.

(1954 ஏப்ரல் 28 ஆம் தேதிய 27498-1-5 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(26) ஊராட்சிக் கூட்டங்களின் தேதிகளை ஊர் நல ஊழியர்களுக்குத் தெரிவிப்பது.—ஊர் நல ஊழியர்கள் திட்டம் அமைக்கும் அதிகாரிகளாகச் செயலாற்றுகிற வகையில் அவர்கள் ஊராட்சிகளுக்கு வருவது பயனுள்ளதாயிருக்குமென அரசாங்கத்தார் கருதுகிறார்கள். ஆகையால் மாவட்ட ஆட்சியாளர்கள் தங்கள் ஆட்சி வரம்புக்குட்பட்ட ஊராட்சிகளுக்குப் பின்வருமாறு கட்டளை பிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதவாது, கூட்டங்கள்

பற்றிய அறிவிப்பும் நிகழ்ச்சி நிரல் படிகளைத் தொடர்புடைய ஊர் நல ஊழியர்களுக்கு அனுப்ப வேண்டும்; அப்போதுதான், எந்தக் கூட்டங்களுக்கு அவர்கள் வந்திருப்பது பயனுள்ளதாயிருக்குமோ அந்தக் கூட்டங்களுக்கு அவர்கள் வருவதற்கு இயலும். ஆயினும் ஊராட்சிக் கூட்டங்களுக்கு ஊர் நல ஊழியர்கள் வந்திருப்பதைக் கட்டாயமாக்கிவிடக் கூடாது.

(1961 டிசம்பர் 23 ஆம் தேதிய 474 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(27) **செயல்முறைகளின் நிகழ்ச்சிக் குறிப்புகளைக் கோட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்புவது.**—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 49 ஆவது பிரிவில் கண்ட விலக்கு ஏற்பாட்டின்படி, பின்வருமாறு கட்டளை ஒன்று பிறப்பிக்கும்படி (சென்னை தவிர மற்ற) எல்லா மாவட்ட ஆட்சியாளர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்; அதாவது, ஊராட்சிக் கூட்டம் ஒவ்வொன்றிலும் நடைபெற்ற செயல்முறைகளின் நிகழ்ச்சிக் குறிப்புகளையும், அச்செயல்முறைகள் பற்றி அக்கூட்டத்துக்கு வந்திருந்த ஓர் உறுப்பினரிடமிருந்து அக்கூட்டம் முடிந்த 48 மணி நேரத்துக்குள் வந்து சேருமாறு பாட்டுக் குறிப்புகள் எல்லாவற்றையும் அக் கூட்டத்தின் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்.

(1961 நவம்பர் 10 ஆம் தேதிய 3032 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(28) **ஊராட்சிகளின் சாதாரணப் பொதுக் கூட்டம் நடத்துவது.**—திட்டவட்டமாக இன்ன இடைக் காலங்களில் ஊராட்சிக் கூட்டங்களை நடத்த வேண்டுமென, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கவில்லை. ஆனால், ஊராட்சி ஒவ்வொன்றும் மாதத்திற்கொருமுறை கூட வேண்டுமென விதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்திற்கு முன்னதாக ஊராட்சிச் சபை கூடினால், ஊராட்சி ஒன்றியத்தின் மன்றத்தில் ஊராட்சியின் சார்பாளராயிருப்பவர், ஊராட்சியின் கருத்துக்களை, ஊராட்சி ஒன்றியத்துக்குத் தெரிவிப்பதற்கு முன், கண்டறிவதற்கு முடியும். இதைக் கருதி ஊராட்சித் தலைவரால் குறிக்கப்படுகிற தேதியன்று ஊராட்சிக் கூட்டம் நடத்தப்பட வேண்டுமெனவும், அந்தத் தேதி ஒவ்வொரு மாதத்திலும் 1 ஆம் தேதிக்கு மேற்பட்டு 10 ஆம் தேதிக்குள் இருப்பது நல்லதெனவும் அரசாங்கத்தார் கருதுகிறார்கள். ஆயினும், ஊராட்சிகளின் முறைப்பட நடத்த வேண்டிய கூட்டங்களுக்குப் பதிலாகப் பதிவுருக்களை உறுப்பினர்கள் பார்வைக்கு அனுப்புவது சரியாகாது என்பதை அரசாங்கத்தார்

வற்புறுத்தித் தெரிவிக்கிறார்கள். விதிகளைக் கண்டிப்பாக அனுசரித்து ஊராட்சியின் கூட்டங்களை நடத்த வேண்டும். கூட்டம் நடக்கும் தேதியையும் இடத்தையும் பற்றி ஊரிலுள்ளவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். சாதாரணமாக ஊராட்சிக் கூட்டங்களுக்குப் பொதுமக்கள் யாவரும் வர வசதி செய்ய வேண்டும். ஊராட்சி பொதுமக்களுடைய செயல்களைத்தான் செய்கிறது என்று கிராமத்தார்கள் உணரும்படி செய்ய வேண்டும். ஊரின் திட்டத்தையும் வளர்ச்சியையும் நிறைவேற்றும் அதிகாரமுள்ளனவாகச் செயலாற்றுவதில் ஊராட்சிகள் சீரிய முன்னேற்றமடைவதற்கு இக்கூட்டங்கள் முறைப்படி சரியாகவும், சீரொழுங்காகவும் நடக்க வேண்டுமென்பது அவசியமாகும்.

(1961 ஜூன் 16 ஆம் தேதிய 1694 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

(29) தமிழை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ளுதல்.—உள்ளாட்சி மன்றங்கள் தங்கள் ஆட்சிமொழியாகத் தமிழை ஏற்றுக் கொள்வதற்காகச் சம்பந்தப்பட்ட சட்டங்களின்படித் தகுந்த துணை விதிகளைச் செய்து கொள்ளலாமென்று அவைகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆட்சிமொழிக் குழுவினர் தக்க துணை விதிகளைப் பரிந்துரைப்பதன் மூலம், உள்ளாட்சி மன்றங்கள் தமிழைத் தங்கள் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்வதற்கு உதவி புரியும்படி அக்குழுவினருக்கு அரசாங்கத்தார் தெரிவிக்கலாமென்று சென்னையிலுள்ள நகர மன்ற உள்ளாட்சி கழக ஆய்வாளர் ஆலோசனை கூறியுள்ளார். தமிழ் ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற அரசாங்கத் துறைகள் சம்பந்தமாக, பின்வருவனவற்றில் ஆங்கிலத்தை பயன்படுத்தலாமென்று கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன :—

(1) சம்பளப் பட்டி, சில்லரைச் செலவுப் பட்டி, பயணப்படிப் பட்டி, பயிற்சி உதவிப் பணப் பட்டி முதலியவைகள் தயாரிக்கும்போதும், கருவூலங்களுக்கும் சென்னையிலுள்ள கணக்காய்வாளருக்கும் முகவரியிட்டு அனுப்பப்படுகிற பிற கடிதங்களுக்கும்,

(2) துறைத் தலைவர்களுக்கும் மாநில அரசுக்கும் ஊர் நீதிமன்றங்களல்லாத மற்ற நீதிமன்றங்களுக்கும் மைய அரசு அலுவலகங்களுக்கும் முகவரியிட்டு அனுப்பப்படுகிற எல்லாக் கடிதங்களிலும்,

(3) எந்த அதிகாரி அலுவலகம் சம்பந்தமாக 1956 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஆட்சிமொழிச் சட்டத்தில் கண்ட 4 ஆவது பிரிவின்படி அறிவிக்கை ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லையோ (அதாவது, தமிழ் ஆட்சிமொழியாகப்

புகுத்தப்படவில்லையோ) அந்த அதிகாரிக்கு மேல்முறையீடு செய்யப் பெறுவதற்குட்பட்ட அல்லது அக்குழுவினரால் அவரால் திருத்தியமைக்கப் பெறுவதற்குட்பட்ட சட்ட பூர்வமான எல்லா ஆணைகளிலும்.

(1962 ஆகஸ்டு 2 ஆம் தேதிய 1748 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(30) 1962 ஆகஸ்டு 2 ஆம் தேதிய 1748 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணையை எல்லா ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. எல்லா ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களும் தமிழைத் தங்கள் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்வதில் பின்வரும் மாதிரித் துணை விதிகளை இயற்றலாமென்று பரிந்துரைக்கப்படுகிறது :—

"1. இந்த ஊராட்சியின்/ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆட்சிமொழி தமிழாயிருக்கும்; இப்போதிலிருந்தே இந்த அலுவலகத்திலிருந்து எல்லாக் கடிதங்களும் தமிழில்தான் அனுப்பப்படும்.

2. அடியிற்கண்டவற்றில் ஆங்கிலம் பயன்படுத்தப்படும் :—

(i) சம்பளப் பட்டிகள், பயிற்சி உதவிப் பணப் பட்டிகள், சில்லறைச் செலவுப் பட்டிகள், பயணப்படிப் பட்டிகள் தயாரிக்கும்போதும்; கருவூலங்களுக்கும் சென்னையிலுள்ள உள்ளாட்சி நிதிக் கணக்கு ஆய்வாளருக்கும், சென்னையிலுள்ள மாநிலக் கணக்காய்வாளருக்கும் முகவரியிட்டு அனுப்பப்படுகிற பிற கடிதங்களும்,

(ii) அரசுத் துறைகளின் தலைவர்களுக்கும் மாநில அரசுக்கும் ஊர் நீதிமன்றங்களல்லாத மற்ற நீதிமன்றங்களுக்கும் மத்திய அரசு அலுவலகங்களுக்கும் முகவரியிட்டு அனுப்பப்படுகிற எல்லாக் கடிதங்களிலும்,

(iii) எந்த அதிகாரி அலுவலகம் சம்பந்தமாக (தமிழகத்தின் 1956-ம் ஆண்டின் XXIX ஆம் சட்டமாகிய) 1956 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஆட்சிமொழிச் சட்டத்தில் கண்ட 4 ஆவது பிரிவின்படி அறிவிக்கை ஒன்று மாநில அரசாங்கத்தாரால் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லையோ அந்த அதிகாரிக்கு மேல்முறையீடு செய்யப்பெறுவதற்குட்பட்ட அல்லது அவரால் திருத்தியமைக்கப் பெறுவதற்குட்பட்ட சட்டப்படியான எல்லா ஆணைகளிலும்."

(2) தமிழைத் தங்கள் ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்வது பற்றி அவைகள் இயற்றும் துணை விதிகளை, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 180 ஆவது பிரிவின்படி ஆய்வாளருடைய ஒப்புதலுடன்

இயற்ற வேண்டுமென்று எல்லா ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

(3) இக் கட்டளைகளில் அடங்கிய முறைகளை எல்லா ஊராட்சிகளின் கவனத்திற்கும் கொண்டு வருமாறு மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(1963 டிசம்பர் 24 ஆம் தேதிய 52210/சி2/63-7 ஆம் எண் குறிப்பாணை.)

(31) 'சிறுபான்மை மொழியினரின் பாதுகாப்புகளுக்'கான மண்டல அமைச்சரவைக் குழுவினரால் செய்யப்பட்டு அரசினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற முடிவுகளில் ஒன்று, இம் மாநிலத்தில் அலுவல்களுக்காகச் சிறுபான்மையினரின் மொழிகளைப் பயன்படுத்துவதைக் குறிக்கும். சில அலுவல்களுக்காகச் சிறுபான்மையினரின் மொழிகளைப் பயன்படுத்துவது பற்றி உள்ளாட்சிப் பரப்பில் மக்கள் தொகையில் இப்போது 20 சதவீதம் என்றிருப்பதற்குப் பதிலாகக் குறைந்தது 15 சதவீதங் கொண்ட சிறுபான்மை மொழி மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு உள்ளாட்சிப் பரப்புகளை உறுதி செய்ய வேண்டுமென்றுங் கூட முடிவு செய்யப்பட்டது. அவ்வண்ணமே, அரசாங்கத்தார் மேற்படி நோக்கத்திற்காக, இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியில் கண்டவாறு உள்ளாட்சிப் பரப்புகளை மாற்றியமைத்திருக்கிறார்கள்.

2. மேற்படி பரப்புகளில், ஆட்சிமொழியைப் பயன்படுத்துவதன்றியும், சிறுபான்மை மொழி அல்லது மொழிகளைப் பயன்படுத்துவது பற்றிப் பின்வரும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் :—

(i) முக்கியமான அறிக்கைகள், வாக்காளர் பட்டிகள் முதலிய எல்லாவற்றையும் சிறுபான்மை மொழி அல்லது மொழிகளில் வெளியிட வேண்டும்.

(ii) பொதுமக்கள் பயன்படுத்துவதற்குரிய படிவங்கள் முதலியவற்றை வட்டார மொழியிலும் சிறுபான்மை மொழியிலும் வெளியிட வேண்டும்.

(iii) அரசு அலுவலகங்களுக்குச் சிறுபான்மை மொழியிலேயே கடிதங்கள் எழுத அனுமதிக்க வேண்டும்.

(iv) முக்கியமான ஒழுங்குமுறை விதிகளையும் துணை விதிகளையும் சிறுபான்மை மொழித் தொகுதியினரின் தாய்மொழியில் பெயர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. இந்த அரசு ஆணையிற் கண்டவை சம்பந்தப்பட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் ஆகியவற்றின் கவனத்திற்குக் கொண்டுவரும்படி, சென்னையிலுள்ள ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு.

(1961 மக்கள் தொகைக் கணக்கின்படி)

தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும்.	வட்டத்தின் பெயர்.	(3) பத்தியில் முன் மதிக்கப்பட்ட வட்டத்தில் நகராட்சி ஏற்பட்டிராத பகுதியின் பெயர்.	சிறுபான்மை மொழியின் மொழிகளின் பெயர்/பெயர்கள்.
(1)	(2)	(3)	(4)
1. செங்கற்பட்டு	(அ) திருத்தணி	திருத்தணி	தெலுங்கு
	(ஆ) திருவள்ளூர்	திருவள்ளூர்	தெலுங்கு
	(இ) பொன்னேரி	பொன்னேரி	தெலுங்கு
2. கன்னியாகுமரி	விளவன்கோடு	விளவன்கோடு	மலையாளம்
3. இராமநாதபுரம்	சாத்தூர்	சாத்தூர்	தெலுங்கு
4. மதுரை	(அ) கோடைக்கானல்	கோடைக்கானல்	தெலுங்கு
	(ஆ) பழனி	பழனி	தெலுங்கு
5. நீலகிரி	கூடலூர்	கூடலூர்	மலையாளம்
6. தருமபுரி	ஒசூர்	..	தெலுங்கு, கன்னடம்
7. கோயம்புத்தூர்	(அ) கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	தெலுங்கு
	(ஆ) உடுமலைபேட்டை	உடுமலைபேட்டை	தெலுங்கு
	(இ) பல்லடம்	பல்லடம்	தெலுங்கு
	(ஈ) அவிநாசி	அவிநாசி	தெலுங்கு, கன்னடம்
	(உ) பொள்ளாச்சி	பொள்ளாச்சி	தெலுங்கு
	(ஊ) கோபிசெட்டிபாளையம்	கோபிசெட்டிபாளையம்	தெலுங்கு

(32) உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வது பற்றிய தீர்மானங்களை ரத்து செய்தல்.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 15 (4) பிரிவின்படி ஊராட்சியில் ஒரு பெண் உறுப்பினரைச் சேர்த்துக் கொள்ளும் போது ஊராட்சித் தலைவர் அச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்ருத ஒரு நிகழ்வினை மதுரை மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்திருக்கிருர். அச் சட்டத்தில் கண்ட 147(1) பிரிவின் விலக்கு ஏற்பாட்டில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, நடத்தப்பட்டு விட்ட ஒரு தேர்தலை நிராகரிக்க அப்பிரிவின்படி ஆய்வாளருக்கு அதிகாரமில்லை. அப்படிச் சொல்லப்பட்டிருந்த போதிலுங்கூட, பெண் உறுப்பினரைச் சேர்த்துக் கொள்வதற்காக ஊராட்சி நிறைவேற்றிய தீர்மானத்தை அப்பிரிவின்படி ஆய்வாளர் என்னும் முறைமையில் தாம் நீக்கிவிடலாமா என்பது பற்றித் தெளிவுபடுத்துமாறு அந்த மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக் கொண்டிருக்கிருர்.

மாவட்ட ஆட்சியாளர்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்ருல், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட ஏற்பாடுகளின்படி ஒரு ஊராட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஓர் உறுப்பினர் அவ்வூராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் என்று சொல்ல முடியாது. ஆகவே உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வது பற்றிய ஒரு ஊராட்சித் தீர்மானத்தை ஆய்வாளர் (கலெக்டர்) நீக்கிவிடுவதற்கு, மேற்படி சட்டத்தில் கண்ட 147(1) பிரிவின் விலக்கு ஏற்பாடு தடையாக மாட்டாது.

(1962 செப்டெம்பர் 10 ஆம் தேதிய 1993 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

9. ஊராட்சி உறுப்பினர்கள் தலைவரை இடைக் கேள்விகள் கேட்பது.—(1) ஊராட்சி ஆட்சிக்குத் தொடர்பில்லாத எதைக் குறித்தும் ஊராட்சிக் கூட்டத்தில் கேள்வி கேட்கவுங் கூடாது. பதிலளிக்கவுங் கூடாது. மெய்ம்மைகள் அல்லாதனவற்றைப்பற்றி எக் கேள்வியையும் கேட்கலாகாது. மெய்ம்மைகளைத் தெரிவிக்கும் அளவிலேயே பதில் இருக்க வேண்டும். இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டதைத் தவிர்த்து பின்வரும் விதிகளில் குறிப்பிட்டுள்ள திட்டங்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு, ஊராட்சி உறுப்பினர் எக் கேள்வியேனும் கேட்கலாம்.

(2) கேள்வி கேட்க விரும்புகிற ஊராட்சி உறுப்பினர், குறைந்தது முழு பத்து நாட்களுக்கு முன் அறிக்கை விடுத்து, தமது எண்ணத்தை எழுத்து மூலமாகத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும்; அவர் கேட்க விரும்புகிற கேள்வியின் நகல் ஒன்று அந்த அறிக்கையில் அடங்கியிருக்க வேண்டும்.

(3) கேள்வி ஒன்று ஏற்றுக் கொள்ளக் கூடியதாயிருக்க வேண்டுமானால் அது பின்வரும் வரையறைகளை நிறைவு செய்ய வேண்டும்; அவையாவன :—

(1) கேள்வியைப் புரிந்து கொள்வதற்குக் கண்டிப்பாகத் தேவைப் படாத பெயரையோ அறிக்கையையோ அது வெளியிடக் கூடாது;

(2) கேள்வியில் அறிக்கை இருக்குமானால், அந்த அறிக்கை சரியானது என்பதற்கு, கேள்வி கேட்கும் உறுப்பினரே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்;

(3) வாதங்கள், அனுமானங்கள், வஞ்சப் புகழ்ச்சியான சொற்றொடர் கள் அல்லது அவதூறான அறிக்கைகள் அதில் இருக்கக் கூடாது.

(4) ஒன்றில் கருத்து தெரிவிக்கும்படி அல்லது நடைமுறை சாராத சட்டக் கேள்விகளுக்கு அல்லது ஆதாரவற்ற ஊகக் கருத்துகளுக்குத் தீர்வு சொல்லும்படி அதில் கேட்டிருக்கலாகாது;

(5) ஒருவருடைய பதவி அல்லது பொது முறைமையிலன்றி மற்றப் படி அவருடைய ஒழுக்கம் அல்லது நடத்தையைப்பற்றி அதில் கேட்டிருக்கக் கூடாது;

(6) அது அதிக நீளமானதாயிருக்கக் கூடாது;

(7) ஒருமுறை முழுவதும் பதிலளிக்கப் பெற்ற கேள்வியை மறுமுறை கேட்கக் கூடாது.

(4) ஒரு கேள்வி ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதுதானா என்பதைத் தலைவர் தீர்மானிக்க வேண்டும். அடுத்த கூட்டத்திற்கு 2-வது விதியின்படி அக் கேள்வி உரிய காலத்தாயிருந்தால், அக் கூட்டத்திற்கென நிச்சயிக்கப்பட்ட தேதிக்கு முன் அக் கேள்வியை அனுமதிக்க வேண்டும் அல்லது ஏற்காமல் மறுத்து விடலாம். யாதானும் ஒரு கேள்வி, கேள்வி கேட்கும் உரிமையைத் தவறாகப் பயன்படுத்துவதாகுமென அவர் நினைத்தால் அல்லது பொது நலனை முன்னிட்டு அதற்குப் பதிலளிக்கக் கூடாதென அவர் கருதினால், அவர் அக் கேள்வியை ஏற்காமல் மறுத்துவிடலாம். மேலும் அவர், இவ்விதிகளில் எதை யேனும் மீறுகிறதென்று தாம் நினைக்கிற எக்கேள்வியையேனும் ஏற்காமல் மறுத்துவிட வேண்டும். அப்படிப்பட்டவற்றில் ஊராட்சிச் செயல்முறைக் குறிப்புகளில் அக் கேள்வியை எழுத வேண்டியதில்லை.

(5) தலைவரால் அனுமதிக்கப்பட்ட கேள்விகளை அந்நாளுக்குரிய நிகழ்ச்சி நிரல் தாளில் எழுத வேண்டும். அவ்வாறு எழுதப்பட்ட கேள்வியைக் கேட்ட

உறுப்பினர் அதை முன்னதாகத் திரும்பப் பெற்றிராவிட்டால், தலைவர், அந்தக் கேள்வி ஒவ்வொன்றுக்கும், அது தாளில் கொண்டிருக்கிற வரிசைப்படி, கூட்டத்தில் வேலை எதுவும் தொடங்குவதற்கு முன் பதிலளிக்க வேண்டும் :

ஆனால், நிகழ்ச்சி நிரல் தாளில் உள்ள கேள்வி ஒன்று திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தபோதிலும், தலைவர் தக்கதெனத் தமக்குத் தோன்றினால், பொது நலனை முன்னிட்டு அக் கேள்விக்குப் பதில் அளிக்கலாம்.

(6) எந்த மெய்ம்மைகளைப் பற்றி பதில் அளிக்கப்பட்டிருக்கிறதோ அது குறித்துப் பின்னும் விளக்கம் பெறும் பொருட்டு, உறுப்பினர் ஒருவர் தொடர் கேள்வி ஒன்றைக் கேட்கலாம் :

ஆனால் தொடர் கேள்வி ஒன்று, கேள்விகளுக்குரிய பொருள் பற்றிய விதிகளை மீறுவதாயிருக்கிறதெனத் தலைவர் கருதினால், அவர் அத்தொடர் கேள்வியை அனுமதிக்காமல் மறுத்துவிடலாம்.

மேலும், அவர் அறிவிப்பு இல்லாத தொடர் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்க மறுத்துவிடலாம்; அப்படிப்பட்டவற்றில் ஊராட்சியின் பிந்திய கூட்டம் ஒன்றில், அதைப் புதிய கேள்வி வடிவத்தில்தான் கேட்கலாம்.

(7) இவ் விதிகளின்படி கேட்கப்பட்ட ஒரு கேள்வி பற்றியோ அக் கேள்விக்கு அளிக்கப்பட்ட பதில் பற்றியோ விவாதம் எதுவும் அனுமதிக்கப் பட மாட்டாது.

(8) கேட்கப்பட்ட கேள்வியையும் அதற்கு அளிக்கப்பட்ட பதிலையும், ஊராட்சிச் செயல் முறைக் குறிப்புகளில் எழுதி வைத்துக்கொள்ள வேண்டும்.

(9) இவ் விதிகளில், 'தலைவர்' என்பதில், 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 34-ஆவது பிரிவைச் சேர்ந்த (1), (2), (3) உட்பிரிவுகளின்படியும் 35-ஆவது பிரிவின்படியும் பிரஸ்தாப காலத்தில் தலைவர் பதவிப் பொறுப்பு வகிப்பவர் என்பதும் அடங்கும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1348 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

10. ஊராட்சிக் கூட்டங்களில் தீர்மானங்கள் கொண்டு வருதல்.—(1) தீர்மானம் கொண்டுவர விரும்புகிற உறுப்பினர் குறைந்தது முழு பத்து நாட்களுக்கு முன் அறிவிப்பு கொடுப்பதன் மூலம், தமது எண்ணத்தைத் தலைவருக்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும். அவர் கொண்டுவர விரும்புகிற தீர்மானத்தின் படி ஒன்று அந்த அறிவிப்பில் அடங்கியிருக்கவேண்டும்.

ஆனால், பத்து நாட்களுக்குக் குறைவாகவுள்ள அறிக்கையுடன் வந்த தீர்மானத்தை வேலைப் பட்டியில் எழுதுவதற்குத் தலைவர் அனுமதி கொடுக்கலாம்.

(2) தீர்மானம் ஒன்று பின்வரும் வரையறைகளின்படி இராவிட்டால் அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அவையாவன:

(அ) அதன் சொல்லமைப்புத் தெளிவாகவும் சரியாகவும் இருக்க வேண்டும். திட்டவட்டமான ஒரு வழக்குப் பொருளை எழுப்புவதாகவும் அது இருக்க வேண்டும்;

(ஆ) வாதங்கள், அனுமானங்கள், வஞ்சப் புகழ்ச்சியான சொற்றொடர்கள் அல்லது அவதூறான அறிக்கைகள் அதில் இருக்கக் கூடாது. தனி நபர்களுடைய பதவி அல்லது பொதுமுறைமையிலன்றி மற்றப்படி, அவர்களுடைய நடத்தை அல்லது ஒழுக்கத்தைப் பற்றி அது குறிப்பிடக் கூடாது.

(3) தீர்மானம் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதா என்பதைத் தலைவர் தீர்மானிக்க வேண்டும்; 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட ஏற்பாடுகளையாவது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளையாவது மீறுகிறதென்று அவர் கருதுகிற தீர்மானத்தை அவர் ஏற்றுக் கொள்ளாமல் மறுத்துவிட வேண்டும், தலைவரின் தீர்ப்பு முடிவானதாகும்:

ஆனால், ஒரு தீர்மானம் ஊராட்சி ஆட்சிக்குத் தொடர்பற்ற ஒரு பொருளைப்பற்றியதென்று தலைவர் கருதினால், தலைவர் அத் தீர்மானத்தை மாவட்ட ஆட்சியாளரின் ஆலோசனைக்கு அனுப்பி, அது ஏற்றுக்கொள்ளப் படத்தக்கதா என்பதைப் பற்றி அவருடைய ஆணைகளைப் பெற வேண்டும்.

(4) தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு தீர்மானம் கூட்டத்துக்கான அறிவிப்பு நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட வேண்டும்.

(5) (1) தீர்மானம் ஒன்று நிகழ்ச்சி நிரலில் எந்த உறுப்பினர் பெயரில் இருக்கிறதோ அவர் கூப்பிடப்படும்போது—

(அ) அத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படியானால், அவ்வாறு சொல்லிவிட்டு நிறுத்திக்கொள்ள வேண்டும்; அல்லது,

(ஆ) தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும்.

(2) அந்த உறுப்பினர் கூப்பிடப்படும்போது அங்கு இல்லாமற் போனால், அல்லது அத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளக் கருதினால் அல்லது அதைக் கொண்டுவர விருப்பமில்லாதவராயிருந்தால், அல்லது அக் கூட்டம் நடப்பதற்கு முன் அவர் உறுப்பினராயிராமற் போய்விட்டால், அக் கூட்டத்துக்கு வந்திருக்கும் எந்த உறுப்பினரேனும் அத் தீர்மானத்தைக் கொண்டு வரலாம்; எந்த உறுப்பினரும் அதைக் கொண்டு வராவிட்டால், அது திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

(3) கொண்டுவரப்பட்டிருக்கிற தீர்மானம் ஒவ்வொன்றும் வழிமொழியப்பட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அதைப் பற்றி விவாதிக்கக் கூடாது.

(6) தலைவர் அனுமதித்தாலன்றி மற்றப்படி எந்தப் பேச்சும் பதினைந்து நிமிடத்துக்கு மேல் நீடிக்கக் கூடாது:

ஆனால், தீர்மானம் கொண்டு வருபவர் அதைக் கொண்டு வருகையில் முப்பது நிமிடத்துக்கு மேற்படாமல் பேசலாம்.

(7) ஒரு தீர்மானத்தைப் பற்றிய விவாதம், கண்டிப்பாக அத் தீர்மானத்தின் பொருள் பற்றியதாகவே இருக்க வேண்டும்.

(8) (1) தீர்மானம் ஒன்று விவாதிக்கப்பட்டு வருகையில், எவ்வுறுப்பினரேனும், 2-ஆவது, 3-ஆவது, 6-ஆவது, 7-ஆவது விதிகளுக்குட்பட்டு, அத் தீர்மானத்திற்குத் திருத்தம் கொண்டு வரலாம்.

(2) கொண்டுவரப்பட்ட திருத்தம் ஒவ்வொன்றும் வழிமொழியப்பட வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அதைப்பற்றி விவாதிக்கக் கூடாது.

(9) (1) ஒரு தீர்மானத்தையோ ஒரு தீர்மானத்துக்குத் திருத்தத்தையோ கொண்டு வந்திருக்கிற ஒரு உறுப்பினர், ஊராட்சியின் அனுமதியில்லாமல் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

(2) திரும்பப் பெற்றுக்கொள்ள அனுமதி கேட்பதற்கான ஒரு தீர்மானத்தின் மீது விவாதம் செய்ய, தலைவரின் இசைவின்றி இடங் கொடுக்கக் கூடாது.

(10) (1) ஒரு தீர்மானத்துக்குத் திருத்தம் ஒன்று கொண்டுவரப்பட்டால், அல்லது அத்தகைய திருத்தங்கள் ஒன்று அல்லது பல கொண்டுவரப்பட்டால் தலைவர் அதைப்பற்றி ஊராட்சியின் கருத்தினை அறிவதற்கு முன், மூலத் தீர்மானத்தையும் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தம் அல்லது திருத்தங்களையும் ஊராட்சிக்குச் சொல்ல வேண்டும் அல்லது படித்துக் காட்ட வேண்டும்.

(2) சாதாரணமாக, தலைவர், திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கிற வரிசையில் அவற்றின் மீது வாக்கெடுக்க வேண்டும்; எல்லாத் திருத்தங்களுமே தோற்றுப் போனால், கடைசியாக மூலத் தீர்மானத்தின் மீது வாக்கெடுக்க வேண்டும். ஆனால், எதிலாவது தலைவர், தாம் தக்கதெனக் கருதினால் தமக்குச் சரியெனத் தோற்றும் வரிசையில் மூலத் தீர்மானத்தின் மீதும் திருத்தங்கள் மீதும் வாக்கெடுக்க வேண்டும்.

(11) குறிப்பிடத்தக்க பல பொருள்கள் உள்ளடங்கிய தீர்மானம் ஒன்று விவாதிக்கப்பட்டிருந்தால், தலைவர் தக்கதெனத் தமக்குத் தோன்றினால், தீர்மானத்தைப் பொருள்களாகப் பிரிந்து அவற்றின் ஒவ்வொன்றின் மீதும் தனித்தனியாக வாக்கெடுக்க வேண்டும்.

விளக்கம்.—இவ் விதிகளில், 'தலைவர்' என்பதில், 1956 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 34-ஆவது பிரிவைச் சேர்ந்த (1), (2), (3) உட்பிரிவுகளின்படியும், 35-ஆவது பிரிவின்படியும் அக் காலத்தில் தலைவர் பதவிப் பொறுப்பு வகிப்பவர் என்பதும் அடங்கும்.

(1961 ஏப்ரல் 26-ஆம் தேதிய 1248-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1961 நவம்பர் 27-ஆம் தேதிய 218295/எல் தனி-61-2-ஆம் எண் குறிப்பாணை.)

(1965 சனவரி 11-ஆம் தேதிய 83-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

11. **தலைவருடைய அலுவல்களை இன்னொருவருக்கு மாற்றுவதும் ஒப்படைப்பதும்.**—(1) ஊராட்சித் தலைவர் ஊராட்சிக்குத் தொடர்பான வேலையாக தமிழ்நாடு மாநிலத்துக்குள், ஊராட்சியின் ஆட்சி வரம்பை விட்டுப் போயிருந்தால், அவருடைய அலுவல்கள், துணைத் தலைவருக்கு அலுவல் ஏதேனும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதைத் தவிர, இதில் பின்னால் 'மேற்படி சட்டம்' எனக் குறிப்பிடப்படும் (தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டின் XXXV ஆவது சட்டமாகிய) 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கண்ட 34-ஆவது பிரிவைச் சேர்ந்த (2) ஆவது உட்பிரிவின்படி அந்தத் துணைத் தலைவரைச் சேரமாட்டா.

(2) தலைவர், செயல் அதிகாரியாகவும் இருந்தால், செயல் அதிகாரி என்னும் முறைமையில் அவருடைய அலுவல்கள் உட்பட எந்த அலுவல்களையும் ஒப்படைக்கக் கூடாதென ஊராட்சித் திட்டமாகத் தடுத்திருப்பனவற்றை மேற்படி சட்டத்தின் 35-ஆவது பிரிவின்படி துணைத் தலைவரிடமோ ஓர் உறுப்பினரிடமோ ஒப்படைக்கக் கூடாது.

(3) தலைவர் செயல் அதிகாரியாகவும் இருந்தால் அந்த முறைமையில் அவருடைய அலுவல்கள் உட்படத் தலைவருடைய அலுவல்கள் எந்த உறுப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த உறுப்பினர், அவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ள காலத்தில் "தலைவர் அதிகாரம் பெற்றவர்" என்று சொல்லப்படுவார்.

(4) ஓர் உறுப்பினரிடம் அலுவல்களை ஒப்படைப்பதற்காக ஊராட்சி பிறப்பித்த ஓர் ஆணை நடைமுறையில் இருக்கும்போது, அமலில் இருக்கிற ஆணை யாருடைய சார்பில் பிறப்பிக்கப்பட்டதோ அந்த உறுப்பினர் அல்லாத வேறொர் உறுப்பினர் சார்பில் எந்த அலுவல் ஒப்படைப்பு ஆணையொன்றை மேலும் பிறப்பிக்கக் கூடாது.

(5) தலைவர், ஊராட்சியின் தனி ஒப்பளிப்பு இல்லாமல், எந்த ஆண்டிலேனும், மொத்தத்தில் தொண்ணூறு நாட்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு, எந்த உறுப்பினரிடமும் அலுவல்களை ஒப்படைக்கக் கூடாது.

(6) உறுப்பினர் ஒருவரிடம் அலுவல்களை ஒப்படைப்பதற்காகத் தலைவர் பிறப்பிக்கும் ஆணை ஒவ்வொன்றையும் ஊராட்சியின் அடுத்தக் கூட்டத்தில் ஊராட்சிக்கும் அதன் தொடர்புடைய கோட்டப் பஞ்சாயத்து அலுவலருக்கும் ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கும் அனுப்ப வேண்டும்.

(7) தலைவர் தமது அலுவல்களைத் துணைத் தலைவரிடம் ஒப்படைப்பதற்கு, 3 முதல் 5 வரையுள்ள விதிகளின் ஏற்பாடுகள் பொருந்தமாட்டா.

(8) (விட்டுவிடப்பட்டது.)

தலைவர் பதவியில் ஏற்படும் காலியைப் பற்றி அறிவிப்பது.

(9) தலைவர் பதவியில் ஏற்படுகிற காலியைப் பற்றிப் பேரூராட்சிகளைப் பொறுத்தவரை செயல் அதிகாரியும், ஊராட்சிகளைப் பொறுத்தவரை துணைத் தலைவரும் தேர்தல் அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும்; அல்லது செயல் அதிகாரியின் அல்லது துணைத் தலைவரின் பதவியில் காலி ஏற்பட்டால் அல்லது செயல் அதிகாரியோ துணைத் தலைவரோ தொடர்ச்சியாகப் பதினைந்து நாட்களுக்கு மேற்பட்டு ஆட்சி வரம்பு எல்லையை விட்டுப் போயிருந்தாலும் ஆற்றலிழந்து போனாலும் ஊராட்சி அலுவலகம் இருக்கிற வருவாய் ஊரின் தலைமை அலுவலர் அல்லது ஊராட்சி அலுவலகம் இருக்கிற இடத்தின் ஊர்நலச் சேவகர் அல்லது ஊர்நலச் சேவிகை அவ்வாறு அறிவிக்க வேண்டும்.

(10) 9 ஆவது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையை, காலி நேரிட்ட தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் அனுப்ப வேண்டும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 பிப்ரவரி 26 ஆம் தேதிய 476 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

ஊராட்சித் தலைவர்களின் அலுவல்களைச் செய்யும்போது தற்காலிகத் தலைவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரையறைகளும் கட்டுப்பாடும்.

மேற்படி சட்டத்தில் கண்ட 34 ஆவது பிரிவைச் சேர்ந்த (3) ஆவது உட்பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள தற்காலிகத் தலைவர், அடியிற் கண்ட வரையறைகளுக்கும் திட்டங்களுக்கும் உட்பட்டு, தலைவருடைய அலுவல்களைச் செய்ய வேண்டும்; அவையாவன :—

(i) ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் எவரையும் நியமிக்கவோ, உயர்த்தவோ, தண்டிக்கவோ கூடாது;

(ii) அங்காடிகள், கால்நடை வெட்டுமிடங்கள், மீன் பிடி துறை உரிமைகள் ஆகியவற்றின் குத்தகைகளையும் அவைகளைப் போன்ற மற்ற குத்தகைகளையும் ஆண்டுதோறும் விற்பனைக்காக வெளிப்படையாக ஏலம் நடத்தக் கூடாது;

(iii) ஊராட்சிச் சார்பில் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளக்கூடாது. சம்பளப் பட்டியல்களையும் மின்சார நுகர்வுச் செலவுகளையும் தவிர மற்றப்படி ஊராட்சிக்குச் சொந்தமான பணத்தை காசோலை (செக்) மூலமாக எடுக்கக் கூடாது;

(V ஆட்சிப் பிரச்சினைகள் உள்ளடங்கியவைகளாய் பொதுமக்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள், மனுக்கள், மற்ற முறையீடுகள் ஆகியவற்றின் மீது இறுதியான முடிவு ஆணைகளைப் பிறப்பிக்கக் கூடாது;

(v) ஊராட்சி அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் தற்செயல் ப்புத் தவிர வேறு விடுப்பு வழங்கக் கூடாது;

(vi) வீட்டு வரியை திருத்தியமைப்பதற்கான மனுக்கள் மீது ஆணை பிறப்பிக்கக் கூடாது;

(vii) ஓர் உறுப்பினரைச் சேர்த்துக் கொள்வதற்காக ஊராட்சிக் கூட்டத்தைக் கூட்டக் கூடாது.

(1965 பிப்ரவரி 26 ஆம் தேதிய 476 ஆம் எண் ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1966 மார்ச்சு 4 ஆம் தேதிய 532 ஆம் எண் ஊர் வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

12. ஊராட்சித் தலைவர்களும், துணைத் தலைவர்களும், உறுப்பினர்களும் விலகுதல்.—(1) ஊராட்சித் தலைவர் அல்லாத வேறு ஓர் உறுப்பினர் அல்லது அவ்வூராட்சியின் துணைத் தலைவர் தலைவருக்கு அறிக்கை எழுதியனுப்பித் தம் பதவி விலகல் செய்யலாம். தலைவர் அந்த விலகலைப் பெறுகிற தேதியிலிருந்து அது அமலுக்கு வரத் தொடங்கும்.

(2) ஊராட்சித் தலைவர் அவ்வூராட்சிக்கு அறிக்கை எழுதியனுப்பித் தமது பதவி விலகல் செய்யலாம். அந்த விலகல் ஊராட்சி முன்னர் வைக்கப்படும் தேதியிலிருந்து அது அமலுக்கு வரத் தொடங்கும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1348 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(33) தலைவர் பதவி காலியாயிருக்கும்போது உறுப்பினர்கள் பதவி விலகல்.—தலைவர் பதவி காலியாயிருக்கும்போது, தலைவருடைய அலுவல்களை, 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 25 (1) ஆவது பிரிவின்படி துணைத் தலைவரைச் சேரும். ஊராட்சி உறுப்பினர் ஒருவர், தலைவர் பதவிப் பொறுப்பு வகிக்கிற துணைத் தலைவருக்கு அறிக்கை எழுதியனுப்பித் தமது பதவி விலகல் செய்யலாம். அந்தத் துணைத் தலைவர் ஊராட்சித் தலைவர் பதவி காலியாயிருந்தபோதிலும், தலைவருக்கு முறைப்படி அறிக்கை எழுதியனுப்பித் தாம் பதவியை விலகல் செய்யலாம்; அந்த அறிக்கையின் தேதியிலிருந்து அப் பதவி விலகல் அமலுக்கு வரத் தொடங்கும்.

(1954 அக்டோபர் 19 ஆம் தேதிய 91346/54-2, எல். 7 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(34) 1955 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 152 (3) பிரிவில் வரும் "கூட்டம் பற்றிய அறிக்கை" என்னும் சொற்றொடருக்கு உரை விளக்கம்.—1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 153 ஆவது பிரிவைச் சேர்ந்த (3) ஆவது உட்பிரிவில் வரும் "கூட்டம் பற்றிய அறிக்கை" என்னும் சொற்றொடர், நம்பிக்கையின்மைத் தீர்மானத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காக நடத்தப்படப் போகும் கூட்டத்தின் உள்ளபடியான தேதி

பற்றிய அறிக்கையெனப் பொருள்படுமா என்னும் கேள்வி ஒன்று எழுப்பப் பட்டிருக்கிறது.

அரசு இதைப் பின்வருமாறு தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். 152 (3) ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள "கூட்டம் பற்றிய அறிக்கை" என்பதற்கு, கூட்டத்துக்கென உள்ளபடியாக நியமிக்கப்பட்ட தேதியையும் காலத்தையும் பற்றிய அறிக்கையைக் குறிப்பிடுவதாகப் பொருள்கொள்ள முடியாது. "கூட்டம் பற்றிய அறிக்கை" என்னும் சொற்றொடரின் இயல்பான பொருளை எடுத்துக் கொண்டால், 152 (3) பிரிவு அடியிற் கண்டபடிதான் பொருள்படும்; அதாவது, வட்டாட்சியர் சூழ்நிலைக்கேற்பத் தலைவருக்காவது துணைத் தலைவருக்காவது ஓர் அறிக்கை அனுப்ப வேண்டும்; தாம் பிறப்பித்த அறிக்கையின் காலம் கழிந்த பிறகு தீர்மானத்தை பற்றி ஆலோசனை செய்வதற்காக வட்டாட்சியர் ஒரு கூட்டம் கூட்டப் போவதாகத் தலைவருக்காவது துணைத் தலைவருக்காவது அந்த அறிக்கை மூலமாகத் தெரிவிக்க வேண்டும்; அறிக்கையுடன் சேர்த்தனுப்பப் பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லுமுகத்தான், அறிவிப்பு பெற்றுக் கொண்டதிலிருந்து ஒரு வாரத்திற்குள் ஓர் அறிக்கை கொடுக்கும்படி, சூழ்நிலைக்கேற்ப தலைவரையாவது துணைத் தலைவரையாவது கேட்டுக்கொள்ள வேண்டும். 152 (3) ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பில் கண்ட காலத்துக்குள் பதில் வந்தாலும் வராவிட்டாலும் வட்டாட்சியர் மேற்சொன்ன காலம் கழிந்தபிறகு, தாம் குறிப்பிடுகிற காலத்திலே தீர்மானத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காகக் கூட்டம் ஒன்றைக் கூட்ட வேண்டும். 152 (5) பிரிவின்படி, அக் கூட்டத்தைப் பற்றியும் அதற்காகக் குறிப்பிடப்பட்ட காலத்தைப் பற்றியு மான அறிவிப்பு அந்த அறிவிப்பு சேர்ப்பிக்கப்பட்டபின் முழு பதினைந்துக்குக் குறையாத நாட்கள் இருக்கும்படியாக, உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும்.

(1962 பிப்ரவரி 20 ஆம் தேதிய 412 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

13. பதவியிலிருந்து விலகும் தலைவர்கள் முதலியவர்களிடமிருந்து ஊராட்சி உடைமைகளைக் கைவசப்படுத்திக் கொள்வதற்கான அதிகாரி.—(தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 182 ஆவது பிரிவைச் சேர்ந்த (3) ஆவது உட்பிரிவின் செயலுக்காகக் குறிப்பிடப்பட்ட அதிகாரி யானவர், ஆட்சி வரம்புடைய துணை ஊராட்சி அலுவலர் ஆவார்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

14. ஊராட்சியின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உறுப்பினர்கள் முதலியவர்களுக்குப் பயணப்படி.—1. (அ) தலைவர்கள், துணைத் தலைவர்கள் தற்காலிகத் தலைவர்கள், தலைவர் அதிகாரம் பெற்றவர்கள் உட்பட ஊராட்சி உறுப்பினர்களுக்கும் ;

(ஆ) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 178 (2) ஆவது பிரிவின்படிச் செய்யப்பட்ட விதிகளின்படி ஊராட்சிகளின் குழுக்களின் உறுப்பினர்களாக நியமிக்கப்படும் வெளியார்களுக்கும், கொடுக்கப் படத்தக்க பயணப்படிகள், 2 ஆவது, 3 ஆவது விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு, அவ்வப்போது திருத்தப்பட்ட படியுள்ள தமிழ் நாடு பயணப்படி விதிகளின் வரையறைகளினுல் முறைப் படுத்தப்படும்.

2. 1 ஆவது விதியைச் சேர்ந்த (ஆ), (ஆ) பகுதிகளில் சொல்லப் பட்டிருப்பவர்கள், கீழ்க் கண்ட வீதங்களில் பயணப்படி பெறுவதற்கு உரிமை யுள்ளவர்களாவார்கள் :—

இருப்புப்பாதை அல்லது நீராவிக் கப்பல் பயணம்—ஒரு மூன்ரும் வகுப்புக் கட்டணம்.

நாட்படியும், மைல்படியும், பயணப்படியை ஒப்பளிக்கத் தகுதிவாய்ந்த அதிகாரியினுல் அறுதி செய்யப்படக்கூடிய வரையறைகளுக்குள், உள்ளபடியாக ஏற்பட்ட செலவு; ஆனல் நாட்படி இரண்டு ரூபாய்க்கும், பாட்டை அல்லது கால்வாய் வழியாக மைல்படி 13 காசுக்கும் மேற்படக் கூடாது.

குறிப்பு.—தமிழ்நாடு பயணப்படி விதிகளின் (தனிச் சம்பளம், படிகள் பற்றிய தமிழ் நாடு நடைமுறை நூல், தொகுதி 1, பாகம் II) 1 ஆவது இணைப்பில் கண்டுள்ள வீதங்களைப் போலவே, அவ் விதிகளைச் சேர்ந்த 41 ஆவது விதியினுல் மேற்படி வீதங்கள் முறைப்படுத்தப்படும்.

3. ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர், தற்காலிகத் தலைவர், தலைவர் அதிகாரம் பெற்றவர் அல்லது வேறு உறுப்பினர் அல்லது குழுவின் உறுப்பின ராக நியமிக்கப்படும் வெளியார், ஊராட்சிக்குத் தொடர்பான வேலையாக, ஊராட்சியின் வரம்புக்கு அப்பாலுள்ள இடங்களுக்குப் பயணம் செய்து, அவ்வாறு செய்யப்படும் பயணங்களுக்காகப் பயணப்படிகள் கேட்டு வாங்கலாம்; ஆனல், தொடர்புடைய கோட்ட ஊராட்சி அலுவலரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொண்டு அத்தகைய பயணங்கள் மேற் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1961 செப்டம்பர் 8 ஆம் தேதிய 2462 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(35) மாநாட்டுக்குப் போவதற்காகப் பயணப்படி கொடுப்பது.—ஊராட்சிச் சார்பாளர்களின் மாநாடுகளுக்குப் போவதற்காக ஊராட்சிகள் தங்கள் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் தங்கள் நிதிகளிலிருந்து பயணப் படிகள் கொடுக்கலாம்.

(1953 ஜூலை 13 ஆம் தேதிய 1521 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(36) ஊராட்சிகளின் எல்லைக்குள் ஐந்து மைலுக்குமேற்பட்ட பயணங்களுக்காகப் பயணப்படி கொடுப்பது.—ஊராட்சிகளின் உறுப்பினர்கள் ஊராட்சிகளின் எல்லைகளுக்குள் ஐந்து மைலுக்கு மேற்பட்டுச் செய்யும் பயணங்களுக்காக அவர்களுக்குப் பயணப்படி கொடுப்பதானது, ஊராட்சி நிதியின் மீதான வழக்கத்திற்கு மீறிய செலவு என்று கருதப்படுகிறது. அவ்வாறு கொடுப்பதற்கு முன், சூழ்நிலைக்கேற்ப, ஆய்வாளரின் அல்லது அவர் அதிகாரம் பெற்றவரின் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(1939 ஆகஸ்ட் 12 ஆம் தேதிய 3199 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(37) ஊராட்சிகளின் மாநில ஒன்றியமானது வட்ட ஊராட்சிச் சங்கத்தை அமைப்பது.—ஊராட்சிகளின் மாநில ஒன்றியத்தின் செயற்குழு 1960 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாநில ஊராட்சி ஒன்றியத்தின் பகுதி உறுப்புகளாக வட்டார ஊராட்சிச் சங்கங்களை அமைப்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

2. வட்ட ஊராட்சிச் சங்கத்தை அமைப்பது பற்றி, ஊராட்சி வட்டச் சங்கம் மேற்கொள்வதற்காக ஊராட்சிகளின் மாநில ஒன்றியம் தயாரித்த துணை விதிகளின் வரைவு கூட ஒப்புக் கொள்ளப்படுகிறது.

3. வட்டாரத்திலுள்ள ஊராட்சிகள் எல்லாம், தொடர்புடைய வட்ட ஊராட்சிச் சங்கத்துக்கு 5 ரூபாய் வீதம் ஆண்டுச் சந்தா செலுத்தி, வட்ட ஊராட்சிச் சங்கத்தின் உறுப்பினர்களாகிவிடலாம். நீலகிரி, கன்னியாகுமரி

அல்லாத மற்ற மாவட்டங்களில் உள்ள வட்ட ஊராட்சிச் சங்கம் ஒவ்வொன்றும் கீழ்க்கண்டவாறு அவ்வாண்டின் 30 ஆம் தேதிக்கு முன் ஊராட்சிகளின் மாநில ஒன்றியத்துக்கு ஆண்டுச் சந்தா செலுத்திட வேண்டும் :—

		ரூ.
(i)	ஊராட்சிகள் 100-க்கு மேற்பட்டிராத வட்டங்களில் உள்ள வட்ட ஊராட்சிச் சங்கம் ஒவ்வொன்றும்.	50
(ii)	ஊராட்சிகள் 100-க்கு மேற்பட்டு 150-க்கு மேற் பட்டிராத வட்டங்களில் உள்ள வட்ட ஊராட்சிச் சங்கம் ஒவ்வொன்றும்.	75
(iii)	ஊராட்சிகள் 150-க்கு மேற்பட்டிருக்கிற வட்டங் களில் உள்ள வட்ட ஊராட்சிச் சங்கம் ஒவ்வொன்றும்.	100

நீலகிரி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள வட்ட ஊராட்சிச் சங்கம் ஒவ்வொன்றுக்கும் ஊராட்சிகளின் மாநில ஒன்றியத்துக்கு 10 ரூபாய் ஆண்டுச் சந்தா செலுத்த வேண்டும்.

4. வட்ட ஊராட்சிச் சங்கக் கூட்டங்களில் கலந்து கொள்ளப் போவதற் காக அடியிற்கண்ட வீதங்களில் அந்தந்த ஊராட்சி நிதிகளிலிருந்து பயணப் படி வாங்குவதற்கு ஊராட்சிகளின் தலைவர்களுக்கும் வட்ட ஊராட்சிச் சங்கத்தின் மற்ற உறுப்பினர்களுக்கும் அரசாங்கத்தார் அனுமதி கொடுக்கி றார்கள் :—

(i) இருப்புப்பாதைப் பயணங்களுக்காக—கூட்டங்களில் கலந்து கொள்ளப் போய் வருவதற்கான பயணங்களுக்காக, மூன்று 3 ஆம் வகுப்புக் கட்டணங்கள்.

(ii) பாட்டை வழிப் பயணங்களுக்காக—உள்ளபடியான (பேருந்து) பஸ் கட்டணம்.

(iii) நாட்படி—நாள் ஒன்றுக்கு 2 ரூபாய்.

(1960 ஜுன் 27 ஆம் தேதிய 1089 எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(1962 ஏப்ரல் 30 ஆம் தேதிய 146484 A/சி2/61-4 எண் பல்வகைக் குறிப்பாணை.)

(38) 1960 ஜூன் 27-ம் தேதி 1089 எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணையில், ஊராட்சிகளின் மாநில ஒன்றியத்தின் பகுதி உறுப்புக்களாக வட்ட ஊராட்சிச் சங்கங்களின் அமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒரு வட்டத்திலுள்ள எல்லா ஊராட்சிகளும் குறிப்பிட்ட ஆண்டுக் கட்டணம் செலுத்தி, தொடர்புடைய வட்ட ஊராட்சிச் சங்கத்தின் உறுப்பினர்களாகிவிடுவதற்கு அனுமதிக்கப்பட்டன. ஊராட்சிகளின் தலைவர்களும், வட்ட ஊராட்சிச் சங்கங்களின் மற்ற உறுப்பினர்களும், வட்ட ஊராட்சிச் சங்கக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அந்தந்த ஊராட்சிகளின் நிதிகளிலிருந்து பயணப்படி வாங்குவதற்கும் அனுமதிக்கப்பட்டார்கள்.

2. இந்த மாநிலம் முழுவதிலும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களை அமைக்கும் சூழ்நிலையில், அரசு இப்போதைய நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்தார்கள். சிக்கனத்தை முன்னிட்டும், ஊராட்சிகளின் குறைந்த வருமானங்களை மேம்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளுக்குப் பாதுகாத்துவைப்பதன் அவசியத்தைக் கருதியும் ஊராட்சி நிதிகளிலிருந்து பயணப்படியையும் நாட்படியையும் வாங்க, வட்ட ஊராட்சிச் சங்கங்களின் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் அனுமதி கொடுக்கும் ஆணையை ரத்து செய்ய வேண்டுமென அரசாங்கத்தார் கருதுகிறார்கள். அதற்கிணங்கவே, 1960 ஜூன் 27-ம் தேதிய 1089-ம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாங்க ஆணையின் 4 ஆவது பத்தியில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் இதனால் நீக்கிவிடப்படுகின்றன.

(1966 அக்டோபர் 6-ம் தேதிய 2341 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(39) 1962 ஏப்ரல் 2-ம் தேதிய 813-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அரசு ஆணையின் 2 ஆவது பத்தியில், வட்ட ஊராட்சிகள் சங்கங்களும் ஊராட்சி ஒன்றிய மன்றங்களும், ஊராட்சிகளின் தமிழ்நாடு மாநில ஒன்றியத்தின் உறுப்பினர்களாகிவிடுவதற்கும், மாநில ஒன்றியத்தின் துணை விதிகளைச் சேர்ந்த திருத்தப்பட்ட 20 ஆவது துணை விதியில் குறிப்பிட்டுள்ள வீதங்களின்படி, அந்த ஒன்றியத்துக்குச் சந்தாக்கள் செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அந்தத் துணை விதியின் பிரகாரம், ஊராட்சி ஒன்றியம் மன்றம் ஒவ்வொன்றும் ஊராட்சிகளின் மாநில ஒன்றியதுக்கு 100 ரூபாய் ஆண்டுச் சந்தா செலுத்த வேண்டும். ஊராட்சி ஒன்றியம் செலுத்தக்கூடிய சந்தாத் தொகையைக் குறைக்கலாமெனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தார் இந்தக் கருத்தைக் கவனமாக ஆய்ந்து பார்த்திருக்கிறார்கள். அதன் விளைவாக, தற்போது சிக்கனம் அவசியமென்கிற சூழ்நிலையில் ஊராட்சிகளின் தமிழ்நாடு மாநில

ஒன்றியத்திக்கு ஊராட்சி ஒன்றியம் மன்றங்கள் செலுத்தக் கூடிய ஆண்டுச் சந்தாவை 100 ரூபாயிலிருந்து 30 ரூபாயாகக் குறைக்க வேண்டுமெனவும், இது உடனே நடைமுறைக்கு வரத் தொடங்க வேண்டுமெனவும அரசாங்கத்தார் கட்டளையிடுகிறுர்கள்.

2. மேலே 1 ஆவது பத்தியில் கண்ட ஆணைகளைச் செயற்படுத்தும் பொருட்டு, ஊராட்சிகளின் மாநில ஒன்றியத்தின் துணை விதிகளைத் திருத்த வேண்டும்.

(1966 அக்டோபர் 6-ம் தேதிய 2340-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(40) பயணப்படிப் பட்டிகளில் மேலொப்பமிடுவதற்கான நடைமுறை.— ஊராட்சித் தலைவர்களின் பயணப்படிப் பட்டிகளை மேலொப்பத்துக்காகத் தொடர்புடைய ஊராட்சி ஒன்றியம் ஆணையாளருக்கு அனுப்ப வேண்டுமென அரசு கட்டளையிடுகிறுர்கள். ஊராட்சிகளின் துணைத் தலைவர்கள், உறுப்பினர் கள், செயல் அலுவலர், ஊராட்சிப் பணியாளர்கள் ஆகியோரின் பயணப்படிப் பட்டிகளில் மேலொப்பமிடுவதற்கான தற்போதைய நடைமுறை, எவ்வித மாறுதலுமில்லாமல் தொடர்ந்து நடைமுறையில் இருந்துவரும்.

(1962 பிப்ரவரி 9-ம் தேதிய 319-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

15. தேர்தல் அதிகாரிகள்.—(இதில் பின்னல் இந்த விதியில் மேற்படி சட்டம் எனக் குறிப்பிடப்படும்) (தமிழ்நாட்டின் 1958 ஆம் ஆண்டின் XXXV ஆம் சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் எல்லாச் செயல்களுக்காகவும், தங்களுடைய அந்தந்த ஆட்சி வரம்புக்குள் இருக்கிற பரப்பில் மேற்படி சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஊராட்சி ஒவ்வொன்றையும் பொறுத்தவரை மாவட்ட ஆட்சியாளரும், கோட்ட ஆட்சியாளரும், கோட்ட ஊராட்சி அலுவலரும் ;

இந்த மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒவ்வொன்றைப் பொறுத்தவரையிலும் சென்னையிலுள்ள ஊரக வளர்ச்சி இயக்குநரும் தமது பொறுப்பிலுள்ள மாவட்டத்திலே மேற்படி சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றைப் பொறுத்தவரையிலும் மாவட்ட ஆட்சியாளரும் ;

இந்த மாநிலத்திலுள்ள அத்தகைய ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒவ்வொன்றைப் பொறுத்தவரையிலும் சென்னையிலுள்ள இணை முன்னேற்ற ஆணையாளரும்;

தேர்தல் அதிகாரிகள் ஆவார்கள்.

(1962 ஏப்ரல் 26-ம் தேதிய 1248-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1963 மார்ச்சு 23-ம் தேதிய 655-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(1966 ஏப்ரல் 4-ம் தேதிய 914-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

16. வாக்காளர் பட்டியல் முதலியவற்றை வெளியிடும் செயல்களுக்கான அதிகாரி.—1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 20 ஆவது பிரிவைச் சேர்ந்த (2), (4) உட்பிரிவுகள், 21 ஆவது பிரிவு ஆகியவற்றின் செயல்களுக்காகக் குறிக்கப்பட்ட அதிகாரி, ஆட்சி வரம்புடைய கோட்ட ஊராட்சி அலுவலர் ஆவார்.

(1961 ஏப்ரல் 26-ம் தேதிய 1248-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(41) **ஊராட்சிகளுக்கான வாக்காளர் பட்டிகளை வெளியிடும் விதம் பற்றிய கட்டளைகள்.**—குறிப்பிடப்பட்ட அதிகாரியினிடமிருந்து அதிகாரம் பெற்றிருப்பவர் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியில் ஒவ்வொரு ஊருக்கும் தொடர்புடைய பாகங்களை, அதன் தொகுதிகளின்படி வரிசைப்படுத்தி ஊராட்சிக்கான வாக்காளர் பட்டியாக, கோட்ட ஆட்சியாளரால் குறிக்கப்படுகிற தேதிக்குள்—

(i) குறிப்பிடப்பட்ட அதிகாரியினிடமிருந்து அதிகாரம் பெற்றவர் அலுவலகத்திலும்,

(ii) ஊராட்சி அலுவலகம் இருந்தால் அதிலும்,

(iii) தொகுதி ஒவ்வொன்றில் எல்லார்க்கும் நன்ருகத் தெரியும்படியான இடத்திலும்,

வெளியிடவேண்டும்.

(2) அத்தகைய ஒரு ஊரையாவது அதன் ஒரு பாகத்தையாவது கொண்டுள்ள அல்லது அது அடங்கியுள்ள சட்டமன்றப் பேரவைத் தேர்தல் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியில் (1950-ம் ஆண்டின் XLIII ஆவதுமையச் சட்டமாகிய) மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவது பற்றிய

1950-ம் ஆண்டுச் சட்டத்தைத் தழுவி மாற்றியமைக்கப்பட்டால் அல்லது திருத்தப்பட்டால், குறிப்பிடப்பட்ட அதிகாரியினிடமிருந்து அதிகாரம் பெற்றவர், மேற்படி பட்டிகளில் அந்த ஊருக்குத் தொடர்புடைய பாகங்களில் செய்யப்பட்டிருக்கிற மாறுதல்களை, ஊராட்சிக்குரிய வாக்காளர் பட்டியில் செய்யப்படும் மாறுதல்களாக கோட்ட ஆட்சியாளரால் குறிப்பிடப்படுகிற தேதிக்குள், (1) ஆவது பத்தியில் கண்டுள்ள இடங்களில் வெளியிட வேண்டும்.

(3) குறிப்பிடப்பட்ட அதிகாரியானவர் (1) ஆவது பத்தியின்படி வாக்காளர் பட்டியலை வெளியிட்ட பிறகு, அல்லது (2) ஆவது பத்தியின்படி அதில் மாறுதல்களை வெளியிட்ட பிறகு, எழுதும்போது அல்லது தற்செயலாக நேரிடும் தவறுகளையும் அச்சுப் பிழைகளையும் திருத்தலாம்; அல்லது தற்செயலாக விடுபட்டுப்போன பிழைகளைத் திருத்தலாம்; அல்லது பட்டியின் படி ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்துக்குப் பெயர்களை மாற்றலாம்; அல்லது பொருத்தமான சட்டமன்றப் பேரவைத் தேர்தல் தொகுதிக்குரிய வாக்காளர் பட்டியின் பொருத்தமான பாகத்துடன் அது ஒத்திருக்கும்படிச் செய்யும்பொருட்டு, திருத்தம் செய்யலாம். குறிப்பிடப்பட்ட அதிகாரியானவர் அத்தகைய திருத்தங்களின் பட்டி ஒன்றைத் தயாரிக்க வேண்டும்; இப்பட்டியைக் கோட்ட ஆட்சியாளரால் குறிப்பிடப்படும் தேதிக்குள் கீழ்க்கண்ட படிவத்தில்—

(i) குறிப்பிடப்பட்ட அதிகாரியின் அலுவலகத்திலும்,

(ii) ஊராட்சி அலுவலகம் இருந்தால் அதிலும்,

(iii) தொடர்புடைய தொகுதியில் அல்லது தொகுதிகளில் ஒவ்வொன்றிலும் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியும்படியான ஓர் இடத்திலும், வெளியிடவேண்டும்; அவ்வாறு வெளியிடப்படுவதன்பேரில், ஊராட்சிக்குரிய வாக்காளர் பட்டியில் அத்திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

படிவம்.

.... ஊராட்சி.

(அ) அடியிற் கையொப்பமிட்டிருப்பவர் ஊராட்சிக்குரிய வாக்காளர் பட்டியில் பின்வரும் திருத்தங்களைச் செய்திருக்கிறார் :—

தொகுதி.	பட்டியில் எண்.	திருத்தங்களின் தன்மை.
(1)		
(2)		
(3)		
(3)		

(ஆ) அடியிற் கையொப்பமிட்டிருப்பவர் ஊராட்சிக்குரிய வாக்காளர் பட்டியில் பின்வருபவைகளைச் சேர்த்திருக்கிறார் :—

தொகுதி.	பெயர்.	தகப்பனார் அல்லது காரணவன் அல்லது கணவர் பெயர்.	முகவரி.
(1)	(2)	(3)	(4)

இடம்.
தேதி.

குறிப்பிடப்பட்ட அதிகாரி.

(4) ஊர் முதல் தடவையாகத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தால் அல்லது ஊர் இப்போது தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது மாற்றப் பட்டால், அல்லது ஊரின் எல்லைகள் மாற்றப்பட்டால், குறிப்பிடப்பட்ட அதிகாரியானவர் சூழ்நிலைக்கேற்ப ஊர் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப் பதையோ தொகுதிகள் மாற்றப்பட்டிருப்பதையோ எல்லைகள் மாற்றப் பட்டிருப்பதையோ செயற்படுத்தும் பொருட்டு, ஊராட்சியின் வாக்காளர் பட்டியை அல்லது அப்பட்டியின் ஏதேனும் பாகத்தை மீண்டும் சீராக அமைத்து, அவ்வாறு மீண்டும் சீராக அமைக்கப்பட்ட அப்பட்டியைக் கோட்ட ஆட்சியாளரால் குறிக்கப்படும் தேதிக்குள், மேலே (3) ஆவது பத்தியில் சொல்லப்பட்டுள்ள இடங்களில் வெளியிட வேண்டும்.

(5) (2) ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மாறுதல்களுடனும் (3) ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களுடனும் கூடிய வாக்காளர் பட்டியின் படிகளை, அல்லது (4) ஆவது பத்தியின் கீழ் வருவன வற்றில் மீண்டும் சீராக அமைக்கப்பட்ட வாக்காளர் பட்டியலின் படிகளை, குறிப்பிடப்பட்ட அதிகாரியின் அலுவலகத்திலும் தொடர்புடைய ஊராட்சி அலுவலகத்திலும் வைத்திருக்க வேண்டும்.

(1961 செப்டெம்பர் 8-ம் தேதிய 2461-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(42) வாக்காளர் பட்டியுடன் இணைக்கப்படவேண்டிய சேர்ப்புத்தாள்களைத் தயாரிப்பது.—வாக்காளர் பட்டியல்களுடன் இணைக்கப்பட வேண்டிய சேர்ப்புத் தாள்கள் பின்வரும் படிவத்தில் இருக்க வேண்டும் :—

சேர்ப்புத் தாள்கள்.

அன்று வெளியிடப்பட்ட ஊராட்சியின்
வாக்காளர் பட்டியில் தொகுதி எண்

தெருக்களின் எண்ணும் பெயர்களும்.	தெருவின் பாகங்கள் மட்டுமே தொகுதியில் சேர்க்கப் பட்டிருக்கும் போது, தொகுதியில் சேர்க்கப்பட்ட தெருவிலுள்ள வீட்டு எண்கள்.
வட்டாரங்களின் பெயர்கள்.	
1.	
2.	
3.	
முதலியன.	

(எடுத்துக்காட்டாக, 1 முதல் 25 வரை, 41 முதல் 65 வரை, முதலியன.)

குறிப்பு.—தெருக்களின்/வட்டாரங்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியில் எந்த வரிசையில் இருக்கின்றனவோ அந்த வரிசையில் அவைகளை எழுத வேண்டும்.

இடம்.

தேதி.

குறிப்பிடப்பட்ட அதிகாரியினிடமிருந்து
அதிகாரம் பெற்றிருப்பவர்.

வாக்காளர் பட்டியலை வெளியிட அதிகாரம் பெற்றிருப்பவர், அது வெளியிடப்படுவதற்குமுன், கையெழுத்துப்படியாகவுள்ள சேர்ப்புத் தாள்களில் கண்ட பத்திகளைச் சரிவர நிரப்புவதற்கும், அதை வாக்காளர் பட்டியலுடன்

சேர்ப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வாறு நிரப்பப்பட்ட சேர்ப்புத் தாளின் படிகளை, வேண்டும்போதெல்லாம் தயாரித்து, வக்காளர் பட்டியலுடன் சேர்த்துவிடலாம்.

(1952 ஜூலை 18 ஆம் தேதிய 21063/52-1-1 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(43) **ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் தொகுதிகளில் அல்லது ஒரே தேர்தல் தொகுதியில் பல இடங்களில் ஒருவர் பதிவாகியிருப்பது.**—ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியலில் அல்லது ஒரே தேர்தல் தொகுதிக்கான வாக்காளர் பட்டியில் ஓரிடத்தில் மட்டுமல்லாமல் வேறிடங்களிலும் ஒருவர் பதிவு செய்யப்பட்டிருந்தால், வாக்காளர் பதிவு அலுவலர், வாக்காளர் பட்டிகளைத் திருத்தியமைக்கும் காலத்தில், அந்தத் தவறைச் சரிப்படுத்திவிடலாம்; மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்குவது பற்றிய (வாக்காளர் பட்டிகளை வெளியிடுவது குறித்த) 1950 ஆம் ஆண்டின் விதிகளைச் சேர்ந்த 12 (2) விதியின்படி நடவடிக்கை எடுத்துக் கொள்வது மூலமாக அவ்வாறு சரிப்படுத்திவிடலாம். சட்டமன்றப் பேரவை வாக்காளர் பட்டியிலும், அதன் விளைவாக ஊராட்சி வாக்காளர் பட்டியிலுங்கூட தவறு சரிப்படுத்தப் படுகிற வரையில், தொடர்புடைய நபர் எந்த ஊராட்சிகளின் வாக்காளர் பட்டிகளில் அவர் பெயர் காணப்படுகிறதோ அந்த இரண்டு ஊராட்சிகளிலும் வாக்களிக்கத் தகுதி உள்ளவராவார்.

(1953 பிப்ரவரி 6 ஆம் தேதிய 4950/53-2-1 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

17. ஊராட்சிகளின் உறுப்பினர்களின் தேர்தல் நடத்துவது பற்றிய 1964-ம் ஆண்டின் விதிகள்.

1. **சிறு பெயரும் சொல் விளக்கமும்.**—(1) இந்த விதிகளை, 'ஊராட்சிகளின் உறுப்பினர்களின் தேர்தல் நடத்துவது பற்றிய 1964 ஆம் ஆண்டின் விதிகள்' என்று சொல்லலாம்.

(2) இவ் விதிகளில், 'தேர்தல் அலுவர்ல (Returning Officer) என்பது, தேர்தல் அதிகாரி (Election Authority) அல்லது இவ் விதிகளின்படித் தேர்தல் நடத்துவது பற்றிய ஏதேனும் ஒரு செயலினை ஆற்ற அல்லது ஏதேனும் ஒரு அலுவல் புரியத் தேர்தல் அதிகாரியினிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள அல்லது அவரால் நியமிக்கப் பெற்றுள்ள ஒருவர் அல்லது அலுவலர் என்று பொருள்படும்.

(3) இரகசிய வாக்கெடுப்பு மூலமாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

2. தேர்தல் அலுவலரின் கடமைகள்.—(1) தேர்தல் அலுவலர் ஊராட்சிகளின் உறுப்பினர்களின் தேர்தல்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

(2) ஊராட்சிக்கு உறுப்பினர் அல்லது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காகக் குறிப்பிடப்பட்ட தேதிக்குப் பத்து நாட்களுக்குக் குறையாமல் முன்னதாக, தேர்தல் அலுவலர் தமிழில் ஓர் அறிவிப்புத் தயாரித்து வெளியிட வேண்டும்; அதில் பின்வருபவை கண்டிருக்க வேண்டும் :—

(i) தேர்ந்தெடுக்கப்படவேண்டியவர்களின் எண்ணிக்கை ;

(ii) அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்குரிய தொகுதி அல்லது தொகுதிகள்;

(iii) ஒவ்வொரு தேதியிலும் தேர்தல்கள் நடத்தப்படுவதற்குள்ள (உறுப்பினர்) இடங்கள் எவையேனும் இருந்தால் அவற்றில் அட்டவணையில் கண்ட இனங்களுக்காகவும் அட்டவணையில் கண்ட பழங்குடிகளுக்காகவும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை;

(iv) இன்ன தேதியன்றும், இன்ன இடத்திலும், இன்ன மணி நேரங்களுக்கிடையிலும் நியமனங்கள் செய்ய வேண்டுமென்பது ;

(v) இன்ன நபர் அல்லது நபர்கள் நியமனத் தாள்களைப் பெற்றுக் கொள்வார்களென்பது;

(vi) இன்ன தேதி இன்ன இடம் இன்ன மணி நேர முதற்கொண்டு நியமனத்தாள்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்பது ;

(vii) வாக்கெடுப்பு நடத்த வேண்டியிருந்தால், இன்ன தேதியில் இன்ன இடத்தில் அல்லது இடங்களில் இன்ன மணி நேரங்களில் ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள வாக்காளர்களின் வாக்கெடுக்கப்படுமென்பது ;

(3) அந்த அறிவிப்பின் நகல் ஒன்றை, ஊராட்சி அலுவலகம் இருந்தால் அதிலும், தேர்தல் நடத்தப்பெறப் போகிற தொகுதியில் குறைந்தது முதன்மையான ஓரிடத்திலும் ஒட்டி வைப்பது மூலமாக அதை வெளியிட வேண்டும். சம்பந்தப்பட்ட தொகுதியில் அல்லது தொகுதிகள் ஒவ்வொன்றிலும், தண்டோராப் போட்டும் கூட, அதை அறிவிக்கையிடவேண்டும்.

2-அ. ஊராட்சித் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பதவியில் நேரிடும் தற்செயல் காலி இடம் ஒவ்வொன்றைப் பற்றியும், அந்தக் காலி இடம் நேரிட்ட தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் தேர்தல் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

3. தலைமை ஏற்கும் அலுவலர்களை நியமிப்பது.—தேர்தல் அலுவலர், குறிப்பிட்ட தொகுதி அல்லது தொகுதிகள் பற்றி தேர்தல் அல்லது தேர்தல்களை நடத்துவதற்காக, ஒருவர் அல்லது பலரை நியமிக்கலாம்.

4. தலைமை ஏற்கும் அலுவலர்களின் கடமைகள்.—தலைமை ஏற்கும் அலுவலர் அல்லது நபர் (இதில் பின்னால் 'தலைமை ஏற்கும் அலுவலர்' என்று சொல்லப்படும்டு தேர்தல் நடக்குமிடத்தில் அமைதியை நிலைநாட்ட வேண்டும்; தேர்தல் சரிவர நடத்தப்படும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்; ஒரு தடவையில் உள்ளே விடப்பட வேண்டிய வாக்காளர்களின் எண்ணிக்கையை முறைப்படுத்த வேண்டும்; தேர்தல் நடக்குமிடத்திலிருந்து அடியிற் கண்டவர்களைத் தவிர மற்றெல்லாரையும் விலக்கி விட வேண்டும்; அவர்கள் யாரென்றால்,

(i) வேட்பாளர்கள்; வேட்பாளரால் எழுத்து மூலமாக நியமிக்கப் படுகிற (இதில் பின்னால் 'வாக்கெடுப்பு முகவர்' என்று சொல்லப்படும்) ஒரு தடவையில் ஒவ்வொரு வேட்பாளருக்கு ஒரு முகவர்;

(ii) காவலர் (போலீஸார்) அல்லது அலுவலில் இருக்கிற வேறு அரசுப் பணியாளர்கள்;

(iii) வாக்காளர் கையில் ஏந்திக் கொண்டுவரும் குழந்தை;

(iv) குருடாயிருப்பது அல்லது ஆற்றலற்றிருப்பது காரணமாக உதவி யின்றி நடக்க முடியாத வாக்காளர் கூட வருபவர்;

(v) வாக்காளர்களை அடையாளங் கண்டு பிடிப்பதில் உதவி செய்வதற் காக அல்லது வாக்கெடுப்பில் தமக்கு வேறுவிதமாக உதவி செய்வதற்காகத் தலைமை ஏற்கும் அலுவலர் நியமிக்கக் கூடிய மற்றவர்கள்.

5. நியமனத்தாள் தாக்கல் செய்தல்.—(1) தேர்தல் தேதிக்கு முன்பு ஒரு நாள் விட்டு அந்த நாளில் 2 (2) விதியின் படிக்கான அறிவிப்பில் இதன் பொருட்டுத் தேர்தல் அலுவலரால் குறிப்பிடப்படுகிற மணி நேரங்களுக் கிடையில் வேட்பாளர்களின் நியமனங்களை எழுத்து மூலமாகச் செய்ய வேண்டும்.

(2) அத்தகைய நியமனத்தாள் ஒவ்வொன்றிலும், தாம் தேர்தலுக்கு நிற்க விரும்புவதற்கு அடையாளமாக வேட்பாளரும், முன்மொழிபவர் என்னும் முறையில் அத் தொகுதியின் வாக்காளர் ஒருவரும் கையெழுத்திட வேண்டும்; பின்னர் அதை வேட்பாளராவது அவரை முன்மொழிந்தவராவது தலைமை ஏற்கும் அலுவலரிடம் நேரில் ஒப்புவிக்க வேண்டும். தலைமை ஏற்கும் அலுவலர் அவ்வாறு முன்மொழியப்பட்ட வேட்பாளர்களின் பெயர்களைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

விளக்கம்.—ஒரு தொகுதிக்கான வேட்பாளர் அத் தொகுதியின் வாக்காளராக இருக்க வேண்டுமென்பதில்லை.

(3) வேட்பாளர் ஒருவர், தாம் நியமனம் செய்யப்பட்ட பிறகு தேர்தல் அதிகாரியால் குறிப்பிடப்படக்கூடிய காலம் வரையில், தாம் கையெழுத்திட்டுத் தலைமை ஏற்கும் அலுவலரிடம் ஒப்புவிக்கப்படும் எழுத்து மூலமான அறிவிப்பினால் எப்போதேனும், தாம் வேட்பாளராயிருப்பதனின்றும் விலகிக் கொள்ளலாம். நேரில் அந்த வேட்பாளராவது, அந்த வேட்பாளரிடமிருந்தாவது இதன்பொருட்டு எழுத்து மூலமாக அதிகாரம் பெற்றுள்ள அவரை முன்மொழிந்தவராவது அந்த அறிக்கையை ஒப்புவிக்கலாம்.

6. **வைப்புத் தொகைகள்.**—(1) தாம் நியமனம் செய்யப்படும்போதாவது அதற்கு முன்பாவது, ஒரு ஊராட்சிக்குத் தேர்தலுக்கு நிற்கவிரும்புகிற வேட்பாளர் ஒவ்வொருவரும், தாம் அட்டவணையில் கண்ட இனங்களாகவோ அட்டவணையில் கண்ட பழங்குடிகளாகவோ இராவிட்டால் இருபது ரூபாயையும், தாம் அட்டவணையில் கண்ட இனங்களாகவோ அட்டவணையில் கண்ட பழங்குடியினராகவோ இருந்தால் ஐந்து ரூபாயையும் தலைமை ஏற்கும் அலுவலரிடம் பணமாகச் செலுத்த வேண்டும் அல்லது செலுத்துவிக்க வேண்டும்; எந்தத் தொகுதி பற்றி அவ்வாறு செலுத்தப்படவில்லையோ அத் தொகுதிக்காக எந்த வேட்பாளரும் முறைப்படி நியமனம் செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்பட மாட்டார். வேட்பாளர் நிற்க விரும்புகிற ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனி வைப்புத் தொகை செலுத்த வேண்டும்.

(2) தலைமை ஏற்கும் அலுவலர், வேட்பாளர்களுக்காகச் செலுத்தப்பட்ட வைப்புத் தொகைகளின் கணக்கு ஒன்றை, மாவட்ட ஆட்சியாளரால் விதிக்கப்படக் கூடிய படிவத்தின்படி வைத்துவர வேண்டும். அவர் அந்த வைப்புத் தொகைகளைப் பொறுத்தவரை பின்வருமாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்; அதாவது;

(அ) 8-ஆவது விதியின்படி நியமனங்கள் தள்ளுபடி செய்யப் பெற்றிருக்கிற அல்லது 5-ஆவது விதியைச் சேர்ந்த (3) உள் விதியின்படி விலகிக் கொண்டிருக்கிற வேட்பாளர்களின் வைப்புத் தொகைகளை, வைப்புத் தொகைகளைச் செலுத்தியவர்களிடமாவது அவர்களிடமிருந்து எழுத்து மூலமாய் அதிகாரம் பெற்றவர்களிடமாவது திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

(ஆ) 9-ஆவது, 18-ஆவது, 19-ஆவது விதிகளின்படித் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப் பெற்றுள்ள வேட்பாளர்களின் வைப்புத் தொகைகளை, அவ்வாறு அறிவிக்கப்பட்டவுடனே, வைப்புத் தொகைகளைச் செலுத்தியவர்களிடமிருந்தாவது அவர்களிடமிருந்து எழுத்து மூலமாய் அதிகாரம் பெற்றவர்களிடமாவது திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

(இ) அத் தொகுதியில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் மொத்த எண்ணிக்கையை, தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையால் வகுக்கும்போது கிடைக்கும் எண்ணில் கால்பங்குக்குக் குறையாத வாக்குகள் பெற்றிருக்கிற ஒரு வேட்பாளரின் வைப்புத் தொகையை, அது போலவே, அத் தொகுதிக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு சீக்கிரமாக வைப்புத் தொகையைச் செலுத்தியவரிடமாவது அவரிடமிருந்து எழுத்து மூலமாக அதிகாரம் பெற்றுள்ளவரிடமாவது திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

(ஈ) தேர்ந்தெடுக்கப்பட்டிராதவரும், அத் தொகுதியில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் மொத்த எண்ணிக்கையைத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையால் வகுக்கும்போது கிடைக்கும் எண்ணில் கால்பங்குக்குக் குறைவாக வாக்குகள் பெற்றிருப்பவருமான ஒரு வேட்பாளரின் வைப்புத் தொகையைச் சம்பந்தப்பட்ட ஊராட்சிக்குச் சேர்த்துவிட வேண்டும்.

7. ஒரு தொகுதியில் தேர்தல் செயல் முறையை முடித்துவிடுவது.—தலைமை ஏற்கும் அலுவலர் ஒருவரே இரண்டு அல்லது பல தொகுதிகள் பற்றிய தேர்தல்கள் நடத்தினால் ஒரு தொகுதி பற்றிய தேர்தல் தொடர்பான (10-ஆவது விதியின்படி தவிர) 9 முதல் 19 வரையுள்ள விதிகளின்படிக்கான செயல்முறைகளை முடித்துவிட்ட பிறகுதான், மற்றொரு தொகுதி பற்றிய அத்தகைய செயல் முறைகளைத் தொடங்க வேண்டும்.

8. **நியமனங்களை ஆய்ந்து பார்த்தல்.**—தலைமை ஏற்கும் அலுவலர் நியமனங்கள் வந்து சேரும் தேதியன்று, தாமாகவே அல்லது அங்கு வந்துள்ள வாக்காளர்களில் எவரேனும் ஆட்சேபிப்பதன் பேரில், பின்வரும் காரணங்களில் ஏதனுலாவது ஒரு வேட்பாளரின் நியமனத்தைத் தள்ளிவிட வேண்டும்; அக் காரணங்களாவன :—

(i) மேற்படிச் சட்டத்தில் கண்ட 22-ஆவது, 23-ஆவது, 24-ஆவது அல்லது 25-ஆவது பிரிவுகளின்படி அவ்வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படத் தகுதி யற்றவரென்பது ; அல்லது

(ii) முன்மொழிந்தவருடைய பெயர் அத் தொகுதிக்கான வாக்காளர் பட்டியில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லையென்பது ;

(iii) அட்டவணையில் கண்ட இனங்களுக்காகவும் அட்டவணையில் கண்ட பழங்குடிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கிற இடம் அல்லது இடங்களுக் காக மட்டும் தேர்தல் நடப்பதாயிருந்தால், வேட்பாளர் அட்டவணையில் கண்ட இனங்கள் அல்லாதவர் அல்லது அட்டவணையில் கண்ட பழங்குடிகள் அல்லாதவர் என்பது.

9. **போட்டி இருக்கிற தேர்தலிலும் போட்டி இராத தேர்தலிலும் நடைமுறை.**—(1) போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கையைவிட அதிகமாயிருந்தால், வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

(2) அத்தகைய வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாயிருந்தால், தலைமை ஏற்கும் அலுவலர், அத்தகைய வேட்பாளர்கள் எல்லாரும் அந்த இடங்களை நிரப்புவதற்காக முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும்.

(3) அத்தகைய வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கையைவிட குறைவாயிருந்தால், தலைமை ஏற்கும் அலுவலர், அந்த வேட்பாளர்கள் எல்லாரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக உடனே அறிவித்து, எஞ்சிய இடங்கள் சம்பந்தமாகத் தேர்தல்கள் நடத்து வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

(4) ஒரு தொகுதியில் ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்காகத் தெரிந்தெடுக்கப்படத் தகுதி வாய்ந்த போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, அந்த இடங்களில் எண்ணிக்கைக்குச் சமமாயிருந்தால், அந்த

வேட்பாளர்கள் எல்லாரும், ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக உடனே அறிவிக்க வேண்டும்; எஞ்சிய இடம் அல்லது இடங்களை நிரப்புவதற்காக (1), (2), (3) உள் விதிகளில் கண்டுள்ள நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்.

(5) ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்குத் தெரிந்தெடுக்கப்படத் தகுதி வாய்ந்த போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, அந்த இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்பட்டிருந்து, ஆனால், போட்டியிடும் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமாயிருந்தால், தலைமை ஏற்கும் அலுவலர், ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்குத் தெரிந்தெடுக்கப்படத் தகுதி வாய்ந்த வேட்பாளர்களிலிருந்து, அந்த இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதாக, அறிவிக்கப்பட வேண்டிய வேட்பாளர்களைச் சீட்டுக் குலுக்கி (அவர் நிர்ணயிக்கக் கூடிய விதமாக அவர் சீட்டுக் குலுக்க வேண்டும்) முதலில் தெரிந்தெடுத்து, பிறகு அவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்து, பின்னர், எஞ்சிய வேட்பாளர்கள் ஒதுக்கப்பட்டிராத இடங்களை நிரப்புவதற்கு முறைப்படித் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும்.

(6) ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்குத் தெரிந்தெடுக்கப்படத் தகுதி வாய்ந்த போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, அந்த இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்பட்டிருந்து, போட்டியிடும் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை கூட நிரப்பப்பட வேண்டிய இடங்களின் மொத்த எண்ணிக்கைக்கு மேற்பட்டிருந்தால், வாக்கெடுப்பு நடத்த வேண்டும்; வாக்கெடுப்பு நடத்திய பிறகு, தலைமை ஏற்கும் அலுவலர், ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்குத் தெரிந்தெடுக்கப்படத் தகுதி வாய்ந்தவர்களில் யார் மிக அதிகமாக வாக்குகளைப் பெற்றிருக்கிறார்களோ அவர்கள், ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக முதலில் அறிவித்து, பின்னர், எஞ்சிய வேட்பாளர்களில் யார் மிக அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்கிறார்களோ அவர்கள் எஞ்சிய இடங்களை நிரப்புவதற்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும்.

எடுத்துக் காட்டு.—ஒரு தொகுதியில் நான்கு இடங்களை நிரப்புவதற்குத் தேர்தல் நடக்கிறதென்று வைத்துக்கொள்வோம்; இந்த நான்கு இடங்களில் இரண்டு ஒதுக்கப்பட்டவை; அ, ஆ, இ, ஈ, உ, ஊ என ஆறு வேட்பாளர்கள்

போட்டியிடுகிறார்கள்; இவர்கள் இறங்கு வரிசைக் கிரமத்தில் வாக்குகளைப் பெறுகிறார்கள். அ என்பவர் மிக அதிகமான வாக்குகளைப் பெறுகிறார்; ஆ, இ, ஈ என்பவர்கள் ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்குத் தெரிந்தெடுக்கப்படத் தகுதி உள்ளவர்கள் ஆவார்கள்; அ, உ, ஊ என்பவர்களில் அவ்வாறு தகுதியுடையவர்கள் அல்லர். தலைமை ஏற்கும் அலுவலர் ஆ, இ என்பவர்கள் ஒதுக்கப்பட்ட இரண்டு இடங்களை நிரப்புவதற்குக் கிரமப்படித் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக முதலில் அறிவித்து, பின்னர், அ, ஈ என்பவர்கள் (அ, உ என்பவர்கள் அல்லர்) எஞ்சிய இரண்டு இடங்களை நிரப்புவதற்குக் கிரமப்படித் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும்.

(7) ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்குத் தெரிந்தெடுக்கப்படத் தகுதிவாய்ந்த போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அந்த இடங்களின் எண்ணிக்கையை விடக் குறைவாயிருந்தால்,—

(அ) அந்த வேட்பாளர்கள் எல்லாரும் ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக உடனே அறிவிக்க வேண்டும்;

(ஆ) ஒதுக்கப்படாத இடங்களை நிரப்புவதற்காக, (1), (2), (3) உள்விதிகளில் கண்ட நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்;

(இ) ஒதுக்கப்பட்ட எஞ்சிய இடம் அல்லது இடங்களை நிரப்புவதற்குத் தேர்தல்கள் நடத்தத் தலைமை ஏற்கும் அலுவலர் ஏற்பாடு செய்ய வேண்டும்.

10. **சின்னங்களின் வகுப்பீடு.**—எந்தக் கால அளவுக்குள் வேட்பாளர்களாயிருப்பதனின்றும் விலகிக் கொள்ளலாமோ அந்தக் கால அளவு கழிந்த பிறகு, தலைமை ஏற்கும் அலுவலர் ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும், இதன் பொருட்டு அரசாங்கத்தார் பிறப்பிக்கக்கூடிய கட்டளைகளுக்குட்பட்டு, தனி மாதிரியான சின்னம் ஒன்றை வகுத்துக் கொடுக்க வேண்டும்.

10(அ). **போட்டியிடும் வேட்பாளர் வாக்கெடுப்புக்குமுன் இறந்து போதல்.**—போட்யிடும் வேட்பாளர் ஒருவர் இறந்துபோய், அவர் இறப்பைப் பற்றிய செய்தி வாக்கெடுப்பு தொடங்குவதற்குமுன் கிடைத்தால், தேர்தல் அலுவலர், போட்டியிடும் வேட்பாளர் இறந்துபோன செய்தியைப் பற்றி ஐயமறத் தெரிந்துகொள்வதன்பேரில், வாக்கெடுப்பினை ரத்து செய்துவிட

வேண்டும்; புதிய தேர்தலுக்கு எப்படியோ அப்படியே எல்லாவற்றிலும் அத் தொகுதிக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதையொட்டி எல்லாச் செயல் முறைகளையும் தொடங்க வேண்டும்.

ஆனால், வாக்கெடுப்பினை ரத்துச் செய்த காலத்தில் போட்டியிடும் வேட்பாளராயிருந்த யாதொருவரைப் பற்றியவரை புதிய நியமனம் அவசிய மாகமாட்டாது.

மேலும், 5-ஆவது விதியைச் சேர்ந்த (3) உள்விதியின்படித் தாம் வேட்பாளராயிருப்பதனின்றும் விலகிக் கொள்வது பற்றிய அறிக்கை கொடுத் திருந்த ஒருவர், அவ்வாறு ரத்து செய்யப்பட்ட பிறகு, தேர்தலுக்கு ஒரு வேட்பாளராக நியமனம் செய்யத் தகுதியில்லாதவராக மாட்டார்.

11. வாக்குச் சாவடிகளில் ஏற்பாடுகள்.—(1) ஒவ்வொரு தொகுதிக்கும் வாக்குச் சாவடி ஒன்று இருக்க வேண்டும். வாக்குச் சாவடி ஒவ்வொன்றிலும் ஒன்று அல்லது பல வாக்களிப்பு அறைகள் இருக்க வேண்டும். இவைகள் வாக்காளர்கள் பிறர் பார்க்காதபடி மறைவாக வாக்களிக்கக்கூடிய வகையில் அமைந்திருக்க வேண்டும்.

(2) தேர்தல் அலுவலர், வாக்குச் சாவடி ஒவ்வொன்றிலும், அதற்கென வகுத்துக் கொடுக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையையொட்டி அவசிய மாயிருக்கக் கூடிய வாக்குப் பெட்டிகளை வைக்க வேண்டும். அவர் அடியிற்கண்ட வைகளையும் வைக்க வேண்டும்; அவையாவன :— வாக்காளர் பட்டியின் அல்லது அந்த வாக்குச் சாவடியில் வாக்களிக்க உரிமையுள்ள வாக்காளர்களின் பெயர்கள் அடங்கிய அப் பட்டியின் பாகத்தின் படிகள்; வாக்குச் சீட்டுகள்; வாக்குச் சீட்டுகளில் தனிமாதிரியான அடையாளம் பொறிப்பதற்கான கருவிகள்; அவசியமாயிருக்கக் கூடிய வேறு தாள்கள், எழுதுபொருள்கள், படிவங்கள்.

(3) வாக்குப் பெட்டி ஒவ்வொன்றும், வாக்குச் சீட்டுகளை அதில் போடக்கூடியபடியும், ஆனால் அதன் பூட்டைத் திறக்காமல் அவற்றை அதிலிருந்து எடுக்க முடியாதபடியும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(4) வாக்குச் சாவடி ஒவ்வொன்றின் நுழைவாயிலிலும், அடியிற்கண்ட வற்றை முதன்மையாகக் காட்டி வைக்க வேண்டும்; அவையாவன :—

(அ) போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள், வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ள தனி மாதிரியான சின்னம் ஆகியவை கண்டுள்ள ஓர் அறிவிப்பு.

(ஆ) எந்த வாக்கெடுப்புப் பரப்பைச் சேர்ந்த வாக்காளர்கள் அந்த் வாக்குச் சாவடியில் வாக்களிக்க உரிமை பெற்றிருக்கிறார்களோ அந்தப் பரப்பைக் காட்டும் அறிவிப்பு.

(5) தேர்தல் அலுவலராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள வேறொருவராவது, வாக்குச் சீட்டுகளையும் தேர்தல் தொடர்பான மற்றெல்லாப் பொருள்களையும், வாக்கெடுப்பு தொடங்குவதற்காக நிச்சயிக்கப்பட்ட மணி நேரத்துக்குப் போதுமான அளவு முன்னதாகவே, தலைமை ஏற்கும் அலுவல ரிடம் கொடுத்துவிட வேண்டும்.

(6) தலைமை ஏற்கும் அலுவலர், வாக்கெடுப்புத தொடங்குவதற்கு முன் வாக்குப் பெட்டிகள் ஒவ்வொன்றும் காலியாயிருப்பதை, போட்டியிடும் வேட்பாளர்களுக்கும், வாக்கெடுப்பு முகவர்களுக்கும், அங்குள்ள மற்றவர் களுக்கும் காட்டி, பிறகு, அவைகளைப் பூட்டி, அவைகள் மீது தமது முத்திரை யைப் பொறிக்க வேண்டும். பின்னர், அவ்வாறு பூட்டி முத்திரை பொறிக்கப் பெற்றுள்ள வாக்குப் பெட்டிகளை, தலைமை ஏற்கும் அலுவலரும், வாக்கெடுப்பு முகவர்களும் நன்றாய்ப் பார்க்கும்படியான இடத்தில் வைக்க வேண்டும்.

12. வாக்குச் சீட்டுகள்.—(1) வாக்குச் சீட்டின் மீது சின்னங்களை மாத்திரம் அச்சிட வேண்டும். (வாக்குச் சீட்டின் மீது அச்சிடப்பட வேண்டிய சின்னங்களின் அளவு, ஒவ்வொரு சின்னத்துக்கும் கொடுக்கப் பெற்றுள்ள இடத்தின் அகலம், வாக்குச் சீட்டுகளில் எந்த இரண்டு சின்னங்களுக்கேனும் கொடுக்கப்பட்டுள்ள இடத்திற்கிடையிலிருக்கிற கருமையாக்கப்பட்ட பகுதியின் அகலம் ஆகியவை உட்பட) வாக்குச் சீட்டின் அளவையும், அதன் தொடர்பான பிறவற்றையும் தேர்தல் அதிகாரி அவ்வப்போது தீர்மானிக்க வேண்டும்.

(2) வாக்குச் சீட்டுகளுக்குத் தொடர் என் கொடுக்க வேண்டும்; அவைகளின் பின்புறத்தில், தேர்தல் அதிகாரி கட்டளையிடக்கூடிய தனி மாதிரியான அடையாளம் அல்லது அடையாளங்களை அவர் கட்டளையிடக்கூடிய விதமாகப் பொறிக்க வேண்டும்.

13. வாக்குச் சீட்டுகளைக் கொடுப்பதும், வாக்களிக்கும் நடைமுறையும்.—(1) வாக்காளர் ஒருவரிடம் வாக்குச் சீட்டுக்கொடுப்பதற்கு முன்னதாக, தலைமை ஏற்கும் அலுவலர், வாக்காளர் பட்டியில் அந்த வாக்காளர் பற்றிய பதிவுகளையொட்டி அந்த வாக்காளர் அவர் தானா என்பது குறித்துத் தாம் ஐயமறத் தெரிந்துகொள்ள வேண்டும். இது பற்றி எழுப்பப்படும் தடைகளைக் கூட அவர் உடனுக்குடன் கேட்டுத் தீர்ப்புக் கூற வேண்டும்; அவருடைய தீர்ப்பு

முடிவானதாகும். தலைமை ஏற்கும் அலுவலர் வாக்காளர் ஒருவரிடம் வாக்குச் சீட்டுக்கொடுக்கும்போது, வாக்காளர் பட்டியின் படி ஒன்றில், அந்த வாக்காளரின் எண்ணுக்கெதிரே ஓர் அடையாளம் போட வேண்டும்.

(2) வாக்காளர் ஒவ்வொருவரிடமும் ஒரே ஒரு வாக்குச் சீட்டுதான் கொடுக்க வேண்டும். அந்த வாக்காளர் வாக்குச் சீட்டினைப் பெற்றுக் கொண்டவுடன், வாக்களிப்பு அறைக்குச் சென்று, அங்கே, இதன் பொருட்டுக் கொடுக்கப்படும் கருவியைக் கொண்டு அவர் வாக்களிக்க கருதுகிற வேட்பாளரின் சின்னத்துக்கெதிரே வாக்குச் சீட்டில் ஓர் அடையாளம் போட வேண்டும். வாக்குச் சீட்டில் அந்த வேட்பாளரின் சின்னம் அச்சிடப்பட்டுள்ள கட்டத்தில் எங்கேனும் அடையாளம் போடலாம். ஒருவருக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருந்தால், தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்கள் எத்தனை பேர் இருக்கிறார்களோ அத்தனை அடையாளங்களை வாக்காளர் வாக்குச் சீட்டில் போடலாம்; ஆனால் ஒரு வேட்பாளரின் சின்னத்துக்கெதிரே ஒன்றுக்கு மேற்பட்ட அடையாளங்களைப் போடக்கூடாது. பிறகு அவர், தமது வாக்கு மறைந்திருக்கும்படியாக வாக்குச் சீட்டினை மடித்து, அதன் பின்புறம் பொறிக்கப்பட்டுள்ள தனி மாதிரியான அடையாளத்தைத் தலைமை ஏற்கும் அலுவலருக்குக் காட்டிய பிறகு, இதற்கென வைக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டுப் பெட்டியில் அதைப் போட்டுவிட வேண்டும்.

(3) வாக்காளர் ஒவ்வொருவரும் அதிக காலதாமதமின்றி வாக்களிக்க வேண்டும்; தாம் வாக்களித்தானவுடனே, வாக்குச் சாவடியை விட்டுப்போய்விட வேண்டும். வாக்குச் சீட்டு தவிர வேறு எதையும் அவர் வாக்குச் சீட்டுப் பெட்டிக்குள் போடக் கூடாது. வாக்குகளை எண்ணும்போது, வாக்குச் சீட்டுகள் தவிர வேறு ஏதேனும் பெட்டியில் காணப்பட்டால், அது ஊராட்சியைச் சேர்ந்துவிடும்.

14. **குருடாயும் வலுவற்றவர்களாயுமுள்ள வாக்காளர்களின் வாக்குகளைப் பதிவு செய்தல்.**—(1) முதுமை அல்லது குருடு அல்லது வேறு உடல் நலிவு காரணமாக, வாக்காளர் ஒருவர் வாக்குச் சீட்டில் அடையாளம் போட முடியாதவராயிருந்தால், தலைமை ஏற்கும் அலுவலர், அந்த வாக்காளரின் விருப்பத்துக்கிணங்க வாக்குச் சீட்டில் வாக்கினைப் பதிவு செய்து, அந்த வாக்கு மறைந்திருக்கும்படியாக அதை மடித்து, வாக்குப் பெட்டியில் அதைப் போட்டுவிட வேண்டும்.

(2) தலைமை ஏற்கும் அலுவலர் இந்த விதியின்படிச் செயலாற்றுகையில், கூடிய வரையில் இரகசியத்தைக் காக்க வேண்டும். அத்தகைய ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பற்றிச் சுருக்கமாக எழுதி வைக்க வேண்டும்; ஆனால், வாக்கு எவ்வாறு அளிக்கப்பட்டதென்று அதில் குறிப்பிடக் கூடாது.

15. கெட்டுப்போனவையும் திருப்பிக் கொடுத்துவிடப்பட்டவையுமான **வாக்குச் சீட்டுகள்.**—(1) வாக்காளர் ஒருவர் தமது வாக்குச் சீட்டினைக் கவனக் குறைவாகக் கையாண்டு இருப்பது காரணமாக அதை வாக்குச சீட்டாக வசதியாய் பயன்படுத்த முடியாமற் போனுல், தலைமை ஏற்கும் அலுவலரிடம் அதைத் திருப்பிக் கொடுத்துவிடலாம்; தமது கவனக் குறைவைப் பற்றி அவருக்கு ஐயமறத் தெரிந்ததின் பேரில் அவருக்கு மற்ருெரு வாக்குச் சீட்டு கொடுக்கப்படும்; தலைமை ஏற்கும் அலுவலர் அவ்வாறு திருப்பிக் கொடுத்துவிடப் பட்ட வாக்குச் சீட்டின் மீது, "கெடுதியாக்கப்பட்டது; ரத்து செய்யப்பட்டது" என்று அடையாளமிட வேண்டும்.

(2) வாக்காளர் ஒருவர் வாக்குச் சீட்டைப் பெற்றவுடன் அதைப் பயன்படுத்துவதில்லை என்ற முடிவிற்கு வந்தால் அதைத் தலைமை ஏற்கும் அலுவலரிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அவ்வாறு திருப்பிக் கொடுத்த வாக்குச் சீட்டின் மீது "திருப்பிக் கொடுத்துவிடப்பட்டது; ரத்து செய்யப்பட்டது" என்ற அடையாளமிட வேண்டும்.

(3). (1) உள்விதியின்படியாவது (2) உள்விதியின்படியாவது ரத்து செய்யப்பட்ட வாக்குச் சீட்டுகள் எல்லாவற்றையும் தனிச் சிப்பத்தில் வைத்திருக்க வேண்டும்

16. வாக்கெடுப்பை முடித்துவிடுவது.—(1) (அ) தலைமை ஏற்கும் அலுவலர், 2-ஆவது விதியைச் சேர்ந்த (2) உள்விதியின்படி வெளியிடப்பட்ட அறிவிப்பில் அதற்கெனக் குறிப்பிட்டுள்ள மணி நேரத்தில் வாக்குச் சாவடியை மூடிவிட வேண்டும்; அந்த நேரத்துக்குப் பிறகு வாக்காளர் எவரையும் உள்ளே விடக் கூடாது;

ஆனுல், வாக்குச் சாவடி மூடப்படுவதற்குமுன் அங்கே வந்திருக்கிற வாக்காளர்கள் எல்லாரையும் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்.

(ஆ) வாக்குச் சாவடி மூடிவிடப்பட்டதற்குமுன் அங்கே வாக்காளர் ஒருவர் வந்திருந்தாரா என்பது பற்றி ஒரு கேள்வி எழுமானுல், தலைமை ஏற்கும் அலுவலர் அதைத் தீர்மானிக்க வேண்டும்; அவருடைய தீர்ப்பு முடிவானதாகும்.

(2) வாக்குச் சாவடி ஒவ்வொன்றினுடைய தலைமை ஏற்கும் அலுவலர், வாக்கெடுப்பு முடிந்த பிறகு கூடிய விரைவில் வாக்குச் சீட்டுப் பெட்டியின் சிறு புழையை மூடிவிட வேண்டும். சிறு புழையை மூடுவதற்கான இயந்திரக் கருவி எதுவும் அப்பெட்டியில் இராவிட்டால், அவர் அச்சிறு புழையை மூடி முத்திரை வைக்க வேண்டும்.

(3) முதல்வாக்குச் சீட்டுப் பெட்டி நிரம்பிவிட்டது காரணமாக் இரண்டாவது வாக்குச் சீட்டுப் பெட்டி ஒன்றைப் பயன்படுத்த வேண்டியிருந்தால், மற்ருெரு வாக்குச் சீட்டுப் பெட்டியைப் பயன்படுத்துவதற்குமுன், (2) உள் விதியில் சொல்லியிருக்கிறபடி முதலாவது வாக்குச் சீட்டுப் பெட்டியை மூடி முத்திரை வைக்க வேண்டும்.

17. **வாக்குகளை எண்ணுவது.**--(1) ஒரு (தொகுதிக்கான வாக்கெடுப்பு முடிந்த பிறகு, தலைமை ஏற்கும் அலுவலர், அங்கே வந்திருக்கக்கூடிய வேட்பாளர்களின் அல்லது அவர்களுடைய வாக்கெடுப்பு முகவர் முன்னிலையில், வாக்குச் சீட்டுப் பெட்டிகளை ஒவ்வொன்ருகத் திறக்க வேண்டும். பிறகு, தலைமை ஏற்கும் அலுவலரால் அல்லது அவர் மேற்பார்வையில் வாக்குகள் எண்ணப்படவேண்டும். அவ்வாறு எண்ணும்போது, வேட்பாளர் ஒவ்வொருவரும் அவரது வாக்கெடுப்பு முகவரும் அங்கே வந்திருக்க உரிமையுள்ளவராவார்.

(2) பின்வரும் காரணங்களுக்காக வாக்குச் சீட்டு ஒன்று தள்ளிவிடப்படும்; அவையாவன :—

(அ) அதில் ஏதேனும் அடையாளம் அல்லது எழுத்து இருந்து அதைக் கொண்டு வாக்காளர் இன்னுரெனக் கண்டுபிடிக்கக் கூடியதாயிருப்பது ; அல்லது

(ஆ) அதில் வாக்கு எதுவும் பதியப்படாமலிருப்பது ; அல்லது

(இ) தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையைவிட அதிக எண்ணிக்கையுள்ள வேட்பாளர்களுக்கு அதில் வாக்குகள் அளிக்கப்பட்டிருப்பது ; அல்லது

(ஈ) அதிலுள்ள வாக்கினைக் குறிக்கும் அடையாளம், இன்ன வேட்பாளருக்குத்தான் வாக்களிக்கப்பட்டிருக்கிறதென்பது ஐயப்படும்படி போடப்பட்டிருப்பது ; அல்லது

(உ) அது போலி வாக்குச் சீட்டாயிருப்பது ; அல்லது

(ஊ) அது மிகவும் சேதப்படுத்தப்பட்டிருந்து அல்லது உருக்கெடுக்கப்பட்டிருந்து அதன் விளைவாக அது உண்மையான வாக்குச் சீட்டுதான் என்பது நிறுவப்பட முடியாமலிருப்பது ; அல்லது

(எ) அதில் ஒரு தொடர் எண் இருந்து அல்லது அது ஓர் அமைப்பு முறையை உடையதாயிருந்து, அது, குறிப்பிட்ட அந்த வாக்குச் சாவடியில்

பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளின் தொடர் எண்களினின்றும் அல்லது ஏற்றவாறு அமைப்பு முறையினின்றும் வேறு யிருப்பது ; அல்லது,

(ஏ). 12 ஆவது விதியைச் சேர்ந்த (2) உள் விதியில் கண்ட வரையறைகளின்படி அதில் இருக்க வேண்டிய தனி மாதிரியான அடையாளம் அதில் இல்லாதிருப்பது :

ஆனால், (எ) பகுதியிலாவது (ஏ) பகுதியிலாவது சொல்லப் பட்டிருப்பதைப் போன்ற குறைபாடு, பிழை அல்லது தவறுதலினால் ஏற்பட்ட தென்று தலைமை ஏற்கும் அலுவலர் ஐயமறத் தெரிந்துகொண்டால், அக் குறைபாடு காரணமாக மாத்திரமே அவ் வாக்குச் சீட்டினைத் தள்ளிவிடக் கூடாது.

மேலும், வாக்குச் சீட்டில் அடையாளம் போட்டவிதத்திலிருந்து, குறிப்பிட்ட இன்ன வேட்பாளருக்குத்தான் வாக்களிக்கக் கருதப் பட்டிருக்கிறதெனத் தெளிவாகத் தெரியுமானால் வாக்கினைக் குறிக்கும் அடையாளம் தெளிவாகத் தெரியவில்லையென்ற அல்லது பலமுறை அடையாளம் போடப்பட்டிருக்கிறதென்ற காரணத்தினால் மட்டுமே அச்சீட்டைத் தள்ளிவிடக் கூடாது.

(3) வாக்குச் சாவடி ஒன்றில் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்து, இவ்விதியின்படித் தள்ளிவிடப்பட்ட வாக்குச் சீட்டுகள் எல்லாவற்றையும் தனியாக ஒரு கட்டாகக் கட்ட வேண்டும்.

(4) தேர்தல் மனு ஒன்றின் பேரில் நீதிமன்றத்தார் செய்யும் தீர்ப்புக்கு மட்டுமே உட்பட்டு, தேர்தல் அலுவலரின் தீர்ப்பு முடிவானதாகும்.

(5) தலைமை ஏற்கும் அலுவலர் [(2) உபவிதியின்படித் தள்ளிவிடப் பட்ட வாக்குச் சீட்டுகள் நீங்கலாக மற்ற] வாக்குச் சீட்டுகளை எண்ணிய பிறகு மாவட்ட ஆட்சியாளர் நிர்ணயிக்கிற விதமாக, எண்ணியதைப் பற்றி எழுதி வைக்கவேண்டும்.

18. **தேர்தல் முடிவினை அறிவிப்பது.**—வாக்குகளை எண்ணுவது முடிந்ததும், தலைமை ஏற்கும் அலுவலர் சட்டப்படிச் செல்லக் கூடிய மிக அதிகமான வாக்குகள் பெற்றுள்ள வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக உடனே அறிவிக்க வேண்டும் :

ஆனால், அட்டவணையில் கண்ட இனங்களுக்கும் அட்டவணையில் கண்ட பழங்குடிகளுக்கும்/ஒன்று அல்லது பல இடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்

தால் தலைமை ஏற்கும் அலுவலர், அந்த இனங்கள் அல்லது பழங்குடிகளைச் சேர்ந்தவர்களும் மிக அதிகமான வாக்குகள் பெற்றுள்ளவர்களுமான வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் ஒதுக்கப்பட்ட அந்த இடம் அல்லது இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக முதலில் அறிவிக்க வேண்டும்.

19. வாக்குகள் சமமாக இருந்தால் செய்ய வேண்டிய நடைமுறை.—வாக்குகளை எண்ணி முடித்த பிறகு, எந்த வேட்பாளர்களேனும் சமமான எண்ணிக்கையுள்ள வாக்குகளைப் பெற்றிருப்பதாகத் தெரிய வந்து, ஒரு வாக்குச் சேர்த்தால் அவ்வேட்பாளர்களில் எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பெறத் தகுதி உள்ளவராகிவிடுவாரானால், தலைமை ஏற்கும் அலுவலர் உடனே சீட்டுப் போட்டு அந்த வேட்பாளர்களிடையே தீர்மானித்து, சீட்டு யார் பெயருக்கு விழுகிறதோ அந்த வேட்பாளர் ஒரு அதிகப்படியான வாக்குப் பெற்றிருப்பதாகப் பாவித்து மேல்நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

20. வெற்றிபெற்ற வேட்பாளர்களின் பெயர்களை வெளியிடுவது.—(1) ஒரு தேர்தலின் முடிவை அறிவித்தான பிறகு கூடிய விரைவில், தலைமை ஏற்கும் அலுவலராவது, தலைமை ஏற்கும் அலுவலர்கள் பலர் நியமிக்கப்பட்டிருந்தால், தலைமை ஏற்கும் முக்கிய அலுவலர் என்று தேர்தல் அலுவலரால் பெயரிடப் பெறும் அவர்களில் ஒருவராவது, ஊராட்சிக்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப் பட்ட வேட்பாளர் அல்லது வேட்பாளர்களின் பெயர்களைச் சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு அலுவலகம் இருந்தால் அதன் அறிவிப்பு பலகையிலேனும், அப்படியிராவிட்டால் கிராமத்தில் முதன்மையான ஓரிடத்திலேனும் வெளியிட வேண்டும்.

(2) வேட்பாளர் ஒருவர் பல தொகுதிகளுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தால், அவர் பணி புரிவதற்குத் தெரிந்தெடுக்கிற தொகுதி இன்னதென்பதை, தேர்தல் தேதிக்குப் பிறகு அடுத்த நாளன்று வட்டாட்சியருக்கு எழுத்து மூலமாய்த் தெரிவிக்க வேண்டும். அப்போது வட்டாட்சியர், அந்த நபர் தெரிந்தெடுத்த தொகுதிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்காவிட்டால், அந்தத் தொகுதிகளில் யாதொன்றிலாவது அவ் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக வட்டாட்சியர் அறிவிக்க வேண்டும். மேற்கண்டவைகளில் எது நடந்தாலும் அவ் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிற மற்ற தொகுதியில் அல்லது ஏற்றவாறு தொகுதிகளில் உள்ள காலியிடத்தை நிரப்புவதற்காகத் தேர்தல் நடவடிக்கைகளைப் புதிதாகத் தொடங்க வேண்டும்.

21. தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்திவிடுவது.—(1) நிச்சயிக்கப்பட்ட நாளன்று தேர்தல்களை முடிப்பது இயலாதென்று தெரிய வந்தால், தலைமை ஏற்கும் அலுவலர் எந்தத் தொகுதி அல்லது தொகுதிகள் சம்பந்தமாக வசதியான ஒரு கட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளை நிறுத்தி, அடுத்த நாளன்று அல்லது பிந்திய ஒரு நாளன்று மேற்சொன்ன கட்டத்திலிருந்து தேர்தல் நடவடிக்கைகளைத் திரும்பத் தொடங்குவதற்கு, முந்திய விதிகளின் மூலம் தடை அளிப்பதாகக் கருதப்பட மாட்டாது. தலைமை ஏற்கும் அலுவலர், ஊராட்சி அலுவலகம் இருந்தால் அங்கேயும், சம்பந்தப்பட்ட தொகுதியில் அல்லது தொகுதிகள் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் முதன்மையான மூன்றிடங்களிலும் அறிக்கையை ஒட்டி அதை வெளியிடுவது மூலமாக, தேர்தல்களை நிறுத்திவிட்டதையும், தேர்தல் நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கவிருக்கிற தேதியையும் காலத்தையும் அறிவிக்க வேண்டும்.

ஆனால், கலகம், வெளிப்படையான வன்செயல்கள் காரணமாக அல்லது வெள்ளம் அல்லது தீ போன்ற இயற்கை விபத்து காரணமாகத் தேர்தல்கள் நிறுத்தி வைக்கப்பட்டவற்றில்கூட, தலைமை ஏற்கும் அலுவலர், தேர்தல் நடவடிக்கைகளை அவ்வாறு நிறுத்தி வைத்ததற்கான காரணங்களையும் அதன் பொருட்டு எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை பற்றிய விவரங்களையும் தேர்தல் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதற்காக நிச்சயிக்கப்பட்ட தேதியையும் காலத்தையும் தேர்தல் அதிகாரிக்கு உடனே அறிவிக்க வேண்டும்.

(2) மேற்சொன்னவாறுள்ள ஒவ்வொன்றிலும் தலைமை ஏற்கும் அலுவலர், மீண்டும் தொடங்கப்பட்ட வாக்கெடுப்பு முடிவு பெறுகிற வரையில், மேற்படித் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணக்கூடாது.

(3) வாக்கெடுப்பு மீண்டும் தொடங்குவதற்காக அறிக்கையிடப்பட்ட நாளன்றும் மணி நேரத்திலும், தலைமை ஏற்கும் அலுவலர், (1) உள் விதியில் கண்ட விலக்கு ஏற்பாடுகளின் கீழ்வருவனவற்றில் தேர்தல் அதிகாரி வேறு விதமாக ஆணையிட்டாலன்றி மற்றப்படி தேர்தல் நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கி, முந்திய விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையின் பிரகாரம் அவைகளை நடத்திக் கொண்டு போக வேண்டும்.

22. சிப்பந்திகளைத் தயாரிப்பது.—வாக்கெடுப்பு முடிவடைந்த பிறகு சந்தர்ப்பத்துக்கேற்ப, தலைமை ஏற்கும் அலுவலராவது முக்கிய தலைமை ஏற்கும்

அலுவலராவது அடியிற்கண்ட ஆவணங்களைத் தொகுதி ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறே தனித் தனிச் சிப்பங்களாகச் செய்து, தமது சொந்த முத்திரை யிட்டு வைக்க வேண்டும்; அந்த ஆவணங்களாவன :—

(1) பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுகள்;

(2) வாக்காளர் பட்டியின் அடையாளமிட்ட படி;

(3) ரத்துச் செய்யப்பட்ட வாக்குச் சீட்டுகள்;

(4) எண்ணினதைப் பற்றிய பதிவுத் தாளும், முந்திய விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பின் நகலும், பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுகளும்;

(5) பல்வகைத் தாள்கள்.

தலைமை ஏற்கும் அலுவலர், எல்லாத் தொகுதிகளுக்கும் சம்பந்தப்பட்ட சிப்பங்களைக் கூடிய விரைவில் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்.

23. **இந்த விதிகளுக்கு அரசாங்கத்தார் பொருள் கொள்வது.**—(1) ஒரு தேர்தல் செல்லுமா என்பது பற்றிய தகராறுகளைத் தீர்ப்பதற்கான விதி களின்படி நடத்தப்படும் ஒரு விசாரணையின் தொடர்பாக உள்ளவற்றைத் தவிர இவ்விதிகளுக்குப் பொருள் கொள்வது பற்றிய வினா ஏதேனும் எழு மானால் அதனை அரசாங்கத்தாரின் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும்; அவர் களுடைய தீர்மானம் முடிவானதாகும்.

(2) அரசாங்கத்தாரின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்ட அத்தகைய ஒரு வினாவைப்பற்றி அவர்கள் தீர்மானம் செய்கிற வகையில், அல்லது இவ் விதி களுக்கு மாறாக தேர்தல் ஒன்று நடத்தப்படுகிறது அல்லது நடத்தப்படப் போகிறதென்று செய்தி கிடைப்பதன் பேரில் அரசாங்கத்தார் நிறுவக்கூடிய ஒரு விசாரணையின் மீது முடிவான ஆணைகள் பிறப்பிக்கப்படுகிற வரையில், தேர்தல் நடவடிக்கைகளை அவற்றின் எந்தக் கட்டத்திலேனும் நிறுத்திவிடும்படி கட்டளையிடுவது சட்டத்திற்குப் பொருந்தியதாகும். இவ்விதியின்படி அரசாங்கத்தார் பிறப்பிக்கும் ஆணைகளுக்கு மாறாக நடத்தப்படும் அல்லது தொடர்ந்து நடத்தப்படும் தேர்தல் செல்லாமற் போவதுமன்றி, எவ்விதப் பயனுடையதாகவுமாட்டாது.

(3) அரசாங்கத்தார் வேறு விதமாக ஆணை பிறப்பித்தாலன்றி இவ் விதியின்படி நிறுத்தி வைக்கப்பட்ட தேர்தல் நடவடிக்கைகளை, தடுப்பு ஆணை ரத்து செய்யப்படுவதன் பேரில், அவை நிறுத்தி வைக்கப்பட்ட கட்டத்தி லிருந்து தொடங்கி, நிச்சயிக்கப்படக்கூடிய புதிய தேதிகளன்று தொடர்ந்து நடத்திக்கொண்டு போக வேண்டும்.

24. தனிக் காரணங்களுக்காக வேறு தேர்தல் தேதிகளை நிச்சயிப்பது.—முந்திய விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும், அரசாங்கத்தார் தனிக் காரணங்களுக்காக மேற்படி சட்டத்தின்படிக்கான ஒரு தேர்தலின் கட்டங்களை எல்லாவற்றிற்காகவுமாவது அவைகளில் ஒன்றிற்காகவாவது, இவ் விதிகளினால் அல்லது இவ்விதிகளின்படிக் குறிப்பிடப்பட்டவை அல்லது நிச்சயிக்கப் பட்டவை அல்லாத வேறு தேதிகளையும் கால அளவுகளையும் நிச்சயிக்கத் தேர்தல் அதிகாரிக்கு அதிகாரம் கொடுக்கலாம்.

25. இடர்ப்பாடுகள் இருந்தால் அவற்றை அரசாங்கத்தார் அகற்றுவது.—(1) இவ்விதிகளைக் கிரமப்படிச் செயற்படுத்துவதற்காக அல்லது மேற்படி சட்டத்தின் பிரகாரம் தேர்தல் நடத்துவதற்காக அவசியமெனத் தாங்கள் கருதக்கூடிய பொதுவான அல்லது தனிக் கட்டளைகளை அரசாங்கத்தார் பிறப் பிக்கலாம்.

(2) இவ் விதிகளின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதில் அல்லது ஒரு தேர்தல் நடத்துவதில் ஏதேனும் சிக்கல் நேரிட்டால், அரசாங்கத்தார், சந்தர்ப் பத்துக்கேற்ப வேண்டியிருக்கிறபடி, அந்தச் சிக்கலை அகற்றுவதற்கு அவசிய மெனத் தங்களுக்குத் தோன்றுகிற எதையேனும் ஆணை மூலமாகச் செய்யலாம். அத்தகைய ஆணை ஒவ்வொன்றினுடைய படியையும், சட்டமன்றத்தின் ஒவ்வொரு அவைக்கு முன்பும், அதன் அடுத்த கூட்டத்தில் வைக்க வேண்டும்.

(1964 செப்டம்பர் 25-ம் தேதிய 1986-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 சனவரி 7-ம் தேதிய 58-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 சனவரி 23-ம் தேதிய 179-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1966 ஏப்ரல் 18-ம் தேதிய 992-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

13. பேரூராட்சிகளின் உறுப்பினர்கள் தேர்தல் நடத்துவது பற்றிய 1964-ஆம் ஆண்டின் விதிகள்.

பாகம் I

தோற்றுவாய்.

1. **சிறு பெயர்.**—இவ் விதிகளைப் பேரூராட்சிகளின் உறுப்பினர்கள் தேர்தல் நடத்துவது பற்றிய 1964-ஆம் ஆண்டின் விதிகள் என்று சொல்லலாம்.

2. **பொருள் விளக்கம்.**—(1) இவ்விதிகளில், சந்தர்ப்பத்தை நோக்க வேறு விதமாகப் பொருள் கொள்ள வேண்டியிருந்தாலொழிய,—

(அ) "மேற்படி சட்டம்" என்பது (1958-ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு பேரூராட்சிகள் சட்டம் என்று பொருள்படும்.

(ஆ) "வாக்குச் சீட்டுப் பெட்டி" என்பது, வாக்காளர்கள் வாக்குச் சீட்டுகளைப் போடுவதற்காகப் பயன்படுத்தப்படும் பெட்டி, பை அல்லது வேறு கொள்கலம் என்று பொருள்படும்.

(இ) "போட்டியிடும் வேட்பாளர்" என்பது யாருடைய நியமனம் 11-ஆவது விதியின்கீழ் முறைப்படி, ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர் தாம் வேட்பாளராயிருப்பதினின்றும் விலகிக் கொள்ளவில்லையோ அந்த வேட்பாளர் என்று பொருள்படும்.

(ஈ) "ஒருவருடைய வாக்காளர் பட்டி எண்" என்பது.—

(i) அவர் சம்பந்தமாக வாக்காளர் பட்டியில் உள்ள பதிவின் தொடர் எண் என்றும்,

(ii) அப் பதிவு வருகிற வாக்காளர் பட்டியல் பாகத்தின் தொடர் எண் என்றும்,

(iii) அந்த வாக்காளர் பட்டி சம்பந்தப்படுகிற தொகுதியின் எண்ணும்பெயரும் என்றும்,

பொருள்படும்.

(உ) "படிவம்" என்பது இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு படிவம் என்று பொருள்படும்.

(ஊ) "அரசாங்கம்" என்பது தமிழ்நாடு அரசாங்கம் எனப் பொருள் படும்.

(எ) "தேர்தல் அலுவலர்" என்பது, தேர்தல் அதிகாரியினிடமிருந்து அதிகாரம் பெற்றவர் என்று பொருள்படுவதல்லாமல், இவ்விதிகளின்படித் தேர்தல் அலுவலரின் அலுவல்களில் எதையேனும் செய்கிற நபர் அல்லது அலுவலர் என்பதும் அதில் அடங்கும்;

(ஏ) "பிரிவு" என்பது, மேற்படி சட்டத்தின் ஒரு பிரிவு என்று பொருள்படும்;

(2) மேற்படி சட்டத்தின் அல்லது இவ்விதிகளின் காரியங்களுக்காக, தமது பெயரை எழுத முடியாத ஒருவர், இவ்விதிகளில் வேறுவிதமாக வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு முறை ஆவணம் அல்லது வேறு தாளில் கையெழுத்து செய்திருப்பதாகக் கருதப்படுவார்; அவையாவன :—

(அ) தேர்தல் அலுவலரின் முன்னிலையில் அல்லது தேர்தல் அதிகாரியால் இதன்பொருட்டுக் குறிப்பிடப்படக் கூடிய வேறு அலுவலரின் முன்னிலையில் அவர் அந்த முறை ஆவணம் அல்லது வேறு தாளின் மீது அடையாளம் போட்டிருக்க வேண்டும்;

(ஆ) அந்த அலுவலர் மேற்படி ஆள் இன்னார்தான் என்று ஐயமறத் தெரிந்துகொண்டு, அந்த அடையாளம் அந்த நபர் போட்ட அடையாளமென்று சான்றுக் கையெழுத்திட வேண்டும்.

(3) (1891-ஆம் ஆண்டின் 1-ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1891-ஆம் ஆண்டின் தமிழ் நாடு பொதுவிதிகள் சட்டம், தமிழ்நாடு சட்டமொன்றுக்குப் பொருள் கொள்வதற்குப் பொருந்துவதைப் போலவே இவ் விதிகளுக்குப் பொருள் கொள்வதற்கும் பொருந்தும்.

பாகம் II

தேர்தல்கள் நடத்துவதற்கான ஆட்சி அமைவு.

3. **தேர்தல் அலுவலரின் பொதுக் கடமைகள்.**—(1) தேர்தல் அதிகாரியின் மேற்பார்வைக்கும் கட்டளைக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு, மேற்படி சட்டத்தின்படி பேரூராட்சிகளின் உறுப்பினர்களின் தேர்தலைச் சரிவர நடத்துவதற்குத் தேர்தல் அலுவலர் பொறுப்பாளியாவார்.

(2) மேற்படி சட்டத்திலும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலும் அல்லது ஆணைகளிலும் சொல்லப்பட்டிருக்கிற விதமாகத் தம் ஆட்சி வரம்புக்குள் தேர்தலைச் செவ்வனே நடத்துவதற்கு அவசியமாயிருக்கக் கூடிய எல்லாச் செயல்களையும் சாதனைகளையும் செய்வது, தேர்தல் அலுவலரின் பொதுக் கடமையாகும்.

4. **வாக்குச் சாவடிகளை ஏற்படுத்தி வைப்பது.**—தேர்தல் நடத்தப் பெறப் போகும் தொகுதி ஒவ்வொன்றுக்காகவும் வாக்கெடுப்புக்காகப் போதிய எண்ணிக்கையுள்ள வாக்குச் சாவடிகளைத் தேர்தல் அலுவலர் ஏற்படுத்தி வைக்க வேண்டும்; அவ்வாறு ஏற்படுத்தி வைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடிகளையும் முறையே அவை ஒவ்வொன்றுக்குமுரிய வாக்கெடுப்புப் பரப்புகளையும் வாக்காளர்களின் தொகுதிகளையும் காட்டும் பட்டியல் ஒன்றைத் தேர்தல் அதிகாரி கட்டளையிடக்கூடிய விதமாக வெளியிட வேண்டும்.

5. **வாக்கெடுப்பு அலுவலரை நியமிப்பது.**—(1) தேர்தல் அலுவலர், வாக்குச் சாவடி ஒவ்வொன்றுக்காகவும் வாக்கெடுப்பு அலுவலர் ஒருவரையோ பலரையோ நியமிக்க வேண்டும். ஆனால் அவர் அடியிற் கண்டவர்களை அவ்வாறு நியமிக்கக் கூடாது; அவர்கள் யாரென்றால்,—வரி வசூலிப்பவராக—வன்றியும் மற்றப்படி ஊராட்சிப் பணியிலிருப்பவர்; உறுப்பினராயிருப்பவர்; ஒரு வேட்பாளரால் அல்லது அவர் சார்பில் அமர்த்திக் கொள்ளப்பட்டிருப்பவர், அல்லது தேர்தலில் அந்த வேட்பாளருக்காக மற்றப்படி வேலை செய்து கொண்டிருப்பவர்.

(2) வாக்கெடுப்பு அலுவலர் தமது அலுவல்களைச் செய்வதில் அவருக்கு உதவி புரிவதற்காக, அரசாங்கத்தைச் சேர்ந்த அல்லது ஊராட்சியைச் சேர்ந்த அலுவலர் ஒருவரையோ பலரையோ தேர்தல் அலுவலர் நியமிக்கலாம்.

(3) நோய் காரணமாக அல்லது தவிர்க்க முடியாத வேறு காரணமாக வாக்கெடுப்பு அலுவலர் வாக்குச் சாவடிக்கு வரக்கூடாத நிலைமை ஏற்பட்டால், அவ்வாறு வராமலிருக்கும்போது அவருடைய அலுவல்களைச் செய்வதற்குத் தேர்தல் அலுவலரிடமிருந்து ஏற்கெனவே அதிகாரம் பெற்றிருக்கிற அலுவலர் அந்த அலுவல்களைச் செய்ய வேண்டும்.

6. **வாக்கெடுப்பு அலுவலரின் பொதுக் கடமை.**—வாக்குச் சாவடியில் ஒழுங்கு நிலைத்திருக்கும்படிச் செய்வதும், வாக்கெடுப்பு தடங்கலின்றி நடக்கும்படிப் பார்த்துக் கொள்வதும், அச்சாவடியிலிருக்கிற வாக்கெடுப்பு அலுவலரின் பொதுக்கடமையாகும்.

பாகம் III

தேர்தல்களை நடத்துவது.

7. **தேர்தல் பற்றிய அறிக்கை.**—(1) மேற்படி சட்டத்தில் கண்ட 17-ஆவது பிரிவின்படியாவது 18 (1) பிரிவின்படியாவது ஒரு ஊராட்சி உறுப்பினரின் தேர்தலுக்காக நிச்சயிக்கப்பட்ட தேதிக்கு 21 நாட்களுக்குக் குறையாமல் முன்னதாக, தேர்தல் அலுவலர் பின்வரும் செய்திகள் கண்டுள்ள அறிக்கை ஒன்றை ஆங்கிலத்திலும் தமிழிலும் தயாரித்து வெளியிட வேண்டும்; அச் செய்திகளாவன :—

(அ) தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை ;

(ஆ) அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டிய தொகுதிகள் ;

(இ) எந்த இடங்களுக்காகத் தேர்தல்கள் நடத்தப்படப் போகின்றனவோ அந்த இடங்களில் இத்தனை இடங்கள் ஒவ்வொரு தொகுதியிலும் அட்டவணையில் கண்ட இனங்களுக்காகவும், அட்டவணையில் கண்ட பழங்குடிகளுக்காகவும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்பது ;

(ஈ) இன்ன தேதியிலும் இன்ன இடத்திலும் இன்ன மணி நேரங்களுக்கிடையிலும் நியமனத்தாள்களைக் கொடுத்துக் கொள்ள வேண்டும் என்பது : அறிக்கை வெளியிடப்படும் தேதிக்கும் நியமனத் தாள்களைக் கொடுத்துக் கொள்வதற்கான தேதிக்கும் இடையில் குறைந்தது முழு எழு நாட்கள் இருக்க வேண்டும் ;

(உ) நியமனத் தாள்களை இன்னார் வாங்கிக் கொள்வார்களென்பது ;

(ஊ) இன்ன தேதியன்று நியமனத்தாள்கள் ஆய்ந்து பார்ப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படுமென்பது ; இந்தத் தேதியானது, நியமனத் தாள்களைக் கொடுத்துக் கொள்வதற்காக நிச்சயிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு அடுத்த அலுவல் நாளாக இருக்க வேண்டும் ; மேலும் அது, தேர்தல் தேதிக்குப் பத்து நாட்களுக்குக் குறையாமல் முன்னதாக இருக்க வேண்டும்.

(எ) வாக்கெடுப்பு நடத்த வேண்டியிருந்தால், இன்ன தேதியன்றும் இன்ன இடம் அல்லது இடங்களிலும் வாக்காளர்களின் வாக்குகள் எடுக்கப்படுமென்பதும், இன்ன மணி நேரங்களில் வாக்கெடுப்பு நடக்குமென்பது ; இது, காலை 7-30 மணி முதல் மாலை 5 மணி வரையில் ஒன்பது மணி நேரத்துக்குக் குறையாமலிருக்க வேண்டும் ;

(ஏ) தேர்தல் அலுவலர் இன்ன தேதியன்றும் இடத்திலும் மணி நேரத்திலும் வாக்குகளை எண்ணத் தொடங்குவாரென்பது.

(2) சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு அலுவலகம் இருந்தால் அங்கேயும் தேர்தல் நடத்தப்பெறப் போகிற தொகுதியில் முதன்மையான இரண்டு அல்லது பல இடங்களிலும் அறிக்கையை ஒட்டுவது மூலமாக அதை வெளியிட வேண்டும்.

8. **நியமனத்தாளைக் கொடுத்துக் கொள்வது.**—(1) வேட்பாளர் ஒவ்வொருவருடைய நியமனத்தையும் 1-ஆம் படிவப்படியுள்ள நியமனத்தாள் மூலமாகச் செய்ய வேண்டும்; விண்ணப்பத்தின் பேரில் சம்பந்தப்பட்ட தேர்தல் அலுவலர் நியமனத்தாளை இலவசமாக வழங்குவார்.

(2) நியமனத்தாள்களைக் கொடுத்துக் கொள்வதற்காகவென்பது 7 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியின்படி பிறப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தேதியன்று, வேட்பாளர் ஒவ்வொருவரும், 1 ஆவது படிவத்தின்படி நிரப்பப்பட்டிருப்பதும், வேட்பாளரும் முன்மொழிபவர் என்னும் முறைமையில் அத் தொகுதியின் வாக்காளர் ஒருவரும் கையெழுத்திட்டிருப்பதுமான நியமனத்தாள் ஒன்றை, இதன்பொருட்டுக் குறிப்பிடப்பட்ட இடத்திலும் மணி நேரங்களிலும் நேரிலோ தம்மை முன்மொழிந்தவர் மூலமாகவோ, தேர்தல் அலுவலரிடம் கொடுக்க வேண்டும்.

(3) நியமனத்தாள் ஒன்று கொடுத்துக் கொள்ளப்படுவதன்பேரில் நியமனத்தாளில் எழுதப்பட்டுள்ளவாறு வேட்பாளர், அவரை முன்மொழிந்தவர் ஆகியோருடைய பெயர்களும் வாக்காளர் பட்டியல் எண்களும், வாக்காளர் பட்டியலில் கண்டுள்ளவையே என்று தேர்தல் அலுவலர் தாம் ஐயமறத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால், மேற்படி பெயர்கள் அல்லது எண்கள் வாக்காளர் பட்டியில் உள்ள நிகரான பதிவுகளை ஒத்திருக்கும்படிச் செய்யும்பொருட்டு, அவை சம்பந்தமாக நியமனத்தாளில் உள்ள ஏதேனும் எழுத்துப் பிழையை அல்லது தனித் துறைக்குரிய பிழையைத் திருத்துவதற்குத் தேர்தல் அலுவலர் அனுமதி கொடுக்க வேண்டும்; அவசியமானால், அப் பதிவுகளில் உள்ள எழுத்துப் பிழையையோ அச்சுப் பிழையையோ பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லையெனக் கட்டளையிட வேண்டும்.

(4) வேட்பாளர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட நியமனத்தாள்கள் மூலமாக நியமனம் செய்யப்படுவதை, இவ்விதியில் உள்ளது எதுவும் தடை செய்யாது.

ஆனால், ஒரே தொகுதியில் நடக்கும் தேர்தலுக்காக வேட்பாளர் ஒருவரால் அல்லது அவர் சார்பில் நான்குக்கு மேற்பட்ட நியமனத்தாள்கள் கொடுத்துக் கொள்ளப்படவுங் கூடாது. நான்குக்கு மேற்பட்ட நியமனத்தாள் களைத் தேர்தல் அலுவலர் ஏற்றுக் கொள்ளவுங் கூடாது.

(5) நிரப்பப்பட வேண்டிய காலியிடங்கள் எத்தனை இருக்கின்றனவோ அத்தனை நியமனத்தாள்களில் ஒரே வாக்காளர் கையெழுத்திடலாம்; ஆனால் அதற்கு மேற்பட்ட நியமனத்தாள்களில் கையெழுத்திடக் கூடாது. வேட்பாளர் ஒவ்வொருவரும், தனி நியமனத்தாள் ஒன்றின் மூலமாக நியமனம் செய்யப்பட வேண்டும். ஓர் இடத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வேட்பாளராக நிற்க விரும்புகிற வாக்காளர் முன்மொழிபவர் என்னும் முறைமையில் நியமனத் தாள்களில் கையெழுத்திடக் கூடாது. ஆனால், ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பா ளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியுள்ள ஒரு தொகுதியிலே, அந்த வாக்காளர் மற்ற வேட்பாளர்களுக்கு முன்மொழிதல் செய்யலாம்; ஆயினும், முன்மொழி பவர் என்னும் முறைமையில் அவர் கையெழுத்திடும் நியமனத்தாள்களின் மொத்த எண்ணிக்கையானது, அத் தொகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையிலிருந்து ஒன்று கழித்துவிட்ட பிறகு எஞ்சி நிற்கும் எண்ணிக்கைக்கு மேற்படக் கூடாது.

9. **வைப்புத் தொகைகள்.**—(1) வேட்பாளர் ஒருவர், 8-ஆவது விதியைச் சேர்ந்த (2) உள்விதியின்படி நியமனத்தாள் ஒன்றைக் கொடுக்கும் காலத்தில், இருபது ரூபாயை, அல்லது அவ்வேட்பாளர் அட்டவணையில் கண்ட இனங்களாக அல்லது அட்டவணையில் கண்ட பழங்குடிகளாக இருந்தால் ஐந்து ரூபாயை ரொக்கமாகத் தேர்தல் அலுவலரிடம் ஒப்புவித்தாலன்றி அல்லது ஒப்புவிக்கும் படிச் செய்தாலன்றி, அவர் ஒரு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதற்காக முறைப்படி நியமனம் செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்பட மாட்டார்.

அவ் வேட்பாளர் தேர்தலுக்கு நிற்க விரும்புகிற தொகுதி ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் தனி வைப்புத் தொகை செலுத்த வேண்டும்.

ஆனால், வேட்பாளர் ஒருவர் ஒரே தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படு வதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட நியமனத்தாள்கள் மூலமாய் நியமனம் செய்யப் பட்டிருந்தால், இந்த உப விதியின்படி அவர் ஒன்றுக்கு மேற்பட்ட வைப்புத் தொகைகளைச் செலுத்த வேண்டியதில்லை.

(2). (1) உள்விதியின்படி செலுத்தப்பட்ட வைப்புத் தொகை (3) அல்லது (4) உள் விதியின்படி ஊராட்சியைச் சேர்ந்துவிட்டாலன்றி, தேர்தல் முடிவு

அறிவிக்கப்பட்ட பிறகு கூடிய விரைவில் அதைச் செலுத்தியவரிடமாவது அவருடைய சட்டப் பிரதிநிதியிடமாவது அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

ஆனால், வேட்பாளர் ஒருவர் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியில் சேர்க்கப்படாவிட்டால் அல்லது வாக்கெடுப்பு தொடங்குவதற்குமுன் இறந்து போய்விட்டால், சந்தர்ப்பத்துக்கேற்ப அந்தப் பட்டியல் வெளியிடப்பட்ட பிறகு அல்லது அவர் இறந்துபோன பிறகு கூடிய விரைவில், அந்த வைப்புத் தொகையைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

(3) வேட்பாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படாமலிருந்து, அவருக்கு அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை, எல்லா வேட்பாளர்களுக்கும் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் மொத்த எண்ணிக்கையைத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கையால் வகுப்பதனால் கிடைக்கும் எண்ணிக்கையில் ஆறில் ஒரு பங்குக்கு மேற்படாவிட்டால் அவரால் அல்லது அவர் சார்பில் செலுத்தப்பட்ட வைப்புத் தொகை ஊராட்சியை சேர்ந்துவிடும்.

(4). (2), (3) உள் விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் அந்த வேட்பாளர், ஒரு தேர்தலில் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளராயிருந்தால், அவர் வேட்பாளராயிருப்பதற்காக (1) உள் விதியின்படிச் செலுத்தப்பட்ட வைப்புத் தொகைகளில் ஒன்றே ஒன்றை மட்டும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்; மற்றவற்றை ஊராட்சிக்குச் சேர்த்துவிட வேண்டும்.

10. **நியமனங்கள் பற்றிய அறிக்கையும், அவற்றை ஆய்ந்து பார்ப்பதற்கான காலமும் இடமும்.**—(1) தேர்தல் அலுவலர், 8 ஆவது விதியின்படி நியமனத் தாள் ஒன்றைப் பெற்றுக் கொள்வதன் பேரில், நியமனங்களை ஆய்ந்து பார்ப்பதற்கென நிச்சயிக்கப்பட்ட தேதி, நேரம் இடத்தைப் பற்றி, அதைக் கொடுப்பவரிடம் தெரிவிக்க வேண்டும்; மேலும் அவர், அந்த நியமனத் தாளின் தொடர் எண்ணை அதன் மீது எழுத வேண்டும்; அன்றியும் அவர், அந்த நியமனத்தாள் அவரிடம் கொடுக்கப்பட்ட தேதியும் நேரமும் கண்டுள்ள சான்றில் கையெழுத்திட வேண்டும்.

(2) நியமனத்தாள்களைக் கொடுத்துக் கொள்வதற்கான கடைசி நாளன்று, எந்த மணி நேரங்களுக்கிடையில் நியமனத் தாள்களைக் கொடுத்துக் கொள்ள வேண்டுமோ அந்த மணி நேரங்கள் கழிந்த பிறகு தேர்தல் அலுவலர், 8 ஆவது

விதியில் கண்டுள்ள விதமாகவும் தம்மிடம் கொடுக்கப்பட்டிருக்கிற நியமனத் தாள்களின் பட்டி ஒன்றை 2 ஆம் படிவப் பிரகாரம் தயாரித்து அதைத் தமது அலுவலகத்திலே முதன்மையான ஓரிடத்தில் ஒட்டுவிக்க வேண்டும்; அதே சமயத்தில், நியமனத் தாள்களை ஆய்ந்து பார்ப்பதற்கென நிச்சயிக்கப்பட்ட தேதியையும் காலத்தையும் இடத்தையும் தெரிவிக்க வேண்டும்.

11. *நியமனத் தாள்களை ஆய்ந்து பார்த்தல்.*—(1) நியமனங்களை ஆய்ந்து பார்ப்பதற்கென நிச்சயிக்கப்பட்ட தேதியன்றும் நேரத்திலும், வேட்பாளரும், ஒவ்வொரு வேட்பாளரையும் முன்மொழிந்தவர் ஒருவரும், ஒவ்வொரு வேட்பாளரிடமிருந்தும் எழுத்து மூலமாக முறைப்படி அதிகாரம் பெற்ற வேறொருவரும், அவ்வாறு ஆய்ந்து பார்ப்பதெற்கென நிச்சயிக்கப்பட்ட இடத்தில் வந்திருக்கலாம்; ஆனல் வேறு எவரும் வரலாகாது. 10 ஆவது விதியைச் சேர்ந்த (2) உள் விதியின்படித் தயாரிக்கப்பட்ட பட்டியில் குறிப்பிட்டிருக்கிற வேட்பாளர்கள் எல்லாருடைய நியமனத் தாள்களையும் ஆய்ந்து பார்ப்பதற்கு, தேர்தல் அலுவலர், அவர்களுக்கு நியாயமான எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

(2) பின்னர் தேர்தல் அலுவலர் நியமனத் தாள்களை ஆய்ந்து பார்த்து, எந்த நியமனத்துக்கேனும் எழுப்பப்படக்கூடிய எல்லா ஆட்சேபணைகளைப் பற்றியும் முடிவு செய்ய வேண்டும்; அன்றியும் அவர் அவ்வாறு ஆட்சேபணை எழுப்பப்படுவதன் பேரிலாவது, தாம் அவசியமெனக் கருதுகிற சுருக்க வகையான விசாரணை செய்த பிறகு தாமேயாவது, பின்வரும் காரணங்களில் எதனுலேனும் ஒரு நியமனத்தைத் தள்ளிவிடலாம்; அக்காரணங்களாவன :—

(அ) மேற்படி சட்டத்தில் கண்ட முறைகளில் எதன்படியேனும் காலியிடத்தை நிரப்ப ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அந்த வேட்பாளர் தகுதி பெருதவர் அல்லது தகுதியற்றவராக ஆக்கப்பட்டவராக இருத்தல்.

(ஆ). 8 ஆவது அல்லது 9 ஆவது விதியில் கண்ட ஏற்பாடுகளில் எதையேனும் நிறைவேற்றுவதில் தவறு நேரிட்டிருப்பது.

(3) வேட்பாளர் ஒரு நியமனத் தாள் மூலமாக முறைப்படி நியமனம் செய்யப்பட்டிருந்து, அது சம்பந்தமாக ஒழுங்கீனம் எதுவும் நடந்திராவிட்டால், மற்றொரு நியமனத் தாள் சம்பந்தமாக ஒழுங்கீனம் நடந்திருக்கிறதென்னும்

காரணத்தினால் அந்த வேட்பாளரின் நியமனத்தைத் தள்ளிவிடுவதற்கு, (2) உள் விதியைச் சேர்ந்த (ஆ) பகுதியில் உள்ளது எதுவும் அதிகாரம் வழங்குவதாகக் கருதப்பட மாட்டாது.

(4) முக்கியமான தன்மை உடையதாயிராத ஒரு குறைபாடு காரணமாகத் தேர்தல் அலுவலர் எந்த நியமனத் தாளையும் தள்ளிவிடக் கூடாது.

(5) ஒருவர் முன்மொழிபவர் என்னும் முறைமையில் நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையுள்ள நியமனத் தாள்களில் கையெழுத்திட்டிருந்தால், அவ்வாறு கையெழுத்திடப் பெற்று நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் எண்ணிக்கை வரையில் முதலில் வந்து சேர்ந்த நியமனத் தாள்கள் மற்றப்படி செல்லுபடியானவையாயிருந்தால் அவைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(6) தேர்தல் அலுவலர் 7 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள் விதியின் படிப் பிறப்பிக்கப்பட்ட அறிக்கையில் இதன்பொருட்டுக் குறிப்பிடப்பட்டுள்ள தேதியன்று ஆய்ந்து பார்க்கும் வேலையை எடுத்துக் கொள்ள வேண்டும்; கலகத்தினால் அல்லது வெளிப்படையான வன்செயல் காரணத்தினால் அல்லது தமது சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் அச் செயல் முறைகளுக்குக் குறுக்கீடு நேர்ந்தாலன்றி அல்லது அவைகள் தடுக்கப்பட்டாலன்றி, மற்றப்படி அச் செயல்முறைகளை எவ்விதமாகவேனும் தள்ளிவிடுவதற்கு அனுமதி கொடுக்கக் கூடாது.

ஆனால், தேர்தல் அலுவலர் ஆட்சேபணை எழுப்பினால் அல்லது வேறொருவர் ஆட்சேபணை செய்தால், ஆய்ந்து பார்ப்பதற்கென நிச்சயிக்கப் பட்ட தேதிக்கு, மறுநாள் விட்டு அடுத்த நாளுக்குள் அதை எதிர்த்து வாதாடச் சம்பந்தப்பட்ட வேட்பாளருக்குக் காலம் கொடுக்கலாம்; செயல்முறைகள் தள்ளி வைக்கப்பட்டிருக்கிற தேதியன்று தேர்தல் அலுவலர் தமது தீர்ப்பினை எழுத வேண்டும்.

(7) தேர்தல் அலுவலர் நியமனத் தாள் ஒவ்வொன்றின் மீதும் அதைத் தாம் ஏற்றுக்கொள்ளவோ தள்ளிவிடவோ செய்யும் தீர்ப்பினை மேற்குறிப்பாக எழுத வேண்டும்; நியமனத் தாள் தள்ளிவிடப்பட்டிருந்தால், அவ்வாறு தாம் தள்ளிவிட்டதற்குண்டான காரணங்களைச் சுருக்கமாக எழுதி வைக்க வேண்டும்; சம்பந்தப்பட்ட வேட்பாளர் இதன் பொருட்டுக் கேட்டுக் கொள்வதன் பேரில், அதற்கு ஒரு படியை உடனே அவருக்கு வழங்க வேண்டும்.

(8) வேட்பாளர் ஒருவருடைய நியமனத்தைத் தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்படும் ஓர் ஆணையின் மீது கோட்ட ஆட்சியாளருக்கு மேல்முறையீடு உண்டு. மேல்முறையீட்டுச் சுருக்கத்தை, தள்ளிவிடுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட அதே நாளன்றாவது அடுத்த அலுவல் நாளன்றாவது கோட்ட ஆட்சியாளரிடம் கொடுக்க வேண்டும், கோட்ட ஆட்சியாளர், தங்கள் நியமனங்களைத் தாக்கல் செய்திருக்கிற மற்ற வேட்பாளர்களுக்குத் தெரிவித்த பிறகு, மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் அந்த மேல்முறையீட்டினைத் தீர்வு செய்ய வேண்டும்.

(9). (8) உள் விதியின்படி ஒரு மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டவுடனே, அம் முறையீடு தீர்வு செய்யப்பட்டவுடனேயுங்கூட, கோட்ட ஆட்சியாளர், சந்தர்ப்பத்துக்கேற்றவாறு, அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட அல்லது தீர்வு செய்யப்பட்ட செய்தியைத் தேர்தல் அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(10). (8) உள் விதியின்படி மேல்முறையீடு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தால், தேர்தல் அலுவலர், அந்த மேல்முறையீடு தீர்வு செய்யப்பட்ட பிறகுதான், தேர்தல் நடத்துவது சம்பந்தமாக மேற்கொண்டு செயல்முறைகள் நடத்த வேண்டும்.

12. வேட்பாளராயிருப்பதினின்றும் விலகிக் கொள்வது.—(1) வேட்பாளர் ஒருவர், எழுதியுள்ள ஓர் அறிவிப்பில் தாம் கையெழுத்திட்டு, நியமனங்களை ஆய்ந்து பார்ப்பதற்கென நிச்சயிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு மூன்றும் நாளன்று, அல்லது அந்நாள் ஒரு பொது விடுமுறை நாளாயிருந்தால், பொது விடுமுறை நாளாயிராத அடுத்துப் பின்வரும் நாளன்று பிற்பகல் 3 மணிக்கு முன் தேர்தல் அலுவலரிடம் கொடுப்பது மூலமாகத் தாம் வேட்பாளராயிருப்பதினின்றும் விலகிக் கொள்ளலாம். அந்த அறிவிப்பை நேரில் அந்த வேட்பாளரேயாவது, அந்த வேட்பாளரிடமிருந்து எழுத்து மூலமாக இதன் பொருட்டு அதிகாரம் பெற்றிருக்கிற அவரை முன்மொழிந்தவராவது கொடுக்கலாம்.

ஆனால், தொகுதி ஒன்றுக்குரிய தேர்தல் சம்பந்தமாக 11 ஆவது விதியைச் சேர்ந்த (8) உள் விதியின்படி வேட்பாளர் ஒருவர் செய்து கொண்ட மேல்முறையீட்டினைக் கோட்ட ஆட்சியாளர் ஏற்றுக்கொண்டிருந்தால், அந்த வேட்பாளராவது, அத் தொகுதிக்குரிய தேர்தலுக்காக நியமனம் முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற வேறொரு வேட்பாளராவது, அந்த மேல்முறையீடு தீர்வு செய்யப்பட்ட தேதிக்குப் பிறகு அடுத்த நாளன்று, அல்லது அந்த நாள் பொது

விடுமுறை நாளாயிருந்தால் பொதுவிடுமுறை நாளாயிராத அடுத்துப் பின்வரும் நாளன்று மேற்சொன்ன விதமாகத் தாம் வேட்பாளராயிருப்பதினின்றும் விலகிக் கொள்ளலாம்.

(2) தாம் வேட்பாளராயிருப்பதனின்றும் விலகிக் கொள்வது பற்றி (1) ஆவது உள் விதியின்படி அறிவிப்புக் கொடுத்திருக்கும் ஒருவர், அந்த அறிவிப்பை ரத்து செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

13. **போட்டி ஏற்பட்டிருக்கிற தேர்தல்களும் போட்டி ஏற்பட்டிராத தேர்தல் களும்.**—(1) தேர்தல் அலுவலர் இதன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றி, வாக்கெடுப்பு அவசியமாயுள்ள இடங்கள் இன்னவையென்பதையும், வேட்பாளர்களில் இன்னாரைக் கொண்டு வாக்காளர்கள் அந்த இடங்களை நிரப்ப வேண்டுமென்பதையும் தீர்மானிக்க வேண்டும்.

(2). (அ) தேர்தலுக்காக நிரப்பப்படவேண்டிய ஒதுக்கி வைக்கப்பட்ட இடங்கள் சம்பந்தமாக, தேர்தல் அலுவலர் தனித்தனியாக ஆலோசனை செய்து பார்க்க வேண்டும்.

(ஆ). (i) ஒதுக்கி வைக்கப்பட்ட இடங்கள் சம்பந்தமாக, வேட்பாளர்களின் எண்ணிக்கை, காலியிடங்களின் எண்ணிக்கையைவிட அதிகமாயிராவிட்டால், வேட்பாளரோ அல்லது சந்தர்ப்பத்துக்கேற்றவாறு எல்லா வேட்பாளர்களுமோ முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகத் தேர்தல் அலுவலர் அறிவிக்க வேண்டும்.

(ii) ஒதுக்கி வைக்கப்பட்ட இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதி வாய்ந்த வேட்பாளர்களின் எண்ணிக்கை, காலியிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்பட்டிருந்து, ஆனால், அத் தொகுதியில் தேர்தலுக்கு நிற்கும் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கை அத் தேர்தலில் நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமமாயிருந்தால், தேர்தல் அலுவலர், சம்பந்தப்பட்ட வேட்பாளர்களுக்கு அறிவித்த பிறகு, அவ்வாறு தகுதி வாய்ந்த வேட்பாளர்களில் எவர் ஒதுக்கி வைக்கப்பட்ட இடங்களுக்கும் எவர் ஒதுக்கி வைக்கப்படாத இடங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டுமென்பதைச் சீட்டுப் போட்டு நிச்சயிக்க வேண்டும்.

ஆனால், ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதி வாய்ந்திருக்கிற வேட்பாளர்கள், தங்களில் யாரை, ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இடத்துக்கு அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டுமென்பது பற்றித்

தங்களுக்குள் உடன்பாடு செய்து கொண்டு, அத்தகைய உடன்படிக்கை பற்றிய அறிவிப்பு ஒன்றில் அவர்கள் எல்லாரும் கையெழுத்திட்டு, வேட்பாளராயிருப்பதனின்றும் விலகிக் கொள்வதற்கு 12 ஆவது விதியைச் சேர்ந்த (1) ஆவது உள் விதியின்படி அனுமதிக்கப்பட்ட காலம் கழிந்துபோவதற்கு முன் தேர்தல் அலுவலரிடம் அதைக் கொடுத்தால், தேர்தல் அலுவலர் அவ்வண்ணமே அறிவிக்க வேண்டும்.

(3) தேர்தலில் நிரப்பப்பட வேண்டிய ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இடங்களில் ஏற்பட்டிருக்கிற காலியிடங்கள் எல்லாம் (2) ஆவது உள் விதியின்படி நிரப்பப்பட்ட பிறகு மேற்படி உள் விதியின் பிரகாரம் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்ட வேட்பாளர்களை நீக்கிய பிறகு எஞ்சி நிற்கும் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்தலில் நிரப்பப்பட வேண்டிய ஒதுக்கி வைக்கப்பட்டிராத இடங்களின் எண்ணிக்கையைவிட அதிகமாயிராவிட்டால், தேர்தல் அலுவலர், அவர்கள், ஒதுக்கி வைக்கப்பட்டிராத இடங்களுக்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும்.

(4). உள் விதிகள் (2), (3) இன்படி நிரப்பப்பட்டிராத காலியிடங்கள் சம்பந்தமாக, மேற்படி உள் விதிகளின்படி அறிவிக்கப்பட்டிருப்பவர்களை நீக்கிய பிறகு எஞ்சியுள்ள வேட்பாளர்களிலிருந்து தேர்ந்தெடுப்பதற்காக வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

(5). உள் விதிகள் (2), (3), (4) இல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நடைமுறையைப் பின்பற்றிய பிறகு, இன்னும் நிரப்பப்பட வேண்டிய இடங்கள் இருந்தால், புதிய தேர்தலுக்குச் செய்வதைப் போலவே எல்லாவற்றிலும் தேர்தல் நடவடிக்கைகளைப் புதிதாகத் தொடங்க வேண்டும்.

14. **சின்னங்களின் வகுப்பீடும், போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியை வெளியிடுவதும்.**—(1) எந்தக் காலத்துக்குள் வேட்பாளர்களாயிருப்பதினின்றும் விலகிக் கொள்ளலாமோ அந்தக் காலம் கழிந்த பிறகு வாக்கெடுப்பு அவசியமெனத் தெரியவந்தால், தேர்தல் அலுவலர், இதன் பொருட்டு அரசாங்கத்தார் பிறப்பிக்கக்கூடிய கட்டளைகளுக்குட்பட்டு, போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் தனி மாதிரியான சின்னம் ஒன்றை வகுத்துக் கொடுக்க வேண்டும்.

(2). பிறகு தேர்தல் அலுவலர், போட்டியிடும் வேட்பாளர்கள் எல்லாரையுங் கொண்ட 3 ஆம் படிவப் பிரகாரம் உள்ள பட்டி ஒன்றைத் தயாரித்து, ஊராட்சி அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையிலும், தேர்தல் நடத்தப்படப் போகிற தொகுதி ஒவ்வொன்றிலும் இரண்டு அல்லது பல முதன்மையான இடங்களிலும் வெளியிட வேண்டும்.

(3) இப் பட்டியில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் அவர்களுடைய நியமனத் தாள்களில் விவரிக்கப்பட்டபடியும், தமிழ் அகர வரிசைப் படியும் அடங்கியிருக்க வேண்டும்.

15. போட்டியிடும் வேட்பாளர் வாக்கெடுப்புக்குமுன் இறந்து போவது.—போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் இறந்துபோய், அவர் இறப்பைப் பற்றிய செய்தி வாக்கெடுப்பு தொடங்குவதற்கு முன் கிடைத்தால், தேர்தல் அலுவலர், போட்டியிடும் வேட்பாளர் இறந்துபோனது உண்மைதான் என்பதை ஐயமறத் தெரிந்துகொள்வதன் பேரில், வாக்கெடுப்பை ரத்துச் செய்துவிட வேண்டும்; புதிய தேர்தலுக்கு எப்படியோ அப்படியே எல்லாவற்றிலும் அத் தொகுதிக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாக எல்லாச் செயல்முறைகளையும் புதிதாகத் தொடங்க வேண்டும்.

ஆனால், வாக்கெடுப்பு ரத்து செய்யப்பட்ட காலத்தில் போட்டியிடும் வேட்பாளராயிருந்த ஒருவரைப் புதிதாக நியமனம் செய்ய வேண்டியதவசியமில்லை.

மேலும், வாக்கெடுப்பு ரத்துச் செய்யப்படுவதற்கு முன் 12 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள் விதியின்படித் தாம் அபேட்சகராயிருப்பதனின்றும் விலகிக் கொள்வதாக அறிவித்திருந்த ஒருவர் தேர்தல் அவ்வாறு ரத்து செய்யப்பட்டதற்குப் பிறகு, தேர்தலுக்கு ஒரு வேட்பாளராக நியமனம் செய்யப் பெறுவதற்கு உரிமையற்றவராக ஆக மாட்டார்.

பாகம் IV.

வாக்கெடுப்பு.

16. வாக்கெடுப்புக்கு முன் வாக்கெடுப்பு அலுவலர்களை நியமிக்க வேண்டுமென்பது.—(1) வாக்கெடுப்பு நடத்த வேண்டியிருந்தால், 5 ஆவது விதியின் பிரகாரம் தேர்தல் அலுவலர் 4 ஆவது விதியின் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச் சாவடிகள் ஒவ்வொன்றுக்காகவும் வாக்கெடுப்பு அலுவலர் ஒருவரையோ பலரையோ உடனே நியமிக்க வேண்டும்; மேலும், வாக்கெடுப்பு அலுவலர்களுக்கு உதவி செய்வதற்கு தாம் அவசியமெனக் கருதுகிற மற்றவர்களையும் நியமிக்க வேண்டும்; அவர்களுடைய பணிகளுக்காக அவர்களுக்கு நியாயமான ஊதியம் கொடுக்கலாம்.

(2) வாக்குச் சாவடியில் வாக்குகள் மிக இரகசியமாகப் பதியப்படுமாறு வாக்கெடுப்பு அலுவலர் பார்த்துக்கொள்ள வேண்டும்; ஒரு சமயத்தில் அனுமதிக்கப்படுவதற்குரிய வாக்காளர்களின் எண்ணிக்கையை அவர் முறைப் படுத்த வேண்டும்; அடியிற் கண்டவர்களைத் தவிர மற்றெல்லாரையும் விலக்கி விட வேண்டும் :—

(அ) போட்டியிடும் வேட்பாளர்கள், போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு சமயத்தில் ஒரு முகவர் (இவர் இதில் பின்னால் வாக்கெடுப்பு முகவர் என்று குறிப்பிடப்படுவார்), இவர் வேட்பாளரால் எழுத்து மூலமாக அமர்த்தப்பட வேண்டும்;

(ஆ) காவல் துறையினரும் (போலீஸாரும்) அலுவல் பார்க்கிற மற்ற அரசுப் பணியாளர்களும்;

(இ) வாக்காளர் ஒருவர் கையேந்தலாகக் கொண்டுவரும் குழந்தை;

(ஈ) குருடாயிருப்பது அல்லது வலுவற்றிருப்பது காரணமாக உதவி யின்றி நடக்க முடியாத ஒரு வாக்காளருடன் கூட வருபவர்;

(உ) வாக்காளர்களை அடையாளங் காட்டுவதில் அல்லது பெண் வாக் காளர்களைச் சோதனை போடுவதில் தமக்கு உதவி செய்வதற்காக அல்லது வாக்கெடுப்பில் தமக்கு வேறுவிதமாக உதவி புரிவதற்காகத் தேர்தல் அலுவலர் அல்லது வாக்கெடுப்பு அலுவலர் அனுமதிக்கக் கூடிய மற்றவர்கள்.

17. **வாக்குச் சாவடிகளில் ஏற்பாடுகள்.**—(1) வாக்குச் சாவடி ஒவ்வொன் றிலும் ஒன்று அல்லது பல வாக்கெடுப்பு அறைகளை ஏற்படுத்தி வைக்க வேண்டும்; இவைகள் மற்றவர்கள் பார்க்காதபடி தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யக் கூடியவைகளாக இருக்க வேண்டும்.

(2) வாக்குச் சாவடி ஒவ்வொன்றுக்கும் வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையொட்டி அவசியமாயிருக்கக் கூடிய எண்ணிக்கை யுள்ள வாக்குச் சீட்டுப் பெட்டிகளைத் தேர்தல் அலுவலர் வாக்குச் சாவடி ஒவ்வொன்றிலும் ஏற்படுத்தி வைக்க வேண்டும். மேலும் அவர் அடியிற் கண்ட வைகளையும் வைக்க வேண்டும்; அவையாவன :—

வாக்காளர் பட்டியின் படிகள் அல்லது அந்த வாக்குச் சாவடியில் வாக்களிக்க உரிமையுள்ள வாக்காளர்கள் பெயர்கள் கொண்ட அப் பட்டியலின் பாகம், வாக்குச் சீட்டுகள், வாக்குச் சீட்டுகளின் மீது தனி மாதிரியான அடை யாளத்தை முத்திரையிடுவதற்கான கருவிகள், வாக்காளர்கள் வாக்குச்

சீட்டுகளில் அடையாளம் போடுவதற்கு அவசியமான பொருள்கள், அவசியமாயிருக்கக் கூடிய மற்றத் தாள்கள், எழுதுபொருள்கள், படிவங்கள்.

(3) வாக்குச் சீட்டுப் பெட்டி ஒவ்வொன்றும், வாக்குச் சீட்டுகளை அதனுள் போடக்கூடியபடியும், ஆனால் பெட்டியின் பூட்டைத் திறக்காமல் அதிலிருந்து அச்சீட்டுகளை எடுக்க முடியாதபடியும் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(4) வாக்குச் சாவடி ஒவ்வொன்றின் நுழைவாயிலிலும் அடியிற் கண்டவற்றை முதன்மையாகக் காட்டி வைத்திருக்க வேண்டும்:—

(அ) 3-ஆம் படிவத்தில் வெளியிட்டிருக்கிறபடி போட்டியிடும் வேட்பாளர்களின் எண்களையும் பெயர்களையும் காட்டும் அறிக்கையும், ஒவ்வொரு வேட்பாளருக்கும் வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ள தனி மாதிரியான சின்னமும்;

(ஆ) எந்த வாக்கெடுப்புப் பரப்பின் வாக்காளர்கள் அந்த வாக்குச் சாவடியில் வாக்களிக்க உரிமையுள்ளவர்களாயிருக்கிறார்களோ அப் பரப்பைக் காட்டும் ஓர் அறிக்கை.

(5) தேர்தல் அலுவலராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள வேறொருவராவது, வாக்குச் சீட்டுகளையும் தேர்தல் சம்பந்தமான மற்றெல்லாப் பொருள்களையும், வாக்கெடுப்பின் தொடக்கத்துக்கென நிச்சயிக்கப்பட்ட மணி நேரத்துக்குப் போதுமான அளவு முன்னதாகவே, வாக்கெடுப்பு அலுவலரிடம் கொடுத்துவிட வேண்டும்.

18. **வாக்கெடுப்புக்காக வாக்குச் சீட்டுப் பெட்டிகளைத் தயாரிப்பது.**—(1) வாக்குச் சாவடியொன்றில் பயன்படுத்தப்படும் வாக்குச் சீட்டுப் பெட்டி ஒவ்வொன்றும் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும், பெயர்ச் சீட்டுகளைக் கொண்டிருக்க வேண்டும்; அவைகளில் பின்வருபவை பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்:—

(அ) ஊராட்சியின் பெயரும் தொகுதியின் எண்ணும்.

(ஆ) வாக்குச் சாவடியின் தொடர் எண்ணும் பெயரும்.

(இ) வாக்குச் சீட்டுப் பெட்டியின் தொடர் எண் (இதை, வாக்கெடுப்பின் முடிவில் வாக்குச் சீட்டுப் பெட்டிக்கு வெளிப்புறத்திலுள்ள பெயர்ச் சீட்டில் மாத்திரம் எழுத வேண்டும்).

(ஈ) வாக்கெடுப்பின் தேதி.

(2) வாக்கெடுப்பு அலுவலர், வாக்கெடுப்புத் தொடங்குவதற்கு அடுத்து முன், வாக்குச் சீட்டுப் பெட்டிகள் ஒவ்வொன்றும் காலியாயிருப்பதை, அங்கு வந்துள்ள போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் வாக்கெடுப்பு முகவர்களுக்கும் மற்றவர்களுக்கும் காட்டி, பிறகு அவற்றைப் பூட்டி, அவற்றின் மீது தமது முத்திரையைப் பொறிக்க வேண்டும். பின்னர், அவ்வாறு பூட்டி முத்திரையிடப்பெற்ற வாக்குச் சீட்டுப் பெட்டிகளை, வாக்கெடுப்பு அலுவலரும் வாக்கெடுப்பு முகவர்களும் நன்ருகப் பார்க்கும்படியான இடத்தில் வைக்க வேண்டும்.

19. **பெண் வாக்காளர்களுக்கு வசதிகள்.**—(1) ஆண் வாக்காளர்களுக்கும் பெண் வாக்காளர்களுக்குமென வாக்குச் சாவடி ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தால், மாறி மாறித் தனித்தனித் தொகுதிகளாக அவர்களை வாக்குச் சாவடிக்குள் விட வேண்டுமென வாக்கெடுப்பு அலுவலர் கட்டளையிடலாம்.

(2) வாக்குச் சாவடி ஒன்றில் பணியாளாகப் பணி புரியவும், பெண் வாக்காளர்களுக்கு உதவி புரியவும், பொதுவாகப் பெண் வாக்காளர்களின் வாக்குகளைப் பெறுவதிலும் குறிப்பாக அவசியமானல் ஒரு பெண் வாக்காளரைச் சோதனை போடுவதில் ஒத்தாசை செய்வதிலும் வாக்கெடுப்பு அலுவலருக்கு உதவி புரியவும், தேர்தல் அலுவலராவது வாக்கெடுப்பு அலுவலராவது ஒரு பெண்ணை அமர்த்திக் கொள்ளலாம்.

20. **வாக்காளர்கள் இன்னுரென்று கண்டு பிடிப்பது.**—(1) ஒருவர் வாக்களிக்க வரும்போதும், அவருக்கு ஒரு வாக்குச் சீட்டு வழங்குவதற்கு முன் எப்போதேனும், வாக்கெடுப்பு அலுவலர் பின்வரும் கேள்விகளில் ஒன்றையோ இரண்டையுமோ தாமாகவே அவரைக் கேட்கலாம்:—

(i) (பட்டியிலிருந்து முழுப் பதிப்பையும் படித்து) இவ்வாறு பதியப் பெற்றுள்ளவர் நீங்கள்தானு?

(ii) இந்தத் தேர்தலிலே இந்த வாக்குச் சாவடியிலாவது வேறெந்த வாக்குச் சாவடியிலாவது நீங்கள் ஏற்கெனவே வாக்களித்திருக்கிறீர்களா?

அந்த ஆள் தம்மைக் கேட்ட கேள்வி அல்லது கேள்விகளுக்கு வரையறுக்கப்படாத பதில் கூறி, முதற் கேள்விக்கு அவருடைய பதில் உடன்பாட்டிலும் இரண்டாவது கேள்விக்கு எதிர்மறையிலும் இருந்தாலன்றி மற்றப்படி, அவருக்கு வாக்குச் சீட்டு கொடுக்கக் கூடாது. இதில் சொல்லப்பட்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, வாக்காளர் பட்டியில் தமது பெயர் கண்டுள்ள ஒவ்வொருவரும் வாக்குச் சீட்டு ஒன்று கொடுக்கப் பெறுவதற்கு உரியவராவார்.

(2) வாக்குச் சீட்டு பெறுவதற்கு ஒருவருக்குள்ள உரிமையைப் பற்றித் தீர்மானிக்கும்போது, வாக்கெடுப்பு அலுவலர், வாக்காளர் பட்டியலில் உள்ள ஒரு பதிவு சம்பந்தப்படுகிற வாக்காளர் அந்த ஆள்தான் என்று தாம் ஐயமறத் தெரிந்துகொண்டால், அந்தப் பதிவிலுள்ள வெறும் எழுத்து அல்லது அச்சுப் பிழைகளை அவர் கவனிக்காமல் விட்டுவிட வேண்டும்.

(3) வாக்காளர் ஒருவருக்கு வாக்குச் சீட்டு கொடுக்கப்படுவதற்கு முன்பாக, வாக்காளர் பட்டியில் கண்டுள்ளவாறு அந்த வாக்காளரின் எண், பெயர், விவரத்தைச் சொல்லிக் கூப்பிட வேண்டும்.

21. **ஆள் மாறாட்டம் செய்யாதபடி பாதுகாப்பு.**—(1) வாக்காளர் ஒவ்வொருவரும், வாக்குச் சீட்டு ஒன்றைப் பெறுவதற்குமுன்—

(அ) வாக்கெடுப்பு அலுவலர் தமது இடது சுட்டு விரலைப் பார்வையிடுவதற்கும்,

(ஆ) இடது சுட்டு விரலுக்குப் பின்னால், நகத்தின் அடிப்பாகத்துக்கு அடுத்து மேல் தோலின் மீது அழியாத மை அடையாளம் போடப்படுவதற்கும், அனுமதி கொடுக்க வேண்டும்.

(2) அத்தகைய வாக்காளர் ஒருவர்—

(அ) வாக்கெடுப்பு அலுவலர் தமது இடது சுட்டு விரலைப் பார்வையிடுவதை அனுமதிக்க மறுத்தாலும்,

(ஆ). (1) ஆவது உள் விதியில் கண்டுள்ளவாறு இடது சுட்டுவிரல் மீது அழியாத மை அடையாளம் போடப்படுவதை அனுமதிக்க மறுத்தாலும்,

(இ) இத்தகைய அடையாளம் போடப்பட்ட பிறகு அதை அகற்றி விடும் நோக்கத்துடன் எதையாவது பிடிவாதமாகச் செய்து கொண்டிருந்தாலும், அவர், வாக்குச் சீட்டு வழங்கப் பெறுவதற்கோ தேர்தலில் தமது வாக்கைப் பதிவு செய்வதற்கோ உரிமையுள்ளவராகமாட்டார்.

(3) இடது சுட்டு விரல் மீது ஏற்கெனவே அத்தகைய அடையாளம் கொண்டுள்ள ஒருவருக்கு வாக்குச் சீட்டு கொடுக்கக் கூடாது.

(4) இந்த விதிகளில், வாக்காளர் ஒருவருடைய இடது கைச் சுட்டுவிரல் பற்றிய குறிப்பீட்டுக்கு, அந்த வாக்காளருக்கு இடது கைச் சுட்டு விரல் இராமற்போனால், அவருடைய இடது கையிலுள்ள வேறு எந்த விரல் அல்லது விரல்கள் பற்றிய குறிப்பீடு என்றும், அவருடைய இடது கையிலே எல்லா

விரல்களுமே இராமற்போனால், அவருடைய வலது கையிலுள்ள சுட்டு விரல் அல்லது வேறு எந்த விரல் அல்லது விரல்கள் பற்றிய குறிப்பீடு என்றும், அவருடைய இரண்டு கைகளிலுமே எல்லா விரல்களும் இராமற்போனால் அவருக்குள்ள இடது கையின் அல்லது வலது கையின் முனை பற்றிய குறிப்பீடு என்றும் பொருள் செய்ய வேண்டும்.

22. வாக்குச் சீட்டுகள்.—(1) வாக்குச் சீட்டு ஒவ்வொன்றும் 4-ஆம் படிவப் பிரகாரம் இருக்க வேண்டும். வாக்குச் சீட்டில் சின்னங்களை மட்டும் அச்சிட வேண்டும். (வாக்குச் சீட்டில் அச்சிடப்பட வேண்டிய சின்னங்களின் அளவு, ஒவ்வொரு சின்னத்துக்கும் கொடுக்கப் பெற்றுள்ள இடத்தின் அகலம், வாக்குச் சீட்டுகளில் எந்த இரண்டு சின்னங்களுக்கேனும் கொடுக்கப்பட்டுள்ள இடத்துக் கிடையிலிருக்கிற கருமையாக்கப்பட்ட பகுதியின் அகலம் ஆகியவை உட்பட) வாக்குச் சீட்டின் அளவையும், அதன் தொடர்பான பிறவற்றையும் தேர்தல் அதிகாரி அவ்வப்போது தீர்மானிக்க வேண்டும்.

(2) வாக்குச் சீட்டுகளுக்குத் தொடர் எண் போட வேண்டும்; அவை களின் பின்புறத்தில், தேர்தல் அதிகாரி கட்டளையிடக்கூடிய தனி மாதிரியான அடையாளம் அல்லது அடையாளங்களை அவர் கட்டளையிடக்கூடிய விதமாகப் பொறிக்க வேண்டும்.

23. வாக்குச் சீட்டுகளைக் கொடுப்பதும் வாக்களிக்கும் நடைமுறையும்.—(1) வாக்காளர் ஒருவரிடம் வாக்குச் சீட்டு கொடுப்பதற்கு முன், வாக்கெடுப்பு அலுவலர், அந்த வாக்காளர் வாக்குச் சீட்டினைப் பெற்றுக்கொண்டார் என்பதைக் காட்டுவதற்காக, இதற்கென வைக்கப்பட்டுள்ள (இதில் பின்னால் 'வாக்காளர் பட்டியின் அடையாளமிட்டபடி' என்று சொல்லப்படும் வாக்காளர் பட்டியின் படியில் அந்த வாக்காளருக்குச் சம்பந்தப்பட்ட பதிவுக்கு எதிரே வாக்குச் சீட்டின் தொடரிலக்கத்தை எழுதிக் கொள்ள வேண்டும்.

(2) வாக்காளர் ஒவ்வொருவரிடமும் ஒரேவொரு வாக்குச் சீட்டுதான் கொடுக்க வேண்டும். அந்த வாக்காளர் வாக்குச் சீட்டினைப் பெற்றுக் கொண்ட வுடன், வாக்களிப்பு அறைக்குள் சென்று, அங்கே, இதன்பொருட்டுக் கொடுக்கப் படும் கருவியைக் கொண்டு, அவர் வாக்களிக்கக் கருதுகிற வேட்பாளரின் சின்னத்துக்கெதிரே வாக்குச் சீட்டில் ஓர் அடையாளம் போட வேண்டும். வாக்குச் சீட்டில் அந்த வேட்பாளரின் சின்னம் அச்சிடப்பட்டுள்ள கட்டத்தில் எங்கேனும் அடையாளம் போடலாம். ஒருவருக்குமேற்பட்ட வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியிருந்தால், தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய

வேட்பாளர்கள் எத்தனை பேர் இருக்கிறார்களோ அத்தனை அடையாளங்களை வாக்காளர் வாக்குச் சீட்டில் போடலாம்; ஆனால் ஒரு வேட்பாளரின் சின்னத் துக்கெதிரே ஒன்றுக்கு மேற்பட்ட அடையாளங்களைப் போடக் கூடாது. பிறகு அவர், தமது வாக்கு மறைந்திருக்கும்படியாக வாக்குச் சீட்டினை மடித்து அதன் பின்புறம் பொறிக்கப்பட்டுள்ள தனி மாதிரியான அடையாளத்தை வாக்கெடுப்பு அலுவலருக்குக் காட்டிய பிறகு, இதற்கென வைக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டுப் பெட்டியில் அதைப் போட்டுவிட வேண்டும்.

(3) வாக்காளர் ஒவ்வொருவரும் அதிக காலதாமதமின்றி வாக்களிக்க வேண்டும்; தாம் வாக்களித்தானவுடனே வாக்குச் சாவடியை விட்டுப் போய்விட வேண்டும். வாக்குச் சீட்டு தவிர வேறு எதையும் அவர் வாக்குச் சீட்டுப் பெட்டிக்குள் போடக்கூடாது. வாக்குகளை எண்ணும்போது, வாக்குச் சீட்டுகள் தவிர வேறு ஏதேனும் பெட்டியில் காணப்பட்டால் அது ஊராட்சியைச் சேர்ந்து விடும்.

24. தேர்தல் அலுவலில் இருக்கிற வாக்காளர்கள் வாக்களிக்கும் நடை முறை.—(1) ஒரு தொகுதியில் நடக்கும் தேர்தலிலே வாக்களிக்க உரிமையுள்ள வாக்காளர் ஒருவர், தாம் சாதாரணமாக வாக்களிக்க உரிமை பெற்றிராத வாக்குச் சாவடியில் தேர்தல் அலுவலுக்காக அமர்த்தப்பட்டு, அத் தொகுதியில் நடக்கும் தேர்தலில் வாக்களிக்க அவர் விரும்பினால், 5-ஆம் படிவப் பிரகாரம் உள்ள விண்ணப்பம் ஒன்றை வாக்கெடுப்பின் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன் அல்லது அதைவிடக் குறைவாகத் தேர்தல் அலுவலர் அனுமதிக்கக் கூடிய காலத்துக்கு முன் அவரிடம் வந்து சேரும்படியாக அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர் அவ்வாறு வாக்களிக்க உரிமை உள்ளவரென்று தேர்தல் அலுவலர் ஐயமறத் தெரிந்துகொண்டால், தேர்தல் அலுவலர், 6-ஆம் படிவப்படியுள்ள ஒரு சான்றினையும், அவ்விண்ணப்பதாரர் தாம் வாக்களிக்க உரிமை உள்ளவராயிருக்கிற தொகுதிக்குரிய வாக்குச் சீட்டினையும் அவ்விண்ணப் பதாரர் தேர்தல் அலுவலுக்காக அமர்த்தப்பட்டுள்ள வாக்குச் சாவடியின் வாக்கெடுப்பு அலுவலருக்கு அனுப்ப வேண்டும். தேர்தல் அலுவலர் அந்த வாக்குச் சீட்டின் பின்புறத்தில், "தேர்தல் அலுவலில் உள்ள வாக்காளர்" என்னும் சொற்களை முத்திரையிட்டுப் பொறிக்க வேண்டும். அவர், அவ்வாக்குச் சீட்டினை அனுப்புவதற்கு முன், அவ்வாக்குச் சீட்டின் தொடரிலக்கத்தை, அவ் வாக்காளர் தாம் வாக்களிக்க உரிமையுள்ளவராயிருக்கிற வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர் பட்டியின் அடையாளமிட்ட படியில், அவ் வாக்காளருக்குரிய பதிவுக் கெதிரே எழுத வேண்டும்.

(2) தேர்தல் அலுவலில் உள்ள எந்த வாக்காளருக்காக, அவ்வாக்காளர் தேர்தல் அலுவலில் அமர்த்தப்பட்டிருக்கிற வாக்குச் சாவடியின் வாக்கெடுப்பு அலுவலருக்கு வாக்குச் சீட்டு ஒன்று அனுப்பப்பட்டிருக்கிறதோ அந்த வாக்காளர் வாக்குச் சீட்டு வேண்டுமென்று கேட்டால், வாக்கெடுப்பு அலுவலர், அவர் தான் அந்த வாக்காளர் என்பதை ஐயமறத் தெரிந்துகொண்டு 23-ஆவது விதியில் கண்ட நடைமுறையைப் பின்பற்றிய பிறகு, சம்பந்தப்பட்ட வாக்குச் சீட்டினை அந்த வாக்காளருக்குக் கொடுக்க வேண்டும்.

(3) தேர்தல் அலுவலில் உள்ள அவ்வாக்காளர், வாக்குச் சீட்டினை பெற்றுக்கொண்டவுடன், வாக்களிக்கும் அறைக்குள் சென்று, அங்கே, இதற்கெனக் கொடுக்கப்படும் கருவியைக் கொண்டு அவர் வாக்களிக்கக் கருதுகிற வேட்பாளரின் சின்னத்துக்கெதிரே வாக்குச் சீட்டில் ஓர் அடையாளம் போட வேண்டும். அவ் வேட்பாளரின் சின்னம் வாக்குச் சீட்டில் அச்சிடப்பட்டிருக்கிற கட்டத்துக்குள் எங்கேனும் அந்த அடையாளத்தைப் போடலாம். பிறகு அவர், இதற்கென வைக்கப்பட்டுள்ள உறையில் அந்த வாக்குச் சீட்டினை வைத்து, உறையை ஒட்டி, அதை வாக்கெடுப்பு அலுவலரிடம் கொடுத்துவிட வேண்டும். வாக்கெடுப்பு அலுவலர், அந்த உறையையும் அந்த வாக்காளருக்குக் கொடுக்கப்பட்ட சான்றினையும் இதற்கென வைக்கப்பட்டுள்ள மற்றொரு பெரிய உறையில் வைக்க வேண்டும். வாக்கெடுப்பு முடிந்த பிறகு அவர், அத்தகைய உறைகளை ஒவ்வொரு தொகுதிக்காகவும் தனிச் சிப்பத்தில் வைத்து, பின்னர், 31 ஆவது விதியில் குறிப்பிட்டிருக்கிற விதமாக ஒவ்வொரு சிப்பத்துக்கும் முத்திரையிட்டு, அவ்விதியில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற சிப்பங்களுடன் அதை அனுப்ப வேண்டும்.

25. குருடாகவும் வலுவற்றவர்களாகவும் உள்ள வாக்காளர்களின் வாக்குகளைப் பதிவு செய்வது.—(1) முதுமை அல்லது குருடாயிருப்பது அல்லது மற்றப்படி உடல் நலிவுற்றிருப்பது காரணமாக வாக்காளர் ஒருவர் வாக்குச் சீட்டில் அடையாளம் போட முடியாதவராயிருந்தால், வாக்கெடுப்பு அலுவலர், அவ்வாக்காளரின் விருப்பத்துக்கிணங்க வாக்குச் சீட்டில் வாக்குப் பதிவு செய்து, அந்த வாக்கு மறைந்திருக்கும்படியாக அதை மடித்து, வாக்குச்சீட்டுப் பெட்டியில் அதைப் போட்டுவிட வேண்டும்.

(2) இவ்விதியின்படிச் செயலாற்றும்போது, வாக்கெடுப்பு அலுவலர், கூடுமானவரையில் இரகசியத்தைக் காப்பாற்ற வேண்டும்; அத்தகைய நிகழ்ச்சி ஒவ்வொன்றையும் பற்றிச் சுருக்கமாக எழுதி வைக்க வேண்டும். ஆனால், இன்ன விதமாக வாக்களிக்கப்பட்டதென்பதை அதில் குறிப்பிடக் கூடாது.

26. இன்னார் தான் என்பதை மறுப்பது.—(1) ஒருவர் வாக்குச்சீட்டு ஒன்று வேண்டுமெனக் கேட்டதன் பேரில் ஆள்மாறாட்டக் குற்றம் செய்திருக்கிறாரென்று, போட்டியிடும் வேட்பாளராவது வாக்கெடுப்பு முகவராவது அறிவித்து, அதை மெய்ப்பிக்க ஏற்றுக் கொண்டால், வாக்கெடுப்பு அலுவலர், ஆள் மாறாட்டக் குற்றம் சாட்டுகிற அந்த வேட்பாளர் அல்லது முகவர் பணமாக ஐந்து ரூபாய் கட்டும்படி அவரைக் கேட்க வேண்டும். ஆள் மாறாட்டக் குற்றச்சாட்டு ஒவ்வொன்றிலும் நடவடிக்கை நடத்துவதற்காகத் தனித் தனித் தொகை செலுத்த வேண்டும். அவ்வாறு தொகை செலுத்தப்படாவிட்டால், வாக்கெடுப்பு அலுவலர் அந்த மறுப்பைப் பொருட்படுத்தக் கூடாது.

(2). (1) உள்விதியின்படிச் செலுத்தப்பட வேண்டியிருக்கிற தொகை செலுத்தப்பட்டவுடனே, வாக்குச் சீட்டு வேண்டுமெனக் கேட்பவர் தமது பெயரையும் முகவரியையும் (7-ஆம் படிவப் பிரகாரம் இருக்க வேண்டிய மறுப்பு வாக்குகளின் பட்டியல்) எழுதும்படி வாக்கெடுப்பு அலுவலர் அவரைக் கேட்க வேண்டும்; மேலும், அதில் அவருடைய கையெழுத்து வாங்கிக் கொள்ள வேண்டும்; அல்லது அவரால் எழுத முடியாவிட்டால், அதில் தம் பெருவிரல் அடையாளத்தைப் பதியும்படிக் கேட்க வேண்டும்; மேலும், அவர் இன்னார் என்பதற்குச் சான்று காட்டும்படி அவரைக் கேட்கலாம்.

(3) அதற்குப் பிறகு, வாக்கெடுப்பு அலுவலர், அந்த மறுப்பைப் பற்றிச் சுருக்க வகையாக விசாரணை நடத்த வேண்டும்; அதற்காக—

(அ) அதற்குப் பிறகு, மறுப்புக் கூறுவதை மெய்ப்பிக்கச் சான்று காட்டும்படி மறுப்பவரையும், தாம் இன்னார் தான் என்று மெய்ப்பிக்கச் சான்று காட்டும்படி மறுக்கப் பெற்றவரையும் கேட்கலாம்;

(ஆ) மறுக்கப் பெற்றவர் இன்னார் தான் என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான கேள்விகளை அவரிடம் கேட்கலாம்; ஆணையுறுதி செய்து அவற்றிற்குப் பதில் சொல்லும்படி அவரைக் கேட்கலாம்;

(இ) மறுக்கப் பெற்றவரும், சாட்சி கூறவரும் வேறொருவரும் ஆணை உறுதி எடுத்துக் கொள்ளுமாறு செய்யலாம்;

(4) வாக்கெடுப்பு அலுவலர் விசாரணை நடத்திய பிறகு மறுப்பு உறுதிப்படுத்தப்படவில்லை எனக் கருதினால், மறுக்கப் பெற்றவர் வாக்கெடுக்க அனுமதிக்க வேண்டும்; மறுப்பு உறுதிப்படுத்தப்பட்டதென அவர் கருதினால், மறுக்கப் பெற்றவரை வாக்களிப்பதனின்றும் தடுக்க வேண்டும்.

(5) மறுப்பு பொருளற்றதென அல்லது நல்ல எண்ணத்துடன் செய்யப் படவில்லையென வாக்கெடுப்பு அலுவலர் கருதினால், (1) உள்விதியின்படிச் செலுத்தப்பட்ட தொகை ஊராட்சியைச் சேர்ந்துவிடுமென்று அவர் கட்டளை யிடவேண்டும்; மற்ற எவற்றிலேனும், விசாரணையின் முடிவில் மறுப்புத் தெரிவித்தவரிடம் அவர் அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

27. **ஆய்வுக்குரிய (டெண்டர் செய்யப்பட்ட) வாக்குகள்.**—(1) ஒருவர், வாக்காளர் பட்டியில் பெயர் கண்டுள்ள குறிப்பிட்ட வாக்காளர் தாமே என்று சொல்லிக் கொண்டு, அத்தகைய வாக்காளர் என்ற முறைமையில் மற்றொருவர் வாக்களித்த பிறகு வாக்குச் சீட்டு வேண்டுமெனக் கேட்டால், அப்படிக் கேட்பவர், வாக்கெடுப்பு அலுவலர் கேட்கக் கூடிய கேள்விகளுக்கு முறைப்படிப் பதில் சொன்னபிறகு, வேறு எந்த வாக்காளரையும் போலவே வாக்குச் சீட்டு ஒன்று பெறுவதற்கு உரிமையுள்ளவராவார்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொருவரும், வாக்குச் சீட்டுக் கொடுக்கப் பெறுவதற்கு முன், 8 ஆம் படிவப் பிரகாரம் உள்ள பட்டியில் தமக்குச் சம்பந்தப்பட்ட பதிவுக்கெதிரே தமது பெயரைக் கையெழுத்திட வேண்டும்.

(3) ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டு ஒன்று, வாக்கெடுப்பில் பயன்படுத்தப் பட்ட மற்ற வாக்குச் சீட்டுகள் போலவே இருக்கும்; ஆனால்

(அ) அது அந்த வாக்குச் சாவடியில் பயன்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளின் கட்டில், தொடரெண் வரிசையில் கடைசியாக இருக்கும்;

(ஆ) அதன் பின்புறத்தில் "ஆய்வுக்குரிய வாக்குச்சீட்டு" என்று வாக்கெடுப்பு அலுவலர் தமது கையினாலேயே எழுதி அதற்குக் கையெழுத்திட வேண்டும்.

(4) வாக்காளர், வாக்களிப்பு அறையில் ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டில் அடையாமிட்டு அதை மடித்த பிறகு, வாக்குச் சீட்டுப் பெட்டியில் அதைப் போடுவதற்குப் பதிலாக, வாக்கெடுப்பு அலுவலரிடம் அதைக் கொடுத்துவிட வேண்டும்; அவர் அதை இதற்கெனத் தனியாக வைக்கப்பட்டுள்ள உறையில் வைக்க வேண்டும்.

விளக்கம்.—இவ்விதியின் கீழ்வருவனவற்றில் எவற்றுக்கு 26-ஆவது விதியும் பொருந்துமோ அவற்றில், இவ்விதியிலும் கண்ட ஏற்பாடுகளைப் பின்பற்ற வேண்டும்.

28. கெடுதியாக்கப்பட்டுத் திருப்பிக் கொடுத்து விடப்பட்ட வாக்குச்சீட்டுகள்.—(1) வாக்காளர் ஒருவர் தமது வாக்குச் சீட்டைக் கவனக் குறைவாகக் கையாண்டிருந்து, ஆனால் வாக்குச் சீட்டாக அதை இசைவாக உபயோகிக்க முடியாவிட்டால், அதை வாக்கெடுப்பு அலுவலரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, தமது கவனக் குறைவைப் பற்றி அவருக்கு ஐயமறத் தெரிவிப்பதன்பேரில், அவருக்கு மற்றொரு வாக்குச் சீட்டு கொடுக்க வேண்டும்; அவ்வாறு திருப்பிக் கொடுத்து விடப்பட்ட வாக்குச் சீட்டின் மீது, வாக்கெடுப்பு அலுவலர் "கெடுதியாக்கப்பட்டது; ரத்து செய்யப்பட்டது" என்று எழுத வேண்டும்.

(2) வாக்காளர் ஒருவர் வாக்குச் சீட்டு ஒன்றைப் பெற்ற பிறகு அதைப் பயன்படுத்துவதில்லையெனத் தீர்மானித்தால், அதை அவர் வாக்கெடுப்பு அலுவலரிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்; அவ்வாறு திருப்பிக் கொடுத்துவிடப்பட்ட வாக்குச் சீட்டின் மீது, வாக்கெடுப்பு அலுவலர் "திருப்பிக் கொடுத்து விடப்பட்டது; ரத்து செய்யப்பட்டது" என்று எழுத வேண்டும்.

(3). (1) உள்விதியின் படியாவது (2) உள்விதியின்படியாவது ரத்து செய்யப்பட்ட வாக்குச் சீட்டுகள் எல்லாவற்றையும் தனிச் சிப்பம் ஒன்றில் வைத்திருக்க வேண்டும்.

29. நெருக்கடிக் காலங்களில் வாக்கெடுப்பைத் தள்ளி வைப்பது.—(1) ஒரு தேர்தலிலே, ஒரு வாக்குச் சாவடியில் செயல் முறைகளுக்கு, கலகம் அல்லது வெளிப்படையான வன்முறைக் காரணத்தினால் இடையூறு அல்லது தடங்கல் நேரிட்டாலும், ஒரு தேர்தலிலே ஓர் இயற்கையான விபத்து அல்லது வேறு போதுமான காரணத்தினால் வாக்குச் சாவடி ஒன்றில் வாக்கெடுப்பு நடத்த முடியாவிட்டாலும், அந்த வாக்குச் சாவடியின் வாக்கெடுப்பு அலுவலர், தேர்தல் அதிகாரியின் ஆணைகளை எதிர்பார்த்து வாக்கெடுப்பை நிறுத்தி வைக்க வேண்டும். வாக்கெடுப்பு அவ்வாறு நிறுத்தப்பட்டுள்ள செய்தியை, வாக்கெடுப்பு அலுவலர் அந்த வாக்குச் சாவடியில் வந்திருப்பவர்களுக்கு உடனே தெரிவிக்க வேண்டும்.

(2) வாக்கெடுப்பு அலுவலர் ஒருவர் (1) உள்விதியின்படி வாக்கெடுப்பை நிறுத்திவைத்தல், 31 ஆவது விதியில் கண்ட நடைமுறையை அவர் பின்பற்றி, அச்சூழ்நிலை பற்றிய முழு அறிக்கை ஒன்றைத் தேர்தல் அலுவலருக்கு உடனே அனுப்ப வேண்டும்; அவர் அச்செய்தியைத் தேர்தல் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். அதன் பேரில் தேர்தல் அலுவலர், அந்த வாக்கெடுப்பு முடிக்கப்படும் வரையில், அத்தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணக் கூடாது.

(3) அதன் பேரில், தேர்தல் அதிகாரியானவர்—

(அ) அந்த வாக்குச் சாவடியில் வாக்கெடுப்பு முந்திய தடவை எத்தனை மணி நேரம் நடத்தப்படவில்லையோ அத்தனை மணி நேரம் மீண்டும் தொடங்கி நடத்தப்பட வேண்டுமென, அல்லது

(ஆ) முந்திய தடவை அந்த வாக்குச் சாவடியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் செயல் முறைகள் புறக்கணிக்கப்பட்டு, முந்திய தடவையில் முழுவதாக எத்தனை மணி நேரங்கள் அது நடந்திருக்கவேண்டுமோ அத்தனை மணி நேரங்கள் அந்த வாக்குச் சாவடியில், புதிதாக வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென

ஆணையிட வேண்டும்.

இவ்வுள்விதியின்படித் தேர்தல் அதிகாரியால் பிறப்பிக்கப்படும் ஆணை முடிவானதாகும்.

(4). (3) உள்விதியின்படிப் பிறப்பிக்கப்படும் ஓர் ஆணை—

(அ) (i) சூழ்நிலைக்கேற்ப மீண்டும் தொடங்கப்படும் வாக்கெடுப்பு அல்லது புதிய வாக்கெடுப்பு இன்ன தேதியன்று இன்ன மணி நேரங்களுக் கிடையிலும் நடக்குமென்பதையும்,

(ii) தேர்தல் அலுவலர் 33-ஆவது விதியின்படி இன்ன தேதி யன்றும் இன்ன இடத்திலும் இன்ன மணி நேரத்திலும் வாக்குகளை எண்ணத் தொடங்குவார் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

(ஆ) 7-ஆவது விதியைச் சேர்ந்த (2) உள்விதியில் கண்டுள்ள விதமாகச் சூழ்நிலைக்கேற்ப, மீண்டும் தொடங்கப்படவிருக்கும் வாக்கெடுப்புக்கு அல்லது புதிய வாக்கெடுப்புக்கு நிச்சயிக்கப்பட்ட தேதிக்கு ஏழு நாட்களுக்குக் குறையாமல் முன்னதாக வெளியிடப்பட வேண்டும்.

(5) (அ) வாக்கெடுப்பினை மீண்டும் தொடங்குவதற்காக, (3) உள் விதியைச் சேர்ந்த (அ) பகுதியின்படி ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டால், தேர்தல் அலுவலர், 16-ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியின்படிப் புதிதாகச் செயல்படத் தொடங்கி, இவ்விதியைச் சேர்ந்த (2) உள்விதியின்படித் தாம் பெற்றுக் கொண்ட சிப்பங்களையெல்லாம், அவ்வுள் விதியின்படி நியமிக்கப் பட்டுள்ள வாக்கெடுப்பு அலுவலருக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்.

(ஆ) வாக்கெடுப்பு அலுவலர், மீண்டும் தொடங்கப்பட்ட வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்படுவதற்கு முன், வாக்குச் சாவடியில் வந்திருக்கக் கூடியவர்கள்

முன்னிலையில், சிப்பங்களைத் திறந்து, (3) உள்விதியைச் சேர்ந்த (அ) பகுதியின்படி தேர்தல் அதிகாரியால் பிறப்பிக்கப்பட்ட ஆணையில், அதற்கென நிச்சயிக்கப்பட்ட மணி நேரத்தில் அந்த வாக்கெடுப்பைச் சரியாகத் தொடங்கிவிட வேண்டும்.

(இ) மீண்டும் தொடங்கப்பட்ட வாக்கெடுப்பில், வாக்கெடுப்பு அலுவலர், முந்திய தடவையில் வாக்களிக்காத வாக்காளர்கள் மட்டுமே வாக்களிப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

(6) புதிதாக வாக்கெடுப்பு நடத்துவதற்காக (3) உள்விதியைச் சேர்ந்த (ஆ) பகுதியின்படி ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டால், தேர்தல் அலுவலர் 16-ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியின்படி புதிதாகச் செயற்படத் தொடங்க வேண்டும்; அந்த வாக்கெடுப்பு அந்த வாக்குச் சாவடியில் முதல் தடவையாக நடத்தப்படுவதாயிருந்தால் எப்படியோ அப்படியே எல்லாவற்றிலும் இவ் விதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க சம்பந்தப்பட்ட வாக்குச் சாவடியில் புதிதாக வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

ஆனால், இந்த உள்விதியின் கீழ் வருபவைகளில், புதிதாக நியமனம் செய்ய வேண்டியதில்லை.

(7) இந்த விதியில் என்ன சொல்லியிருந்தபோதிலும் அதற்குப் பாதகமில்லாமலே, போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், (3) உள்விதியின்படி தேர்தல் அதிகாரி, ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு முன் எப்போதேனும் அல்லது ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதற்குப் பிறகும் ஆனால் ஏற்றவாறு மீண்டும் தொடங்கப்பட்ட வாக்கெடுப்பு அல்லது புதிய வாக்கெடுப்பு ஆரம்பமாவதற்கு முன்பும் எப்போதேனும் இறந்துபோனால், தேர்தல் அலுவலர், போட்டியிடும் வேட்பாளர் இறந்து போனதைப் பற்றி ஐயமறத்தெரிந்து கொள்வதன்பேரில், தேர்தல் சம்பந்தமாக மேலும் நடக்க வேண்டியுள்ள செயல்முறைகளையெல்லாம் நிறுத்தி விட்டு, தேர்தல் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்; அதன் பேரில் அவர், அது சம்பந்தப்பட்ட தொகுதிக்குப் புதிய தேர்தலாயிருந்தால் எப்படியோ அப்படியே, எல்லாவற்றிலும் புதிதாகத் தேர்தல் செயல்முறைகளைத் தொடங்க வேண்டும்;

ஆனால், அவ்வாறு தொடங்கப்பட்ட தேர்தல் செயல்முறைகளுக்காக, எஞ்சியுள்ள போட்டியிடும் வேட்பாளர்களைப் பற்றியவைகளில் புதிதாக நியமனங்கள் செய்ய வேண்டியதில்லை.

30. வாக்குச் சீட்டுப் பெட்டிகளுக்கு அழிவு முதலியவை நேரிட்டால் புதிய வாக்கெடுப்பு.—(1) ஒரு தேர்தலிலே—

(அ) வாக்குச் சாவடி ஒன்றில் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுப் பெட்டியொன்று வாக்கெடுப்பு அலுவலரின் அல்லது தேர்தல் அலுவலரின் பொறுப்பிலிருந்து சட்டத்துக்கு மாறாக எடுத்துக் கொள்ளப்பட்டால், அல்லது தற்செயலாக அல்லது வேண்டுமென்றே அழிக்கப்படால் அல்லது போக்கடிக் கப்பட்டால் அல்லது அந்த வாக்குச் சாவடியில் நடந்த வாக்கெடுப்பின் மூடிவைக் கண்டறிய முடியாத அளவுக்குச் சேதப்படுத்தப்பட்டால் அல்லது மோசடியாக மாற்றப்பட்டால், அல்லது

(ஆ) வாக்கெடுப்பினை மாசுபடுத்தக் கூடிய நடைமுறைப் பிசகு அல்லது முறைகேடு அந்த வாக்குச் சாவடியில் நடந்திருந்தால்,

தேர்தல் அலுவலர் அச்செய்தியை தேர்தல் அதிகாரிக்கு உடனே தெரிவிக்க வேண்டும்.

(2) அதன் பேரில், தேர்தல் அதிகாரியானவர், முக்கியமான சூழ்நிலைகளை யெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்ட பிறகு,—

(அ) அந்த வாக்குச் சாவடியில் நடதத வாக்கெடுப்புச் செல்லாது என்று அறிவித்து, அந்த வாக்குச் சாவடியில் புதியதாக வாக்கெடுப்பதற்காக ஒரு நாள் நியமித்து மணி நேரங்களை நிச்சயித்து, அவ்வாறு நியமிக்கப்பட்ட நாளும் அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட மணி நேரங்களும் 7-ஆவது விதியில் கண்டுள்ள விதமாக வெளியிடப்பட வேண்டுமெனக் கட்டளையிட வேண்டும்; அல்லது

(ஆ) அந்த வாக்குச் சாவடியில் புதிதாக நடத்தப்படும் வாக்கெடுப்பின் முடிவு தேர்தல் முடிவை எவ்விதத்திலும் பாதிக்காதென்று, அல்லது அந்த நடைமுறைப் பிசகு அல்லது முறைகேடு பொருட்படுத்தக் கூடியதல்லவென்று ஐயமறத் தெரிந்து கொண்டால், அத்தேர்தலை மேற்கொண்டு நடத்தி முடிப் பதற்குத் தாம் தகுதியெனக் கருதக் கூடிய கட்டளைகளைத் தேர்தல் அலுவலருக்குப் பிறப்பிக்க வேண்டும்.

(3) இவ்விதிகளின் ஏற்பாடுகளாவது அவைகளின்படிப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளாவது, முதல் வாக்கெடுப்புக்குப் பொருந்துவதைப் போலவே, அப்படிப் பட்ட புதிய வாக்கெடுப்பு ஒவ்வொன்றுக்கும் பொருந்தும்.

31. வாக்கெடுப்பை முடித்து விடுவது.—(1) (அ) 7-ஆவது விதியின்படி யாவது, 29-ஆவது விதியைச் சேர்ந்த (4) உள்விதியின்படியாவது, 30-ஆவது விதியைச் சேர்ந்த (2) உள்விதியில் கண்ட (அ) பகுதியின்படியாவது ஏற்றவாறு இதற்கென நிச்சயிக்கப்பட்ட மணி நேரத்தில், வாக்கெடுப்பு அலுவலர் வாக்குச் சாவடியை மூடிவிட வேண்டும்; அந்த மணி நேரத்துக்குப் பிறகு வாக்காளர் எவரும் அங்கே வருவதைத் தடுப்பதற்காக அவ்வாறு மூடிவிட வேண்டும்;

ஆனால், வாக்குச் சாவடி மூடிவிடப்படுவதற்கு முன் அங்கே வந்திருக்கிற வாக்காளர்கள் எல்லாரும் தங்கள் வாக்குகளை அளிக்க அனுமதிக்க வேண்டும்.

(ஆ) வாக்குச் சாவடி மூடிவிடப்படுவதற்கு முன் அங்கே வாக்காளர் ஒருவர் வந்திருந்தாரா என்பது பற்றி ஏதேனும் கேள்வி எழுமானால், அதை வாக்கெடுப்பு அலுவலர் தீர்மானிக்க வேண்டும்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

(2) (அ) வாக்குச் சாவடி ஒவ்வொன்றின் வாக்கெடுப்பு அலுவலர், வாக்கெடுப்பு முடிந்த பிறகு கூடிய விரைவில், வாக்குச் சீட்டுப் பெட்டியின் சிறு புழையை மூடிவிட வேண்டும்; சிறு புழையை மூடுவதற்கான இயந்திரக் கருவி எதுவும் அப்பெட்டியில் இராவிட்டால், அந்தச் சிறு புழைக்கு முத்திரை வைக்க வேண்டும்; அங்கே வந்திருக்கிற ஒரு வேட்பாளர் அல்லது வாக்கெடுப்பு முகவர் தமது முத்திரையைப் பொறிப்பதற்கும் அனுமதிக்க வேண்டும்.

(ஆ) முதல் வாக்குச் சீட்டுப் பெட்டி நிரம்பிவிட்டது காரணமாக, இரண்டாவது வாக்குச் சீட்டுப் பெட்டி ஒன்றைப் பயன்படுத்துவது அவசியமாகி விட்டால், (அ) பகுதியில் சொல்லியுள்ளவாறு முதலாவது வாக்குச் சீட்டுப் பெட்டியை மூடி முத்திரையிட்ட பிறகு இரண்டாவது வாக்குச் சீட்டுப் பெட்டியைப் பயன்படுத்த வேண்டும்.

(3) பிறகு வாக்கெடுப்பு அலுவலர், அடியிற்கண்டவற்றைத் தனித் தனிச் சிப்பங்களாகச் செய்து, அவற்றிற்குத் தமது சொந்த முத்திரையைக் கொண்டும், தங்கள் முத்திரைகளைப் பொறிக்க விரும்பக் கூடிய வேட்பாளர்களின் அல்லது முகவர்களின் முத்திரைகளைக் கொண்டும் முத்திரையிட வேண்டும்; அவையாவன :—

(i) வாக்காளர் பட்டியின் அடையாளமிட்டபடி;

(ii) பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுகள்;

(iii) ரத்து செய்யப்பட்ட வாக்குச் சீட்டுகள்;

(iv) ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டுக்களையும் 8-ஆம் படிவப் பிரகாரம் உள்ள பட்டியையும் கொண்ட உறை;

(v) மறுப்பு வாக்குகளின் பட்டி;

(vi) 24-ஆவது விதியைச் சேர்ந்த (3) உள்விதியில் குறிப்பிடப் பட்டுள்ள உறைகள்;

(vii) முத்திரையிடப்பட்ட சிப்பத்தில் வைக்க வேண்டுமென அரசு கட்டளையிடுகிற வேறு ஆவணங்கள்.

(4) சிப்பம் ஒவ்வொன்றுக்கும் எண் இட வேண்டும்; அதில் ஒரு குறிப்பு இருக்க வேண்டும்; அச்சிப்பத்தில் இருப்பவைகள், வாக்குச் சாவடியின் எண்ணும் பெயரும், தொகுதியின் எண் ஆகியவை அக்குறிப்பில் கண்டிருக்க வேண்டும். வாக்குச் சாவடி ஒன்றில் வாக்கு எதுவுமே அளிக்கப்படாவிட்டால், வாக்கெடுப்பு அலுவலர் 'ஒன்றுமில்லை' என்று கண்டுள்ள அறிக்கையை அனுப்ப வேண்டும்; அதனுடன் (5) உள்விதியில் குறிப்பிடப் பட்டிருக்கிற 9-ஆம் படிவப் பிரகாரம் உள்ள விவரப் பட்டியையும் அனுப்ப வேண்டும்.

(5) அந்தச் சிப்பங்களுடன் கூட, 9-ஆம் படிவத்தின் 1-ஆம் பாகத்தின் படி உள்ள விவரப் பட்டி ஒன்றை அனுப்ப வேண்டும்; வாக்கெடுப்பு அலுவலர் இதைத் தயார் செய்ய வேண்டும்; அவரிடம் ஒப்படைக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கையை அதில் காட்டி, வந்து சேர்ந்த வாக்குச் சீட்டுகள், பயன்படுத்தப்படாதவை, வாக்காளர்களுக்குக் கொடுக்கப்பட்டவை, ரத்து செய்யப்பட்டவை, ஆய்வு வாக்குச் சீட்டுகள் ஆகிய இந்த தலைப்புகளின் கீழ் அவற்றிற்குக் கணக்குக் காட்டப்பட்டிருக்க வேண்டும்; அந்த விவரப் பட்டிகளைத் தனி உறை ஒன்றில் வைத்து மூட வேண்டும்; அந்த உறையின் மேல் "வாக்குச் சீட்டுக் கணக்கு" என்று எழுத வேண்டும்.

32. வாக்குச் சீட்டுப் பெட்டிகள் முதலியவற்றைத் தேர்தல் அலுவலருக்கு அனுப்புவது.—பின்னர், வாக்கெடுப்பு அலுவலர் அடியிற்கண்டவற்றைத் தேர்தல் அலுவலர் கட்டளையிடக் கூடிய இடத்தில், தேர்தல் அலுவலரிடம் ஒப்புவிக்க வேண்டும்; அல்லது ஒப்புவிக்கும்படிச் செய்ய வேண்டும்; அவையாவன—

(அ) வாக்குச் சீட்டுப் பெட்டிகள்;

(ஆ) வாக்குச் சீட்டுக் கணக்கு;

(இ) 31-ஆவது விதியில் குறிப்பிட்டிருக்கிற முத்திரையிடப்பட்ட சிப்பங்கள் ;

(ஈ) மற்றெல்லாத் தாள்களும், வாக்கெடுப்பில் பயன்படுத்தப்பட்ட அடையாளமிடுவதற்கான அல்லது முத்திரையிடுவதற்கான பொருள்களும் ;

(உ) 26-ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியின்படி பணம் வாங்கப் பட்டிருந்தால் அந்தப் பணம்.

பாகம் V

வாக்குகளை எண்ணுவது

33. **எண்ணுவதற்காக நிச்சயிக்கப்பட்ட இடத்தில் வரவிடுவது.**—இதற்கென நியமிக்கப்பட்ட நாளிலும் இடத்திலும் மணி நேரத்திலும் வாக்குகளை எண்ண வேண்டும். தேர்தல் அலுவலரால் அல்லது அவர் மேற்பார்வையின் கீழ் வாக்குகள் எண்ணப்பட வேண்டும். போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொரு வரும், ஒவ்வொரு வேட்பாளருக்கும் எண்ணும் முகவர் ஒருவரும்—இவர் அந்த வேட்பாளரால் எழுத்து மூலமாக நியமிக்கப்பட வேண்டும்—எண்ணும்போது வந்திருக்க உரிமை உள்ளவர்களாவார்கள். வேறு எவரும் வந்திருக்க அனுமதிக்கக் கூடாது. ஆனால், வாக்குகளை எண்ணுவதில் தமக்கு உதவி புரியத் தேர்தல் அலுவலர் நியமிக்கக் கூடியவர்களை அனுமதிக்கலாம். இவர்கள் இதில் பின்னால் எண்ணும் மேற்பார்வையாளர்கள் என்றும் எண்ணும் உதவியாளர்கள் என்றும் சொல்லப்படுவார்கள். தேர்தல் தொடர் பாக எக்காரியத்திற்காகவும் ஒரு வேட்பாளரால் அல்லது அவர் சார்பில் அமர்த்தப்பட்டுள்ள எவரையும், வாக்குகளை எண்ணுவதில் உதவி புரிய நியமிக்கக் கூடாது.

34. **வாக்குச் சீட்டுப் பெட்டிகளை ஆய்ந்து பார்ப்பதும் திறப்பதும்.**—(1) ஒவ்வொரு தொகுதிக்காவும் 4 ஆவது விதியின்படி ஏற்படுத்தி வைக்கப் பட்டுள்ள வாக்குச் சாவடிகளில் ஒவ்வொன்றுக்கும் தொடர்புடைய வாக்குச் சீட்டுப் பெட்டிகளை, எண்ணுவதற்குத் தனித் தனியாக எடுத்துக் கொள்ள வேண்டும். தேர்தல் அலுவலர், தமக்குத் சரியெனத் தோற்றினால், ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுப் பெட்டிகளைத் திறப்பித்து, அவற்றில் உள்ளவற்றை ஒரே காலத்தில் எண்ணும் படிச் செய்யலாம்.

(2) எண்ணுவதற்கான மேசையில் வாக்குச் சீட்டுப் பெட்டி ஒன்று திறக்கப்படுவதற்கு முன், அந்த மேசையில் வைக்கப்பட்டிருக்கிற வாக்குச் சீட்டுப் பெட்டியின் மீதுள்ள முத்திரையைப் பார்வையிடவும், அது பழுது படாமலிருக்கிறதென்றும், ஐயமறத் தெரிந்து கொள்ளவும், எண்ணும் முகவர்களை அனுமதிக்க வேண்டும்.

(3) வாக்குச் சீட்டுப் பெட்டிகளில் எதுவும் உண்மையிலேயே மோசடியாக மாற்றப்படவில்லையென்று, தேர்தல் அலுவலர் தாம் ஐயமறத் தெரிந்து கொள்ள வேண்டும்.

(4) வாக்குச் சீட்டுப் பெட்டி ஒன்று உண்மையிலேயே மோசடியாக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதென்று தேர்தல் அலுவலர் ஐயமறத் தெரிந்து கொண்டால், அப்பெட்டியிலுள்ள வாக்குச் சீட்டுகளை அவர் எண்ணக்கூடாது. அந்த வாக்குச் சாவடியைப் பொறுத்தவரை 30 ஆவது விதியில் கண்ட நடை முறையைப் பின்பற்ற வேண்டும்.

(5) (அ) 30 ஆவது விதியின்படிப் புதிதாக வாக்கெடுப்பு நடத்தப் பட்டால், தேர்தல் அலுவலர், அந்த வாக்கெடுப்பு முடிந்த பிறகு, இதன் பொருட்டுத் தேர்தல் அதிகாரியால் நிச்சயிக்கப்பட்டிருக்கிற எந்தத் தேதி, நேரம், இடத்தைப் பற்றிப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் அவர்களுடைய வாக்கெடுப்பு முகவர்களுக்கும் முந்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறதோ அந்தத் தேதியிலும் நேரத்திலும் இடத்திலும் வாக்குகளை மீண்டும் எண்ணத் தொடங்க வேண்டும்.

(ஆ) இப்பாகத்தின் ஏற்பாடுகள் அவ்வாறு மீண்டும் எண்ணுவதற்குக் கூடிய வரையில் பொருந்தும்.

35. வாக்குச் சீட்டுகளை ஆய்ந்து பார்ப்பதும் தள்ளிவிடுவதும்.—(1) தேர்தல் அலுவலர், 36 ஆவது விதியின்படித் தள்ளிவிடத் தக்கவையென்று தாம் கருதுகிற வாக்குச் சீட்டுக்களையெல்லாம், கையினால் தொடாமல் பார்வையிடு வதற்கு வேட்பாளர்களுக்கும் அவர்களுடைய முகவர்களுக்கும் நியாயமான வாய்ப்புகள் கொடுக்க வேண்டும். அவர், தள்ளிவிடப்பட்ட வாக்குச் சீட்டு ஒவ்வொன்றின் மீதும் தமது சொந்தக் கையெழுத்தினாலேயே அல்லது ரப்பர் முத்திரையைக் கொண்டு “த” என்னும் எழுத்தையும் சுருக்கமாகத் தள்ளி விடுவதற்கான காரணத்தையும் எழுத வேண்டும்.

(2) தேர்தல் அலுவலர் கூடிய வரையில் தொடர்ச்சியாக வாக்குகளை எண்ணிக் கொண்டு போக வேண்டும்; எண்ணுவதைச் சிறிது நிறுத்தி வைக்க வேண்டியுள்ள இடைக் காலங்களில், தேர்தலுக்குச் சம்பந்தப்பட்ட வாக்குச்

சீட்டுகளுக்கும் சிப்பங்களுக்கும் மற்ற ஆவணங்களுக்கும் தமது சொந்த முத்திரையையும் முத்திரை வைக்க விரும்பக் கூடிய வேட்பாளர்களின் அல்லது முகவர்களின் முத்திரைகளேயும் வைத்து, அவை பத்திரமாயிருப்பதற்குப் போதுமான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளைச் செய்விக்க வேண்டும்.

(3) அவர் 31 (5) ஆவது விதியின்படி வாக்கெடுப்பு அலுவலர் அனுப்பிய விவரப் பட்டியலை ஏற்றுக் கொள்ளப்பட்ட வாக்குச் சீட்டுகள் தள்ளிவிடப் பட்ட வாக்குச் சீட்டுகள்—தம் வசம் உள்ள பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுகள் ஆகியவற்றின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது மூலமாக அப்பட்டியலைச் சரிபார்க்க வேண்டும்.

36. வாக்குச் சீட்டுகளைத் தள்ளிவிடுவது.—(1) வாக்குச் சீட்டு ஒன்று அடியிற்கண்டபடி இருந்தால் அது தள்ளிவிடப்படும் :—

(அ) அதில் ஓர் அடையாளம் அல்லது எழுத்து இருந்து, அதைக் கொண்டு வாக்காளர் இன்னுரென்று தெரிந்து கொள்ளக் கூடியதாயிருப்பது ; அல்லது

(ஆ) அதில் வாக்கு எதுவும் அளிக்கப்படாதிருப்பது ; அல்லது

(இ) தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையுள்ள வேட்பாளர்களுக்கு வாக்குகள் அளிக்கப் பட்டிருப்பது ; அல்லது

(ஈ) எந்த வேட்பாளருக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறதென்பது ஐயப் படும் விதத்தில், வாக்கைக் குறிக்கும் அடையாளம் அதில் போடப்பட்டிருப்பது; அல்லது

(உ) அது ஒரு போலி வாக்குச் சீட்டாயிருப்பது ; அல்லது

(ஊ) அது தான் உண்மையான வாக்குச் சீட்டு என்பதை உறுதிப் படுத்த முடியாத அளவுக்கு அது சேதப்படுத்தப்பட்டிருப்பது அல்லது உருக் குலைக்கப்பட்டிருப்பது ; அல்லது

(எ) குறிப்பிட்ட அந்த வாக்குச் சாவடியில் பயன்படுத்துவதற்கென அனுமதிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளின் தொடர் எண்களினின்றும் அல்லது ஏற்றவாறு அமைப்பு முறையினின்றும் வேருன ஒரு தொடர் எண்ணை அல்லது அமைப்பு முறையை அது கொண்டிருப்பது ; அல்லது

(ஏ) 22 ஆவது விதியைச் சேர்ந்த (2) உள்விதியில் கண்ட ஏற்பாடு களின்படி அது கொண்டிருக்க வேண்டிய தனி மாதிரியான அடையாளம் அதில் இல்லாதிருப்பது ;

ஆனல், (எ) பகுதியிலாவது (எடு பகுதியிலாவது சொல்லப்பட்டிருப்பதைப் போன்ற ஒரு குறைபாடு வாக்கெடுப்பு அலுவலரின் பிழை அல்லது தவறு காரணமாக ஏற்பட்டிருக்கிறதென்று தேர்தல் அலுவலர் ஐயமறத் தெரிந்து கொண்டால், அக்குறைபாடு காரணமாக மட்டுமே அந்த வாக்குச் சீட்டைத் தள்ளிவிடக் கூடாது;

மேலும், குறிப்பிட்ட இன்ன வேட்பாளர்களுக்குத்தான் வாக்களிக்கக் கருதப்பட்டதென்பது, அந்தச் சீட்டு அடையாளமிடப்பட்டிருக்கிற விதத்திலிருந்து தெளிவாய்த் தெரியவந்தால், வாக்கைக் குறிக்கும் அடையாளம் சரிவரத் தெரியவில்லையென்கிற அல்லது பல தடவை போடப்பட்டிருக்கிறதென்கிற காரணத்தினல் மட்டுமே ஒரு வாக்குச் சீட்டைத் தள்ளிவிடக் கூடாது.

(2) ஒரு வாக்குச் சாவடியில் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுப் பெட்டியிலிருந்து எடுத்து, இந்த விதியின்படி தள்ளி விடப்பட்ட வாக்குச் சீட்டுகளையெல்லாம் தனிக் கட்டாகக் கட்டி வைக்க வேண்டும்.

(3) தேர்தல் மனு ஒன்றின் பேரில் நீதிமன்றத்தால் செய்யும் தீர்ப்புக்கு மாத்திரம் உட்பட்டு, தேர்தல் அலுவலரின் தீர்ப்பு முடிவானதாகும்.

37. **செல்லுபடியான வாக்குகளை எண்ணுவது.**—(1) வாக்குச் சீட்டு ஒவ்வொன்றிலும் பதிவு செய்யப்பட்ட வாக்கு 36 ஆவது விதியின் படித் தள்ளிவிடப்படாவிட்டால், அதை எண்ண வேண்டும்;

ஆனல், ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டுகள் அடங்கிய உறை எதையும் திறக்கக் கூடாது, அச்சீட்டில் பதிவான வாக்கு எதையும் எண்ணவுங் கூடாது.

(2) வாக்குச் சாவடி ஒன்றில் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சீட்டுப் பெட்டிகள் எல்லாவற்றிலும் உள்ள வாக்குச் சீட்டுகள் அனைத்திலும் பதிவு செய்யப்பட்ட வாக்குகளை எண்ணி முடித்தான பிறகு, தேர்தல், அலுவலர் அவ்வாறு எண்ணியதன் முடிவை 9 ஆம் படிவத்தில் II ஆம் பாகத்தில் குறிக்க வேண்டும்; அதில் எண்ணும் மேற்பார்வையாளரும் தேர்தல் அலுவலரும் கையெழுத்திட வேண்டும். பிறகு தேர்தல் அலுவலர், அது பற்றிய பதிவுகளை 10 ஆம் படிவத்தின் பிரகாரம் உள்ள முடிவுத் தாளில் எழுதி, விவரங்களை அறிவிக்க வேண்டும்.

(3) பின்னர் தேர்தல் அலுவலர், 24 ஆம் விதியின் படித் தமக்கு அனுப்பப்பட்ட வாக்குச் சீட்டுகள் பற்றி அடியிற்கண்ட விதமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்; அதாவது :—

(அ) வெளிப்புற உறைகளை ஒன்றன்பின் ஒன்ருகத் திறந்து, அவற்றில் அடங்கியுள்ள 24 ஆவது விதியின் படிக்கானச் சான்றுகளை ஒருங்கு திரட்டி, எண்ணி, ஒரு தனிச் சிப்பத்தில் வைத்து முத்திரையிட வேண்டும்.

(ஆ) பின்னர், அடையாளமிட்ட வாக்குச் சீட்டுகள் அடங்கியுள்ள உள் உறைகளை ஒன்றன்பின் ஒன்ருகத் திறந்து, ஆய்ந்து பார்த்த பிறகு, தேர்தல் அலுவலர், செல்லுபடியாகும் வாக்குச் சீட்டுகளை எண்ணி, அவை பற்றிய பதிவுகளை 10 ஆம் படிவத்தில் எழுதி, விவரங்களை அறிவிக்க வேண்டும்.

(4) அதற்குப் பிறகு வாக்குச் சாவடி ஒன்றில் பயன்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டுப் பெட்டிகள் எல்லாவற்றிலும் உள்ள செல்லுபடியாகும் வாக்குச் சீட்டுகளை ஒன்ருகக் கட்டி, தள்ளிவிடப்பட்ட வாக்குச்சீட்டுகள் கட்டுடன் ஒரு தனிச் சிப்பத்தில் வைக்க வேண்டும்; அதற்கு முத்திரையிட வேண்டும்; அதன் மீது அடியிற்கண்ட விவரங்களை எழுத வேண்டும்; அவையாவன :—

(அ) தொகுதியின் எண்;

(ஆ) அந்த வாக்குச் சீட்டுகள் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சாவடி பற்றிய விவரங்கள்;

(இ) எண்ணும் தேதி.

38. **வாக்குகளை மீண்டும் எண்ணுவது.**—(1) எண்ணுவது முடிந்த பிறகும் தேர்தல் முடிவு அறிவிக்கப்படுவதற்கு முன்பும், போட்டியிடும் வேட்பாளராவது அவர் இராவிட்டால், அவருடைய எண்ணும் முகவராவது, ஏற்கெனவே எண்ணப்பட்ட வாக்குகள் எல்லாவற்றையுமாவது அவற்றில் எவற்றையுமாவது மீண்டும் எண்ணும்படித் தேர்தல் அலுவலரை எழுத்து மூலமாகக் கேட்டுக் கொள்ளலாம்; அவ்வாறு மீண்டும் எண்ணும்படித் தாம் கேட்பதற்குண்டான காரணங்களை அவர் அப்போது சொல்ல வேண்டும்.

(2) அவ்வாறு கேட்டுக் கொள்ளப்படுவதன பேரில், தேர்தல் அலுவலர் அதைப் பற்றித் தீர்மானித்து, அவ்வேண்டுகோளை முழுவதுமோ சிறிது மட்டிலோ ஏற்றுக் கொள்ளலாம்; அல்லது அது பொருளற்றது அல்லது நியாய மற்றது எனத் தாம் கருதினுல் அதை முற்றும் தள்ளிவிடலாம்.

(3) (2) உள்விதியின்படித் தேர்தல் அலுவலர் செய்யும் தீர்மானம் ஒவ்வொன்றும் எழுதி வைக்கப்பட வேண்டும்; மேலும், அதற்குண்டான காரணங்கள் அதில் அடங்கியிருக்க வேண்டும்.

(4) தேர்தல் அலுவலர் (2) உள்விதியின்படி ஒரு வேண்டுகோளை முழுவதும் அல்லது சிறிது மட்டில் ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்தால், அவர்—

(அ) தமது தீர்மானத்தின் படியே வாக்குகளை மீண்டும் எண்ண வேண்டும்;

(ஆ) அவ்வாறு மீண்டும் எண்ணின பிறகு அவசியமான அளவுக்கு 10-ஆம் படிவத்தின் பேரில் உள்ள முடிவுத்தாளைத் திருத்த வேண்டும்;

(இ) அவ்வாறு தாம் செய்த திருத்தங்களை அறிவிக்க வேண்டும்.

(5) வேட்பாளர் ஒவ்வொருவரும் பெற்ற வாக்குகளின் மொத்த எண்ணிக்கை 32-ஆவது விதியைச் சேர்ந்த (2) உள்விதியின்படியாவது இவ் விதியைச் சேர்ந்த (4) உள்விதியின்படியாவது அறிவிக்கப்பட்ட பிறகு, தேர்தல் அலுவலர் 10-ஆம் படிவப் பிரகாரம் உள்ள முடிவுத்தாளை நிரப்பி அதில் கையெழுத்திட வேண்டும்; அதற்குப் பிறகு, மீண்டும் எண்ணுவதற்கான வேண்டுகோள் எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

ஆனால், எண்ணும் வேலை முடிந்ததும், அந்தச் சமயத்தில் அங்கே வந்திருக்கிற வேட்பாளர்களும், எண்ணும் முகவர்களும், (1) உள்விதியில் கொடுக்கப்பட்டுள்ள உரிமையைச் செலுத்துவதற்கு நியாயமான வாய்ப்பு அளிக்கப் பெறுகிற வரையில், இவ்வுள் விதியின்படி நடவடிக்கை எதுவும் எடுத்துக் கொள்ளக் கூடாது.

39. தேர்தல் முடிவை அறிவிப்பது.—(1) தேர்தல் அலுவலர் வாக்குகளை ஆய்ந்து பார்ப்பதையும் எண்ணுவதையும் முடித்த பிறகு, மிக அதிகமான செல்லுபடியாகும் வாக்குகள் அளிக்கப் பெற்றிருக்கிற போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்து, 11 ஆம் படிவப் பிரகாரம் உள்ள விவர அறிக்கையை நிரப்பி, அதற்குச் சான்றிட்டு, கையெழுத்திட்ட அதன்படி ஒன்றைத் தேர்தல் அதிகாரிக்கு அனுப்ப வேண்டும்;

ஆனால், எத்தொகுதியிலேனும் ஒன்று அல்லது பல இடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தால், தேர்தல் அலுவலர், அந்த இடங்களுக்குத் தேர்ந் தெடுக்கப்படத் தகுதியுள்ளவர்களும் மிக அதிகமான வாக்குகள் அளிக்கப் பெற்றிருப்பவர்களுமான வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் அவ்வாறு ஒதுக்கி வைக்கப்பட்ட இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக முதலில் அறிவித்து, பிறகு, எஞ்சியுள்ள போட்டியிடும் வேட்பாளர்களில் மிக அதிகமான

வாக்குகள் பெற்றிருக்கிற போட்டியிடும் வேட்பாளர் அல்லது வேட்பாளர்கள் அத்தொகுதியில் ஒதுக்கப்பட்டிராத இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும்.

(2) போட்டியிடும் இரண்டு அல்லது பல வேட்பாளர்கள் சமமான எண்ணிக்கையுள்ள வாக்குகள் பெற்றிருந்து, அந்த வேட்பாளர்களில் யாருக் கேனும் ஒரு வாக்கு சேர்த்தால் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பெறும் உரிமை அவருக்குக் கிடைக்குமானால், தேர்தல் அலுவலர் அந்த வேட்பாளர்களிடையே சீட்டுப்போட்டுத் தீர்மானிக்க வேண்டும்; எந்த வேட்பாளருக்குச் சீட்டு விழுகிறதோ, அவர் அதிகப்படியான ஒரு வாக்குப் பெற்றிருப்பதாகக் கருதப்படுவார். பிறகு தேர்தல் அலுவலர் அவ்வண்ணமே முடிவை அறிவிக்க வேண்டும்.

(3) போட்டியிடும் ஒரு வேட்பாளராவது அவருடைய எண்ணும் முகவராவது, விண்ணப்பம் செய்து கொள்வதின் பேரில், 10-ஆம் படிவப் பிரகாரம் உள்ள விவரப் பட்டியலின் படியையோ, பகுதி நகலையோ எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

40. ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், தொகுதியைச் தெரிந்தெடுப்பது.—(1) ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளுக்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அவர் தாம் கையெழுத்திட்டு எழுதியுள்ள அறிவிப்பு மூலமாக, தாம் பணி புரியத் தெரிந்தெடுக்கிற தொகுதி இன்ன தென்பதைத் தேர்தல் அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும். அவர் வேட்பாளராக நின்ற தொகுதிகளில் நடந்த தேர்தல்களின் முடிவுகள் பற்றிய அறிவிப்புகளில் கடைசி அறிவிப்பிலிருந்து இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் தேர்தல் அலுவலருக்கு அவ்வாறு தெரிவித்து விட வேண்டும்.

(2) அந்தத் தெரிவிப்பு கிடைப்பதன் பேரில், தேர்தல் அலுவலர், அவர் தெரிந்தெடுத்த தொகுதிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்காவிட்டால், அத்தொகுதிகளில் எதற்கேனும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும். இவ்வாறு இரண்டில் எது நடந்தாலும், அவர் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிற மற்றத் தொகுதி அல்லது தொகுதிகளில் காலியிடத்தை நிரப்புவதற்காகத் தேர்தல் செயல் முறைகளைப் புதிதாகத் தொடங்க வேண்டும்.

41. உறுப்பினர் எவரும் தேர்ந்தெடுக்கப்படாத பொழுதுள்ள நடைமுறை.—மேற்படி சட்டத்தின்படி நடத்தப்பட்ட புதிய தேர்தலில் உறுப்பினர் எவரும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், ஊராட்சித் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்

பதற்கான விதிகளில் சொல்லப்பட்டிருக்கிற விதமாக, 18 (2) பிரிவின்படிக் காலியிடத்தை நிரப்புவதற்காகத் தகுதி வாய்ந்த ஒருவரைத் தேர்ந்தெடுக்கலாம்.

42. சில சிப்பங்களைத் திறக்கக் கூடாதென்பது.—ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டுகள் அல்லது வாக்காளர் பட்டியலின் அடையாளமிட்டபடி அடங்கிய முத்திரையிட்ட சிப்பங்களைத் தேர்தல் அலுவலர் திறக்கக் கூடாது.

43. வாக்குச் சீட்டுகளை முடிவாக வைத்தல்.—(1) தேர்தல் அலுவலர் முடிவுகளை அறிவித்த பிறகு, எண்ணப்பட்ட, தள்ளிவிடப்பட்ட அல்லது ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டுகளின் சிப்பங்களையும், 24-ஆவது விதியின்படிப் பிறப்பிக்கப்பட்ட சான்றுகள் அடங்கிய முத்திரையிட்ட சிப்பங்களையும், வாக்காளர் பட்டியின் அடையாளமிட்ட படியையும் தம் பாதுகாப்பில் வைத்திருக்க வேண்டும். ஒரு தேர்தல் நீதிமன்றத்தின் அல்லது தகுதி வாய்ந்த வேறு நீதிமன்றத்தின் ஆணைகளின் படியன்றி மற்றப்படி, இந்த சிப்பங்களைத் திறக்கக் கூடாது, அவற்றில் உள்ளவற்றைப் பார்வையிடவுங் கூடாது, காட்டவுங் கூடாது.

(2) தேர்தல் அலுவலர் அந்த சிப்பங்களையும் வாக்காளர் பட்டியலின் அடையாளமிட்ட படிகளையும் ஆறுமாத காலம் வைத்திருக்க வேண்டும்; அதற்குப் பிறகு, ஒரு தேர்தல் நீதிமன்றத்தினால் வேறுவிதமாகக் கட்டளையிடப் பட்டாலன்றி மற்றப்படி, அவற்றை அழித்துவிடும்படிச் செய்ய வேண்டும்.

44. வெற்றியடைந்த வேட்பாளர்களின் பெயர்களை வெளியிடுதல்.—தேர்தல் அலுவலர் கிரமப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் பெயரை அல்லது வேட்பாளர்களின் பெயர்களைத் தாமதமின்றித் தேர்தல் அதிகாரிக்கு அனுப்ப வேண்டும்; மாநில அரசிதழில் வெளியிடுவதற்காக அதன்படி ஒன்றைச் சென்னையிலுள்ள அரசாங்க எழுதுபொருள்-அச்சுத் துறை இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்; மேலும், மேற்படி பெயர் அல்லது பெயர்களை, ஊராட்சி அலுவலகத்தில் அறிவிப்புப்பலகையிலும் வெளியிட வேண்டும்.

45. அரசாங்கத்தார் இவ்விதிகளுக்குப் பொருள்கொள்வது.—(1) ஒரு தேர்தல் செல்லுமா என்பது பற்றிய தகராறுகளைத் தீர்ப்பதற்கான விதிகளின் படி நடத்தப்படும் ஒரு விசாரணையின் தொடர்பாகவன்றி மற்றப்படி, இவ்விதிகளுக்குப் பொருள் கொள்வது பற்றிய கேள்வி எழுமானால், அதை அரசாங்கத்தாரின் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும்; அவர்களுடைய தீர்ப்பு முடிவானதாகும்.

(2) தங்கள் ஆலோசனைக்கு அவ்வாறு அனுப்பப்பட்ட ஒரு கேள்வியின் மீது அரசாங்கத்தார் தீர்ப்புக் கூறுகிற வரையில், அல்லது இவ்விதிகளுக்கு மாறாக ஒரு தேர்தல் நடத்தப்பட்டு வருகிறது அல்லது நடத்தப்படப் போகிறது என்று செய்தி கிடைப்பதன் பேரில் அரசாங்கத்தார் ஏற்பாடு செய்யக் கூடிய ஒரு விசாரணையில் முடிவான ஆணைகள் பிறப்பிக்கப்படுகிற வரையில், முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன் தேர்தல் செயல்முறைகளின் எந்தக் கட்டத்திலேனும் அவற்றை நிறுத்தி வைக்கும்படி அரசாங்கத்தார் கட்டளையிடுவது சட்ட சம்மதமாகும். இவ்விதியின்படி அரசாங்கத்தார் பிறப்பிக்கும் ஆணைகளுக்கு மாறாக நடத்தப்படும் அல்லது தொடர்ந்து நடத்தப்படும் தேர்தல் செல்லாது; அது எவ்விதப் பயனுடையதாகவும் மாட்டாது.

(3) அரசாங்கத்தார் வேறுவிதமாகக் கட்டளையிட்டாலன்றி, மற்றப்படி, இவ்விதியின்படி நிறுத்தி வைக்கப்பட்ட தேர்தல் செயல்முறைகள், தடுப்பு ஆணை ரத்துச் செய்யப்படுவதன் பேரில், அவை நிறுத்தி வைக்கப்பட்ட கட்டத்திலிருந்து புதிதாக நிச்சயிக்கப்படக் கூடிய தேதிகளில் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

46. தனிக் காரணங்களினால் தேர்தலுக்கான வேறு தேதிகளை நிச்சயிப்பது.—முந்திய விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் அதற்குப் பாதகமில்லாமலே, அரசாங்கத்தார், தனிக் காரணங்களுக்காக, சட்டத்தின் படிக்கான ஒரு தேர்தலின் எல்லாக் கட்டத்தையும் அல்லது அவற்றில் எவற்றிற்கேனும், இவ்விதிகளினால் அல்லது அவற்றின்படி குறிப்பிட்டவை அல்லது நிச்சயிக்கப்பட்டவை அல்லாத வேறு தேதிகளையும் கால அளவுகளையும் நிச்சயிக்கத் தேர்தல் அதிகாரிக்கு அதிகாரம் கொடுக்கலாம்.

47. இடர்ப்பாடுகள் இருந்தால் அவற்றை அரசாங்கத்தார் நீக்குவது.—(1) இவ்விதிகளை முறைப்படிச் செயற்படுத்துவதற்காக அல்லது மேற்படி சட்டத்தின்படி ஒரு தேர்தல் நடத்துவதற்காக அரசாங்கத்தார் கருதக் கூடிய பொதுவான அல்லது தனிக் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.

(2) இவ்விதிகளின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதில் அல்லது ஒரு தேர்தல் நடத்துவதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால், அரசாங்கத்தார், தேவைக்கேற்றவாறு அவ்விடர்ப்பாட்டினை நீக்குவதற்கு அவசியமெனக் கருதுகிற எதையேனும் ஆணை மூலமாகச் செய்யலாம். அத்தகைய ஆணை ஒவ்வொன்றுக்கும் ஒரு படியை, சட்ட மன்றத்தின் ஒவ்வொரு அவையின் முன்னும் அதன் அடுத்த கூட்டத்தில் வைக்க வேண்டும்.

படிவம் 1.

நியமனத் தாள்

(8 ஆவது விதியைக் காண்க.)

நகர ஊராட்சிக்கு ஓர் உறுப்பினராகத் தேர்தல்.

(முன்மொழிபவர் நிரப்ப வேண்டியது.)

ஆம் எண் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு வேட்பாளராக என்பவரை நான் இதனால் நியமனம் செய்கிறேன்.

1. முன்மொழிபவரின் முழுப் பெயர்.
2. வாக்காளர் பட்டியலில் முன்மொழிபவரின் எண்*.
3. வேட்பாளரின் தகப்பனர்/கணவர் பெயர்.
4. வேட்பாளரின் முழு அஞ்சல் முகவரி.
5. வாக்காளர் பட்டியலில் வேட்பாளர் எண் *.

இங்கே எழுதுக.

(i) தொகுதியின் எண்ணையும்,

(ii) ஏற்றவாறு முன்மொழிபவரின் அல்லது வேட்பாளரின் பெயர் கண்டுள்ள வாக்காளர் பட்டியலின் பாகத்தின் தொடர் எண்ணையும்,

(iii) அப்பாகத்தில் அப்பதிவின் தொடர் எண்ணையும்.

தேதி :

முன்மொழிபவரின் கையெழுத்து.

எடுத்துக்காட்டு

எண் 14

பாகம் 7

எண் 358

(வேட்பாளர் நிரப்ப வேண்டியது.)

மேற்சொன்ன வேட்பாளராகிய நான் நியமனத்துக்கு இசைகிறேன்; எனக்கு வயது முடிந்து விட்டதென்று இதனல் அறிவிக்கிறேன்.

தேதி :

வேட்பாளரின் கையெழுத்து.

(அட்டவணையில்கண்ட இனங்கள் அல்லது அட்டவணையில் கண்ட பழங்குடி வேட்பாளர் மேற்கொண்டு செய்ய வேண்டிய உறுதிமொழி.)

நான் இதனல் அறிவிக்கும் உறுதிமொழி என்னவென்ருல்.—(பரப்பு) சம்பந்தமாகத் தமிழக மாநிலத்தின் அட்டவணையில் கண்ட இனமாகிய/அட்டவணையில் கண்ட பழங்குடியாகிய இனத்தை நான் சேர்ந்தவனுவேன்.

தேதி : வேட்பாளரின் கையெழுத்து.

(தேர்தல் அலுவலர் நிரப்ப வேண்டியது.)

நியமனத்தாளின் தொடர் எண்.

இந்த நியமனம் வேட்பாளரால்/முன் மொழிபவரால் (தேதி அன்று மணிக்கு) அலுவலகத்தில் என்னிடம் கொடுக்கப்பட்டது.

தேதி : தேர்தல் அலுவலர்.

நியமனத் தாளே ஏற்றுக் கொள்ளுதல் அல்லது தள்ளி விடுதலாகிய தேர்தல் அலுவலர் செய்யும் தீர்ப்பு.

மேற்படி விதிகளேச் சேர்ந்த 11 ஆவது விதியின்படி நியமனத்தாளே நான் ஆய்ந்து பார்த்தேன்; பின்வருமாறு தீர்மானிக்கிறேன் :—

தேதி : தேர்தல் அலுவலர்.

நியமனத் தாளுக்கான பற்றுச்சீட்டும் (ரசீதும்) ஆய்ந்து பார்ப்பது பற்றிய அறிவிப்பும்.

(நியமனத்தாளேக் கொடுப்பவரிடம் கொடுக்க வேண்டியது.)

எண் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வேட்பாளராகிய என்பவரின் நியமனத்தாள், வேட்பாளரால்/முன்மொழிபவரால் (தேதி) அன்று மணிக்கு என் அலுவலகத்தில் என்னிடம் ஒப்புவிக்கப்பட்டது. நியமனத் தாள்கள் எல்லாம் (இடம்) ல் (தேதி) அன்று மணிக்கு ஆய்ந்து பார்ப்பதற்கு எடுத்துக் கொள்ளப் படும்.

தேதி : தேர்தல் அலுவலர்.

படிவம் 2

வந்து சேர்ந்த நியமனங்களின் பட்டியல்

[10 (2) விதியைக் காண்க.]

பேரூராட்சி.

தொகுதிக்காக (தேதி) அன்று

பெற்றுக் கொள்ளப்பட்ட நியமனங்களின் பட்டியல்.

1. தொடர் எண்.
2. *வேட்பாளரின் பெயர்.
3. தகப்பனுர்/கணவர் பெயர்.
4. இனம் (அட்டவணையில் கண்ட இனங்களா அட்டவணையில் கண்ட பழங்குடியினரா அல்லவா)
5. முகவரி.

குறிப்பு.— அன்று முற்பகல்/பிற்பகல் மணிக்கு (இடம்) ல் நியமனத் தாள்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தேர்தல் அலுவல் அல்லது அதிகாரம் பெற்ற வேறு ஆள்.

* **விளக்க உரைகள்.**—வேட்பாளர் பெண்ணுயிருந்தால், பெயருக்குப் பிறகு "(S)" என்னும் எழுத்தையும் அடைப்புக் குறிகளையும் சேர்க்க வேண்டும்.

படிவம் 3.

பேரூராட்சி

எண் தொகுதிக்கான போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டி.

[14 (2) விதியைக் காண்க.]

(1) தொடர் எண்	(2) வேட்பாளரின் பெயர்.	(3) வேட்பாளர் ஆணா பெண்ணா என்பது.	(4) வேட்பாளர் அட்டவணையில் கண்ட இனத்தாரா அட்டவணையில் கண்ட பழங்குடியா அல்லவா என்பது.	(5) வேட்பாளரின் முகவரி.	(6) வேட்பாளருக்குக் கொடுக்கப்பட்டுள்ள தனி மாதிரியான சின்னம்.

குறிப்பு.—இதற்கென அறிவிக்கையிடப்பட்ட வாக்குச் சாவடிகளில் அன்று மணி முதல் மணி வரையில் வாக்கெடுக்கப்படும்.

தேர்தல் அலுவலர்.

படிவம் 4.

வாக்குச் சீட்டு.

(22 ஆவது விதியைக் காண்க.)

சின்னம்

சின்னம்

சின்னம்

படிவம் 5

தேர்தல் அலுவலில் உள்ள வாக்காளர் வாக்களிப்பதற்கு விண்ணப்பம்

(24 ஆவது விதியைக் காண்க.)

பெறுபவர்

பேரூராட்சி

தேர்தல் அலுவலர்.

ஐயா,

பேரூராட்சிக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடக்கப் போகும் தேர்தலில் தொகுதி (இடம்) ல் உள்ள ம் எண் வாக்குச் சாவடியில் தேர்தல் அலுவலுக்காக நான் அமர்த்தப்பட்டிருக்கிறேன்.

நான் இதனால் அறிவிப்பது என்னவென்றால், நான் ஊராட்சியின் வாக்காளர் பட்டியில் ஆம் பாகம், ஆம் தொடர் எண்ணின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் ஆவேன்.

ஆம் எண் தொகுதிக்கான தேர்தலில் நான் வாக்களிப்பதற்கு இயலுமாறு, 6-ஆம் படிவப் பிரகாரம் உள்ள ஒரு சான்றினையும் ஒரு வாக்குச் சீட்டையும், ஆம் எண் வாக்குச் சாவடியின் வாக்கெடுப்பு அலுவலருக்கு அனுப்பும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தல் அலுவலில் உள்ள வாக்காளரின் கையெழுத்து.

முகவரி.

தேதி :

படிவம் 6.

சான்று

(24வது விதியைக் காண்க.)

(தேர்தல் அலுவலில் உள்ள வாக்காளருக்காக.)

சான்று கூறப்படுவது என்னவென்றால், ஆம் எண் தொகுத்திக்காக ஆம் எண் வாக்குச் சாவடியில் வாக்களிக்க உரிமையுள்ள என்பவர், ஆம் எண் தொகுதிக்காக ஆம் எண் வாக்குச் சாவடியில் தேர்தல் அலுவலில் அமர்த்தப்

பட்டிருக்கிருர். அவர் அலுவலில் அமர்த்தப் பெற்றிருக்கிற வாக்குச் சாவடியில் வாக்களிக்க அவருக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது.

அந்த வாக்காளர் 24 ஆவது விதியில் கண்டுள்ள விதமாக வாக்களிக்கும் பொருட்டு அவருக்காக ஆம் தொடர் எண் உள்ள வாக்குச் சீட்டு இதனுடன் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

தேதி : தேர்தல் அலுவலர்.

படிவம் 7.

மறுப்பு வாக்குகளின் பட்டியல்.

[26 (2) ஆவது விதியைக் காண்க.]

ஆம் எண் தொகுதிக்குத் தேர்தல்.

வாக்குச் சாவடி.

		தொடர் எண்.							
பதிவின் தொடர் எண்.	வாக்காளர் பெயர்.	பட்டியின் பாகத்தின்	அந்தப் பாகத்தின் வாக்காளரின் பெயர்.	மறுக்கப் பெற்றவரின் கையெழுத்து அல்லது கைப் பெருவிரல் அடையாளம்.	மறுக்கப் பெற்றவரின் முக வரி.	அடையாளம் காட்டுபவர் யாரேனும் இருந்தால் அவர் பெயர்.	மறுப்பவரின் பெயர்.	வாக்கெடுப்பு அலுவலரின் ஆணை.	வைப்புத் தொகையைத் திருப்பிப் பெற்றுக்கொண்டதன் பேரில் மறுப்பவரின் கையெழுத்து.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)

தேதி : வாக்கெடுப்பு அலுவலரின் கையெழுத்து

படிவம் 8.

ஆய்வுக்குரிய (டெண்டர்) வாக்குகளின் பட்டி.

[27 (2) விதியைக் காண்க.]

.... ஆம் எண் தொகுதிக்குத் தேர்தல்.

வாக்குச் சாவடியின் எண்ணும் பெயரும்.

பாகத்தின் எண்ணும் தொடரெண்ணும், வாக்காளர் பெயரும்.	வாக்காளர் முகவரி.	எற்றுக்கொடுக்கப்பட்ட வாக்குச் சீட்டின் தொடர் எண்.	ஆய்வுக்குரிய வாக்குச் சீட்டின் தொடரெண்.	ஆய்வுக்குரியவாக்கினை அளித்தவரின் கையெழுத்து அல்லது கைப் பெருவிரல் அடையாளம்.
(1)	(2)	(3)	(4)	(5)

தேர்தல் அலுவலரின் கையெழுத்து.

தேதி :

படிவம் 9.

[31 (5) விதியைக் காண்க.]

பாகம் I —வாக்குச் சீட்டுக் கணக்கு.

.... ஆம் எண் தொகுதிக்குத் தேர்தல்.

வாக்குச் சாவடியின் எண்ணும் பெயரும்.

	தொடரெண்கள். முதல் (1)	தொடரெண்கள். வரை (2)	மொத்த எண்ணிக்கை (3)
1. வந்து சேர்ந்த வாக்குச் சீட்டுகள்.			
2. பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுகள்.			
3. வாக்காளர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள்.			
4. ரத்து செய்யப்பட்ட வாக்குச் சீட்டுகள்.			
5. இந்த வாக்குச் சாவடியில் அளிக்கப் பட்ட ஆய்வுக்குரிய வாக்குச் சாவடி களின் எண்ணிக்கை.			

தேதி : வாக்கெடுப்பு அலுவலரின் கையொப்பம்.

பாகம் II—எண்ணியதன் முடிவு

வேட்பாளர் பெயர்.	அளிக்கப்பட்ட செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கை.
(1)	(2)
1.	
2.	
3.	
4.	

என்றிப் படியே

தள்ளி விடப்பட்ட வாக்குச் சீட்டுகள்

வாக்குச் சீட்டுப் பெட்டிகளில் இருந்த வாக்குச் சீட்டுகளின் மொத்த எண்ணிக்கை.

எண்ணும் மேற்பார்வையாளரின் கையெழுத்தும்.

தேர்தல் அலுவலரின் கையெழுத்து.

படிவம் 10.

முடிவுத்தாள்

[37 (2) ஆவது விதியைக் காண்க.]

ஆம் எண் தொகுதிக்குத் தேர்தல்

வாக்குச் சாவடி.		கீழ்க்கண்டவருக்குச் சார்பாக அளிக்கப்பட்ட செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கை.			கீழ்க்கண்டவைகளின் எண்ணிக்கை.			ஆய்வுக்குரிய வாக்குகளின் எண்ணிக்கை.	குறிப்புரை.
தொடர் எண்.	பெயர்.	அ	ஆ	இ	செல்லுபடியாகும் வாக்குகள்.	தள்ளிவிடப்பட்ட வாக்குகள்.	இந்த வாக்குச் சாவடிக்குரிய மொத்த வாக்குகள்.		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
வாக்குச் சாவடிகளில் பதிவான வாக்குகளின் மொத்த எண்ணிக்கை.									
அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்.									

இடம்.

தேதி.

தேர்தல் அலுவலர்.

படிவம் 11.

பேரூராட்சி

தேர்தல் பற்றிய விவரப் பட்டியல்.

[39 ஆவது விதியைக் காண்க.]

.... ஆம் எண் தொகுதிக்குத் தேர்தல்.

தொடர் எண்.	வேட்பாளர் பெயர்.	அளிக்கப்பட்ட செல்லுபடியாகும் வாக்குகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1.		
2.		
3.		
4.		

என்று இப்படியே

அளிக்கப்பட்ட செல்லுபடியாகும்
வாக்குகளின் மொத்த எண்ணிக்கை :

தள்ளிவிடப்பட்ட வாக்குகளின்
மொத்த எண்ணிக்கை :

ஆய்வுக்குரிய வாக்குகளின் மொத்த எண்ணிக்கை :

வேட்பாளர் அவருடைய
அடியிற்கண்ட ______________________ பெயர்களுக்கு
வேட்பாளர்கள் அவர்களுடைய

இடத்துக்கு
எதிரே குறிப்பிடப்பட்டுள்ள ______________ முறைப்படித் தேர்ந்தெடுக்
இடங்களுக்கு
கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்.	இன்ன இடத்துக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது.	தொகுதி எண்.
(1)	(2)	(3)

1.

2.

3.

4.

என்று இப்படியே

இடம்.

தேதி. தேர்தல் அலுவலர்.

(1964 செப்டம்பர் 25-ஆம் தேதிய 1987-ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1964 டிசம்பர் 31-ஆம் தேதிய 2779-ஆம் எண் ஊரக வளர்ச்சி துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1966 ஏப்ரல் 18-ஆம் தேதிய 993-ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

19. ஊராட்சிகளின் தலைவர்களையும் துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பது.—

1. (1) இவ்விதிகளை, தமிழ்நாடு ஊராட்சிகள் (தலைவர்களையும் துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பது) பற்றிய 1961-ஆம் ஆண்டின் விதிகள் என்று சொல்லலாம்.

(2) இந்த மாநிலத்திலுள்ள பேரூராட்சிகள், ஊராட்சிகள் எல்லாவற்றின் சாதாரண காலியிடங்களையும் தற்செயல் காலியிடங்களையும் நிரப்புவதற்குத் தலைவர்களையும் துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுப்பதற்கு இவ்விதிகள் பொருந்தும்.

2. ஊராட்சி உறுப்பினர்கள், இதற்கெனத் தனியாகக் கூட்டப்பட்ட கூட்டமொன்றில், ஊராட்சிக்கு அலுவலகம் ஒன்று இருந்தால் அதிலும், அத்தகைய அலுவலகம் இராவிட்டால் ஏற்றவாறு அந்தப் பேரூர் அல்லது ஊரில் முதன்மையான ஓரிடத்திலும் தலைவரையாவது துணைத் தலைவரையாவது தேர்ந்தெடுக்கவேண்டும்.

3. (1) அத்தகைய கூட்டங்கள் :—

(அ) தேர்தல் அதிகாரியால் நியமிக்கப்பட்டவரால் கீழ்க்கண்டவை களுக்கு நடத்தப்படும் :—

(i) ஒரு ஊராட்சி உறுப்பினர்களின் சாதாரண தேர்தல் முடிந்த பிறகு கூடிய விரைவில் சாதாரணக் காலியிடத்தை நிரப்புவதற்காக ஓர் ஊராட்சிக்குத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது பற்றி;

(ii) தற்செயல் காலியிடத்தை நிரப்புவதற்காக அந்தக் காலியிடம் நேரிட்ட பிறகு கூடிய விரைவில் ஓர் ஊராட்சிக்குத் தலைவரைத் தேர்ந்தெடுப் பது பற்றி;

(ஆ) கீழ்க்கண்டவற்றில் அந்த ஊராட்சித் தலைவரால் நடத்தப்படும்.

(i) தலைவர் தேர்தலுக்குப் பிறகு கூடிய விரைவில் சாதாரணக் காலியிடத்தை நிரப்புவதற்காக ஒரு ஊராட்சிக்குத் துணைத் தலைவரைத் தேர்ந் தெடுப்பது பற்றி;

(ii) தற்செயல் காலியிடம் ஒன்றை நிரப்புவதற்காக அந்தக் காலி யிடம் நேரிட்ட பிறகு விரைவில் ஊராட்சிக்குத் துணைத் தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது;

(2) அந்தக் கூட்டம் நடக்கும் தேதி, நேரம் பற்றி கூட்டத்தின் தேதிக்குக் குறைந்தது ஏழு முழுநாட்களுக்கு முன் அறிவிப்பு கொடுக்க வேண்டும்.

ஆனல், ஊராட்சிக்கு அலுவலகம் இராவிட்டால், கூட்டம் நடக்கும் இடத்தைப் பற்றிக் கூட அந்த அறிவிப்பில் குறிப்பிட வேண்டும்.

4. (1) அக்கூட்டத்தில்—

(அ) ஊராட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காகக் கூட்டம் நடத் தப்பட்டால், இதற்கெனத் தேர்தல் அதிகாரியால் நியமிக்கப்பட்டவர்;

(ஆ) ஊராட்சிக்குத் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக கூட்டம் நடத்தப்பட்டால், ஊராட்சித் தலைவர், அல்லது அவர் வந்திரா விட்டால், ஊராட்சி உறுப்பினரும் அந்த தேர்தலில் வேட்பாளராக நிற்கக் கருதாதவரும் அச் சமயத்தில தலைமை வகிப்பதற்குக் கூட்டத்தினரால் தெரிந் தெடுக்கப்பட்டவருமான ஒருவரும்

தலைமை வகிக்க வேண்டும்.

(2) இவ்விதிகளில், "கூட்டத் தலைவர்" என்னும் சொற்றொடர், இவ்விதிகளின்படி, ஏற்றவாறு, தேர்தல் அதிகாரியால் நியமிக்கப்படுபவர் என்றாவது, துணைத் தலைவர் தேர்தலுக்காக அக்கூட்டத்தில் தலைமை வகிக்கும் தலைவர் அல்லது உறுப்பினர் என்றாவது பொருள்படும்.

5. தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வேட்பாளர் ஒவ்வொருவரும், எழுத்து மூலமாக நியமிக்கப்பட வேண்டும்; நியமனத்தாளில், முன்மொழிபவராகவும் வழிமொழிபவராகவும் ஊராட்சியின் இரண்டு உறுப்பினர்கள் கையெழுத்திட வேண்டும். முன்மொழிபவர், ஒரு வேட்பாளரின் பெயரை முன்மொழியும்போது, ஏற்றவாறு தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேட்பாளரின் விருப்பத்தைத் தெரிவிப்பதற்கு எழுத்து மூலமாக அந்த வேட்பாளரும் முன்மொழிபவரும் வழிமொழிபவரும் கையெழுத்திட்ட உறுதிமொழி ஒன்றைக் கூட்டத் தலைவரிடம் கொடுக்க வேண்டும்.

6. கூட்டத் தலைவர், முன்மொழிந்து வழிமொழியப்பெற்றிருக்கிற வேட்பாளர்கள் எல்லாருடைய பெயர்களையும் கூட்டத்துக்கு வந்திருக்கிற உறுப்பினர்களுக்குப் படித்துக் காட்ட வேண்டும்.

7. ஊராட்சித் தலைவர் அல்லது துணைத் தலைவர் பதவிக்கு ஒரு வேட்பாளர் மட்டும் முறைப்படி நியமிக்கப்பட்டிருந்தால், வாக்கெடுப்பு அவசியமில்லை; அவ்வேட்பாளர் சந்தர்ப்பத்துக்கேற்பத் தலைவராக அல்லது துணைத் தலைவராக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும்.

8. வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்பட்டிருந்தால், கூட்டத்துக்கு வந்திருக்கிற உறுப்பினர்களின் வாக்குகளை, பின்வரும் விதிகளில் கண்டுள்ள விதமாக, வாக்கெடுப்பு மூலமாக எடுக்க வேண்டும்.

9. கூட்டத் தலைவர், கூட்டம் நடத்தப்படுகிற இடத்திலே, வாக்களிப்பு அறை ஒன்றை ஏற்படுத்தி வைக்க வேண்டும்; இது உறுப்பினர்கள் வேறு ஒருவரும் பார்க்காதவாறு தங்கள் வாக்குகளைப் பதிவு செய்யக் கூடிய வசதியுள்ளதாயிருக்கவேண்டும். அன்றியும், கூட்டத் தலைவர், வாக்குச் சீட்டுக்களைப் போடுவதற்கான வாக்குச் சீட்டுப் பெட்டி ஒன்றை, கூட்டத் தலைவரும் உறுப்பினர்களும் பார்க்கும்படியாக வைக்க வேண்டும். வாக்குச் சீட்டுக்களை உள்ளே போடக் கூடியவாறும், ஆனல் பெட்டியின் பூட்டை அகற்றாமல் அல்லது பெட்டியைத் திறக்காமல் அதிலிருந்து அவற்றை எடுக்க முடியாதவாறும் வாக்குச் சீட்டுப் பெட்டி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

10. **கூட்டத் தலைவர்,** வாக்கெடுப்பு நடப்பதற்கு அடுத்து முன்னதாக, வாக்குச் சீட்டுப் பெட்டி காலியாயிருப்பதை, வந்திருக்கக் கூடிய உறுப்பினர்கள் பார்க்கக் கூடியவர்களாயிருக்கும் பொருட்டு, அது காலியாயிருப்பதை அவர் களுக்குக் காட்ட வேண்டும்; பிறகு அதற்குப் பூட்டுப் போட்டு, முத்திரையை உடைக்காமல் அதைத் திறக்க முடியாதவாறு அதன் மீது முத்திரை வைக்க வேண்டும்.

11. வாக்களிக்க விரும்புகிற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் வாக்குச் சீட்டு ஒன்று கொடுக்க வேண்டும்; அதில் வேட்பாளர்கள் எல்லாருடைய பெயர்களும் பின்வரும் படிவப் பிரகாரம் ஆங்கிலத்திலும் தமிழிலும் தெளிவாக எழுதப்பட்டிருக்கவேண்டும்.

வாக்குச் சீட்டு.

ஊராட்சித் தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்காக முறைப்படி நியமிக்கப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள்.

அ.

ஆ.

இ.

ஈ.

கூட்டத் தலைவர்.

வாக்குச் சீட்டை உறுப்பினரிடம் கொடுப்பதற்கு முன் கூட்டத் தலைவர் அதில் கையெழுத்திட வேண்டும்.

12. அந்த உறுப்பினர், வாக்குச் சீட்டுகளைப் பெற்றுக் கொண்டதும், தமது வாக்கைப் பதிவதற்காக வாக்களிப்பு அறைக்குச் சென்று, தாம் வாக்களிக்க விரும்புகிற வேட்பாளரின் பெயருக்கெதிரே வாக்குச் சீட்டில் குறுக்குக் குறி (கிராஸ்) ஒன்றைப் போட வேண்டும். அவர், வாக்களிப்பு அறையை விட்டு வெளியேறுவதற்கு முன், அக்குறி மறைந்திருக்கும்படியாக வாக்குச் சீட்டை மடித்து, அவ்வாறு மடிக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டை கூட்டத் தலைவர் முன்னிலையில் வாக்குச் சீட்டுப் பெட்டியில் போட வேண்டும்.

13. வாக்கெடுப்பு இரகசியமாகயிருக்கும்படிச் செய்வதற்கும், ஏற்கெனவே வாக்களித்து விட்ட உறுப்பினர்கள் இனி வாக்களிக்க விருக்கிற உறுப்பினர் களிடம் கலந்து கொள்ளாமல் தடுப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைத் கூட்டத் தலைவர் செய்விக்க வேண்டும். வெவ்வேறு விதமான வாக்குச் சீட்டுகளைப் பயன்படுத்துவது, வாக்கெடுப்பின் இரகசியத் தன்மையை மீறுவதாகும்.

14. (1) எழுதப் படிக்கத் தெரியாமலிருப்பது அல்லது குருடாயிருப்பது அல்லது வேறு உடல் வலிவின்மை காரணமாக உறுப்பினர் ஒருவர் வாக்குச் சீட்டைப் படித்து அதில் குறியிட முடியாதவராயிருந்து, அவ்வாறு செய்வதற்கு உதவி புரியும்படிக் கேட்டால், கூட்டத் தலைவர், அவ்வுறுப்பினரின் விருப்பத்துக்கிணங்க வாக்குச் சீட்டில் வாக்கினைப் பதிவு செய்து, வாக்கு மறைந்திருக்கும்படியாக அதை மடிக்கவேண்டும்.

(2) பிறகு அந்த உறுப்பினர், தாமாகவே அல்லது கூட்டத் தலைவருடைய உதவியுடன், வாக்குச் சீட்டை வாக்குச் சீட்டுப் பெட்டியில் போட வேண்டும்.

(3) கூட்டத் தலைவர் இவ்விதியின்படிச் செயலாற்றும்போது கூடிய வரையில் இரகசியத்தைக் காக்க வேண்டும்; அத்தகைய ஒவ்வொரு நிகழ்ச்சியைப் பற்றி சுருக்கமாக எழுதி வைக்க வேண்டும். ஆனால், இன்ன விதமாக வாக்களிக்கப்பட்டதென்பதை அதில் குறிப்பிடக் கூடாது.

15. உறுப்பினர்கள் வாக்களித்து முடிந்த பிறகு, கூட்டத் தலைவர், வந்திருக்கிற உறுப்பினர்கள் முன்னிலையில், வாக்குச் சீட்டுப் பெட்டியைத் திறந்து அதிலிருந்து வாக்குச் சீட்டுகளை வெளியே எடுத்து, வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையை ஒரு விவரப் பட்டியில் எழுதவேண்டும்.

16. வாக்குச் சீட்டு ஒன்று பின்வருமாறு இருந்தால் செல்லாததாகி விடும் :—

(அ) அதன் மீது குறுக்குக் குறி (கிராஸ்) இல்லாதிருப்பது ;

(ஆ) ஒருவருக்கு மேற்பட்ட வேட்பாளர்களின் பெயர்களுக்கெதிரே குறுக்குக் குறி போடப்பட்டிருப்பது, அல்லது அது எந்த வேட்பாளருக்குப் போடப்பட்டதென்பது சந்தேகமாயிருக்கும் விதத்தில் போடப்பட்டிருப்பது ; அல்லது

(இ) ஒரே வேட்பாளரின் பெயருக்கெதிரே குறுக்குக் குறியும் வேறு அடையாளமும் போடப்பட்டிருப்பது ; அல்லது

(ஈ) ஏதேனும் அடையாளம் போடப்பட்டிருந்து, அதைக் கொண்டு உறுப்பினரைப் பின்னர் அடையாளம் கண்டு கொள்ளக் கூடியதாயிருப்பது.

17. மிக அதிகமான வாக்குகள் பெறும் வேட்பாளர் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டும். இரண்டு அல்லது பல வேட்பாளர்கள் பெற்றிருக்கிற வாக்குகள் சமமாக இருந்து, அவ்வேட்பாளர்களில் எவருக்கேனும் ஒரு வாக்கு சேர்ப்பதனால் அவர் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுதற்குரிய வாய்ப்பு இருக்குமானால், கூட்டத்

தலைவர் உறுப்பினர்கள் முன்னிலையில் சீட்டுப் போட்டு எடுக்க வேண்டும்; யாருடைய பெயர் முதலில் எடுக்கப்படுகிறதோ அந்த வேட்பாளர் அதிகப்படியான வாக்கு பெற்றிருப்பதாகக் கருதப்படுவார்; அவர் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகக் கருத வேண்டும்.

18. கூட்டம் முடிந்தவுடனே, கூட்டத் தலைவர்—

(அ) அக் கூட்ட நடவடிக்கைகளைப் பற்றிய பதிவு ஒன்றைத் தயாரித்து, அதில் கையெழுத்திட வேண்டும்; அதில் செய்யப்படும் திருத்தம் ஒவ்வொன்றுக்கும் தமது சுருக்கொப்பத்தினால் சான்றிட வேண்டும். கூட்டத்திற்கு வந்திருக்கிற ஓர் உறுப்பினர் அப்பதிவுக்குத் தாம் கையெழுத்திடத் தம் விருப்பத்தைத் தெரிவித்தால், அவ்வாறு செய்ய அவருக்கு அனுமதி கொடுக்கவும் வேண்டும்;

(ஆ) தேர்தல் முடிவு பற்றிய அறிக்கை ஒன்றை மாவட்ட ஆட்சியாளருக்கும், பொதுவான அல்லது தனி ஆணை வாயிலாக அரசாங்கத்தார் குறிப்பிடக் கூடிய வேறு அலுவலர் அல்லது அதிகாரிக்கும் அனுப்ப வேண்டும்;

(இ) தலைவராக, துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவரின் பெயரைக் கொண்டு, தாம் கையெழுத்திட்டுள்ள அறிவிப்பு ஒன்றை ஊராட்சி அறிக்கைப் பலகையில் வெளியிட வேண்டும்; பொதுவான அல்லது தனி ஆணை வாயிலாக அரசாங்கத்தார் குறிப்பிடக் கூடிய விதமாகவும் கூட அந்த அறிவிப்பை வெளியிட வேண்டும்.

19. (1) பிறகு, கூட்டத் தலைவர், வாக்குச் சீட்டுகளை ஒரு சிப்பமாகக் கட்டி, அச்சிப்பத்துக்கு முத்திரை வைத்து, அதில் உள்ளவற்றைப் பற்றிய விவரம்—அது சம்பந்தப்படுகிற தேர்தல்—அதன் தேதி ஆகியவற்றை அதன் மீது குறிக்க வேண்டும்.

(2) தேர்தல் நீதிமன்றம் அல்லது தகுதி வாய்ந்த வேறு நீதிமன்றம் ஒன்றின் ஆணைகளின் படியன்றி மற்றப்படி, இச்சிப்பங்களைத் திறக்கக் கூடாது, அதில் உள்ளவற்றைப் பார்வையிடவுங் கூடாது, காட்டவுங் கூடாது.

(3) ஊராட்சி இருக்கிற ஊராட்சி ஒன்றியம் அலுவலகத்திலே அச்சிப்பங்களை ஓர் ஆண்டுக் காலம் பத்திரமாக வைத்திருக்க வேண்டும்; அதற்குப் பிறகு, தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒன்றின் ஆணைகளினால் வேறுவிதமாய்க் கட்டளையிடப்பட்டாலன்றி, அவற்றை அழித்து விட வேண்டும்.

20. இவ்விதிகளின்படி ஒரு தேர்தல் நடத்துவதுபற்றி ஏதேனும் இடர்ப்பாடு எழுமானால், அரசாங்கத்தார் தேர்தலைச் சரிவர நடத்துவதற்கு அவசியமெனத் தங்களுக்குத் தோன்றுவதும் இவ்விதிகளுக்குப் பொருத்தமற்றதாகவோ விரோதமானதுமான எதையாகிலும் ஆணை மூலமாகச் செய்யலாம்.

21. முந்திய விதிகளில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே, அரசாங்கத்தார், போதுமான காரணங்களுக்காக, ஒரு ஊராட்சித் தலைவரின் அல்லது துணைத் தலைவரின் தேர்தல் தேதியை ஒத்திப் போட வேண்டுமென்று, அல்லது அவ்வாறு ஒத்திப்போடப்பட்ட தேதியை முன் கொணர வேண்டுமென்று அல்லது பின்னும் ஒத்திப் போட வேண்டுமென்று அப்போதைக்கப்போது கட்டளையிடலாம்; கூட்டத்தலைவர் அக்கட்டளையை நிறைவேற்ற வேண்டும்.

(1961 ஏப்ரல் 26-ம் தேதிய 1248-ம் எண் ஊரக வளர்ச்சி
உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1962 மே மாதம் 19-ம் தேதிய 1175-ம் எண் ஊரக வளர்ச்சி
உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1963 ஏப்ரல் 6-ம் தேதிய 785-ம் எண் ஊரக வளர்ச்சி
உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 பெப்ரவரி 22-ம் தேதிய 412-ம் எண் ஊரக வளர்ச்சி
உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 மே 24 ஆம் தேதிய 1181 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்
துறை பல்வகை அரசு ஆணை.)

(1966 சூன் 21-ம் தேதிய 1554-ம் எண் ஊரக வளர்ச்சி
உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசு ஆணை.)

(44) சேர்த்துக் கொள்ளப்பட்ட பெண் உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராயிருந்தால் எப்படியோ அப்படியே எல்லா உரிமைகளும் உள்ளவராவார். ஆகையால், சேர்த்துக் கொள்ளப்பட்ட பெண் உறுப்பினர் ஒருவர், ஊராட்சித் தலைவர் பதவியில் நேரிடும் தற்செயல் காலியிடத்தை நிரப்ப நடத்தப்படும் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தடை ஒன்றும் இல்லை.

(1961 நவம்பர் 23-ம் தேதிய 184189 சி-2/61-1 ஆம் எண் குறிப்பாணை.)

20. சிலவற்றில் ஊராட்சிகள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது.—1858-ம் ஆண்டில் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 18-வது பிரிவைச் சேர்ந்த சேர்ந்த (2) உட்பிரிவின்படி ஒரு ஊராட்சி ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பது, துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிகளில் சொல்லப்பட்டிருக்கிற விதமாக இருக்க வேண்டும்.

(1961 ஏப்ரல் 26-ம் தேதிய 1248-ம் எண் ஊரக வளர்ச்சி
உள்ளாட்சித்துறை அரசு ஆணை.)

21. ஊராட்சிகளின் தேர்தல் தகராறுகளைத் தீர்த்து வைப்பது.—

1. (1) வேறு விதமாக ஏற்பாடு இருந்தாலன்றி மற்றப்படி, ஒரு ஊராட்சியின் உறுப்பினர், தலைவர், அல்லது துணைத் தலைவர் பதவிக்கு 1958-ம் ஆண்டில் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி நடத்தப்பட்ட தேர்தல் எதையும், ஒரு வேட்பாளரோ வாக்காளரோ (இதில் பின்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் என்று சொல்லப்படும்) முறைப்படித் தேர்ந் தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பெற்றுள்ள வேட்பாளருக்கு மாறாக அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் இருவர் அல்லது பலர் இருந் தால் அந்த வேட்பாளர்கள் எல்லாருக்கும் அல்லது அவர்களில் யாருக்கேனும் மாறாக (2) உள்விதியில் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஒரு தேர்தல் நீதி மன்றத்துக்கு இவ்விதிகளின்படி கொடுத்துக் கொள்ளப்படும் ஒரு தேர்தல் மனுவின் மூலமாகவன்றி மற்றப்படி ஆட்சேபிக்கக் கூடாது.

(2) தேர்தல் நீதிமன்றம்—

(i) பகுதி (ii) கீழ் வருமானவற்றில் தவிர, நீலகிரி அல்லாத மற்ற மாவட்டங்களைப் பொறுத்தவரை ஊராட்சி அலுவலகம் இருக்கிற இடத்தின் மீது நாட்டுப் பகுதியின் ஆட்சி வரம்புடைய மாவட்ட முன்சீப் அல்லது அத்தகைய மாவட்ட முன்சீப் ஒருவருக்கு மேற்பட்டிருந்தால், முதன்மையான மாவட்ட முன்சீப் ஆவார்; நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை உதகை மண்டலத்திலுள்ள சார் நீதிபதியாவார்;

(i) பொதுவாக ஊராட்சிகள் சம்பந்தமாகவோ ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த ஊராட்சிகள் சம்பந்தமாகவோ ஒரே மாவட்டம் அல்லது வட்டத்தில் உள்ள ஊராட்சிகள் சம்பந்தமாகவோ அரசாங்கத்தார் அவ்வாறு கட்டளையிட்டால், பெயர் குறிப்பிட்டு அல்லது பதவி காரணமாக இதன் பொருட்டு அரசாங்கத்தார் அமர்த்தக் கூடிய அரசாங்க அலுவலர் அல்லது அலுவலர்கள் ஆவார்கள்.

ஆனால், தேர்தல் மனு ஒன்று, விண்ணப்பம் செய்து கொள்ளப் படுவதன்பேரில்,—

(அ) (i) பகுதியின்படி மாவட்ட முன்சீப் ஒருவரிடம் கொடுத்துக் கொள்ளப்பட்டால், சம்பந்தப்பட்ட மாவட்ட நீதிபதியால், தம்முடைய ஆட்சி வரம்புக்கும் மற்றொரு மாவட்ட முன்சீப்புக்கும்,

(ஆ) (ii) பகுதியின்படி அரசாங்க அலுவலர் ஒருவரிடம் கொடுத்துக் கொள்ளப்பட்டால், அரசாங்கத்தாரால் மற்ருேர் அரசாங்க அலுவலருக்கும், மாற்றப்படலாம்.

மேலும், தேர்தல் மனு ஒன்று, முந்திய விலக்கு ஏற்பாட்டின்படி ஓர் அதிகாரிக்கு மாற்றப்பட்டால், அந்த அதிகாரி தேர்தல் நீதிமன்றம் எனக் கருதப்படுவார்.

(3) இவ்விதிகளின்படி விசாரணை அதிகாரம் செலுத்துகிற ஒரு மாவட்ட முன்சீப், சார் நீதிபதி அல்லது வேறு அலுவலர், சந்தர்ப்பத்துக்கேற்ப ஒரு மாவட்ட முன்சீப் அல்லது நீதிபதி அல்லது வேறு அரசாங்க அலுவலர் என்னும் தமது முறைமையிலல்லாமல் பெயர்சுட்டு நபர் (Persona Designata) என்னும் முறையில் விசாரணை அதிகாரம் செலுத்துவதாகக் கருதப்படுவார்.

2. (1) தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் தேர்தல் மனுவைக் கொடுத்துக் கொள்ள வேண்டும்.

விளக்கம்.—மேற்சொன்ன பதினைந்து நாட்களில் கடைசி நாளன்று தேர்தல் நீதிமன்ற அலுவலகம் மூடப்பட்டிருந்தால், அந்த நீதிமன்றம் திறந்திருக்கிற அடுத்து வரும் நாளன்று, தேர்தல் நீதிமன்றத்தினிடம் மனுவைக் கொடுத்துக் கொல்லலாம்.

(2) மனுதாரர் ஆதாரமாகக் கொள்ளும் முக்கியமான நிகழ்ச்சிகள், நடந்ததாகச் சொல்கிற ஊழலான நடவடிக்கைபற்றிய விவரங்கள், ஆகியவை சுருக்கமான வடிவில் அந்த மனுவில் அடங்கியிருக்க வேண்டும்; அவசியமானல் தொடர்ச்சியாக எண் இடப்பட்ட பத்திகளாக அது பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். மனுதாரர் அதில் கையெழுத்திட்டிருக்க வேண்டும்; மேலும், வழக்கு வாத அறிவிப்புகளைச் சரி பார்ப்பதற்காக 1908-ம் ஆண்டின் உரிமையியல் நடைமுறை விதித் தொகுப்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதமாக அது சரிபார்க்கப்பட்டிருக்க வேண்டும்.

3. (1) மனுவில் சொல்லப்பட்டிருக்கிற முறைகேடுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட பல வேட்பாளர்களின் தேர்தல் செல்லுபடியாவதைப் பாதிக்கக் கூடும் மானல், மனுதார் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த வேட்பாளர்கள் எல்லாரையும் தமது மனுவுக்கு எதிர்வாதிகளாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

(2) மனுதாரர், சந்தர்ப்பத்துக்கேற்பத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் எல்லாருடைய அல்லது அவர்களில் எவரேனும் ஒருவருடைய தேர்தலை ஆட்சேபிப்பதுடன்கூட,

தாமோ அல்லது வேறொரு வேட்பாளரோ முறைப்படித் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதாக அறிவிக்க வேண்டுமென உரிமை கொண்டாட விரும்பினால் அப்படியே செய்யலாம். அத்தகையவற்றில், தேர்தலுக்காக நியமனம் செய்யப் பட்டு, ஆனால், வாக்கெடுப்புக்கு முன் விலகிக் கொண்டிராத மற்றெல்லா வேட் பாளர்களையும் தமது மனுவுக்கு எதிர்வாதிகளாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

4. (1) மனுவைக் கொடுத்துக் கொள்ளும் காலத்தில், மனுதாரர், வழக்குச் செலவிற்கு ஈடாகப் பணமாக இருபத்தைந்து ரூபாய்த் தொகையைத் தேர்தல் நீதிமன்றத்தில் கட்டி வைக்க வேண்டும்.

விளக்கம்.—தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்கள் பலருடைய தேர்தல் ஆட்சேபிக்கப்பட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த வேட்பாளர் ஒவ்வொருவர் சம்பந்தமாகவும் தனித் தனித் தொகை செலுத்த வேண்டும்.

(2). (1) உள் விதியின் ஏற்பாடுகள் நிறைவேற்றப்படாவிட்டால், தேர்தல் நீதிமன்றம் அந்த மனுவைத் தள்ளி விட வேண்டும்.

(3). (1) உள்விதியின், ஏற்பாடுகள் நிறைவேற்றப்படுவதன் பேரில், தேர்தல் நீதிமன்றம் அம்மனுவைக் குறித்து விசாரிக்கத் தொடங்க வேண்டும்.

5. தேர்தல் நீதிமன்றத்தார், கூடிய விரைவில், அந்த மனுவின்படி ஒன்றை, எதிர்வாதி ஒவ்வொருவருக்கும், சம்பந்தப்பட்ட ஊராட்சியின் செயல் அதிகாரிக்கும், தேர்தல் அதிகாரிக்கும் சேர்ப்பிக்கும்படிச் செய்ய வேண்டும். தேர்தல் நீதிமன்றத்தின் அறிவிப்புப்பலகையிலும் ஊராட்சி அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையிலுங் கூடப் படிகளை ஒட்ட வேண்டும். மேற்கொண்டு பிடிக்கும் எவையேனும் செலவுகளைக் கொடுப்பதற்காக, தேர்தல் நீதிமன்றத் தார் கேட்கக் கூடிய தொகைக்கும் பிணைகளுடனும் முறி ஒன்று எழுதிக் கொடுக்கும்படியும் மனுதாரரைக் கேட்கலாம். அவ்வாறு விளம்பரம் செய்த பிறகு பதினான்கு நாட்களுக்குள் எப்போதேனும், வேறு எந்த வேட்பாள ராகிலும், தேர்தல் நீதிமன்றத்தார் கேட்கக் கூடிய பிணையை அதே மாதிரி கட்டுவதன் பேரில், எதிர்வாதியாகச் சேர்த்துக் கொள்ளப் பெற உரிமை உள்ளவராவார்.

6. (1) தேர்தல் நீதிமன்றத்தார், 1908-ம் ஆண்டின் உரிமையில் நடை முறை விதித்தொகுப்பின்படி வழக்குகளை விசாரிப்பதற்குப் பொருந்துகிற நடைமுறையையே கூடிய வரையில் பின்பற்றித் தேர்தல் மனு ஒவ்வொன்றை யும் விசாரிக்க வேண்டும்.

ஆனால், தேர்தல் நீதிமன்றத்தார், தாங்கள் விசாரிக்கிற சாட்சி கூறும் சான்றின் சாரம்பற்றிய குறிப்பை மாத்திரம் எழுதிக் கொண்டால் போது மானது.

(2) ஒரு நீதிமன்றத்தார் வழக்கு ஒன்றை விசாரிக்கையில் 1908-ம் ஆண்டின் உரிமையியல் வழக்கு நடைமுறை விதித் தொகுப்பின்படி அவர் களுக்கு உரியதாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், பின்வருவனவற்றில், தேர்தல் நீதிமன்றத்தாருக்கு உண்டு—

(அ) கண்டுபிடித்தலும் பார்வையிடுவதும்;

(ஆ) சாட்சிகள் கட்டாயம் வரும்படிச் செய்தலும், அவர்களுக் காகும் செலவை வைப்புத் தொகையாகக்கட்டும்படிக் கேட்பதும்;

(இ) ஆவணங்களைக் கொண்டு வந்து காட்டும்படிக் கட்டாயப் படுத்தல்;

(ஈ) சாட்சிகளைப் பிரமாணம் செய்வித்து விசாரித்தல்;

(உ) ஆணை உறுதிப்பத்திரத்தின் பேரில் எடுக்கப்பட்ட சான்றினைப் பெற்றுக் கொள்வது;

(ஊ) சாட்சிகளை விசாரிப்பதற்காக ஆணைக் குழுக்களை அனுப்புவது; யாருடைய சான்று முக்கியமானதென்று தங்களுக்குத் தோன்றுகிறதோ அவரைத் தாங்களாகவே வரவழைத்து விசாரணை பண்ணலாம்.

7. (1) தேர்தல் நீதிமன்றத்தின் அனுமதியின்றித் தேர்தல் மனு எதையும் திரும்பப் பெற்றுக் கொள்ளக் கூடாது.

(2) ஒருவருக்கு மேற்பட்ட மனுதாரர்கள் இருந்தால், மனு ஒன்றைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்தை, மனுதாரர்கள் எல்லா ருடைய ஒப்புதல் இன்றிச் செய்து கொள்ளக் கூடாது.

(3) திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டால், அவ்விண்ணப்பத்தைக் குறித்து விசாரணை செய்வதற்கான தேதி ஒன்றை நிச்சயித்து, அதுபற்றி அறிக்கை ஒன்றை, மனுவுக்குச் சம்பந் தப்பட்ட மற்றெல்லாக் கட்சிக்காரர்களுக்கும் கொடுக்க வேண்டும்; 5 ஆவது விதியில் குறிப்பிட்டிருக்கிற விதமாக அதை வெளியிட வேண்டும்.

(4) பேர ஒப்பந்தத்தினுல் அல்லது பிரதிபலனைக் கருதி திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டதென்று நீதி மன்றத்தாருக்குத் தோன்றி அதை அனுமதிக்கத் கூடாதெனக்கருதினுல், திரும்பப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்துக்கு இசைவு தாக் கூடாது.

(5) விண்ணப்பம் ஏற்கப்பட்டால்—

(அ) எதிர்வாதிக்கு அதன் பொருட்டுப் பிடித்த செலவுகளை, அல்லது அதில், தேர்தல் நீதிமன்றத்தார் தகுதியெனக் கருதும் பாகத்தைச் செலுத்தும்படி மனுதாரருக்கு ஆணையிட வேண்டும்;

(ஆ) அவ்வாறு திருப்பப் பெற்றுக் கொள்ளப்பட்ட செய்தியை, தேர்தல் நீதிமன்றத்தார், சம்பந்தப்பட்ட ஊராட்சியின் செயல் அதிகாரிக்கும் தேர்தல் அதிகாரிக்கும் தெரிவிக்க வேண்டும்.

8. (1) விசாரணைக்குப் பிடித்த செலவுகள் பற்றித் தேர்தல் நீதிமன்றத் தார் பிறப்பித்த ஓர் ஆணையை—

(i) செலவுகளைக் கொடுக்கும்படி அந்த ஆணையினுல் கட்டளையிடப் பெற்றவருக்கு இருப்பிடம் அல்லது தொழிலிடம் சென்னை மாநகரம் அல்லது நீலகிரி மாவட்டம் அல்லாத வேறு எங்கேயாகிலும் இருந்தால், ஆட்சி வரம் புடைய மாவட்ட முன்சீப்புக்கு முன்பும்,

(ii) அவருக்கு இருப்பிடம் அல்லது தொழிலிடம் நீலகிரி மாவட்டத்திலிருந்தால், உதகமண்டலத்திலுள்ள சார் நீதிபதியின் நீதி மன்றத்துக்கு முன்பும்;

(iii) அவருக்கு இருப்பிடம் அல்லது தொழிலிடம் சென்னை மாநகரத்திலிருந்தால், சென்னையிலுள்ள சிறு வழக்கு நீதி மன்றத்துக்கு முன்பும், கொண்டு வந்து காட்டலாம்.

(2) அந்த நீதிமன்றத்தார், மேற்படி ஆணையை, அது ஒன்றில் பணம் செலுத்துவதற்காகப் பிறப்பித்த ஒரு தீர்ப்பாயிருந்தால் எப்படியோ, அதே விதமாகவும், அதே நடைமுறையைக் கொண்டும் நிறைவேற்ற வேண்டும் அல்லது நிறைவேற்றுவிக்க வேண்டும்.

9. தனி ஒருவரான மனுதாரர் அல்லது பல மனுதாரர்களில் எஞ்சி யுள்ளவர் இறந்துபோனுல், தேர்தல் மனு தீர்ந்து போகும்; அவ்வாறு தீர்ந்து போகும் செய்தியைத் தேர்தல் நீதிமன்றத்தார், சம்பந்தப்பட்ட ஊராட்சியின் செயல் அதிகாரிக்கும் தேர்தல் அதிகாரிக்கும் தெரிவிக்க வேண்டும்.

10. தேர்தல் மனு விசாரணையில் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் அல்லாத வேறொரு வேட்பாளர், அந்த இடம் தமக்கே கிடைத்திருக்க வேண்டு மென உரிமை கொண்டாடினால், தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளராவது வேட் பாளர்களாவது அந்தச் செயல் முறைக்குச் சம்பந்தப்பட்ட வேறொருவராவது, அந்த வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளராயிருந்து அவருடைய தேர்தலைக் குறை கூறி மனு கொடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால் அவருடைய தேர்தல் செல்லாததாகிவிட்டிருக்குமென மெய்ப்பிக்கச் சான்று காட்டலாம்.

11. தேர்தல் நீதிமன்றத்தார் பின்வருமாறு அபிப்பிராயப்பட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் ஒருவருடைய தேர்தல் செல்லாததாகிவிடும்; அதாவது—

(அ) தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த வேட்பாளராவது, அவருடைய முகவராவது, அந்த வேட்பாளரின் அல்லது முகவரின் மறைமுக ஆதரவுடன் வேறொருவராவது, இந்தியக் குற்றத் தண்டனை விதித் தொகுப்பில் கண்ட IX-அ-அத்தியாயத்தின் கீழ் வரும் அல்லது தேர்தல் இரகசியத்தை மீறுவது பற்றிய ஒரு சட்டத்தின் அல்லது விதியின் கீழ்வரும் ஒரு தேர்தல் குற்றத்தைச் செய்திருக்கிறார் அல்லது செய்வதற்கு உடந்தையாயிருக்கிறார் என்று அபிப் பிராயப்படுவது; அல்லது

(ஆ) பின்வரும் ஊழல் செயல்களில் ஒன்றினால் தேர்ந்தெடுக்கப் பட்ட அந்த வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் அல்லது அவருடைய தேர்தல் உண்டாக்கப்பட்டிருக்கிறது அல்லது தேர்தல் முடிவு முக்கியமான அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என அபிப்பிராயப்படுவது; அந்த ஊழல் செயல்களாவன—

(i) வேட்பாளராகவோ அவர் முகவராகவோ இராத ஒருவர் அல்லது வேட்பாளரின் அல்லது அவர் முகவரின் மறைமுக ஆதரவுடன் செய லாற்றுகிற ஒருவர், இந்தியக் குற்றவியல் சட்டம் IX அ-அத்தியாயத்தின் கீழ்வரும் அல்லது தேர்தல் இரகசியத்தை மீறுவது பற்றிய ஒரு சட்டத்தின் அல்லது விதியின் கீழ்வரும் ஒரு தேர்தல் குற்றத்தைச் செய்தல்;

(ii) வாக்காளர் ஒருவர் தமது வாக்கைப் பதிவு செய்வதற்காக ஓர் இடத்துக்கு அல்லது ஓரிடத்திலிருந்து அவரை அழைத்துச் செல்லும் பொருட்டு எவருக்கேனும் பணம் கொடுப்பது அல்லது கொடுப்பதாக வாக்களிப்பது;

(iii) வாடகைக்கு விடுவதற்காக அல்லது வழிச் செல்பவர்களை வாடகைக்கு ஏற்றிச் செல்வதற்காக வழக்கமாக வைத்திருக்கப்படுகிற படகு, வண்டி அல்லது கால்நடையினைத் தேர்தல் காரியங்களுக்காக வாடகைக்கு எடுத்துக் கொள்வது, அமர்த்திக் கொள்வது, கடனாக வாங்குவது அல்லது பயன்படுத்துவது :

ஆனால், வாக்காளர் ஒருவர், வாக்குப் பதிவு செய்யப்படுகிற இடத்துக்கு அல்லது அவ்விடத்திலிருந்து தம்மை ஏற்றிச் செல்வதற்குப் படகு, வண்டி அல்லது கால்நடைகளை வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம், அல்லது தமது சொந்த உடைமையான படகு, வண்டி அல்லது கால்நடையினைப் பயன் படுத்தலாம்; அல்லது

(இ) நியமனத் தாள் சம்பந்தமான ஒழுங்கினத்தினால் அல்லது நியமனத் தாளை அல்லது வாக்கினை முறையின்றிப் பெற்றுக் கொண்டதனால் அல்லது மறுத்ததனால், அல்லது மேற்படி சட்டத்தில் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளில் கண்ட ஏற்பாடுகளைப் பின்பற்றாததனால் தேர்தல் முடிவு முக்கியமான அளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறதென அபிப்பிராயப் படுவது ;

ஆனால், இவ்விதியைச் சேர்ந்த (ஆ) பகுதியில் குறிப்பிடப்பட்டிருப்பதும், இதில் பின்னால் விளக்கப்பட்டிருக்கிற விருந்துபசரித்தல் அல்லாத, வேறுவிதமான வஞ்சமாயிராததுமான ஒரு ஊழல் செய்கை செய்யப்பட்டிருக்கிறதென்று தேர்தல் நீதிமன்றத்தார் அபிப்பிராயப்பட்டு—

(அ) அந்தத் தேர்தலில் வேட்பாளர் ஊழல் செய்கை எதையும் செய்யவில்லையென்றும், செய்யப்பட்ட ஊழல் செய்கைகள் அவ்வேட்பாளரின் ஆணைகளுக்கு மாறாகவும் அவருடைய ஒப்பளிப்பு அல்லது மறைமுக ஆதரவு இல்லாமல் செய்யப்பட்டவை என்றும் ;

(ஆ) அவ்வேட்பாளர் அத்தேர்தலில் ஊழல் செய்கைகள் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு நியாயமான எல்லா ஏற்பாடுகளையும் செய்தாரென்றும் ;

(இ) செய்யப்பட்ட ஊழல் செய்கைகள் பொருட்படுத்த வேண்டாதவை, முக்கியமற்றவை, அற்பமானவை என்றும் ;

(ஈ) மற்றெல்லாவற்றிலும், அவ்வேட்பாளர் அல்லது அவருடைய முகவர் சம்பந்தப்பட்டவரைத் தேர்தலில் ஊழல் செய்கை எதுவும் நடக்கவில்லையென்றும், அந்த வேட்பாளர் தேர்தல் நீதிமன்றத்துக்கு ஐயமற மெய்ப்

த்திருப்பதாகத் தேர்தல் நீதிமன்றத்தார் மேலும் கருதினல், அப்போது தேர்தல் நீதிமன்றத்தார் அவ்வேட்பாளரின் தேர்தல் செல்லாதது அல்ல எனத் தீர்ப்பளிக்கலாம்.

விளக்கம்.—இவ்விதியின் செயலுக்காக, "விருந்துபசரித்தல்" என்பது, வாக்களிப்பதற்கு அல்லது வாக்களிக்காமலிருப்பதற்கு ஒருவரை அல்லது வேருெருவரை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ தூண்டும் நோக்கத்துடன் அல்லது வாக்களிப்பதற்கு அல்லது வாக்களிக்காமலிருப்பதற்குப் பரிசாக ஒருவருக்கு உணவு, பானம், கேளிக்கை அல்லது உணவுப் பொருள் கொடுப்பதற்கு அல்லது ஏற்பாடு பண்ணுவதற்குப் பிடிக்கும் செலவை முழுவதுமோ சிறிது மட்டிலோ ஏற்றுக் கொள்வது என்று பொருள்படும்.

12. (1) விசாரணை முடிந்ததும், தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் அல்லது வேட்பாளர்களின் தேர்தல் 11 ஆவது விதியின்படி செல்லாததா என்பதைத் தேர்தல் நீதிமன்றத்தார் அறிவிக்க வேண்டும்.

(2) தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் அல்லது வேட்பாளர்களின் தேர்தல் செல்லாது என்று தேர்தல் நீதிமன்றத்தார் அறிவித்தால், அவர்கள்—

(அ) அந்த இடம் நமக்குரியதென்று இவ்விதிகளின் கீழ் உரிமை கொண்டாடுபவரும் தேர்தல் மனுவில் ஒரு தரப்பினராயிருந்தவருமான வேருெருவர் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்து, அல்லது

(ஆ) புதிதாகத் தேர்தல் நடத்த வேண்டுமென ஆணை பிறப்பிக்க வேண்டும்.

(3). (1), (2) உள்விதிகளின்படித் தேர்தல் நீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை முடிவானதாகும்.

(4). (1) உள்விதியின்படியாவது (2) உள்விதியின்படியாவது பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆணையின் படி ஒன்றைத் தொடர்புடைய ஊராட்சிச் செயல் அதிகாரிக்கும் தேர்தல் அதிகாரிக்கும் அனுப்ப வேண்டும்.

13. ஒரு தேர்தல் 12 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியின்படி செல்லாது என்று அறிவிக்கப்பட்டு, அவ்விதியைச் சேர்ந்த (2) உள்விதியில் கண்ட (ஆ) பகுதியின்படிப் புதிதாகத் தேர்தல் நடத்த வேண்டுமென ஆணையிடப்பட்டால், ஏற்றவாறு, தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளரின் இடம் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் இடங்கள், தேர்தல் நீதிமன்றத்தாரு

டைய ஆணையின் தேதியிலிருந்து காலியாயிருப்பதாகக் கருத வேண்டும்; தொடர்புடைய அதிகாரி, அவ்வாறு புதிதாகத் தேர்தல் நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை உடனே செய்யவேண்டும்.

14. (1) முந்திய விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஊராட்சித் தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக ஒருவருக்கு மேற்பட்டவர்கள் உரிமை கொண்டாடி, அவர்களில் எவருடைய தேர்தலும் 2-ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற காலத்துக்குள் தேர்தல் நீதிமன்றத்துக்குக் கொடுத்துக் கொள்ளப்படும் தேர்தல் மனு மூலமாக ஆட்சேபிக்கப்படா விட்டால், அல்லது அத்தகைய தேர்தல் மனு அல்லது தேர்தல் மனுக்கள் கொடுத்துக் கொள்ளப்பட்டு, ஆனால் பின்னர் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டிருந்தால், தேர்தல் அதிகாரி தாம் அவசியமெனக் கருதும் விசாரணை செய்த பிறகு—

(அ) உரிமை கொண்டாடுபவர்களில் ஒருவர் ஏற்றவாறு ஊராட்சித் தலைவராக அல்லது துணைத் தலைவராக முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கலாம்; அல்லது

(ஆ) உரிமை கொண்டாடுபவர்களில் எவரும் முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கவில்லையென அவருக்குத் தெரியவந்தால், புதிய தேர்தலுக்கு ஆணையிடலாம்.

(2). (1) உள்விதியைச் சேர்ந்த (ஆ) பகுதியின்படிப் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணை முடிவானதாகும்.

(3) வேட்பாளர் அல்லது வாக்காளர் ஒருவர், (1) உள் விதியைச் சேர்ந்த (அ) பகுதியின்படிப் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணைக்கு மேல், 1-ஆவது விதியைச் சேர்ந்த (2) உள்விதியினால் வரையறுக்கப்பட்ட தேர்தல் நீதிமன்றத்துக்கு, அவ்வாணையின் தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(4) அத்தகைய மேல்முறையீடு, இவ்விதிகளின்படிக் கொடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு தேர்தல் மனுவாயிருந்தால் எப்படியோ அப்படியே, இவ்விதிகளின் ஏற்பாடுகள் கூடிய வரையில் அதற்குப் பொருந்தும்.

(5). (1) உள்விதியைச் சேர்ந்த (அ) பகுதியின்படிப் பிறப்பிக்கப் பட்ட ஆணை, (3) உள்விதியின்படிச் செய்து கொள்ளப்படும் எதேனும் மேல்முறையீட்டின் முடிவுக்குட்பட்டு, முடிவானதாகும்.

15. முந்திய விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஊராட்சித் தலைவராக அல்லது துணைத் தலைவராகத் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகப் பலர் உரிமை கொண்டாடி, அவர்களில் ஒருவருடைய அல்லது பலருடைய தேர்தல் இவ்விதிகளின்படி கொடுத்துக் கொள்ளப்பட்ட தேர்தல் மனு மூலமாக ஆட்சேபிக்கப்பட்டிருந்தால், தேர்தல் அதிகாரி, தாம் அவசியமெனக் கருதும் விசாரணை செய்த பிறகு, தேர்தல் மனுவின் பேரில் தேர்தல் நீதிமன்றத்தார் ஆணை பிறப்பிக்கிறவரையில், உரிமை கொண்டாடுபவர்களில் ஒருவர் ஊராட்சித் தலைவரின் அல்லது துணைத் தலைவரின் அலுவல்களைச் செய்ய வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

22. தேர்தல் மறையத்தை (இரகசியத்தை) மீறுதல்.—(1) வாக்களிப்புச் சாவடியில் பணியாற்றுகிற வாக்கெடுப்பு அலுவலர், எழுத்தர் அல்லது வேறொரு நபர் எவரும் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட காரியத்தைத் தவிர, வாக்காளர் ஒருவர் எந்த வேட்பாளருக்கு வாக்களித்தார் என்பதை நேர்முகமாகவோ மறை முகமாகவோ காட்டுகிற செய்தி எதையும் எவருக்கும் தெரிவிக்கக் கூடாது.

(2). 1 ஆவது விதியை மீறுவது, நூறு ரூபாய் வரையில் தண்டம் இறுக்கப்படுவதற்குரியதாகும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

23. அமலில் இருக்கிற ஒப்பந்தங்களில் அக்கறையுடைய ஊராட்சி உறுப்பினர்களின் தகுதியின்மையை அகற்றுவது.—ஊராட்சி உறுப்பினர் ஒருவர்—

(i) அசையாப் பொருளின் குத்தகை, விற்பனை அல்லது கொள்முதலில் அல்லது அதற்கான ஓர் உடன்படிக்கையில், அல்லது

(ii) பணக் கடனுக்காக ஓர் உடன்படிக்கையில் அல்லது பணம் மாத்திரம் செலுத்துவதற்கான ஓர் ஈட்டில், அல்லது

(iii) ஊராட்சி அலுவல் பற்றிய ஓர் விளம்பரம் சேர்க்கப்பட்டிருக்கிற ஒரு செய்தித் தாளில், அல்லது

(iv) தாம் வழக்கமாக வியாபாரம் செய்கிற பொருள்களை ஊராட்சிக்கு விற்பதில் அல்லது எப்பொருள்களையேனும் ஊராட்சியினிடமிருந்து வாங்குவதில்,

ஒப்பந்தத்தின் அல்லது பணியின் காலத்திலே எந்த ஆண்டிலாவது மொத்தத்தில் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாத மதிப்பு வரையில் பங்கு அல்லது அக்கறை உடையவராயிருக்கிறார் என்னும் காரணத்தினால், ஊராட்சியுடன் செய்து கொண்டு அமலில் இருக்கிற ஓர் ஒப்பந்தத்தில் அல்லது ஊராட்சிக்காகச் செய்யப்பட்டுவரும் ஒரு பணியில் அக்கறை அடைகிறார் என்னும் ஏதுவின் பேரில், உறுப்பினர் என்னும் முறைமையில் பதவி வகிக்காமல் போய்விடமாட்டார்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(1966 சனவரி 11 ஆம் தேதிய 83 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(45) **உயிர் ஈட்டுறுதிக் கூட்டு நிறுவனத்தில் உள்ள எழுத்தர் மைய அரசுப் பணியாளர் அல்லர்.**—இந்திய வாழ்வு ஈட்டுறுதிக் கூட்டு மன்றத்தில் உள்ள ஓர் எழுத்தரை, மைய அரசுப் பணியாளரெனக் கருத முடியாது.

(1957 பெப்ரவரி 15 ஆம் தேதிய 111565. எல். 6/56-3 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(46) **ஊரக அலுவலரின் அல்லது பணியாளரின் குடும்பத்தைச் சேர்ந்தவர் தேர்தலுக்குத் தகுதியற்றவர்கள் அல்லர்.**—ஓர் ஊர் அலுவலரின் அல்லது பணியாளரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நிற்பதற்கோ உறுப்பினராகப் பதவி வகிப்பதற்கோ தகுதியற்றவர்கள் ஆகமாட்டார்கள்.

(1960 ஜூலை 28 ஆம் தேதிய 18607 எல் 1/60-3 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(47) **ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியப் பணியைச் செய்து முடிக்க ஏற்றுக் கொள்கிற ஊராட்சித் தலைவர்களின் தகவின்மை.**—ஊர்ப்பணிகள் திட்டத்தின்படிக்கான பணிகளை, நிறைவேற்றுவதற்காகப் பல்வேறு நிறுவனங்களிடம் ஒப்படைக்க வேண்டிய வகைகளைக் குறிப்பிட்டு 1961 ஜூலை 25-ஆம் தேதியிட்ட 2103 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசு ஆணையின் 6 (   ) பத்தியில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சித் தலைவர்களின் தனிப்பட்ட முறைமையில் அல்லது ஊராட்சிகளின் நியமனதாரர்கள் என்னும் முறைமையில் அவர்களிடம் பணிகளை ஒப்புவிக்கலாமா என்பது பற்றி ஒரு வினா எழுப்பப்பட்டிருக்கிறது.

1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்திலும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலும் கண்ட ஏற்பாடுகளையொட்டி அரசாங்கத்தார் இவ்வினவை ஆய்ந்து பார்த்தார்கள். "உறுப்பினர்" ஒருவர் ஊராட்சி உறுப்பினராயிருந்தாலும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினராயிருந்தாலும், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 26 (ஈ) பிரிவின்படி, விதிகளில் விலக்களிக்கப் பெற்றுள்ளவற்றில் தவிர மற்றப்படி, ஊராட்சியுடன் அல்லது ஊராட்சி மன்றத்துடன் செய்துகொண்டு அமலில் இருக்கிற ஓர் ஒப்பந்தத்தில் ஏதேனும் அக்கறை அடைவதன் பேரில் தகுதியற்றவராகிவிடுவாரென்று அரசாங்கத்தார் முடிவு செய்தார்கள். ஊராட்சிகளில் அல்லது ஊராட்சி ஒன்றியங்களில் உறுப்பினர்கள் ஊராட்சிப் பணிகளையோ ஊராட்சி ஒன்றியப்பணிகளையோ மேற்கொள்வதைப் பற்றி விதிகளில் சொல்லப்படவுமில்லை. ஆகையால், ஊராட்சிகளின் தலைவர்கள், தங்களுடைய தனிப்பட்ட முறையிலாகட்டும் ஊராட்சிகளின் நியமனதாரர்கள் என்ற முறையிலாகட்டும் ஊராட்சிப் பணிகளையோ ஊராட்சி ஒன்றியப் பணிகளையோ செய்வதற்கு ஏற்றுக் கொண்டால் அவர்கள் தகுதியற்றவர்களாகி விடுவார்கள்.

ஊராட்சிகளின் தலைவர்கள் ஊராட்சிப் பணிகளையும் ஊராட்சி ஒன்றியப் பணிகளையும் மேற்கொள்வதற்காக, ஏற்பாடு செய்யும் விதத்தில் சம்பந்தப்பட்ட விதிகளைத் திருத்துவது பற்றிக் கூட அரசாங்கத்தார் ஆய்ந்து பார்த்தார்கள். ஊராட்சிகளின் தலைவர்கள் பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களானபடியால் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவர்களாயிருக்க வேண்டுமெனவும், ஊராட்சிகளின் தலைவர்கள் ஊராட்சிப் பணிகளையோ ஊராட்சி ஒன்றியப் பணிகளையோ செய்து முடிக்க ஏற்றுக் கொள்வதாகயிருந்தால், ஊராட்சிகளின் தலைவர்கள் செல்வாக்குடையவர்களானபடியால் தங்கள் சொந்த நலனுக்காகத் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தக் கூடுமென்ற பேச்சு எழக்கூடுமெனவும் அரசாங்கத்தார் கருதுகிறார்கள். ஆகையால், தங்களுடைய தனிப்பட்ட முறைமையிலோ ஊராட்சிகளின் நியமனதாரர்கள் என்னும் முறையிலோ ஊராட்சிகள் தலைவர்களிடம் ஊராட்சிப் பணிகளை அல்லது ஊராட்சி ஒன்றியப் பணிகளை ஒப்புவிப்பதற்காக விதிகளைத் திருத்த வேண்டா என்று அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள். ஊராட்சிகளின் தலைவர்களின் தனிப்பட்ட முறைமையிலாகட்டும் ஊராட்சிகளின் நியமனதாரர்கள் என்ற முறையிலாகட்டும் அவர்களிடம் ஊராட்சிப் பணிகளையும், ஊராட்சி ஒன்றியப் பணிகளையும் ஒப்புவிக்கக் கூடாதென்று, சென்னை தவிர மற்றெல்லா மாவட்டங்களின் ஆட்சியாளர்களுக்கும், சம்பந்தப்பட்ட மற்றெல்லா அலுவலர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

(48) ஊராட்சிகளின் தலைவர்களின் தனிப்பட்ட முறைமையிலாகட்டும் ஊராட்சிகளின் நியமனதாரர்கள் என்ற முறையிலாகட்டும், அவர்களிடம் ஊராட்சிப் பணிகளையும் ஊராட்சி ஒன்றியப் பணிகளையும் ஒப்புவிக்கக் கூடா தெனவும், அவ்வாறு ஒப்புவிக்கப்படுவதை ஏற்றுக் கொண்டால், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தில் கண்ட 26 (ஈ) பிரிவின்படி தலைவர் தகுதியற்றவராகிவிடுவாரெனவும், 1962 டிசம்பர் 1 ஆம் தேதியில் 73461 பி.4/62-4 ஆம் எண் அரசுக் குறிப்பாணையில் ஆணையிடப்பட்டிருந்தது. பணிகள் அவ்வாறு ஏற்கெனவே ஒப்புவிக்கப்பெற்றுள்ள ஊராட்சிகளின் தலைவர்கள் அத்தகவின்மையை அடையாமலேயே அப்பணிகளை முடித்து விட அவர்களுக்கு அனுமதி கொடுக்கலாமா என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருக் கிறது.

2. ஊராட்சிப் பணிகளை அல்லது ஊராட்சி ஒன்றியப் பணிகளைச் செய்து முடிக்கும் வேலை ஏற்கெனவே ஒப்பளிக்கப் பெற்றிருக்கிற ஊராட்சி களின் தலைவர்கள், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 26 (ஈ) பிரிவின்படி ஏற்கெனவே தகவின்மை அடைந்து விட்டிருக்கி றார்கள். அத்தகைய தலைவர்கள் தொடர்ந்து பதவியிலிருப்பது இயலுமாறு மேற்படி சட்டத்தைச் சென்ற காலம் உட்பட அமலில் இருக்கும்படியாக, இப்போது திருத்தக் கருதியிருக்கிறது. அச்சட்டம் திருத்தப்படுகிற வரையில், ஊராட்சிப் பணிகளை அல்லது ஊராட்சி ஒன்றியப் பணிகளைச் செய்து முடிக்கும் வேலை ஏற்கெனவே ஒப்புவிக்கப்பெற்றிருக்கிற ஊராட்சி களின் தலைவர்கள், அப்பணிகளை விரைவில் முடித்து விடும்படி அவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

(1963 மார்ச்சு 27 ஆம் தேதிய 7046, எல். தனி/63-3 ஆம் எண் குறிப்பாணை.)

(49) ஒரு ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உறுப்பினர் ஏற்றவாறு மற்றொரு ஊராட்சியில் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் ஒப்பந்தங்களை நிறைவேற்றலாமா என்ற ஓர் ஐயப்பாடு எழுப்பப் பட்டிருக்கிறது.

(2) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்திலும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலும் கண்ட ஏற்பாடுகளையொட்டி அரசாங்கத்தார் இக்கேள்வியினை ஆய்ந்து பார்த்தார்கள். உறுப்பினர் ஒருவர் ஊராட்சியுடன் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்துடன் செய்து கொண்டு அமலில் இருக்கிற ஓர் ஒப்பந்தத்திலாவது அவ்வூராட்சியின் அல்லது மன்றத் துக்காகச் செய்யப்பட்டுவரும் பணியிலாவது அக்கறை அடைந்தால், அவர்

பதவி வகிப்பதற்கு அருகதையற்றவராவர் என்று 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சி சட்டத்தின் 26 (ஈ) பிரிவில் கண்டிருக்கிறது. ஒரு ஊராட்சியில் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஓர் உறுப்பினர், தாம் உறுப்பின ராயிராத மற்றொரு ஊராட்சியில் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதை அப்பிரிவு தடுக்கவில்லை. ஒரு ஊராட்சித் தலைவர், தாம் உறுப்பினராயிராத அதே ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மற்றொரு ஊராட்சியில் ஊராட்சிப் பணிகளையாவது, மற்றொரு ஊராட்சி ஒன்றியத்தில் ஊராட்சிப் பணிகளையும் ஊராட்சி ஒன்றியப் பணிகளையுமாவது செய்து முடிக்க ஏற்றுக் கொண்டால் தகுதியற்றவராகிவிடமாட்டார்.

(1963 மே 30 ஆம் தேதிய 60978 பி-4/63-4 ஆம் எண் குறிப்பாணை.)

(50) மேற்குறித்த அரசாங்க ஆணையின் 6 (7) சி பத்தியிலுள்ள ஆணைகளின்படி, ஊர்ப் பணிகள் திட்டப்படிக்கான பணியை அட்டவணையில் கண்ட விதங்களின்படிச் செய்து முடிப்பதற்காகச் சாதாரணமாய் ஊராட்சி களிடம் ஒப்புவிக்க வேண்டும். ஊராட்சிகள் தாங்களே பணிகளைச் செய்து முடிவாக ஏற்றுக்கொள்ள இயலாமையைத் தெரிவிக்கும்போதுதான், அல்லது பயன் அடைபவர் ஒருவரை நியமனம் செய்ய முடியாதபோதுதான், ஒப்ப அறிவிப்புகளை வரவழைத்த பிறகு பணிகளை ஒப்பந்தத்தின் மேல் விட வேண்டும்.

2. அரசாங்கத்தார் மேற்படி நிலையை (நெடுஞ்சாலை—ஊர்ப்பொறியியல் பணிகள்) தலைமைப் பொறியாளருடனும் மாவட்டங்களின் ஆட்சியாளர் களுடனும் கலந்தாலோசித்து மீண்டும் ஆய்ந்திருக்கிறார்கள்; ஒப்ப அறிவிப்புகளை வரவழைத்து பிறகு ஒப்பந்தக்காரர்களிடம் பணிகளை ஒப்பு விப்பதனால் இன்னும் நல்ல பலன்கள் கிடைக்குமென்னும் முடிவுக்கு வந்திருக் கிறார்கள். ஆகையால் அரசாங்கத்தார், மேலே 1 ஆவது பத்தியில் குறிப்பிடப் பட்டிருக்கிற ஆணைகளை மாற்றக் கட்டளையிடுவது என்னவென்றால், ஊர்ப் பணிகள் திட்டத்தின்படிச் செய்து முடிப்பதற்காகப் பணிகளை ஊராட்சிகளிடம் ஒப்புவிக்கும் முறையை 1965 ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் நிறுத்தி விட வேண்டும்; ஊராட்சி ஒன்றியப் பணிகளுக்குத் தொடர்பான ஒப்ப அறிவிப்பு விதிகளின்படி ஒப்ப அறிவிப்புகளை வரவழைத்த பிறகு, பணிகளை ஒப்பந்தக் காரர்களிடம் ஒப்புவிக்க வேண்டும்.

3. மாவட்ட ஆட்சியாளர்கள் இக் குறிப்பாணை கிடைத்ததை அறிவிக்கும் படியும், பெற்றுக் கொண்டதற்கான சீட்டுக்களை ஊராட்சி ஒன்றியங்களிட

பிருந்து வாங்கித் தங்கள் அலுவலகங்களில் கோத்து வைக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

(1965 மார்ச்சு 16 ஆம் தேதிய 24624- பி-4/63-13 ஆம் ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

24. **உறுப்பினர்களின் தகுதியின்மை பற்றிய ஐயப்பாடுகளைத் தீர்ப்பதற் குரிய நீதித் துறை அதிகாரி.**—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 28 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) ஆவது உட்பிரிவின்படிக் கான விண்ணப்பங்களை எந்த நீதித்துறை அதிகாரிக்குச் செய்ய வேண்டு மென்பது :—நீலகிரி அல்லாத மற்ற மாவட்டகளைப் பொறுத்தவரை, தொடர் புடைய ஊராட்சி அலுவலகம் இருக்கிற இடத்தின் மீது நாட்டின் பகுதி ஆட்சி வரம்புடைய மாவட்ட முன்சீப்பும் அல்லது அத்தகைய மாவட்ட முன்சீப்புகள் பலர் இருந்தால் தலைமை மாவட்ட முன்சீப்பும், நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை உதகமண்டலத்திலுள்ள சார்நீதிபதியும் ஆவார்.

ஆனுல், நீலகிரியல்லாத மற்ற மாவட்டங்களில் அத்தகைய ஒரு விண்ணப்பத்தை அந்த மாவட்டத்திலுள்ள வேறு எந்த மாவட்ட முன்சீப்புக் கேனும் மாற்ற மாவட்ட நீதிபதிக்கு அதிகாரமுண்டு.

(1961 எப்ரல் 26 ஆம் தேதியிட்ட 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி— உள்ளாட்சித் துறை பல்வகை அரசாங்க ஆணை.)

(51) **தேர்தல் நடக்குமிடங்களில் காவலர்களை இருக்கும்படி** செய்தல்.— தேர்தல் நடக்குமிடங்களில் அமைதிக் குலைவு உண்டாகாமல் தடுப்பதற்கும் வாக்காளர்கள் அச்சுறுத்தலுக்கும் போக்கிரிகளின் துர் நடத்தைக்கும் உட்படாமல் தங்கள் வாக்குகளை அளிப்பது இயலுமாறு செய்யும்பொருட்டும், அங்கே போதுமான காவல் படையை வைக்க வேண்டும். தேர்தல்கள் நடத்தும் தேதிகள் பற்றிய திட்டத்தை வட்டார ஆய்வாளர் ஒப்புக்கொண்டவுடன் அதன் படி ஒன்றை, மாவட்ட ஊராட்சி அலுவலர்களுக்கும் இணை மாவட்ட ஊராட்சி அலுவலர்களுக்கும், தொடர்புடைய மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களுக்கும் தாமதமின்றி அனுப்ப வேண்டும், அப்படி அனுப்பினுல்தான், மாவட்ட ஆட்சியாளர்களும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களும் தேர்தல்களின்போது ஊர்களில் காவல் பாதுகாப்புக்காக ஏற்பாடு செய்ய முடியும்.

(1952 செப்டெம்பர் 17 ஆம் தேதிய 1858 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாங்க ஆணை.)

(52) ஊராட்சிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக நிற்பதற்குத் தகுதியற்றவர்களாக்கப்பட்டிருப்பவர்கள்.—சமய நிறுவனங்களைச் சேர்ந்த எந்தச் செயல் அலுவலர்களுக்கு அரசாங்கப் பணியாளர் நடத்தை விதிகள் பொருந்தும்படிச் செய்யப்பட்டிருக்கின்றனவோ அந்த அலுவலர்கள், ஊராட்சி உறுப்பினராகவோ தலைவராகவோ தேர்ந்தெடுக்கப்பட நிற்பதற்குத் தகுதியற்றவர்களாவார்கள்.

(1953 ஆம் ஆண்டு மார்ச்சு 2 ஆம் தேதிய 3708/53-2 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(53) அரசாங்கப் பணியாளர்கள் அல்லாத கூட்டுறவு நிறுவனங்களிலும் பண்டகசாலைகளிலும் பணியாற்றுபவர்களுமான நபர்கள் ஊராட்சி உறுப்பினராகவோ தலைவராகவோ தேர்ந்தெடுக்கப்பட நிற்பதற்குத் தகுதியற்றவர்கள் ஆக மாட்டார்கள்.

(1953 ஆம் ஆண்டு மார்ச்சு 2 ஆம் தேதிய 3708/53-2 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(54) ஒரு தொழிற்சாலை வரி பாக்கி வைத்திருந்தால் அதன் கூட்டாளி ஒவ்வொருவரும், தாம் ஊராட்சிக்குச் செலுத்த வேண்டிய வரி பாக்கி வைத்திருப்பதாகக் கருதப்படுவார்; அதனால் ஊராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியற்றவராவார்.

(1953 ஆம் ஆண்டு மார்ச்சு 18 ஆம் தேதிய 3709/53-2 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(55) துறைக்குப் புறம்பான கிளை அஞ்சலகத் தலைவர்கள் ஊராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட நிற்பதற்குத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

(1953 ஆம் ஆண்டு மார்ச்சு 23 ஆம் தேதிய 2930/53-1 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(56) ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட ஊர் மருத்துவர்கள், ஊராட்சி உட்பட எந்த உள்ளாட்சி அதிகார சபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட நிற்கக் கூடாது.

(1942 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் தேதிய 2111 ஆம் எண் பொது நலத் துறைப் பலகைக் குறிப்பாணை.)

(57) தொகுதிகளுக்கு இடங்களை ஒதுக்கீடு செய்வது.—நடைமுறையில் அடங்கியுள்ள சில இடர்ப்பாடுகளைக் கருதி ஒரு ஊராட்சியின் எந்தத் தொகுதிக்கும் மூன்றுக்கு மேற்பட்ட இடங்களை ஒதுக்கக் கூடாது.

(1963 ஆம் ஆண்டு மே 21 ஆம் தேதிய 11740/53-4-1 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(58) ஊராட்சித் தொடர்பான முதல் உரிமையியல் வழக்கு ஒன்றில், எதிர்வாதத்துக்கு ஒப்பளிக்கும்படியும், வரைவாக எழுதப்பட்டுள்ள அறிக்கையை ஏற்கும்படியும் மாவட்ட ஆட்சியாளர் ஒருவர் வருவாய்த் துறை வாரியத்தைக் கேட்டுக்கொண்ட செய்தி ஒன்று அரசாங்கத்தாரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஊராட்சிகளின் அமைப்பு, அவைகள் செயலாற்றுவது, ஊராட்சித் தலைவர்களை அகற்றுவது முதலியவற்றிற்கு வருவாய் வாரியத்துக்குச் சம்பந்தமில்லை. அத்தகையவற்றில் நீதிப் பேராணை (ரிட்) மனுக்கள் அல்லது வழக்குகள் பற்றி அரசாங்கத்தார் மட்டுமே எதிர் வாதத்துக்கு ஒப்பளிக்கவும், எதிர் ஆணையுறுதிப் பத்திரங்களின் வரைவு அல்லது வரைவாக எழுதப்பட்டுள்ள அறிக்கைகளை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

2. எல்லா மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் கோயம்புத்தூர் கூட்டு மாவட்ட ஆட்சியாளருக்கும் தெரிவிப்பது என்னவென்றால் ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சிகளின் அமைப்புத் தொடர்பான நீதிப் பேராணை (ரிட்) மனுக்கள், முதல் உரிமையில் வழக்குகள் முதலியவற்றில் அவர்கள் அரசாங்கத்தாருக்கு நேர்முகமாக எழுதலாம்; வருவாய்த் துறை வாரியத்துக்கு எழுதக்கூடாது.

(1963 ஆம் ஆண்டு ஜூன் 24 ஆம் தேதிய 77466/சி2/63-2 ஆம் எண் குறிப்பாணை.)

(59) ஓர் ஊராட்சியின் தலைவருக்கு அல்லது துணைத் தலைவருக்கு எதிரான நம்பிக்கையின்மைத் தீர்மானம் பற்றி ஆலோசிப்பதற்கான கூட்டம் ஒன்று கூட்டுவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறை, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 152 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) முதல் (12) வரையிலுள்ள உட்பிரிவுகளில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும், மேற்படி உட்பிரிவுகளில் கண்டுள்ள நடைமுறையை வட்டாட்சியர்கள் பின்பற்றவில்லையென்று, ஊராட்சிகளின் தலைவர்களுக்கு எதிரான நம்பிக்கை யின்மை தீர்மானம் தொடர்பான சில நீதிப் பேராணை (ரிட்) மனுக்களில் உயர் நீதிமன்றத்தார் செய்த தீர்ப்புகளிலிருந்து தெரியவருகிறது. ஆகையால் உயர்

நீதிமன்றத்தார் நீதிப் பேராணை (ரிட்) மனுக்களுக்கு இசைவு தந்து, தொடர்புள்ள நம்பிக்கையின்மைத் தீர்மான நடவடிக்கைகளை ரத்து செய்திருக்கிறார்கள்.

2. கம்பைநல்லூர் ஊராட்சி (சேலம் மாவட்டம்) தலைவருக்கு எதிரான நம்பிக்கையின்மைத் தீர்மானம் சம்பந்தமாக 1961 ஆம் ஆண்டின் 932 ஆம் எண் நீதிப் பேராணை (ரிட்) மனுவில், குற்றச்சாட்டுகளின் விவரப்பட்டியின் படி ஒன்றை மனுதாரரிடம் சேர்ப்பிக்கத் தவறிப் போனதால், தனிக் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையின்மைத் தீர்மானம் செல்லாதென்று உயர்நீதிமன்றத்தார் கருதி அது காரணமாக, தலைவரைப் பதவியிலிருந்து அகற்றின மாவட்ட ஆட்சியாளர் ஆணையை ரத்து செய்திருக்கிறார்கள்.

3. பாலூர் ஊராட்சி (தென் ஆற்காடு மாவட்டம்) தலைவருக்கு எதிரான நம்பிக்கையின்மைத் தீர்மானம் சம்பந்தமான 1962 ஆம் ஆண்டின் 805 ஆம் எண் நீதிப் பேராணை (ரிட்) மனுவின் மீது செய்துகொள்ளப்பட்ட 1963 ஆம் ஆண்டின் 25 ஆம் எண் நீதிப் பேராணை (ரிட்) மேல்முறையீட்டில், விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைக்கு மாறாக அறிவிப்புச் சேர்ப்பிக்கப்பட்டபடியால், தலைவரிடம் அறிவிப்பு தக்கவாறு சேர்ப்பிக்கப்படவில்லையென்று உயர் நீதிமன்றத்தார் கருதினார்கள். எனவே உயர்நீதிமன்றத்தார் நீதிப் பேராணை (ரிட்) மேல்முறையீட்டுக்கு இசைவு தந்தார்கள்.

4. செங்கையம் ஊராட்சித் தலைவருக்கு எதிரான நம்பிக்கையின்மைத் தீர்மானம் சம்பந்தமான நீதிப் பேராணை (ரிட்) மனுவில், குற்றச் சாட்டுகள் பற்றிய அறிக்கையை அல்லது அக் குற்றச் சாட்டுகளுக்குப் பதிலாக மனுதார் கொடுத்த அறிக்கையை வட்டாட்சியாளர் படித்துக் காட்டவில்லையென்னும் காரணத்தினால், உயர்நீதிமன்றத்தார் நீதிப் பேராணை (ரிட்) மனுவுக்கு இசைவு தந்தார்கள்.

5. மேற்காட்டியவைகளிலிருந்து தெரிவது என்னவென்றால், தங்களுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையின்மைத் தீர்மானங்களினால் பாதிக்கப்பட்ட ஊராட்சித் தலைவர்கள் கொடுத்த நீதிப் பேராணை (ரிட்) மனுக்களில், சம்பந்தப்பட்ட வட்டாட்சியாளர் பின்பற்றிய முறையற்ற நடைமுறையினால் நீதிப் பேராணை (ரிட்) மனுவுக்கு அல்லது நீதிப் பேராணை (ரிட்) மேல்முறையீட்டுக்கு இசைவு கொடுத்து, மாவட்ட ஆட்சியாளரின் ஆணையை ரத்து செய்ய வேண்டியதாயிற்று. ஆகையால், ஊராட்சிகளின் தலைவருக்கு அல்லது துணைத் தலைவர்களுக்கு எதிரான நம்பிக்கையின்மைத் தீர்மானம் பற்றி ஆலோசிப்பதற்காகக் கூட்டங்கள் கூட்டும்போது, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 152 ஆம் பிரிவில் கண்டுள்ள நடைமுறையைக் கண்டிப்பாகப் பின்பற்றும்படித் தங்கள் மாவட்டங்களில் உள்ள வட்டாட்சி

யாளர்களுக்குத் தகுந்த விளக்கவுரைகள் கொடுக்கும்படி (சென்னை மாவட்ட ஆட்சியாளர்கள் தவிர மற்ற) எல்லா மாவட்ட ஆட்சியாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 150 ஆவது, 152 ஆவது பிரிவுகளின்படி நடத்தப்படும் கூட்டங்களுக்கான அறிவிப்பு சேர்ப்பிப்பது சம்பந்தமாக, 1963 ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் தேதிய 151348/இ-2/63-1 ஆம் எண் அரசாங்கக் குறிப்பாணையைக் கவனிக்கும்படி எல்லா மாவட்ட ஆட்சியாளர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பிறப்பிக்கப்பட்ட விளக்க உரைகளின் நகல் ஒன்றை அரசாங்கத்தாருக்கு அனுப்ப வேண்டும்.

(1963 ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் தேதிய 2284 ஆம் எண் ஊரக வளர்ச்சி — உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(60) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 152 ஆவது பிரிவின் நோக்கத்தை விளக்குவதற்காக, மேற்குறித்த அரசாங்க ஆணையில் (உடனே பார்ப்பதற்கு அதன் படி ஒன்று இதனுடன் வைக்கப்பட்டுள்ளது) பிறப்பிக்கப்பட்ட விளக்க உரைகளைக் கவனித்துப் பார்க்கும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அந்த விளக்க உரைகள் சரிவரப் புரிந்துகொள்ளப்படவில்லை எனத் தெரிகிறது. ஆகையால் நிலைமையைத் தெளிவாக்க அரசாங்கத்தார் விரும்புகிறார்கள். அதற்கிணங்கப் பின்வரும் தெளிவுரையைப் பிறப்பிக்கிறார்கள்.

2. 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 152 ஆவது பிரிவைச் சேர்ந்த (3), (4), (5) உட்பிரிவுகளில் சொல்லியிருப்பது என்னவென்றால், தலைவர் அல்லது துணைத் தலைவர் தமது பதிலை அனுப்புவதற்கு வட்டாட்சியாளர் அவருக்கு ஒரு வார காலம் கொடுக்க வேண்டியதுமல்லாமல், தமது பதிலை அனுப்புவதற்காக ஏற்றவாறு தலைவருக்கு அல்லது துணைத் தலைவருக்கு அளிக்கப்பட்ட காலம் கழிந்துபோன பிறகு, உள்ளபடியான கூட்டத்தைக் குறித்து உறுப்பினர்களுக்குத் தெளிவாகப் பதினைந்து நாட்களுக்குமுன் அறிக்கை அனுப்பவும் வேண்டும். வட்டாட்சியாளர் (3), (5) ஆகிய இரண்டு உட்பிரிவுகளிலும் சொல்லியிருப்பவைகளை ஒருங்கிணைத்துத் தமது பதிலை அனுப்புவதற்குத் தலைவருக்கு அல்லது துணைத் தலைவருக்கு அளிக்கப்படும் காலம் உட்பட, கூட்டப்பட இருக்கும் கூட்டத்தைப் பற்றி ஒரே போக்கில் மூன்று வார அறிக்கை கொடுக்கக் கூடாது. இதன் நோக்கம் என்னவென்றால், சம்பந்தப்பட்ட தலைவர் அல்லது துணைத் தலைவர் தமது பதிலை எழுத அவருக்குக் குறைந்தது ஒரு வார காலம் இருக்க வேண்டுமென்பதும், அதற்குப் பிறகு, உறுப்பினர்கள் நிலைமையை ஆலோசித்துப்

பார்க்கத் தெளிவாகப் பதினைந்து நாள் அவகாசம் இருக்க வேண்டுமென்பதும் ஆகும். நோக்கம் என்னவென்றால், அவர்கள் விசாரணைகள் செய்து, நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டுமா வேண்டாமா என்று தாங்களே சந்தேகமறத் தெரிந்துகொள்ளலாம். இதற்கிடையில், தமது சொந்த ஊராட்சி உறுப்பினர்களின் நம்பிக்கைக்குத் தாம் உரியவர் என்று அவர்கள் உணரும்படிச் செய்வதற்கும் தலைவருக்கு அல்லது துணைத் தலைவருக்கு அதே இடைவேளை இருக்கும்.

3. அண்மையில் நீதிப் பேராணை (ரிட்) மேல்முறையீடு ஒன்றைத் தீர்வு செய்கையில், வெறும் சோம்பல் காரணமாக இரண்டு கட்டங்களையும் ஒருங்கிணைக்கும் வழக்கத்தைத் தவிர்க்க வேண்டுமென உயர்நீதிமன்றத்தார் வற்புறுத்தியிருக்கிறார்கள். அடுத்தடுத்து வரும் முறைகள் கவனமாக நிறைவேற்றப்படும்படிப் பார்த்துக் கொள்ளுமாறு அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். அத் தீர்ப்பின் நகல் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளது. இது பற்றி வட்டாட்சியாளர்களுக்கு விவரமாகவும் தெளிவாகவும் விளக்க உரைகள் பிறப்பிக்கும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

4. இந்த ஆணைக் குறிப்பு வந்து சேர்ந்ததைத் தெரிவிக்க வேண்டும்.

(1966 ஆம் ஆண்டு ஆகஸ்டு 29 ஆம் தேதிய 99239/இ-1/66-2 ஆம் எண் குறிப்பாணை.)

1962 பெப்ரவரி 26 ஆம் தேதி 412 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணையின்படி.—ஓர் ஊராட்சியின் தலைவரிடம் அல்லது துணைத் தலைவரிடம் நம்பிக்கையின்மைத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்கான நடைமுறை, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்டிருக்கிறது. குற்றச் சாட்டுகள் பற்றிய அறிக்கையின் படி ஒன்றையும் கூட்டத்தைப் பற்றிய அறிவிப்பையும் வட்டாட்சியர் சம்பந்தப்பட்ட தலைவருக்கு அல்லது துணைத் தலைவருக்குக் கொடுக்கும்படி செய்ய வேண்டுமென்றும், தலைவராவது துணைத் தலைவராவது அந்த அறிக்கையைப் பெற்றுக் கொண்டதிலிருந்து ஒரு வாரத்துக்குள் அக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் கூறும் வகையில் ஓர் அறிக்கை கொடுக்க வேண்டுமென்றும் அப் பிரிவின் (3) உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உட்பிரிவில் கண்ட "கூட்டத்தைப் பற்றிய அறிவிப்பு" என்னும் சொற்றொடர், நம்பிக்கையின்மைத் தீர்மானத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காகக் கூட்டம் நடத்தப்போகும் தேதி என்று பொருள்படுமா என ஒரு வினா எழுப்பப்பட்டிருக்கிறது.

2. அரசாங்கத்தார் இதைப் பற்றிப் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்கள் 152 (3) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள "கூட்டத்தைப் பற்றிய அறிவிப்பு" என்பதற்கு, கூட்டத்துக்காக என்று நிச்சயிக்கப்பட்ட தேதியையும் நேரத்தையும் பற்றிய அறிக்கைகளைக் குறிப்பதாகப் பொருள்கொள்ள முடியாது. "கூட்டத்தைப் பற்றிய அறிவிப்பு" என்னும் சொற்றொடருக்கு பிரிவு 152 (3) படி இயல்பாகப் பொருள்கொள்வோமானால், கீழ்க்கண்டவாறு பொருள் கொள்ள முடியும்; அதாவது வட்டாட்சியாளர் பிறப்பித்த அறிவிப்பில் கண்ட கால அளவு கழிந்துபோன பிறகு தீர்மானத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காக அவர் ஒரு கூட்டம் கூட்டுவாரென்றும், சந்தர்ப்பத்துக்கேற்ப தலைவருக்கு, துணைத் தலைவருக்குத் தெரிவித்தும்; அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ள குற்றச் சட்டங்கள் பற்றிய அறிக்கைக்குப் பதில் கூறும் வகையில் அந்த அறிவிப்பு வந்து சேர்ந்ததிலிருந்து ஒரு வாரத்துக்குள் ஓர் அறிக்கை கொடுக்கும்படி சந்தர்ப்பத்துக்கேற்பத் தலைவரை அல்லது துணைத் தலைவரைக் கேட்டும்; வட்டாட்சியாளர், தலைவர் அல்லது துணைத் தலைவருக்கு ஓர் அறிவிப்பு அனுப்ப வேண்டும். 152 (3) பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கிற கால அளவுக்குள் பதில் வந்தாலும் வராவிட்டாலும் வட்டாட்சியாளர் மேற்சொன்ன கால அளவு கழிந்துபோன பிறகு, தீர்மானத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காகத் தாம் நிச்சயிக்கிற நேரத்தில் கூட்டம் ஒன்றைக் கூட்ட வேண்டும். 152 (5) பிரிவின்படி, அக் கூட்டத்தைப் பற்றியும் அதற்காக நிச்சயிக்கப்பட்ட நேரத்தைப் பற்றியுமான அறிவிப்பு, அந்த அறிவிப்பு சேர்ப்பிக்கப்பட்ட பிறகு முழு பதினைந்து நாட்கள் இருக்கும்படியாக உறுப்பினர்களுக்கு அனுப்பவேண்டும்.

3. சேலம் மாவட்ட ஆட்சியாளருக்குத் தெரிவிப்பது என்னவென்றால், அவர் அறிக்கை செய்த நேர்வில் குற்றச்சாட்டுகளைப் பற்றிய அறிக்கையின் படி ஒன்றையும் தீர்மானம் ஆலோசிக்கப்படவிருக்கிற கூட்டத்தைப் பற்றிய அறிவிப்பையும் வட்டாட்சியர் தலைவருக்கு அனுப்பி, அப்படி அனுப்புகையில் அக் கூட்டத்தைப் பற்றித் தெளிவாகப் பதினைந்து நாட்களுக்குக் குறையாமல் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கும்பொருட்டு, மேற்படி இரண்டு அறிக்கைகளையும் தாம் அனுப்பிய தேதியிலிருந்து பதினைந்து நாட்கள் தள்ளியுள்ள ஒரு நாளை, கூட்டத்தின் நாளாக நிச்சயித்திருந்தபோதிலும், அதில் 152 (3) பிரிவின்படிப் பிறப்பிக்கப்படும் அறிவிப்பின் கால அளவு கழிந்துபோன பிறகு வட்டாட்சியாளர் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்றும் 152 (4) பிரிவின் சட்டப்பூர்வமான நிபந்தனை நிறைவேற்றப்படவில்லை. ஆயினும், இந் நிகழ்ச்சியில் நடைமுறை பின்பற்றப்படவில்லையே தவிர, உட்கருத்து பாதிக்கப்படவில்லை. கூட்டத்தைப் பற்றித் தெளிவாகப் பதினைந்து

நாட்களுக்குக் குறையாமல் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் வட்டாட்சியாளர் கூட்டத்தின் தேதியை நிச்சயித்திருக்கிறபடியால், தெளிவாகப் பதினைந்து நாள் அறிக்கை பற்றிய 152 (5) பிரிவின் தேவையை வட்டாட்சியாளர் நிறைவேற்றியிருக்கிறார். இதைக் கருதி வட்டாட்சியாளர் ஏற்கெனவே எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்கிணங்க, குறிப்பிட்ட இந்த நிகழ்ச்சியில் தலைவரை அகற்றுவதற்காக, சேலம் மாவட்ட ஆட்சியாளர் 152 (13) ஆவது பிரிவின்படி மேற்கொண்டு செயலாற்றுவதற்குத் தடை ஒன்றுமில்லை.

4. மேற்குறித்த தமது கடிதத்தில் 4 ஆவது பத்தியையொட்டி சேலம் மாவட்ட ஆட்சியாளருக்குத் தெரிவிப்பது என்னவென்றால், அரசியலமைப்புச் சட்டத்தில் கண்ட 384 (I) (ஆ) (ii) பிரிவின்படி, ஒரு மாநிலத்தின் சட்ட மன்றத்தினால் நிறைவேற்றப்படுகிற எல்லாச் சட்டங்களின் அதிகார பூர்வமான மூலங்கள் ஆங்கில மொழியிலிருக்க வேண்டும். ஆகையால், மாநில அரசிதழில் ஆங்கில மொழியில் வெளியிடப்பட்ட 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டம் அதிகார பூர்வமான மூலமேயல்லாமல், மாநில அரசிதழில் வெளியிடப்பட்ட அவ்வாசகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு அன்று.

சென்னையிலுள்ள உயர் நீதி மன்றத்தில்

(மேல்முறையீட்டு விசாரணை அதிகாரம்.)

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தாறும் ஆண்டு சூலை இருபத்தெட்டாம் நாள் வியாழக்கிழமை (சக 1888 சிராவணம் 6 ஆம் நாள்.)

வந்திருந்தவர்கள்.

மாண்புமிகு திரு. எம். அனந்தநாராயணன், தலைமை நீதிபதி.
மாண்புமிகு நீதிபதி திரு. வெங்கடராமன்
1966 ஆம் ஆண்டின் 138 ஆம் எண் ரிட் மேல்முறையீடு

ஒரு சார்

கே. பானுசாமிகோனுன்,
மேல்முறையீட்டாளர் (உயர் நீதி மன்றத்தின் கோப்பில் உள்ள 1966 இன் 1267 ஆம் எண் ரிட் மனுவில் மனுதாரர்.)
என்பவருக்கும்,

மற்ருெரு சார்

1. எஸ். எம். சிவசாமி.

2. பி. கே. அரங்கசாமி.

3. என். சத்தியமூர்த்தி.

4. எம். சீனி.

5. கே. ஸ்ரீநிவாசன்.

6. ஏ. வெள்ளைச்சாமி.

7. துளசிராம்.

8. எஸ். மாரிசாமி.

9. ஈ. வீராணன்.

10. ஏ. எஸ். அரிஅரன்.

11. மதுரை வட்டாட்சியாளர்.

12. மதுரை மாவட்ட ஆட்சியாளர்.

எதிர்வாதிகள்

(உயர் நீதிமன்றத்தின் கோப்பிலுள்ள 1966 இன் 1267 ஆம் எண் ரிட் மனுவில் எதிர்வாதிகள்.)

என்பவருக்கும்

இடையில்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கண்ட 226 ஆவது பிரிவின்படிக் கொடுத்துக் கொள்ளப்பட்ட 1966 ஆம் ஆண்டின் 1267 ஆம் எண் ரிட் மனுவில், மதுரை வட்டம் மாடக்குளம் பேரூராட்சியினர் 1966 ஏப்ரல் 30 ஆம் தேதியன்று மனுதாரருக்கு மாருக நிறைவேற்றிய நம்பிக்கையின்மைத் தீர்மானம் சம்பந்தமாக 11 ஆவது, 12 ஆவது எதிர்வாதிகளின் கோப்பிலிருப்பவைகளுமான ஆவணங்களை அனுப்பும்படிக் கேட்டு சர்ஷியோராரை ரிட் (நெறிமுறை உறுத்தும் நீதிப் பேராணை) பிறப்பிக்கும்படியும், அதை ரத்து செய்யும்படியும். உயர்நீதி மன்றத்தாரின் தனி அசல் விசாரணை அதிகாரத்தைச் செலுத்தும் வகையில் 1966 ஜூலை 13 ஆம் நாளன்று மாண்புமிகு நீதிபதி திரு. கைலாசம் பிறப்பித்த ஆணையை எதிர்த்து, உரிமைப் பட்டயத்தில் கண்ட 15 ஆவது பகுதியின்படி செய்து கொள்ளப்படும் மேல்முறையீடு.

ஆணை.

1966 இன் 1267 ஆம் எண் ரிட் மனுவில் உயர் நீதிமன்றத்தாரின் தனி அசல் விசாரணை அதிகாரத்தைச் செலுத்தும் வகையில் மாண்புமிகு நீதிபதி திரு. கைலாசம் 1966 சூலை 13 ஆம் நாளன்று பிறப்பித்த ஆணையை எதிர்த்துச் செய்து கொள்ளப்பட்ட மேல்முறையீட்டுக்கான காரணங்களைப் பார்த்ததன் பேரிலும், இவ்வழக்கிற்குப் பொருத்தமான மற்றெல்லா ஆவணங்களையும் பார்த்ததன் பேரிலும், மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞரான திரு. ஆர். கோபாலசாமி ஐயங்காரின் வாதத்தைக் கேட்டதன் பேரிலும், ரிட் மேல்முறையீட்டில், நீதிமன்றத்தார் பின்வருமாறு ஆணை பிறப்பித்தார்கள் :—

(மாண்புமிகு தலைமை நீதிபதியின் நீதிமன்றத் தீர்ப்பு)

சர்ஷியோராரை ரிட் ஆணை ஒன்று பிறப்பிப்பதற்கான நடவடிக்கைகளைத் தள்ளுபடி செய்து 1966 ஆம் ஆண்டின் 1267 ஆம் எண் ரிட் மனுவில் நீதிபதி கைலாசம் செய்த தீர்ப்பின் மீது இந்த மேல்முறையீடு செய்யக் கருதுகிற ரிட் மனுதாரருக்காக வாதாடிய கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் செய்தார். 1958 ஆம் ஆண்டின் 35 ஆவது தமிழ்நாடு சட்டத்தில் கண்ட 152 (2) பிரிவில் கருதியுள்ள அறிக்கை சேர்ப்பிக்கப்பட்ட பிறகு தலைவராவது துணைத் தலைவராவது விளக்கம் தெரிவிப்பதற்காக வட்டாட்சியாளர் அவருக்கு ஒரு வார காலம் கொடுக்க வேண்டியதுமல்லாமல், 152 (3) பிரிவில் குறிப்பிட்டிருக்கிற அறிக்கையின் கால அளவு கழிந்துபோன பிறகு மட்டுமே தெளிவாகப் பதினைந்து நாட்களுக்குக் குறையாமல் இடைவேளை இருக்கும்போது கூட்டத்தைப் பற்றிய அறிக்கையை உறுப்பினர்களுக்கு அனுப்பவும் வேண்டும் என்று, 152 ஆவது பிரிவைச் சேர்ந்த (3), (4), (5) உட்பிரிவுகளில் சொல்லப் பட்டிருக்கிறது என்பதே அவ்வாதமாகும். இந்த வாதத்தை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். அந்த உட்பிரிவின் சொல்லமைப்பு தெளிவாயிருக்கிறது ; வட்டாட்சியாளர் இரண்டு தேவைகளையும் ஒருங்கிணைப்பது சரியே என்றும், குற்றச்சாட்டுகளையும் தீர்மானத்தின் வாசகத்தையும் தலைவரிடம் சேர்ப்பித்தவுடன் மூன்று வாரங்களுக்குப் பிறகு கூட்டப்படவிருக்கிற கூட்டத்துக்கான அறிக்கையை அவர் அனுப்பலாமென்றும் பொருள் கொள்வதற்கு அந்த உட்பிரிவு இடம் கொடுக்கவில்லையென நாங்கள் கருதுகிறோம். சட்ட மன்றத்தின் கருத்தும் அதுவேதான் ; அந்த உட்பிரிவின் சொல்லமைதிக்கு ஊறு விளைவிக்காமல் அவ்விதமாக இரண்டு கட்டங்களையும் ஒருங்கிணைக்கலாமென்பதில், கற்றறிந்த நீதிபதியோடு (நீதிபதி கைலாசம்) நாங்கள் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

ஆனால், இதனால் பிந்திய கூட்டம் செல்லாது அல்லது சட்டத்திற்கு மாறானது என்றோ, ரிட் விசாரணை அதிகாரத்தில் தலையிடுவதற்கு நியாயம் இருக்கிற தென்றோ எவ்விதமாகவும் கொள்ளலாகாது. அந்த உட்பிரிவுகளின் நோக்கங்கள் தெளிவாயிருக்கின்றன. நிறைவேற்றக் கருதியுள்ள 'நம்பிக்கையின்மை' தீர்மானமும் குற்றச்சாட்டுக் குறிப்புகளும் தம்மை எதிர் நோக்கியிருக்கும் போது, குற்றச்சாட்டுக்கும் தீர்மானத்தின் வாசகத்துக்கும் பதில் கூறும் வகையில் ஒரு விளக்கம் எழுதுவதற்குக் குறைந்தபட்சம் ஏழு நாட்கள் எடுத்துக்கொள்ள ஒரு தலைவருக்காவது துணைத் தலைவருக்காவது உரிமையுண்டு. அந்தக் குற்றச்சாட்டினையும் விளக்கத்தையும் இதற்கிடையில் உறுப்பினர் களுக்குச் சுற்றறிக்கையாக அனுப்ப வேண்டுமென நிபந்தனை ஏற்படுத்துவது தகுதியென்று சட்டமன்றம் நினைக்கவில்லை. இது துரதிட்டமேயாகும். ஆனால், அவர் முன்னதாகவே விளக்கம் அனுப்பினாலும்கூட, இந்தக் காலம் பெற அவருக்கு உரிமையுண்டு. அதுபோலவே, அறிக்கை கொடுக்கப்பட்டானதும் நடவடிக்கைகள் நடத்துவதில் மூன்றாவது தரப்பினரான வட்டாட்சியாளர் விளக்கத்துக்காகவெனக் கண்டுள்ள ஒரு வாரம் கழிந்த பிறகு, தெளிவாகப் பதினைந்து நாள் இடையிலிருக்கும்படியாக ஒரு தேதியை நிச்சயிக்க வேண்டும்.

குற்றச்சாட்டும் தீர்மானமும் தலைவரிடம் சேர்ப்பிக்கப்பட்டானவுடன் மூன்று வாரங்களுக்குப் பிறகு கூட்டத்தை நிச்சயிப்பது மூலமாக அவர் இரண்டு கட்டங்களையும் ஒருங்கிணைக்கக் கூடாது.

வெளிப்படையாக வெறும் சோம்பல் காரணமாக இரண்டு கட்டங்களையும் ஒருங்கிணைக்கும் போக்கு பரவலாயிருப்பதாக நாங்கள் நம்புவதற்குக் காரண மிருக்கிறது. அத்தகைய ஒருபோக்கு இருக்குமானால், நாங்கள் அதை வன்மை யாகத் தடுக்க விரும்புகிறோம். அடுத்தடுத்து வர வேண்டிய முறைகள் கவன மாக நிறைவேற்றப்படும்படி அதிகாரிகள் பார்த்துக் கொள்ள வேண்டும். வெளிப் படையான நோக்கம் என்னவென்றால், சம்பந்தப்பட்ட தலைவர் தமது விளக்கத்தை வரைவதற்குக் குறைந்தபட்சம் ஒரு வார காலம் அவருக்கிருக்க வேண்டுமென்பதும், அதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் நிலைமையை ஆலோசித்துப் பார்ப்பதற்காக தெளிவாகப் பதினைந்து நாட்கள் இருக்க வேண்டு மென்பதுமேயாகும். உண்மையாகப் பார்க்குமிடத்து, அவர்கள் விசாரணைகள் செய்து, 'நம்பிக்கையின்மை'த் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டுமா வேண்டாமா என்று தாங்களே ஐயமறத் தெரிந்து கொள்ளலாம். பழி சுமத்தப்பட்ட தலைவர் தமது ஊராட்சி உறுப்பினர்களின் நம்பிக்கைக்குத் தாம் உரியவர் என்று அவர்களுக்கு உணர்த்துவதற்குங்கூட அவருக்கு அதே இடைக்காலம் இருக்கும். ஆனால், தற்போதைய வழக்கில், விளக்கத்துக்காக ஒரு வார காலமும், பதினைந்து நாள் இடைக்காலமும் அப்படியே வைத்துக்

கொள்ளப்பட்டிருக்கின்றன. எவ்விதமான பாதகமும் நேரிட்டிருக்கவில்லை. நிகழ்ந்ததென்னவோ முறைகேடுதான்; அதுவும் வருந்தத்தக்கதே. இனிமேல் அதுபோல் நடக்கவிடக் கூடாது. ஆனால், இதனால் கண்கூடாக உண்மையில் எவ்வித பாதகமும் உள்ளபடி ஏற்பட்டுவிடவில்லை. இந்தக் காரணங்களினால் ஆர்.பி. சுகர் கம்பனி எதிரி ராம்பூர் நகராட்சி வழக்கிலும் (ஏ.ஐ.ஆர். 1965 எஸ்.ஸி. 895), டபள்யூ. ஸ்லானி எதிரி மத்தியப் பிரதேச அரசு வழக்கிலும் (ஏ.ஐ.ஆர். 1956 எஸ்.ஸி. 116) சட்ட வலிவுற்ற நடுவர் கருத்துரையைப் பின் பற்றி, பாதகம் ஏற்பட்டதென மெய்ப்பிக்கப்படாமலிருக்கையில் வெறும் முறைகேடு நடந்ததென்பதனாலேயே ரிட் விசாரணை அதிகாரம் செலுத்தப் படுவதில் நாங்கள் குறுக்கிடுவது நியாயமென்று கொள்ள எங்களால் முடிய வில்லை.

இந்தக் கருத்துரைகளுடன் ரிட் மேல்முறையீடு தள்ளிவிடப்படுகிறது.

டி. கே. சுப்பிரமணியம்,

உதவிப் பதிவாளர், மேல்முறையீட்டுப் பிரிவு.

(60-A) தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கொடிக்காடு ஊராட்சித் தலைவருக்கு எதிரான நம்பிக்கையின்மைத் தீர்மானம் சம்பந்தமாக 299/62 ஆம் எண் ரிட் மனுவுக்கு எதிரான 75/64 ஆம் எண் ரிட் மேல்முறையீட்டிலே சென்னை உயர் நீதிமன்றத்தார் தங்கள் தீர்ப்பில் பின்வருமாறு கருத்துரை வழங்கியிருக் கிறார்கள்—அதாவது—"1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 152 (4) பிரிவின் ஏற்பாடுகளைக் கவனிக்கும்போது, ஊராட்சித் தலைவரிடம் நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காகக் கூட்டப்படும் கூட்டம் ஊராட்சி அலுவலகத்தில்தான் நடத்தப்பட வேண்டும்". உயர் நீதிமன்றத்தார் சொல்கிறபடி மேற்படி சட்டத்தின் 152 (4) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டத்தை ஊராட்சி அலுவலகத்தில் நடத்த வேண்டுமேயல்லாமல், வேறெந்த இடத்திலும் நடத்தக் கூடாதென்று அரசாங்கத்தார் கருதுகிறார்கள். சூழ்நிலைகள் என்னவாயிருந் தாலுஞ்சரி, மேற்படி சட்டத்தின் 152 (4) பிரிவின்படிக் கூட்டப்படும் கூட்டங்களை ஊராட்சி அலுவலகம் அல்லாத வேறொரு இடத்தில் எந்தச் சூழ் நிலையிலும் நடத்தக் கூடாதென்று, ஊரக மாவட்டங்களின் ஆட்சியாளருக்குத் தெரிவிக்கப்படுகிறது. வட்டாட்சியாளர்களுக்குத் தக்க விளக்க உரைகள் பிறப் பிக்கும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(2) இவ்வாணையைப் பெற்றுகொண்டதாகத் தெரிவிப்பது நல்லது.

(1965 பெப்ரவரி 18 ஆம் தேதிய 367 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(61) 1965 நவம்பர் 22 ஆம் தேதிய 214759/சி.1/65-2 ஆம் எண் அரசாங்கக் குறிப்பாணையில் பின்வருமாறு விளக்கவுரை வழங்கப்பட்டது; அதாவது ஊராட்சியின் முன்னுள் தலைவர் ஒருவர் தாம் பதவி வகிக்கும் முறைமையில் செய்த ஒரு குற்றத்துக்காக அவர் மீது வழக்குத் தொடருவதற்கு 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 169 ஆவது பிரிவின்படி அரசாங்கத்தாரின் ஒப்பளிப்புப் பெற வேண்டும். ஏனென்றால், குற்றம் செய்த தேதியன்று, தலைவர் அந்த முறைமையில் பதவி வகித்துக் கொண்டிருந்தார். அன்றியும், வழக்குத் தொடர்வதற்கு ஒப்பளிக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதைக் கருதி மாவட்ட ஆட்சியாளர் அந்த ஒப்பளிப்புத் தரலாம்.

(2) ஊராட்சியின் முன்னுள் தலைவர் ஒருவர் அந்த முறைமையில் பதவி வகிக்கும்போது தலைவர் என்ற முறையில் செய்த காரியங்களுக்காக அவர் மீது வழக்குத் தொடர்வதற்கு, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 169 (1) பிரிவின்படி ஒப்பளிப்பு அவசியமில்லையென, 1963 ஆம் ஆண்டின் 1639/1940 ஆம் எண் குற்றச் சீராய்வு வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றத்தார் கருதினார்களென்று எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அத்தகையவற்றில் வழக்குத் தொடர்வதற்கு முன் ஒப்பளிப்பு வேண்டியதின் அவசியம் பற்றிய பிரச்சினை, வழக்குத் தொடரப் பெறுபவர் செய்ததற்குரிய கடமைகளுடன் ஏதேனும் கூட்டுறவு அல்லது இடைத் தொடர்பு இருக்கிறதா என்பதைப் பொறுத்ததாகும். அத்தகைய கூட்டுறவு அல்லது இடைத் தொடர்பு உள்ளதென்று மெய்ப்பிக்கப்பட்டால், அப்போது, குற்றம் செய்யப்பட்ட தேதியன்றும் வழக்குத் தொடரப்படும் தேதியன்றும் அவர் பதவி வகிப்பாரானல் அப்பொழுது ஒப்பளிப்பு வேண்டியது வழக்குத் தொடர்வதற்கு ஒரு முன் நிபந்தனையாகும். ஆகவே, பதவியிலிருந்து விலகிவிட்ட முன்னுள் தலைவர்களைப் பொறுத்தவரை, ஒப்பளிப்புத் தேவையில்லை; ஏனென்றால், வழக்குத் தொடரப்படும் தேதியன்று அவர் பதவியிலிருப்பவர் அல்லர். ஆயினும், பெரிதும் முன் எச்சரிக்கையாயிருக்கும் வகையில் அரசாங்கத்தார் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்கள்; அதாவது, முன்னுள் தலைவர்களைப் பொறுத்தவரையிலுங்கூட ஒப்பளிப்பு அளிக்கப்பட வேண்டும். ஏனென்றால், புகார் செய்யப்பட்ட குற்றம், அந்த அலுவலர் பதவி வகிக்கும் காலத்தில் செய்தற்குரிய கடமைகளுடன் தொடர்புடையதாயிருக்கும்போது, 'ஒப்பளிப்பு இல்லை' என்பதனாலேயே குற்ற வழக்குத் தொடர்பு நடவடிக்கைகள் பழுதுபட்டன என்று வாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான்.

(3) 1963 ஆம் ஆண்டின் 1639, 1940 ஆம் எண் குற்றச் சீராய்வு வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றத்தார் மிக அண்மையில் செய்த தீர்ப்பைக் கருதி ஊராட்சிகளின் முன்னாள் தலைவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 169 ஆவது பிரிவின்படி ஒப்பளிப்பு தேவை இல்லை.

(4) 1965 நவம்பர் 22 ஆம் தேதிய 214759/சி1/65—2 ஆம் எண் குறிப்பாணையில் பிறப்பிக்கப்பட்ட விளக்க உரைகள் ரத்து செய்யப்படுகின்றன.

(1966 மார்ச்சு 22 ஆம் தேதியிட்ட 239445/சி1/65-2 ஆம் எண் குறிப்பாணை.)

25. **ஊராட்சிகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிறுவனங்களுக்கு ஊராட்சிகள் விடுமுறைகள் வழங்குவது.**—அரசாங்க அலுவலகங்கள், நிறுவனங்கள் சம்பந்தமாக அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது ஒப்பளிக்கக் கூடிய பொது விடுமுறைகளும் தனி உள்ளூர் விடுமுறைகளும் மட்டுமே ஊராட்சிகளின் மேல் விசாரணைக்குட்பட்ட அலுவலகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் உண்டு.

ஆனல், எந்த ஊராட்சியும் அரசாங்க அலுவலகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஒப்பளிக்கப்பட்டவை அல்லாத மற்ற விடுமுறைகளை, மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், தன் கட்டுப்பாட்டுக்குட்பட்ட அலுவலகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கக் கூடாது.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

26. **யாதாயினும் ஒரு பொருள் முதலியவை பற்றித் தகவல் தரும்படிக் கேட்க செயல் அதிகாரிக்குள்ள அதிகாரம்.**—(1) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட ஏற்பாடுகளின்படி வரி விதிப்பதற்கு அல்லது ஆய்வு நடத்துவதற்கு அல்லது உரிமம் அல்லது அனுமதி வழங்குவதற்குத் தொடர்பான ஏதேனும் கேள்வி பற்றி தமக்கு முன் வந்து ஏற்றவாறு சான்று கூறும்படி அல்லது ஆவணங்களைக் காட்டும்படி ஒரு ஊராட்சியின் செயல் அதிகாரி எவரையேனும் கட்டளையிட்டு வரவழைக்கலாம்.

(2) எவரேனும் 1 ஆவது விதியின்படி செயல் அதிகாரியால் பிறப்பிக்கப்படும் அழைப்புக் கட்டளைக்குக் கீழ்ப் படியத் தவறிப்போனல், அவருக்குப் பத்து ரூபாய் வரையில் தண்டம் இறுக்கப்படத்தக்கதாகும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

27. செயல்முறைக் குறிப்புகள் அல்லது பதிவுகளுக்குப் படிகள் வழங்குவது.—1. ஓர் ஊராட்சியின் செயல்முறைக் குறிப்புகளின் அல்லது பதிவுகளின் படிகள் அல்லது அவைகளிலிருந்து எடு குறிப்புகள் தேவைப்படுகிற ஒருவர் செயல் அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். (அப்போது, தமது பெயரையும் முகவரியையும், அந்த செயல்முறைக் குறிப்புகளுக்கு அல்லது பதிவுகளுக்குக் கூடிய வரையில் சரியான விவரத்தையும் கொடுக்க வேண்டும்.) எவைகளின் படிகள் அல்லது எவைகளிலிருந்து எடு குறிப்புகள் கேட்கப்படு கின்றனவோ அந்த செயல்முறைக் குறிப்புகள் அல்லது பதிவுகள், நடப்பு (காலெண்டர்) நாட்குறிப்பு ஆண்டுக்கு முந்திய ஓர் ஆண்டைச் சேர்ந்த தாயிருந்தால், விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன், கீழ்க் குறிப்பிட்ட விதப்படி தேடுவதற்கான கட்டணத்தை ஊராட்சிக்குச் செலுத்த வேண்டும் :—

(அ) எந்த ஓர் ஆண்டுக்குரிய பதிவுகளைத் தேடுவதற்காக, ஒரு ஆவணம் அல்லது பதிவுக்காக—ஐம்பது காசுகள்.

(ஆ) அதிகப்படியாக ஒவ்வோர் ஆண்டின் பதிவுகளைத் தேடுவதற்காக —இருபத்தைந்து காசுகள்.

குறிப்பு.—(1) "ஒருவர்" என்னும் சொல்லில், ஒரு ஊராட்சியின் உறுப்பினர், துணைத் தலைவர் அல்லது தலைவர் என்பதும் அடங்கும்.

(2) எதற்குப் படி அல்லது எதிலிருந்து எடு குறிப்பு தேவைப் படுகிறதோ அத்தகைய செயல்முறைக் குறிப்பு அல்லது பதிவு ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் தனித்தனி விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டியதில்லை.

(3) கடிதங்கள், கணக்குகள் அல்லது மற்ற ஆவணங்களின் உள்ளடக் கங்கள் அல்லது அனுபந்தங்கள் எந்த ஆவணங்களைச் சார்ந்தனவோ அவை களின் பாகமாயிருக்கும்; தேடும் காரியங்களுக்காக அவைகளைத் தனி ஆவணங் களென்று கணக்கிடக் கூடாது.

2. பதிவு காணப்படாவிட்டால், செலுத்தப்பட்ட கட்டணம் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஆனால், கேட்கப்படும் ஆவணம் காணப்படவில்லை யெனக் கண்டு ஒரு சான்று விண்ணப்பத்தாரருக்குக் கொடுக்கப்படும்.

3. (1) பதிவு கண்டுபிடிக்கப்பட்டு, அதற்குப் படிகள் அல்லது அதிலிருந்து எடு குறிப்புகள் வழங்க செயல் அதிகாரி தீர்மானித்தால், விண்ணப்பதாரர், பிரதி 175 சொற்களுக்கும் அல்லது அதன் பாகத்துக்குத் தொண்ணூறு காசு கட்டணம் பணமாக செலுத்த வேண்டும்.

(2) பதிவேடுகளிலிருந்து எடுக்கப்படும் விவரப் பட்டியல்கள் அல்லது எடு குறிப்புகள் ஆகியவற்றில் எண்களைப் படி செய்ய வேண்டியிருந்தால், ஐந்து எண்கள் ஒரு சொல்லுக்குச் சமமாகக் கொள்ளப்படும்.

(3) நாட்டுப்படங்கள் அல்லது அமைப்புப் படங்கள் ஆகியவற்றில் செயல் அதிகாரியானவர், ஊராட்சிப் பணிகளின் அல்லது ஊராட்சி ஒன்றியப் பணிகளின் பொறுப்பு வகிக்கிற பொறியியல் பணியாளருடன் கலந்தறிந்து நியாயமான கட்டணத்தை நிச்சயிக்க வேண்டும்.

4. செயல்முறைக் குறிப்பின் அல்லது பதிவின் படிக்காக அல்லது அதிலிருந்து எடு குறிப்புக்காக விதிக்கப்படத்தக்க கட்டணம் இன்னதென்பதை செயல் அதிகாரி விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்க வேண்டும். கட்டணத்தைப் பெற்றுக்கொண்டதும், அவர் படிகளை, எடு குறிப்புகளை அல்லது வரைபட நகல்களைத் தயாரிக்கும்படிச் செய்ய வேண்டும். பின்னர் அந்த படிகள் அல்லது எடுகுறிப்புகள் அவருடைய அலுவலகத்தில் ஆய்ந்து பார்க்கப்பட்ட பிறகு அவை சரியானவையென்று அவர் சான்றிட வேண்டும்; அவைகளைப் பெற்றுக் கொள்ள விண்ணபதாரர் நேரில் வந்தால் அவரிடம் கொடுத்துவிட வேண்டும், அல்லது இதற்காக வேண்டிய அஞ்சல் தலைகளை விண்ணபதாரர் அனுப்பியிருந்தால் அவைகளை அஞ்சலில் அனுப்பிட வேண்டும்.

5. செயல் அதிகாரியாவது இதன்பொருட்டு அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது கையெழுத்திட்டுள்ள ரசீதை (பற்றுச் சீட்டை), தேடுவதற்கான கட்டணம் அல்லது படியெடுப்பதற்கான கட்டணம் செலுத்தியிருக்கும் ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டும்.

6. செயல்முறைக் குறிப்பின் அல்லது பதிவின் படி வழங்குவது அல்லது அதிலிருந்து எடு குறிப்புகள் வழங்குவது ஆட்சேபத்துக்குரியதென்று செயல் அதிகாரி கருதினால், ஒரு மேற்குறிப்பு எழுதி அவர் அவ் விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டும்; அவ்வாறு செய்வதற்கான காரணங்களைச் சுருக்கமாக அவர் அந்த மேற்குறிப்பில் எழுதி வைக்க வேண்டும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 சனவரி 11 ஆம் தேதிய 83 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

28. **அறிவிக்கை அல்லது அறிவிப்பு வெளியிடும் விதம்.**—1. மேற்படி சட்டப்படி அரசாங்கத்தாரால் அல்லது இணை வளர்ச்சி ஆணையாளரால் அல்லது மாவட்ட ஆட்சியாளரால் பிறப்பிக்கப்படும் அறிவிக்கை ஒவ்வொன்றும் மாநில அரசிதழில் வெளியிடப்பட வேண்டும்.

விளக்கம்.—இவ்விதிகளின் செயல்முறைக்காக, "மேற்படி சட்டம்" என்பது, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் என்று பொருள் படும்.

2. மேற்படி சட்டத்திலாவது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலாவது வெளிப்படையாய் வேறுவிதமாகச் சொல்லப்பட்டிருந்தாலன்றி, மற்றபடி, அரசாங்கத்தாரால் அல்லது இணை வளர்ச்சி ஆணையாளரால் அல்லது மாவட்ட ஆட்சியாளரால் பிறப்பிக்கப்படாத மேற்படி சட்டப்படிக்கான அறிவிக்கை ஒவ்வொன்றும், அவ் அறிவிக்கை பொருந்துகிற மாவட்டத்தின் அரசிதழில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடப்பட வேண்டும்.

ஆனால், அத்தகைய ஒரு அறிவிக்கை—

(i) மேற்படி அரசிதழில் ஆங்கிலத்தில் அல்லது தமிழில் வெளியிடப் பட வேண்டுமென்றாவது.

(ii) மேற்படி அரசிதழில் வெளியிடப்படுவதற்குப் பதிலாக தாங்கள் குறிப்பிடுகிற வேறு எந்தவிதத்திலேனும் வெளியிடப்பட வேண்டுமென்றாவது,

(iii) மேற்படி அரசிதழில் வெளியிடப்படுவதுடன், தாங்கள் குறிப்பிடக்கூடிய விதத்திலும் வெளியிடப்பட வேண்டுமென்றுவது கட்டளையிட அரசாங்கத்தாருக்கு அதிகாரமுண்டு.

3. ஊராட்சி, ஓரிடத்தை ஏதேனும் ஒரு காரியத்துக்காக ஒதுக்கி வைக்கும்போதெல்லாம், அல்லது ஓரிடத்தில் இன்னது செய்யக் கூடாதென்று தடுக்கும்போதெல்லாம், செயல் அதிகாரியானவர், இன்ன காரியத்துக்காக அவ்விடம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது அல்லது இன்ன காரியம் அவ்விடத்தில் தடுக்கப்பட்டுள்ளது என்று கண்டு தமிழில் ஓர் அறிவிப்பை அவ்விடத்தில் வைக்கும்படிச் செய்ய வேண்டும்.

4. மேற்படி சட்டத்தில் அல்லது அதன் விதிகளில் வெளிப்படையாய் வேறுவிதமாகச் சொல்லப்பட்டிருந்தாலன்றி மற்றபடி, மேற்படி சட்டத்தின்படி பொதுமக்களுக்கான அறிவிப்பு ஒவ்வொன்றும்—

(அ) அதன்படி ஒன்றை—

(i) ஊராட்சி அலுவலகத்திலும்,

(ii) ஊர் அல்லது பேரூரில் சாவடி அல்லது சாவடிகள் இருந்தால் அங்கேயும் இவைகளில் முதன்மையான ஓரிடத்தில் ஒட்டுவது மூலமாகவும்,

(ஆ) ஊர் அல்லது பேரூரில் தண்டோரா போட்டும் வெளியிடப்பட வேண்டும்.

5. மேற்படி விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, மேற்படி சட்டத்தில் கண்ட 3, 10, 15 16 ஆவது பிரிவுகளின்படிக்கான அறிவிக்கை—

(அ) மாநில அரசிதழில் வெளியிடப்பட வேண்டும்; அவ் அறிக்கைக்கு ஒரு தமிழ்ப்படியை, சம்பந்தப்பட்ட ஊராட்சி அலுவலகத்திலும், அவ்வூரில் அல்லது பேரூரில் சாவடி அல்லது சாவடிகள் இருந்தால் அங்கேயும் இவைகளில் முதன்மையான ஓரிடத்தில் ஒட்ட வேண்டும்.

(ஆ) நாளடைவில் மாவட்ட அரசிதழில் ஆங்கிலத்திலும் தமிழிலுங் கூட வெளியிடப்பட வேண்டும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1243 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1962 ஜூலை 6 ஆம் தேதிய 1518 ஆம் எண் கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(62) கோட்ட ஆட்சியாளர்கள் அறிவிக்கைகளை வெளியிடுதல்.—1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 3, 10, 15 ஆவது பிரிவுகளின்படி ஆய்வாளர் தம்மிடம் ஒப்படைத்த அதிகாரங்களின்படி மண்டல ஆய்வாளர் (கோட்ட ஆட்சியாளர்) பிறப்பிக்கும் அறிவிக்கை ஒவ்வொன்றும் அறிவிக்கை அல்லது அறிவிப்பு வெளியிடும் விதம் பற்றிய விதிகளின் 2 ஆவது விதியில் சொல்லப்பட்டுள்ளவிதமாக வெளியிடப்படுவதுடன்கூட, மாநில அரசிதழில் ஆங்கிலத்தில் வெளியிடப்படவும் வேண்டும்.

(1952 மே 1 ஆம் தேதிய 869 ஆம் எண் உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

(63) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 3, 10, 15, 16 ஆவது பிரிவுகளின்படி ஆய்வாளருக்கு உரியதாக்கப் பட்டுள்ள அதிகாரங்கள் கோட்ட ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டால், அவ்வதிகாரங்களின்படிக் கோட்ட ஆட்சியாளரால் பிறப்பிக்கப்படும் அறிவிக்கை ஒவ்வொன்றும், அறிவிக்கை அல்லது அறிவிப்பு வெளியிடும்விதம் பற்றிய விதிகளின் 2 ஆவது விதியில் சொல்லப்பட்டுள்ள விதமாக வெளியிடப் படுவதுடன்கூட, மாநில அரசிதழில் ஆங்கிலத்தில் வெளியிடப்படவும் வேண்டும்.

[1963 சனவரி 19 ஆம் தேதிய 10485-எல் (தனி)/63-1 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.]

(64) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 3, 10, 15 ஆவது பிரிவுகளின்படிக்கான அதிகாரங்களை மாவட்ட ஆட்சியாளர்களே வைத்திருக்க வேண்டுமென, 1962 ஆகஸ்ட் 17 ஆம் தேதிய 1839 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாங்க ஆணையின் 2 ஆவது

பாராவில் ஆணையிடப்பட்டுள்ளது; மேற்படி சட்டத்தில் கண்ட 16 ஆவது பிரிவின்படிக்கான அதிகாரங்களை இணை வளர்ச்சி ஆணையாளருக்கு உரியதாக்கி, 1961 மே 10 ஆம் தேதிய 1334 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை (P) அரசாங்க ஆணையில் ஆணையிடப்பட்டுள்ளது; இந்த ஆணைகளை உத்தேசித்து 1963 சனவரி 19 ஆம் தேதிய 10485-எல், தனி/63-1 ஆம் எண் குறிப்பாணையில் பிறப்பிக்கப்பட்டுள்ள விளக்க உரைகள் தற்சமயம் பிரயோகப்படமாட்டா என்று சேலம் மாவட்ட ஆட்சியாளருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

(1963 மார்ச் 18 ஆம் தேதிய 45686-எல் தனி/63-1 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைக் குறிப்பு ஆணை.)

29. ஊராட்சிகளின் செயல் அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியவர்களின் கையொப்ப அச்சுகளைப் பயன்படுத்துவது.—1. எந்த உரிமம், அனுமதி அறிவிப்பு, பட்டி அட்டவணை, அழைப்புக் கட்டளை அல்லது வேறு ஆவணத்தில் ஊராட்சிச் செயல் அதிகாரியின் அல்லது வேறு அலுவலரின் கையெழுத்து இருக்க வேண்டுமென்று 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்திலாவது அதன்படிச் செய்யப்பட்ட விதி, துணைச் சட்டம் அல்லது ஒழுங்கு முறை விதியிலாவது சொல்லியிருக்கிறதோ அந்த உரிமம், அனுமதி, அறிவிப்பு பட்டி அட்டவணை அல்லது வேறு ஆவணம் ஒவ்வொன்றும், அதில், ஏற்றவாறு செயல் அதிகாரியினுடைய அல்லது அலுவலருடைய கையொப்ப அச்சு இருந்தால், தக்கவாறு கையெழுத்திடப் பட்டிருப்பதாகக் கருதப்படும்.

2. ஓர் ஊராட்சியின் பெயரில் எழுதப்பட்டுள்ள காசோலைக்காவது ஒரு ஊராட்சி செய்துகொண்ட ஒப்பந்த முறிக்காவது இவ்விதியில் உள்ளது எதுவும் பொருந்துவதாகக் கருதப்பட மாட்டாது.

(1961 எப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(65) அரசாங்கம், துறைத் தலைவர்கள் ஊராட்சிகள் முதலியவர்களுடன் வைத்துக் கொள்ளும் கடிதத் தொடர்பு.— (i) அரசாங்கத்தாருடனும் துறைத் தலைவர்களுடனும் மாவட்ட ஆட்சியாளருடனும் ஊர் பேரூராட்சி வைத்துக் கொள்ளும் கடிதத் தொடர்பு எல்லாம் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளர் மூலமாகச் செல்ல வேண்டும்.

(ii) ஊராட்சிகளிடமிருந்து வரும் கடிதங்களை தீர்வு செய்யத் தமக்கே அதிகாரமிருந்தால் அல்லது அத்தகைய கடிதங்களை மற்றவர்களுக்கு

அனுப்புவது அவசியமன்று என அவர் கருதினல், கோட்ட ஆட்சியாளர் அக் கடிதங்களைத் தாமே தீர்வு செய்யலாம். மற்றவைகளில், அவர் அக் கடிதங்களைத் தமது கருத்துரைகள் எவையேனுமிருந்தால் அவைகளுடன் தக்க அதிகாரிக்கு அனுப்பி வைக்கலாம்.

(iii) அரசாங்கத்தாருக்கு எழுதப்படும் கடிதங்கள் மாவட்ட ஆட்சியாளர் மூலமாகச் செல்ல வேண்டும். ஊராட்சிகளின் ஆய்வாளர் என்னும் முறைமையில் மாவட்ட ஆட்சியாளர் தமக்கு யுத்தமாகத் தோற்றுகிறபடி அக் கடிதங்களைத் தாமே தீர்வு செய்யலாம் அல்லது அவைகளைத் தமது கருத்துரைகள் எவையேனுமிருந்தால் அவைகளுடன் அரசாங்கத்தாருக்கு அனுப்பலாம்.

(iv) குறிப்பிடப்பட்ட ஒரு தேதிக்குள் அரசாங்கத்தார் கேட்கும் ஓர் அறிக்கையை அனுப்புவதைப் போல் அவசரமானவற்றில் மட்டும் ஊராட்சி அரசாங்கத்தாருடன் நேரடியாகக் கடிதத் தொடர்பு வைத்துக் கொள்ளலாம்.

கோட்ட ஆட்சியாளர்கள், கோட்ட ஊராட்சி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்—ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர்கள் அனைவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், ஊராட்சியின் செயல் அதிகாரி கோட்ட ஊராட்சி அலுவலர்களுக்காவது இன்னும் மேல் நிலை அலுவலர்களுக்காவது அனுப்பும் கடிதங்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்—ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர் மூலமாக அனுப்பப்பட வேண்டிய அவசியமில்லை. ஆயினும், ஊராட்சிகளில் மேல்நிலைப் பணியாளர்களின் வருங்காலச் சேம நிதி பற்றி ஊராட்சிகள் எழுதும் கடிதங்கள் தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மூலமாகச் செல்ல வேண்டும். ஏனென்றால், அத்தகைய பணியாளர்களின் வருங்காலச் சேம நிதிக் கணக்கை ஊராட்சி ஒன்றியம் வைத்துவர வேண்டியிருக்கிறது.

அரசாங்கத் துறைகளின் தலைவர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும், கோட்ட ஆட்சியாளர்களும், கோட்ட ஊராட்சி அலுவலர்களும், ஊராட்சிச் செயல் அதிகாரிக்காவது ஊராட்சி செயல் அதிகாரி என்னும் முறைமையில் ஊராட்சித் தலைவருக்காவது எழுதும்போது, குறிப்பாணைப் படிவத்தைப் பயன் படுத்தலாம். வட்டார வளர்ச்சி அலுவலர்கள்—ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர்கள் உள்ளிட்ட மற்றெல்லா அலுவலர்களும் ஊராட்சிச் செயல் அதிகாரிக்கு எழுதும்போது கடித வடிவத்தையே பயன்படுத்த வேண்டும்.

(1962 டிசம்பர் 1 ஆம் தேதிய 2623 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(66) அலுவலக நடைமுறையும் அலுவல் விதிகளும்—பேரூராட்சிகளின் தலைவர்கள், செயல்அதிகாரிகள் ஆகியோருடைய பொறுப்புகள் பற்றிய வரையறை.—பேரூராட்சிக்குச் செயல் அதிகாரியாக ஒரு முழு நேர அலுவலரை அமர்த்தும் வகையில் 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் திட்டத்தை வரையறுப்பதும், தலைவருக்கும் செயல் அதிகாரிக்கும் இடையில் நல்லுறவு ஏற்படுத்துவதற்காகத் தக்க நடைமுறைக் கட்டளைகளைப் பிறப்பிப்பதும் அவசியம் என அரசாங்கத்தார் கருதுகிறார்கள். மேற்படிச் சட்டத்தின் திட்டம் அடியிற் கண்டதாகும்:—

(i) செயல் அலுவலராகிய செயல் அதிகாரிக்குக் கட்டளைகள் பிறப்பிக்க உரிமையுள்ள ஆட்சிக் குழு ஊராட்சி ஆகும்.

(ii) செயல் அதிகாரி, பேரூராட்சியின் சட்டமுறைப்படியான எல்லாத் தீர்மானங்களையும் கட்டளைகளையும் நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கப் படுகிறது.

(iii) பேரூராட்சியின் தலைமை ஏற்கும் அலுவலர் என்னும் முறைமையில், தலைவர் ஊராட்சியின் அன்றாட ஆட்சி முறைக்கு ஊராட்சியின் சார்பாளராவார். ஆகவே, செயல் அதிகாரியின் செயல்களைப் பற்றி இடைவிடாது தெரிவிக்கப் பெறுவதற்கு உரிமையுள்ளவராவார். எவற்றில் செயல் அலுவலர் தலைவருடன் முன்னதாகக் கலந்தறிந்து செயல் அலுவலரும் தலைவரும் பேரூராட்சியும் மேற்படித் திட்டத்தை இடையூறின்றிச் செயற்படுத்துவதற்கு இசைவாயிருக்குமோ அவற்றில் அவ்வாறு கலந்தறிய வேண்டுமென நிர்ணயிப்பது; அரசாங்கத்தாரின் இந்தத் திட்டத்துக்குப் பொருத்தமானதாகும்.

மேற்படிச் சட்டத்தின் மேற்குறித்த திட்டத்தையும் அவ்வாறு கண்டுள்ள அரசாங்கக் கொள்கையையும் செயல்படுத்துவதன் அவசியத்தைப் பற்றித் தொடர்புடைய எல்லாருக்கும் வற்புறுத்திக் கூற அரசாங்கத்தார் விரும்புகிறார்கள்:—

ஊராட்சிக் கடிதப் போக்குவரவு.

(i) கடிதப் போக்குவரவை நெறிப்படுத்துவது.—1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 33 (2) பிரிவின்படி, ஊராட்சிக்கும் அரசாங்கத்தாருக்குமிடையில், தலைவர் மூலமாகவன்றி மற்றபடி, அலுவல் முறைக் கடிதப் போக்குவரவு நடக்கக் கூடாது. தம் மூலமாகச் செயல் அதிகாரி அரசாங்கத்தாருக்கு அல்லது அரசாங்கத்தார் செயல் அதிகாரிக்கு எழுதும் கடிதங்களைத் தலைவர் அனுப்பக் கடமைப்பட்டவராவார். இப்போது

அரசாங்கத்தார் கட்டளையிடுவது என்னவென்றால், கடிதப் போக்குவரவினைப் பேரூராட்சி தலைவர் மூலமாக நெறிப்படுத்தும் இந்த நடைமுறையைப் பேரூராட்சிகளின் செயல் அதிகாரிகளுக்கும், கோட்ட ஆட்சியாளர்களுக்கும், கோட்ட ஊராட்சி அலுவலர்களுக்கும், மாவட்ட ஆட்சியாளர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் இடையில் நடக்கும் கடிதப் போக்குவரவுகளிலும் பின்பற்ற வேண்டும். ஆயினும், சட்டத்தையும் அமைதியையும் பேணுதல், தாமதம் செய்யக் கூடாத அவசரமாயுள்ளவைகள், நேர்முகக் கடிதங்கள் ஆகியவற்றில் கடிதப் போக்குவரவு தலைவர் மூலமாக நடக்க வேண்டியதில்லை. ஊராட்சிகள் பேரூராட்சிகள் தொடர்பான கடிதப் போக்குவரவு பற்றி 1962 டிசம்பர் 1-ஆம் தேதிய 2623-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணையில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளைக் கவனிக்கும்படி பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ii) வரும் கடிதங்கள்.—நேராகச் செயல் அலுவலருக்கோ, தலைவர் மூலமாகச் செயல் அலுவலருக்கோ தலைவருக்கோ முகவரியிட்டு வரும் எல்லாக் கடிதங்களையும் செயல் அலுவலர் திறக்க வேண்டும். தலைவரின் பெயரிட்டு எழுதப்படும் கடிதங்களைத் திறக்காமலேயே தலைவருக்கு அனுப்பிவிட வேண்டும். செயல் அலுவலர் கடிதங்களைத் திறந்து பார்த்தவுடன், தலைவர் அவற்றைப் பார்ப்பதற்காக அவருக்கு அனுப்ப வேண்டும். செயல் அலுவலருக்கும் கடிதங்கள் மிக இரகசியமானவைகளாயிருந்தால் ; உதாரணமாக, சட்டத்தையும் அமைதியையும் பற்றியவைகளாயிருந்தால் ; அவைகளைத் தலைவருக்கு அனுப்ப வேண்டியதில்லை. அவசரமாகச் செயலாற்ற வேண்டுமெனக் குறித்துள்ளவற்றில் கடிதத்துக்குப் படி ஒன்றை எடுத்துக் கொண்டு, செயலாற்றத் தொடங்கி, மூலக் கடிதத்தைத் தலைவர் பார்ப்பதற்காக அவருக்கு அனுப்பிவிட வேண்டும். தலைவர் கொஞ்சங் கூடத் தாமதமின்றி எப்படியும் இருபத்துநான்கு மணி நேரத்துக்குள், கடிதங்களைப் படித்துத் திருப்பி அனுப்பிவிடக் கடமைப்பட்டவராவார்.

(iii) அனுப்பப்படும் கடிதங்கள்.—ஏற்கெனவே சொன்னபடி செயல் அலுவலர், அரசாங்கத்தாருக்கும் மாவட்ட ஆட்சியாளருக்கும் கோட்ட ஆட்சியாளருக்கும், துறைத் தலைவர்களுக்கும் அனுப்பும் கடிதங்கள் தலைவர் மூலமாகச் செல்ல வேண்டும். தலைவர் அக் கடிதங்களை அனுப்புகையில், அக் கடிதத்தின் மேல் தமது கருத்துரைகளை எழுதலாமா என்னும் கேள்வி எழுகிறது. தலைவருக்கு இந்த உரிமை உண்டென்று அரசாங்கத்தார் ஒப்புக் கொள்கிறார்கள்; ஆனால், செயல் அதிகாரியின் கருத்துக்களினின்றும் மாறுபட்ட கருத்துக்களைத் தலைவர் கொள்ள நேருவனவற்றில் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையினால்,

அவர்கள் அவற்றை விவாதித்து, கூடிய வரையில், உடன்பாடான முடிவை மட்டுமே வெளி அலுவலகத்துக்கு அனுப்புவது இயலுவதாயிருக்க வேண்டும். இதை வசதிப்படுத்தும் பொருட்டு, (வெறும் வாலாயத்தன்மை உள்ளவைகளும் இடைக்காலப் பதில்களாயுள்ளவைகளும் அல்லாத மற்றவற்றில்) செயல் அலுவலர் அனுப்பப்படும் கடிதத்தின் கையெழுத்திட்ட செவ்வைப் படியையும் அலுவலகப் படியையும், தொடர்புடைய தாள்களையும் தலைவரிடம் வைக்க வேண்டும்; அவர் அவற்றைப் பார்த்துக் கடிதத்தை அனுப்ப வேண்டும். தலைவர் செயல் அலுவலரினின்றும் மாறுபட்டால், செயல் அலுவலரும் தலைவரும் அது பற்றி விவாதித்து, ஓர் உடன்பாட்டுக்கு வர முயல வேண்டும். உடன் பாட்டுக்குவர முடியாவிட்டால், தலைவர் பொருத்தமான கோப்பினை வரவழைத்து, அது பற்றிய தமது சொந்தக் கருத்துக்களை அலுவலகப் படியிலும் செவ்வைப் படியிலும் எழுதி மேலே அனுப்ப வேண்டும்.

(iv) **முடிவுகள் பற்றிய வார அட்டவணை.**—செயல் அலுவலர் முடிவுகள் பற்றிய வார அட்டவணை ஒன்றைத் தயாரிக்கும்படி செய்து, அதைத் தலைவருடைய பார்வைக்கு அனுப்ப வேண்டும்.

ஊராட்சிப் பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை.—பேரூராட்சிகளின் அலுவலர்கள், பணியாளர்கள் மீதான ஒழுங்குக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் இப்போது செயல் அலுவலருக்கு உரியவைகளாயிருக்கின்றன. ஆயினும், பேரூராட்சிகளின் பணியாளர்களைத் தண்டிப்பது பற்றியவைகளில் செயல் அலுவலர் தலைவருடன் முன்னதாகக் கலந்தாலோசிக்க வேண்டியதன் அவசியத்தை அரசாங்கத்தார் கொள்கையளவில் ஒப்புக் கொள்கிறார்கள்; ஆகவே, அத்தகைய எல்லாவற்றிலும் ஆணைகளைப் பிறப்பிப்பதற்குமுன், செயல் அலுவலர் ஊராட்சித் தலைவருடன் கலந்தலோசிக்க வேண்டுமென அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள். அலுவலருக்கும் தலைவருக்குமிடையே கருத்து வேறுபாடு இருந்தால், கோட்ட ஆட்சியாளரின் இசைவினை முன்னதாகப் பெற்றுக்கொண்டபிறகுதான், செயல் அலுவலர் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(1962 டிசம்பர் 1-ஆம் தேதிய 2621 எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(67) **அமைச்சர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள் முதலியவர்களின் சுற்றுப் பயணத் திட்டத்தை ஊராட்சித் தலைவர்களுக்கு அனுப்புவது.**—அமைச்சர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள், கோட்ட ஆட்சியாளர்கள் ஆகியோரின் சுற்றுப் பயணத்திட்டங்களை ஊராட்சித் தலைவர்களுக்குத் தெரிவித்து வைக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது;

ஏனென்றால், அப்போதுதான், அவர்கள் அவசியமானால், தங்கள் ஊராட்சிகள் தொடர்பான விவகாரங்கள் பற்றி அமைச்சர்கள், துறைத் தலைவர்கள் முதலியவர்களைச் சந்தித்துப் பேச முடியும். ஆகையால், சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கும் அமைச்சர்களின் அல்லது அலுவலர்கள் செல்லும் வழியிலிருக்கிற ஊராட்சி, பேரூராட்சித் தலைவர்களுக்கு, சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் அல்லது அலுவலரின் சுற்றுப்பயணத் திட்டத்தைப் பற்றி முன்னதாகத் தெரிவித்து வைக்க வேண்டுமென அரசாங்கத்தார் ஆணையிட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சியாளருக்கு வரும் சுற்றுப் பயணத் திட்டத்தின் படிகளைச் சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர்களுக்கு உடனுக்குடன் அனுப்பும் படிப் பார்த்துக் கொள்வதற்கு (ஊராட்சி வளர்ச்சி) நேர்முக உதவி அலுவலர்கள் பொறுப்பாளியாவார்கள்.

1962, டிசம்பர் 1 ஆம் தேதிய 225999l-அ/இ/2/62-1 ஆம் எண் குறிப்பாணை.

30. நுழைவதற்கும் பார்வையிடுவதற்குமான அதிகாரங்கள் பற்றிய வரையறைகளும் கட்டுப்பாடும்.—1. 162 ஆவது பிரிவின் (1) உட்பிரிவைச் சேர்ந்த (அ) பகுதியின் காரியங்களுக்காக—

(அ) செயல் அதிகாரியாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றவராவது சூரியன் மறைவதற்கும் சூரியன் கிளம்புவதற்கும் இடையில் நுழையக் கூடாது;

(ஆ) செயல் அதிகாரியாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது, ஒரு குடியிருப்பு வீட்டின் அல்லது குடியிருப்பிடமாகப் பயன் படுத்தும்பொழுது பொதுக் கட்டிடத்தின் பாகத்தின் அநுபோகதாருடைய இசைவு இல்லாமல், அதில் நுழையப் போவதாகக் கருதியிருப்பதைக் குறித்துக் குறைந்தது ஆறு மணி நேரத்துக்கு முன் அந்த அநுபோகதாரர் அறிவிப்புப் பெற்றிருந்தாலன்றி அந்த வீட்டிலும் பாகத்திலும் நுழையக் கூடாது.

(இ). 2 (ஆ) விதியின்படிக்கான அறிவிப்புக் கொடாமல் ஒரு இடத்தில் நுழையக்கூடிய ஒவ்வொரு நிகழ்ச்சியிலும்கூட, பெண்களின் உபயோகத்துக்கென்று வைக்கப்பட்டுள்ள ஓர் அறையில் இருப்பவர்கள் தங்கள் அந்தரங்கம் பாதுகாக்கப்படக்கூடிய அந்த இடத்தில் வேறொரு பாகத்துக்குப் போய்விடுவது இயலுமாறு செயல் அதிகாரி அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ளவர் போதுமான அறிவிப்புக் கொடுக்க வேண்டும்.

(ஈ) செயல் அதிகாரி அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ளவர் நுழைவதின் அவசரத் தேவைக்குப் பொருத்தமாயிருக்கிற வரையில், அந்த இடத்தில் அநுபோகதாரர்களின் சமூகப் பழக்கங்களுக்கும் சமய ஒழுக்கங்களுக்கும் முறைப்படி மதிப்புக் கொடுக்கவேண்டும்.

2. 162 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கண்ட (ஆ) பகுதியின் காரியங்களுக்காக—

(அ) செயல் அதிகாரி அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ளவர் சூரியன் கிளம்புவதற்கும் சூரியன் மறைவதற்கும் இடைப்பட்ட காலத்தில் எந்த இடத்திலும் நுழையலாம்; சூரியன் மறைவுக்கும் சூரியன் கிளம்புவதற்கும் இடையில் கூட, அச் சமயம் அது பொதுமக்களுக்குத் திறந்து விடப்பட்டிருந்தால் அல்லது அதில் ஏதேனும் தொழில் நடந்துகொண்டிருந்தால் அவ்விடத்தில் நுழையலாம்.

(ஆ) கீழ்க்கண்ட காரியங்களுக்காக மேற்படிச் சட்டத்தினுல் அல்லது அதன்படி அல்லது அனுமதி பெற வேண்டியிருந்து, அது இல்லாமல் அக் காரியங்களில்ஒன்றுக்காக ஒரு வளைவிடம் பயன்படுத்தப்பட்டு வருகிறதென்று நம்புவதற்கு ஏது இருந்தால், அல்லது அத்தகைய உரிமத்தின் அல்லது அனுமதியின் நிபந்தனைகளுக்குப் பொருத்தமாயிராமல் மற்றபடி அந்த வளைவிடத்தில் ஏதேனும் செய்யப்பட்டு வருகிறதென்று நம்புவதற்கு ஏது இருந்தால், செயல் அதிகாரியாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது, சட்டம்—விதிகள்—துணைச் சட்டங்கள் அல்லது ஒழுங்கு முறை விதிகளின் ஏற்பாடு அல்லது ஓர் உரிமத்தின் அல்லது அனுமதியின் நிபந்தனை அல்லது சட்டப்படியான கட்டளை அல்லது தடையுத்தரவு மீறப்படுகிறதா வென்று தாம் சந்தேகமில்லாமல் தெரிந்து கொள்ளும் பொருட்டு, அறிவிப் பின்றிப் பகலிலோ இரவிலோ எந்த நேரத்திலும் அந்த வளைவிடத்தில் நுழையலாம்; அக் காரியங்கள் எவையென்றுல் :—

(i) ஆடுமாடு முதலியவைகளின் தோல்களைப் பதனிடுதல்;

(ii) வெடி மருந்து அல்லது வாணவெடிகளைத் தயாரித்தல்;

(iii) மது இறக்குதல், (குடிப்பதற்குத் தகுதியற்றதாக்கப் பட்டிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி) போதை நீர் அடங்கிய சாராயத்தை அல்லது வேறு சாராவிக் கலவையைக் காய்ச்சி வடித்திறக்குவதன் மூலம் தயாரித்தல்;

(வெடிக்கத்தக்க அல்லது எளிதில் தீப்பற்றி எரியத்தக்க பொருள்களைச் சேர்த்து வைத்தல்.

(1961 ஏப்ரல் 26-ஆம் தேதிய 1248-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

31. *தணிக்கையாளர்கள், ஆய்வு அலுவலர்கள், கண்காணிக்கும் அலுவலர்கள் முதலியோரின் அதிகாரங்கள்.*—1. விசாரணைகள் நடத்த 1958-ஆம் ஆண்டின் தமிழநாடு ஊராட்சிச் சட்டத்தினுல் அல்லது அதன்படி செய்யப்

பட்ட விதிகளினுல் அதிகாரம் பெற்றுள்ள எல்லாரும், மேற்படி சட்டப்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளர்கள், ஆய்வு நடத்தும் அலுவலர்கள், கண்காணிக்கும் அலுவலர்கள் ஆகிய எல்லாரும் தங்கள் கடமைகளின் ஆதிக்கத்தில் வருவனவற்றில் விசாரணைகள் நடத்தும்போது, அவ்விசாரணைகள் நடத்தும் காரியத்துக்காகப் பின்வரும் அதிகாரங்களை உடையவர்களா வார்கள் :—

i) அந்த மாவட்டத்தில் வசிக்கும் எவருடைய சாட்சியம் விசாரணை யிலிருக்கிற பொருள்பற்றி ஆய்வதற்கு அவசியமென்று அவர்களால் கருதப் படுமோ அவரை அழைப்புக் கட்டளையிட்டு வரவழைப்பதற்கும், விசாரணையி லிருக்கிற பொருளுக்குப் பொருத்தமானதும் அந்த நபரின் கைவசத்தில் அல்லது கட்டுப்பாட்டுக்குட்பட்டு இருக்கக் கூடியதுமான ஓர் ஆவணத்தைக் கொண்டு வந்து காட்டுமாறு ஆணையிடுவதற்குமான அதிகாரம் ;

உரிமையியல் மன்றத்தினுல் அழைப்புக் கட்டளையிட்டு வரவழைக்கப்படும் ஒரு சாட்சிக்குக் கொடுக்கப்படத்தக்க படிகளை அத்தகைய ஒருவருக்கு வழங்குவதற்கும், இன்னுர் அல்லது இன்ன நிதியிலிருந்து அதிகப்படி கொடுக்கப்பட வேண்டுமென ஆணையிடுவதற்குமான அதிகாரம்.

2. அந்த அழைப்புக் கட்டளை எழுத்து மூலமாக இருக்க வேண்டும். அதைப் பிறப்பித்த அலுவலரின் கையெழுத்தைக் கொண்டும் அவருக்கு முத்திரை ஏதேனுமிருந்தால் அதைக் கொண்டும் அதற்கு மெய்யொப்பமிட வேண்டும்.

அழைக்கப் பெற்றவர் மேற்படி அலுவலர் முன் எந்த நேரத்தில் இடத்தில் வரவேண்டுமென அக் கட்டளையில் சொல்லப்பட்டிருக்க வேண்டும்; அவர் வருவது சாட்சியம் கொடுப்பதற்காகவா அல்லது ஓர் ஆவணத்தைக் கொண்டு வந்து காட்டுவதற்காகவா அல்லது அந்த இரண்டு காரியத்திற்காகவா என்பதை அதில் குறிப்பிட்டிருக்க வேண்டும்; கொண்டுவந்து காட்டப்பட வேண்டிய குறிப்பிட்ட ஆவணத்தை எளிதில் உணரும்படி அந்த அழைப்புக் கட்டளையில் விவரித்திருக்கவேண்டும்.

3. அழைப்புக் கட்டளையை அழைக்கப்பட்டவரிடம் நேரில் சேர்ப்பிக்க வேண்டும்; அவர் காணப்படாவிட்டால், அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வராய் அவருடன் வசிக்கும் வயது வந்த ஒருவரிடமாவது அவர் வசிக்கிற வருவாய் ஊரின் தலைவரிடமாவது அவருக்காக அதைக் கொடுத்துவிட்டு வரலாம்.

4. சாட்சி சொல்வதற்கு அழைக்கப்படாமல் ஆவணம் ஒன்றைக் கொண்டு வந்து காட்டுவதற்கு ஒருவர் அழைக்கப்படலாம்; ஆவணம் ஒன்றைக் கொண்டு வந்து காட்டுவதற்காக மட்டும் அழைக்கப்பட்ட ஒருவர், அதைக் கொண்டு வந்து காட்டுவதற்குத் தாமே நேரில் வருவதற்குப் பதிலாக, அந்த ஆவணத்தைக் கொண்டு வந்து காட்டும்படிச் செய்துவிட்டால், அழைப்புக் கட்டளைக்கிணங்க நடந்துகொண்டிருப்பதாகக் கருதப்படுவார்.

5. யாருடைய சாட்சியம் வேண்டியிருக்கிறதோ அவர், நோய் அல்லது வலுவின்மை காரணமாக, அழைப்புக் கட்டளை அனுப்பும் அலுவலருக்கு முன் வர முடியாமற்போனால், அல்லது அவர் பெரிய உயர்நிலையிலிருப்பது அல்லது பெண் என்ற காரணமாக அவரை அழைப்பது சரியல்ல என்று ஏற்பட்டால் அழைப்புக் கட்டளை அனுப்புகிற அலுவலர், தாமாகவே அல்லது யாருடைய சாட்சியம் வேண்டியிருக்கிறதோ அவர் விண்ணப்பம் செய்து கொள்வதன் பேரில், அவர் வர வேண்டியதில்லையென்று நிர்ணயித்து இதன்பொருட்டு அந்த அலுவலரால் நியமித்தனுப்பப்படுகிற அவருக்குக் கீழ் உள்ள அலுவலரைக் கொண்டு அவரை விசாரணை செய்விக்கும்படி ஆணையிடலாம்.

6. எவரேனும் இவ் விதிகளின் படிப் பிறப்பிக்கப்பட்ட அழைப்புக் கட்டளைக்குக் கீழ்ப் படியத் தவறினால் அவருக்கு நூறு ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படலாம்.

7. எவற்றிற்கு 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ அதற்கு இவ் விதிகளில் கண்டது எதுவும் பொருந்தாது.

(1961 ஏப்ரல் 26-ஆம் தேதிய 1248-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(68) நுழைந்து பார்வையிடுவதற்கான அதிகாரங்கள்.—மேற்படிச் சட்டத்தில் கண்ட 145(1) பிரிவைச் சேர்ந்த (அ), (ஆ), (இ) கூறுகளில் குறிப்பிட்டுள்ள இனங்கள் சம்பந்தமாக நுழைந்துபார்வையிடும் அதிகாரங்களைச் செலுத்துவதற்கு, துணை வட்டாட்சியாளர் வரிசைக்குக் குறைவான வரிசையிலுள்ள எந்த அலுவலருக்கும் மாவட்ட ஆட்சியாளர் அதிகாரம் கொடுக்கக் கூடாது.

(1961 மே 9-ஆம் தேதிய 16400/51/2-1-ஆம் எண் உள்ளாட்சிக் குறிப்பாணை.)

(69) (1958-ஆம் ஆண்டின் XXXV- ஆம் தமிழ்நாடு சட்டமாகிய) 1958-ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 144 ஆவது பிரிவில் கொடுத்துள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர், கோட்ட ஆட்சியாளர்களை, அவரவர் ஆட்சி வரம்புக்குள் எல்லா ஊராட்சிகளின் நடவடிக்கைகளையும் ஆய்வு செய்வதற்கும் கண்காணிக்கும் காரியங்களுக்குமான அலுவலர்களாக இதனால் நியமிக்கிறார்.

(1960 சனவரி 11-ஆம் தேதிய 71-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை).

(70) (1958-ஆம் ஆண்டின் XXXV- ஆம் தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 144-ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, அவரவர் ஆட்சி வரம்பில் ஊராட்சிகள் சம்பந்தமாக ஆய்வு நடத்தும் அலுவலர்களாகவும் கண்காணிக்கும் அலுவலர்களாகவும், கோட்ட ஆட்சியாளர்களுடன் கூட, கோட்ட ஊராட்சி அலுவலர்களையும் தமிழ்நாடு ஆளுநர் இதனால் நியமிக்கிறார்.

(1966 ஏப்ரல் 7-ஆம் தேதிய 947-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

32. இணை வளர்ச்சி ஆணையாளர், மாவட்ட ஆட்சியாளர் ஆகியவர்களின் நெருக்கடிக் கால அதிகாரங்கள் பற்றிய கட்டுப்பாடு.—1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 148-ஆவது பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் செலுத்தப்படுகிற ஒவ்வொன்றினையும் பற்றி—

(i) இணை வளர்ச்சி ஆணையாளர் அந்த அதிகாரங்களைச் செலுத்தினால், அவர் அரசாங்கத்தாருக்கு உடனே தெரிவிக்க வேண்டும்.

(ii) மாவட்ட ஆட்சியாளர் அந்த அதிகாரங்களைச் செலுத்தினால், அவர் இணை வளர்ச்சி ஆணையாளருக்கு உடனே தெரிவிப்பதுடன், அந்த அதிகாரங்களைச் செலுத்துவதற்கான காரணங்கள் எல்லாவற்றையும் காட்டவேண்டும்; அதே காலத்தில் அந்த அறிக்கைகளின்படி ஒன்றை ஊராட்சியினர் அறிவதற்காக அனுப்ப வேண்டும்.

(1961 ஏப்ரல் 26-ஆம் தேதிய 1248 எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

33. ஊர் அலுவலர்களிடமிருந்து கேட்கப்படக் கூடிய தகவல்.—ஓர் ஊராட்சியின் செயல் அதிகாரி அவ்வூராட்சியின் ஆட்சி வரம்புக்குள் அடங்கியுள்ள ஒரு வருவாய் ஊர் அல்லது அதன் ஒரு பாகம் அல்லது அதிலுள்ள ஒரு நபர் அல்லது உடைமை பற்றி அடியிற்கண்ட வகைகளில் தமக்குத் தகவல் தெரிவிக்கும்படி அவ்வூரின் தலைவர் அல்லது கர்ணம் அல்லது இவ்விருவரும் ஆகியவர்களை எழுத்து மூலமான ஆணையால் கேட்கலாம் :—

(1) ஊர்ப் பதிவுருக்களிலிருந்து கிடைக்கிற வகையில், ஊராட்சி எல்லைகளுக்குள் இருக்கிற ஒரு நிலத்தின் (அளவை) சர்வே என், உட்பிரிவு, வகைப்பாடு, நிலம் புன்செயா நன்செயா என்பது போன்ற விவரம், பரப்பு, வரி விதிப்பு, பதிவான கைப்பற்றுதாரரின் அல்லது அனுபோகதாரரின் பெயர் ஆகியவை பற்றிய விவரங்கள்.

(2) ஊராட்சி ஆட்சியின் பொருட்டு ஊர் அலுவலர்கள் வைத்துவரும் பதிவேடுகளிலும் கணக்குகளிலும் கிடைக்கும் வேறு விவரங்கள்.

ஆனால், (2) வகையின் கீழ்வரும் பொருள் பற்றிய தகவலை, சம்பந்தப்பட்ட உள்வட்டம் வருவாய் ஆய்வாளர் மூலமாகக் கேட்க வேண்டும்.

(1961 எப்ரல் 26-ஆம் தேதிய 1248-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 சனவரி 11-ஆம் தேதிய 83-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

34. செயல் அதிகாரி ஆவணங்களைத் தாக்கல் செய்தல்.—செயல் அதிகாரியின் வசமிருக்கிற ஒரு ஆவணத்தைத் தாக்கல் செய்யும்படி ஊராட்சி விடுக்கும் வேண்டுகோள் ஒவ்வொன்றையும் அந்த அதிகாரி நிறைவேற்ற வேண்டும்; ஆனால், அவ்வாறு உடனே நிறைவேற்றினால் ஊராட்சியின் அல்லது பொது மக்களின் நலனைப் பாதிக்குமென அவர் கருதினால், அவர் அப்படி நிறைவேற்ற வேண்டியதில்லை; அப்படி அவர் நிறைவேற்றியிருப்பதை, அவ்வாறுகண்டு எழுத்து மூலமாய் அறிவிக்க வேண்டும்; மேலும், ஊராட்சி கேட்டுக் கொண்டால், அது பற்றிக் கோட்ட ஆட்சியாளரின் அல்லது இதன் பொருட்டுக் கோட்ட ஆட்சியாளரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஓர் அலுவலரின் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும்; அந்தக் கோட்ட ஆட்சியாளரின் அல்லது அலுவலரின் தீர்ப்பு முடிவானதாகும்.

(1961 எப்ரல் 26-ஆம் தேதிய 1248 எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

35. ஊராட்சிகளின் செயல் அலுவலர்களின் அலுவல்களைத் தலைவர்கள் செய்யும்போது அவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரையறைகளும் கட்டுப்பாடும்.—அங்கு தான் இல்லாமையினாலாவது அல்லது நோய் அல்லது வேறொரு காரணத்திலாவது செயல் அதிகாரி தம் அலுவலர்களைச் செய்ய முடியாதிருக்கும் போது, செயல் அதிகாரி தம் வேலைகளை மீண்டும் செய்யத் தொடங்குகிற தேதி வரையில், எந்த வரையறைக்குட்பட்டுத் தலைவர், செயல் அதிகாரியின் அலுவல்களைச் செய்யலாமோ அந்த வரையறை என்னவென்றால், செயல் அதிகாரியின் அடியிற்கண்ட அலுவல்களைத் தலைவர் செய்யக் கூடாது என்பதேயாகும். அவை யாவன :—

(1) (தற்காலிக நியமனங்கள் உட்பட) ஊராட்சி அலுவலர்களையும் பணியாளர்களையும் நியமித்தல்; ஊராட்சி அலுவலர்களின், பணியாளர்களின் தகுதிகாண்பருவத்தை நீட்டிக்கும்படி அல்லது இறுதி செய்யும்படி ஆணையிடுதல், அல்லது அவர்கள் தகுதிகாண்பருவத்தைத் திருப்திகரமாக முடித்திருக்கிறார்கள் என்று அறிவித்தல்; ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் ஒருவரை நிலையான காலியிடத்தில் உறுதிப்படுத்துதல்; ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் ஒருவரைப் பதவியில் உயர்த்துதல், அல்லது அவர்களை மாற்றியும் அமர்த்தியும் ஆணை பிறப்பித்தல்; ஊராட்சி அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் தண்டனை விதித்தல்.

(2) அங்காடிகள், கால்நடைகள் வெட்டுமிடங்கள், மீன்பிடி துறை உரிமைகள் ஆகியவற்றின் குத்தகைகளையும் இவை போன்ற வேறு குத்தகைகளையும் ஆண்டு தோறும் விற்பனை செய்வதை வெளிப்படையாக ஏலத்தில் விடுதல்.

(3) ஊராட்சிச் சார்பில் ஒப்பந்தங்கள் செய்தல்; ஊராட்சிக்குச் சொந்தமான பணத்தைக் காசோலை (செக்) மூலமாக எடுத்தல்.

(4) ஆட்சிப் பிரச்சினைகள் சம்பந்தமாக பொதுமக்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள், மனுக்கள், வேறு முறையீடுகள் ஆகியவற்றின் மீது முடிவான தீர்வு ஆணைகளைப் பிறப்பித்தல்.

(5) ஊராட்சி அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் தற்செயல் விடுப்பு அல்லாத வேறுவிடுப்பு வழங்குதல்.

(6) வீட்டு வரியைப் பற்றி சீராய்வு (ரிவிஷன்) மனுக்கள் மீது ஆணைகள் பிறப்பித்தல்.

(7) உரிமங்கள் வழங்குதல் அல்லது வழங்க மறுத்தல்.

(1962 பெப்ரவரி 1-ஆம் தேதிய 260-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

(71) செயல் அலுவலர்கள் அதிகாரங்களை ஒப்படைத்தல்.—அங்கு தான் இல்லாமையால் அல்லது நோய் அல்லது வேறொரு காரணத்தினால் செயல் அலுவலர் தமது வேலைகளைச் செய்ய முடியாமலிருக்கும்போது, செயல் அலுவலர் தமது கடமைகளை மீண்டும் செய்யத் தொடங்குகிறதேதி வரையில், அரசாங்கத்தார் நிர்ணயிக்கக்கூடிய வரையறைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு, அவருடைய அலுவல்களைத் தலைவர் செய்ய வேண்டுமென, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 42-ஆவது பிரிவில் சொல்லியிருக்கிறது. இந்த ஏற்பாட்டின்படி, செயல் அலுவலரின் அலுவல்கள் தாமாகவே ஊராட்சித் தலைவரைச் சேர்ந்துவிடும்; செயல் அலுவலர் தமது அதிகாரங்களைத் தலைவரிடம் ஒப்படைப்பதற்காக ஏதேனும் ஆணை பிறப்பிப்பதற்கு அவசியமில்லை.

"ஊராட்சிச் செயல் அலுவலர்களின் அலுவல்களைச் செலுத்தும்போது தலைவர்கள்மீது விதிக்கப்பட்டுள்ள வரையறைகளும் கட்டுப்பாடும் பற்றிய விதிகள், 1962 பெப்ரவரி 1 ஆம் தேதிய 260-ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணையுடன் இணைக்கப்பட்டிருக்கிற 5-ஆம் எண் அறிவிக்கையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. மேற்படி சட்டத்தில் கண்ட 42-ஆவது பிரிவின்படி செயல் அலுவலரின் அலுவல்கள் மற்றொருவரைச் சேர்வது, இவ்விதியின் ஏற்பாடுகளுக்குட்பட்டதாகும்.

செயல் அலுவலர்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், இனிமேல் அவர்கள் அந்த இடத்தில் இல்லாமலிருக்கும்போது, வழக்கத்திற்கு இசைந்த ஓர் ஆணை மூலமாகத் தங்கள் அதிகாரங்களை ஊராட்சித் தலைவர்களுக்கு ஒப்படைக்க வேண்டியதில்லை, ஒப்படைக்கவும் கூடாது.

(1962 அக்டோபர் 26-ந் தேதிய 20647/எல் தனி/62-1-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(72) பேரூராட்சித் தலைவர், ஊராட்சிச் செயல் அலுவலரின் பதவிப் பொறுப்பை வகிக்கும்போது, ஊராட்சி நிதிகளிலிருந்து பணம் எடுத்து, சம்பளங்கள், கடப்பாடாகவுள்ள மற்றச் செலவுகள் போன்றவைகளுக்குப் பணம் கொடுக்கலாமா என்னும் ஒரு வினா எழுப்பப்பட்டிருக்கிறது. 1962 பெப்ரவரி 1-ஆம் தேதியிட்ட 260-ஆம் எண் ஊர் முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசாங்க ஆணையுடன் இணைக்கப்பட்டிருக்கிற 5-ஆவது அறிவிக்கையில் அரசாங்கத்தார் வெளியிட்ட விதிகளில் விதிக்கப்பட்டுள்ள வரையறைகளின்படி, தலைவர் ஊராட்சி நிதியிலிருந்து பணம் எடுக்க முடியாது. இந்த இடர்ப்பாட்டினை நீக்கும்பொருட்டு, செயல் அலுவலர் நீண்ட விடுப்பு எடுத்துக் கொண்டுபோனால், ஆய்வாளர் (மாவட்ட ஆட்சியாளர்) உடனே செயல்

அலுவலருக்குப் பதிலாக ஒருவரை அமர்த்த வேண்டும் ; அல்லது வட்டாரத்தின் ஊராட்சி விரிவாக்கு அலுவலருக்கு, பேரூராட்சி செயல் அலுவலர் பதவியின் அதிகப்படியான பொறுப்பைக் கொடுத்து அமர்த்த வேண்டும்.

(1966 ஏப்ரல் 11-ஆம் தேதிய 948-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

அத்தியாயம் II —வரவு-செலவுத் திட்டம், ஆட்சி அறிக்கை தணிக்கை.

36. ஊராட்சிகள் சம்பந்தமான வரவு செலவுத் திட்டமும் நிதிகள் ஒதுக்கீடும்.—1. அரசாங்கத்தார் அவ்வப்போது குறிப்பிடக் கூடிய விதமாக ஒவ்வொரு ஊராட்சியின் வரவு செலவுத் திட்டத்தையும் அதன் சுருக்கம் ஒன்றையும் தயாரிக்க வேண்டும்.

2. வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப் பெற்றிருக்கிற ஆண்டின் (கட்டளைகள், அரசினர் மானியம் கடன் தலைப்புகள் ஆகியவைகளிலிருந்து கிடைக்கும் வரவுகள் நீங்கலாக) மதிப்பீடான வரவுகளில் ஐந்து சதவீதத்துக்குக் குறையாத நடைமுறைக் கையிருப்புக்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யவேண்டும்.

3. ஊராட்சிச் செயல் அதிகாரியானவர், அவ்வாறு தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூன்று படிகளை வரவு செலவுத் திட்ட ஆண்டுக்கு முந்திய நவம்பர் 30-ஆம் தேதியன்றாவது அதற்கு முன்பாவது, சம்பந்தப்பட்ட கோட்ட ஊராட்சி அலுவலர் மூலமாகக் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்பவேண்டும் ; அதே காலத்தில் ஒரு படியைத் தணிக்கையாளருக்கு அனுப்பவேண்டும். கோட்ட ஊராட்சி அலுவலர் ஒரு படியைத் தாமே வைத்துக் கொண்டு, எஞ்சிய இரண்டு படிகளைத் தமது கருத்துரைகளுடன் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்பவேண்டும்.

4. கருதியுள்ள செலவுக்கு வேண்டிய பணத்தை எங்கிருந்து பெறலாம் என்பதைக் குறிப்பிடாமல், வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிராத அல்லது வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டுக்கு அதிகப்படியாயுள்ள ஒரு செலவினத்துக்கு ஊராட்சி அனுமதி அளிக்கக்கூடாது.

5. வரவு-செலவுத் திட்டம் ஒப்பளிக்கப்படுவதனாலேயே, அதில் இடங்கண்டுள்ள செலவு எல்லாவற்றையும் செய்ய ஊராட்சிக்கு அதிகாரமிருப்பதாகக் கருதக்கூடாது ; எந்தச் செலவுக்கான ஏற்பாடு வரவு-செலவுத் திட்டத்தில்

சேர்க்கப்பட்டிருக்கிறதோ அந்த செலவைச் செய்வதற்கு அரசாங்கத்தாரின் அல்லது வேறோர் அதிகாரியின் ஒப்பளிப்பு வேண்டியிருந்து, அந்த ஒப்பளிப்புத் திட்டமாக அளிக்கப்படாதிருந்தால், செலவு செய்வதற்கு முன் அந்த ஒப்பளிப்பைப் பெறுவது ஊராட்சியின் கடமையாகும்.

6. வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டோடு ஒப்பிட்டுப் பார்த்து, செலவு சம்பந்தமாகத் தணிக்கையாளர் கருத்துரைகள் எவையேனும் வழங்கியிருந்தால், அவற்றைச் செயல் அதிகாரி உடனுக்குடன் கவனிக்கவேண்டும்.

7. வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் எல்லாம் அந்த ஆண்டின் முடிவில் கழிவாகிவிடும். அந்த ஆண்டின் முடிவில் செலவிடப் படாமல் எஞ்சியுள்ள ஒதுக்கீடுகளின் பாகங்களை, அந்த ஆண்டின் முடிவுக்குப் பிறகு பட்டுவாடா செய்வதற்காக ஒதுக்கி வைக்கக்கூடாது; வைப்புத் தொகைகளுக்கேனும் வேறொரு தலைப்புக்கேனும் மாற்றுவது மூலமாக அவற்றைப் பயன்படுத்தவுங் கூடாது. கழிவாகிவிடுவதைத் தவிர்க்கும் பொருட்டு அவற்றை முன்னதாக வாங்கிவிடவுங்கூடாது.

8. சொல்லப்பட்ட ஆண்டில் செய்யப்படும் செலவை எல்லாம், அந்த ஆண்டுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் செய்து, கோட்ட ஆட்சியாளரால் தெரிவிக்கப்பட்ட எவையேனும் மாறுதல்களுடன் ஊராட்சி ஒப்பளிக்கப்பட்ட, அல்லது 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 140 ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி மாவட்ட ஆட்சியாளரால் மாற்றப்பட்ட ஒதுக்கீடுகளுக்கிணங்க முறைப்படுத்தவேண்டும்.

(1962 பெப்ரவரி 1 ஆம் தேதிய 260-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(73) மேற்சொன்ன அரசாங்க ஆணைகளைக் கவனமாகப் படிக்கும்படி பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். செயல் அலுவலர்கள் தங்கள் மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது, கால அட்டவணையையும் வரவு செலவுத் திட்டம் போடுவதன் பொதுக் கோட்பாடுகளையும் கடைப்பிடிப்பதில்லையெனத் தெரியவருகிறது. ஆகையால், தவறாமல் கடைப் பிடிப்பதற்காகப் பின்வரும் விளக்க உரைகள் கொடுக்கப்படுகின்றன. வரவு செலவுத் திட்டங்களைத் தயாரிப்பதில் அல்லது ஆய்ந்து பார்ப்பதில் அல்லது அவற்றிற்கு ஒப்பளிப்பதில் எற்படும் தவறு அல்லது தாமதத்தை அரசாங்கத் தாருக்குத் தெரிவிக்கவேண்டும்; அவர்கள் அதைக் கண்டிக்கக் கூடியதாகக் கருதுவார்கள்.

1. கால அட்டவணை.—செயல் அலுவலர்கள் 1964-65-க்கான திருத்திய மதிப்பீட்டையும், 1965-66-க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டையும் நவம்பர் 15 ஆம் தேதிக்குள் தயாரித்து, ஒப்புதலுக்காக அதை ஊராட்சிக்கு முன் வைத்து, மூன்று படிகளைக் கோட்ட ஊராட்சி அலுவலர்கள் மூலமாகக் கோட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்பவேண்டும்; 1964 நவம்பர் 30 ஆம் தேதிக்குள் கோட்ட ஆட்சியாளர்களிடம் சேரும்படியாக அவ்வாறு அனுப்ப வேண்டும். 1963-64-க்குரிய உள்ளபடியான எண்களையும், 1963 நவம்பர் 4 ஆம் தேதிய 2365 எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாங்க ஆணையில் நிர்ணயிக்கப்பட்டபடி ஒதுக்கீட்டை விட அதிகமானவைகளைக் காட்டும் விவரப் பட்டியல்களையும், வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் இணைத்தனுப்பவேண்டும். மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கான விளக்கக் குறிப்பு ஒன்றை, வரவு-செலவுத் திட்டத்துடன் இணைத்தனுப்பவேண்டும்.

2. கோட்ட ஊராட்சி அலுவலர்கள் தங்களிடம் வந்து சேர்ந்த வரவு செலவுத் திட்டங்களை ஆய்ந்து பார்த்து, அவற்றைத் தங்கள் கருத்துரை களுடன், 1964 டிசம்பர் 31 ஆம் தேதியன்றாவது அதற்கு முன்பாவது கோட்ட ஆட்சியாளர்களுக்கு அனுப்பவேண்டும். கோட்ட ஆட்சியாளர்கள், 1963 செப்டம்பர் 6 ஆம் தேதிய 1949 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணையில் நிர்ணயிக்கப்பட்ட வினுப்பட்டியையொட்டி வரவு செலவுத் திட்டத்தை மறு சீராய்வு செய்து, தங்கள் கருத்துரைகளுடன் வரவு செலவுத் திட்டத்தின் ஒரு படியை, 1965 சனவரி 15 ஆம் தேதிக்குள் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடம் சேரும்படியாக அனுப்பவேண்டும்.

3. செயல் அலுவலர் கோட்ட ஆட்சியாளரிடமிருந்து வரவு செலவுத் திட்டத்தைப் பெற்றுக் கொண்டதும், வரவு செலவுத் திட்டத்தை ஊராட்சி முன் வைத்து, அதற்கு ஒப்பளிப்புப் பெற வேண்டும். 1965 பெப்ரவரி 2 ஆம் தேதிக்கு முன் ஊராட்சியின் ஒப்பளிப்பைப் பெறவேண்டும்.

4. கோட்ட ஆட்சியாளர்கள் தாங்கள் ஆய்ந்து பார்த்த வரவு செலவுத் திட்டத்தின் நகல் ஒன்றை அரசாங்கத்தாரின் தகவலுக்காக அவர்களுக்கு அனுப்பவேண்டும். ஆய்ந்து பார்க்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்களின் படிகள் 1965 சனவரி 15 ஆம் தேதியன்றாவது அதற்கு முன்பாவது அரசாங்கத் தாரிடம் வந்து சேரவேண்டும். பேரூராட்சிகள் வரவு செலவுத் திட்டங்களைத் தயாரிப்பதிலும் ஆய்ந்து பார்ப்பதிலும் ஒப்பளிப்பதிலும் அனுசரிக்க வேண்டிய நடைமுறை முன்னேற்றத்தைக் கவனித்துப் பார்ப்பதற்காக 1963 மார்ச் 28 ஆம் தேதிய 695 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை

அரசு ஆணையில் காட்டப்பட்டுள்ள நடைமுறையை மாவட்ட ஆட்சியாளர்கள் பின்பற்றி, எல்லா ஊராட்சிகளும் தங்கள் வரவு செலவுத் திட்டங்களை முடிவாக ஒப்பளிக்கிற வரையில் அந்த ஆணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கால முறை அறிக்கையை அனுப்பவேண்டும். எல்லா ஊராட்சிகளும் தங்கள் வரவு செலவுத் திட்டங்களுக்கு 1965 பெப்ரவரி 28 ஆம் தேதிக்கு முன் ஒப்பளிக்கும்படியும் மாவட்ட ஆட்சியாளர்கள் பார்த்துக்கொள்ளவேண்டும்.

II. வரவு செலவுத் திட்டம் போடுவது பற்றிய பொதுக் கோட்பாடுகள்.—1. பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள், வரவுப் பக்கத்திலும் செலவு பக்கத்திலும் தங்கள் மதிப்பீடுகளை உள்ளவாறு தயாரிக்க வேண்டும். பல சந்தர்ப்பங்களில் வரவு குறைத்து மதிப்பிடப்பட்டுச் செலவு அதிகமாக மதிப்பிடப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. கூடிய வரையில், முந்திய ஆண்டுகளில் உள்ள படியான எண்களையொட்டி, மதிப்பீடுகள் நியாயமாயிருக்க வேண்டும். நடப்பு ஆண்டுக்கான கேட்பில் வரி பாக்கிகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்; கேட்பு முழுவதும் வசூலிக்கப்படுமென (தண்டல் செய்யப்படுமென) எதிர்பார்க்க வேண்டும். வரித் தண்டலுக்காக நியமிக்கப்படும் பணியாளர்களுக்கான செலவு நியாயமான சதவிதத்துக்கு மேற்படலாகாது. குறிப்பிட்ட செலவினங்களுக்காகக் குறிப்பிட்ட வரி விதிக்கக் கூடியபோதெல்லாம் அல்லது குறிப்பிட்ட கட்டணங்களை வசூலிக்கக் கூடியபோதெல்லாம், ஊராட்சிகள் அந்த ஏற்பாட்டைப் பயன்படுத்திக்கொண்டு, வரவுக்குட்பட்டுச் செலவு செய்வதற்குக் கூடுமானவற்றை ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஊராட்சியின் கடப்பாடாகவுள்ள தொடரும் அலுவல்களுக்கெல்லாம் செலவு செய்த பிறகு, "பொதுக் கணக்கு—சாதாரணமானது" என்பதன் கீழ் நிதிகள் கிடைப்பதையொட்டி மட்டுமே மூலதனப் பணிகளுக்கான செலவை மதிப்பிட வேண்டும். எப்படியாயினும், "பொதுக் கணக்கு—சாதாரணமானது" என்பதில் வரவு செலவுத் திட்ட முறையான தலைதடுமாற்றம் ஏற்படாதவிதத்தில், சாதாரணக் கணக்கின் கீழ்க் கிடைக்கிற நிதிகளை முறைப்படுத்தி வேறு பணிகளுக்கு மாற்ற வேண்டும். இனிமேல் பெற வேண்டிய அல்லது ஏற்கெனவே பெறப்பட்டு முதலீடு செய்யப்பட்ட கடன் தொகைகளையொட்டி முதற்பொருள் பணிகளுக்கான செலவு மதிப்பிடப்படும்போதெல்லாம், அதைத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

2. எல்லா வரவையும் செலவையும் பற்றிய விவரங்களை, வரவு செலவுத் திட்டத்துடன் இணைத்தனுப்ப வேண்டிய விளக்கக் குறிப்பு ஒன்றில் விளக்கியிருக்கவேண்டும்.

III. வரி விதிப்பு.—ஊராட்சிகளின் நிதி நிலைமைகள் உறுதியாயில்லை யெனத் தெரியவரும் போதெல்லாம், ஊராட்சிகள் தங்கள் நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும்பொருட்டு, தற்போதைய வரி விதிப்பு மட்டத்தை அதிகப் படுத்துவதற்குக் கூடுமானவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டும். வரி விதிப்பு விதம் பற்றிய விவரங்களையும் விளக்கக் குறிப்பில் கொடுக்க வேண்டும்.

IV. பயன் தரும் தொழில்கள்.—மேற்படி இனங்களிலிருந்து நிதி வசதி களைப் பெருக்குவதற்குக் கூடுமான எல்லாவற்றையும் பற்றி (ஊராட்சிகளின்) விரிவாக்கு உதவி அலுவலர் ஆய்ந்து பார்க்க வேண்டும். ஏற்கெனவேயுள்ள அங்காடிகள், பேருந்து நிலையங்கள் முதலியவைகளிலிருந்து அதிக வருமானம் கிடைக்கும் வகையில் அவற்றைச் சீர்ப்படுத்த வேண்டும். இந்த இனங்களுக்குப் பிடிக்கும் மீளும் செலவு, மதிப்பிடப்பட்ட வருமானத்துக்கு மேற்பட்டுப் போகாமலிருக்கும்படியும் ஊராட்சிகள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

V. போக்குவரத்தும் விளக்குப் போடுவதும்.—சாலைகளைப் பேணுவதற் கான செலவை பேணிவரக் கருதியிருக்கிற சாலைகளில் எண்ணிக்கையையும் மைல் நீளத்தையும் ஒட்டி மதிப்பிட வேண்டும். சாலை மேம்பாட்டு வேலைகள் "பேணுதல்" என்பதன் கீழ்க் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. "முதற்பொருள் பணிகள்" என்பதன் கீழ் அவற்றை வகைப்படுத்த வேண்டும். அந்த மேம்பாட்டு வேலைகளை நிதி நிலைமை ஒட்டி படிப்படியாகத் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். பொதுவாக முழுப் பரப்புக்குமே விளக்குகள் போட வேண்டும். சேர்ப்பதாயிருந்தால் அல்லது சீர்திருத்துவதாயிருந்தால் அதைத் தனியாகக் குறிப்பிட வேண்டும். மதிப்பீடுகளுக்கான விவரங்களை, விளக்கக் குறிப்பில் விளக்க வேண்டும்.

VI. பொதுமக்கள் உடல்நலம்.—தனியார் துப்புரவுக் கட்டணங்கள், டி & ஓ தொழில் உரிமங்கள் முதலியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தை, செயல் அலுவலர் உள்ளவாறு மதிப்பிட வேண்டும். தனியார் துப்புரவுக்கான செலவைத் தனியாகக் காட்ட வேண்டும்; பொதுவாகச் செலவு, மதிப்பிடப் பட்ட வருமானத்துக்கு மேற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நீர் வழங்க அல்லது வடிகால் ஏற்பாடு இவைகளைப் பேணுதலுக்கான செலவை மட்டும், "சாதாரணச் செலவு" என்பதன் கீழ்க்காட்ட வேண்டும். ஊர்ப் பணிகள் திட்டத்தின் கீழ் கிணறு வெட்டுவதற்காக, வருதற்குரிய மானியங் களையும், அதற்கான செலவையும் மூலப்பொருள் இனங்கள் என்பதன் கீழ்க் காட்ட வேண்டும். ஆயினும், குடி மாரமத்து மானியத்தையும் அப்பணிக்கான செலவையும் சாதாரணக் கணக்கின் கீழ்க் காட்ட வேண்டும்.

VII. பயன்தரும் தொழில்கள்—செலவு.—'ஊராட்சித் தோட்டப் பண்ணை' என்பதன் கீழ், மரங்கள் முதலியன நடுவதற்கான செலவை, "சாதாரணக் கணக்கு" என்பதன் கீழ் செலவாகக் கருத வேண்டும். ஆயினும், இந்தத் திட்டத்தின் கீழ் கிணறு முதலியவற்றைத் தோண்டுவதை "முதற்பொருள்" என்பதன் கீழ்க் காட்ட வேண்டும். ஆனால், வளர்ச்சித் திட்டங்களுக்காக வென்று ஊராட்சிகளின் கணக்குகளில் வைப்பீடு செய்யப்படுமென மதிப்பிடப் படும் உதவித் தொகையை, "சாதாரணக் கணக்கில்" பொருத்தமான தலைப்பு களின் கீழ்க் காட்ட வேண்டும்.

VIII. முதற்பொருள் கணக்குகள்.—வெவ்வேறு தலைப்புகளின் கீழ் மதிப்பிடப்படும் செலவுக்கு நிகராக, கடன்கள் அல்லது மானியம் மூலமாக அல்லது சாதாரணப் பொதுக் கணக்குகளிலிருந்து மாற்றப்படுகிற தொகை மூலமாக "முதற்பொருள் வரவு" என்பதன் கீழ் வரவுகளைக் கொண்டு ஈடு செய்ய வேண்டும். முதற்பொருள் கணக்கைச் சரிக்கட்ட வேண்டும்; நிகரான வரவுகளைக் காட்டாமல் எந்தச் செலவும் செய்யக் கருதக் கூடாது.

IX. தனி வரிகள் கணக்குகள்.—தனி வரி விதிப்பினால் ஈடு செய்யப்படும் குறிப்பிட்ட இனங்களை, தானே சரிக்கட்டும் வகையில் மதிப்பிட வேண்டும். வாங்கப்பட்ட கடன் ஆண்டுப் படியைச் செலுத்துவதற்காகத் தண்ணீர் வரி விதிக்கப்பட்டால் அது, ஆண்டுப் படியைச் செலுத்துவதற்குப் போதுமானதா யிருக்க வேண்டும்; கூடிய வரையில் மேற்படி காரியத்துக்காகப் பொது நிதி களைப் பயன்படுத்தக் கூடாது. இந்த இனத்தின் கீழ் வரவையும் செலவையும் நன்கு ஆராய்ந்து பார்க்கும் பொருட்டு, தனி வரிகள் கணக்கின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணி, இனம் ஒவ்வொன்றின் கீழும் பிடித்த மொத்தச் செலவு, வரி வீதம், ஆண்டு வருமானம், வாங்கப்பட்ட கடனைத் தீர்ப்பதற்காகக் குறிப் பிட்ட ஆண்டுக்காகச் செலுத்தப்படத்தக்க ஆண்டுப்படி இன்னும் செலுத்தப் படாமலிருக்கிற ஆண்டுப் படிகளின் பாக்கி முதலியவைகளைக் காட்டும் விவரப் பட்டியல் ஒன்றையும் விளக்கக் குறிப்புடன் இணைத்தனுப்ப வேண்டும். தனி வரிகள் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தைப் "பொது வரி விதிப்பு" என் பதன் கீழ்க் காட்டாமல், இந்தத் தலைப்பின் கீழேயே காட்ட வேண்டும். அவ் வரிகளைப் பற்றிய விவரங்களையும் மதிப்பிடப்படும் வருமானத்தையும் விளக்கக் குறிப்பில் காட்ட வேண்டும்.

X. வரவு-செலவுத் திட்டங்களைத் தயாரிப்பதில் குறைபாடுகள்.—வரவு செலவுத் திட்டங்களைத் தவறுகள் இல்லாமல் தயாரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். 1964-65-க்கான திருத்திய மதிப்பீடு, 1965-66-க்கான வரவு செலவுத்

திட்ட மதிப்பீடு ஆகியவைகளின் கணக்குச் சுருக்கத்தைத் தவருமல் அனுப்ப வேண்டும். பொதுக் கணக்கு, தனிக் கணக்கு முதலியவை போன்ற கணக்கு கள், ஒவ்வொன்றின் கீழும் "சாதாரணமானது", "முதற்பொருள்" என்பவை களின் கீழ் ஆரம்பக் கையிருப்பையும் முடிவுக் கையிருப்பையும் தவருமல் தெரி விக்க வேண்டும். நிதி நிலை திருப்தியாயிருக்கிறதா இல்லையா என்பதை, எல்லா வற்றையும் உள்ளிட்ட கையிருப்புகளைக் கொண்டல்லாமல், "பொதுக் கணக்கு சாதாரணமானது" என்பதன் கீழ் நிதிகள் கிடைக்கின்றனவா என்பதை யொட்டியே மெய்ப்பிக்க வேண்டும். "செய்யப்பட்ட முதலீடுகள்" அல்லது "வரப்பற்றிய முதலீடுகள்" என்பதன் கீழ் மதிப்பீடுகள் காட்டப்படுமானல், முதலீடு செய்ய அல்லது வரப்பற்றக் கருதும் தொகைகளைப் பற்றிய விவரங் களைக் குறிப்பிட வேண்டும். மதிப்பீடுகளுக்கான விவரங்கள் கொண்டுள்ள விளக்கக் குறிப்பில்லாமல் தயாரிக்கப்படவிருக்கிற ஒரு மதிப்பீடு கூர்ந்தாய் வுக்கு எளிதில் உள்ளாகமாட்டாது. ஆகையால், விளக்கக் குறிப்புத் தயாரிப்பதில் செயல் அலுவலர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். வரவு செலவுத் திட்டப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள பற்பல விவரப் பட்டியல் களையுங் கூட நிரப்பவேண்டும்.

2. 1963 செப்டம்பர் 5 ஆம் தேதிய 1949 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாங்க ஆணையில் உள்ள ஆய்வுக் குறிப்பில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விஞப்பட்டியலைக் குறிப்பாகக் கவனித்து, வரவு-செலவுத் திட்டங்களைக் கூர்ந்தாய்வு செய்வதில் தனிக் கவனம் செலுத்தும்படி மாவட்ட ஊராட்சி அலுவலர்களும் கோட்ட ஆட்சியாளர்களும் கூட கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள். சென்ற ஆண்டு வந்த பல வரவு செலவுத் திட்டங் களில், மக்கள் தொகை, நில வருவாய் முதலியவை போன்ற விவரங்கள் கூட காணப்படவில்லை. ஆகையால் இத்தகைய விடுபாடுகளைத் தவிர்க்க வேண்டும். இந்த விளக்க உரைகளை பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களுக்கெல்லாம் அனுப்பி, அவற்றைப் பெற்றுக் கொண்டதாக அவர்களின் ஒப்பத்தைப் பெறும்படிக் கோட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள். இந்த ஆணைக் குறிப்பு (1964 செப்டம்பர் 26 ஆம் தேதிய 109932, ஆர்.டி. கணக்குகள் 5/64-1 ஆம் எண் ஆணைக் குறிப்பு) வந்து சேர்ந்ததை அறிவிக்கும்படிக் கோட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

50. ஊராட்சிகளின் வரவு-செலவுத் திட்டங்களை ஊராட்சிகள் ஒப்புக் கொள்வதற்கு முன் கோட்ட ஆட்சியாளர் அவற்றைக் கூர்ந்தாய்வு செய்ய வேண்டும். கடப்பாடான அலுவல்களைச் செய்வதற்குப் போதுமான ஏற்பாடு செய்யப்படும்படிப் பார்த்துக் கொள்வதுடன் கூட வரவு செலவுத் திட்டம்

போடுவதில் அடங்கியுள்ள சாதனை பற்றியும் நிதி பற்றியுமான திட்டத்தின் பல்வேறு தன்மைகளில் கோட்ட ஆட்சியாளர் ஊராட்சிகளுக்கு ஆலோசனை கூறுவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. கோட்ட ஆட்சியாளர்களும் மாவட்ட ஆட்சியாளர்களும் ஊராட்சி ஒன்றியங்களின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு களைக் கூர்ந்தாய்வு செய்வதற்காகவென்று, ஒரு சீரான-விரிவான ஆய்வுக் குறிப்பு ஒன்றைச் சிறிது காலத்துக்கு முன் அரசாங்கத்தார் வெளியிட்டார்கள். அதுபோலவே, ஊராட்சி பேரூராட்சிகளின் வரவு செலவுத் திட்டத்தைக் கூர்ந் தாய்வு செய்வதில் கோட்ட ஆட்சியாளர்கள் பயன்படுத்துவதற்காக ஆய்வுக் குறிப்பு ஒன்றை அரசாங்கத்தார் இப்போது நிர்ணயிக்கிறார்கள்.

2. ஊராட்சிகளில் வரவு செலவுத் திட்டம் போடுவது சம்பந்தமாக இரண்டு முக்கியத் தன்மைகளைச் சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் வற்புறுத்திச் சொல்ல அரசாங்கத்தார் விரும்புகிறார்கள். முதலாவதாக, வரவு செலவுத் திட்டத்தை ஒப்புக்கொண்டு நிறைவேற்றும் காலத்தில் ஊராட்சி உறுப்பினர்கள் எல்லாரும் அதைப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒரு விளக்கக் குறிப் புடன் அதைத் தயாரிக்க வேண்டும். இதன் பொருட்டு, விளக்கக் குறிப்புப் போதுமான அளவுக்கு விவரமாயிருக்க வேண்டியது அவசியமாகும்; வேண்டும் போதெல்லாம், வரவு செலவுத் திட்டத்தில் கருதியுள்ள உள்ளபடியான பொருள் திட்டங்கள் பற்றிய விவரங்களை அது கொடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சாலைப் பணி ஒன்றை உருவாக்கக் கருதினால், சாலைகள் போடவேண்டியுள்ள தொலைவையும், அது இணைக்கிற ஊர்கள் அல்லது சிற்றூர்கள் எவை என்பதை யும் விளக்கக் குறிப்பில் சொல்லலாம். இவ்விதமாக, ஊராட்சி உறுப்பினர்கள் எல்லாரும், வரவு செலவுத் திட்டத்தில் அடங்கியுள்ள நிதி பற்றிய கருத்துருக் களை மாத்திரமல்லாமல், அவற்றின் சாதனை பற்றிய கருத்துருக்களையும் கூடப் புரிந்து கொள்வது இயல்வதாகும். ஆகையால், விளக்கக் குறிப்பு ஒன்றைத் தயாரிப்பதில், மாவட்ட ஆட்சியாளர்களும் கோட்ட ஆட்சியாளர்களும் ஊராட் சிகளின் செயல் அதிகாரிகளுக்குத் தக்க விளக்க உரைகள் பிறப்பிக்கலாமென அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள்.

3. இரண்டாவதாக, வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துக் கூர்ந் தாய்வு செய்வதானது, கடந்த கால சாதனைகளை மதிப்பீடு செய்வதற்கும், நிகழ் கால முன்னேற்றத்தை ஆய்வதற்கும், எதிர்காலத் தேவைகளை மதிப்பிடுவதற்கு மான ஒரு நல்வாய்ப்பாகும். வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்ப தற்கு முன், ஆட்சி அறிக்கையைக் கருத்தூன்றிப் படிப்பது நல்லது; அப்போது தான் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கையில், ஊராட்சி நிறைவேற்றின வைகளும் அதன் எதிர்காலத் தேவைகளும் மனத்தில் விளங்கும். இதன்

பொருட்டு மாவட்ட ஆட்சியாளர்கள் செயல் அதிகாரிகளுக்குத் தக்க விளக்க உரைகள் பிறப்பிக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அன்றியும், கோட்ட ஆட்சி அலுவலகத்தில், சம்பந்தப்பட்ட ஊராட்சியின் ஆட்சி அறிக்கையையும் வரவு செலவுத் திட்டத்தையும் தவருமல் அலுவலர்களுக்கு முன் வைக்க வேண்டும்.

4. இந்த ஆணையின் I ஆம் இணைப்பில் ஆய்வுக் குறிப்பு ஒன்றை அரசாங்கத்தார் நிர்ணயிக்கிறார்கள். ஊராட்சி வரவு செலவுத் திட்டங்களைக் கூர்ந்தாய்வு செய்யும்போது கோட்ட ஆட்சியாளர் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். (II ஆம் இணைப்பு அதே ஆய்வுக் குறிப்பினைத் தமிழில் தருகிறது). அவசியமானல், மாவட்ட ஆட்சியாளர்களும் கோட்ட ஆட்சியாளர்களும் இந்த ஆய்வுக் குறிப்புடன் தக்க இனங்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

5. 1963 அக்டோபரில் தயாரிக்கப்படவேண்டிய 1964-65-இன் வரவு செலவுத் திட்டத்துக்காக மேற்கண்ட நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள். ஊராட்சி வரவு செலவுத் திட்டங்களை உரிய காலத்தில் தயாரித்து நிறைவேற்றுவதன் அவசியத்தை அரசினர் இந்தத் தருணத்தில் வற்புறுத்துகிறார்கள். இந்த வேலைகள் எல்லாம் 1964 பிப்ரவரிக்கு முன் முடித்து விடப்பட வேண்டும். இவ்வாறு நடக்கும் பொருட்டு, இவ் வேலையைக் கூர்ந்து கண்காணிக்கும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(1963 செப்டெம்பர் 6 ஆம் தேதிய 1949 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(74) ஊராட்சி வரவு செலவுத் திட்டத்தையும் அதன் சுருக்கத்தையும், 1953 மே 20 ஆம் தேதிய 5111 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணையில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி தயாரிக்க வேண்டும்.

(1953 மே 20 ஆம் தேதிய 1115 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

37. ஆட்சி அறிக்கைகளைத் தயாரித்தனுப்புதல்.—1. ஒவ்வொரு ஊராட்சியின் செயல் அதிகாரி, ஒவ்வோர் ஆண்டும் முடிந்த பிறகு, ஊராட்சி அறிக்கையை இரண்டு பாகங்களில் தயாரிக்க வேண்டும்; அவையாவன :—(i) இவ் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள வினாப் பட்டியலில் குறிப்பிட்டிருக்கும் விவரங்கள் அடங்கிய அறிக்கை, (ii) அரசாங்கத்தார் அப்போதைக்கப்போது விதிக்கக் கூடிய படிவத்தின்படி ஆண்டுக் கணக்கு.

2. ஊராட்சி அறிக்கையின் இரண்டு படிகளை, அந்த அறிக்கை சம்பந்தப் படுகிற ஆண்டுக்கு அடுத்து வரும் ஆண்டின் மே 1-ஆம் தேதிக்குள் சம்பந்தப் பட்ட (ஊராட்சிகளின்) விரிவாக்கு உதவி அலுவலர் மூலமாக ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.

இணைப்பு.

மாவட்டம் வட்டம் ஊராட்சி

19. 6-ஆம் ஆண்டுக்கான ஆட்சி அறிக்கை.

1. அமைப்பும் மேலாண்மையும்.—(1) (அ) ஊராட்சியை அமைத்துப் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் எண்ணும் தேதியும் யாவை?

(ஆ) ஊராட்சியின் பரப்பு என்ன? இந்த ஆண்டிலே ஆட்சி வரம்பில் ஏதேனும் மாறுதல் இருந்ததா? ஆணையின் எண்ணையும் தேதியையும் குறிப் பிடுக.

(இ) இது பேரூராட்சியா? ஊராட்சியா? கிடைக்கிற கடைசியான குடிக் கணக்கு எண்களின்படி அதன் மக்கள் தொகை எவ்வளவு?

(2) (அ) ஊராட்சி உறுப்பினர்களின் ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை என்ன?

(ஆ) இந்த ஆண்டிலே அந்த மொத்த எண்ணிக்கையில் மாறுதல் ஏதேனும் இருந்ததா?

(இ) இந்த ஆண்டிலே தொகுதிகளைத் திருத்தியமைக்கும்படி ஆணை யிடப்பட்டதா?

(ஈ) அட்டவணையில் கண்ட சாதியார்களுக்காக இடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தால் அவ்விடங்களின் எண்ணிக்கை இந்த ஆண்டிலே இவ்வெண்ணிக்கை மாற்றப்பட்டதா?

(உ) தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை, பெண்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்களா?

(ஊ) உறுப்பினர்களின் சாதாரண அல்லது தற்செயல் தேர்தல் ஏதேனும் இந்த ஆண்டில் நடத்தப்பட்டதா? தேர்தல் தகராறு ஏதேனும் இருந்ததா?

(எ) தற்செயல் அல்லது சாதாரண காலியிடங்கள் ஏற்பட்டிருந்தால் அவற்றை நிரப்புவதில் ஏதேனும் தாமதம் நேர்ந்ததா? நேர்ந்திருந்தால், அதற்குரிய காரணங்கள்.

(3) தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள்—

(அ) இந்த ஆண்டிலே தலைவர் அல்லது துணைத் தலைவர் தேர்தல் நடந்ததா? தேர்தல் தகராறு ஏதேனும் இருந்ததா?

(ஆ) இந்த ஆண்டிலே தலைவர் அல்லது துணைத் தலைவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாரா? தலைவரிடம் அல்லது துணைத் தலைவரிடம் நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் ஏதேனும் நிறைவேற்றப் பட்டதா?

(இ) தலைவரின் பதவிப் பொறுப்பைத் துணைத் தலைவர் ஏற்றிருந்தாரா? அல்லது தற்காலிகத் தலைவர் எவரேனும் நியமிக்கப்பட்டாரா? அப்படியானால் எவ்வளவு காலத்துக்கு?

(ஈ) இந்த ஆண்டிலே உறுப்பினர் எவரேனும் பதவியிலிருந்து அகற்றப் பட்டாரா?

(உ) இந்த ஆண்டிலே உறுப்பினர் எவரேனும் தகுதியற்றவராக்கப் பட்டாரா?

(ஊ) இந்த ஆண்டிலே உறுப்பினர் எவரேனும் பதவியில் மீண்டும் அமர்த்தப்பட்டாரா?

(4) கூட்டங்கள்—

(அ) ஊராட்சிகளின் செயல் முறைகளுக்குச் சம்பந்தப்பட்ட விதிகளைச் சேர்ந்த 3 (1), 3 (3), 4 (1) விதிகளின்படி இந்த ஆண்டிலே எத்தனை கூட்டங்கள் நடந்தப்பட்டன? அக்கூட்டங்களில் எத்தனை சாதாரணமானவை? எத்தனை அவசரமானவை? எத்தனை தனிப்பட்டவை?

(ஆ) (கோரம்) குறைவெண் வரம்பு இல்லாத காரணத்தினால் எத்தனை ஒத்திவைக்கப்பட்டன?

(5) இந்த ஆண்டில் குழு ஏதேனும் அமைக்கப்பட்டதா? அப்படியானால், எதற்காக?

(6) மேலாண்மை—

(அ) ஊராட்சி அலுவலகம் எங்கே இருக்கிறது? கட்டிடம் சொந்தமானதா? வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதா? வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாயிருந்தால், எவ்வளவு தொகை செலுத்தப்படுகிறது? எல்லா இனத்தினரும் அங்கு போகக் கூடியவர்களாயிருக்கிறார்களா?

(ஆ) நிர்ணயிக்கப்பட்ட பதிவேடுகளும் படிவங்களும் வைத்து வரப்படுகின்றனவா?

(இ) பணியாளர் அமைப்பு—

(i) எத்தனை எழுத்தர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள்? என்ன சம்பள வீதத்தில்?

(ii) எழுத்தர்களின் எண்ணிக்கையும் சம்பள வீதங்களும் ஆய்வாளருடைய அல்லது அவர் சார்பாளருடைய ஆணைகளின் படி இருக்கின்றனவா?

(iii) இந்த ஊராட்சி வேறு எந்த ஊராட்சியுடனாவது, பொதுப் பணியாளர் தொகுதியை அமர்த்தியிருக்கிறதா? அப்படியானால், அத்தகைய பணியாளர் தொகுதியை பற்றிய விவரங்களையும், அதற்கான செலவில் இந்த ஊராட்சி ஏற்கும் வீதாசாரம் பற்றிய தகவலையும் தெரிவிக்கவும்.

II போக்குவரத்துகள்.—(1) (அ) இந்த ஆண்டிலே புதிதாகச் சாலைகள் எவையேனும் போடப்பட்டனவா? அல்லது பாலங்களும் மதகுகளும் கட்டப்பட்டனவா? எவ்வளவு செலவில்? அவைகளுக்கு நிதி உதவி எப்படிக் கிடைத்தது?

(ஆ) ஊராட்சி பேணிவரும் சாலைகள், தெருக்கள் ஆகியவற்றின் மொத்த நீளம் என்ன?

(இ) இந்த ஆண்டின் தொடக்கத்தில் முடிவாகாமலிருந்த ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை.

(ஈ) இந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை.

(உ) இந்த ஆண்டிலே தீர்வு செய்யப்பட்ட ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை.

(ஊ) இந்த ஆண்டின் இறுதியில் முடிவாகாமலிருந்த ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை.

(எ) சாலைகளின் பொது நிலை யாது?

(ஏ) பொதுச் சாலை, சாக்கடை, வடிக்கால், வடிக்கால் பணி, சுருங்க வழி அல்லது மதகு எதுவேனும் மேற்படி சட்டத்தின் செயற்பாட்டினின்றும் விலக்கப்பட்டிருக்கிறதா?

(2) இந்த ஊரில் கால்வாய்களும் தோணித் துறைகளும் இருக்கின்றனவா? அவைகளின் மேலாண்மை ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா? இந்த ஆதாரத்திலிருந்து கிடைக்கும் வருமானம் என்ன?

(3) நிழற்சாலை மரங்களின் மேல் மாசூலை வசூலிக்கும் உரிமை குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறதா? வரவும் செலவும் யாவை?

III விளக்குகளைப் போடுதல்.—(1) இந்த ஊராட்சியில் அல்லது பேரூரில் மின்சாரம் வந்திருக்கிறதா?

(2) ஊராட்சி பேணிவரும் மின் விளக்குகள், மண்ணெண்ணெய் விளக்குகள், பெட்ரோமாக்ஸ் அல்லது ஆவி விளக்குகளின் எண்ணிக்கையைக் கண்டெழுதவும். மொத்தச் செலவு என்ன?

(3) 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 119-ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்படி, குறிப்பிட்ட காரியத்துக்காக உழவு நிலத்தின் மீது வரி ஏதேனும் விதிக்கப்படுகிறதா? அப்படியானல், அதிலிருந்து கிடைக்கும் வருமானம் என்ன?

IV கல்வி.—(1) இந்த ஊர் அல்லது பேரூரில் எத்தனை பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன? யார் அவற்றைப் பேணி வருகிறார்கள்? அது போதுமானதா? பள்ளிக் கூடங்களுக்குச் செல்லும் சிறுவர் சிறுமிகளின் மொத்த எண்ணிக்கை என்ன?

(2) அட்டவணையில் கண்ட இனங்களின் குழந்தைகள் எத்தனை பேர் பள்ளிக்கூடங்களில் படிக்கிறார்கள்?

(3) இந்த ஊரில் அல்லது பேரூரில் கட்டாயக் கல்வி அமலில் இருக்கிறதா?

(4) இந்த ஊரில் அல்லது பேரூரில் படிப்பகம் ஏதேனும் இருக்கிறதா? அங்கே வழங்கப்படும் பத்திரிகைகள் பற்றிய விவரங்கள் கொடுக்கவும்.

(5) இந்த ஊரில் முதியோர் பள்ளிக் கூடம் அல்லது இரவுப் பள்ளிக் கூடம் ஏதேனும் இருக்கிறதா? அப்படியானல் எத்தனை? அவற்றை நடத்து

கிறவர்கள் யார்? இந்த ஆண்டில் இப்பள்ளிகளில் படிப்பவர்களின் மொத்த எண்ணிக்கை என்ன? இந்த ஆண்டிலே இவ்வூராட்சியில் எழுதப் படிக்கத் தெரியாத முதியவர்கள் எவரேனும் எழுதப்படிக்கத் தெரிந்து கொண்டார்களா? அப்படியானால் எத்தனை பேர்?

V உடல்நலம்.—

(1) தெருக்கள்—

தெருக்கள் ஒழுங்காகத் துப்புரவு செய்யப்படுகின்றனவா? துப்புரவு செய்பவர்கள் எத்தனைபேர் அமர்த்தப்பட்டுள்ளார்கள்? என்ன செலவில்?

(2) கழிப்பிடங்கள்—

பொதுக் கழிப்பிடங்கள் இருக்கின்றனவா? இருந்தால், எத்தனை?

(3) நீர் வழங்கல்—

(அ) குடிநீர் ஆதாரங்கள் யாவை? அவை போதுமானவையா?

(ஆ) அவை தூய்மைக் கேடு அடையாதபடி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா?

(இ) வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றனவா? இருந்தால், எத்தனை?

(4) வடிகால்—

இவ்வூராட்சியில் வடிகால்கள் இருக்கின்றனவா? அவை ஒழுங்காகத் துப்புரவு செய்யப்பட்டு, சரியாக வைத்து வரப்படுகின்றனவா? வடிகால்கள் இராவிட்டால், கழிவை அகற்றுவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன?

(5) (1889-ஆம் ஆண்டின் III -ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1889-ஆம் ஆண்டின் தமிழ்நாடு நகரப் பொதுவிடத் தொல்லைச் சட்டம் இந்த ஊரில் அல்லது பேரூரில் அமலில் இருக்கிறதா? இருந்தால், வழக்குகள் எத்தனை? விதிக்கப்பட்ட தண்டத் தொகை எவ்வளவு?

(6) (1899-ஆம் ஆண்டின் III -ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1899-ஆம் ஆண்டின் தமிழ்நாடு பிறப்பு, இறப்புப் பதிவு சட்டம் இந்த ஊரில் அல்லது பேரூரில் அமலில் இருக்கிறதா?

(7) காட்சிக் கடைகளும் திருவிழாக்களும்—

(அ) முக்கியமான காட்சிக் கடைகளும் திருவிழாக்களும் யாவை?

(ஆ) அந்தக் காட்சிக் கடைகளும் திருவிழாக்களும் நடக்கும்போது உடல்நல ஏற்பாடுகள் செய்யப்பட்டனவா? அப்படியானால், யாரால்? எவ்வளவு செலவில்?

(8) கொள்ளை நோய்கள்—

இந்த ஆண்டில் கொள்ளை நோய்கள் பரவியிருந்தனவா? ஊராட்சி எடுத்துக் கொண்ட தடுப்பு முறைகள் யாவை?

(9) அபாயகரமான—அருவருப்பான தொழில்கள் (பேரூராட்சிகள் மட்டும்)—

(அ) தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியென்று எதை யாகிலும் ஊராட்சி அறிக்கையிட்டிருக்கிறதா?

(ஆ) ஊராட்சியின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட தொழில்கள் யாவை?

(இ) இந்த ஆண்டில் எத்தனை உரிமங்கள் கொடுக்கப்பட்டன? அவற்றி லிருந்து கிடைத்த வருமானம் எவ்வளவு?

(ஈ) இவ்வூராட்சி துணைச் சட்டங்கள் எவற்றையேனும் ஆக்கியுள்ளதா?

(10) மருத்தவ உதவி—

இந்த ஊரில் அல்லது பேரூரில் மருத்துவ மனை அல்லது மருந்தகம் ஏதேனும் இருக்கிறதா?

(11) இவ்வூராட்சி தனிப்பட்ட முறையில் துப்புரவுப் பணி ஒன்றை நடத்துகிறதா? அப்படியானால் அது தன்னைத் தானே சரியீடு செய்து கொள்கிறதா?

(12) (1858 ஆம் ஆண்டின் II-ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1858 ஆம் ஆண்டின் பொதுமக்கள் கூடுமிடம் பற்றிய சட்டமாவது, (1920 ஆம் ஆண்டின் V ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் அல்லது (1920 ஆம் ஆண்டின் VII ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு நகர அமைப்புச் சட்டத்தில் கண்ட ஏற்பாடுகளில் எதுவாவது இப்பகுதிக்குப் பொருந்தும்படிச் செய்யப் பட்டிருக்கிறதா?

(13) (அ) ஊராட்சிப் பணியில் அமர்ந்திருக்கிற துப்புரவுத் தொழிலாளர்கள், பெருக்குபவர்கள் ஆகியவர்களின் வாழ்க்கை நிலைமைகளும் பணி நிலைமைகளும் திருப்திகரமாயிருக்கின்றனவா?

(ஆ) இத்துறையில் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் யாவை?

(இ) இச்சீர்திருத்தங்களின் விளைவாக, துப்புரவுத் தொழிலாளர் அல்லது பெருக்குபவர்கள் எவரேனும் வேலை இழந்துவிட்டாரா?

(ஈ) அப்படியானால், அவர்களில் எத்தனை பேர், ஊராட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் வேறு வகை வேலையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்? (வேலையின் தன்மையைக் குறிப்பிடவும்).

VI பயன்தரும் தொழில்கள்.—(1) புதிய அங்காடிகள், வண்டி நிற்குமிடங்கள் அல்லது கால்நடை வெட்டுமிடங்கள் எவற்றையேனும் இந்த ஆண்டிலே ஊராட்சி தொடங்கியதா?

(2) அங்காடிகள்.—

(அ) இந்த ஊராட்சி அல்லது பேரூரில் எத்தனைப் பொது அங்காடிகள் உள்ளன? எவற்றையேனும் ஊராட்சி பேணி வருகிறதா? விற்பனை மேடைகள் எவற்றையேனும் அது கட்டியிருக்கிறதா? அவற்றிலிருந்து எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

(ஆ) ஊராட்சி ஒன்றியத்தின் அங்காடிகளென்று வகைப்படுத்தப்பட்டுள்ள அங்காடிகளின் பொருட்டு ஊராட்சி ஒன்றிய மன்றத்திலிருந்து இவ்வூராட்சிக்கு உதவித் தொகை ஏதேனும் கிடைக்கிறதா?

(இ) தனியார் அங்காடிகள் எவையேனும் இருக்கின்றனவா? இருந்தால், அவைகள் எத்தனை? அவைகளுக்கு விதிக்கப்படும் உரிமக் கட்டணங்களின் மூலம் கிடைக்கும் வருமானம் எவ்வளவு? தனியார் அங்காடிகள் எவையேனும் இந்த ஆண்டில் மூடப்பட்டுவிட்டனவா? அப்படியானால் அவைகளுக்குப் பதிலாகப் பொது அங்காடிகள் திறக்கப்பட்டனவா?

(3) வண்டிப் பேட்டைகள்—

வண்டிப் பேட்டை எதையேனும் இவ்வூராட்சி பேணி வருகிறதா? கட்டணங்களை வசூலிக்கும் முறை யாது? அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் எவ்வளவு? பணியாளர் அமைப்புச் செலவு எவ்வளவு?

(4) கால்நடை வெட்டுமிடங்கள்—

ஊராட்சி பேணி வரும் கால்நடை வெட்டுமிடங்களின் எண்ணிக்கையையும், அவைகளிலிருந்து இடைக்கும் நிகர வருமானத்தையும் கண்டெழுதவும்.

(5) குடிசைத் தொழில்கள்—

இவற்றைச் சீர்திருத்துவதற்காக ஊராட்சி எவையேனும் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருந்தால் அவற்றை விவரிக்கவும்.

(6) ஊராட்சிக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஒதுக்கப்பட்டிராத காட்டுக்காக ஏதேனும் வாடகை செலுத்தப்படுகிறதா? அப்படியானல், தொகையையும், இடைக்கும் வருமானத்தையும், பிடிக்கும் வேறு செலவையும் கண்டெழுதவும்.

(7) கலப்பு உரம் (கம்போஸ்ட்) தயாரிக்கப்படுகிறதா? அப்படியானல், அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கண்டெழுதவும்.

(8) இந்த ஆண்டில் எத்தனை மரங்கள் நடப்பட்டன?

(9) (i) பேணி வரப்படும் பொதுப் பூங்காக்கள், தோட்டங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை; அவைகளுக்குப் பெயர் இருந்தால் அது.

(ii) அவற்றைப் பேணி வருவதற்குப் பிடிக்கும் செலவு, பணியாளர் அமைப்புச் செலவு, மற்ற இனங்கள், தனித் தனியாக.

(iii) அவற்றிலிருந்து வருமானம் கிடைத்தால், அது எந்த ஆதாரத்திலிருந்து நிகர செலவு செய்யப்படுகிறதென்பது.

(iv) புதிய பூங்காக்களை அல்லது தோட்டங்களைத் திறப்பதற்கு கருத்துரு இருந்தால், அது.

VII. பொது வருவாய்கள்.—

(1) வரிகள்—

(அ) வீட்டு வரியும் தொழில் வரியும், வண்டி வரியும் விதிக்கப்படுகிற வீதங்கள் பற்றிய விவரங்களையும், ஒவ்வொரு தலைப்பின் கீழும் இந்த ஆண்டில் வசூலான தொகையையும் தெரிவிக்கவும்.

(ஆ) வரி வசூலிப்புக்காகப் பிறப்பிக்கப்பட்ட வலுக்கட்டாயக் கட்டளைகளின் எண்ணிக்கையைக் கண்டெழுதவும்.

(இ) ஏதேனும் வரி அல்லது கட்டணங்கள் வசூலிப்பு வேலை ஊர்த் தலைமை அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா ?

(2) பலவகை வருமானம்—

(அ) இந்த ஊரில் விதிக்கப்படும் உள்ளூர் மேல் வரி (செஸ்) யில், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 115 ஆவது பிரிவின் படி இவ்வூராட்சிக்குச் சேர வேண்டிய ஊராட்சிப் பங்கு.

(ஆ) உடைமை மாற்றங்களின் மீதான தீர்வையிலிருந்து கிடைக்கும் வருமானம்.

(இ) மீன் பண்ணைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்.

(ஈ) சமுதாய புறம்போக்குகளிலிருந்து கிடைக்கும் வருமானம்.

(உ) கட்டளைகளிலிருந்தும், பொறுப்பு நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கும் வருமானம்.

(ஊ) (1958-ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தில் கண்ட 132 ஆவது பிரிவின்படி அரசாங்கத்தாரின் கொடைகள்.

(எ) அரசாங்கத்தார் கருணையினால் வழங்கும் கொடைகள்.

(ஏ) வேறு ஏதேனும் வருமானம்.

(3) (அ) ஊராட்சி ஒன்றிய மன்றம் நன்கொடை ஏதேனும் வழங்கினால் அதன் தொகையும், எதற்காக அது வழங்கப்படுகிறதென்பதும்.

(ஆ) தனியார்கள் நன்கொடை ஏதேனும் வழங்கினால் அதன் தொகையும், எதற்காக அது வழங்கப்படுகிறதென்பதும்,

VIII நிதி நிலைமை.—(1) (அ) ஊராட்சி நிதி சேமிப்பு வங்கியிலாவது ஒப்பு அளிக்கப்பட்ட வேறுவிதத்திலாவது போட்டு வைக்கப்படுகிறதா ?

(ஆ) ஊராட்சி நிதி முதலீடும் செய்யப்பட்டிருந்தால் அது பற்றிய விவரங்களைக் கொடுக்கவும்; அத்தகைய முதலீட்டுக்கு ஆதாரமாயுள்ள இசைவாணையைக் குறிப்பிடவும்.

(2) ஊராட்சிக் கணக்குகள் எப்போது கடைசியாகத் தணிக்கை செய்யப்பட்டன ? அத்தணிக்கைகளின் முடிவு யாது ?

(3) இந்த ஆண்டில் வரவுகளையும் பொறுப்புகளையும் பற்றிய சுருக்கப் பட்டியல் ஒன்றைக் கொடுக்கவும்; அதோடுகூட, ஆரம்பப் பணக் கையிருப்பையும் இறுதிப் பணக் கையிருப்பையும் தெரிவிக்கவும். (ஏற்கெனவே தணிக்கை செய்து முடித்து விடப்பட்டிருந்தால், அறிக்கைக்குரிய ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையில் கொடுத்துள்ள தலைப்புகளையும் தொகைகளையும் இங்கே எழுத வேண்டும்.)

IX. பல்வகை.—(1) ஒதுக்கப்படாத காடு ஏதேனும் இந்த ஆண்டிலே ஊராட்சிக் கட்டுப்பாட்டிலிருந்து எடுத்துவிடப்பட்டதா?

(2) எவையேனும் நிறுவனங்கள் அல்லது பணிகள் ஊராட்சி மேலாண்மைக்கு மாற்றப்பட்டுள்ளனவா?

(3) எவையேனும் அறக் கட்டளைகள் அல்லது இனம்கள் இவ்வூராட்சியின் மேலாண்மையிலும் கண்காணிப்பிலும் இருக்கின்றனவா?

(4) இந்த ஆண்டிலே நன்கொடை ஏதேனும் ஏற்றுக்கொள்ளப் பட்டதா? அப்படியானல் விவரங்கள் கொடுக்கவும்.

(5) பொறுப்பு நிறுவனங்கள் எவையேனும் ஊராட்சி மேலாண்மையில் இருக்கின்றனவா?

(6) ஊர்ப்பாசனப் பணியின் பாதுகாப்பும் பராமரிப்பும் அல்லது பாசன முறைகளின் மேலாண்மை அல்லது பாசனத் தண்ணீரின் பங்கீட்டு முறை ஊராட்சிக்கு மாற்றப்பட்டதா?

(7) புறம்போக்கு மேய்ச்சல் தளம், களம் புறம்போக்கு சுடுகாடு இடுகாடு, கால்நடைகள் தங்குமிடம், வண்டிப் பேட்டை, தோப்பு ஆகியவற்றை மாவட்ட ஆட்சியாளர் இந்த ஆண்டிலே மேற்படி சட்டத்தின் செயலினின்றும் விலக்கி விட்டாரா?

(8) குடிமராமத்து எதுவேனும் செயற்படுத்தப்பட்டதா?

(9) உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப் பட்டன? சாதனைகளைக் குறிப்பிடவும்.

(10) மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, ஊரில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டன?

X. பொது ஆட்சி.—(1) இந்த ஆண்டிலே ஊராட்சி கலைக்கப்பட்டதா? அப்படியானால், எவ்வளவு காலத்துக்கு?

(2) செயல் அதிகாரியாவது, மாவட்ட ஆட்சியாளராவது, ஆய்வாளராவது, முறையே (1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 45 ஆவது பிரிவின்படியாவது 148 ஆவது பிரிவின்படியாவது நெருக்கடிக் கால அதிகாரங்களைச் செலுத்துவதற்கு ஏதேனும் அவசியம் நேரிட்டதா?

(3) இந்த ஆண்டிலே தீர்மானம், உரிமம் அல்லது அனுமதி ஏதேனும் ரத்து செய்யப்பட்டதா?

(4) ஊராட்சித் தலைவராவது, செயல் அதிகாரியாவது ஏதேனும் கடமையைச் செய்யத் தவறியதனால், அதைச் செய்யும்படி ஆய்வாளர் அல்லது வேறு தகுந்த அதிகாரி கட்டளையிட அவசியம் நேர்ந்ததா?

(5) எடுத்தல் அளவைகளும், முகத்தல் அளவைகளும் சோதனை செய்யப்பட்டனவா?

(6) துணைச் சட்டங்கள் எவையேனும் செய்யப்பட்டனவா? அப்படியானால், அவற்றின் தன்மையைக் கண்டெழுதவும்.

(7) பொதுக் கருத்துரைகள் எவையேனுமிருந்தால் அவை.

(1962 பெப்ரவரி 1 ஆம் தேதிய 260 ஆம் எண் உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

(1964 மார்ச் 3 ஆம் தேதிய 484 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(75) 1953 மே 20 ஆம் தேதிய 1115 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணையில் கொடுக்கப்பட்டுள்ள படிவப்படி ஆண்டுக் கணக்கு இருக்க வேண்டுமென அரசாங்கத்தார் விதித்திருக்கிறார்கள்.

(1953 மே 20 ஆம் தேதிய 1115 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(76) ஆண்டுக் கணக்கில் எழுதப்படும் எண்களை அடுத்துள்ள ரூபாயாக முழுமையாக்க வேண்டும்.

(1922 ஆகஸ்டு 18 ஆம் தேதிய 1428 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(77) 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 40 ஆவது பிரிவு; அச் சட்டத்தின்படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகள்; இவைகளின்படி. ஒவ்வொரு ஊராட்சியும், ஆட்சி அறிக்கையின் இரண்டு படிகளை (அ) வட்டார ஆய்வாளர், (ஆ) மாவட்ட அலுவலர் ஆகியோர் மூலமாக ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும். மாவட்ட ஊராட்சி அலுவலர் தமது பரப்பில் அடங்கியுள்ள ஊராட்சிகள் சம்பந்தமாக ஒருங்கிணைந்த அறிக்கை ஒன்றை வட்டார ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும்; வட்டார ஆய்வாளர், தமது முறையில், ஒருங்கிணைந்த அறிக்கை ஒன்றை ஆய்வாளருக்கு அனுப்ப வேண்டும். ஆய்வாளர் இம் மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சிகளுக்காகவும் ஒருங்கிணைந்த அறிக்கை ஒன்றை அரசாங்கத்தாருக்கு அனுப்ப வேண்டும்.

1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படியான நிலைமை முழுவதும் மாறிவிட்டிருக்கிறது. மேற்படி சட்டத்தில் கண்ட 54 ஆவது பிரிவின்படியும், இது பற்றிப் பிறப்பிக்கப்பட்ட விதிகளின்படியும் (1962 பெப்ரவரி 1 ஆம் தேதியிட்ட 260 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாங்க ஆணையுடன் இணைக்கப்பட்டிருக்கிற 13 ஆவது அறிவிக்கையைப் பார்க்கவும்), ஊராட்சி, ஆட்சி அறிக்கையின் இரண்டு படிகளைக் கோட்ட ஊராட்சி அலுவலர் மூலமாக ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு அனுப்ப வேண்டும். ஊராட்சி ஒன்றிய மன்றம், தனது ஆட்சியைப் பற்றியும் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எல்லா ஊராட்சிகளின் ஆட்சியைப் பற்றியும் ஒருங்கிணைந்த அறிக்கை ஒன்றை மாவட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும். கோட்ட ஊராட்சி அலுவலர் தம் ஆட்சி வரம்பிலுள்ள ஊராட்சிகளின் ஆட்சி அறிக்கைகளை ஒருங்கிணைக்க வேண்டியதில்லை; ஏனென்றால், இவ்வேலையை ஊராட்சி ஒன்றியம் செய்துவிடும். வளர்ச்சி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் ஊராட்சிகள் பற்றிய பொது அறிக்கை ஒன்றை மாவட்ட ஆட்சியாளர் தயார் செய்ய வேண்டும்; அவற்றை மாவட்ட வளர்ச்சி மன்றத்துக்கு முன் வைக்க வேண்டும்; மாவட்ட வளர்ச்சி மன்றத்தினுடைய தீர்மானத்தின் ஒருபடியுடன் அவற்றை அரசாங்கத்தாருக்கு அனுப்ப வேண்டும்.

இந்த ஆணைக் குறிப்பிலுள்ள செய்திகளை, மாவட்டத்திலிருக்கிற எல்லா ஊராட்சிகளின் கவனத்துக்குக் கொண்டுவரும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

(1963 பெப்ரவரி 14 ஆம் தேதிய 17407/எல்-தனி/63-1 ஆம் எண் ஆணைக் குறிப்பு.)

38. **I. தணிக்கை அறிக்கைகளை வெளியிடுவதும் முடிவு செய்தலும்.**—(1) 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தில் கண்ட 141 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி அரசாங்கத்தாரால் நியமிக்கப்படும் தணிக்கையாளர், நிதி ஆண்டு ஒவ்வொன்றுக்காகவும் ஊராட்சிக் கணக்குகளின் தணிக்கை பற்றிய அறிக்கையை, தணிக்கை முடிவான பிறகு, ஊராட்சியின் செயல் அதிகாரிக்கு அனுப்ப வேண்டும். தணிக்கையாளர் அந்த அறிக்கையின்படி ஒன்றை, பேரூராட்சிகளைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளருக்கும் ஊராட்சிகளைப் பொறுத்தவரை கோட்ட ஊராட்சி அலுவலருக்கும் அனுப்ப வேண்டும்.

(2) ஊராட்சியின் செயல் அதிகாரியானவர் தணிக்கை அறிக்கையையும் அதற்குத் தமது பதில்களையும் ஊராட்சிக்கு முன் வைத்து, தணிக்கை அறிக்கையைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து இரண்டு மாதத்துக்குள், ஊராட்சிகளில் கோட்டப் பஞ்சாயத்து அலுவலருக்கும், பேரூராட்சிகளில் கோட்ட ஊராட்சி அலுவலர் மூலமாகக் கோட்ட ஆட்சியாளருக்கும் அதை அனுப்ப வேண்டும்; அப்படி அனுப்புகையில், தமது பதில்களுக்கு இரண்டு படிகளையும் அவற்றை ஏற்றுக்கொண்டு ஊராட்சி நிறைவேற்றிய தீர்மானத்தையும் கூடவே அனுப்ப வேண்டும்.

(3) பேரூராட்சிகளில் கோட்ட ஊராட்சி அலுவலர், மேற்படி பதில்களையும் அவைகளைப் பற்றிய எவையேனும் தமது கருத்துரைகளையும் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும். பேரூராட்சிகளின் தணிக்கை அறிக்கையைக்கோட்ட ஆட்சியாளரும், ஊராட்சிகளின் தணிக்கை அறிக்கைகளைக் கோட்ட ஊராட்சி அலுவலரும் மறு ஆய்வு செய்ய வேண்டும். மறு ஆய்வின் நகல் ஒன்றையும் செயல் அதிகாரியின் பதில்களுக்கு ஒரு நகலையும், ஊராட்சியின் தீர்மானத்தையும் தணிக்கையாளருக்கு அனுப்ப வேண்டும்.

II. புத்தகங்களையும் கணக்குகளையும் வரி செலுத்துவோர் பார்வையிடுதல்.—(1) ஊராட்சியின் செயல் அதிகாரியானவர், அவ்வப்போது அரசாங்கத்தார் விதிக்கக்கூடிய படிவப்படி வரி விதிப்புக் கணக்குகளைத் தயாரித்து வைத்துவர

வேண்டும்; 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி வரி விதிப்பதற்குட்பட்ட நபர்கள், உடைமைகள் ஆகியவை அவைகளில் கண்டிருக்க வேண்டும்.

(2) ஊராட்சிக்கு வரி செலுத்தும் ஒருவராவது அதிகாரம் பெற்றுள்ள அவருடைய முகவராவது, வரி விதிப்புக் கணக்குகளையும், ஒரு வரி விதிப்பு பற்றிய விரிவான விவரங்கள் தனிப் பதிவுருக்களில் வைக்கப்பட்டிருந்தால், அந்த விவரங்கள் அடங்கிய அவற்றின் பாகத்தையும், வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கட்டணங்கள் செலுத்தாமல் பார்வையிடலாம். அந்த நபர்கள் அல்லது அதிகாரம் பெற்றுள்ள அவருடைய முகவர்கள் மேற்படி புத்தகங்களிலிருந்தும் பதிவுருக்களிலிருந்தும் கட்டணம் செலுத்தாமல் பகுதிகளுக்குப் படி எடுத்துக் கொள்ள உரிமை உள்ளவர்கள் ஆவார்கள்.

(3) ஊராட்சிக்கு வரி செலுத்தும் ஒருவராவது அதிகாரம் பெற்றுள்ள அவருடைய முகவராவது ஊராட்சிக் கணக்குப் புத்தகங்களை ஒவ்வொரு மாதத்திலும் அரசாங்கத்தார் நிச்சயிக்கக்கூடிய நாளில் அல்லது நாட்களில், கட்டணம் செலுத்தாமல் பார்வையிடக் கூடியவராயிருக்க வேண்டும்.

(1962 பெப்ரவரி 1 ஆம் தேதிய 260 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(78) தணிக்கை அறிக்கைகள் வருவதையும் அவைகளின் மறு ஆய்வையும் கவனித்துப் பார்ப்பதற்காக வட்டார ஆய்வாளர் பதிவேடு ஒன்றை வைத்துவர வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றின் கணக்குகளின் தணிக்கையாளர்களை நியமித்தல்.—(i) ஊராட்சிகளின் நிதிகளின் வரவுகளையும் செலவையும் பற்றிய கணக்குகளின் தணிக்கையாளர்களாக ஊராட்சிகளின் விரிவாக்கு அலுவலர்களான துணை ஊராட்சி அலுவலர்களையும் கோட்ட ஊராட்சி அலுவலர்களையும் கோட்ட ஆட்சியாளர்களையும்.

(ii) பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் ஆகியவற்றின் நிதிகளின் வரவையும் செலவையும் பற்றிய கணக்குகளின் தணிக்கையாளர்களாக, உள்ளாட்சி நிதிக் கணக்குத் தலைமை ஆய்வாளரையும் அவருடைய உதவியாளர்களையும், அரசாங்கத்தார் நியமித்திருக்கிறார்கள்.

(1960 அக்டோபர் 15 ஆம் தேதியிட்ட 1722 ஆம் எண் உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

39. (தணிக்கையின் பேரில்) தண்டம் செலுத்துதலையும் (தணிக்கையில்) ஒப்புக்கொள்ளப்படாத தொகையையும் பற்றிய விதிகள்.—1. ஓர் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆணையாளர் ஓர் ஊராட்சியின் செயல் அதிகாரி மேற்படி சட்டத்தில் கண்ட 141-வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளர்களுக்கு, அவர்கள் கேட்கிறபடியே எல்லாக் கணக்குகளையும் அனுப்பவேண்டும்.

2. தணிக்கையாளர்கள்.—(அ) தாங்கள் பார்ப்பது அல்லது ஆய்வது அவசியமெனக் கருதுகிற ஏதேனும் புத்தகம், ஒப்பாவணம், ஒப்பந்தம், கணக்கு, செலவுச் சீட்டு, ரசீது அல்லது வேறு ஆவணத்தைத் தாக்கல் செய்யும்படி, எழுதியுள்ள அழைப்புக் கட்டளை மூலமாக ஆணையிடலாம்.

(ஆ) அத்தகைய ஓர் ஆவணத்தைத் தம் வசத்தில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற அல்லது அதற்காகப் பதில் சொல்லும் பொறுப்புடைய ஒருவர் தங்களுக்கு முன்வர வேண்டுமென எழுத்து மூலமாக அழைப்புக் கட்டளை அனுப்பலாம்.

(இ) அவ்வாறு வருபவர், அந்த ஆவணம் சம்பந்தமாக ஓர் உறுதிமொழி எழுதி அதில் கையெழுத்திட வேண்டுமென அல்லது அது பற்றி ஏதேனும் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமென அல்லது அது சம்பந்தமாக அறிக்கை தயாரித்துக் கொடுக்க வேண்டுமென ஆணையிடலாம். எவரேனும், இவ்விதியின்படி சட்டப்படி தமக்குப் பிறப்பிக்கப்பட்ட வேண்டுகோளை நிறைவேற்றத் தவறினால், ஐம்பது ரூபாய் வரையில் தண்டப் பணம் விதிக்கப்படத் தக்கவராவர்.

3. தணிக்கையாளர்கள்.—(அ) சந்தர்ப்பத்துக்கேற்ப ஊராட்சியில் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கணக்குகளில், செலவிலாவது ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் சேர வேண்டிய பணத்தை வசூலிப்பதிலாவது தாங்கள் கவனிக்கக்கூடிய முக்கியமான ஏதேனும் சீர்கேடு அல்லது முறைகேடு பற்றி ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குத் தெரிவிக்க வேண்டும்.

(ஆ) ஊராட்சிக்கு அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்குச் சொந்தமான அல்லது உரியதாயிருக்கிற பணத்துக்கு அல்லது வேறு உடைமைக்கு ஏற்படுகிற இழப்பு, சேதம் அல்லது தவறாகப் பயன்படுத்துதல் ஒருவருடைய அசட்டை அல்லது தவறான நடத்தையின் நேர் விளைவாக இருந்தால், அந்த இழப்பு, சேதம் அல்லது தவறாகப் பயன்படுத்துதலைப் பற்றியும், அத்தகைய இழப்பு, சேதம் அல்லது தவறாகப் பயன்படுத்துதலுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ பொறுப்பாளிகளாயிருப்பவர்களின் பெயர்களையும் ஊராட்சிக்காவது ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்காவது தெரிவிக்க வேண்டும்.

4. தணிக்கையாளர்கள் எடுத்துக்காட்டக் கூடிய குறைபாடுகள் அல்லது முறைகேடுகள் இவற்றுக்கு ஆணையாளர் அல்லது செயல் அதிகாரி உடனே தீர்வு செய்து அதை, சந்தர்ப்பத்துக்கேற்ப, ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்காவது ஊராட்சிக்காவது தெரிவிக்க வேண்டும்.

5. (1) அரசாங்கத்தாரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள தணிக்கையாளர் ஒருவர் சட்டத்துக்கு மாறான ஒவ்வோர் இனத்தையும் ஒப்புக்கொள்ள மறுக்கலாம்; சட்டத்துக்கு மாறு பணம் கொடுத்தவர் மீது அல்லது அவ்வாறு பணம் கொடுக்க அனுமதி அளித்தவர் மீது அந்த இனத்தைச் சுமத்தித் தண்டம் செலுத்தும்படி ஆணையிடலாம்; அதற்குப் பொறுப்பாளியாயுள்ளவர், அவருடைய அசட்டை அல்லது தப்பு நடத்தையினால் குறைந்துபோன, இழக்கப்பட்ட அல்லது ஊதியமில்லாமல் முதலீடு செய்யப்பட்ட தொகையை, அல்லது உரிய கணக்கில் காட்ட வேண்டியிருந்தும், காட்டாமல் விட்டுவிட்ட தொகையைச் செலுத்தும்படி ஆணையிடலாம்; அத்தகைய ஒவ்வொன்றிலும் அவரிடமிருந்து சேர வேண்டிய தொகை இன்னதென்று சான்றிட வேண்டும்.

விளக்கம்.—யாருடைய அசட்டையினால் அல்லது தப்பு நடத்தையினால் பணம் அவ்வாறு குறைந்துபோயிற்றோ அல்லது இழக்கப்பட்டதோ அல்லது அதற்கு ஏது உண்டாயிற்றோ அவர், தாம் அசட்டையாயிருந்திருந்துங்கூட அல்லது தப்பு நடத்தை நடந்திருந்துங்கூட, வேறொருவர் அசட்டையாயிராம லிருந்தால் அல்லது தப்பு நடத்தை நடக்காதிருந்தால் பணம் அவ்வாறு குறைந்துபோயிருக்காது அல்லது இழப்பு நேரிட்டிருக்காது என்று வாதிக்க முடியாது.

(2) ஏற்றுக்கொள்ள மறுத்தல், தண்டக் கட்டணம் விதித்தல் அல்லது கட்டணம் விதித்தல் ஆகிய இவற்றில் ஒவ்வொன்றிலும் தமது தீர்மானத்துக் கான காரணங்களைத் தணிக்கையாளர் எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும்; யாருக்கு மாறாகத் தீர்மானம் செய்யப்பட்டதோ அவருக்கு அதன் நகல் ஒன்றைப் பதிவு அஞ்சலில் அனுப்பவேண்டும்.

(3) தணிக்கையாளருடைய தீர்மானத்தின் நகல் ஒன்று அவ்வாறு கொடுக்கப் பெற்றுள்ளவர் அதை வாங்க மறுத்தபோதிலும், (2) உள் விதியின் பொருளின்படி அத்தீர்மானத்தின் நகல் ஒன்று அவரிடம் முறைப்படி கொடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும். 6-வது, 7-வது விதிகளில் நிச்சயிக்கப்பட்ட பதினான்கு நாள் கால அளவை, அவ்வாறு மறுக்கும் தேதி யிலிருந்து கணக்கிட வேண்டும்.

6. (1) தணிக்கையில் ஏற்றுக்கொள்ள மறுத்தல், தண்டக் கட்டணம் விதித்தல் அல்லது கட்டணம் விதித்தல் இனங்களினால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர், தணிக்கையாளரின் தீர்மானத்தைத் தாம் பெற்றுக்கொண்ட பிறகு பதினான்கு நாட்களுக்குள்—

(அ) அவ்வாறு ஏற்றுக்கொள்ள மறுத்தல், தண்டக் கட்டணம் விதித்தல், கட்டணம் விதித்தல் அல்லது இவைகளைத் தள்ளுபடி செய்யும்படி அசல் விசாரணை அதிகார வரம்புள்ள தலைமை நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்; அந்த நீதிமன்றத்தார் அவசியாமயுள்ள சாட்சியம் எடுத்த பிறகு, அவ்வாறு ஏற்றுக்கொள்ள மறுத்தலை, தண்டக் கட்டணம் விதித்தலை அல்லது கட்டணம் விதித்தலை உறுதிப்படுத்தலாம், மாற்றலாம் அல்லது தள்ளிவிடலாம்; அதோடுகூட, செலவுகளை இன்னார் ஏற்க வேண்டுமென்பது பற்றி, அப்பொழுதுள்ள சூழ்நிலையில் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய ஆணை பிறப்பிக்கலாம்; அல்லது

(ஆ) அவ்வாறு விண்ணப்பம் செய்துகொள்வதற்குப் பதிலாக, அரசாங்கத்தாருக்கு மேல்முறையீடு செய்துகொள்ளலாம். அத்தகைய மேல்முறையீட்டின் மீது அரசாங்கத்தார் பிறப்பிக்கும் ஓர் ஆணை முடிவானதாகும்.

(2) (1) உள்விதியைச் சேர்ந்த (அ) பகுதியின்படி நீதிமன்றத்தாருடைய தீர்ப்பின் பேரில், உயர் நீதிமன்றத்தாருக்கு மேல்முறையீடு உண்டு. (அ) பகுதியின்படி நீதி மன்றத்தாருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டால், தணிக்கையாளர் மட்டுமே அதற்கு எதிர்வாதியாவார்; அரசாங்கத்தாரையோ வேறொருவரையோ அந்த நடவடிக்கைகளில் ஒரு கட்சிக்காரராக்க விண்ணப்பதாரருக்கு உரிமையில்லை.

7. ஒருவரிடமிருந்து சேர வேண்டுமென இவ்விதிகளின்படி தணிக்கையாளரால் சான்றிடப்பட்ட தொகை ஒவ்வொன்றையும், அவர், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது ஊராட்சி நிதிகள் போட்டு வைக்கப்பட்டிருக்கும் கருவூலத்தில் அல்லது வங்கியில், தணிக்கையாளரின் தீர்மானம் தமக்குத் தெரிவிக்கப்பட்ட பிறகு பதினான்கு நாட்களுக்குள் அந்தத் தீர்மானத்தை எதிர்த்து அந்தக் காலத்துக்குள் நீதிமன்றத்தாருக்கு அல்லது அரசாங்கத்தாருக்கு மேல்முறையீடு செய்து கொண்டிருந்தால் ஒழிய செலுத்திவிட வேண்டும்; ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் பொறுத்தவரை மாவட்ட ஆட்சியாளரும் மாவட்ட ஊராட்சிகளைப் பொறுத்தவரை கோட்ட ஊராட்சி அலுவலரும் நீதி மன்றத்தாருக்கு விண்ணப்பம் செய்து கொள்வதன்பேரில், செலுத்தப்பட்டிராத அந்தத் தொகையை அல்லது சேர வேண்டியதென்று நீதி மன்றத்தார் அல்லது அரசாங்கத்தார் அறிவிக்கும் தொகையை, அந்த நீதி மன்றத்தார் தீர்ப்பளித்த தொகை வசூலிக்கப்படுவது போலவே வசூலிக்கப்படத் தக்கதாகும்.

8. இவ்விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே அந்நிகழ்வின் சூழ்நிலைகளையெல்லாம் கவனித்து இவ்வாறு செய்வது அவசியமென அரசாங்கத்தார் கருதினால், இவ்விதிகளின்படி ஒருவரிடமிருந்து சேர வேண்டுமெனத் தணிக்கையாளரால் சான்றிடப்பட்ட தொகை முழுவதையும் அல்லது அதன் ஒரு பாகத்தை வசூலிக்க வேண்டியதில்லையென்று அரசாங்கத்தார் எப்போதேனும் விட்டுக் கொடுத்துவிடலாம்.

9. "இவ்விதிகளில், "அரசாங்கத்தார்" என்பது தமிழ்நாடு அரர்சாங்கத்தார் என்று பொருள்படும்.

(1965-ஆம் ஆண்டு மே மாதம் 18-ஆம் தேதிய 1127-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

அத்தியாயம் III—பணியாளர் அமைப்புகள்.

40. பேரூராட்சிகளின் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்குமான தகுதிகள்.—

1. **அலுவலகப் பணி இடங்கள், வருவாய் ஆய்வாளர்கள், தலைமை எழுத்தர்கள், சிற்றெழுத்தர்கள், வரிவசூலிப்பவர்கள்.**—ஒருவர் கீழ்க் கண்ட அட்டவணையின் (2) பத்தியில் விதிக்கப்பட்டிருக்கிற தகுதிகளைப் பெற்றிருந்தாலன்றி, அதற்கு நேரான (1) பத்தியில் குறிப்பிட்டிருக்கிற பணியிடங்களில் எதற்கேனும் ஒரு பேரூராட்சியின்கீழ் நியமிக்கப்படக்கூடாது.

அட்டவணை

	விவரம். (1)	தகுதிகள். (2)
1.	அலுவலகப் பணியிடங்களும் வருவாய் ஆய்வாளர்களும்.	சென்னைப் பல்கலைக் கழகத்தின் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறியிருத்தல்; அல்லது தமிழ்நாடு அரசின் அதிகாரத்தின்படி வழங்கப்படும் முடிவடைந்த இடைநிலைப் பள்ளி இறுதிச் சான்று அல்லது அதற்கு சமமானதென்று அரசாங்கத்தார் கருதக்கூடிய இணைப்பில் கண்டுள்ள இந்தியாவிலுள்ள வேறு பல்கலைக் கழகங்களில் ஒன்றினால் நடத்தப்படுகிற வேறு ஏதேனும் சமமான தேர்வில் தேறியிருத்தல் அல்லது இந்தியாவிலுள்ள வேறொரு மாநிலத்தின் முடிவடைந்த இடைநிலைப் பள்ளி இறுதிச் சான்று அல்லது இந்திய ராணுக்வ கல்வி தனிச் சான்று,

விவரம்.	தகுதிகள்.
(1)	(2)
2. தலைமை எழுத்தர்கள் ..	மேலே (1) இனத்துக்காக நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளுடன்கூட, (அ) ஊராட்சி எழுத்தராக ஐந்தாண்டு காலம் உள்ளபடியே பணி செய்திருத்தல்; (ஆ) உள்ளாட்சி மன்றங்களில பண் யாளர்களுக்கான கணக்குத் தேர்வில் (அலுவலக கணக்குகள் பராமரிப்பு) தேறியிருப்பது.
3. வரித் தண்டலர்களும் சிற்றெழுத்தர்களும்.	அங்கீகரிக்கப்பட்ட ஒரு பள்ளியில் III ஆவது படிவம் தேறியிருப்பது அல்லது அதற்குச் சமமானதென்று அரசாங்கத்தார் கருதக்கூடிய வேறொரு தகுதி.
	விளக்கம்.—அங்கீகரிக்கப்பட்ட பள்ளி என்பது மாநில அரசினால் பேணி வரப்படுகிற அல்லது அவர்கள் ஒப்பளிப்புடன் தொடங்கப்பட்ட அல்லது தமிழ்நாடு கல்வி விதிகளின்படி சென்னைக் கல்வித் துறை இயக்குநரால் அங்கீகாரம் அளிக்கப்பெற்றிருக்கிற ஒரு பள்ளி என்று பொருள் படும்.

இணைப்பு

I இந்தியப் பல்கலைக் கழகங்கள்.

அலகாபாத், பம்பாய், கல்கத்தா, டெல்லி, நாகபுரி, பாட்னா, லக்நவ் பல்கலைக் கழகங்கள்.

அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகம்.

ஆந்திரப் பல்கலைக் கழகம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

உட்கல் பல்கலைக் கழகம்.

உஸ்மானியப் பல்கலைக் கழகம்.

காசி இந்து பல்கலைக் கழகம்.

மைசூர் பல்கலைக் கழகம்.

நில அளவையர்கள் (சர்வேயர்கள்).—ஓர் பேரூராட்சியினால் நில அளவையராக நியமிக்கப்படும் ஒருவர் தமது தகுதிகாண் பருவத்துக்குள், கீழ்க்கண்ட இணைப்பில் குறிப்பிட்டிருக்கிற துணை நில அளவையர் தேர்வில் தேறவேண்டும்.

ஆனால், கிண்டி பொறியியல் கல்லூரியின் உயர்தர அல்லது கீழ்நிலை உதவியாளர் சான்று வைத்திருக்கும் ஒருவருக்கு இந்த விதியில் உள்ளது எதுவும் பொருந்தாது; ஆனால், அவர் மேற்சொன்ன துணை நில அளவையர் தேர்வில் தேறுகிற வரையில், ஓர் ஊராட்சியின் நில அளவையராகத் தமது வேலையில் உறுதிப்படுத்தப்பெறத் தகுதியுள்ளவராக மாட்டார்.

துணை நில அளவையர் தேர்வு.

1. கணக்கு—தசாம்ச பின்னங்கள், மிசைப்பெருக்க மூலம் வரையில்.

2. கையெழுத்தும் ஒப்ப எழுதக் கூறுதலும்.

3. 'ஊர்க் கர்ணங்களுக்கான நில அளவுப் பணி' என்னும் தலைப்புள்ள புத்தகம் முழுவதும்.

4. நில அளவு நடைமுறை நூல், 1923—
   அத்தியாயங்கள் I, II, III, VI, VII முழுவதும்.

   அத்தியாயம் X விதிகள் 3 முதல் 13 வரை.

   அத்தியாயம் XI விதிகள் 1 முதல் 6 வரை

   அத்தியாயம் XI விதிகள் 1. முதல் 30 வரை.

   அத்தியாயம் XIII விதிகள் 1 முதல் 133 வரை.

   அத்தியாயம் XVI விதிகள் 16 முதல் 36 வரை.

   அத்தியாயம் XVII விதிகள் 241 முதல் 279 வரை.

அத்தியாயம் XIX சரிசம வித வட்ட வரைவி (புரபோர்ஷனல் கம்பாஸுகள்), தண்டு வட்ட வரைவி (பீம் கம்பாஸ்), வில் வட்ட வரைவி (போ கம்பாஸுகள்), பாண்டா கிராப் ஆகியவை நீங்கலாக மற்றெல்லா நில அளவுக் கருவிகளும்.

அத்தியாயம் XX தீர்வாய்வுகள்.

5. வருவாய் வாரியம் நிலையாணை எண் 34—

அ, ஆ, இ—III, IV V VI, VII. X. XI, XII, XV, XVI

இணைப்புகள் நீங்கலாக.

III. பொது உடல் நலப் பணியாளர் அமைப்புகள்.—கீழ்க்கண்ட அட்டவணையின் (2) பத்தியிலே விதிக்கப்பட்டிருக்கிற தகுதிகளை ஒருவர் பெற்றிருந்தாலன்றி, அதற்கு நேரான (1) பத்தியில் குறிப்பிட்டிருக்கிற பணியிடங்களில் எதற்கேனும் அவர் ஒரு பேரூராட்சியின்கீழ் நியமிக்கப்படக் கூடாது.

ஆனால், மேற்சொன்ன அட்டவணையின் (2) பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வயது வரையறையானது பேரூராட்சிகளின் பொதுவான பணியாளர் தொகுதி அலுவலர்களையும் பணியாளர்களையும் நியமிப்பது, தண்டிப்பது ஆகியவை பற்றிய விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே அதன் (1) பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்துக்கு முதல் தடவையாக ஒருவர் நியமிக்கப்படுவதற்குப் பொருந்துவதாகும்.

மேலும், அட்டவணையின் (2) பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வயது வரையறை, ஒரு பேரூராட்சியின் அல்லது வேறொரு பேரூராட்சியின் பணியிலிருக்கிற ஒருவர் மாற்றப்படுவது மூலமாக அல்லது உயர்த்தப்படுவது மூலமாக நியமிக்கப்படுவதற்குப் பொருந்தாது. ஆனால், ஒரு நிபந்தனைக்குட்பட்டுதான் அவ்வாறு பொருந்துவதில்லை. அதாவது, பேரூராட்சியின் எந்தக் கடைநிலைப் பணியாளர் அல்லது வேலையாள் அந்த முறையில் நியமிக்கப்படுவதற்கு (அவர் மற்றப்படித் தகுதிபெற்றவராயிருந்தால்) வயது வரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்க வில்லையோ அந்தப் பணியாளர் அல்லது வேலையாள் கீழ்க் கண்ட அட்டவணையின் (1) ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில் எதற்கேனும் நியமிக்கப்படுவதானது, அந்தக் கடைநிலைப் பணியாளர் அல்லது வேலையாள் அதன் (2) பத்தியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது வரையறையை எய்துவதற்கு முன்பே ஒரு பேரூராட்சியின் பணியில் சேர்ந்திருந்தால் மாத்திரமே அனுமதிக்கப்படத்தக்கதாகும்.

அன்றியும், அட்டவணையில் வேறுவிதமாக வெளிப்படையான ஏற்பாடுகள் இருந்தாலன்றி, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில் ஏற்கெனவே பணி செய்துகொண்டிருக்கிறவர்களைத் தொடர்ந்து பணியில் வைத்துக்கொண்டிருப்பதை, அல்லது, அந்தப் பணியிடங்களில் தகுதிகாண் பருவத்தைத் தொடங்கியிருக்கிறவர்களை அவர்கள் முறை வரும்போது மீண்டும் நியமிப்பதை இந்த விதி கேடாகப் பாதிக்காது ; ஆனால், முந்தி அமலில் இருந்த விதிகளின் படிப் பணியிடங்களை வகிக்க அவர்கள் தகுதியும் உரிமையும் பெற்றிருக்க வேண்டும், அல்லது முறைப்படியான அடிப்படையின் பேரில் அப்பணியிடங்களுக்கு நியமிக்கப்படும் அல்லது அப் பணியிடங்களில் தொடர்ந்து பணி செய்து வரும் காரியங்களுக்காக அவர்கள் விலக்களிக்கப் பெற்றிருக்க வேண்டும்.

அட்டவணை.

பதவியின்பெயர். (1)	தகுதிகள். (2)
1. துப்புரவுப் பிரிவு ஆய்வாளரும் உடல் நல உதவியாளரும்.	(i) முப்பது வயதுக்கு மேற்பட்டவரா யிருக்கக்கூடாது. ஆனால், II ஆம்; நிலையிலிருந்து I ஆம் நிலைக்கும் உடல் நல உதவியாளரிலிருந்து II ஆம் நிலை துப்புரவுப் பிரிவு ஆய்வாளராகவும் மாற்றுவது; அல்லது உயர்த்துவது; துப்புரவுப் பிரிவு ஆய்வாளர் நியமனத்துக்கு அல்லது தங்கள் முறைப்படியான நியமனத்துக்கு அடுத்து முந்திய மூன்றுண்டுக் காலத்தில் உள்ளாட்சி மன்றம் ஒன்றின்கீழ் கொள்ளை நோய்ப் பணியில் அல்லது திருவிழாப் பணியில் வேலை பார்த்திருக்கிற துப்புரவுப் பிரிவு ஆய்வாளர்களுக்கு 35 வயது ஆகியிராவிட்டால் அவர்களுக்கு இக் கூறு பொருந்தாது.
	(ii) இதன் பொருட்டு அரசாங்கத்தாரால் அமைக்கப்பட்ட தேர்வாளர் குழுவின் தலைவர் என்னும் முறைமையில் சென்னை பொது உடல் நலத் துறை இயக்குநரால் வழங்கப்பட்ட துப்புரவு ஆய்வாளர் சான்று வைத்திருக்க வேண்டும்.

பதவியின் பெயர்,	தகுதிகள்.
(1)	(2)
	ஆனால், (1914–ஆம் ஆண்டின் iV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1914 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மருத்துவப் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட மருத்துவத் தகுதி பெற்றிருக்கிற ஒரு வேட்பாளருக்கு (i), (ii) பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் பிரயோகப்பட மாட்டா.
2 துப்புரவு மேஸ்திரி அல்லது பொது உடல் நலச் சேவகர்.	(i) 35 வயது அடைந்திருக்கக்கூடாது ஆனால், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து சம்பளம் கொடுக்கப்பெறும் சேவகர் ஒருவர் 25 வயது அடைவதற்கு முன் பேரூராட்சியின் பணியில் சேர்ந்திருந்து, அவர் துப்புரவு மேஸ்திரியாக அல்லது பொது உடல் நலச் சேவகராக நியமிக்கப்படுவதற்கு அல்லது முந்தி இராணுவத்திலிருந்த ஒருவர்சந்தர்ப்பத்துக்கேற்ப விமானப் படையெடுப்புப் பாதுகாப்பு அல்லது ஊர்ப் பாதுகாப்புத் திட்டங்கள் சம்பந்தமாக அமர்த்தப்பட்டிருந்த ஒரு சேவகர் அல்லது மேஸ்திரி துப்புரவு மேஸ்திரியாக அல்லது பொது உடல் நலச் சேவகராக நியமிக்கப்படுவதற்கு இது பொருந்தமாட்டாது. (ii) தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

(1962 பெப்ரவரி 1-ஆம் தேதிய 260 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(79) **சிற்றெழுத்தர்கள் முதலியவர்களுக்குக் கல்வித் தகுதிகளை நிர்ணயிப்பது.**-- இந்த விதியில் சிற்றெழுத்தர்களுக்காகவும் வரித் தண்டலர்களுக்காகவும் கல்வித் தகுதியை நிர்ணயித்திருப்பதானது மேற்படி விதி அமலுக்கு வரத் தொடங்கும் தேதியன்று நிலையான அல்லது பதிலியான முறைமையில் பணி செய்து கொண்டிருப்பவர்களைக் கேடாக பாதிக்காது.

ii இந்த விதி அமலுக்கு வரத் தொடங்கும் தேதிக்குமுன் தங்கள் தகுதிகாண் பருவத்தைத் தொடங்கியிருந்து, ஆனால் ஆட்குறைப்பு காரணமாக

அல்லது காலியிடங்கள் இல்லாததால் வேலையிலிருந்து அனுப்பிவிடப்பட்ட சிற்றெழுத்தர்களும் வரித் தண்டலர்களும் இனிமேல் மீண்டும் நியமிக்கப்படுவதற்கான தங்கள் உரிமையை வைத்துக்கொண்டிருப்பார்கள்.

(1952 அக்டோபர் 1-ஆம் தேதிய 1922-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(80) இடைநிலைப் பள்ளி இறுதிச் சான்று பாட முறையை நிறைவு செய்து, இடைநிலைப் பள்ளி இறுதிச் சான்றுத் தேர்வுக்கு எழுதியவர்கள், பல்கலைக் கழகப் பாடமுறைக்கு அவர்கள் தகுதி பெற்றவர்களா என்பதைப் பொருட்படுத்தாமலே அவர்கள் முடிவடைந்த இடைநிலைப் பள்ளி இறுதிச் சான்றினை வைத்திருப்பவர்களாகக் கருதப்படுவார்கள்.

(1936 அக்டோபர் 20-ஆம் தேதிய 630-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

41. **இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்காகப் பொதுவான அலுவலரை அல்லது பணியாளரை நியமிப்பது.**—(1) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சிகள் எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரித் தன்மையுள்ள அதிகாரங்களைச் செலுத்துவதற்கு அல்லது அலுவல்களைச் செய்வதற்கு, செயல் அலுவலராயிராத, ஒரே அலுவலரை அல்லது பணியாளரை நியமிக்கும்படி, அவசியமானால், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சிகளுக்கு மாவட்ட ஆட்சியாளர் ஆணையிடலாம்.

ஆனால், பொது உடல் நலப் பணியாளர் திட்டங்கள் சம்பந்தமாகப் பொது உடல் நலத் துறை இயக்குநரை மாவட்ட ஆட்சியாளர் கலந்தாலோசிக்க வேண்டும்.

(2). சம்பந்தப்பட்ட ஊராட்சிகள், அந்த அலுவலர் அல்லது பணியாளருக்குக் கொடுக்கப்படத் தக்க சம்பளத்தையும் படிகளையும், அவருடைய விடுப்புச் சம்பளம் அல்லது வருங்காலச் சேம நிதியினிமித்தம் கொடுக்கப்படத் தக்க உதவித் தொகைகளையும், ஊராட்சிகளின் வருமானம் அந்த அலுவலர் அல்லது பணியாளர் செய்யும் பணி, மாவட்ட ஆட்சியாளர் இதன் பொருட்டு தகுதியெனக் கருதக் கூடிய வேறு எவையேனும் விவரங்களையொட்டி மாவட்ட ஆட்சியாளர் விதிக்கக் கூடிய அத்தகைய விகிதாசாரத்திலும் விதத்திலும் கொடுக்க வேண்டும்.

3. 1959-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 61-ஆவது பிரிவில் குறிப்பிட்டிருக்கும் அதிகாரங்களைச் செலுத்துவதற்காகச் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளில் ஒன்றின் செயல் அதிகாரியை மாவட்ட ஆட்சியாளர் குறிப்பிட வேண்டும்.

4. 3-ஆவது விதியின்படிக் குறிப்பிடப்பட்டுள்ள செயல் அதிகாரி அவ்விதியில் சொல்லப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்துவது பற்றி, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளில் ஒன்றின் செயல் அதிகாரி திருப்தியடையாவிட்டால், இரண்டாவதாகச் சொன்ன செயல் அதிகாரி அது பற்றி மாவட்ட ஆட்சியாளரின் கருத்துக்கு அனுப்பலாம்; அவ்வாறு அனுப்புவதன் பேரில் மாவட்ட ஆட்சியாளர் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்.

(1962 ஏப்ரல் 26-ஆம் தேதிய 1248-ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

42. **ஊராட்சிகளின் அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோருடைய தனிப்பட்ட நடத்தை.—1. நன்கொடைகள், விருப்புதவித் தொகைகள், பரிசுகள்.**—(1) இவ்விதிகளில் வேறு விதமான ஏற்பாடுகள் கண்டிருந்தாலன்றி மற்றப்படி, ஓர் ஊராட்சியின் அலுவலராவது பணியாளராவது, செயல் அதிகாரியின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல், தமக்கு உறவினராயிராத ஒருவரிடமிருந்து, ஏதேனும் நன்கொடை, பணிக் கொடை அல்லது பரிசு ஆகியவற்றை ஏற்றுக்கொள்வதோ, அல்லது நன்கொடை, பணிக்கொடை அல்லது பரிசு கொடுப்பதாக வாக்கு கொடுத்து முன் வருவதைத் தம் சார்பிலேனும் வேறொருவர் சார்பிலேனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏற்றுக்கொள்வதோ கூடாது; தமது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அவ்வாறு ஏற்றுக்கொள்ளுவதற்கு அனுமதி கொடுக்கவுங்கூடாது.

(2) அரசாங்கத்தாரின் பொதுவான அல்லது தனி ஆணையின் ஏற்பாட்டுக்கு உட்பட்டு, ஓர் ஊராட்சியின் அலுவலராவது பணியாளராவது, பாராட்டு, பாராட்டு, நன்கொடை என்ற வகையில், மலர்கள், பழங்கள் போன்ற சிறு மதிப்புள்ள பொருள்களை எவரிடமிருந்தேனும் பெற்றுக் கொள்ளலாம்; ஆனால், அத்தகைய நன்கொடைகள் கொடுக்கப்படுவதைத் தடுப்பதற்கு, ஊராட்சியின் அலுவலர்கள், பணியாளர்கள் எல்லாரும் முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

(3) அரசாங்கத்தாரின் பொதுவான அல்லது தனி ஆணையின் ஏற்பாடுகளுக்குட்பட்டு, ஒரு ஊராட்சியின் அலுவலராவது பணியாளராவது அத்தகைய சூழ்நிலைகளில் எல்லாம் நியாயமான மதிப்புள்ள திருமணப் பரிசு ஒன்றைத்

தமது சொந்த நண்பராயிருக்கிற ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம், அல்லது அவ்வாறு பெற்றுக் கொள்ளத் தம் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அனுமதி கொடுக்கலாம். அத்தகைய நன்கொடைகள் கொடுக்கப்படுவதைத் தடுப்பதற்கு, ஊராட்சியின் அலுவலர்கள், பணியாளர்கள் எல்லாரும் முழு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்; அவ்வாறு பெற்றுக் கொண்டதைப்பற்றி அல்லது அனுமதி கொடுத்திருப்பதைப் பற்றிச் செயல் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்; அப்பரிசை நன்கொடையாளரிடம் திருப்பிக் கொடுத்து விடுமாறு செயல் அதிகாரி விரும்பினால் அவ்விதமே திருப்பிக் கொடுத்து விடவேண்டும்.

(4) ஓர் ஊராட்சியின் அலுவலராவது பணியாளராவது, அதிக மனத் தாங்கல் உண்டாக்காமல், ஒருவரிடமிருந்து கணிசமான மதிப்புள்ள பரிசு ஒன்றை மறுக்க முடியாவிட்டால், அதை அவர் ஏற்றுக் கொள்ளலாம்; ஆனால், ஊராட்சி வேறு விதமாகக் கட்டளையிட்டாலன்றி, அப்பரிசினை ஊராட்சிக்குக் கொடுத்துவிட வேண்டும்.

(5) அரசாங்கத்தின் பொதுவான அல்லது தனி ஆணையின் ஏற்பாடுகளுக்குட்பட்டு, ஒரு ஊராட்சியின் மருத்துவ அல்லது கால்நடை அலுவலர், தமது தொழில் பற்றிய பணிகளைப் பாராட்டும் வகையில் ஒருவரோ பலரோ நல்ல எண்ணத்துடன் கொடுக்கும் ஏதேனும் நன்கொடை பணிக் கொடை அல்லது பரிசினை ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால், ஒரு ஊராட்சியின் கால்நடை அலுவலர் எவரும், தொற்று நோய்கள் வராமல் தடுப்பதினிமித்தம் கால்நடைகளுக்கு மருந்தூசி போடுவதற்காக ஏதேனும் நன்கொடை, பணிக்கொடை அல்லது பரிசினை ஏற்றுக் கொள்ளக் கூடாது.

(6) ஒரு ஊராட்சியின் அலுவலராவது பணியாளராவது மற்றவர்களுக்குச் சொந்தமான வண்டிகளை அல்லது கால்நடைகளைப் பயன்படுத்தும் வழக்கம் வைத்துக் கொள்ளக் கூடாது; வாடகைக்கு ஓடும் வண்டிகளில் இலவசமாகப் பயணம் செய்யவுங் கூடாது.

2. *உறுப்பினர் கட்டணங்கள்.*—ஒரு ஊராட்சியின் அலுவலராவது பணியாளராவது, பொதுவான அல்லது உள்ளூர்க் காரியம் எதற்காகவேனும் உறுப்பினர் கட்டணங்கள் வசூலிப்பதில் பங்கு கொள்ளக் கூடாது.

3. *பதவி விலகலை விலை கொடுத்து வாங்குதல்.*—ஒரு ஊராட்சியின் அலுவலர்கள் அல்லது பணியாளர்கள், மற்றவர்களின் நன்மைக்காக, ஊராட்சியின் கீழ் உள்ள ஒரு பதவியை, தங்களில் ஒருவர் விலகுவதற்குப் பண ஏற்பாடு செய்து கொள்ளக் கூடாது. இந்த விதியை மீறினால், அந்த விலகலின்

விளைவாகச் செய்யப்படும் நியமனம் ரத்து செய்யப்படும்; அந்த ஏற்பாடு செய்து கொண்டவர்கள் இன்னும் பணியிலிருந்தால் அவர்கள், செயல் அதிகாரி ஆணை பிறப்பிக்கின்ற வரையில், விலக்கி வைக்கப்படுவார்கள்.

4. **ஊராட்சிகளின் அலுவலர்களும், பணியாளர்களும் வைத்துக்கொண்டிருக்கிற அல்லது அடைகிற அசையாப் பொருள் மீதான கட்டுப்பாடு.**—ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் அல்லது ஒரு ஊராட்சியின் கீழ்ப் பணிக்கான வேட்பாளர் ஒவ்வொருவரும், தாம் அல்லது தமது மனைவி அல்லது தம்முடன் வசித்துக் கொண்டிருக்கிற அல்லது எவ்விதமாகவேனும் தம்மை அடுத்துள்ள தமது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அவ்வப்போது வைத்திருக்கக்கூடிய அல்லது அடையக்கூடிய அசையாப் பொருள் எல்லாவற்றையும் பற்றிய விளம்பரத்தைச் செயல் அதிகாரியிடம் கொடுக்க வேண்டும். அப்பொருள் இருக்கிற மாவட்டம் இன்னதென்று அந்த விளம்பரத்தில் கண்டிருக்க வேண்டும்; பொதுவான அல்லது தனி ஆணை மூலமாக ஊராட்சி மேற்கொண்டு கேட்கக் கூடிய தகவலும் அந்த விளம்பரத்தில் அடங்கியிருக்க வேண்டும்.

ஊராட்சிகள் தங்கள் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் பணிக்கொடை வழங்குவதை முறைப்படுத்துகிற விதிகளில் பொருள் சொல்லப்பட்டபடியுள்ள உயர்தரப் பணியிலிருக்கும் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் அப்பணியில் நியமிக்கப்படுவதற்கான வேட்பாளர்களுக்கும் மட்டும் இவ்விதிகள் பொருந்தும்.

குறிப்பு.—( ) வைத்துக் கொள்ளப்பட்டிருக்கிற அல்லது அடையப்படுகிற அசையாப் பொருள் இந்தியாவில் எங்கிருந்தாலும் அவையெல்லாம் அந்த விளம்பரத்தில் அடங்கியிருக்க வேண்டும். 'அ' இணைப்பிலுள்ள படிவத்தில் குறிப்பிட்டிருக்கிற விவரங்களை எல்லாம் கூடிய வரையில் அதில் தெரிவிக்க வேண்டும்.

(ii) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் முந்திய நாட்குறிப்பு ஆண்டின் முடிவில் அவர் வசமிருந்த அல்லது அவர் அக்கறை கொண்டிருந்த அசையாப் பொருள் எல்லாவற்றையும் கண்டு, 'அ' இணைப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற படிவத்தின்படி விவரப் பட்டியல் ஒன்றை, ஒவ்வோர் ஆண்டிலும் சனவரி 15 ஆம் தேதிக்குள் செயல் அதிகாரிக்கு அனுப்ப வேண்டும். கைவிட்டுவிடப்பட்ட அல்லது மற்றபடி பராதீனம் செய்யப்பட்ட அசையாப் பொருள் பற்றிய விவரங்களை, அப்படிவத்தின் (6) முதல் (16) வரையுள்ள பத்திகளிலும் (19), (20), (21) பத்திகளிலும் எழுத வேண்டும்.

(iii) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் ஒருவர், எந்த ஆண்டிலேனும், ஓர் அசையாப் பொருளேயோ ஓர் அசையாப் பொருளில் இருக்கிற உரிமையையோ அடைந்திராவிட்டாலும் கைவிட்டிரா விட்டாலும் மற்றபடி பராதீனம் செய்திராவிட்டாலும், அவர் 'இ' இணைப்பில் கண்ட படிவத்தின்படி ஒரு விவர அறிக்கைக்குப் பதிலாக, கீழ்க்கண்ட படிவத்தின்படி சான்று ஒன்று அனுப்ப வேண்டும்:—

"அ. ஆ என்னும் நான் உளமியைந்து அறிவிப்பது என்னவென்றால்,
அன்று நான் விவர அறிக்கை/சான்று அனுப்பின
பிறகு, ஓர் அசையாப் பொருளேயேனும், அசையாப் பொருளிலுள்ள இலாபகரமான அல்லது மற்றப்படியுள்ள உரிமையேனும் என் சொந்தப் பெயரிலோ வேறொருவர் பெயரிலோ அதனை நான் அடையவுமில்லை; என் வசப்படுத்திக் கொள்ளவுமில்லை மற்றப்படி பராதீனம் செய்யவுமில்லை.

இடம்:

நாள்:

(கையொப்பம்) அ. ஆ.
அலுவல் பதவிப் பெயர்."

(iv) ஊராட்சி அலுவலரின் அல்லது பணியாளரின் சொந்தக் கணக்கில் அல்லது ஒரு நம்பகர், நிறைவேற்றுபவர் அல்லது ஆட்சியாளர் அல்லது கோயில் மிராசுதார் என்னும் முறைமையில் அவர் பெயரில் அடையப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட அல்லது அவர் மனைவியின் அல்லது அவரோடு வசித்துக் கொண்டிருக்கிற அல்லது எவ்விதத்திலேனும் பெயரில் அவரை அடுத்திருக்கிற அவர் குடும்பத்தைச் சேர்ந்த வேறொருவரின் பெயரில் அடையப் பட்டுள்ள அல்லது பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது அவர் வைத்திருக்கிற அல்லது செயலாற்றுகிற அசையாப் பொருள் எல்லாம் ஆண்டு விவர அறிக்கையில் அடங்கியிருக்கவேண்டும். ஒரு ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் மருமக்கள்தாயம் அல்லது அலிய சந்தானச் சட்டத்தைப் பின்பற்றினால் அப்படிப்பட்டவற்றில் அவருடைய மனைவி அடைந்துள்ள அசையாப் பொருளையும் மேற்படி விவரப் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

) அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் வைத்திருக்கும் அசையாப் பொருளைக் காட்டும் 'ஆ' இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள படிவப் படி உள்ள விவரப் பட்டியல் ஒன்றை அவருடைய பணிப் பதிவேட்டில்

எழுதி வைக்க வேண்டும். மேலும் (ii) குறிப்பின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களையொட்டி இந்த விவரப் பட்டியலை ஆண்டுதோறும் திருத்தி யமைக்க வேண்டும். ஆண்டுதோறும் சரிபார்த்தது பற்றிய சான்றினை சம்பந்தப்பட்ட பணிப் பதிவேட்டில் எழுதி வைக்கத் தகுதிவாய்ந்த அலுவலர், மேற்படி விவரப் பட்டியலில் செய்யப்படும் பதிவு அல்லது மாற்றம் ஒவ்வொன்றுக்கும் முறைப்படி சான்றுக் கையொப்பமிட வேண்டும்.

(vi) ஒரு ஊராட்சியின் கீழ் நியமனத்துக்கான வேட்பாளர் ஒருவர், 'அ' இணைப்பில் கண்டுள்ள படிவப்படி உள்ள விவரப் பட்டியல் ஒன்றைத் தமது விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.

(vi) தவறான எண்ணம் தோற்றுவிக்க முயன்றாலும், தகவலை முழுமை யாகவும் சரியாகவும் கொடுக்கத் தவறிப் போனாலும், சம்பந்தப்பட்ட அலுவலர் அல்லது பணியாளர் வேலையிலிருந்து தள்ளிவிடப்படுவதற்கு உள்ளாவார்.

5. **திருமங்களின் (கம்பெனிகளின்) முன்னேற்றத்துக்கான ஆக்க முயற்சியும் அவைகளின் மேலாண்மையும்.**—(1) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும், ஒரு நிறுமத்திலோ உடனிகழ்வு நன்மைக் கழகத்திலோ (Mutual Benefit Society) சம்பளம் பெறும் வேலையை ஏற்றுக்கொள்ளக் கூடாது. இந்திய உயிர் ஈட்டுறுதி மன்றத்துக்கு அல்லது ஓர் ஈட்டுறுதி நிறுமம் அல்லது கழகத்துக்கு, சம்பளமாகவோ தரகாகவோ பணம் கொடுக்கப்பெறும் முகவராகச் செயலாற்றவும் கூடாது.

(2) ஒரு ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் செயல் அதிகாரியின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொண்டு, ஒரு உடனிகழ்வு நன்மைக் கழகத்தின் மேலாண்மையில் பங்கு கொள்ளலாம்; ஆனால் அவர் அதற்காக கைம்மாறு எதையும் பெறக் கூடாது.

(3) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றத்துக்கான ஆக்க முயற்சியில் பங்கு கொள்ளலாம்; செயல் அதிகாரியின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொண்டு, எந்தக் கூட்டுறவுச் சங்கத்திலாவது பதவி வகிக்கலாம்; அல்லது அதன் மேலாண்மைக்காக நியமிக்கப்பட்ட குழுவில் பணியாற்றலாம், அல்லது தாம் செய்த பணிக்காக அதனிடமிருந்து கைம்மாறு பெற்றுக் கொள்ளலாம்.

(4) (2) அல்லது (3) உள் விதியின்படி எதிலேனும் ஒப்பளிப்பு வழங்குவதற்கு முன், அந்த அலுவலர் அல்லது பணியாளர் தாம் மேற்கொண்ட பணியை, தம் அலுவல் கடமைகளுக்கு இடையூறு வாராமல் செய்வார் என்று செயல் அதிகாரி தாம் ஐயமறத் தெரிந்து கொள்ள வேண்டும்.

6. தனிப்பட்ட தொழில் அல்லது வேலை.—(1) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர், எந்தத் தொழிலிலும் ஈடுபடக் கூடாது; தமது பொதுமக் கடமைகள் அல்லாத வேறு வேலையை மேற்கொள்ளவும் கூடாது.

(2) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர், சமூகம் அல்லது அறச் சார்பாயுள்ள மதிப்புறு வேலையை அல்லது எப்போதாவது இலக்கியம் அல்லது கலைத் தன்மை வாய்ந்த பணியை மேற்கொள்ளலாம்; ஆனால், அதனால் அவருடைய அலுவல்களுக்கு இடையூறு வரக் கூடாது. ஆயினும், விரும்பத் தக்க தல்லவென்று ஊராட்சி கருதுகிற ஒரு வேலையை மேற்கொள்ளக் கூடாதென்று ஊராட்சி எப்போதேனும் அவரைத் தடுக்கலாம், அல்லது அத்தகைய வேலையை விட்டு விடும்படி ஊராட்சி எப்போதேனும் அவருக்கு ஆணையிடலாம்.

(3) (அ) கல்வி பற்றிய வானொலிப் பேச்சுகளில் ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும், மாவட்ட ஆட்சியாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம், எப்பொருளைப் பற்றியேனும் வானொலி நிலையமொன்றில் வானொலிப் பேச்சு நிகழ்த்தக் கூடாது. அவ்வாறு செய்வது விரும்பத்தக்கதென மாவட்ட ஆட்சியாளர் கருதினால் அத்தகையதொன்றை அரசாங்கத்தாரின் ஆணைகளைப் பெறுவதற்காக மாவட்ட ஆட்சியாளர் அனுப்பலாம்.

(ஆ) ஒரு ஊராட்சியின் அலுவல் அல்லது பணியாளர் வானொலிப் பேச்சு நிகழ்த்தக் கேட்டுக் கொள்ளப்பட்டால் அல்லது அப்பேச்சு நிகழ்த்த விரும்பினால், அவர் பேசக் கருதியிருக்கிற பொருளைப் பற்றி முறை வழியாக மாவட்ட ஆட்சியாளருக்குத் தெரிவிக்க வேண்டும்; அப்பேச்சு அவருடைய அலுவல் கடமைகளுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புடைய பொருளைப் பற்றியதாயிருந்தால், அல்லது மாவட்ட ஆட்சியாளர் ஆணையிட்டால், அது நிகழ்த்தப்படுவதற்கு முன், அப்பேச்சின் முழு வாசகத்தையும் மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதலுக்காக அனுப்ப வேண்டும்.

(இ) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் (தயாரிக்கப் பட்ட "இசையரங்குக் காட்சிகளை" அல்லது இசைத் தட்டுகளைப் போடுவது உட்பட) இசை அல்லது மற்ற நிகழ்ச்சிகளை ஒலி பரப்புவதற்கு (அ), (ஆ) பகுதிகளில் ஏற்பாடுகள் தக்க மாற்றங்களுடன் பொருந்தும்.

7. ஒப்பந்தக்காரர்களுடன் பண விவகாரங்கள்.—ஊராட்சிகளின் அலுவலர்கள், பணியாளர்கள் எல்லாரும், ஊராட்சி ஒப்பந்தக்காரர்களுடன்

அல்லது ஊராட்சியின் கீழ் உள்ள ஒரு துறையுடன் எவ்விதமாகவேனும் தொடர்புடைய ஒருவருடன் எவ்விதப் பண விவகாரங்களும் வைத்துக் கொள்ளக் கூடாது.

8. கடன் தீர்க்க வசதியற்ற நிலையும், தீராக் கடன்பட்டிருத்தலும்.—ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் தீராக் கடன் பட்டிருத்தலைத் தவிர்க்க வேண்டும், அவர் கடன் தீர்க்க வகையற்றவரெனத் தீர்மானிக்கப் பட்டால் அல்லது அறிவிக்கப்பட்டால், அல்லது சாதாரணச் சூழ்நிலைகளில் இரண்டாண்டுக் காலத்துக்குள் அவர் திருப்பிச் செலுத்த முடியாத மொத்தத் தொகைக்கு அவர் கடன்பட்டிருந்தால், அல்லது அவருடைய சம்பளத்தின் ஒரு பகுதிக் கடனுக்காக அடிக்கடி கைப்பற்றுதல் (ஜப்தி) செய்யப்பட்டால், அல்லது சாதாரணச் சூழ்நிலைகளில் இரண்டாண்டுக் காலத்திற்குள் அவர் திருப்பிச் செலுத்த முடியாத ஒரு தொகைக்காக ஜப்தி செய்யப்பட்டால், சாதாரண விவேகத்துடனிருந்தும் அவர் எதிர் பார்த்திருக்க முடியாத அல்லது அவர் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் விளைவாக கடன் தீர்க்க வகையற்ற நிலை அல்லது கடன்பட்ட நிலை ஏற்பட்டதெனவும், ஊதாரித்தனமாக அல்லது ஒழுக்கக்கேடான பழக்கங்களினால் அது ஏற்படவில்லையெனவும் அவர் மெய்ப் பித்தாலன்றி, அவர் இவ்விதியை மீறியிருப்பதாகக் கருதப்படுவார். ஒரு ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் தான் கடன் தீர்க்க வகையற்றவரெனத் தீர்மானிக்கும் படி அல்லது அறிவிக்கும்படி விண்ணப்பம் செய்து கொண்டால் அல்லது அவ்வாறு தீர்மானிக்கப்பட்டால் அல்லது அறிவிக்கப்பட்டால், அவர் கடன் தீர்க்க வகையற்றிருக்கும் தம் நிலையை, தாம் வேலையிலமர்ந்திருக்கிற அலுவலகத்தின் அல்லது துறையின் தலைவருக்கு உடனே தெரிவிக்க வேண்டும்.

9. அலுவல் தொடர்பான ஆவணங்களை அல்லது தகவலை அனுப்புவது.— ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும், ஊராட்சியிட மிருந்து இதன் பொருட்டுப் பொதுவாக அல்லது தனிப்பட்ட அதிகாரம் பெற்றிருந்தாலன்றி, தமது அலுவல் முறையான கடமைகளைச் செய்யும்போது தம் வசம் வந்திருக்கிற அல்லது அக்கடமைகளைச் செய்யும் முறையில் அலுவல் தொடர்பான ஆதாரங்களிலிருந்தோ மற்றப்படியோ தம்மால் தயாரிக்கப்பட்ட அல்லது திரட்டப்பட்ட ஓர் ஆவணத்தையாவது தகவலையாவது, அவ்வூராட் சியின் வேறோர் அலுவலருக்கேனும் பணியாளருக்கேனும் வேறொரு உள்ளாட்சி அதிகாரிக் குழுவின் ஓர் அலுவலருக்கேனும் பணியாளருக்கேனும், அதைப் பெற்றுக் கொள்ள அதிகாரம் பெற்றிராத அரசாங்கப் பணியாளர் ஒருவருக் கேனும், அரசுப் பணியாளர் அல்லாத வேறொருவருக்கேனும், செய்தித் தாள் களுக்கேனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அனுப்பக் கூடாது.

10. செய்தித்தாள்களுடன் தொடர்பு.—ஓர் ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர், ஒரு செய்தித் தாளுக்கு அல்லது வேறு வெளியீட்டுக்கு முழுவதுமோ சிறிது மட்டிலோ சொந்தக்காரர் ஆகிவிடக் கூடாது, அதை நடத்தவுங் கூடாது, அதைப் பதிப்பிப்பதில் அல்லது செயலாற்றுவதில் பங்கு கொள்ளவுங் கூடாது.

11. ஆவணங்களை வெளியிடுவதன் மீதும் அவைகளைச் செய்தித்தாள்களுக்கு அனுப்புவதன் மீதும் வரையறைகள்.—(1) ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் எவரும்—

(i) மைய அரசினரின் அல்லது ஒரு மாநில அரசினரின், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அல்லது ஒரு ஊராட்சியின் அல்லது ஒரு நகராட்சி மன்றத்தின் நடப்பு அல்லது அண்மைக் காலக் கொள்கை அல்லது செயலைக் கண்டிக்கும் வகையில், அல்லது

(ii) மைய அரசு, மாநில அரசு, ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், ஆகியவைகளுக்கிடையேயான உறவுகளைச் சிக்கலாக்கக் கூடிய வகையில், அல்லது

(iii) மைய அரசுக்கும் ஓர் அயல் நாட்டின் அரசுக்கும் இடையேயான உறவுகளைச் சிக்கலாக்கக் கூடிய வகையில் ஓர் அறிக்கையை, வானொலிப் பேச்சிலேனும், பெயர் குறிப்பிடாமல் அல்லது தம் சொந்தப் பெயரில் அல்லது வேறொருவர் பெயரில் வெளியிடப்படும் ஓர் ஆவணத்திலேனும், செய்தித்தாள்களுக்கான கடிதத்திலேனும், ஒரு பொதுச் சொற்பொழிவிலேனும் வெளியிடக் கூடாது.

ஆனால், ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர், தமது அலுவல் முறையிலாவது தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடமைகளை முறைப்படிச் செய்கையிலாவது தெரிவித்த அறிக்கைக்கு அல்லது தெரிவித்த கருத்துக்களுக்கு இவ்விதியில் உள்ளது எதுவும் பொருந்தாது.

(2) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர், எந்த அறிக்கைகளுக்கு (1) உள்விதியினால் விதிக்கப்பட்டிருக்கிற வரையறைகள் பொருந்துமா என்னும் ஐயப்பாடு ஏதேனும் எழக்கூடுமோ அந்த அறிக்கைகள் அடங்கியுள்ள ஓர் ஆவணத்தைத் தம் சொந்தப் பெயரில் வெளியிடக் கருதினால், அல்லது ஒரு கடிதத்தைத் தம் சொந்தப் பெயரில் பத்திரிகைகளுக்கு எழுதக் கருதினால், அல்லது பொதுச் சொற்பொழிவு நிகழ்த்தக் கருதினால் தாம் வெளிடக் கருதும் ஆவணத்தின், அல்லது தாம் எழுதக் கருதும் கடிதத்தில், அல்லது தாம் நிகழ்த்தக் கருதும் சொற்பொழிவின் வரைவுப்படி ஒன்றை

மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்; மாவட்ட ஆட்சியாளருடைய ஒப்பளிப்புடனும் அவர் கட்டளையிடக் கூடிய எவையேனும் மாறுதல்களுடனும் அன்றி, மற்றப்படி அவர் அந்த ஆவணத்தை வெளியிடவும் கூடாது, கடிதத்தை எழுதவும் கூடாது, சொற்பொழிவு நிகழ்த்தவும் கூடாது.

12. குழுக்கள் முன்பு சாட்சியம் சொல்வது.—ஓர் ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் செயல் அதிகாரியின் அனுமதியை முதலில் பெற்றுக் கொண்டிருந்தாலன்றி, ஓர் அரசினர் குழுவுக்கு முன் சாட்சியம் சொல்லக் கூடாது. அவ்வாறு சாட்சியம் சொல்லும்போது, ஊராட்சியின், மாநில அரசின் அல்லது மைய அரசின் கொள்கையை அல்லது தீர்மானங்களை அவர் கண்டிக்கக் கூடாது.

கட்டாயமாக வந்து பதில் கூறும்படிச் செய்யும் அதிகாரமுடைய சட்டப் படியான குழுக்களுக்கு முன் சொல்லப்படும் சாட்சியத்துக்காவது, நீதிமன்ற விசாரணைகளின்போது சொல்லப்படும் சாட்சியத்துக்காவது இவ்விதி பொருந்தாது.

13. தேர்தல்களில் பங்கு கொள்வது.—ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் ஒருவர் சட்டசபைக்கோ உள்ளாட்சி அதிகாரிக் குழுவுக்கோ நடக்கும் தேர்தலில், வேட்பாளராக நிற்கவுங்கூடாது, ஒரு வேட்பாளருக்கு உதவியாக அல்லது இடையூறாக தலையிடவுங் கூடாது, எவ்விதமாகவேனும் தம் செல்வாக்கைப் பயன்படுத்தவுங் கூடாது; எந்தக் காரியத்தையும் செய்யவும் கூடாது; தேர்தல் பிரசாரக் கட்சி அமைப்பு ஒன்றில் அவர் பங்கெடுத்துக் கொள்ளவும் கூடாது, அதற்கு உதவியாக எதையும் கொடுக்கக் கூடாது.

ஆனால், ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் அத்தகைய ஒரு தேர்தலில் வாக்களிக்கத் தகுதி உள்ளவராயிருந்தால், அவர் தமது வாக்களிக்கும் உரிமையைச் செலுத்தலாம்; ஆனால், எவ்விதமாக அவ்வுரிமையைச் செலுத்தக் கருதியிருக்கிறாரென்பது கூடியவரையில் தெரியாமலிருக்க வேண்டும்.

முழு நேர அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் மட்டும் இவ்விதி பொருந்தும்.

14. அரசியலில் பங்கு கொள்வது.—அரசாங்கத்தாரின் பொதுவான அல்லது தனிப்பட்ட ஏதேனும் ஆணைக்குட்பட்டு, ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும், இந்தியாவில் அல்லது இந்திய விவகாரங்களுக்குத்

தொடர்பான ஏதேனும் அரசியல் இயக்கத்தில் கலந்து கொள்ளக் கூடாது; அதற்கு உதவியாக எதையும் கொடுக்கக் கூடாது; அதற்கு எவ்விதத்திலேனும் உதவிச் செய்யவுங் கூடாது. ஓர் அலுவலர் அல்லது பணியாளர் கருதும் செயல் இவ்விதியை மீறியதாகுமா என ஐயம் எழுதற்கிடமுண்டானால், அவர் அதனைச் செயல் அதிகாரி மூலமாக மாவட்ட ஆட்சியாளரின் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும்; அதன் பேரில் மாவட்ட ஆட்சியாளரின் தீர்மானம் முடிவானதாகும்.

குறிப்பு.—ஓர் அலுவலர் அல்லது பணியாளருடைய நிலைகுலைவிக்கும் செயல்கள் அல்லது விசுவாசமற்ற கருத்துக்களை வெளிப்படுத்தும் சொற்கள், அவரைப் பணியிலிருந்து நீக்கிவிடுவதற்குப் போதுமான காரணமாகக் கருதப்படும்.

15. அலுவலர்களும் பணியாளர்களும் தங்கள் குடும்பத்தினரின் செயல்களுக்குப் பொறுப்பாளிகளாயிருப்பது.—ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் எந்தச் செயலைச் செய்தால் இவ்விதிகளை மீறியதாகுமோ அச்செயலை அவர் மனைவியாவது, அவருடன் வசித்துக் கொண்டிருக்கிற அல்லது எவ்விதத்திலேனும் அவரை அடுத்திருக்கிற அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வேறொருவராவது செய்தால், அதற்காக அவர் பொறுப்பாளியாவார்.

16. ஊராட்சி அலுவலர்கள் அல்லது பணியாளர்கள் என்னும் முறைமையில் அவர்களுடைய செயல்களும் நடத்தையும் சரியெனக் காட்டுதல்.—ஓர் ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர், அவதூறான தாக்குதல்களை எதிர்த்து, தமது அலுவல் முறையான செயல்கள் அல்லது நடத்தை சரியெனக் காட்டுவதற்காக, செயல் அதிகாரியின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், நீதிமன்றத்தின் அல்லது பத்திரிக்கைகளின் உதவியை நாடக் கூடாது.

ஒரு ஊராட்சியின் அலுவருடைய அல்லது பணியாளருடைய சொந்தத் தனிப்பட்ட செயல்கள் அல்லது நடத்தை சரியெனக் காட்ட, அவருக்குள்ள உரிமையை இவ்விதியில் உள்ளது எதுவும் குறைக்கமாட்டாது, மற்றப்படிப் பாதிக்கவும் மாட்டாது.

17. தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கையில் முகவரி.—ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும்போது, அவர் எங்கு வேண்டுமானாலும் போகலாம்;

ஆனால் அவர் தமது முகவரியை செயல் அதிகாரியிடம் கொடுத்துவிட்டுப் போக வேண்டும். மேலும் அவர், தமது நடத்தையைக் குறித்து விசாரணை செய்யும் அலுவலரிடமும் தமது முகவரியைக் கொடுத்து விட்டுப் போக வேண்டும்.

அவருடைய நடத்தையைப் பற்றிச் செய்யப்படும் விசாரணையின் போது வந்திருக்கும்படிப் பிறப்பிக்கப்படும் எல்லா ஆணைகளுக்கும் அவர் கீழ் படிந்து நடக்க வேண்டும்; அவர் அப்படிச் செய்யத் தவறினால், அவர் இல்லா மலேயே விசாரணை நடத்தப்படலாம்.

18. சொந்த நலத்துக்காக மேலதிகாரிகளிடம் செல்வாக்கைப் பயன் படுத்துதல்.—ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் எவரும், தமது நலனைப் பெருக்கிக் கொள்வதற்காக, ஒரு மேலதிகாரியின் மீது. அரசியல் செல்வாக்கினை அல்லது வேறு வெளிப்புறச் செல்வாக்கினைப் பயன்படுத்தவுங் கூடாது, பயன் படுத்த முயலவுங்கூடாது. இவ்விதியை மீறுவதற்குத் தண்டனை என்ன வென்றால், அவருடைய அலுவல் உயர்வை நிலையாகவோ செயல் அதிகாரி நிச்சயிக்கக்கூடிய காலம் வரையிலோ நிறுத்திவிடுவதாகும்; அல்லது நாளடைவில் சம்பள ஏற்ற முறையில், கீழ்நிலைக்கு அவரைத் தாழ்த்துவதாகும்.

விளக்கம்.—ஒரு ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர், தமது சொந்த நிகழ்ச்சியை, ஊராட்சியிலோ, நாடாளுமன்றத்திலோ, மாநிலச் சட்டமன்றத் திலோ ஓர் இடைக் கேள்வியின் பொருளாயிருக்கும்படிச் செய்தால், அவர் இவ்விதியை மீறுபவராகிறார்.

19. மேல் அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதுதல் அல்லது அவர்களை நேர் காணல்.—(1) ஒரு ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் எவரும், தமது அலுவல் முறையான கடமைகளுக்குத் தொடர்பான அல்லது அந்தகைய அலு வலர் அல்லது பணியாளர் என்னும் முறைமையில் தனிப்படத் தம்மைப் பாதிக்கிற எவற்றைப் பற்றியேனும், எந்த மேலதிகாரிக்கு அடுத்துக் கீழ் தாம் இருக்கிறாரோ அந்த அதிகாரி அல்லாத வேறு எந்த மேலதிகாரிக்கும் நேரடியாகக் கடிதம் எழுதலாகாது.

குறிப்பு.—(1) ஒரு ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர், தமக்கு அடுத்து மேல் உள்ள அதிகாரி மூலமாகக் கடிதம் எழுதியிருந்து, தமக்கு அடுத்து மேல் இருக்கிற அலுவலர் மூலமாக அனுப்பப்பட்ட கடிதத்தின்படி ஒன்றை மேல் அதிகாரிகளுக்கு நேரடியாக அனுப்ப விரும்பினால், அவ்வாறே அனுப் பலாம்.

(2) ஒரு ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் எவரும், ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் என்னும் முறைமையில் தனிப் படத் தம்மைப் பாதிக்கிற ஒரு நிகழ்ச்சி சம்பந்தமாக ஆதரவு பெறும் பொருட்டு அல்லது நற்சான்றிதழ்கள் அல்லது நன்மதிப்புப் பத்திரங்கள் பெறும் பொருட்டு, எந்த அலுவலருக்கு அடுத்துக் கீழ் தாம் இருக்கிறாரோ அந்த அலுவலர் அல்லாத வேறு ஒருவர் அல்லது அலுவலரிடம் அல்லது அலுவல் பற்றற்ற ஒருவரிடம் போகக் கூடாது.

(3) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும் எந்த அதிகாரிக்கு அடுத்துக் கீழ் தாம் இருக்கிறரோ அந்த அதிகாரியின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், அத்தகைய அலுவலர், அல்லது பணியாளர் என்னும் முறைமையில் தனிப்பட தம்மைப் பாதிக்கிற ஒரு நிகழ்ச்சி சம்பந்தமாக, தமக்கு அடுத்த மேலதிகாரி அல்லாத வேறோர் அலுவலரை நேரில் காணுதல் கூடாது; ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும், ஓர் அமைச்சரையோ, அரசாங்கச் செயலாளரையோ அத்தகைய காரியத்திற்கு நேரில் காணல் கூடாது.

(4) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் ஓர் அலுவல் அல்லது பதவி உயர்வு கோரிச் செய்து கொள்ளும் விண்ணப்பம் ஒவ்வொன்றையும் முறை வழியாக அனுப்ப வேண்டும்.

20. ஊராட்சி அலுவலர்களையும், பணியாளர்களையும் பாராட்டிப் பொது ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகள்.—(1) ஒரு ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் எவரும், பாராட்டு மடலோ பிரிவு வாழ்த்துரையோ பெற்றுக் கொள்ளக் கூடாது. தம்மைப் பாராட்டுவதற்காக நடத்தப்படும் ஏதேனும் பொதுக் கூட்டம் அல்லது கேளிக்கைக்கு வந்திருக்கவுங் கூடாது. ஆயினும், அலுவலர் அல்லது பணி யாளருடைய தனிப்பட்ட நண்பர்கள் அல்லது அவர் உறுப்பினராயுள்ள ஒரு கழகம் அவருக்கு அளிக்கும் பிரிவு வாழ்த்துரைக் கேளிக்கைக்கு அவர் வந்திருப்பதற்குத் தடை ஒன்றுமில்லை; ஆனால், ஓர் அழைப்பை ஏற்றுக் கொள்ளும்போது, அந்த அலுவலர் அல்லது பணியாளர் அடியிற்கண்டவை களைத் தெளிவுபடுத்த வேண்டும்; அவையாவன:—அந்த நிகழ்ச்சி முற்றும் தனிப்பட்ட தன்மை வாய்ந்ததாயிருக்க வேண்டும்; எக்காரணத்தை முன்னிட்டும் அது ஒரு பொதுக் கேளிக்கையின் தன்மையை அடைந்துவிடக் கூடாது; அவருக்குப் பாராட்டுப் பத்திரம் எதுவும் வழங்கக் கூடாது; நடவடிக்கைகளைப் பற்றிய செய்தி எதையும் பொதுப் பத்திரிகைகளில் வெளியிடக் கூடாது.

(2) எவ்வித வரிசையில் உள்ள அலுவலர் அல்லது பணியாளர் எவரும், தமது கீழுள்ள அலுவலர்கள் பணியாளர் இவர்களுடைய விருந்தளிப்பு எதையும் பெற்றுக் கொள்ளக் கூடாது.

21. ஊராட்சி அலுவலர்களின், பணியாளர்களின் ஒரு சங்கத்தில், ஒன்றியத்தில் அல்லது கூட்டிணைக் கழகத்தில், ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் அல்லாமல் ஒருவர் உறுப்பினராக, பதவியாளராக அல்லது காப்பாளராக இருந்தால், ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் எவரும் அச்சங்கத்தின், ஒன்றியம் அல்லது கூட்டிணைக் கழகத்தின் உறுப்பினரா யிருக்கக் கூடாது.

22. அரசினரின் கொள்கை அல்லது செயல் பற்றிய விவாதம்.—ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் எவரும், மைய அரசினர் அல்லது ஒரு மாநில அரசினர், ஒரு ஊராட்சி அல்லது ஒரு ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது ஒரு நகராட்சி மன்றம் பின்பற்றும் கொள்கையைப் பற்றி அல்லது எடுத்துக் கொண்ட நடவடிக்கையைப் பற்றி, வெளிப்படையாக அல்லது ஒரு சங்கத்தின் அல்லது கழகத்தின் ஒரு கூட்டத்திலே, வாய்ச்சொல், எழுத்து அல்லது வேறு விதமாக விவாதிக்கவுங் கூடாது, கண்டிக்கவுங்கூடாது, அத்தகைய ஒரு விவாதத்தில் அல்லது கண்டனத்தில் அவர் எவ்விதத்திலும் கலந்து கொள்ளவுங் கூடாது.

ஆனால், இவ்விதியில் உள்ளது எதுவும்—

(1) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர், ஊராட்சிகளின் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் மட்டுமே ஏற்பட்ட கூட்டத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தங்களுடைய சங்கத்தின் தனிப்பட்ட கூட்டம் ஒன்றில், தனித் தனியாக அல்லது பொதுவாக அத்தகைய அலுவலர்களின் அல்லது பணியாளர்களின் தனிப்பட்ட நலனைப் பாதிக்கிறவற்றைப் பற்றிய விவாதங்களில் கலந்து கொள்வதையோ,

(2) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர், தப்பெண்ணங்களை அகற்றுவதற்காகவும், பொய்க் கூற்றுகளைத் திருத்துவதற்காகவும், அல்லது மாநில அரசின், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின், ஊராட்சியின் அல்லது நகராட்சி மன்றத்தின் ஏதேனும் கொள்கையைத் திறம்பட நிறைவேற்றுவதற்காகவும் அக்கொள்கையை அல்லது மாநில அரசின், ஊராட்சி ஒன்றிய மன்றத்தின், ஊராட்சியின் அல்லது நகராட்சி மன்றத்தின் செயலைப் பொதுக் கூட்டங்களில் அல்லது தனிப்பட்ட கூட்டங்களில் ஆதரிப்பதையும் விளக்குவதையும் தடுப்பதாகக் கருதப்படமாட்டாது.

விளக்கம்.—மாநில அரசாங்கத்தாரின் கொள்கையை அல்லது செயலை, அவர்களுக்கு யுத்தம் அல்லது தேவை எனத் தோற்றக் கூடிய விதத்தில் வெளியிட்டு விளக்கும்படி, ஒரு ஊராட்சியின் அல்லது அலுவலர் அல்லது பணியாளருக்கு ஆணையிட, அந்த அரசாங்கத்துக்குள்ள அதிகாரத்தை இந்த விதியில் உள்ளது எதுவும் வரையறுப்பதாகவோ குறைப்பதாகவோ பொருள் செய்யக் கூடாது.

23. தனிப்பட்ட வேலைக்காக விண்ணப்பம் செய்து கொள்வது.—(1) ஒரு ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும், செயல் அதிகாரியின் எழுத்து மூலமான அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், தனிப் பட்ட வேலைக்காக விண்ணப்பம் செய்து கொள்ளவுங் கூடாது; அவ்வேலையை ஏற்றுக் கொள்ளத் தாம் விரும்புவதாகத் தெரிவிக்கவும் கூடாது.

(2) (அ) தனிப்பட்ட வேலை இந்தியாவிலுள்ள ஒரு தொழில் நிறுவனத்தில் இருப்பதைத் தவிர அவ்வேலைக்காக விண்ணப்பம் செய்து கொள்வதற்கான அல்லது அவ்வேலையை ஏற்றுக் கொள்வதற்கான அனுமதி, ஓய்வு பெறுவதற்கு முன் விடுப்பிலிருக்கிற ஒருவருக்குச் சாதாரணமாக வழங்கப்படும். இந்தியாவிலுள்ள ஒரு தொழில் நிறுவனத்தில் தனிப்பட்ட வேலைக்காக விண்ணப்பம் செய்து கொள்வதற்கான அல்லது அவ்வேலையை ஒப்புக் கொள்வதற்கான அனுமதி, மிகத் தனி வகையான நேர்வுகளில் மட்டும் வழங்கப்படும்; மற்றும் அந்த அலுவலர் அல்லது பணியாளர் சம்பந்தப்பட்ட ஊராட்சியின் பணியிலிருந்து உடனே விலகி ஓய்வு பெற வேண்டுமென்னும் வரையறைக்கு உட்பட்டு அந்த அனுமதி வழங்கப்படலாம்.

(ஆ) தனிப்பட்ட வேலைக்காக விண்ணப்பம் செய்து கொள்வதற் கான அல்லது அவ்வேலையை ஏற்றுக் கொள்வதற்கான அனுமதியை, ஊராட்சி யின் வேறு எந்த அலுவலருக்கும் அல்லது பணியாளருக்கும் வழங்கக் கூடாது; ஆனால், அவர் உரிய காலத்துக்கு முன் விலகல் செய்வதை ஒப்புக் கொள் வதனால் ஊராட்சிப் பணிகளுக்குப் பாதகம் நேராதென்று செயல் அதிகாரி ஐயமறத் தெரிந்து கொண்டால், அந்த அனுமதி வழங்கப்படலாம்.

(3) தனிப்பட்ட வேலைக்காக விண்ணப்பம் செய்து கொள்வதற்கான அல்லது அவ்வேலையை ஏற்றுக் கொள்வதற்கான அனுமதி ஒருவருக்கு மறுக்கப் பட்டு, அவர் ஒரு ஊராட்சியின் கீழ்க் கமரா வேலையினின்றும் விலகி விட விரும்பினால், அந்த விலகலைச் சாதாரணமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(4) ஓய்வு பெறுவதற்கு முன் விடுப்பிலிராத ஒருவருக்குத் தனிப்பட்ட வேலைக்காக விண்ணப்பம் செய்து கொள்வதற்கு அல்லது அவ்வேலையை

ஏற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டால், அவர் அவ்வேலையை ஏற்றுக் கொண்டவுடனே, ஊராட்சியின் கீழ்த் தம் வேலையினின்றும் விலகிவிட வேண்டும்.

இணைப்பு அ.

19 டிசம்பர் 31 ஆம் தேதியோடு முடிவடைந்த ஆண்டில் .... என்பவர் வைத்திருந்த அடைந்த அல்லது மாறிய அசையாப் பொருளில் உள்ள உரிமையையும் காட்டும் விவரப் பட்டியல்.

குறிப்பு.—எந்த ஆண்டுக்காக இந்த விவர அறிக்கை அனுப்பப்படுகிறதோ, அந்த ஆண்டுக்கு முன் எந்த உடைமையில் அவ்வலுவலர் அல்லது பணியாளர் உரிமை அடைந்திருந்து அந்த உரிமையை அந்த ஆண்டிலும் அவர் வைத்துக் கொண்டிருந்தாரோ அந்த உடைமையை முதலில் காட்ட வேண்டும்; எந்த உடைமைகள் பற்றி அந்த ஆண்டில் விவகாரங்கள் நடந்தனவோ அந்த உடைமைகளைப் பின்னர்க் காட்ட வேண்டும்.

1. அலுவலரின் அல்லது பணியாளரின் பெயர்.
2. வகிக்கும் பதவி.
3. பணியில் அமர்ந்த தேதி.
4. உடைமையின் தன்மை, அதாவது

(1) வீடுகள் (அவைகளுடன் தோட்டங்கள் இருக்கின்றனவா இல்லையா என்பதைத் தெரிவிக்கவும்); அவைகள் எவ்வெவ்விதங்களில் பயன்படுத்தப் படுகின்றன ?

(2) நிலங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன? வேளாண்மைக் காரியங்களுக்காகவா? தோட்டங்களாகவா? வேறு எவையேனும் காரியங் களுக்காகவா ?

5. 19 ஆம் ஆண்டுக்கு முன் அடையப்பட்டதா? அந்த ஆண்டில் அடையப் பட்டதா ?

6. 19 ஆம் ஆண்டில் கைவிட்டு விடப்பட்டதா ?

நிலம் அல்லது வேறு உடைமை இருக்குமிடம்.

7. ஊர்.
8. மாவட்டம்.
9. மாவட்டம்.

10 நில அளவை எண்.

நிலத்தின் பரப்பும் அதன் மீதான வரி விதிப்பும்

புன்செய்

11. பரப்பு.

12. வரி விதிப்பு.

நன்செய்

13. பரப்பு.

14. வரி விதிப்பு.

15. சர்க்கார் அல்லது இறும்.

16. யாரிடமிருந்து அடையப்பட்டது? அல்லது யாருக்குக் கொடுத்து விடப்பட்டது?

17. அடையப்பட்ட பிறகு அல்லது கைவிட்டுவிடுவதற்கு முன் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது?

18. எவ்விதமாக, எக்காரியத்துக்காக அடையப்பட்டது?

19. ஒப்பாவணத்தின் ஆண்டும் மாதமும் தேதியும்.

20. நிலத்தில் வைத்துக் கொண்டிருக்கும் உரிமை.

21. நிலத்துக்காகக் கொடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட விலை.

22. குறிப்புரை.

.... என்னும் நான் உளமதித்து அறிவிப்பது என்னவென்ருல், இந்த விவர அறிக்கையில் கண்டுள்ளதைத் தவிர வேறு அசையாப் பொருளை அல்லது அசையாப் பொருளில் பயனுள்ள அல்லது வேறு விதமாக உரிமைகளை என் சொந்தப் பெயரிலோ வேருெருவர் பெயரிலோ இப்பொழுது நான் வைத்திருக்கவில்லை; 19 ஆம் ஆண்டில் நான் அடையவுமில்லை, மற்றவர்களுக்குக் கொடுத்துவிடவுமில்லை.

இடம்: (கையெழுத்து.)

தேதி: (பதவி.)

குறிப்பு.—(1) ஒவ்வோர் ஆண்டிலும் சனவரி 15 ஆம் தேதியன்று இந்த விவரப் பட்டியலைத் தவருமல் அனுப்பிவிட வேண்டும்.

(2) இந்த விவர அறிக்கை சம்பந்தப்படுகிற ஆண்டில் புதிதாக அடையப்பட்டிருப்பவைகளைச் சிவப்பு மையில் எழுத வேண்டும்.

(3) இந்த ஆண்டில் எந்த அசையாப் பொருள் ஓர் அலுவலரின் வசமிருந்து போய்விட்டதோ அந்த அசையாப் பொருளைப் பற்றிய விவரங்களையும் ஆண்டு விவர அறிக்கையில் எழுத வேண்டும்.

இணைப்பு ஆ.

ஊராட்சிகளின் அலுவலர்களும் பணியாளர்களும் வைத்திருக்கும் அசையாப் பொருளில் உள்ள உரிமையையும் பற்றிய விவரப்பட்டியல்.

1. அலுவலரின் அல்லது பணியாளரின் பெயர்.

2. பணியில் அமர்ந்த தேதி.

3. வகிக்கும் பதவி.

4. உடைமை இருக்கிற மாவட்டமும் கோட்டமும்.

5. உடைமையின் தன்மை. 6. பரப்பு. 7. வரி விதிப்பு. 8. யார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.	உடைமை பற்றிய விவரங்கள்

9. எப்போது அடையப்பட்டது வழியுரிமையாகப் பெற்றது முதலியவை?

10. எவ்விதமாக, எதற்காக அடையப்பட்டது.

11. அந்த உடைமையில் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அல்லது பணியாளருக்குள்ள உரிமையின் தன்மை.

12. குறிப்புரை.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதியிட்ட 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

43. **ஊராட்சிப் பணியாளர் தொகுதிகளுக்குரிய நிலுவைப் பாக்கிகளைக் கொடுப்பது.**—1. (1) நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற சம்பளம், படிகள் அல்லது சம்பள உயர்வுகளின் பாக்கிகள் கொடுப்பதில் ஊராட்சியின் ஓர் அலுவலர்

அல்லது பணியாளர் உரிமையுடன் கேட்பதைக் குறித்து, அவற்றைக் கொடுப்பதற்கு முன்—

(i) ஆறு மாதத்துக்கு மேற்பட்டு இரண்டாண்டுகளுக்கு மேற்படாத ஒரு கால அளவுக்குச் சம்பந்தப்பட்ட உரிமைக் கோரிக்கைகளில், ஊராட்சியின் ஒப்பளிப்புடனும்,

(ii) இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்குச் சம்பந்தப்பட்ட உரிமைக் கோரிக்கைகளில் ஊராட்சிக் கோட்ட ஆட்சியாளர் ஆகியவர்களின் ஒப்பளிப்புடனும்,
செயல் அதிகாரி ஆய்ந்து பார்க்க வேண்டும்.

(2) பயணப் படிக்கான உரிமைக் கோரிக்கை எதுவும், அது சம்பந்தப் படுகிற பயணம் முடிந்த தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு கொடுத்துக் கொள்ளப்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளக் கூடாது. எந்தப் பயணத்துக்காகப் பயணப்படி கேட்கப்படுகிறதோ அந்தப் பயணம் முடிந்த தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குப் பிறகு கொடுத்துக் கொள்ளப்படும் பட்டியல்களுக்கு மேலொப்பமிட, மேலொப்பமிடும் அலுவலர்கள் மறுத்து விட வேண்டும்.

2. 1 ஆவது விதியின்படி கொடுக்கும்படி ஆணையிடும் பாக்கித் தொகையானது, குறைவாகக் கொடுக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முந்திய ஓர் ஆண்டுக் காலத்தின் உரிமைக் கோரிக்கையின்படி சேர வேண்டிய தொகைக்கு மேற்படக் கூடாது. குறிப்பிட்ட ஏதேனுமொன்றில் தனிக் காரணங்களினால் இன்னும் தாராளமாகச் சலுகை காட்ட வேண்டுமெனக் கருதப்பட்டால், செயல் அதிகாரியானவர், முதற்கண், உள்ளாட்சி நிதிக் கணக்குத் தலைமை ஆய்வாளருடன் கலந்தாலோசித்து, பிறகு உள்ளாட்சி நிதிக் கணக்குத் துறை தலைமை ஆய்வாளர் ஆலோசனை கூறினால், ஓராண்டுக்கு மேற்பட்ட காலத்துக்கான பாக்கிகளைக் கொடுப்பதற்காக, கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பைப் பெற வேண்டும்.

ஆனால், ஒவ்வொன்றிலும் இருபத்தைந்து ரூபாய்க்கு மேற்படாத ஒரு தொகை அடங்கிய பாக்கி உரிமைக் கோரிக்கைகளில், உள்ளாட்சி நிதிக் கணக்குத் தலைமை ஆய்வாளருடன் கலந்தாலோசிக்க வேண்டியதில்லை.

விளக்கம்.—இவ்விதியின் செயலுக்காக, குறைவாகக் கொடுக்கப்பட்டது கண்டுபிடிக்கப்படும் தேதியானது, குறைவாகக் கொடுக்கப்பட்டமை, செயல் அதிகாரியால் கண்டுபிடிக்கப்பட்ட அல்லது அவருடைய கவனத்துக்குக்

கொண்டுவரப்பட்ட தேதியாகும், அல்லது தணிக்கையின்போது அது முதலில் கண்டுபிடிக்கப்பட்டால், தணிக்கைத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட தேதியாகும். சென்ற காலம் உட்பட அமலில் இருக்கும்படிப் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையின் விளைவான பாக்கி உரிமைக் கோரிக்கை அந்த ஆணை பிறப்பிக்கப்படுகிற வரையில் எழாது; ஆகையால், அந்த ஆணையின் தேதிக்கு முந்திய கால அளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள உரிமைக் கோரிக்கையென்று இதைக் கருதக் கூடாது. சென்ற காலம் உட்பட அமலில் இருக்கும்படிப் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணை இந்த விளக்கத்தின் செயலுக்காக உள்ள சூழ்நிலைகளை ஒட்டி அதற்கு முன் பிறப்பிக்கப்பட்டிருந்திருக்க முடியாத அல்லது ஆலோசிக்கும் பொருட்டு வேண்டுமென்றே நிறுத்தி வைக்கப்பட்ட ஓர் ஆணை என்று கருதப்படும்.

3. 1 ஆவது விதியில் ஊராட்சிக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை, ஊராட்சி பிறரிடம் ஒப்படைக்கக் கூடாது.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

44. ஊராட்சிகளில் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் பணிக்கொடைகள் வழங்குவது.—1. இவ்விதிகளில், பொருளிலாவது சூழ்நிலையிலாவது முரண்பாடு எதுவும் இராவிட்டால்,

(i) "கடைநிலைப் பணி", "மேல் நிலைப் பணி" என்பவை, இவ்விதிகளின் 1 ஆம் இணைப்பில் முறையே கடைநிலையென்றும் மேல் நிலையென்றும் வகைப்படுத்தப்பட்டுள்ள அலுவலிடங்களில் உள்ள பணி என்று பொருள்படும்;

(ii) "சம்பளம்" என்பது, நிலையான மாதச் சம்பளம் என்று பொருள்படும்; மேலும் அதில் தனிப்பட்ட சம்பளம் என்பதும் அடங்கும்;

(iii) "பணியாளர்" என்பது ஒரு ஊராட்சியின் கீழ் ஓர் அலுவலிடத்திலுள்ள ஓர் அலுவலர் அல்லது பணியாளர் என்று பொருள்படும்.

2. படிகளுடன் கூடிய விடுப்பு எடுத்துக் கொண்டு பணிக்கு வராமலிருக்கிற கால அளவுகள் உட்பட, நிலையானதாகவோ தற்காலிகமானதாகவோ காயமானதாகவோ, பதிலியானதாகவோ உள்ள எந்தப் பணி பற்றியும் இவ்விதிகளின் படிப் பணிக் கொடைகள் கொடுக்கப்படத் தக்கவையாகும். நிறைவான ஆண்டுகள் கொண்ட பணிக்கு மட்டுமே பணிக் கொடை கொடுக்கப்படத்தக்கதாகும். தகுதியானவைகளில் செயல் அதிகாரி மூன்று மாதத்துக்கு மேற்

படாத குறைபாட்டைப் பொறுத்துக் கொள்ளலாம்; அதே மாதிரி ஊராட்சி பன்னிரண்டு மாதத்துக்கு மேற்படாத குறைபாட்டைப் பொறுத்துக் கொள்ள லாம்.

3. பணியின் எந்தக் கால அளவுக்குப் பணியாளர் ஒருவர் வருங்காலச் சேம நிதியின் நன்மைகளைப் பெற உரிமை உள்ளவராயிருக்கிறோ, அந்தக் கால அளவுக்கு அவருக்குப் பணிக் கொடை எதுவும் கொடுக்கப்படத்தக்கதல்ல.

4. எந்தப் பணியாளரின் பணிக்கு, அவர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிற ஓய்வூதியத் திட்டத்தின்படி, அவருக்குக் கொடுக்கப்படத்தக்க பணிக்கொடை யுடன் ஓய்வூதியமும் கொடுக்கப்படுமோ அந்தப் பணியாளருக்கு இவ்விதிகளின் படிப் பணிக்கொடை எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

5. பணியாளர் ஒருவர்—

(அ) ஊராட்சிப் பணியிலிருந்து தள்ளிவிடப்பட்டிருந்தால், அல்லது

(ஆ) தீய நடத்தை அல்லது திறமையின்மை காரணமாக நீக்கி விடப் பட்டிருந்தால் அல்லது வேலை விலகல் செய்யும்படிக் கேட்கப்பட்டிருந்தால், அல்லது

(இ) தாமாகவே வேலை விலகல் செய்திருந்தால்,

அவருக்குப் பணிக்கொடை கொடுக்கப்படமாட்டாது.

6. (1) பணியாளர் ஒருவர் ஒரு ஊராட்சியின் கீழ் மொத்தத்தில் ஐந்தாண்டுக்குறைவாகப் பணி செய்திருந்தால், அவருக்குப் பணிக் கொடை எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

(2) பணியாளர் ஒருவர் வருங்காலச் சேம நிதியின் நன்மைகளை அடை வதற்காகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன் செய்த பணி ஐந்தாண்டுக்குக் குறைவாயிருந்தாலும், அவருக்குப் பணிக்கொடை கொடுக்கப்படும்; ஆனால் அவர் மொத்தத்தில் ஐந்தாண்டுக்குக் குறையாமல் பணி செய்திருக்க வேண்டும். தொடர்ச்சியாயிராத பணியுள்ள பணியாளர் ஒருவருக்குப் பணிக்கொடை கொடுக்கப்படத் தக்கதாகும்.

7. உயர்நிலை அல்லது கடைநிலைப் பணியிலுள்ள பணியாளர் ஒருவர்—

(அ) வயது முதிர்ச்சியினால் அல்லது இயலாமையினால் பணியிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டால், அல்லது

(ஆ) ஆள் குறைப்புக் காரணமாக அல்லது தீயநடத்தை அல்லது திறமையின்மை அல்லாத வேறு சில காரணங்களினால் பணியிலிருந்து அனுப்பி விடப்பட்டால்,

அவருக்குப் பணிக் கொடை கொடுக்கலாம்.

8. 2, 3, 4, 5, 6, 7, 13 ஆவது விதிகளின் ஏற்பாடுகளுக்குட்பட்டு, மேல் நிலைப் பணியிலுள்ள பணியாளர்கள் வருங்காலச் சேம நிதியின் நன்மைகளைப் பெறுவதற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிராவிட்டால், அவர்களுக்கு, பணியின் ஒவ்வோர் ஆண்டுக்கும் அரை மாதச் சம்பளம் வீதம் பணிக் கொடை கொடுக்கலாம்; ஆனால், அந்தப் பணிக் கொடையானது, பணி பதினைந்தாண்டுக்குக் குறைவாயிருந்தால் ஆறு மாதச் சம்பளத்துக்கும், பணி பதினைந்தாண்டுக்கும் அல்லது அதற்கு மேற்பட்டும் இருந்தால் பதினைந்து மாதச் சம்பளத்துக்கும் மேற்படக் கூடாது என்னும் வரையறைக்குட்பட்டுத்தான் அவ்வாறு கொடுக்கலாம்.

7 ஆவது விதியின்படிப் பணிக் கொடை கொடுக்கத் தக்க காலத்தில் வாங்கப்படுகிற சம்பளத்தைக் கொண்டு, இவ்விதியின்படிக்கான பணிக் கொடையைக் கணக்கிட வேண்டும்.

9. 2, 3, 4, 5, 6, 7, 13 ஆவது விதிகளின் ஏற்பாடுகளுக்குட்பட்டு, மேல் நிலைப் பணியிலுள்ள பணியாளர்கள் அவர்களுடைய பணிக் காலத்திலே தான் வருங்காலச் சேம நிதியின் நன்மைகளைப் பெறுவதற்குச் சேர்த்துக் கொள்ளப் பட்டிருந்தால், வருங்காலச் சேம நிதியிலிருந்து அவர்கள் பெற உரிமை பெற்றிருக்கக் கூடிய தொகைகளுடன் கூட, வருங்காலச் சேம நிதியின் நன்மைகளைப் பெறுவதற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன், பணியின் ஒவ்வோர் ஆண்டுக்கும் அரை மாதச் சம்பளம் வீதம் அவர்களுக்குப் பணிக் கொடை கொடுக்கலாம்; ஆனால், பணிக் கொடையானது, அவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன், பதினைந்தாண்டுகளுக்குக் குறைவாகப் பணி செய்திருந்தால் ஆறு மாதச் சம்பளத்துக்கும், பதினைந்தாண்டுக்கு அல்லது அதற்கு மேற்பட்டுப் பணி செய்திருந்தால் பதினைந்து மாதச் சம்பளத்துக்கும் மேற்படக் கூடாதென்னும் வரையறைக்குட்பட்டு அவ்வாறு கொடுக்கலாம்.

வருங்காலச் சேம நிதியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அடுத்து முன் வாங்கப்பட்ட சம்பளத்தைக் கொண்டு, இவ்விதியின்படிக்கான பணிக் கொடையைக் கணக்கிட வேண்டும்.

10. 2, 3, 4, 5, 6, 7, 13 ஆவது விதிகளின் ஏற்பாடுகளுக்கும், அடியிற் கண்ட வரையறைகளுக்கும் உட்பட்டு, கடைநிலைப் பணியிலுள்ள பணியாளர்கள்

வருங்காலச் சேம நிதியின் நன்மைகளைப் பெறுவதற்குச் சேர்த்துக் கொள்ளப் பட்டிராவிட்டால், அவர்களுக்கு, பணியின் ஒவ்வோர் ஆண்டுக்காகவும் ஒரு மாதச் சம்பள வீதம் பணிக் கொடை கொடுக்கலாம் :—

(அ) பணியின் முதல் ஐந்தாண்டுகள் சம்பந்தமாகப் பணிக் கொடை கொடுக்கலாகாது ;

(ஆ) எந்த ஒன்றிலும் நன்கொடை இருபது மாதச் சம்பளத்துக்கு மேற்படக் கூடாது.

7 ஆவது விதியின்படி பணிக் கொடை கொடுக்கப்படத்தக்க காலத்தில் வாங்கப்பட்ட சம்பளத்தைக் கொண்டு, இவ்விதியின்படிக்கான பணிக் கொடையைக் கணக்கிட வேண்டும்.

11. 2, 3, 4, 5, 6, 7, 13 ஆவது விதிகளின் ஏற்பாடுகளுக்கும் அடியிற் கண்ட வரையறைகளுக்கும் உட்பட்டு, கடைநிலைப் பணியிலுள்ள பணியாளர்கள் அவர்களுடைய பணிக் காலத்திற்கு மட்டும் வருங்காலச் சேம நிதியின் நன்மைகளைப் பெறுவதற்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தால், வருங்காலச் சேம நிதியிலிருந்து அவர்கள் பெற உரிமை பெற்றிருக்கக் கூடிய தொகைகளுடன், வருங்காலச் சேம நிதியின் நன்மைகளைப் பெறுவதற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன் பணியின் ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒரு மாதச் சம்பளம் வீதம் அவர்களுக்குப் பணிக் கொடை கொடுக்கலாம் :—

(அ) பணியின் முதல் ஐந்தாண்டுகள் சம்பந்தமாகப் பணிக் கொடை எதுவும் கொடுக்கக் கூடாது ;

(ஆ) பணிக் கொடை எந்த ஒன்றிலும் இருபது மாதச் சம்பளத்துக்கு மேற்படக் கூடாது.

வருங்காலச் சேம நிதியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அடுத்து முன் வாங்கப்பட்ட சம்பளத்தைக் கொண்டு, இவ்விதியின்படிக்கான பணிக் கொடையைக் கணக்கிட வேண்டும்.

12. இவ்விதிகளின் படிக்கான பணிக் கொடையை ஊராட்சி வழங்க வேண்டும் ; ஆனால், மாவட்ட ஆட்சியாளரால் எழுத்து மூலமான ஒப்புதலை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், பணம் கொடுக்கக் கூடாது. 7, 9, 10, 11 ஆவது விதிகளில் கண்டுள்ள வீதங்கள் பெருமட்டம் எனக் கருத வேண்டும் ; செய்த பணி முழுவதும் திருப்திகரமாயிருந்தாலன்றி, அவைகளுக்கு ஒப்பளிப்பு

வழங்கக் கூடாது. பணி முழுவதும் திருப்திகரமாயிராத எதிலும் ஊராட்சி தனக்குத் தகுதியாகக் தோற்றுகிறபடி, கொழிக்கப்படத்தக்க தொகையைக் குறைக்க வேண்டும்.

13. கடைநிலைப் பணியிலுள்ள ஒரு பணியாளருக்குக் கோடுக்கப்படத் தக்க பணிக் கொடையைக் கணக்கிடுகையில், 16 வயது அடைந்த பிறகு அவர் செய்த பணியை மாத்திரமே கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்; மேல் நிலைப் பணியிலுள்ள ஒரு பணியாளரைப் பொறுத்தவரை 20 வயது அடைந்த பிறகு அவர் செய்த பணியை மாத்திரம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

14. ஒரு பணியாளருடைய பணி ஒரு பகுதி கடைநிலையாகவும் ஒரு பகுதி மேல் நிலையாகயும் இருந்திருந்தால், அவர்—

(அ) கடைநிலை விதத்தின் மீதான பணிக் கொடையினிமித்தம், முழுவதையும் கடைநிலையாகக் கணக்கிட்டுக் கொள்ளலாம்; அல்லது

(ஆ) மேல்நிலை விதத்தின் மீதான பணிக்கொடையினிமித்தம் மேல் நிலை பாகத்தையும், கடை நிலை விதத்தின் மீதான பணிக் கொடையினிமித்தம் கடை நிலையையும் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

(அ) பகுதியின்படி, ஏற்றவாறு, 7 ஆவது விதியின்படி பணிக் கொடை கொடுக்கப்படத் தக்க காலத்தில் அல்லது வருங்காலச் சேம நிதியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அடுத்து முன் (மேல்நிலைப் பணியிலாயினும் சரி கடை நிலைப் பணிலாயினுஞ்சரி) பணியாளர் வாங்கிய சம்பளத்தின் மீது பணிக் கொடையைக் கணக்கிட வேண்டும்.

(ஆ) பகுதியின்படி, கடைநிலைப் பணியிலிருந்து மேல் நிலைப் பணிக்கு, அல்லது உயர்நிலைப் பணியிலிருந்து கடைநிலைப் பணிக்கு மாற்றப்பட்ட காலத்திலும், முறையே 7 ஆவது விதியின்படிப் பணிக் கொடை கொடுக்கப்படத்தக்க காலத்தில் அல்லது வருங்காலச் சேம நிதியில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு அடுத்து முன்பு பணியாளர் வாங்கின சம்பளத்தின் மீது ஒவ்வொரு விதத்தில் பணிக் கொடையைக் கணக்கிட வேண்டும். பணியாளர் ஒருவர் தீயநடத்தை காரணமாக மேல்நிலைப் பணியிலிருந்து கடைநிலைப் பணிக்குத் தாழ்க்கப்பட்டால், மாவட்ட ஆட்சியாளரின் தனி ஒப்பளிப்பு அன்றி மற்றப்படி, இவ்விதியின்படி அவருக்குப் பணிக் கொடை கொடுக்கக் கூடாது.

விளக்கம்.—கடைநிலைப் பணிக்கான பணிக் கொடையும் மேல் நிலைப் பணிக்கான பணிக் கொடையும் சேர்ந்து, முழுப் பணியும் மேல்நிலைப் பணியாகக் கருதப்பட்டால் எவ்வளவு பணிக் கொடை கொடுக்கப்படத்தக்கதோ அந்தத் தொகைக்கு மேற்படக் கூடாது.

15. பணியாளர் ஒருவர் பணியிலிருக்கும்போதே இறந்துவிட்டால், அவருடைய குடும்பம் வறுமை நிலையிலிருக்கிறதென்று ஊராட்சி தெரிந்து கொண்டால், அவர் இறந்துபோன தேதியன்று 7 ஆவது விதியின்படிப் பணிக் கொடை கொடுக்கப்பட வேண்டியிருந்தால் அவ்வாறு அவருடைய குடும்பத்துக்குப் பணிக் கொடை கொடுக்கலாம்.

விளக்கம்.—இவ்விதியின் செயல்களுக்காக 'குடும்பம்' என்பதில், பணியாளருடைய மனைவி, அவருக்கு முறையாகப் பிறந்த பிள்ளைகள் என்பதும் அடங்கும். 'முறையாகப் பிறந்த பிள்ளைகள்' என்னும் இச்சொற்றொடரில், அவருடைய தத்துப் பிள்ளை, அவரோடு வசித்துக் கொண்டு அவரையே முழுவதும் அடுத்திருக்கும் மாற்றான் அல்லது மாற்றாள் பிள்ளைகள் என்பதும் அடங்கும்; அன்றியும், அவருடைய பெற்றோர்களும் சகோதரிகளும் உரிய வயதடையாத (மைனர்) சகோதரர்களும் அவரையே முழுவதும் அடுத்திருந்து அவருடன் வசித்துக் கொண்டிருந்தால் அவர்களும் 'குடும்பம்' என்பதில் சேருவார்கள். மேலே சொல்லியபடியுள்ள குடும்பம் எதுவும் அப்பணியாளருக்கு இல்லாதிருந்து, வருங்காலச் சேம நிதிக்கு அவர் உறுப்பினர் கட்டணம் செலுத்துபவராயிருந்தால், அவருக்குக் கொடுக்கப்படத்தக்க ஏதேனும் பணிக் கொடையை, வருங்காலச் சேம நிதித் தொகையைப் பெறுகிற நியமனதாரிடம் அவர் வறுமை நிலையிலிருக்கிறாரென்று ஊராட்சி தெரிந்துகொண்டால் கொடுத்துவிடலாம்.

16. பணியாளர் ஒருவர் வெவ்வேறு உள்ளாட்சிக் கழகங்களின் கீழ்ப் பணி புரிந்திருந்தால், இவ்விதிகளின்படிக் கொடுக்கப்படத் தக்க பணிக் கொடையைக் கணக்கிடுவதற்காக, வெவ்வேறு உள்ளாட்சிக் கழகங்களின் கீழ் செய்யப்பட்ட பணியை ஒருங்கிணைத்து, முழுமையாகக் கொள்ள வேண்டும். பணிக் கொடை கொடுப்பதற்கான பொறுப்பினை, பணியாளருடைய தகுதியுண்டாக்கும் பணிப் பருவம் முழுவதிலும் அவர் வாங்கின மொத்த சம்பளத்தை வெவ்வேறு உள்ளாட்சிக் கழகங்கள் எந்த விதாசாரங்களில் கொடுத்தனவோ அந்த விதாசாரங்களில் அக்கழகங்களிடையே பங்கிட வேண்டும். அவ்வாறு பங்கிடுவதன் மேல், பணிக் கொடையில் முக்கால்

பாகத்துக்கு மேற்பட்டதை ஒரே உள்ளாட்சிக் கழகம் கொடுக்க வேண்டு மெனத் தெரியவந்தால், அந்த உள்ளாட்சிக் கழகம் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்; அந்த நிலையில் பங்கீடு எதையும் செய்யக் கூடாது.

விளக்கம்.—ஓர் உள்ளாட்சிக் கழகத்தின் வேலையிலிருந்து விலகல் செய்து விட்டு மற்றொரு உள்ளாட்சிக் கழகத்தின் கீழ் வேலை ஏற்றுக் கொள்கின்ற வற்றில் இந்த விதி பொருந்தாது.

17. (1) (அ) இவ்விதிகளின்படிப் பணிக் கொடை பெறத் தகுதி வாய்ந்த பணியாளர் ஒருவர், அதைக் கொடுக்கும்படி, தமது அலுவலகத்தின் தலைவருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) பணியாளர் ஒருவர் பணியிலிருக்கும்போதோ அல்லது பணிக் கொடைக்காகத் தாம் விண்ணப்பம் செய்து கொள்வதற்கு முன் இறந்து போனால், பணிக் கொடைக்கான விண்ணப்பத்தை, 15 ஆவது விதியின்படிப் பணிக் கொடை பெற உரிமை உள்ளவராவது. அவர் உரிய வயது வராதவ ராகவோ மற்றப்படி வலுவற்றவராகவோ இருந்தால், அவருடைய காப்புப் பொறுப்பாளராவது செய்து கொள்ள வேண்டும்.

(இ) பணிக் கொடை கொடுப்பதற்கான விண்ணப்பம் ஒவ்வொன் றையும், பணியாளர் ஒருவர்—

(i) ஓய்வு பெறுகிற,

(ii) பணியிலிருந்து அனுப்பிவிடப்படுகிற,

(iii) இறந்துபோகிற

தேதியிலிருந்து ஆறு மாதத்துக்குள் செய்து கொள்ள வேண்டும்.

ஆனால், கால தாமதத்துக்கு நியாயமான காரணம் இருந்ததென்று மாவட்ட ஆட்சியாளர் தெரிந்து கொண்டால், மேற்சொன்ன கால அளவு கழிந்த பிறகு வரும் பணிக் கொடை விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கு அவர் ஒப்பளிப்பு வழங்கலாம்.

(2) ஊராட்சி செயல் அதிகாரி, கேட்கப்பட்ட பணிக் கொடையை வழங்கக் கருதினால்; அவர், இவ்விதிகளின் 11 ஆம் இணைப்பிலுள்ள படிவப் படி, பணிக்குக் கொடை விண்ணப்பம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

18. முறைப்படியான பணி அமைப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தால், மேல்நிலைப் பணியை அல்லது கடைநிலைப் பணியைச் சேர்ந்தவர்களாக வகைப் படுத்தப்படாத வேலையாட்களுக்குச் சாதாரணமாகப் பணிக் கொடை எதுவும்

கொடுக்கப்படமாட்டாது. ஆயினும், தகுந்தவர்களுக்குப் பணிக்கொடை கொடுக்கலாமென்று ஊராட்சி கருதினால், பின்வரும் வரையறைகளுக்குட்பட்டு அவ்வாறு கொடுப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கலாம் :—

(அ) ஊராட்சியின் கீழ் அந்த வேலையாள் இருபது ஆண்டுக்குக் குறையாமல் பணி செய்திருக்க வேண்டும்;

(ஆ) ஒப்பளிக்கப்படுகிற பணிக் கொடையின் மொத்தத் தொகையானது, முந்திய விதிகளின்படிக் கடைநிலைப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படத்தக்க தொகைக்கு மேற்படக் கூடாது;

(இ) மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இணைப்பு I.

[1 (1) விதியைப் பார்க்கவும்.]

மேல்நிலையில் உள்ள அலுவல் இடங்கள்.	கடைநிலைப் பணியிலுள்ள அலுவல் இடங்கள்.
நிழற்சாலை அல்லது தோட்டக் கண்காணிப்பாளர்.	
சிற்றெழுத்தர்கள்.	
வரித் தண்டலர்.	
பிறப்பு-இறப்புப் பதிவாளர்கள்.	
எழுத்தர்கள்.	
எழுத்தர்-வரித் தண்டலர்கள்.	
பொது உடல்நலப் பணியில் அமர்ந்திருக்கிற திரைப்படம் இயக்குபவர்கள் அல்லது பயிற்சி பெற்ற வேறு பணியாளர்கள்.	
பொருத்துபவர்கள்.	தோட்டக்காரர்கள்.
உடல்நலப் பார்வையாளர்கள்.	

உரிமக் கண்காணிப்பாளர்கள்.

நூலகர்கள்.

விளக்குக் கண்காணிப்பாளர் அல்லது
ஆய்வாளர்.

சுமையுந்து (லாரி) ஓட்டுபவர்*

இயந்திரக் கம்மியர்கள்.

அங்காடிக் கண்காணிப்பாளர் அல்லது
மேற்பார்வையாளர், சார்ஜென்ட்

பொது உடல்நல ஏவலாட்கள்
உள்ளிட்ட ஏவலாட்கள்.

* சம்பளம் அல்லது பெருமச் சம்பளம் மாதமொன்றுக்கு 20 ரூபாய்க்கு
மேற்படும்போது.

பூங்கா மேற்பார்வையாளர்.

வானொலி இயக்குபவர்.

பதிவாளர்-அம்மை குத்துபவர்கள்.

வருவாய் ஆய்வாளர்கள்.

துப்புரவு ஆய்வாளர்கள்.

காடுகளின் மேற்பார்வையாளர்.

சரக்குச் சேமிப்பாளர்கள்.

பண்டகக் காப்பாளர்கள்.

நீர்க்குழாய்த் திறப்புப் பணியாளர்கள்.

நகர அமைப்பு மேற்பார்வையாளர்.

அம்மை குத்துபவர்கள்.

கால்நடை அறுவை மருத்துவர்
அல்லது ஆய்வாளர் அல்லது
அலுவலர்.

பிடியாணை அலுவலர்.

இணைப்பு II.

[17 (2) விதியைப் பார்க்கவும்.]

பணிக் கொடைக்கான விண்ணப்பம்.

1. விண்ணப்பதாரர் பெயர்:

2. தகப்பனார் பெயர்.

3. இனம், பிரிவு, சாதி.

4. இருப்பிடம்—மாவட்டத்தையும் ஊரையும் குறிப்பிட வேண்டும்.

5. தற்போதைய வேலை அல்லது இதற்கு முன் செய்த வேலை, நிறுவனத்தின் பெயர் உட்பட.

6. பணி தொடங்கிய தேதி.

7. பணி முடிவுற்ற தேதி.

8. பணி செய்த காலம், இடையீடு உட்பட, இதில்—

உயர்நிலை—

கடைநிலை—

தகுதி உண்டாக்காதவைகளும் இடையீடுகளும்.

9. கேட்கும் பணிக் கொடையின் வகையும் விண்ணப்பத்தின் காரணமும்.*

10. (சராசரி) ஊதியம் அல்லது சம்பளம்.

11. கொடுக்கக் கருதியுள்ள ஓய்வூதியம்.

12. கொடுக்கக் கருதியுள்ள பணிக் கொடை.

13. ஓய்வூதியம் கொடுக்கத் தொடங்கும் தேதி.

14. பணம் கொடுக்க வேண்டிய இடம்.

15. விண்ணப்பதாரர் பிறந்த தேதி, கிறித்தவ சகாப்தத்தின் (ஊழியின்படி). .

16. உயரம்.

17. அடையாளங்கள்.

18. தேதி.

செயல் அதிகாரியின் கையெழுத்து.

................என்பவரின் (இடையீடு காட்டும்) பணியின் வரலாறு:—

நிறுவனம்.	வேலை.	சம்பளம்.	பதவிச் சம்பளம்.	தொடங்கும் தேதி.	முடியும் தேதி.	பணியாகக் கணக்கிடப்படுங் கால அளவு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
		ரூ.பை.	ரூ.பை.			ஆ.மா.நா.

பணியாகக் கணக்கிடப் படாத கால அளவு.	குறிப்புரை.	எவ்வாறு சரிபார்க்கப் பட்டது.	உள்ளாட்சி நிதிக்கணக்குத் தலைமை ஆய்வாளரின் குறிப்புரை.
(8)	(9)	(10)	(11)

மேல்நிலைப் }
கடைநிலைப் } பணியின் மொத்தக் காலம்.

* ஈடு, ஓய்வூதியம் அல்லது பணிக் கொடை விண்ணப்பம் செய்து கொள்ளப் பட்டால், உரிமைக் கோரிக்கை எழுவதற்குக் காரணமாயிருந்த நிறுவன மாற்றத்தின் தன்மையை முழுவதும் கண்டெழுத வேண்டும்.

...சரியாகத் தெரியாவிட்டால், நன்றாகத் தெரிந்திருக்கிற அளவுக்கு அல்லது மதிப்பீடாகக் கண்டெழுத வேண்டும்.

அலுவலகத் தலைவர்கள் குறிப்புரை.

1. விண்ணப்பதாரரின் ஒழுக்கம், முந்திய நடத்தையைப் பற்றி.

2. ஏதேனும் தற்காலிக வேலை நீக்கம் அல்லது படியிறக்கத்துக்கு விளக்கம்.

3 விண்ணப்பதாரர் ஏற்கெனவே பெற்றுக் கொண்ட ஏதேனும் பணிக் கொடை அல்லது ஓய்வூதியத்தைப் பற்றி.

4. வேறு ஏதேனும் குறிப்புரை.

5. உரிமையாகக் கோரப்படும் பணி உறுதி செய்யப்பட்டதா, அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமா, வேண்டாவா என்பது பற்றி அலுவலகத் தலைவரின் திட்டமான கருத்து.

சான்றும் அறிவிக்கையும்.

சான்றிடப்படுவது என்னவென்றால் (கீழ்க்கண்ட குறிப்புரைகளுக்குட்பட்டு) மேல்நிலையில்/கடைநிலையில் செய்யப்பட்ட தகுதியுண்டாக்கும பணி ஆண்டுகள் மாதங்கள் நாட்கள் என்று முறைப்படி மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது; ரூபாய்க்கு மேற்படாத பணிக் கொடை கொடுக்கப்படத் தக்கதாகும். கணக்கீடுகள் முறைப்படி சரிபார்க்கப்பட்டிருக்கின்றன.

செயல் அதிகாரி.

பணிக் கொடைக்கான விண்ணப்பம்.

விண்ணப்பத்தின் தேதி.

விண்ணப்பதாரர் பெயர்.

கடைசியாகப் பார்த்த வேலை.

பணிக் கொடையின் வகை.

ஒப்பளிக்கப்பட்ட பணிக் கொடைத் தொகை.

தொடக்கத் தேதி.

ஒப்பளிக்கப்பட்ட தேதி.

செயல் அதிகாரி.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதியிட்ட 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

45. ஊராட்சிகளின் பணியாளர் அமைப்பு பற்றிய விதியை அல்லது ஒழுங்குமுறையைத் தளர்த்த அரசுக்குள்ள அதிகாரம்.—ஒரு ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் பற்றி அல்லது ஊராட்சிப் பணியில் நியமிக்கப் படுவதற்கான ஒரு வேட்பாளர் பற்றித் தங்களுக்கு நியாயமானதென்றும் நேர்மையானதென்றும் தோற்றக்கூடிய விதமாக முடிவு செய்வதற்கு அரசுக் குள்ள அதிகாரத்தை (1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்ட மாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டப்படிச் செய்யப்பட்ட விதி அல்லது ஒழுங்குமுறை எதுவும் வரையறுப்பதாக அல்லது குறைப்பதாக பொருள் செய்யக் கூடாது ;

ஆனால், அத்தகைய ஏதேனும் விதி அல்லது ஒழுங்குமுறை, ஒரு ஊராட்சி யின் அத்தகைய ஓர் அலுவலருக்கோ, அல்லது பணியாளருக்கோ அத்தகைய அல்லது ஒரு ஊராட்சியின் பணியில் நியமிக்கப்படுவதற்கான ஒரு வேட் பாளருக்கோ பொருந்துவதாயிருந்தால் ஏற்றவாறு ஊராட்சியின் அத்தகைய அலுவலருக்கு அல்லது பணியாளருக்கு அல்லது ஊராட்சிப் பணியில் நியமிக் கப்படுவதற்கான அந்த வேட்பாளருக்கு, அநத விதி அல்லது ஒழுங்கு முறை யில் சொல்லப்பட்டிருப்பதை விட சாதகக் குறைவான எவ்விதத்திலேனும் அந்நேர்வினை முடிவு செய்யக் கூடாது.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

46. தமிழ்நாடு ஊராட்சிகளின் (பணியாளர்கள் தேசியப் பாதுகாப்பைப் பேணுவது பற்றிய) 1962 ஆம் ஆண்டின் விதிகள்.

1. சிறுபெயரும் பொருத்தமும்.—(1) இவ்விதிகளை, தமிழ்நாடு ஊராட்சி களின் (பணியாளர்கள் தேசியப் பாதுகாப்பைப் பேணுவது பற்றிய) 1962 ஆம் ஆண்டின் விதிகள் என்று சொல்லலாம்.

(2) செயல் அலுவலர்கள் தவிர, ஊராட்சிகளின் மற்றெல்லா அலுவலர் களுக்கும் பணியாளர்களுக்கும் இவை பொருந்தும்.

2. வரையறை.—இவ்விதிகளில், ஒரு ஊராட்சியின் "பணியாளர்கள்" என்பது, இவ்விதிகள் பொருந்துகின்ற ஒருவர் எனப் பொருள்படும்.

3. ஊராட்சியின் பணியாளர் ஒருவர் நிலைகுலைவிக்கும் செயல்களில் ஈடுபட்டிருக்கிறாரென்றும் அல்லது அச்செயல்களில் ஈடுபட்டிருப்பதாக நியாய மான ஐயப்பாட்டிற்குரியவரென்றும் அல்லது நிலைக்குலைவிக்கும் செயல்களில்

ஈடுபட்டுள்ள மற்றவர்களுடன் இணைந்திருக்கிறரென்றும், அது காரணமாக, அவரை இன்னும் பணியில் வைத்துக் கொண்டிருப்பது தேசியப் பாதுகாப்புக்குக் கேடு என்றும் அரசாங்கத்தார் கருதினால், அவர்கள் அப்பணியாளரைப் பணியிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெறும்படிச் செய்வதற்காக ஆணை பிறப்பிக்கலாம்.

4. நடைமுறை.—3 ஆவது விதியின்படி ஓர் ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்—

(அ) மாவட்ட ஆட்சியாளர் எழுத்து அறிவிப்பு மூலமாக, சம்பந்தப்பட்ட ஊராட்சிப் பணியாளரைப் பொறுத்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கையைப் பற்றி அவருக்குத் தெரிவித்து, அந்த நடவடிக்கைக்கு எதிராக எழுத்து முறையில் ஒன்றை, அந்த அறிவிப்பில் குறிப்பிடப்படக் கூடிய காலத்துக்குள் அரசாங்கத்தாருக்குச் செய்து கொள்ள அவருக்கு வாய்ப்பளிக்க வேண்டும்; மேலும்

(ஆ) அவ்வூராட்சியின் பணியாளர் அவ்வாறு செய்து கொண்ட முறையீட்டைப் பற்றி அரசாங்கத்தார் ஆலோசனை செய்து பார்க்கவேண்டும்.

5. தற்காலிக வேலை நீக்கம்.—ஒரு ஊராட்சிப் பணியாளர் சம்பந்தமாக இவ்விதிகளின்படி நடவடிக்கை எடுக்கக் கருதினால் மாவட்ட ஆட்சியாளர், அவரைத் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்குவதற்கு முன், அப்போது அவருக்குக் கொடுக்கப்படத் தக்க விடுப்பில் செல்ல அவருக்கு அனுமதி வழங்க வேண்டும்.

6. பொது விதிகள் பொருந்தமாட்டா.—ஊராட்சிகளின் பொதுப் பணியாளர் தொகுதி, அலுவலர்களையும் பணியாளர்களையும் நியமிப்பது, தண்டிப்பது ஆகியவை பற்றிய விதிகளில் உள்ளது எதுவும், இவ்விதிகளின்படி எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக் கருதப்படுகிற ஏதேனும் நடவடிக்கைக்குப் பொருந்த மாட்டாது.

7. ஓய்வூதியம், பணிக் கொடை முதலியவை.—3 ஆவது விதியின்படிப் பணியிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெறும்படிச் செய்யப்பட்ட ஒருவர், அவருடைய அலுவலிடம் எடுத்துவிடப்பட்டு அதற்குப் பதிலாக வேறொரு தக்க வேலை அவருக்குக் கொடுக்கப்படாததனால் பணியிலிருந்து அனுப்பிவிடப்பட்டிருந்தால், அவ்வாறு ஓய்வு பெறும் தேதியன்று, பொருத்தமான விதிகளின்படி

அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்திருக்கக் கூடிய ஈடு, ஓய்வூதியம், பணிக்கொடை அல்லது வருங்காலச் சேம நிதி நன்மைகளைப் பெற அவர் உரிமையுள்ளவராவர்.

(1962 பிப்ரவரி 1 ஆம் தேதிய 260 ஆம் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1964 மார்ச்சு 11 ஆம் தேதிய 568 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

47. தமிழ்நாடு ஊராட்சிக் கடைநிலைப் பணியாளர்கள்-வேலையாட்களின் வருங்காலச் சேம நிதி பற்றிய 1965 ஆம் ஆண்டின் விதிகள்—

1. சிறுபெயர்.—இவ்விதிகளை, தமிழ்நாடு ஊராட்சிக் கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்கள் வருங்காலச் சேம நிதி பற்றிய 1965 ஆம் ஆண்டின் விதிகள் என்று சொல்லலாம்.

2. வரையறைகள்.—இவ்விதிகளில், பொருளிலாவது சூழ்நிலையிலாவது முரண்பாடு எதுவும் இராவிட்டால்—

(i) "குடும்பம்" என்பது,—(அ) ஆண் உறுப்பினரைப் பொறுத்த மட்டில், அவ்வுறுப்பினரின் மனைவி அல்லது மனைவிகள், குழந்தைகள் என்றும், அவ்வுறுப்பினரின் இறந்து போன மகனுடைய விதவை அல்லது விதவைகள், குழந்தைகள் என்றும் பொருள்படும்:

ஆனால், உறுப்பினர் (சந்தாதார்) ஒருவர், தம் மனைவி நீதிமன்றம் மூலம் தம்மிடமிருந்து, பிரிக்கப்பட்டிருக்கிறாரென்று அல்லது அவள் சேர்ந்திருக்கிற சமுதாயத்தின் மாமூல் சட்டத்தின்படி சீவனாம்சம் (பேறுதவிப் பொருள்) பெறும் உரிமையற்றுப் போயிருக்கிறாளென்று மெய்ப்பித்தால் அவள் அது முதல், இவ்விதிகள் சம்பந்தப்படுகிறவற்றில், உறுப்பினரின் குடும்பத்தைச் சேர்ந்தவள் அல்லள் என்று கருதப்படுவாள்; ஆயினும், அதற்குப் பிறகு, சந்தாதார், அவள் தமது மனைவியெனத் தொடர்ந்து கருதப்பட வேண்டுமெனச் செயல் அதிகாரிக்கு எழுதியுள்ள வெளிப்படையான அறிவிப்பு மூலமாய்த் தெரிவித்தால், அவள் அவ்வாறே கருதப்படுவாள்;

(ஆ) பெண் உறுப்பினரைப் பொறுத்தவரை உறுப்பினரின் கணவர், குழந்தைகள் என்றும், அவ்வுறுப்பினரின் இறந்து போன மகனுடைய விதவை அல்லது விதவைகள், குழந்தைகள் என்றும் பொருள்படும்;

ஆனால், உறுப்பினர் ஒருவர், செயல் அதிகாரிக்கு எழுதியுள்ள அறிவிப்பு மூலமாக, தமதி கணவரைத் தம் குடும்பத்திலிருந்து விலக்கிவிடத் தாம் விரும்புவதாகத் தெரிவித்தால், அது முதல் அக்கணவர், இவ்விதிகள் சம்பந்தப்பட்டவற்றில் உறுப்பினரின் குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்லர் எனக் கருதப்படுவார்; ஆயினும் அவ்வுறுப்பினர் அதற்குப் பிறகு, அவரை விலக்குவதற்காகத் தாம் கொடுத்த அறிவிப்பை முறைப்படி எழுத்து மூலமாய் ரத்து செய்தால், அக்கணவர் அவ்வாறு கருதப்படமாட்டார்;

குறிப்பு 1.—"பிள்ளைகள்" என்றால் முறையாகப் பிறந்த பிள்ளைகள்.

குறிப்பு 2.—"தத்துப் பிள்ளைகள்" என்றால் பிள்ளை என்றே செயல் அதிகாரியால் கருதப்பட வேண்டும்.

(ii) "படிவம்" என்பது, இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு படிவம் எனப் பொருள்படும்;

(iii) "நிதி" என்பது, ஒரு ஊராட்சியினால் நிறுவப்பட்ட 'கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்கள் வருங்காலச் சேம நிதி' என்று பொருள்படும்;

(iv) "கடைநிலைப் பணியாளர்" என்பது, பணிக் கொடைகள் வழங்குவதை முறைப்படுத்துவதற்கான விதிகளில் கடைநிலைப் பணியைச் சேர்ந்ததென்று வகைப்படுத்தப்பட்டுள்ள பதவி வகிக்கும் பணியாளர் எனப் பொருள்படும்;

(v) "உள்ளாட்சிக் கழகம்" என்பது, (1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டப்படி அமைக்கப்பட்ட ஒரு ஊராட்சி என்றாவது (1920 ஆம் ஆண்டின் V ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்படி அமைக்கப்பட்ட ஒரு நகராட்சி மன்றம் என்றாவது, ஏற்றவாறு (1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டப்படி அல்லது வேறொரு தனிச் சட்டப்படி அமைக்கப்பட்ட நகரக் குழு ஆட்சி என்றாவது பொருள்படும்.

(vi) இச் சூழ்நிலைகளில் அவ்வாறு சொல்ல வேண்டியிருந்தால், ஆண் பாலைக் குறிக்கும் சொற்களில் பெண்களும் அடங்குவதாகக் கொள்ளவேண்டும்;

(vii) "வேலையாள்" என்பது, முறையான பணியாளர் தொகுதியைச் சேர்ந்தவரும், அதல், பணிக் கொடைகள் வழங்குவதை முறைப்படுத்தும் விதிகளில் மேல்நிலைப் பணியை அல்லது கடைநிலைப் பணியைப் சேர்ந்தவராக வகைப்படுத்தப்பட்டிராத ஒரு வேலையாள் என்று பொருள்படும்.

3. இந்த நிதிக்குப் பங்குத் தொகை செலுத்துவதற்கான தகுதி.—இவ் விதிகளின்படி பங்குத் தொகை செலுத்துவதானது, 13 (iii) விதியின் ஏற்பாடு களுக்குட்பட்டு, உறுப்பினரிடமிருந்து கட்டணம் (சந்தா) வசூலிக்கப்படுகிற நிலையான பணி சம்பந்தமாக மாத்திரம் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆனால், தற்காலிகமான அல்லது பதிலிப் பணி சம்பந்தமாகவும்கூடப் பங்குத் தொகை செலுத்தப்படுவதற்கு ஊராட்சி அனுமதி கொடுக்கலாம்.

4. பணிக்கொடை அல்லது வேறு ஈடு பெறத் தகுதி.—இவ்விதிகளின் நன்மைகளைப் பெறுவதற்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிற ஒருவர், இவ்விதிகளின்படி நன்மையைப் பெற அவர் உரிமை உள்ளவராயிருக்கிற ஒரு கால அளவு சம்பந்தமாக வேறு எந்த விதிகளின்படியேனும் பணிக் கொடை அல்லது ஈடு பெற உரிமை உள்ளவராகமாட்டார்.

5. இந்த நிதியை நிறுவிப் பேணிவருவது.—(1) ஊராட்சி ஒவ்வொன்றும் தனது கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்களின் நலனுக்காக, வருங்காலச் சேம நிதி ஒன்றை நிறுவிப் பேணி வரவேண்டும். ஊராட்சி நிலையான கடை நிலைப் பணியாளர்கள்--வேலையாட்கள் எல்லாரும் இந்த நிதிக்கு உறுப்பினர் கட்டணம் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

(2) ஊராட்சி இந்த நிதியைப் பரிபாலிக்க வேண்டும்; இதை ரூபாய்க் கணக்கில் வைத்துவர வேண்டும்.

6. நியமனம்.—(1) உறுப்பினர்கள் ஒவ்வொருவரும், சேர்த்துக்கொள்ளப் படுவதன் பேரில், பணியை விட்டு விலகுவதற்கு முன் தாம் இறந்து போனால், அல்லது ஓய்வு பெற்ற பிறகு தொகையை வாங்கிக் கொள்வதற்கு முன் தாம் இறந்து போனால், நிதியில் தம் பெயருக்கு இருக்கக் கூடிய தொகையைப் பெறும் உரிமை அளித்து, அரசாங்கத்தார் விதிக்கக் கூடிய படிவப்படி நியமனம் ஒன்றைச் செய்ய வேண்டும்.

(2) உறுப்பினர் ஒருவர் இந்த நிதியில் சேரும்போது அவருக்குக் குடும்பம் இருந்தால், அவர், தம் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லது பல ருக்குச் சாதகமாக I-ம் படிவப்படி உள்ள நியமனம் ஒன்றைச் செயல் அதி காரிக்கு அனுப்ப வேண்டும்.

(3) உறுப்பினர் ஒருவருக்குக் குடும்பம் இராவிட்டால் அவரும் அதே மாதிரியாக I ஆம் படிவத்தில் ஒருவர் அல்லது பலரை நியமனம் செய்யலாம்; ஆனால், அவ்வாறு செய்யப்பட்ட நியமனம் அவ்வுறுப்பினருக்கும் குடும்பம் இராதவரையில் மாத்திரம் இவ்விதிகளின்படி முறைப்படிச் செய்யப்பட்டிருப்ப தாகக் கருதப்படும்.

(4) II ஆம் படிவப்படி நியமனம் ஒன்றைச் செய்திருக்கிற உறுப்பினர் ஒருவர் பின்னர் குடும்பம் ஒன்றை அடைந்தால், அந்த நியமனத்தை முறைப் படி ரத்து செய்து, (2) உள்விதியின்படி புதிதாக ஒரு நியமனம் செய்யுமாறு அவரைக் கேட்க வேண்டும்.

(5) நியமனம் ஒன்றை செயல் அதிகாரி ஒப்புக்கொண்டால் மாத்திரமே அது செல்லுபடியாகும்.

7. உறுப்பினர் கட்டணம் (சந்தா).—(1) கடைநிலைப் பணியாளர் அல்லது வேலையாள் ஒவ்வொருவரும் இந்த நிதிக்கு மாதந்தோறும் உறுப்பினர் கட்டணம் செலுத்த வேண்டும்; ஆனால், உறுப்பினர் ஒருவர் தாம் முழு மாதப் பணி செய்திராமல் முழு மாதச் சம்பளம் வாங்காத ஒரு மாதம் சம்பந்தமாகச் சந்தா செலுத்தாமலிருந்து விடலாம்.

(2) பின்வரும் வரையறைகளுக்குட்பட்டு, உறுப்பினரே கட்டணத் தொகையை நிச்சயிக்க வேண்டும்:—

(அ) அது இருபத்தைந்து காசுகளின் மடங்குகளில் தெரிவிக்கப் படவேண்டும்.

(ஆ) குறும உறுப்பினர்க் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ஐம்பது காசு காசு ஆக இருக்க வேண்டும்; பெருமம் அடியிற்கண்டவாறு இருக்க வேண்டும்:—

	மாதம் ஒன்றுக்கு உறுப்பினர் கட்டணம் பெரும் வீதம்.
	ரூ.
) மாதம் ஒன்றுக்கு 12 ரூபாய்க்கு மேற்படாமல் சம்பளம் வாங்கும் உறுப்பினர்கள்.	1
(i) மாத ம்ன்ஒறுக்கு 12 ரூபாய்க்கு மேற்பட்டும் 16 ரூபாய்க்கு மேற்படாமலும் சம்பளம் வாங்கும் உறுப்பினர்கள்.	2
(ii) மாதம் ஒன்றுக்கு 16 ரூபாய்க்கு மேற்பட்டும் 20 ரூபாய்க்கு மேற்படாமலும் சம்பளம் வாங்கும் உறுப்பினர்கள்.	3
(iv) மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய்க்கு மேற்பட்டுச் சம்பளம் வாங்கும் உறுப்பினர்கள்.	4

(3) உறுப்பினர் ஒவ்வோர் ஆண்டிலும் தாம் நிச்சயித்திருக்கும் மாத உறுப்பினர் கட்டணத் தொகையைத் தெரிவிக்க வேண்டும்; அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட தொகை ஆண்டு முழுவதும் மாருமல் அப்படியே இருக்க வேண்டும்.

(4) செயல் அதிகாரி உறுப்பினர்களின் சம்பளப் பட்டியலிருந்து உறுப்பினர் கட்டணத் தொகையைக் கழித்துக்கொள்வது மூலமாக உறுப்பினர் கட்டணத்தை வசூலிக்க வேண்டும்.

(5) ஊராட்சிகூடதன் பங்குக்கு உறுப்பினரின் சம்பளம் பற்றுக எழுதப்படுகிற நிதியிலிருந்து, இவ்விதியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறும வீதப்படி இருக்கிற உறுப்பினர் கட்டணத்துக்குச் சமமான தொகையை மிகை ஊதியமாகக் (போனஸ்) கொடுக்க வேண்டும்; சந்தர்ப்பத்துக்கேற்ப ஆண்டு தோறும் மார்ச் 31 ஆம் தேதிக்கு முன் அல்லது 13 ஆவது விதியின்படிக் கணக்கு முடித்துவிடப்படுகிறபோதெல்லாம் அப்பங்குத் தொகையை அவருடைய கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

8. உறுப்பினர் கட்டணத் தொகையை முதலீடு செய்வது.—உறுப்பினர் ஒருவர் எழுத்து மூலமாகக் கேட்டுக்கொள்வதன் பேரிலும், ஊராட்சியின் சம்மதத்துடனும், உறுப்பினர் கட்டணத்தின் ஒரு பாகத்தை அல்லது அது முழுவதையும், வாழ்வு ஈட்டுறுதிப் பத்திரம் ஒன்றில், உறுப்பினரும் ஊராட்சியும் ஒருவருக்கொருவர் எழுத்து மூலமாய் ஒப்புக்கொள்ளக்கூடிய அலுவலகத்திலும், தொகைக்காகவும், நிபந்தனைகளின் பேரிலும் ஊராட்சி முதலீடு செய்யலாம்.

(2) அப்பத்திரத்தை உறுப்பினரின் பெயரில் எழுத வேண்டும். உறுப்பினர், அதைச் செயல் அதிகாரிக்காவது ஊராட்சி இதன் பொருட்டு அவ்வப் போது நியமிக்கக் கூடிய ஒருவருக்காவது உரிமைப்படுத்த வேண்டும். அதை ஊராட்சி வைத்துக்கொண்டு விலக்கு ஏற்பாட்டின் (இ) பகுதியிலாவது (ஈ) பகுதியிலாவது சொல்லியுள்ளவாறு அது மீண்டும் உரிமைப்படுத்தப்பட்டாலன்றி, தொகையை வசூலிக்க வேண்டும்; வசூலிக்கப்பட்ட நிகரத் தொகைகளை, (3) உள்விதியின் (அ) பகுதிக்குட்பட்டு, உறுப்பினர் கணக்கில் வரவு வைக்க வேண்டும்;

ஆனால் எப்போதும்—

(அ) அத்தகைய பத்திரம் ஒவ்வொன்றும், உறுப்பினர் உள்ளபடி ஊராட்சியில் வேலையிலிருக்கிற வரையில், ஊராட்சிக்குச் சொந்தமாயிருக்கும்; அதில் உள்ள உரிமை அதில் கிடைக்கும் வட்டி எதுவும், அதற்குரிய கால

அளவிலே, யாருடைய ஆயுள் பேரில் அது எழுதப்பட்டிருக்கிறதோ அந்த உறுப்பினரையாவது அவருடைய நியமனதாரர்களையாவது சேராது; அது பற்றித் தலையிட உறுப்பினருக்காவது அவருடைய நியமனதாரர்களுக்காவது எவ்வித உரிமையும் இல்லை;

(ஆ) இவ்விதியின்படி வாழ்வு ஈட்டுறுதிப் பத்திரம் ஏற்படுத்துவதனால் எழக்கூடிய அல்லது விளைக்கூடிய ஏதேனும் இழப்பு அல்லது சேதத்துக்கு ஊராட்சி பொறுப்பாளியாகமாட்டாது;

(இ) உறுப்பினர் ஒருவர் பணியிலிருந்து விலகி ஓய்வெடுத்துக் கொள்வதன் பேரில், அல்லது வேலை விலகுதல் செய்வதனாலோ தண்டிக்கப் படுவதனாலோ அவருடைய பணி இறுதி செய்யப்படுவதன் பேரில், அல்லது அவர் வேறு எந்த உள்ளாட்சிக் கழகத்துக்கேனும் மாற்றப்படுவதன் பேரில் அவருடைய ஆயுளின் மீது ஏற்படுத்தப்பட்ட பத்திரத்தை அவருக்கே மீண்டும் உரிமைப்படுத்த வேண்டும்.

(ஈ) உறுப்பினர் ஒருவர் வேறொரு உள்ளாட்சிக் கழகத்தின் பணி ஏற்றுக்கொண்டு அல்லது தகுந்த அதிகாரியால் அக்கழகத்துக்கு மாற்றப்பட்டு வருங்காலச் சேம நிதியில் அவர் பெயரில் வரவாயிருக்கிற தொகை அந்த உள்ளாட்சிக் கழகத்தின் வருங்கால சேம நிதிக்கு மாற்றப்பட்டு, அவருடைய வாழ்வு ஈட்டுறுதிப் பத்திரம் இந்த விலக்கு ஏற்பாட்டின்படி அவருக்கே மீண்டும் உரிமையாக்கப்பட்டிருக்கிறவற்றில், அவர் அதை, சந்தர்ப்பத்துக் கேற்ப அவர் பணி ஏற்றுக்கொண்ட அல்லது அவர் மாற்றப் பெற்றிருக்கிற உள் ளாட்சிக் கழகத்தின் செயல் அதிகாரிக்கு உரிமைப்படுத்த வேண்டும்;

(உ) உறுப்பினர் ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து போனால், அவர் வாழ்வு மீது ஏற்படுத்தப்பட்டுள்ள பத்திரத்தை, 6 ஆவது விதியின்படி அவரால் நியமிக்கப்பட்ட நியமனதாருக்காவது, கூட்டாக அவ்விதியின்படி அவரால் நியமிக்கப்பட்ட நியமனதாரர்கள் எல்லாருக்குமாவது மீண்டும் உரிமையாக்க வேண்டும்; நியமனதாரர் ஒவ்வொருவரும் பெற உரியவரா யிருக்கிற பங்கைக் குறிப்பிட வேண்டும்.

(3) அவ்வுறுப்பினர் பணியை விட்டுப் போவதற்குமுன் அத்தகைய ஒரு பத்திரம் முதிர்ச்சியடைந்தால், ஊராட்சியின் செயல் அதிகாரி—

(அ) ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையும், அடைந்துள்ள மிகை ஊதியங்களின் தொகையும் சேர்ந்து, அப்பத்திரம் சம்பந்தமாக நிதியிலிருந்து எடுக்கப்பட்ட முழுத் தொகைக்கும் அதிகமாயிருந்தால், அப்பத்திரத்தை அவ்வுறுப்பினருக்கு மீண்டும் உரிமையாக்கி, அவரிடம் ஒப்படைக்க வேண்டும்;

அவ்வுறுப்பினர், ஈட்டுறுதி நிறுமத்திலிருந்து தொகைகளைப் பெற்றுக் கொண்ட வுடனே, எடுக்கப்பட்ட தொகை முழுவதையும் நிதிக்குத் திருப்பிச் செலுத்தி விட வேண்டும்; அவ்வாறு செய்யத் தவறினால், செயல் அதிகாரி, இத் தொகையை உறுப்பினரின் ஊதியத்திலிருந்து தவணைகளில் கழித்துக் கொள்வது மூலமாகவோ ஊராட்சி கட்டளையிடக் கூடிய வேறு விதமாகவோ வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்:

(ஆ) ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையும், சேர்ந்துள்ள எந்த மிகை ஊதியங்களின் தொகையும் சேர்ந்து, அப்பத்திரம் சம்பந்தமாக, நிதியி லிருந்து எடுக்கப்பட்ட முழுத் தொகையைவிடக் குறைவாயிருந்தால், (2) உள் விதியின்படி ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையையும் சேர்ந்துள்ள மிகை ஊதியத் தொகைகளையும் வரப்பெற்று, அவ்வாறு வரப்பெற்ற தொகையை உறுப்பினரின் பெயருக்கு நிதியில் வரவு வைக்க வேண்டும்.

(4) ஊராட்சிச் செயல் அதிகாரி இவ்விதியின்படி எடுக்கப்பட்ட வாழ்வு ஈட்டுறுதிப் பத்திரங்களின் பதிவேடு ஒன்றையும், அப்பத்திரங்கள் சம்பந்தமாய்ச் செலுத்தப்படும் தவணைத் தொகை பற்றிய பதிவேடு ஒன்றையும், இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள முறையே VIII ஆம் IX ஆம் படிவங்களின்படி வைத்துவரும்படிச் செய்ய வேண்டும்.

9. **நிதியை வைத்திருக்கும் விதம்.**—(1) வருங்காலச் சேம நிதிக் கழிப்புத் தொகைகள் என்னும் வகையில் உறுப்பினர்களின் சம்பளப் பட்டியல் களிலிருந்து கழித்துக் கொள்ளப்படும் தொகைகளையும், ஊராட்சி கொடுக்கும் பங்குத் தொகைகளையும், வருங்காலச் சேம நிதிக்குச் சம்பந்தப்பட்ட மற்றத் தொகைகளையும், பேரூராட்சிகளைப் பொறுத்தவரை அரசாங்கக் கருவூலத்திலும், ஊராட்சிகளைப் பொறுத்தவரை அவைகளால் வைத்துவரப்படுகிற உள்ளாட்சி XX வைப்புத் தொகை II ஆவது கணக்கிலும் போட்டு வைத்து, தனிப் பணக் குறிப்பேடு ஒன்றை வைத்துவரவேண்டும். வருங்காலச் சேம நிதிக்குச் சம்பந் தப்பட்ட அத்தகைய கழிப்புத் தொகைகள், பங்குத் தொகைகள், மற்றத் தொகைகள் ஆகியவை முழுவதையும், அல்லது அவற்றில் ஏதேனும் பாகத்தை, முதலீடு செய்வதற்காக அவசியமாயிருக்கக் கூடிய இடைவேளைகளில், உள் ளாட்சி அதிகாரிக் குழுக்களின் மற்ற வருங்காலச் சேம நிதிக் கணக்குகளின் வைப்புத் தொகைகளை முதலீடு செய்வதற்காக அரசாங்கத்தார் நிர்ணயிக்கக் கூடிய விதத்தில், கருவூலத்திலிருந்தாவது உள்ளாட்சி வைப்புத் தொகை II ஆவது கணக்கிலிருந்தாவது எடுக்கலாம்.

(2) உறுப்பினர்கள் செலுத்திய கட்டணங்களுக்காவது இந்த நிதியில் ஊராட்சி வரவு வைத்த பங்குத் தொகைக்காவது வட்டி எதுவும் கொடுக்கப் பட மாட்டாது. உறுப்பினர் கட்டணத்தையும் பங்குத் தொகையையும்

அஞ்சலச் சேமிப்பு வங்கியிலாவது வேறு ஏதேனும் வங்கியிலாவது போட்டு வைப்பதனாலும், வைப்புத் தொகைக் கணக்கிலிருந்து அவ்வாறு எடுக்கப் பட்டதை முதலீடு செய்வதனாலும் கிடைத்த வட்டியை, இந்த நிதி சம்பந்தமான கணக்குகளை வைத்து வருவதில் ஈடுபட்டுள்ள பணியாளர் தொகுதியின் செலவைக் கொடுப்பதற்காக, ஊராட்சி பொது நிதிக்கு வரவு வைக்க வேண்டும்.

(3) ஒரு மாதத்தில் தற்காலிகக் கடன்கள் கொடுப்பதற்கு வேண்டியிருக்கிற தொகைகளை, இவ்விதியின்படி, பேரூராட்சிகள் பற்றியவற்றில் அரசாங்கக் கருவூலத்திலும் ஊராட்சிகள் பற்றியவற்றில் உள்ளாட்சி நிதி வைப்புத் தொகை IIஆவது கணக்கிலும் போட்டு வைத்திருக்கும் தொகைகளிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். பேரூராட்சிகள் பற்றியவற்றில் அரசாங்கக் கருவூலத்திலும் ஊராட்சிகள் பற்றியவற்றில் உள்ளாட்சி நிதி வைப்புத் தொகை IIஆவது கணக்கிலும் ஒரு மாதக் கடைசி வரையில் போட்டு வைத்துள்ள வைப்புத் தொகைகளில், அடுத்த மாதத் தொடக்கத்தில் அந்தக் கருவூலத்திலும் கணக்கிலும் எஞ்சியிருக்கும் தொகையை, அந்த மாதம் நான்காம் தேதிக்குள் அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் செலுத்திவிட வேண்டும்.

10. தற்காலிகக் கடன்கள்.—உறுப்பினர் ஒருவர் செலுத்திய கட்டளைக் கணக்கில் அவர் பெயரில் வரவாயிருக்கும் தொகையிலிருந்து அவருக்குத் தற்காலிகக் கடன் கொடுப்பது இன்றியமையாததென்று செயலக அதிகாரி கருதினால் அவர் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அவ்வாறே கொடுக்கலாம் :—

(அ) அக்கடன்கள் கொடுப்பதற்குரிய காரணங்கள் காட்டப்பட வேண்டும்.

விளக்கம்.—கடன்கள் கொடுப்பதற்குரிய நியாயமான காரணங்களாக அடியிற் கண்டவைகளை ஏற்றுக் கொள்ளலாம் :—

(1) உறுப்பினரின் அல்லது அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் (பிள்ளைப் பேறு உள்ளிட்ட) மிகத் துன்பமான நோய் சம்பந்தமாகப் பிடிக்கும் செலவுகளைக் கொடுப்பது.

(2) திருமணங்கள், இறுதிச் சடங்குகள் ஆகியவற்றின் செலவிற்கும் அல்லது உறுப்பினரின் சமய ஒழுக்கத்தின்படி கட்டாயமாகச் செலவு செய்ய வேண்டிய சடங்குகளுக்குச் சம்பந்தப்பட்ட செலவுகளுக்கும் கொடுப்பது.

(ஆ) இவ்விதியின்படிக் கொடுக்கப்படும் கடன், உறுப்பினரின் மூன்று மாதச் சம்பளம் அல்லது நிதிக்கு அவர் செலுத்திய உறுப்பினர் தொகையில்

பேர்பாதி ஆகியவற்றில் எது குறைவாயிருக்கிறதோ அதற்கு மேற்படக் கூடாது.

(இ) முந்திய எல்லாக் கடன்களும் அவற்றின் மீதான வட்டியும் முடிவாகத் திருப்பிச் செலுத்தப்பட்டான பிறகு குறைந்தது ஆறு மாதம் கழிந்து போகிற வரையில் மற்றொரு கடன் கொடுக்கலாகாது; ஆனால் எழுதி வைக்க வேண்டிய தனிக் காரணங்களுக்காகவும், ஸராட்சியின் தனி ஒப்பளிப்பைப் பெற்றுக் கொண்டும், அவ்வாறு மற்றொரு கடன் கொடுக்கலாம்.

(ஈ) இவ்விதியின்படிக் கொடுக்கப்படும் கடனை உறுப்பினரின் சம்பளப் பட்டியல்களிலிருந்து, பன்னிரண்டுக்கு மேற்படாத அடுத்தடுத்துவரும் சமமான மாதத் தவணைகளில் வசூலிக்க வேண்டும். உறுப்பினர் கடன் வாங்கின பிறகு முழுச் சம்பளம் வாங்குகிற மாதத்திலிருந்து அவ்வாறு வசூலிக்கத் தொடங்க வேண்டும்.

11. **உறுப்பினர் கட்டணத் தொகை கைப்பற்றுதலுக்கு (ஜப்திக்கு) உள்ளாகமாட்டாது.**—உறுப்பினர் ஒருவர் பெயரில் நிதியில் வரவாயுள்ள தொகை, பிறருக்கு உரிமைப்படுத்தப்படவோ பொறுப்பேற்றப்படவோ எவ்விதத்திலும் உள்ளாகமாட்டாது; மேலும், உறுப்பினர் பட்ட ஒரு கடன் அல்லது பொறுப்பு சம்பந்தமாக, ஏதேனும் உரிமையியல் வருவாய்த் துறை அல்லது குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது ஆணையின்படி ஜப்தி செய்யப்படுவதற்கு உள்ளாகவுமாட்டாது; நொடித்தவர் சொத்து ஆட்சியராவது (1920 ஆம் ஆண்டின் X ஆவது மையச் சட்டமாகிய) 1920 ஆம் ஆண்டின் மாகாண நொடிப்புச் சட்டத்தின்படி நியமிக்கப்படும் உடைமைக் காப்பாளராவது, அத்தொகையைப் பெற உரிமை உள்ளவராகமாட்டார், அதைக் கொடுக்கும்படி அவர் கேட்கவுங் கூடாது.

12. **கணக்குகளை முடித்துவிடுவது.**—உறுப்பினர் ஒவ்வொருவர் கணக்கை Xம்—

(அ) விடுவித்தல், நீக்குதல் அல்லது விலக்குதல் ஆகியவற்றால் அவருடைய பணிகள் முடிவுறும்போது, அல்லது

(ஆ) அவர் வேலை விலகல் செய்யும்போது, அல்லது

(இ) அவர் பணியை விட்டு விலகி ஓய்வு பெறும்போது, அல்லது

(ஈ) அவர் இறந்து போகும்போது, முடித்துவிட வேண்டும்.

13. கணக்குகளை முடித்துவிடும்போது திருப்பிக் கொடுப்பது.— (i) 12-வது விதியில் விவரிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளில் உறுப்பினர் ஒருவருடைய கணக்கு முடித்து விடப்பட்டால், உறுப்பினரால் நிதிக்குச் செலுத்தப்பட்டு, கணக்கு முடித்து விடப்படும் தேதியன்று அவர் பெயரில் வரவாயிருக்கும் தொகையை, சூழ்நிலைக்கேற்ப, உறுப்பினர்களுக்காவது அவருடைய நியமனத் தார்களுக்காவது கொடுத்துவிட வேண்டும்.

(ii) உறுப்பினர் ஒருவர் பணியை விட்டுப் போவதற்கு முன் இறந்து விட்டால், அவருக்கு ஒரு குடும்பம் இருந்து, அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லது பலருக்குச் சாதகமாக நியமனம் எதுவும் அமலில் இரா விட்டால், அல்லது நிதியில் அவர் பெயருக்கு வரவாயிருக்கிற தொகையின் ஒரு பாகத்துக்கு மட்டும் அந்த நியமனம் சம்பந்தப்பட்டால், சூழ்நிலைக்கேற்ப, அத்தொகை முழுவதும், அல்லது நியமனம் சம்பந்தப்படாத அதன் பாகம், அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லது பலர் அல்லாத வேறு ஒருவர் அல்லது பலருக்குச் சாதகமானதென்று பொருள்படும் ஒரு நியமனம் ஏற்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குச் சம பாகங்களாகக் கொடுக்கப்படத்தக்கதாகிவிடும்;

ஆனால்,—

(1) சட்டப்படி வயது அடைந்துவிட்டிருக்கிற குமாரர்கள்,

(2) இறந்துபோன ஒரு குமாரனுடைய குமாரர்கள் சட்டப்படி வயது அடைந்துவிட்டிருந்தால் அக்குமாரர்கள்,

(3) திருமணமான புதல்விகளின் கணவர்கள் உயிரோடிருந்தால், அப் புதல்விகள்,

(4) இறந்துபோன ஒரு குமாரரின் திருமணமான புதல்விகளுக்குக் கணவர்கள் உயிரோடிருந்தால் அப்புதல்விகள்,

மேற்கண்டவர்கள் அல்லாமல் அக்குடும்பத்தைச் சேர்ந்த வேறு எவரேனும் இருந்தால், (1), (2), (3), (4) பகுதிகளில் குறிப்பிடப்பட்டிருப்பவர்களுக்குப் பங்கு எதுவும் கொடுக்கப்படத்தக்கதல்ல.

மேலும், இறந்துபோன ஒரு குமாரனின் விதவை அல்லது விதவைகளும் குழந்தை அல்லது குழந்தைகளும், அந்தக் குமாரன் உறுப்பினருக்குப் பிறகு உயிரோடிருந்திருந்தால் என்ன பங்கைப் பெற்றிருப்பானோ அந்தப் பங்கை மாத்திரம் சம பாகங்களாகத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

(iii) அதுபோலவே, ஊராட்சி கொடுக்கும் பங்குத் தொகையிலிருந்து, எதனிமித்தமாகவேனும் அவரிடமிருந்து வசூலித்து ஊராட்சி வரவு வைப்பது அவசியமெனத் தெரிய வரக்கூடிய தொகைகளைக் கழித்துக் கொண்ட பிறகு எஞ்சி நிற்கும் தொகையை சூழ்நிலைக் கேற்ப உறுப்பினருக்காவது அவருடைய நியமனதாருக்காவது கொடுத்து விடலாம். செயல் அதிகாரியானவர், சூழ்நிலைக்கேற்ப, உறுப்பினருக்காவது அவருடைய நியமனதாரருக்காவது பங்குத் தொகையைக் கொடுப்பதற்கு முன், பங்குத் தொகையை முழுவதும் கொடுப்பதற்கேற்றவாறு உறுப்பினருடைய வேலையும் நடத்தையும் இருந்திருக்கின்றன வென்று பணிப் பட்டியலில் எழுதி வைக்க வேண்டும். மேற்சொன்ன நிபந்தனைகளுக்குட்பட்டு ஊராட்சி தனக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி பங்குத் தொகையை முழுவதுமோ சிறிது மட்டுமோ கொடுக்கலாம்.

(iv) மொத்தத்தில் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாகப் பணி செய்திருப்பவர்களுக்குப் பங்குத் தொகை எதுவும் கொடுக்கப்படத் தக்கதாகமாட்டாது; ஆனால், எவ்வளவு காலம் பணி செய்திருந்தாலும் சரி, உறுப்பினருடைய சொந்தக் கட்டணத்தைக் கொடுத்துவிட வேண்டும்;

ஆயினும், ஒருவர் நிர்ணயிக்கப்பட்ட ஐந்தாண்டுக் காலம் முடிப்பதற்கு முன் இறந்துபோனால் அல்லது உடல் நலிவு காரணமாகக் கட்டாயமாக ஓய்வு பெறும்படிச் செய்யப்பட்டால், அவரைப் பொறுத்தவரை இந்த வரையறை பொருந்தாது.

(v) போதிய நியாயமான காரணமில்லாமல் வேலை நிறுத்தம் செய்வதும், அனுமதியின்றி வேலைக்கு வராமல் நின்றுபோவதும், பங்குத் தொகையைக் கொடாமல் நிறுத்தி வைத்துக் கொள்வதற்குப் போதுமான காரணங்களாகக் கருதப்படலாம்.

14. **உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பது.**—ஒவ்வோர் ஆண்டும் முடிந்த பிறகு கூடிய விரைவில், பங்குத் தொகை உட்பட அவர் பெயரில் வரவாயுள்ள தொகையைக் காட்டும் iii ஆம் படிவப்படி உள்ள விவரப் பட்டியல் ஒன்றை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அனுப்ப வேண்டும். அந்த விவரப்பட்டியல்களில் கண்டுள்ள தொகை சரியானது தான் என்பது பற்றி உறுப்பினர்கள் தாங்களே ஐயமறத் தெரிந்து கொள்ள வேண்டும்; அவைகளில் உள்ள எவையேனும் தவறுகளை, அவற்றைப் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து ஒரு மாதத்துக்குள் செயல் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். அதன் பேரில் செயல் அதிகாரி அவசியமெனக் கருதப்படக் கூடிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

15. பதிவேடுகளை வைத்து வருவது.—செயல் அதிகாரி iv ஆம் படிவப் பிரகாரம் உறுப்பினர்களின் பதிவேடு ஒன்றையும், v ஆம் படிவப்படி குறிப்பேடு ஒன்றையும், vi ஆம் படிவப்படி தற்காலிகக் கடன்களையும் அவற்றை வசூலிப்பதையும் பற்றிய பதிவேடு ஒன்றையும் vii ஆம் படிவப் படி சுருக்கம் ஒன்றையும் வைத்துவரும்படிச் செய்யவேண்டும்.

16. 1963 ஆம் ஆண்டின் உள்ளாட்சி அதிகாரிகள் வருங்காலச் சேம நிதி விதிகளின் செயற்பாடு.—இவ் விதிகளில் வேறுவிதமாக நிபந்தனை கண்டிருந் தாலன்றி மற்றப்படி, கீழே குறிப்பிடப்பட்ட உள்ளாட்சி அதிகாரிகள் வருங்காலச் சேம நிதி விதிகளில் உள்ள விதிகளின் ஏற்பாடுகள், அவைகளில் விவரிக்கப்பட்டுள்ளவற்றிற்குப் பொருந்தும் :—

(1) நியமனம் செய்வதற்காகவும் நியமனங்களை ரத்துச் செய்வதற் காகவும் உள்ளாட்சி அதிகாரிகள் வருங்காலச் சேம நிதி விதிகளின் 5 (1), (4), (5), (6), (8), (9), (10) விதிகள் ;

(2) நியமனதாரர்களின் பங்கு சம்பந்தமாக, உள்ளாட்சி அதிகாரிகள் வருங்காலச் சேம நிதி விதிகளின் 5 (2) விதி ;

(3) கணக்குகளை முடிவு செய்வதற்காகவும் பணம் கொடுப்பதற்காகவும் உள்ளாட்சி அதிகாரிகள் வருங்காலச் சேம நிதி விதிகளின் 24 ஆவது விதி.

(4) வயதடையாத பயன் அடைபவர்களுக்குப் பணம் கொடுப்ப தற்காக, உள்ளாட்சி அதிகாரிகள் வருங்காலச் சேம நிதி விதிகளின் 28 ஆவது விதி.

I-ஆம் படிவம்

(1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) [1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 58 (1) பிரிவு—6 (2) விதியைப் பார்க்கவும்.]

நியமனச் சான்று.

நான் இறந்துபோனால், கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்கள் வருங்காலச் சேம நிதியிலிருந்து எனக்குச் சேர வேண்டிய எல்லாத் தொகை களையும் பெறுவதற்கு உரிமையுள்ள என் குடும்பத்தைச் சேர்ந்தவரின் அல்லது சேர்ந்தவர்களின் பெயர்களும் முகவரிகளும் அடியிற்கண்டவையாகுமென

நான் இதனால் அறிவிக்கிறேன் ; மேற்சொன்ன தொகைகள் சம்பந்தமாக இந்த என் விருப்ப ஆவணத்தை நான் எழுதுகிறேன் :—

(1) முழுப் பெயர்.

(2) உறுப்பினருக்கு என்ன உறவு.

(3) வயது.

(4) தொழில்.

(5) முகவரி.

(6) சேர வேண்டிய தொகைகளை இன்ன வீதாசாரப்படிக் கொடுக்கலாமென்பது.

(7) வயதடையாதவர்களின் காப்புப் பொறுப்பாளரின் பெயரும் முகவரியும்.

(8) இன்ன நிகழ்வுகள், நேர்ந்தால் நியமனம் செல்லாதாகிவிடுமென்பது.

(9) உறுப்பினருக்கு முன் நியமனதாரர் இறந்துபோனால், நியமனதாரரின் உரிமை சென்றடைதற்குரியவர் எவரேனுமிருந்தால் அவர் பெயரும், முகவரியும், உறவின் முறையும்.

(10) குறிப்புரை.

இடம் :

தேதி :

முதல் சாட்சியின் கையெழுத்தும் அல்லது கைப்பெரு விரல் அடையாளமும் முகவரியும்.

இரண்டாவது சாட்சியின் கையெழுத்தும் அல்லது கைப்பெரு விரல் அடையாளமும் முகவரியும்.

உறுப்பினரின் கையெழுத்தும் அல்லது கைப்பெரு விரல் அடையாளமும் பதவிப் பெயரும்.

II-ம் படிவம்

[6 (3), (4) விதிகளைப் பார்க்கவும்.]

நியமனச் சான்று

நான் இறந்துபோனால், கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்கள், நிதியிலிருந்து எனக்குச் சேர வேண்டிய எல்லாத் தொகைகளையும் பெறுவதற்கு உரிமை உள்ளவரின் அல்லது உள்ளவர்களின் பெயர்களும் முகவரிகளும் அடியிற்கண்டவையாகுமென நான் இதனால் அறிவிக்கிறேன்; மேற்சொன்ன தொகைகள் சம்பந்தமாக இந்த என் விருப்ப ஆவணத்தை நான் எழுதுகிறேன்.

(2. அத் தொகையை நான் உரிமையாக்கக்கூடிய குடும்பம் எதுவும் எனக்கில்லையென்றும் நான் விளம்புகிறேன.

(1) முழுப் பெயர்.

(2) வயது.

(3) தொழில்.

(4) முகவரி.

(5) சேரவேண்டிய தொகைகளை இன்ன வீதாசாரப்படிக் கொடுக்கலாமென்பது.

(6) வயதடையாதவர்கள் காப்புப் பொறுப்பாளரின் பெயரும் முகவரியும்.

(7) இன்ன நிகழ்வுகள் நேர்ந்தால் இந்த நியமனம் செல்லாததாகி விடுமென்பது.

(8) உறுப்பினருக்கு முன் நியமனதாரர் இறந்துபோனால், நியமனதாரருடைய உரிமை சென்றடைதற்குரியவர் எவரேனுமிருந்தால் அவர் பெயரும், முகவரியும், உறவின் முறையும்.

(9) குறிப்புரை.

இடம்:

தேதி:

முதலாவது சாட்சியின் கையெழுத்தும் அல்லது கைப்பெரு விரல் அடையாளமும் முகவரியும்.

இரண்டாவது சாட்சியின் கையெழுத்தும் அல்லது கைப் பெரு விரல் அடையாளமும் முகவரியும்.

உறுப்பினரின் கையெழுத்தும் அல்லது கைப்பெரு விரல் அடையாளமும பதவிப் பெயரும்.

III-ம் படிவம்

(14-வது விதியைப் பார்க்கவும்)

கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்கள் வருங்காலச் சேம நிதி

19 மார்ச் 31 ஆம் தேதியோடு முடிவடைந்த ஆண்டுக்காக (பதவிப் பெயர்) என்பவரின் வைப்புத் தொகைக் கணக்கு.

கணக்கு எண்..

	உறுப்பினர் கட்டணம். ரூ. பை.	பங்குத் தொகை. ரூ. பை.	குறிப்புரை.
ஆரம்பக் கையிருப்பு.			
"இந்த ஆண்டில் வரவு வைக்கப்பட்ட தொகைகள் "*			
	..	..	
இந்த ஆண்டில் எடுக்கப்பட்ட தொகைள்.			
19 -ம் ஆண்டு மார்ச்சு 31-ம் தேதியன்று கையிருப்பு.%			

* ஏப்ரல் முதல் மார்ச் வரையுள்ள மாதங்களில் வசூலிக்கப்பட்ட தொகைகளும் இதில் அடங்கும்.

% ஏற்றுக் கொள்ளப்பட்ட கையிருப்பு.

கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்கள் வருங்காலச் சேம நிதி விதிகளின் 14-வது விதியில் சொல்லியிருக்கிறபடி உறுப்பினருக்கு அனுப்பப் படுகிறது.

விவரப்பட்டியல் சரியானதுதான் என்று தாமே ஐயமறத் தெரிந்து கொள்ளும்படியும், தவறுகள் இருந்தால் அவற்றை, இதைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஒருமாதத்துக்குள் கீழ்க் கையொப்பமிட்டிருப்பவருக்குத் தெரிவிக்கும்படியும் அவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்கள் வருங்காலச் சேம நிதி விதிகளைச் சேர்ந்த 6 ஆவது விதியின்படிச் செய்யப்பட்ட நியமனத்தில் ஏதேனும் மாறுதல் செய்ய விரும்புகிறாரா என்று தெரிவிக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உறுப்பினருக்கு அச்சமயத்தில் குடும்பம் இராதநிலையில் அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அல்லது பலருக்குச் சாதகமாக அவர் நியமனம் எதுவும் செய்யாதிருப்பதில் அதற்குப் பிறகு அவருக்குக் குடும்பம் வந்துவிட்டதா என்பதையும் தெரிவிக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

..........ன் அலுவலகம்....... .. 19 ம்...... .

கையொப்பம்........ ..

செயல் அதிகாரி

உறுப்பினர்

IV-ம் படிவம்

(15 வது விதியைப் பார்க்கவும்)

கடைநிலைப் பணியாளர்கள் —வேலையாட்கள் வருங்காலச் சேம நிதிக்கு உறுப்பினர்களையும் அவர்களுடைய நியமனதாரர்களையும் பற்றிய பதிவேடு.

உறுப்பினர்கள்

தொடர் எண். (1)	முழுப் பெயர். (2)	தகப்பனார் பெயர். (3)	முகவரி. (4)	கிருத்தவ சகாப்தப்படிப் பிறந்த நாள். (5)	சாதி, இனம் அல்லது சமயம். (6)	சேர்த்துக் கொள்ளப்பட்ட தேதி. (7)	சேர்த்துக் கொள்ளப்பட்ட தேதியன்று வயது. (8)	சேர்த்துக் கொள்ளப்பட்ட தேதியன்று வகித்த பணியின் பெயர். (9)	அலுவலிடத்துக்குரிய சம்பளம். (10)	நியமனச் சான்றின் எண்ணும் தேதியும் (இதைத் தனியாகக் கோப்பிட வேண்டும்). (11)

(12) தொடர் எண்.
(13) முழுப் பெயர்.
(14) உறுப்பினருக்கு இன்ன உறவு என்பது.
(15) வயது.
(16) தொழில்.
(17) முகவரி.
(18) சேரவேண்டிய தொகைகளை இன்ன வீதாசாரப்படிக் கொடுக்கலாமென்பது.
(19) சான்றுக்கு அத்தாட்சிக் கையெழுத்திடும் சாட்சிகளின் பெயர்களும் முகவரிகளும்.
(20) செயல் அதிகாரியின் சுருக்கொப்பம்.
(21) குறிப்புரை.

V-ம் படிவம்

(15 ஆவது விதியைப் பார்க்கவும்.)

கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்கள் வருங்காலச் சேமநிதியில்

19   19 -ம் ஆண்டுக்கான ரொக்கக் குறிப்பேடு.

வரவுகள்

(1) உறுப்பினர்கள்.
(2) பங்குத் தொகைகள்.
(3) முதலீடுகள்.
(4) பலவகை.
(5) மொத்தமும் தேதியும்.

கொடுக்கப்பட்ட தொகைகள்

(6) விவகாரங்கள் பற்றிய விவரங்கள்.
(7) உறுப்பினர்கள்.
(8) பங்குத் தொகைகள்.
(9) முதலீடுகள்.
(10) பலவகை.
(11) அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் ஒவ்வொரு மாதமும் மொத்தக் கையிருப்பு.

ரூ.பை. ரூ.பை. ரூ.பை. ரூ.பை. ரூ.பை.

VI-ம் படிவம்

(15 -வது விதியைப் பார்க்கவும்.)

தற்காலிகக் கடன்களையும் வசூல்களையும் பற்றிய பதிவேடு.

எடுக்கப்பட்ட தொகைகள்.

பெயரும் உத்தியோகப் பெயரும்.	கணக்கு எண்.	ஆதாரம்.	ஒப்பளிக்கப்பட்ட தொகை.	எடுக்கப்பட்ட தொகை.	வசூல் தவணைகளின் எண்ணிக்கை.	ஆண்டு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)

வசூல்கள்.

ஏப்ரல்.	மே.	ஜூன்.	ஜூலை.	ஆகஸ்ட்.	செப்டம்பர்.	அக்டோபர்.	நவம்பர்.	டிசம்பர்.	ஜனவரி.	பிப்ரவரி.	மார்ச்சு.	
(8)	(9)	10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)	(20)
											19	19
											19	19
											19	19
											19	19
											91	19

VII-ம் படிவம்

(15 வது விதியைப் பார்க்கவும்.)

கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்கள் வருங்காலச் சேம நிதியின்

19   19   -ம் ஆண்டுக்கான சுருக்கம்.

			ஆரம்பக் கையிருப்பு.	
உறுப்பினர்கள் பதிவேட்டின் படி தொடரெண்.	உறுப்பினர் பெயர்.	அலுவலரின் பதவிப் பெயர்.	உறுப்பினர் கட்டணக் கணக்கு.	பங்குத் தொகை கணக்கு.
(1)	(2)	(3)	(4)	(5)
			ரூ. பை	ரூ. பை

வரவு வைக்கப்பட்ட தொகைகள்.

அடியிற்கண்ட மாதங்களில் வந்து சேர்ந்த உறுப்பினர்களின் அல்லது வாங்கினதைத் திருப்பிக் கொடுத்தவைகளின் தொகை.

ஏப்ரல்.	மே.	ஜூன்.	ஜூலை.	ஆகஸ்ட்.	செப்டம்பர்.	அக்டோபர்.	நவம்பர்.
(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை

(14) டிசம்பர்.	(15) சனவரி.	(16) பிப்ரவரி.	(17) மார்ச்சு.	மொத்தம் (18) உறுப்பினர் கட்டணக் கணக்கு (6) முதல் (17) வரை உள்ள பத்திகளின் மொத்தம்.
ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை

	எடுக்கப்பட்ட உறுப்பினர் கட்டணமும் பங்குத் தொகையும் அல்லது தற்காலிகமாக எடுத்து இழக்கப்பட்ட தொகைகள் அல்லது இழக்கப்பட்ட தற்காலிகப் பங்குத் தொகை.			முடிவுக் கையிருப்பு	
(19) இந்த ஆண்டுக்கான பங்குத் தொகை.	(20) உறுப்பினர் கட்டணம்.	(21) பங்குத் தொகை.	(22) செலவுச் சீட்டு எண்.	(23) உறுப்பினர் கட்டணக் கணக்கு.	(24) பங்குத் தொகைக் கணக்கு.
ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை	ரூ. பை

VIII-ம் படிவம்

(8 (3) வது விதியைப் பார்க்கவும்.)

கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்கள் வருங்காலச் சேமநிதி விதிகளைச் சேர்ந்த 8 ஆவது விதியின்படி ....என்பவர் பெயரில் எடுக்கப்பட்ட வாழ்வு ஈட்டுறுதிப் பத்திரங்கள் பற்றிய பதிவேடு.

(1) தொடரெண்.	(2) பத்திரம் வைத்திருப்பவர் பெயர்.	(3) வாழ்வு ஈட்டுறுதி நிறுமத்தின் அலுவின் பெயர்.	(4) பத்திரத்தின் எண்.	(5) பத்திரம் முதிர்வடையும் தேதி.	(6) பத்திரத்தின் தொகை.	(7) தவணைத் தொகை.	(8) தவணைத் தொகைக்கள் பதிவேட்டில் பக்கங்களின் எண்.	(9) பத்திரங்களைப் பெற்றுக் கொண்ட தேதி.	(10) செயலக அதிகாரியின் சுருக்கொப்பத் தேதி.	(11) வரிசைப்படுத்திய தேதி.	(12) பத்திரத்தை அனுப்பிய எண்ணும் தேதியும்.	(13) பத்திரம் வந்து சேர்ந்ததாக ஒப்புக் கொண்ட தேதி.	(14) நிர்வாக அதிகாரியின் சுருக்கொப்பமும் தேதியும்.

IX-ம் படிவம்

(8(3)-வது விதியைப் பார்க்கவும்.)

தவணைத் தொகைகள் பற்றிய பதிவேடு.

1. பத்திரம் வைத்திருப்பவர் பெயர்.

2. கடைநிலைப் பணியாளர்கள்—வேலையாட்கள் வருங்காலச் சேம நிதிச் சுருக்கத்தின் பக்க எண்.

3. வாழ்வு ஈட்டுறுதிக் கூட்டு நிறுவன அலகின் (யூனிட்டின்) பெயர்.

4. பத்திரத்தின் எண்.

5. பத்திரம் முதிர்வடையும் தேதி.

6. ஆண்டுத் தவணைத் தொகை எத்தனை தடவைகளில் செலுத்தப்படலாமென்பது.

7. தவணைப் பணம் ஒவ்வொரு தடவையாகச் செலுத்தப்படும் போது அதன் தொகை.

8. தவணை (அல்லது தவணைகள்) செலுத்தப்படுவதற்குரிய தேதி (அல்லது தேதிகள்).

பணம் செலுத்தப்பட்டவைகளின் தொடர் எண்.	செலுத்தப்பட்ட தொகை.	செலுத்திய தேதி.	செயல் அதிகாரியின் சுருக்கொப்பம்.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)

(1965 ஜூலை 28-ம் தேதிய 1689-ம் எண் ஊரகவளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பலவகை அரசு ஆணை.)

506-17—18

அத்தியாயம் IV-வரிகளையும் மற்ற வருவாய்களையும் மதிப்பிடுவதும் வசூலிப்பதும்.

வரிகளையும் மற்ற வருவாய்களையும் மதிப்பிடுவதும் வசூலிப்பதும்

48. வரிகள் விதிப்பும் வசூலிப்பும்.

அ. எல்லா வரிகளுக்கும் பொதுவான விதிகள்

1. **இவ்விதிகள் பொருந்துதல்.**—இவ்விதிகள் ஊராட்சிகளுக்கு மட்டும் பிரயோகப்படும்.

2. **வரியை நிச்சயிப்பது.**—இவ்விதிகளில் வேறு விதமாக நிபந்தனை கண்டிருந்தாலன்றி மற்றப்படி, ஒவ்வொருவரும் அல்லது ஒவ்வொருவர் சொத்தின் பேரில் செலுத்துவதற்கு உள்ளான வரியை செயல் அதிகாரி நிச்சயிக்க வேண்டும்.

ஆனால், செயல் அதிகாரியால் செலுத்தப்படத்தக்க வரிகளைப் பற்றி ஊராட்சி அவ்வரிகளை மதிப்பிட வேண்டும்.

3. **மதிப்பீட்டைத் திருத்துவதற்கான அதிகாரம்.**—(அ) யாரேனும் ஒருவருக்கு அல்லது ஏதேனும் சொத்தின் போதுமான அளவுக்கு வரி விதிக்கப்படவில்லையென்று அல்லது ஒருவர் அல்லது சொத்து வரி சம்பந்தமான மதிப்பீட்டுக் கணக்குகளிலிருந்து கவனப் பிசகாக அல்லது முறையின்றி விட்டு விடப்பட்டிருக்கிறார் அல்லது விட்டுவிடப்பட்டிருக்கிறதென்று, அல்லது அச்சுவடிகளில் ஏதேனும் எழுத்துப் பிழை அல்லது கணக்குப் பிழை இருக்கிறதென்று எப்போதேனும் ஊராட்சிக்குத் தெரியவந்தால், அவர்கள் தாங்கள் நியாயமானதென்று அல்லது அவசியமானதென்று கருதுகிற விதமாக அக்கணக்குகளைத் திருத்தும்படி செயல் அதிகாரிக்குக் கட்டளையிடலாம்.

ஆனால், வரி மதிப்பீட்டை அதிகரிக்க வேண்டியிருந்தால், கருதியுள்ளவாறு மதிப்பீட்டுக் கணக்குகளை ஏன் திருத்தக்கூடாதென்று, ஊராட்சிக்குக் காரணம் காட்ட சம்பந்தப்பட்டவருக்கு நியாயமான வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு கட்டளையிடக் கூடாது.

(ஆ) நடப்பு அரையாண்டிலாவது அதற்கு அடுத்து முந்திய இரண்டு அரையாண்டுகளிலாவது, அத்திருத்தத்தை நியாயமுள்ளதாக்கும் சூழ்நிலைகள் ஏற்பட்டிருந்த மிக முந்தியதனா தேதியிலிருந்து அத்திருத்தம் அமலுக்கு வந்திருப்பதாகக் கருதப்படும்.

4. வரி செலுத்தியதற்கான, பற்றுச்சீட்டு (ரசீது).—(1) செயல் அதிகாரியானவர், வரி செலுத்துகிற ஒவ்வொருவருக்கும், தாம் கையெழுத்திட்டுள்ள அல்லது இதன் பொருட்டுத் தம்மிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்றிருக்கிற ஒருவர் கையெழுத்திட்டுள்ள அந்த வரிக்கான ரசீது ஒன்றைக் கொடுக்கவேண்டும்

(2) அப்பற்றுச்சீட்டில் கீழ்கண்டவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.—

(அ) அது வழங்கப்பட்ட தேதி;

(ஆ) அது யாருக்கு வழங்கப்பட்டதோ அவர் பெயர்;

(இ) இன்ன வரி சம்பந்தமாக அது வழங்கப்பட்டிருக்கிறதென்பது;

(ஈ) இன்ன கால அளவுக்காகப் பணம் செலுத்தப்பட்டிருக்கிறதென்பது;

(உ) செலுத்தப்பட்ட தொகை.

(ஆ) வீட்டுவரி மதிப்பீடு.

5. வீட்டு வரி மதிப்பீட்டு வீதம்.—வீடுகளின் ஆண்டு மதிப்பைக் கொண்டாவது மூலதன மதிப்பைக் கொண்டாவது வீட்டு வரிக்காக அவைகளை மதிப்பிட ஊராட்சி தீர்மானித்தால், ஊராட்சி நிச்சயிக்கும் வீதங்கள், ஒவ்வொரு வீட்டின் மதிப்புக்கு விகிதாச்சாரப்படியிருக்கலாம் அல்லது அந்த வீட்டின் மதிப்புக்கேற்றபடி முறை வளர்ச்சியில், அதிகமாகிக் கொண்டு போகலாம், ஆனால், எதிலும், வீட்டின் மதிப்பு அதிகமாகிக்கொண்டு போகுந்தோறும் அவ்வீதங்கள் குறைந்து வரக்கூடாது.

6. வீடுகளில் வகைப்பாடு.—(1) விகிதாசாரப்படியுள்ள வீதம் ஒன்றை ஊராட்சி மேற்கொண்டால், வரியைக் கணக்கிட்டு வசூலிப்பதை எளிதாக்கும் பொருட்டு அது ஊரிலுள்ள வீடுகளை வகைகளாகத் தொகுதிப்படுத்தலாம்.

(2) படிமுறை வளர்ச்சி வீதம் ஒன்றை ஊராட்சி மேற்கொண்டால், அது (1) வகைப்பாட்டின் கோட்பாடுகளை நிர்ணயிக்க வேண்டும் (அதாவது, வரியில்லாத குறிப்பிட்ட ஒரு தொகையை ஒவ்வொரு வீட்டின் மதிப்பீட்டிலிருந்தும் கழித்துவிட வேண்டும்; அல்லது படிமுறை வளர்ச்சியானது, மிகக் குறைந்த வகையில் குறிப்பிட்ட சதவீதத்திலிருந்து மிக உயர்ந்த வகையில்

குறிப்பிட்ட சதவிதம் வரையில் ஏறிக் கொண்டு போக வேண்டும் என்பது போன்ற கோட்பாடுகள்) ; மேலும் (1) ஒவ்வொரு வகையிலும் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள வகைகளையும் வரையறைகளையும் நிச்சயிக்க வேண்டும்.

(3) ஊராட்சி மேற்கண்ட இரண்டு முறைகளில் எதிலேனும், விகிதாசார வரி விதிப்புக் கோட்பாடாவது படிமுறை வளர்ச்சி வரி விதிப்புக் கோட்பாடாவது அடிப்படையில் பாதிக்கப்படும் விதத்தில் வகைகளை அமைக்கக் கூடாது ; எச்சந்தர்ப்பத்திலும் வகைகளின் எண்ணிக்கை ஆறுக்குக் குறைவாயிருக்கக் கூடாது.

(4) முதன் முறையாக வரி ஒன்றை விதிப்பதற்காக அல்லது ஏற்கெனவேயுள்ள ஒரு வரியின் விதத்தை அதிகப்படுத்துவதற்காகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்குமுன், ஊராட்சி அவ்வாறு கருதியிருப்பது பற்றிய அறிவிப்பு ஒன்றை, குறைந்தது ஒரு தமிழ்ச் செய்தி தாளிலும், ஊராட்சி அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையிலும், ஊராட்சி எல்லைக்குள் ஊராட்சி குறிப்பிடக் கூடிய வேறு இடங்களிலும், தண்டோரா மூலமும் வெளியிட வேண்டும் ; ஆட்சேபணைகளை அனுப்புவதற்காக ஒரு மாதத்துக்கு குறையாத நியாயமான கால அளவை நிச்சயிக்க வேண்டும் ; குறிப்பிட்ட காலத்துக்குள் ஆட்சேபணைகள் வந்தால், அவைகளைப் பற்றி ஆலோசனை செய்ய வேண்டும்.

7. **வீட்டு வரி மதிப்பீட்டுப் பட்டியலைத் தயாரிப்பது.**—(1) அந்த ஊரின் விசாரணை அதிகாரமுள்ள கர்ணம், 1960 செப்டம்பர் 12 ஆம் தேதிய 756 ஆம் எண் ஊரக வளர்ச்சி துறைப் பல்வகை அரசு ஆணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள 15 ஆம் எண் ஊராட்சிப் படிவப்படி வீட்டு வரி மதிப்பீட்டுப் பட்டியலைத் தயாரித்து, செயல் அதிகாரிக்கு அனுப்ப வேண்டும். செயல் அதிகாரியானவர், மதிப்பீடு சரியென்று ஒப்புக் கொண்டதற்கடையாளமாக 18 ஆம் பத்தியில் கையெழுத்திட வேண்டும் ; அல்லது அதை எவ்வாறு திருத்தியமைக்க வேண்டுமென்று குறிப்பிட வேண்டும்.

(2). (1) உள்விதியில் குறிப்பிட்டுள்ள வேலைகளைச் செய்வதற்காக, அரசாங்கத்தார் அவ்வப்போது ஒப்பளிக்கக்கூடிய ஊராட்சி வளர்ச்சிப் படி வீதப் பிரகாரம் ஊதியம் பெறக் கர்ணம் உரிமை உள்ளவராவார் ; ஆனால் அது சம்பந்தமாக வேறு எந்தப் படியையும் பெற அவர் உரிமை உள்ளவராக மாட்டார்.

8. **மதிப்பீட்டுக் கணக்குகளைத் தயாரிப்பது.**—செயல் அதிகாரி 7 ஆவது விதியில் சொல்லப்பட்டிருக்கிற பட்டியலைப் பெற்றுக் கொள்வதன் பேரில், மதிப்பீட்டுக் கணக்குகளைத் தயாரிக்கும்படிச் செய்ய வேண்டும். அந்த மதிப்பீட்டுக்

கணக்குகளில் தெளிவான பத்திகளில் அடியிற்கண்டவகை காட்டப்பட்டிருக்க வேண்டும்; அவையாவன:—ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரர் பெயர்; குடியிருப்பவர் பெயர்; ஏதேனும் வகையின் கீழ் அந்த வீட்டுக்கு வரி விதிக்கப்பட்டால் அந்த வகை. சேர வேண்டிய வரித் தொகை; வரி செலுத்த வேண்டிய தேதி.

9. **மதிப்பீட்டுக் கணக்குகளைப் பார்வையிடுவது பற்றிய அறிவிப்பு.**—மதிப்பீட்டுச் சுவடிகள் தயாரிக்கப்பட்டவுடனே, செயல் அதிகாரி ஊரில் தண்டோரப் போட்டு அதன் மூலமாக, கணக்குகளைப் பற்றியும் அவைகளை எந்த இடம் அல்லது இடங்களில் பார்வையிடலாமென்பது பற்றியும் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

10. **மதிப்பீட்டுக் கணக்குகளைத் திருத்தும் விதம்.**—(1) செயல் அதிகாரியானவர் பின்வருமாறு செய்வது மூலமாக, ஒரு பொது ரிவிஷன் (சீராய்வு) மற்றொன்றுக்கும் இடையே எப்போதேனும், மதிப்பீட்டுக் கணக்குகளைத் திருத்தலாம். அதில் ஏதேனும் ஒரு வீட்டைச் சேர்த்துக் கொள்ளுதல்; அல்லது; அதிலிருந்து ஏதேனும் ஒரு வீட்டை நீக்கிவிடுதல்; அல்லது அதிலிருந்து ஏதேனும் ஒரு வீட்டின் மதிப்பையோ வகைப்பாட்டையோ அது சம்பந்தமாகச் செலுத்தப்படத் தக்க வரித் தொகையையோ மாற்றுதல்; அல்லது இதன் பொருட்டு அரசாங்கத்தார் செய்யக் கூடிய வேறு எவையேனும் விதிகளுக்குட்பட்டு, அதில், ஒரு வீட்டின் சொந்தக்காரர் பெயருக்குப் பதிலாக, அந்த வீட்டின் உடைமையை, மாற்றத்தினாலோ மற்றபடியோ பெற்றிருக்கிற வேறொருவர் பெயரை அமைத்துக் கொள்வது.

(2) அத்திருத்தமானது, அது செய்யப்படுகிற அரை ஆண்டின் முதல் தேதியன்று அமலுக்கு வரத் தொடங்கியிருப்பதாகக் கருதப்படும்:

ஆனால், ஓர் அரையாண்டுக்கான கேட்பு அறிவிப்பு. கொடுக்கப்பட்டான பிறகு அந்த அரையாண்டில் மேற்படி திருத்தம் செய்யப்பட்டால், அடுத்து வரும் அரையாண்டிலிருந்துதான் அது அமலுக்கு வரத் தொடங்கும்; ஆனால் அத் திருத்தமானது (1960 ஆம் ஆண்டின் 18 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1960 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாட்டுச்) சட்டத்தின்படி நியாய வாடகை நிச்சயிப்பதைச் செயற்படுத்துவதாயிருந்தால், அது அவ்வாறு அமலுக்கு வரத் தொடங்காது:

மேலும் (1960 ஆம் ஆண்டின் 18 ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1960 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாட்டுச்) சட்டத்தின்படி ஒரு வீட்டுக்கு நியாய வாடகை நிச்சயிக்கப்படுவது

காரணமாக அத்திருத்தம் செய்வது அவசியமாகிவிட்டால், நியாய வாடகை அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட தேதியிலிருந்து அத்திருத்தம் அமலுக்கு வரத் தொடங்கும்:

அன்றியும், ஒரு வீட்டின் உடமை மாற்றம் பற்றிய விவாதத்துக்குட் பட்டவற்றில் செயலக அதிகாரி செய்யும் தீர்ப்பினல், அவ்வீட்டுக்குச் சட்டப் படியான உரிமை, மாற்றப் பெற்றவருக்கு உண்டாகிவிட மாட்டாது:

(3) ஒரு பொது ரிவிஷனுக்கும் (சீராய்வுக்கும்) மற்றொன்றுக்கு மிடை யில் வீட்டு வரி விதிக்கப்படத்தக்க வீதங்களைப் பொதுவாக உயர்த்துவதன் விளைவாக வருவதைத் தவிர செயல் அதிகாரி முதல் தடவையாக ஒரு வீட்டை அல்லது மற்றப்படி ஒரு வீட்டின் மதிப்பீட்டை அதிகப்படுத்தும் ஒவ்வொன்றி லும் செயல் அதிகாரியானவர், ஒரு தனி அறிவிப்பு மூலமாக, அம்மதிப்பீட்டை மாற்றியமைக்கும்படிக் கோரும் மனு, அரசாங்கம், இருப்பு பாதைப் பரிபாலனம் அல்லது நிறுமத்தைப் பொறுத்தவரை அந்த அறிவிப்புச் சேர்ப்பிக்கப்பட்ட திலிருந்து முப்பது நாட்களுக்குள்ளும் ஊராட்சி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தால் அது ஆலோசிக்கப்படுமென்று அவ்விட்டின் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்குத் தெரிவிக்கவேண்டும், அந்தத் தனி அறிவிப்பைக் கர்ணம் தயார் செய்து அதில், செயல் அதிகாரி கையெழுத்துச் செய்திருக்கவும் வேண்டும்.

(4) மதிப்பீட்டுக் கணக்குகள் முதல் தடவையாகத் தயாரிக்கப்பட்டிருக் கும் போதும், பொதுச் சீராய்வில் கணக்குகள் முடிக்கப்பட்டிருக்கும்போதும் செயல் அதிகாரியானவர், வெளிப்படையான அறிவிப்புக் கொடுத்து, பொதுச் சீராய்வு மனுக்கள் அரசாங்கத்தார், இருப்புப்பாதைப் பரிபாலனம் அல்லது ஒரு நிறுமத்தைப் பொறுத்தவரை அந்த அறிவிப்பின் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளும், மற்றவற்றில் அத்தேதியிலிருந்து முப்பது நாட்களுக் குள்ளும் ஊராட்சி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தால், அவைகள் ஆலோசிக்கப்படுமெனத் தெரிவிக்க வேண்டும். அந்த அறிவிப்பை, ஊராட்சி அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையில் ஒட்ட வேண்டும்; அதே நாளன்று ஊரில் தண்டோராப் போட்டு அதை விளம்பரம் செய்ய வேண்டும்:

ஆனல், மதிப்பீடு உயர்த்தப்படும் ஒவ்வொன்றிலும், செயல் அதிகாரி யானவர் சம்பந்தப்பட்ட வீட்டுச் சொந்தக்காரரிடம் அல்லது அனுபோக தாரரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டிய தனி அறிவிப்பு மூலமாகத் தெரிவிக்கும் படிச் செய்ய வேண்டும்;

மேலும், முதல் விலக்கு ஏற்பாட்டின் பிரகாரம் சொந்தக்காரரிடம் அல்லது அனுபோகதாரரிடம் தனி அறிவிப்பு ஒன்றைச் சேர்ப்பிக்க வேண்டியிருக்கிற ஒவ்வொன்றிலும் இவ்விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அறுபது நாள் கால அளவோ முப்பது நாள் கால அளவோ, அத்தனி அறிவிப்புச் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கிட வேண்டும்.

11. **மதிப்பீட்டைத் திருத்தியமைக்கும்படிக் கோரும் மனு.**—எவரேனும், ஓர் அரையாண்டு முடிவதற்கு முப்பது நாட்களுக்குக் குறையாமல் அல்லது அறுபது நாட்களுக்கு அதிகப்படாமல் முன்னதாக, வரி விதிக்கப் பெற்றுள்ள வீட்டின், சந்தர்ப்பத்துக்கேற்ப, ஆண்டு மதிப்பு அல்லது மூலதன மதிப்பு, அவ் வீட்டின் மதிப்பீடு கடைசியாகப் போடப்பட்ட பிறகு அல்லது திருத்தியமைக்கப்பட்ட பிறகு, குறைந்து விட்டிருக்கிறதென்னும் காரணத்தினால், வரப்போகும் அரையாண்டுக்குத் தாம் செலுத்துவதற்குட்பட்ட வரியைக் குறைக்கும்படி, சீராய்வு மனு மூலமாகச் செயல் அதிகாரியைக் கேட்டுக் கொள்ளலாம்.

12. **சீராய்வு மனுவின் முடிவைத் தெரிவிப்பது.**—10 (3) விதியின் படியாவது 11 ஆவது விதியின்படியாவது செய்து கொள்ளப்பட்டச் சீராய்வு மனு தீர்வு செய்யப்பட்டவுடனே செயல் அதிகாரியானவர், அம்மனுவின் பேரில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளைப் பற்றி, மனுதாரருக்கு அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள அவர் முகவருக்கு வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ தெரிவிக்க வேண்டும்; சீராய்வின் மனுவின் பேரில் நிச்சயிக்கப்பட்ட தொகையை, அத்தெரிவிப்புக் கிடைத்ததிலிருந்து பதினைந்து நாட்களுக்குள், அல்லது அத்தொகை இன்னும் சேர வேண்டியதாயிராவிட்டால் அது சேர வேண்டிய தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் செலுத்தும்படி அவருக்குக் கட்டளையிட வேண்டும்; அவசியமானால், மதிப்பீட்டுக் கணக்குகளைத் திருத்தும்படிச் செய்ய வேண்டும். செயல் அதிகாரியானவர், சீராய்வு மனுவின் முடிவைக் கர்ணத்துக்கும் தெரிவிக்க வேண்டும்.

13. **மதிப்பீட்டுக் கணக்குகளின் பொதுச் சீராய்வு.**—(1) செயல் அதிகாரியானவர் அரை ஆண்டுதோறும் புதிய பட்டியல்களை அல்லது மதிப்பீட்டுக் கணக்குகளைத் தயாரிக்கக் கடமைப்பட்டவராகமாட்டார்; ஆனால், முந்திய அரையாண்டுக்குரியவைகளை, முந்திய அரை ஆண்டுக்காகச் செய்யப்பட்டிருக்கிற அல்லது செய்யப்படக்கூடிய திருத்தங்களுடன் வைத்துக் கொள்ளலாம்.

(2) செயல் அதிகாரி ஐந்தாண்டுக்கொரு முறை மதிப்பீட்டுக் கணக்குகளைப் பொதுச் சீராய்வு செய்ய வேண்டும்:

ஆனால், (5) உள்விதியின்படி மாவட்ட ஆட்சியாளர் ஆணையிடுகிற புதிய பொதுச் சிராய்வுக்கு இந்த நிபந்தனை பொருந்தாது.

(3) செயல் அதிகாரியானவர், (1) உள்விதியின் குறிப்பிட்டுள்ள திருத் தங்களைப் பற்றியும் (2) உள்விதியில் குறிப்பிட்டுள்ள பொது மதிப்பீடு பற்றி யும், 9 ஆவது விதியில் சொல்லப்பட்டிருக்கிற விதமாகப் வெளிப்படையான அறிவிப்புச் செய்ய வேண்டும்.

(4) பொது மதிப்பீடானது, (2) உள்விதியின்படி அறிவிப்புக் கொடுக்கப் படுகிற அரையாண்டின் முதல் நாளன்று அமலுக்கு வரத் தொடங்கியிருப்ப தாகக் கருதப்படும்.

(5) (1) உள்விதியின்படிச் செய்யப்பட்டபோதுச் சிராய்வு, நியாயமான ஆதாரமின்றி மதிப்பீடுகள் உயர்த்தப்பட்டுள்ளன அல்லது குறைக்கப் பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சியாளர் கருதினால், அந்தச் சிராய்வு ரத்துச் செய்ய அவர் எழுத்து மூலமாய் ஆணையிடலாம்; தாம் அவசியமெனக் கருதுகிற கால அளவு சம்பந்தமாக (யாருடைய சிராய்வு இவ்விதியின்படி ரத்து செய்யப் பட்டதோ அவர் அல்லாமல்) இதன் பொருட்டுத் தாம் அதிகாரமளிக்கிற (வேறு) ஒருவர் புதிதாய்ச் சிராய்வு நடத்தக் கட்டளையிட வேண்டும். மாவட்ட ஆட்சியாளர் அவ்வாறு ஆணையிடுகிற சிராய்வுக்கான நடைமுறை (1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி வீட்டு வரி மதிப்பீட்டுக்கான விதிகளில் சொல்லப்பட்டுள்ள விதமாக இருக்க வேண்டும்.

ஆனால், இவ்விதியின்படி மாவட்ட ஆட்சியாளர் ஆணையிடுகிற சிராய்வின் விளைவாக, அடுத்த பொதுச் சிராய்வு தள்ளிப்போடப்படக் கூடாது.

இ. வண்டிக்கு வரி.

14. *வண்டி வரிக்கேட்புப் பதிவேட்டைத் தயாரிப்பது.*—(1) 1961 ஜூன் 13 ஆம் தேதி 1639 ஆம் எண் ஊராக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள 101 ஆம் எண் ஊராட்சிப் படிவப் பிர காரம் உள்ள கேட்புப் பதிவேடு ஒன்றை செயல் அதிகாரி அரையாண்டு ஒவ் வொன்றிலும் தயாரிக்க வேண்டும்.

(2) 1961 ஜூன் 13 தேதிய 1639 எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள 102 ஆம் எண் ஊராட்சிப் படிவத்தின்படி உள்ள அச்சிட்ட அட்டவணை ஒன்றை, வண்டி வரி செலுத்த வேண்டியவர்கள் என்று கருதப்படும். ஒவ்வொருவருக்கும் செயல்

அதிகாரி அனுப்ப வேண்டும்; அந்த அட்டவணை பெற்றவர் வைத்திருக்கிற அல்லது பயன்படுத்துகிற வண்டிகள் சம்பந்தமாக, மேற்படி வரி விதிப்பதற்கு அவசியமெனச் செயல் அதிகாரி கருதுகிற தகவலையும் படிவத்தையும் நிரப்பி, அனுப்ப வேண்டும். அதில் அவர் கையெழுத்தும் தேதியும் போட்டு, அது கிடைத்த ஒரு வாரத்துக்குள் அதை ஊராட்சி அலுவலகத்துக்குத் திருப்பி அனுப்பி விட வேண்டும்.

(3) (2) உள்விதியில் குறிப்பிட்டுள்ள ஒரு வாரக் காலம் கழிந்தபின் செயல் அதிகாரி 1961 சூன் 13 ஆம் தேதிய 1639 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணையுடன் இணைக்கப்பட்டிருக்கிற 103 ஆம் எண் ஊராட்சிப் படிவப்படி உள்ள கேட்பு அறிவிப்பு ஒன்றை அவரிடம் சேர்ப்பிக்கும்படிச் செய்ய வேண்டும்; அந்த அறிவிப்பில் வண்டி வரியாகச் செயல் அதிகாரி கருதும் தொகையை, அவ்வாறு சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்று கேட்டிருக்க வேண்டும்.

15. **பற்றுச் சீட்டையும் உரிமத்தையும் கொடுப்பது.**—ஒருவர் ஒரு வண்டி சம்பந்தமாகச் சேர வேண்டிய வரித் தொகையைச் செலுத்திவிட்டால், செயல் அதிகாரி, பெற்றுக் கொண்ட தொகைக்காக அவருக்கு ஒரு பற்றுச் சீட்டு வழங்க வேண்டும்; செலுத்தப்பட்ட அத்தொகை சம்பந்தப்படுகிற காலத்துக்கு அவ்வண்டியை வைத்திருக்க அல்லது பயன்படுத்த ஒரு உரிமத்தையும் வழங்க வேண்டும்.

16. **வண்டிகளுக்கு எண்கள் இணைப்பது.**—15 ஆவது விதியின்படி உரிமம் கொடுக்கப்பெற்றுள்ள வண்டி ஒவ்வொன்றுக்கும் ஊராட்சி எண் இணைக்க வேண்டும். அந்த எண்ணை ஊராட்சி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஆனால், ஏதேனும் தனிச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளின்படி எண் இணைப்புப் பெற வேண்டியுள்ள வண்டியைப் பொறுத்தவரை ஊராட்சி எண் இணைக்க வேண்டியதில்லை.

17. **வண்டிகளைக் கைப்பற்றுதல்.**—16 ஆவது விதியில் சொல்லியிருக்கிறபடி ஒரு வண்டிக்கு ஊராட்சி எண் அல்லது ஒரு தனிச் சட்டத்தில் கண்ட நிபந்தனைகளின் படிக்கான எண் இணைக்கப்படாவிட்டால், செயல் அதிகாரி எப்போதேனும் அவ்வண்டியைக் கைப்பற்றி நிறுத்தி வைத்துக் கொள்ளலாம்;

ஆனால், இரு சக்கர வண்டி, மூச்சக்கரவண்டி அல்லது ரிக்ஷா அல்லாத வேறொரு வண்டி, வழிச் செல்பவர்களை அல்லது சரக்குகளை ஏற்றிக்கொண்டு போவதில் உள்ளபடிப் பயன்படுத்தப்படும்போது, அதைக் கைப்பற்றவோ நிறுத்தி வைத்துக் கொள்ளவோ கூடாது.

18. **கைப்பற்றப்பட்ட வண்டிகளைப் பற்றி முடிவு செய்வது.**—(1) கைப்பற்றப்பட்ட வண்டி அவ்வாறு கைப்பற்றிய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் வேண்டுமெனக் கேட்கப்படாவிட்டாலும், அதற்காகச் சேர வேண்டிய வரி அக் காலத்துக்குள் செலுத்தப்படாவிட்டாலும், செயல் அதிகாரியானவர், அவ் வண்டியைப் பகிரங்க ஏலத்தில் விற்க வேண்டுமெனவும், விற்று வந்த தொகையை—

விற்கப்பட்ட வண்டிக்கு வரி செலுத்த வேண்டியிருந்தால் அவ் வரியையும்

வரித் தொகைக்கு மேற்படாமல் செயல் அதிகாரி கட்டளையிடக் கூடிய தண்டப்பணத்தையும் ;

(iii) கைப்பற்றி, நிறுத்தி வைத்துக் கொண்டு, விற்பனை செய்தது சம்பந்தமாகப் பிடித்த செலவுகளினிமித்தம் ஐம்பது பைசாவையும் செலுத்துவதற்குப் பயன்படுத்த வேண்டும் எனவும் கட்டளை யிடலாம்.

(2) அவ்வண்டியின் சொந்தக்காரர் அல்லது அதற்கு உரிமையுள்ள வேறொருவர் அது கைப்பற்றப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்கும் அல்லது விற்பனைக்கு முன் எப்போதேனும் அதைக் கொடுக்கும்படிக் கேட்டு,—

(i) அதற்காகச் சேர வேண்டிய வரியையும் ;

(ii) வரித் தொகைக்கு மேற்படாமல் செயல் அதிகாரி கட்டளையிடக் கூடிய தண்டப்பணத்தையும் ;

(iii) கைப்பற்றி நிறுத்தி வைத்துக் கொண்டது சம்பந்தமாகப் பிடித்த செலவுகளினிமித்தம் இருபத்தைந்து பைசாவும் செலுத்துவதன் பேரில் அவ்வண்டியை அவருக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

ஈ. மேல் முறையீடுகள்.

19. **வரி விதிப்பை எதிர்த்து மேல்முறையீடு.**—அடியிற்கண்ட வரிகள் சம்பந்தமாக ஊராட்சிக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம் :—

(அ) 8, 13 ஆவது விதிகளின்படி வீட்டு வரியை மதிப்பிட்டு விதித்திருப்பதும், சீராய்வு மனுவின் மீது 12 ஆவது விதியின்படி செயல் அதிகாரி பிறப்பித்த ஆணைகள் ;

(ஆ) செயல் அதிகாரி,

(i) வண்டி வரி;

(ii) தொழில் வரி விதிப்பது.

(இ) உழவு நிலத்தின் மீது வரி விதிப்பதற்கு (1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி மாவட்ட ஆட்சியாளர் ஒப்பளிப்பு வழங்கியிருந்தால் அந்த வரியை மதிப்பிட்டிருப்பது.

20. இன்ன காலத்துக்குள் மேல்முறையீடு செய்து கொள்ள வேண்டுமென்பது ஊராட்சிக்கு முறையீடு ஒன்று :—

(i) குறை கூறப்பெற்றவனைக் கேட்கப்பட்ட பிறகு பதினைந்து நாட்களுக்குள் ஊராட்சி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தாலன்றி மற்றப்படியும்;

(ii) செயல் அதிகாரி, ஏழ்மை காரணமாக வேறு விதமாகக் கட்டளையிட்டாலொழிய, எந்த வரி பற்றி முறையீடு கொடுத்துக் கொள்ளப்படுகிறதோ அந்த வரி (1) பகுதியில் குறிப்பிட்டுள்ள கால அளவுக்குள் ஊராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டாலன்றி அல்லது கட்டி வைக்கப்பட்டாலன்றி,
அது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது :

ஆனால், மேற்சொன்ன காலத்துக்குள் மேல்முறையீடு செய்துகொள்ளாததற்கு ஊராட்சிக்குத் திருப்திகரமாகக் காரணம் காட்டப்பட்டால், (1) பகுதியில் குறிப்பிட்டுள்ள காலத்துக்குப்பிறகு பதினைந்து நாட்களுக்கும் ஊராட்சி அதை ஏற்றுக் கொள்ளலாம்.

21. **செயல் அதிகாரியின் ஆணைகளை ரத்து செய்ய அல்லது மாற்ற ஊராட்சிக்குள்ள அதிகாரங்கள்.**—வரி ஒன்றைக் குறைப்பதற்காக அல்லது தள்ளிக் கொடுப்பதற்காக செயல் அதிகாரி பிறப்பித்த ஓர் ஆணையை ஊராட்சி தானாகவே அல்லது மற்றப்படி ரத்து செய்யலாம் அல்லது மாற்றலாம்.

22. **மதிப்பீட்டுக் கணக்குகளைத் திருத்துவதும் வரியைத் திருப்பிக் கொடுத்துவிடுவதும்.**—மேல்முறையீட்டின் பேரில் ஊராட்சி பிறப்பித்த ஆணைகளுக்கிணங்க, மதிப்பீட்டுச் சுவடிகளைத் திருத்த வேண்டும் ; ஊராட்சி வரித் தொகையைக் குறைத்தால் அல்லது தள்ளிக் கொடுத்தால் செயல் அதிகாரி அவ்வண்ணமே உரிய தொகையைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

23. வரி மதிப்பீடு எப்போது முடிவானதாகுமென்பது.—ஒரு வரியின் மதிப்பீடு அல்லது கேட்பு சம்பந்தமாக இதில் முன்னால் சொல்லியுள்ளவாறு மேல் முறையீடு செய்து கொள்ளப்படாவிட்டாலும் அத்தகைய முறையீடு செய்து கொள்ளப்பட்டாலும் அதன் மீது ஊராட்சி செய்யும் தீர்ப்பும் முடிவானவையாகும்.

ஆனால், ஒரு மதிப்பீடு அல்லது கேட்பு மதிப்பீட்டுக் கணக்குகளின்படி இரா விட்டால் அவைகளுக்கிணங்கப் புதிதாக வரியை மதிப்பீடு செய்வதை அல்லது கேட்பதை இவ்விதியில் உள்ளது எதுவும் தடுப்பதாகக் கருதப்பட மாட்டாது.

24. ஊராட்சிக்குச் சேர வேண்டிய வரியை அல்லது கட்டணத்தை வசூலிப்பது.—(1) ஊராட்சிக்குச் சேர வேண்டிய வரியை அல்லது கட்டணத்தை ஊர்த் தலைவர் வசூலிக்க வேண்டும்.

(2). (1) உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற ஊர்த் தலைவரின் அலுவல்களைச் செய்வதில் தலையாரி அவருக்கு உதவி புரிய வேண்டும்.

(3). (1), (2) உள்விதிகளில் குறிப்பிட்டிருக்கிற அலுவல்களைச் செய்வதற்காக, அரசாங்கத்தார் அவ்வப்போது ஒப்பளிக்கக் கூடிய ஊராட்சி வளர்ச்சிப் படி விதத்துக்கிணங்கி ஊதியம் பெற ஊர்த் தலைவரும் தலையாரியும் உரிமை உள்ளவர்கள் ஆவார்கள்; ஆனால், அந்த அலுவல்கள் சம்பந்தமாக வேறு எந்த ஊதியமும் பெற உரிமை உள்ளவர்கள் ஆகமாட்டார்கள்.

உ. வரிகளை வசூலிப்பது.

25. வசூலிக்கும் விதம்.—(1) ஒருவரிடமிருந்து வீட்டு வரி சேர வேண்டியிருந்தால், ஊர்த் தலைவர் 26 ஆவது விதியின் ஏற்பாடுகளை அவர் அமல்படுத்தத் தொடங்குவதற்குமுன், சேர வேண்டிய தொகைக்காக அவரிடம் வரிப் பட்டியல் ஒன்றைச் சேர்ப்பிக்க வேண்டும்.

(2). (1) உள்விதியின்படிக்கான பட்டியில் செயல் அதிகாரி கையெழுத்திட வேண்டும்; அதில் அவருடைய கையொப்ப அச்சு இருக்க வேண்டும்; அதில் ஊர்த் தலைவரும் கையெழுத்திட வேண்டும்; அப்பட்டியில் அடியிற் கண்டவை அடங்கியிருக்க வேண்டும் :—

(அ) வரி விதிக்கப் பெறுகிற கால அளவைப் பற்றிய விவரப் பட்டியலும் வீட்டின் விவரமும்.

(ஆ) செலுத்தத் தவறினால் ஏற்படும் பொறுப்பு பற்றிய அறிவிப்பு

(3) எந்த அரையாண்டுக்கான வரி எதுவும் அந்த அரையாண்டுக்குள் அல்லது அதை அடுத்து வரும் அரையாண்டில் சம்பந்தப்பட்டவரிடம் வரிப் பட்டியல் சேர்ப்பிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, 26-ஆவது விதியில் கண்டுள்ள விதமாக அவரிடமிருந்து வசூலிக்கக் கூடாது.

ஆனால், 3-ஆவது விதியின்படி மதிப்பீட்டுக் கணக்குகள் திருத்தப்பட்டிருந்தால், திருத்தம் செய்யப்பட்ட அரையாண்டிலாவது அதையடுத்து வரும் அரையாண்டிலாவது அப் பட்டியலைச் சேர்ப்பிக்கலாம்.

(4) ஊராட்சிக்குச் சேர வேண்டிய வரிக்காக அது ஒரு உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவதை, இவ்விதியில் அல்லது 26-ஆவது விதியில் உள்ளது எதுவும் தடை செய்ய மாட்டாது.

26. அசையும் பொருளைக் கைப்பற்றி விற்பனை செய்வது.—(1) கேட்கப் பட்ட வரித் தொகையானது, பட்டி சேர்க்கப்பட்டதிலிருந்து அல்லது 12-ஆவது விதியில் குறிப்பிட்டிருக்கிற கட்டளை பிறப்பிக்கப்பட்டதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் செலுத்தப்படாதிருந்து, வரி செலுத்த வேண்டியவர் அது ஏன் செலுத்தப்படக் கூடாதென்பதற்குச் செயல் அதிகாரிக்குத் திருப்தி காமாகக் காரணம் காட்டியிராவிட்டால், செயல் அதிகாரியானவர், வரியினி மித்தம் சேர வேண்டிய தொகை-ஆணைக் கட்டணம்-கைப்பற்றுதல் கட்டணம், அவ்வாறு கைப்பற்றப்பட்ட உடைமையை நிறுத்திவைத்துக்கொண்டு பிறகு விற்பது சம்பந்தமாக உத்தேசமாய் பிடிக்கும் செலவுகளை ஏற்பதற்கு வேண்டியிருக்கிற தொகை-ஆகியவை சேர்ந்துள்ள தொகையை, பாக்கி தாரரின் அசையும் பொருளைத் தமது ஆணைப்படிக் கைப்பற்றி விற்பனை செய்வது மூலமாக வசூலிக்கலாம்.

ஆனால் எப்போதும் (1908-ஆம் ஆண்டின் V-ஆவது மையச் சட்ட மாகிய) 1908-ஆம் ஆண்டின் உரிமையியல் வழக்கு நடைமுறை விதித் தொகுப்பின் 60-ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் விலக்கு ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற அசையும் பொருள் கைப்பற்றுவதற்கு உள்ளாகமாட் டாது.

(2) பாக்கிதாரரின் உடமையைக் கைப்பற்றுவதோ போதுமான அளவு கைப்பற்றுவதோ எக் காரணத்தினாலேனும் இயலாவிட்டால், செயல் அதிகாரி குற்றயியல் நீதிபதிக்குமுன் பாக்கிதாரர் மீது வழக்குத் தொடரலாம்.

(3). (1) உள்விதியின்படிக்கான ஆணை, இந்த விதிகளின் 'அ' இணைப்பில் கண்டுள்ள படிவப்படி அல்லது அதுபோன்ற படிவப்படி இருக்க வேண்டும்;

அத்தகைய ஆணை ஒவ்வொன்றுக்காகவும் பதின்மூன்றுக் காசுக் கட்டணம் விதிக்க வேண்டும்.

(4) ஒரு கட்டிடத்தில் கைப்பற்றுவதற்குரிய உடைமை இருக்கிறதென்று ஊர்த் தலைவர் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தாலும், அவர் தமது அதிகாரத்தையும் நோக்கத்தையும் தெரிவித்து உள்ளே விடும்படி முறையாகக் கேட்டும் அவரை உள்ளே போகவிட மாட்டார்கள் என்றிருந்தாலும், அவர், செயல் அதிகாரியின் எழுத்து மூலமான தனி ஆணை ஒன்றைப் பெற்றுக் கொண்டு, உடைமையைக் கைப்பற்றுவதற்காக, சூரியன் உதிப்பதற்கும் சூரியன் மறைவதற்கும் இடையில், அக் கட்டிடத்தில் வெளிப்புற அல்லது உட்புறக் கதவையேனும் சட்டலையேனும் உடைத்துத் திறக்கலாம்.

ஆனால், பெண்கள் புழங்குவதற்காக என்றிருக்கும் அறையில் நுழைய அல்லது அதன் கதவை உடைத்துத் திறக்கத் தாம் கருதியிருப்பதைக் குறித்து அவர் மூன்றுமணி நேர அறிவிப்புக் கொடுத்து, அப் பெண்கள் அங்கிருந்து போய்விடுவதற்கு வாய்ப்புக் கொடுத்தாகிற வரையில், அவர் அப்படி நுழையவுங் கூடாது, உடைத்துத் திறக்கவுங்கூடாது.

27. **உடைமையைக் கைப்பற்றுதல்.**—(1) ஊர்த் தலைவர் உடைமையைக் கைப்பற்றுவதற்குமுன், சேர வேண்டிய வரியையும் ஆணைக் கட்டணத்தையும் செலுத்தும்படிகேட்க வேண்டும். வரியும் கட்டணமும் செலுத்தப்பட்டு விட்டால், உடைமையைக் கைப்பற்றக் கூடாது; ஆனால், வரி அல்லது கட்டணம் செலுத்தப்படாவிட்டால், அந்த அலுவலர்—

(அ) தாம் அவசியமெனக் கருதக்கூடிய பாக்கிதாரரின் அசையும் பொருளை கைப்பற்ற வேண்டும்.

(ஆ) கைப்பற்றப்பட்ட உடைமைக்கு ஒரு பொருட் பட்டியல் தயாரிக்க வேண்டும்.

(இ) கைப்பற்றிய சமயத்தில், கைப்பற்றப்பட்ட உடைமையைத் தம் வசம் வைத்திருப்பவருக்கு, அப்பொருள் பட்டியலின் ஒரு படியையும் இவ்விதிகளின் 'ஆ' இணைப்பில் கண்டுள்ள படிவப் பிரகாரம் அல்லது அது போன்ற படிவப் பிரகாரம் விற்பனை அறிவிப்பையும் கொடுக்க வேண்டும்.

ஆனால், சேர வேண்டிய தொகைகளைச் செலுத்தி, கைப்பற்றப்பட்ட உடைமையை மீட்பதற்காக, ஏழு நாள் அவகாசம் கொடுக்க வேண்டும்.

(2) கைப்பற்றுதல் அளவுக்கு மிஞ்சியதாயிருக்கக் கூடாது; அதாவது, கைப்பற்றப்பட்ட உடைமையின் மதிப்பானது பாக்கிதாரரிடமிருந்து சேர

வேண்டிய வரி, ஆணை, கைப்பற்றுதல், நிறுத்தி வைத்துக் கொள்ளுதல், விற்பனை ஆகியவைகளுக்குத் தொடர்பான எல்லாச் செலவுகள், இவை சேர்ந்த மொத்தத்திற்குக் கூடிய வரையில் சமமாயிருக்க வேண்டும்.

28. *கைப்பற்றப்பட்ட உடைமையை விற்பது.*—(1) வரியினிமித்தம் பாக்கி தாரரிடமிருந்து சேர வேண்டிய தொகையும் ஆணைக் கட்டணமும் கைப்பற்றுதல் கட்டணமும் உடைமையை நிறுத்தி வைத்துக் கொள்வதற்குத் தொடர்பான செலவு 27-ஆவது விதியின்படிக் கொடுக்கப்பட்ட அறிவிப்பில் கண்ட ஏழுநாள் அவகாசத்துக்குள் செலுத்தப்படாமலிருந்து செயல் அதிகாரியும், கைப்பற்றுதல் ஆணையை நிறுத்தி வைக்காவிட்டால், கைப்பற்றப்பட்ட உடைமையானது அதில் போதுமான பாகமாவது, செயல் அதிகாரியின் ஆணைகளின்படி வெளிப்படையாக ஏலத்தில் விற்கப்பட வேண்டும்; செயல் அதிகாரியானவர், விற்று வந்த தொகையை, வரியினிமித்தம் சேர வேண்டிய தொகை ஆணைக் கட்டணம், கைப்பற்றுதல் கட்டணம், உடைமையை நிறுத்தி வைத்துக் கொண்டு விற்பனை செய்ததற்குத் தொடர்பான செலவுகள் ஆகியவற்றைக் கொடுப்பதற்காகப் பயன்படுத்த வேண்டும்; கைப்பற்றிய சமயத்தில் அவ்வுடைமையைத் தம் வசம் வைத்துக்கொண்டிருந்தவருக்கு, மேற்சொன்னவாறு விற்றுவந்த தொகைகளைப் பயன்படுத்திய பிறகு எஞ்சியிருக்கக் கூடிய உடைமையை அல்லது தொகையைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். ஒரு சமயம் விற்றுவந்த தொகையானது வரியினிமித்தம் சேர வேண்டிய தொகை, ஆணைக் கட்டணம், கைப்பற்றுதல் கட்டணம், உடைமையை நிறுத்தி வைத்துக் கொண்டு விற்றதற்குத் தொடர்பான செலவுகள் ஆகியவற்றைக் கொடுப்பதற்குப் போதாவிட்டால், செயல் அதிகாரியானவர், செலுத்தப்படாமல் எஞ்சியிருக்கும் தொகை சம்பந்தமாக 26-ஆவது விதியின்படி மறுபடியும் செயலாற்றத் தொடங்கலாம்.

(2) கைப்பற்றப்பட்ட உடைமை இயல்பாகவே விரைவில் அழுகிப் போக கூடியதாயிருந்தால், செயல் அதிகாரியானவர் சேரவேண்டிய தொகை அதற்குள் செலுத்தப்பட்டாலொழிய மேற்சொன்ன ஏழு நாள் அவகாசம் கழிந்து போவதற்கு முன் எப்போதேனும் அதை விற்றுவிடலாம்.

(3) ஏதேனும் உடைமையைக் கைப்பற்றக் கூடாதென்று, மேற்சொன்ன ஏழு நாள் அவகாசத்திற்குள் செய்துகொள்ளப்படும் ஆட்சேபனையைப் பற்றி செயல் அதிகாரி ஆலோசித்துப் பார்த்து அதைப் பற்றிய விசாரணை நடக்கிற வரையில் விற்பனையைத் தள்ளிப் போடலாம். ஜப்தி செய்யப்பட்ட உடைமை கைப்பற்றுவதற்கு உள்ளாகமாட்டாதென்று செயல் அதிகாரி தீர்மானித்தால், அவர், அதற்கு உரியவராகத் தோன்றும் அவரிடம் அதைத் திருப்பிக்கொடுத்து

விட வேண்டும்; அல்லது அது ஏற்கெனவே விற்றுவிடப்பட்டால் விற்றுவந்த தொகையை அவரிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்; 26-ஆவது விதியின்படி மறுபடியும் செயலாற்றத் தொடங்கலாம்; உடைமையை கைப் பற்றுவதற்கு உள்ளாகமாட்டாதெனப் பாக்கிதாரருக்குத் தெரிந்திருந்தும், வேண்டுமென்றே அதைக் கைப்பற்றிவிட்டார் என்று செயல் அதிகாரிக்குத் தோன்றினல், முதல் கைப்பற்றதலுக்கும் விற்பனைக்கும் சம்பந்தப்பட்ட எல்லாக் கட்டணங்களும் செலவுகளும் பாக்கிதாரரிடமிருந்து வசூலிக்கப்படத் தக்கவையாகும்.

29. கைப்பற்றுதல் கட்டணங்கள்.—(1) கைப்பற்றுதல் கட்டணங்கள், இவ்விதியின் 'இ' இணைப்பில் கண்டுள்ள வீதங்களுக்கு மேற்படாமல், ஊராட்சி நிச்சயிக்கக்கூடிய வீதங்களின்படிச் செலுத்தப்படத் தக்கவையாகும்.

(2) கைப்பற்றப்பட்ட ஏதேனும் உடைமையை நிறுத்தி வைத்துக் கொள்வதற்குத் தொடர்பான செலவுகள் அக் கட்டணங்களில் அடங்கு வதாகக் கொள்ளக் கூடாது.

30. ஊராட்சிப் பரப்புக்குள் கைப்பற்றப்பட வேண்டிய உடைமை.—26-ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியின்படிப் பாக்கிதாரராயுள்ள ஒரு வருடைய உடைமை ஊராட்சிப்பரப்புக்குள் எங்கு காணப்பட்டாலும் அதைக் கைப்பற்றலாம்.

31. வீட்டுவரி செலுத்த அனுபோகதாரருக்குள்ள பொறுப்பு.—ஏதேனும் வீட்டினிமித்தம் சேர வேண்டிய வரி; 26-ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியில் குறிப்பிட்டுள்ள கால அளவின் இறுதியில் முழுவதுமோ சிறிது மட்டிலுமோ செலுத்தப்படாமலிருந்தால், செயல் அதிகாரியானவர், அந்த வரி பன்னிரண்டு மாதத்துக்கு மேற்பட்டுச் செலுத்தப்படாமலிராவிட்டால், பதினைந்து நாட்களுக்குக் குறைவாயிராமல் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் அத் தொகையைச் செலுத்தும்படி, அச் சமயம் அக் கட்டிடத்தின் அனுபோக தாரரைக் கேட்கலாம்; அவ்வுத்தரவின்படி நடக்க அந்த அனுபோகதாரர் தவறிவிட்டால், செயல் அதிகாரியானவர் அக் கட்டிடத்தில் காணப்படும் ஏதேனும் அசையும் பொருளைக் கைப்பற்றி விற்பனை செய்யலாம்; இவ்விதியின் படிச் செய்யப்படும் எல்லாக் கைப்பற்றுதல்களுக்கும் விற்பனைகளுக்கும், முந்திய விதிகளின் ஏற்பாடுகள் தக்க மாற்றங்களுடன் பொருந்தும். ஆனல், அனுபோகதாரர் ஒருவர், உடைமை கைப்பற்றப்படுவதை அல்லது போதுமான அளவு கைப்பற்றப்படுவதை வேண்டுமென்றே தடுத்திருந்தாலொழிய, இவ் விதியின்படி அவரிடமிருந்து வசூலிக்கப்படத்தக்க ஏதேனும் தொகை சம்பந்தமாகக் குற்றச்சாட்டு வழக்குத் தொடரப்பெறுவதற்கோ உரிமையியல் வழக்குகள் தொடரப் பெறுவதற்கோ உள்ளாகமாட்டார்.

32. வரி நிலுவைகளை வசூலிப்பது.—ஒருவரிடமிருந்து சேரவேண்டிய வரி, 26-ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற காலத்தின் இறுதியில் முழுவதுமோ சிறிதுமட்டிலுமோ செலுத்தப்படாமலிருந்து அவர் இந்தியாவிலிருந்து போய்விட்டிருந்தால் அல்லது காணப்படாவிட்டால், மேற்படி வரியும் அல்லது அதில் செலுத்தப்படாமலிருக்கிற பாகமும், அது சம்பந்தமாகச் செலுத்தப்படத்தகக எலலாத் தொகைகளும், நிலவரிப் பாக்கியைப் போல் வசூலிக்கப்படத்தக்கவையாகும்.

33. தண்டம் விதிப்பது.—(1) 26-ஆவது விதியைச் சேர்ந்த (2) உள் விதியின்படி வழக்குத் தொடரப்பெறும் ஒவ்வொருவரும், தாம் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்த, வேண்டுமென்றே தவறிவிட்டாரென்று அல்லது உடைமை கைப்பற்றப்படுவதை அல்லது போதுமான அளவு கைப்பற்றப்படுவதை அவர் வேண்டுமென்றே தடுத்தாரென்று குற்ற விசாரணை நீதிபதிக்கு யஜமற மெய்ப்பிக்கப்படுவதன் பேரில்—

(அ) வரி, ஏதாவது ஆணைக் கட்டணம்.

(ஆ) உடைமை கைப்பற்றப்பட்டிருந்தால், கைப்பற்றுதல் கட்டணம், கைப்பற்றப்பட்ட உடைமை நிறுத்தி வைத்துக்கொண்டு விற்கப்பட்டிருந்தால் அதன் தொடர்பான செலவுகள் ஆகியவைகளினிமித்தம் அவர் செலுத்த வேண்டியிருக்கக்கூடிய தொகையைப்போல் இரண்டு மடங்குக்கு மேற்படாமல் தண்டம் செலுத்துவதற்குட்பட்டவராவார்.

(2) எவரேனும் (1) உள்விதியின்படி ஒரு குற்றம் செய்தாரென்று தீர்மானிக்கப்பட்டால், குற்றவியல் நீதிபதி, விதிக்கப்படக்கூடிய தண்டத்துடன், (1) உள்விதியின் (அ), (ஆ) பகுதிகளில் குறிப்பிட்டிருக்கிற தலைப்புகளின் கீழ்ச் சேர வேண்டிய தொகைகளைச் சுருக்குவகையாக வசூலித்து ஊராட்சிக்குக் கொடுத்துவிட வேண்டும், மேலும் தமக்கு யுக்தமாகத் தோன்றினால், வழக்குத் தொடருவதற்குப் பிடித்த செலவுத் தொகையைத் தாம் நிச்சயிக்கக் கூடியவாறு சுருக்க வகையாக வசூலித்து ஊராட்சிக்குக் கொடுக்கலாம்.

34. கைப்பற்றப்பட்ட உடைமையைச் சிலவற்றில் வாங்குவதற்குத் தடை.—செயல் அதிகாரியாவது ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் எவராவது, முந்திய விதிகளின்படி நடத்தப்படும் கைப்பற்றப்பட்ட உடைமையின் விற்பனையின்போது ஏதேனும் உடைமையை நேரடியாகவோ மறைமுகமாகவோ வாங்கக்கூடாது.

இணைப்பு அ.

கைப்பற்றுதல் ஆணை.

[25 (3) விதியைப் பார்க்கவும்]

ஆணை எண்.

பெறுபவர்

(ஆணையை நிறைவேற்றும் பொறுப்பு ஒப்புவிக்கப்பெற்றுள்ள அலுவலரின் பெயர்.)

(இன்ன வரி அல்லது வரிகள் சேரவேண்டுமென்பதையும் குறிப்பிட வேண்டிய இடமிருந்தால் இன்ன இடம் சம்பந்தமாக அந்த வரி அல்லது வரிகள் சேர வேண்டுமென்பதையும் எழுதவும்.)

19 யோடு முடிவடைந்த

காக மேற்குறிப்பிட்ட வரி அல்லது வரிகளினிமித்தம் சேர வேண்டிய ரூபாய் காசு உள்ள தொகையைச் செலுத்தும் படி ன் என்பவரை முறைப்படி கேட்டிருந்தும், அத்தொகையை மேற்படி என்பவர் செலுத்தாமலிருக்கிறபடியாலும், அல்லது அவ்வாறு செலுத்தாதிருப்பதற்குப் போதுமான காரணம் காட்டாதிருக்கிறபடியாலும், அவ்வாறு கேட்டதிலிருந்து பதினைந்துநாள் கழிந்துபோய் விட்டிருக்கிறபடியாலும், இதனால் உமக்குக் கட்டளையிடுவது என்னவென்றால், மேற்படி ரூபாய் காசு உள்ள தொகையையும் ஆணைக் கட்டணத்துக்காகப் பதிமூன்று காசையும் நீர் கேட்க வேண்டும்; அவர் அவற்றைச் செலுத்தத் தவறினால், மேற்படி ரூபாய் காசு உள்ள தொகை, ஆணைக் கட்டணத்துக்காகவும் கைப்பற்றுதல் கட்டணத்துக்காகவும் ரூபாய் காசு—மேற்சொன்னவாறு கைப்பற்றப்பட்ட உடைமையை வைத்திருந்து விற்பதற்குப் பிடிக்கும் செலவுகளைக் கொடுப்பதற்கு அவை போதுமானவையாயிருக்க வேண்டும்—இவையெல்லாம் சேர்ந்த மொத்தத் தொகையளவுக்கு மேற்படி என்பவரின் சாமான்களையும் தட்டுமுட்டுப் பொருள்களையும் (அல்லது சூழ்நிலைக்கு ஏற்றவாறு மேற்குறித்த இடத்தில் காணப்படும் எவையேனும் சாமான்களையும் தட்டுமுட்டுப்பொருள்களையும்) நீர் கைப்பற்ற வேண்டும்; அவ்வாறு கைப்பற்றியதற்குப் பிறகு அடுத்த ஏழு நாட்களுக்குள் மேற்படி வரி

அல்லது வரிகளினிமித்தம் கட்டணங்களினிமித்தமும் சேர வேண்டிய தொகையும், அதோடுகூட, அவ்வாறு கைப்பற்றியதை வைத்திருக்கும் செலவுகளைக் கொடுப்பதற்குப் போதுமானதாயிருக்கக்கூடிய கூடுதலான தொகையும் செலுத்தப்படாவிட்டால், இனிமேல் என்னால் பிறப்பிக்கப்படப் போகிற ஆணைகளின்படி மேற்படி சாமான்களையும் தட்டுமுட்டுப் பொருள் களையும் விற்று, கைப்பற்றப்பட்ட உடைமையை விற்றுவந்த தொகையை ஊராட்சி அலுவலகத்துக்கு அனுப்பிவிட வேண்டும்; இதிலிருந்து மேற்படி வரி அல்லது வரிகளினிமித்தமும் கட்டணங்களினி மித்தமும் சேர வேண்டிய தொகையாகிய ரூபாய் காசும், கைப்பற்றியதை அவ்வாறு வைத்திருந்து விற்றதற்குப் பிடிக்கும் செலவுகளும் கழிக்கப்பட்டு, மேற்படி நிதிக்கு வரவு வைக்கப்படும்; மீறி ஏதேனும் இருந்தால் அது, கைப்பற்றப்பட்ட சாமான்களுக்கும் தட்டுமுட்டுப் பொருள்களுக்கும் சொந்தக்காரருக்குத் திருப்பிக் கொடுத்துவிடப்படும். மேற்படி என்பவரின் சாமான்களையும் தட்டுமுட்டுப்பொருள் களையும் கைப்பற்ற முடியாதென்று அல்லது போதுமான அளவுக்குக் கைப்பற்ற முடியாதென்று தெரிய வந்தால், அதை நீர் எனக்குச் சான்றிட்டு, அதையும் இந்த ஆணையையும் எனக்கு அனுப்ப வேண்டும்.

இடம்:

தேதி: 19 .

(செயல் அதிகாரியின் கையெழுத்து.)

இணைப்பு ஆ.

பொருள் பட்டியல் படிவமும் விற்பனை அறிவிப்பும்.

[26 (1) (இ) விதியைப் பார்க்கவும்.]

(கைப்பற்றப்பட்ட சாமான்கள், தட்டுமுட்டுப் பொருள்கள் பற்றிய விவரங்களைக் கண்டெழுதவும்.)

உமக்கு அறிவிப்பது என்னவென்றால், 19 யோடு முடிவாகும் காக, ஓத்தில் சொல்லப்பட்ட வரி அல்லது வரிகளினிமித்தம் சேர வேண்டிய ரூபாய் காசு உள்ள தொகைக்காக, மேற்காட்டிய பட்டியலில் குறிப்பிட்டிருக்கிற சாமான்களையும் தட்டுமுட்டுப் பொருள்களையும் நான் இன்று கைப்பற்றியிருக்கிறேன்; சேர

வேண்டிய தொகைகளையும், ஆணைக் கட்டணத்தையும், கைப்பற்றுதல் கட்டணத்தையும், சாமான்கள் தட்டுமுட்டுப் பொருள்களை வைத்திருப்பதற்கான செலவையும், இந்த அறிவிப்பின் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் ஊராட்சி அலுவலகத்தில் நீர் செலுத்தினாலன்றி, மேற்படி சாமான்களும் தட்டுமுட்டுப் பொருள்களும், 19 ஆண்டு மாதம் நாள் அன்று, ஊராட்சி அலுவலகத்திலாவது, செயல் அதிகாரி கட்டளையிடக்கூடிய வேறிடத்திலாவது விற்கப்படும்; அச்சாமான்களும், தட்டுமுட்டுப் பொருள்களும் இயல்பாகவே விரைவில் அழுகிப் போகக்கூடியவையாயிருந்தால், முன்னதாகவே ஒரு தேதியன்று அவைகள் விற்கப்படலாம்.

இடம் :

தேதி : 19 .

(கைப்பற்றுதல் ஆணையை நிறைவேற்றுகிற அலுவலரின் கையெழுத்து.)

இணைப்பு இ

கைப்பற்றுவதற்குச் செலுத்தப்படத்தக்க பெருமக் கட்டண அட்டவணை.

[29 (1) விதியைப் பார்க்கவும]

இன்ன தொகைகளுக்காகக் கைப்பற்றப் படுகிறதென்பது	கட்டணங்கள் ரூ.காசு.
1 ரூபாய்க்குட்பட்டு	0.25
1 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 5 ரூபாய்க்குட்படட்டும்.	0.50
5 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 10 ரூபாய்க்குட்பட்டும்.	1.00
10 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 15 ரூபாய்க்குட்பட்டும்.	1.50
15 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 20 ரூபாய்க்குட்பட்டும்.	2.00
20 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 25 ரூபாய்க்குட்பட்டும்.	2.50
25 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 30 ரூபாய்க்குட்பட்டும்.	3.00
30 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 35 ரூபாய்க்குட்பட்டும்.	3.50
35 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 40 ரூபாய்க்குட்பட்டும்.	4.00
40 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 45 ரூபாய்க்குட்பட்டும்.	4.50
45 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 50 ரூபாய்க்குட்பட்டும்.	5.00
50 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 60 ரூபாய்ககுட்பட்டும்.	6.00

இன்ன தொகைகளுக்காகக் கைப்பற்றப்பட்டதென்று.	கட்டணங்கள் ரூ. காசு.
60 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 80 ரூபாய்க்குட்பட்டும்	7.50
80 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் 100 ரூபாய்க்குட்பட்டும்	9.00
100 ரூபாயும் அதற்கு மேற்பட்டும்	10.00

கைப்பற்றப்பட்ட உடைமைக்குப் பொறுப்பாக ஏவலர்கள் அமர்த்தப் பட்டாலன்றி, மேற்படி கட்டணத்தில் எல்லாச் செலவுகளும் அடங்கும்; ஏவலர்கள் அமர்த்தப்பட்டால், ஏவலர் ஒவ்வொருவருக்கும் அன்றாடம் பத்தொன்பது காசு கொடுக்க வேண்டும்.

(1963 மே 21 ஆம் தேதிய 1136 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(81) செயல் அலுவலர்கள் நியமிக்கப்பெற்றுள்ள ஊராட்சிகளில் ஒவ்வொரு மாதத்திலும் வரி செலுத்துவோருக்கு வழங்கப்படும் அசல் பற்றுச்சீட்டுகளில் குறைந்தது 5 சதவீதத்தையும், அதோடுகூட, 30 ரூபாயும் அதற்கு மேற்பட்டு முள்ள மதிப்பீடுகள் எல்லாவற்றுக்கும் சம்பந்தப்பட்ட பற்றுச்சீட்டுகளையும், செயல் அலுவலர்கள் அம்மாதத்தில் ஒப்பிட்டுப் பார்த்து, அவ்வாறு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்ட பற்றுச்சீட்டுகள் பற்றிய பதிவு ஒன்றை அவர்கள் வைத்துவர வேண்டும். கோட்ட ஊராட்சி அலுவலர்களுக்கு துணை ஊராட்சி அலுவலர் களும் அத்தகைய ஊராட்சிகளைப் பொறுத்தவரை பற்றுச்சீட்டுகளைச் சோதனைக் காகச் சரிபார்க்க வேண்டியதில்லை; ஆனால், அவர்கள் பார்வையிட வரும் காலங்களில் இந்த விளக்க உரையின்படி செயல் அலுவலர்கள் பற்றுச் சீட்டுகளைச் சரிபார்த்தார்களா எனக் கண்டறிய வேண்டும்.

(1948 மே 14 ஆம் தேதிய 945 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(82) ஊராட்சி வரிகளின் மதிப்பீடுகளை மிக அண்மையிலுள்ள காலணாவாக முழுமையாக்கலாம்.

(1949 மார்ச் 9 ஆம் தேதிய 464 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(83) ஒரு ஊராட்சியின் செயல் அதிகாரி ஐம்பது பைசா கட்டணம் செலுத்தி விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்பேரில், வீட்டுவரி மதிப் பீட்டுக் கணக்கிலிருந்து வேண்டியிருக்கிற கட்டிடத்தின் வாடகை மதிப்பைக்

காட்டுகிற பகுதியின் சான்றிட்ட படி ஒன்றை விண்ணப்பதாரருக்குக் கொடுக்க வேண்டும்.

(1946 செப்டம்பர் 30 ஆம் தேதியிட்ட 3741 ஆம் எண் வளர்ச்சித் துறை அரசு ஆணை.)

(1952 பெப்ரவரி 26 ஆம் தேதி 27 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(84). 20 (1) விதியில் குறிப்பிட்டிருக்கிற, வரி செலுத்தும்படிக் கேட்கும் தேதியை, மேல் முறையீடுகளைத் தாக்கல் செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட 15 நாட்களைக் கணக்கிடுகையில் விலக்கிவிட வேண்டும்.

(1953 ஜூன் 30 ஆம் தேதிய 1414 ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(85)(விகிதாசாரப்படிக்கான வரி விதிப்பு.—ஆண்டு மதிப்பில் 6 சத வீத விகிதாசார வீதத்தை ஊராட்சி நிச்சயித்திருக்கிறதென்று வைத்துக் கொள்வோமானால், கணித முறையில் கணக்கீட்டையும் வசூலையும் எளிதாக்கும் பொருட்டு, அது வீடுகளை ஆறுக்குக் குறையாத வகைகளாகத் தொகுக்கலாம். விகிதாசார வரி விதிப்புக் கோட்பாட்டின் முக்கிய கூறுகளைப் பாதிக்காத விதத்தில் அந்த வகைகளை அமைக்க வேண்டும். எடுத்துக் காட்டாக வகைப்பாடு அடியிற் கண்டவாறு இருக்கலாம் :—

வகை.	ஆண்டு மதிப்பு.				6 சத வீதப்படி வரி.	
					ரூ.	பை.
I	20	ரூபாய்க்கு மேற்பட்டு	75-க்கு	மேற்படாமல்	4	50
II	75	,,	150	,,	9	00
III	150	,,	200	,,	12	00
IV	200	,,	300	,,	18	00
V	300	,,	400	,,	24	00
VI	400	,,	500	,,	30	00

என்று இப்படியே வகைகள் ஐந்துக்கு மேற்பட்டு எத்தனையாகவேனும் இருக்கலாம்.

வீடுகளில் முதற்பொருள் மதிப்பீட்டின் மீது மதிப்பிடுவதற்குக் கூட அதே மாதிரியான வகைப்பாட்டைப் பின்பற்றலாம்.

முன்னேறு வரி விதிப்பு.—இந்த வரி விதிப்பு முறைப்படி, ஊராட்சி நிச்சயிக்க வேண்டிய விதங்கள், வீட்டின் மதிப்பிற்கேற்ப முறைப்படி பெருகிக் கொண்டே போக வேண்டும்; வீட்டின் மதிப்பு பெருகுந்தோறும் எச்சந்தர்ப்பத்திலும் குறையக் கூடாது.

வரிக்கு உட்படாத எந்தக் தொகையை ஒவ்வொரு வீட்டின் மதிப்பீட்டிலிருந்தும் கழித்துக் கொள்ள வேண்டுமென்பதை ஊராட்சி நிச்சயிக்க வேண்டும். படி முறை வளர்ச்சியானது, குறைந்த வகையில் குறிப்பிட்ட சத வீதத்திலிருந்து தொடங்கி, மிக உயர்ந்த வகையில் குறிப்பிட்ட சத வீதத்தை நோக்கிப் போக வேண்டுமென விதிக்க வேண்டும். பிறகு ஊராட்சி முன்னேறு வரி விதிப்புக் கோட்பாடு முக்கிய கூறுகளில் பாதிக்கப்படாத வகையில் வீடுகளை வகைப்படுத்தி, ஊராட்சி ஏற்படுத்திய சதவிதங்களுக்குட்பட்டு ஒவ்வொரு வகைக்கும் சத வீதம் ஒன்றை நிச்சயிக்க வேண்டும். அத்தகைய வகைளின் எண்ணிக்கை ஆறுக்குக் குறையாமலிக்க வேண்டும்.

வீடுகளில் மீதான வரியானது, குறைந்த வகையில் ஆண்டு மதிப்பில் 5 சத வீதத்திலிருந்து தொடங்கி, மிக உயர்ந்த வகையில் ஆண்டு மதிப்பில் 8 சத வீதத்தை நோக்கி வளர்ந்துகொண்டு போக வேண்டுமென ஊராட்சி தீர்மானித்திருப்பதாக வைத்துக் கொள்வோமேயானால், ஊராட்சி அடியிற்கண்ட வகைகளை நிச்சயிக்கலாம்; வீதமானது ஒவ்வொரு வகைக்கும் அரைச் சத விதம் பெருக்கிக் கொண்டுபோகும் :—

வகை.	ஆண்டு மதிப்பு.	வரியின் சதவீதம்.	வரித்தொகை.
(1)	(2)	(3)	(4)
	ரூ.		ரூ.
I	1 முதல் 100 வரை	5	5
II	101 முதல் 200 வரை	$5\frac{1}{2}$	11
III	201 முதல் 300 வரை	6	18
IV	301 முதல் 400 வரை	$6\frac{1}{2}$	26
V	401 முதல் 500 வரை	7	35
VI	501 முதல் 600 வரை	$7\frac{1}{2}$	45
VII	601 முதல் 700 வரை	8	56

மூதற்பொருள் மதிப்பு அடிப்படையின் மதிப்பீடுகளில்கூட, அதே மாதிரி வகைப்பாட்டினை மேற்கொள்ள வேண்டும்.

இங்கு குறிப்பிடவேண்டியது மேலே காட்டின வகைகளும் விதங்களும் உதாரணத்திற்காகக் கணக்கிடப்பட்ட எடுத்துக்காட்டுகளேயாகும்; வரி விதிப்புக் கோட்பாடுகள் முக்கிய கூறுகளில் பாதிக்கப்படாமலிருக்கிற வரையில் ஊராட்சி வேறு எந்த முறையையேனும் மேற்கொள்ளலாம்.

(1931 டிசம்பர் 1 ஆம் தேதிய 4369 ஆம் எண் உள்ளூர் நகராட்சித் துறை அரசு ஆணை.)

(86) ஊராட்சிகளிலுள்ள இருப்புப்பாதைச் சொத்துக்களை வீட்டுவரிக்காக மதிப்பிடும்போது பின்வரும் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்:—

(i) 1950 சனவரி 25 ஆம் தேதிக்குப் பிறகு மைய அரசாங்கத்தினரால் அடையப்பட்ட இருப்புப்பாதைச் சொத்துக்கள் உள்ளூர் வரிகளினின்றும் விலக்களிக்கப்பெற்றதாகும்.

(ii) மைய அரசாங்கத்தாருக்கு உரித்தாயிருந்து, 1950 சனவரி 25 ஆம் தேதியன்று வரிகளுக்கு உட்பட்டவையாயிருந்திராத இருப்புப்பாதைச் சொத்து வரிகளினின்றும் விலக்களிக்கப் பெற்றதாகும்.

(iii) 1950 சனவரி 25 ஆம் தேதிக்குப் பிறகு கட்டப்பட்ட இருப்புப் பாதைக் கட்டிடங்கள் உள்ளூர் வரிகளினின்று விலக்களிக்கப் பெற்றவையாகும்.

(iv) கட்டிடங்கள் முழுவதும் அல்லது அனேகமாக முழுவதும் இடிந்து விடப்படுவனவற்றில் அவைகளுக்குப் பதிலாக 1950 சனவரி 25 ஆம் தேதிக்குப் பிறகு பதிதாய்க் கட்டப்படும் இருப்புப்பாதைக் கட்டிடங்கள் வரிகளினின்றும் விலக்களிக்கப் பெற்றவையாகும்.

(v) 1950 சனவரி 25 ஆம் தேதிக்குப் பிறகு இருப்புப்பாதைக் கட்டிடங்களுடன் சேர்க்கப்படும் விரிவாக்கும் வரிகளினின்றும் விலக்களிக்கப் பெற்றவையாகும்.

(vi) போதுமான அளவில் செப்பனிடுவதற்காகச் சிறிதுமட்டில் இடித்துவிடுவது அவசியமாயிருக்கும்போது, அவ்வாறு இடித்துவிடப்பட்ட இருப்பப்பாதைக் கட்டிடங்கள் அவ்வாறு இடித்துவிடுவதன் விளைவாக, கட்டிடத்தின் வரி விதிப்பு மதிப்பு அதிகப்படுவதனால், வரித் தொகை அதிகரிக்கலாமென்றிருந்த போதிலும் அவைகள் தொடர்ந்து வரி விதிக்கப்பெறுவதற்கு உட்பட்டவையாயிருந்து வரும்.

(vii) மேம்பாடு தரும் மாறுபாடுகள்; மேம்பாடு தருவதற்குச் சிறிதுமட்டில் இடித்துவிடப்படுபவைகளும் 1950 சனவரி 25 ஆம் தேதிக்குப் பிறகு செய்யப்பட்டால், ஒவ்வொன்றிலும் வரி விதிக்கப் பெறுவதற்கு உட்படும்

நிலையானது, இறுதியான நிலையில் அந்தச் சொத்து முக்கிய கூறுபாடுகளில் முதலில் உரித்தாயிருந்த அதே சொத்தாக இல்லையா என்பதைப் பொறுத்த தாகும்.

(Viii) 1950 சனவரி 25 ஆம் தேதியன்று வரி விதிக்கப் பெறுவதற்கு உள்ளாயிருந்த கட்டிடங்கள் சம்பந்தமாக, 1948 எப்ரல் 1 ஆம் தேதி முதல் உயர்த்தப்பட்ட வீதங்களின்படி வரி செலுத்த இந்திய அரசாங்கத்தார் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

மைய அரசாங்கத்தாரின் இருப்புப்பாதைச் சொத்துகள் சம்பந்தமாகப் பணிக் கட்டணங்கள் செலுத்துவதில் பின்வரும் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டும்; நீர் வரியும் வடிகால் வரியும் :—

(அ) ஓர் இருப்புப் பாதையின் ஆட்சித் துறையின் நேரடியாக நன்மை எதுவும் பெறாவிட்டால்—வரியில் மூன்றில் ஒரு பங்கு.

(ஆ) ஓர் இருப்பப்பாதையின் ஆட்சித் துறையினர் சிறிதுமட்டும் நன்மையே பெற்றால்—வரியில் பேர்ப்பாதி.

(இ) ஓர் இருப்புப் பாதையின் ஆட்சித் துறையினர் முழு நன்மையும் அடைந்தால்—முழு வரி.

துப்புரவு வரி—

(அ) ஓர் இருப்புப்பாதையின் ஆட்சித் துறையினர் தங்கள் இடத்தி லிருந்து குப்பை கூளம், கழிவுப் பொருள் முதலியவற்றை அன்றாடம் அகற்றித் தீர்வு செய்வதற்குத் தாங்களே திறமையான ஏற்பாடுகள் செய்திருந்தால்—வரி இல்லை.

(ஆ) அந்த இருப்புப்பாதையின் ஆட்சித் துறையினர் கழிவுப் பொருள் முதலியவற்றை அகற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்திருந்து, ஆனால், அவற்றை முடிவாகத் தீர்வு செய்வதற்கு உள்ளாட்சி அதிகாரிகளுக்குப் பொறுப்பு வாய்ந்த தாயிருந்தால்—வரியில் பேர்ப்பாதி.

விளக்கு வரி—

(அ) இருப்புப்பாதையின் ஆட்சித் துறையினர் தங்கள் இடங்களுக்கு விளக்கு போட உள்ளாட்சி அதிகாரிகளிடமிருந்து மின் ஆற்றலை எடுத்துக் கொள்ளவில்லையென்றாலும், இருப்புப்பாதை நிலையத்துக்குச் செல்லும் சாலை களில் கூட உள்ளாட்சி அதிகாரிகள் விளக்குப் போடவில்லை என்றாலும்—வரி இல்லை.

(ஆ) இருப்புப்பாதையின் ஆட்சித் துறையினர் தங்கள் இடங்களுக்கு விளக்குப் போட உள்ளாட்சி அதிகாரிகளிடமிருந்து மின் ஆற்றலை எடுத்துக் கொள்ளவில்லையென்றாலும், இருப்புப்பாதை நிலையத்துக்குச் செல்லும் சாலைகளில் உள்ளாட்சி அதிகாரிகள் விளக்குப் போட்டிருந்தால்—வரியில் பேர்ப்பாதி

(இ) இருப்புப்பாதையின் ஆட்சித் துறையினர் தங்கள் இடங்களில் விளக்குப் போட உள்ளாட்சி அதிகாரிகளிடமிருந்து மின் ஆற்றலை எடுத்துக் கொண்டால்—முழு வரியும், மின் ஆற்றலுக்குரிய கட்டணமும்.

(1951 ஆம் ஆண்டு 26 ஆம் தேதிய 1280 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(1954 அக்டோபர் 8 ஆம் தேதிய 1386 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(1954 நவம்பர் 22 ஆம் தேதிய 1628 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(87) **இருப்புப்பாதைச் சொத்துக்கள் அல்லாத வேறு மைய அரசாங்கச் சொத்துக்களின் மதிப்பீடு.**—1937 ஏப்ரல் 1 ஆம் தேதிக்கு முன் அரசாங்கக் கட்டிடங்களாக இருந்த கட்டிடங்களைப் பொறுத்தமட்டுமே அத் தேதிக்கு முன் செலுத்தப்பட்டு வந்த வரிகளைச் செலுத்துவதற்கான பொறுப்பை மாத்திரம் இந்திய அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். 1937 ஏப்ரல் 1 ஆம் தேதியன்று இருந்த எந்தக் கட்டிடங்களுக்கு வரிகள் விதிக்கப்பட்டனவோ அவைகளுக்கு மேம்பாடு தரும் மாறுதல்கள், சேர்க்கைகள் பற்றிய வரிகள் செலுத்தத் தாங்கள் உட்பட்டவர்கள் அல்லர் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 1937 ஏப்ரல் 1 ஆம் தேதிக்கு முன் வரி விதிக்கப் பெறுவதற்கு உட்பட்டிருந்த தங்கள் கட்டிடங்கள் பற்றி 1948 ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் உயர்த்தப்பட்ட வரிகளைச் செலுத்த இந்திய அரசாங்கத்தார் இப்போது ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய சொத்துக்களின் மதிப்பு பொதுவாக உயர்ந்துவிட்டதனால் அல்லது சம்பந்தப்பட்ட ஊராட்சியின் ஆட்சி வரம்புக்குட்பட்ட எல்லாச் சொத்துக்களுக்கும் பொருந்தத்தக்க வரி விதிப்பு வீதம் பொதுவாக உயர்ந்துவிட்டதனால் அவ்வாறு உயர்த்தப்பட்ட வரிகளைச் செலுத்த வேண்டியிருந்தால் மட்டும் அப்படிச் செலுத்த ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

(1949 அக்டோபர் 25 ஆம் தேதிய 2200 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(1954 அக்டோபர் 8 ஆம் தேதிய 1386 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

விதிகள்.

வரிகளை மதிப்பிடுவதும் வசூலிப்பதும்.

அ. எல்லா வரிகளுக்கும் பொதுவான வரிகள்.

1. விதிகள் பொருந்துதல்.—இவ் விதிகள் பேரூராட்சிகளுக்கு மாத்திரம் பொருந்தும்.

2. வரியை நிச்சயிப்பது.—இவ் விதிகளில் வேறுவிதமாகச் சொல்லப் பட்டிருந்தாலன்றி மற்றப்படி, ஒவ்வொருவரும் அல்லது ஒவ்வோர் சொத்தின் மேலும் செலுத்துவதற்குரிய வரியைச் செயல் அதிகாரி நிச்சயிக்க வேண்டும்.

ஆனால், செயல் அதிகாரியால் செலுத்தப்படத்தக்க வரிகளைப் பொறுத்த வரை அவைகளை ஊராட்சி மதிப்பிட வேண்டும்.

3. மதிப்பீட்டைத் திருத்துவதற்கான அதிகாரம்.—(அ) ஒருவரைப்பற்றி அல்லது ஓர் சொத்தைப் பற்றிப் போதுமான மதிப்பீடு செய்யப்படவில்லை யென்று அல்லது ஒரு வரிக்குத் தொடர்பான மதிப்பீட்டுக் கணக்குகளிலிருந்து கவனக் குறைவாக அல்லது முறையின்றி அவர் விட்டுவிடப்பட்டிருக்கிறார் அல்லது அது விட்டுவிடப்பட்டிருக்கிறது என்று அல்லது அக் கணக்குகளில் ஏதேனும் எழுத்துப் பிழை அல்லது கணக்குத் தவறு ஏற்பட்டிருக்கிறதென்று எப்போதேனும் ஊராட்சிக்குத் தெரியவந்தால், தாங்கள் நியாயம் அல்லது அவசியம் எனக் கருதும் விதமாக அந்தக் கணக்குகளைத் திருத்தும்படி அவர்கள் செயல் அதிகாரிக்குக் கட்டளையிடலாம்.

ஆனால், அத்தகைய ஒரு கட்டளையினால் மதிப்பீட்டை உயர்த்த வேண்டி யிருந்தால் கருதியுள்ளவாறு மதிப்பீட்டுக் கணக்குகளை ஏன் திருத்தக் கூடா தென்பதற்கு ஊராட்சிக்குக் காரணம் காட்ட சம்பந்தப்பட்டவருக்கு நியாய மான வாய்ப்பு அளிக்கப்பட்டாலன்றி மற்றப்படி, அவ்வாறு கட்டளையிடக் கூடாது.

(ஆ) அத் திருத்தமானது, நடப்பு அரையாண்டிலாவது அதற்கு அடுத்து முந்திய இரண்டு அரையாண்டுகளிலாவது, திருத்தத்தை நியாயமானதாக்கும் சூழ்நிலைகள் ஏற்பட்டிருந்த மிக முந்தியதான தேதியிலிருந்து அமலுக்கு வரத் தொடங்கியிருப்பதாகக் கருதப்படும்.

4. வரி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு.—(1) செயல் அதிகாரியானவர் வரி செலுத்தும் ஒவ்வொருவரும், தாம் கையெழுத்துச் செய்திருக்கிற அல்லது

இதன் பொருட்டுத் தம்மிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்றுள்ள ஒருவர் கையெழுத்து செய்திருக்கிற அதற்கான பற்றுச்சீட்டு ஒன்றைக் கொடுக்க வேண்டும்.

(2) பற்றுச்சீட்டில் அடியிற் கண்டவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் :—

(அ) அது வழங்கப்பட்ட தேதி ;

(ஆ) அது வழங்கப் பெற்றுள்ளவர் பெயர் ;

(இ) இன்னவரி பற்றிய தொகை செலுத்தப்பட்டிருக்கிறதென்பது ;

(ஈ) இன்ன கால அளவுக்காகத் தொகை செலுத்தப்பட்டிருக்கிறதென்பது ;

(உ) செலுத்தப்பட்ட தொகை.

ஆ. வீட்டு வரி மதிப்பீடு.

5. வீட்டு வரி மதிப்பீட்டு வீதம்.—வீடுகளின் ஆண்டு மதிப்பைக் கொண்டாவது முதற்பொருள் மதிப்பைக் கொண்டாவது வீட்டு வரிக்காக அவைகளை மதிப்பிட ஊராட்சி தீர்மானித்தால், ஊராட்சி நிச்சயிக்கும் விதங்கள், ஒவ்வொரு வீட்டின் மதிப்புக்கு விகிதாசாரப்படி இருக்கலாம் அல்லது அந்த வீட்டின் மதிப்பக்கேற்பப்படி முறை வளர்ச்சியில் அதிகமாகிக் கொண்டு போகலாம் : ஆனல் வீட்டின் மதிப்பு அதிகமாகிக் கொண்டு போகும் போது அவைகள் எந்நிலையிலும் குறைந்து வரக்கூடாது.

6. வீடுகளின் வகைபாடு.—(1) விகிதாசாரப்படியுள்ள வீதம் ஒன்றை ஊராட்சி மேற்கொண்டால், வரியைக் கணக்கிட்டு வசூலிப்பதை எளிதாக்கும் பொருட்டு, அது நகரத்திலுள்ள வீடுகளை வகைகளாகத் தொகுதிப்படுத்தலாம்.

(2) படி முறை வளர்ச்சி வீதம் ஒன்றை ஊராட்சி மேற்கொண்டால் அது (i) வகைப்பாட்டின் கோட்பாடுகளை நிர்ணயிக்க வேண்டும். (அதாவது வரி இல்லாத குறிப்பிட்ட ஒரு தொகையை ஒவ்வொரு வீட்டின் மதிப்பீட்டிலிருந்தும் கழித்துவிட வேண்டும் அல்லது படிமுறை வளர்ச்சியானது, மிகக் குறைந்த வகையில் குறிப்பிட்ட சதவீதத்திலிருந்து மிக உயர்ந்த வகையில் குறிப்பிட்ட சத வீதம் வரையில் ஏறிக்கொண்டு போக வேண்டும் என்பது போன்றவை) மேலும் (ii) வகைகளின் சரியான எண்ணிக்கையும் ஒவ்வொரு வகையின் வரையறைகளையும் நிச்சயிக்க வேண்டும்.

(3) ஊராட்சி மேற்கண்ட இரண்டு முறைகளில் எதிலேனும், விகிதாசார வரி விதிப்புக் கோட்பாடாவது படி முறை வளர்ச்சி வரி விதிப்புக் கோட்பாடாவது வரி விதிப்புக் கொள்கைகளைப் பாதிக்கப்படும் விதத்தில் வகைகளை அமைக்கக்கூடாது; எந்தச் சந்தர்ப்பத்திலும் வகைகளின் எண்ணிக்கை ஆறுக்குக் குறைவாயிருக்கக் கூடாது.

(4) முதன் முறையாக வரி ஒன்றை விதிப்பதற்காக அல்லது ஏற்கெனவேயுள்ள ஒரு வரியின் விதத்தை அதிகப்படுத்துவதற்காக, தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்குமுன், ஊராட்சி, தான் அவ்வாறு கருதியிருப்பது பற்றிய அறிவிப்பு ஒன்றைக் குறைந்தது ஒரு தமிழ்ச் செய்தித்தாளிலும் ஊராட்சி அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையிலும் ஊராட்சி எல்லைகளுக்குள் ஊராட்சி குறிப்பிடக் கூடிய வேறு இடங்களிலும், தண்டோரா போட்டும் வெளியிட வேண்டும்; ஆட்சேபணைகளை அனுப்புவதற்காக ஒரு மாதத்துக்குக் குறையாத நியாயமான கால அளவை நிச்சயிக்க வேண்டும், குறிப்பிட்ட காலத்துக்குள் ஆட்சேபணைகள் வந்தால் அவைகளைப் பற்றி ஆலோசனை பண்ண வேண்டும்.

7. **வீட்டு வரி மதிப்பீட்டுப் பட்டியலைத் தயாரிப்பது.**—செயல் அதிகாரி உத்தரவிடுவதன் பேரில், பேரூரில் (நகரில்) அடங்கியுள்ள பரப்பில் விசாரணை அதிகாரமுடைய கர்ணம், அப் பரப்பிலிருக்கிற எல்லா வீடுகளுக்கும் பட்டியல் ஒன்றைத் தயாரித்து அவருக்கு அனுப்பவேண்டும்; வீடுகளின் சொந்தக்காரர்களின் அனுபோகதாரர்களின் பெயர்களை அப் பட்டியலில் எழுத வேண்டும்.

(2) அத்தகைய பட்டியல் தயாரிப்பதற்காக, மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்புக்கு உட்பட்டு நிச்சயிக்கக் கூடிய ஊதியத்தைப் பெறக் கர்ணம் உரிமை உள்ளவராவார்.

8. **மதிப்பீட்டுக் கணக்குகளைத் தயாரிப்பது.**—செயல் அதிகாரி, 7 ஆவது விதியில் சொல்லப்பட்டிருக்கிற பட்டியல்களை வரப்பெற்றுக் கொள்வதன் பேரில், மதிப்பீட்டுக் கணக்குகளைத் தயாரிக்கும்படிச் செய்யவேண்டும். அந்த மதிப்பீட்டுக் கணக்குகளில் தெளிவான பத்திகளில் அடியிற்கண்டவை காட்டப்பட்டிருக்கவேண்டும்; அவையாவன :—

ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரர் பெயர்; அனுபோகதாரர் பெயர்; ஏதேனும் வகையின் கீழ் அந்த வீட்டுக்கு வரி விதிக்கப்பட்டால் அந்த வகை; சேர வேண்டிய வரித் தொகை; வரி செலுத்த வேண்டிய தேதி.

9. **மதிப்பீட்டுக் கணக்குகளைப் பார்வையிடுவது பற்றிய அறிவிப்பு.**—மதிப்பீட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டவுடனே செயல் அதிகாரி பேரூரில்

தண்டோரா போட்டு அதன் மூலமாக, அக் கணக்குகளைப் பற்றியும் அவைகளை இன்ன இடம் அல்லது இடங்களில் பார்வையிடலாமென்பது பற்றியும் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

10. **மதிப்பீட்டுக் கணக்குகளைத் திருத்தும் விதம்.**—(1) செயல் அதிகாரியானவர் பின்வருமாறு செய்வது மூலமாக, ஒரு பொது சீராய்வுக்கும் மற்றொன்றுக்கும் இடையே எப்போதேனும் மதிப்பீட்டுக் கணக்குகளைத் திருத்தலாம்— அதில் ஏதேனும் ஒரு வீட்டைச் சேர்த்துக் கொள்ளுதல்; அல்லது அதிலிருந்து ஏதேனும் ஒரு வீட்டை நீக்கிவிடுதல்; அல்லது ஏதேனும் ஒரு வீட்டின் மதிப்பையோ வகைப்பாட்டையோ, அது சம்பந்தமாகச் செலுத்தப்படத்தக்க வரித் தொகையையோ மாற்றுதல்; அல்லது இதன் பொருட்டு அரசாங்கத்தார் செய்யக்கூடிய வேறு எவையேனும் விதிகளுக்குட்பட்டு, அதில், ஒரு வீட்டின் சொந்தக்காரர் பெயருக்குப் பதிலாக அந்த வீட்டின் உடைமையை, மாற்றத்தினாலோ மற்றப்படியோ, பெற்றிருக்கிற வேறொருவர் பெயரை அமைத்துக் கொள்வது.

(2) அத் திருத்தமானது, அது செய்யப்படுகிற அரையாண்டின் முதல் தேதியன்று அமலுக்கு வரத் தொடங்கியிருப்பதாகக் கருதப்படும்.

ஆனால், ஓர் அரையாண்டுக்கான கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டான பிறகு அந்த அரையாண்டில் மேற்படி திருத்தம் செய்யப்பட்டால், அடுத்துவரும் அரையாண்டிலிருந்துதான் அது அமலுக்கு வரத் தொடங்கும்; ஆனால், அத் திருத்தமானது (1960 ஆம் ஆண்டின் 18 ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1960 ஆம் ஆண்டின் தமிழ் நாடு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாட்டுச்) சட்டத்தின்படி நியாய வாடகை நிச்சயிப்பதைச் செயற்படுத்துவதாயிருந்தால், நியாய வாடகை அவ்வாறு நிச்சயிக்கப்பட்ட தேதியிலிருந்து அத் திருத்தம் அமலுக்கு வரத் தொடங்கும்.

மேலும், ஒரு வீட்டின் உடைமை மாற்றம் பற்றிய விவாதத்துக்குட்பட்ட ஒரு நேர்வில் செயல் அதிகாரி செய்யும் தீர்ப்பினால், அவ் வீட்டுக்குச் சட்டப்படியான உரிமை, மாற்றப் பெற்றவருக்கு உண்டாகிவிடமாட்டாது.

(3) ஒரு பொது சீராய்வுக்கும் மற்றொன்றுக்குமிடையில் செயல் அதிகாரி முதல் தடவையாக ஒரு வீட்டை மதிப்பிடும் அல்லது வீட்டு வரி விதிக்கப்படத்தக்க வீதங்களைப் பொதுவாக உயர்த்துவதன் விளைவாகவன்றி, மற்றப்படி ஒரு வீட்டின் மதிப்பீட்டை அதிகப்படுத்தும் ஒவ்வொன்றிலும், செயல் அதிகாரியானவர், ஒரு தனி அறிவிப்பு மூலமாக, அம் மதிப்பீட்டை மாற்றியமைக்கும்படி கோரும் மனுவானது, அரசாங்கம், இருப்புப்பாதை ஆட்சித் துறை அல்லது

நிறுமத்தைப் பொறுத்தவரை அந்த அறிவிப்புச் சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளும், மற்றவற்றில் அந்த அறிவிப்புச் சேர்ப்பிக்கப் பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளும் ஊராட்சி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தால் அது ஆலோசிக்கப்படுமென்று அவ் வீட்டின் சொந்தக்காரருக்கு அல்லது அனுபோகதாரருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(4) மதிப்பீட்டுக் கணக்குகள் முதல் தடவையாக தயாரிக்கப் பட்டிருக்கும்போதும் அக் கணக்குகளின் பொதுச் சீராய்வு முடிக்கப் பட்டிருக்கும் போதெல்லாமும், செயல் அதிகாரியானவர், வெளிப்படையான அறிவிப்புக் கொடுத்து, சீராய்வு மனுக்கள், அரசாங்கத்தார், இருப்புப்பாதை ஆட்சித் துறை அல்லது ஒரு நிறுமத்தைப் பொறுத்தவரை அந்த அறிவிப்பின் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளும், மற்றவற்றில் அத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளும் ஊராட்சி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தால் அவை ஆலோசிக்கப்படும் எனத் தெரிவிக்க வேண்டும். அந்த அறிவிப்பை ஊராட்சி அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையில் ஒட்ட வேண்டும். அதே நாளன்று பேரூரில் தண்டோரா போட்டு அதை விளம்பரம் செய்ய வேண்டும்.

ஆனால், மதிப்பீடு உயர்த்தப்படும் ஒவ்வொன்றிலும் செயல் அதிகாரி சம்பந்தப்பட்ட வீட்டுச் சொந்தக்காரரிடம் அல்லது அனுபோகதாரரிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டிய தனி அறிவிப்பு மூலமாக அதைப் பற்றித் தெரிவிக்க வேண்டும்.

மேலும், முதல் விலக்கு ஏற்பாட்டின்படிச் சொந்தக்காரரிடம் அல்லது அனுபோகதாரரிடம் தனி அறிவிப்பு ஒன்றைச் சேர்ப்பிக்க வேண்டியிருக்கிற ஒவ்வொன்றிலும் இவ்விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அறுபது நாள் கால அளவையும் முப்பது நாள் கால அளவையும், அத் தனி அறிவிப்பு சேர்ப்பிக்கப் பட்ட தேதியிலிருந்து கணக்கிட வேண்டும்.

11. மதிப்பீட்டைத் திருத்தியமைக்கும்படிக் கோரும் மனு.—எவரேனும், ஓர் அரையாண்டு முடிவதற்கு முப்பது நாட்களுக்குக் குறையாமல் அல்லது அறுபது நாட்களுக்கு அதிகப்படாமல் முன்னதாக, வரி விதிக்கப் பெற்றுள்ள வீட்டின், ஏற்றவாறு ஆண்டு மதிப்பு அல்லது மூலப் பொருள் மதிப்பு அவ் வீட்டின் மதிப்பீடு கடைசியாகப் போடப்பட்ட பிறகு அல்லது திருத்தி யமைக்கப்பட்ட பிறகு, குறைந்து விட்டிருக்கிறதென்னும் காரணத்தினால், வரப் போகும் அரையாண்டுக்குத் தாம் செலுத்துவதற்குட்பட்ட வரியைக் குறைக்கும்படி சீராய்வு மனு மூலமாக செயல் அதிகாரியைக் கேட்டுக் கொள்ளலாம்.

12. **சீராய்வு மனுவின் முடிவைத் தெரிவிப்பது.**—10 (3) விதியின்படியாவது 11-ஆவது விதியின்படியாவது செய்து கொள்ளப்பட்ட சீராய்வு மனு தீர்வு செய்யப்பட்டவுடனே, செயல் அதிகாரி அம் மனுவின் பேரில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளைப் பற்றி, மனுதாரருக்கு அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள அவர் முகவருக்கு, வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ தெரிவிக்க வேண்டும்; சீராய்வின்பேரில் நிச்சயிக்கப்பட்ட தொகையை, அத் தெரிவிப்பு கிடைத்ததிலிருந்து பதினைந்து நாட்களுக்குள், அல்லது அத் தொகை இன்னும் சேரவேண்டியதாயிராவிட்டால், அது சேர வேண்டிய தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் செலுத்தும்படி அவருக்குக் கட்டளையிட வேண்டும்; அவசியமானால், மதிப்பீட்டுக் கணக்குகளைத் திருத்தும்படிச் செய்ய வேண்டும்.

13. **மதிப்பீடு கணக்குகளின் பொதுச் சீராய்வு.**—(1) செயல் அதிகாரி அரையாண்டுதோறும் புதிய பட்டியல்களை அல்லது மதிப்பீட்டுக் கணக்குகளைத் தயாரிக்கும்படிச் செய்யக் கடமைப்பட்டவராகமாட்டார்; ஆனால், முந்திய அரையாண்டுக்குரியவைகளை, முந்திய அரையாண்டுக்காகச் செய்யப்பட்டிருக்கிற அல்லது செய்யப்படக்கூடிய திருத்தங்களுடன் வைத்துக் கொள்ளலாம்.

(2) செயல் அதிகாரி ஐந்தாண்டுக்கொரு முறை மதிப்பீடுகளைப் பொதுச் சீராய்வு செய்ய வேண்டும்.

ஆனால், (5) உள் விதியின்படி மாவட்ட ஆட்சியாளர் ஆணையிடுகிற புதிய பொது சீராய்வுக்கு இந்த ஏற்பாடு பொருந்தாது.

(3) செயல் அதிகாரி (1) உள்விதியில் குறிப்பிட்டுள்ள திருத்தங்களைப் பற்றியும், (2) உள்விதியில் குறிப்பிட்டுள்ள பொது மதிப்பீடு பற்றியும் 9 ஆவது விதியில் சொல்லப்பட்டிருக்கிற விதமாக வெளிப்படையாக அறிவிப்புச் செய்ய வேண்டும்.

(4) பொது மதிப்பீடானது, (3) உள்விதியின்படி அறிவிப்புக் கொடுக்கப்படுகிற அரையாண்டில் முதல் நாளன்று அமலுக்கு வரத் தொடங்கி இருப்பதாகக் கருதப்படும்.

(5) (2) உள்விதியின்படி செய்யப்பட்ட பொதுச் சீராய்வில் நியாயமான ஆதாரமின்றி மதிப்பீடுகள் உயர்த்தப்பட்டுள்ளன அல்லது குறைக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சியாளர் அந்தப் பொதுச் சீராய்வினை ரத்து செய்யும்படி அவர் எழுத்து மூலமாய் ஆணையிடலாம்; தாம் அவசியமெனக் கருதுகிற கால அளவு சம்பந்தமாக (யாருடைய சீராய்வு இவ்விதியின்படி

ரத்து செய்யப்பட்டதோ அவர் அல்லாமல்) இதன்பொருட்டுத் தாம் அதிகாரமளிக்கிற (வேறு) ஒருவர் புதிதாய் சீராய்வு செய்ய வேண்டுமெனக் கட்டளையிட வேண்டும். மாவட்ட ஆட்சியாளர் அவ்வாறு ஆணையிடுகிற சீராய்வு நடைமுறை (1958 ஆம் ஆண்டின் XXXV- ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி வீட்டு வரி மதிப்பீட்டுக்கான விதிகளில் சொல்லப்பட்டுள்ள விதமாக இருக்க வேண்டும்.

ஆனால், இவ்விதியின்படி மாவட்ட ஆட்சியாளர் ஆணையிடுகிற சீராய்வின் விளைவாக, அடுத்த பொதுச் சீராய்வினைத் தள்ளிப் போடக் கூடாது.

இ. வண்டிகளுக்கு வரி.

14. வண்டி வரிக் கேட்புப் பதிவேட்டைத் தயாரிப்பது.—(1) அச்சிட்ட அட்டவணை ஒன்றை, வண்டி வரி செலுத்துவதற்கு உள்ளாகிவிட்டதாகக் கருதப்படும் ஒவ்வொருவருக்கும் செயல் அதிகாரி அனுப்ப வேண்டும்; அவர் வைத்திருக்கிற அல்லது பயன்படுத்துகிற வண்டிகள் சம்பந்தமாக, மேற்படி அட்டவணையைப் பூர்த்தி செய்வதற்கும் வரி விதிப்பதற்கு அவசியமெனச் செயல் அதிகாரி கருதுகிற தகவலைத் தெரிவிப்பதற்கும் அவ்வாறு அனுப்ப வேண்டும்.

(2) அந்த அட்டவணை அனுப்பப் பெற்றுள்ளவர் மேற்படி தகவலை அதில் எழுதி நிரப்பி மற்ற வேண்டிய தகவலுடன் அதில் கையெழுத்தும் தேதியும் போட்டு, அது கிடைத்த ஒரு வாரத்துக்குள் அதை ஊராட்சி அலுவலகத்துக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்.

(3) (2) உள்விதியில் குறிப்பிட்டுள்ள ஒரு வார காலம் கழிந்தபின் செயல் அதிகாரியானவர், அறிவிப்பு ஒன்றை அவரிடம் சேர்ப்பிக்கும்படி செய்ய வேண்டும்; வண்டி வரியினிமித்தம் அவர் செலுத்துவதற்குட்பட்டவரென்று செயல் அதிகாரி கருதும் தொகையை, அவ்வாறு சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென அறிவிப்பில் கேட்டிருக்க வேண்டும்.

15. பற்றுச்சீட்டையும் உரிமத்தையும் கொடுப்பது.—ஒருவர் ஒரு வண்டி சம்பந்தமாகச் சேர வேண்டிய வரித் தொகையைச் செலுத்திவிட்டால், செயல் அதிகாரி, தாம் பெற்றுக்கொண்ட தொகைக்காக அவருக்கு ஒரு பற்றுச் சீட்டு வழங்க வேண்டும்; செலுத்தப்பட்ட அத்தொகை சம்பந்தப்படுகிற காலத்துக்கு அவ்வண்டியை வைத்திருக்க அல்லது பயன்படுத்த ஓர் உரிமத்தையும் வழங்க வேண்டும்.

16. வண்டிகளுக்கு எண்கள் இணைப்பது.—15 ஆவது விதியின்படி உரிமம் கொடுக்கப் பெற்றுள்ள வண்டிகள் ஒவ்வொன்றுக்கும் ஊராட்சி எண் இணைக்க வேண்டும்; அந்த எண்ணை ஊராட்சி அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

ஆனால், ஏதேனும் தனிச் சட்டத்தில் கண்ட ஏற்பாடுகளின்படி எண் ஒட்டப்பெற வேண்டியுள்ள வண்டியைப் பொறுத்தவரை ஊராட்சி எண் ஒட்ட வேண்டியதில்லை.

17. வண்டிகளைக் கைப்பற்றுதல்.—16 ஆவது விதியில் சொல்லியிருக்கிறபடி ஒரு வண்டிக்கு ஊராட்சி எண் அல்லது ஏதேனும் தனிச் சட்டத்தில் கண்ட ஏற்பாடுகளின்படிக்கான எண் ஒட்டப்படாவிட்டால், செயல் அதிகாரியானவர் எப்போதேனும் அவ் வண்டியைக் கைப்பற்றி நிறுத்தி வைத்துக்கொள்ளலாம்.

ஆனால், மிதி வண்டி, முச்சக்கர மிதி வண்டி அல்லது ரிக்ஷா அல்லாத வேறொரு வண்டி, வழிச் செல்பவர்களையோ, சரக்குகளையோ ஏற்றிக் கொண்டு போவதில் உள்ளபடிப் பயன்படுத்தப்படும்போது, அதைக் கைப்பற்றவோ நிறுத்தி வைத்துக்கொள்ளவோ கூடாது.

18. கைப்பற்றப்பட்ட வண்டிகளைத் தீர்வு செய்வது.—(1) கைப்பற்றப் பட்ட வண்டி, அவ்வாறு கைப்பற்றிய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் வேண்டுமெனக் கேட்கப்படாவிட்டாலும், அதற்காகச் சேர வேண்டிய வரி அக் காலத்துக்குள் செலுத்தப்படாவிட்டாலும், செயல் அதிகாரியானவர், அவ் வண்டியை வெளிப்படையாக ஏலத்தில் விற்க வேண்டுமெனவும், விற்று வந்த தொகையை—

) விற்கப்பட்ட வண்டிக்கு வரி செலுத்த வேண்டியிருந்தால் அவ் வரியையும்,

(ii) வரித் தொகைக்கு மேற்படாமல் செயல் அதிகாரி கட்டளையிடக் கூடிய அபராதத்தையும்,

(iii) கைப்பற்றி, நிறுத்தி வைத்துக் கொண்டு, விற்பனை செய்தது சம்பந்தமாகப் பிடித்த செலவுகளினிமித்தம் ஐம்பது காசையும் செலுத்து வதற்குப் பயன்படுத்த வேண்டுமெனவும் கட்டளையிடலாம்.

(2) அவ்வண்டியின் சொந்தக்காரர் அல்லது அதற்கு உரிமையுள்ள வேறொருவர், அது கைப்பற்றப்பட்ட தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் அல்லது விற்பனைக்கு முன் எப்போதேனும் அதைக் கொடுக்கும்படிக் கேட்டு—

(i) அதற்காகச் சேர வேண்டிய வரியையும

(ii) வரித் தொகைக்கு மேற்படாமல் செயல் அதிகாரி கட்டளையிடக் கூடிய அபராதத்தையும்,

(iii) கைப்பற்றி, நிறுத்தி வைத்துக் கொண்டு, விற்பனை செய்தது சம்பந்த மாகப் பிடித்த செலவுகளினிமித்தம் ஐம்பது காசையும் செலுத்துவதன் பேரில், அவ் வண்டியை அவருக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

ஈ. மேல் முறையீடுகள்.

19. வரி விதிப்பை எதிர்த்து மேல்முறையீடு.—அடியிற்கண்ட வரிகளின் மதிப்பீடு சம்பந்தமாகவும் விதிப்பு சம்பந்தமாகவும் ஊராட்சி மேல் முறையீடு செய்து கொள்ளலாம் :—

(அ) 8-ஆவது, 13-ஆவது விதிகளின்படி வீட்டு வரியை மதிப்பீட்டு விதிப்பதும், சீராய்ந்த மனுவின் மீது 12-ஆவது விதியின்படி செயல் அதிகாரி பிறப்பித்த ஆணைகளும் ;

(ஆ) செயல் அதிகாரி—

(i) வண்டி வரியையும்,

(ii) தொழில் வரியையும்
விதித்திருப்பது ;

(இ) உழவு நிலத்தின் மீது வரி விதிப்பதற்கு மேற்படி சட்டத்தின்படி மாவட்ட ஆட்சியாளர் ஒப்பளிப்பு வழங்கியிருந்தால், அவ்வரியை மதிப் பிட்டிருப்பது.

20. இன்ன காலத்துக்குள் மேல்முறையீடு செய்துகொள்ள வேண்டு மென்பது.—ஊராட்சிக்கு மேல்முறையீடு ஒன்று—

(i) குறை கூறப்பெற்ற வரி கேட்கப்பட்ட பிறகு பதினைந்து நாட்களுக்குள் ஊராட்சி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தாலன்றி மற்றப்படி,

(ii) செயல் அதிகாரி எழ்மை காரணமாக வேறுவிதமாகக் கட்டளை யிட்டாலொழிய, எந்த வரி பற்றி முறையீடு கொடுத்துக் கொள்ளப்படுகிறதோ

அந்த வரி (1) பகுதியில் குறிப்பிட்டுள்ள கால அளவுக்குள் ஊராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டாலன்றி அல்லது கட்டி வைக்கப்பட்டாலன்றி மற்றப்படி,

அது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது;

ஆனால், மேற்சொன்ன காலத்துக்குள் மேல்முறையீடு செய்து கொள்ளாத தற்கு ஊராட்சிக்குத் திருப்திகரமாகக் காரணம் காட்டப்பட்டால் (1) பகுதியில் குறிப்பிட்டுள்ள காலத்துக்குப் பிறகு பதினைந்து நாட்களுக்குள் ஊராட்சி அதை ஏற்றுக் கொள்ளலாம்.

21. செயல் அதிகாரியின் ஆணைகளை ரத்துச் செய்ய அல்லது மாற்ற ஊராட்சிக்குள்ள அதிகாரங்கள்.—வரியை குறைப்பதற்காக அல்லது தள்ளிக் கொடுப்பதற்காக செயல் அதிகாரி பிறப்பித்த ஓர் ஆணையை ஊராட்சி தானாகவே அல்லது மற்றப்படி ரத்துச் செய்யலாம் அல்லது மாற்றலாம்.

22. மதிப்பீட்டுக் கணக்குகளைத் திருத்துவதும் வரியைத் திருப்பிக் கொடுத்துவிடுவதும்.—மேல்முறையீட்டின் பேரில் ஊராட்சி பிறப்பித்த ஆணை களுக்கிணங்க, மதிப்பீட்டுக் கணக்குகளைத் திருத்த வேண்டும்; ஊராட்சி வரித் தொகையை குறைக்கும் அல்லது தள்ளிக் கொடுப்பதில் செயல் அதிகாரி அவ்வண்ணமே உரிய தொகையைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

23. வரி மதிப்பீடு எப்போது முடிவானதாகுமென்பது.—இதில் முன்னால் சொல்லியுள்ளவாறு மேல்முறையீடு செய்து கொள்ளப்படாவிட்டால் ஒரு வரியின் மதிப்பீடும் அல்லது கேட்பும்; அத்தகைய முறையீடு செய்து கொள்ளப் பட்டால் அதன் மீது ஊராட்சி செய்யும் தீர்ப்பும் முடிவானதாகும்;

ஆனால், ஒரு மதிப்பீடு அல்லது கேட்பு மதிப்பீட்டுக் கணக்குகளின் பிரகாரம் இராவிட்டால், அவைகளுக்கிணங்கப் புதிதாக வரியை மதிப்பீடு செய்வதை அல்லது கேட்பதை இவ்விதியில் உள்ளது எதுவும் தடுப்பதாகக் கருதப்படமாட்டாது.

உ. வரிகளை வசூலிப்பது.

24. வசூலிக்கும் விதம்.—(1) ஒருவரிடமிருந்து வீட்டு வரி சேர வேண்டி யிருந்தால், செயல் அதிகாரி, 25-ஆவது விதியின் ஏற்பாடுகளை அவர் அமல் படுத்தத் தொடங்குவதற்கு முன், சேர வேண்டிய தொகைக்காக அவரிடம் பட்டியல் ஒன்றைச் சேர்ப்பிக்க வேண்டும்.

(2). (1) உள் விதியின்படிக்கான பட்டியலில் செயல் அதிகாரியாவது, இதன் பொருட்டு அவரிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது கையெழுத்திட வேண்டும்; அப்பட்டியலில் அடியிற்கண்டவை அடங்கியிருக்க வேண்டும் :—

(அ) வரி விதிக்கப் பெறுகிற கால அளவைப் பற்றிய விவரப் பட்டியலும் வீட்டின் விவரமும்;

(ஆ) செலுத்தத் தவறினல் உண்டாகும் பொறுப்பு பற்றிய அறிவிப்பு.

(3) ஓர் அரை ஆண்டுக்குள் அல்லது அதை அடுத்து வரும் அரை ஆண்டில் ஒருவரிடம் பட்டியல் சேர்ப்பிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, 25-ஆவது விதியில் கண்டுள்ள விதமாக அவரிடமிருந்து அந்த அரையாண்டுக்காக வரி எதுவும் வசூலிக்கக் கூடாது;

ஆனல், 3-ஆவது விதியின்படி மதிப்பீட்டுக் கணக்குகள் திருத்தப் பட்டிருந்தால், திருத்தம் செய்யப்பட்ட அரை ஆண்டிலாவது அதை அடுத்து வரும் அரை ஆண்டிலாவது அப்பட்டியலைச் சேர்ப்பிக்கலாம்.

(4) ஊராட்சிக்குச் சேர வேண்டிய வரிக்காக ஒரு உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்குத் தொடருவதை, இந்த விதியிலாவது 25-ஆவது விதியிலாவது உள்ளது எதுவும் தடை செய்யமாட்டாது.

25. அசையும் பொருளைக் கைப்பற்றி விற்பனை செய்வது.—(1) கேட்கப் பட்ட வரித் தொகையானது, பட்டியல் சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து அல்லது 12-ஆவது விதியில் குறிப்பிட்டிருக்கிற கட்டளை பிறப்பிக்கப்பட்டதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் செலுத்தப்படாதிருந்து, வரி செலுத்த வேண்டியவர் அது ஏன் செலுத்தப்படக் கூடாதென்பதற்கு செயல் அதிகாரியானவர், வரியி னிமித்தம் பற்றுதல் கட்டணம்—அவ்வாறு கைப்பற்றப்பட்ட உடைமையை நிறுத்தி வைத்துக் கொண்டு விற்பது சம்பந்தமாக உத்தேசமாய்ப் பிடிக்கும் செலவுகளை ஏற்பதற்கு வேண்டியிருக்கிற தொகை ஆகிய இவை சேர்ந்துள்ள தொகையை, பாக்கிதாரரின் அசையும் பொருளைத் தமது ஆணைப்படிக் கைப்பற்றி விற்பனை செய்வது மூலமாக வசூலிக்கலாம் :

ஆனல் எப்போதும் (1908-ஆம் ஆண்டின் V– ஆவது மையச் சட்டமாகிய) 1908-ஆம் ஆண்டின் உரிமையியல் வழக்கு நடைமுறை விதித் தொகுப்பின் 60-ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உள்பிரிவின் விலக்கு ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற அசையும் பொருள் கைப்பற்றுவதற்கு உள்ளாக மாட்டாது.

(2) பாக்கிதாரரின் உடைமையைக் கைப்பற்றுவதோ போதுமான அளவு கைப்பற்றுவதோ எக்காரணத்தினலேனும் இயலாவிட்டால், செயல் அதிகாரியானவர் குற்றவியல் நீதிபதிக்கு முன் பாக்கிதாரர் மீது வழக்குத் தொடரலாம்.

(3). (1) உள்விதியின்படிக்கான ஆணை, இந்த விதிகளின் (அ) இணைப்பில் கண்டுள்ள படிவப்படி அல்லது அது போன்ற படிவப்படி இருக்க வேண்டும்; அத்தகைய ஆணை ஒவ்வொன்றுக்காகவும் பதின்மூன்று காசுக் கட்டணம் விதிக்க வேண்டும்.

(4) ஒரு கட்டிடத்தில் கைப்பற்றுவதற்குரிய உடைமை இருக்கிறதென்று, கைப்பற்றுதல் ஆணையை நிறைவேற்றும் பொறுப்புள்ள ஓர் அலுவலர் நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தாலும் அவர் தமது அதிகாரத்தையும் நோக்கத்தையும் தெரிவித்து உள்ளே விடும்படி முறையாகக் கேட்டால் அவரை உள்ளே போகவிடமாட்டார்கள் என்றிருந்தாலும், அவர் செயல் அதிகாரியின் எழுத்து மூலமான தனி ஆணை ஒன்றைப் பெற்றுக் கொண்டு, உடைமையைக் கைப்பற்றுவதற்காக, சூரியன் உதிப்பதற்கும் சூரியன் மறைவதற்கும் இடையில், அக்கட்டிடத்தின் வெளிப்புற அல்லது உட்புறக் கதவையேனும் சன்னலையேனும் உடைத்துத் திறக்கலாம்:

ஆனல், பெண்கள் புழங்குவதற்காக என்றிருக்கும் அறையில் நுழைய அல்லது அதன் கதவை உடைத்துத்திறக்கத் தாம் கருதியிருப்பதைக் குறித்து அந்த அலுவலர் மூன்று மணி நேர அறிவிப்புக் கொடுத்து, அப்பெண்கள் அங்கிருந்து போய் விடுவதற்கு வாய்ப்புக் கொடுத்தாகிற வரையில், அவர் அப்படி நுழையவுங் கூடாது, உடைத்துத் திறக்கவுங் கூடாது.

26. உடைமையைக் கைப்பற்றுதல்.—(1) ஆணையை நிறைவேற்றும் பொறுப்புள்ள அலுவலர், உடைமையைக் கைப்பற்றுவதற்கு முன், சேர வேண்டிய வரியையும் ஆணைக் கட்டணத்தையும் செலுத்தும்படிக் கேட்க வேண்டும். வரியும் கட்டணமும் செலுத்தப்பட்டுவிட்டால், உடைமையைக் கைப்பற்றக் கூடாது; ஆனல், வரி அல்லது கட்டணம் செலுத்தப்படாவிட்டால், அந்த அலுவலர்—

(அ) தாம் அவசியமெனக் கருதக் கூடிய பாக்கிதாரரின் அசையும் பொருளைக் கைப்பற்ற வேண்டும்;

(ஆ) கைப்பற்றப்பட்ட உடைமைக்கு ஒரு பட்டியல் தயாரிக்க வேண்டும்;

(இ) கைப்பற்றிய சமயத்தில், கைப்பற்றப்பட்ட உடைமையைத் தம் வசம் வைத்திருப்பவருக்கு, அப்பொருள் பட்டியலின் ஒரு படியையும், இவ்விதிகளின் இணைப்பில் கண்டுள்ள படிவப்படி அல்லது அது போன்ற படிவப்படி விற்பனை அறிவிப்பையும் கொடுக்க வேண்டும் :

ஆனால், சேர வேண்டிய தொகைகளைச் செலுத்தி, கைப்பற்றப்பட்ட உடைமையை மீட்பதற்காக, ஏழு நாள் அவகாசம் கொடுக்க வேண்டும்.

(2) கைப்பற்றுதல், அளவுக்கு மிஞ்சியதாயிருக்கக் கூடாது ; அதாவது கைப்பற்றப்பட்ட உடைமையின் மதிப்பானது, பாக்கிதாரரிடமிருந்து சேர வேண்டிய வரி—ஆணை, கைப்பற்றுதல், நிறுத்தி வைத்துக் கொள்ளுதல், விற்பனை ஆகியவைகளுக்குத் தொடர்பான எல்லாச் செலவுகள்—ஆகிய இவை சேர்ந்த மொத்தத்துக்குக் கூடிய வரையில் சமமாயிருக்க வேண்டும்.

27. **கைப்பற்றப்பட்ட உடைமையை விற்பது.**—(1) வரியினிமித்தம் பாக்கிதாரரிடமிருந்து சேர வேண்டிய தொகையும் ஆணைக் கட்டணமும் கைப்பற்றுதல் கட்டணமும் உடைமையை நிறுத்தி வைத்துக் கொள்வதற்குத் தொடர்பான செலவுகளும், 26-ஆவது விதியின்படிக் கொடுக்கப்பட்ட அறிவிப்பில் கண்ட ஏழு நாள் அவகாசத்துக்குள் செலுத்தப்படாமலிருந்து, செயல் அதிகாரியும் கைப்பற்றுதல் ஆணையை நிறுத்தி வைக்காவிட்டால், கைப்பற்றப்பட்ட உடைமையாவது அதில் போதுமான பாகமாவது, செயல் அதிகாரியின் ஆணைகளின்படி வெளிப்படையாக ஏலத்தில் விற்கப்பட வேண்டும் ; செயல் அதிகாரியானவர், விற்று வந்த தொகையை, வரியினிமித்தம் சேர வேண்டிய தொகை, ஆணைக் கட்டணம்—கைப்பற்றுதல் கட்டணம்—உடைமையை நிறுத்தி வைத்துக் கொண்டு விற்பனை செய்வதற்குத் தொடர்பான செலவுகள் ஆகியவற்றைக் கொடுப்பதற்காகப் பயன்படுத்த வேண்டும் ; கைப்பற்றிய சமயத்தில் அவ்வுடைமையைத் தம் வசம் வைத்துக் கொண்டிருந்தவருக்கு, மேற்சொன்னவாறு விற்று, விற்று வந்த தொகைகளைப் பயன்படுத்திய பிறகு எஞ்சியிருக்கக் கூடிய உடைமையை அல்லது தொகையைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். விற்று வந்த தொகையானது, வரியினிமித்தம் சேர வேண்டிய தொகை, ஆணைக் கட்டணம், கைப்பற்றுதல் கட்டணம், உடைமையை நிறுத்தி வைத்துக் கொண்டு விற்றதற்குத் தொடர்பான செலவுகள் ஆகியவற்றைக் கொடுப்பதற்குப் போதாவிட்டால், செயல் அதிகாரியானவர், செலுத்தப்படாமல் எஞ்சியிருக்கும் தொகை சம்பந்தமாக 25 ஆவது விதியின்படி மறுபடியும் செயல்படத் தொடங்க வேண்டும்.

(2) கைப்பற்றப்பட்ட உடைமை இயல்பாகவே விரைவில் அழுகிப் போகக்கூடியதாயிருந்தால், செயல் அதிகாரியானவர், சேர வேண்டிய தொகை அதற்குள் செலுத்தப்பட்டாலொழிய, மேற்சொன்ன ஏழு நாள் அவகாசம் கழிந்து போவதற்கு முன் எப்போதேனும் அதை விற்றுவிடலாம்.

(3) ஏதேனும் உடைமையைக் கைப்பற்றக் கூடாதென்று, மேற்சொன்ன ஏழு நாள் அவகாசத்துக்குள் செய்து கொள்ளப்படும் ஆட்சேபனையைப் பற்றி, செயல் அதிகாரி கருதிப் பார்த்து, அதைப் பற்றிய விசாரணை நடக்கிற வரையில் விற்பனையைத் தள்ளிப் போடலாம். கைப்பற்றப்பட்ட உடைமை கைப்பற்றுவதற்கு உள்ளாக மாட்டாதென்று செயல் அதிகாரி தீர்மானித்தால், அவர், அதற்கு உரியவராகத் தோன்றுபவரிடம் அதைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டும்; அல்லது அது ஏற்கெனவே விற்றுவிடப்பட்டால், விற்றுவந்த தொகையை அவரிடம் கொடுத்துவிட வேண்டும்; 25 ஆவது விதியின்படி மறுபடியும் மேல் நடவடிக்கை எடுக்கலாம்; உடைமை கைப்பற்றுவதற்கு உள்ளாகமாட்டாதெனப் பாக்கிதாரருக்குத் தெரிந்திருந்தும், வேண்டுமென்றே அதைக் கைப்பற்றுவதற்கு விட்டு விட்டார் என்று செயல் அதிகாரிக்குத் தோன்றினால், முதல் கைப்பற்றுதலுக்கும் விற்பனைக்கும் சம்பந்தப்பட்ட எல்லாக் கட்டணங்களும் செலவுகளும் பாக்கிதாரரிடமிருந்து வசூலிக்கப்படத் தக்கவையாகும்.

28. கைப்பற்றுதல் கட்டணங்கள்.—(1) கைப்பற்றுதல் கட்டணங்கள், இவ்விதிகளின் இ. இணைப்பில் கண்டுள்ள வீதங்களுக்கு மேற்படாமல், ஊராட்சி நிச்சயிக்கக் கூடிய வீதங்களின்படிச் செலுத்தப்படத்தக்கவையாகும்.

(2) கைப்பற்றப்பட்ட ஏதேனும் உடைமையை நிறுத்தி வைத்துக் கொள்வதற்குத் தொடர்பான செலவுகள் அக்கட்டணங்களில் அடங்குவதாகக் கொள்ளக் கூடாது.

29. ஊராட்சிப் பரப்புக்குள் கைப்பற்றப்பட வேண்டிய உடைமை.— 25 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியின்படி பாக்கிதாரராயுள்ள ஒருவருடைய உடைமை ஊராட்சிப் பரப்புக்குள் எங்கு காணப்பட்டாலும் அதைக் கைப்பற்றலாம்.

30. வீட்டு வரி செலுத்த அனுபோகதாரருக்குள்ள பொறுப்பு.—ஏதேனும் வீட்டினிமித்தம் சேர வேண்டிய வரி, 25 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள் விதியில் குறிப்பிட்டுள்ள கால அளவின் இறுதியில் முழுவதுமோ சிறிது மட்டிலுமோ செலுத்தப்படாமலிருந்தால், செயல் அதிகாரியானவர், அந்த

வரி பன்னிரண்டு மாதத்துக்கு மேற்பட்டுச் செலுத்தப்படாமலிராவிட்டால், பதினைந்து நாட்களுக்குக் குறைவாயிராமல் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் அத்தொகையைச் செலுத்தும்படி, அச்சமயம் அககட்டிடத்தின் அனுபோக தாரரைக் கேட்கலாம்; அவ்வாணையின்படி நடக்க அந்த அனுபோகதாரர் தவறிவிட்டால், செயல் அதிகாரியானவர் அக்கட்டிடத்தில் காணப்படும் ஏதேனும் அசையும் பொருளைக் கைப்பற்றி விற்பனை செய்யலாம்; இவ்விதியின்படிச் செய்யப்படும் எல்லாக் கைப்பற்றுதல்களுக்கும், முந்திய விதிகளின் ஏற்பாடுகள் தக்க மாறுதல்களுடன் பொருந்துவதாகும்; அனுபோக தாரர் ஒருவர், உடைமை கைப்பற்றப்படுவதை அல்லது போதுமான அளவு கைப்பற்றப்படுவதை வேண்டுமென்றே தடுத்திருந்தாலொழிய, இவ்விதியின்படி அவரிடமிருந்து வசூலிக்கப்படத் தக்க ஏதேனும் தொகை சம்பந்தமாகக் குற்றச்சாட்டு வழக்குத் தொடரப் பெறுவதற்கோ உரிமையியல் வழக்குத் தொடரப் பெறுவதற்கோ உள்ளாகமாட்டார்.

31. **வரி நிலுவைகளை வசூலிப்பது.**—ஒருவரிடமிருந்து சேர வேண்டிய வரி, 25 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற காலத்தின் இறுதியில் முழுவதுமோ சிறிது மட்டிலுமோ செலுத்தப்படாமலிருந்து, அவர் இந்தியாவிலிருந்து போய்விட்டிருந்தால் அல்லது காணப்படாவிட்டால், மேற்படி வரியும் அல்லது அதில் செலுத்தப்படாமலிருக்கிற பாகமும், அது சம்பந்தமாகச் செலுத்தப்படத் தக்க எல்லாத் தொகைகளும், நிலவரிப் பாக்கியைப் போல் வசூலிக்கப்படத் தக்கவையாகும்.

32. **தண்டம் விதிப்பது.**—(1) 25 ஆவது விதியைச் சேர்ந்த (2) உள் விதியின்படி வழக்குத் தொடரப் பெறும் ஒவ்வொருவரும், தாம் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்த, வேண்டுமென்றே தவறிவிட்டாரென்று அல்லது உடைமை கைப்பற்றப்படுவதை அல்லது போதுமான அளவு கைப்பற்றப்படுவதை அவர் வேண்டுமென்றே தடுத்தாரென்று குற்றவியல் நீதிபதிக்கு ஐயமற மெய்ப்பிக்கப்படுவதின் பேரில்,—

(அ) வரி, ஏதாவது ஆணைக் கட்டணம்,

(ஆ) உடைமை கைப்பற்றப்பட்டிருந்தால், கைப்பற்றுதல் கட்டணம், கைப்பற்றப்பட்ட உடைமை நிறுத்தி வைத்துக்கொண்டு விற்கப்பட்டிருந்தால் அதன் தொடர்பான செலவுகள்,

ஆகியவைகளினிமித்தம் அவர் செலுத்த வேண்டியிருக்கக் கூடிய தொகையைப் போல் இரண்டு மடங்குக்கு மேற்படாமல் தண்டம் செலுத்துவதற்குட்பட்டவராவார்.

(2) எவரேனும் (1) உள்விதியின்படி ஒரு குற்றம் செய்தாரென்று தீர்மானிக்கப்பட்டால், குற்றவியல் நீதிபதி, விதிக்கப்படக் கூடிய தண்டத்துடன் கூட, (1) உள்விதியின் (அ), (ஆ) பகுதிகளில் குறிப்பிட்டிருக்கிற தலைப்புகளின் கீழ்ச் சேர வேண்டிய தொகைகளைச் சுருக்க வகையாக வசூலித்து ஊராட்சிக்குக் கொடுத்துவிட வேண்டும்; மேலும் தமக்கு யுக்தமாகத் தோற்றினால், வழக்குத் தொடருவதற்குப் பிடித்த செலவுத் தொகையை தாம் நிச்சயிக்கக் கூடியவாறு உடனுகத் தண்டல் செய்து ஊராட்சிக்குக் கொடுக்கலாம்.

33. கைப்பற்றப்பட்ட உடைமையைச் சிலவற்றில் வாங்குவதற்குத் தடை.— செயல் அதிகாரியாவது, ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் எவராவது, முந்திய விதிகளின்படி நடத்தப்படும் கைப்பற்றப்பட்ட உடைமையின் விற்பனையின்போது ஏதேனும் உடைமையை நேரடியாகவோ மறைமுகமாகவோ வாங்கக் கூடாது.

இணைப்பு அ.

கைப்பற்றுதல் ஆணை.

[25 (3) விதியைப் பார்க்கவும்.]

ஆணை எண் :

பெறுபவர் :

(ஆணையை நிறைவேற்றும் பொறுப்பு ஒப்புவிக்கப் பெற்றுள்ள அலுவலரின் பெயர்.)

(வரைவு ஏதேனும் இருந்தால் எந்த இடம் சம்பந்தமாக வரி அல்லது வரிகள் சேர வேண்டியவைகளாயிருக்கின்றனவோ அந்த இடத்திற்காகச் சேர வேண்டிய வரி அல்லது வரிகளைக் கண்டெழுதவும்.)

19. யோடு முடிவடைந்த காக மேற்குறிப்பிட்ட வரி அல்லது வரிகளினிமித்தம் சேர வேண்டிய

ரூபாய் காசு உள்ள தொகையைச் செலுத்தும்படி
ன் என்பவரை
முறைப்படி கேட்டிருந்தும், அத்தொகையை மேற்படி
என்பவர் செலுத்தாமலிருக்கிறபடியாலும், அல்லது அவ்வாறு செலுத்தாதிருப் பதற்குப் போதுமான காரணம் காட்டாதிருக்கிறபடியாலும், அவ்வாறு கேட்ட திலிருந்து பதினைந்து நாள் கழிந்து போய்விட்டிருக்கிறபடியாலும், இதனால் உமக்குக் கட்டளையிடுவது என்னவென்றால், மேற்படி
ரூபாய் காசு உள்ள தொகையையும் ஆணைக் கட்டணத்துக்காகப் பதின்மூன்று காசையும் நீர் கேட்க வேண்டும்; அவர் அவற்றைச் செலுத்தத் தவறினால், மேற்படி ரூபாய்
காசு உள்ள தொகை ஆணைக் கட்டணத்துக்காகவும்
கைப்பற்றுதல் கட்டணத்துக்காகவும் ரூபாய்
காசு ஆக மொத்தம் ரூபாய்
காசு உள்ள தொகை, மேற்சொன்னவாறு கைப்பற்றப் பட்ட உடைமையை வைத்திருந்து விற்பதற்குப் பிடிக்கும் செலவுகளைக் கொடுப்பதற்குப் போதுமானதாயிருக்கக் கூடிய கூடுதலான தொகை— ஆகியவை சேர்ந்த மொத்தத் தொகையளவுக்கு மேற்படி
என்பவரின் சாமான்களையும் தட்டுமுட்டுப் பொருள்களையும் (அல்லது சந்தர்ப்பத்துக்கேற்ப மேற்குறித்த இடத்தில் காணப்படும் எவையேனும் சாமான்களையும் தட்டுமுட்டுப் பொருள்களையும்) நீர் கைப்பற்ற வேண்டும்; அவ்வாறு கைப்பற்றியதற்குப் பிறகு அடுத்த ஏழு நாட்களுக்குள் மேற்படி வரி, வரிகள், கட்டணங்கள் ஆகிய இவற்றிக்காகச் சேர வேண்டிய தொகையும், அதோடு கூட, அவ்வாறு கைப்பற்றியதை வைத்திருக்கும் செலவுகளைக் கொடுப்பதற்குப் போதுமானதாயிருக்கக் கூடிய கூடுதலான தொகையும் செலுத்தப்படாவிட்டால், இனிமேல் என்னால் பிறப்பிக்கப்படப் போகிற ஆணைகளின்படி மேற்படி சாமான்களையும் தட்டுமுட்டுப் பொருள்களையும் விற்று, கைப்பற்றப்பட்ட உடைமையை விற்று வந்த தொகையை
ஊராட்சி அலுவலகத்துக்கு அனுப்பிவிட வேண்டும்; இதிலிருந்து, மேற்படி வரி அல்லது வரிகளினிமித்தம் கட்டணங் களின் நிமித்தமும் சேர வேண்டிய தொகையாகிய ரூபாய்
காசும், கைப்பற்றியதை அவ்வாறு வைத்திருந்து விற்பதற்குப் பிடிக்கும் செலவுகளும் கழிக்கப்பட்டு, மேற்படி நிதிக்கு வரவு வைக்கப்படும்; மீதி ஏதேனும் இருந்தால் அது, கைப்பற்றப்பட்ட சாமான் களுக்கும் தட்டுமுட்டுப் பொருள்களுக்கும் சொந்தக்காரருக்குத் திருப்பிக் கொடுத்துவிடப்படும். மேற்படி
என்பவரின்
சாமான்களையும் தட்டுமுட்டுப் பொருள்களையும் கைப்பற்ற முடியாதென்று

அல்லது போதிய அளவுக்குக் கைப்பற்ற முடியாதென்று தெரியவந்தால், அதை நீர் எனக்கு சான்றிட்டு, அதையும் இந்த ஆணையையும் எனக்கு அனுப்ப வேண்டும்.

இடம் :

தேதி : 19

(செயல் அதிகாரியின் கையெழுத்து.)

இணைப்பு ஆ.

பொருள்பட்டியல் படிவமும் விற்பனை அறிவிப்பும்.

[26 (1) (இ) விதியைப் பார்க்கவும்.]

(கைப்பற்றப்பட்ட சாமான்கள்—தட்டுமுட்டுப் பொருள்கள் பற்றிய விவரங்களைக் கண்டெழுதவும்.)

உங்களுக்கு அறிவிப்பது என்னவென்றால், 19 யோடு முடிவாகும் காக, ஓத்தில் சொல்லப்பட்டுள்ள வரி அல்லது வரிகளினிமித்தம் சேர வேண்டிய ரூபாய் காசு உள்ள தொகைக்காக, மேற்காட்டிய பட்டியலில் குறிப்பிட்டிருக்கிற சாமான்களையும் தட்டுமுட்டுப் பொருள்களையும் நான் இன்று கைப்பற்றியிருக்கிறேன்; சேர வேண்டிய தொகையையும், ஆணைக் கட்டணத்தையும் கைப்பற்றுதல் கட்டணத்தையும், சாமான்கள்—தட்டுமுட்டுப் பொருள்கள் வைத்திருப்பதற்கான செலவையும், இந்த அறிவிப்பின் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் ஊராட்சி அலுவலகத்தில் நீங்கள் செலுத்தினாலன்றி, மேற்படி சாமான்களும் தட்டுமுட்டுப் பொருள்களும், 19 ஆண்டு மாதம் நாள் அன்று, ஊராட்சி அலுவலத்திலாவது ஊராட்சி அதிகாரி கட்டளையிடக் கூடிய வேறிடத்திலாவது, விற்கப்படும்; அச்சாமான்கள், தட்டுமுட்டுப் பொருள்கள் இயல்பாகவே விரைவில் அழுகிப் போகக் கூடியவையாயிருந்தால், முன்னதாகவே ஒரு தேதியில் அவை விற்கப்படலாம்.

இடம் :

தேதி : 19

(கைப்பற்றுதல் ஆணையை நிறைவேற்றுகிற அலுவலரின் கையெழுத்து.)

இணைப்பு இ.

கைப்பற்றுவதற்குச் செலுத்தப்படத்தக்க பெருமக் கட்டண அட்டவணை.

[28 (1) விதியைப் பார்க்கவும்].

இன்ன தொகைகளுக்காகக் கைப்பற்றப் படுகிறதென்பது.				கட்டணங்கள்	
(1)				(2)	
				ரூ.	கா.
1 ரூபாய்க்குட்பட்டு				0	25
1 ரூபாயும் அதற்கு மேற்பட்டும்	5 ரூபாய்க்குட்பட்டும்			0	50
5	,,	10	,,	1	00
10	,,	15	,,	1	50
15	,,	20	,,	2	00
20	,,	25	,,	2	50
25	,,	30	,,	3	00
30	,,	35	,,	3	50
35	,,	40	,,	4	00
40	,,	45	,,	4	50
45	,,	50	,,	5	00
50	,,	60	,,	6	00
60	,,	80	,,	7	50
80	,,	100	,,	9	00
100 ரூபாயும் அதற்கு மேற்பட்டும்				10	00

கைப்பற்றப்பட்ட உடைமைக்குப் பொறுப்பாக ஏவலர்கள் அமர்த்தப் பட்டாலன்றி, மேற்படி கட்டணத்தில் எல்லாச் செலவுகளும் அடங்கும்; ஏவலர்கள் அமர்த்தப்பட்டால், ஏவலர் ஒவ்வொருவருக்கும் அன்றாடம் பத்தொன்பது காசு கொடுக்க வேண்டும்.

49. வீட்டு வரி.

1. குறிப்பிட்ட சிலவகை வீடுகளுக்கு வீட்டு வரியினின்றும் விலக்களிப்பது.—அடியிற்கண்ட கட்டிடங்கள் மேற்படி கட்டடத்தின்படி "வீடு" என்பதன் பொருள் வரையறைக்குள் வருமானால், அவை வீட்டு வரியினின்றும் விலக்களிக்கப்பெறும் :—

(அ) பொது வழிபாட்டுக்கென ஒதுக்கி வைக்கப்பட்டு, உள்ளபடி அவ்வாறு பயன்படுத்தப்படுகிற அல்லது வேறு எக்காரியத்துக்காகவும் பயன்படுத்தப்படாத கட்டிடங்கள் ;

(ஆ) எந்தச் சத்திரங்களை ஆண்டு கொள்வதற்காக வாடகை கேட்கப்படுவதில்லையோ, எந்தச் சத்திரங்களை ஆண்டு கொள்வதற்காகக் கேட்கப்படும் வாடகை அறச் செயல்களுக்காக மட்டும் பயன்படுத்தப் படுகிறதோ அந்தச் சத்திரங்கள் ;

(இ) மாணவர் விடுதிகள், உள்ளிட்ட கல்வி சம்பந்தமான காரியங்களுக்காகவும், பொதுமக்கள் வரக் கூடிய நூலகங்களுக்காகவும் பயன்படுத்தப்படும் கட்டிடங்களும், ஆதரவற்றவர்களுக்கு அல்லது விலங்குகளுக்குப் புகலிடமளிக்கும் அறச் செயல்களுக்காகப் பயன்படுத்தப்படும் பொதுக் கட்டிடங்களும் ;

(ஈ) 1904-ஆம் ஆண்டின் தொன்மைச் சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தின்படிப் -பாதுகாக்கப்படும் தொன்மைச் சின்னங்கள் அல்லது அவற்றின் பாகங்கள் குடியிருப்பு விடுதிகளாக அல்லது பொது அலுவலகங்களாகப் பயன்படுத்தப்படாவிட்டால், அச்சின்னங்கள் அல்லது பாகங்கள் :

(உ) நோயாளிகள் வாடகை அல்லது வேறு கட்டணங்களைச் செலுத்துவதற்குட்பட்ட தனிப் படுக்கைத் தொகுதிகளை அல்லது படுக்கைகளை உடைய மருத்துவ மனைகள் உட்பட அற மருத்துவ மனைகளும் அறச் செயல்களுக்காகவென்றே பயன்படுத்தப்படும் மருந்தகங்களும் மற்றக் கட்டிடங்களும் ;

(ஊ) இருப்புப் பாதை ஆட்சித் துறையால் வைத்து வரப்பட்டு, அரசாங்கத்தாரால் அவ்வப்போது அறிக்கையிடப்படக் கூடிய மருத்துவமனைகளும் மருந்தகங்களும் ;

(எ) ஊராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்கள் ;

(ஏ) காட்டுப் பரப்புக்குள் இருப்பவையுமான ஒரு ஊராட்சியின் ஆட்சி வரம்புக்குள் இருப்பவையுமான வனத் துறைக் கட்டிடங்கள் ;

(ஐ) கலங்கரை விளக்கங்கள் :

ஆனால், *(அ), (இ), (உ)* பகுதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கிற காரியங் களுக்காக ஒரு கட்டிடத்தைப் பயன்படுத்தும் ஒருவர் அல்லது பலர் அதற்காக வாடகை செலுத்த வேண்டியிருந்தால், அக்கட்டிடத்துக்கு வீட்டு வரி யினின்றும் விலக்களிப்பதாக அப்பகுதிகளில் உள்ளது எதனுலும் கருதப்பட மாட்டாது.

விளக்கம் *(1)*.—இவ்விதியில் கண்ட விலக்கு ஏற்பாட்டின் காரியத்துக்காக, அற மருத்துவ மனைகளில் தனிப் படுக்கைத் தொகுதி களுக்காக அல்லது படுக்கைகளுக்காக நோயாளிகள் கொடுக்கும் வாடகை அல்லது வேறு கட்டணங்கள் வாடகை என்று கருதப்படமாட்டா.

விளக்கம் *(2)*.—பள்ளிகளுடனும் கல்லூரிகளுடனும் இணைக்கப் பெற்றுள்ளவையும், மாணவர் விடுதிகளாயிராதவைகளுமான, குடியிருப்பு விடுதிகளுககாவது, மருத்துவ மனைகளுடனும் மருந்தகங்களுடனும் நூலகங் களுடனும் இணைக்கப்பட்டுள்ள குடியிருப்பு விடுதிகளுக்காவது, இவ்விதி யின்படி அளிக்கப்படும் விலக்குப் பொருந்தாது.

2. வீடுகளின் ஆண்டு மதிப்பை அல்லது மூலதன மதிப்பைக் கண்டறியும் விதம்.—*(1)* வீட்டு வரியினிமித்தம் மதிப்பிடும் காரியத்துக்காக, ஒரு வீட்டின் மூலதன மதிப்பானது, அந்த நிலத்தின் அளவிடப்பட்ட மதிப்பு, இப்போது அந்த வீடு கட்டுவதற்கு அளவிடப்பட்ட செலவு ஆகியவற்றின் மொத்தத்தி லிருந்து, தேய்மானத்துக்காக நியாயமான தொகை ஒன்றை--இது எச்சந்தர்ப் பத்திலும் அச்செலவில் பத்து சத வீதத்துக்குக் குறைவாயிருக்கக் கூடாது— கழித்துக்கொண்டபிறகு, எஞ்சிநிற்கும் தொகையெனக் கருதப்படும்.

இயந்திரங்களையும் மேசை நாற்காலி வகைகளையும் இவ்வுள் விதியின்படிக் கான மதிப்பீடுகளிலிருந்து விலக்கி விடவேண்டும்.

(2) (அ) ஒரு வீட்டின் ஆண்டு மதிப்பானது, அந்த வீட்டை மாதத்துக்கு மாதம் அல்லது ஆண்டாண்டு தோறும் வாடகைக்கு விட்டால் கிடைக்கக் கூடுமென நியாயமாக எதிர்பார்க்கக் கூடிய மொத்த ஆண்டு வாடகையிலிருந்து, அந்த ஆண்டு வாடகையிலிருந்து பத்து சதவீதத்தைக் கழித்துவிட்ட பிறகு எஞ்சிநிற்கும் தொகையெனக் கருதப்படும்; செப்பனிடு களுக்காக அல்லது வேறு எதனிமித்தமாக ஏற்படும் செலவுகளுக்காக அவ்வாறு கழித்துக்கொள்ளப்படும்.

(ஆ) (1) 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி "வீடு" என்பதன் பொருள் வரையறைக்குள் வருகிற ஓர் அரசாங்க அல்லது இருப்புப்பாதைக் கட்டிடத்தின், அல்லது

(2) மேற்சொன்ன பொருள் வரையறைக்குள் வருவதும் சாதாரண மாய் வாடகைக்கு விடப்படாத வகையைச் சேர்ந்ததுமான ஒரு கட்டிடத்தைப் பொறுத்தவரை, அதன் மொத்த ஆண்டு வாடகையை மதிப்பிட முடியாதென்று செயல் அதிகாரி கருதினால், ஆண்டு மதிப்பானது, அதன் மூலதன மதிப்பில் ஆறு சதவிதமாயிருப்பதாகக் கருதப்படும்.

3. வீட்டு வரி செலுத்துவதற்குட்பட்டவர்கள்.—(1) வீட்டின் சொந்தக்காரர் அந்த அரையாண்டு தொடங்கிய பிறகு முப்பது நாட்களுக்குள் வீட்டு வரியைச் செலுத்திவிடவேண்டும்.

(2) ஒரு வீட்டின் சொந்தக்காரர் அதற்காகச் சேர வேண்டிய வீட்டு வரி முழுவதையும் அல்லது அதில் ஏதேனும் பாகத்தை, அறிவிப்புச் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் செலுத்தத் தவறினால், செயல் அதிகாரி, பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்பட்டு அவ்வரி செலுத்தப்படாமலிராவிட்டால், பதினைந்து நாட்களுக்குக் குறையாமல் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் அத்தொகையைச் செலுத்தும்படி, அச்சமயம் அவ்வீட்டின் அனுபோகதாரராயிருப்பவரைக் கோரலாம்.

4. மாற்றத்தைப் பற்றி அறிவிக்க, மாற்றுபவருக்கும் மாற்றப் பெறுபவருக்கும் உள்ள கடமை.—(1) எந்த வீட்டிலாவது வீட்டு வரி செலுத்த முக்கியப் பொறுப்பு ஒருவருக்கு அவ்வீடு சம்பந்தமாக அல்லது அதன் மீது உள்ள உரிமை மாற்றப்படும்போதெல்லாம், யாருடைய உரிமை மாற்றப் படுகிறதோ அவரும், யாருக்கு அது மாற்றப்படுகிறதோ அவரும், மாற்றப் பத்திரம் எழுதப்பட்ட பிறகு, அல்லது அது பதிவு செய்யப்பட்டால் அது பதிவு செய்யப்பட்ட பிறகு; அல்லது பத்திரம் எதுவும் எழுதப்படாவிட்டால் மாற்றம் செய்யப்பட்ட பிறகு, மூன்று மாதத்துக்குள், அம் மாற்றறத்தைப் பற்றிச் செயல் அதிகாரிக்கு மூலமாய் அறிவிக்கவேண்டும்.

(2) மேற்சொன்னவாறு முக்கியப் பொறுப்பு வாய்ந்த ஒருவர் இறந்து போனால், வழி முறையர் என்ற முறையிலோ மற்றப்படியோ இறந்து போனவருடைய உரிமை யாருக்கு மாற்றப்படுகிறதோ, அவர் இறந்து போனவர் இறந்த தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்குள் அந்த மாற்றத்தைப் பற்றிச் செயல் அதிகாரிக்கு எழுத்து மூலமாய் அறிவிக்க வேண்டும்.

(3) இவ்விதியின்படிக் கொடுக்கப்படவேண்டிய அறிவிப்பு செயல் அதிகாரி கட்டளையிடக் கூடிய படிவத்தின்படி இருக்கவேண்டும்; ஏற்றவாறு உரிமை மாற்றப்பெறுபவராவது உரிமை எவரைச் சென்றடைகிறதோ அவராவது, மாற்றத்துக்கு அல்லது உரியுரிமைக்குச் சான்றாக எவையேனும் ஆவணங்களைச் செயல் அதிகாரிக்கு முன் தாக்கல் செய்ய வேண்டுமென ஆணையிட்டால் அவ்வாறே தாக்கல் செய்யக் கடமைப்பட்டவராவார்.

(4) செயல் அதிகாரிக்கு அவ்வாறு அறிவிப்புக் கொடுக்காமல் மேற் சொன்னவாறு மாற்றம் செய்கிற ஒவ்வொருவரும், அந்த அசட்டையினால் அவர் அடைகிற வேறு ஏதேனும் பொறுப்புடன் கூட, அவர் அறிவிப்புக் கொடுக்கிற வரையில் அல்லது மாற்றம் ஊராட்சிப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டாகிற வரையில், மாற்றப்பட்ட வீட்டின் மீது விதிக்கப்பட்ட வீட்டு வரியைத் தொடர்ந்து செலுத்தக் கடமைப்பட்டவராவார்; ஆனால், மேற்படி வரியை செலுத்த மாற்றப்பெறுபவருக்குள்ள பொறுப்பு இந்த விதியில் உள்ளது எதனாலும் பாதிக்கப்படுவதாகக் கொள்ளக்கூடாது.

5. குடியின்மை வரியைத் தள்ளிக் கொடுத்தல்.—(1) எந்த அரை ஆண்டி லேனும் தொடர்ச்சியாக அறுபது அல்லது அதற்கு மேற்பட்ட நாட்கள் வரை ஒரு வீடு காலியாயிருந்தால், செயல் அதிகாரியானவர், அந்த வரித் தொகையில் பேர் பாதிக்கு மேற்படாமல், அந்த அரையாண்டில் அந்த வீடு காலியாயிருந்த நாட்களின் எண்ணிக்கைக்கு விதாசாரப்படியுள்ள பாகத்தைத் தள்ளிக் கொடுத்தல்வேண்டும்.

(2) (1) உள்விதியின்படி தள்ளிக் கொடுத்ததற்கான கேட்பு ஒவ் வொன்றையும் தள்ளிக் கொடுப்பது கோரப்படுகிற அரையாண்டிலாவது அதற்கு அடுத்த அரையாண்டிலாவது செய்து கொள்ள வேண்டுமேயன்றி, அதற்குப் பிறகு செய்து கொள்ளக்கூடாது.

(3) (அ) வீட்டின் சொந்தக்காரராவது அவருடைய முகவராவது வீடு காலியாயிருப்பதைப் பற்றிச் செயல் அதிகாரிக்கு முன்பாக அறிவிப்புக் கொடுத்தாலன்றி, அத்தகைய தள்ளிக் கொடுப்பதற்கான கேட்பு எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது; தள்ளிக் கொடுப்புச் செய்யப்பெறுகிற கால அளவை, அந்த அறிவிப்பு ஒப்பளிக்கப்படுகிற தேதியிலிருந்து கணக்கிட வேண்டும்.

(ஆ) அத்தகைய அறிவிப்பு ஒவ்வொன்றும், அது அவ்வாறு ஒப்பளிக்கப்படுகிற அரையாண்டோடு கழிவாகிவிடும்; அதற்குப் பின்னர் எவ்விதப் பயனுள்ளதாகவும் இராது.

6. கட்டிடங்களைக் கட்டுவது, மீண்டும் கட்டுவது அல்லது இடித்து விடுவதைப் பற்றி அறிவிப்புக் கொடுக்கச் சொந்தக்காரருக்குள்ள கடமை.— (1) (அ) ஒரு ஊரிலோ பேரூரிலோ வீடு ஏதேனும் கட்டப்பட்டால் அல்லது மீண்டும் கட்டப்பட்டால், அந்த வீடு முடிக்கப்பட்ட தேதி அல்லது அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட தேதி ஆகிய இவற்றில் எது முந்தியதாயிருக்கிறதோ அதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அதைப் பற்றிச் சொந்தக்காரர் செயல் அதிகாரிக்கு அறிவிப்புக் கொடுக்க வேண்டும்.

(ஆ) ஓர் அரையாண்டின் கடைசி இரண்டு மாதங்களில் அத்தேதி வருவதாயிருந்தால், சொந்தக்காரர் (அ) பகுதியின்படி அறிவிப்புக் கொடுப்பதற்குட்பட்டு, அந்த அரை ஆண்டுக்காக அந்த வீடு சம்பந்தமாகச் செலுத்தப்படத் தக்க, வரி அல்லது உயர்த்தப்பட்ட வரி ஏற்றவாறு முழுவதும் தள்ளிக் கொடுக்கப்படுவதற்கு உரியவராவார்.

(இ) ஓர் அரையாண்டின் முதல் நான்கு மாதங்களில் அத்தேதி வருவதாயிருந்தால், சொந்தக்காரர், (அ) பகுதியின்படி அறிவிப்புக் கொடுப்பதற்குட்பட்டு, அந்த அரை ஆண்டுக்காக அந்த வீடு சம்பந்தமாகச் செலுத்தப்படத்தக்க, வரியில் அல்லது உயர்த்தப்பட்ட வரியில் ஏற்றவாறு பேர்பாதிக்கு மேற்படாமல், அந்த அரையாண்டில் அத்தேதிக்கு முந்தியுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு வீதாசாரப் படியுள்ள பாகத்தைத் தள்ளிக் கொடுப்பதற்கு உரியவராவார்.

(2) சொந்தக்காரர் எவரேனும் (1) உள்விதியில் கண்ட (அ) பகுதியின் ஏற்பாடுகளை மீறினால், அவருக்கு ஐம்பது ரூபாய் வரையில் தண்டப் பணம் விதிக்கப்படத்தக்கதாகும்.

(3) (அ) ஒரு ஊரில் அல்லது பேரூரில் உள்ள ஒரு வீடு இடித்துவிடப் பட்டால் அல்லது அழித்து விடப்பட்டால், சொந்தக்காரர், அதைப் பற்றி அறிவிப்பு அலுவல் அதிகாரிக்குக் கொடுக்கப்படுகிற வரையில், அவருக்கு யுக்தமாய்த் தோற்றுகிறவாறு, அந்த வீடு இடிக்கப்படாமலிருந்தால் அல்லது அழித்துவிடப்படாமலிருந்தால் செலுத்தப்பட்டிருந்திருக்கக்கூடிய வரியைச் செலுத்துவதற்கு உட்பட்டவராவார்.

(ஆ) அந்த அறிவிப்பு ஓர் அரையாண்டின் முதல் இரண்டு மாதங்களில் கொடுக்கப்பட்டால், அந்த அரையாண்டுக்காக அந்த வீடு சம்பந்தமாகச் செலுத்தப்படத்தக்க வரி முழுவதையும் தள்ளிக் கொடுக்கப் பெறுவதற்குச் சொந்தக்காரர் உரியவராவார்.

(இ) அந்த அறிவிப்பு ஓர் அரையாண்டின் கடைசி நான்கு மாதங்களில் கொடுக்கப்பட்டால், அந்த அரையாண்டுக்காக அந்த வீடு சம்பந்தமாகச் செலுத்தப்படத்தக்க வரியில் பேர்பாதிக்கு மேற்படாமல், அந்த அரையாண்டிலே, சந்தர்ப்பத்துக்கேற்ப, இடித்துவிட்ட பிறகு அல்லது அழித்துவிட்ட பிறகு உள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு விதாசாரப் படியுள்ள பாகத்தைத் தள்ளிக் கொடுக்கப் பெறுவதற்குச் சொந்தக்காரர் உரியவராவார்.

7. ஓர் அரையாண்டின் நடுவில் சேர்க்கப்பட்ட அல்லது விலக்கப்பட்ட பரப்புகளில் வரி தள்ளிக் கொடுத்தல்.—(1) எந்தப் பரப்பாகிலும் ஒரு ஊரில் அல்லது பேரூரில் சேர்க்கப்பட்டால், அப்பரப்பிலிருக்கிற ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரரும்—

(அ) அவ்வாறு சேர்க்கப்பட்ட தேதி ஓர் அரையாண்டின் கடைசி இரண்டு மாதங்களுக்குள் இருந்தால், அந்த அரையாண்டுக்காக அதன் பொருட்டு வீட்டு வரி எதுவும் செலுத்துவதற்கு உள்ளாகமாட்டார்;

(ஆ) அத்தேதி ஓர் அரையாண்டின் முதல் நான்கு மாதங்களுக்குள் இருந்தால், அந்த அரையாண்டுக்காக அதன் பொருட்டுச் செலுத்தப்படத்தக்க வீட்டு வரியில் பேர் பாதிக்கு மேற்படாமல், அந்த அரையாண்டிலே அத்தேதிக்கு முந்தியுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு விதாசாரப்படியுள்ள பகுதியைத் தள்ளிக் கொடுக்கப் பெறுவதற்கு உரியவராவார்.

(2) எந்த பரப்பாகிலும் ஒரு ஊரிலிருந்து அல்லது பேரூரிலிருந்து விலக்கப்பட்டால், அப்பரப்பிலிருக்கிற ஒவ்வொரு வீட்டின் சொந்தக்காரரும்—

(அ) அவ்வாறு விலக்கப்பட்ட தேதி ஓர் அரையாண்டின் முதல் இரண்டு மாதங்களுக்குள் இருந்தால், அந்த அரையாண்டுக்காக அதன் பொருட்டுச் செலுத்தப்படத் தக்க வீட்டு வரி முழுவதும் தள்ளிக் கொடுக்கப் பெறுவதற்கு உரியவராவார்;

(ஆ) அத்தேதி ஓர் அரையாண்டின் முதல் நான்கு மாதங்களுக்குள் இருந்தால், அந்த அரையாண்டுக்காக அதன் பொருட்டு செலுத்தப்படத் தக்க வீட்டு வரியில் பேர் பாதிக்கு மேற்படாமல், அந்த அரையாண்டிலே அத்தேதிக்குப் பிந்தியுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு விதாசாரப் படியுள்ள பகுதியைத் தள்ளிக் கொடுக்கப் பெறுவதற்கு உரியவராவார்;

(3) உள்விதி (2)-ன்படி தள்ளிக் கொடுக்கும்படிக் கோரும் விண்ணப்பம் அவ்வீடு இருக்கிற பரப்பு விலக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் செயல் அதிகாரிக்குச் செய்து கொள்ளப்பட்டாலன்றி, அத்தகைய தள்ளிக் கொடுப்பு எதுவும் அளிக்கப்படமாட்டாது.

11. வீடுகளின் உடைமைப் பதிவு மாற்றும்.—1. எவரேனும் விண்ணப்பம் செய்து கொள்வதன் பேரில் மதிப்பீட்டுக் கணக்குகளிலே சொத்துக்களின் உடைமையில் ஒரு பொதுச் சீராய்வின்போது அல்லது பொதுச் சீராய்வுக்கும் மற்றொன்றுக்கும் இடைப்பட்ட காலத்தில், மாறுதல்கள் செய்கையில், செயல் அதிகாரி பின்வரும் ஏற்பாடுகளைக் கடைபிடிக்க வேண்டும்; அவையாவன :—

(1) சொந்தக்காரர்கள் தாங்களாகவே மாற்றங்கள் செய்வது.—உரிமை மாற்றம் முழுமையாகச் செய்யப்படும் எல்லாவற்றிலும் மாற்றத்துக்கு சம்பந்தப்பட்ட இரு திறத்தாரும் அல்லது அவர்களில் ஒருவர் விண்ணப்பம் செய்து கொள்வதின் பேரில் அதன் உடைமை மாற்றத்திற்குப் பொருந்தும் படி சொத்துக்களின் பதிவை மாற்றலாம், ஆனால், பதிவை மாற்றும்படி ஒவ்வொன்றிலும் எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்; அதைச் செய்து கொள்பவர் அல்லது செய்து கொள்பவர்கள் அதில் கையெழுத்திட வேண்டும். அதை அஞ்சல் மூலமாக அனுப்பலாம்; அல்லது நேரில் கொடுத்துக் கொள்ளலாம்; அல்லது முறைப்படி அதிகாரம் பெற்றுள்ள முகவர் மூலமாக அனுப்பலாம், அல்லது பதிவுத் துறை அலுவலர் ஒருவர் மூலமாக அனுப்பலாம். இரு திறத்தாரும் அத்தகைய விண்ணப்பமொன்றைக் கொடுத்துக் கொண்டிருந்து, அவர்களில் ஒருவர் பதிவான சொந்தக்காரராயிருந்தால், கேட்டுக் கொள்கிறபடி பதிவு மாற்றத்தை உடனே செய்யும்படி ஆணையிடலாம். ஆனால், மாற்றத்துக்குச் சம்பந்தப்பட்டவர்களில் ஒரு திறத்தார் மட்டும் விண்ணப்பம் செய்து கொண்டால், மறுதிறத்தாரிடம் அறிவிப்புச் சேர்ப்பிக்க வேண்டும். பதிவான சொந்தக்காரர் மனு விவகாரத்துக்குச் சம்பந்தப்பட்டவராயிராவிட்டால், பதிவு மாற்றத்துக்கான விண்ணப்பம் இரு திறத்தார் கொடுத்துக் கொண்டாலும் அவர்களில் ஒருவர் கொடுத்துக் கொண்டாலும், அந்தச் சொந்தக்காரருக்கும் அறிவிப்புக் கொடுக்க வேண்டும். மாற்றக் கருதியிருப்பதற்கு, பதிவான சொந்தக்காரர் மறுத்தால், சொந்தக்காரர் என உரிமை கொண்டாடுபவர் மனநிறைவான சட்டச் சான்றினைக் காட்டினாலன்றி, மாறுதல் எதுவும் செய்யக் கூடாது. நடவடிக்கைக்குச் சம்பந்தப்பட்ட ஒரு திறத்தார் மட்டும் விண்ணப்பம் செய்து கொண்டிருந்து, மறு திறத்தார் மறுத்தால் அல்லது ஒன்றும் தெரிவிக்காமலிருந்தால், இரு திறத்தார்களையும் ஆவணங்களின் முழுமையான சங்கிலி போன்ற தொடரால் இணைக்க வேண்டும். சங்கிலித் தொடர் முற்றுப்பெறாவிட்டால், மதிப்புக்குரியவர்களின் வாக்குமூலங்கள், வரிப்பற்றுச் சீட்டுகள் போன்ற வேறு சான்றினைக் கொண்டு அந்த தொடரைப் பூர்த்தி செய்யவேண்டும். மறுப்புக்களைத் தெரிவிப்பதற்காக ஒரு மாத கால அளவு கொடுக்கவேண்டும்; மறுப்பு ஏதேனும் செய்யப்பட்டால்,

விசாரணை நடத்த வேண்டும்; மறுப்பு முறையானதென்று தெரியவந்தாலன்றி, பதிவு மாற்றம் செய்ய வேண்டும்.

(2) தீர்ப்பு ஆணை வைத்திருப்பவர்களுக்கு மாற்றுதல்.—ஒரு உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆணையைபொட்டித் தீர்ப்பு ஆணை வைத்திருப்பவர்களின் பெயரில், அல்லது ஒரு உரிமையியல் மன்றத்தின் தீர்ப்பு ஆணை நிறைவேற்றும் வகையில் நடத்தப்படும் ஏல விற்பனைகளில் வாங்கியவர்களின் பெயரில் உடைமைகளின் உரிமையை மாற்றுவனவற்றில் வழக்குக்குச் சம்பந்தப்பட்ட இரு திறத்தார்களில் எவரேனும் அல்லது ஏலத்தில் வாங்கியவர்களில் எவரேனும் விண்ணப்பம் செய்து கொண்டு, ஏற்றவாறு, அத்தீர்ப்பு ஆணை அல்லது விற்பனைச் சான்றின் அத்தாட்சி பெற்ற படி ஒன்றையும், அதை அனுசரித்து உடைமைப் பொருள் கொடுத்தது பற்றிய சான்று ஒன்றையும் காட்டுவதன் பேரில், பதிவு மாற்றத்தை உடனே செய்து விடலாம்: ஆனல், பதிவான சொந்தக்காரரிடமிருந்து மாற்றப்பட்டிருக்க வேண்டும். பதிவான சொந்தக்காரராயிராத ஒருவரிடமிருந்து மாற்றம் செய்வதாயிருந்தால், பதிவு மாற்றம் செய்வதற்கு முன் (1) உள்விதியில் கண்டுள்ள விதமாகப் பதிவான சொந்தக்காரருக்கு அறிவிப்புக் கொடுக்க வேண்டும். ஆயினும் தீர்ப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டதும் நிறைவேற்று நடவடிக்கைகள் இன்றியே உடைமைப் பொருள் கொடுக்கப்பட்டு, தீர்ப்பு ஆணை வெளிப்படையாய் முடிவானதாயிருப்பனவற்றில் போல், உடமை மாற்றம் கொடுத்தது பற்றிய சான்றினைக் காட்ட முடியாவிட்டால், மாற்றத்துக்குச் சம்பந்தப்பட்ட இரு திறத்தார்களில் ஒருவர் மட்டும் பதிவு மாற்றத்துக்கான விண்ணப்பம் கொடுத்துக் கொள்வது சம்பந்தமாக (1) உள்விதியில் சொல்லியுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்;

(3) விளம்பு வகைத் (Declatory தீர்ப்பாணைகளின்படி மாற்றங்கள்.—விளம்புவகைத் தீர்ப்பாணையின்படி பதிவு மாற்றம் கோரப்பட்டவைகளில், அத்தீர்ப்பு ஆணையின் பேரில் நிறைவேற்றுதல் என்பது இல்லாதவிடத்து, அதாவது, குறிப்பிட்ட ஒருவரைப் பதிவு செய்வதற்கு உரியவராக்கும் வண்ணம் அவரிடம் உரிமை தங்குகிறதென்பதை அத்தீர்ப்பாணை அறிவிப்பதாக மட்டும் இருந்தால், செயல் அதிகாரி, அத்தீர்ப்பு ஆணையின் அத்தாட்சி பெற்றபடி காட்டப்படுவதன் பேரில், உடனே பதிவு மாற்றம் செய்யலாம்.

(4) வழியுரிமை மூலமாகச் சேர்ந்துவரும் மாற்றங்கள்.—செயல் அதிகாரி மனநிறைவான சான்று காட்டப்படுவதன் பேரில், வழியுரிமை மூலமாகச் சேர்ந்துவரும் மாற்றங்களில் பதிவு மாற்றத்துக்கு ஆணையிடலாம்.

2. பதிவு மாற்றம் செய்தோ செய்ய மறுத்தோ செயல் அதிகாரி பிறப்பிக்கும் ஆணைகளின் பேரில் ஊராட்சிக்கு மேல் முறையீடு உண்டு. எந்த ஆணையை

எதிர்த்து மேல்முறையீடு செய்து கொள்ளப்படுகிறதோ அந்த ஆணை கிடைத்த தேதிக்குப் பிறகு முப்பது நாட்களுக்குள் அந்த மேல்முறையீடுகளைக் கொடுத்துக் கொள்ள வேண்டும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1963 மார்ச்சு 2 ஆம் தேதிய 466 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1963 ஏப்ரல் 1 ஆம் தேதிய 740 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(88) அரசாங்கக் கட்டிடங்களின் மதிப்பீடு: வீட்டு வரிக்காக மதிப்பிடும் காரியங்களுக்காக, அரசினர் பொறியியல் பணித் துறைக் கணக்குகளில் கண்ட அரசாங்கக் கட்டிடங்களைப் பொறுத்தவரை செயல் பொறியாளரும், மற்ற அரசாங்கக் கட்டிடங்களைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களும், அக்கட்டிடங்கள் இருக்கும் மனைகளின் உத்தேச மூலதன மதிப்பை, சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடமிருந்து தெரிந்து கொண்டு அம்மதிப்பையும், அக்கட்டிடங்களை அப்போது எழுப்புவதற்குப் பிடிக்கும் உத்தேச நடப்புச் செலவு பற்றிய எண்களையும் சம்பந்தப்பட்ட செயல் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

ஊராட்சியின் செயல் அதிகாரி, சீராய்வில் மதிப்பிட வேண்டிய கட்டிடங்கள், மற்ற உடைமைகள் பற்றிய விவரங்களை, மதிப்பீடு செய்யப் போகிற அலுவலர் அல்லது அலுவலர்களுக்கு, மதிப்பீட்டுக் கணக்குகளின் சீராய்வு அமலுக்கு வரத் தொடங்கவிருக்கிற தேதிக்குக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன் தெரிவிக்க வேண்டும். செயல் அதிகாரி சீராய்வு அமலுக்கு வரத் தொடங்குகிற தேதியன்று, சீராய்வு செய்யப்பட்ட மதிப்பீட்டுக் கணக்குகளைக் காட்டக் கூடியவராயிருக்கும்பொருட்டுப் போதுமானபடி முன்னதாகவே மதிப்பீடு அவருக்குத் தெரிவிக்கப்படும்படி அந்த அலுவலர் அல்லது அலுவலர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(1932 செப்டம்பர் 12 ஆம் தேதிய 365 ஆம் எண் உள்ளாட்சி நகராட்சித் துறை அரசு ஆணை.)

(1940 ஆகஸ்ட் 31 ஆம் தேதிய 309 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(89) வீட்டு வரியை வசூலிப்பது.—*(1)* 1950-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படியும், 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படியும், அரையாண்டு தோறும் வீட்டு வரி விதித்து

வாங்கவேண்டும். பொதுவாகக் கிராமவாசிகள் ஆண்டுக்கொரு முறை முக்கிய அறுவடையிலிருந்து தான் தங்கள் வருமானத்தைப் பெறுகிறார்கள். ஆகையால், இப்போதிருப்பதைப் போல் வீட்டு வரியை அரையாண்டுக்கொரு முறை விதித்து வாங்குவதற்குப் பதிலாக ஊராட்சிகள் அவ்வரியை ஆண்டுக்கொரு முறை விதித்து வரி செலுத்துவோரிடமிருந்து நிலவரியோடுகூட வசூலித்தால், சில பரப்புகளில் இருக்கிற ஊர்வாசிகளுக்கு வசதியாகவும் எளிதாகவும் இருக்கலாம்.

2. இரண்டு அரையாண்டுகள் சம்பந்தமாகவும் நில வரியில் செய்வது போல, நிலத் தீர்வைத் தவணை (கிஸ்தி) மாதங்களாகிய டிசம்பர் முதல் அடுத்த ஏப்ரல் வரையில் வரி வசூலிப்பதற்குச் சட்டப்படிக்கான ஆட்சேபணை எதுவுமில்லை. ஒரேவொரு நிபந்தனை என்னவென்றால், கைப்பற்றுதல் முதலியவைகளைப் போல் வலுக்கட்டாயச் செயல் மேற்கொள்ள வேண்டியிருக்கும்போது, அந்த அரையாண்டு வரிக்கான பட்டியலை, வரி விதிக்கப் பெறுவரிடம் சம்பந்தப்பட்ட அரையாண்டிலாவது அதற்கடுத்துவரும் அரையாண்டிலாவது சேர்ப்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அரையாண்டிலாவது அதற்கடுத்து வரும் அரையாண்டிலாவது பட்டியலைச் சேர்ப்பிக்கத் தவறிப் போனால், அத்தொகையை வசூலிப்பதற்காக உரிமையியல் வழக்குத் தொடரலாம்.

(1961 பெப்ரவரி 15 ஆம் தேதிய 190984/எல் 1/60-1 ஆம் எண் குறிப்பாணை.)

(90) ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்கள் வீட்டு வரிக்கு உட்பட்டிருப்பது.—வாரச் சந்தைகளைப் பொறுத்தவரை 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 2 (13) பிரிவில் 'வீடு' என்பதன் பொருள் வரையறையின் கீழ் வரும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டிடங்கள் மட்டும் வீட்டு வரிக்கு உட்பட்டவையாகும்.

ஆண்டு மதிப்பு அடிப்படையின் பேரில் வீட்டு வரிக்குட்பட்டவையும், வாடகைக்கு விடப்படுபவையுமான ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்களில் வீட்டு வரி மதிப்பீட்டின் காரியங்களுக்காக உள்ளபடியான மொத்த ஆண்டு வாடகையிலிருந்து அந்த ஆண்டு வாடகையில் 10 சதவீதத்தைக் கழித்து விட்ட பிறகு எஞ்சி நிற்கும் தொகையை, அக்கட்டிடங்களின் ஆண்டு மதிப்பாகக் கொள்ள வேண்டும். வீட்டு வரிக்குட்பட்டவையும் வாடகைக்கு விடப்படாதவையுமான ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்களில், மதிப்பீட்டில் தகராறுகளைத் தவிர்க்கும் பொருட்டு, சம்பந்தப்பட்ட கோட்டத்தில் (நெடுஞ்சாலை—ஊரக பொறியியல் பணித்துறை) கோட்டப் பொறியாளரால் மதிப்பிடப்பட்ட ஆண்டு

மதிப்பை அல்லது முதற்பொருள் மதிப்பை ஏற்றவாறு வரி மதிப்பீட்டின் காரியங்களுக்காக ஏற்றுக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு, கோட்டப் பொறியாளரே எல்லாவற்றிலும் கட்டிடத்தைப் பார்வையிட வேண்டியதில்லை. மதிப்பீடு செய்வதற்காக அவர் ஓர் உதவிப் பொறியாளரை நியமித்தனுப்பி, மதிப்பீட்டு விவரப் பட்டியலில் தமது மேலொப்பமிட்டு, அதை ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும் சம்பந்தப்பட்ட ஊராட்சிச் செயல் அதிகாரிக்கும் அனுப்பலாம். (நெடுஞ்சாலை—ஊரகப் பொறியியல் பணித் துறை) கோட்டப் பொறியாளர் தயாரித்தனுப்பிய மதிப்பீட்டை, மதிப்பீடுகளின் அடுத்த ஐந்தாண்டுப் பொதுச் சீராய்வு வரையில் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஐந்தாண்டுப் பொதுச் சீராய்வின்போது, ஊராட்சியின் செயல் அதிகாரி, புதிய மதிப்பீட்டு விவரப்பட்டியல் ஒன்றை (நெடுஞ்சாலை—ஊரகப் பொறியியல் பணித் துறை) கோட்டப் பொறியாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

(1962 ஏப்ரல் 28 ஆம் தேதிய 843 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

50. ஆண்டு அல்லது முதற்பொருள் மதிப்பு அல்லாத வேறு அடிப்படையின் பேரில் வீட்டு வரி விதிப்பது.—1. வீட்டு வரி விதிப்பதற்கு ஊராட்சி ஒப்பளிப்பு வழங்கியிருந்தால், அவ்விதிப்பு வருங்காலத்தில் ஒரு தேதியிலிருந்து அமலுக்கு வரத் தொடங்க வேண்டும்; அத்தேதி அந்த ஆண்டின் ஏப்ரல் முதல் தேதியாகவாவது அக்டோபர் முதல் தேதியாகவாவது இருக்கலாம். எந்த ஆண்டிலேனும், விதிப்பு அமலுக்கு வரத் தொடங்கியான பிறகு, அந்த ஆண்டு சம்பந்தப்பட்ட வரையில், வரி வீதங்களையாவது அதை விதிக்கத் தொடங்க வேண்டிய தேதியையாவது மாற்றுவதற்கான யோசனைத் திட்டம் எதையும், கோட்ட ஆட்சியாளரின் தனி ஒப்பளிப்பின்படி அல்லது அவர் பிறப்பிக்கிற ஒரு கட்டளையின்படியன்றி மற்றப்படி, ஊராட்சி ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது.

2. கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொண்டு, ஒரு ஊராட்சி வீடுகளின் மூலப் பொருள் அல்லது ஆண்டு மதிப்பின் அடிப்படையின் பேரில் வீட்டு வரி விதிப்பதற்குப் பதிலாக, அவைகளின் தரைப் பரப்பு, அடியிற்கண்டவாறு அவற்றின் வகைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையின் பேரில் அவ்வரியை விதிக்கலாம்; அந்த வகைப்பாடு என்னவென்றால், (i) மேல்தளமிடப்பட்டவை; (ii) சிறிது மட்டில் மேல்தளமிடப்பட்டவையும் சிறிது மட்டில் ஓடு அல்லது கூரை வேய்ந்தவையும்; (iii) ஓடு போடப்பட்டவை; (iv) சிறிது மட்டில் ஓடு போடப்பட்டவையும், சிறிது மட்டில் கூரை வேய்ந்தவையும்; (v) கூரை வேய்ந்தவை.

3. (1) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 1-ஆவது அட்டவணையின் காரியத்துக்காக, வீடுகளின் தரைப் பரப்பினை, வருங்கால ஊராட்சி நில அளவைகளின் போது, நில அளவைத் துறையினர் நிச்சயிக்க வேண்டும்.

(2) அத்தகைய நில அளவைகள் செய்யப்படாதபோது, தரைப் பரப்பானது—

(அ) வீடுகளின் எண்ணிக்கை முந்நூறுக்கு மேற்படாமலிருக்கிற ஊர்களில் அல்லது பேரூர்களில், கர்ணத்தினால் நிச்சயிக்கப்பட வேண்டும்; வீடு ஒன்றுக்குப் பதின்மூன்று காசு வீதம் ஊராட்சி நிதியிலிருந்து கர்ணத்துக்கு ஊதியம் கொடுக்க வேண்டும்;

(ஆ) வீடுகளின் எண்ணிக்கை முந்நூறுக்கு மேற்பட்டிருக்கிற ஊர்களில் அல்லது பேரூர்களில் இதற்கென தனியாக அமர்த்தப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளரால் நிச்சயிக்கப்பட வேண்டும்; பணியாளர் செலவை ஊராட்சி நிதியிலிருந்து கொடுக்க வேண்டும்.

(1962 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1243 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

51. தொழில் வரி—பெருமவிதிப்பு வீதங்களும் குறுமவிதிப்பு வீதங்களும்.—1. (1) தொழில் வரி மதிப்பீட்டுக் காரியங்களுக்காக நிறுவனங்களையும் ஆட்களையும் பிரிக்க வேண்டிய வகைகளும், ஒவ்வொரு வகுப்பின் மீதும் விதிக்கப்படத் தக்க பெரும அரையாண்டு வரியும் குறும அரையாண்டு வரியும் அடியிற்கண்டவையாகும் —

வகை.	அரையாண்டு வருமானம்.	பெரும அரையாண்டு வரி.		குறும அரையாண்டு வரி.	
		ரூ.	கா.	ரூ.	கா.
(i)	15,000 ரூபாய்க்கு மேற்பட்டு	125	00	100	00
(ii)	12,000க்கு மேற்பட்டும் 15,000க்கு மேற்படாமலும்.	100	00	75	00
(iii)	9,000க்கு மேற்பட்டும் 12,000க்கு மேற்படாமலும்.	75	00	50	00

வகை.	அரையாண்டு வருமானம்.	பெருமம அரையாண்டு வரி.	குறுமம அரையாண்டு வரி.
		ரூ. கா	ரூ. கா
(iv)	6,000க்கு மேற்பட்டும், 9,000க்கு மேற்படாமலும்.	50 00	25 00
(v)	4,800க்கு மேற்பட்டும், 6,000க்கு மேற்படாமலும்.	25 00	12 00
(vi)	3,000க்கு மேற்பட்டும், 4,800க்கு மேற்படாமலும்.	12 00	6 00
(vii)	1,800க்கு மேற்பட்டும், 3,000க்கு மேற்படாமலும்.	6 00	4 00
(vii)	1,200க்கு மேற்பட்டும், 1,800க்கு மேற்படாமலும்.	4 00	2 00
(ix)	600க்கு மேற்பட்டும், 1,200க்கு மேற்படாமலும்.	2 00	1 00
(x)	300க்கு மேற்பட்டும், 600க்கு மேற்படாமலும்.	1 00	0 50

(2) (1) உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற பெருமத்துக்கும் குறுமத்துக்கும் உட்பட்டு ஒவ்வொரு வகையின் மீதும் விதிக்கப்படத் தக்க வரியை ஊராட்சி நிச்சயிக்க வேண்டும்.

ஆனால், ஒரு வகையின் மீது விதிக்கும் வரிக்கும் அந்த வகையின் குறும வருமானத்துக்குமுள்ள வீதாசாரமானது, இன்னும் தாழ்ந்த வகையின் மீது விதிக்கும் வரிக்கும் அத்தாழ்ந்த வகையின் குறும வருமானத்துக்குமுள்ள வீதாசாரத்தை விட எச்சந்தர்ப்பத்திலும் குறைவாயிருக்கக் கூடாது.

(3) (1) உள்விதியில் கண்டுள்ள வகைகளில் ஒன்றுக்கோ பலவற்றிற்கோ தொழில் வரி விதிப்பினின்றும் ஊராட்சி விலக்களிக்கலாம். ஆனால் ஒரு வகை வரிக்கு உட்பட்டதாயிருக்கும்போது அதைவிட உயர்ந்த வகைக்கு அவ்விதிப்பினின்றும் விலக்களிக்கக் கூடாது.

2. ஒரு நிறுமம் அல்லது ஒருவருக்கு ஒரு ஊராட்சி அல்லது பேரூரில் அலுவலகம் அல்லது வேலையிடம் இருந்தால், அந்நிறுமம் அல்லது அவர்

அந்த ஊர் அல்லது பேரூரில் வியாபாரம் நடத்தியிருப்பதாக அல்லது தொழில், வேலைப்பாடு அல்லது பணி செய்திருப்பதாக அல்லது அலுவல் வகித்திருப்பதாகக் கருதப்படுவார்.

(2) (1) உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற பெருமத்துக்கும் குறுமத் மாத்திரம் எந்த அரையாண்டிலேனும் பணம் கடன் கொடுத்தல் அல்லாத வேறொரு வியாபாரம் நடத்தினால், அந்த வியாபாரம் நடத்துவதிலிருந்து அந்நிறுமம் அல்லது அவருக்கு கிடைக்கும் வருமானம், அந்த அரையாண்டிலே, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படித் தொழில் வரி விதிக்கும் காரியத்துக்காக,—

(அ) அந்த அரையாண்டு அடங்கிய ஆண்டுக்காக, 1922 ஆம் ஆண்டின் இந்திய வருமான வரிச் சட்டத்தின்படி அந்நிறுமம் அல்லது அவருக்கு வருமான வரி விதிக்கப்பட்டால், வருமான வரி விதிப்பதற்காக 1922 ஆம் ஆண்டின் இந்திய வருமான வரிச் சட்டத்தில் கண்ட 10-ஆவது பிரிவின்படி அந்த வியாபாரத்தின் இலாபங்கள் ஆதாயங்களென்று கணக்கிட்டு வருகிற தொகையில் பேர் பாதியெனக் கருதப்பட வேண்டும்.

(ஆ) மேற்படி இலாபங்கள், ஆதாயங்களின் தொகையைக் கண்டறிய முடியாவிட்டால் அல்லது அந்நிறுமம் அல்லது ஒருவருக்கு வருமான வரி விதிக்கப்படாவிட்டால், அந்த அரையாண்டில் ஊராட்சிப் பரப்பில் நடத்தப்பட்ட வியாபாரத்தின் விற்றுமுதலில், அல்லது இதுவுங் கூடக் கண்டறிய முடியாவிட்டால் முந்திய ஆண்டின் நிகரான அரையாண்டில் ஊராட்சிப் பரப்பில் நடத்தப்பட்ட வியாபாரத்தின் விற்றுமுதலில், 4-ஆவது விதியையொட்டிக் கணக்கிடப்பட்ட, சதவீதம் அல்லது சதவீதங்கள் எனவும் கருதப்பட வேண்டும்.

(2) ஒரு நிறுமம் அல்லது ஒருவர் ஒரு பகுதி மட்டில் ஊராட்சிப் பரப்பிலும் ஒரு பகுதி மட்டில் அப்பரப்புக்கு வெளியிலும் பணம் கடன் கொடுத்தல் அல்லாத, வேறொரு வியாபாரம் நடத்தினால், ஊராட்சிப் பரப்பில் அந்த வியாபாரம் நடத்தியதனால் அந்நிறுமம் அல்லது அவருக்குக் கிடைக்கும் வருமானம், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டப்படித் தொழில் வரி விதிக்கும் காரியத்துக்காக, சந்தர்ப்பத்துக்கேற்ப, அந்த அரையாண்டில் அல்லது முந்திய ஆண்டின் நிகரான அரையாண்டில், அப்பரப்பில் நடத்தப் பட்ட அவ்வியாபாரத்தின் விற்றுமுதலில், 4-ஆவது விதியையொட்டிக் கணக்கிடப்பட்ட, சதவீதமெனக் கருதப்பட வேண்டும்.

(3) (1) உள்விதியின் (ஆ) பகுதி, (2) உள்விதி ஆகியவற்றின் காரியத்துக்காக, எந்த ஊரிலேனும் பேரூரிலேனும் நடத்தப்படும் வியாபாரத்தின் விற்றுமுதல் என்பது, அந்த ஊர் அல்லது பேரூரில் உண்டாக்கப்பட்ட, தயாரிக்கப்பட்ட, வாங்கப்பட்ட அல்லது (விற்கப்பட்ட சரக்குகளின் அல்லது, கடன் கொடுத்தல் தவிர, நடத்தப்பட்ட வேறு ஏதேனும் வியாபாரத்தின் மொத்தப் பண மதிப்பு என்று பொருள்படும்.

விளக்கம்.—இவ்வுள் விதியின்படி வியாபாரத்தின் விற்று முதலை நிச்சயிக்கையில்—

(அ) ஒரு நிறுமம் அல்லது ஒருவர் கொள்முதல் செய்த சரக்குகளின் ஒப்படைப்பும், அதே நிறுமனம் அல்லது அவர் அவற்றை விற்றதினிமித்தம் செய்த ஒப்படைப்பும் தமிழ்நாடு மாநிலத்தில் நடைபெற்றால், பிந்திய விவகாரத்தை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்;

(ஆ) ஒரு நிறுமம் அல்லது ஒருவர் கொள்முதல் செய்த சரக்குகளின் ஒப்படைப்பு மேற்படி மாநிலத்துக்கு வெளியே எவ்விடத்திலேனும் நடைபெற்று, அதே நிறுமம் அல்லது அவர் அவற்றை விற்றதினிமித்தம் செய்த ஒப்படைப்பு மேற்படி மாநிலத்தில் எவ்விடத்திலேனும் நடைபெற்றால், பிந்திய விவகாரத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்;

(இ) ஒரு நிறுமம் அல்லது ஒருவர் செய்த கொள்முதல் சரக்குகளின் ஒப்படைப்பு மேற்படி மாநிலத்தில் எவ்விடத்திலேனும் நடைபெற்று, இதே நிறுமம் அல்லது அவர் அவற்றை விற்றதினிமித்தம் செய்த ஒப்படைப்பு மேற்படி மாநிலத்துக்கு வெளியே எவ்விடத்திலேனும் நடைபெற்றால், முந்திய விவகாரத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

4. தொழில் வரி விதிப்பதற்காக வருமானத்தைக் கணக்கிடும் பொருட்டு, 3-ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியின் (ஆ) பகுதி, (2) உள்விதி ஆகியவற்றின்படி வியாபார விற்றுமுதலின் சதவீதம், அடியிற்கண்ட அட்டவணையின் (1), (2) பத்திகளில் குறிப்பிட்டவாறு இருக்க வேண்டும் :

ஆனால், எவற்றிலேனும், அவ்வாறு கணக்கிடப்பட்ட வருமானம், அந்த அட்டவணையின் (3). பத்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிற குறும தொகைக்குக் குறைவாயிருந்தால், அக்குறுமத் தொகை கிடைக்கும்படிச் செய்யும் விகிதத்துக்குச் சதவீதத்தை உயர்த்த வேண்டும்.

அட்டவணை

	சதவீதம்.	குறுமம்.
		ரூ.
வியாபாரத்தின் விற்றுமுதல் 12 லட்ச ரூபாய்க்கு மேற்பட்டால்..	1	18,000
வியாபாரத்தின் விற்றுமுதல் 6 லட்ச ரூபாய்க்கு மேற்பட்டு 12 லட்ச ரூபாய்க்கு மேற்படா விட்டால்	1·5	12,000
வியாபாரத்தின் விற்றுமுதல் 3 லட்ச ரூபாய்க்கு மேற்பட்டு 6 லட்ச ரூபாய்க்கு மேற்படா விட்டால்	2	9,000
வியாபாரத்தின் விற்றுமுதல் 1,50,000 ரூபாய்க்கு மேற்பட்டு 3 லட்ச ரூபாய்க்கு மேற்படா விட்டால்	3	6,000
வியாபாரத்தின் விற்றுமுதல் 1,50,000 ரூபாய்க்கு மேற்படா விட்டால்	4	..

5. *(1)* எந்த அரையாண்டுக்காகவேனும் ஒரு நிறுமத்திடமிருந்து அல்லது ஒருவரிடமிருந்து தொழில் வரி சேர வேண்டியிருக்கிறது அல்லது இனிமேல் சேர வேண்டியிருக்கும் என்று செயல் அதிகாரி கருதினுல், அவர் அந்த அரையாண்டிலாவது அதற்கடுத்த அரையாண்டிலாவது அந்த நிறுமத்திடம் அல்லது அவரிடம் ஓர் அறிவிப்பினைச் சேர்ப்பிக்கவேண்டும்; எந்த வருமானத்தின் அடிப்படையின் பேரில் அந்நிறுமம் அல்லது அவர் அந்த அரையாண்டுக்காகத் தொழில் வரி விதிக்கப்படுவதற்கு உட்பட்டிருக்கிறது அல்லது உட்பட்டிருக்கிருர் என்று அது கருதுகிறதோ அல்லது அவர் கருதுகிருரோ அந்த வருமானத்தைக் கண்டு, இவ்விதிகளின் அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கிற படிவப் படியுள்ள ஒரு விவர அறிக்கையை, முப்பது நாட்களுக்குக் குறையாமலுள்ள அந்த அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கக் கூடிய காலத்துக்குள் அனுப்பும்படி அந்நிறுமம் அல்லது அவரை அந்த அறிவிப்பில் கேட்டிருக்க வேண்டும். அதன்பேரில் அந்நிறுமம் அல்லது அவர், தொழில் வரி கேட்கப்படுகிற அரையாண்டிலாவது முந்திய ஆண்டின் நிகரான

அரையாண்டிலாவது அதற்கு அல்லது தனக்கு கிடைத்த வருமானத்தைக் கண்டு விவர அறிக்கை ஒன்றை அனுப்பலாம். அனுப்பப்பட்ட அந்த விவர அறிக்கைக்கு ஆதாரமாக அந்நிறுமம் அல்லது அவர் நம்பியிருக்கக் கூடிய ஏதேனும் சான்றினையும் காட்டலாம்.

(2) (1) உள்விதியில் சொல்லியிருக்கிறபடி விவர அறிக்கை ஒன்று அனுப்பப்பட்டு, அது சரியாகவும் நிறைவாகவும் உள்ளதென்று செயல் அதிகாரி தெரிந்து கொண்டால், அவர், அந்த விவர அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு அந்த நிறுமத்தினிடமிருந்து அல்லது அவரிடமிருந்து தொழில் வரி விதித்து வாங்க வேண்டும்.

விளக்கம்.—3 ஆவது விதியைச் சேர்ந்த (2) உள்விதியில் கண்ட (ஆ) பகுதியின் கீழ் வாராதவற்றில் அந்த நிறுமம் அல்லது அவர், அந்த அரையாண்டு அடங்கிய ஆண்டுக்காக, 1922 ஆம் ஆண்டின் இந்திய வருமான வரிச் சட்டத்தில் கண்ட 29-ஆவது பிரிவின்படித் தனக்கு அல்லது தமக்குச் சேர்ப்பிக்கப்பட்ட வருமான வரிக் கேட்பு அறிவிப்பினைக் காட்டினால், செயல் அதிகாரி 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படித் தொழில் வரி விதிக்கப் பெறத்தக்க ஆதாரங்களிலிருந்து கிடைக்கிற வருமானம், அக்கேட்பு அறிவிப்பில் கண்டுள்ள வருமானத்தில் பேர்பாதியை, தொழில் வரி விதிக்கும் பொருட்டு அந்த ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் வருமானமென்று கொள்ளக் கடமைப்பட்டவராவார்.

(3) (1) உள்விதியில் சொல்லியிருக்கிறபடி விவர அறிறிக்கை எதுவும் அனுப்பப்படாவிட்டாலும், அவ்வாறு அனுப்பப்பட்ட ஒரு விவர அறிக்கை சரியல்ல வென்று அல்லது நிறைவானதல்லவென்று செயல் அதிகாரி தெரிந்து கொண்டாலும், செயல் அதிகாரி அந்நிறுமத்துக்கு அல்லது அவருக்குத் தாம் மதிப்பிடுகிற அரையாண்டு வருமானத்துக்குப் பொருத்தமான வீதத்திலுள்ள வகையை அந்நிறுமத்துக்கு அல்லது ஆளுக்கு வகுத்துக் கொடுக்க வேண்டும்.

(4) செயல் அதிகாரியானவர், (3) உள்விதியின்படி ஒரு நிறுமம் அல்லது ஒருவரை வகைப்பாடு செய்வதற்கு நடத்தப்படும் வியாபாரத்தின் தன்மை, தெரிந்துள்ள மதிப்பு, குடியிருப்பு வியாபார இடங்கள் ஆகியவற்றின் அளவு, வாடகை, வாங்கி விற்கப்படும் பொருள்களின் அளவு—எண்ணிக்கை, வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை, முன்னரே செலுத்தப் பட்ட வருமான வரி ஆகியவற்றையொட்டிப் பொதுவாக ஆலோசனை செய்து முடிவு செய்ய வேண்டும்.

(5) ஒரு நிறுவனத்தின் அல்லது ஒருவரின் கணக்குகளைக் கொண்டு வந்து காட்டுமாறுகேட்க செயல் அதிகாரிக்கு உரிமை இல்லை.

(6) ஒரு நிறுமத்திடமிருந்து அல்லது ஒருவரிடமிருந்து சேர வேண்டிய தொழில் வரி செலுத்தப்படாவிட்டால், ஊராட்சிச் செயல் அதிகாரி, அந்நிறுமத்திடம் அல்லது அவரிடம் ஓர் அறிவிப்புச் சேர்ப்பிக்கும்படிச் செய்து, அவ்வாறு சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அவ்வரியைச் செலுத்தும்படிக் கேட்க வேண்டும்.

(7) தொழில் வரி மதிப்பீடு சம்பந்தமாக ஒரு நிறுமம் அல்லது அவர் கொடுத்த வாக்குமூலமும், பட்டியல்களும், எல்லாக் கணக்குகளும் அல்லது ஆவணங்களும் இரகசியமானவை எனக் கருதப்பட வேண்டும்; அவைகளின் படிகளைப் பொதுமக்களுக்கு வழங்கக்கூடாது.

(8) ஊராட்சிச் செயல் அதிகாரி அறிவிப்புக் கொடுத்து அதன் மூலமாக அடியிற்கண்ட செய்திகள் அடங்கியுள்ள எழுத்து மூலமான பட்டியல் ஒன்றைக் குறிப்பிட்ட காலத்துக்குள் அனுப்பும்படி, ஏதேனும் கட்டிடத்தின் அல்லது நிலத்தின் சொந்தக்காரரையும் அல்லது அனுபோகதாரரையும், சிற்றுண்டிச்சாலை—உணவு விடுதி அல்லது தங்குமிடம், சங்கம் அல்லது குடியிருப்பு அறைகளின் செயலாளர் அல்லது மேலாளர் ஒவ்வொருவரையும் கேட்கலாம்; அச் செய்திகளாவன: அக்கட்டிடம், நிலம், சிற்றுண்டிச்சாலை, உணவு விடுதி அல்லது தங்குமிடம், சங்கம் அல்லது குடியிருப்பு அறைகளை அனுபோகத்தில் வைத்துக் கொண்டிருக்கும் எல்லாருடைய பெயர்கள்; அத்தகைய ஒவ்வொருவருடைய தொழில், வேலைப்பாடு அல்லது வேலை, அவர் வாடகை செலுத்தினால் அவ்வாடகை, அவ்வாறு அனுபோகத்தில் வைத்துக் கொண்டிருக்கும் கால அளவு.

அட்டவணை.

. . . . . யோடு முடிவாகும் அரையாண்டில் தொழில் வரி விதிப்பதற்கான வருமானம் பற்றிய விவர அறிக்கை.

[5 (1) விதியைப் பார்க்கவும்.]

(1) நிறுமத்தின் அல்லது ஆளின் பெயர்,

(2) வியாபாரம், தொழில், வேலைப்பாடு அல்லது வேலை அல்லது உத்தியோகத்தின் விவரம்,

(3) வரி விதிக்கப் பெறுபவருக்கு—

(அ) இந்த அரையாண்டில் மொத்தத்திலே அறுபது நாட்களுக்குக் குறையாமல் இந்த ஊரிலும் அல்லது பேரூரிலும்,

(ஆ) வரி விதிக்கப் பெறுபவர் இந்த அரையாண்டில் மொத்தத்திலே அறுபது நாட்களுக்குக் குறையாமல் இந்த ஊரில் அல்லது பேரூரில் வசித்திருந்து, இந்த ஊருக்கு அல்லது பேரூருக்கு வெளியிலும்,

ஏதேனும் தொழில், வேலைப்பாடு அல்லது பணி செய்ததிலிருந்து அல்லது பொது அல்லது தனிப்பட்ட அலுவல் வகித்ததிலிருந்து அல்லது கடன் கொடுக்கும் வியாபாரத்திலிருந்து இந்த அரையாண்டில் அல்லது முந்திய ஆண்டின் நிகரான அரையாண்டில் கிடைத்த வருமானம்;

(4) இந்த ஊரில் அல்லது பேரூரில் மட்டும் கடன் கொடுத்தல் அல்லாத வேறு வியாபாரம் நடத்தப்பட்டால்—

(அ) இந்த அரையாண்டு அடங்கிய ஆண்டுக்காக அந்நிறுமம் அல்லது நபருக்கு வருமான வரி விதிக்கப்பட்டிருந்தால்—அந்த வருமான வரி விதிக்கும் காரியத்துக்காக அந்நிறுமத்தின் அல்லது ஆளின் இலாபங்களும் ஆதாயங்களும் 1922 ஆம் ஆண்டின் இந்திய வருமான வரிச் சட்டத்தின்படி எந்தத் தொகையாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றன என்பது;

(ஆ) மேற்படி இலாபங்களையும் ஆதாயங்களையும் கண்டறிய முடியாவிட்டால் அல்லது இந்த அரையாண்டுக்குப் பொருந்துகிற ஆண்டுக்காக வருமான வரி விதிக்கப்பட்டிராவிட்டால்—

(i) இந்த அரையாண்டில் இந்த ஊரில் அல்லது பேரூரில் நடத்தப்பட்ட வியாபாரத்தின் விற்றுமுதல்; அல்லது

(ii) அத்தகைய விற்றுமுதலைக் கண்டறிய முடியாவிட்டால், முந்திய ஆண்டுக்குப் பொருந்தும் அரையாண்டில் நடைபெற்ற வியாபாரத்தின் விற்றுமுதல்.

(5) அந்நிறுமம் அல்லது ஆளின் ஒரு பகுதி மட்டில் இவ்வூரிலும் அல்லது பேரூரிலும், ஒரு பகுதி மட்டில் அவ்வூருக்கு அல்லது பேரூருக்கு வெளியிலும் கடன் கொடுத்தல் அல்லாத வேறு வியாபாரம் நடத்தினால்—

(அ) இந்த அரையாண்டில் அவ்வூரில் அல்லது பேரூரில் நடத்தப்பட்ட வியாபாரத்தின் விற்றுமுதல், அல்லது

(ஆ) அந்த விற்றுமுதலைக் கண்டறிய முடியாவிட்டால், முந்திய ஆண்டுக்குப் பொருந்தும் அரையாண்டில் அவ்வூரில் அல்லது பேரூரில் நடத்தப் பட்ட வியாபாரத்தின் விற்றுமுதல்.

(6) வரி விதிக்கப் பெறுபவருக்கு—

(அ) அவ்வூருக்கு அல்லது பேரூருக்கு வெளியே நடத்தப்படும் வியாபாரத்திலிருந்தும்,

(ஆ) வரி விதிக்கப் பெறுபவர் இந்த அரையாண்டில், மொத்தத்தில் அறுபது நாட்களுக்குக் குறையாமல் இவ்வூரில் அல்லது பேரூரில் வசித்திருந் தால், இந்த அரையாண்டில் ஓய்வூதியத்திலிருந்தும் அல்லது முதலீடுகளி லிருந்தும் கிடைத்த வருமானம்.

((7) மொத்த வருமானத்தின் அடிப்படையின் பேரில் அந்நிறுமம் அல்லது அவர் வரி விதிக்கப் பெறுவதற்குட்பட்டவரென்று அது கருதுகின்றது அல்லது அவர் கருதுகிறார் என்பது.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

52. வண்டிக்கு வரி—விலக்கும், பெரும விதிப்பு வீதங்களும் குறும விதிப்பு வீதங்களும்.—(1) 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 119 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படிக்கான வண்டி வரியை—

(அ) மைய அல்லது மாநில அரசுகளுக்குச் சொந்தமானவையும் இராணுவக் காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படுபவையுமான வண்டிகளுக்கும்,

(ஆ) வண்டி செய்பவர்களும் வண்டி வியாபாரிகளும் விற்பனை செய்வ தற்காக மட்டும் வைத்திருக்கிற வண்டிகளுக்கும்,

(இ) அரையாண்டு முழுவதும் இயங்காமல் இருக்கும் அல்லது வண்டி உற்பத்தி செய்பவர் இடத்தில் இருந்துவரும் வண்டிகளுக்கும், விதிக்கக் கூடாது.

2. அடியிற்கண்ட அட்டவணையின் (2) பத்தியில் உள்ள வீதங்களுக்கு மேற்படாமலும், (3) பத்தியில் உள்ள வீதங்களுக்குக் குறையாமலும் இருக்கிற வீதங்களின்படி வண்டி வரியை விதிக்க வேண்டும் :—

அட்டவணை

வண்டியின் விவரம். (1)	பெரும அரையாண்டு வரி. (2) ரூ காசு.	குறும அரையாண்டு வரி. (3) ரூ. காசு.
(அ) விசை வில்லுகளுடன் அல்லது விசை வில்லுகளுக்காகச் செயலாற்றும் பிற சாதனங்களுடன் கூடியவையும், ஒன்று அல்லது பல கால்நடைகளால் இழுக்கப்படுவதற்கென அமைக்கப்பட்டவையுமான நான்கு சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கும்	10 00	5 00
(ஆ) விசை வில்லுகளுடன் அல்லது விசை வில்லுகளாகச் செயலாற்றும் பிற சாதனங்களுடன் கூடியவையும் ஒன்று அல்லது பல கால்நடைகளால் இழுக்கப்படுவதற்கென அமைக்கப்பட்டவையுமான இரண்டு சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கும்	5 00	1 50
(இ) இரு சக்கர அல்லது முச்சக்கர வண்டி ஒவ்வொன்றுக்கும்	2 00	1 00
(ஈ) விசை வில்லுகளுடன் அல்லது விசை வில்லுகளாகச் செயலாற்றும் பிற சாதனங்களுடன் கூடிய குழந்தைத் தொட்டில் வண்டி அல்லது நடை வண்டியாயிராததுமான வேறு வண்டி ஒவ்வொன்றுக்கும்	3 00	1 50
(உ) விசை வில்லுகள் அல்லது விசை வில்லுகளாகச் செயலாற்றும் பிற சாதனங்கள் இல்லாத (அ), (ஆ), (இ), (ஈ) இனங்களின் கீழ் வராத வண்டி ஒவ்வொன்றுக்கும் ..	4 00	1 50

3. (1) வரி விதிக்கப்படத் தக்க ஒரு வண்டியைத் தம் உடைமையில், வசத்தில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒவ்வொருவரும், அந்த அரையாண்டிலே அறுபது நாட்களுக்குக் குறையாத காலத்துக்கு ஊரிலே அல்லது பேரூரிலே அவ்வண்டி வைத்திருக்கப்பட்டால் அல்லது பயன்படுத்தப் பட்டால், முழு அரையாண்டு வரி செலுத்துவதற்கு உட்பட்டவராவார்.

(2) அத்தகைய மொத்தக் கால அளவு பதினைந்து நாட்களுக்கு மேற் பட்டும் அறுபது நாட்களுக்குக் குறைவாகவும் இருந்தால், அரையாண்டு வரியில் பேர் பாதி மாத்திரம் விதிக்கப்படும்.

(3) அத்தகைய மொத்தக் கால அளவு பதினைந்து நாட்களுக்கு மேற் படாவிட்டால், அந்த அரையாண்டுக்காக வரி எதுவும் விதிக்கப்படமாட்டாது.

(4) வரி விதிக்கப்படத் தக்க வண்டி ஒன்றை அந்த ஊரில் அல்லது பேரூரில் தம் உடைமையில், வசத்தில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒவ்வொருவரும், கீழ்க்கண்டதற்கு மாருக மெய்ப்பிக்கப்படுகிற வரையில், அந்த அரையாண்டில் அறுபது நாட்கள் அவ்வூரில் அல்லது பேரூரில் அதை வைத்திருந்ததாக அல்லது பயன்படுத்தியிருப்பதாகக் கொள்ளப்படுவார்.

(5) (1), (2) உள்விதிகளில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதக மில்லாமலே, எவரும்—

(அ) எந்த வண்டியைப் பற்றி ஓர் அரையாண்டுக்காக வேருெருவர் ஊராட்சிக்கு ஏற்கெனவே முழு வரி செலுத்தியிருக்கிருரோ, அந்த வண்டியி னிமித்தம் அதே அரையாண்டில் ஊராட்சிக்கு வரி செலுத்துவதற்கு உள்ளாக மாட்டார்; அல்லது

(ஆ) எந்த வண்டி பற்றி தமிழ்நாடு மாநிலத்திலிருக்கிற ஒரு ஊராட்சிக்கு பேரூர் குழுவுக்கு, நகராட்சி மன்றத்துக்கு அல்லது பாளைய அதிகாரிக்கு ஏற்கெனவே வரி செலுத்தப்பட்டிருக்கிறதோ; அந்த வண்டியி னிமித்தம்; அவ்வூரில் அல்லது பேரூரில் செலுத்தப்படத்தக்க வரி; ஏற்றவாறு, தமிழ்நாடு மாநிலத்திலிருக்கிற அந்த வேருெரு ஊராட்சிக்கு பேரூர் குழுவுக்கு நகராட்சி மன்றத்துக்கு அல்லது பாளைய அதிகாரிக்கு ஏற்கெனவே செலுத்தப் பட்ட வரியை விட, அதிகமாயிருந்தால், அந்த அதிகத்துக்கு மேற்பட்டு ஊராட்சிக்குச் செலுத்துவதற்கு உள்ளாகமாட்டார்.

4. அந்த அரையாண்டுக்குள், ஒருவர், ஒரு வண்டிக்குப் பதிலாக 2 விதியில் கண்ட அட்டவணையில் உள்ள அதே விவரப்படியிருக்கிற வேருெரு வண்டியை வைத்துக் கொண்டால், அவர் வண்டி அழிந்து போனதனுல்

வேறொன்று வைத்துக் கொள்ளப்படுவதில், அவ்வாறு பதில் செய்யப்பட்ட வண்டி அழிந்து போன காலத்தில் அதை அவர் தம் உடைமையில், வசத்தில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருந்தால், வரியை ஒரு தடவைக்கு மேற்பட்டுச் செலுத்துவதற்கு உள்ளாகமாட்டார் ; அவ்வாறு செலுத்தப்படும் வரித் தொகையானது, அழிந்து விடப்பட்ட வண்டியும் அந்த வண்டிக்குப் பதிலாக வைத்துக் கொள்ளப்பட்ட வண்டியும் அரையாண்டில் வைத்துக் கொள்ளப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட நாட்களின் மொத்த எண்ணிக்கையினால் முறைப்படுத்தப் படும்.

5. ஊராட்சி ஒப்பளிப்பைப் பெற்றுக்கொண்டு அல்லது அது செய்யும் ஒழுங்குமுறை விதிகளின்படி, அடையாள உடையணிந்த தொழுவக்காரரோடு அல்லது விற்பனைக்கு அல்லது வாடகைக்கு வண்டிகளை வைத்திருக்கிற வேறொருவரோடு, வண்டி வரிக்குப் பதிலாகக் குறிப்பிட்ட தொகை கொடுக்க வேண்டுமென்பது பற்றி, ஓர் ஆண்டுக்கு மேற்படாத எந்தக் கால அளவுக்கேனும் இணக்கம் செய்து கொள்ளலாம்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(91) **வண்டி வரியையும் தொழில் வரியையும் வசூலிப்பது.**—ஆண்டுக்கொரு முறை வீட்டு வரி வசூலிப்பது பற்றிய விளக்க உரைகள், வண்டி வரியையும் தொழில் வரியையும் வசூலிப்பதற்கும் பொருந்தும்.

(1962 ஏப்ரல் 18 ஆம் தேதிய 62780, எல். தனி/62-1 எண் குறிப்பாணை.)

1950-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படியும், 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படியும், அரையாண்டு தோறும் வீட்டு வரி விதித்து வாங்க வேண்டும். பொதுவாக ஊர்வாசிகள் ஆண்டுக்கொரு முறை முக்கிய அறுவடையிலிருந்துதான் தங்கள் வருமானத்தைப் பெறுகிறார்கள். ஆகையால், இப்போதிருப்பதைப் போல் வீட்டு வரியை அரையாண்டுக்கொரு முறை விதித்து வாங்குவதற்குப் பதிலாக, ஊராட்சிகள் அவ்வரியை ஆண்டுக்கொரு முறை விதித்து, வரி செலுத்துவோரிடமிருந்து நிலவரியோடு கூட வசூலித்தால், சில பரப்புகளில் இருக்கிற ஊர்வாசிகளுக்கு வசதியாகவும் எளிதாகவும் இருக்கலாம்.

இரண்டு அரையாண்டுகள் சம்பந்தமாகவும் நிலவரியில் செய்வது போல, நிலத் தீர்வைத் தவணை (கிஸ்தி) மாதங்களாகிய டிசம்பர் முதல் அடுத்த ஏப்ரல் வரையில் வரி வசூலிப்பதற்குச் சட்டப்படிக்கான ஆட்சேபணை எதுவுமில்லை. ஒரேவொரு நிபந்தனை என்னவென்றால், கைப்பற்றுதல் முதலியனவை

களைப் போல் வலுக்கட்டாயச் செயல் மேற்கொள்ள வேண்டியிருக்கும்போது, அந்த அரையாண்டு வரிக்கான பட்டியலை, வரி விதிக்கப் பெறுபவரிடம் சம்பந்தப்பட்ட அரையாண்டிலாவது அடுத்துவரும் அரையாண்டிலாவது, சேர்ப்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அரையாண்டிலாவது அதற்கடுத்துவரும் அரையாண்டிலாவது பட்டியலைக் சேர்ப்பிக்கத் தவறிப்போனால், அத்தொகையை வசூலிப்பதற்காக உரிமையியல் வழக்குத் தொடரலாம்.

(1961 பெப்ரவரி 15 ஆம் தேதிய 190984/எல்1/60-1 ஆம் எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(92) **வண்டி வரியின் மதிப்பீடும் வசூலும்.**—(i) ஊராட்சிகளில் விதித்து வாங்கப்படத் தக்க வண்டி வரியை மதிப்பிடுவதற்காகவும் வசூலிப்பதற்காகவும், 101 ஆம் எண் (வண்டி வரிக்குட்பட்ட வண்டிகளின் பட்டியல்), 102 ஆம் எண் (வண்டிகளின் அட்டவணை), 103 ஆம் எண் (வண்டிகளின் உரிமம்) ஆகிய மூன்று ஊராட்சிப் படிவங்களைப் பயன்படுத்த வேண்டும்;

(ii) ஊராட்சியின் செயல் அதிகாரி 101 ஆம் எண் கி. ப. படிவப்படி அரையாண்டுதோறும் கேட்புப் பதிவேடு ஒன்றைத் தயாரிக்க வேண்டும்;

(iii) செயல் அதிகாரி, வண்டி வரி செலுத்த வேண்டிய ஒவ்வொருவருக்கும் 102 ஆம் எண் கி. ப. படிவப்படி உள்ள அச்சிட்ட அட்டவணை ஒன்றை அனுப்ப வேண்டும்; அவர் வைத்திருக்கிற அல்லது பயன்படுத்துகிற வண்டிகள் சம்பந்தமாக, வரி மதிப்பிடுவதற்குச் செயல் அதிகாரி அவசியமெனக் கருதுகிற தகவலைக் கொண்டு நிரப்புவதற்காக அவ்வாறு அனுப்ப வேண்டும்;

(iv) அந்த அட்டவணை அனுப்பப் பெற்றிருப்பவர், அதில் மேற்படி தகவலை எல்லாம் குறித்து, கையெழுத்தும் தேதியும் போட்டு, அதைப் பெற்றுக் கொண்டதிலிருந்து ஒரு வாரத்துக்குள் ஊராட்சி அலுவலகத்துக்கு அனுப்பிட வேண்டும்;

(v) கொடுக்கப்பட வேண்டிய கேட்பு அறிவிப்பும் பற்றுச்சீட்டும் உரிமமும் 103 ஆம் எண் ஒருங்கிணைந்த படிவப் பிரகாரம் இருக்க வேண்டும்.

(i) (iv) உள்பத்தியில் குறிப்பிட்டிருக்கிற ஒரு வார காலம் கழிந்த பிறகு, செயல் அதிகாரி (103 ஆம் எண் கி. ப. படிவப்படி உள்ள) கேட்பு அறிவிப்பினை அவரிடம் சேர்ப்பிக்கும்படிச் செய்ய வேண்டும், வண்டி வரிக்கு உட்பட்டவரென்று செயல் அதிகாரி கருதுகிற தொகையை, அவ்வாறு சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் செலுத்தும்படி அந்த அறிவிப்பில் அவரைக் கேட்க வேண்டும்,

(vii) ஒரு வண்டி சம்பந்தமாய்ச் சேர வேண்டிய வரித் தொகையைச் செலுத்தினுல், செயல் அதிகாரி, பெற்றுக் கொண்ட தொகைக்காக ஒரு பற்றுச் சீட்டு வழங்க வேண்டும்; அந்தச் செலுத்தீடு சம்பந்தப்படுகிற காலம் வரையில் அவ்வண்டியை வைத்திருக்க அல்லது பயன்படுத்த ஓர் உரிமத்தையுங் கூட வழங்க வேண்டும்.

(1961 ஜுன் 13-ஆம் தேதிய 1639 எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

53. சொத்து மாற்றங்களின் பேரில் தீர்வை.

1. சிறுபெயர்.—இவ்விதிகளை, 1961-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் (உடைமை மாற்றங்களின் பேரில் தீர்வை) விதிகள் என்று சொல்லலாம்.

2. பொருள் வரையறைகள்.—இவ்விதிகளில் பொருளினுல் சந்தர்ப்பத்தில் முரண்பாடு எதுவும் இராவிட்டால்—

(1) 'சட்டம்' என்பது, (1958-ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டம்) 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் எனப் பொருள்படும்.

(2) 'முறை ஆவணம்' என்பது, அசையாப் பொருளின் எந்த விற்பனை பரிமாற்று, கொடை, சுவாதீன அடைமானம் அல்லது நிரந்தரக் குத்தகையின் மீது 124 ஆவது பிரிவின்படி மாற்றத் தீர்வை விதிக்கப்படத் தக்கதாயிருக்கிறதோ அந்த விற்பனை முதலியவை பற்றிய முறை ஆவணம் எனப் பொருள்படும்;

(3) 'பிரிவு' என்பது மேற்படிச் சட்டத்தின் ஒரு பிரிவு எனப் பொருள்படும்;

(4) 'முத்திரைச் சட்டம்' என்பது தமிழ்நாடு மாநிலத்தில் அமலில் இருக்கிற (1899-ஆம் ஆண்டின் II ஆவது மையச் சட்டமாகிய) 1899-ஆம் ஆண்டின் இந்திய முத்திரைச் சட்டம் எனப் பொருள்படும்;

(5) 'மாற்றத் தீர்வை' என்பது, உடைமையின் மாற்றங்களின்மீது 124-ஆவது பிரிவின்படி விதிக்கப்படத்தக்க தீர்வை எனப் பொருள்படும்.

(6) இவ்விதிகளில் பொருள் வரையறை செய்யப்பட்டிராத சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும், முத்திரைச் சட்டத்திலும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலும் முறையே எந்தப் பொருள்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகள் பொருந்தும்.

3. **முத்திரைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மாற்றத் தீர்வைக்குப் பொருந்தும் என்பது.**:—(1) முத்திரைச் சட்டத்திலும் அதன்படி செய்யப்பட்ட விதிகளிலும் கண்ட ஏற்பாடுகள் எல்லாம், மேற்படிச் சட்டப்படி விதிக்கப்படத்தக்க தீர்வை சம்பந்தமாகப் பொருந்துவது போலவே, மாற்றத் தீர்வை சம்பந்தமாகவும் கூடிய வரையில் பொருந்தும்.

(2) மாற்றத் தீர்வையாவது அதன் ஒரு பாகமாவது பத்து காசுக்குக் குறைவாயிருந்தால், அத்தீர்வையை அல்லது பாகத்தை வசூலிக்கக் கூடாது.

4. **முறை ஆவணங்களில் காட்ட வேண்டிய விவரங்கள் சம்பந்தமாகப் பதிவு செய்யும் அலுவலர்களின் கடமைகள்.**—(1) எந்த முறையாவணத்தையேனும் பதிவு செய்வதற்காக அது பதிவு செய்யும் அலுவலரிடம் காட்டப்படும் போதெல்லாம், 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 24 (2) (அ) பிரிவிலும் முத்திரைச் சட்டத்தின் 27-ஆவது பிரிவிலும் சொல்லியிருக்கிறபடி, அந்த 27-ஆவது பிரிவில் குறிப்பிட்டிருக்கிற விவரங்கள் தனியாக அம்முறை ஆவணத்தில் காட்டப்பட்டிருக்கின்றனவா என்று அந்த அலுவலர் பார்க்க வேண்டும்; அதனுடைய ஆட்சி வரம்புக்குள் சம்பந்தப்பட்ட உடைமை இருக்கிறதோ அந்த ஊராட்சி தெளிவாக அம்முறை ஆவணத்தில் குறிப்பிடப்படும்படியும் அவர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(2) மேற்சொன்ன விவரங்கள் அம்முறை ஆவணத்தில் அவ்வாறு தனியாகக் காட்டப்படாவிட்டால், பதிவு செய்யும் அலுவலர் அதைக் கைப்பற்றிக் கொண்டு, அசல் பிரதியை மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்; அப்போது, 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 124 (2) (ஆ) பிரிவு முத்திரைச் சட்டத்தின் 64-ஆவது பிரிவு, இவைகளின் முறைகளை அவர் மாவட்ட ஆட்சியாளரின் கவனத்துக்குக் கொண்டு வர வேண்டும்.

(3) மாற்றம் முறை ஆவணத்தின்மீது விதிக்கப்படத்தக்க தீர்வை பின்வருமாறு முறைப்படுத்தப்படும் :—

(ஆ) மாற்றம் செய்து கொள்ளப்படும் உடைமைகளின் மதிப்புகள் சமமாயிராவிட்டால், அதிக மதிப்புள்ள உடைமையின் . மதிப்பின்மீது தீர்வை விதிக்க வேண்டும்;

(ஆ) பரிமாற்றம் செய்து கொள்ளப்படும் உடைமைகளின் மதிப்புகள் சம்மாயிருந்தால், விதிக்கப்படத்தக்க அதிகத் தீர்வைத் தொகையை விதிக்க வேண்டும்.

5. மாற்றத் தீர்வை சம்பந்தமாகக் கணக்குகளை வைத்துவருவதும் ஒருங்கிணைப்பதும்.—(1) (அ) பதிவு செய்யும் அலுவலர் ஒவ்வொருவரும், தாம் பதிவு செய்த முறை ஆவணம் ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் செலுத்தப்பட்ட தீர்வை பற்றிய கணக்கு ஒன்றை வைத்து வர வேண்டும்; முத்திரைச் சட்டத்தினால் விதிக்கப்பட்ட தீர்வையையும் மாற்றத் தீர்வையையும் அதில் தனித் தனியாகக் காட்ட வேண்டும். எந்த ஊராட்சி வரம்புக்குள் சம்பந்தப்பட்ட உடைமை இருக்கிறதோ அந்த ஊராட்சி ஒவ்வொன்றுக்காகவும் அவர் தனிக் கணக்கு ஒன்றை வைத்து வரவும் வேண்டும்; அப்படிச் செய்யும்போது, அவசியமான போதெல்லாம், மாற்றத் தீர்வை விதிக்கப் பெற வேண்டிய தொகையைச் சம்பந்தப்பட்டவரிடமிருந்து கண்டறிய வேண்டும்.

(ஆ) பதிவு செய்யும் அலுவலர்கள் இதன் பொருட்டுக் கணக்குகள் வைப்பது பற்றியும், ஒவ்வொரு காலாண்டுக்குமான ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளைச் சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் கருவூல அலுவலர்களுக்கு இன்ன படிவத்தில் அனுப்ப வேண்டுமென்பது பற்றியும், முறை ஆவணப் பதிவுத் துறைத் தலைவர் செயல் விளக்க உரைகளைப் பிறப்பிக்கலாம்.

(2) 1908-ஆம் ஆண்டின் இந்திய முறை ஆவணப் பதிவுச் சட்டத்தில் கண்ட 17-ஆவது பிரிவின்படி சில முறை ஆவணங்களைப் பதிவு செய்வது கட்டாயமில்லை என்னும் காரணத்தினால் பதிவு செய்யும் அலுவலர்களிடம் அவை வராமலிருந்தால், அவை பற்றி, எந்த மாவட்ட ஆட்சியாளருக்கு முன் அத்தகைய ஒரு முறை ஆவணம் முத்திரைச் சட்டத்தில் கண்ட 31-ஆவது அல்லது 41-ஆவது பிரிவின்படி கொண்டு வரப்படுகிறதோ, அல்லது யார் மேற்படிச் சட்டத்தில் கண்ட 33-ஆவது பிரிவின்படி அத்தகைய ஒரு முறை ஆவணத்தை நிறுத்தி வைத்துக் கொள்கிறாரோ, அல்லது அத்தகைய ஒரு முறை ஆவணம் சம்பந்தமாகச் செலுத்தப்பட்ட தீர்வையையும் அபராதத்தையும் பற்றிய சான்றினை அல்லது அச்சட்டத்தில் கண்ட 38-ஆவது பிரிவின்படி அத்தகைய ஒரு முறை ஆவணத்தின் அசலை யார் பெற்றுக் கொள்கிறாரோ, அந்த மாவட்ட ஆட்சியாளர் அத்தகைய முறை ஆவணம் ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் செலுத்தப்பட்ட தீர்வை பற்றிய கணக்கு ஒன்றை வைத்து வர வேண்டும்; அப்படிச் செய்கையில், முத்திரைச் சட்டத்தினால் விதிக்கப்பட்ட தீர்வையையும் மாற்றத் தீர்வையையும் தனித் தனியாகக் காட்ட வேண்டும்; மேலும், அவர், ஒருங்கிணைக்கப்பட்ட காலாண்டுக் கணக்கு ஒன்றை.

ஒவ்வொரு காலாண்டும் முடிந்த பிறகு ஒரு மாதத்துக்குள், சம்பந்தப்பட்ட உறுதி கூறும் மாவட்டப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்; அவ்வாறு அனுப்புகையில், அத்தகைய முறை ஆவணம் ஒவ்வொன்றிலும், எழுதிக் கொடுப்பவர்—உரிமையாளர் ஆகியவர்களின் பெயர்கள், எழுதிக் கொடுத்த தேதி, விவகாரத்தின் தன்மை, மாற்றத் தீர்வை விதிக்கப் பெறத்தக்க தொகை, ஊராட்சி எல்லைகளுக்குள் அல்லது அந்த எல்லைகளுக்கு வெளியே இருக்கிற உடைமையின் விவரம் ஆகியவை பற்றிய விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

(3) எதிலேயும் ஒரு முறை ஆவணத்தின்மீது செலுத்தப்படத் தக்க முழுத் தீர்வையையும் வசூலிக்க முடியாவிட்டால், அப்போது, அம்முறை ஆவணத்தினிமித்தம் வரப்பற்றிய தீர்வையில், முத்திரைச் சட்டத்திஞல் விதிக்கப்பட்ட தீர்வையைவிட அதிகமாயிருக்கும் பாகத்தை மட்டும், இவ்விதியில் குறிப்பிட்டிருக்கிற கணக்குகளில், மாற்றத் தீர்வையாகக் கருத வேண்டும்.

6. திருப்பிக் கொடுக்கப்பட்ட மாற்றத் தீர்வை பற்றிய காலாண்டு விவரப் பட்டியலைச் சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளருக்கு மாவட்ட ஆட்சியாளர் அனுப்ப வேண்டுமென்பது.—ஒரு முறை ஆவணத்தின்மீது செலுத்தப்பட்ட மாற்றத் தீர்வையைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஒப்பளிப்பு வழங்குகிற மாவட்ட ஆட்சியாளர் ஒவ்வொருவரும், அந்தக் காலாண்டில் எந்த முறை ஆவணங்கள் பற்றி அவ்வாறு திருப்பிக் கொடுப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கப் பட்டதோ அந்த முறையாவணங்கள் பற்றிய விவரப் பட்டியல் ஒன்றை, ஒவ்வொரு காலாண்டும் முடிந்த பிறகு ஒரு மாதத்துக்குள் சம்பந்தப்பட்ட உறுதி கூறும் மாவட்டப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்; அவ்வாறு அனுப்புகையில், திருப்பிக் கொடுக்கப்பட்ட மாற்றத் தீர்வைத் தொகையையும், அத்தகைய ஒவ்வொரு முறை ஆவணம் சம்பந்தமாகவும் 5 (2) விதியில் குறிப்பிட்டுள்ள விவரங்களையும் அப்பட்டியலில் குறிப்பிட வேண்டும்.

7. முறை ஆவணப் பதிவுத் துறைத் தலைவர், உள்ளாட்சி அதிகாரிக் குழுக்களுக்குச் செலுத்தப்படத் தக்க தொகை சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் கருவூல அலுவலர்களுக்குச் செய்தி அனுப்ப வேண்டுமென்பது.—(1) ஊராட்சிகளுக்குக் காலாண்டுதோறும் செலுத்தப்படத் தக்க தொகைகள் 5-ஆவது விதியைச் சேர்ந்த (1), (2) உள்விதிகளில் குறிப்பிட்டுள்ள முறை ஆவணங்கள் சம்பந்தமாக அரசாங்கத்தாருக்கு வரவு வைக்க வேண்டிய, மாற்றத் தீர்வையை வசூலிப்பதனிமித்தம் கழித்துக் கொள்ள வேண்டிய தொகை, ஆகியவை பற்றி செய்தியை ஆணைப் பதிவுத் துறைத் தலைவர் ஒவ்வொரு காலாண்டும் முடிந்த பிறகு இரண்டு மாதங்கள், சம்பந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்களுக்கு அனுப்ப வேண்டும்.

(2) ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலுள்ள ஊராட்சிகளுக்குச் செலுத் தப்படத் தக்க தொகைகளை, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் உள்ளாட்சி வைப்புத் தொகை IIஆம் எண் கணக்கில் வரவு வைக்க வேண்டும்; பேரூராட்சிகளுக்குச் செலுத்தப்படத் தக்க தொகைகளைச் சம்பந்தப்பட்ட பேரூராட்சி நிதியில் நேரடியாக வரவு வைக்க வேண்டும். செலுத்தப்பட்ட மாற்றத் தீர்வையிலிருந்து, மாற்றத் தீர்வையையும் 6-ஆவது விதியில் குறிப் பிட்டிருக்கிறவாறு திருப்பிக் கொடுக்கப்படும் தொகைகள் எவையேனும் இருந்தால் அவைகளையும் வசூலிப்பதனிமித்தம் அதில் மூன்று சதவீதத் தொகைகளையும், கழித்துக் கொண்ட பிறகு எஞ்சி நிற்பதையே அத்தொகை குறிக்கும்.

(3) ஆவணப் பதிவுத் துறைத் தலைவர் அனுப்புகிற கணக்குகளின் விவரப் பட்டியலில், ஊராட்சிகளுக்குச் செலுத்தப்படத் தக்க தொகையையும் ஆவணப் பதிவுத் துறைக்குச் சரிக்கட்டப்படத் தக்க தொகையையும் பற்றிய விவரங்கள் தெளிவாகவும் தனித் தனியாகவும் கண்டிருக்க வேண்டும். இந்த விவரப் பட்டியலின்படி ஒன்றை ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கும், சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளருக்குங்கூட அனுப்ப வேண்டும்.

8. **ஊராட்சி ஒன்றிய மன்றம் உள்ளாட்சி அதிகாரிக் குழுக்களுக்குத் தொகைகள் செலுத்துவது.**—சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றம், ஒவ்வொரு காலாண்டும் முடிந்த பிறகு மூன்று மாதங்களுக்குள், மேற்படிச் சட்டத்தில் 124-ஆவது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவில் கண்டுள்ள நடைமுறையின்படி, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்குச் செலுத்தப்படத் தக்க தொகைகளை அவைகளுக்குச் செலுத்த வேண்டும்.

9. மாற்றத் தீர்வையை வசூலிப்பதனிமித்தம் கழித்துக் கொள்ளப்படும் தொகைகளை அரசாங்கத்தாருக்கு வரவு வைக்க வேண்டும்.

(1961 ஏப்ரல் 26-ஆம் தேதிய 1248-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1962 சனவரி 27-ஆம் தேதிய 210-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(93) **உடைமை மாற்றங்களின் மீதான தீர்வை வீதம்.**—அசையாப் பொருளின் விற்பனை, பரிமாற்றம், கொடை, சுவாதீன அடைமானம், நிரந்தர குத்தகை, முறை ஆவணங்கள் சம்பந்தமாக உடைமையின் மாற்றங்களின் மீதான, தீர்வை வீதம், 1961 ஏப்ரல் 1-ஆம் தேதியன்றும் அன்று முதற்

கொண்டும், 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி அத்தீர்வை விதிக்கப் பெறத் தக்கதொகையில் ஐந்து சதவீதமாகும் என்று அரசு கட்டளையிடுகிறார்கள்.

(1961 மார்ச்சு 11-ம் தேதிய 721-ம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சி துறைப் பல்வகை அரசு ஆணை.)

54. உழவு நிலத்தின்மீது வரி.—1. (1) பின்வருபவை போன்ற குறிப்பிட்ட காரியத்துக்காக ஒரு ஊரிலுள்ள உழவு நிலத்தின் மீது அரையாண்டு தோறும் வரி விதிக்கப்படத் தக்கதாகும்—

(அ) எந்தப் பாசன வாய்க்கால்கள், ஏரிகள் சம்பந்தமாக (1958 ஆம் ஆண்டின் XXXV-வது தமிழ்நாடு சட்டமாகிய) 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 85-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படிக் குடிமராமத்துக் கட்டணம் விதிக்கப்படுவதில்லையோ அந்த வாய்க்கால்களுக்கும் ஏரிகளுக்கும் செப்பனிடுகள்;

(ஆ) நீர் வழங்கு கட்டு வேலைகளை அல்லது வடிகால் கட்டு வேலைகளைக் கட்டுவது, பேணுவது, செப்பனிடுவது, விரிவாக்குவது அல்லது சீர்திருத்துவது;

(இ) வாயுவைக் கொண்டு அல்லது மின்சாரத்தைக் கொண்டு விளக்கேற்றுவது;

(ஈ) சாலை போடுவது அல்லது பாலம் அல்லது மதகு கட்டுவது; அல்லது

(உ) பண்பாடு, கல்வி, மருத்துவம், இன்னும் இவை போன்ற காரியங்களுக்காகப் பயன்படுத்தக் கருதியுள்ள கட்டிடங்களைக் கட்டுவது; அல்லது

(ஊ) மரங்களையும் செடிகளையும் பயிர்களையும் பாதுகாப்பது;

(எ) ஊராட்சி வளர்ச்சி ஏற்பாட்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படுகிற அல்லது அவ்வப்போது அதில் சேர்க்கப்படக்கூடிய ஒரு வளர்ச்சித் திட்டத்துக்காக ஈடு செய்யும் பங்குத் தொகையை வசூலிப்பது; அந்த வரி விதிப்பானது, அதற்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிற அரையாண்டுக்கு அடுத்துவரும் அரையாண்டில் முதல் தேதியிலிருந்து அமலுக்கு வரத் தொடங்கும்.

(ஏ) மண்வளப் பாதுகாப்புக் கட்டு வேலைகளைக் கட்டுவது அல்லது பேணுவது;

ஆனால், (ஏ) பகுதியில் குறிப்பிட்டிருக்கிற காரியத்துக்கான வரியானது, அப்பகுதியில் கண்டுள்ள கட்டு வேலைகளைக் கட்டுவதனால் அல்லது பேணுவதனால் நன்மையடைகிற உழவு நிலத்தின்மீது விதிக்கப்படத்தக்கதாகும்.

(2) வரி வீதமானது, நிலத்தின் பரப்பை அடிப்படையாகக் (கொண்டிருக்க வேண்டும்; ஆனால், நிலத்தின் மதிப்புக்கு ஏற்றதாயிருக்கும் வகையில், ஊராட்சி நன்செய் நிலத்துக்காகவும் கிணற்றுப் பாசன நிலத்துக்காகவும் புன்செய் நிலத்துக்காகவும் வெவ்வேறு விதங்களை அமைத்துக் கொள்ளலாம்;

ஆனால், இவ்வுள்விதியின்படி வெவ்வேறு வகைப் புன்செய் நிலங்களுக்கு வெவ்வேறு வீதங்களை அமைத்துக் கொள்ளும் காரியத்துக்காக, அந்த நிலங்களை, அவைகளில் விளைவிக்கப்படும் பயிர்களின் எண்ணிக்கைக்கு அல்லது பாசன ஆதாரங்களின் நன்மைக்கு ஏற்றவாறு வகைப்படுத்தலாம்.

2. (அ) வரி விதிப்பதற்கான கருத்துரு ஒவ்வொன்றையும், ஊராட்சி வட்டார வளர்ச்சி உதவி அலுவலர் மூலமாகக் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும். கோட்ட ஆட்சியாளர் அதை ஒப்பளிக்கும் அதிகாரிக்கு அனுப்ப வேண்டும்.

(ஆ) அத்தகைய கருத்துரு ஒவ்வொன்றுடனும், அடியிற்கண்டவைகளையும் சேர்த்தனுப்ப வேண்டும் :—

(i) இதற்கெனத் தனியாகக் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில், ஊராட்சி உறுப்பினர்களின் ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையில் பேர் பாதிக்குக் குறையாதவர்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறிய ஊராட்சித் தீர்மானம்; அந்த வரி விதிக்கப்படுவதன் நோக்கம், வரிவீதம், வரி விதிக்கப்படும் கால அளவு ஆகியவை அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்;

( ) கருத்துரு செய்யப்படுகிற ஆண்டுக்கு முந்தியுள்ள மூன்றாண்டுகளில் வெவ்வேறு கணக்குத் தலைப்புகளின்கீழ் வரவுகளையும் செலவுகளையும் காட்டும் ஒரு விவரப் பட்டியல்;

(iii) கருத்துரு செய்யப்படுகிற ஆண்டுக்கான வரவுச்செலவுத் திட்ட மதிப்பீடு;

(iv) எந்தக் கட்டு வேலை சம்பந்தமாக வரி விதிக்கக் கருதியிருக்கிறதோ அந்தக் கட்டு வேலைக்குத் தோராயமாக அல்லது குத்துமதிப்பாகப் பிடிக்கும் செலவுபற்றிய விவரங்களும், ஓர் அரையாண்டில் வசூலாகக்கூடிய வரித் தொகையும்;

3. இன்ன விதப்படியும் இன்ன கால அளவுக்கும் அந்த வரி விதிக்கப்படு மென்பதை, அவ்வரி விதிப்பை ஒப்பளிக்கிற ஆணையில் குறிப்பிட வேண்டும். அந்த வரி விதிக்கப்படுவதன் நோக்கம் நிறைவேறும் பொருட்டு அந்த ஆணையில் குறிப்பிட்டிருக்கிற கால அளவை அவசியமானல், அவ்வப்போது அதிகப்படுத்திக் கொள்ளலாம் ;

ஆனல், ஊராட்சிக்குப் போதுமான காரணத்துக்காகவும், ஒப்பளிக்கும் அதிகாரியின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டும், மேற்படி ஆணையில் அவ்வாறு குறிப்பிட்டிருக்கிற கால அளவுக்குள், அந்த வரி வீதத்தை மாற்றலாம், அவ்வரி விதிப்பைச் சிறிது காலம் நிறுத்தி வைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம்.

4. அவ்வரியிலிருந்து கிடைக்கும் தொகைகள், ஒரு தனி நிதியாக இருக்கும் ; அது கொடுக்கப்படுவதன் நோக்கத்துக்காகவென்று அது ஒதுக்கி வைக்கப்படும் ; அந்நிதிக்குத் தொடர்பான விவகாரங்களுக்காக ஒரு தனிக் கணக்கை வைத்து வர வேண்டும்.

5. வரிகளை மதிப்பிட்டு வசூலிப்பது சம்பந்தமாக (1958-ம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 178 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட XX, XXII பகுதிகளின்படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகள் இவ்வரியை மதிப்பிட்டு வசூலிப்பதற்கு அவசியமான மாறுதல்களுடன் பொருந்தும்.

(1962 சனவரி 22-ம் தேதிய, 184-ம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(1962 சூன் 28-ம் தேதிய 1474-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(1962 அக்டோபர் 16-ம் தேதிய 2232-ம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(1963 நவம்பர் 30-ம் தேதிய 2522-ம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

55. ஏதேனும் பொது அல்லது தனியார் அங்காடி சம்பந்தமாக அல்லது அதைப் பயன்படுத்துபவர் சம்பந்தமாக ஊராட்சி அல்லது செயல் அதிகாரி செலுத்தக் கூடிய அதிகாரங்கள்.—1. எந்த ஒருவர் அல்லது எந்த ஒருவருடைய வேலைக்காரர் ஒரு பொது அங்காடியில் அச்சமயம் அமலில் இருக்கிற துணைச் சட்டங்களை மீறியதற்காகக் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறாரோ

அவரைச் செயல் அதிகாரி அந்த அங்காடியிலிருந்து வெளியேற்றலாம்; அவர் தாமாகவோ தமது வேலைக்காரர்கள் அல்லது முகவர் மூலமாகவோ அந்த அங்காடியில் மேற்கொண்டு ஏதேனும் தொழில் அல்லது வியாபாரம் செய்யாத அல்லது அங்கே ஏதேனும் கடை விற்பனை மேடை அல்லது வேறு இடத்தை மேற்கொண்டு அனுபோகத்தில் வைத்துக் கொள்ளாதபடி தடுக்கலாம்; அத்தகைய ஒரு கடை, விற்பனை மேடை அல்லது இடத்தில் அவர் பெற்றிருக்கக் கூடிய ஏதேனும் குத்தகை அல்லது உரிமை நிலையை இறுதி செய்துவிடலாம்.

2. ஒரு தனியார் அங்காடியின் சொந்தக்காரர், அனுபோகதாரர் அல்லது குத்தகை உரிமைக்காரர் பின்வருமாறு செய்ய வேண்டுமென, ஊராட்சி அறிவிப்பு மூலமாக அவருக்கு ஆணையிடலாம் :—

(அ) அந்த அங்காடிக்கு அணுகு வழிகளையும் நுழைவாயில்களையும் பாதைகளையும் வாயில் முகப்புகளையும் வடிகால்களையும் சாக்கடை குழிகளையும் கட்டும்படியும், அந்த அங்காடிக்கு ஊராட்சி தகுதியெனக் கருதக்கூடிய விவரமும் எண்ணிக்கையும் உள்ள கழிப்பிடங்களை அவ்வாறே கருதக் கூடிய இடத்தில் ஏற்படுத்தும்படியும்;

(ஆ) அது முழுவதற்கும் அல்லது அதன் ஒரு பாகத்துக்குக் கூரை போடும்படி அல்லது தளவரிசை அமைக்கும்படி, அல்லது அடித் தரையின் எந்த பாகத்துக்கேனும், ஈரம், குப்பை போன்றவைகள் புக வழியளிக்காமல் எளிதில் துப்புரவு செய்வதற்கு வசதியளிக்கக் கூடியதென ஊராட்சி கருதுகிற பொருளைக் கொண்டு தள வரிசை அமைக்கும்படி;

(இ) அதில் சரிவரக் காற்றோட்டவிடும்படியும், அதற்கு நீர் வழங்கீடு ஏற்படுத்திக் கொடுக்கும்படியும்;

(ஈ) விற்பனை மேடைகளுக்கிடையில் போதுமான அகலமுள்ள பாதைகளை அமைக்கும்படியும் அங்காடியின் விற்பனை மேடைகளில், பாதை களில், கடைகளில், கதவுகளில் அல்லது வேறுபாகங்களில் ஊராட்சி கட்டளை யிடக்கூடிய மாறுதல்களைச் செய்யும்படியும்;

(உ) அதை நல்ல தூய்மையான நிலையில் வைத்திருக்கும்படியும்; எல்லா அழுக்கையும் குப்பை கூளங்களையும் அதிலிருந்து அகற்றி, ஊராட்சி கட்டளையிடக் கூடிய இடத்திலும் விதத்திலும் அவற்றைத் தீர்வு செய்யும் படியும்;

(ஊ) ஊராட்சி அவசியமெனக் கருதக்கூடிய வேறு துப்புரவு ஏற்பாடுகளைச் செய்யும்படி.

3. எவரேனும் இதன் பொருட்டு ஊராட்சி தனக்கு அறிவிப்புக் கொடுத்த பிறகு, அந்த அறிவிப்பில் கண்ட விதமாகவும் அந்த கால அளவுக் குள்ளும், 2-வது விதியில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் வேலையைச் செய்யத் தவறிப் போனால், ஊராட்சி அவருடைய உரிமத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம், அல்லது அவ்வேலைகள் முடிக்கப்பட்டாகிறவரையில் அவருக்கு உரிமம் வழங்க மறுத்துவிடலாம்.

4. உரிமம் அவ்வாறு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கையில் அல்லது உரிமம் புதுப்பிக்கப்படுகிறவரையில், எவரேனும் தனியார் அங்காடி ஒன்றைத் திறந்து வைத்திருப்பது சட்ட சம்மதமாகமாட்டாது.

5. தனியார் அங்காடி, ஒன்றில், அல்லது அதிலுள்ள ஏதேனும் கடை, விற்பனை மேடை, கொட்டில் அல்லது வேறு இடத்தில் பொறுப்பு வகிக்கிற சொந்தக்காரர் அனுபோகதாரர், அல்லது மேலாளர் எவரும், அது தொல்லை யாயிருக்கும்படி அதை வைத்திருக்கவுங் கூடாது, தொல்லையாயிருக்கும் ஒன்றை ஊராட்சி குறிப்பிடுகிற ஓரிடத்துக்கு உடனே அப்புறப்படுத்துப்படிச் செய்யத் தவறவுங் கூடாது.

6. (1) எவரேனும், 2 ஆவது விதியின்படிக்கான ஓர் அறிவிப்பின் வரை யறைகள் நிறைவேற்றத் தவறினாலும், கீழ்க்கண்ட I-ம் அட்டவணையின் முதல் பத்தியில் குறிப்பிட்டிருக்கிற வேறு விதிகளில் ஒன்றின் ஏற்பாடுகளை மீறினாலும், அவருக்கு, அந்த அட்டவணையின் இரண்டாம் பத்தியில் இதன் பொருட்டுக் கண்டுள்ள தொகைக்கு மேற்படாமல் தண்டப் பணம் விதிக்கப் படத் தக்கதாகும்.

(2) எவரேனும், (1) விதியில் குறிப்பிட்டுள்ள குற்றங்களில் எதை யேனும் செய்திருப்பதாகத் தண்டிக்கப்பட்ட பிறகும் தொடர்ந்து அக் குற்றத் தையே செய்து வந்தால், முந்திய குற்றத் தீர்ப்பின் தேதிக்குப் பிறகு அவர் அவ்வாறு தொடர்ந்து குற்றம் செய்து கொண்டுவரும் ஒவ்வொரு நாளுக் காகவும், கீழ்க்கண்ட II-ம் அட்டவணையின் இரண்டாவது பத்தியில் இதன் பொருட்டுக் கண்டுள்ள தொகைக்கு மேற்படாமல் அவருக்கு அபராதத் தண்டனை விதிக்கப்படத் தக்கதாகும்.

அட்டவணை I

சாதாரணத் தண்டங்கள்.

[6 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியைப் பார்க்கவும்.]

குற்றம்	விதிக்கப்படக்கூடிய தண்டப்பணம்.
(1)	(2)
2 ஆவது விதியின்படிக்கான அறிவிப்பின் வரையறைகளின்படி நடக்கத் தவறுவது	நூறு ரூபாய்
4 ஆவது விதியை மீறுவது	ஐம்பது ரூபாய்
5 ஆவது விதியை மீறுவது	இருபது ரூபாய்

அட்டவணை II.

தொடர்ந்து மீறிக்கொண்டே வந்தால் அதற்குத் தண்டங்கள்

[6 ஆவது விதியைச் சேர்ந்த (2) உள்விதியைப் பார்க்கவும்]

குற்றம்.	அன்றாடம் விதிக்கப்படக் கூடிய தண்டம்.
(1)	(2)
2. ஆவது விதியின்படிக்கான அறிவிப்பின் வரையறைகளின்படி நடக்கத் தவறுவது.	பத்து ரூபாய்
4 ஆவது விதியை மீறுவது	பதினைந்து ரூபாய்
5 ஆவது விதியை மீறுவது	பத்து ரூபாய்

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 சனவரி 11 ஆம் தேதிய 83 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

56. தனியார் அங்காடிகளின் கணக்குகள் வைப்பதும், தணிக்கை செய்வதும், ஆய்வு செய்வதும்.—(1) தனியார் அங்காடிகளின் சொந்தக்காரர்கள், அனுபோகதாரர்கள் அல்லது உரிமைக் குத்தகைக்காரர்கள், அந்த அங்காடிகள் பயன் படுத்தப்படுவதற்காக அன்றாடம் வசூலிக்கப்படும் தொகைகளுக்காக இசைவுச் சீட்டுகளையும், கால முறையில் வசூலிக்கப்படும் தொகைகளுக்காகப் பற்றுச் சீட்டுகளையும் கொடுக்க வேண்டும்.

(2) பற்றுச் சீட்டுகளையும் இசைவுச் சீட்டுச் சுவடிகளையும் இணைப்பில் கண்டுள்ள I ஆவது, II ஆவது படிவங்களின்படி அச்சிட வேண்டும்.

(3) வாங்கப்படுகிற கட்டண விதம் ஒவ்வொன்றுக்காகவும் தனித் தனியாக இசைவுச் சீட்டு சுவடிகளை அச்சிட வேண்டும்.

(4) மேற்படி அங்காடிகளின் சொந்தக்காரர்கள், அனுபோகதாரர்கள் அல்லது உரிமைக் குத்தகைக்காரர்கள், அந்த அங்காடிகளிலிருந்து கிடைக்கிற வருமானங்களுக்கும் அவைகளைப் பேணுவதற்குப் பிடிக்கும் செலவுக்கும் சரியான, நிறைவான கணக்குகளை வைத்து வரவேண்டும்; ஆய்வு செய்வதற்காக, சரிபார்ப்பதற்காக அல்லது தணிக்கை செய்வதற்காக, ஏற்றவாறு, ஊராட்சிச் செயல் அதிகாரியாவது, இதன் பொருட்டு ஊராட்சிச்செயல் அதிகாரியினிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கக் கூடிய வேறொருவராவது கேட்கும்போதெல்லாம் அவற்றைக் காட்ட வேண்டும்.

(5) வசூல்களையும் செலவுகளையும் பற்றிய பதிவேடு ஒன்றை, இணைப்பில், முறையே கண்டுள்ள III-ஆம், IV-ஆம் படிவங்களின்படி வைத்து வர வேண்டும். ஏற்றவாறு ஊராட்சிச்செயல் அதிகாரியாவது, ஊராட்சிச்செயல் அதிகாரியினிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கக் கூடிய வேறொருவராவது, ஒரு மாதத்துக்குக் குறையாத காலந்தோறும் அந்தப் பதிவேடுகளையும் இசைவுச் சீட்டுச் சுவடிகளையும் பற்றுச்சீட்டுச் சுவடிகளையும் சரிபார்த்து, அவசியமாயிருக்கிற குறிப்புரைகளை அதில் எழுத வேண்டும். கணக்குகள் சரியாக வைத்து வரப்படுவதாய்த் தெரியவந்தால், அவ்வாறு கண்டுள்ள சான்று ஒன்றைப் அப்பதிவேடுகளில் எழுதி வைக்க வேண்டும்.

(6) அங்காடியைத் திறந்து வைத்திருப்பதற்குரிய உரிமத்தைப் புதுப்பிக்கும்படிக் கோரிச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும், முந்திய ஆண்டில் (அல்லது உரிமத்துக்கான விண்ணப்பத்தின் தேதிக்கு முந்திய முழுமையான பன்னிரண்டு மாத காலத்தில்) அந்த அங்காடிகளுக்குச் சம்பந்தப்பட்ட வரவுகளையும் செலவுகளையும் காட்டும் விவரப்பட்டியல்

ஒன்றை அனுப்பவேண்டும். ஊராட்சிச்செயல் அதிகாரியானவர், உரிமத்தைப் புதுப்பிப்பதற்கு முன், மேற்சொன்ன விவரப் பட்டியலை, அங்காடிகளின் சொந்தககாரர், அனுபோகதாரர் அல்லது உரிமக் குத்தகைக்காரர்களுடைய படிகளுடன் வைத்துச் சரி பார்க்க வேண்டும்.

(7) 4 ஆவது, 5 ஆவது அல்லது 6 ஆவது விதியின் தேவைகளில் எவையேனும் நிறைவேற்றப்படாவிட்டால், ஊராட்சி உரிமத்தைப் புதுப்பிக்க மறுத்துவிடலாம்.

இணைப்பு.

படிவம் I.

(2 ஆவது விதியைப் பார்க்கவும்.)

அடிச்சீட்டு	வெளிச்சீட்டு
........................அங்காடி	திரு..............................
அறைக்கான	என்பவரிடமிருந்து 19..........காசு
........எண் ――――――――	...............அங்காடியில் உள்ள
விற்பனை மேடைக்கான	அறைக்கான
வாடகை 19...............காசு	.......ம் எண்―――――――――
ரூ. காசு	விற்பனை மேடைக்கான
9...............அன்று பெற்றுக்	வாடகையாகிய .... ரூபாய்
கொள்ளப்பட்டது.	பெற்றுக்கொள்ளப்பட்டது.
வாடகை வசூலிப்பவர்	ரூ. காசு.
	.....................அன்று பெற்றுக்
	கொள்ளப்பட்டது.
	வாடகை வசூலிப்பவர்.

படிவம் II.

(2 ஆவது விதியைப் பார்க்கவும்.)

அடிச்சீட்டு	வெளிச்சீட்டு
தொடரெண். இசைவுச் சீட்டு	இசைவுச் சீட்டு,
..............................அங்காடி	தொடரெண்.
நாள் ஒன்றுக்கு..............................	....................அங்காடி.
(வீதத்தை இங்கே எழுதவும்)	(வீதத்தை் இங்கே எழுதவும்)

படிவம் III.

தண்டல் பதிவேடு.

(5 ஆவது விதியைப் பார்க்கவும்.)

இசைவுச் சீட்டுகள் மூலம் வசூல்கள்.									மற்ற வரவுகள்.					
	கையிருப்பு.			கொடுக்கப் பட்டவை.			எஞ்சியிருப் பவை.		வாடகைகள்.		பலவகைப் பட்டவை.			
தேதி.	மதிப்பு.	முதல்....வரை தொடர் எண்கள்.	எண்ணிக்கை.	முதல்....வரை தொடர் எண்கள்.	எண்ணிக்கைகள்.	வசூலான தொகை.	முதல்....வரை தொடர் எண்கள்.	எண்ணிக்கை.	பற்றுச் சீட்டின் எண்கள்.	தொகை.	பற்றுச் சீட்டு எண்.	தொகை.	அன்றாடம் மொத்த வசூல்.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)

படிவம் IV.

செலவுகள் பதிவேடு

(5 ஆவது விதியைப் பார்க்கவும்.)

தேதி.	செலவு விவரங்கள்.	தொகை.	குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

57. பொதுத் தங்கல் இடங்கள், வண்டிப் பேட்டைகள் முதலியன.-(i)-(1) பொதுத் தங்கல் இடம், வண்டிப் பேட்டை ஏற்படுத்த ஊராட்சி கருதினால், அது கோட்ட ஆட்சியாளருக்கு விண்ணப்பமொன்றை அனுப்பவேண்டும், அவ்விண்ணப்பத்தில் அடியிற்கண்டவை அடங்கியிருக்க வேண்டும் :—

(அ) தங்கல் இடம், வண்டிப் பேட்டை ஊராட்சி ஏற்படுத்தக் கருதியிருக்கிற நிலத்தின் நில அளவை, எண், பரப்பு, வகைப்பாடு, அக்கம் பக்கத்திலிருக்கிற முக்கியமான சாலைகள், மற்ற நிலங்கள் ஆகிய இவைகளையொட்டி மேற்படி நிலத்தின் நிலையைக் காட்டுகிற வரைப்படம் ஒன்றையும்கூட அனுப்ப வேண்டும் ;

(ஆ) கோட்ட ஆட்சியாளர் குறிறிப்பிட்டுக் கேட்கக்கூடிய வேறு எவையேனும் விவரங்கள்.

(2) ஒப்பளிப்பு வழங்குவதற்கு முன், கோட்ட ஆட்சியாளர், மோட்டார் வண்டிகளுக்காக மட்டும் அல்லது ஒரு பகுதி மட்டில் அவைகளுக்காக உத்தேசிக்கப்பட்ட பேட்டைகளைப் பொறுத்தவரை, சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அதிகாரியைக் கலந்தாலோசிக்க வேண்டும்; அவர்களுடைய கருத்தை முறைப்படிக் கவனிக்க வேண்டும்.

(3) எந்த ஊராட்சியும், கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், பொதுத் தங்கல் இடம், வண்டிப்பேட்டை (தற்காலிகமாகவோ நிலையாகவோ) இவைகளை மூடிவிடக் கூடாது.

(ii) (1) ஒரு சாலையையோ சாலை ஓரத்தையோ சாதாரணமாக பொதுத் தங்கல் இடமாக அல்லது வண்டிப் பேட்டையாக அறிவிக்கக் கூடாது.

ஆயினும், தங்கல் இடத்துக்கு அல்லது வண்டிப் பேட்டைக்கு ஏற்பாடு செய்த பிறகு, சாலை உபயோகத்துக்காக; போதுமான இடம் இருக்கிறதென்று கோட்ட ஆட்சியாளர் கருதினால், அவர், அந்த சாலை உரித்தாயிருக்கிற அதிகாரியுடன் கலந்தாலோசித்த பிறகு, அவ்வாறு ஏற்பாடு செய்ய, தனிச் சந்தர்ப்பங்களில், ஒரு ஊராட்சிக்கு அனுமதி கொடுக்கலாம்.

(2) எந்த ஊராட்சியும், ஊர் அல்லது பேரூர் முழுவதையும் பொதுத் தங்கல் இடமென்றோ வண்டிப்பேட்டையென்றோ அறிவித்து, அதற்காகக் கட்டணங்கள் வசூலிக்கக் கூடாது.

(iii) பொதுத் தங்கல் இடத்தையாவது வண்டிப்பேட்டையாவது ஊராட்சி ஏற்படுத்தியிருந்தால், அதிலிருந்து அரை மைலுக்குள், எவரேனும் ஒரு பொது இடத்தையாவது ஒரு பொதுச் சாலையின் ஓரங்களையாவது அதே காரியத்துக்காகப பயன் படுத்தக் கூடாதென அது தடுக்கலாம்:

ஆனால், 1939 ஆம் ஆண்டின் மோட்டார் (இயக்கி) வண்டிகள் சட்டத்தின் பொருளின்படி பேருந்து (Stage carriage) அல்லாத ஒரு மோட்டார் வண்டிக்கு இந்த விதியில் உள்ளது எதுவும் பொருந்தாது.

விளக்கம்.—பயணிகளை ஏற்றிக் கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப் படும் வண்டி ஒன்று, ஒரு பொது இடத்திலாவது ஒரு பொதுச் சாலையின் ஓரங்களிலாவது பயணிகளை அல்லது அவர்களுடைய மூட்டை முடிச்சுகளை இறக்குவதற்காக அல்லது ஏற்றிக் கொள்வதற்காக இரண்டு நிமிடத்துக்கு மேற்படாத

காலம் நின்ருல், அல்லது சரக்குகளைக் கொண்டு போவதற்காகப் பயன்படுத்தப் படும் வண்டி ஒன்று, சரக்குகளை ஏற்றிக் கொள்வதற்கும் இறக்குவதற்கும் வேண்டிய காலத்துக்கு மட்டும் அங்கே நின்ருல், அந்தப் பொது இடம் அல்லது பொதுச்சாலையின் ஓரங்கள், பொதுத் தங்கல் இடமாகவோ வண்டிப்பேட்டை யாகவோ பயன்படுத்தப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

v) ஒரு பொதுத் தங்கல் இடம் அல்லது வண்டிப்பேட்டையை ஊராட்சி ஏற்படுத்தினல், அது அச்செய்தியை அந்த ஊரிலும் அல்லது பேரூரிலும் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசிதழிலும் வெளியிடவேண்டும்; அது ஏற்படுத்தப் போகிற இடத்தைப் பற்றியும் அதைப் பயன்படுத்துவதற்காகச் செலுத்தப் படத்தக்க கட்டண வீதங்களைப் பற்றியும் தெரிவிக்க வேண்டும். ஊராட்சி யினுல் நிர்ணயிக்கப்பட்ட வீதங்கள், அங்கே கட்டணங்களை வசூலிக்க அதிகாரம் பெற்றுள்ளவரின் பெயர், தடுக்கப்பட்ட தொலைவு ஆகியவை கண்டுள்ள அறிவிப்பு ஒன்றை, அந்தப் பொதுத் தங்கல் இடத்திலாவது வண்டிப்பேட்டையிலாவது முதன்மையான ஓரிடத்திலிருக்கிற அறிவிப்புப் பலகைகளில் ஒட்டவேண்டும்.

(v) ஒரு பொதுத் தங்கல் இடத்தையாவது வண்டிப்பேட்டையையாவது பயன்படுத்துவதற்கான கட்டணங்களை, அடியிற்கண்டவைகளுக்கு மேற்படாத வீதங்களில் விதிக்க வேண்டும்:—

		வசதிகள் ஏற்படுத்தப் பட்டிராவிட்டால் நாள் ஒன்றுக்குப் பெரும வீதம்.	வசதிகள் ஏற்படுத்தப் பட்டிருந்தால் நாள் ஒன்றுக்கு பெரும வீதம்.
			ரூ. காசு.
(1)	கைவண்டி ஒவ்வொன்றுக்கும்	நாள் ஒன்றுக்கு 3 காசு	0 06
(2)	ஒன்று அல்லது பல விலங்கு களால் இழுக்கப்படுகிற வண்டி அல்லது கட்டை வண்டி ஒவ் வொன்றுக்கும்.	நாள் ஒன்றுக்கு 5 காசு	0 09
(3)	மோட்டார் வண்டி ஒவ்வொன் றுக்கும்	நாள் ஒன்றுக்கு 19 காசு	0 25
(4)	குதிரை, கோவேறு கழுதை, காளை, எருது, பசு அல்லது எருமை.	நாள் ஒன்றுக்கு 3 காசு	0 06

குறிப்பு.—ஏற்படுத்தப்படும் வசதிகள், பயணிகளுக்கும் வண்டிகளுக்கும் கால்நடைகளுக்கும் நிழலீடு, குடிநீர் வசதிகள் முதலியவைகளாக இருக்கலாம்.

(vi) ஒரு வண்டி அல்லது கால்நடை சம்பந்தமாக, 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 106 ஆவது பிரிவைச் சேர்ந்த (ஆ) பகுதியுடன் சேர்த்து படிக்கப்பட வேண்டிய இவ்விதிகளின்படி விதிக்கப்படத் தக்க கட்டணத்தைச் செலுத்தும்படிக் கேட்டபிறகும் அது செலுத்தப்படா விட்டால், அக்கட்டணத்தை வசூலிக்க அதிகாரம் பெற்றுள்ளவர், அந்த வண்டியை அல்லது கால்நடையைச் சார்ந்தவைகளில் அல்லது அதன் சுமையில் சேர வேண்டிய தொகையைக் கொடுப்பதற்குப் போதுமானதெனத் தாம் கருதுகிற பாகத்தைக் கைப்பற்றி நிறுத்தி வைத்துக் கொள்ளலாம்; அத்தகைய சார்ந்தவைகள் அல்லது சுமை எதுவும் இராதபோது, அல்லது அவற்றின் மதிப்பு, சேர வேண்டிய தொகையைச் கொடுப்பதற்குப் போதுமான தாயிராவிட்டால், அவர் அந்த வண்டியையே அல்லது கால்நடையையே கைப்பற்றி நிறுத்தி வைத்துக் கொள்ளலாம்.

(vii) 6 ஆவது விதியின்படி கைப்பற்றப்பட்ட உடைமை எல்லாவற்றையும், செயல் அதிகாரிக்காவது, அவ்வுடைமையைப் பெற்றுக் கொண்டு விற்க அவரிட மிருந்து அதிகாரம் பெற்றிருக்கக்கூடியவருக்காவது இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் அனுப்பிவிட வேண்டும்; உடனே செயல் அதிகாரியானவர், கைப்பற்றப்பட்ட உடைமையின் சொந்தக்காரருக்கு, அல்லது சொந்தக்காரர் இன்னாரெனத் தெரியாவிட்டால் அல்லது அந்த ஊரில் அல்லது பேரூரில் வசிக்காவிட்டால் கைப்பற்றப்பட்ட சமயம் அவ்வுடைமை எந்த ஒருவர் பொறுப்பில் இருந்ததோ அவருக்கு, பின்வருமாறு கண்டு அறிவிப்புக் கொடுக்க வேண்டும்; அல்லது அத்தகையவர் காணப்படாவிட்டால், பின்வரு மாறு கண்டு தண்டோரா போட்டு விளம்பரம் செய்ய வேண்டும்; அதாவது அந்த அறிவிப்பு சேர்ப்பிக்கப்பட்ட அல்லது விளம்பரம் செய்யப்பட்ட தேதியி லிருந்து ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக, இரண்டு நாட்கள் கழிந்த பிறகு, அந்த அறிவிப்பில் குறிப்பிடப்படும் இடத்திலே அந்த உடைமை வெளிப்படையாக ஏலத்தில் விற்கப்படுமென்று தெரிவிக்க வேண்டும்.

(viii விற்பனை தொடங்குவதற்கு முன் எப்போதேனும், கட்டணத்தினி மித்தம் சேர வேண்டிய தொகையும் கைப்பற்றி நிறுத்தி வைத்துக் கொண்டது சம்பந்தமாகப் பிடித்த செலவுகளினிமித்தம் இருபத்தைந்து காசும், செயல் அதிகாரியிடம் அல்லது மேற்சொன்னவாறு அதிகாரம் பெற்றுள்ள வேறொருவ ரிடம் கொடுக்க பட்டால், கைப்பற்றப்பட்ட உடைமையை உடனே விடுத்து விட வேண்டும்.

விற்று வந்த தொகையை,—

(9) அவ்வாறு கொடுக்கப்படாவிட்டால், அந்த உடைமையை விற்று,

(i) கட்டணத்தினிமித்தம் சேரவேண்டிய தொகையையும்;

(ii) கட்டணத் தொகைக்கு மேற்படாமல் செயல் அதிகாரிகட்டளையிடக் கூடிய தண்டத்தையும்;

(iii) கைப்பற்றி நிறுத்தி வைத்துக் கொண்டு விற்றது சம்பந்தமாகப் பிடித்த செலவுகளினிமித்தம் ஐம்பது காசும்
செலுத்துவதற்குப் பயன்படுத்தலாம்.

மிகுதி ஏதாவதிருந்தால் அதை, உடைமையின் சொந்தக்காருக்கு அல்லது அது கைப்பற்றப்பட்ட சமயம் உடைமை யார் பொறுப்பில் இருந்ததோ அவருக்குக் கொடுத்துவிட வேண்டும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1961 நவம்பர் 9 ஆம் தேதிய 3000 ஆம் எண் ஊராக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

58. **கால்நடைகளை வெட்டுவதற்குச் சில இடங்களைப் பயன் படுத்தக் கூடாதென்று தடுப்பதும், அல்லது அவ்வாறு பயன் படுத்துவதை முறைப் படுத்துவதும், கால்நடைகளை வெட்டுகிறவர்களுக்கு உரிமம் வழங்குவதும்.**— (1) எவரும், செயல் அதிகாரியின் எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல், அல்லது அத்தகைய எழுத்து மூலமான அனுமதியின் நிபந்தனைக்கு இணங்காமல் அந்த ஊரில் அல்லது பேரூரில், ஊராட்சி கால் நடைகளை வெட்டுவதற்காகப் பொது இடத்தை ஏற்படுத்தியிருந்தால் அந்த இடம் அல்லாத வேறோர் இடத்தில், கால்நடை, குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு அல்லது பன்றியை வெட்டவுங்கூடாது, துண்டுபோடவுங்கூடாது; தோல் உரிக்கவும் கூடாது; வெட்டவோ, துண்டு போடவோ, தோல் உரிக்கவோ அனுமதி கொடுக்கவும் கூடாது;

ஆனல், செயல் அதிகாரியானவர், அந்த ஊரில் அல்லது பேரூரில், திருவிழாக்கள், பண்டிகைகளின் போது அல்லது தனிப்பட்ட ஓர் ஏற்பாடாக கோயில்கள் அல்லது அவைகளின் வட்டாரங்களாயிராமல், தாம் தகுதியெனக் கருதுகிற வேறு இடங்களில், கால்நடை வெட்டப்படுவதற்கு அனுமதி கொடுக்கலாம்:

மேலும், விற்பனைக்காக அல்லாமல் தனிப்பட்ட உபயோகத்துக்காக கால் நடைகளை வெட்டுவதற்கு, இவ்விதியில் உள்ளது எதனுலும் தடை உண்டா வதாகக் கருதப்படமாட்டாது.

(2) எவரும், செயல் அதிகாரியினிடமிருந்து உரிமம் பெற்றுக் கொள்ளா மல், அல்லது அத்தகைய உரிமத்துக்கு இணங்காமல், அந்த ஊரில் அல்லது பேரூரில் பொதுமக்களுக்கு விற்பதற்காக, ஏதேனும் கால்நடை, குதிரை, வெள்ளாடு அல்லது பன்றியை வெட்டவுங் கூடாது, வெட்ட அனுமதி கொடுக்க வுங் கூடாது :

ஆனுல், ஒரு கோயில் அல்லது அதன் வட்டாரமல்லாத வேருேரிடத்திலே மதச் சடங்கின் பொருட்டு, உரிமம் பெற்றுக் கொள்ளாமலும் கட்டணம் எதுவும் செலுத்தாமலும் ஒருவர் ஏதேனும் கால்நடையினை வெட்டுவதற்குச் செயல் அதிகாரி அனுமதி கொடுக்கலாம்.

(3) இவ்விதிகளில் சொல்லப்பட்டுள்ள காரியங்களுக்காக மைய அல்லது மாநில அரசினரால் பயன்படுத்தப்படும் இடங்களுக்கு, முந்திய விதிகளின் ஏற்பாடுகள் பொருந்தமாட்டா.

(4) ஊராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள கால்நடை வெட்டும் இடத்தில் வெட்டப்படும் எல்லா கால்நடைகளுக்கும், அவ்வாறு வெட்டும் சமயத்தில் தொற்று நோய்கள் இல்லையென்று, கால்நடை வெட்டுமிடங்களைக் கண்காணிக்க அதனுலேயே அமர்த்தப்பட்டுள்ள அல்லது அதன் ஆட்சி எல்லைக்கு அருகி லிருக்கிற கால்நடை மருத்துவ நிலையத்தில் அமர்த்தப்பட்டு இக்காரியத்துக் காகப்பணி செய்யுமாறு வரவழைக்கப் பெற்றுள்ள தகுதி வாய்ந்த கால்நடை உதவி மருத்துவர் ஒருவர் சான்றிடும்படி ஊராட்சி பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு அமர்த்தப்பட்டுள்ள கால்நடை உதவி மருத்துவர், வெட்டப்பட்ட கால்நடைகளின் கூண்டுகளை ஆய்ந்து பார்த்து, மனிதர் உண் பதற்கு அவை தகுதியானவை தாம் என்பது பற்றிச் சான்றிட வேண்டும். மேற்சொன்ன காரியத்துக்காகத் தகுதி வாய்ந்த கால்நடை உதவி மருத்துவரை அமர்த்திக் கொள்கிற ஊராட்சி, வெளியாருடைய ஒப்பளிப்பு எதுவும் இல்லா மலேயே, அவ்வாறு அமர்த்தப்பட்டிருக்கிற கால்நடை மருத்துவருக்கு, இதன் பொருட்டு அவ்வப்போது அரசாங்கத்தார் நிச்சயிக்கிற வீதத்துக்கு மேற் படாத வீதப்படி ஊதியம் கொடுக்க வேண்டும் :

ஆனுல், ஊராட்சி, தகுதி வாய்ந்த கால்நடை உதவி மருத்துவர் ஒரு வருடைய பணிகளைப் பெற முடியாவிட்டால், அல்லது அத்தகைய பணிகளைப் பெற முடியாவிட்டால், அல்லது அத்தகைய பணிகளுக்காகப் பணம் கொடுக்க

முடியாவிட்டால், ஊராட்சித் துப்புரவு ஆய்வாளர், கால்நடைகள் வெட்டப்படும் சமயத்தில், ஊராட்சியினால் ஏற்படுத்தப்பட்ட கால்நடை வெட்டுமிடத்தில் வெட்டப்பட்ட எல்லாக் கால்நடைகளுக்கும் தொற்று நோய்கள் இல்லையென்று சான்றிட்டு, வெட்டப்பட்ட கால்நடைகளின் கூண்டுகளை ஆய்ந்து பார்த்து, மனிதர் உண்பதற்கு அவை தகுதியானவை தாம் என்பது பற்றிச் சான்றிட வேண்டும்.

(5) 1950 ஆம் ஆண்டின் XXXII ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) விலங்குகளையும் பறவைகளையும் பலியிடுவதைத் தடுப்பது பற்றிய 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டத்திலாவது, (1958 ஆம் ஆண்டின் X ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு விலங்குப் பாதுகாப்புச் சட்டத்திலாவது கண்ட ஏற்பாடுகள் பொருந்துவதை இவ்விதிகளில் உள்ளது ஏதுவும் பாதிப்பதாகச் கருதப்பட மாட்டாது.

• (1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி—
உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

59. உரிமங்கள், அனுமதிச் சீட்டுகள் முதலியவற்றின் படிவமும் உள்ளடக்கங்களும்.—(1) மேற்படி சட்டத்தின்படி அல்லது அதன்படிச் செய்யப்பட்ட ஏதேனும் விதி அல்லது துணைச் சட்டத்தின்படி வழங்கப்படும் அல்லது கொடுக்கப்படும் உரிமங்கள், அனுமதிச் சீட்டுகள், அறிவிப்புகள் எல்லாம் எழுத்து மூலமாயிருக்க வேண்டும்.

(2) மேற்படிச் சட்டத்தின்படி அல்லது அதன்படிச் செய்யப்பட்ட ஏதேனும் விதி அல்லது துணைச் சட்டத்தின்படி வழங்கப்படும் உரிமம் அல்லது அனுமதிச் சீட்டு ஒவ்வொன்றிலும் கால அளவு ஏதேனுமிருந்தால் இன்ன கால அளவு என்பதையும் இன்ன வரையறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அது வழங்கப்படுகிறதென்பதையும் குறிப்பிட்டிருக்க வேண்டும்; அதில் செயல் அதிகாரியாவது, இதன் பொருட்டு செயல் அதிகாரியினிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது கையெழுத்திட வேண்டும்; அத்தகைய உரிமம் அல்லது அனுமதிச்சீட்டு வழங்கும் ஆணை ஒவ்வொன்றையும் ஊராட்சியின் விளம்பரப் பலகையில் விளம்பரம் செய்ய வேண்டும்.

(3) (1) மேற்படி சட்டத்தின்படி அல்லது அதன்படிச் செய்யப்பட்ட ஏதேனும் விதி அல்லது துணைச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட உரிமம் அல்லது அனுமதிச் சீட்டின் வரையறைகள், கட்டுப்பாடுகள் அல்லது நிபந்தனைகள் இவைகளைக் கொடுக்கப் பெற்றவர் தட்டிக் கழித்தால் அல்லது அவற்றை

மீறினால், அல்லது அவ்வுரிமம் அல்லது அனுமதிச்சீட்டு சம்பந்தப்படுகிற எவற்றிலேனும் மேற்படி சட்டத்தில் அல்லது அதன்படி செய்யப்பட்ட ஒரு விதியில், துணைச் சட்டத்தில் அல்லது ஒழுங்குமுறை விதியில் கண்ட ஏற்பாடு களில் எவற்றையேனும் மீறியதற்காக அது கொடுக்கப் பெற்றவர் குற்றவாளி யெனத் தீர்மானிக்கப்பட்டால், அல்லது அது கொடுக்கப் பெற்றவர் பொய் சொல்லி அல்லது மோசடியாக அதைப் பெற்றிருந்தால், செயல் அதிகாரி எப் போதேனும் அந்த உரிமத்தை அல்லது அனுமதியைத் திருத்தலாம்; தற்காலிக மாக நிறுத்தி வைக்கலாம் அல்லது ரத்து செய்யலாம். செயல் அதிகாரி ஓர் உரிமத்தை திருத்தியோ, தற்காலிகமாக நிறுத்தி வைத்தோ அல்லது ரத்து செய்தோ பிறப்பிக்கும் ஓர் ஆணையின் மீது ஊராட்சி மேல்முறையீடு உண்டு; எந்த ஆணையின் மீது மேல்முறையீடு செய்து கொள்ளப்படுகிறதோ அந்த ஆணையை 'உரிமம் கொடுக்கப் பெற்றவர்' பெற்றுக் கொண்ட தேதிக்குப் பிறகு பத்து நாட்களுக்குள் ஊராட்சி அலுவலகத்தில் அம்முறையீடு வந்து சேர்ந்தா லன்றி மற்றபடி அதை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது.

(2) எந்த ஆணைகளின் மீது மேல்முறையீடு செய்து கொள்ளப்படு கிறதோ அந்த ஆணைகளை "உரிமம் கொடுக்கப் பெற்றவர்" பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், (1) உள்விதியின்படி ஊராட்சி பிறப் பித்த ஆணைகளின் மீது கோட்ட ஊராட்சி அலுவலருக்கு இரண்டாவது மேல் முறையீடு உண்டு.

(4) ஓர் உரிமத்தை அல்லது அனுமதிச் சீட்டைக் கொடுக்க மறுத்து, அதைத் திருத்தி தற்காலிகமாக நிறுத்தி வைத்து அல்லது ரத்து செய்து ஆணை பிறப்பிக்க, மேற்படி சட்டத்தின் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட ஒரு விதியின் அல்லது துணைச் சட்டத்தின்படி தகுதி வாய்ந்த அதிகாரியின் ஆணை ஒவ்வொன்றும் எழுத்து மூலமாயிருக்க வேண்டும்; மேலும் அது பிறப்பிக்கப்பட்டதின் காரணங்கள் அதில் கண்டிருக்க வேண்டும்.

(5) ஓர் உரிமம் அல்லது அனுமதிச் சீட்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால், அல்லது அது வழங்கப் பட்ட கால அளவு அல்லது புதுப்பிப்பதற்காக விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டிய கால அளவு ஆகியவற்றில் எது பிந்தியதாகக் கழிவாகிறதோ அது கழிவாகி விட்டால், 'கொடுக்கப்பெற்றவர்', மேற்படி சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட ஒரு விதியின் அல்லது துணைச் சட்டத்தின் எல்லாக் காரியங்களுக்காகவும், ஏற்றவாறு, உரிமத்தை அல்லது அனுமதிச் சீட்டைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் அல்லது மாற்றியமைக்கும் ஆணை ரத்து

செய்யப்படுகிற வரையில் அல்லது அவ்வுரிமம் அல்லது அனுமதிச் சீட்டு புதுப்பிக்கப்படுகிற வரையில் உரிமம் அல்லது அனுமதிச் சீட்டு பெற்றிராதவராகக் கருதப்படுவார்.

அவ்வுரிமம் அல்லது அனுமதிச் சீட்டு அமலில் இருக்கையில், செயல் அதிகாரி

6. உரிமம் அல்லது அனுமதிச்சீட்டு ஒவ்வொன்றும் கொடுக்கப் பெற்றவர், கேட்கும்போது, நியாயமான எல்லாக் காலங்களிலும் அதைக் காட்ட வேண்டும்.

(7) மேற்படி சட்டத்தின்படி அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி, துணைச் சட்டம், ஒழுங்குமுறை விதி அல்லது ஆணையின்படி ஒருவரிடம் அறிவிப்புச் சேர்ப்பிக்க வேண்டியிருந்தால் அல்லது அவருக்கு அனுப்ப வேண்டியிருந்தால், அடியிற்கண்ட விதத்தில் அதைச் சேர்ப்பிக்கலாம் அல்லது அனுப்பலாம் :—

(i) அவரிடம் அந்த அறிவிப்பைக் கொடுப்பது அல்லது ஒப்படைத்து விடுவது ; அல்லது

(ii) அவர் காணப்படாவிட்டால், அவர் வசிக்கும் இடமென்று அல்லது தொழிலிடமென்று கடைசியாகத் தெரிந்திருக்கிற இடத்தில் அந்த அறிவிப்பை வைத்துவிட்டு வருவது அல்லது அவர் குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த ஒருவரிடம் அல்லது வேலைக்காரர் ஒருவரிடம் அதைக் கொடுப்பது அல்லது ஒப்படைப்பது அல்லது ;

(iii) அவர் அந்த ஊரில் அல்லது பேரூரில் வசிக்காமலிருந்து, அவர் இருக்கிற வேறு இடத்தின் முகவரி, செயல் அதிகாரிக்குத் தெரிந்திருந்தால், பதிவு அஞ்சல் மூலமாக அதை அவருக்கு அனுப்புவது ; அல்லது,

(iv) மேற்சொன்ன முறைகளில் எதுவும் பயன்படாவிட்டால், அந்த வசிக்குமிடத்தின் அல்லது தொழிலிடத்தின் முதன்மையான ஒரு பாகத்தில் அதை ஒட்டுவது.

(8) ஒருவர் ஒரு கட்டிடத்தின் அல்லது நிலத்தின் சொந்தக்காரராக அல்லது அனுபோகதாரராக இருந்தால், அறிவிப்பிலே சொந்தக்காரருடைய அல்லது அனுபோகதாருடைய பெயர் குறிப்பிடுவது அவசியமாகாது. கூட்டுச் சொந்தக்காரர்கள் அல்லது அனுபோகதாரர்களைப் பற்றியவரை, அந்தச் சொந்தக்காரர்களில் அல்லது அனுபோகதாரர்களில் ஒருவருக்கு அதைச் சேர்ப்பிப்பது அல்லது அனுப்புவது போதுமானது.

(9) மேற்படி சட்டத்தின்படி சேர்ப்பிக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட ஏதேனும் பட்டியல் அல்லது அறிவிப்பு, படிவம் அல்லது வேறு ஆவணத்தில், இன்ன கால அளவுக்குள் ஏதேனும் வரி அல்லது வேறு தொகை செலுத்தப்பட

வேண்டுமென்று, அல்லது ஏதேனும் வேலை நிறைவேற்றப்படவேண்டுமென்று அல்லது எதையேனும் ஏற்படுத்தி வைக்க வேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டிருந்தால், அந்தக் கால அளவானது, மேற்படிச் சட்டத்திலாவது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலாவது இதற்கு மாறுகத் தெளிவான ஏற்பாடு எதுவும் இராவிட்டால், அவ்வாறு சேர்ப்பிக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(10) எவரேனும் 6 ஆவது விதியின்படிக் கேட்டும்போது உரிமத்தை அல்லது அனுமதிச் சீட்டைக் காட்டத் தவறினுல், அவருக்கு ஐந்து ரூபாய் வரையில் தண்டப் பணம் விதிக்கப்படத்தக்கதாகும்.

(11) இவ்விதிகளில் "மேற்படி சட்டம்" என்றும் சொற்றெடர், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச்சட்டம் எனப் பொருள் படும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

60. இயந்திரங்களை நிறுவுதல்—அனுமதியினின்றும் விலக்கு.

1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் கண்ட 112 ஆவது பிரிவின் முறைகளினின்றும் அடியிற்கண்ட இயந்திரங்களுக்கு விலக்களிக்கப்படும்; அவையாவன :—(1) வீட்டு அல்லது சொந்தக் காரியங்கள் அல்லது வசதிக்காக மட்டும் பயன்படுத்த உத்தேசக்கப்படும் மின் உபகரணங்களும், அத்தகைய காரியங்கள் அல்லது வசதிக்காகப் பயன்படுத்த உத்தேசிக்கப்படும் மின் இயந்திரங்கள் ;

(2) வீட்டு அல்லது சொந்தக் காரியங்கள் அல்லது வசதிக்காக மட்டும் பயன்படும் உத்தேசிக்கப்படும் இரண்டு குதிரைத் திறனுக்கு மேற்படாத மின் தொடர்பற்ற உபகரனங்களும், அத்தகைய காரியங்கள் அல்லது வதிக்காகப் பயன்படுத்த உத்தேசிக்கப்படும் இரண்டு குதிரைத் திறனுக்கு மேற்படாத மின் தொடர்பற்ற இயந்திரங்களும்.

(3) உண்மையாக உழவுக் காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் மோட்டார்கள் உள்ளிட்ட மின் அமைப்புகள் ;

(4) உழவுக் காரியங்கள் சம்பந்தமாக அமைக்கப்படும் இரண்டு குதிரைத் திறனுக்கு மேற்படாத மின்சாரத் தொடர்பற்ற அமைப்புகள்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

93-அ) உழவுக் காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் மின் தொடர்பற்ற **இயந்திரங்களுக்கு விலக்கு.**—ஊராட்சி ஊர்கள் பற்றியவரை ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்களும், பேரூர்கள் பற்றியவரை பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களும், உழவுக் காரியங்களுக்காக மட்டும் அமைக்கப்படும் இரண்டு குதிரைத் திறனுக்கு மேற்பட்ட மின் தொடர்பற்ற இயந்திரங்கள் அமைப்பதற்காக எவ்விதக் கட்டணமும் இன்றி அனுமதி வழங்கலாம்.

(1963 மார்ச்சு 19 ஆம் தேதிய 617 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை)

61. மின்சாரத்தினுல் அல்லது வேறு ஆற்றலால் இயக்கப்படுகிற இயந்திரங்களுக்கான பெரும் உரிமக் கட்டணம்—

1. மின்சாரத்தினுல் இயக்கப்படுகிற இயந்திரங்கள்.—1. மின்சார ஆற்றலால் இயக்கப்படுகிற இயந்திரங்களை அல்லது ஆக்கத் தொழில் துணைக் கருவித் தொகுதியை எந்த இடத்திலும் அமைப்பதற்காக, 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 112 ஆவது பிரிவின்படி வழங்கப்படும் அனுமதிக்காக விதிக்கப்படக் கூடிய கட்டணங்கள், இவ் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள I ஆம் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பெருமங்களுக்கு மேற்படக் கூடாது.

ஆனுல், இவ்விதியின்படி விதிக்கப்படக்கூடிய கட்டணங்கள், மின்சாரத்தினுலன்றி மற்றப்படி இயக்கப்படுபவையும் அதே குதிரைத் திறன் உள்ளவையுமான இயந்திரங்களை அல்லது ஆக்கத் தொழில் துணைக் கருவித் தொகுதியை அமைப்பதற்காக விதிக்கப்படும் கட்டணங்களுக்கு மேற்படக்கூடாது.

2. மின்சார ஆற்றலால் இயக்கப்படுகிற இயந்திரங்கள் அல்லது ஆக்கத் தொழில் துணைக் கருவித் தொகுதி பயன்படுத்தப்படுகிற ஓரிடத்துக்காக ஓர் ஆண்டுக் காலத்துக்கு மேற்படி சட்டத்தில் கண்ட III ஆவது பிரிவின்படி வழங்கப்படுகிற அல்லது புதுப்பிக்கப்படுகிற ஓர் உரிமத்துக்காக விதிக்கப்படக் கூடிய கட்டணங்கள், இவ் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள I ஆம் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பெருமங்களுக்கு மேற்படக் கூடாது.

ஆனுல், ஓர் ஆண்டுக்குக் குறைவான கால அளவுகளுக்காக அத்தகைய ஓர் உரிமம் வழங்கப்பட்டால் அல்லது புதுப்பிக்கப்பட்டால், எந்த ஆண்டிலேனும் அதே இயந்திரங்கள் அல்லது ஆக்கத் தொழில் துணைக் கருவிகள் தொகுதி சம்பந்தமாக அதே இடத்துக்காக விதிக்கப்படுகிற மொத்த உரிமக் கட்டணங்கள், ஓர் ஆண்டு காலத்துக்காக அது சம்பந்தமாக வழங்கப்படுகிற அல்லது புதிப்பிக்கப்படுகிற ஓர் உரிமத்துக்காக விதிக்கப்படக்கூடிய கட்டணங்களுக்கு மேற்படக் கூடாது.

மேலும், இவ்விதியின்படி விதிக்கப்படக்கூடிய கட்டணங்கள், மின்சாரத்திலைன்றி மற்றபடி இயக்கப்படுகிற அதே குதிரைத் திறனுள்ள இயந்திரங்களுக்காக அல்லது ஆக்கத் தொழில் துணைக் கருவித் தொகுதிக்காக விதிக்கப்படும் கட்டணங்களுக்கு மேற்படக் கூடாது.

3. இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள I ஆம் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பெருமங்கள், உரிய காலத்தில் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களுக்கு மட்டும் பொருந்தும்; காலங் கடந்த ஒரு விண்ணப்பத்தைப் பற்றிய வரை அந்த அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பெருமக் கட்டணத்தில் 25 சதவீதத்துக்கு மேற்படாத அதிகப்படியான கட்டணம் விதிக்கலாம்.

II மின்சாரத்திலைன்றி வேறு ஆற்றலால் இயக்கப்படுகிற இயந்திரங்கள்.—4. மின்சாரத்திலைன்றி வேறு ஆற்றலால் இயக்கப்படுகிற இயந்திரங்கள் அல்லது ஆக்கத் தொழில் துணைக் கருவித் தொகுதியை ஒரு வளவில் அமைப்பதற்காக மேற்படி சட்டத்தில் கண்ட 112 ஆவது பிரிவின்படி வழங்கப்படும் அனுமதிக்காக விதிக்கப்படக்கூடிய கட்டணங்கள், இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டிருக்கிற II ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பெருமங்களுக்கு மேற்படக் கூடாது.

5. மின்சாரத்திலைன்றி வேறு ஆற்றலால் இயக்கப்படுகிற இயந்திரங்கள் அல்லது ஆக்கத் தொழில் துணைக் கருவித் தொகுதி பயன்படுத்தப்படுகிற ஓரிடத்துக்காக ஓர் ஆண்டுக் கால அளவுக்கு மேற்படி சட்டத்தில் கண்ட 111 ஆவது பிரிவின்படி வழங்கப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் ஓர் உரிமத்துக்காக விதிக்கப்படக்கூடிய கட்டணங்கள், இவ் விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள II ஆவது அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பெருமங்களுக்கு மேற்படக் கூடாது.

ஆனல், ஓர் ஆண்டுக்குக் குறைவான கால அளவுகளுக்காக அத்தகைய ஓர் உரிமம் வழங்கப்பட்டால் அல்லது புதுப்பிக்கப்பட்டால், எந்த ஆண்டிலேனும் அதே இயந்திரங்கள் அல்லது ஆக்கத் தொழில் துணைக் கருவித் தொகுதி சம்பந்தமாக அதே இடத்துக்காக விதிக்கப்படுகிற மொத்த உரிமக் கட்டணங்கள், ஓர் ஆண்டுக் கால அளவுக்கு அது சம்பந்தமாக வழங்கப்படும் அல்லது புதுப்பிக்கப்படும் ஓர் உரிமத்துக்காக விதிக்கப்படக்கூடிய கட்டணங்களுக்கு மேற்படக் கூடாது.

6. இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள II ஆம் அட்டவணையில் குறிப்பிட்டிருக்கிற பெருமங்கள் உரிய காலத்தில் செய்து கொள்ளப்படும் விண்ணப்பங்களுக்கு மட்டுமே பொருந்தும்; காலங் கடந்த ஒரு விண்ணப்பத்தில் அந்த அட்டவணையில் குறிறிப்பிட்டிருக்கிற பெரும் கட்டணத்தில் 25 சதவீதத்துக்கு மேற்படாமல் அதிகப்படியான கட்டணம் விதிக்கலாம்.

III பொது.—7. மேற்படி சட்டத்தில் கண்ட 112-ஆவது பிரிவின்படிச் செய்யப்பட்ட விதிகளினால் விலக்களிக்கப் பெற்றிருக்கிற அல்லது மேற்படி சட்டத்தில் கண்ட 111 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தின்படி விலக்களிக்கப் பெற்றிருக்கிற இயந்திரங்கள் அல்லது ஆக்கத் தொழில் துணைக் கருவித் தொகுதி சம்பந்தமாக, ஏற்றவாறு அனுமதிக்காக அல்லது உரிமத்துக்காகக் கட்டணம் விதிப்பதற்கு, இவ் விதிகளில் உள்ளது எதனாலும் அதிகாரம் ஏற்படுவதாகக் கருதப்பட மாட்டாது.

இணைப்பு.

I அட்டவணை.

அமைப்பின் குதிரைத் திறன்.	விதிக்கப்படத்தக்க பெருமக் கட்டணம்.	
(1)	(2)	
	ரூ.	காசு.
திரைப்படக் காரியங்களுக்காக மின்னோட்ட மாற்றுங்கருவிகளை அமைப்பது, குதிரைத் திறன் எதுவாயிருந்தபோதிலும்.	1	00
ஒரு குதிரைத் திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	1	00
ஒரு குதிரைத் திறனுக்கு மேற்பட்டு ஐந்து குதிரைத் திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	5	00
ஐந்து குதிரைத் திறனுக்கு மேற்பட்டு பத்து குதிரைத் திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	15	00
பத்துக் குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 20 குதிரைத் திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	25	00
20 குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 30 குதிரைத்திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	40	00

அமைப்பின் குதிரைத் திறன். (1)	விதிக்கப்படத்தக்க பெருமக் கட்டணம். (2) ரூ. காசு.
30 குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 40 குதிரைத் திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	50 00
40 குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 50 குதிரைத் திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	75 00
50 குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 100 குதிரைத் திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	100 00
100 குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 200 குதிரைத் திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	100 குதிரைத் திறனுக்கு 100 ரூபாயும் அதிகப்படியான குதிரைத் திறன் ஒவ்வொன்றுக்கும் ஒரு ரூபாயும்.
200 குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 500 குதிரைத் திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	200 குதிரைத் திறனுக்கு 200 ரூபாயும் அதிகப்படியான குதிரைத் திறன் ஒவ்வொன்றுக்கும் ஐம்பது காசும்.
500 குதிரைத் திறனுக்கு மேற்பட்ட மற்ற அமைப்புகள்.	500 குதிரைத் திறனுக்கு 350 ரூபாயும், 450 ரூபாய்க்கு மேற்படாமல் அதிகப்படியான குதிரைத் திறன் ஒவ்வொன்றுக்கும் இருபத்தைந்து காசும்.

அட்டவணை II.

அமைப்பின் குதிரைத் திறன். (1)	விதிக்கப்படத்தக்க பெருமக் கட்டணம். (2)	
	ரூ.	காசு.
வீட்டுக் காரியங்களுக்கான 2 குதிரைத் திறனுக்கு மேற்பட்ட அமைப்பு.	0	50
ஒரு குதிரைத் திறனுக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	1	50
ஒரு குதிரைத் திறனுக்கு மேற்பட்டு ஐந்துக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	7	50
ஐந்து குதிரைத் திறனுக்கு மேற்பட்டு பத்துக்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	22	50
பத்துக் குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 20க்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	35	00
20 குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 30க்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	60	00
30 குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 40க்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	75	00
40 குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 100 க்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	100	00
100 குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 200 க்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	100 குதிரைத் திறனுக்கு 100 ரூபாயும் அதிகப்படியான குதிரைத் திறன் ஒவ்வொன்றுக்கும் ஒரு ரூபாயும்.	
200 குதிரைத் திறனுக்கு மேற்பட்டு 500 க்கு மேற்படாத மற்ற அமைப்புகள்.	200 குதிரைத் திறனுக்கு 200 ரூபாயும், அதிகப்படியான குதிரைத் திறன் ஒவ்வொன்றுக்கும் ஐம்பது காசும்.	

அமைப்பின் குதிரைத் திறன். (1)	விதிக்கப்படத்தக்க பெருமக்கட்டணம். (2)
	ரூ. காசு.
500 குதிரைத் திறனுக்கு மேற்பட்ட மற்ற அமைப்புகள்.	500 குதிரைத் திறனுக்கு 350 ரூபாயும் 450 ரூபாய்க்கு மேற்படாமல் அதிகப்படியான குதிரைத் திறன் ஒவ்வொன்றுக்கும். இருபத்தைந்து காசும்

(1961 ஏப்ரல் 26-ஆம் தேதிய, 1248-ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

62. *உரிமங்களுக்காகவும் அனுமதிகளுக்காகவுமான விண்ணப்பத்தின் மீது ஆணைகள் அனுப்புவதற்கான கால வரையறை.*—ஓர் உரிமம் அல்லது அனுமதி வழங்கும்படி அல்லது அதைப் புதிப்பிக்கும்படி (1958-ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சித் சட்டத்தின்படியாவது அதன்படி செய்யப்பட்ட விதி, துணைச் சட்டம் அல்லது ஒழுங்கு முறை விதியின்படியாவது செய்து கொள்ளப்படுகிற ஒரு விண்ணப்பத்தின் பேரில் ஆணைகள் பிறப்பிப்பதற்கு முன், உடல்நல மாவட்ட அலுவலர் அல்லது தொழிற்சாலைகளின் ஆய்வாளர், அல்லது வேறொரு அலுவலர், போன்ற வெளி அதிகாரியுடன் கலந்தாலோசிக்க வேண்டியிருக்கிறவற்றில் ஊராட்சிச் செயல் அதிகாரி அவ்விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு அறுபது நாட்களுக்குள், அவ் விண்ணப்பம் சம்பந்தமான ஆணைகளை விண்ணப்பதாரருக்கு அனுப்ப வேண்டும்.

(1961 ஏப்ரல் 26-ஆம் தேதிய 1248-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

63. *இடுகாடுகள், சுடுகாடுகள் முதலியவற்றிற்காக ஏற்பாடு செய்தல்.*—1. இடுகாடுகளாக அல்லது சுடுகாடுகளாகப் பயன்படுத்துவதற்குரிய இடங்களை ஊராட்சி தன் செலவில் ஏற்படுத்தலாம்; அதற்கான போதுமான ஏற்பாடு செய்யப்பட்டிராவிட்டால், ஊராட்சி அவ்வாறு ஏற்படுத்த வேண்டும்; மேலும் அது, அவைகளின் பயனீட்டுக்காக வாடகைகளையும் கட்டணங்களையும் விதித்து வாங்கலாம்.

2. (1) இறந்துபோனவர்களைப் புதைப்பதற்கான, எரிப்பதற்கான அல்லது மற்றபடி தீர்வு செய்வதற்கான இடமாகப் பயன்படுத்தப்படும் ஓரிடத்தின் சொந்தக்காரர் அல்லது அதைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், 1950-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் படியாவது 1920-ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்டக் கழகங்கள் சட்டத்தின் படியாவது அந்த இடம் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிராவிட்டால், அந்த இடத்தைப் பதிவு செய்விக்கும்படி ஊராட்சிக்கு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்.

(2) அத்தகைய இடத்தின் சொந்தக்காரர் அல்லது அதைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் எவரும் இல்லையென்று ஊராட்சிக்குத் தெரியவந்தால், ஊராட்சி அத்தகைய கட்டுப்பாட்டை மேற்கொண்டு, அந்த இடத்தைப் பதிவு செய்ய வேண்டும், அல்லது கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்புடன் அதை மூடி விடலாம்.

3. (1) இறந்துபோனவர்களைத் தீர்வு செய்வதற்காக, தனியாருடையதாகவோ பொதுவானதாகவோ உள்ள புதிய இடம் எதையும் விண்ணப்பத்தின் பேரில் ஊராட்சியிடமிருந்து உரிமம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, திறக்கவோ, அமைக்கவோ, கட்டவோ, பயன்படுத்தவோ கூடாது.

(2) உரிமத்துக்காக அத்தகைய விண்ணப்பத்துடன், உரிமம் கொடுக்கப்பெற இருக்கும் இடத்தின் அமைப்புப் படம் ஒன்றை அனுப்ப வேண்டும். அதில் பின்வரும் விவரங்கள் கண்டிருக்க வேண்டும். அது இருக்குமிடம், அதன் எல்லை, பரப்பு, அதில் அக்கறை கொண்டுள்ள சொந்தக்காரரின், ஆளின் அல்லது சமுதாயத்தின் பெயர், செயல்முறை, மேற்கொண்டு ஊராட்சி கேட்கக்கூடிய விவரங்கள்.

(3) விண்ணப்பம் செய்துகொள்ளப்படுகிற ஊராட்சி—

(அ) உரிமம் வழங்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம்; அல்லது

(ஆ) அந்த மனையிடத்துக்கான ஆட்சேபனைகள் நீக்கப்படுகிற வரையில் அல்லது தான் கேட்ட விவரங்கள் தெரிவிக்கப்படுகிற வரையில் உரிமங்கள் வழங்குவதைத் தள்ளிப் போடலாம்.

(4) (3) உள்விதியின்படி ஊராட்சி பிறப்பித்த ஆணையைக் கோட்ட ஆட்சியாளர் ரத்து செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

(1) ஒவ்வொரு ஊராட்சியிலும் அலுவலகத்திலும் கணக்குப் புத்தகம் ஒன்றை வைத்துவர வேண்டும்; அதில் 1, 2, 3-ஆவது விதிகளின்படி ஏற்படுத்தப்பட்டுள்ள, பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது உரிமம் கொடுக்கப்

பெற்றுள்ள இடங்களைப் பற்றியும், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் தொடங்குவதற்குமுன் ஏற்படுத்தப்பட்டுள்ள, பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது உரிமம் கொடுக்கப் பெற்றுள்ள எல்லா இடங்களைப் பற்றியும் எழுதி வைக்க வேண்டும்.

(2) அத்தகைய இடம் மேற்சொன்னவாறு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது, பதிவு செய்யப்பட்டிருக்கிறது அல்லது உரிமம் கொடுக்கப்பட்டிருக்கிறது எனக் கண்டுள்ள ஆங்கிலத்திலும் தமிழிலுமான அறிவிப்பு ஒன்றை, மேற்சொன்ன இடுகாட்டின் அல்லது சுடுகாட்டின் அல்லது வேறு இடத்தின் நுழைவாயிலில் அல்லது அதற்கு அருகில் முதன்மையான ஓரிடத்திலே ஒட்டி வைக்க வேண்டும்.

5. ஒரு குடியிருப்பு இடத்திலிருந்து அல்லது குடி நீர் வழங்கு ஆதாரத்திலிருந்து நூறு கெஜதூரத்துக்குள், மேற்சொன்னவாறு ஏற்படுத்தப்பட்டுள்ள, பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது உரிமம் கொடுக்கப் பெற்றுள்ள ஓர் இடமல்லாத வேறு ஏதேனும் இடத்திலே, எவரும் ஒரு பிணத்தைப் புதைக்கவுங் கூடாது, எரிக்கவுங் கூடாது, மற்றபடி தீர்வு செய்யவுங் கூடாது; புதைக்கும்படி, எரிக்கும்படி அல்லது வேறுவிதமாகத் தீர்வு செய்யும்படி செய்யவோ, புதைப்பதற்கு, எரிப்பதற்கு அல்லது தீர்வு செய்வதற்கு அனுமதி கொடுக்கவோ கூடாது.

6. இறந்து போனவர்களைத் தீர்வு செய்வதற்கான ஓரிடத்தைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர், அந்த இடத்தில் ஒவ்வொரு தட்வையும் பிணம் புதைக்கப்படுவதைப் பற்றி, எரிக்கப்படுவதைப் பற்றி அல்லது மற்றபடி தீர்வு செய்யப்படுவதைப் பற்றி ஊராட்சியினால் நியமிக்கப்படுகிறவருக்குச் செய்தி தெரிவிக்க வேண்டும்.

7. (1) (அ) இறந்து போனவர்களைத் தீர்வு செய்வதற்காகப் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது உரிமம் கொடுக்கப் பெற்றுள்ள ஓர் இடம் அதன் அக்கம் பக்கத்தில் வசிப்பவர்களின் உடல் நலத்திற்கு ஆபத்தாயிருக்கிற அல்லது ஆபத்தாகிவிடக்கூடிய நிலையில் அல்லது இடத்தில் இருக்கிறதென்று, அல்லது

(ஆ) ஓர் இடுகாட்டில் கல்லறைகளின் எண்ணிக்கை மிக அதிகமாயிருக்கிறதென்றும், மேற்சொன்ன பொது இடுகாடு அல்லது சுடுகாடு அல்லது வேறு இடம் ஆகியவற்றில் இறந்துபோனவர்களைத் தீர்வு செய்யும் பொருட்டு முறைப்படி அனுமதிக்கப்பட்டுள்ள வேறொரு வசதியான இடம் இருக்கிறதென்றும் அல்லது சாதாரணமாகப் பயன்படுத்தக்கூடியவர்களுக்கு அத்தகைய இடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும், ஊராட்சி சந்தேகமறத் தெரிந்து

கொண்டால், அது கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, அறிவிப்புக் கொடுத்து அதன் மூலமாக, அந்த அறிவிப்பில் கண்டிருக்கும் இரண்டு மாதத்துக்குக் குறையாத கால அளவு கழிந்துபோன பிறகு அவ்விடத்தில் எந்தப் பிணத்தையேனும் புதைப்பது, எரிப்பது அல்லது மற்றப்படி தீர்வு செய்வது சட்ட சம்மதமாக மாட்டாதெனத் தெரிவிக்கலாம்.

(2). (1) உள்விதியின்படி கொடுக்கப்படும் அறிவிப்பு ஒவ்வொன்றையும் ஊராட்சி அறிவிப்புப் பலகையில் ஒட்டுவது மூலமாகவும், அந்த ஊர் அல்லது பேரூரில் தண்டோரா போட்டும் விளம்பரம் செய்ய வேண்டும்.

(3). (1) உள் விதியின்படிக்கான அறிவிப்பினை மீறியும், அந்த அறிவிப்பில் கண்டுள்ள கால அளவு கழிந்துபோன பிறகும், எவரும், அந்த இடத்திலே எந்தப் பிணத்தையேனும் புதைக்கவோ, எரிக்கவோ, மற்றப்படி தீர்வு செய்யவோ கூடாது அல்லது புதைக்கும்படி, எரிக்கும்படி அல்லது வேறுவிதமாகத் தீர்வு செய்யும்படி செய்யக் கூடாது, அல்லது புதைப்பதற்கு, எரிப்பதற்கு அல்லது மற்றப்படி தீர்வு செய்வதற்கு அனுமதி கொடுக்கக் கூடாது.

(4). (1) உள் விதியின்படி ஊராட்சி பிறப்பிக்கும் ஓர் அறிவிப்பினை மாவட்டச் செயலாளர் ரத்து செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

8. 2 (1), 3 (1), 5, 6, 7 (3) விதிகளின் ஏற்பாட்டுகளில் எவற்றையேனும் எவராகிலும் மீறினால், அவருக்கு நூறு ரூபாய் வரையில் தண்டப் பணம் விதிக்கப்படத்தக்கதாகும்.

ஆனால், 5 ஆவது விதியின் ஏற்பாடுகளை மீறினதற்காக, ஊராட்சிச் செயல் அதிகாரியின் எழுத்து மூலமான ஒப்பளிப்பில்லாமல், வழக்கு எதையும் தொடரக் கூடாது.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

64. **தனியார் கழிப்பிடங்களையும் சாக்கடைத் தொட்டிகளையும் துப்புரவு செய்தல்.**—1. ஊராட்சி ஒவ்வொன்றும், தனியார் இடங்களில் இருக்கிற கழிப்பிடங்களையும் சாக்கடைத் தொட்டிகளையும் ஒழுங்காகத் துப்புரவு செய்வதற்குப் போதுமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

2. இந்தப் பணிக்குப் பிடிக்கும் செலவை ஈடு செய்யக் கூடிய வீதப்படி அந்த இடங்களின் அல்லது இடத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரிடமிருந்து ஊராட்சிக் கட்டணம் விதித்து வாங்கலாம்.

3. 2 ஆவது விதியின்படி விதிக்கப்படுதற்குரிய கட்டணங்களின் விதத்தைக் கணக்கிடுகையில், கழிப்பிடங்களைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட கட்டிடத்தில் வசிப்பவர்களின் எண்ணிக்கையையும் அல்லது கழிப்பிடத்தின் பரப்பையும், சாக்கடைத் தொட்டிகளைப் பொறுத்தவரை சாக்கடைத் தொட்டியின் பரப்பையும், ஆழத்தையும்/பரப்பையும் அல்லது ஆழத்தையும் ஊராட்சிக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(1961 எப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

65. குடிமுறை நிலப் பரப்புகளிலுள்ள புறம்போக்குகளைப் பயன் படுத்துவதை முறைப்படுத்துவதற்கான வரையறைகளும் கட்டுப்பாடும்.— 1. அரசாங்கத்தின் வசமுள்ள எந்தப் புறம்போக்கின் உபயோகம் ஊராட்சியினால் முறைப்படுத்தப்படுகிறதோ அந்தப் புறம்போக்கினை அது முதலில் உத்தேசிக்கப்பட்ட காரியமல்லாத வேறொரு காரியத்துக்காக மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பில்லாமல் பயன்படுத்தக் கூடாது.

2. (1) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 86 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற ஒரு புறம்போக்கு முதலில் கருதப்பட்ட காரியத்துக்காக இனியும் வேண்டப்படுவதில்லையென்றும், வேறு ஏதேனும் குறிப்பிட்ட சமுதாயக் காரியத்துக்காக அதைப் பயன்படுத்தலாமென்றும் ஒரு ஊராட்சி கருதினால், அது, நிலம் இருக்கிற பேரூர் அல்லது ஊரில் ஓர் அறிவிப்பை வெளியிடும்படிச் செய்ய வேண்டும்; அதன் நில அளவை எண்ணையும் அது தேவைப்படுகிற காரியத்தையும் அதில் குறிப்பிட வேண்டும்; அந்த கருத்துருவுக்கு ஆட்சேபணைகளைக் குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்பும்படி அந்த அறிவிப்பு மூலமாய்க் கேட்டுக் கொள்ள வேண்டும்; அத் தேதியானது, அந்த அறிவிப்பு வெளியிடப்படும் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு முந்தியதாயிருக்கக் கூடா. தண்டோரா போட்டும், ஊராட்சி அலுவலகம் இருக்கிற கட்டிடத்தின் முதன்மையான ஒரு பாகத்தில் ஒட்டுவது மூலமாகவும் அந்த அறிவிப்பை வெளியிட வேண்டும்.

(2) ஆட்சேபணைகள் வந்து சேர்வதற்கென நிச்சயிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு, ஊராட்சி தனது கருத்துருவையும் அதன் பேரில் வந்து சேர்ந்த ஆட்சேபனைகளையும் மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்; தகுதியெனத் தோன்றக்கூடிய ஆணைகளைப் பிறப்பிப்பதற்காக அவ்வாறு அனுப்ப வேண்டும்.

(3) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 86 ஆவது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற

போக்கின் உபயோகத்தை முறைப்படுத்த ஊராட்சி விரும்பினால், அது மாவட்ட ஆட்சியாளருக்கு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்; அப்போது அது பற்றிய தீர்மானத்தின் நகல் ஒன்றையும் அனுப்ப வேண்டும்; அதில், பின்வருபவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் :—

(அ) புறம்போக்கின் நில அளவை எண் அல்லது எண்களும் எல்லைகளும் பரப்பும்; (ஆ) இன்ன காரியத்துக்காக அந்தப் புறம்போக்கு பயன்படுத்தப்படுகிறதென்பது; (இ) அதில் மரங்கள் இருந்தால் அவைகளின் பட்டியலும் விவரமும். அப்புறம்போக்கு அரசாங்கத்தார் வசம் இருக்கிற தென்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் சரியானவை யென்றும் மாவட்ட ஆட்சியாளர் தெரிந்துகொண்ட பிறகு, அவர் தாம் தகுதி யெனக் கருதக் கூடிய ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

(4) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் கண்ட 86 ஆவது பிரிவைச் சேர்ந்த (2), (4) உட்பிரிவுகளின்படி எந்தப் புறம்போக்கு களின் உபயோகம் ஊராட்சியினால் முறைப்படுத்தப்படுகிறதோ அந்தப் புறம் போக்குகளின் பட்டியல் ஒன்றை அது வைத்துவர வேண்டும் (நில அளவை எண்கள், எல்லைகள், பரப்பு, புறம்போக்கு ஒவ்வொன்றும் இன்ன காரியத்துக் காகப் பயன்படுத்தப்படுகிறதென்பது, அதிலிருக்கிற மரங்கள் ஆகியவை பற்றிய விவரங்களும் அப் பட்டியலில் இருக்க வேண்டும்).

(5) எந்தப் புறம்போக்கின் உபயோகம் ஊராட்சியினால் முறைப்படுத்தப் படுகிறதோ, அதை ஊர்த் தலைவராவது கர்ணமாவது வருவாய்த் துறையைச் சேர்ந்த ஆய்வு அலுவலராவது எப்போதேனும் ஆய்வு செய்ய ஊராட்சி அனுமதிக்க வேண்டும்.

(6) புறம்போக்குகளின் உபயோகத்துக்காக மாவட்ட ஆட்சியாளர் ஒப்புக்கொள்ளும் வீதங்கள் அட்டவணையின்படி ஊராட்சிக் கட்டணம் விதித்து வாங்கலாம்.

(7) களம், புறம்போக்குகள், வண்டிப் பேட்டைகள், கால்நடைப் பட்டிகள், சுடுகாடுகள், இடுகாடுகள் ஆகியவற்றை ஊராட்சி துப்புரவு நிலையில் வைத்திருக்க வேண்டும்; இதன்பொருட்டு மாவட்ட உடல்நல அலுவலர் பிறப்பிக்கிற கட்டளைகளை நிறைவேற்ற வேண்டும்.

(8) தோப்புகளை நல்ல நிலைமையில் பேணி வருவதற்கும், காற்றடித்து விழுந்த-வாடிப்போன அல்லது பட்டுப்போன மரங்களுக்குப் பதிலாகப் புதிய மரங்களை நடுவதற்கும் ஊராட்சி எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

(9) தகுந்த நிபந்தனைகளுக்குட்பட்டு ஊராட்சித் தோப்புகளைக் குத்தகைக்கு விட வேண்டும்; தோப்புகளில் உள்ள மரங்களின் மாசூலி லிருந்து கிடைக்கிற வருமானத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(10) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 178 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட XXXV பகுதியின்படி செய்யப்படும் விதிகள், எந்தப் புறம்போக்கின் உபயோகத்தை ஊராட்சியினால் முறைப்படுத்தப்படுகிறதோ அந்தப் புறம்போக்கில் அது மரங்களைக் குத்தகைக்கு விடுவதற்கும், வெட்டுவதற்கும் நடுவதற்கும் பொருந்தும்.

(11) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 86 ஆவது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்படி எந்தப் புறம்போக்கின் பயனீடு ஊராட்சியினால் முறைப்படுத்தப்படுகிறதோ அந்தப் புறம்போக்கி லுள்ள ஆக்கிரமிப்புகளை நீக்கிவிட ஊராட்சி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஊராட்சி அவ்வாறு செய்யத் தவறிப்போனால், ஆக்கிர மிப்பு கண்டுபிடிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு, ஆட்சேபகரமானவையென்று கோட்ட ஆட்சியாளர் கருதுகிற ஆக்கிரமிப்புகளை அகற்றிவிடுவதற்கு ஆணையிடக் கோட்ட ஆட்சியாளருக்கு உரிமையுண்டு. கோட்ட ஆட்சியாளரின் ஆணை மீது மாவட்ட ஆட்சியாளருக்கு மேல்முறையீடு உண்டு; அந்த மேல்முறையீட்டின் பேரில், ஓர் ஆக்கிரமிப்பு ஆட்சேபகர மானதா இல்லையா என்பது பற்றி மாவட்ட ஆட்சியாளர் செய்யும் தீர்ப்பு முடிவானதாகும்.

(12) 1 ஆம் விதியின்படியாவது 3 ஆம் விதியின்படியாவது மாவட்ட ஆட்சியாளர் பிறப்பிக்கும் ஆணைகளின் மீது வருவாய்த் துறை வாரியத்துக்கு மேல் முறையீடு உண்டு; வருவாய்த் துறை வாரியத்தின் ஆணைகளின் மீது அரசாங்கத்தாருக்கு இரண்டாவது மேல்முறையீடு உண்டு.

(13) வருவாய்த் துறை வாரியம் பிறப்பித்த ஓர் ஆணை சம்பந்தமாக அரசாங்கத்தாரும், மாவட்ட ஆட்சியாளர் பிறப்பித்த ஓர் ஆணை சம்பந்தமாக வருவாய்த் துறை வாரியத்தினரும், தாங்களாகவோ அல்லது பாதிக்கப்பட்டவர் விண்ணப்பம் செய்துகொள்வதன் பேரில், ஆவணங்களை வரவழைத்து ஆராய்ந்து எழுதப்பட வேண்டிய காரணங்களுக்காக, முக்கியமான முறைக் கேடு செய்தித் தவறு அல்லது திரித்துக் காட்டப்பட்ட முறையீடு ஆகிய

மனுக்களின் மீது அந்த ஆணையை ரத்துச் செய்யலாம், மாற்றியமைக்கலாம் அல்லது மீண்டும் எண்ணிப் பார்ப்பதற்குத் திருப்பி அனுப்பலாம்.

(1961 ஏப்ரல் 26-ஆம் தேதிய 1248-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 மார்ச்சு 13-ஆம் தேதிய 623-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

மாவட்ட ஆட்சியாளர்கள், அரசாங்கத்தாரால் எடுத்துக் கொள்ளப்பட்ட ஜமீன்களின் மேலாளர்கள் ஆகியவர்களின் ஆட்சிவரம்புக்குள் இருக்கிற ஊராட்சிகள் 1950-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி அவைகளுக்குள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவது இயலுமாறு அந்த மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் மேலாளர்களுக்கும் வருவாய்த் துறை வாரியத்தினர் பின்வரும் விளக்க உரைகளைப் பிறப்பித்திருக்கிறார்கள் :—

1. ஊர்க் கர்ணங்கள் அடியிற் கண்டவாறு பட்டியல்களை இரட்டையாகத் தயாரிக்க வேண்டும் :—

(அ) மேற்படி சட்டத்தில் கண்ட 60 (2) பிரிவின் கீழ் வரும் புறம் போக்குகள் (ஊராட்சி ஆதிக்கம் மேற்கொள்வதற்காக).

(ஆ) மேற்படி சட்டத்தில் கண்ட 60 (4) பிரிவின் கீழ்க் கூடிய அரசாங்கத்தார் வசம் இருக்கும் ஊரிலுள்ள மற்றெல்லாம் புறம்போக்குகளும் ஊராட்சி தெரிந்துகொள்வதற்காக.

அந்தப் பட்டியல்கள் முழுமையாகவும் விரிவாகவும் இருக்க வேண்டும்; இருமொழி (செட்டில்மெண்டு)ப் பதிவேடுகளில் உள்ள பத்திகளை எல்லாம் கொண்டிருக்க வேண்டும்; அதோடு, பட்டியல்கள் தயாரிக்கப்படும் சமயத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் இருந்தால் அவர்கள் பெயர்களைக் குறிப்பிட வேண்டும். இதற்கெனத் தக்கவாறு உண்டாக்கப்பட்ட தனிக் குறிப்புரைப் பத்தியில் அப் பெயர்களைக் குறிப்பிட வேண்டும். குடிமுறை நிலப் பாப்பிலுள்ள உள்வட்ட வருவாய் ஆய்வாளரும், சம்பந்தப்பட்ட 1948-ஆம் ஆண்டின் XXXVI-வது சட்டத்தினால் முறைப்படுத்தப்படுகிற பாப்புகளில் துணை வட்டாட்சியாளர் வரிசைக்குக் குறையாக ஜமீன்மேலாளரும் அல்லது துணை மேலாளரும் அப் பட்டியல்கள் சரியானவையென்று அத்தாட்சிக் கையொப்பமிட்டு, ஒரு படியைச் சம்பந்தப்பட்ட ஊராட்சியினிடம் சேர்ப்பித்து இரண்டாம் படியில் பெற்றுக் கொண்டதற்கு உரிய கையெழுத்து வாங்கி அதைப் பதிவு செய்து வைப்பதற்காகச் சம்பந்தப்பட்ட வட்ட அலுவலகத்துக்கு அல்லது ஜமீன் மேலாளர் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும்.

2. ஆண்டுதோறும், ஆக்கிரமிப்புகளைச் சுவடியில் பதிவு செய்கையில் இரண்டு பட்டியல்களிலும் சொல்லப்பட்டிருக்கிற புறம்போக்கிலிருக்கிற ஆக்கிரமிப்புகளைக் கர்ணம் தொடர்ந்து சுவடியில் பதிவு செய்துகொண்டு வர வேண்டும். ஆக்கிரமிப்புகளின் பட்டியல் ஒன்றை அவர் தயாரித்து, வருவாய் ஆய்வாளரின் மேலொப்பம் பெற்று, மேற்படி சட்டத்தில் கண்ட 60 (2) பிரிவின் படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகளைச் சேர்ந்த 11-வது அவசியமான செயல் மேற்கொள்வதற்காக அதை ஊராட்சிக்கு அனுப்ப வேண்டும். அதே சமயத்தில், கர்ணம், இந்த ஆக்கிரமிப்புகளை சம்பந்தமான ஆக்கிரமிப்புக் குறிப்பினை வட்டம் அல்லது ஜமீன் மேலாளர் அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும்; அந்த அலுவலகத்தினர் அவற்றை ஆக்கிரமிப்புக் குறிப்புப் பதிவேட்டில் பதிவு செய்துகொண்டு, அவைகளின் மீது மூன்று மாதங்களுக்கு "திருத்தி வைக்க" என்ற ஆணைகளைப் பெற வேண்டும்; இந்தக் கால அளவுக்குப் பிறகு, கர்ணம் அனுப்பிய ஆக்கிரமிப்புகளின் பட்டியல்கள் மீது சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் முடிவை வட்ட அலுவலர் அந்த ஊராட்சிகளிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டும். ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டன என்று ஊராட்சிகளின் அறிக்கை களிலிருந்து தெரிய வந்தால், வட்ட அலுவலகத்தினர் அந்த ஆக்கிரமிப்புக்
(B) குறிறிப்புகளை முடிவு செய்ய வேண்டும், அவ்வாறின்றி, ஊராட்சிகள் எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாவிட்டால், வெளியேற்றத்துக்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமா வேண்டாவா என்பதை வருவாய் அலுவலர் நிச்சயிக்க வேண்டும். வட்ட அலுவலராவது ஜமீன் மேலாளராவது, வருவாய் ஆய்வாளரின் அறிக்கையின் பேரில் அல்லது தாமே ஆய்வு செய்ததன் முடிவின் பேரில் அறிக்கை ஒன்றைக் கோட்ட ஆட்சியாளரின் தீர்ப்புக்காக அனுப்ப வேண்டும்.

3. இந்தப் புறம்போக்குகளில் மரங்கள் இருக்கலாம்; அவை மரப் பட்டாவின் பேரில் வைத்திருக்கப்படலாம் அல்லது அவைகளின் மேல் மாசூலுக்குரிய உரிமை ஒவ்வொரு பசலியிலும் விற்கப்படலாம். கர்ணங்கள், எந்தப் புறம்போக்குகளின் உபயோகம் ஊராட்சியினுல் முறைப்படுத்தப் படுகிறதோ அந்தப் புறம்போக்குகளில் மரவரி ஏற்பாட்டின்பேரில் வைத்திருக் கப்படும் மரங்களின் பட்டியல்களை இரட்டை பிரதியாகத் தயாரிக்க வேண்டும்; அவ்வாறு வைத்திருக்கப்படாத மரங்களின் பட்டியல்களையும் தனியாகத் தயாரிக்க வேண்டும். குடிமுறை நிலப் பரப்பில் வருவாய் ஆய்வாளர் எடுத்துக் கொள்ளப்பட்ட பரப்புகளில் ஜமீன் மேலாளர் உதவி மேலாளர் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் எவையேனும். தனி ஆணைகளை யொட்டி அவைகளை ஆய்ந்து பார்த்து ஒப்பளிக்க வேண்டும். இரண்டு பட்டியல்களின் ஒரு தொகுதியை ஊராட்சிகளிடம் ஒப்புவித்து, அவைகளைப் பெற்றுக்கொண்டதற்கு மற்றொரு

தோகுதியில் கையெழுத்து வாங்கிக் கொள்ள வேண்டும். அந்த மற்றொரு தொகுதியை, வட்டம் அல்லது ஜமீன் மேலாளர் அலுவலகத்துக்குத் தகவலுக்காக அனுப்ப வேண்டும். மரவரி ஏற்பாட்டின்பேரில் வைத்திருக்கப் படுபவையல்லாத மற்ற மரங்கள் சம்பந்தமாக மட்டும் ஊராட்சிகள் நடவடிக்கை எடுத்துக் கொள்வது இதனால் சாத்தியமாயிருக்கும்.

குறிப்பு.—( ) மேற்படி சட்டத்தின் 61 (1) பிரிவில் குறிப்பிட்டிருக்கிற சமுதாய நிலங்கள் சம்பந்தமாக, மேற்படி விளக்க உரை அவசியமான மாறுதலுடன் பொருந்தும்.

(ii) மேற்படி சட்டத்தின் 61 (1) பிரிவு சம்பந்தப்படுகிற புறம் போக்கின் நன்மையைப் பற்றி ஐயம் ஏற்பட்டால் வருவாய் ஆய்வாளர் சம்பந்தப்பட்ட வட்ட அலுவலரின் ஆணைகளைப் பெற வேண்டும்.

(வருவாய்த் துறை வாரியத்தின் 1953 ஆகஸ்ட் 3-ஆம் தேதிய 879-ஆம் எண் பல்வகை நடவடிக்கைக் குறிப்புகள்.)

(94) ஊராட்சிக்கு உரித்தாயிருக்கிற உடைமைகளையும் ஊராட்சியினால் முறைப் படுத்தப்படும் உடைமைகளையும் ஆளுவதும் முறைப்படுத்துவதும்.

1. **தோற்றுவாய்.**—(இதில் பின்னால் பழைய சட்டம் என்று சொல்லப்படும்) 1950-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படியும் இதில் பின்னால் புதிய சட்டம் என்று சொல்லப்படும்) 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படியும், ஊராட்சிகள் பயன்படுத்துதல், முறைப் படுத்துதல் உட்பட, ஊர் நலனுக்காக ஆட்சி செய்யும் காரியங்களுக்காக, சில உடைமைகள் திட்டவட்டமாக ஊராட்சிகளிடம் உரிமையாக்கப்பட்டிருக் கின்றன. (ஊராட்சிகளிடம் உரிமையாக்கப்பட்டிராவிட்டாலும்) அவைகளின் உபயோகத்துக்கு முறைப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ள வேறு சில உடைமை களும் இருக்கின்றன.

(i) ஊராட்சிகளிடம் உரிமையாக்கப்பட்டிருக்கும் உடைமைகள், ஊராட்சியினால் முறைப்படுத்தப்படும் உடைமைகள் ஆகியவற்றின் விவரங் களைக் கண்டும்,

( ) ஆட்சி அதிகாரங்களையும் முறைப்பாட்டு அதிகாரங்களையும் ஊராட்சிகள் இன்னவிதமாகச் செலுத்த வேண்டுமென்பதைக் குறிப்பிட்டும் பின்வரும் ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

அ. ஊராட்சியிடம் உரிமையாக்கப்பட்டிருக்கும் உடைமைகள்.

2. ஊராட்சியிடம் உரிமையாக்கப்பட்டிருக்கும் உடைமைகளின் விவரங்கள்.—அடியிற்கண்ட உடைமைகள் ஊராட்சிகளிடம் சட்டமுறையில் உரிமையாக்கப் பட்டுள்ளன :

(i) ஒதுக்கி வைக்கப்பட்டிராத காடுகள் ;

(ii) மேய்ச்சல் புறம்போக்குகள், களம் புறம்போக்குகள், சுடுகாடுகள், இடுகாடுகள், கால்நடை தொழுவங்கள், வண்டிப் பேட்டைகள், தோப்புகள் என வகைப்படுத்தப்பட்டுள்ள புறம்போக்குகள் ;

(iii) பாசனக் கட்டு வேலைகள் அல்லாத வேறு தண்ணீர்க் கட்டு வேலைகள் ;

(iv) தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், பெரிய மாவட்டச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் அல்லாத வேறு பொதுச் சாலைகள்.

3. **ஊராட்சியினிடம் உரிமையாக்கப்பட்டுள்ள ஒதுக்கி வைக்கப்பட்டிராத காடுகள்.**—பழைய சட்டத்தின் 53 (1) பிரிவுக்கு நிகரான புதிய சட்டத்தின் 72 (i) பிரிவின்படி, அச் சட்டத்தின் தொடக்கத்தின்போது ஊரில் உள்ள "ஒதுக்கப்பட்டிராத காடுகள்" எல்லாம் ஊராட்சிக்கு உரித்தானவையாகும்; அவை அதனுல் அவ்வூர் நலனுக்காகப் பரிபாலனம் செய்யப்பட வேண்டும். "ஒதுக்கப்பட்டிராத காடுகள்" எனக் குறிப்பிடப்படும் நிலத்தின் வகைகளைப் பற்றித் தெளிவுடன் தெரிந்திருப்பது அவசியமாகும். பழைய சட்டத்தின் 2 (24) பிரிவுக்கு நிகரான புதிய சட்டத்தின் 2 (34) பிரிவின்படி, "ஒதுக்கப் பட்டிராத காடுகள்" என்னும் சொற்றொடர், 1882-ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டத்தில் கண்ட 4-வது பிரிவின்படி அறிக்கையிடப்பட்டிராத காடு எனப் பொருள்படும்; அரசாங்கத்தாரின் வசமிருக்கும் "ஒதுக்கப்பட்டிராத நிலம்" என்பதும் அதில் அடங்கும். அரசாங்கத்தாரின் வசமிருக்கும் நிலம் என்பதில், வரி விதிக்கப்பட்டோ படாமலோ அனுபோகத்திலிராத எல்லா நிலங்கள் என்பதும் அடங்கும்; ஆனுல் பட்டா நிலங்களும் தனியார்களுக்குச் சொந்தமான மற்ற நிலங்களும் அதில் அடங்கமாட்டா. 1882-ம் ஆண்டின் தமிழ்நாடு சட்டத்தின் 2-வது பிரிவைப் பார்க்கவும். வருவாய்த் துறைக் கணக்குகளில் "புறம்போக்குகள்" என்று வகைப்படுத்தப்பட்டுள்ள நிலங்கள், (இப்போது குறிப்பிடப்போகும் ஒரு விலக்குக்குட்பட்டு) குறிப்பிட்ட எக் காரியங்களுக்காக அவை அவ்வாறு வகைப்படுத்தப்பட்டிருக்கின்றனவோ அக் காரியங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிலங்கள் என்று கருதப்பட வேண்டும். ஆகவே, (காட்டுப் புறம்போக்குகள் அல்லாத மற்ற) எல்லாப்

புறம்போக்குகளும், அரசாங்கத்தார் வசமுள்ள "ஒதுக்கப்பட்டிராத நிலம்" என்னும் சொற்றொடரின் பொருளில் அடங்கவில்லை என்று கருத வேண்டும். இனி, வரி விதிக்கப்பெற்ற தரிசு நிலங்கள் அல்லது வரி விதிக்கப் பெறாத தரிசு நிலங்கள் இருக்கின்றன. வரி விதிக்கப்பெற்ற தரிசுகள், நிலையான அடிப் படையில் ஒப்படை செய்வதற்கென ஒதுக்கி வைக்கப்பட்ட நிலங்கள் என்னும் முறையில், வரி விதிக்கப் பெறாத தரிசுகளினின்றும் வேறாக உள்ளன. ஆகையால், வரி விதிக்கப்பெற்ற தரிசுகளை, ஊராட்சியினிடம் அக் காரணத் தினால் தாமாகவே உரித்தாகிவிடுகிற "ஒதுக்கப்பட்டிராத காடுகள்" எனக் கருத முடியாது. இவ்வாறு குறிப்பிடப் பட்டிருக்கிற தன்மை உள்ளவையும், ஊராட்சி ஊர்/பேரூர் ஒவ்வொன்றின் எல்லைகளுக்குள் இருப்பவையுமான எல்லா நிலங்களையும் இனங் காட்டி, பட்டியல்படுத்தி, சம்பந்தப்பட்ட ஊராட்சியின் கீழ் முறைப்படி வைப்பது அவசியமாகிறது. அதற்குப் பிறகு ஊராட்சி சம்பந்தப்பட்ட ஊர் நலனுக்காக அவ்வுடைமைகளைப் பரிபாலித்து வரும்.

4. **ஊராட்சியினிடம் உரிமையாக்கப்பட்டுள்ள புறம்போக்குகள்.**—நிர்ண யிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டுப் பின் வரும் புறம்போக்குகளின் உபயோகத்தை முறைப்படுத்துவதற்கு பழைய சட்டத்தின் 60 (2) பிரிவில் ஊராட்சிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக் கிறது :—

(i) மேய்ச்சல் களம்.

(ii) களம் புறம்போக்கு.

(iii) சுடுகாடுகளும் இடுகாடுகளும்.

(iv) கால்நடைப் பட்டிகள்.

(v) வண்டிப் பேட்டைகள்.

(vi) தோப்புகள்.

முன்பெல்லாம் இப் புறம்போக்குகள் ஊராட்சிகளிடம் உரிமையாக்கப்படவில்லை. ஆனால் புதிய சட்டத்தின் 86 (2) பிரிவு ஒரு முக்கியமான மாறுதலைச் செய்திருக்கிறது. இப்போது அப் புறம்போக்குகள் ஊராட்சிகளிடம் உரிமை யாக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால், ஊராட்சியினிடம் உரிமையாக்கப் பட்டுள்ள புறம்போக்குகள் என்று அவைகளைக் குறிப்பிடலாம். எனவே, ஊராட்சி/பேரூர் ஒவ்வொன்றுக்காகவும், ஊராட்சியினிடம் உரிமையாக்கப் பட்டுள்ள புறம்போக்குகளின் பட்டியல்களை, நில அளவை எண்கள் முதலிய விவரங்களுடன் தயாரிக்கும்படி செய்து, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிடம்

அப் பட்டியல்களைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர், ஊராட்சியினிடம் உரிமையாக்கப்பட்டுள்ள அப் புறம் போக்குகளை விதிகளினால் நிர்ணயிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு பயன்படுத்துவதை ஊராட்சிகள் முறைப் படுத்தும்.

5. **ஊராட்சியினிடம் உரிமையாக்கப்பட்டுள்ள தண்ணீர்க் கட்டு வேலைகள்.**—பழைய சட்டத்தில் 77 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவிற்கு நிகரான புதிய சட்டத்தில் கண்ட 84-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி பொதுவான நீர்க்கால்கள், ஊற்றுகள், தேக்கங்கள், குளங்கள், தொட்டிகள், நீர்த்தாரைகள், கிணறுகள், நிலைக் குழாய்கள், மற்ற தண்ணீர்க் கட்டு வேலைகள் இவைகளைச் சேர்ந்தாற்போலிருக்கிற (தனியார் உடைமையாயிராத) பக்கத்து நிலம் ஆகியவை ஒரு பாசனக் கட்டுவேலையுடன் தொடர்புடையவை யாயிராவிட்டால், அவைகள் எல்லாம் ஊராட்சிக்கு உரித்தானவையாகி, அதன் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவையாயிருக்கும். அரசாங்கத்தார், விளம்பரம் பிறப்பித்து அதன் மூலமாக, அக் கட்டுப்பாட்டை வரையறுக்கலாம் அல்லது குறைக்கலாம் அல்லது ஊராட்சியினிடம் கலந்தாலோசித்து அது ஆட்சேபனைகளை தெரிவித்தால் அவற்றை முறைப்படி கவனித்த பிறகு, ஏதேனும் பொது நீர் வழங்கு ஆதாரத்தையும் அதை அடுத்தும் சேர்ந்தாற் போலும் உள்ள பொது நிலத்தையும், ஆட்சி செய்யும் பொறுப்பை மேற் கொள்ளலாம். அவ்வாறு குறிப்பிட்டுள்ள தன்மை வாய்ந்த எல்லாத் தண்ணீர்க் கட்டு வேலைகளையும், அவைகளைச் சேர்ந்தாற்போல் எவையேனும் நிலங்கள் ஊராட்சி ஊர்/பேரூரின் எல்லைகளுக்குள் இருந்தால் அவைகளையும் இனங் காட்டிப் பட்டியல் படுத்தி சம்பந்தப்பட்ட ஊராட்சி ஆட்சியின் கீழ் முறைப்படி வைப்பது அவசியமாகும். அதன் பின்னர் அவசியமானால், மேற் சொன்ன, (2) உட்பிரிவின்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

6. **ஊராட்சியிடம் உரிமையாக்கப்பட்டுள்ள பொதுச் சாலைகள்.**—பழைய சட்டத்தின் 56 (1) பிரிவுக்கு நிகரான புதிய சட்டத்தின் 76 (1) பிரிவின்படி ஒரு ஊராட்சி ஊரில்/பேரூரில் மாவட்ட (ஊராட்சி ஒன்றியம்) சாலைகளும், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் என்று அரசாங்கத்தாரால் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகளும் அல்லாத மற்றெல்லாப் பொதுச்சாலைகளும் ஊராட்சிகளிடம் உரிமையாக்கப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியத்திடம் உரிமையாக்கப்பட வேண்டிய சாலைகள் இன்னவையென்று இடங் குறிப்பிட்டுக் காட்டுவதற்கும், ஊராட்சிகளிடம் உரிமையாக்கப்பட வேண்டிய சாலைகளி லிருந்து அவற்றைப் பிரித்துக் காட்டுவதற்குமான ஆணைகள் தனியாக

அறப்பிக்கப்படுகின்றன. இந்த ஆணைகளையொட்டி, ஊராட்சி ஒவ்வொன்றியத் திடமும் உரிமையாக்கப்பட்டுள்ள ஊராட்சிச் சாலைகளின் பட்டியல்களை, நில அளவை எண் முதலிய விவரங்களுடன் தனியாகத் தயாரிக்க வேண்டும்.

7. **ஊராட்சியினிடம் உரிமையாக்கப்பட்டுள்ள மற்ற நிலங்கள்.**—வருவாய்த் துறை வாரியத்தின் நிலையாணைகளின்படிக்கான உரிமை மாற்ற நடவடிக்கை களின் விளைவாக ஊராட்சிகளிடம் ஏற்கெனவே உரிமையாக்கப்பட்டுள்ள அல்லது இனிமேல் உரிமையாக்கப்படக்கூடிய வேறு நிலங்கள் இருக்கலாம். ஏற்கெனவே சொன்னபடி, வரி விதிக்கப்பெற்றுள்ள தரிசுகள் ஊராட்சிகளிடம் தாமாகவே உரிமையாகாவிட்டாலும் ஊராட்சிகள் அந் நிலங்களைத் தங்களுக்கு உரிமையாக்கிக் கொள்ளலாம்; இதற்காக மாவட்ட ஆட்சியாளருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம். குறிப்பிட்டவற்றில் தனி ஆட்சேபணைகள் இருந்தாலன்றி, அவ்விண்ணப்பக் கோரிக்கைகளுக்குத் தாராளமாக அனுமதி வழங்க வேண்டும்.

8. **உரிதாக்கப்பட்ட உடைமைகளில் ஊராட்சிகளுக்குள்ள உரிமைகள்.**—மேற்படி சட்டத்தின்படி மேலே 2, 3, 4, 5, 6-வது பத்திகளைப் பார்க்கவும்—அல்லது வருவாய்த் துறை வாரியத்தின் நிலையாணைகளின்படிக்கான உரிமை மாற்றம் நடவடிக்கைகளின் விளைவாக மேலே 7 ஆவது பத்தியைப் பார்க்கவும். ஊராட்சிகளிடம் உரிமையாக்கப்பட்டுள்ள உடைமைகள், அவைகள் உரிமை யாக்கப்பட்ட அல்லது உரிமை மாற்றம் செய்யப்பட்ட நோக்கம் அல்லது நோக்கங்களுக்காக ஊராட்சிகளால் பயன்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப் பட்டவையாகும். அவ்வுடைமைகளை மற்றவர்களுக்கு ஒப்படை செய்யவோ உரிமை மாற்றம் பண்ணவோ ஊராட்சிகளுக்கு உரிமை இல்லை.

9. **ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்ட உடைமைகளுக்குப் பட்டியல்கள் தயாரித்தல்.**—கர்ணம், ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்ட எல்லா உடைமைகளுக்கும் பட்டியல் ஒன்றை இருமொழிப் பதிவேடுகளில் பத்தி களிட்டு இரட்டைப் பிரதியாகத் தயாரிக்க வேண்டும். இதற்கென்று உண்டாக் கப்படும் கடைசிக் குறிப்புரைப் பத்தியில், அது தயாரிக்கப்பட்ட சமயத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் இருந்தால் அவர்கள் பெயரைக் குறிப்பிட வேண்டும். குடிமுறை நிலப் பரப்பில் உள்வட்ட வருவாய் ஆய்வாளர்களும், 1948 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஜமீன்களை (எடுத்துவிட்டு குடிமுறையாக மாற்றுவது) பற்றிய சட்டத்தின்படி இன்னும் நிலவரித் திட்டமிடப்படாத பரப்புகளில் துணை வட்ட அலுவலர் வரிசைக்குக் குறையாத ஜமீன் மேலாளரும் அல்லது உதவி மேலாளரும் அப் பட்டியல் சரியானதென்று கண்டு அத்தாட்சிக் கையெழுத்திட வேண்டும்.

இப் புறம்போக்குகளில் மரங்கள் இருந்தால், அவற்றை மரப் பட்டாவின் படி வைத்திருக்கலாம் அல்லது அவற்றின் மேல் மாசூலுக்குரிய உரிமையை ஒவ்வொரு பசலியிலும் விற்பனை செய்யலாம். கர்ணம் மரங்களின் ஒவ்வொரு வகைக்காகவும் தனித்தனிப் பட்டியல்கள் இரட்டைப் பிரதியாகத் தயாரிக்க வேண்டும். குடிமுறை நிலப் பரப்பில் வருவாய் ஆய்வாளர் 1948 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஜமீன்களை (எடுத்துவிட்டு குடிமுறையாக மாற்றுவது) பற்றிய சட்டத்தின்படி இன்னும் நிலவரித் திட்டமிடப்படாத ஜமீன் பரப்புகளில் ஜமீன் மேலாளர் உதவி மேலாளர் இப் பட்டியல்களில் மேலொப்பம் செய்ய வேண்டும். சந்தர்ப்பத்துக்கேற்ப வருவாய் ஆய்வாளராவது ஜமீன் மேலாளராவது, உதவி மேலாளராவது இது பற்றித் தனி ஆணைகள் எவையேனும் பிறப்பிக்கப்பட்டிருந்தால் அவைகளையொட்டி அப்பட்டியல்களை ஆய்ந்து பார்க்க வேண்டும்.

மர வரி ஏற்பாட்டின்படி வைத்திருக்கப்படுபவை அல்லாத மற்ற மரங்கள் சம்பந்தமான பட்டியலைக் கொண்டு ஊராட்சி, அவைகள் சம்பந்தமாகப் பொருத்தமான நடவடிக்கை எடுத்துக் கொள்வது இயலுவதாயிருக்கும். மர வரி ஏற்பாட்டின்பேரில் வைத்திருக்கப்படும் மரங்கள் முன்போலவே வருவாய்த் துறைக் கணக்குகளில் காட்டப்படும்; ஊராட்சிகளின் தகவலுக்காகத்தான் இம் மரங்களின் பட்டியல் அவைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்டுள்ள உடைமைகளின் பட்டியல், மேற்சொன்ன முறைகளில் ஊர் அலுவலர்களைக் கொண்டு தயாரிப்பதற்கு அவசரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; உடைமைகளின் பட்டியல்கள் அடுத்த ஜமாபந்தியின்போது சரிபார்க்கப்படும்படியும் ஊராட்சித் தலைவரிடம் அவை கொடுக்கப்படும்படியும், அவர்கள் ஏற்றுக் கொண்டதற்கு ஒப்பமிட்டபடியும், ஜமாபந்தி முடிந்தவுடன் பதிவுக்காக அவை, வட்ட அலுவலகத்தில் கோப்பில் வைக்கப்படும்படியும் பார்த்துக்கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

அடுத்த ஜமாபந்தியின்போது தயாரித்துச் சரிபார்க்கப்பட்ட பட்டியல் எக் காரணத்தினாலோ நிறைவற்றதாக இருந்தால், அதற்குப் பிறகு கூடிய விரைவில் தொடர்பான பட்டியல் ஒன்றைத் தயாரித்து, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு அனுப்பலாம். மேற்படி சட்டத்தில் கண்ட 164 ஆவது பிரிவின்படி, செயல் அதிகாரி அல்லது ஆணையாளர் எழுதியுள்ள ஆணை மூலமாக ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆட்சி வரம்புக்குள் அடங்கிய ஒரு வருவாய் ஊர் அல்லது அதன் ஒரு பாகம் அல்லது

அதில் உள்ள ஒருவர் அல்லது உடைமை சம்பந்தமாக நிர்ணயிக்கப்படக் கூடிய வகைகளுக்குள் அடங்கும் எதைப்பற்றியேனும் தமக்குத் தகவல் தெரிவிக்கும்படி அவ்வூரின் தலைவரையாவது கர்ணத்தையாவது இவ்விரு வரையுமாவது கேட்கலாம்.

ஆ. ஊராட்சியினால் முறைப்படுத்தப்படும் உடைமைகள்.

10. ஊராட்சியினால் முறைப்படுத்தப்படும் புறம்போக்குகள்.—அரசினரின் ஆணை ஒன்றினால் இதன்பொருட்டு ஊராட்சிக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருந்தால் மேலே 4 ஆவது பத்தியில் குறிப்பிட்டிருப்பவையல்லாத வேறொரு புறம்போக்கின் உபயோகத்தை முறைப்படுத்த, புதிய சட்டத்தின் 86 (4) பிரிவுக்கு நிகரான பழைய சட்டத்தின் 60 (4) பிரிவில் ஊராட்சி களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. புதிய சட்டத்தில் கண்ட 86 (4) பிரிவின்படி ஆணைகள் பிறப்பிக்க அரசாங்கத்தாருக்குள்ள அதிகாரத்தை மாவட்ட ஆட்சியாளர்களுக்கு ஒப்படைப்பதற்காக, 1960 சனவரி 12 ஆம் தேதிய 76 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணையில் தனியாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இப் பிரிவின் ஏற்பாடுகளை மாவட்டத்திலுள்ள எல்லா ஊராட்சிகளுக்கும் தெரியும்படிச் செய்யுமாறு மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். ஊர் நலத்துக்காக புறம்போக்கின் உபயோகத்தை முறைப் படுத்த அதிகாரம் கொடுக்கும்படி ஊராட்சி விண்ணப்பம் செய்துகொண்டாலும் கொள்ளும்போதும், சாதாரணமாக அவ்வாறு அதிகாரம் கொடுக்கும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; ஆனால், குறிப் பிட்ட எதிலேனும், அவ்வாறு கொடுக்கக்கூடாதென்பதற்குத் தனிப்பட்ட காரணங்கள் இருந்தால் அவர்கள் கொடுக்க வேண்டியதில்லை. மாவட்ட ஆட்சியாளர்கள் அவ்வப்போது குறிப்பிடுவது அவசியமெனக் கருதக்கூடிய திட்டங்களுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு அவ்வாறு அதிகாரம் கொடுக்கலாம்.

11. ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்ட உடைமைகளிலும் ஊராட்சியினால் முறைப்படுத்தப்படும் உடைமைகளிலும் மரங்களை நடுவதும் பாதுகாப்பதும்— மேற்படி சட்டத்தின் ஏற்பாடுகள்—(i) சாலைகளில் மரங்கள் நடுதல்.— பழைய சட்டத்தின் 51 ஆவது பிரிவுக்கு நிகரான புதிய சட்டத்தில் கண்ட 64 ஆவது பிரிவின்படி ஊராட்சிகளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள யுக்த அலுவல் களில் ஒன்று என்னவென்றால், ஊரில் பொதுச் சாலைகளின் இருமருங்கிலும் "மரங்கள் நட்டுப் பாதுகாப்பது" ஆகும். இது சம்பந்தமாகப் பழைய

சட்டத்துக்கும் புதுச் சட்டத்துக்கும் உள்ள வேற்றுமை என்னவென்றால், பழைய சட்டத்தின்படி, அந்தச் சாலை ஊராட்சியினாலேயே பேணப்படா விட்டால், அச்சாலையைப் பேணும் அதிகாரிக் குழுவும் ஊராட்சியும் ஒன்றோடொன்று ஒப்புக் கொள்ளும் வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு ஊரில் அல்லது பேரூரில் உள்ள எல்லாப் பொதுச் சாலைகளின் இருமருங்களில் மரங்கள் நட்டுப் பேணும் செயலைப் ஊராட்சி மேற்கொள்ளலாம்.

(ii) ஊராட்சிக்கு உரிமையாக்கப்பட்ட உடைமைகளிலும் ஊராட்சியினால் முறைப்படுத்தப்படும் உடைமைகளிலும் மரங்கள் நடுதல்.—பழைய சட்டத்தில் கண்ட 60 ஆவது பிரிவின் (5) உட்பிரிவுக்கு நிகரான புதிய சட்டத்தில் கண்ட 86 ஆவது பிரிவின் (5) உட்பிரிவில் நிபந்தனை கண்டிருப்பது என்னவென்றால்—ஊராட்சியால் நிர்ணயிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு, தன்னிடம் உரித்தாக்கப்பட்டோ படாமலோ உள்ள புறம்போக்கில் மரங்களை நடலாம். ஆனால் அந்தப் புறம்போக்கின் பயனீடு, அதே பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படியாவது (4) உட்பிரிவின் படியாவது அதனால் முறைப்படுத்தப்பட வேண்டும்.

(iii) அரசாங்கத்தார் இந்த ஏற்பாடுகளுக்கு மிக அதிகமான முக்கியத் தன்மை கொடுக்கிறார்கள். புறம்போக்குகள் அல்லது தரிசு நிலங்கள் ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டிருந்தாலும் இராவிட்டாலும் அவைகளில் மரங்களை நட்டுப் பாதுகாத்து வருவதில் ஒவ்வொரு ஊராட்சியும் தன்னால் ஆனதையெல்லாம் செய்ய வேண்டுமென்பது அவசியமென அவர்கள் கருதுகிறார்கள். ஊரில் விறகு, கால்நடைத் தீனி உரம் சம்பந்தமான வளங்களை இயன்ற அளவுக்கு மிக அதிகமாகப் பெருக்கி, அதன் மூலம் ஊரிலே உழவு உற்பத்திப் பெருக்கத்துக்கு உதவும்பொருட்டு இப்படிச் செய்வது அவசியமாகிறது. இவ்வாறு வளர்க்கப்படும் தோப்புகள் மதிப்புள்ள சமுதாயச் சொத்துக்களாக இருக்கும் ; இவைகளினால் வருங்காலத்தில் ஊராட்சிகளுக்கு வருமானம் கிடைக்கும். இதன்பொருட்டு அவசியமான நிதிகளை ஊராட்சிகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது பற்றித் தனியாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது ; அதைப் பற்றி நாளடைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

(vi) மேற்சொன்ன சட்டத்தின் ஏற்பாடுகளை எல்லா ஊராட்சிகளின் கவனத்துக்கும் கொண்டு வந்து, முறைப்படியான ஏற்பாட்டின்படி மரங்களை நட்டுப் பாதுகாக்கும் செயலை மேற்கொள்ளும்படி அவைகளுக்கு விளக்க உரைகள் பிறப்பிக்குமாறு மாவட்டங்களின் ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

(1960 ஏப்ரல் 4-ஆம் தேதிய 608-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

95. முன்னேற்பாடுகளாகப் புறம்போக்குகளை உரித்தாக்குவது.—1960 ஏப்ரல் 4-ஆம் தேதியிட்ட 608-ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாங்க ஆணையில், அரசாங்கத்தார் 1958-ஆம் ஆண்டின், தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட பல்வேறு சட்ட முறையான ஏற்பாடுகளை நிறைவேற்றும் வகையில் ஊராட்சிகளிடம் சில சொத்துக்களை உரிமையாக்குவது சம்பந்த மாகவும், ஊரிலுள்ள வேறு சில பொது உடைமைகளைப் பயன்படுத்துவதற்கான அதிகாரத்தை ஊராட்சிகளுக்குக் கொடுப்பது சம்பந்தமாகவும் ஆணைகள் பிறப்பித்தார்கள். இந்த ஆணையின்படி, பின்வரும் வகைகளைச் சேர்ந்த புறம் போக்குகள் ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டன :—

(i) மேய்ச்சல் புறம்போக்கு.

(ii) களம் புறம்போக்கு.

(iii) சுடுகாடுகள், இடுகாடுகள்.

(iv) கால்நடைப் பட்டிகள்.

(v) வண்டிப் பேட்டைகள்.

(v) தோப்புகள்.

இந்த நிலங்கள் சட்டமுறையாக ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டுள்ளன. சாதாரணப் பொது நலனுக்காக இந்த நிலங்களைப் பயன்படுத்தும் முறையை நிச்சயிக்கும் முழு அதிகாரமும் ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிறது. புதிய மரங்களை நடுவதற்காக அல்லது உள்ளூர் உர வளங்களைப் பெருக்கு வதற்கென உத்தேசிக்கப்பட்ட பிற வகைப் பயிர்களை வளர்ப்பதற்காக இப் பரப்புகளைப் பயன்படுத்தும் அதிகாரங்களும் மேற்சொன்ன அதிகாரங்களில் அடங்கும்.

2. நீர்க்கால்கள் முதலியவற்றை உரித்தாக்குவது.—அதே ஆணையில் 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் மற்றப் பிரிவுகளை அனு சரித்து, பாசனத் தொடர்பில்லாத எல்லாப் பொது நீர்க்கால்களும், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் அல்லது ஊராட்சி ஒன்றியச்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டிராத எல்லாச் சாலைகளும் ஊராட்சிகளிடம் உரித்தாக் கப்பட்டன. மற்றும் உடைமைகளை மற்றவர்களுக்கு ஒப்படை செய்யவோ உரிமை மாற்றம் செய்யவோ ஊராட்சிகளுக்கு உரிமை இருக்காதென்றும் தங்க ளிடம் உரித்தாக்கப்பட்ட நிலங்களை ஊராட்சிகள், அவைகள் உரித்தாக்கப்பட்ட அல்லது உரிமை மாற்றம் செய்யப்பட்ட நோக்கம் அல்லது நோக்கங்களுக் காகப் பயன்படுத்த வேண்டுமென்றும் இந்த ஆணையில் சொல்லப்பட்டிருக் கின்றன.

3. *புறம்போக்குகளை முறைப்படுத்துவது.*—ஊர் நலனுக்காகப் புறம்போக்கின் உபயோகத்தை முறைப்படுத்த அதிகாரமளிக்கும்படி கோரி ஊராட்சி விண்ணப்பம் செய்துகொள்ளலாமெனவும், அவ்வாறு விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன்பேரில், மாவட்ட ஆட்சியாளர்கள் அதிகாரம் வழங்கக் கூடாதென்பதற்குத் தனிப்பட்ட காரணங்கள் இருந்தாலன்றி, அவ்வாறு அதிகாரம் வழங்க வேண்டுமெனவும், அதே ஆணையில் அரசாங்கத்தார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

4. **தீர்வை விதிக்கப்பட்ட தரிசு முதலியவற்றைப் பயன்படுத்துவது சம்பந்தமாக ஊராட்சிகளுக்குள்ள அதிகாரம்.**—(i) தீர்வை விதிக்கப்பட்ட தரிசுகள்; (ii) தீர்வை விதிக்கப்படாத தரிசுகள்; (iii) நத்தம் புறம்போக்குகள் ஆகியவற்றின் உபயோகம் சம்பந்தமாக ஊராட்சிக்குள்ள அதிகாரம் யாது என்னும் வினா அடிக்கடி எழுதப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தார் இவ் வினாவை விரிவாக ஆய்ந்து பார்த்தார்கள். தொடக்கத்திலேயே அவர்கள் தெளிவாகச் சொல்ல விரும்புவது என்னவென்றால் (பொது நலனை முன்னிட்டு அரசாங்க துறைகளில் எதன் மூலமாகவேனும் அவர்கள் தொடர்ந்து நேரடியாக ஆட்சி செய்ய வேண்டியிராத) அரசாங்கத்தார் வசமுள்ள பொது நிலங்களையெல்லாம் ஊரின் பொது நலனுக்காக ஊராட்சி பயன்படுத்துவதற்கு ஊராட்சிகளுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்பதேயாகும். இந்த முக்கியமான நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, மேற்சொன்ன மூன்று வகை நிலங்களைப் பயன்படுத்துவது பற்றி அரசாங்கத்தார் ஆய்ந்து பார்த்தார்கள்; பின்வரும் ஆணைகளைச் செயற்படுத்த வேண்டுமெனக் கட்டளையிடுகிறார்கள்:—

) **தீர்வை விதிக்கப்படாத தரிசுகள்.**—தீர்வை விதிக்கப்படாத தரிசு நிலங்கள் என்பவை, ஊரில் தனிப்பட்ட எவரும் பட்டாவின் பேரில் வைத்திராத பொது நிலங்களாகும்; ஆனால், சாகுபடி செய்ய விரும்பும் ஒருவர் விண்ணப்பம் செய்துகொள்ளக்கூடிய காலத்தில் அந் நிலங்கள் சாகுபடிக்குத் தகுதியானவை எனக் கருதப்படுவதை உத்தேசித்து, வரி விதிக்கப்பெற்ற தரிசுகள் என அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன. தீர்வை விதிக்கப்பட்ட அத்தரிசு நிலங்களைத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு ஒப்படை செய்வது பற்றினவற்றை இதன் பொருட்டான வருவாய்த் துறை வாரியத்தின், நிலையாணைகளும் அரசாங்கத்தாரின் பல்வேறு ஆணைகளும் முறைப்படுத்துகின்றன. அந்நிலங்களை ஊராட்சிகளுக்குக் கொடுத்துவிடலாமா? அப்படியானால் எம்முறையில்? என்னும் வினாவை அரசாங்கத்தார் ஆய்ந்து பார்த்தார்கள். ஊராட்சிகள் இந் நிலங்களைத் தகுந்த ஒரு பொதுக் காரியத்துக்குப் பயன்படுத்தக் கூடுமானால், அது பொது நலனுக்குகந்ததாகும். அந்தப் பொதுக் காரியங்கள் என்பதில் உழவு அல்லது கால்நடைப் பராமரிப்பின்

முன்னேற்றத்தை முன்னிட்டு, எரிபொருள்கள், கால்நடைத் தீனி அல்லது பசுந்தழை எருப் பயிர்களை வளர்ப்பது என்பதும் அடங்கும். அதே சமயத்தில் தனியார்கள் இந்நிலங்களைச் சாகுபடிக்காக ஒப்படை செய்யும்படி இடைவிடாமல் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இவைகளையெல்லாம் ஆலோசித்துப் பார்த்து அரசாங்கத்தார் கட்டளையிடுவது என்னவென்றால், ஊரிலே தீர்வை விதிக்கப்பட்ட தரிசுகள் என்று வகைப் படுத்தப்பட்டுள்ள நிலங்கள் எல்லாம், ஏதேனும் பொதுக் காரியத்துக்காக ஊராட்சிக்குக் கிடைக்கக்கூடியவைகளாயிருக்க வேண்டும். தீர்வை விதிக்கப்பட்ட அத்தகைய தரிசுகளைப் பொதுக் காரியங்களுக்காக அவ்வாறு பயன்படுத்துவதற்கு, ஊராட்சிகள் இது பற்றி எந்த அதிகாரியின் அனுமதியையும் பெறவேண்டுமென எதிர்பார்க்கவில்லை. ஆயினும், தீர்வை விதிக்கப்பெற்ற அத்தகைய தரிசுகளில் தனியார்கள் உரிமைகள் உண்டாக்கிக் கொள்வதற்கு அனுமதி வழங்க ஊராட்சிக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தாரின் உத்தேசமில்லை என்பதைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகையால், ஒப்படை செய்வது, குத்தகைக்கு விடுவது அல்லது வேறு எந்த விதமான தனியார் உடைமை மூலமாக அந்த நிலங்களில் தனியார் உரிமையை உண்டாக்குவதற்கு ஊராட்சி அனுமதி வழங்கக் கூடாது என்னும் திட்டவட்டமான ஒப்பந்தத்துக்குட்பட்டு, தீர்வை விதிக்கப்பட்ட தரிசுகள் ஊராட்சிகளுக்குக் கிடைக்கும்படி செய்யப்படும். அத்தகைய உரிமைகளை உண்டாக்குவது மாநில அரசாங்கத்தைக் கட்டுப் படுத்தாது. மற்றொன்றையுங் கூடத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது, அரசாங்கத்தார் முறையான அறிவிப்பு கொடுத்து, கோட்ட ஆட்சியாளர் மூலமாக அந்த அனுமதியை ரத்து செய்து, அரசாங்கத் துறைகளில் உபயோகத்துக்காகத் தனியார்களுக்கு ஒப்படை செய்வதற்காக அல்லது வேறு எவையேனும் காரியங்களுக்காகத் தீர்வை விதிக்கப்பட்ட அத்தகைய தரிசுகளின் எந்தப் பாகத்தையாவது எல்லாப் பாகங்களையுமாவது, தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் காரியங்களுக்காகத் திரும்பக் கைக்கொள்ள எல்லாக் காலங்களிலும் உரிமை உள்ளவர்களாவார்கள். அப்படிப்பட்டவைகளில் எவ்வித ஈடும் பெற ஊராட்சிக்கு உரிமையில்லை.

(ii) **தீர்வை விதிக்கப்படாத தரிசுகள்.**—தீர்வை விதிக்கப்படாத தரிசு என்று வகைப்படுத்தப்பட்டிருக்கிற நிலங்கள் சம்பந்தமாக, நிலைமை இன்னதென்று, 1960 எப்ரல் 4-ஆம் தேதியிட்ட 608-ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாங்க ஆணையில் ஏற்கெனவே காட்டப்பட்டிருக்கிறது. தீர்வை விதிக்கப்படாத தரிசு நிலங்கள் எல்லாம், மேற்படிச் சட்டத்தின்படி சம்பந்தப்பட்ட ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற ஒதுக்கி வைக்கப்பட்டிராத

நிலம் எனக் கருதப்பட வேண்டுமென்று, இந்த ஆணையில் 3-வது பத்தியில் ஏற்கெனவே எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகையால், தீர்வை விதிக்கப் படாத தரிசு நிலங்கள் எல்லாம் சாதாரணமாக ஊராட்சியினிடம் உரித்தாக்கப் பட்டிருக்கும். தீர்வை விதிக்கப்படாத இந்தத் தரிசு நிலங்களை ஊராட்சி எந்தப் பொதுக் காரியத்துக்காகவேனும் தடையின்றி தாராளமாகப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

) நத்தம் புறம்போக்கு.—நத்தம் புறம்போக்குகள் பற்றிய தற் போதைய விதிகள், வருவாய்த் துறை வாரியத்தின் நிலையாணைகளின்படி வீட்டு மனைகளை ஒப்படை செய்வது பற்றிய விதிகளினால் முறைப்படுத்தப்படுகின்றன. புறம்போக்குகளின் உபயோகத்தைப் பற்றி ஒன்று நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது, நத்தம் புறம்போக்குகளில் சேர்க்கப்பட்டுள்ள நில அளவை எண்களுக்குச் சம்பந்தப்பட்ட பொது நில அளவை வரைபடங்களைத் தவிர, நத்தத்தில் உள்ளபடி அனுபோகத்திலிருக்கிற பரப்புகள் தொடர்பான விரிவான நில அளவை வரைபடங்கள் அனேக ஊர்கள் சம்பந்தமாகக் கிடைக்க வில்லை. ஆயினும், 1961-ஆம் ஆண்டு சனவரி 1-ஆம் தேதியன்று அனுபோகத்தி லில்லாத நத்தம் புறம்போக்குகளின் எல்லாப் பகுதிகள் சம்பந்தமாகவும், ஊராட்சி நத்தம் புறம்போக்கின் அத்தகைய ஏதேனும் பகுதியை ஊராட்சி ஆட்சிக்குச் சம்பந்தப்பட்ட எந்தப் பொதுக் காரியத்துக்காகவேனும் எந்த அதிகாரியிடமிருந்தும் முன் அனுமதி பெறாமல் பயன்படுத்திக் கொள்ளலா மென்று அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள். நத்தம் புறம்போக்கில் குறித்த எப்பகுதியேனும் அனுபோகத்தில் இல்லையா, அல்லது தனியார் வீட்டு மனையின் பாகமாயிருக்கிறதா என்பது பற்றித் தகராறு ஏற்பட்டிருக்கிற அல்லது எழக்கூடிய எவற்றிலேனும், அத்தகாறில் சிக்கிக் கொள்ளாதபடி ஊராட்சி கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்; அந்த நத்தம் புறம்போக்கின் பகுதியை ஊராட்சி பயன்படுத்துவது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்குமுன், கோட்ட ஆட்சியாளரின் தீர்ப்புக்காக அதை அது அனுப்ப வேண்டும். தீர்வை விதிக்கப்பட்ட தரிசுகள் சம்பந்தமாக மேற்சொன்ன தனியார் உரிமைகளை உண்டாக்குதல் பற்றி வரையறைகள் இதற்குக் கூட முழுவதும் பொருந்தும். அரசாங்கத்தார் நத்தம் புறம்போக்கின் எப்பகுதியையேனும் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற எக் காரியத்துக்காகவாகிலும் திரும்பக் கைக் கொள்வதற்கும் உரிமை உள்ளவர்களாவார்கள், அப்போது நிலத்துக்காக ஏதேனும் ஈடு கொடுக்கப் பெறுவதற்கு ஊராட்சிக்கு உரிமையில்லை.

5. **ஆக்கிரமிப்புகளைப் பற்றி விவரிக்கும் விதம்.**—இவ் வகைகளை சேர்ந்த பொது நிலங்கள் சம்பந்தமாக, இந்த ஆணையைச் செயற்படுத்தும் தேதியன்று ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டிருக்கலாம். அத்தகைய ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டுள்ள

இடங்களில் எல்லாம், அந்த ஆக்கிரமிப்பு வருவாய்த் துறையினர் ஆய்ந்து, வேண்டிய பட்டாக்களை வழங்கி ஆக்கிரமிப்பை முறைப்படுத்துவது அல்லது வெளியேற்றுவது மூலமாக ஒரு முடிவு எடுக்கும் வரையில், இந்த ஆணையின் அடிப்படையின் பேரில் அந்தப் பொது நிலங்களின் உபயோகத்தில் ஊராட்சிக்குள்ள அதிகாரம் அமலாக்கப்படத்தக்கதல்ல. இந்த ஆணை அமலாக்கப்பட்ட பிறகு இந்த நிலங்களில் தனியார்கள் செய்யும் ஆக்கிரமிப்புகள் சம்பந்தமாக, ஊராட்சி அத்தகைய ஆக்கிரமிப்புகளைப் பற்றி வருவாய்த் துறை அலுவலர்களிடம் தெரிவித்து, 1905-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஆக்கிரமிப்புகள் சட்டத்தின்படி வெளியேற்றும்படி கேட்கலாம். செயல் கட்டளைகளின்படி ஊராட்சியினிடம் ஒப்பளிக்கப்பட்டுள்ள எல்லா நிலங்கள் சம்பந்தமாகவும் இந்த நடைமுறை பொருந்தும். சட்ட முறையாக ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்டுள்ள நிலங்கள் சம்பந்தமாக, ஆக்கிரமிப்புகளை அகற்றுவிப்பதற்கு, 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்திலும் அதன்படி செய்யப்பட்ட விதிகளிலும் கண்ட நடைமுறையைப் பின் பற்றலாம். இந்த ஆணையில் விவரிக்கப்பட்டிருக்கிற பொது நிலங்களைச் சேர்ந்த ஒரு பகுதியின் அனுபோகம் சம்பந்தமாகத் தகராறு ஏற்பட்டிருக்கிறபோதெல்லாம் அதைத் தீர்ப்பதற்காக ஊராட்சி அதனைக் கோட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்; கோட்ட ஆட்சியாளரின் தீர்ப்பு முடிவானதாகும்.

(1961 ஏப்ரல் 4-ஆம் தேதிய 972-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

முதலில் சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவரும் கர்ணமும் அந்த ஊர் முழுவதிலும் கூட்டாகச் சென்று அதன் எல்லையை வரையறுக்க வேண்டும்; ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற புறம்போக்குகளின் வகைகள் தீர்வை விதிக்கப்படாத தரிசு, முறைப்படுத்திப் பயன்படுத்திக் கொள்ளவதற்காக ஊராட்சிகளிடம் ஒப்பளிக்கப்பட்டிருக்கிற நிலங்கள் ஆகியவை உட்பட, ஊராட்சி ஏதேனும் அக்கறை கொண்டுள்ள நிலங்களையெல்லாம் கர்ணம் ஊராட்சித் தலைவருக்கு இனங் காட்ட வேண்டும்.

நிலங்களின் ஒவ்வொரு வகையையும் ஊராட்சித் தலைவருக்குக் கர்ணம் தெளிவாகவும் சரியாகவும் இனங் காட்ட வேண்டும்; ஊர்ப் படத்தின்படி ஒன்றில் ஊரில் உள்ள (அ) உரித்தாக்கப்பட்ட, (ஆ) மற்ற பொது நிலங்களைக் குறியிட்டுக் காட்ட வேணடும். அதற்குப் பிறகு, மேற்சொன்ன அரசு ஆணைகள் இரண்டின் வரம்புக்குள் வருகிற நிலங்களின் பட்டியல் ஒன்றைக் கர்ணம் தயாரிக்க வேண்டும்; ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டிருப்பவைகளையும் முறைப்படுத்துவதற்காக ஒப்புவிக்கப்பட் டிருப்பவைகளையும் அப் பட்டியலில் தெளிவாகக் குறிப்பிட்டு, அப் பட்டியலை ஊராட்சித் தலைவரிடம் கொடுத்துவிட

வேண்டும். இப் பட்டியலும், மேற்கண்டவாறு முறையாகக் குறியிடப்பட்ட வரைப்படமும் ஊராட்சியின் நிலையான ஆவணங்களாயிருக்கும். ஊராட்சித் தலைவர் மேற்கண்டவைகளைப் பெற்றுக் கொண்டதாக ஒப்புக் கொள்வதற்கு முன், படத்திலும் பட்டியல்களிலும் உள்ள குறியீடுகள் ஒழுங்காக இருக் கின்றனவென்றும், தாமும் கர்ணமும் சென்று எல்லை வரையறுத்தபோது கர்ணம் இனங்காட்டிய விவரங்களின்படி இருக்கின்றனவென்றும் ஐயமறத் தெரிந்து கொள்ளவேண்டும்.

(1962 சனவரி 18-ம் தேதிய 163-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

ஆக்கிரமிப்புகள் சம்பந்தமாக வருவாய்த் துறை வாரியத்தினரால் தயா ரிக்கப்பட்டு இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டிருக்கிற விரிவான விளக்க உரை கள் அடங்கிய சுற்றறிக்கை வரைவினை அரசாங்கத்தார் ஒப்புக் கொள்கிறார்கள். சுற்றிப் பார்த்து ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற அல்லது ஒப் புவிக்கப்பட்டிருக்கிற பொது நிலங்களை இனங் கண்டுபிடிப்பது சம்பந்தமாக, இந்த நிலங்களின்மீதும் பிற வகைகளைச் சேர்ந்த பொது நிலங்களின்மீதும் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளைப்பற்றி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் எல்லாரும் உடனடியாக மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள்.

3. *கால அட்டவணையைக் கடைப்பிடித்தல்.*—பொது நிலங்கள் சம்பந்த மாகச் சுற்றிப் பார்த்து அவற்றைக் கொடுப்பது சம்பந்தமான பல்வேறு நட வடிக்கைகள் நிறைவு செய்வதற்காகவும், அவைகளில் ஏற்பட்டிருக்கிற ஆக்கிர மிப்புகளைத் தரப்படுத்துவதற்காகவும் சில கால அட்டவணைகள் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றனவென்று, இந்த ஆணையின் இணைப்பில் கண்ட சுற்றறிக்கை விளக்க உரைகளிலிருந்து தெரியவரும். இக் கால அட்டவணைகளைக் கண்டிப் பாகக் கடைப்பிடிப்பது முக்கியம். அவ்வாறு செய்வதன் அவசியத்தை, ஆட்சிப் பணிகள்பற்றிய ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக் குழுவின் இரண்டா வது கூட்டத்தின்போது உறுப்பினர்கள் பெரிதும் வற்புறுத்தியிருக்கிறார்கள். தக்க விளக்க உரைகளை மாவட்ட ஆட்சியாளர்களுக்குப் பிறப்பிக்கும்படி வருவாய்த் துறை வாரியத்தினர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்; கீழ் அலு வலர்களின் பணியை மாவட்ட ஆட்சியாளர்கள் நெருங்கிக் கவனித்து, மறு ஆய்வு செய்ய வேண்டும். எந்தப் பொருளிலும், ஆக்கிரமிப்புகளைத் தரம் பிரிக்கும் பணியை 1963-ம் ஆண்டு சூன் மாதம் 30-ம் தேதிக்குள் முடித்து விட வேண்டும். அவ்வறிக்கையை வருவாய்த் துறை வாரியத்தினருக்குக் கால அட்டவணையின்படி அனுப்பிவிட வேண்டும். பல்வேறு நடவடிக்கைகளில் ஊராட்சிகள் ஈடுபட வேண்டுமெனச் சுற்றறிக்கையில் கருதியிருக்கிறபடியால்,

செய்யப்பட்ட பணியின் முன்னேற்றம்பற்றிய காலமுறை அறிக்கை ஒன்றை, தகவலுக்காகவும் மறுஆய்வுக்காகவும் மாவட்ட வளர்ச்சிமன்றங்கள் முன் வைப்பது நலமென்று அரசாங்கத்தார் கருதுகிறார்கள். ஆகையால் செய்யப் பட்ட பணியைப் பற்றிய முன்னேற்ற அறிக்கை ஒன்றை, தகவலுக்காகவும் மறுஆய்வுக்காகவும் (1962 டிசம்பரிலிருந்து தொடங்கி) இரண்டு மாதத்துக் கொருமுறை மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் முன் வைக்கும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. பொதுநிலங்களைச் சுற்றிப் பார்த்து எல்லை வரையறுப்பதில் மட்டு மல்லாமல், ஆக்கிரமிப்புகளைத் தரம் பிரிப்பதிலுங்கூட ஊராட்சி கலந்துகொள்ள வேண்டுமென்பது சுற்றறிக்கை விளக்க உரைகளின் நோக்கமாகும். சுற்றறிக் கையின் 1 ஆவது, 4 ஆவது பத்திகளில் இவைகளைப் பற்றிச் சொல்லப்பட் டிருக்கிறது. எல்லாவற்றிலும் இவ்விளக்க உரைகளைப் பின்பற்ற வேண்டும். முக்கியமாய் ஆக்கிரமிப்புகளைத் தரப்படுத்துவது சம்பந்தமாகப் பின்பற்ற வேண்டும்; இதனால், ஊராட்சி கலந்தாலோசிப்பது காரணமாக, ஊரார் கருத்துக்களை விரைவாகக் கண்டறிவதற்கும், அரசாங்கத்தார் கொள்கையின் படி ஆக்கிரமிப்புகளை ஒழுங்காகத் தீர்வு செய்வதில் பொதுமக்களின் கூட்டுறவு கிடைப்பதற்கும் வசதி உண்டாகுமெனக் கருதப்படுகிறது.

5. **ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்ட அல்லது ஊராட்சியினால் முறைப் படுத்தப்படும் நிலங்களில் உள்ள நில அளவைக் கற்களுக்கு குறியிடுவது.**— சுற்றிப் பார்த்து எல்லை வரையறுத்த பிறகும், ஊராட்சிகளிடம் உரிதாக்கப் பட்டுள்ள அல்லது ஒப்படைக்கப்பட்டிருக்கிற பொது நிலங்களை இனங் கண்டு பிடிப்பதில் தலைவர்கள் இடர்ப்படுகிறார்களென்று, ஆட்சி—பணிகள் பற்றிய ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக் குழுவின் இரண்டாவது கூட்டத்தின்போது எடுத்துக்காட்டப்பட்டது; ஏனென்றால், அனேக இடங்களில், நில அளவைக் கற்கள் காணாமற்போய்விட்டிருக்கின்றன என்றும், ஊராட்சியினிடம் உரிதாக்கப் பட்ட அல்லது ஊராட்சியினால் முறைப்படுத்தப்படும் பொது நிலங்களை மற்றவைகளிலிருந்து பிரித்துக் காட்டுவதற்குத் தகுந்த குறியீடுகள் எவையு மில்லை. ஊராட்சியினிடம் உரிதாக்கப்பட்ட அல்லது ஊராட்சியினால் முறைப் படுத்தப்படும் பொது நிலங்களில் இருக்கிற நில அளவைக் கற்கள் எளிதில் இனங்கண்டு பிடிக்கத் தக்கவையாயிருக்கும்படி செய்யும்பொருட்டு அவை களுக்குத்தக்கவாறு குறியிடலாமென ஆலோசனை சொல்லப்பட்டது. அரசாங் கத்தார் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்கிறார்கள். ஊரர்ட்சிகளிடம் உரித் தாக்கப்பட்டுள்ள அல்லது ஊராட்சியினால் முறைப்படுத்தப்படும் பொது நிலங் களை எளிதில் பார்க்கும்படி நில அளவைக் கற்கள் ஒவ்வொன்றின் பக்கத்திலும் என்பதைக் குறிக்கும்) " " என்னும் எழுத்தைக் கீல் கொண்டு குறியிட வேண்டுமென அவர்கள் கட்டளையிடுகிறார்கள். இந்த ஆலோசனையைச் செய *

லாற்றுகையில், காணமற்போன ஒரு நில அளவைக் கல்லுக்குப் பதிலாக மற்றொன்றை நடுவது அவசியமெனத் தெரியவந்தால், கூடுமான இடங்களி லெல்லாம் அந்தப் பதிலமர்த்திடு வேலையை உடனுக்குடன் கவனிக்கலாம். நாளடைவில் பதிலமர்த்திடு செய்யப்படும் நில அளவைக் கற்களுக்கு, அவ்வாறு பதிலமர்த்தீடு செய்யப்பட்டாலும், செய்யப்படும்போதும், கீல் கொண்டு குறி யிடலாம். நில அளவைக் கற்களைப் பதிலமர்த்தீடு செய்து, அவைகளுக்குக் கீல் கொண்டு குறியிடும் பணியை, வருவாய்த் துறைப் பணியாளர்கள் செய்ய வேண்டும். நில அளவைக் கற்களுக்குக் கீல் கொண்டு குறியிடுவது சம்பந்த மாகப் பிடிக்கும் செலவை ஊராட்சிகள் தங்கள் சொந்த நிதிகளிலிருந்து செய்ய வேண்டும்.

6. **ஊர்ப் படங்கள் முதலியவற்றை வழங்குவது.**—பொது நிலங்களைப் பய னுள்ள வகையில் பயன்படுத்துகையில் பார்த்துக் கொள்ளும் காரியங்களுக் காகச் சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் நிலையான ஆவணங்களாய் வைத்திருப் பதற்கு, ஊர்ப் படங்கள், நில அளவுக் கணக்குகள் அடங்கலினின்றும் ஏடு குறிப்புகள் ஆகியவற்றை அவைகளுக்கு வழங்கலாமென்றுங்கூட அரசாங்கத் தாருக்கு ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தார் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்கிறார்கள். எல்லா ஊராட்சிகளுக்கும் ஊர்ப் படங்களின் படிகள் வழங்கப்பட வேண்டுமென அவர்கள் கட்டளையிடுகி றார்கள். நில அளவு கணக்கின்படி, அடங்கலினின்றும் ஏடு குறிப்புகள் ஆகியவை சம்பந்தப்பட்ட வரையில், ஊராட்சி அவைகள் வேண்டுமெனக் கேட்கும்போது, ஊர்க் கர்ணங்கள் சந்தர்ப்பத்துக்கேற்ப படிகளை அல்லது ஏடு குறிப்புகளை எடுத்து, அவைகளை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். நில அளவுக் கணக்கு களுக்காகப்படிகள் எடுப்பதற்காக வருவாய்த் துறை வாரியத்தினரால் நிர்ண யிக்கப்படுகிற வீதங்களின்படி கர்ணங்களுக்குக் கட்டணங்கள் கொடுக்கப்படும் கட்டண வீதங்களை நிர்ணயித்து, அவைகளை மாவட்ட ஆட்சியாளர்களுக்குத் தெரிவிக்கும்படி வருவாய்த் துறை வாரியத்தினர் கேட்டுக் கொள்ளப்படுகிறார் கள். அக் கட்டணங்களை ஊராட்சிகள் தங்கள் சொந்த நிதிகளிலிருந்து கர்ணங்களுக்குக் கொடுக்க வேண்டும்.

(1962 நவம்பர் 8-ம் தேதிய 2428-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

இணைப்பு I

தோற்றுவாய்.—வருவாய்த் துறை வாரியத்தின் 1962-ம் ஆண்டு செப்டம்பர் 22-ம் தேரியிட்ட 1.7729/62-1 ஆம் கேட்புக் கடிதத்தில் பிறப்பிக்கப்பட்ட விளக்க உரைகள் ரத்து செய்யப்படுகின்றன. எல்லாவகை அரசாங்க நிலங் களிலும் சுற்றித் திரிந்து ஆக்கிரமிப்புகளை ஆய்வது பற்றியும், அவைகளை இன்ன

விதமாக விவரிக்க வேண்டுமென்பது பற்றியும், வருவாய்த் துறை வாரியத்தினரின் 1962 ஆகஸ்ட் 7 ஆம் தேதியிட்ட 1.6129/62-1-ம் எண் சுற்றறிக்கையில் விளக்கக் உரைகள் பிறப்பிக்கப்பட்டன. இப் பணியின் பல்வேறு கூறுகளை முடிப்பதற்காகச் சில கால அட்டவணைகளும் விதிக்கப்பட்டன. இந்த விளக்க உரைகளின்படி, பட்டியல்கள், வரைப்படங்கள் முதலியவற்றைத் தயாரித்தல், ஊராட்சித் தலைவரும் ஊர்க் கர்ணமும் சுற்றிப் பார்த்து ஆய்வு செய்தல் ஆகியவையெல்லாம் 1962 அக்டோபர் இறுதிக்குள் முடித்துவிடப்பட வேண்டும்; முந்திய பசலியின் இறுதிவரையில் கணக்குகளில் பதிவு செய்யப்பட்ட ஆக்கிரமிப்புகளை ஆய்வு செய்யும் பணி, வருவாய்த் துறை வாரியத்தினரின் சுற்றறிக்கையில் தேதியாக 1962 ஆகஸ்ட் 7-ம் தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் முடிக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். இவ்விரு வகைப் பணிகளும் ஏற்கெனவே முடிக்கப்பட்டிருக்கும் அல்லது 1962 அக்டோபர் 31-ம் தேதிக்குள் முடிக்கப்படும் என்று கருதப்படுகிறது.

2. புறம்போக்குகளை வகைப்படுத்துவது.—இந்த விளக்க உரைகளுக்குத் தொடர்ச்சியாக, பின்வரும் விளக்க உரைகள் பிறப்பிக்கப்படுகின்றன :—

முந்திய விளக்க உரைகளுக்கிணங்க ஏற்கெனவே எந்த வேலை செய்யப்பட்டிருந்தாலும், அதை இப்போது மீண்டும் செய்ய வேண்டியதில்லை. பின்வரும் தலைப்புகளின்கீழ் ஆக்கிரமிப்புகளை வகைப்படுத்த வேண்டும் :—

(அ) நிலமற்ற ஏழைகள் செய்துள்ள ஆட்சேபனையில்லாத ஆக்கிரமிப்புகள் தெளிவாக ஒப்படை செய்யக் கூடியவைகளாயிருந்தால் அந்த ஆக்கிரமிப்புகள்;

(ஆ) நிலமற்ற ஏழைகள் அல்லாத மற்றவர்கள் செய்யும் ஆட்சேபகரமான ஆக்கிரமிப்புகள் தெளிவாக அகற்றப்படத் தக்கவையாயிருந்தால் அந்த ஆக்கிரமிப்புகள்.

(இ) (i) நிலமற்ற ஏழைகளாயிராதவர்கள் செய்யும் ஆட்சேபகரமில்லாத ஆக்கிரமிப்புகள் ; அதாவது, நிலத்தின் தன்மையையொட்டிப் பார்க்கும்போது ஆட்சேபகரமற்றதும், ஆனால் அதே சமயத்தில், ஆக்கிரமிப்பாளர் நிலமற்ற ஏழையாய் இராதபடியால், அவருக்கு ஒப்படை செய்ய முடியாததுமான ஆக்கிரமிப்பு;

(ii) நிலமற்ற ஏழைகள் செய்யும் ஆட்சேபகரமான எந்த ஆக்கிரமிப்புகள் ; ஆனால் அப் பொருளின் சந்தர்ப்பங்களைக் கவனிக்கும்போது சலுகை காட்டக் கூடியவை.

(iii) மற்றெல்லா வகை ஆக்கிரமிப்புகளும்.—ஆக்கிரமிப்புகளின் விளக்கமான எடுத்துக்காட்டுக்கள் சில இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. (இவை முழுவதுமானவை அல்ல.)

3. **ஆக்கிரமிப்புகளை ஆய்ந்து பார்த்தல்.**—புறம்போக்குகள், தீர்வை விதிக்கப்பட்ட தரிசு அல்லது தீர்வை விதிக்கப்படாத தரிசு அல்லது வேறு எவையேனும் வகைகள் (எடுத்துக் காட்டாக, அரசாங்கக் காரியத்துக்காக வாங்கப்பட்டு வருவாய் துறைக் கணக்கில் அரசாங்கப் புறம்போக்கு என்று இன்னும் மாற்றப்பட்டிராத பட்டா நிலம்) போன்ற எல்லா வகை அரசாங்க நிலங்களையும், இந்த விளக்க உரைகளின்படி ஆராய்ந்து அவைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை வகைப்படுத்த வேண்டும். வருவாய்த் துறை வாரியத்தின் 1962 ஆகஸ்ட் 7-ம் தேதியிட்ட 1.6129/62-1-ம் கேட்புக் கடிதத்தில் 10 ஆவது பாராவில் சொல்லப்பட்டுள்ள கால அட்டவணையைக் கடைப்பிடிக்க வேண்டும். வருவாய் ஆய்வாளர்கள் ஆக்கிரமிப்புகள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் ஆய்வு செய்ய வேண்டும்; வருவாய் ஊர் ஒவ்வொன்றிலும் (எல்லா வகை ஆக்கிரமிப்புகளிலும் சிலவற்றைத் தெரிந்தெடுத்து, அவற்றை, ஒவ்வொரு வட்டத்திலும் வட்ட அலுவலர் அல்லது தனித் துணை வட்ட அலுவலர் அல்லது தலைமையிடத் துணை வட்ட அலுவலர் ஆய்வு செய்ய வேண்டும்; இதன் பொருட்டு, இப் பணியை இந்த அலுவலர்களுக்கு வசதியாகப் பங்கிட்டுக் கொடுக்கலாம். அரசாங்கத்தாரால் எடுத்துக் கொள்ளப்பட்டு, இன்னும் ஜமீன் மேலாளரின் கட்டுப்பாட்டுக்குட்பட்டிருக்கும் ஜமீன் ஊர்கள் சம்பந்தமாக ஜமீன் மேலாளர்களுக்குட்பட்டுப் பணி புரியும் தனி வருவாய் ஆய்வாளர்களும் (வட்ட அலுவலர் தரத்தில் அல்லது துணை வட்ட அலுவலர் தரத்தில் உள்ள) ஜமீன் மேலாளர்களும் இந்த ஆய்வுகளைச் செய்ய வேண்டும்.

4. **ஆக்கிரமிப்புகளின் வகைப்பாடு பற்றிய குறிப்புரைகள்.**—ஆக்கிரமிப்புகளின் விபரம் அவைகளின் வகைப்பாடு ஆகியவை பற்றிய விவரங்களை ஊர்ப் பொது நிலங்கள் பதிவேட்டில் எழுத வேண்டும்; ஆக்கிரமிப்பு ஒவ்வொன்றின் எதிரேயும் வகைப்பாடு பற்றிய குறிப்புகளை வருவாய் ஆய்வாளர் சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். குறிப்புகளை ஊராட்சிக்குத் தெரிவித்ததற்கும், ஆக்கிரமிப்பு ஒவ்வொன்றின் எதிரேயுமுள்ள குறிப்புரைகளின் தன்மைக்கு ஊராட்சி உடன்பட்டதற்கும் அடையாளமாக ஊராட்சித் தலைவர் இப் பதிவுகளுக்குக் கையெழுத்திட வேண்டும். வருவாய் ஆய்வாளரின் குறிப்புரைகளினின்றும் மாறுபட ஊராட்சி விரும்பினால், அது அவ்வாறே செய்யலாம்; வருவாய் ஆய்வாளர் செய்த ஆய்வைப் பற்றிக் தனது குறிப்புரைகளை வழங்கலாம்; வருவாய் ஆய்வாளரின் குறிப்புரைகள் எதிலிருந்தேனும் மேலாய்வு செய்யும் அலுவலர் மாறுபட்டால், இந்த வேறுபாடுகளையும் மாறுதல்

களையும் கூட சம்பந்தப்பட்ட ஊராட்சியின் கவனத்துக்கு முறைப்படி கொண்டு வர வேண்டும். இந்த வகைகளை, ஜமாபந்தி அலுவலர், நடப்புப் பசலிக்கான ஜமாபந்தியின்போது வருவாய் ஊர் ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் ஆராய்ந்து வர வேண்டும். ஜமாபந்தி அலுவலர் இப் பட்டியல்கள் பற்றித் தனிக் கவனம் செலுத்தி, ஒவ்வொரு ஊருக்குமான ஜமாபந்தியின்போது மறு ஆய்வு செய்து, முடிவிற்கு வர வேண்டும். 1963 ஜூன் இறுதிக்குள் ஜமாபந்தி முடிந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது; அதற்குப் பிறகு, ஆக்கிரமிப்பு களின் எண்ணிக்கை, இவற்றில் சம்பந்தப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலே 2 (அ) பத்தியில் சொல்லப்பட்டுள்ள வகைப்பாடுகளில் ஒவ்வொன்றின் கீழும் உள்ளடங்கியிருக்கும் பரப்புகள் ஆகியவை சம்பந்தமாக, எல்லா மாவட்ட ஆட்சியாளரும் வருவாய்த் துறை வாரியத்தினருக்கும் அரசாங்க வருவாய்த் துறையினருக்கும் ஓர் அறிக்கை அனுப்ப வேண்டும்; பின்வரும் தலைப்புகளின் கீழ் அவ்வாறு அனுப்பவேண்டும்:—

மாவட்டத்தின் பெயர்.	ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை.	சம்பந்தப்பட்டவர்களின் எண்ணிக்கை.	உள்ளடங்கியுள்ள ஆக்கிரமிப்பின் பரப்பு (ஏக் கரா க் கணக்கில்).
(1)	(2)	(3)	(4)

இந்த அறிக்கையானது, 1963 ஆகஸ்ட் 1 ஆம் தேதியன்றாவது அதற்கு முன்பாவது வருவாய்த் துறை வாரியத்தினரிடமும் அரசாங்க வருவாய்த் துறையினரிடமும் வந்து சேர வேண்டும்.

5. ஒப்படை நடவடிக்கைகள்.—மேலே 2 ஆவது பத்தியின் (அ) வகையின் கீழ் வரும் எல்லா ஆக்கிரமிப்புகளுக்குமான ஒப்படை நடவடிக்கைகளை நேரடியாகத் தொடங்கிவிட வேண்டும். மேலே 2 ஆவது பத்தியின் (ஆ) வகையின் கீழ் வரும் எல்லா ஆக்கிரமிப்புகளையும் அகற்றிவிட வேண்டும். மேலே 2 ஆவது பத்தியின் (இ) வகையின் கீழ் வரும் எல்லா ஆக்கிரமிப்புகளையும் பற்றிய நடவடிக்கையை, இந்த ஆக்கிரமிப்புகளைப் பற்றிய கொள்கையை அரசாங்கத்தார் தீர்மானிக்கிற வரையில் தள்ளிப் போட வேண்டும். ஆக்கிரமிப்புகளை வகைப்படுத்தல், ஊர்ப் பொது நிலங்கள் பதிவேட்டில் விவரங்களை எழுதுவது உட்பட ஊர் ஆவணங்களைத் தயாரித்தல் ஆகிய பணிகளை 1962 டிசம்பர் இறுதிக்குள் முடித்துவிட வேண்டும்.

6. ஆக்கிரமிப்புகளின் வகைப்பாட்டுப் படிவம்.—ஒவ்வொரு ஊருக்கும் ஆக்கிரமிப்புகளின் வகைபாட்டினைப் பின்வரும் படிவத்தின்படி தயாரிக்க வேண்டும் :—

நில அளவை எண்.	மொத்தப் பரப்பு.	ஆக்கிரமிக்கப் பட்ட பரப்பு.	ஆக்கிரமிப் பாளர் பெயர்.
(1)	(2)	(3)	(4)

ஒவ்வொரு வகைப்பாட்டின் கீழும் மொத்தத்தைக் கூட்ட வேண்டும்; மாவட்டத்திலிருக்கிற எல்லா வட்டங்களுக்காவுமான இந்த எண்களைக் கூட்டினால், வருவாய் மாவட்டத்துக்கான நிகரான எண்கள் கிடைக்கும். சந்தர்ப்பத்துக்கேற்ப, வட்ட அலுவலர் அல்லது துணை வட்ட அலுவலர் அல்லது ஜமீன் மேலாளர் போன்ற மேல் அலுவலர் ஆய்வு செய்த பிறகுதான், ஆக்கிரமிப்புகளை வகைப்பாடு செய்யும் வேலையை மேற்கொள்ள வேண்டும்.

7. முடிவு அறிக்கைக்கு உரிய தேதி.—ஆக்கிரமிப்புகளை வகைப்படுத்துவது பற்றிய பணியின் முடிவு சம்பந்தமான அறிக்கை, 1963 சனவரி 15 ஆம் தேதிக்குள் வருவாய்த் துறை வாரியத்தினிடம் வந்து சேர வேண்டும்.

8. ஜமாபந்தியின்போது இந்தக் கூறுகளை ஆய்வதற்காக, ஜமாபந்தி ஆய்வுக் குறிப்புடன் பொருத்தமான கேள்விகள் மேற்கொண்டு சேர்க்கப்படும். இது பற்றிய விளக்கவுரைகள் தனியாகப் பிறப்பிக்கப்படும்.

இணைப்பு II

ஐயத்துக்கிடமில்லாமல் அகற்றப்படத்தக்க ஆக்கிரமிப்பு வகைகள்.

(1) பழைய குடிமுறைப் பரப்புகளில் இருக்கிற பயன்படுத்தப்பட்டுவரும் குளத்தின் உள்வாய்களில் மண்வளத்தைக் கெடுக்கக்கூடிய சாகுபடி உழுதல் முதலிய செயல்கள் உட்பட்ட ஆக்கிரமிப்புகள்.

(2) சாலைச் சந்திப்புகளில், போக்குவரத்தின் காட்சி குறைவாக்கக்கூடிய வகையிலுள்ள ஆக்கிரமிப்புகள்.

(3) குளத்தின் கரைக்குச் சமீபமாக நிலம் இருக்குமிடத்திலே, அக்கரையின் அடிப் பாகத்தில் உழுதல்; இவ்வாறு மிகச் சாதாரணமாக நடக்கிறது.

(4) வாய்க்கால் கரைகளில், கரைகளுக்குள்ளும், ஊடுருவியும் அல்லது அவைகளின் மேல்பாகத்திலும் உள்ள ஆக்கிரமிப்புகள்.

(5) வெள்ளம் வருவதைத் தடுப்பதற்கு முன் தேவையான வடிகால்கள் திறமையாகச் செயலாற்ற வேண்டியிருக்கிற பரப்புகளில், முக்கியமாக ஆற்றுக் கழிமுக வட்டங்களில், வடிகால்களில் ஆக்கிரமிப்புகள்.

(6) பொதுக் காரியத்துக்காக வாங்கப்பட்ட பகுதிகளில் 'திடீர் நகரங்கள்' தோன்றும் வகையில் ஆக்கிரமிப்புகள்.

(7) பி.ஓ.பி.யில் எழுதப்பட்டிருக்கிற நிலங்களுக்குள் ஆக்கிரமிப்புகள்.

(8) சலுகையாக நடத்தப்படுவதற்கு உரிமை பெற்றிராதவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்ட நிலங்களுக்குள் செய்யும் ஆக்கிரமிப்புகள்.

(9) ஆக்கிரமிப்பாளர் நிலப் பகுதியைக் குத்தகைக்குவிட்டு, அதன் மூலம் அரசாங்கத்தாருக்கு எதிர் உரிமையை உண்டாக்க முயன்றால், அப்படிப் பட்டவற்றில் ஆக்கிரமிப்புகள்.

ஐயத்துக்கிடமில்லாமல் ஒப்படை செய்யக்கூடிய ஆக்கிரமிப்புகளின் வகைகள்.

(1) இனிமேலும் பொதுக் காரியத்துக்காக வேண்டியிராத அல்லது ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியை நீக்கிவிட்ட பிறகு (தாராளமாகப் பார்த்தாலும்) எஞ்சியுள்ள பரப்புப் போதுமானதாயிருக்கிற புறம்போக்குகளில், நிலமற்ற ஏழைகள் சாகுபடி பண்ணுவது மூலமாகச் செய்யும் ஆக்கிரமிப்புகள்.

எடுத்துக் காட்டுகள்.—(அ) கைவிடப்பட்ட குளங்களிலிருந்து பாசன ஏற்பாடு ஏற்கெனவே முழுவதும் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால் அக் குளங்களின் உள்வாய்ப் பகுதிகள்.

(ஆ) ஒரு வாய்க்கால் கரையில் ஆழமாக அறுத்துக்கொண்டு போனதால் ஏராளமான மண் குவிக்கப்பட்டிருந்து, மிகத் தாராளமான விதப்படி மதிப்பிட்டுப் பார்த்தாலும் வாய்க்காலின் போக்குக்கு அதே

போக்கிற்கு இணங்கியுள்ள பொருத்தமான அகலமுடைய நிலத் துண்டு தற்போதைய தேவைகளையும் வருங்காலத் தேவைகளையும் நிறைவு செய்யும். இங்கு பொதுவாக வீட்டு மனைகளாலேயே ஆக்கிரமிப்புகள் ஏற்படலாம். நீர் வழங்குவதற்கான அதிகபபடியான பொறுப்பு ஒன்றும் இதில் அடங்கியிருக்க வில்லை.

மற்றவைகள்.

(1) நிலையாக அனுபோகத்தில் வைத்துக் கொள்வது ஆட்சேபகரமானது; ஆனால் தற்காலிகமாக அனுபோகத்தில் வைத்துக் கொள்வது அனுமதிக்கப் படுகிறது.

தற்காலிகக் கட்டுக் கோப்புகள் சாலை ஓரங்களை ஆக்கிரமித்துக் கொள்ளும் பெரும்பாலான (மற்றப் பட்டியல்களில் கண்டவைகள் நீங்கலாக) இந்த வகையில் அடங்குகின்றன.

(2) கைப்பற்று நிலத்தை ஒருங்கிணைப்பதற்காக, நீர்ப் பாய்ச்சலுக்குத் தடங்கலுண்டாக்காத வகையில், காட்டாற்றின் போக்கைத் திருப்புவது.

(3) ஆக்கிரமிப்பாளருக்கு நிலங்கள் இருப்பதனால் அல்லது வரம்புக்கு மேற்பட்டு அவருக்கு வேறு வாழ்க்கைத் தொழில் இருப்பதனால் ஒப்படை செய்யத்தக்கதாயிராத அனுபோகம்.

(4) "நஸ்ரானு" முதலியவற்றைச் செலுத்திய பிறகு நீண்ட கால அனுபோகம் காரணமாக முன்னால் ஜமீன் பகுதிகளில் குளத்தின் உள்வாய்ப் பகுதி அனுபோகம் இவற்றை அதிக கவனத்துடனும் பரிவிரக்கத்தோடும் மறு ஆய்வு செய்ய வேண்டும்.

66. **ஜமீன்களில் உள்ள சமுதாய நிலங்களை ஊராட்சிகள் பயன்படுத்துவதை முறைப்படுத்துவது—வரையறைகளும் கட்டுப்பாடும்.**—(1) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 86 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படிச் செய்யப்பட்ட விதிகள், அச் சட்டத்தின் 87 (1) (அ) பிரிவில் குறிப்பிட்டிருக்கிற நிலங்களின் உபயோகத்தை முறைப்படுத்துவதற்குத் தக்க மாற்றங்களுடன், பொருந்தும்.

(2) எந்த நிலம் சம்பந்தமாகவேனும், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 87 (1) (அ) பிரிவின்படிக்கான அதிகாரங்களைச் செலுத்துகையில், அந்த நிலத்தில் நிலக்கிழாருக்கு அடுத்த வாரிசுரிமை ஏதாகிலும் இருந்தால் அவ்வுரிமை, அல்லது அந் நிலம் ஒரு நகர அல்லது

கிராம மனையாயிருந்தால் நியாயமான காரியத்துக்காக குடியிருப்பவர்களின் ஒப்படை செய்ய அவருக்குள்ள உரிமையைப் பாதிக்கும் வகையில் எச்
ஒப்படை செய்ய அவருக்குள்ள உரிமையைப் பாதிக்கும் வகையில் எச்
செயலையும் ஊராட்சி செய்யக் கூடாது.

(3) 1908 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஜமீன் நிலச் சட்டத்தில் கண்ட 3 ஆவது பிரிவைச் சேர்ந்த (16) பகுதியின் (ஆ) உட்பகுதியில் சொல்லப் பட்டிருக்கிற விவரப்படி ஒரு நிலம் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி ஏதேனும் வினா எழுமானால், 1908 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஜமீன் நிலச் சட்டத்தில் கண்ட 20 ஆவது பிரிவின்படி அவ்வினா தீர்மானிக்கப்படுகிற வரையில், ஊராட்சி, அந்த நிலம் சம்பந்தமாக, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 87 (1) (அ) பிரிவின்படி தன் அதிகாரங்களைச் செலுத்தக் கூடாது.

(4) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 87 (1) (அ) பிரிவின்படி எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கை, மாவட்ட ஆட்சியாளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகும்.

(5) (1) 1908 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஜமீன் நிலச் சட்டத்தில் கண்ட 3 ஆவது பிரிவைச் சேர்ந்த (16) பகுதியின் (ஆ) உட்பகுதியில் குறிப்பிட்டிருக்கிற காரியத்துக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிலம் அக் காரியத்துக்காக இனியும் தேவைப்படவில்லையென்றும், வேறு ஏதேனும் குறிப்பிட்ட சமுதாய காரியத்துக்காக அது பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 87 (1) (ஆ) பிரிவின்படி ஓர் ஆணை பிறப்பிப்பதற்கு ஊராட்சி மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பைப் பெற வேண்டுமெனவும் அவ்வூராட்சி தானாகவோ அல்லது தன் எல்லைகளுக்குள் வசிப்பவர்களில் எவராவது முறையிட்டுக் கொள்வதன் பேரிலோ ஊராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கருதினால் அது, அந்த நிலம் இருக்கிற பேரூரில் அல்லது ஊரில் தண்டோரா போட்டும் ஊராட்சி அலுவலகம் இருக்கிற கட்டிடத்தில் ஒட்டியும் விளம்பரம் செய்யப்பட வேண்டிய ஓர் அறிவிப்பு மூலமாக கருத்திலுள்ள ஆணைக்கு ஆட்சேபனைகளை அந்த அறிவிப்பு அவ்வாறு விளம்பரம் செய்யப்படும் தேதியிலிருந்து 30 நாட்களுக்கு முன்னதாயிராத குறிப்பிட்ட ஒரு தேதிக்குள் அனுப்பும்படிக் கேட்க வேண்டும். ஆட்சேபனைகள் விசாரிக்கப்படும் காலத்தையும் தேதியையும் கூட அந்த அறிவிப்பில் குறிப்பிட வேண்டும். அந்த அறிவிப்பின் படி ஒன்றை, நிலக்கிழாரிடம், நேரிலோ, ஏற்றுக் கோடல் சேர வேண்டியுள்ள பதிவு அஞ்சல்

மூலமாகவோ சேர்ப்பிக்க வேண்டும் ; அவ்வாறு சேர்ப்பிக்கையில், ஆட்சேபனை களைத் தாக்கல் செய்வதற்கு, அப்படிச் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாள் அவகாசம் கொடுக்க வேண்டும்.

(2) (1) உள்விதியின்படிக்கான விசாரணைத் தேதியானது, ஆட்சேபணை களைத் தாக்கல் செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட காலம் கழிவாகிற தேதி யிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பின்னர் உள்ளதாயிருக்க வேண்டும்.

(2) (1) உள்விதியின்படிக்கான விசாரணைத் தேதியானது, ஆட்சேபணை முன் வந்து சேர்க்கூடிய எல்லா ஆட்சேபணைகளையும் ஊராட்சி விசாரிக்க வேண்டும்; அப்படி விசாரிக்கையில், மனுதாரர்கள் தங்கள் ஆட்சேபணைகளை மெய்ப்பிப்பதற்கு வாய்மொழியாகவும் ஆவண மூலமாகவும் சான்று காட்ட அவர்களுக்கு நியாயமான எல்லா வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

(6) விசாரணை செய்து முடித்த பிறகு, ஆட்சேபணைகள் நிராகரிக்கப் பட்டலாமென்றும், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 87 (1) (ஆ) பிரிவின்படி கட்டளை பிறப்பிப்பது அவசியமென்றும் ஊராட்சி தீர்மானித்தால், அது அவ்வாறு கண்டுள்ள தீர்மானம் ஒன்றை எழுதி வைத்து, அதற்கான முழுக் காரணங்களையும் காட்டி, அத்தகைய கட்டளை பிறப்பிப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கும்படி மாவட்ட ஆட்சியாளருக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்; அவ்விண்ணப்பத்தோடு அடியிற் கண்டவைகளையும் அனுப்பவேண்டும் ; (i) தனது தீர்ப்பின் ஒரு படி ; (ii) விசாரணை செய்தது பற்றிய பதிவுகளும், 5 ஆவது விதியைச் சேர்ந்த (1) உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற அறிவிப்புகளைச் சேர்ப்பித்ததையும் பிறப் பித்ததையும் மெய்ப்பிப்பதற்கான ஆவணங்களும் ; (iii) அந்த நிலத்தின் அல்லது பாகத்தின் உபயோகத்தில் நிலக்கிழாருக்கு அல்லது குடியானவர் களுக்கு வழக்கமாக உள்ள மற்றெல்லா உரிமைகளைப் பற்றியும் ஊராட்சி ஆலோசித்ததென்றும், அத்தகைய கட்டளை பிறப்பிக்கப்பட்டால் மேற்படி உரிமைகள் செலுத்தப் படுவதற்கு மற்றப்படி போதுமான அளவுக்கு ஏற்பாடு செய்யப்படுமென்று தெரிந்துகொண்டதென்றும் காட்டுவதற்கான சான்று.

(7) அத்தகைய விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்வதன் பேரில், மாவட்ட ஆட்சியாளர், தாம் தகுதியெனக் கருதும் விசாரணை செய்தபிறகு அந்த நிலம் முதலில் ஏற்பட்ட நோக்கத்துக்கு இனியும் தேவைப்படவில்லை யெனக் கண்டால்· 1908 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஜமீன் நிலச் சட்டத்தில் கண்ட 20 (அ) பிரிவைச் சேர்ந்த (1) உட் பிரிவில் கண்ட (அ)

பகுதியின்படி ஓர் அறிவிப்பைப் பிறப்பிக்கலாம்; மேலும் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருக்கிற காரியத்துக்காக, அது பயன்படுத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிட்டு, 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 87 (1) (ஆ) பிரிவின்படி ஓர் ஆணை பிறப்பிக்க ஊராட்சிக்கு அனுமதி கொடுக்கலாம். அதன்பேரில் ஊராட்சி அத்தகைய ஆணை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சியாளர் ஊராட்சியின் கருத்திற்கு மாறுபட்டால் அதற்குள்ள காரணங்களை எழுதி வைத்து, விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்து, தமது ஆணைக்குப் படி ஒன்றை ஊராட்சிக்கு அனுப்ப வேண்டும்.

(8) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 178 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (XXXV) பகுதியின்படிச் செய்யப்பட்ட விதிகள், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 87 (1) (அ) பிரிவில் குறிப்பிட்டிருக்கிற நிலங்களில் மரங்கள் நடுவதை முறைப்படுத்துவதற்கு, தக்க மாறுதல்களுடன் பொருந்தும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

67. **ஊராட்சிகள் முதலியவைகளிடம் உரித்தாயிருக்கிற அல்லது அவைகளுக்குச் சொந்தமான பொதுச் சாலைகளில் அல்லது வேறு சொத்தில் வளரும் மரங்களுக்கான உரிமையை அறுதி செய்வது.**—(1) பொதுச் சாலை ஒன்றில் இருப்பவையும் (இதில் பின்னால் மேற்படி சட்டம் எனக் குறிப்பிடப்படும்) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 76 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி ஒரு ஊராட்சியினிடம் உரித்தாயிருப்பவையுமான (மர வரி ஏற்பாட்டின் பேரில் வழங்கப்பட்டவையல்லாத மற்ற) மரங்கள் அவ்வூராட்சியினிடம் உரித்தாயிருக்கும்.

ஆனால், அம்மரங்களின் உடைமை அரசாங்கத்தாரிடம் இருந்து வரும்.

மேலும், இவ்விதியின்படித் தனக்குள்ள உரிமைகளை ஊராட்சி தகாத வழியில் பயன்படுத்தியிருக்கிறதென அரசாங்கத்தார் கருதினால், அவர்கள் அம்மரங்களை ஊராட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து எடுத்துவிடலாம்.

(2) புறம்போக்கில் ஊராட்சி நட்ட எந்த மரம் மேற்படி சட்டத்தில் கண்ட 86 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படி அதனிடம் உரித்தாயிருக்கிறதோ அல்லது எந்த மரத்தின் உபயோகம் 86 ஆவது பிரிவைச் சேர்ந்த

(4) உட்பிரிவின்படி ஊராட்சியினுல் முறைப்படுத்தப்படுகிறதோ அந்த மரத்தை அரசாங்கத்தார் வெட்டி அப்புறப்படுத்தலாம். அவ்வாறு வெட்டி அப்புறப் படுத்தப்பட்ட மரத்துக்காக அரசாங்கத்தார் ஈடு கொடுப்பதற்கு உள்ளாக மாட்டார்கள். அவ்வாறு வெட்டி அப்புறப்படுத்தப்பட்ட மரங்களே ஊராட்சி யினிடம் கொடுத்துவிடலாம் அல்லது வெளிப்படையாக ஏலத்தில் விற்று விடலாம் ; அவை வெளிப்படை ஏலத்தில் விற்கப்பட்டால், அப்படி விற்று வந்த தொகையை ஊராட்சி நிதிக்கு வரவு வைக்க வேண்டும்.

(3) மேற்படி சட்டத்தில் கண்ட 76 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி உரித்தாக்கப்பட்டுள்ள பொதுச் சாலையை அடுத்தாற் போலுள்ள நிலத்தின், அல்லது எந்தப் புறம்போக்கு மேற்படிச் சட்டத்தில் கண்ட 86 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படி ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிறதோ அல்லது எதன் உபயோகம் 86 ஆவது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின்படி அல்லது 87 ஆவது பிரிவின்படி ஊராட்சியினுல் முறைப்படுத்தப்படுகிறதோ அந்தப் புறம்போக்கின் சொந்தக்காரர்களுக்கு பழுக்கும் பருவத்தை மரங்கள் அடையக் கூடிய காலம் வரையில் பழம் தரும் மரங்களே நடுவதற்கு உரிமங்கள் வழங்கி, பின்னர் மரங்களேச் சரிவர பேணிக் காப்பதற்கும் வேறு தகுந்த வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அம்மரங்களுக்காக உரிமம் கொடுக்க ஊராட்சிக்கு அதிகாரம் உண்டு.

(4) மேற்படி சட்டத்தில் கண்ட 76 ஆவது பிரிவை சேர்ந்த (1) உட்பிரிவின்படி ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற சாலை ஓரத்திலும், எந்தப் புறம்போக்குகள் மேற்படி சட்டத்தில் கண்ட 86 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்படி அதனிடம் உரித்தாக்கப்பட்டிருக்கின்றனவோ அல்லது எவைகளின் உபயோகம் 86 ஆவது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் படி அல்லது 87 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கண்ட (அ) பகுதி யின்படி அதனுல் முறைப்படுத்தப்படுகிறதோ அந்தப் புறம்போக்குகளிலும் வருவாய்த் துறை வாரிய நிலையாணைகள், I ஆம் தொகுதி XI ஆம் இணைப்பு 8 ஆம் எண் க.நி.ஆ. வின் 2 ஆவது பத்தியைச் சேர்ந்த (ஆ) (ii) பகுதியில் பொருள் வரையறுக்கப்பட்டபடியுள்ள மர வரி ஏற்பாட்டின் பேரில் வைத்திருக் கப்படுபவைகள் அல்லாத மற்ற மரங்களின் மேல் மாசூலைப் பெற ஊராட்சிக்கு உரிமையுண்டு.

(5) மேற்படி சட்டத்தில் கண்ட 76 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்டுள்ள பொதுச் சாலை ஓரத்தில் அல்லது 4 ஆவது விதியில் சொல்லப்பட்டிருக்கிற புறம் போக்கில் இருக்கும் மேலே 4 ஆவது விதியில் பொருள் வரையறுக்கப்பட்டுள்ள மர வரி

ஏற்பாட்டின்பேரில் வைத்திருக்கப்படும். மாங்கள் அல்லாத வேறு மரத்தின் மேல் மாசூலை ஊராட்சி எவருக்கேனும் குத்தகைக்குவிடலாம். அத்தகைய குத்தகைகளினின்றும் கிடைக்கிற வருமானத்தைப் பெற ஊராட்சிக்கு உரிமை யுண்டு.

(6) 4 ஆவது விதியில் சொல்லப்பட்டபடியுள்ள சாலை ஓரத்திலாவது புறம் போக்கிலாவது இருப்பவையும், மர வரி ஏற்பாட்டின்பேரில் ஏற்கெனவே குத்தகைக்கு விடப்பட்டிராதவையுமான பழம் தரும் மரங்களை, அச்சாலை ஓரங்களில் அல்லது புறம்போக்குகளில் உள்ள மரங்களின் மேல் மாசூலைப் பெற, 4 ஆவது விதியின்படி ஊராட்சி உரிமை பெற்றிருக்கிற வரையில் ஊராட்சியின் ஒப்புதல் இல்லாமல் மர வரி ஏற்பாட்டின்பேரில் மாவட்ட ஆட்சியாளர் குத்தகைக்குவிடக் கூடாது.

(7) (1) அடியிற்கண்ட மரங்களை வெட்டிவிட அல்லது ஏலத்தில் விற்று விட ஊராட்சிக்கு அதிகாரமுண்டு :—

(அ) புயலடித்து விழுந்த மரங்களை தவிர மற்றபடி காற்றடித்து விழுந்த மரங்களும் பட்டுப்போன மரங்களும்—இவைகள் பழம் தரும் மரங்களாக அல்லது பழம் தராத மரங்களாக இருந்தாலும் சரி.

(ஆ) சாலை ஓரங்களில் இருப்பவையும், போக்குவரத்துக்கு அல்லது உயிருக்கு அல்லது உடல் நலத்துக்குக் கெடுதலானவையென்று கருதப் படுபவையுமான உயிருள்ள மரங்கள்.

(இ) ஊருணிகளாகப் பயன்படும் சிறு குளங்களின் கரைகளில் உள்ள பச்சை மரங்களின் இலைகள் குளங்களில் விழுந்து குடிப்பதற்கு அவைகளைத் தகுதியற்றவையாக்கினால், அத்தகைய உயிருள்ள மரங்கள்.

(2) (1) உள்விதியின்படி மரங்களை விற்பதனால் கிடைக்கும் வருமானத்தை ஊராட்சி பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(3) (1) உள்விதியில் கண்ட (ஆ) அல்லது (இ) பகுதியின்படி உயிருள்ள மரங்களை வெட்டிவிட அல்லது விற்றுவிட ஊராட்சி கருதினால், அது கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பைப் பெற வேண்டும்; வட்ட அலுவலர் அம் மரங்களை நேரில் ஆய்ந்து பார்த்த பிறகு அவர் ஓர் அறிக்கை அனுப்புவதன் பேரில், கோட்ட ஆட்சியாளர் அந்த ஒப்பளிப்பை வழங்கலாம்.

(4) புயற் காற்றடித்து விழுந்துபோன. மரங்களைப் பற்றியவரை ஊராட்சி கோட்ட ஆட்சியாளருக்கு அறிவித்து, அம் மரங்களை விற்றுவிட (3) உள் விதியில் கண்டபடி அனுமதி பெற வேண்டும். இவ்விதியின்படி

அம்மரங்களை விற்பதனால் கிடைக்கும் வருமானத்தைப் பற்றி வருவாய்த் துறை அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும்; அவ்வருமானத்தை ஊராட்சி நிதிகளுக்கு வரவு வைக்க வேண்டும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(96) அரசுக்குச் சொந்தமான மரங்களை ஊராட்சிகளிடம் ஒப்படைப்பது அல்லது உரித்தாக்குவது.—பலவகை நிலங்களில் இருக்கிற மரங்களை அடியிற் கண்டவாறு வகைப்படுத்த வேண்டுமெனவும், ஒவ்வொரு வகைக்கும் எதிரே சொல்லப்பட்டுள்ள பல்வேறு பொறுப்புகளையும் உரிமைகளையும் ஊராட்சி களுக்குக் கொடுக்க வேண்டுமெனவும் அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள். இதன்பொருட்டு நிலங்களின் அடியிற்கண்ட வகைப்பாடு மேற்கொள்ளப் படும் :—

(அ) பட்டா நிலம்.

(ஆ) 1961 சனவரி 1 ஆம் தேதியன்று தனியார் அனுபோகத்திலிருந்த நிலம்.

(இ) மாநில அரசின் நேர் ஆட்சியின் கீழ் உள்ள சாலைகளின் வகைகள் சம்பந்தமாக, நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறையின் வசத்தி லிருக்கிற சாலைப் புறம்போக்குகள்.

(ஈ) அரசினர் பொதுப் பணித் துறைப் புறம்போக்குகள்.

(உ) 1958 ஆம் ஆண்டின் ஊராட்சிகள் சட்டத்துக்கிணங்க ஊராட்சி களிடம் உரித்தாக்கப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்கள்.

(ஊ) எந்த நிலத்தின் உபயோகத்தை முறைப்படுத்தும் பணி, 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 86 (4) பிரிவின்படியும், 1960 ஏப்ரல் 4 ஆம் தேதியிட்ட 608 ஆம் எண் பல்வகை அரசாங்க ஆணைப் படியும் ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ அந்த நிலம்.

(எ) மேற்சொன்னவையல்லாமல் மற்றப்படி, உரித்தாக்கப்பட்டிராத வையும் ஒப்புவிக்கப்பட்டிராதவையுமான பொது நிலம்.

பட்டா நிலம்.—பட்டா நிலங்களில் உள்ள மரங்களின் மீது ஊராட்சிகளுக்கு எவ்வித உரிமைகளும் இல்லை. அம்மரங்கள் சம்பந்தமாகப் பட்டாதாரர் களுக்கு அல்லது அரசாங்கத்தாருக்கு உள்ள உரிமைகளை, இந்த ஆணைகள் எவ்விதமாகவும் மாற்றிவிட மாட்டா.

தனியார் அனுபோகத்திலிருக்கிற மற்ற நிலம்.—தனிப்பட்டவர்கள் 1961 சனவரி 1-ஆம் தேதிக்கு முன் அரசாங்க நிலங்களில் மரங்களை நட்டிருந்தால், அல்லது 1961 சனவரி 1-ஆம் தேதிக்கு முன் தனியார் அனுபோகத்திலிருந்த அரசாங்க நிலத்தின் பகுதிகளுக்குள் மரங்கள் இருந்தால், அப்போது, தனியார் அனுபோகம் முறைப்படுத்தப்படுகிற வரையில் அல்லது அகற்றப்படுகிற வரையில், அம்மரங்கள் மீது ஊராட்சிகளுக்குள்ளோ ஊராட்சி ஒன்றியங்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை. ஆக்கிரமிப்பாளருக்கோ வேறொருவருக்கோ நிலத்தை ஒப்படை செய்வது மூலமாக தனியார் அனுபோகம் சட்ட முறையாக ஆக்கப்படுவதில் அம்மரங்கள் மீது ஊராட்சிக்கோ ஊராட்சி ஒன்றியத்துக்கோ எவ்வித உரிமையும் இல்லை. அனுபோகம் அகற்றப்பட்டால் அல்லது தானாகவே அகன்று போனால், அப்போது நிலம் எந்த வகையைச் சேர்ந்ததாயிருக்கிறது என்பதைப் பொறுத்து, இந்த ஆணைகளின் எஞ்சிய பகுதியில் கண்ட நிபந்தனைகளுக்கிணங்க, அம் மரங்கள் மீது ஊராட்சிகளுக்கு உரிமை உண்டு.

நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறையைச் சேர்ந்த சாலைப் புறம் போக்கு.—எல்லா நெடுஞ்சாலைகளின் ஓரங்களிலும் மரங்களை நட்டுப் பேணிப் பாதுகாப்பதற்கான பொறுப்பு, நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறையைச் சேர்ந்ததாகும். தற்போதைய நடைமுறையின்படி மரங்கள், பட்டுப்போன மரங்கள், காற்றடித்து விழுந்துபோன மரங்கள் ஆகியவற்றின் மேல் மாசூல் வெளிப்படை ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. அத்தகைய சாலைகளில் இருக்கிற மரங்கள் எல்லாவற்றின் உடைமை, பராமரிப்பு முதலியவற்றின் மேலுள்ள கட்டுப்பாடு, நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறையினரிடம் தொடர்ந்து இருந்துவர வேண்டும். புதிய மரங்களை நடுவதற்கும், அவற்றின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்குங் கூட அத் துறையினர் தொடர்ந்து பொறுப்பு வகித்து வருவார்கள். இப்போது அரசாங்கத்தார் கட்டளையிடுவது என்னவென்றால், நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறை சாலைப் புறம் போக்குகளில் உள்ள எல்லா மரங்களையும் ஊராட்சிக்குக் குத்தகைக்குவிட வேண்டும்; அத்தகைய மரங்களின் மேல் மாசூல்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக அவ்வாறு விட வேண்டும்; அதற்காக ஊராட்சி கடந்த நான்கு ஆண்டுகளில் இம் மரங்களின் மேல் மாசூல்களை விற்பனை செய்ததனால் கிடைத்த சராசரி ஆண்டுக் குத்தகைத் தொகைக்குச் சமமான குத்தகைத் தொகை செலுத்த வேண்டும்.

பட்டுப்போன, காற்றடித்து விழுந்த மரங்களுங் கூட விற்பனைக்காக ஊராட்சி ஒன்றியங்களிடம் கொடுக்கப்படும்; இதற்கான விலையை ஊராட்சி

ஒன்றியத்தின் நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறைக்குச் செலுத்த வேண்டும். நிச்சயிக்கப்படுவதற்குரிய உரிமைவரி விதங்களை ஆதாரமாகக் கொண்டு அவ்விலையைக் கணக்கிட வேண்டும். நெடுஞ்சாலைகளின் பொறுப்பு வகிக்கிற இளநிலைப் பொறியாளர், அம்மரம் பட்டு அல்லது காற்றடித்து விழுந்தது என்று சான்றிட்டு அம்மரத்தை ஒப்புக் கொண்டு விற்பனை செய்யும் படி சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்துக்கு அறிவிக்க வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய நெடுஞ்சாலை ஓரங்களில் மரங்கள் நடவேண்டியதில்லை. 1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சித் சட்டத்தில் கண்ட 64 (அ) பிரிவின் படி எந்த ஊராட்சியேனும் அந்தச் சாலை ஓரங்களில் மரங்கள் நட விரும்பினால், நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறையினரால், விதிக்கப்படக்கூடிய வரையறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அவ்வாறு நடலாம். ஊராட்சிகள் அவ்வாறு விரும்புகிற இடங்களிலெல்லாம் அம்மரங்களை நடுவதற்கான தகுந்த வரையறைகளையும் நிபந்தனைகளையும் நிச்சயிப்பதற்கு, நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறை உதவிப் பொறியாளர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டுமென அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள்.

சாலைப் புறம்போக்குகளுக்கு மட்டும் இந்த ஏற்பாடுகள் சம்பந்தப்படும்; நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறையின் வசத்திலும் கட்டுப்பாட்டிலும் உள்ள பிறவகைப் புறம்போக்குகளுக்கு இவை சம்பந்தப்பட மாட்டா.

பொதுப் பணித் துறைப் புறம்போக்குகள்.—பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட புறம்போக்குகள் சம்பந்தமாக, நீர்ப் பரப்புகளையும் நீர் ஆதாரங்களையும் சேர்ந்தாற்போலுள்ள நிலத்துக்குக் கீழே விவரிக்கப் பட்டுள்ள ஏற்பாடுகள் பொருந்தும்; கட்டிடங்கள் முதலியவைகளைச் சேர்ந்தாற் போல் உள்ளவைகளைப் போன்ற பிறவகை நிலங்களுக்குப் பொருந்த மாட்டா.

நீர்ப் பரப்புகள், நீர்க்கால்கள் இவைகளில் கூட, இன்ன வகையான சில நிலங்களுக்கு இந்த ஆணை பொருந்துவதினின்றும் விலக்களிக்கப்படுமென்று பொதுப் பணித் துறையினர் கட்டளையிடுவார்கள். கொறம்புகளை ஏற்படுத்துவதற்காக அல்லது துறை சார்ந்த வேறு பணிக்காகத் தேவைப்படுகிற பகுதிகள், இந்த ஏற்பாடுகளின் முறையினின்றும் விலக்கப்படும். இந்த ஏற்பாடுகளின் காரியங்களுக்காக, விலக்களிக்கப் பெற்ற வகைகளைச் சேர்ந்த பொதுப் பணித் துறைப் புறம்போக்கு நிலங்களின் பட்டியல் ஒன்றை, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்.

அவ்வாறு விலக்களிக்கப் பெற்றிருாத எல்லா நிலங்கள் சம்பந்தமாகவும், மரங்களை நடுதல், பாதுகாத்தல், பேணுதல், அவைகளின் மேல் மாசூல்களைப்

பயன்படுத்திக் கொள்ளுதல், விற்பனை, பட்டுப் போன காற்றடித்து விழுந்த மரங்களிலிருந்து கிடைத்தவைகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகியவை தொடர்பான எல்லா உரிமைகளும் இனிமேல் சம்பந்தப்பட்ட ஊராட்சியினிடம் உரித்தாக்கப்படும்.

பொதுப் பணித் துறையினர் பிறப்பிக்கக் கூடிய கட்டளைகளுக்குட்பட்டு, சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் இந்த நிலங்களில் மரங்கள் நடலாம், மேல் மாசூல்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம், பட்டுப்போன, காற்றடித்து விழுந்த மரங்களைத் தீர்வு செய்யலாம், திட்டமிட்ட மர வளர்ச்சியை ஆதரிப்பதற்கு அவசியமாயிருக்கக் கூடிய மற்றெல்லாக் காரியங்களையும் செய்யலாம். இந்த நிலங்களில் உள்ள மரங்களினுடையவும், பட்டுப் போன காற்றடித்து விழுந்த மரங்களினுடையவுமான மேல் மாசூல்கள் சம்பந்தப்பட்ட ஏல விற்பனைகளைப் ஊராட்சியே நடத்த வேண்டும்.

உரித்தாக்கப்பட்ட பொது நிலங்கள்.—கால்நடைப் பட்டிகள், வண்டிப் பேட்டைகள், சுடுகாடுகள், இடுகாடுகள், கோப்புகள், ஒதுக்கி வைக்கப்பட்டிராத காடுகள் உள்ளிட்ட சிலவகைப் புறம்போக்கு நிலங்கள், 1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட ஏற்பாடுகளின்படி ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டிருக்கின்றன. உரித்தாக்கப்பட்ட அத்தகைய நிலங்கள் எல்லாவற்றிலும் இருக்கிற மரங்கள் சம்பந்தமாக, அரசாங்கத்தாரின் முழு உரிமைகளும் சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கு மாற்றலாகிவிடும். அத்தகைய புறம்போக்குகளில் இருக்கிற மரங்களின் மேல் மாசூல்களைப் பயன்படுத்திக் கொள்ள ஊராட்சி உரிமை உள்ளதாயிருக்கும். இந்த நிலங்களில் பட்டுப் போன காற்றடித்து விழுந்த மரங்களைப் பெறுவதற்கும் ஊராட்சிக்கு உரிமையுண்டு. மேல் மாசூல்களை விற்பதற்காகவும், பட்டுப்போன மரங்களை விற்பதற்காகவும் ஊராட்சி ஏலங்கள் நடத்த வேண்டும். அவ்வாறு விற்று வரும் தொகைகளைத் தனது சொந்த நிதிகளுக்கு வரவு வைத்துக்கொள்ள அதற்கு உரிமையுண்டு.

பயனீட்டுக்காக ஊராட்சியிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ள புறம்போக்கு நிலங்கள்.—முறைப்படுத்தல்.—உரித்தாக்கப்பட்ட நிலம் சம்பந்தமான மேலே கண்டுள்ள ஏற்பாடுகள் இவற்றிற்குங்கூடப் பொருந்தும்.

மேற்சொன்னவையல்லாத மற்ற உரித்தாக்கப்பட்டிராதவையும் ஒப்புவிக்கப்பட்டிராதவையுமான பொது நிலங்கள்.—இந்த நிலங்களில் உள்ள மரங்களின் மீது ஊராட்சிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை; இந்த மரங்களின் நடவு, பாதுகாப்பு, பராமரிப்பு, பயனீடு ஆகியவை சம்பந்தப்பட்ட துறையினரிடம் தொடர்ந்து இருந்துவரும்.

2. C பட்டா முதலியவைகளின்படிக்கான தனியார் உரிமைகள்.—(உரித்தாக் கப்பட்டோ, ஒப்புவிக்கப்பட்டோ மாற்றப்படியோ உள்ள) பொது நிலத்தில் இருக்கிற மரங்கள் சம்பந்தமாக 2. C. பட்டா மூலம் ஏற்பட்டிருக்கிற கற்போதைய தனியார் உரிமைகள் எல்லாம், இந்த ஆணைகளினுல் கொஞ்சங் கூடப் பாதிக்கப்படாமல் தொடர்ந்து இருந்து வரும். இனிமேல் தனியார்களிட மிருந்து வசூலிக்கப்படும் 2. C வரி வருவாய்த் தொகை முழுவதும் ஊராட்சி களுக்கு வரவு வைக்கப்படும்.

1961 மே 30-ஆம் தேதிக்குப் பிறகு சம்பந்தப்பட்ட ஊராட்சியின் பரிந்துரையின் பேரிலன்றி மற்றப்படி 2. b. பட்டா புதிதாக வழங்கப்பட மாட்டாது, 2.C. பட்டா புதிதாக வழங்குவதாயிருந்தால், அது ஊராட்சி களினுல் குறிப்பிடப்படும் வீதங்களின்படி வரி செலுத்தப்படுவதற்குட்பட்டு வழங்கப்படும்; அவ்வீதங்கள், இதன் தொடர்பான தற்போதைய விதிகளின்படி விதிக்கப்படத்தக்கவைகளைவிடக் குறைவாயிருக்கக் கூடாது.

இந்த ஆணையை அனுசரித்து ஊராட்சியினிடம் ஒப்புவிக்கப்பட்ட மரங்கள் தக்கவாறு பாதுகாக்கப்படவில்லை அல்லது பராமரிக்கப்படவில்லையென்று கோட்ட ஆட்சியாளர் கருதினுல், அவர் ஓர் ஆணை மூலமாக ஊராட்சிகளுக்கு முறைப்படி அறிவிப்புக் கொடுத்த பிறகு, உரித்தாக்கப்பட்டிராத எல்லா வகைப் பொது நிலத்திலும் ஊராட்சிகளால் அல்லது மற்றவர்களால் நடப்பட்ட மரங்கள் உட்பட, மரங்களின் மீது ஊராட்சிக்குள்ள உரிமையை எடுத்துவிட லாம். நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறையினருக்கும் பொதுப் பணித் துறையினருக்கும் சொந்தமான புறம்போக்குகள் சம்பந்தமாக கோட்ட ஆட்சியாளருடன் கலந்தாலோசித்து, சம்பந்தப்பட்ட மாவட்டப் பொறியாள ராவது செயல் பொறியாளராவது கூட, மேற்கண்ட உரிமையை எடுத்து விடுவ தற்கான அதே மாதிரி அதிகாரங்களைச் செலுத்த வேண்டும். கோட்டப் பொறி யாளரின் அல்லது செயல் பொறியாளரின் கருத்தைக் கோட்ட ஆட்சியாளர் ஒப்புக் கொள்ளாவிட்டால், அதனை மாவட்ட ஆட்சியாளரின் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும். அதில் மாவட்ட ஆட்சியாளரின் தீர்ப்பு முடிவானதாகும். மரங்கள் அவ்வாறு ஊராட்சியினிடமிருந்து எடுத்துவிடப்பட்டால், ஊராட்சியே நடவு செய்த மரங்களைப் பற்றியுங்கூட, எவ்வித ஈடும் கேட்க ஊராட்சிக்கு உரிமை இல்லை.

பொதுப் பணித் துறையினருக்கு அல்லது நெடுஞ்சாலைத் துறையினருக்கு சொந்தமானவை உட்பட, உரித்தாக்கப்பட்டிராத பொது நிலத்திலிருக்கிற மரம் அல்லது மரங்களை, பொதுமக்கள் பாதுகாப்பை அல்லது பொதுமக்கள் வசதியை

முன்னிட்டு உடனே அகற்றிவிடுவது அவசியமாகிவிட்டால், அப்போது, அம் மரங்களை வெட்டி அப்புறப்படுத்தும்படி செய்ய, சந்தர்ப்பத்துக்கேற்ப, கோட்ட ஆட்சியாளருக்கு அல்லது கோட்டப் பொறியாளருக்கு அல்லது செயல் பொறியாளருக்கு அதிகாரமுண்டு. அவ்வாறு வெட்டி வீழ்த்தப்பட்ட மரங்களை ஊராட்சிக்குக் கொடுத்துவிட வேண்டும்; அது அவற்றை வெளிப்படை ஏலத்தில் விற்பனை செய்து, அவ்வாறு விற்றுவந்த தொகையை ஊராட்சி நிதிகளுக்கு வரவு வைக்க வேண்டும். ஊராட்சிகள் நடவு செய்த மரங்களைப் பொறுத்தும் எவ்வித ஈடும் பெற ஊராட்சிக்கு உரிமையில்லை.

உரித்தாக்கப்பட்டிராத பொது நிலத்தை அரசாங்கத்தார் தனியார் ஒருவருக்கு ஒப்படை செய்தால், அந்த நிலங்களில் இருக்கிற மரங்கள் சம்பந்தமான உரிமைகள் ஒப்படை பெற்றவருக்கு மாற்றப்படுவதும், ஒப்படை ஆணையில் அடங்குவதாகக் கருதப்படும். அம் மரங்கள் சம்பந்தமாக எவ்வித ஈடும் பெற ஊராட்சிக்கு உரிமையில்லை. அத்தகைய பொது நிலம் அரசாங்கத் துறை ஒன்றின் பயனீட்டுக்காக எடுத்துக் கொள்ளப்படுவதிலும் அதே ஏற்பாடு பொருந்தும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில், தனி மர வரி ஏற்பாட்டின்படி வைத்திருக்கப்படும் மரங்கள் அல்லது வாய்க்கால்களின், ஆறுகளின் கரைகளில், படுகைப் புறம் போக்கில் அல்லது ஆறுகளின் ஆழமான உள்வாய்களிலிருந்து 20 கெஜ தூரத்துக்குள் குடியானவர்களால் நடத்தப்பட்ட மரங்கள் தங்களுக்குச் சொந்தமானவையென்று அரசாங்கத்தார் உரிமை கொண்டாடுவதில்லை. ஆனால் அம் மரங்கள், கடைசியில் சொன்னவற்றில் 1364-ஆம் பசலிக்கு முன்பும், மற்றவற்றில் 1927 ஜூலை 1-ஆம் தேதிக்கு முன்பும் நடப்பட்டிருக்க வேண்டும். ஆகையால் அம் மரங்கள் சம்பந்தமாக ஊராட்சிகளுக்கு எவ்வித உரிமைகளும் இல்லையென்று தெரிகிறது.

தற்சமயம் பொது நிலத்தில் இருக்கிற அல்லது இந்த ஆணையின் தேதிக்குப் பிறகு அடியிற்கண்ட தனிப் பகுதிகளில் வளரக் கூடிய சந்தன மரங்கள் எல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தாருக்கே சொந்தமாயிருந்து வரும்; அம் மரங்களைப் பொறுத்தவரை ஊராட்சிக்கு உரிமை இல்லை.

வட ஆர்க்காடு.

தென் ஆர்க்காடு.

திருநெல்வேலி.

சேலம்.

கோயம்புத்தூர்.

நீலகிரி.

அன்றியும், அரசாங்கத்தார் திட்டவட்டமாக ஆணைகள் பிறப்பித்து அவற்றின் மூலமாக, குறிப்பிட்ட தனிப்பட்ட வகைகளைச் சேர்ந்த மரங்களுக்கு இந்த ஆணை பொருந்துதலினின்றும் விலக்களிக்கப்படுகிறதென்று அறிவித்து குறிப்பிட்ட அரசாங்கத் துறையினரால் பயன்படுத்திக் கொள்ளப்படுவதற்கு அம் மரங்களை ஒதுக்கி வைக்கலாம்.

இந்த ஆணையின்படி ஊராட்சிகளுக்கு மாற்றப்பட்டுள்ள மரங்கள் சம்பந்தமாக, மேல் மாசூலைக் குத்தகைக்குவிட்டு, பட்டுப் போனவையும் காற்றடித்து விழுந்தவைகளுமான மரங்களை ஏலம் மூலமாக விற்பனை செய்ய ஊராட்சிகளுக்கு அதிகாரமுண்டு. ஊராட்சியின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு அவ்வாறு குத்தகைக்கு அல்லது ஏலத்துக்கு விட வேண்டுமேயன்றி, ஊராட்சியின் செயல் அதிகாரி என்றும் தமது முறைமையில் மட்டும் செயலாற்றுகிற ஊராட்சித் தலைவர் அவ்வாறு குத்தகைக்கு அல்லது ஏலத்துக்கு விடக் கூடாது. குத்தகைகள், ஏலங்கள், விற்பனைகள் முதலியவைகளெல்லாம் ஊராட்சிகளின் சட்டமுறையான தீர்மான மூலமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(1961 மே 30 ஆம் தேதிய 1550 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1962 நவம்பர் 17 ஆம் தேதிய 243179 P 2/61-10 ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை குறிப்பாணை.)

(97). ஊராட்சி ஒன்றியத்துக்கு மாற்றப்பட்டுள்ள சிறு பாசன ஆதாரங்களின் உள்வாய்களிலும் கரைகளிலும் இருக்கிற மரங்கள் ஒப்படைத்தல்.— ஊராட்சி ஒன்றியத்துக்குச் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிக் கழகங்களுக்கு மாற்றப்பட்டுள்ள சிறு பாசன ஆதாரங்களின் உள்வாய்களிலும் கரைகளிலும் இருக்கிற மரங்களை ஒப்படைப்பதனால் ஊர் வாசிகளிடையே ஒரு பொது உடைமை உணர்ச்சியை எழச் செய்யுமென்றும், அதுவே அம் மரங்கள் அழிக்கப்படாமலிருப்பதற்கு நல்ல பாதுகாப்பாயிருக்குமென்றும் அரசாங்கத்தார் கருதுகிறார்கள். ஆகையால், ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்டிருக்கிற சிறு பாசன ஆதாரங்களின் உள்வாய்களிலும் கரைகளிலும், 2 C பட்டாக்களின் பேரில் தனியார்கள் வைத்திருக்கிற மரங்களைத் தவிர மற்றெல்லா மரங்களையும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலும் மேண்மையிலும் ஒப்படைக்க வேண்டுமென அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள்.

ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் முறையில் தங்கள் தங்கள் பகுதிகளில் இருக்கிற சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு இம் மரங்களைக் கீழ் ஒப்படை செய்ய அனுமதிக்கலாமா என்னும் கேள்வியைப் பற்றிக் கூட அரசாங்கத்தார் ஆலோசனை செய்து பார்த்தார்கள். இக் கேள்வியில் இரண்டு வாதப் பொருள்கள் அடங்கியுள்ளன என்று அரசாங்கத்தார் கருதுகிறார்கள். அவையாவன :—(1) ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்டுள்ள சிறு பாசன ஆதாரங்களின் உள்வாய்களிலும் கரைகளிலும் மரங்களை நடுவதும், அவற்றின் மேல் மாசூல் களைப் பயன்படுத்திக் கொள்வதும்; (2) சிறு பாசன ஆதாரங்களின் உள்வாய் களிலும் கரைகளிலும் ஏற்கெனவேயுள்ள மரங்களின் மேல் மாசூல்களைப் பயன் படுத்திக் கொள்ளுதல். இவ்விரண்டிலும் அடங்கியுள்ள உரிமைகளும் பொறுப்பு களும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களிடம் மட்டுமே உரித்தாக்கப்பட் டிருக்கின்றன என்பதை அரசாங்கத்தார் தெளிவாக்க விரும்புகிறார்கள். ஆயினும், சிறு பாசன ஆதாரங்களின் உள்வாய்களிலும் கரைகளிலும் மரங்களை நடவும், சிறு பாசன ஆதாரங்களின் உள்வாய்களிலும் கரைகளிலும் ஏற்கெனவே இருக்கிற மரங்களைப் பாதுகாத்துப் பேணி வரவும், அவற்றின் மேல் மாசூல்களை அனுபவிக்கவும் ஊராட்சிகள் விருப்பமுள்ளவைகளாயிருந்தால், உள்வாய் களிலும் கரைகளிலும் மரங்களை நடுவதற்காகவும், அங்கே ஏற்கெனவேயுள்ள மரங்களின் மேல் மாசூல்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காகவும், சம்பந்தப் பட்ட ஊராட்சிகளுக்குக் கீழ் ஒப்படை செய்ய, அரசாங்கத்தார் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதி கொடுக்கிறார்கள். ஆனால் ஊராட்சிகள் அவ்வாறு கண்டுள்ள அவசியமான தீர்மானங்களை நிறைவேற்றி, அவ்வாறு ஒப்படை செய்யும்படி விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். சிறு பாசன ஆதாரங்களின் உள்வாய்கள், கரைகள் ஆகியவற்றின் பாதுகாப்பை முன்னிட்டு இதன் பொருட்டு ஊராட்சி ஒன்றியங்கள் விதிக்கக் கூடிய ஏதேனும் நிபந்தனையின்படி நடப்பதற்கு உடன்படுவதாக ஊராட்சிகள் இத் தீர்மானங்களில் தெரிவிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் ஒப்படை செய்வதில் மரங்களை நல்ல நிலைமையில் பேணி வரவும் அவ்வப்போது அவற்றின் மேல் மாசூல்களை ஏலத்துக்கு விடவும் ஊராட்சிகள் பொறுப்புடையவைகளாயிருக்கும். ஏலத்தில் கிடைக்கும் தொகைகளை ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் பாதிக்குப் பாதி என்னும் அடிப்படையில் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். ஆயினும், இந்த சிறு பாசன ஆதாரங்களின் உள்வாய்களிலும் கரைகளிலும் இருக்கிற மரங்கள் ஊராட்சி ஒன்றியங்களால் மட்டும் பராமரித்து வரப்பட்டால், அம் மரங்களை நல்ல நிலைமையில் பராமரித்து வருவது அவைகளின் பொறுப்பாகும். மரங் களின் மேல் மாசூல்களை அவைகள் அவ்வப்போது ஏலத்துக்கு விட வேண்டும். அந்த ஏலத்திலிருந்து கிடைக்கும் தொகைகளை ஊராட்சி ஒன்றியங்கள் மட்டும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிறு பாசன ஆதாரங்களின் உள்வாய்களிலும் கரைகளிலும் இருக்கிற பட்டுப் போன மரங்கள், காற்றடித்து விழுந்துபோன மரங்கள் முதலியவை சம்பந்த மாக, அவற்றின் பராமரிப்பை ஊராட்சி ஒன்றியங்களே கவனித்து வந்தால், அவற்றை விற்று, வருமானத்தைப் பயன்படுத்திக் கொள்ள அந்த ஒன்றியங் களுக்கு உரிமையுண்டு. ஆயினும், அப் பராமரிப்பு ஊராட்சிகளிடம் ஒப்படைக் கப்பட்டிருந்தால், பட்டுப்போனவையும் காற்றடித்து விழுந்தவையுமான மரங்களை விற்கும் உரிமை அவ்வூராட்சிகளினுடையதாகும். இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தை மேற்காட்டியவாறு அதாவது பாதிக்குப் பாதி என்னும் அடிப்படையின் பேரில் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

(1962 நவம்பர் 19-ந் தேதிய 2526 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சி துறை அரசு ஆணை.)

68. ஊராட்சிகள் குடிமராமத்து ஏற்பாட்டினைச் செயற்படுத்துவது பற்றிய வரையறைகளும் கட்டுப்பாடும்—ஊராட்சிகள் கட்டணங்கள் விதிப்பது.— ஏதேனும் பாசனக் கட்டுவேலையினால் பயனடையும் நிலங்களின் பதிவு பெற்ற உடைமையாளர்களிடமிருந்து, ஊராட்சி ஏக்கரா ஒன்றுக்கு அந்த வருவாய் மாவட்ட ஆட்சியாளர் அவ்வப்போது நிச்சயிக்கக்கூடிய வீதப்படி ஆண்டுக் கட்டணம் விதித்து வாங்கலாம்.

சம்பந்தப்பட்ட பாசனக் கட்டு வேலையிலிருந்து நேர் பாய்ச்சலினால் நீர் பாய்ச்சப்பெறும் நன்செய் புன்செய் நிலங்களைப் பொறுத்தவரை ஏக்கரா ஒன்றுக்கு ஒரே ஒத்த வீதப்படியும், இறைப்பது மூலமாக அக் கட்டு வேலையி லிருந்து நீர்பாய்ச்சப்பெறும் நன்செய், புன்செய் நிலங்களைப் பொறுத்தவரை அந்த வீதத்தில் பேர்பாதி வீதப்படியும் கட்டணம் விதிக்க வேண்டும்.

விளக்கம்.—இக் கட்டணம் நன்செய் அல்லது புன்செய் தீர்வைக்கும் அத் நிலத்துக்குத் தண்ணீர்த் தீர்வை ஏதேனும் விதிக்கத்தக்கதாயிருந்தால் அதற்கும் கூடுதலானது.

2. ஊர்த் தலைவர் மூலமாக அல்லது அந்த ஊரில் அல்லது பேரூரின் அல்லது அதன் ஒரு பாகத்தின் மீது ஆட்சி வரம்புடைய நில வருவாய்த் துறைப் பணியாளரைச் சேர்ந்த வேறொருவர் மூலமாக ஊராட்சி அக் கட்ட ணத்தை வசூலிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியாளரின் பொதுவான அல்லது தனிப்பட்ட ஆணைகளின்படி ஊராட்சி அக் கட்டணத்தைப் பரிபாலித்துச் செல விட வேண்டும். ஊர்த் தலைவர் தொகையை வசூலிப்பது இயலும்பொருட்டு, அக் கட்டணத்துக்குச் சம்பந்தப்பட்ட கேட்புக் கணக்கைக் கர்ணம் அனுப்ப

வேண்டும். ஊர்த் தலைவருக்கு அல்லது நில வருவாய்த் துறைப் பணியாளர் தொகுதியைச் சேர்ந்த வேறொருவருக்கு 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 126 ஆவது பிரிவின்படி இதன்பொருட்டுப் பொதுவான அல்லது தனிப்பட்ட ஆணை மூலமாக மாவட்ட ஆட்சியாளர் நிச்சயிக்கக் கூடிய ஊதியம் கொடுக்க வேண்டும்.

3. அக் கட்டணத்தைச் செலுத்தும்படி கேட்பதன் பேரில் அது, சந்தர்ப்பத்துக்கேற்பப் பதிவு பெற்ற உடமையாளர் அல்லது பதிவு பெற்ற உடமையானவர்களில் ஒருவரால் செலுத்தப்படத்தக்கதாகும்; அது செலுத்தப்படாவிட்டால் அந்த உடமையாளரிடமிருந்து அல்லது அந்த உடமையாளர்களில் ஒருவரிடமிருந்து நிலவரிப் பாக்கியைப் போல் அதை வசூலிக்கலாம்.

4. இக் கட்டணத்திலிருந்து கிடைக்கும் தொகைகளை ஒரு தனி நிதியாக அமைக்க வேண்டும்; ஊராட்சிக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி, சம்பந்தப்பட்ட பாசனக் கட்டுவேலையின் பராமரிப்புக்காக அல்லது செப்பனிட்டுக்காக அதைச் செலவிட வேண்டும்; வேறெந்தக் காரியத்துக்காகவும் அதைப் பயன்படுத்தக் கூடாது.

5. இந்த நிதிக்குத் தொடர்புடைய விவகாரங்களுக்காக ஊராட்சி தக்க கணக்குகளை வைத்துவர வேண்டும்; 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 141 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி அரசாங்கத்தாரால் நியமிக்கப்படும் தணிக்கையாளர் அக் கணக்குகளைத் தணிக்கை செய்ய வேண்டும்.

6. பொதுப் பணித் துறையையும் வருவாய்த் துறையையும் சேர்ந்த அலுவலர்கள், அப்பாசனக் கட்டு வேலையையும் அதற்குச் சம்பந்தப்பட்ட மற்றெல்லாம் அல்லது எவையேனும் கட்டு வேலைகளையும் பார்வையிட ஊராட்சி எல்லாக் காலங்களிலும் அனுமதி கொடுக்க வேண்டும்.

7. அப் பாசனக் கட்டு வேலையை அல்லது அதற்குச் சம்பந்தப்பட்ட மற்ற கட்டு வேலைகளைச் செப்பனிடப் பொதுப் பணித் துறையினரால் அல்லது வருவாய்த் துறையினரால் அமர்த்திக் கொள்ளப்படக்கூடிய ஒப்பந்தக்காரருக்கு ஊராட்சி எல்லாக் காலங்களிலும் வசதி செய்து கொடுக்க வேண்டும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

1962 பிப்ரவரி 16 ஆம் தேதிய 368 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(98) சிறு பாசன ஆதாரங்களை மாற்றுவதும் குடிமராமத்தைச் செயற் படுத்துவதும்.—வேளாண்மை வளர்ச்சிப் பணியை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்தலுக்கு அடிப்படையிலுள்ள கோட்பாட்டின் பாகமாகப் புதிய சட்டத்தின் 85 (1) பிரிவில் கண்ட ஏற்பாடுகளைப் போதுமானபடிப் பயன் படுத்திக் கொள்வது அவசியமென அரசாங்கத்தார் கருதுகிறார்கள்.

புதிய சட்டத்தைச் செயற்படுத்தும் சூழ்நிலையில் ஒவ்வொன்றிலும் தங்கள் ஊர்களில் உள்ள குடிமராமத்து வேலைகளை ஏற்றுக் கொள்ளும்படி ஊராட்சி களுக்கு ஆலோசனை கூறுவது மிக அவசியமென்று கூட அரசாங்கத்தார் கருது கிறார்கள். பல ஊராட்சிகளின் குடியானவர்களுக்குள் குடிமராமத்து வேலை யைக் கூட்டாக எடுக்க வேண்டிய பொறுப்பு ஏற்பட்டு, சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் தங்களுக்குள் அப்பொறுப்பை பங்கிட்டுக் கொள்ள முடியாம லிருக்கிற அசாதாரணமான நிகழ்வுகளில் மாத்திரம், குடிமராமத்தை ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்றுக் கொள்வதற்கான அவசியம் எழும்.

ஆகவே, அரசாங்கத்தார் பின்வரும் ஆணைகளைப் பிறப்பிக்கிறார்கள்.

(1). (அ) பாசனக் கட்டு வேலைகளைப் பாதுகாத்துப் பராமரித்து வருவ தற்கும். (ஆ) பாசன முறைகளை வேளாண்மை செய்வது, (இ) பாசனக் கட்டு வேலையிலிருந்து அதை நம்பியிருக்கும் நிலங்களுக்குத் தண்ணீர் பங்கிட்டு விடுவதை முறைப்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட அலுவல்களை ஊராட்சிக் காவது ஊராட்சி ஒன்றியத்துக்காவது மாற்ற, 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தின் 85 (1) பிரிவில் அரசாங்கத்தாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அலுவல்களை ஊராட்சிகளுக்கு மாற்றாமல் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்ற வேண்டுமென அரசாங்கத்தார் தீர்மானத் திருக்கிறார்கள். ஆயினும், பராமரிப்பு வேலை செய்வது, பாசன முறைகளை மேலாண்மைசெய்வது பாசன கட்டு வேலையிலிருந்து தண்ணீர் பங்கிட்டு விடுவதை முறைப் படுத்துவது ஆகியவற்றை ஊராட்சி ஒன்றியம் மேற்படிச் சட்டத்தில் கண்ட 71 (2) பிரிவின்படி சில நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளூர் ஊராட்சியினிடம் ஒப்புவிப்பதில் அரசாங்கத்திற்குத் தடை ஒன்றுமில்லை. அந்த நிபந்தனைகள் எவையென்றால், அவ்வாறு ஒப்படைக்கும்படி பாசன ஆதாரத்தின் ஆயக் கட்டு தாரர்கள் எழுத்து மூலமாய்க் கேட்டுக்கொள்ள வேண்டும்; அந்த அலுவல்களை மேற்கொள்ளவும், எந்த நிபந்தனைகளின்படி அப் பாசன ஆதாரம் ஊராட்சி ஒன்றியத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறதோ அவைகளை அனுசரித்து நடக்கவும், சம்பந்தப்பட்ட ஊராட்சி (இதற்கென்றே தனிப்படக் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்திலே அது நிறைவேற்றிய ஒரு தீர்மானம் மூலமாக) ஒப்புக் கொள்ளவேண்டும்.

(2) மேற்படி சட்டத்தில் கண்ட 85 (1) பிரிவினபடி அரசாங்கத்தாரிடம் உரித்தாக்கப்பட்டிருப்பதும், மேலே (1) உள் பத்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதுமான அதிகாரம், 1960 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆம் தேதிய 76 ஆம எண் உள்ளாட்சித் துறை அரசாங்க ஆணையுடன் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை பின்படி மாவட்ட ஆட்சியாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பின்வரும் நிபந்தனைகளுககும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு இந்த அதிகாரத்தைச் செலுத்தும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் :—

(i) வருவாய்த் துறையினரின் பொறுப்பில் இருப்பவையும், ஊராட்சி வளர்ச்சி வட்டாரமொன்றில் இருப்பவையுமான சிறு பாசன ஆதாரங்கள் மட்டும், அவ்வட்டாரத்துக்காக அமைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத்துக்கு மாற்ற வேண்டும்; ஆனால், அந்த ஆதாரங்கள் ஓர் ஆற்றுப் பாசனத் திட்டத்தின் பாகமாயிருக்கக் கூடாது. தற்சமயம், பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள குளங்கள் ஓர் ஆற்றுப் பாசனத் திட்டத்தோடு தொடாபற்றவைகளாக இருந்த போதிலுங்கூட, அவைகளை மாற்ற வேண்டியதில்லை.

(ii) இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பொறுப்பினை ஊராட்சி ஒன்றியம் நிறைவேற்றுவது இயலும்பொருட்டு, "உள்ளூர்ப் பாசனக் கொடை" என்று சொல்லப்படும் தனிப்பட்ட ஆண்டுக் கொடை ஒன்று ஊராட்சி ஒன்றியத்துக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சியாளர் இக கொடையின் தொகையைப் பின்வரும் அடிப்படையின பேரில் ஒவ்வொரு வட்டாரத்துக்காகவும் நிச்சயிக்க வேண்டும்.

(அ) அந்த வட்டாரத்தின் சிறு பாசன ஆதாரங்கள் எல்லாவற்றிற்காகவும் செப்பனிடுகள் மூலம் ஆண்டுதோறும் செலவிடப்படும் சராசரித் தொகையை, 1959-60 தோடு முடிவடைந்த ஐந்தாண்டுகளுக்கு உள்ளபடியான எண்களையொட்டி நிச்சயிக்க வேண்டும். இத் தொகையானது, அந்த ஆதாரங்களிலிருந்து நீர் பாய்ச்சப்பெறும் ஏக்கரா ஒன்றுக்கு 2.50 ரூபாய்க்கு மேற்படாவிட்டாலும். அந்த ஆதாரங்களிலிருந்து நீர் பாய்ச்சப்பெறும் ஏக்கரா ஒன்றுக்கு 1.50 ரூபாய்க்குக் குறைவாயிராவிட்டாலும், அத் தொகையை, உள்ளூாப பாசனக் கொடை என்று நிச்சயிக்க வேண்டும்.

(ஆ) மேலே (அ) வில் குறிப்பிட்டுள்ள சராசரி ஆண்டுத் தொகை, அந்த ஆதாரங்களிலிருந்து நீர் பாய்ச்சப்பெறும் ஏக்கரா ஒன்றுக்கு 2.50 ரூபாய்க்கு மேற்பட்டால், அப்போது, ஏக்கரா ஒன்றுக்கு 2.50 ரூபாயுள்ள தொகையை, உள்ளூர்ப் பாசனக் கொடையாக நிச்சயிக்க வேண்டும்.

(இ) மேலே (அ) வில் குறிப்பிட்டுள்ள சராசரி ஆண்டுத் தொகை எல்லா ஆதாரங்களிலிருந்தும் நீர் பாய்ச்சப்பெறும் ஏக்கரா ஒன்றுக்கு 1.50

ரூபாய்க்குக் குறைவாயிருந்தால், அப்போது ஏக்கரா ஒன்றுக்கு 1.50 ரூபாயுள்ள தொகையை, உள்ளூர்ப் பாசனக் கொடையாக நிச்சயிக்க வேண்டும்.

அவ்வாறு கொடுக்கப்படும் கொடையை, தனி நிதி ஒன்றில் வரவு வைக்க வேண்டும்; இது "ஊராட்சி ஒன்றியம் (உற்பத்தி) நிதி" என்று சொல்லப்படும், இதற்கு ஊராட்சி ஒன்றியத்தின் பொது-கல்வி நிதிகளினின்றும் வேருகத் தனியாய்க் கணக்கு வைக்க வேண்டும். சிறு பாசனக் கட்டு வேலை களுக்காகச் செலவு செய்வதற்கு மட்டுமே அக் கொடையைப் பயன்படுத்தப் படும்படிக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(iii) ஊராட்சி ஒன்றியப் பொறியாளரின் (வட்டாரப் பொறியாளரின் மாறுதலையும் செய்யக் கூடாது அல்லது அக் கட்டு வேலை சம்பந்தமாகக் குளம் புதுப்பிக்கும் திட்ட ஆராய்ச்சிப் பதிவுக் குறிப்புகளில் கண்ட தரம், அளவுக் குறிப்புகள் ஆகியவற்றில் தலையிடக் கூடாது அல்லது சிற்றணைகளை அல்லது கலிங்கல்களை உயர்த்தவோ தாழ்த்தவோ விரிவாக்கவோ கூடாது அல்லது வாய்க் கால்களுக்கு முகப்புக் கட்டு வேலைகள் இருந்தால் அவற்றில் முக்கியமான மாறு தல்கள் செய்யக் கூடாது அல்லது அவைகளில் தலையிடக் கூடாது.

(iv) மழைக் காலத்தில் பாசனக் கட்டு வேலையின் கரையைக் காவல் காப்பது ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பாகும்.

(v) பாசனக் கட்டு வேலையின் பாகமாயுள்ள அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட மதகுகள், சிற்றணைகள், கலிங்கல்கள், வாய்க்கால்கள், முகப்புக் கட்டு வேலைகள், கரை அல்லது வேறு கட்டு வேலைகளுக்கு, ஊராட்சி ஒன்றி யத்தின் நெறிப் பிசகாலோ அல்லது செய்யாதுவிட்ட பிழைபாட்டின் விளைவா கவோ நேரிடும் ஏதேனும் சேதத்துக்கு அது ஈடு செய்து கொடுக்க வேண்டும்; ஊராட்சி ஒன்றியத்தின் நெறிப் பிசகு அல்லது செய்யாதுவிட்ட பிழைபாட்டின் விளைவாகக் குறிப்பிட்ட ஏதேனும் சேதம் நேர்ந்ததா என்பது பற்றி மாவட்ட ஆட்சியாளரின் தீர்மானம் முடிவானதாகும்.

(vi) பாசனக் கட்டு வேலைக் கரையின் அடிமுனை எதிலிருந்தாகிலும் முப்பது அடி தூரத்துக்குள் ஊராட்சி ஒன்றியம் எப்போதேனும் எதற்காக வாகிலும் மண் தோண்டியெடுக்கக் கூடாது.

(vii) ஊராட்சி ஒன்றியம் பொறியாளரின் (வட்டாரப் பொறியாளரின் அல்லது மேற்பார்வையாளரின்) கட்டுப்பாட்டுக்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டு எல்லாப் பணிகளையும் செய்ய வேண்டும்; அவை, கோட்ட ஆட்சி யாளரின் மேற்பார்வைக்குங்கூட உட்பட்டவையாகும்.

(viii) பாசனக் கட்டுவேலையின் கீழ் உள்ள நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்குரிய விதத்தையும் வரிசை முறையையும் தொடர்ந்து தண்ணீர் வழங்க வேண்டிய காலத்தையும், வழங்கப்பட வேண்டிய தண்ணீரின் மொத்த அளவையும் முறைப்படுத்த ஊராட்சி ஒன்றியத்துக்கு அதிகாரமுண்டு ; ஆனால், சலுகையாக அல்லது வீதாசாரப்படி வழங்கீடு பெறுவதற்குரிய நிலைபேறான அல்லது மாமூலான உரிமை எதிரிடையாகப் பாதிக்கப்படும்படியாக இந்த அதிகாரத்தைச் செலுத்தக் கூடாது.

(ix) ஊர்ப் பாசனக் கட்டுவேலை சம்பந்தமாக ஒரு ஊராட்சி ஒன்றியத்துக்கு மாற்றப்பட்ட ஓர் அலுவலை, அரசாங்கத்தாராவது அவர்களுடைய சார்பாளராகிய மாவட்ட ஆட்சியாளராவது காரணம் எதுவும் சொல்லாமலே எப்போதேனும் திரும்ப எடுத்துக் கொள்ளலாம்.

(x) சிறு பாசன ஆதாரங்களை ஊராட்சிகளுக்கு மாற்றுவதற்குமுன், மேற்கண்ட திட்டங்களின்படி நடத்த ஒப்புக்கொண்ட ஊராட்சி ஒன்றிய மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

குடிமராமத்து.—(i) பாசன ஆதாரங்களில் சிலவகை வேலைக்காக இலவச உழைப்பு நல்குவதற்குரிய மாமூலான கடமை ஒன்று ஏற்பட்டிருப்பதைப் பற்றி, 1858 ஆம் ஆண்டின் கட்டாய உழைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மாமூலான கடமை நிறைவேற்றப்படாவிட்டால், வட்டாட்சியர் அவசியமான பணிகளைச் செய்யலாம் என்றும், செலவைப் பொறுப்புள்ள நிலக்கிழார்களுக்குள் பங்கிட்டு, நிலவரிப் பாக்கியைப்போல் அவர்களிடமிருந்து வசூலிக்கலாமென்றும் அச்சட்டத்தில் கண்டிருக்கிறது. ஊராட்சிகள் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் இந்த மாமூலான கடமையை மேற்கொண்டு, அதை நிறைவேற்றி, இதற்கெனச் சட்ட முறையான ஒரு கட்டணத்தை விதித்துச் செலவை ஈடு செய்வதை 1950-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 59 (2) பிரிவுக்கு நிகரான 1958ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 85 (2) பிரிவு முடியக் கூடியதாகச் செய்கிறது. ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றம் இப் பொறுப்பினை மேற்கொள்வதனால், தங்களால் மேற்கொள்ளப்பட்ட கடமையை நிறைவேற்ற ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் தவறிப்போகும் பட்சத்தில் வட்டாட்சியர் விதிகளைச் செயற்படுத்தும் பொறுப்பினின்றும் நிலக் கிழார்கள் விலக்குப் பெறமாட்டார்களென்று, 1950, 1958 ஆம் ஆண்டுகளின் ஊராட்சிச் சட்டங்கள் இரண்டிலும் தனியாக ஏற்பாடு கண்டிருக்கிறது.

(ii) மேற்படி சட்டத்தில் கண்ட 85 (2) பிரிவின் ஏற்பாடுகளை ஒவ்வொரு ஊராட்சிக்கும் தெரிவிப்பதற்காகவும், பாசனக கட்டு வேலைகளை நல்ல நிலைமையில் வைத்திருக்கும்பொருட்டு, குடிமராமததுத திட்டத்தை நிறை வேற்றவும் காலமுறையில் தங்கள் கடமையைச செய்யவுமான பொறுப்பை மேற்கொள்ளும்படி ஊராட்சிகளைத் தூண்டுவதற்காகவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு மாவட்டங்களின் ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படு இருர்கள். மேற்படி சட்டத்தில் கண்ட ஏறபாடுகளின்படி, குடிமராமத்துத் திட்டத்தை நிறைவேற்ற ஊராட்சிகள் தக்க கட்டணஙகளை விதிக்கலாமென்று அவைகளுக்குத் தெரிவிக்கலாம். இவ்வாறு ஊராட்சிகளை அணுகுவதன் விளைவு தெளிவாகிறவரையில், ஊராட்சி ஒன்றிய மன்றஙகள் இப் பொறுப்பினை மேற்கொள்ளும் வினைவைப் பற்றி ஆலோசிக்க வேண்டியதில்லை

(iii) இந்த மாமூலான கடமை, கையாளப்படாததனுல் அற்றுப் போவதைத் தடுக்கும்பொருட்டு; ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், மாமூலான கடமை ஏற்பட்டிருப்பதையும், அது ஏறபட்டிருநத ஒவ்வோர் ஆதாரம் சம்பந்தமாகவும் அதன் சரியான தன்மையையும குறிப்பிட்டு ஒரு பதிவு வைததுவர வேண்டும். மாமூலான கடமையின் தன்மை இன்னதென்று, ஊராட்சியின் நிலவரித் திட்டப் பதிவேடுகளிலும் வட்ட அலுவலகத்திலுள்ள பதிவுகளிலும் கிடைக்கும் ஆதாரம் ஒவ்வொன்றையும் பற்றிய விவரங்களை வட்டாட்சியரிடமிருந்து பெற்று, மேற்படி பதிவேடுகளில் எழுதிக் கொள்ள வேண்டும்.

(iv) வருவாய் வாரியத்தின் 86ஆம் எண் நிலையாணையின்கீழ் உள்ள (5) உள் பத்தியிலும், அந்த நிலையாணையின் I ஆம் இணைப்பிலும் II ஆம் இணைபபிலும் வட்ட அலுவலகத்தில் இரண்டு பதிவேடுகளை வைத்துவர வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது; அவையாவன :—

(அ) வட்டத்துக்கான குடிமராமத்துப் பதிவேடு; இதில் ஒவ்வொரு ஊருககும் ஒரு பக்கம் இருக்க வேண்டும்.

(ஆ) மேற்படி சட்டப்படி வசூலிக்கப்பட்ட தண்டப் பணங்களையும் அவற்றின் தீர்வினையும் காட்டும் பதிவேடு. குடிமராமத்துத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஊராட்சிகள் மேற்கொள்ளும்போது இந்த இரண்டு பதிவேடுகளும்,

அவைகளுக்குப் பயன்படுமென்றும், எந்தப் பணிகள் குடிமராமத்துப் பொறுப்பின் எல்லைக்குள் வருவதாகக் கருதப்பட வேண்டுமென்பதைக் காட்டு வதறகு அப்பதிவேடுகளை வைத்துவருவது அவசியமென்றும் வருவாய்த் துறை

வாரியத்தினர் தெரிவித்திருக்கிறார்கள். வட்ட அலுவலகத்தில் இப்போது வைத்துவரப்படும் இந்த இரண்டு பதிவேடுகளைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளரும் ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றுக்காகவும், வருவாய்த் துறை வாரியத்தினர் அவசியமெனக் கருதக்கூடிய மாறுதல்களுடன் வைத்துவர வேண்டுமென அரசாங்கத்தார் கட்டளையிடுகிறார்கள். வட்டாரத்திலுள்ள எந்த ஊராட்சியையேனும் ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 85 (2) பிரிவின்படி அதிகாரமும் பொறுப்பும் மேற்கொண்ட பிறகு, ஒரு பாசன ஆதாரம் சம்பந்தமாகக் குடிமராமத்துத் திட்டத்தை நிறைவேற்றத் தவறிப் போனால், ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளர் அச்செய்தியை ஊராட்சி ஒன்றியம் மன்றத்துக்குத் தெரிவித்து, அதில் அம் மன்றம் அதிகாரத்தையும் பொறுப்பையும் எற்றுக்கொண்டு, குடிமராமத்துத் திட்டத்தை நிறைவேற்றலா மென்று ஆலோசனை கூற வேண்டும். இம் முயற்சி பெரும்பாலும் தவறிப் போகாது. ஒருவேளை அதுவும் தவறிப் போய்விட்டால், அப்போது மாத்திரம், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் 1858ஆம் ஆண்டின் தமிழ் நாடு கட்டாய உழைப்புச சட்டத்தின் எற்பாடுகளை அமல்படுத்துவதற்காக வட்ட அலுவலரின் கவனத்துக்கு கொண்டுவர வேண்டியிருக்கும்.

ஊராட்சி ஒன்றிய மன்றம் அமைக்கப்பட்ட பிறகு கூடிய விரைவில், ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருக்கிற சிறு பாசன ஆதாரங்களைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்துக்கு மாற்ற எற்பாடு செய்ய வேண்டும். இது பற்றி எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கையை சமாபந்தி அலுவலர் அடுத்த இரண்டு சமாபந்திகளின்போது மறு ஆய்வு செய்து, அவ்வாறு மறு ஆய்வு செய்ததன் பலன்களைக் குறித்து, மாவட்ட ஆட்சியாளர் மூலமாக வருவாய்த் துறை வாரியத்தினருக்குத் தெரிவிக்க வேண்டும். அடுத்த இரண்டு சமாபந்திகளில் ஒவ்வொன்றுக்கும் பிறகு இந்த ஆணையின்படி எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கையைக் குறித்து அரசாங்கத்தாருக்குத் தனி அறிக்கை ஒன்றை அனுப்பும்படி வருவாய்த் துறை வாரியத்தினர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(1960 ஏப்ரல் 16ஆம் தேதிய 711ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(99) எடுத்துக்கொள்ளப்பட்ட பகுதிகளில் இருக்கிற சிறுபாசன ஆதாரங்களைப் பராமரித்து வருவது.—வருவாய்த் துறையினரின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட சிறு பாசனக்குளங்களைப் பாதுகாப்பதற்காகவும் பராமரித்து வருவதற்காகவும் அவைகளை ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்ற மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இக் குளங்களைப் பராமரித்து வரும் காரியங்களுக்காக, 'உள்ளூர்ப் பாசனக் கொடை' ஒன்று ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொடுக்கப்படும்; இக் கொடை தொகையை, மாவட்ட

ஆட்சியாளர் 1959-60ஆம் ஆண்டோடு முடிவடைந்த ஐந்தாண்டு காலத்தில் அந்த ஆதாரங்களின் பொருட்டு பிடித்த செலவை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வட்டாரத்துக்காகவும் நிச்சயிக்கவேண்டும்; ஆனால் இத் தொகை, அந்த ஆதாரங்களிலிருந்து நீர் பாய்ச்சப்பெறும் ஏக்கரா ஒன்றுக்கு 2.50 ரூபாய்க்குக் மேற்படவோ 1.50 ரூபாய்க்கு குறையவோ கூடாது.

முன்னாள் சமீன் பகுதிகளில் உள்ள குளங்கள் இப்போதிருக்கிற நிலையில் அவற்றைப் பராமரித்து வருவதற்காக ஊராட்சி ஒன்றியத்திடம் கொடுத்து விடுவது நல்ல தன்று. எல்லா மாவட்டங்களிலும் எடுத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளில் இருக்கிற குளங்களுக்கு மேற்படி விளக்க உரைகள் பொருந்த மாட்டா.

நெடுஞ்சாலைத் துறையை, புதிய நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறையாகத் திருத்தியமைப்பதற்காக, 1960 மே 9ஆம் தேதிய 851ஆம் எண் அரசு ஆணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன; அத் துறையில் மாவட்ட ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட சிறுபாசனப் பணியாளர் தொகுதி முழுவதும் சேர்க்கப்பட்டது. இச் சிப்பந்தியை வருவாய்த் துறையினரின் கட்டுப்பாட்டிலிருந்து எடுத்துவிட்டு, நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறைக்கு மாற்றம் செய்வது 1967 ஏப்ரல் 1ஆம் தேதி முதல் அமலுக்கு வரத் தொடங்குமென்றுங்கூட ஆணையிடப்பட்டது. சிறு பாசன ஆதாரங்கள் ஊராட்சி ஒனறியத்துக்கு மாற்றப்படுகிற வரையில், அவற்றைப் பார்வை யிடுவது, செப்பனிடுவது முதலியவை குறித்து வருவாய்த் துறையினருக்கு தொழில் விதி நுட்ப பொறுப்புகளும், 1961 ஏப்ரல் 11ஆம் தேதியிட்ட 1590ஆம் எண் வருவாய்த்துறைப் பல்வகை அரசு ஆணையில், நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறைக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. ஆயினும், அக் குளங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளபடி மாற்றப் படுகிறவரையில், இக் கட்டு வேலைகள் சம்பந்தமாக நிருவாக ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியாளரிடமும் கோட்ட ஆட்சியாளரிடமும் இருந்துவரும்.

ஆயினும், வருவாய்த் துறை (உணவு உற்பத்தி) வாரியத்தினரால் பரிபாலிக்கப்படும் தனிச்சிறு பாசனத் திட்டத்தின் கீழ் அமர்த்திக் கொள்ளப் பட்டிருக்கிற தனிச்சிறு பாசனப்பணியாளர் தொகுதி வேறு அடிப்படையில் இருக்கிறது. தனிச்சிறு பாசனப் பணித் தொகுதி இது வரையில் இருந்தது போலவே எவ்வித மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து இருந்து வரும். முன்னாள் சமீன் குளங்களைச் சாதாரண தரங்களுக்கு மீண்டும் கொண்டுவரும் பொறுப்பு, தனிச் சிறுபாசனச் சிப்பந்திகளிடம் உரித்தாக்கப்படும்.

தனிச்சிறு பாசனத் திட்டத்தின்படி ஒரு வளர்ச்சிப்படி ஏற்பாட்டின் அடிப்படையின் பேரில் குளங்கள் மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்காக எடுத்துக் கொள்ளப்படும். ஒரு குளம் தனிச்சிறு பாசன சிப்பந்திகளால் அவ்வாறு எடுத்துக் கொள்ளப்படுகிற வரையில், அக் குளங் களின் ஆட்சிப் பொறுப்பு மாவட்ட ஆட்சியாளர்களிடம் இருந்து வரும்; அக் குளங்களுக்கான தொழில் நுட்ப துறையினரிடம் உரித்தாக்கப்படும்.

குளங்கள் மீண்டும் சாதாரண தரங்களுக்குக் கொண்டுவரப்படுந்தோறும் குளங்கள் மேற்கண்ட விளக்க உரைகளின்கீழ் இருந்துவரும்.

ஒரு மாவட்டத்திலிருக்கிற முன்னாள் சமீன் குளங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படுவதற்குமுன், அவைகளையெல்லாம் சாதாரண தரத்துக்கு மீண்டும் கொண்டுவருகிற வரையில் காத்திருப்பது நல்லதா என்னும் வினா எழுப்பப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட முன்னாள் சமீன் குளங்களை ஒப்பளிக்கும் வேலையானது, முன்னாள் சமீன் குளங்கள் எல்லா வற்றின் சம்பந்தமாகவும் பழைய நிலைக்குக் கொண்டுவரும் பணி நிறைவு பெறும் வரையில் காத்திருக்க வேண்டியதில்லையென்று அரசாங்கத்தார் தீர்மா னித்திருக்கிறார்கள். ஒவ்வொரு குளமும் பழைய நிலைக்குக் கொண்டுவரப்படுந் தோறும், முன்னாள் சமீன் குளங்களைப் பராமரிப்பதற்காக ஊராட்சியினிடம் ஒப்புவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு, அச் செய்தியை வருவாய் வாரியத்தாருக்கும் அரசாங்கத்தாருக்கும் தெரிவிக்கும்படி மாவட்ட ஆட்சி யாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(1961 ஜுன் 2ஆம் தேதிய 166ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

69. குத்தகைதாரர்களும் ஒப்பந்தகாரர்களும் கொடுக்கவேண்டிய வரியைத் தள்ளிக் கொடுத்தல்.—(1) ஊராட்சிகளிடமிருந்து குத்தகைகள் பெற்ற குத்தகைதாரர்கள் அனைவரும், ஊராட்சிகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்ட அனைவரும், தங்களுடைய குத்தகைகளின் அல்லது ஒப்பந்தங்கள் களின் வரையறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்; 2ஆவது 3ஆவது விதியில் கண்ட ஏற்பாட்டுகளின்படியின்றி அவர்களுக்கு எந்தத் தொகையும் தள்ளிக் கொடுக்கப்பட மாட்டாது.

(2) பின்வரும் வரையறைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு, குத்தகைதாரர்களுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் தொகைகள் தள்ளிக் கொடுக்கப்படும் :—

(அ) நியாயமாக எதிர்ப்பார்த்திருக்க முடியாத ஏதோவொரு அசா தாரண அயல் வரவான காரணம்—எடுத்துக்காட்டாக, குத்தகைக்கு விடப்பட்

டிருக்கிற அங்காடி ஒன்றைக் கொள்ளை நோய் கண்டிருப்பது காரணமாகக் கட்டாயமாய் மூடிவிடுதல்—நிகழ்வதன் விளைவாகக் குத்தகைதாரர் அல்லது ஒப்பந்தக்காரர் குத்தகையின் அல்லது ஒப்பந்தத்தின் தமது கடமையை நிறைவேற்ற முடியாதபடித் தடுக்கப்படுவனவற்றில் மாத்திரம் தொகை தள்ளிக் கொடுக்கப்படும்.

(ஆ) தள்ளிக் கொடுக்கப்படும் தொகையானது, அத்தகைய அசாதாரணக் காரணத்தின் விளைவாகக் குத்தகைதாரர் அல்லது ஒப்பந்தக்காரர் குத்தகையின் அல்லது ஒப்பந்தத்தின் தமது கடமையை நிறைவேற்ற முடியாதபடித் தடுக்கப்பட்ட காலத்துக்கு அக் குத்தகை அல்லது ஒப்பந்தத்தின்படி செலுத்தப்படத்தக்க வீதாசாரப்படியான தொகைக்கு மேற்படக் கூடாது.

(இ) தள்ளிக் கொடுக்கப்படும் தொகை ஐம்பது ரூபாய்க்கு மேற்பட்டால், கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(3) குத்தகையில் அல்லது ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிற தண்டங்களை குத்தகையில் அல்லது ஒப்பந்தத்தில் கண்ட வரையறைகளின்படி கண்டிப்பாக வாங்க வேண்டும். குத்தகையின்படி அல்லது ஒப்பந்தத்தின்படி ஊராட்சிக்குச் சேர வேண்டிய தொகையைத் தாமதித்துச் செலுத்துவதற்கான தண்டங்கள் தள்ளிக் கொடுக்கப்பட மாட்டா. ஆனால், சேர வேண்டிய தொகையின் தவணைகள் ஏறக்குறைய ஒழுங்காகவே செலுத்தப்பட்டு வருகின்றன என்று ஊராட்சி அபிப்பிராயப்பட்டுக் குத்தகைகளின்படி அல்லது ஒப்பந்தத்தின்படி ஊராட்சிக்குச் சேர வேண்டிய தொகை முழுவதும் அக் குத்தகை அல்லது ஒப்பந்தம் சம்பந்தப்படுகிற கால அளவு முடிவதற்கு முன் செலுத்தப்பட்டு விட்டால், மேற்சொன்ன தண்டங்களைத் தள்ளிக் கொடுக்கலாம்.

ஆனால், தள்ளிக் கொடுக்கப்படும் தொகை, ஒவ்வொன்றிலும் 50 ரூபாய்க்கு மேற்பட்டால், கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(1961 ஏப்ரல் 26-ம் தேதிய 1248-ம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 சனவரி 11ஆம் தேதிய 83ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

70. ஊராட்சிக்குச் சேர வேண்டிய தொகைகளை வசூலிப்பது.—1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படியாவது வேறொரு சட்டத்தின்படியாவது, அதன்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது துணைச் சட்டங்களின்

படியாவது ஒருவரிடமிருந்து ஊராட்சிக்குச் சேர வேண்டிய விலைப் பணங்கள், இழப்பீடுகள், ஈடு தண்டங்கள், செலவினங்கள் (பள்ளிக் கட்டணங்கள் அல்லாத வேறு) கட்டணங்கள்; செலவுகள் (ஊராட்சியினால் பத்திரம் மூலமாக உடைமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்துக்கும் கட்டிடங்களுக்குமான வாடகைகள் அல்லாத வேறு) வாடகைகள், உதவித் தொகைகள் முதலியவை எல்லாம், அவற்றை வசூலிப்பதற்காக மேற்படி சட்டத்திலாவது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளிலாவது தனி ஏற்பாடு எதுவும் இராவிட்டால், சம்பந்தப் பட்டவர்களிடம் சேர்ப்பிக்க வேண்டிய பட்டியல்கள் மூலம் கேட்கப்பட்டு, 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி வரிகளை வசூலிப் பதற்காக மேற்படி விதிகளில் சொல்லப்பட்டிருக்கிற விதமாக வசூலிக்கப் படலாம்.

(1961 ஏப்ரல் 26-ம் தேதிய 1248-ம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

71. வசூலிக்க முடியாத வரிகள், கட்டணங்கள் முதலியவற்றைத் தள்ளுபடி செய்வதற்கான அதிகாரம்—வரையறைகளும் கட்டுப்பாடும்.—1. ஓர் ஒப்பந் தத்தின்படியோ மற்றபடியோ ஒரு ஊராட்சிக்குச் சேர வேண்டிய ஏதேனும் வரி, கட்டணம் அல்லது வேறு தொகை வசூலிக்க முடியாதென்று அதனைத் தள்ளிவிட, 1958-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 127 ஆவது பிரிவின்படி அதற்குள்ள அதிகாரம், பின்வரும் விதிகளில் குறிப் பிட்டிருக்கிற வரையறைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டதாகும்.

2. வரி வசூலிப்பவர், ஊர்த் தலைவராவது, நில வருவாய்த் துறைப் பணியாளர் தொகுதியைச் சேர்ந்த வேறொருவராவது, மேற்படி சட்டத்தில் கண்ட 126 ஆவது பிரிவின்படி வரிகளை அல்லது கட்டணங்களை வசூலிக்கும் வேலை ஒப்புக் கொண்டதின் பேரில் வசூலிக்க முடியாதெனத் தெரியவரும் தொகைகளைப் பற்றி, அதற்குண்டான காரணங்களுடன் தெரிவிக்க வேண்டும்; இவற்றைச் செயல் அதிகாரி சரிபார்க்க வேண்டும். அத்தகைய எல்லாத் தொகைகளையும் பற்றிய பட்டியல் ஒன்றைக் காலாண்டுக்கொரு முறை தயாரித்து, அவற்றைத் தள்ளுபடி செய்வதற்கான ஒப்பளிப்பு வேண்டி, ஊராட்சியின் அடுத்த கூட்டத்தில் அதற்கு முன் அப்பட்டியலை வைக்க வேண்டும்; செயல் அதிகாரி சொல்லும் காரணங்கள், பரிந்துரைகள் ஆகிய வற்றுடன் அவ்வாறு வைக்க வேண்டும் ஊராட்சிக்குள் அல்லது பேருருக்குள் கைப்பற்றத் தக்க உடைமை எதுவும் பாக்கிதாரருக்கு இல்லையென்றும், தொகையைத் தள்ளுபடி செய்யப் பரிந்துரைப்பதற்கு முன் வசூல் செய்யும் வழிகள் எல்லாம் முயன்று பார்த்தும் பயனில்லையென்றும், செயல் அதிகாரி உறுதி கூற வேண்டும்.

3. தள்ளுபடி செய்யப்பட்ட தொகையை எழுதி வைப்பதற்கான பதிவேடு ஒன்றை, அரசாங்கத்தார் குறிப்பிடக் கூடிய படிவத்தின் பிரகாரம் வைத்துவர வேண்டும்.

4. ஏதேனும் தொகையைத் தள்ளுபடி செய்வதற்கு ஊராட்சி ஒப்பளிப்பு வழங்கினால், வரி கட்டணம் அல்லது வேறு தொகையின் தன்மை (வரிக்குச் சம்பந்தப்பட்ட இனங்கள் பற்றிய வரி விதிப்பு எண் கூட), தள்ளுபடி, செய்யப்பட்ட தொகை, அது சம்பந்தப்படுகிற கால அளவு ஆகியவை பற்றிய விவரங்கள் நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் விவரமாகக் கொடுக்க வேண்டும்.

5. தள்ளுபடி செய்யப்பட்ட வரிகள், கட்டணங்கள் அல்லது வேறு தொகைகளுக்கான பட்டியல்களிலும் ஆணைகளிலும் (புற இதழ், அக இதழ் இரண்டிலும்), தள்ளுபடிக்கான ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிறகு கூடிய விரைவில், "தள்ளுபடி செய்யப்பட்டது" என்று முத்திரையிட வேண்டும்; அதே சமயத்தில் கேட்புப் பதிவேடுகளில் அவசியமான பதிவுகளைச் செய்ய வேண்டும்.

6. வசூலிக்க முடியாதென்று தள்ளுபடி செய்ய வேண்டிய வரி, கட்டணம் அல்லது வேறு தொகையின் ஏதேனும் தனிப்பட்ட இனம் 50 ரூபாய்க்கு மேற்பட்டால், அதற்காகக் கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பைப் பெற வேண்டும்.

(1961 ஏப்ரல் 26-ம் தேதிய 1248-ம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 சனவரி 11 ஆம் தேதிய 83-ம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(100) கேட்பு, வசூல், நிலுவை விவரப்பட்டியல்.—காலாண்டு கேட்பு—வசூல்—நிலுவைப் பட்டியல் ஒன்றை, பேரூராட்சிகள் பொறுத்தவரை உள்ளாட்சி நிதிக் கணக்குகளில் மாவட்ட ஆய்வாளருக்கும், ஊராட்சிகளைப் பொறுத்தவரை, ஊராட்சி விரிவாக்கு அலுவலருக்கும் அனுப்ப வேண்டும். ஊராட்சிக்குச் சம்பந்தப்பட்ட எல்லா ஆதாரங்களிலிருந்தும் அதன் கட்டுப்பாட்டுக்குட்பட்ட கட்டளை நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கும் வசூல்களை இந்த விவரப் பட்டியலில் காட்ட வேண்டும். ஊராட்சி மாதக் கணக்குடன் அதை அனுப்ப வேண்டும்; அது சம்பந்தப்படுகிற காலாண்டுக்கு அடுத்துவரும் மாதத்தின் 8 ஆம் தேதிக்குள் அது தணிக்கை அலுவலகத்தில் வந்து சேர வேண்டும்.

மேற்படி விதியில் குறிப்பிட்டுள்ள கேட்பு- வசூல்—நிலுவை விவரப் பட்டியலில் காட்டப்பட வேண்டிய நடப்புக் கேட்பு அடியிற்கண்டவாறு இருக்க வேண்டும் :—

(1)	(2)
(i) குத்தகைக்கு விடப்பட்ட வருவாய்களும் வீட்டு வரியும்.	ஆண்டு முழுவதுக்குமான கேட்பு, கேட்பில் செய்யப்படும் மாறுதல்களைப் பற்றி குறிப்புரைப் பத்திகளில் விளக்க வேண்டும்.
(ii) தனியார் துப்பரவுக் கட்டணங்கள்.	எந்தக் காலாண்டுக்காகக் கேட்பு வசூல் நிலுவை விவரப் பட்டியல் அனுப்பப்படுகிறதோ அந்தக் காலாண்டின் முடிவு வரையில் கேட்பு.
(iii) ஆணைக் கட்டணங்கள்.	எந்தக் காலாண்டுக்காகக் கேட்பு —வசூல்—நிலுவை விவரப் பட்டியல் அனுப்பப்படுகிறதோ அந்தக் காலாண்டின் முடிவு வரை பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் மதிப்பளவுக்கு.
(iv) ஏறியிறங்கும் தன்மையுள்ள வருவாய்.	நிச்சயிக்கப்பட்ட வாடகைகள் முதலியவைகளின், அல்லது முன்பு நடத்தப்பட்டு ஆனால் முழுவதுமோ சிறிதுமட்டிலோ இன்னும் பணம் கைவரப் பெறாத விற்பனைகளைப் பற்றியவற்றில் நிச்சயிக்கப்பட்ட வாடகை முதலியவைகளின் தொகை அல்லது விற்பனைத் தொகை கேட்பாயிருக்க வேண்டும். மற்றவற்றில், உள்ளபடியான வசூல்கள் கேட்பாயிருக்கும்.

மாதத்துக்காக காலாண்டுக்காக அலுவலகத்தில் கேட்பு-வசூல்-நிலுவை விவரப்பட்டியல்—

குறிப்பு.—விவரங்கள்" பத்தியிலே ஒவ்வொரு வகையைச் சேர்ந்த வருவாய் பற்றியுமான விவரங்களை, 'ஆங்கடிகள்' முதலியவை போன்ற அலுவலின் அந்தந்த தலைப்புகளின்கீழ் எழுதவேண்டும் (2) வீட்டு வரியைப் பொறுத்தவரை (7), (17) பத்திகளைப் பயன்படுத்த வேண்டியதில்லை.

		கேட்பு.		வசூல்கள். மாதத்தில்/காலாண்டில்			வசூல்கள். நாளதுவரை.	
தொடரெண்.	விவரங்கள்.	முந்திய ஆண்டின் நிலுவை.	நடப்பு ஆண்டின் மொத்தம்.	நிலுவை.	நடப்பு.	வசூல்களின் தேதி.	நிலுவை.	நடப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
		ரூ. கா.	ரூ. கா.	ரூ. கா.	ரூ. கா.		ரூ. கா.	ரூ. கா.

	தள்ளிக் கொடுத்தது. (நாளது வரை)		தள்ளுபடி செய்தது. (நாளது வரை)		(8) முதல் (13) வரையிலுள்ள பத்திகளின் மொத்தம்.	
வருவாய்த் தலைப்புகள்.	நிலுவை.	நடப்பு.	நிலுவை.	நடப்பு.	நிலுவை. (8), (10), (12) பத்திகள்.	நடப்பு. (9), (11), (13) பத்திகள்.
	(10)	(11)	(12)	(13)	(14)	(15)
	ரூ. கா.	ரூ. கா.	ரூ. கா.	ரூ. கா.	ரூ. கா.	ரூ. கா.

முன்னதாகச் செய்யப்பட்ட வசூல்கள்.	நிலுவை. (3) (14) பத்திகள்.	நடப்பு (14) (15) பத்திகள்.	தண்டப்பட்டு ஒதுக்கப்பட்டதால், ஆகு.	குறிப்புரை.
(16)	(17)	(18)	(19)	(20)
ரூ. கா.	ரூ. கா.	ரூ. கா.	ரூ. கா.	

இடம் :

தேதி : 19 .

பெறுபவர் :

உள்ளாட்சி நிதிக் கணக்குகளின் மாவட்ட ஆய்வாளர்

ஊராட்சி விரிவாக்கு அலுவலர்.

நான் சான்றிடுவது என்னவென்றால் வீட்டு வரி நிலுவைப் பாக்கி இனங்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாகப் பட்டியல்கள் ஊராட்சித் தலைவரிடம் அல்லது வரி வசூலிப்பவர்களிடம அல்லது ஊராட்சி எழுத்தரிடம் இருக்கின்றனவென்று நான் நேரில் ஆய்ந்து பார்த்தேன்; வசூல்களில் குறிப்பிட்ட சதவீதத்தை வசூல் பதிவேடுகளுடன் வைத்துச் சோதித்துப் பார்த்தேன்.

தேதி. **செயல் அதிகாரி.**

தணிக்கைச் சான்று

சான்றிடப்படுவது என்னவென்றால், இந்த விவரப் பட்டியலில் உள்ள பதிவுகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை நடைமுறை நூலில் கண்டுள்ள விதமாக முறைப்படி சரிபார்க்கப்பட்டிருக்கின்றன ; மறு பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிற வேறுபாடுகளைத் தவிர, அவை சரியானவையென்று தெரியவந்திருக்கிறது. அவைகளைப் பற்றி அவசியமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக் கிறது.

தணிக்கை எழுத்தர்.

72. III-ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (11) பகுதியின் செயல்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி.—(1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 111-ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (11) பகுதியின் செயல்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியானவர், பேரூராட்சிகளைப் பொறுத்த வரைக் கோட்ட ஆட்சியாளர் ஆவார்.

(1961 ஏப்ரல் 26-ஆம் தேதிய 1248-ம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை)

73. உரிமங்களையும் அனுமதிகளையும் வழங்குவதைத் தடுப்பதற்கான அல்லது முறைப்படுத்துவதற்கான விதிகள்.—

III ஆவது பிரிவின்படி உரிமம் வழங்கும்படி விண்ணப்பம்.—1. ஒரு பேரூரில் எல்லைகளுக்குள் இருக்கிற ஓர் இடத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 159(1) பிரிவில் குறிப்பிட்டிருக்கிற காலத்துக்குள், மேற்படி சட்டத்தில் கண்ட 111 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் படி அறிக்கையிடப்பட்ட காரியங்களில் எதற்காகவேனும் அவ்விடத்தைப் பயன்படுத்துவதற்காக உரிமம் வழங்கும்படி அல்லது உரிமத்தைப் புதுப்பிக்கும்படி ஊராட்சியின் செயல் அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

2. செயல் அதிகாரியால் எழுதப்பட்ட ஆணை மூலமாக அத்தகைய உரிமம் வழங்கலாம்; அல்லது வழங்க மறுக்கலாம். முந்தியவற்றில், பொதுவாக, மனித உயிருக்கு, உடல் நலத்துக்கு அல்லது உடைமைக்கு அபாயம் நேர்வதைத் தடுப்பதற்காகவும், குறிப்பாகக் கீழ்க்கண்டவை சம்பந்தமாகவும், தளம் தகுதியெனக் கருதுகிற வரையறைகளையும் நிபந்தனைகளையும் ஒழுங்கு முறைகளையும் அவர் விதிக்கலாம்.

( ) அந்த இடத்தின் துப்புரவு;

(ii) தக்க வடிகால் வசதி;

(iii) தகுந்த காற்றோட்டமும் வெளிச்சமும்;

(iv) ஒலி, அல்லது நாற்றம், அபாயகரமான தீயாவி, நீரியற் கழிவுகள் ஆகியவைகளினால் உண்டாகும் தொல்லையை நீக்குவது அல்லது குறைப்பது;

(v) வேலையாட்களின் பாதுகாப்பு;

(vi) தொழில் தொடர்பான இன்னல்களைத் தடுப்பது;

(vii) உணவு நிறுவனங்களில் உணவுக்கும் பானத்துக்கும் பாதுகாப்பு;

(viii) தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுப்பது.

பின்னுள்ளதில் மறுப்பதற்கான காரணங்களைச் சம்பந்தப்பட்ட ஒருவருக்கு அல்லது ஆள்களுக்குத் தெரிவிக்க வேண்டும்; பொதுவாக, மனித உயிர் உடல் நலம் அல்லது உடைமைக்குக் கேடு நேரும் என்னும் காரணங்களாலும் பின்வரும் சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு மறுக்கப்படலாம்; அவையாவன :—

(i) காற்றோட்டமும் வெளிச்சமும் இல்லாததனால் அல்லது மக்கள் நெருக்கம் அதிகமாயிருப்பதனால் அக்காரியத்துக்கு அந்த இடம் தகுதியற்றதாயிருப்பது;

(i) அது ஒரு குடியிருப்பு வீட்டின் பாகமாயிருப்பது;

(iii) அதில் போதிய வடிகால் வசதிகள் இல்லாதிருப்பது;

(iv) அக்காரியத்துக்காக அவ்விடத்தை உபயோகித்தால், ஒலி அதிர்ச்சி புகை—தூசி தீயாவி அல்லது நீரியற் கழிவுகள் காரணமாக அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்குத் தொல்லை நேருமென்பது; அல்லது,

(v) வேறொரு சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது துணைச் சட்டங்களின் படி அத்தொழிலை அங்கே நடத்தக் கூடாதென்பது.

3. அத்தகைய உரிமம் ஒவ்வொன்றும் அந்த ஆண்டின் முடிவில் காலாவதியாகும்; ஆனால், தனிப்பட்ட சில காரணங்களினால் அவ்வுரிமம் இன்னும் முன்னதாகவுள்ள ஒரு தேதியன்று காலாவதியாக வேண்டுமெனச் செயல் அதிகாரி கருதினால், அதில் குறிப்பிடப்படக் கூடிய இன்னும் இன்னதாக உள்ள தேதியன்று அது காலாவதியாகும்.

112 ஆவது பிரிவின்படி அனுமதி வழங்கும்படி. விண்ணப்பம்.—4. ஒருவர் (அ) தொழிற்சாலை, தொழில் பட்டறை அல்லது வேலைச்சாலை ஒன்றைக் கட்ட அல்லது நிறுவக் கருதி, அதில் நீராவி ஆற்றல் அல்லது வேறு எந்திர ஆற்றல் அல்லது மின் ஆற்றலைப் பயன்படுத்தக் கருதினால் அல்லது (ஆ)

மேற்சொன்னவாறு ஓர் ஆற்றலினுல் இயக்கப்படுவதையும் மேற்படி சட்டத்தின் படிச் செய்யப்பட்ட விதிகளினுல விலக்களிக்கப்பெற்ற இயந்திரங்களாக அல்லது உற்பத்தி நிலையத்தளவாடங்களாக இராதவையுமான இயந்திரங்களை அல்லது உற்பத்தி நிலையத் தளவாடங்களை எவ்விடத்திலேனும் ஏற்படுத்தக் கருதினுல், அத்தகைய ஒவ்வொருவரும், அவ்வாறு கட்ட, நிறுவ அல்லது ஏற்படுத்தத் தொடங்குவதற்கு முன, கருதியுள்ள வேலையை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கும்படி ஊராட்சிக்கு எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

விளக்கம்.—இவ்விதிகளின் காரியங்களுக்காக, 'கட்டுதல்', 'நிறுவுதல்' என்னும் சொற்களில், முறையே 'புதுப்பித்தல்', 'விரிவுபடுத்துதல்' என்பவையும் அடங்கும்.

54. ஆவது விதியின்படிக்கான விண்ணப்பத்துடன் அடியிற்கண்டவைகளையும் அனுப்ப வேண்டும். (1) தொழிற்சாலை, பட்டறை, வேலைச்சாலை அல்லது வளவின் அமைப்புப்படத்தின் ஐந்து படிகள்; இவற்றில் ஒன்று மாவட்ட உடல்நல அலுவலருக்கு அனுப்பப்படும்; இரண்டு நகரமைப்புத் துறை இயக்குநருக்கு அனுப்பப்படும்; இவைகளில் ஒன்று அவருடைய குறிப்புரையோடு திருப்பி அனுப்பப்படும்; மற்றென்று அவருடைய அலுவலகத்தில் நிறுத்தி வைத்துக் கொள்ளப்படும்; ஊராட்சி அலுவலகத்தில் பதிவு செய்யப்படுவதற்காக ஒன்று அனுப்பப்படும்; ஊராட்சியின் ஆணைகளுடன் விண்ணப்பதாரருக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்காக ஒன்று அனுப்பப்படும்;

(ii) ஆற்றல், இயந்திரங்கள், தளவாடங்கள் அல்லது இடங்களைப் பற்றி, இதன் பொருட்டுச் செய்யப்பட்ட துணைச் சட்டங்களை ஒட்டி ஊராட்சி கேட்கக் கூடிய விவரங்கள்;

(iii) 1948 ஆம் ஆண்டின் தொழிற்சாலைச் சட்டமும் 1950 ஆம் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளும் பொருந்தாத தொழிற்சாலைகளைப் ஆண்டின் தொழிற்சாலை விதிகளில் சொல்லியிருக்கிறபடித் தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் வழங்கிய ஒப்புதல் பொறிக்கப்பட்டுள்ள, தொழிற்சாலை, பட்டறை, வேலைச்சாலை அல்லது வளவின் அமைப்புப் படங்களின் ஒரு தொகுப்பு; ஆனுல், இவ்விதியின் பிரயோகத்தினின்றும் ஏதேனும் தொழிற்சாலை, பட்டறை அல்லது வேலைச்சாலைக்கு அரசாங்கத்தார் விளக்களிக்கலாம்.

6. (1) 1948-ம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டமும், 1950-ம் ஆண்டின் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளும் பொருந்தாத தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, தொழிற்சாலை, பட்டறை அல்லது வேலைச்சாலையைக்

கட்டுவதற்கான அல்லது நிறுவுவதற்கான அல்லது புதிய அல்லது அதிகப்படியான இயந்திரங்களை ஏற்படுத்துவதற்கான அல்லது இயந்திரங்களைப் பதிலமர்த்திடு செய்வதற்கான அமைப்புப் படங்கள் எல்லாவற்றிற்கும், ஊராட்சி அனுமதி வழங்குவதற்கு முன், சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் ஆய்வாளரின் ஒப்புதலைச் செயல் அதிகாரி முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்; தொழிற்சாலைகளின் ஆய்வாளர், தம் ஒப்புதலை அளிக்கையில், பின்வரும் கூறுகளைப் பற்றி ஆலோசிக்க வேண்டும் :—

(i) காற்றோட்டத்துக்கும், வெளிச்சத்துக்குமான ஏற்பாடுகள் போதுமானவையா என்பது;

(ii) அறைகள், கதவுகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றின் உயரமும் பருமனும் போதுமானவையா என்பது;

(iii) தீப்பிடித்தால் வெளியேறுவதற்கான வாயில்கள் தக்கவைகளா என்பது.

(2) 1948-ம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டமும், 1950-ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளும் பொருந்துகிற தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, செயல் அதிகாரி அனுமதிக்கான விண்ணப்பத்துடன் சேர்ந்த தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரால் ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்ட அமைப்புப் படத்தையும், அது ஒப்புக்கொள்ளப்பட்ட செய்தி அடங்கிய மேல் கடிதத்தையும் ஆதாரமாகக் கொண்டு, அவ்விண்ணப்பம் பற்றி நடவடிக்கை எடுக்கத் தொடங்க வேண்டும்.

(3) தொழிற்சாலைகளின் ஆய்வாளர், தம் அலுவலகத்தில் அவ்விண்ணப்பம் வந்து சேர்ந்த தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், (1) உள்விதியில் குறிப்பிட்டுள்ள ஒப்புதலை வழங்க வேண்டும் அல்லது அதை வழங்க மறுக்க வேண்டும்.

(4). (3) உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற முப்பது நாள் கால அளவுக்குள், தொழிற்சாலைகளின் ஆய்வாளர், (3) உள்விதியின் படிக்கான தமது தீர்மானத்தை தெரிவிக்காவிட்டால், (1) உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற ஒப்புதலை அவர் வழங்கியிருப்பதாக கருதப்படும்.

7. ஊராட்சி அவ்விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு கூடிய சீக்கிரத்திலும், அவ்வாறு பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள்ளும்—

(அ) கேட்கப்பட்ட அனுமதியை, முழுமையான அல்லது அது விதிப்பதற்குத் தகுதியெனக் கருதுகிற நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்க வேண்டும்; அல்லது

(ஆ) அக்கம்பக்கத்தில் மக்கள் தொகை மிக நெருக்கமாயிருப்பது காரண மாக அல்லது அதனால் தொல்லை கூடுமென்பதற்காக அவ்வாறு கட்டுவது, நிறுவு வது அல்லது ஏற்படுத்துவது ஆட்சேபகரமானதென்று தான் கருதினால், அனுமதி வழங்க மறுத்துவிட வேண்டும்.

8. 7 ஆவது விதியைச் சேர்ந்த (அ) பகுதியின்படி அனுமதி வழங்கு வதற்கு முன், ஊராட்சி—

(அ) (i) தொழிற்சாலை, தொழில் பட்டறை, வேலைச்சாலை அல்லது சம் பந்தப்பட்ட இடம், அந்தக் காரியத்துக்குத் தகுதியுள்ளதா, போதுமானதா என்பது பற்றியும்,

( ) கட்டிடங்களின் மனைப் பிரிவு, ஏற்பாடுகள், சிற்பக்கலை சார்ந்த தோற்றம் ஆகியவை பற்றியும்,

நகர அமைப்புத் துறை இயக்குநரின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ள வேண்டும்;

(ஆ) பொதுமக்கள் உடல்நலத்தை முன்னிட்டுப் பார்க்கும்போது, தொழிற்சாலைத் தொழிற் பட்டறை—வேலைச்சாலை அல்லது சம்பந்தப்பட்ட இடம் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள காரியத்துக்குத் தகுதியுள்ளதா என்பது பற்றி மாவட்ட உடல்நல அலுவலருடன் கலந்தாலோசித்து, அவருடைய கருத்தை முறைப்படி கவனிக்க வேண்டும்.

நகர அமைப்புத் துறை இயக்குநராவது மாவட்ட உடல்நல அலுவல ராவது, இது பற்றி விண்ணப்பம் வந்த தேதியிலிருந்து நாற்பது நாட்களுக் குள் தமது ஒப்புதலை அல்லது கருத்தைத் தெரிவிக்க வேண்டும்.

மேற்சொன்ன நாற்பது நாள் கால அளவுக்குள், நகர அமைப்புத் துறை இயக்குநராவது மாவட்ட சுகாதார உடல்நல அலுவலராவது தமது ஒப்புதலை அல்லது கருத்தைத் தெரிவிக்காவிட்டால், அவர் தமது ஒப்புதலைத் தெரிவித் திருப்பதாகக் கருதப்படுவார்.

9. ஏற்றவாறு தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரால் அல்லது தொழிற் சாலைகளின் ஆய்வாளரால் ஏற்கனவே ஆட்சேபிக்கப்பட்டிருக்கிற கட்டிடங் களில் இருக்கிற தொழிற்சாலைகளுக்கு, அல்லது தொழிற்சாலையின் அமைப்புப் படம் அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டிராவிட்டால் அல்லது 1948 ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டத்தின்படி வேண்டியிருக்கிற வெளிச்சம், காற்றோட்டம், தட்ப வெப்ப நிலைத் தரங்களைக் கருதும் போது தொழிற்சாலைகள் வைக்க நிச்சயமாக தகுதியற்றவைகளாகயிருக்கிற கட்டிடங்களில் உள்ள தொழிற்சாலை களுக்கு அனுமதி வழங்கக் கூடாது.

10. 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 112 ஆவது பிரிவின்படி அனுமதி வழங்கப்படுவதனால், 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 178 ஆவது பிரிவைச் சேர்ந்த (2) உட் பிரிவில் கண்ட XXXIII பகுதியின் படிச் செய்யப்பட்ட எவையேனும் விதி களையோ, ஊராட்சியின் எல்லைக்குள் இருக்கிற பகுதியில் அமலில் உள்ள கட்டிட ஒழுங்கு முறைகளையோ அனுசரித்து நடப்பது அவசியமில்லையெனக் கருதப்படமாட்டாது.

11. (1) நீராவி ஆற்றல் அல்லது வேறு இயந்திர ஆற்றல் அல்லது மின் ஆற்றல் பயன்படுத்தப்படுகிற ஒரு தொழிற்சாலையில் தொழில் பட்டறையில் அல்லது வேலைச் சாலையில், பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த எரி பொருள் காரணமாக அல்லது உண்டாக்கப்படும் ஒலி அல்லது அதிர்ச்சி காரணமாகத் தொல்லை விளைந்தால், இதற்கென்று குறிப்பிடப்படும் நியாயமான காலத்துக்குள் அத்தொல்லையைத் தணிப்பதற்காகத் தனக்குத் தகுதியெனத் தோன்றும் கட்டளைகளை ஊராட்சி பிறப்பிக்கலாம்.

(2) வேண்டுமென்றே அக்கட்டளைகள் நிறைவேற்றப்படாமலிருந்தால், அல்லது அவ்வாறு தணிப்பது இயலவில்லையெனத் தெரியவந்தால், ஊராட்சி—

(அ) பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த எரி பொருளை உபயோகிக்கக் கூடாதெனத் தடுக்கலாம்; அல்லது

(ஆ) இரவு 9-30 மணியிலிருந்து காலை 5-30 மணி வரை அத்தொழிற் சாலை, தொழில் பட்டறை அல்லது வேலைச்சாலை வேலை செய்வதைத் தடுப்பது மூலமாக ஒலி அல்லது அதிர்ச்சி ஏற்படுவதைக் கட்டுப்படுத்தலாம்.

12. (1) பேரூராட்சி ஒவ்வொன்றும், தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்து வதற்கு மாவட்ட உடல்நல அலுவலர், நகரமைப்புத் துறை இயக்குநர் ஆகியோரின் ஒப்புதலுடன், நகரத்திலே குறிப்பிட்ட பகுதிகளை ஒதுக்கி வைக்கவேண்டும்.

(2) (1) உள்விதியின்படி தொழில் பகுதிகள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந் தால், அந்தப் பகுதிகளுக்கு வெளியே, தொழிற்சாலை, தொழில் பட்டறை அல்லது வேலைச்சாலையைக் கட்டுவதற்காக அல்லது நிறுவனம் செய்வதற்கு அல்லது (20 குதிரை திறனுக்கு மேற்படாத மின் இயந்திரங்கள் அல்லாத வேறு) இயந்திரங்களை அல்லது உற்பத்தி நிலையத் தளவாடங்களை ஏற்படுத்து வதற்காக அனுமதி வழங்க ஊராட்சி மறுத்துவிட வேண்டும்.

குறிப்பு.—1948 ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டத்தில் கண்ட 6 (1) (அ) பிரிவின்படி செய்யப்பட்ட விதிகளை அனுசரித்து நிறுவப்பட்ட தொழிற் சாலைகளுக்கு இந்த விதி பொருந்தாது.

(1964 மார்ச் 9-ஆம் தேதிய 5+2-ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1962 சூலை 7 ஆம் தேதிய 40292, எல். தனி/62-1 ஆம் எண் குறிப்பாணை.)

(1962 டிசம்பர் 28 ஆம் தேதிய 2814 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(1962 பிப்ரவரி 1-ஆம் தேதிய 260-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(101) உரிமம் இல்லாமல் இடங்களைப் பயன்படுத்தக் கூடாத காரியங்கள்.— அடியிற்கண்ட காரியங்கள், மனித உயிர் அல்லது உடல்நலம் அல்லது உடைமைக்குக் கேடு அல்லது ஆபத்து உண்டாக்கக் கூடிய காரியங்களென்று குறிப்பிடப் பட்டிருக்கின்றன :—

அப்பளங்கள்—இடுதல், சேர்த்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல்.

ஆடைகள் (அழுக்கடந்தவை)—அழுக்கடைந்த ஆடைகளைச் சுத்தம் செய்தல், சுத்தம் செய்வதற்காக அழுக்கடைந்த ஆடைகளை வைத்திருத்தல், சொந்த உபயோகமல்லாத வேறு காரியங்களுக்காக அல்லது குடியிருப்பு வீடு களுக்கிடையில் இராத ஓரிடத்தில் சுத்தம் செய்த ஆடைகளை வைத்திருத்தல்.

ஆடைகள் (எல்லா வகைப்பட்ட பழைய ஆடைகள்)—பழைய ஆடைகள், போர்வை, முரட்டு மெத்தைகள், தலையணைகள் அல்லது மெத்தை விரிப்புகளைச் சேர்த்து வைப்பது, விற்பனை அல்லது வாடகைக்கு விடுவது.

இரத்தம்—சேர்த்து வைப்பது அல்லது வேறுவிதமாய் செயற்படுத்துவது.

இரும்புப் பெட்டிகள்—செய்தல்.

இறந்து போன விலங்குகள்—தோலுரிப்பதும் புதைப்பதும்.

உண்டிச்சாலை—தங்கும் விடுதிக்குச் சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

உணவுப் பொருள்கள்—மாவு, கொட்டகைகள், சர்க்கரை அல்லது வெல்லத் தினால் செய்யப்பட்டவை—விற்பது அல்லது மனிதர்கள் உட்கொள்வதற்காகத் தயாரிப்பது.

உணவு விடுதி—தங்கும் விடுதிக்குச் சம்பந்தப்பட்ட பதிவை பார்க்கவும்.

உரிவைகள்—பதனிடுதல், சேர்த்து வைத்தல் அல்லது மற்றபடி அவைகள் செயற்படுதல்.

புல்—விற்பனை செய்தல் அல்லது சொந்த ' உபயோகத்துக்கல்லாத மற்றபடி அல்லது குடியிருப்பு வீடுகளுக்கிடையிராத ஓரிடத்தில் சேர்த்து வைத்தல்.

உலோகங்கள்—அடிப்பது அல்லது உருக்குவது.

உலோகப் பாத்திரங்கள்—செய்தல்.

எண்ணெய்—கொதிக்க வைத்தல் அல்லது எண்ணெய் எடுத்தல்.

எண்ணெய்—பிண்ணாக்குகள்—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த வியாபாரத்துக்காக அல்லது சில்லறை வியாபாரத் துக்காக அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகத்துக்காகவல்லாத வேறு காரியங்களுக்காகச் சேர்த்து வைத்தல்.

எரிபொருள்—எத்தொழிலுக்கேனும் பயன்படுத்துதல்.

எரு (செயற்கை)—உண்டாக்குதல்.

எரு—சேர்த்து வைப்பது அல்லது மற்றபடி அதில் செயலாற்றுவது.

எலும்புகள்—சேர்த்து வைத்தல் அல்லது மற்றபடி அதில் செயலாற்று வது.

ஓடுகள்—சுட்டுக் கடினமாக்குதல்.

கட்டைக்கரி—விற்பது அல்லது சொந்த உபயோகத்துக்கல்லாத மற்றபடி அல்லது குடியிருப்பு வீடுகளுக்கிடையிலிராத ஓரிடத்தில் சேர்த்து வைத்தல்.

கண்ணாடி—தொழில்.

கந்தகம்—உருக்குதல்.

கந்தகம் கலந்து வலுவூட்டும் வேலைகள்—வைத்திருத்தல்.

கந்தைத் துணிகள்—சேர்த்து வைத்தல் அல்லது மற்றபடி செயற் படுதல்.

கம்பளி—சுத்தம் செய்தல் அல்லது உலர வைத்தல்.

கழிவுப் பொருள்—சேர்த்து வைத்தல் அல்லது மற்றபடி அதனைச் செயற்படுத்தல்.

கற்கண்டு—(சாறு வடிய விடுபவர்கள் அல்லது மரங்களை அனுபோகத்தில் வைத்திருப்பவர்கள் தங்கள் சொந்த மனைகளில் அல்லது இடங்களில்) இது காரியத்துக்காக (மின்சார அல்லது இயந்திர ஆற்றலால் இயக்கப்படாமல் நடத்தும் குடிசைத் தொழிலுக்கு அல்லாமல் மற்றபடி) உற்பத்தி செய்தல்.

கற்பலகை—செய்தல்.

கற்பூரம்—கொதிக்க வைத்தல்.

கனிப் பொருள் எண்ணெய்—சேர்த்து வைத்தல்; எந்த அளவுகளுக்கு இச்சட்டம் பொருந்துவது 1934 ஆம் ஆண்டின் கல்லெண்ணெய்ச் சட்டத்தில் கண்ட ஏற்பாடுகளினுல் அல்லது அதன்படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகள் அல்லது அறிவிக்கைகளினுல் வரையறுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுகளுக்கு மேற்பட்ட அளவுகளில் சேர்த்து வைப்பதற்கல்லாமல், மற்றபடி (மொத்தமாக அல்லது சில்லறையாக) விற்பது.

காப்பி விடுதி—தங்கும் விடுதிக்குச் சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

கால்நடைகள்—இருபது அல்லது அதற்கு மேற்பட்ட செம்மறியாடுகளை அல்லது வெள்ளாடுகளை அல்லது பத்து அல்லது அதற்கு மேற்பட்ட பன்றிகளை அல்லது கால்நடைகளை வைத்திருப்பது.

காற்று ஏறிய பானங்களை (சோடா வகைப் பானங்கள்)—உற்பத்தி செய்தல்.

கூரை வேய்வதற்கான பொருள்கள் (மூங்கில்கள் உட்பட) விற்பது; அல்லது சொந்த உபயோகத்துக்காகவன்றி மற்றபடி அல்லது குடியிருப்பு வீடுகளுக்கிடையிலிராத ஓரிடத்தில் சேர்த்து வைத்தல்.

உலர் புல் (Hay)—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த வியாபாரத்துக்காக அல்லது சில்லறை வியாபாரத்துக்காக அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகத்துக்காவன்றி மற்றக் காரியங்களுக்காக சேர்த்து வைப்பது.

கெம்புக்கல்—அரைத்தல்.

கொப்பரை—சேர்த்து வைப்பது அல்லது மற்றபடி அதனில் செயலாற்றுவது.

கொம்புகள்—சேர்த்து வைப்பது அல்லது மற்றபடி அதில் செயலாற்றுவது.

கொழுப்பு—(விலங்கு அல்லது தாவர)—சேர்த்து வைப்பது அல்லது மற்றபடி அதில் செயலாற்றுவது.

கோணிப் பைகள்—சேர்த்து வைத்தல் அல்லது மற்றபடி அதில் செயலாற்றுவது.

சட்டி பானைகள்—சுட்டுக் கடினமாக்குதல்.

சர்க்கரை—தயாரித்தல் அல்லது சுத்தி செய்தல்.

சரளை—வெட்டி எடுத்தல் அல்லது சரளை போடுதல்.

சலவைத் தூள் (வண்ணான் காரம்)—திராவக குளோரின் சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

சவ்வரிசீ—தயாரித்தல் அல்லது காய்ச்சி வடித்தல்.

சோப்பு—செய்தல்.

சாப்பாட்டு விடுதி—தங்கும் விடுதிக்குச் சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

சாயம்—போடுதல்.

சாராவி வகைகள்—வடித்திறக்குவது மூலமாக (குடிப்பதற்குத் தகுதியற்றதாக்கப்பட்டோ படாமலோ உள்ள) வெறியம் அடங்கியுள்ள சாராயத்தை அல்லது மற்ற சாராவி வகைகளைத் தயாரித்தல்.

சிற்றுண்டிச்சாலை—தங்கும் விடுதிக்குச் சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

சுண்ணநீறு—சுட்டுக் கடினமாக்குவது அல்லது சுண்ணாம்பு தயாரித்தல்.

சுருட்டு வகைகள் (சிகரெட்டுகள்)—தயாரிப்பது, சேர்த்து வைப்பது அல்லது விற்பது.

செங்கல்—சுட்டுக் கடினமாக்குவது.

தங்கும் விடுதி—(1939 ஆம் ஆண்டின் X ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1939 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொது உடல்நலச் சட்டத்தின்படிப் பதிவு செய்யப்படாதது. அரசாங்கத்தாரால் அல்லது உள்ளாட்சி அதிகாரிக் குழுவால் பேணி வரப்படாத சிற்றுண்டிச்சாலை, உணவு விடுதி, சத்திரம், தரும

சாலை அல்லது தங்கு மாளிகை; உரிமம் பெற்றிராத குடியேற்ற நிலையம், அவ்வப் போது வருபவர்கள் வரவேற்கப்பட்டுப் பணம் பெற்றுக் கொண்டு சாப்பாடு போடுதல், போடாமல் தூங்கும் வசதி செய்து கொடுக்கப்படுகிற இடத்தை வைத்து வருவது. ஆனால் அதில் அடியிற்கண்டவை அடங்கமாட்டா—

(அ) அரசினரின் அல்லது ஒப்புக் கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டுக்குட் பட்ட மாணவர் இல்லம், அல்லது

(ஆ) சந்தை அல்லது திருவிழாவுக்கு வருபவர்களுக்கு வசதியிடம் கொடுப்பதற்காகத் தமிழ்நாடு பொது உடல்நலச் சட்டத்தில் கண்ட 125 ஆவது பிரிவின்படி உரிமம் கொடுக்கப் பெற்றுள்ள விடுதி, அல்லது

(இ) இருப்புப்பாதை ஆட்சித் துறையினரால் ஏற்படுத்தப்பட்டு, சாதாரணமாகப் பயணிகளால் அல்லது இருப்புப்பாதைப் பணியாளர்களால் அல்லது இவ்விரு திறத்தாராலும் பயன்படுத்தப்படும் இளைப்பாறும் அறை களும் தங்கு மாளிகைகளும்,

தவிடு—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த வியாபாரத்துக்காக அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகமல்லாத வேறு காரியங்களுக்காகச்) சேர்த்து வைப்பது.

துணி—அச்சிடுதல்.

துப்பாக்கி மருந்து—தயாரித்தல்.

தோல் வகைகள்—பதனிடுதல், சேர்த்து வைத்தல் அல்லது மற்றபடி அதில் செயலாற்றுவது.

நார்—விற்பது, அல்லது சொந்த உபயோகத்துக்காகவன்றி மற்றப்படி அல்லது குடியிருப்பு வீடுகளுக்கிடையேயிராத ஓரிடத்தில் சேர்த்து வைப்பது.

கொழுப்பு—உருக்குவது.

நார்—விற்பது, அல்லது சொந்த உபயோகத்துக்காகவன்றி மற்றபடி அல்லது குடியிருப்பு வீடுகளுக்கிடையேயிராத ஓரிடத்தில் சேர்த்து வைப்பது.

நிறம் கொடுத்தலும் சாயம் போடுதலும்.

நெல்—சொந்த உபயோகத்துக்காகவன்றி மற்றக் காரியங்களுக்காக அல்லது குடியிருப்பு வீடுகளுக்கிடையே இராத ஓரிடத்தில் சொதிக்க வைப்பது.

படச் சுருள்கள்—சேர்ப்பது.

பதனிட்ட தோல்—சேர்த்து வைப்பது அல்லது மற்றப்படி அதில் செயலாற்றுவது.

இரும்பு பெட்டிகளை (இரும்பு)—செய்தல்.

பயறு வகைகள்—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த வியாபாரத்துக்காக அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகத்துக்காவன்றி மற்றக் காரியத்துக்காகச்) சேர்த்து வைப்பது.

பருத்தி—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த வியாபாரத்துக்காக அல்லது சில்லறை வியாபாரத்துக்காக அல்லது நாளாய் மாற்றுவதற்காகச் சேர்த்து வைப்பது.

வாயு அல்லது மின்சாரத்தைக் கொண்டு பற்றவைத்தல்.

பனிக்கட்டி (ஐஸ்)—செய்வது, சேர்த்து வைப்பது விற்பது.

பனிக் கட்டிப் பொருள்கள்—பனிக்கட்டியைக் கொண்டு செய்யப் பட்டவை அல்லது அவைகளின் தயாரிப்பில் பனிக் கட்டி முக்கிய ஆக்கக் கூறுக இருக்கப் பெற்றவை—சேர்த்து வைப்பது அல்லது விற்பனை.

திராவக குளோரின் சலவைத் தூளும் (வண்ணான் காரம்) சேர்த்து வைப்பது அல்லது மற்றப்படி அதில் செயலாற்றுவது.

பீடிகள்—

(பீடி இலைகள்)—தயாரிப்பது, சேர்த்து வைப்பது அல்லது விற்பது.

புகையிலை—சேர்த்து வைப்பது, பாடஞ் செய்தல், உலர்த்துவது அல்லது மற்றப்படி அதில் செயலாற்றுவது.

வைக்கோல்—விற்பது அல்லது சொந்த உபயோகத்துக்காகவன்றி மற்றப் படி அல்லது குடியிருப்பு வீடுகளுக்கிடையேயிராத ஓரிடத்தில் சேர்த்து வைப்பது.

புளி—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த வியாபாரத்துக்காக அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகத்துக்காகவன்றி மற்றக் காரியங்களுக்காகச் சேர்த்து வைப்பது).

பொதுத் தங்கல் மாளிகை—தங்கும் விடுதிக்குச் சம்பந்தப்பட்ட பதிவை பார்க்கவும்.

மயிர்—கழுவுதல் அல்லது உலர்த்தல.

மழிப்பகம் அல்லது முடித்திருத்தகம்—வைத்திருத்தல்.

மாவு—மனிதர் உட்கொள்வதற்காக மாவையும் மாவுப் பண்டத்தையும் தயாரிப்பது.

மாவு மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த வியாபாரத்துக்காக அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகத்துக்காகவன்றி மற்றக் காரியங்களுக்காக) சேர்த்து வைப்பது.

மிட்டாய் வகைகள்—செய்தல்.

மிளகாய்—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த வியாபாரத்துக்காக அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகத்துக்காகவன்றி மற்றக் காரியங்களுக்காகச்) சேர்த்து வைப்பது.

மின் பிரிப்பூச்சுமானம் அல்லது பொன் மெருகிடுதல்.

மின்—சேர்த்து வைப்பது அல்லது மற்றப்படி அதில் செயலாற்றுவது.

மீன் எண்ணெய்—தயாரிப்பது, விற்பது, சேர்த்து வைப்பது.

முந்திரிக் கொட்டைகள்—வறுப்பது, அவற்றிலிருந்து முந்திரிப் பருப்புகளை எடுப்பது.

முரட்டு மெத்தைகள்—(பழைய) ஆடைகளுக்குச் சம்பந்தப்பட்ட பதிவைப் பார்க்கவும்.

மூக்குத்தூள்—தயாரிப்பது.

மெழுகு வர்த்திகள்—செய்வது.

இயந்திரங்கள்—ஏதேனும் தொழிலின் பொருட்டுப் பயன்படுத்தப்படும் (அவ்வப்போது மாநில அரசினால் அறிவிக்கை மூலமாக விலக்களிக்கப் பெற்றிருக்கக்கூடிய இயந்திரங்கள் அல்லாத மற்றவை).

வாணவெடிகள்—செய்தல்.

புளிப்பு ஏறிய குடிவகைகள் (பீர்)—வடித்திறக்குதல்.

உழவுப் பொருள்—எலிகளைக் கவரக் கூடியவை (மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த வியாபாரத்துக்காக அல்லது சில்லறை-

வியாபாரத்துக்காக அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகத்துக்காகவன்றி மற்ற காரியங்களுக்காகச் சேர்த்து வைப்பது) மற்றபடி குடியிருப்பு வீடுகளுக்கிடையேயிராத ஓரிடத்தில் சேர்த்து வைப்பது.

விறகு—விற்பது; அல்லது சொந்த உபயோகத்திக்காக வன்றி

வெட்டு மரம்—விற்பது; சொந்த உபயோகத்துக்காகவன்றி மற்றப்படி அல்லது குடியிருப்பு விடுகளுக்கிடையேயிராத ஓரிடத்தில் சேர்த்து வைப்பது.

வெடிக்கத் தக்க அல்லது எளிதில் தீப்பற்றிக் கொள்ளும் பொருள்கள்—சேர்த்து வைப்பது; அல்லது எந்த அளவுகளுக்குத் சட்டத்தில் பிரயோகம் 1934-ஆம் ஆண்டின் கல்லெண்ணெய்ச் சட்டத்தின் ஏற்பாடுகளினுல் அல்லது அதன்படிப் பிறப்பிக்கப்பட்ட விதிகளினுல் அல்லது அறிவிக்கைகளினுல் வரையறுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுகளுக்கு மேற்பட்டுக் கல்லெண்ணெய்யும் அதன் பொருள்களையும் சேர்த்து வைப்பதற்காகவன்றி விற்பது.

வெல்லப்பாகு—குளிர்ப்பானங்களாக அல்லது தண்ணீருடன் கலந்து விற்பது.

வெல்லப் பாகு—சாறு வடியவிடுபவர்கள் அல்லது மரங்களை அனுபோகத்தில் வைத்திருப்பவர்கள் தங்கள் சொந்த மனைகளில் வைப்பது அல்லது இக்காரியத்துக்காக (மின்சார அல்லது இயந்திர) ஆற்றலால் இயக்கப் படுகிற இயந்திரங்கள் மூலம் அல்லாமல் நடத்தும் குடிசைத் தொழிலாகவன்றி மற்றபடி உற்பத்தி செய்தல்.

வெல்லம்—(சாறு வடியவிடுபவர்கள் அல்லது மரங்களை அனுபோகத்தில் வைத்திருப்பவர்கள் தங்கள் சொந்த மனைகளில் அல்லது) இக் காரியத்துக்காக மின்சார அல்லது இயந்திர ஆற்றலால் இயக்கப்படுகிற இயந்திரங்கள் மூலம் அல்லது குடிசைத் தொழிலாகவன்றி மற்றபடி உற்பத்தி செய்தல்.

வெல்லம்—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த வியாபாரத்துக்காக அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகத்துக்காகவன்றி மற்றக் காரியங்களுக்காகச்) சேர்த்து வைப்பது.

வேர்க்கடலை—மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பது அல்லது மொத்த வியாபாரத்துக்காக அல்லது சில்லறை வியாபாரத்துக்காக (அல்லது சொந்த அல்லது வீட்டு உபயோகத்துக்காகவன்றி மற்றக் காரியங்களுக்காகச்) சேர்த்து வைப்பது.

நாற்பொருள்—விற்பது; அல்லது சொந்த உபயோகத்துக்காகவன்றி மற்றபடி அல்லது குடியிருப்பு வீடுகளுக்கிடையேயிராத ஓரிடத்தில் சேர்த்து வைப்பது.

எதைத் தயாரித்தால் அருவருப்பான அல்லது உடல் நலத்துக்கு ஒவ்வாத நாற்றம் எழுமோ அதைத் தயாரித்தல்.

(1961 சனவரி 12-ஆம் தேதிய 113-ஆம் எண் ஊரக முன்னேற்றம் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(102) ஆபத்தானவையும் அருவருப்பானவையுமான தொழில்களுக்கு உரிமம் கொடுப்பது.—(1) மனித உயிருக்கு அல்லது உடல்நலத்துக்கு அல்லது உடைமைக்கு இன்ன காரியங்கள் கேடு அல்லது ஆபத்து விளைவிக்கக் கூடுமென தாங்கள் கருதுவதாகக் குறிப்பிட்டு விதிகள் செய்ய (1950 ஆம் ஆண்டின் X ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1950-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின் 91-ஆவது பிரிவில் அரசாங்கத்தாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1958-ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டத்தில் கண்ட 111-ஆவது பிரிவின்படி அத்தகைய விதி எதுவும் அவசியமில்லை. அரசாங்கத்தாரால் பிறப்பிக்கப்படும் ஒரு அறிவிக்கை, அபாயமும் கேடும் விளைவிக்கக் கூடிய காரியங்களைக் குறிப்பிட்டுவிடும்.

(2) ஆபத்தும் கேடும் விளைவிக்கும் காரியங்களுக்காக உரிமம் இல்லாமல் ஊரின் எல்லைகளுக்குட்பட்ட எந்த இடத்தையும் உபயோகிக்கக் கூடாதென்று, நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியின் (உள்ளாட்சித் துறை மண்டல ஆய்வாளரின்) முன் ஒப்புதலுடன் அறிக்கையிட, மேற்படி 91 ஆவது பிரிவு ஊராட்சிக்கு அதிகாரம் கொடுக்கிறது. ஆபத்தானவையும் கேடு விளைவிப்பனவுமான தொழில்கள் மீது கட்டுப்பாடு செலுத்தி, அவைகளுக்கு கட்டணங்கள் விதிப் I ஆம் வகுப்பு பேரூராட்சிக்கும், 11-ஆம் வகுப்பு ஊராட்சிக்கும் வேற்றுமை எதுவுமில்லை. 1958-ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி நிலைமை அடியிற்கண்டவாறு உள்ளது:—

ஊராட்சிக் கிராமத்தைப் பொறுத்தவரை, தன் ஆட்சி வரம்புக்குட்பட்ட ஒரு ஊராட்சிக் கிராமத்தின் எல்லைகளுக்குள் அல்லது அறிவிக்கையில் குறிப்பிடக்கூடிய ஊராட்சிக் கிராமம் அல்லது கிராமங்களின் எல்லைகளுக்குள் எந்த இடத்தையும் ஆபத்தானவை அல்லது கேடு விளைவிக்கக் கூடியவை என்று அரசாங்கத்தார் குறிப்பிடும் காரியங்கள் எதற்காகவேனும் உரிமம்

இல்லாமல் உபயோகிக்கக் கூடாதென அறிக்கையிட அதிகாரம் வாய்ந்த அதிகாரிக் குழு ஊராட்சி ஒன்றிய மன்றமாகும். உரிமம் வழங்க அல்லது வழங்க மறுக்க ஆற்றலுடைய அதிகாரி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஆவார்.

பேரூராட்சிகளைப் பற்றிறியவரை, மேற்குறிப்பிட்ட அறிவிக்கையைப் பிறப்பிக்கும் ஆற்றலுடைய அதிகாரி சம்பந்தப்பட்ட ஊராட்சியே யாகும். உரிமம் வழங்க அல்லது மறுக்க ஆற்றலுடைய அதிகாரி அதன் செயல் அலுவலர் ஆவார்.

(3) உரிமக் கட்டணங்கள் ஊராட்சி ஒன்றிய மன்றங்களால் விதிக்கப் பட்ட போதிலும், அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம், ஊராட்சி கிராமங் கள் சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு வரவு வைக்கப்படும்; பேரூராட்சிகளால் விதிக்கப்படும் உரிமக் கட்டணங்கள் இப்போதிருப்பது போலவே சம்பந்தப்பட்ட பேரூராட்சி நிதிக்கு வரவு வைக்கப்படும்.

(4) (1950-ஆம் ஆண்டின் X ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1950-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 120-ஆவது பிரிவின்படி 1959 மே 6-ஆம் தேதியிட்ட 940-ஆம் எண் உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாங்க ஆணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி அச்சட்டத்தின் 91-ஆவது 92-ஆவது பிரிவுகள் மூலமாகச் சில ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டுள்ள அலுவல்கள், சில நிபந்தனைகளுக்குட்பட்டு, சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் மாவட்டக் கழகங்களினால் செய்யப்படத் தக்கவையாகும். (1958-ம் ஆண்டின் XXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தில் கண்ட 11 (1) பிரிவின்படிப் ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒன்றை அமைப்பதற்கான அறிவிக்கையில் குறிப்பிடப்படும் தேதியிலிருந்து, (1920-ஆம் ஆண்டின் XIV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1920-ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்டக் கழகங்கள் சட்டமும், (1950-ஆம் ஆண்டின் X ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டமும் சம்பந்தப்பட்ட ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தில் ரத்துச் செய்யப்பட்டவையாகிவிடும்; அதற்குப் பிறகு அந்த ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் எந்த மாவட்டக் கழக ஆட்சி வரம்புக்குள்ளும் சேர்க்கப்பட மாட்டாது. ஆகையால், 2-10-1960 முதல் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக் கப்பெற்றுள்ள ஊராட்சி வளர்ச்சி வட்டாரங்கள் சம்பந்தமாக, மேற்கண்ட அரசாங்க ஆணையை அனுசரித்து, 1950-ம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிக்

சட்டத்தில் கண்ட 91-ஆவது, 92-ஆவது பிரிவிகளின்படிச் சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகங்களால் செய்யப்படத் தக்க அலுவல்கள் அவைகளினின்றும் நீக்கப்படும்.

(5) (1920-ஆம் ஆண்டின் V ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1920-ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் கண்ட 249 (1) பிரிவின்படி, நகராட்சி மன்றங்கள், அந்த நகராட்சி எல்லைகளிலிருந்து மூன்று மைல் தூரத்துக்குள்ளிலிருக்கிற ஊரகப் பரப்புகளில், அத்தொழில்கள் பற்றிக் கட்டுப்பாடு விதிக்கலாம் அந்தப் பிரிவு, 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 192 (ஆ) பிரிவினல் திருத்தப்பட்டதன் விளைவாக, அக்கிராமப் பகுதிகளுக்கு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் அமைக்கப் படுகிற தேதியிலிருந்து அப்பகுதிகளில், ஆபத்தானவையும் அருவருப்பானவை யுமான தொழில்கள் மீது கட்டுப்பாடு செலுத்தவும் கட்டணங்கள் விதிக்கவும் நகராட்சி மன்றங்களுக்கு அதிகாரம் இருக்காது.

(6) ஊராட்சி ஒன்றிய மன்றம் ஒன்று அமைக்கப்படுகிற தேதியிலிருந்து, சம்பந்தப்பட்ட ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்தின் எல்லைகளுக்குள் இருக்கிற ஒரு ஊராட்சி அல்லது ஊரகப் பரப்பில் மாவட்டக் கழகமும் நகராட்சி மன்றமும் செலுத்தக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தும் ஆற்றல் அவைகளுக்கு இருக்காது; அந்த அதிகாரங்கள், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச சட்டத்தில் கண்ட 111 ஆவது பிரிவின் ஏற்பாட்டுகளின்படி ஊராட்சிகளைப் பொறுத்தவரை ஊராட்சி ஒன்றியம் மன்றத்தாலும் ஆணையாளராலும், பேரூராட்சியைப் பொறுத்த வரை பேரூராட்சிகளாலும் செயல் அலுவல ராலும் செலுத்தப்படத்தக்கவையாகும்.

(1961 சனவரி 4-ஆம் தேதிய 31-ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

74. ஊராட்சிப் பரப்புகளில், நெடுஞ்சாலை ஊரகப் பொதுப் பணித் துறை யினரிடம் உரித்தாக்கப்பட்டுள்ள சாலை ஓரங்களில் போடும் பந்தல்களுக்கும் தற்காலிகக் கட்டுக் கோப்புகளுக்கும் உரிமம் வழங்குதல்.—(1) பேரூரின் எல்லை களுக்குள் நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறையினரிடமும் பொதுப் பணித் துறையினரிடமும் உரித்தாக்கப்பட்டுள்ள சாலை ஓரங்களில், சந்தைகள் திருவிழாக்கள் சம்பந்தமாகி, பேரூராட்சி விதிக்கக் கூடிய பொது நிபந்தனை களுக்கும், அவற்றோடு கூட நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறை யையும் பொதுப் பணித் துறையையும் சேர்ந்த அலுவலர்கள் அவ்வப்போது

பிறப்பிக்கக்கூடிய பொதுக் கட்டளைகளுக்கும் உட்பட்டு, பந்தல்களையும் மற்ற தற்காலிகக் கட்டுக் கோப்புகளையும் எழுப்ப உரிமம் வழங்கப் பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு அதிகாரமுண்டு.

2. அத்தகைய மனைகளை அனுபோகத்தில் வைத்துக்கொள்வதற்கு ஒரு சந்தை அல்லது திருவிழா உள்ளபடி நடக்கும் காலம் நீங்கலாக, அது தொடங்கு வதற்குமுன் மூன்று நாட்களுக்கும் அது முடிந்த பிறகு மூன்று நாட்களுக்கும் எச் சந்தர்ப்பத்திலும் மேற்படக் கூடாது.

3. உரிமக் கட்டணத்தை முன்னதாகப் பேரூராட்சிக்குச் செலுத்திவிட வேண்டும்; செலுத்தாவிட்டால், கேட்கப்படும் உரிமம் மறுக்கப்பட்டுவிடும். உரிமத்துக்காக முன்னதாய்ச் செலுத்தப்படும் கட்டணத்தை ஏற்றுக் கொள்வத னாலேயே, அவ்வாறு முன்னதாய்ச் செலுத்துபவர் உரிமம் பெற உரிமை உள்ள வராக மாட்டார்; ஆனால், உரிமம் மறுக்கப்பட்டால் கட்டணத்தைத் திரும்பப் பெற மட்டும் உரிமை உள்ளவராவார்.

4. அவ்வாறு அனுபோகத்தில் வைத்துக் கொள்வதற்காகக் கட்டணங்கள் விதித்து வாங்குவதனால் கிடைக்கும் வருமானத்தை, சந்தைகள் அல்லது திருவிழாக்கள் சம்பந்தமாய்த் தனிப்பட்ட துப்புரவு ஏற்பாடுகள் செய்வதற் காகவும் விளக்கு போடுவதற்காகவுமே முக்கியமாகப் பயன்படுத்த வேண்டும்; மிச்சம் ஏதாகிலும் இருந்தால், அதை, சந்தைகள் அல்லது திருவிழாக்கள் நடத்தப்படுகிற ஊரின் பொது உடல்நல நிலைமையைச் சீர்படுத்துவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

உரிமக் கட்டணங்களை விதித்து வாங்குவதிலிருந்து கிடைக்கும் வருமானத் தையும், அதிலிருந்து செய்யப்படும் செலவையும் தனிக் கணக்குகளின் கீழ்க் காட்ட வேண்டும்.

5. மனையில் மரங்கள் இருந்தால் அவைகளுக்காவது அவற்றிலிருந்து கிடைக்கும் மேல் மாசூலுக்காவது பேரூராட்சி உரிமை கொண்டாடக் கூடாது. மனை அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்படும் காலத்தில், மரங்களுக்கு அல்லது விளைபொருளுக்கு உரிமம் பெற்றவரால் உண்டாகும் இழப்பு அல்லது சேதத்துக்காக அது முழுவதும் பொறுப்பாளியாகும்; அந்த இழப்பு அல்லது சேதம் சம்பந்தமாக, நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறையினரும் பொதுப் பணித் துறையினரும் நிச்சயிக்கக்கூடிய ஈட்டுத் தொகையைச் செலுத் துவதற்கு அது உட்பட்டதாகும்.

6. மனையின் மீது கல் கட்டுக் கோப்புக்களையோ வேறு நிலையான கட்டுக் கோப்புகளையோ எழுப்புதல் கூடாது.

7. சந்தைகள் அல்லது திருவிழாக்கள் சம்பந்தமாக மனையில் எழுப்பப்பட்ட எல்லாத் தற்காலிகக் கட்டுக் கோப்புகளையும், சந்தை அல்லது திருவிழாவின் முடிவில் அகற்றிவிடுதலும் அரசினர் மனையை அதன் முந்திய நிலையில் மீளக் கொண்டுவருதலும் பேரூராட்சியின் பொறுப்பு ஆகும்.

8. உரிமத்துக்காக விண்ணப்பம் செய்துகொள்ளும் ஒருவர், உரிமக் கட்டணத்தைச் செலுத்துவதோடுகூட, அக் கட்டணத்தில் கால்பாகத்துக்குச் சமமான தொகையை வைப்பீடு செய்ய வேண்டும்; அவர் மனையைக் காலி செய்யும் காலத்தில் இது அவருக்குத் திருப்பிக் கொடுத்துவிடப்படும்; ஆனால் அவர் அம் மனையை அதன் முந்திய நிலைக்கு மீளக் கொண்டுவர வேண்டும்; அப்படிக் கொண்டுவராவிட்டால், மீளக் கொண்டுவருவதற்குப் பிடிக்கும் செலவு அந்த வைப்பீட்டிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு, மிச்சம் ஏதாகிலும் இருப்பின் அது அவருக்குத் திருப்பிக் கொடுத்துவிடப்படும்.

9. பேரூராட்சிக்காவது ஒரு மனையை அல்லது அதன் பாகத்தை அனுபோகத்தில் வைத்துக்கொள்ள பேரூராட்சியிடமிருந்து அனுமதி பெற்றுள்ள ஒருவருக்காவது எந்தச் சூழ்நிலையிலும் அரசாங்கத்தாரிடமிருந்து ஈடு கேட்க உரிமையில்லை.

10. அனுமதி பெறாமல் அனுபோகத்தில் வைத்துக்கொள்வதைப்பற்றி பேரூராட்சியின் செயல் அலுவலர், வருவாய் ஆய்வாளரின் வரிசைக்குக் குறையாத வரிசையிலுள்ள வருவாய்த் துறை அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும். (1905 ஆம் ஆண்டின் III ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1905 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஆக்கிரமிப்புச் சட்டத்தின்படி அவசியமெனக் கருதப்படுகிற நடவடிக்கை அந்த அலுவலர் எடுத்துக் கொள்வது இயலுமாறு அவ்வாறு தெரிவிக்க வேண்டும்.

(1962 பெப்ரவரி 1-ஆம் தேதிய 260-ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறைப் பலவகை அரசு ஆணை)

(103) **பந்தல்களுக்கும் தற்காலிகக் கட்டுக் கோப்புகளுக்கும் உரிமம் வழங்கும் அதிகாரத்தை ஊராட்சிகளுக்கு மாற்றுதல்.**—சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளர் 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 71 (2), 74 ஆவது பிரிவுகளின்படி, நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறையினரிடமும் பொதுப் பணித் துறையினரிடமும் உரித்தாக்கப்பட்டுள்ளவையும், ஒரு ஊராட்சியின் எல்லைகளுக்குள் இருப்பவையுமான சாலை ஓரங்களில், சந்தை, திருவிழாக்கள் சம்பந்தமாகப் பந்தல்களுக்கும் மற்ற தற்காலிகக் கட்டுக் கோப்புகளுக்கும் உரிமம் வழங்கி, அவற்றிற்காக உரிமக் கட்டணம்

வசூலிக்கும் அதிகாரத்தை அவ்வூராட்சியின் ஒப்புதலுடன் அதற்கு மாற்றலாம் என்பதைப் பற்றி அரசாங்கத்தார் கருதுகிறார்கள். அவ்வாறு மாற்றுவதன் பேரில், ஊராட்சி நகரங்களில் பேரூராட்சியும் ஊராட்சி கிராமங்களில் ஊராட்சி ஒன்றிய மன்றமும், மேற்குறித்த சாலை ஓரங்களில் பந்தல்களுக்கும் மற்ற தற்காலிகக் கட்டுக் கோப்புகளுக்கும் மேற்படி விதிகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, உரிமம் வழங்க ஆற்றல் உடையவைகளாயிருக்கும்.

2. மேற்படி சாலை ஓரங்களை அனுமதியின்றி அனுபோகத்தில் வைத்துக் கொண்டால், வருவாய்த் துறையினர் அவைகளை ஆக்கிரமிப்புகள் எனக் கருதி, 1950 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஆக்கிரமிப்புச் சட்டத்தின்படி அவைகளைப் பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். ஏற்றவாறு பேரூராட்சியின் செயல் அதிகாரியாவது ஊராட்சி ஒன்றிய ஆணையாளராவது, அனுமதியின்றி அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட இடங்களைப் பற்றி, வருவாய் ஆய் வாளரின் வரிசைக்குக் குறையாத வரிசையிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவருக்குத் தெரிவிக்க வேண்டும். வருவாய்த் துறை அலுவலர்கள், 1905 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஆக்கிரமிப்புச் சட்டத்தின்படி பின்வரும் நிபந்தனைக்குட் பட்டு, தாங்கள் தகுதியெனக் கருதும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். அந் நிபந்தனை என்னவென்றால்,—அச் சட்டத்தின்படி வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணத்திலும் தண்டத்திலும் ஒவ்வொன்றிலும் மாவட்ட ஆட்சியாளர் நிச்ச யிக்கக் கூடிய பாகத்தை ஊராட்சிக்குக் கொடுத்துவிட வேண்டும்.

(1962 மார்ச் 31-ம் தேதிய 803-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

75. நாய்களுக்கு உரிமம் வழங்குவதும், உரிமம் வழங்கப்படாத நாய்களை அழித்துவிடுவதும்.—(1) ஊராட்சி எல்லைகளுக்குள் உரிமம் வழங்கப் பெறாமல் திரிந்து கொண்டிருக்கிற நாய்கள் அழித்துவிடப்படுமென்று, அறிவிக்கைகளையும் அறிவிப்புகளையும் வெளியிடும் விதம் பற்றிய விதிகளைச் சேர்ந்த 4 ஆவது விதி யில் சொல்லியிருக்கிறபடி பேரூராட்சி ஒவ்வொன்றும் பொது அறிக்கை கொடுக்க வேண்டும், ஊராட்சி ஒவ்வொன்றும் பொது அறிவிப்புக் கொடுக்கலாம் அல்லது மாவட்ட ஆட்சியாளர் அவ்வாறு கட்டளையிட்டால் பொது அறிவிப்புக் கொடுக்கவேண்டும்.

(2) அத்தகைய அறிக்கை கொடுக்கப்பட்டிருந்தால், அந்த எல்லைகளுக் குள் ஒவ்வொரு நாயின் சொந்தக்காரரும் அல்லது பொறுப்பாளரும் அந்த அறிக்கையின் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், அந்த அறிக்கை கொடுக்கப்பட்ட அரையாண்டுக்காக நாய் ஒன்றுக்கு ஐம்பது காசுக்கு மேற் படாமல் கட்டணம் செலுத்து, ஓர் உரிமத்தையும் அவ்வுரிமத்தின் எண்ணைக்

காட்டும் வில்லையையும் ஊராட்சிச் செயல் அதிகாரியினிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த வில்லையை நாயின் கழுத்திலிருந்து தொங்கவிட வேண்டும்.

(3) அடுத்து வரும் அரையாண்டு ஒவ்வொன்றின் தொடக்கத்திலிருந்து முப்பது நாட்களுக்குள், ஒவ்வொரு நாயின் சொந்தக்காரரும் அல்லது பொறுப்பாளரும் 2 ஆவது விதியில் குறிப்பிட்டிருக்கிற கட்டணத்தைச் செலுத்தி, உரிமம் வழங்கும்படி அல்லது புதுப்பிக்கும்படி செயல் அதிகாரிக்கு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்.

(4) 2 ஆவது விதியின்படி பெறப்பட்ட வில்லை இல்லாமல் பொதுவான ஓரிடத்தில் திரிந்துகொண்டிருப்பதாகக் காணப்படும் நாய், இதன்பொருட்டு செயல் அதிகாரியினிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஒருவர் அல்லது ஆட்களால் கைப்பற்றப்படுவதற்கு உட்பட்டதாகும்.

(5) ஒரு நாய் கைப்பற்றப்பட்டால், செயல் அதிகாரியானவர் அதன் சொந்தக்காரருக்கு அல்லது பொறுப்பாளருக்கு அவர் பெயரும் முகவரியும் தெரிந்திருந்தால் அது மறியல் செய்து வைக்கப்பட்டிருப்பதைப் பற்றியும் உரிமக் கட்டணத்தையும் ஐம்பது காசு தண்டத்தையும் மறியல் செய்து வைக்கப் பட்ட பிரதி 24 மணி நேரத்துக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் இருபத் தைந்து காசு மறியல் செலவையும் செலுத்தி இன்ன காலத்துக்குள் அதைக் கொண்டு போய்விட வேண்டுமென்பதைப் பற்றியும் கூடிய விரைவில் தெரிவிக்க வேண்டும்.

(6) 5ஆவது விதியில் குறிப்பிட்டிருக்கிற உரிமக் கட்டணங்களும் தண்டமும் மறியல் செலவுகளும் செலுத்தப்படுவதன் பேரில், செயல் அதிகாரி அந்த நாயை அதன் சொந்தக்காரரிடம் அல்லது பொறுப்பாளரிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். 5 ஆவது விதியின் கீழ்க் குறிப்பிட்டிருக்கிற கால அளவுக்குள் அவ்வாறு செலுத்தத் தவறிப்போனால், அல்லது சொந்தக்காரரின் அல்லது பொறுப்பாளரின் பெயரும் முகவரியும் தெரியாவிட்டால், செயல் அதிகாரியானவர் அந்த நாயை வெளிப்படை ஏலத்தில் விற்பனை செய்து, அவ்வாறு விற்று வந்த தொகையை ஊராட்சிக்குச் சேர வேண்டிய உரிமக் கட்டணங்களையும் தண்டத்தையும் மறியல் செலவுகளையும் கொடுப்பதற்காகப் பயன்படுத்தி, மிச்சம் ஏதாகிலும் இருந்தால் அதை நாயின் சொந்தக்காரருக்கு அல்லது பொறுப்பாளருக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். ஊராட்சிக் குச் சேர வேண்டிய உரிமக் கட்டணங்களையும் தண்டத்தையும் மறியல் செலவுகளையும் கொடுப்பதற்கு, விற்று வந்த தொகை போதுமானதாயிராவிட்

டால், அந்தத் தொகை முழுவதையும் ஊராட்சி நிதிகளுக்கு வரவு வைக்க வேண்டும். ஒரு நாய் ஏலத்தில் விற்பனையாகாவிட்டால் செயல் அதிகாரி அதை அழித்துப் புதைத்து விடும்படி செய்ய வேண்டும்.

(7) நாய் வெறி நோய் கண்டிருக்கிறதென்று அல்லது காணும் போலிருக்கிறதென்று, 1939 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொது உடல் நலச் சட்டத்தில் கண்ட 76 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி அறிக்கையிடப்பட்டுள்ள ஒரு ஊராட்சியில் செயல் அதிகாரியானவர், 1941 ஆம் ஆண்டின் நாய் வெறிநோய் (தடுப்புக் கட்டுப்பாடு) விதிகளின்படி நாய்களைக் கைப்பற்றுவதற்கு, மறியல் செய்து வைப்பதற்கு, அழிப்பதற்கு அல்லது தீர்வு செய்வதற்கு அவசியமாயிருக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று பொது உடல்நலத் துறை இயக்குநராவது மாவட்ட உடல்நல அலுவலராவது உத்தரவிட்டால், அந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

(8) ஊராட்சியின் செயல் அதிகாரியாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது, வெறி நோய் கண்டுள்ளதெனத் தாம் கருதுகிற எந்த நாயையேனும் கைப்பற்றலாம் அல்லது அழித்துவிடலாம்; அல்லது ஒரு நாயினிடம் வெறிநோய் அடையாளங்கள் இருப்பதாகத் தாம் ஐயப்பட்டால், அதை மறியல் செய்து வைக்கலாம். அத்தகையவற்றில் எல்லாம், செயல் அதிகாரியானவர், அப் பகுதியின் விசாரணை அதிகாரமுடைய உடல்நல அலுவலரை அல்லது குடிமை முறை கால்நடை மருத்துவத் துறை அலுவலரை கலந்தாலோசித்து, அவர் சொல்லும் ஆலோசனைகளின்படி நடக்க வேண்டும்.

(9) செயல் அதிகாரியானவர், வெறிநோய் கண்டுள்ளதெனத் தமக்குத் தெரிந்திருக்கிற அல்லது தாம் ஐயப்படுகிற அல்லது வெறிபிடித்த அல்லது ஐயப்பாட்டிற்கிடமான நாய், நரி அல்லது வேறு விலங்கினால் கடிக்கப்பட்டிருக்கிற அல்லது கௌவப்பட்டிருக்கிற ஒரு நாயை அழித்துவிட வேண்டுமென்றாவது, அதன் சொந்தக்காரர் விரும்பினால் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள இடத்திலே செயல் அதிகாரி நிச்சயிக்கக் கூடிய காலம் வரையில் அச் சொந்தக்காரர் செலவில் கவனிப்புக்காக மறியல் செய்துவைக்கப்பட வேண்டுமென்றாவது கட்டளையிடலாம். கவனிப்புக்காக வைத்திருக்கப்படுகிற நாய்க்கு வெறிநோய் கண்டுள்ளதென அல்லது இனிமேல் காணக்கூடுமெனத் தெரிய வந்தால், அதை உடனே அழித்துவிடலாம். அத்தகைய கட்டளை பிறப்பிக்கப்பட்டால், அவ்வாறு அழித்துவிடுவதற்கு அல்லது மறியல் செய்து வைப்பதற்குச் செயல் அதிகாரி ஏற்பாடு செய்ய வேண்டும்; அந்த நாயின் சொந்தக்காரராவது அதைத் தம் வசம் வைத்திருக்கும் வேறொருவராவது, அதை அழித்துவிட அல்லது மறியல் செய்துவைக்க செயல் அதிகாரியினிடமிருந்து அதிகாரம் பெற்றிருக்கிற ஒருவரிடம் அதை ஒப்புவித்துவிடக் கடமைப்பட்டவராவார்.

10. ஒருவர் தம் வசம் ஒரு நாய் வைத்திருந்து, அதற்கு வெறிநோய் கண்டிருக்கிறதென அல்லது வெறி பிடித்த அல்லது சந்தேகத்துக்கிடமான நாயினல், நரியினல் அல்லது வேறு விலங்கினல் அந்த நாய் கடிக்கப்பட்டிருக்கிறதென்று அல்லது கௌவப்பட்டிருக்கிறதெனத் தமக்குத் தெரிந்திருந்தால் அல்லது அவ்வாறு நம்புவதற்குத் தமக்கு ஏது இருந்தால் அச் செய்தியினைச் செயல் அதிகாரிக்கு உடனே எழுத்து மூலமாய்த் தெரிவிக்க வேண்டும்.

11. எவரேனும் 9-வது 10-வது விதிகளை மீறினல் அவருக்கு—

(அ) இருபத்தைந்து ரூபாய்க்கு மேற்படாமல் தண்டப் பணம் விதிக்கப்படத்தக்கதாகும்; தொடர்ந்து மீறிக் கொண்டே வந்தால், முதல் தடவை மீறியதற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட பிறகு தொடர்ந்து மீறிக் கொண்டே வரும் ஒவ்வொரு நாளுக்கும் பதினைந்து ரூபாய்க்கு மேற்படாமல் தண்டப் பணம் விதிக்கப்படத்தக்கதாகும்; அல்லது

(ஆ) அவ்வாறு மீறுவதை நிறுத்த வேண்டுமென செயல் அதிகாரியினிடமிருந்து அறிவிப்பு வந்த பிறகு அவ்வாறு மீறிக் கொண்டே வரும் ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாய்க்கு மேற்படாமல் தண்டப் பணம் விதிக்கப்படத்தக்கதாகும்.

12. 2-வது விதியின்படி வழங்கப்படும் உரிமம் ஒவ்வொன்றையும் இதற்கென வைத்திருக்கப்பட வேண்டிய ஒரு பதிவேட்டில் எழுதிக் கொள்ள வேண்டும்; அதில் அடியிற் கண்டவை அடங்கியிருக்க வேண்டும்; அவை :— நாயின் சொந்தக்காரருடைய அல்லது பொறுப்பாளருடைய பெயரும் முகவரியும்; நாய்க்குப் பெயர் இருந்தால் அதுவும், அது பற்றிய மற்ற விவரங்களும்; உரிமத்தின் இலக்கமும் அது கொடுக்கப்பட்ட தேதியும்; வசூலிக்கப்பட்ட தொகையும் ஆகும்.

13. செயல் அதிகாரி தனிப் பதிவேடு ஒன்றையும் வைத்துவர வேண்டும்; அதில் பின்வருபவை கண்டிருக்க வேண்டும்; அவையாவன :—கைப்பற்றப்பட்ட நாயின் விபரம்; அது கைப்பற்றப்பட்ட காலம்; அதன் சொந்தக்காரரின் அல்லது பொறுப்பாளரின் பெயரும் முகவரியும் கட்டணங்களும் செலவுகளும் வசூலிக்கப்பட்டிருந்தால் அவை; அவ்வாறு வசூலித்த தேதி; நாய் விடுவிக்கப்பட்ட, ஏலம் போடப்பட்ட அல்லது அழித்துவிடப்பட்ட தேதியும் காலமும்; ஏலத்தில் தொகை ஏதாகிலும் கிடைத்தால் அது.

(1961 பெப்ரவரி 1-ம் தேதிய 260-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1963 செப்டம்பர் 9-ம் தேதிய 1979-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1964 மார்ச் 11-ம் தேதிய 568-ம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

அத்தியாயம் V

பாகம் I—வரவினங்கள்.

76. வரவினங்களும் செலவும்.

1. உரிமத்துக்காகவும் அனுமதிக்காகவும் கட்டணங்கள்.—(1) மேற்படி சட்டத்தின்படி அல்லது அதன்படிச் செய்யப்பட்ட ஏதேனும் விதி அல்லது துணைச் சட்டத்தின்படி வழங்கப்படும் உரிமம் அல்லது அனுமதி ஒவ்வொன்றை பற்றியும் செலுத்தப்படத்தக்க கட்டணத்தை, உரிமத்துக்கான அல்லது அனுமதிக்கான விண்ணப்பம் கொடுத்துக் கொள்ளப்படும்போது முன்னதாக வசூலித்துவிடவேண்டும்.

(2) கட்டணம் வசூலிப்பதற்கும், அத்தகைய உரிமம் அனுமதி வழங்கு வதற்கும் சம்பந்தப்பட்ட விவரங்களை, உரிமங்களையும் அனுமதிகளையும் பற்றிய பதிவேட்டில் தொடர்ச்சியாக எழுத வேண்டும்; அரசாங்கத்தார் அவ்வப் போது விதிக்கக்கூடிய படிவத்தின்படி அப் பதிவேட்டை வைத்து வர வேண்டும்.

(3) அத்தகைய உரிமம் அல்லது அனுமதி வழங்கப் பெறுகிற ஒவ் வொருவருக்கும், எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அது வழங்கப்படுகிறதோ அவைகளின்படி ஒன்றைக் கொடுக்கவேண்டும்.

2. கட்டளைகளிலிருந்தும் பொறுப்பு நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கும் வருமானம்—(1) ஊராட்சியின் செயல் அதிகாரி ஊராட்சியினால் செயற்படும் கட்டளை அல்லது பொறுப்பு நிறுவனம் ஒவ்வொன்றைப்பற்றியும் நாளது தேதி வரையில் எழுதப்பட்டுள்ள ஆவணம் ஒன்றை ஊராட்சி அலுவலகத்தில் வைத்துவர வேண்டும். அல்லது வைத்துவரும்படிச் செய்ய வேண்டும். அந்த ஆவணத்தில் பின்வருபவைகள் கண்டிருக்க வேண்டும் :—

(அ) அக் கட்டளையின் அல்லது பொறுப்பு நிறுவனத்தின் செயல் முறை எந்த அதிகாரத்தின்கீழ் ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்டதென்பது.

(ஆ) அக் கட்டளையின் அல்லது பொறுப்பு நிறுவனத்தின் உடைமை களும் வருமான ஆதாரங்களும்;

(இ) அக் கட்டளையின் அல்லது பொறுப்பு நிறுவனத்தின்மீது பொறுப் பேற்றப்படத்தக்க செலவு.

(2) ஊராட்சியின் செயல் அதிகாரி (1) உள்விதியில் குறிப்பிட்டிருக்கிற ஆவணத்துடன்கூட, கட்டளைகளையும் பொறுப்பு நிறுவனங்களையும் பற்றிய பதிவேடு ஒன்றை ஊராட்சி அலுவலகத்தில் வைத்துவர வேண்டும் அல்லது வைத்து வரும்படிச் செய்ய வேண்டும்; அதன் தனித் தனிப் பக்கங்களில் கட்டளை அல்லது பொறுப்பு நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் சம்பந்தப்பட்ட ஆண்டு விவகாரங்கள் கண்டிருக்க வேண்டும்.

3. உதவித் தொகைகள்.—அரசாங்கத்தார், மற்ற ஊராட்சிகள் நகராட்சிகள் மன்றங்கள் மற்ற உள்ளாட்சி அதிகாரிக் குழுக்கள், தனியார்கள் ஆகியோர் ஊராட்சிக்குக் கொடுக்கத்தக்க உதவித் தொகைகள் வந்து சேர்வதை, பல்வகை கேட்புப் பதிவேடு மூலமாகக் கவனித்துவர வேண்டும்.

4. சாலை மரங்களிலிருந்து கிடைக்கும் வரவுகள்.—மரங்களினுடைய மேல் மாசூலின் விளைவை விற்பதிலிருந்து வரவு வருவதைச் செயல் அதிகாரி, பல்வகைக் கேட்புப் பதிவேடு மூலமாகக் கவனித்துவர வேண்டும்.

5. கருவிகள், தளவாடங்கள், பெருக்கிய குப்பைகள், பழைய சரக்கு கள், சாமான்கள் ஆகியவற்றை விற்றுவந்த தொகைகள்.—பயனற்ற பழைய கருவிகள், தளவாடங்கள், சரக்குகள், சாமான்கள் ஆகியவற்றையும், பெருக்கிய குப்பைகளையும் தீர்வு செய்வதற்காக ஊராட்சியின் ஆணைகளைப் பெற வேண்டும். எழுதி வைக்கப்படவேண்டிய திட்டவட்டமான காரணங்களுக்காக ஊராட்சி வேறுவிதமாக ஆணையிட்டாலன்றி மற்றப்படி, அக் கருவிகளையும் தளவாடங்களையும் சரக்குகளையும் சாமான்களையும் பெருக்கிய குப்பைகளையும் வெளிப்படை ஏலத்தில் விற்பனை செய்யவேண்டும். அவ் விற்பனைகள் ஊராட்சி யின் உறுதிப்பாட்டுக்குட்பட்டவையாகும். அத்தகைய விற்பனைகள் எல்லா வற்றிலிருந்தும் கிடைக்கும் வரவுகளை, பல்வகை விற்பனைகள்பற்றிய பதி வேட்டில் காட்ட வேண்டும்.

6. அங்காடிகள், வண்டிப் பேட்டைகள், இறக்குமிடங்கள் அல்லது தங்குமிடங்கள், கால்நடை வெட்டுமிடங்கள், மீன் துறைகள், தோணித் துறை கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் கட்டணங்கள்.—(1) ஓர் அங்காடி, வண்டி

பேட்டை, இறக்குமிடம் அல்லது தங்குமிடம், கால்நடை வெட்டுமிடம், மீன் துறை அல்லது தோணித் துறை சம்பந்தமாகக் கட்டணங்கள் வசூலிக்கும் உரிமையை ஊராட்சிக் குத்தகைக்குவிடக் கருதியிருந்தால் செயல் அதிகாரி இன்ன நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு குத்தகை வழங்கப் படுமென்று கண்டு முன்அறிக்கை ஒன்றைத் தயாரிக்க வேண்டும்.

(2) முன்அறிக்கையில் கண்டுள்ள நிபந்தனைகளையும் வரையறைகளையும் ஊராட்சி ஒப்புக் கொள்ள வேண்டும்.

ஆனால், அதன் நிபந்தனைகளிலும் வரையறைகளிலும் மாறுதல்கள் எவையேனுமிருந்தாலொழிய அந்த அறிக்கை ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப் பட்டிருந்தால், அத்தகைய ஒப்புதல் அவசியமாக மாட்டாது.

(3) பின்வரும் நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டுக் குத்தகை வழங்கப்படுமென்று முன் அறிக்கையில் கண்டிருக்க வேண்டும்; அவை :—

(அ) ஒருவர் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படும் தொகையைப் பிணையமாகக் கட்டினாலன்றி மற்றப்படி, அல்லது முந்திய ஒரு குத்தகை சம்பந்தமாக அவர் ஊராட்சிக்குப் பாக்கி செலுத்த வேண்டியிருந்தால் அவர் ஏலத்தில் கேட்க அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) குத்தகைக் கால அளவு ஓர் ஆண்டுக்கு மேற்படா விட்டால்—

(i) குத்தகைதாரர், குத்தகை அவருக்கு உறுதிப்படுத்தப் பட்ட தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள், (அ) பகுதியில் குறிப்பிட்டிருக்கிற ஈட்டுடன் சேர்த்தால் மொத்தக் குத்தகையில் கால் பங்கு ஆகக்கூடிய தொகை யைக் கட்ட வேண்டும். இத் தொகையானது சாதாரணமாக, ஆண்டின் கடைசி மூன்று மாதங்களுக்காகச் சேரவேண்டிய குத்தகைத் தொகையின் தவணைகளின் நிமித்தம் சரிக்கட்டப்படும்; ஆனால், குத்தகைதாரரிடமிருந்து கெடு கடந்தும் சேரவேண்டிய குத்தகைத் தொகையின் தவணைகளினிமித்தம் மறு விற்பனையினால் அல்லது துறையினர் செயலினால் இழப்பு ஏற்பட்டால் அதனிமித்தமும் அது சரிக்கட்டப்படலாம்;

(ii) குத்தகைத் தொகையின் எஞ்சிய பாகத்தை, ஒவ்வோர் ஆண்டிலும், ஏப்ரல் 1-ம் தேதியன்று தொடங்கும் ஒன்பது மாத காலத்துக்குள் குத்தகை ஒப்பாவணத்தில் குறிப்பிடப்பட்ட தேதிகளிலாவது அவைகளுக்கு முன்பாவது செலுத்திவிட வேண்டும்.

(இ) குத்தகைக் கால அளவு ஓர் ஆண்டுக்கு மேற்பட்டால்—

(i) குத்தகைதாரர், குத்தகை அவருக்குச் சாதகமாக உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள், (அ) பகுதியில் குறிப்பிட்டிருக்கிற ஈட்டுடன் சேர்த்தால், குத்தகைத் தொகையின் மூன்று தவணைகளுக்குச் சமமான தொகையாகக்கூடிய தொகையைக் கட்ட வேண்டும். இத் தொகையானது சாதாரணமாக, சேரவேண்டிய குத்தகைத் தொகையின் கடைசி மூன்று தவணைகளினிமித்தம் சரிக்கட்டப்படும்; ஆனால், குத்தகைதாரரிடமிருந்து கெடுக்கடந்து சேரவேண்டிய குத்தகைத் தொகையின் எந்தத் தவணைகளினிமித்தமும், மறு விற்பனையினால் அல்லது துறையினர் செயற்பாட்டினால் இழப்பு ஏற்பட்டால் அதனிமித்தமும் அது சரிக்கட்டப்படலாம்;

(ii) குத்தகைத் தொகையின் எஞ்சிய பாகத்தை ஊராட்சி நிச்சயிக்கக் கூடிய தேதிக்குள் முழுவதும் செலுத்திவிட வேண்டும்.

ஆனால், அவ்வாறு நிச்சயிக்கப்படும் தேதியானது, குத்தகைக் கால அளவு கழிந்து போவதற்கு முன் மூன்று மாதத்துக்குப் பிந்தியதாயிருக்கக்கூடாது.

(ஈ) ஊராட்சி குத்தகையை உறுதிப்படுத்திய தேதியிலிருந்து சாதாரணமாகப் பதினைந்து நாட்களுக்குள் குத்தகை ஒப்பாவணத்தை எழுதிப் பதிவு செய்ய வேண்டும்;

(உ) குத்தகையின்படி சேரவேண்டிய தவணைத் தொகை செலுத்தப்படத்தக்கதாகிவிட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் செலுத்தப்படாவிட்டால் செயல் அதிகாரி அதை உடனே ஊராட்சிக்குத் தெரிவிக்க வேண்டும். அதன் பேரில் ஊராட்சி குத்தகையை இறுதிசெய்து, மறு விற்பனைக்கு உத்தரவானால், அது மறு விற்பனை செய்யப்படுகிறவரையில், குத்தகைதாரரின் இழப்புப் பொறுப்பில் துறையினர் அதை மேலாண்மை செய்ய வேண்டுமென்று ஆணையிட வேண்டும்.

(4) முன்அறிக்கையை ஊராட்சி ஒப்புக்கொண்ட பிறகு அதனை மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும். அறிக்கையின்படி ஒன்றை ஊராட்சி அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையிலும் ஊரின், பேரூரின் எல்லைகளுக்குள் முதன்மையான சில இடங்களிலும்கூட பிரசுரிக்க வேண்டும்.

ஆனால், ஊராட்சி குத்தகையிலிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் வருமானத்தையும் குத்தகையின் தன்மையையும் கவனித்துப் பார்த்து, இந்த உள் விதியில் கண்டுள்ள விதமாக முன்அறிக்கையை வெளியிடவேண்டும் அல்லது வேறு எவ்விதமாகவேனும் வெளியிட வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்; பிந்தியதில் இன்ன விதம் அல்லது விதங்களில் வெளியிட வேண்டுமென்பதைக் குறிப்பிட வேண்டும்.

(5) செயல் அதிகாரியாவது அவரிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது, ஏலம் நடத்த வேண்டும்; முன் அறிக்கையில் குறிப்பிடப்படக் கூடிய தொகையைப் பிணையமாகக் கட்டத் தவறியவர் அல்லது முந்திய ஏதேனும் குத்தகையைப் பற்றி ஊராட்சிக்குப் பாக்கியாயுள்ள ஒருவர் ஏலத்தில் கேட்பதை அனுமதிக்கக் கூடாது.

(6) செயல் அதிகாரி ஏலம் முடிந்த பிறகு, ஏலக் கேள்விகளின் பட்டியல் ஒன்றை ஊராட்சிக்கு முன் வைக்க வேண்டும். ஏலக் கேள்விகளில் எதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதை ஊராட்சி தீர்மானிக்கவேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏலக் கேள்வி மிக உயர்ந்த கேள்வியாயிராவிட்டால் ஏற்றுக் கொள்ளப்பட்டதைவிட உயர்ந்த கேள்வி அல்லது கேள்விகளைத் தள்ளி விட்டதற்கான காரணங்களை எழுதி வைக்க வேண்டும்.

(7) ஏலத்தில் கேள்ளி கேட்பவர்கள் இராமையினால், அல்லது அவர்கள் மிக்க சூழ்ச்சியோடு ஒருங்கிணைந்து செயற்படுவதனால் அல்லது வேறொரு காரணத்தினால் குறைந்தபட்சம் இரண்டு தடவைகளில் வெளிப்படை ஏல விற்பனைகள் பயனளித்திராத புறநடையாகவுள்ள நிகழ்வுகளில் செயல் அதிகாரி, மாவட்ட ஆட்சியாளரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொண்டு, குத்தகைக்காக முத்திரையிட்ட ஒப்ப அறிவிப்புகளை வரவழைத்து, அவைகளை ஊராட்சிக்கு முன் வைக்கலாம். இத்தகைய ஒப்ப அறிவிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதை ஊராட்சி நிச்சயிக்க வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்ப அறிவிப்பு மிக உயர்ந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பாயிராவிட்டால், ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்ப அறிவிப்பை விட அதிகத் தொகைக்கான ஒப்ப அறிவிப்பை அல்லது ஒப்ப அறிவிப்புகளைத் தள்ளிவிட்டதற்கான காரணங்களை எழுதி வைக்கவேண்டும்.

(8) பின்னர் செயல் அதிகாரியானவர் ஊராட்சியின் சார்பில், முன் அறிக்கையின் கண்ட வரையறைகளின்படியும் நிபந்தனைகளின்படியும், யாருடைய ஏலக் கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறதோ அவருடன் எழுத்து மூலமாய் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.

(9) சேர வேண்டிய தொகைகள் வசூலாவதைப் பல்வகைக் கேட்புப் பதிவேடு மூலமாகக் கவனித்துவர வேண்டும்.

(10) குத்தகை ஒவ்வொன்றிலும் குத்தகை ஒப்பாவணம் ஒன்று எழுதப்பட வேண்டும்; பின்வருவனவற்றை அதில் குறிப்பிட்டிருக்க வேண்டும் :—

(அ) குத்தகையின் காலம் ;

(ஆ) வாடகைத் தவணை ஒவ்வொன்றின் தொகையும், இன்ன தேதி யன்று அல்லது அதற்கு முன் அதைச் செலுத்த வேண்டுமென்பதும் ;

(இ) உரிய தேதிக்குப் பிறகு தவணைத் தொகை செலுத்தப்பட்டால், கொடுக்கப்படத்தக்க ஈடு ;

(ஈ) மறு விற்பனை அல்லது துறையினர் செயலாற்றுவது காரண மாகவும், குத்தகைதாரர் தமது ஒப்பந்தத்தின் வரையறைகளை நிறைவேற்றத் தவறிப்போனதனால் மறு விற்பனை செய்தது காரணமாகவும் ஊராட்சிக்கு உண்டான இழப்புக்கு ஈடு செய்வது குத்தகைதாரரின் பொறுப்பு ;

(உ) அங்காடிகள், இறக்குமிடங்கள், தங்குமிடங்கள், வண்டிப் பேட்டைகள், கால்நடை வெட்டுமிடங்கள், மீன்துறைகள், தோணித் துறைகள் ஆகியவை சம்பந்தமாகக் குத்தகைதாரர் விதிக்க வேண்டிய கட்டணங்களின் வீதம்.

(ii) (அ) அவ்வப்போது மாவட்ட ஆட்சியாளர் நிச்சயிக்கக் கூடிய மனைத் தீர்வையைக் குத்தகைதாரர் செலுத்த வேண்டுமென வெளிப்படையான நிபந்தனை ஒவ்வொரு குத்தகை ஒப்பாவணத்திலும் அடங்கியிருக்க வேண்டும்.

(ஆ) ஒருவர் குத்தகை ஒப்பாவணத்தை எழுதிக் கொடுத்தாகிற வரையில் குத்தகையின்படி அவர் தமது உரிமைகளைச் செலுத்த அனுமதிக்க முடியாது.

7. கட்டணங்களை வசூலிப்பது.—(1) அங்காடி, வண்டிப்பேட்டை, இறக்கு மிடம் அல்லது தங்குமிடம், கால்நடை வெட்டுமிடம், மீன்துறை அல்லது தோணித் துறை ஒன்றை துறையினர் மேலாண்மை செய்தால் அதைப் பயன்படுத்துவது சம்பந்தமாக விதிக்கப்படும் எல்லாக் கட்டணங்களையும், செயல் அதிகாரியால் அச்சிட்டு வழங்கப்படும் சிட்டுகள் மூலமாக வசூலிக்க வேண்டும்.

(2) சிட்டுகளைப் புற இதழ் அக இதழ்களாக, வெவ்வேறு கட்டண வீதங் களுக்கு வெவ்வேறு நிறங்களில் அச்சிட வேண்டும் ; ஒவ்வொன்றிலும் வீதங்களை அச்சிட வேண்டும் ; வகைச் சிட்டு ஒவ்வொன்றும் 100 இதழ்கள் கொண்ட புத்தகங்களாகத் தயாரிக்கப்பட்டு அவைகளுக்குத் தொடர்ச்சியான இயந்திர இலக்கங்களைப் பொறிக்க வேண்டும். வசூலிக்கும் அலுவலர்களிடம் அவை களைக் கொடுப்பதற்குமுன், செயல் அதிகாரியின் அல்லது இதன்பொருட்டு அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஒருவரின் முன்னிலையில் ஊராட்சியின் பொது முத்திரையைக் கொண்டு அவைகளுக்கு முத்திரையிட வேண்டும்.

(3) இச் சிட்டுகள் சம்பந்தமாக, இரண்டு பாகங்கள் கொண்ட பதிவேடு ஒன்றை ஊராட்சி அலுவலகத்தில் வைத்துவர வேண்டும்.

முதல் பாகம் இருப்புப பதிவேடாக இருக்க வேண்டும்; வரவுகளுக் கான பதிவுகளுக்குச் செயல் அதிகாரியாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள அலுவலராவது சான்றுக் கையொப்பமிட வேண்டும்; கொடுக்கப் பட்டவைகளுக்கான பதிவுகளுக்கு, சம்பந்தப்பட்ட வசூலிக்கும் அலுவலர் சான்றுக் கையொப்பமிட வேண்டும்.

இரண்டாம் பாகமானது, இச் சீட்டுகள் மூலமாக வருவாய் வசூலிப்பு வேலை ஒப்புவிக்கப் பெற்றுள்ள அலுவலர்கள் ஒவ்வொருவருக்காகவும், அலுவல் பெயர்ப் பேரேட்டுக் கணக்காயிருக்க வேண்டும். வசூலிக்கும் அலுவலர் ஒவ் வொருவருக்கும் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு வகைச் சீட்டின் எண்ணிக்கை யையும் மதிப்பையும் அதில் பற்றாக எழுத வேண்டும்; ஊராட்சி அலுவலகத்தில் அவர் செலுத்திய வசூல் தொகைகளை அதில் வரவு வைக்க வேண்டும். வசூலிக்கும் அலுவலர் அன்றாடம் பணம் கட்ட வேண்டும்; இதனுடன், அவர் கொடுத்த ஒவ்வொரு வகைச் சீட்டின் எண்ணிக்கையையும் மதிப்பையும் பற்றிய விவரங்களை அனுப்ப வேண்டும்.

(4) சீட்டுப் புத்தகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டு விட்டிருந்தால் உள்ளபடியான வரவுத் தொகைகளோடு வைத்துச் சரிபார்ப்பதற்காக அக இதழை ஊராட்சி அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும்.

(5) வசூலிக்கும் அலுவலர், தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட சீட்டுகளுக்கும், தாம் வசூலித்த தொகைக்கும் கூடக் கணக்கு ஒன்றை வைத்திருக்கவேண்டும். ஒவ்வொரு வகைச் சீட்டுகளின் மூலம் அன்றாடம் வசூலான தொகைகளை அக் கணக்கில் எழுதி, ஒவ்வொரு நாள் முடிவிலும் இருப்புக் கட்ட வேண்டும். செயல் அதிகாரியாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள ஓர் அலுவலரா வது, அக் கணக்கையும் சீட்டுகளின் கையிருப்பையும் ஒழுங்கான இடைவேளை களில் சரிபார்த்து, அவ்வாறு சரிபார்த்ததற்குச் சான்றிட வேண்டும்.

8. **கட்டிடங்கள், நிலங்கள் முதலிய அசையாப் பொருளிலிருந்து கிடைக்கும் வருமானம்.**—(1) ஒரு ஊராட்சிக்குச் சொந்தமான ஒரு கட்டிடம் வாடகைக்கு விடப்பட்டால், அல்லது அவ்வூராட்சிக்குச் சொந்தமான நிலம் அல்லது வேறு அசையாப் பொருள் குத்தகைக்குவிடப்பட்டால், அக் கட்டிடத்தின் வாடகை அல்லது அக் குத்தகையின்படி சேர வேண்டிய தொகை உடனுக்குடன் வசூ லிக்கப்படுகிறதா என்று பலவகைக் கேட்புப் பதிவேடு மூலமாகக் கவனித்துவர வேண்டும்.

(2) ஊராட்சியின் மேல் விசாரணைக்குட்பட்ட பயணமாளிகை, தங்கு மாளிகை அல்லது சத்தரம் ஒவ்வொன்றிலும், அரசாங்கத்தாரால் அவ்வப்போது விதிக்கப்படக்கூடிய படிவத்தின்படி ஒரு பதிவேட்டினை வைத்துவர வேண்டும்;

அப் பயண மாளிகை, தங்கு மாளிகை அல்லது சத்திரத்தை அனுபோகத்தில் வைத்துக் கொண்டிருப்பவர், குறிப்பிட்டப்பட்ட விவரங்களைப் பதிவேட்டில் எழுத வேண்டும். அவ்வாறு அனுபோகத்தில் வைத்துக் கொள்வதற்கு, ஊராட்சி நிச்சயிக்கிற வீதங்களின்படி கட்டணங்கள் விதிக்கப்படும்.

9. செய்யப்பட்ட பணிகளுக்காகத் திரும்பப் பெறுதல்.—(1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ் நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் வேறுவிதமாய் ஏற்பாடுகள் கண்டிருந்தாலன்றி மற்றப்படி தனிப்பட்ட ஒருவர் அல்லது கழகத்துக்கான எந்தப் பணியையும், அதன் மதிப்பான செலவுத் தொகை முன்னதாகச் செலுத்தப்பட்டிருந்தாலன்றி, ஊராட்சி மேற்கொள்ளக் கூடாது.

10. பல்வகைப் பட்டியல் பதிவேடு.—எந்தப் பல்வகைப் பாக்கிகளுக்காகப் பல்வகைப் பட்டியல்கள் கொடுக்கப்படுகின்றனவோ அந்தப் பாக்கிகளுக்குச் சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களையும், பல்வகைப் பட்டியல் பதிவேட்டில் எழுத வேண்டும்.

11. வருவாயைத் திருப்பிக் கொடுப்பது.—ஊராட்சி பெற்றுக்கொண்ட வருவாய் இனம் எதையும் ஊராட்சியின் ஒப்பளிப்பு இல்லாமல் திருப்பிக் கொடுக்கக் கூடாது. ஊராட்சி வழங்கும் ஒப்பளிப்பு, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்குப் பிறகு கழிவாகிவிடும்; அதற்குப் பிறகு புதிய ஒப்பளிப்பு தேவைப்படும்.

வருவாயைத் திருப்பிக் கொடுப்பதற்கான பட்டியல்களை, அவ்வப்போது அரசாங்கத்தாரால் விதிக்கப்படக்கூடிய படிவத்தின்படி தயாரிக்க வேண்டும். பணம் திருப்பிக் கொடுக்கப்பட்டவுடனே, அது வழங்கப்பட்டது பற்றிய குறிப்பு ஒன்றை, சம்பந்தப்பட்ட கணக்குகளின் மூல வரவுப் பதிவுக்கு எதிரே எழுத வேண்டும்.

12. மரங்கள், காற்றடித்து விழுந்த மரங்கள் முதலியவற்றின் மேல் மாசுலின் மரங்கள்,

(1) (அ) மரங்களின் விளைச்சல் அல்லது மேல் மாசுல்,

(ஆ) காற்றடித்து விழுந்தவைகளும் பட்டுப்போனவைகளுமான மரங்கள்,

(இ) பெருக்கிய குப்பைகள்,

(ஈ) கருவிகள், தள்வாடம்,

(உ) பழைய சரக்குகள், சாமான்கள்,

(ஊ) ஊராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்கள், நிலங்கள் ஆகிய வற்றின் குத்தகைகள், ஆகிய இவற்றின் விற்பனைகள் எல்லாம் வெளிப்படை ஏலம் மூலமாகச் செய்யப்பட வேண்டும்; செயல் அதிகாரியாவது அவரிட மிருந்து முறைப்படி அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது அந்த ஏலத்தை நடத்த வேண்டும். அவர் அந்த ஏலத்தைப் பற்றித் தாம் தகுதியெனக் கருதும் விதமாக முழு விளம்பரம் செய்ய வேண்டும். ஏலத்தில் கேட்கப்பட்ட கேள்வி களைச் செயல் அதிகாரி ஊராட்சிக்கு முன் வைக்க வேண்டும்; இன்ன கேள்வி களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை ஊராட்சி தீர்மானிக்க வேண்டும். ஏற்றுக் கொள்ளபபட்ட ஏலக் கேள்வி மிகவுயர்ந்த கேள்வியாயிராவிட்டால், ஏற்றுக் கொண்டதைவிட அதிகத் தொகையுள்ள கேள்வியை அல்லது கேள்விகளைத் தள்ளிவிட்டதற்குக் காரணங்களை எழுதி வைக்க வேண்டும், ஆனால்; (ஊ) பகுதியில் குறிப்பிட்டிருக்கும் நிலங்கள், கட்டிடங்கள் குத்தகை முதலில் வழங்கப்பெற்றவருக்கே அதைப் புதுப்பித்துக் கொடுப்பது அனுகூல மாயிருந்தால் ஊராட்சி, மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொண்டு, வெளிப்படை ஏலம் அவசியமில்லையெனத் தீர்மானிக்கலாம்.

(2) ஏலம் கேட்டு வெற்றி பெற்றவர் தாம் செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் செலுத்தாத வரையில், விற்கப்பட்ட பொருள்களை அவர் வசப் படுத்திக் கொள்ளவிடக் கூடாது.

(3) எல்லா விற்பனைகளையும், பல்வகை விற்பனைகள் பதிவேட்டில் காட்ட வேண்டும்; வரப் பெற்றுக் கொள்ளப்பட்ட எல்லா விற்பனைத் தொகைகளையும் அதில் எழுத வேண்டும்.

13. கட்டணங்களை வசூலிப்பதற்காகப் பிணையம்.—மரங்களின் விளைச்சலின் அல்லது மேல் மராமத்தின் குத்தகையின், அல்லது அங்காடிகள் வண்டிப் பேட்டைகள், இறக்குமிடங்கள் அல்லது தங்குமிடங்கள், கால்நடை வெட்டு மிடங்கள், மின் துறைகள் சம்பந்தமாகக் கட்டணங்கள் வசூலிக்கும் உரிமையின் குத்தகையின் அல்லது அதே மாதிரியான வேறொரு உரிமையின் குத்தகையின் வரையறைகள் முறைப்படி நிறைவேற்றப்படுவதற்காக, எல்லாவற்றிலும் செயல் அதிகாரி போதுமானதெனக் கருதும் பிணையம் வாங்க வேண்டும். குத்தகை தாரர் குத்தகையின் வரையறைகளையெல்லாம் திருப்திகரமாக நிறைவேற்றி னலன்றி மற்றப்படியும் நிறைவேற்றுகிற வரையிலும், அவ்வாறு வாங்கப்பட்ட பிணையத்தைத் திருப்பிக் கொடுக்கக் கூடாது. ஆனால், குத்தகையின்படிச் சேர வேண்டிய கடைசித் தவணையினிமித்தம் பிணையத் தொகையைச் சரிக்கட்டி விடலாம்.

14. பணத்தைப் பெற்றுக் கொள்வது.—செயல் அதிகாரியால் அல்லது அவர் அனுமதியைப் பெற்றுக்கொண்டு அரசுப் பணியாளர் என்ற முறைமையில் யாருடைய பணி ஊராட்சியின் வசம் விட்டுவைக்கப்பட்டுள்ளதோ அந்தப் பணியாளர் உட்பட ஊராட்சியின் ஓர் அலுவலர் அல்லது பணியாளரால் பெற்றுக் கொள்ளப்படுகிற எல்லாப் பணத்துக்கும், அவை பெற்றுக் கொள்ளப் பட்டவுடனே கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் எல்லாப் பணத்தையும் அன்றுடம் ஊராட்சி அலுவலகத்தில் செலுத்திட வேண்டும்.

15. பணத்தைப் பயன்படுத்துவது.—ஊராட்சியின் சார்பாகப் பெற்றுக் கொள்ளப்படும் பணத்துக்கு முதலில் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஊராட்சி நிதிகள் போட்டு வைக்கப்படுகிற கருவூலம், வங்கி அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் செலுத்தப்பட்ட அல்லது வைக்கப்பட்ட பிறகுதான் அதை ஊராட்சியின் செலவுக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

16. கருவூலம், வங்கி அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் பணம் செலுத்துவது.—கருவூலம், வங்கி அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் ஒவ்வொரு தடவையும் பணம் கட்டும்போது செலுத்துச் சீட்டு (சலான்) மூலமாகக் கட்ட வேண்டும்; செலுத்தப்பட்ட தொகை அதன் தன்மை, இன்னாரின் அல்லது இன்ன அலுவலகத்தின் கணக்கில் அது செலுத்தப்படுகிறதென்பது ஆகியவை அந்த செலுத்துச் சீட்டில் கண்டிருக்க வேண்டும்.

17. மூலதன வரவினங்களைச் சாதாரணச் செலவுக்குப் பயன்படுத்துவது.—ஒரு ஊராட்சி நிலம், கட்டிடம் அல்லது இயந்திரங்களை விற்று வந்த தொகையைப் போன்ற மூலதன வரவினங்களை மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், சாதாரணச் செலவுக்குப் பயன்படுத்தக் கூடாது.

18. வசூல் புத்தகம் வழங்குதல்.—ஊராட்சி அலுவலகத்திலிருந்து ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பேரில் ஊராட்சிக்குச் சேர வேண்டிய வருவாயை வசூலிக்கும் வேலை ஒப்புவிக்கப் பெற்றுள்ள ஊராட்சிப் பணியாளர் அல்லது ஊர்த் தலைவர் ஒவ்வொருவருக்கும் வசூல் புத்தகம் ஒன்றை வழங்க வேண்டும்.

19. வரிகளையும் மற்ற வருவாய்களையும் வசூலிப்பது.—வரி வசூலிப்பவர்கள் அல்லது வேறு புற வேலைக் கீழ் அலுவலர்கள் அல்லது ஊர்த் தலைவர்கள் வசூலித்த வரிகளையும் வேறு ஊராட்சி வருவாயையும், ஊராட்சி அலுவலகத்தில் வைத்துவரப்படும் வசூல் பதிவேடு மூலமாக ஊராட்சி அலுவலகத்தில் செலுத்தி விட வேண்டும்.

20. பற்றுச் சீட்டுகள் கொடுப்பது.—அலுவலக வசூல் பதிவேட்டில் பெற்றுக் கொண்டதாக ஏற்றுக் கொள்ளப்படும் வரவுகள் தவிர, பொது மக்களிடமிருந்து ஊராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படுகிற எல்லாப் பணத்துக்கும், அரசாங்கத்தாரால் விதிக்கப்பட்ட படிவத்தின்படி பற்றுச் சீட்டுகள் கொடுக்க வேண்டும். அப் பற்றுச் சீட்டுகளில் செயல் அதிகாரியாவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள வேறொருவராவது கையெழுத்திட வேண்டும்.

21. பண வரவு செலவுக் குறிப்பேடும் துணைப் பதிவேடுகளும்.—செயல் அதிகாரி ஊராட்சி அலுவலகத்தில், பின்வரும் கணக்குகளையும் பதிவேடுகளையும் அரசாங்கத்தார் அவ்வப்போது விதிக்கக் கூடிய படிவத்தின்படி வைத்துவர வேண்டும் அல்லது வைத்து வரும்படிச் செய்ய வேண்டும் :—

(1) பண வரவு செலவுக் குறிப்பேடு.

(2) வண்டிகள் வரி வசூல் பதிவேடு.

(3) உரிமங்களையும் அனுமதிகளையும் பற்றிய பதிவேடு.

(4) பல்வகைக் கேட்புப் பதிவேடு.

(5) வருவாய் தரும் உடைமைகள் பற்றிய பதிவேடு.

(6) தண்டல் புத்தகம்.

(7) பணம் கொடுக்கலாமென்று அங்கீகரிக்கப்பட்ட பட்டியல்களின் பதிவேடு.

(8) பல்வகை விற்பனைகள் பற்றிய பதிவேடு.

(9) பல்வகைப் பட்டியல் பதிவேடு.

(10) கட்டளைகளையும் பொறுப்பு நிறுவனங்களையும் பற்றிய பதிவேடு.

(11) சிட்டை.

(12) செல்லும் சீட்டு பதிவேடு.

(13) பல்வகை வரவினங்கள்.

(14) தணிக்கைப் பதிவேடு.

பாகம் II—செலவு.

22. ஊராட்சியிலிருந்து பணம் கொடுப்பது.—ஊராட்சியினிடம் கொடுத்துக் கொள்ளப்படுகிற பட்டியல்க்ள் சம்பந்தமாக, செயல் அதிகாரியாவது செயல் அதிகாரியினிடமிருந்து இதன்பொருட்டு முறைப்படி அதிகாரம் பெற்றுள்ள ஒருவராவது பட்டிகளை அங்கீகரித்தபிறகுதான் ஊராட்சி நிதியிலிருந்து பணம் கொடுக்க வேண்டும்.

23. காசோலை (செக்) மூலமாகப் பணம் கொடுப்பது.—தாப்பினர் கணக்கு, ஊராட்சி நிதிகள் போட்டு வைக்கப்படுகிற கருவூலம் வங்கி அல்லது கூட்டுறவுச் சங்கத்துக்கு எழுதப்படும் காசோலைகள் மூலமாகத்தான் பணம் கொடுக்க வேண்டும். செயல் அதிகாரி தமக்குக் கொடுத்துக்கொள்வதற்காகவும் பணியாளர் அமைப்புக்குக் கொடுப்பதற்காகவும் பணம் எடுக்க மட்டுமே காசோலைகளை எழுத வேண்டும். ஒரு ஊராட்சியின் நிதிகள் அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் போட்டு வைக்கப்பட்டிருந்தால், செயல் அதிகாரி கொடுப்பதற்காக வேண்டிய வங்கிச் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

24. நிலையான முன்பணத்துக்கு ஒப்பளிப்பு.—சில்லறைச் செலவினங்களைச் செய்வதற்காக செயல் அதிகாரிக்கு ஊராட்சி நிலையான முன்பணத்துக்கு ஒப்பளிப்பு வழங்கலாம். சில்லறைச் செலவுப் பதிவேட்டில் அந்த விவகாரங்களை எழுதி வைக்க வேண்டும்; நிலையான முன்பணம் தீர்ந்துபோகும்போதெல்லாம் அதை ஈடு செய்தல் வேண்டும்.

25. காசோலைகளை எழுதுதல்.—ஊராட்சியின் செயல் அதிகாரியாவது, அரசாங்கக் கருவூலம் அல்லது வங்கி அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் போட்டு வைக்கப்பட்டிருக்கிற ஊராட்சி நிதிகளிலிருந்து பணம் எடுப்பதற்காகக் காசோலைகள் எழுத அதிகாரம் பெற்றிருக்கிற ஊராட்சியின் வேறு அலுவலராவது தற்காலிகமாக அல்லது நிலையாகப் பதவிப் பொறுப்பை மாற்றும் போது, அவர் விடுவிக்கும் அலுவலரின் கையெழுத்தின் மாதிரியையும் சான்றினையும் கீழ்க்கண்ட படிவத்தில் உள்ள கருவூல அலுவலருக்கேனும் வங்கியின் உள்ளூர் அலுவலருக்கேனும் அஞ்சலகத் தலைவருக்கேனும் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளருக்கேனும் ஏற்றவாறு அனுப்ப வேண்டும்.

சான்றின் படிவம்.

அ. ஆ.

விடுவிக்கும் அலுவலரின்
கையெழுத்தும் பதவிப்
பெயரும்.

19. (மாதம்) (தேதி) நான் முற்பகலிலிருந்து/பிற்பகலிலிருந்து என் பதவிப் பொறுப்பை நான் மாற்றி ஒப்புவித்திருக்கிற அலுவலரின் கையெழுத்து மேலே உள்ளதென்று நான் சான்றிடுகிறேன்.

இ. ஈ.

பொறுப்பை மாற்றி
ஒப்புவிக்கும்
அலுவலரின் கையெழுத்தும்
தேதியும்.

26. காசோலைப் புத்தகங்களை வைத்துவருதல்.—பணம் எடுக்க ஒப்பமிடும் அதிகாரியின் சொந்தப் பொறுப்பில் காசோலைப் புத்தகங்களை வைத்திருக்க வேண்டும்; பதவி மாற்றம் ஏற்படும்போது, பண வரவுசெலவுக் குறிப்பேட்டில் ஒரு குறிப்பு எழுதி வைத்து, அதற்கு, விடுவிக்கப்பெற்ற அலுவலரும் விடுவிக்கும் அலுவலரும் கையெழுத்திட வேண்டும்; பயன்படுத்தப்படாத காசோலைகளின் எண்ணிக்கை, அவர்கள் முறையே ஒப்புவித்துப் பெற்றுக்கொண்ட காசோலைப் புத்தகங்களின் எண்ணிக்கை ஆகியவை அக் குறிப்பில் காட்டப் பட்டிருக்க வேண்டும்.

27. ஊராட்சி நிதியிலிருந்து பணம் கொடுக்கும்படி கேட்பதற்கான நடைமுறை.—ஊராட்சி நிதியிலிருந்து பணம் கொடுக்கும்படி கேட்கும் உரிமையுள்ள ஒவ்வொருவரும் ஊராட்சி அலுவலகத்தில் ஒரு பட்டியல்கொடுக்க வேண்டும். இயலும் இடங்களிலெல்லாம், அப் பட்டியல் இதன் பொருட்டு படிவம் ஏதேனும் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அதன்படி இருக்க வேண்டும்; பணம் கொடுக்கும்படி கேட்பவர் அதில் முறைப்படி கையெழுத்தும் தேதியும் போட்டு, அவசியமானுல் அதில் முத்திரை வில்லை ஒட்ட வேண்டும்.

(2) பட்டியல்களைத் தயாரிக்கையில் இயலும் இடங்களிலெல்லாம் அச்சிட்ட படிவங்களைப் பயன்படுத்த வேண்டும்.

(3) பணம் கொடுக்கும்படி கேட்பவர், இதன்பொருட்டு ஏற்படுத்தப் பட்டுள்ள படிவத்தினின்றும் வேறான படிவத்தில் பட்டியலைக் கொடுத்தால், செலவு செய்யும் அலுவலர் சரியானபடிவத்தில் தனிப் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க வேண்டும்; பணம் கொடுக்கும்படிக் கேட்பவரின் பட்டியலைத் துணைச் செலவுச் சீட்டாக அதனுடன் இணைக்க வேண்டும்.

(4) பட்டியல் ஒவ்வொன்றையும் ஊராட்சியின் தலைமை நிலைப் பணி அலுவலரிடம் கொடுக்க வேண்டும்; அவர் அதைப் பட்டியல்களின் பதிவேட்டில் எழுதிக் கொண்டு, பிறகு, ஒப்பளிப்பு அல்லது மற்ற ஆவணங்கள், பணம் கொடுக்கும்படி கேட்கும் உரிமையின் நியாயம், கணக்கு புள்ளி ஆகியவற்றைச் சரிபார்த்து அது ஏற்றுக் கொள்ளத்தக்கதா என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டும். அவ்வாறு சரிபார்த்து ஆய்வு செய்வதன் பேரில் பட்டியல் சரியாகவும் முறைப்படியும் இருக்கிறதெனத் தெரியவந்தால் பட்டியலில் பணம் கொடுப்பதற்கான ஆணையில் கையெழுத்திடுவதற்காக அதைச் செயல் அதிகாரியின் முன் வைக்க வேண்டும்.

28. பணம் பெற்றுக் கொண்டதாக ஏற்பளிப்புகள்:—(1) சம்பளம் அல்லது படி கொடுக்கப்பெறும் ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரிடமிருந்தும் (அவசியமானுல் முத்திரை வில்லை ஒட்டி) தனி ஏற்பளிப்புகளைப்

பெற வேண்டும்; ஆனால், பட்டியல் எழுதுபவர் தாம் ஒருவர் மட்டும் பணம் பெறுபவராயிருந்து பட்டியலிலேயே (அவசியமானால் முத்திரை வில்லை ஒட்டி) எற்கெனவே பற்றுச் சீட்டுக் கொடுத்திருந்தால், மேற்சொன்னவாறு தனி ஏற்பளிப்புகளைப் பெற வேண்டியதில்லை.

(3) ஊராட்சி அலுவலர் அல்லது பணியாளர் ஒருவர் தான் எடுத்த தொகையிலிருந்து பணம் கொடுத்தால், அவர், (அவசியமானால் முத்திரை வில்லை ஒட்டிய) பற்றுச் சீட்டுப் பட்டியலிலேயே கொடுக்கப்பட்டிருந்தாலன்றி (அவசியமானால் முத்திரை வில்லை ஒட்டிய) தனிப்பற்றுச் சீட்டு ஒன்றை வாங்கிப் பட்டியலுடன் இணைக்க வேண்டும்.

29. **செலவுக்கு ஒப்பளிப்பு.**—ஒரு செலவினத்துக்குப் பட்டியல் எழுதும் அலுவலருக்கு அல்லது பணியாளருக்கு மேற்பட்ட ஓர் அதிகாரியின் ஒப்பளிப்பு தேவைப்பட்டால் அத்தகைய ஒப்பளிப்பைப் பெற வேண்டும்; அதன் வரையறைகளைப் பட்டியலில் எடுத்தெழுத வேண்டும்.

30. **செலவுக்கு ஒப்பளிப்பு வழங்கியதற்குச் சான்று.**—(1) ஒரு செலவினம் சம்பந்தமாகப் பின்வரும் படிவப்படி சான்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அச் செலவினத்துக்கு ஊராட்சி ஒப்பளிப்பு வழங்கக்கூடாது:—

ரூ.

என்னும் தலைப்பின்கீழ்

ரூபாய் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து இத் தொகையைக் கொடுக்கலாம்.

நாளது வரை இத் தலைப்பின் கீழ்ச் செலவிடப் பட்ட தொகை.

நாளது வரையில் ஒப்பளிக்கப்பட்டுச் செலவிடப் படாத தொகை.

இப்போது ஒப்பளிக்க வேண்டிய தொகை.

மொத்தம்

எஞ்சியுள்ள இருப்பு.

சம்பந்தப்பட்ட தலைப்பின்கீழ் வரவு-செலவுத் திட்ட ஏற்பாடு செய்யப் படாதிருந்து, மற்றொரு தலைப்பிலிருந்து மறு ஒதுக்கம் செய்து அத் தொகையைப் பெற ஊராட்சி தீர்மானித்தால், 'ஒதுக்கீட்டிலிருந்து' என்னும் சொல்லுக்குப் பிறகு 'மறு ஒதுக்கம் செய்து' என்னும் சொற்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தச் சான்றினை நிகழ்ச்சி நிரலில் எழுதி, கூட்டம் நடப்பதற்கு முன் சுற்றறிக்கையாக அனுப்ப வேண்டும்; இதை ஊராட்சி ஏற்றுக் கொண்டால் நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் தீர்மானத்தின் பாகமாக இதை மீண்டும் எழுத வேண்டியதில்லை. ஆயினும், செலவுத் தொகையிலாவது செலவு செய்யப்படு தற்குரிய தலைப்பிலாவது ஊராட்சி ஏதேனும் மாறுதல் செய்தால், திருத்தப் பட்டப்படியுள்ள சான்று, ஊராட்சித் தீர்மானத்தின் பாகமாயிருக்கும்; அதை அந்த வடிவத்திலேயே நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் எழுத வேண்டும்.

(2) ஒரு புதிய செலவுக்கான ஒப்பளிப்பு ஓர் ஆண்டுக் காலம் வரையில் செயற்படுத்தப்பட்டிராவிட்டால், அது திட்டவட்டமாக புதிப்பிக்கப்பட்டா லொழிய அது காலாவதியாகவிட்டிருப்பதாகக் கருதப்படும்:

ஆனல், இந்த உள்விதி பின்வருபவைகளுக்குப் பொருந்தாது :—

(அ) ஒரு வகையைச் சேர்ந்த அலுவலர்களின் நியமனத்துக்காக வென்று ஒப்பளிக்கப்பட்ட படியை, அந் நியமனத்தில் குறிப்பிட்ட பதவியை வகிப்பவர் ஒருவர் அல்லது குறிப்பிட்ட சில அலுவலர்கள் வாங்காதிருப்பது;

(ஆ) தக்க அதிகாரிக்கு குழுவினரால் ஒப்பளிக்கப் பெற்றிருக்கிற ஒரு பொதுத் திட்டத்தின்படி, நிலையான பணியாளர் தொகுதியுடன் ஆண்டுதோறும் படிப்படியாகச் சேர்க்கப்படும் பதவிகள்;

(இ) (3) உள்விதியில் கண்டுள்ள ஏற்பாடுகளினுல் முறைப்படுத்தப் படும் பணிகளுக்கான செலவு.

3. (அ) வழக்கமாக ஆண்டுப் பாராமரிப்பு மதிப்பீட்டுக்கான ஒப்பளிப்பு, அது சம்பந்தப்படுகிற நிதி ஆண்டின் கடைசி நாளன்று காலக் கழிவு ஆகி விடும். ஆயினும் அத் தேதியன்று பணியை நிறுத்திவிடுவதனுல் ஒரு தனி நிகழ்வில் வசதிக் குறைவு ஏற்படுமானுல், செப்பனிடுகளைச் செய்து முடித்துவிட வேண்டும்; அத் தேதிக்குப் பிறகு செய்யப்படும் செலவை, அடுத்த ஆண்டுக்கான புதிய செப்பனீட்டு மதிப்பீட்டின் பொருட்டான செலவாகக் கருத வேண்டும்.

(ஆ) தனிச் செப்பனீடுகளுக்கான மதிப்பீடுகள், மூலப் பணிகளுக்கான மதிப்பீடுகளைப் போலவே, செப்பனீடுகள் முடியும் வரையில் செல்லுபடியாகும்.

(இ) ஆண்டுப் பாரமரிப்பு அல்லாத வேறொரு பொதுப் பணிக்கான மதிப்பீட்டுக்கு ஏற்பு அல்லது ஒப்பளிப்ப, அப் பணி தொடங்கப் பட்டிருந் தாலன்றி மற்றப்படி, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்ருண்டுக் காலத்துக்குப் பிறகு செயற்படாமற் போய்விடும்.

31. உரிமைக் கோரிக்கைகளுக்குக் கால வரையறை.—ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் ஒருவருக்குச் சம்பந்தப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் இதன்பொருட்டுத் தனியாகச் செய்யப்படும் விதிகளினால் முறைப்படுத்தப்படும். அவைகள் அல்லாத ஊராட்சியின் மீதான உரிமைக் கோரிக்கை எதையும்.

(1) அது சம்பந்தமான பட்டியல் உரிமை சேர வேண்டியதாகிவிட்ட தேதியிலிருந்து ஆறு மாதத்துக்கு மேற்பட்டும் ஓர் ஆண்டுக்குட்பட்டும் கொடுக்கப்பட்டால் செயல் அதிகாரியின் ஆணையைப் பெற்றுக் கொள்ளாமலும்,

(2) அப் பட்டியல் உரிமை சேர வேண்டியதாகிவிட்ட தேதியிலிருந்து ஓர் ஆண்டுக்கு மேற்பட்டு கொடுக்கப்பட்டால், ஊராட்சியின் ஆணையைப் பெற்றுக் கொள்ளாமலும் எடுத்துக் கொள்ளக் கூடாது.

32. மிகையாகக் கொடுப்பது.—மிகையாகக் கொடுப்பதற்கான பொறுப்பு, பட்டியல் தயாரிப்பவரையே முதன்மையாகச் சாரும்; மிகையாகக் கொடுத்ததை ஈடு செய்யும்படி அவரைக் கேட்க வேண்டும். அவரிடமிருந்து தண்டல் செய்ய முடியாவிட்டால், மிகையாகக் கொடுத்த தொகையைப் பட்டியலில் மேலொப்பமிடுகிற அல்லது அதை அங்கீகரிக்கிற அலுவலரிடமிருந்து தண்டல் செய்ய வேண்டும்; அவர்களில் ஒருவர் குற்றத்திற்குரிய அளவுக்கு அசட்டையாயிருந்தால்தான் அவ்வாறு தண்டல் செய்ய வேண்டும்.

33. பணம் அல்லது முத்திரை வில்லைகளைக் கையாடல் அல்லது அவற்றின் இழப்பு.—(1) ஊராட்சிக்குச் சொந்தமான பணம் அல்லது முத்திரை வில்லைகள் கையாடப்பட்டதை அல்லது அவைகளின் இழப்பைக் கண்டு பிடித்தவுடனே அதைப் பற்றி, 1953-ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தில் கண்ட 141-ஆவது பிரிவின்படி நியமிக்கப்பட்ட தணிக்கையாளருக்குத் தெரிவிக்க வேண்டும். இது பற்றி முழு விசாரணை செய்தான பிறகு கூடிய விரைவில் மேற்கொண்டு நிறைவான அறிக்கை ஒன்றையும் அந்தத் தணிக்கையாளருக்கு அனுப்ப வேண்டும்; அப்போது, கையாடல் அல்லது இழப்பின் தன்மையையும், அளவையும் இன்ன தவறுதல்களினால் அல்லது விதிகளை இன்னவாறு அசட்டை செய்ததனால் அவ்வாறு கையாடல் செய்ய முடிந்தது அல்லது இழப்பு நேர்ந்தது என்பதையும் இழந்ததைத் தண்டல் செய்வதற்கான கூறுகளையும் கண்டெழுத வேண்டும்.

(2) ஊராட்சிக்குச் சொந்தமானதும் பத்து ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புடையதுமான வேறு உடைமை திருடப்பட்டு அல்லது வேறு விதமாகக் காணாமற்போய்விட்டால், அதைப் பற்றிக் கூடத் தணிக்கையாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(3). (1), (2), உள்விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட அறிக்கைகளை அனுப்புவதனால், ஊராட்சி அல்லது செயல் அதிகாரி மேற்கொண்டு அவசியமெனக் கருதப்படக் கூடிய நடவடிக்கை ஏற்படுவதற்குத் தடையிருப்பதாக் கருதப்பட மாட்டாது.

குறிப்புகள்.—(i) நியாயமான தேய்வுமானமாயிராமல் மற்றப்படி நெருப்பு அல்லது வெள்ளம் போன்ற இடரினால் ஊராட்சிகளுக்குச் சொந்தமான அசையாப் பொருளுக்கு ஏற்படும் இழப்பைப் பற்றிக்கூட, இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் தணிக்கையாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(ii) ஊராட்சிகளுக்குச் சொந்தமான அசையாப் பொருளின் பாகத்துக்கு நேரிடும் சேதம் மூலமாக இழப்பு உண்டானால், சேதப்படுத்தப்பட்ட பாகம், அவ்வாறு சேதம் நேரிட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலத்துக்குள் பதிலமர்த்திடு செய்யப்பட்டால் அல்லது புதுப்பிக்கப்பட்டால், சேதமடைந்த பாகத்தின் மதிப்பைத் தள்ளுபடி செய்ய வேண்டியதில்லை.

(iii) சேதப்படுத்தப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட தற்காலிகக் கட்டுக்கோப்புகள் உத்தேசிக்கப்பட்ட காலம் பயன்பட்டிருந்து, அதனால் அவற்றைப் பதிலமர்த்திடு செய்ய அல்லது புதுப்பிக்க கருதவில்லையானால், அவற்றின் மதிப்பைத் தள்ளுபடி செய்யும் காரியத்துக்காக, சேதப்படுத்தப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட தேதியன்று இருந்தபடி அக் கட்டுக்கோப்புகளின் மதிப்பைக் கணக்கிட வேண்டும்.

34. பணியாளர் அமைப்புச் சம்பளப் பட்டியல்கள்.—அரசாங்கத்தார் அவ்வப்போது விதிக்கக் கூடிய படிவத்தின்படி சம்பளப் பட்டியல்களைத் தயாரிக்க வேண்டும். பணியாளர் அமைப்பின் மாதச் சம்பளப் பட்டியலுக்கு ஆதாரமாக, அரசாங்கத்தார் அவ்வப்போது விதிக்கக் கூடிய படிவத்தின்படி 'வராதவர் விவரப் பட்டியலை' வைக்க வேண்டும் அல்லது பணியாளர் அமைப்பைச் சேர்ந்த எவருக்கும் விடுப்பு வழங்கப்படவில்லையென்று பட்டியலில் சான்று எழுதவேண்டும்.

35. ஊதிய உயர்வுச் சான்றுப் படிவம்.—காலமுறை ஊதிய உயர்வு வாங்கப் படுகிற முதல் சம்பளப் பட்டியலுடன்கூட, அரசாங்கத்தார் அவ்வப்போது விதிக்கக் கூடிய படிவத்தின்படி ஊதிய உயர்வுச் சான்றினை இணைக்க வேண்டும்.

36. அலுவலர்களின் சம்பளத்தை வாங்குவது.—ஒரு ஊராட்சியின் பணிக்கு அரசாங்கத்தாரால் அனுப்பட்ட அல்லது வேறொரு உள்ளாட்சிக் கழகத்திலிருந்து அதற்கு மாற்றப்பட்ட ஓர் அலுவலரின் அல்லது பணியாளரின்

சம்பளத்தை, அவருடைய முந்திய அலுவலகத் தலைவர் வழங்கி முன் ஊதியச் சான்றினைப் பெற்றுக்கொண்ட பிறகுதான் வாங்க வேண்டும்; இச்சான்று அரசாங்கத்தார் அவ்வப்போது விதிக்கக்கூடிய படிவத்தின்படி இருக்க வேண்டும். அவ்வாறு அனுப்பப்பட்ட அல்லது மாற்றப்பட்ட பிறகு எழுதப் படும் முதல் சம்பளப் பட்டியலுடன் அச்சான்றினை இணைக்க வேண்டும்.

37. இறந்துபோன அலுவலர் அல்லது பணியாளருக்குச் சேர வேண்டிய பணம்.—(1) ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் இறந்துபோன நாளுக்காகச் சம்பளம், விடுப்புச் சம்பளப்படி ஆகியவற்றை வாங்கலாம்; இன்ன நேரத்தில் இறப்பு நேரிட்டதென்பது அவ்வுரிமையைப் பாதிக்காது.

(2) ஊராட்சியின் அலுவலர் அல்லது பணியாளர் ஒருவர் இறந்து போனால் அவருக்குச் சேர வேண்டிய பணத்தை, (1925-ஆம் ஆண்டின் XXXIX ஆவது மையச் சட்டமாகிய) 1925 ஆம் ஆண்டின் இந்திய வழி யுரிமைச் சட்டத்தில் கண்ட 214-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (i), (ii), (iii), (iv) அல்லது (v) பகுதிகளில் குறிப்பிட்டுள்ள தன்மை வாய்ந்த ஓர் அதிகாரப் பத்திரத்தைக் காட்டினாலொழிய கொடுக்கக் கூடாது. ஆனால்—

(i) பணம் கொடுக்கும்படிக் கேட்பவரின் உரிமை, உரிமை மூலம் ஆகியவற்றைப் பற்றி, ஊராட்சி போதுமானதென்று கருதக்கூடிய விசாரணை செய்தபிறகு மனநிறைவு ஏற்படுமானால், அதன் ஆணைகளின்படி 25 ரூபாய் வரையிலும்;

(ii) பணம் கொடுக்கும்படிக் கேட்பவரின் உரிமை, உரிமை மூலம் ஆகியவைகளைப் பற்றி மாவட்ட ஆட்சியாளர் போதுமானதென்று கருதக்கூடிய விசாரணை செய்த பிறகு அவர் மனநிறைவு அடைந்து அத்தகைய அதிகாரப் பத்திரத்தைக் காட்டும்படி வற்புறுத்துவதனால் அதிகக் காலதாமதமும் இடர்ப் பாடும் உண்டாகுமென அவர் கருதினாலும் அவர் கேட்கக் கூடிய ஈடு அல்லது ஈடுகளுடன் ஈட்டுறுதி ஆவணம் எழுதிக் கொடுக்கப்படுவதன் பேரில், மாவட்ட ஆட்சியாளர் ஆணைகளின்படி 25 ரூபாய்க்குமேற்பட்டும்;

மேற்கண்ட அதிகார பத்திரத்தைக் காட்டாமலேயே பணம் கொடுக்கலாம்.

38. சம்பளப் பாக்கியை வாங்குவது.—சம்பளப் பாக்கியை ஒரு தனிப் பட்டியலில் எழுதி வாங்க வேண்டுமேயல்லாமல், மாதப் பட்டியலில் எழுதி வாங்கக் கூடாது. இன்ன பட்டியலிருந்து அந்தப் பொறுப்பு விட்டு விடப் பட்டது அல்லது நிறுத்தி வைக்கப்பட்டது அல்லது இன்ன பட்டியலில் கழித்துக் கொள்வது மூலமாக அது திருப்பிக் கொடுக்கப்பட்டது என்பதை அந்தத் தனிப் பட்டியலில் குறிப்பிட வேண்டும்.

39. சம்பளப் பட்டியல்களில் கையெழுத்திட்டு அவற்றிற்கு ஒப்புதல் அளிக்க வேண்டிய அதிகாரி.—செயல் அதிகாரி சம்பளப் பட்டியல்களில் கையெழுத்திட்டு, அவற்றிற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

40. சம்பளங்களையும் படிகளையும் கொடுக்கும் நாள்.—சம்பளங்களையும் படிகளையும் எந்த மாதத்துக்காகக் கொடுக்க வேண்டுமோ அந்த மாதத்துக்கு அடுத்துவரும் மாதத்தின் முதல் அலுவல் நாளுக்கு முந்தி அவைகளைக் கொடுக்கக் கூடாது.

ஆனால், ஓர் அலுவலர் அல்லது பணியாளர் ஊராட்சிப் பணியை விட்டு முடிவாக நீங்கிவிடும்போது அல்லது வேறொரு உள்ளாட்சிக் கழகத்தின் அல்லது அரசாங்கத்தாரின் பணிக்கு மாற்றப்படும்போது, அவ்வாறு நீங்கும் அல்லது மாற்றப்படும் தேதியன்று பணம் கொடுத்துவிடலாம்.

மேலும், ஒரு மாதத்தின் முதல் ஆறு நாட்கள் பொது விடுமுறைத் தினங்களாயிருந்து, அப்போது கருவூலத்திலாவது வங்கியிலாவது பணம் கொடுக்கப்படாத நிலை ஏற்பட்டால் அந்த விடுமுறைகளுக்கு முந்தியுள்ள கடைசி வேலைத் தினத்தன்று பணம் வாங்கிக் கொடுக்கலாம்.

41. பட்டியலில் பணம் வாங்குபவருடைய பொறுப்பு.—சம்பளம், படிகள் ஆகியவற்றை வாங்குவதற்காகப் பட்டியல் தயாரிப்பவர், அவ்வாறு வாங்கப்படும் தொகை சம்பந்தப்பட்டவர் அல்லது சம்பந்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டு, அவர்களுடைய பற்றுச் சீட்டுகள் பெற்றுக் கொள்ளப்பட்டாகிறவரையில், அத் தொகைக்கு நேர் பொறுப்பாளியாவார். பணம் பெறுவதற்குரியவர் பணம் வாங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வாராவிட்டால், அவருக்காக வாங்கப்பட்ட தொகையை, அடுத்த பட்டியலில் குறைத்து வாங்குவதன் பேரில் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். வாங்கப்பட்ட சம்பளத்தையும் படிகளையும் எச் சூழ்நிலையிலும் வைப்பிட்டில் போட்டுவிடக் கூடாது.

42. தணிக்கைப் பதிவேடு.—பணியாளர் அமைப்புப்படி வீட்டு வாடகைப் படி, ஊர்திப்படி போன்ற மீளும் செலவுகளுக்கான மாதப் பட்டியல்களைச் சரி பார்ப்பது வசதியாயிருக்கும்பொருட்டு, ஒவ்வொரு ஊராட்சியின் அலுவலகத்திலும் தணிக்கைப் பதிவேடு ஒன்றை வைத்துவர வேண்டும்.

43. பயணப்படி வாங்குவது.—நிலையான பயணப்படி அல்லாத மற்றப் பயணப்படிகளை, அரசாங்கத்தார் அவ்வப்போது விதிக்கக் கூடிய படிவத்தின்படி தனிப் பட்டியல் மூலமாக வாங்க வேண்டும்.

44. ஊர்திப்படி வாங்குவது.—சம்பந்தப்பட்ட அலுவலரின் அல்லது பணியாளரின் சம்பளப் பட்டியலில் ஊர்திப்படியை வாங்க வேண்டுமேயல்லாமல், பயணப்படிப் பட்டியல்களில் வாங்கக் கூடாது. ஊர்திப் படிக்கான பட்டியல் ஒவ்வொன்றுடனும், அந்த ஊர்தி உள்ளபடி நல்ல நிலைமையில் வைக்கப்பட்டிருந்ததென்றும், அந்த மாதத்தில் பயன்படுத்தப்பட்டதென்றும் கண்டுள்ள சான்று ஒன்றை இணைக்க வேண்டும்.

45. எல்லாப் பட்டியல்களையும் ஊராட்சிக்கு முன் வைப்பது.—ஒரு மாதத்திலே ஊராட்சியின் ஒப்பளிப்புடனோ ஒப்பளிப்பு இல்லாமலோ செய்யப்படுகிற செலவுக்கான பட்டியல்கள் எல்லாவற்றையும், ஊராட்சி அவசியமெனக் கருதக் கூடிய ஆராய்வுக்குப் பிறகு ஏற்றுக் கொள்ளும்பொருட்டுக் கூடிய விரைவில் அதன் முன் வைக்க வேண்டும்.

இணைப்பு.

33-ஆவது விதியைச் சேர்ந்த (3) உள்விதியின் ( ) குறிப்பைப் பார்க்கவும்

ஊராட்சிகளுக்குச் சொந்தமான அசையாப் பொருளுக்குத் நேர்ந்த சேதம் பற்றிய அறிவிப்பு.

1. துறை.

2. இடம்.

3. சேதமான அல்லது அழிந்துபோன
உடைமை பற்றிய விவரம்.

4. சேதத்தின் அல்லது அழிவின்
காரணம்.

5. சேதம் அல்லது அழிவு நேர்ந்தபோது
உடைமையின் சேதமான அல்லது
அழிந்துபோன பாகத்தின் மதிப்பு.

6. (அ) சேதமான அல்லது அழிந்துபோன
பாகத்தைப் பதிலமர்த்திடு செய்ய
அல்லது புதுப்பிக்க உத்தேசித்
திருக்கிறதா ?

(ஆ) அப்படியானால், பதிலமர்த்தீடு
செய்வதன் அல்லது புதுப்பிப்
பதன் குத்துமதிப்பான செலவு
என்ன?

7. உடைமையின் சேதமான அல்லது அழிந்து
போன பாகத்தைப் பதிலமர்த்தீடு
செய்ய அல்லது புதுப்பிக்கக் கருதி
யிராவிட்டால், கணக்குகளில் அந்த
உடைமையின் மூலதன மதிப்பில்
தள்ளுபடி செய்ய வேண்டிய தொகை
யாது?

8. அவ்வாறுதள்ளுபடி செய்வதாயிருந்தால்
அதைச் செயற்படுத்த என்ன நடவடிக்கை
எடுத்துக் கொள்ளப்படுகிறது?

(1962 பெப்ரவரி 1-ஆம் தேதிய 260-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அரசாங்க ஆணை)

(1965 மார்ச் 16-ஆம் தேதிய 637-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை அரசு ஆணை)

(104) மீன் அங்காடிகளை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகைக்கு விடுதல்.—மீன் விற்பனைக்காகவென்றே ஊராட்சிகள் வைத்திருக்கிற அங்காடிகளைக் குத்தகைக்கு விடுவதில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொஞ்சம் சலுகை காட்ட வேண்டுமென அரசாங்கத்தார் கருதினார்கள். ஆகையால், அத்தகைய மீன் அங்காடியில் கட்டணங்களை தண்டல் செய்யும் உரிமையைக் குத்தகைக்கு எடுக்க மீனவர் கூட்டுறவுச் சங்கம் எதுவேனும் விரும்பினால், குத்தகையின் ஏலத்தில் அச்சங்கம் கேட்க வேண்டுமெனவும், மிக அதிகமான தொகைக்குக் கேட்டவர் ஒரு தனியாளாயிருந்து, மிக அதிகமான தொகைக்கான கேள்விக்கும் கூட்டுறவுச் சங்கத்தின் கேள்விக்கும் உள்ள வேற்றுமை 10 சதவீதத்துக்கு மேற்பட்டிராவிட்டால், கூட்டுறவுச் சங்கத்துக்குக் குத்தகை விட வேண்டுமெனவும் அரசாங்கத்தார் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

எந்த ஊராட்சியேனும் மேற்படி கட்டளையைக் கடைப்பிடிக்கக் கருதாவிட்டால், அது அரசாங்கத்தாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(1953 ஜூலை 15 ஆம் தேதிய 1559-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(105) திருடு, தீ முதலியவைகளினுல் உடைமைகளின் இழப்பு.—ஊராட்சிக் சொந்தமான சொத்துக்கு, திருட்டு, தீ அல்லது வேறு தற்செயல் நிகழ்ச்சியினுல் இழப்பு உண்டானுல், ஊராட்சிச் செயல் அதிகாரி விதிகளைச் சேர்ந்த 33 (2) விதியில் நிர்ணயிக்கப்பட்டபடி தணிக்கையாளருக்குத் தெரிவிப்பதோடுகூட, இழக்கப்பட்ட உடைமையின் மதிப்பு 100 ரூபாய்க்கு மேற்பட்டால், உடைமை யின் மதிப்பைத் தள்ளுபடி செய்வதற்காகக்கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப் பைப் பெற வேண்டும். அதன் மதிப்பு 100 ரூபாயாகவோ அதற்குக் குறை வாகவோ இருந்தால், தள்ளுபடி செய்வதற்கு ஊராட்சியே ஒப்பளிப்பு வழங்க லாம்.

(1951 ஜூலை 31-ஆம் தேதிய 1512-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(106) உருவப் படங்களை வாங்குதல்.—மகாத்துமா காந்தி, காலஞ்சென்ற சர்தார் பட்டேல், ஸ்ரீ ஜவஹர்லால் நேரு, இந்தியக் குடி அரசின் தலைவர் ஆகியோரின் உருவப் படங்களை வாங்கித் தங்கள் இடங்களில் வைப்பதற்கான செலவை ஊராட்சிகள் தங்கள் நிதிகளிலிருந்து செய்யலாம்; மற்ற எவர்களு டைய படங்களையும் வாங்கி வைப்பதற்கு அவ்வாறு செலவு செய்யக் கூடாது. உருவப் படம் ஒன்றுக்கு 50 ரூபாய் (ரூபாய் ஐம்பது மட்டும்) வரையில் மேல் ஒப்பளிப்பு இன்றியே அவ்வாறு செலவு செய்யலாம். அந்த உருவப் படங்கள் தங்கள் பள்ளிகளுக்கும் தங்கள் முக்கிய அலுவலகக் கட்டிடங்கள் அல்லாத மற்ற நிறுவனங்களுக்காக உத்தேசிக்கப்பட்டவைகளா யிருந்தால், ஊராட்சிகள் அப்படங்களின் அச்சிட்ட படிகளையே வாங்க வேண்டும்.

(1953 சனவரி 3-ஆம் தேதிய 17-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

ஊராட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியவர்களின் உருவப் படங்களை அந்தந்த ஊராட்சிகளின் இடங்களில் வைப்பது மூலமாக, அவர்களுடைய தொண்டுகளைப் பாராட்டலாம். ஆனுல் அதற்குப் பிடிக்கும் செலவைத் தனிப் பட்ட நிதிகளிலிருந்து எடுத்துச் செய்ய வேண்டும். செலவு முழுவதையும் தனிப்பட்ட நிதிகளிலிருந்து எடுத்துச் செய்வதாயிருந்தால், மற்ற இந்தியத் தேசியத் தலைவர்களின் உருவப் படங்களை வைப்பதற்கு அரசாங்கத்தார் அனுமதி கொடுப்பார்கள், சம்பந்தப்பட்ட தலைவருடைய ஒப்புதலைப் பெற்றுக் கொண்ட பிறகுதான் அந்த உருவப் படங்களை வைப்பதற்கு ஊராட்சிகள் கருத வேண்டும்.

(1953 ஏப்ரல் 23-ஆம் தேதிய 911 எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(107) தொடக்க விழாக்களுக்கான செலவு.—மின் விளக்கேற்றும் திட்டங்கள், தண்ணீர்க் கட்டு வேலைகள், பாலங்கள், சாலைகள் அலுவலகக் கட்டிடங்கள், அங்காடிகள், பூங்காக்கள் ஆகியவற்றின் தொடக்க விழாக்கள்

சம்பந்தமாக 40 ரூபாய்க்கு மேற்படாமல் ஊராட்சிகள் செலவு செய்யலாம்; ஆனால், அந்த விழா அடியிற் கண்ட பெருமக்களில் ஒருவரால் ஆற்றப்பட வேண்டும் :—

இந்தியக் குடியரசின் தலைவர்

தமிழ்நாட்டின் ஆளுநர்

இந்திய அரசின் அமைச்சர்கள்.

தமிழ்நாடு அரசின் அமைச்சர்கள்.

கேளிக்கைகளுக்காகவும் சிற்றுண்டிகளுக்காகவும் செலவு எதையும் செய்யக் கூடாது. இச் சமயங்களில் சிறப்புக்குரியவர்களுக்குப் பாராட்டிதழ்கள் படித்துக் கொடுக்கப்பட்டால் அதற்குப் பிடிக்கும் செலவைத் தனி இனமாகக் கருத வேண்டும்.

(1948 செப்டம்பர் 20-தேதிய 1742-ஆம் எண் அரசு ஆணை.)

(108) கல்லூரிகளுக்கு உதவித் தொகைகள்.—ஊராட்சிகள் தங்கள் நேர் மேலாண்மையின் கீழ் இராத கல்லூரிகளுக்குத் தங்கள் நிதிகளிலிருந்து உதவித் தொகைகள் வழங்கக் கூடாது.

(1952 செப்டம்பர் 12-தேதிய 1836-ஆம் எண் அரசு ஆணை.)

(109) நிறுவனங்களுக்கு உதவித் தொகைகள்.—ஊராட்சிகள் தகுந்த அதிகாரியின் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொண்டு, தங்கள் நிதிகள் இடங் கொடுக்கிற வரையில், தங்கள் பொது நிதிகளிலிருந்து நிறுவனங்களுக்கு உதவித் தொகை வழங்கலாம்; ஆனால்—

(i) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி ஊராட்சியின் அலுவல்களாயிருக்கிற தொண்டுகளை அந்த நிறுவனங்கள் செய்து வருதல் வேண்டும்.

(ii) அந்த நிறுவனங்கள் ஊராட்சியின் ஆட்சி வரம்புக்குள் இருக்க வேண்டும்; அல்லது

(iii) அந்த நிறுவனங்கள் ஊராட்சியின் ஆட்சி வரம்பில் இருக்கிற மக்களுக்குத் தொண்டு புரிந்து வருதல் வேண்டும். (கடந்த காலத்துக்கான புள்ளி விவரங்களை முன்னதாகக் கண்டறிய வேண்டும்.)

(iv) உதவித் தொகையின் நோக்கம் பாராட்டுத் திறனுடையதென்று மெய்ப்பிக்கப்பட்டதாயிருக்க வேண்டும்.

(v) ஊராட்சியின் பொது நிதிகளில் குறைபாடு எதுவும் இருக்கக் கூடாது; மேலும், தன் பணியாளர்களுக்குப் பஞ்சப்படி கொடுப்பதனிமித்தம் அரசாங்கத்தாரிடமிருந்து கொடை எதுவும் பெறுமலேயே உதவித் தொகைக் காகச் செலவு செய்யக் கூடியதாயிருக்க வேண்டும்.

(1952 அக்டோபர் 3-ஆம் தேதிய 1939-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(110) நிலுவைப் பட்டியல்களைப் பற்றிய விவர அறிக்கைகளை அனுப்புவது. —எல்லா ஊராட்சிகளின் செயல் அதிகாரிகளும் நிலுவைப்பட்டியல்களெல்லாம் கண்டு, இதனுடன் இணைக்கப்பட்டுள்ள படிவப்படி விவர அறிக்கை ஒன்றை, சம்பந்தப்பட்ட கோட்ட ஊராட்சி அலுவலருக்கு அரையாண்டுதோறும் அனுப்ப வேண்டும். ஒவ்வோர் ஆண்டிலும், செப்டம்பர் 30-ஆம் தேதியோடு முடிவாகும் அரையாண்டுக்கான விவர அறிக்கையை அக்டோபர் 20 க்கு முன்பும், இரண்டாம் அரையாண்டுக்குரியதை ஏப்ரல் 20 க்கு முன்பும் அனுப்ப வேண்டும். உள்ளபடியான பட்டியல்கள் வரப் பெற்றிருக்கிற இனங்கள் மாத்திரமல்லாமல், பணம் கொடுக்கும்படிக் கடிதங்கள் வாயிலாகக் கேட்டிருப்பவைகூட, அந்த விவரப் பட்டியலில் அடங்கியிருக்க வேண்டும். ஊராட்சிகள் உடனுக்குடன் நிலுவைப் பொறுப்புகளைக் கொடுத்துத் தீர்த்து விடும்படிக் கோட்ட ஊராட்சி அலுவலர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். ஒருவித காரணமில்லாத அளவுக்கு ஒரு ஊராட்சி, ஓர் அரசாங்கத் துறை யினருக்குத்தான் செலுத்த வேண்டிய தொகைகளைச் செலுத்தத் தாமதம் செய்தால், அதைப் பற்றி உடனே கோட்ட ஆட்சியாளருக்குத் தெரிவிக்க வேண்டும்; அவர் 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 149 ஆவது பிரிவின்படி ஊராட்சியின் மீது அல்லது அதன் செயல் அதிகாரியின்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வது பற்றி ஆலோசிப்பார்.

19 செப்டம்பர் 30 / 19 மார்ச் 31 ஆம் தேதியன்று நிலுவைப் பட்டியலையும் உரிமைக் கோரிக்கைகளையும் காட்டும் விவர அறிக்கை.

அ. அரசாங்கத்தாருக்குச் சேர வேண்டியவை.

பெயர்.	உரிமைக் கோரிக்கையின் தன்மை.	தொகை.	வரப்பெற்றுக் கொண்ட தேதி.	தொகை செலுத்துவதில் நேரிட்ட கால தாமதத்துக்கு விளக்கம்.
(1)	(2)	(3)	(4)	(5)

ஆ. தனிப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு அல்லது தனியார்களுக்குச் சேர வேண்டியவை

பெயர்.	உரிமைக் கோரிக்கையின் தன்மை.	தொகை.	வரப்பெற்றுக் கொண்ட தேதி.	தொகை செலுத்துவதில் நேரிட்ட கால தாமதத்துக்கு விளக்கம்
(1)	(2)	(3)	(4)	(5)

(1952 மார்ச் 11-ஆம் தேதிய 398-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

(iii) **வரவேற்பு இதழ்களை வழங்குதல்.**—தமிழ்நாடு மாநில அமைச்சர்களுக்கும் இந்திய யூனியன் அமைச்சர்களுக்கும் வரவேற்பு இதழ்களை வழங்குவதனிமித்தம், இதழை அச்சிட்டு வழங்குவது, வேண்டிய அழைப்புகளை அச்சிடுவது, அவற்றை வழங்குவது, தபால் செலவு செய்வது, அது சம்பந்தமாக வேறு சாதாரணச் செலவுகள் செய்வது ஆகியவற்றைக் கீழ்க்கண்ட பெரு பெருக அளவிற்கு செலவு செய்ய அரசாங்கத்தார் ஊராட்சிகளுக்கு அனுமதி கொடுக்கிறார்கள் :—

ஊராட்சிகள்	20 ரூபாய்.

(2) ஆயினும், கேளிக்கைகளுக்காக அல்லது இதழ்கள் வழங்குவதற்கான பேழைகள் வாங்குவதற்காகச் செலவு எதையும் செய்யக் கூடாது. விழா கூடிய வரைவில் எளிமையாயிருக்க வேண்டும்; அவசியமற்ற செலவு, பகட்டு ஆகியவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும்.

(1961 மே 17-ஆம் தேதிய 1384 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1961 டிசம்பர் 29-ஆம் தேதிய 13881—F 1/61 2-ஆம் எண் குறிப்பாணை.)

77. **பேரூராட்சிகளுக்குச் சொந்தமான நிலங்களைப் பாதுகாப்பாக வைப்பதும், முதலீடு செய்வதும் அவைகளை வாங்கும் விதமும்.**—1. பேரூராட்சி பெற்றுக் கொள்கிற எல்லாப் பணத்தையும், மிக அண்மையிலிருக்கிற அரசாங்கக் கருவூலத்திலாவது மிக அண்மையிலிருக்கிற அஞ்சலகச் சேமிப்புப் வங்கியிலாவது இவ்விரண்டிலுமாவது பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

2. (1) பேரூராட்சி உடனடியான உபயோகத்துக்குத் தேவைப்படாத தொகையை, தமிழ்நாடு கூட்டுறவு வங்கியிலும், இதன்பொருட்டுக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் ஒப்புக் கொள்ளப்பட்ட மாவட்ட மையக் கூட்டுறவு வங்கிகளிலும் மூன்றாண்டுக் காலம் வரையில் தவணை வைப்பீடுகளில் முதலீடு செய்து வைக்கலாம்.

(2) பேரூராட்சி குறித்து ஒதுக்கிய நிதிகளில் மிகையாயிருப்பதை, தமிழ்நாடு அரசின் ஈடுகளிலாவது சேமிப்புப் பத்திரங்கள் உட்பட இந்திய அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஈடுகளிலாவது, தமிழ்நாடு கூட்டுறவு மைய நில அடைமான வங்கி வரம்பு (லிமிடெட்டின்) கடன் ஈட்டுப் பத்திரங்களிலாவது முதலீடு செய்து வைக்கலாம்.

(3) தனி நிகழ்வுகளில் பேரூராட்சி கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொண்டு, கோட்ட ஆட்சியாளரால் குறிப்பிடப்படும் வேறு எந்த வங்கியிலேனும் தனது நிதிகளைப் பாதுகாப்பாக வைக்கலாம் அல்லது முதலீடு செய்யலாம்.

(4) பேரூராட்சி, கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொண்டு, பிணையம் பற்றி அல்லது மற்றப்படி அவர் விதிக்கக் கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு, தன் பணத்தைத் தன் செயல் அதிகாரியின் வசம் விட்டு வைக்கலாம்.

ஆனால், செயல் அதிகாரி வசம் 25 ரூபாய்க்கு மேற்படாத நிலையான முன்பணத்தை விட்டுவைப்பதற்கு அத்தகைய ஒப்பளிப்பு எதுவும் அவசியமாக மாட்டாது.

(5) பேரூராட்சியின் மீதான எல்லா ஆணைகளிலும் அல்லது காசோலைகளிலும் செயல் அதிகாரி கையெழுத்திட வேண்டும்.

(6) ஊராட்சி நிதி பாதுகாப்பாக வைக்கப்பெற்றுள்ள கருவூலம் அல்லது, வங்கி, பேரூராட்சிக்கு வரவாயிருக்கிற நிதிகள் இடங்கொடுக்கிற மட்டில், (5) உள் விதியில் சொல்லியிருக்கிறபடி கையெழுத்திட்டு, அந் நிதியின் மீது கொடுக்கப்படும் எல்லா ஆணைகளுக்கும் அல்லது காசோலைகளுக்கும் பணம் கொடுக்க வேண்டும்.

(7) பேரூராட்சி எழுத்து மூலமான அதிகாரத்தை முன்னதாகக் கொடுத்திருந்தால், அக் கருவூலம், வங்கி அல்லது செயல் அதிகாரி பேரூராட்சியின் சார்பில் அரசாங்கத்தார் செய்திருக்கிற செலவை, அத்தகைய ஆணை அல்லது காசோலை இல்லாமலேயே, பேரூராட்சியின் நிதிகளிலிருந்து உடனே கொடுத்துவிடலாம்.

(1962 பிப்ரவரி 1-ஆம் தேதிய 260 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசு ஆணை)

(112) மேற்படி விதிகளைச் சேர்ந்த 3 ஆவது விதியின்படி (2) ஆவது விதியில் கண்ட (3) உள்விதியின்படி பேரூராட்சிகள் விண்ணப்பங்கள் செய்து கொள்ளும்போதெல்லாம் (பேரூர்) ஆட்சி நிதிகளைப் பாதுகாப்பில் வைப்பதற்காகக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சலுகை காட்டும்படியும் (பேரூர்) ஆட்சியின் தலைமையிடத்திலே அல்லது அதற்கு அண்மையில் கருவூலமோ கீழ்நிலைக் கருவூலமோ அஞ்சலகச் சேமிப்பு வங்கியோ கூட்டுறவு வங்கியோ இராத மிகத் தனிப்பட்ட நிகழ்வுகளில் மாத்திரமே தனியார் வங்கிகளில் தங்கள் நிதிகளைப் பாதுகாப்பாக வைத்திருக்கப் (பேரூர்) ஆட்சிகளுக்கு

அனுமதி கொடுக்கும்படியும் வட்டார ஆய்வாளர்கள் (கோட்ட ஆட்சி யாளர்கள்) பார்த்துக் கொள்ள வேண்டும். உடனடியான செலவுக்கு வேண்டி யிராத (பேரூர்) ஆட்சி நிதிகளைக் கூடிய வரையில் கூட்டுறவு வங்கிகளில் முதலீடு செய்ய வேண்டுமேயல்லாமல், வேறு எந்த வங்கிகளிலும் முதலீடு செய்யக் கூடாது, அன்றியும் (பேரூர்) ஆட்சி நிதிகளை, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியிலும் மாவட்டக் கூட்டுறவு மைய வங்கிகளிலும் மட்டுமே எந்தக் கால அளவுக்கேனும் தவணை வைப்பீடுகளில் முதலீடு செய்யலாம். மையக் கூட்டுறவு வங்கிகளிலும், இதன்பொருட்டுக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் ஒப்புக்கொள்கிற பேரூர் கூட்டுறவு வங்கிகளிலும் நடப்புக் கணக்கு களையும், சேமிப்பு வைப்பீட்டுக் கணக்குகளையும் வைத்துக்கொள்வதற்கு அனு மதி கொடுக்கப்படும்.

(1964 ஜூலை 20-ஆம் தேதிய 1694 எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை)

(1964 அக்டோபர் 29-ஆம் தேதிய 687424-L. 2/54 எண் உள்ளாட்சித் துறைக் குறிப்பாணை.)

(113) கருவூலங்களுடன் நடவடிக்கைகள்.— I பொது. (1) (பேரூர்) ஆட்சி களுக்குப் பல்வேறு கொடைகள் கொடுப்பதானது, கொடையின் ஒவ்வொரு வகை சம்பந்தமாக அரசாங்கத்தாருடைய பொதுவான அல்லது தனிப்பட்ட ஆணைகளினால் முறைப்படுத்தப்படுகிறது. (பேரூர்) ஆட்சிகளுக்கு அரசாங்கத் தாரால் கொடுக்கப்படத்தக்க எல்லாக் கொடைகளையும் (பேரூர்) ஆட்சிக் கணக்கு வைத்துக்கொண்டிருக்கிற கருவூலத்தில் அதன் வங்கிக் கணக்கில் வரவுக்குச் சரிகட்டல் மூலமாக மட்டும் மாற்ற வேண்டும்.

(2) (பேரூர்) ஆட்சி அரசாங்கத்தாரிடமிருந்து கேட்கும் உரிமைக் கோரிக்கை ஒவ்வொன்றையும், அவசியமானால், முத்திரை வில்லை ஒட்டி முறைப் படிப் பற்று எழுதப்பட்டிருக்கிற M. T. C. 40 ஆம் படிவப் பிரகாரம் உள்ள பட்டியல் ஒன்றைக் கருவூலத்தில் கொடுத்துக் கொள்வது மூலமாகச் செய்து கொள்ள வேண்டும்.

(3) பட்டியல்களையெல்லாம் கூடியவரையில் ஆங்கிலத்தில் தயாரிக்க வேண்டும், மாவட்டத்தின் முக்கியமான வட்டார மொழியில் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க வேண்டியிருந்தால், அதில் ஆங்கிலத்தில் சுருக்கமான தொகுப்பு ஒன்றை எழுத வேண்டும்; அதில் பணம் பெறுபவரின் பெயர், கொடுக்கும்படிக் கேட்கும் தொகை, உரிமைக் கோரிக்கையின் தன்மை ஆகியவற்றைக் கண்டெழுத வேண்டும். பணம் எடுக்க ஒப்பமிடும் அதிகாரி அந்தத் தொகுப்பில் கையெழுத்திட வேண்டும்.

(4) பட்டியல் ஒவ்வொன்றையும் மையால் எழுதி நிரப்பி அதில் மையால் கையெழுத்திட வேண்டும். கேட்கும் மொத்தத் தொகையை எண் களிலும் எழுத்திலும் எழுத வேண்டும்.

(5) அழித்தல் உள்ள பட்டியல் எதையும் கருவூலத்தில் கொடுத்துக் கொள்ளக் கூடாது. திருத்தம் அல்லது மாறுதல் ஒவ்வொன்றுக்கும், பட்டியலில் கையெழுத்திடுபவர் சுருக்கொப்பம் தேதியும் போடுவது மூலமாகத் தனித்தனியாகச் சான்றிட வேண்டும்.

(6) ஊராட்சியின் செயல் அதிகாரி தம் பெயரை எழுத முடியா விட்டால், ஓர் அடையாள மூலமாக அது கைப் பெருவிரல் பதிவாக இருந்தால் அல்லது—பட்டியலில் அல்லது வேறு செலவுச் சீட்டில் அவர் கைச்சாத்திட்டு, அந்தப் பதிவுக்கு, கருவூலத்துக்கு நன்கு தெரிந்தவர் ஒருவரைக் கொண்டு சான்றுக் கையொப்பம் இடுவிக்க வேண்டும்.

(7) பட்டியல் ஒன்று, தனி ஒப்பளிப்பு ஆணையின்படிச் செய்யப்பட்ட செலவுக்குச் சம்பந்தப்பட்டதாயிருந்தால், அந்த ஆணையின் விவரங்களை அப் பட்டியலில் எழுத வேண்டும்; அதன்படி ஒன்றைப் பட்டியலுடன் இணைத்து, அது சரியானபடியென்று பட்டியலில் கையெழுத்திடும் ஊராட்சியின் செயல் அதிகாரி முறைப்படிச் சான்றிட வேண்டும்.

(8) 20 ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கான பற்றுச் சீட்டு ஒவ் வொன்றிலும், பணம் பெறுபவர், பின்வரும் விலக்குகளுக்குட்பட்டு, பத்து காசு வருவாய் வில்லையை ஒட்டி முறைப்படி முத்திரையிட வேண்டும்:—

உதவிக் கொடைகளுக்கான பற்றுச் சீட்டுகள், குற்ற நீதிபற்றிய தண்டப் பணம் வசூல்களுக்குப் பதிலாக உள்ளாட்சிக் கழகங்களுக்கும் தனியார் கழகங்களுக்கும் கொடுக்கப்படும் ஈட்டுக்கான பற்றுச் சீட்டுகள் ஆகியவைகளைப்போன்ற (1899 ஆம் ஆண்டின் II ஆவது இந்தியச் சட்டமாகிய) இந்திய முத்திரை வில்லைச் சட்டத்தில் கண்ட I ஆம் அட்ட வணையைச் சேர்ந்த 53 ஆவது பிரிவின்கீழ் உள்ள (ஆ) விலக்கின் பொருளின்படி ஈடு இல்லாமல் பணம் கொடுப்பதற்கான பற்றுச் சீட்டுகள்.

II. உள்ளாட்சிக் கழகங்கள் செய்து கொள்ளும் உரிமைக் கோரிக்கை களுக்கான காலவரையறை.—ஒரு (பேரூர்) ஆட்சி தலைக்குக் கொடுப்பதற்காக அரசாங்கத்தார் ஒப்பளித்திருக்கிற தொகையைக் கொடுக்கும்படி, அவ்வாறு கொடுப்பதற்கென அரசாங்கத்தாரால் குறிப்பிடப்பட்ட கடைசித் தேதிக்குள், அல்லது குறிப்பிட்ட ஒரு கொடுப்பீடு அல்லது வகையைச் சேர்ந்த கொடுப்பீடு

சம்பந்தமாக அவ்வாறு தேதி எதுவும் குறிப்பிடப்பட்டிராவிட்டால், கொடுப்பீட்டுக்கு அனுமதி வழங்கி அரசாங்கத்தார் பிறப்பிக்கும் ஆணையை அது பெற்றுக் கொள்ளுகிற தேதியிலிருந்து ஆறு மாதத்துக்குள் கேட்க வேண்டும். 'இவ் விதியின்படிக்கான விரிவான விளக்க உரைகளுக்காக, தமிழ்நாடு நிதி பற்றிய விதித் தொகுப்பு, I ஆம் தொகுதி 311 ஆவது, 312 ஆவது பிரிவுகளைத் தயவு செய்து பார்க்கவும்.)

III தனிக் கொடுப்பீட்டு வகைகள்.—(1) குற்ற நீதி பற்றிய தண்டப் பணம் வசூல்களுக்குப் பதிலாகக் கொடுக்கப்படத்தக்க கொடைகள், குற்றஇயல் மாவட்ட நீதிபதிகள் M. T. C. 58 ஆம் படிவத்தின்படித் தயாரிக்கும் பட்டியல்கள் மூலமாகப் (பேரூர்) ஆட்சிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன; ஆகையால் (பேரூர்) ஆட்சி இவ்வகையான தொகையைக் கொடுக்கும்படிக் கேட்க வேண்டியதில்லை.

(2) மீன் பாசிக் குத்தகைப் (பேரூர்) ஆட்சிகளுக்குச் சேர வேண்டிய தொகைகளைக் கீழ்நிலைக் கருவூல அலுவலர் வாங்கவேண்டுமேயன்றி, ஊராட்சிகள் வாங்கக் கூடாது.

(3) முத்திரைத் தீர்வைக்கு மேல் வரி சம்பந்தமாகச் சேர வேண்டிய தொகைகளை, M.T.C. 64 ஆம் படிவத்தில் எழுதி வாங்க வேண்டும்.

IV காசோலைகள் கொடுப்பது.—மூலதனப் பணி முதலியவை சம்பந்தமாக ஒப்பந்தக்காரர்கள் பெயருக்கு அல்லது சாமான்கள் வழங்கும் மற்றவர்கள் பெயருக்குப் (பேரூர்) ஆட்சியின் செயல் அதிகாரி காசோலைகள் கொடுக்கலாம். (பேரூர்) ஆட்சி 10 ரூபாய்க்கு மேற்பட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிற ஒருவர் பெயருக்கு அவர் கருவூலத்தின் மீது காசோலைகள் கொடுப்பதில் தடை ஒன்றுமில்லை. (பேரூர்) ஆட்சிப் பணியாளர்களுக்குப் பணம் கொடுப்பதற்காக மட்டும் அவர் தன் பெயருக்கே காசோலைகள் எழுதிக் கொள்ளலாம்.

(1964 நவம்பர் 10 ஆம் தேதிய 1567 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(114) அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் பொதுக் கணக்கு வைத்துக் கொள்வதற்குப் (பேரூர்) ஆட்சிகளிடமிருந்து வரும் விண்ணப்பங்களுக்கு அஞ்சலகத் தலைவர்கள் இசைவு வழங்குவார்கள்; ஆனால் அந்த விண்ணப்பங்களில் கோட்ட ஊராட்சி அலுவலர்கள் மேலொப்பமிட்டிருக்க வேண்டும்.

(1953 மார்ச் 12 ஆம் தேதிய 562 ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

78. வெளியார் ஒப்பளிப்பு இல்லாமல் ஊராட்சிகள் வழக்குகள் பற்றிச் செய்தற்குரிய செலவுகளுக்கு வரையறை.

1. **வெளியார் ஒப்பளிப்பு இல்லாமல் வழக்கறிஞர்களுக்குக் கட்டணங்கள் செலுத்துவது.**—ஊராட்சிகள் வெளியார் ஒப்பளிப்பு இல்லாமல் பின்வரும் விதப்படி வழக்கறிஞர்களுக்குக் கட்டணங்கள் செலுத்தலாம் :—

(i) உரிமையியல் வழக்குகளில் ஒழுங்குமுறைக் கட்டணம் அல்லது ஒழுங்குமுறைக் கட்டணத்துக்கு மேற்பட்டதும் 100 ரூபாய்க்கு மேற்படாததுமான கட்டணம்.

(ii) குற்றயியல் வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள தொகையையும் வேலையின் கடுமையையும் ஒட்டி நிச்சயிக்கப்படுதற்குரிய கட்டணம்; ஆனால் இது, வழக்கு சம்பந்தமாக மூன்று மணி நேரத்துக்குக் குறையாமல் அல்லது வழக்கறிஞர் சாதாரணமாகத் தொழில் நடத்துகிற இடமிலலாத வேறோரிடத்தில் மூன்று மணி நேரத்துக்குக் குறைவாக வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நாளுக்கும் 25 ரூபாய்க்கும் மற்றெல்லாவற்றிலும் நாள் ஒன்றுக்கு 15 ரூபாய்க்கும் மேற்படக் கூடாது.

ஆனால், வழக்கறிஞர் ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட வழக்குகள் சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஈடுபட்டிருந்தால், எல்லா வழக்குகளுக்காகவும் அந்த நாளுக்கு அவருக்குக் கொடுக்கப்படத்தக்க மொத்தக் கட்டணம் 35 ரூபாய்க்கு மேற்படக் கூடாது.

2. **வெளியார் ஒப்பளிப்பு இல்லாமல் பணம் கொடுப்பதற்கு வரையறை.**—ஒரு ஊராட்சி வெளியார் ஒப்பளிப்பு இல்லாமல் பின்வரும் வழக்குகளில் 100 ரூபாய் வரையில் கட்டணங்கள் செலுத்தலாம்; அவையாவன :—

(i) ஒவ்வொரு வழக்கிலும் ஆவணங்களை ஆய்ந்து பார்க்கும் வேலைக்காகவும் நீதிமன்றத்துக்கு வெளியே செய்த பணிகளுக்காகவும்; ஆனால், அவ்வாறு ஆய்ந்து பார்ப்பதற்கு அல்லது அந்தப் பணிகளுக்குத் தொடர்ச்சியாக உரிமையியல் வழக்கு அல்லது வழக்கு எதுவும் தொடரப்பட்டிருக்கக் கூடாது அல்லது எதிர் வாதத்துக்கு ஏற்பாடு செய்திருக்கக் கூடாது; அவ்வாறு உரிமையியல் வழக்கு அல்லது வழக்கு தொடரப்பட்டிருந்தால் அல்லது எதிர்வாதத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், ஆவணங்களை ஆய்ந்து பார்க்கும் வேலைக்காகவும், நீதிமன்றத்துக்கு வெளியே செய்த பணிகளுக்காவும் நீதிமன்றத்தில் செய்த பணிக்காகவும் வழக்கறிஞருக்குக் கொடுக்கப்படத்தக்க மொத்தக் கட்டணங்கள், 100 ரூபாய் அல்லது 1 ஆவது விதியின்படிச் செலுத்தப்படத்தக்க கட்டணம் ஆகியவற்றில் எது அதிகமாயிருக்கிறதோ அதற்கு மேற்படக் கூடாது.

(ii) எந்த வழக்கிலே உரிமைக் கோரிக்கைக்குரிய பொருளை மதிப்பிட முடியாதோ அத்தகைய ஒவ்வொரு வழக்கிலும்.

3. தனி நிகழ்வுகளில் கட்டணங்கள் செலுத்துவது.—1-வது, 2-வது விதிகளில் உள்ளது எதுவும் தனி நிகழ்வுகளில் செலுத்தப்படத்தக்க தொகையை வரையறுப்பதாகக் கருதப்பட மாட்டாது; ஆனால், மேற்படி விதிகளில் நிச்சயிக்கப்பட்ட வரையறைகளைக் கடக்க உத்தேசித்தால், கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேல்முறையீடு அல்லது சீராய்வு.—ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆணை அல்லது கட்டளையை எதிர்த்து ஊராட்சி மேல்முறையீடு அல்லது சீராய்வுக் கோரிக்கை செய்து கொள்ள விரும்பினால், கோட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(1963 மே 21 ஆம் தேதிய 1136 ம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

ஆயினும், வழக்கறிஞருக்குப் பயணப்படி வீதங்கள் அடியிற் கண்டவைகளுக்கு மேற்படக் கூடாது :—

(1) இருப்பு ஊர்திப் பயணங்களுக்கான ஒற்றை இரண்டாம் வகுப்புக் கட்டணம்;

(2) சாலைப் பயணங்களுக்காக, மைல் ஒன்றுக்கு நான்கணா; ஆனால், உள்ளபடி பயணம் செய்த தொலைவு ஒரு மைலுக்கு மேற்பட்டிருக்க வேண்டும்;

நாட்படி கொடுக்க வேண்டியதில்லை.

(1954 மே 31-ம் தேதிய 795-ம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.

79. வானொலிப் பெட்டிகளை வைத்துப் பேணுவதற்கான செலவு.—1. எந்த ஊராட்சியும் சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளரின் எழுத்து மூலமான ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், ஒன்றுக்கு மேற்பட்ட வானொலிப் பெட்டிகளை வைத்துப் பேணுவதற்காகச் செலவு செய்யக் கூடாது.

2. கோட்ட ஆட்சியாளர், 1-வது விதியின்படி ஒப்பளிப்பு வழங்குவதற்குமுன், பின் வருபவைகளை முறைப்படிக் கவனிக்க வேண்டும் :—

(i) அந்த ஊரில் அல்லது பேரூரில் ஒன்றுக்கு மேற்பட்ட வானொலிப் பெட்டிகளை வைத்துப் பேணுவதற்கு உள்ளபடி அவசியம் இருக்கிறதா என்பது;

(ii) அதிகப்படியான வானொலிப் பெட்டி அல்லது பெட்டிகளை வைத்துப் பேணுவதற்கான செலவு செய்ய ஊராட்சியின் நிதிகள் போது மானவையா என்பது.

(1962 பிப்ரவரி 1-ம் தேதிய 260-ம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

80. வழக்கறிஞர் நியமனமும் சில வழக்குகளில் கட்டணங்கள் செலுத்துவதும்.—1. உரிமையியல் வழக்கு ஒன்றில் அரசாங்கத்தாரும் ஒரு ஊராட்சியும் சேர்ந்து ஒரே கட்சிக்காரராயிருந்து ஊராட்சியிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள நிலங்களின் அளவு சரியானதா என்பது அவ்வழக்கின் பொருளா யிருந்து, இருதரத்தாரின் உரிமைகளும் ஒத்தவைகளாயிருந்தால் அரசாங்கத் தார் சார்பில் மாவட்ட ஆட்சியாளரை நியமிக்கும் வழக்கறிஞரைத்தான் ஊராட்சி தன் சார்பில் அமர்த்திக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட வற்றில் வழக்கறிஞருக்குக் கொடுக்கப்படத்தக்க கட்டணத்தை, அரசாங்கத் தாரும் ஊராட்சியும் முறையே மூன்றில் இரண்டு பாகம், மூன்றிலொரு பாகம் என்னும் விதாச்சாரப்படி கொடுக்க வேண்டும்.

2. 1-வது விதியில் சொல்லப்பட்டிருப்பவையல்லாத மற்ற உரிமையியல் வழக்குகளில், அரசாங்கத்தாரும் ஊராட்சியும் ஒரே கட்சிக்காரராயிருந்து அவர்களுடைய வாதங்கள் ஒத்தவையாயிருந்தால், அரசாங்கத்தார் சார்பில் நியமிக்கப்படுகிற வழக்கறிஞரைத்தான் ஊராட்சி தன் சார்பில் அமர்த்திக் கொள்ள வேண்டும். அத்தகையவற்றில், வழக்கறிஞருக்குக் கொடுக்கப்படத் தக்க கட்டணத்தையும், தொடர்பான மற்றச் செலவுகளையும், அரசாங்கத்தார் ஊராட்சி ஆகியவர்களின் சார்பில் கூட்டு நடவடிக்கைகளான பிறகு அக் கூட்டு நடவடிக்கைகளின் பொருட்டுச் செய்யப்படும் செலவுகளையும் அரசாங்கத்தாரும் ஊராட்சியும் சம பங்குகளில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. உரிமையியல் நீதிமன்றங்களின் முடிவுகளை எதிர்த்து ஊராட்சிகள் செய்து கொள்ளும் மேல்முறையீடுகளுக்கு இவ்விதிகள் பொருந்த மாட்டா.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணை.)

அத்தியாயம் VI.

பொதுப் பணிகளும் பலவகையும்.

81. தமிழ்நாடு ஊராட்சிகள், ஊராட்சிகள் ஒன்றியங்கள் (அமைப்புப் படங்கள், மதிப்பீடுகள் முதலியவற்றைத் தயாரிப்பது பற்றிய) விதிகள், 1963.—1. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் எந்தப் பணிகளுக்காக அரசாங்கத்தார் கொடை வழங்குகிறார்களோ அந்தப் பணிகள் சம்பந்தமாகப் பின்வரும் நடைமுறையை அனுசரிக்க வேண்டும் :—

(1) மதிப்பீடுகளைத் தயாரிப்பது.— (i) 3000 ரூபாய் வரையில் செலவு பிடிக்கும் (மூலப் பணியாயினும் பராமரிப்புப் பணியாயினும் சரி) ஊராட்சிப் பணிகள் அல்லது ஊராட்சி ஒன்றியப் பணிகள் சம்பந்தமான மதிப்பீடுகளை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களின் ஒன்றியத்தின் பொறியியல் பார்வையாளர்கள் தயாரிக்க வேண்டும்; அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் ஒன்றியப் பொறியாளரைக் கொண்டு அவைகளுக்குத் தொழில் நுட்ப ஒப்பளிப்பு பெற வேண்டும்.

(ii) 3,000 ரூபாய்க்குமேல் செலவு பிடிக்கிற எல்லா மதிப்பீடுகளையும் ஒன்றியப் பொறியியல் பார்வையாளரின் துணை கொண்டு ஒன்றியப் பொறியாளர் தயாரிக்க வேண்டும்; அவற்றைச் சம்பந்தப்பட்ட (நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளருக்கு அனுப்ப வேண்டும்; கீழ்க் கண்ட (2) விதியின்படி அந்த மதிப்பீடுகளுக்கு ஆட்சிமுறை பராமரிப்பும் தொழில் நுட்ப ஒப்பளிப்பும் அளிக்கப்பட வேண்டும்.

(2) மதிப்பீடுகளுக்கு ஆட்சிமுறை ஒப்பளிப்பும் தொழில் நுட்ப ஒப்பளிப்பும் வழங்குவது.—பணிகளுக்கான (திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகள் உட்பட) மதிப்பீடுகள் சம்பந்தமாக ஆட்சிமுறை ஒப்பளிப்பும் தொழில் நுட்ப ஒப்பளிப்பும் வழங்கத் தகுதி வாய்ந்த அதிகாரிகள் அடியிற் கண்டவர்களாவார்கள் :—

மதிப்பீடுகளின் தன்மை.	ஆட்சிமுறை ஒப்பளிப்பு வழங்குவதற்குரிய அதிகாரி.	தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்குதற்குரிய அதிகாரி.
(1)	(2)	(3)

I. கட்டுமானத்துக்குச் சம்பந்தப்பட்ட மூலப் பணிகள் அல்லது பேணுதல் பணிகள்.

(1) 3,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப்பட்டுள்ள பணிகள் சம்பந்தமாக சந்தர்ப்பத்துக்கேற்ப (i) (பேரூர் அல்லது ஊர்) ஆட்சி, அல்லது, (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	ஒன்றியத்தின் பொறியாளர்.
(2) 3,000 ரூபாய்க்கு மேற்பட்டு 10,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப்பட்டுள்ள பணிகள் சம்பந்தமாக, சந்தர்ப்பத்துக்கேற்ப (i) (பேரூர் அல்லது ஊர்) ஆட்சி, அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	(நெஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளர்.
(3) 10,000 ரூபாய்க்கு மேற்பட்டு 25,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப்பட்டுள்ள பணிகள் சம்பந்தமாக, சந்தர்ப்பத்துக்கேற்ப (i) (பேரூர் அல்லது ஊர்) ஆட்சி, அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	(நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) கோட்டப் பொறியாளர்.
(4) 25,000 ரூபரய்க்கு மேற்பட்டு 1,00,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப்பட்டுள்ள பணிகள் சம்பந்தமாக, சந்தர்ப்பத்துக்கேற்ப (i) (பேரூர் அல்லது ஊர்) ஆட்சி, அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	(ஊரகப் பொறியியல் பணிகள்) மேற்பார்வைப் பொறியாளர்.

(5) 1,00,000 ரூபாய்க்கு மேற்பட்டு செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப் பட்டுள்ள பணிகள் சம்பந்தமாக, சந்தர்ப்பத்துக்கேற்ப (i) (பேரூர் அல்லது ஊர்) ஆட்சி, அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	(நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) தலைமைப் பொறியாளர்.

II. கட்டுமானப் பணிகள் அல்லாத வேறு பேணுதற் பணிகள் (செப்பனீடுகள் உட்பட)

(1) 3,000 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப் பட்டுள்ள பணிகள் தொடர்பாக சந்தர்ப்பத்துக்கேற்ப (i) (பேரூர் அல்லது ஊர்) ஆட்சி, அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	ஒன்றியப் பொறியாளர்.
(2) 3,000 ரூபாய்க்கு மேற்பட்டு 10,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப் பட்டுள்ள பணிகள் தொடர்பாக, சந்தர்ப்பத்துக்கேற்ப (i) (பேரூர் அல்லது ஊர்) ஆட்சி, அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்	(நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளர்.
(3) 10,000 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	அதனிடம் உரித்தாக்கப் பட்டுள்ள பணிகள் தொடர்பாக சந்தர்ப் பத்துக்கேற்ப (i) (பேரூர் அலலது ஊர்) ஆட்சி, அல்லது (ii) ஊராட்சி ஒன்றிய மன்றம்.	(நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) கோட்டப் பொறியாளர்.

(3) ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் பணிகளின் அளவெடுத்தலும் அளவு சரிபார்த்தலும்.—ஒப்பந்தத்தின் மூலமாக அல்லது துறையினரால் செய்யப்பட்ட பணிகள் எல்லாவற்றையும் அல்லது வழங்கப் பட்ட சாமான்கள் எல்லாவற்றையும் அளவெடுப்பதற்கும் அவற்றின் அளவைச் சரிபார்ப்பதற்கும் தகுதி வாய்ந்த அதிகாரிகள் அடியிற்கண்டவர்களா வார்கள் :—

பணியின் பெயர்.	அளவெடுக்கும் அலுவலர்.	அளவு சரி பார்க்கும் அலுவலர்.
(1)	(2)	(3)
(1) 3,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிப்பவையும் ஊரகப் பேரூராட்சிகள் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றங்களிடம் உரித்தாக்கப் பட்டவையுமான (மூல அல்லது பராமரிப்புப்) பொதுப் பணிகள் எல்லாம்.	ஊராட்சி ஒன்றியப் பொறியியல் பார்வையாளர்.	ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்.
(2) 3,000 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிப்பவையும் ஊரக ஊராட்சிகள், பேரூராட்சிகள் அல்லது ஊராட்சி ஒன்றிய மன்றங்களிடம் உரித்தாக்கப்பட்டவையுமான (மூல அல்லது பேணுதல்) பொதுப் பணிகள் எல்லாம்.	ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்.	(நெடுஞ்சாலை ஊரகப பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளர்.

குறிப்பு.—(அ) 3,000 ரூபாய்க்குக் குறைவாகச் செலவு பிடிப்பவையும் ஊராட்சி ஒன்றிய பொறியாளர்களால் அளவு சரி பார்க்கப்பட்டவையுமான பணிகளில் கால் பங்கையேனும் (நெடுஞ்சாலை—ஊரகப் பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளர் மேலும் சரி பார்க்க வேண்டும்.

(ஆ) 3,000 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிக்கிற பணிகளுக்கான முதலும் முடிவானதுமான பட்டியல்கள் சம்பந்தமாக பணிகளின் அளவை (நெடுஞ்சாலை—ஊரகப் பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளர்கள் சரி

பார்த்து, இடைப்பட்டவையான மற்ற எல்லாப் பட்டியல்களையும் அலுவலகத்தில் சரிபார்த்த பிறகு, அதாவது, கணக்கீட்டையும் கையாளப்பட்ட வீதங்கள் சரியா என்பதையும் கூராய்வு செய்த பிறகு மற்றெல்லாப் பட்டியல்களிலும் மேலொப்பமிடவேண்டும். அவர்கள், இடைப்பட்டவையான பட்டியல்களை அலுவலகத்தில் சரிபார்க்கும் காலத்தில் (i) பட்டியல் சம்பந்தப்படுகிற பணியினுடைய பாகத்தின் தன்மையையும் முக்கியத்துவத்தையும் கருதி, அல்லது (ii) உள்ளடங்கியுள்ள பெருந்தொகையைக் கருதி, அப்பணி சம்பந்தமான அளவீடுகளில் எதையேனும் தாங்கள் நேரில் சரி பார்க்க வேண்டுமா என்பதை தவறாமல் ஆய்ந்து பார்க்க வேண்டும். அளவுகளை அவ்வாறு நேரில் சரிபார்ப்பது அவசியமென்று அவர்கள் கருதினால், அப்படியே சரிபார்க்க வேண்டும்.

(இ) ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் ஆண்டிலும் (நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளரால் அளவு சரிபார்க்கப்பட்ட முக்கியமான பணிகளில் எதையேனும் (நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) கோட்டப் பொறியாளரும் சோதனையாகச் சரி பார்க்க வேண்டும்.

(4) மூல மதிப்பீடுகளுக்கு மேற்பட்ட தொகைகளுக்கு ஒப்புதல் அளிக்க தகுதி வாய்ந்த அதிகாரிகள்.—(i) நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) தலைமைப் பொறியாளர், தம்மால் அல்லது அரசாங்கத்தாரால் ஒப்பளிக்கப்பட்ட பணிகளின் மூல மதிப்பீடுகளின் தொகைகளில் கால் பங்குக்கு அதிகமாயிராத மேற்பட்ட தொகைகளைப் பற்றியெல்லாம் முடிவாகக் கவனித்து ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளின் மொத்தம் எதுவாயிருந்தபோதிலும், ஒரு பணிக்காக 2,000 ரூபாய் வரையில் செலவுக்கு ஒப்புதல் அளிக்கத் தகுதிவாய்ந்தவராவார்.

(ii) (ஊரகப் பொறியியல் பணிகள்) மேற்பார்வைப் பொறியாளர். தம்மால் அல்லது கீழ்நிலை அதிகாரி ஒருவரால் ஒப்பளிக்கப்பட்ட பணிகளின் மூல மதிப்பீடுகளின் தொகைகளில் கால் பங்குக்கு அதிகமாயிராத மேற்பட்ட தொகைகளைப் பற்றியெல்லாம் முடிவாகக் கவனிக்க வேண்டும்; ஆனால், மேற்பட்ட தொகையின் மொத்தமானது, தொழில் நுட்ப முறையில் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிக்க அவருக்குள்ள அதிகாரங்களின் வரம்புக்குட்பட்டிருக்க வேண்டும்; ஆயினும் ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளின் மொத்தம் எதுவாயிருந்த போதிலும், ஒரு பணிக்காக 1,000 ரூபாய் வரை உள்ள அதிகப்படிச் செலவுக்கு மட்டுமே அவர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) கோட்டப் பொறியாளர், தம்மால் அல்லது கீழ்நிலை அதிகாரி ஒருவரால் ஒப்பளிக்கப்பட்ட தொகைகளுக்கு மேற்பட்ட எல்லாத் தொகைகளுக்கும் 500 ரூபாய் வரையில்,

ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளின் மொத்தத் தொகை எதுவாயிருந்த போதிலும் முடிவாக ஒப்புதல் அளிக்க வேண்டும்; மற்றவற்றில் அதிகப்பட்ட தொகையின் மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளில் 5 சதவீதத்துக்குட்பட்டும், தொழில் நுட்ப முறையில் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்க அவருக்குள்ள அதிகார எல்லைக்குட்பட்டும் இருந்தால், அவர் முடிவாக ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(iv) (நெடுஞ்சாலை—ஊரகப் பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளர் தம்மால் அல்லது ஊராட்சி ஒன்றியப் பொறியாளரால் ஒப்பளிக்கப்பட்ட தொகைகளுக்கு மேற்பட்ட எல்லாத் தொகைகளுக்கும், 250 ரூபாய் வரையில், ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளின் மொத்தத் தொகை எதுவாயிருந்த போதிலும், முடிவாக ஒப்புதல் அளிக்க வேண்டும்; மற்றவற்றில், அதிகப்பட்ட தொகையின் மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளில் 5 சதவீதத்துக்குட்பட்டும், தொழில் நுட்ப முறையில் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்க அவருக்குள்ள அதிகார எல்லைக்குட்பட்டும் இருந்தால், அவர் முடிவாக ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(v) ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு அதிகப்படியாகும் மற்றெல்லாவற்றிலும் மேற்பட்டுள்ள அத் தொகைகளைக் கொடுப்பதற்கு அரசாங்கத்தார் ஒப்பளிப்பு வழங்க வேண்டும்.

2. ஊராட்சிகள் தங்களுடைய சொந்த நிதிகளைக் கொண்டே நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளும் ஊராட்சிப் பணிகள் சம்பந்தமாக அடியிற் கண்ட நடைமுறையைப் பின்பற்ற வேண்டும்:—

(1) மதிப்பீடுகளைத் தயாரிப்பது.—(i) 3,000 ரூபாய் வரையில் செலவு பிடிக்கிற (மூலப் பணியாகவோ பராமரிப்புப் பணியாகவோ உள்ள) ஊராட்சிகளின் பணிகள் சம்பந்தமான மதிப்பீடுகளை அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தின் ஒன்றியப் பொறியியல் பார்வையாளர்கள் தயாரிக்க வேண்டும்.

(ii) 3,000 ரூபாய்க்கு மேற்பட்டு செலவு பிடிக்கிற மதிப்பீடுகளையெல்லாம் ஒன்றியப் பார்வையாளர் உதவியைக் கொண்டு ஒன்றியப் பொறியாளர் தயாரிக்க வேண்டும்.

(2) ஆட்சி முறை ஒப்பளிப்பும் தொழில் நுட்ப ஒப்பளிப்பும் வழங்குதல்.—பணிகளுக்கான (திருத்திய மதிப்பீடுகள் உட்பட) மதிப்பீடுகள் சம்பந்தமாக,

ஆட்சி முறை ஒப்பளிப்பும் தொழில் நுட்ப ஒப்பளிப்பும் வழங்கத் தகுதி வாய்ந்த அதிகாரிகள் அடியிற் கண்டவர்களாவார்கள் :—

	மதிப்பீடுகளின் தன்மை.	ஆட்சி முறை ஒப்பளிப்பு வழங்குதற்குரிய அதிகாரி.	தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்குதற்குரிய அதிகாரி.
	(1)	(2)	(3)
(1).	(சாலைகளுக்குச் சரளையிடுவது அல்லாத மற்ற) மூலப் பணிகள் சம்பந்தமாக 1,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	ஊராட்சி.	ஊராட்சி.
(2).	சாலைகளுக்குச் சரளையிடுவது உட்பட செப்பனிட்டு அல்லது பராமரிப்புப் பணிகள் சம்பந்தமாக 1,500 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	ஊராட்சி.	ஊராட்சி.
(3).	மூலப் பணிகள் சம்பந்தமாக, 1,000 ரூபாய்க்கு மேற்பட்டும் 3,000 ரூபாய்க்கு மேற்படாமலும் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்	ஊராட்சி.	ஊராட்சி ஒன்றியப் பணியாளர்.
(4).	பராமரிப்புப் பணிகள் சம்பந்தமாக 1,500 ரூபாய்க்கு மேற்பட்டும் 3,000 ரூபாய்க்கு மேற்படாமலும் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	ஊராட்சி.	ஊராட்சி ஒன்றியப் பொயாளர்.

	(1)	(2)	(3)
(5).	மூலப் பணிகள், பராமரிப்புப் பணிகள் இவ்விரண்டின் சம்பந்தமாக, 3,000 ரூபாய்க்கு மேற்பட்டும் 10,000 ரூபாய்க்கு மேற்படாமலும் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	ஊராட்சி.	(நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளர்.
(6).	மூலப் பணிகள், பராமரிப்புப் பணிகள் இவ்விரண்டின் சம்பந்தமாக, 10,000 ரூபாய்க்கு மேற்பட்டும் 25,000 ரூபாய்க்கு மேற்படாமலும் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	ஊராட்சி.	(நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) கோட்டப் பொறியாளர்.
(7).	மூலப் பணிகள் பராமரிப்பு பணிகள் இவ்விரண்டின் சம்பந்தமாக, 25,000 ரூபாய்க்கு மேற்பட்டும் 1,00,000 ரூபாய்க்கு மேற்படாமலும் செலவு பிடிக்கிற மதிப்பீடுகள்.	ஊராட்சி.	மேற்பார்வைப் பொறியாளர்.
(8).	1,00,000 ரூபாய்க்கு மேல் செலவு பிடிக்கிற எல்லா மதிப்பீடுகளும்.	ஊராட்சி.	(நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) தலைமைப் பொறியாளர்.

(3) பணிகளின் அளவெடுத்தலும் அளவு சரி பார்த்தலும்.—ஒப்பந்தத்தின் மூலமாக அல்லது துறையினரால் செய்யப்பட்ட பணிகள் எல்லாவற்றையும் அல்லது வழங்கப்பட்ட சாமான்கள் எல்லாவற்றையும் அளவெடுப்பதற்கும் அவற்றின் அளவைச் சரி பார்ப்பதற்கும் தகுதி வாய்ந்த அதிகாரிகள் அடியிற் கண்டவர்களாவார்கள் :—

	பணியின் தன்மை. (1)	அளவெடுக்கும் அலுவலர். (2)	அளவுசரிபார்க்கும் அலுவலர். (3)
(1).	1,000 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற (சாலைகளுக்குச் சரளையிடுவது அல்லாத மற்ற) மூலப் பணிகள் எல்லாம்.	சந்தர்ப்பத்துக்கேற்ப பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது ஊராட்சியின் தலைவர்.	ஊராட்சி ஒன்றியப் பொறியியல் பார்வையாளர்.
(2).	1,500 ரூபாய்க்கு மேற்படாமல் செலவு பிடிக்கிற (சாலைகளுக்குச் சரளையிடுவது உட்பட) பராமரிப்புப் பணிகள் எல்லாம்.	சந்தர்ப்பத்துக்கேற்ப பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது ஊராட்சித் தலைவர்.	ஊராட்சி ஒன்றியப் பொறியியல் பார்வையாளர்.
(3)	1,000 ரூபாய்க்கு மேற்பட்டு 3,000 ரூபாய்க்கு மேற்படாத உத்தேச மதிப்புள்ள மூலப் பணிகள் எல்லாம்.	ஊராட்சி ஒன்றியப் பொறியியல் பார்வையாளர்.	ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்.
(4)	1,500 ரூபாய்க்கு மேற்பட்டு 3,000 ரூபாய்க்கு மேற்படாத உத்தேச மதிப்புள்ள பராமரிப்புப் பணிகள் எல்லாம்.	ஊராட்சி ஒன்றியப் பொறியியல் பார்வையாளர்.	ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்.
(5)	3,000 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிக்குமென்று மதிப்பிடப்படுகிற மூல அல்லது பராமரிப்புப் பணிகள் எல்லாம்.	ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்.	(நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளர்.

குறிப்பு.—ஊராட்சி ஒன்றியப் பொறியியல் மேற்பார்வையாளரால் அளவு சரி பார்க்கப்பட்ட பணிகளில் கால் பங்கையேனும் ஊராட்சி ஒன்றியப் பொறியாளர் மேலும் சரி பார்க்க வேண்டும்.

(4) மூல மதிப்பீடுகளுக்கு மேற்பட்ட தொகைகளுக்கு ஒப்புதல் அளிக்க தகுதி வாய்ந்த அதிகாரிகள்.—(i) (நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) தலைமைப் பொறியாளர், தம்மால் அல்லது அரசாங்கத்தாரால் ஒப்பளிக்கப்பட்ட பணிகளின் மூல மதிப்பீடுகளின் தொகைகளில் கால் பங்குக்கு அதிகமாயிராத மேற்பட்ட தொகைகளைப் பற்றியெல்லாம் முடிவாகப் பரிசீலித்து ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளின் மொத்தம் எதுவாயிருந்த போதிலும், ஒரு பணிக்காக 2,000 ரூபாய் வரையில் செலவுக்கு ஒப்புதல் அளிக்கத் தகுதி வாய்ந்தவராவார்.

(ii) (ஊரகப் பொறியியல் பணிகள்) மேற்பார்வைப் பொறியாளர், தம்மால் அல்லது கீழ் நிலை அதிகாரி ஒருவரால் ஒப்பளிக்கப்பட்ட பணிகளின் மூல மதிப்பீடுகளின் தொகைகளில் கால் பங்குக்கு அதிகமாயிராத மேற்பட்ட தொகைகளைப் பற்றியெல்லாம் முடிவாக பரிசிலிக்க வேண்டும். ஆனால், மேற்பட்ட தொகைகளின் மொத்தமானது தொழில் நுட்ப முறையில் மதிப்பீடுகளுககு ஒப்பளிக்க அவருக்குள்ள அதிகாரங்களின் வரம்புக்குட்பட்டிருக்க வேண்டும்; ஆனால், ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளின் மொத்தம் எதுவாயிருந்த போதிலும், ஒரு பணிக்காக 1,000 ரூபாய் வரை உள்ள அதிகப்படிச் செலவுக்கு மட்டுமே அவர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(iii) (நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) கோட்டப் பொறியாளர், தம்மால் அல்லது கீழ்நிலை அதிகாரி ஒருவரால் ஒப்பளிக்கப்பட்ட தொகைகளுக்கு மேற்பட்ட எல்லாத் தொகைகளுக்கும், 500 ரூபாய் வரையில், ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளின் மொத்தத் தொகை எதுவாயிருந்த போதிலும், முடிவாக ஒப்புதல் அளிக்க வேண்டும்; மற்றவற்றில் மேற்பட்ட தொகையின் மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளில் 5 சத வீதத்துக்குட்பட்டும், தொழில் நுட்ப முறையில் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்க அவருக்குள்ள அதிகார எல்லைக்குட்பட்டும் இருந்தால் அவர் முடிவாக ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(iv) (நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளர், தம்மால் அல்லது ஊராட்சிப் பொறியாளரால் ஒப்பளிக்கப்பட்ட தொகைகளுக்கு மேற்பட்ட எல்லா தொகைகளுக்கும், 250 ரூபாய் வரையில், ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளின் மொத்தத் தொகை எதுவாயிருந்த போதிலும் முடிவாக ஒப்புதல் அளிக்க வேண்டும், மற்றவற்றில் மேற்பட்ட

தொகைகளின் மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளில் 5 சத வீதத்துக் குட்பட்டும் தொழில் நுட்ப முறையில் மதிப்பீடுகளுக்கு ஒப்பளிப்பு வழங்க அவருக்குள்ள அதிகார எல்லைக்குட்பட்டும் இருந்தால் அவர் முடிவாக ஒப்புதல் அளிக்க வேண்டும்.

ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மேற்பட்டுப் போகும் மற்றெல்லா வற்றிலும், மேற்பட்டுள்ள அத் தொகைகளைக் கொடுக்க அரசாங்கத்தார் ஒப்பளிப்பு வழங்க வேண்டும்.

(1963 ஜூலை 19-ம் தேதிய 1515-ம் எண் ஊரக உள்ளாட்சித் துறை பல்வகை அரசு ஆணை.)

விதி.

82. பாசன அலுவல்களை ஊராட்சிகளுக்கு மாற்றுவது.—1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 85-ஆவது பிரிவின் (1) உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள ஊர்ப் பாசனப் பணிகள் சம்பந்தமான அலுவல்கள் எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு ஊராட்சிகளுக்கு மாற்றப்படலாமோ அந்த நிபந் தனைகள் அடியிற்கண்டவையாகும் :—

(1) மாற்றத்துக்குத் தொடர்பான வரையறைகளும் நிபந்தனைகளும்.— வருவாய்த் துறையினரின் பொறுப்பில் இருப்பவையும் ஒரு ஊராட்சி எல்லைக் குள் இருப்பவையுமான சிறு பாசன ஆதாரங்களை மட்டும் அந்த ஊராட்சிக்கு மாற்ற வேண்டும்; ஆனால், அந்த ஆதாரங்கள் ஓர் ஆற்றுப் பாசனத் திட்டத் தின் பாகமாயிருக்கக்கூடாது. பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டுக்குட் பட்ட குளங்கள் ஓர் ஆற்றுப் பாசனத் திட்டத்துடன் தொடர்பற்றவையா யிருந்த போதிலும், அவைகளை மாற்றக் கூடாது.

(2) அலுவல்களைச் செய்வதற்கான ஏற்பாடுகள்.—ஒரு ஊர்ப்பாசனப் பணி சம்பந்தமான அலுவல்கள் எந்தத் தேதியிலிருந்து ஊராட்சிக்கு மாற்றப்படுகின் றனவோ அந்தத் தேதியிலிருந்து ஊராட்சி, அந்த அலுவல்களைச் செய்வதற்குத் தானே ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும். அவசியமானால் தானே பணி யாளர்களை அமர்த்திக் கொள்ள வேண்டும். அந்த அலுவல்களைச் செய்யும் போது. அரசாங்கத்தார் நீர் கட்டிகளை அமர்த்திக் கொண்டிருந்தால் அவர் களைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் ஊராட்சிக்கு உண்டு. ஆயினும் அந்த நீர்க்கட்டிகளை நியமிப்பது, தண்டிப்பது, தள்ளிவிடுவது, அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பது ஆகியவை பற்றிய அதிகாரம் வருவாய்த்துறையினரிடமே இருந்து விடும்.

(3) நீர் வழங்கீடு முதலியவற்றை முறைப்படுத்துவதற்கான அதிகாரம்.—ஊரிலே பாசனப்பணியின் கீழ் உள்ள நிலங்களுக்குப் பாசனம் காட்ட வேண்டிய விதம், வரிசைக்கிரமம், நீர்வழங்கீடு தொடங்குதற்குரிய காலம், இன்னகாலம் வரையில் தொடர்ந்து நீர் வழங்கவேண்டுமென்பது, வழங்குதற்குரிய நீரின் மொத்த அளவு ஆகியவற்றை முறைப்படுத்த ஊராட்சிக்கு அதிகாரமுண்டு. ஆனால் சலுகையாக அல்லது விதாசாரப்படி வழங்கீடு பெறுவதற்கென மாமூலாக ஏற்பட்டுள்ள உரிமைக்கு இடையூறு நேரிடாத வகையில் முறைப்படுத்துவதற்குத் தனக்குள்ள அதிகாரத்தை ஊராட்சிக்குச் செலுத்த வேண்டும்.

(4) பாசன வரிசை முறைகளை ஒழுங்குபடுத்துவது.—(i) ஒரு கழகம் என்னும் முறைமையில் ஊராட்சி பாசன வரிசைமுறைகளை ஒழுங்குபடுத்துவது சம்பந்தமான எல்லா விவரங்களையும் தீர்மானிப்பதற்குப் பொறுப்பு வாய்ந்ததாகும். மதகுப் பலகைகளை உள்ளபடி இயக்குவதானது, ஊராட்சியின் பொதுக் கட்டுப்பாட்டுக்குட்பட்டு ஊர்த்தலைவர் ஒருவருக்கு மட்டுமே உரிய பொறுப்பாகும்.

(ii) 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 85 (1) பிரிவின்படித் தனக்குள்ள கடமைகளையும் அலுவலகங்களையும் திறமையாகச் செய்வதற்குச் அச்சட்டத்தின்படி தன்னால் அமர்த்தப்பட்ட ஒரு குழுவுக்குப் பாசன வரிசை முறைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரத்தை ஊராட்சிக்குக் கொடுக்கக்கூடாது.

(5) மதகு மடைகளை மாற்றுதல்.—ஊராட்சிப் பாசனப் பணியின் மதகு மடைகளில் எவ்வித மாறுதலையும் செய்யக்கூடாது அல்லது அப்பணி சம்பந்தமாக, குளம் புதுப்பிக்கும் திட்டக் குறிப்புகளில் கண்ட தரத்திலும் வேலை முறை அளவுக்குறிப்புகளிலும் தலையிடக்கூடாது. அல்லது வழிந்தோடணைகளை அல்லது கலிங்கல்களை உயர்த்தவோ தாழ்த்தவோ அல்லது விரிவாக்கவோ கூடாது; அல்லது வாய்க்கால்களுக்கு தலைப்புக் கட்டுமானங்களில் முக்கிய மாறுதல்கள் செய்யக்கூடாது அல்லது தலையிடக்கூடாது.

(6) கரைகள் மீது காவல்.—மழைக்காலத்தில் பாசனக் கட்டுமானக் கரை மீது காவல் காப்பதற்கு ஊராட்சி பொறுப்பு வாய்ந்ததாகும்.

(7) மதகுகள், கலிங்குகள் அல்லது சிற்றணைகள், வழிந்தோடணைகள் முதலியவற்றிற்குச் சேதம்.—பாசன வேலையின் பாகமாயிருக்கிற அல்லது அதனோடு தொடர்புடைய மதகுகள், சிற்றணைகள், வழிந்தோடணைகள், கலிங்கல்கள், வாய்க்கால்கள்(தலைப்பு கட்டுமானங்கள், கரை அல்லது வேறு

பணிகளுக்கு ஊராட்சியின் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினால் அல்லது செய்யத்தக்கதை செய்யத் தவறுவதினால் விளைகிற சேதத்துக்கு ஈடு செய்து கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட ஏதேனும் சேதம் ஊராட்சியின் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவது அல்லது செய்யத்தக்கதை செய்யத் தவறுவது ஆகியவற்றின் விளைவுதானா என்பது பற்றி மாவட்ட ஆட்சியாளர் தீர்மானம் முடிவானதாகும்.

(8) மண் தோண்டியெடுக்கக் கூடாதென்பது.—பாசன வேலைக் கரையின் அடிப்பகுதி எதிலிருந்தாகிலும் முப்பதடி தூரத்திற்குள் ஊராட்சி எதற்காக வாகிலும் எப்போதேனும் மண் தோண்டியெடுக்கக்கூடாது.

(9) பணிகளை மீண்டும் கைக்கொள்ள அரசாங்கத்தாருக்குள்ள அதிகாரம்.—ஊராட்சி அல்லது பேரூர்ப் பாசனப்பணி சம்பந்தமாக ஒரு ஊராட்சிக்கு மாற்றப்பட்டுள்ள ஏதேனும் கடமைகளை அரசாங்கத்தாராவது 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 157-ஆவது பிரிவின்படி அதிகாரங்கள் ஒப்படைக்கப்பெறக்கூடிய அதிகாரியாவது, காரணம் எதுவும் காட்டாமலே எப்போதேனும் மீண்டும் கைக்கொள்ளலாம்.

(10) கட்டுப்பாடும் மேற்பார்வையும்.—ஊராட்சிக்கு மாற்றப்பட்டுள்ள பாசன வேலை எல்லாவற்றின் பராமரிப்பும் ஊராட்சி ஒன்றியம் பொறியாளரின் (சந்தர்ப்பத்துக்கேற்ப வட்டாரப் பொறியாளரின் அல்லது மேற்பார்வையாளரின்) கட்டுப்பாட்டுக்கும் மேற்பார்வைக்கும் உட்பட்டிருக்க வேண்டும். மேலும் அது கோட்ட ஆட்சியாளரால் ஆய்வதற்குட்பட்டதாகும்.

(1963 மே 21-ஆம் தேதிய 1136-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(1965 ஜனவரி 7-ஆம் தேதிய 62-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

83. ஊராட்சிப் பணிகளுக்கான ஒப்ப அறிவிப்புகளை வரவழைப்பதும் ஏற்றுக் கொள்வதும்.—1. ஒப்பந்தத்தின் மூலம் செய்வதற்குரிய எந்தப் பணியின் உத்தேசச் செலவு 300 ரூபாய்க்கு மேற்படுமென்று ஒப்ப அறிவிப்பில் கூறிக்கப் பட்டுள்ளதோ அந்தப்பணி ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் ஒப்ப அறிவிப்புகள் அனுப்பும்படிக் கேட்க வேண்டும்.

ஆனால் செய்து முடிப்பதற்காக நெடுஞ்சாலை ஊராட்சிப் பொறியியல் பணிகள் துறையினரிடம் ஒப்புவிக்கப் பெற்றிருக்கிற ஒரு பணியைப்பற்றி ஊராட்சி ஒப்ப அறிவிப்புகளை வரவழைக்க வேண்டியதில்லை.

2. (1) 2-ஆவது விதியின் ஏற்பாடுகளுக்குட்பட்டு, செயல் அதிகாரி, மூத்திரையிட்ட உறைகளில் ஒப்ப அறிவிப்புகளை அனுப்பும்படி, கூடிய வரையில் மிக வெளிப்படையான முறையில்—

(அ) ஊராட்சி அலுவலகத்திலும் சாவடியிலும் செயல் அதிகாரி தகுதியெனக் கருதக்கூடிய வேறிடங்களிலும் ஒட்டப்படும் தமிழ் அறிவிப்பு மூலமாகவும்.

(ஆ) பணிக்குப் பிடிக்கிற செலவு 2,000 ரூபாய்க்கு மேற்பட்டால், மாவட்டத்தில் வழங்கிவருகிற செய்தித்தாள்கள் ஒன்றில் அல்லது பலவற்றில் விளம்பர மூலமாகவும் கேட்க வேண்டும்.

(2) (1) உள்விதியின்படி வெளியிடப்படும் விளம்பரம் அல்லது அறிவிப்பு ஒவ்வொன்றிலும் பின்வருபவை கண்டிருக்க வேண்டும் :—

(i) ஒப்பந்த ஆவணங்களை எப்போது, எங்கே பார்வையிடலா மென்பது.

(ii) திட்டவட்டமான வடிவத்தில் ஒப்ப அறிவிப்பு இருக்கவேண்டு மென்பது, அதாவது மதிப்பீட்டு வீதங்களுக்குக் குறைந்தோ அல்லது மேற் பட்டோ குறிப்பிட்ட சதவீதத்தில் அது இருக்க வேண்டுமா அல்லது அட்ட வணையில் சேர்க்கப்பட்டுள்ள பணியின் ஒவ்வோர் இனத்துக்காகவும் திட்டமான விதங்களைக் குறிப்பிட்டுத் தெரிவிக்க வேண்டுமா என்பது.

(iii) எப்போது யாருக்கு ஒப்ப அறிவிப்புகள் அனுப்ப வேண்டு மென்பது;

(iv) எப்போது, எங்கே அவைகள் திறக்கப்படுமென்பது.

(v) ஒப்ப அறிவிப்புடன் அனுப்பப்பட வேண்டிய பிணைப் பணத்தின் தொகையும், ஒப்ப அறிவிப்பு ஏற்றுக்கொள்ளப்படுமானால் தேவைப் படும் ஈட்டின் தொகையும் தன்மையும்,

(vi) வந்து சேர்ந்த ஒப்ப அறிவிப்புகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எதையேனும் காரணம் சொல்லாமலேயே தள்ளிவிடும் உரிமை ஊராட்சிக்கு உண்டென்பது;

3. ஒப்பந்தக்காரர்கள் பற்றிய பதிவேடு ஒன்றை ஊராட்சி அலுவலகத் தில் வைத்து வரவேண்டும்; அப்பதிவேடு இரகசியமானதென்று கருதப்பட வேண்டும். அப்பதிவேட்டின்படி ஒன்றை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும்.

4. ஒப்பந்தக்காரர்கள் பற்றிய பதிவேடு இவ்விதிகளுடன் இணைக்கப் பட்டுள்ள I ஆம் படிவப்படி இருக்க வேண்டும்.

5. (1) ஒப்பந்தக்காரர்கள் பற்றிய பதிவேட்டினை நாளது வரையில் எழுதி நிறைவு செய்திருக்க வேண்டும். செயல் அதிகாரி ஆறு மாதங்களுக்கு ஒரு முறையேனும் அப்பதிவேட்டைக் கூராய்வு செய்து அவ்வாறு செய்ததற்கு அடையாளமாக அதில் கையெழுத்திட வேண்டும். அப்பதிவேட்டில் மாறுதல்கள் செய்வது அவசியமென்று ஊராட்சிப் பொறியியல் மேற்பார்வையாளராவது பொறியாளராவது கருதினால் செயல் அதிகாரி ஆணைகளை பெற அவருக்கு அனுப்ப வேண்டும். கருதப்பட்ட மாறுதல்கள் மீது செயல் அதிகாரி ஆணைகள் பிறப்பித்து, தாம் ஆணையிட்ட எந்த மாறுதல்களுக்குத் தமக்குள்ள காரணங்களை எழுதி வைக்க வேண்டும். செயல் அதிகாரி ஆணையிட்ட மாறுதல்களைப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டும். பதிவேட்டில் செய்யப்பட்ட திருத்தங்களுக்குப் படி ஒன்றை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும் அதை அவருடைய அலுவலகத்திலுள்ள பதிவேட்டுடன் கோத்து வைக்க வேண்டும்.

(2) பதிவேட்டின் குறிப்புரைப் பத்தியில், ஒப்பந்தக்காரரின் தகுதியையும் அவர் முன் செய்த பணிகளின் தரத்தையும் மற்றெல்லாப் பொருத்தமான விவரங்களையும் எழுத வேண்டும்.

(3) எவரேனும் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்வித்துக் கொள்ள விரும்பினால், செயல் அதிகாரிக்கு விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும். அப்போது (6) உள்விதியின்படி ஊராட்சியினால் நிச்சயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டு ஒன்றை வைத்தனுப்ப வேண்டும். அச்சமயத்தில் அவர் தமது மற்றத் தகுதிகளையும் முந்திய அனுபவத்தையும் கண்டெழுத வேண்டும். செயல் அதிகாரி அவ்விண்ணப்பத்தின் பேரில் ஆணைகள் பிறப்பிக்க வேண்டும். தாம் மாறுதல்கள் எவையேனும் செய்தால், அவைகளுக்குக் காரணங்களை முறைப்படி எழுதி வைக்க வேண்டும்.

(4) ஒப்பந்தக்காரரின் விண்ணப்பத்தின் பேரிலான ஆணைகளை அவர் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் செயல் அதிகாரியின் ஆணையை எதிர்த்து ஊராட்சி ஒன்றிய மன்றத்துக்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஆணைகள் முடிவானவையாகும். ஆயினும் பணிகளைப் பழுதாகச் செய்திருப்பது முதலியவை போன்ற தொழில் நுட்பக் கூறுகளைப் பரிசிலனை செய்ய வேண்டியுள்ளவற்றில் (நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) கோட்டப் பொறியாளரைக் கலந்தாலோசிக்க வேண்டும். அவருடைய கருத்துக்கள் முடிவானவையாகும். அவற்றை ஊராட்சி ஒன்றிய மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(5) பதிவேடும் சம்பந்தப்பட்ட ஆவணங்களும், மேற்பார்வையிடும் அலுவலர் தணிக்கை செய்யும்போது பார்ப்பதற்குக் கிடைக்கக்கூடியவையா யிருக்க வேண்டும்.

(6) ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்காக விதிக்கப்படவேண்டிய கட்டணம் ஒவ்வொரு ஒப்பந்தக்காரருக்காகவும் நிச்சயிக்கப்பட்ட பண எல்லை யையொட்டி மாறுபடக் கூடாது. ஆனால், அரசாங்கத்தாரால் நிச்சயிக்கப் படும் பெரும் வரம்பாகிய 10 ரூபாய்க்கு மேற்படாமல் ஒரு சீரான வீதப் படி யிருக்க வேண்டும்.

குறிப்பு.—ஊராட்சி ஒன்றிய நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணித் துறையின் அல்லது அரசினர் பொறியியல் பணித்துறையின் பதிவான ஒப்பந்தக் காரர்களிடமிருந்து வரும் ஒப்ப அறிவிப்புகளைப் பற்றிக்கூட ஊராட்சிகள் ஆலோசனை செய்து பார்க்க வேண்டும்.

6. (1) ஒப்ப அறிவிப்பு அனுப்பப்பட வேண்டிய திட்டவட்டமான முறையை அதாவது மதிப்பீட்டு வீதங்களுக்குக் குறைந்தோ அல்லது அதிகப் பட்டோ குறிப்பிட்ட சதவீதப்படி அது இருக்க வேண்டுமா, அல்லது ஒப்பளிக் கப்பட்ட மதிப்பீட்டில் கண்ட வீதங்களுக்குத் தொடர்பில்லாமல் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பணியின் ஒவ்வொரு இனத்துக்காகவும் திட்டமான வீதங் களைக் குறிப்பிட்டுக் கூற வேண்டுமா என்பதை மதிப்பீட்டுக்குத் தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கத்தகுதி வாய்ந்த அதிகாரி, ஒவ்வொன்றின் தாராதரங்களை யொட்டித் தீர்மானிக்க வேண்டும்.

(2) சதவீத அடிப்படையின்பேரில் ஒப்ப அறிவிப்புகள் வரவழைக்கப் பட்டால் மதிப்பீடுகளின் தொகுப்பை மட்டும் ஆய்ந்து பார்க்க ஒப்பந்தக்காரர் களுக்கு அனுமதி கொடுக்கலாம். சாமான்களின் உள்ளபடியான விலையைக் காட்டும் விவரப்பட்டியலையும் வேலைக்கு வேண்டிய தளவாடச் சாமான்கள் கொண்டுவர எந்தப் படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதோ அவற்றின் தொலைவையும் அவர்களுக்குக் காட்ட வேண்டியதில்லை ; அது ஒப்பந்த ஆவணங் களின் பகுதியாகாது.

7. ஒப்பந்தத்தின் பேரில் ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்காக ஒப்ப அறிவிப்புகளை வரவழைப்பதற்கு முன் ஊராட்சியின் செயல் அதிகாரி மதிப்பீட் டுக்குத் தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கத் தகுதி வாய்ந்த அதிகாரியிட மிருந்து ஒப்பந்த ஆவணங்களைப் பெற வேண்டும். அவைகளின் பின்வருவன அடங்கியிருக்க வேண்டும் :—

(1) உத்தேசிக்கப்பட்ட வேலையின் பொதுப் பருமங்களைக் காட்டுகிற வரைபடங்களின் முழுத் தொகுதியும், அவசியமாயிருக்கிற வரையில் பல்வேறு பாகங்கள் பற்றிய விவரங்களும்.

(2) ஏதாவதொரு வேலை முறை அளவு நிலை விளக்க விபரம் காட்டினு லொழிய செய்ய வேண்டிய பணி பயன்படுத்த வேண்டிய சாமான்கள் ஆகியவற் றின் விளக்க விபரம்.

(3) பணியின் பல்வேறு விபரங்களின் அளவுகளைக் காட்டும் அட்டவணை.

(4) ஒப்ப அறிவிப்பு அனுப்பியவருடைய ஒப்ப அறிவிப்பு ஏற்றுக் கொள்ளப்படுமானால், அவர் நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்த நிபந்தனைகளின் தொகுதி.

8. எப்பணியேனும் எஃகுப் பணியின் ஒப்பந்தத் தொகை 5,000 ரூபாய்க்கு மேற்பட்டால், அந்த எஃகுப் பணி சம்பந்தமாகத் தனியாய் ஒப்ப அறிவிப்பு களை வரவழைக்க வேண்டும். அப்போதுதான் எஃகு உற்பத்தித் தொழில் நிறுவனங்கள் அந்தப் பணிகளுக்காகப் போட்டி வீதங்களில் ஒப்ப அறிவிப்பு கள் அனுப்புவதற்கு இயலும்.

விளக்கம்.—இவ்விதியின் காரியத்துக்காக எஃகுப் பணியின் மதிப்பைக் கணக்கிடுகையில், வலுவேற்றிய கற்கலவைப் பணியிலுள்ள எஃகின் மதிப்பைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

9. ஒப்ப அறிவிப்புடன் ஒப்ப அறிவிப்பு அறிக்கையிற் குறிப்பிட்டுள்ள பிணைப்பணம் அனுப்பப்பட்டாலன்றி, அது செல்லுபடியாவதாகச் சாதாரண மாய்க் கருதப்படமாட்டாது.

பிணைப்பணமாகக் கட்டப்பட்டிருக்கிற எல்லாத் தொகைகளும் கண்டுள்ள தனிப்பட்டியல் ஒன்றைச் செயல் அதிகாரியின் கையெழுத்துடன் வைத்து வர வேண்டும். சுலபமாகப் பார்த்துத் தெரிந்து கொள்வது வசதியாயிருக்கும் பொருட்டு இவ்வாறு வைத்து வரவேண்டும்.

10. கட்டவேண்டிய பிணைப்பணத்தின் தொகையானது ஏற்றவாறு, ஒப்பந்தக்காரருடைய ஒப்ப அறிவிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு நியமிக் கப்பட்ட காலத்துக்குள் வேண்டிய ஈட்டினை அவர் கட்டத் தவறினால் நேரிடும் இழப்புக்கு அல்லது அவருக்குச் சேரவேண்டிய தொகைகள் போதிய அளவு பொறுப்புறுதியாக ஆகும் வரை ஈடாக இருக்கும் அளவிற்கு அதிகமாயிருக்க வேண்டும்.

11. இதற்கெனக் குறிப்பிட்டுள்ள காலத்திலும் இடத்திலும் செயல் அதிகாரி ஒப்ப அறிவிப்புகள் அடங்கிய முத்திரையிட்ட உறைகளை அங்கே வந்திருக்கக்கூடிய ஒப்ப அறிவிப்புக்காரர்களின் அல்லது அவர்களிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள முகவர்களின் முன்னிலையில் திறந்து, வீதங்களையும்

அவர்களுக்குப் படித்துக் காட்ட வேண்டும். முத்திரையிட்ட உறைகள் அவ்வாறு திறக்கப்படுகிறவரையில் அவைகளைச் செயல் அதிகாரியின் கைவசத்தில் வைத்திருக்க வேண்டும். ஒப்ப அறிவிப்புகளைத் திறந்தவுடன் செயல் அதிகாரி, ஒப்ப அறிவிப்பு ஒவ்வொன்றிலும், ஒப்ப அறிவிப்புக்காரர் செய்து அவர் சான்றுக் கையொப்பமிட்டிருக்கக்கூடிய திருத்தங்களுக்கெல்லாம் சுருக் கொப்பமிட வேண்டும். ஒப்ப அறிவிப்பிலே ஒப்ப அறிவிப்புக்காரர் சான்றுக் கையொப்பமிட்டிராத திருத்தங்கள் இருந்தால், அத் திருத்தங்கள் பற்றிய குறிப்பு ஒன்றை ஒப்ப அறிவிப்பு திறக்கப்பட்டவுடன் அதிலேயே எழுதி விட வேண்டும். செயல் அதிகாரி வந்து சேர்ந்த ஒப்ப அறிவிப்புகளின் மொத்த எண்ணிக்கையை, ஒப்ப அறிவிப்புப் பதிவேட்டில், பணி ஒவ்வொன்றுக்கும், எதிரே எழுத வேண்டும்.

12. ஒப்ப அறிவிப்புகள் திறக்கப்பட்ட பிறகு, அவைகளை அட்டவணைப் படுத்தி, இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டிருக்கிற II-ஆம் படிவப்படி வைத்து வரப்படுகிற ஒப்ப அறிவிப்புப் பதிவேட்டில் எழுத வேண்டும். செயல் அதிகாரியானவர் பதிவேட்டிலுள்ள பதிவுகளைக் கூராய்வு செய்து, மூல அறிவிப்புகளை யொட்டிப் பார்க்கும்பொழுது அந்த அட்டவணை சரியானதென்று சான்றிட வேண்டும். மூல அறிவிப்புகளைப் பத்திரமாக வைத்திருந்து, தணிக்கைக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். ஒப்ப அறிவிப்புப் பதிவேட்டையும் ஒப்ப அறிவிப்புகளையும் முடிவு செய்வதற்காக ஊராட்சியின் அடுத்த கூட்டத்தில் அதன்முன் வைக்க வேண்டும்.

13. (1) மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பினையே சாதாரணமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பை ஏற்றுக்கொள்வது உகந்ததன்று என்று கருதப்பட்டால், அதற்குத் தெளிவான, நம்பத்தக்க காரணங்களை ஊராட்சி எழுதி வைக்க வேண்டும்.

(2) ஓர் ஒப்ப அறிவிப்புக்காரர் வேலை செய்யக்கூடிய திறமையும் அவருடைய நேர்மையும் தெரியாததனால் அவருடைய ஒப்ப அறிவிப்பினைத் தள்ளிவிட வேண்டுமென்பதில்லை. ஆயினும் சூழ்நிலைகளை நோக்கும்போது அடியிற்கண்டபடிச் செய்வது அவசியமெனத் தோன்றினால், ஒப்பு அறிவிப்புக்கு விடப்படும் இனங்களின் விலை மதிப்பில் 10 சத வீதத்துக்கு மேற்படாமல் ஊராட்சி அவசியமெனக் கருதுகிற அதிகப்படியான ஈட்டினை ஒப்ப அறிவிப்புக் காரரிடமிருந்து வாங்க வேண்டும்.

(3) மிகக்குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பு தள்ளிவிடப் பட்டால் அடுத்தபடி மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். அந்த ஒப்ப அறிவிப்புகூட ஏற்றுக் கொள்வதற்கு

உகந்ததன்று என்று கருதப்பட்டால் அடுத்தபடி அதிக தொகைக்கான ஒப்ப அறிவிப்பினைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். இந்த உள் விதியின் படி ஒப்ப அறிவிப்பினைத் தள்ளிவிடும் ஒவ்வொன்றிலும் அதற்கான தெளிவான நம்பத் தக்க காரணங்களை ஊராட்சிக்கு எழுதி வைக்க வேண்டும்.

(4) ஒப்ப அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கிற வீதங்களல்லாத வேறு வீதங்களில் ஒப்ப அறிவிப்புக்காரர் கேட்டுக் கொள்வதன் பேரிலாவது மற்றப் படியாவது, ஒப்ப அறிவிப்பு ஒன்றை எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

(5) வந்து சேர்ந்த ஒப்ப அறிவிப்புகளில் உயர்வான வீதங்கள் தரப் பட்டுள்ளன என்னும் காரணத்தினால் அவைகள் தள்ளிவிடப்பட்டால், அல்லது ஒப்ப அறிவிப்பு எதுவுமே வராவிட்டால் ஊராட்சி ஒன்றியம் மன்றத்தின் ஒப்புதலை ஊராட்சி முன்னதாகப் பெற்றுக் கொண்டு ஒப்ப அறிவிப்புக்காரர் களுடன் தனிப்பட்ட முறையில் பேச்சு வார்த்தைகள் நடத்தலாம். ஒப்ப அறிவிப்பு முடிவு செய்யப்பட்டபோது அல்லது ஆலோசனையில் இல்லாத போது மாத்திரமே அவ்வாறு பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டும்.

(6) ஒப்ப அறிவிப்புகள் திறக்கப்பட்ட பிறகு அவைகளை முடிவு செய்வதில் தவிர்க்கக்கூடிய தாமதம் எதுவும் இருக்கக்கூடாது. ஒப்ப அறிவிப் புகள் திறக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு வாரத்திற்கு மேற்பட்ட காலம் வரையில் அவைகளில் எவையும் முடிவு செய்யப்படாமலிருக்கக்கூடாது.

14. முந்திய விதிகளில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதக மில்லாமலே, குறிப்பிட்ட நிகழ்வு அல்லது குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த நிகழ்வுகளில் ஒப்ப அறிவிப்புகள் வேண்டாமென்று சொல்லிவிட அல்லது மேற்படி விதிகளில் கண்ட ஏற்பாடுகளில் ஏதுவேனும் அனுசரிக்கப் படாமையைப்பொறுத்திடப் போதிய காரணங்களுக்காக மாவட்ட ஆட்சியாளர் ஊராட்சிக்கு அனுமதி அளிக்கலாம்.

15. ஒப்ப அறிவிப்புகள் வரவழைக்கப்படாவிட்டால் அல்லது வேண்டா மென்று கருதப்பட்டால் செயல் அதிகாரி தாம் தேர்ந்தெடுக்கும் ஒப்பந்தகாரர் மூலமாக ஒப்பளிக்கப்பட்ட வீதங்களுக்குச் சாதாரணமாக மேற்படாத வீதங்களில் பணியைச் செய்து முடித்துக் கொள்ள வேண்டும். அவசரம் காரணமாக அல்லது தனிப்பட்ட காரணங்களினால் ஒப்பளிக்கப்பட்ட வீதங்களை விட அதிகமான வீதங்களை ஏற்றுக் கொள்ளக் கருதினால் (நெடுஞ் சாலை வாரகப் பொறியியல் பணிகள்) கோட்டப் பொறியாளரின் எழுத்து மூலமான ஒப்புதலை முன்னதாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இணைப்பு.

படிவம் I

(4-ஆவது விதியைப் பார்க்கவும்.)

ஒப்பந்தக்காரர்கள் பற்றிய பதிவேடு.

1. தொடர் எண்.
2. ஒப்பந்தக்காரரின் பெயர்.
3. முகவரி.
4. ஓர் ஆண்டில் எப்போதேனும் செய்து முடிப்பதற்காக அவரிடம் நம்பகமாய் ஒப்புவிக்கப்படக்கூடிய உளதாகும் ஒப்பந்தத்தின் பண எல்லை.
5. சாலைப் பணிகளுக்காக அல்லது கல்வெட்டுமானப் பணிகளுக்காக மாத்திரம் அல்லது பொதுவாக எல்லாப் பணிகளுக்காகவும் சாமான்கள் வழங்கப்பெற தகுதியுடையவரா என்பது.
6. பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்ட செலுத்துச் சீட்டின் எண்ணும் தேதியும்.
7. குறிப்புரை 5 (2) விதியைப் பார்க்கவும்.

படிவம் II.

(12-ஆவது விதியைப் பார்க்கவும்.)

ஒப்ப அறிவிப்புப் பதிவேடு.

பணியின் பெயர்.

ஒப்பந்தத்தின் மதிப்பீட்டுத் தொகை.

வந்து சேர்ந்த ஒப்ப அறிவிப்புகளின் மொத்த எண்ணிக்கை.

(1) தொடர் எண்.	(2) ஒப்ப அறிவிப்புக்காரர் பெயர்.	(3) ஒப்ப அறிவிப்புச் சுருக்கம்.	(4) வைப்புத் தொகை.	(5) ஊராட்சியின் ஆணைகள்.

(1962 பிப்ரவரி 1 ஆம் தேதிய 260 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறை ஆணை.)

(115) ஒப்ப அறிவிப்புக்கான அறிவிப்புகளை வெளியிடுவது பற்றிய விளக்க உரைகள்.—பணிகளுக்காகவும், சரக்குகளையும் சாமான்களையும் வழங்குவதற்காகவும் ஒப்ப அறிவிப்புகளை வரவழைப்பதில் ஊராட்சிகள் அறிவிப்புகள் வெளியிடுவதைக் குறித்து 1961 ஏப்ரல் 26-ம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாங்க ஆணையில் கண்ட 70-ஆம் எண் அறிக்கையிலுள்ள 7 (1) (ஆ) விதியிலும் 1962 பெப்ரவரி 1-ஆம் தேதிய 260-ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறைப் பல்வகை அரசாங்க ஆணையில் கண்ட 15ம் எண் அறிவிக்கையிலுள்ள 2 (1) (ஆ) விதியிலும் ஏற்பாடு கண்டிருக்கிறது. இந்த ஏற்பாடுகளைத் தாராளமாகவே ஊராட்சிகள் பயன்படுத்தி வந்திருக்கின்றன என்றும், இதன் விளைவாகப் பலவற்றில் அந்த அறிக்கைகளை வெளியிடுவதற்காக ஊராட்சி நிதிகளிலிருந்து பெருஞ் செலவு செய்யப்பட்டிருக்கிறதென்றும் தெரிந்து கொள்ள அரசாங்கத்தாருக்கு வாய்ப்பு நேரிட்டது. மேற்சொன்ன வற்றில் ஊர்களின் செயல் அதிகாரிகள் செய்தித் தாள்களில் அறிக்கைகளை வெளியிடுவது இயலுமாறு ஏற்பாடுகளை எடுத்து விடும்பொருட்டு, விதிகளைத் திருத்துவது அவசியமென அரசாங்கத்தார் கருதுகிறார்கள். இது பற்றித் திருத்தமான விதிகள் வெளியாகும் வரையில் பின்வரும் விளக்க உரைகள் பிறப்பிக்கப்படுகின்றன. பணிகளுக்காகவும் சாமான்கள் சரக்குகள் முதலியவற்றை ஊராட்சிகளுக்கு வழங்குவதற்காகவும் ஊராட்சிகள்

ஒப்ப அறிவிப்புகளை வரவழைத்து ஏற்றுக்கொள்வதற்குச் சம்பந்தப்பட்ட ஒப்ப அறிவிப்புக்கான அறிவிப்புகளுக்கு இந்த விளக்க உரைகள் பொருந்தும்.

2. ஊராட்சிகளைப் பொறுத்தவரை ஒப்ப அறிவிப்புக்கான அறிவிப்பை (i) ஊராட்சி அறிவிப்புப் பலகையிலும், (ii) ஊர்ச் சாவடி இருந்தால் அங்கேயும், (iii) ஊராட்சி ஒன்றிய அறிவிப்புப் பலகையிலும், (iv) செயல் அதிகாரி அவசியமெனக் கருதக் கூடிய மற்ற இடங்களிலும் வெளியிடவேண்டும். இவற்றோடு கூட ஊராட்சிச் செயல் அதிகாரி அறிவிப்புகளின் படிகளைச் சம்பந்தப்பட்ட ஊராட்சி அறிவிப்புப் பலகையில் வெளியிடுவதற்காக ஊராட்சி ஒன்றியம் பரப்புக்குட்பட்ட மற்றெல்லா ஊராட்சிகளின் செயல் அதிகாரிகளுக்கும் அனுப்ப வேண்டும்.

ஊராட்சி பிறப்பிக்கிற ஒப்ப அறிவிப்புக்கான அறிவிப்பை எந்த நேர்விலும் செய்தித்தாள் எதிலும் வெளியிடக் கூடாது.

(1962 மே 29 ஆம் தேதிய 67987/தனி/62-1 ஆம் எண் குறிப்பாணை.)

84. சாமான்கள், சரக்குகள் முதலியவற்றை ஊராட்சிகளுக்கு வழங்குவது—1. வேலைகள் செய்து முடிப்பதற்காக வேண்டியவையல்லாத மற்றச் சாமான்கள், சரக்குகள் அல்லது சேவைகளை வழங்குவது சம்பந்தமாக, 300 ரூபாய்க்கு மேற்படாத செலவின் எந்த வரம்பு வரை ஒப்ப அறிவிப்புகள் வேண்டாமென்று ஊராட்சி தீர்மானிக்கலாம். ஒப்ப அறிவிப்புகள் வரவழைக்கப்பட்டால் செயல் அதிகாரி அவற்றை அட்டவணைப்படுத்திக் கூராய்வு செய்ய வேண்டும்; பின்னர் செயல் அதிகாரியின் பரிந்துரைகளுடன் முடிவிற்கு அவைகளை ஊராட்சியின் முன்னர் வைக்க வேண்டும்.

2. மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பையே சாதாரணமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பை ஏற்றுக்கொள்வது உகந்ததல்லவெனக் கருதப்பட்டால், அதற்குண்டான காரணங்களை தெளிவாக எழுதி வைத்து, தணிக்கைக்காக அவை கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்.

குறிப்பு.—ஒப்ப அறிவிப்பானது, எழுது பொருள் போன்ற, ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைப் பற்றியதாயிருந்தால், மிகக் குறைவான தொகைக்கான ஒப்ப அறிவிப்பினை ஏற்றுக் கொள்வதாயிருக்கிற வரையில் ஒப்பீட்டு விலைகளைப் பற்றி, ஒவ்வொரு பொருளுக்காகத் தனித்தனியாகவோ எல்லாப் பொருள்களுக்காகவும் கூட்டாகவோ குறிப்பிட்ட தொகுதிகளைச் சேர்ந்த பொருள்

களுக்காகவோ ஆலோசனை செய்து பார்க்கலாம் (ஆனால் இந்த வழிகளில் எதிலாவது மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பைத் தேர்ந்தெடுத்த ஊராட்சிக்குள்ள எண்ணத்தைப் பற்றி ஒப்ப அறிவிப்பு அறிக்கையில் தெளிவாகச் சொல்ல வேண்டும்). எல்லாப் பொருள்களுக்கும் சம்பந்தமாகவும் அல்லது ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள எல்லாப் பொருள்கள் சம்பந்தமாகவும் உத்தேசத் தேவைகளின் செலவை ஒப்ப அறிவிப்பு ஒவ்வொன்றிலும் கொடுக்கப் பட்டுள்ள விதங்களை யொட்டிக் கணக்கிட வேண்டும். சேர்த்து எடுத்துக் கொள்ளக் கருதியிருக்கிற பொருள்கள் எல்லாவற்றின் உத்தேசத் தேவைகளின் மொத்தச் செலவைக் கணக்கிட்டதில் எந்த ஒப்ப அறிவிப்பு மிகக் குறைவாக வருகிறதோ அதுவே குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பாகும்.

3. ஒப்ப அறிவிப்புக்காரரின் வழங்கீட்டுத் திறமையும் நேர்மையும் தெரிய வில்லை என்னும் காரணத்தினாலேயே அவருடைய ஒப்ப அறிவிப்பைத் தள்ளி விட வேண்டுமென்பதில்லை, ஆயினும் சூழ்நிலைகளை நோக்கும்போது அடியிற் கண்டவாறு செய்வது அவசியமெனத் தோன்றினால் ஊராட்சி அவசியமெனக் கருதுகிற அதிகப்படியான ஈட்டினை ஒப்ப அறிவிப்புக்காரரிடமிருந்து வாங்க வேண்டும்.

4. மிகக் குறைந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பு தள்ளிவிடப்பட்டால், அடுத்தபடி உயர்ந்த தொகைக்கான ஒப்ப அறிவிப்பையும் தள்ளிவிடுவதற்கான போதிய காரணங்களை எழுதி வைக்க முடிந்தாலன்றி மற்றப்படி அந்த ஒப்ப அறிவிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

5. ஓர் ஒப்ப அறிவிப்பில் குறிப்பிட்டிருக்கிற விதங்களல்லாத வேறு விதங்களின்படி அந்த ஒப்ப அறிவிப்பை எந்த நிகழ்விலும் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

6. ஒப்ப அறிவிப்புகள் திறக்கப்பட்ட பிறகு அவைகளை முடிவு செய்வதில் தவிர்க்கக்கூடிய தாமதம் எதுவும் இருக்கக்கூடாது.

7. (1) செயல் அதிகாரி முத்திரையிட்ட உறைகளில் கூடிய வரையில் மிக வெளிப்படையான முறையில் ஒப்ப அறிவிப்புகள் வரவழைக்கப்பட வேண்டும்.

(அ) எல்லா நிகழ்வுகளிலும் ஊராட்சி அலுவலகத்திலும் செயல் அதிகாரி தகுதியெனக் கருதக்கூடிய வேறு இடங்களிலும் ஒட்டப்படுகிற தமிழ் அறிவிப்பு மூலமாகவும்.

(ஆ) 500 ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவு பிடிக்குமென எதிர்பார்க்கப் பட்டால் அந்த மாவட்டத்தில் வழங்குகிற குறைந்தது ஒரு செய்தித் தாளிலேனும் விளம்பர மூலமாகவும் வரவழைக்கவேண்டும்.

(2) (1) உள்விதியின் கீழ் வெளியிடப்படுகிற அறிவிப்பு அல்லது விளம்பரம் ஒவ்வொன்றிலும், மற்ற செய்திகளுடன் கூட, பின்வரும்,

(அ) இன்ன நிபந்தனைகளின்படியும் இன்ன அலுவலரிடமிருந்தும் பல வேறு பொருள்களின் அளவுகளை அறிவிப்பில் அல்லது விளம்பரத்தில் விவரமாகக் குறிப்பிட முடியாதபோது அவை பற்றிய அட்டவணையின் நகலுக்கு விலை ஏதாகிலுமிருந்தால், அது இன்ன விலைக்கு கிடைக்கு மென்பதும் கண்டிருக்க வேண்டும்.

(ஆ) திட்டவட்டமாக இன்ன படிவத்தின்படி ஒப்ப அறிவிப்பினை அனுப்ப வேண்டுமென்பது; அதாவது பல்வேறு பொருள்களின் விலைகளைக் குறிப்பிட வேண்டுமா என்பதும், ஒப்ப அறிவிப்பின் ஒப்பீட்டு மதிப்பு அளவு களின் அட்டவணையில் கண்டுள்ள ஒவ்வொரு பொருளையும் ஒட்டி ஆராயப் படுமா அல்லது அப்பொருள்கள் எல்லாவற்றிலும் கூட்டாக அல்லது அப்பொருள்களின் தொகுதிகளுக்காக ஆராயப்படுமா என்பதும்.

(இ) ஒப்ப அறிவிப்புகள் அனுப்ப வேண்டிய காலமும் இடமும்; ஊராட்சி அலுவலகத்தில் அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து அல்லது (1) உள் விதியில் கண்ட (ஆ) பகுதியின் கீழ்வருவனவற்றில் செய்தித்தாளில் முதல் விளம்பரம் வெளியான தேதியிலிருந்து குறைந்தது பத்து நாள் கால அளவு கொடுக்க வேண்டும்.

(ஈ) இன்ன காலத்திலும் இன்ன இடத்திலும் ஒப்ப அறிவிப்புகள் திறக்கப்படுமென்பது.

(உ) ஒப்ப அறிவிப்புடன் செலுத்தப்பட வேண்டிய பிணைப் பணத்தின் தொகையும் ஒப்ப அறிவிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டால் தேவைப் படும் ஈட்டின் தொகையையும் தன்மையும்.

(ஊ) ஒப்ப அறிவிப்பினை ஏற்றுக்கொள்ளத் தகுதிவாய்ந்த அதிகாரி.

(எ) ஒப்ப அறிவிப்பினை ஏற்றுக் கொள்ளத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு வந்து சேர்ந்த ஒப்ப அறிவிப்புகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எதையேனும் காரணங்கள் காட்டாமலேயே தள்ளி விடும் உரிமை உண்டென்பது.

(ஏ) நியாயமான காரணங்கள் இன்றித் தமது ஒப்ப அறிவிப்பினை ஒப்ப அறிவிப்புக்காரர், தாம் பிறகு அனுப்பும் ஒப்ப அறிவிப்புகள் சுருக்க வகையாய்த் தள்ளிவிடப்பெறுவதற்கு உள்ளாவாரென்பது. (அக்காரணங்கள் நியாயமானவையா என்பது ஒப்ப அறிவிப்பை ஏற்றுக் கொள்ளத் தகுதி வாய்ந்த அதிகாரி தீர்மானிக்கவேண்டும்).

8. அடியிற்கண்டவைகளை வாங்குவதற்கு இவ்விதிகளில் உள்ளது எதுவும் பொருந்தாது ; அவையாவன :—

(i) இந்திய பண்டகசாலைத் துறையினர் மூலமாக வாங்கப்படும் பண்டங்கள்,

(ii) முந்நாள் படைப்பணியினர்களை மீண்டும் குடியமைப்பதற்காக அரசாங்கத்தால் தொடங்கப்படும் உலோகப் பட்டறைகளிலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் வரும் பொருள்கள்.

(iii) துப்புரவு முதலிய காரியங்களுக்கான காளைகள்.

(iv) அரசாங்கத்தாரின் அல்லது அவர்களுடைய முகவர்களின் ஆணைகளின் பேரில் வழங்கப்படும் அனுமதிச் சீட்டு மூலமாகக் கட்டுப் பாட்டு விதங்களின் படியுள்ள கட்டுப்பாட்டுக்குட்பட்ட பொருள்கள்.

(v) பெட்ரோலைப் பகிர்ந்து கொடுப்பதற்கும் வழங்குவதற்குமான தரமான தொழில் நிறுவனங்களிலிருந்து அல்லது அவைகளிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள முகவர்களிடமிருந்து, அந்தக் காலத்தில் அமலில் உள்ள விதங்களின்படிக் கிடைக்கும் பெட்ரோல்.

9. முந்திய விதிகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, கோட்ட ஆட்சியாளர் போதுமான காரணங்களுக்காகக் குறிப்பிட்ட நிகழ்வில் அல்லது வகையைச் சேர்ந்த நிகழ்வுகளில் ஒப்ப அறிவிப்புகள் வேண்டாமென்று விட்டு விட அல்லது அவ்விதிகளில் கண்ட நிபந்தனைகளில் எதுவேனும் அனுசரிக்கப்படாத பிழையைப் பொறுத்திட ஊராட்சிக்கு அனுமதி வழங்கலாம்.

(1961 ஏப்ரல் 26-ம் தேதிய 1248-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

(116) காளைகளை வாங்குவது.—சாமான்கள், சரக்குகள் முதலியவற்றை வழங்குவது சம்பந்தமான விதிகளில் கண்ட 8 ஆவது விதியின்படி, ஒப்ப

அறிவிப்புகளை வரவழைக்காமலேயே ஊராட்சிகள் காளைகளை வாங்கலாம். ஆயினும், காளைகளை வாங்குவதில் ஒரு சீரான நடைமுறையைக் கைக்கொள்ள வேண்டுமென அரசாங்கத்தார் கருதுகிறார்கள். காளைகளை வாங்குவதற்கு வேண்டிய நிதிகளை ஊராட்சிச் செயல் அதிகாரியிடம் கொடுக்க வேண்டும். அவர் இதற்கென ஊராட்சியினால் நியமனம் செய்யப்பட்ட இரண்டு ஊராட்சி உறுப்பினர்களின் உதவியைக்கொண்டும், உள்ளூர் கால்நடை உதவி மருத்துவரின் உதவியைக்கொண்டும் காளைகளை வாங்க வேண்டும். காளை வேலை செய்யும் திறனுடையது என்பதையும், காளைகளுக்காகக் கொடுக்கப்பட்ட விலை நியாயமானதுதான் என்பதையும் ஒவ்வொரு நிகழ்விலும், கால் நடை உதவி மருத்துவர் சான்றிட வேண்டும்.

(1963 ஏப்ரல் 10-ஆம் தேதிய 849-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(117) பணிகளைத் தொடங்குவது.—மதிப்பீடுகள் ஏற்கப்பட்டு, தகுந்த அதிகாரி ஒதுக்கீடு செய்தாகிற வரையில் எந்தப் பணியையும் தொடங்க லாகாது; தக்க ஒப்பளிப்பின்றி, வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைக்கு மேல் செலவு செய்யவும் கூடாது.

ஆயினும் 1958 ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சி சட்டத்தில் கண்ட 45 ஆவது பிரிவின்படி அவசர நிகழ்வுகளில் பணிகளைச் செய்து முடிப்பதற்கு இது பொருந்தாது.

(1954 ஏப்ரல் 5-ஆம் தேதிய 515-ஆம் எண் உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

(118) வேலைகளைச் செய்து முடிப்பது.—வேலைகளைத் துறையினரே அல்லது ஒப்பந்த மூலமாகச் செய்து முடிக்கலாம். வேலைக்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற ஒப்பந்தக்காரர் வேலை முறைப்படிச் செய்து முடிப்பதற்காக ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று எழுதிக் கொடுக்க வேண்டும்.

(ஒன்றியம் நடைமுறை நூலின் 173 ஆவது விளக்கவுரை.)

(119) ஈடு.—ஒப்பந்தத்தை முறைப்படி நிறைவேற்றுவதற்காக எப்போதும் ஈடுவாங்க வேண்டும், இது சாதாரணமாக ஒரு மொத்தத் தொகையாகவோ செய்யப்பட்ட வேலையினிமித்தம் மாதந்தோறும் கொடுக்கப்படவேண்டிய தொகைகளிலிருந்து பத்து சதவீதம் கழிவுத் தொகையாகவோ இருக்கும். அவ்வாறு வாங்கப்படும் ஈடு சில சமயங்களில் அதிகமாகக் கொடுத்ததாக அளவு பார்க்கும்போது கண்டுபிடிக்கப்பட்டால் அவைகள் ஈட்டிலிருந்து சரிக்கட்டப்படும்.

(ஒன்றியம் நடைமுறை நூலின் 174 ஆவது விளக்க உரை.)

(120) உதவித்தொகை வேலை.—தனியார் கொடுக்கும் உதவித்தொகைகளிலிருந்து எந்த வேலையேனும் செய்து முடிப்பதாயிருந்தால், வேலையைத் தொடங்குவதற்கு முன் உதவித்தொகைகளைத் தவறாமல் தண்டல் செய்து கணக்குகளில் வரவு வைக்க வேண்டும். உதவித்தொகைகளை அப்படியே கருவூலத்தில் செலுத்திவிட வேண்டும்.

(நடைமுறை நூலின் 178 ஆவது விளக்க உரை.)

85. கட்டிடங்களுக்கு எண் இடுவதற்கான அதிகாரி.—1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தில் கண்ட 110-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் காரியங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட அதிகாரியானவர்—

(i) ஊராட்சி அமைக்கப்பெற்றுள்ள பகுதி சம்பந்தமாக சம்பந்தப்பட்ட ஊராட்சி செயல் அதிகாரியும்,

(ii) ஊராட்சி அமைக்கப்பெற்றிராத பகுதியில், அதிகார வரம்புடைய ஆணை வட்டாட்சியாளர் அல்லது வட்டாட்சியாளரும் ஆவார்கள்.

(1961 ஏப்ரல் 26-ஆம் தேதிய 1248-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

86. குற்றங்களை இணக்கம் செய்து கொள்ளுதல்.—1958-ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்டுள்ளவையும் கீழ்க்கண்ட அட்டவணையின் முதல் பத்தியில் குறிப்பிட்டிருப்பவையுமான பிரிவுகளின்படிக் கண்டிக்கப்படத்தக்க குற்றங்கள், அதன் நான்காவது பத்தியில் கண்டுள்ளவாறு இணக்கம் செய்து கொள்ளத் தக்கவையாகும் அல்லது அக்குற்றத்துக்காகத் தொடரப்பட்ட வழக்கு நடந்து கொண்டிருக்கிற நீதிமன்றத்தின் அனுமதியுடன் இணக்கம் செய்து கொள்ளத்தக்கவையாகும் :—

அட்டவணை

பிரிவு, உட்பிரிவு அல்லது பகுதி.	குற்றம்.	சட்டத்தின்படி தண்டனை.	இணக்கம் செய்து கொள்ளத்தக்கதா அல்லது நீதிமன்றத்தாருடைய அனுமதியுடன் இணக்கம் செய்து கொள்ளத்தக்கதா என்பது.
(1)	(2)	(3)	(4)
82 (1) (ஆ)	பொதுச் சாலையில் அல்லது அதன் மீது சட்ட விரோதமாகச் சுவர் எழுப்புவது அல்லது வேலி போடுவது முதலியன.	நூறு ரூபாய்.	இணக்கம் செய்து கொள்ளத் தக்கது.
82 (1) (இ)	பொதுச் சாலை அருகே எவ்விடத்திலேனும் சட்டத்திற்கு மாறாகக் கல் வெட்டி எடுப்பது.	ஐம்பது ரூபாய்.	இணக்கம் செய்து கொள்ளத் தக்கது.
82 (1) (ஈ)	வடிகாலின் மீது சட்டத்திற்கு மாறாகக் கட்டிடம் எழுப்புவது.	இருநூறு ரூபாய்.	அக் குற்றத்துக்காகத் தொடரப்பட்ட வழக்கு நடந்து கொண்டிருக்கிற நீதிமன்றத்தின் அனுமதியுடன் இணக்கம் செய்து கொள்ளத்தக்கது.
82 (1) (உ)	ஊராட்சியிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற பொதுச் சாலையில் அனுமதியின்றி மரங்களை நடுதல்.	ஷை	இணக்கம் செய்து கொள்ளத் தக்கது.

பிரிவு, உட்பிரிவு அல்லது பகுதி.	குற்றம்.	சட்டத்தின்படி தண்டனை.	இணக்கம் செய்து கொள்ளத்தக்கதா அல்லது நீதிமன்றத்தாருடைய அனுமதியுடன் இணக்கம் செய்து கொள்ளத்தக்கதா என்பது.
(1)	(2)	( )	(4)
82 (1) (ஊ)	ஊராட்சியிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிற பொதுச் சாலையில் அல்லது வேறு உடைமையில் அல்லது எந்தப் புறம்போக்கின் அல்லது நிலத்தின் பயனீடு 86 அல்லது 87-ஆவது பிரிவின்படி அதனுல் முறைப்படுத்தப்படுகிறதோ அந்தப் புறம்போக்கில் அல்லது நிலத்தில் வளர்ந்து கொண்டிருக்கிற மரங்களை அனுமதியின்றி வெட்டுதல் முதலியவை.	இருநூறு ரூபாய்.	இணக்கம் செய்து கொள்ளத் தக்கது.
100 (1)	உரிமம் இன்றி அல்லது உரிமத்துக்கு மாருகப் புதிய தனியார் அங்காடியைத் தொடங்குவது அல்லது தனியார் அங்காடியைத் தொடர்ந்து வைத்திருப்பது.	ஐந்நூறு ரூபாய்.	ஷை
100 (3)	சான்று இல்லாமல் தனியார் அங்காடியில் கட்டணங்கள் விதிவிப்பது.	நூறு ரூபாய்.	ஷை
102	அனுமதியின்றி விலங்கு அல்லது பொருள் எதையேனும் பொது அல்லது தனியார் அங்காடியில் விற்பது அல்லது விற்பனைக்காகக் காட்டி வைத்திருப்பது.	இருபது ரூபாய்.	ஷை

103	தடை செய்த பிறகு அல்லது உரிமம் இல்லாமல் அல்லது ஒழுங்குமுறைகளுக்கு மாறாகப் பொதுச் சாலையில் அல்லது இடங்களில் பொருள்களை விற்பது முதலியவை.	பத்து ரூபாய்.	அக் குற்றத்துக்காகத் தொடரப்பட்ட வழக்கு நடந்து கொண்டிருக்கிற நீதிமன்றத்தின் அனுமதியுடன் இணக்கம் செய்து கொள்ளத்தக்கது.
106 (ஆ)	பொது இடத்தை அல்லது சாலை ஓரத்தைத் தடுக்கப்பட்ட தொலைவுக்குள் இறக்குமிடமாக அல்லது தங்குமிடமாக அல்லது வண்டிப் பேட்டையாகப் பயன்படுத்துவது.	ஐம்பது ரூபாய்.	ஷை
107 (1)	உரிமம் இன்றி அல்லது உரிமத்துக்கு மாறாகத் தனியார் வண்டிப் பேட்டையைத் தொடங்குவது அல்லது தனியார் வண்டிப் பேட்டையைத் தொடர்ந்து திறந்து வைத்திருப்பது.	இருநூறு ரூபாய்.	ஷை
109 (அ)	விதிகளுக்கு மாறாகப் பொதுக்கால்நடை வெட்டுமிடங்களுக்கு வெளியே கால்நடைகளை வெட்டுவது, துண்டு போடுவது அல்லது தோலுரிப்பது முதலியன.	இருநூறு ரூபாய்.	ஷை
109 (ஆ)	உரிமம் இன்றி அல்லது உரிமத்துக்கு மாறாக விற்பனையின் பொருட்டுக் காலநடைகளை வெட்டுவது.	இருபது ரூபாய்.	ஷை
110 (2)	கட்டிடங்களுக்குக் கொடுக்கப்பட்ட எண்ணைச் சட்டத்திற்கு மாறாக அழித்து விடுவது முதலியன.	ஐந்து ரூபாய்.	ஷை

பிரிவு, உட்பிரிவு அல்லது பகுதி.	குற்றம்.	சட்டத்தின்படி தண்டனை.	இணக்கம் செய்து கொள்ளத்தக்கதா அல்லது நீதிமன்றத்தாருடைய அனுமதியுடன் இணக்கம் செய்து கொள்ளத்தக்கதா என்பது.
(1)	(2)	(3)	(4)
110 (3)	எண்ணைப் பதில் மாத்தீடு செய்யும்படிக் கேட்டால் அப்படிச் செய்யாமலிருப்பது.	இருபது ரூபாய்.	இணக்கம் செய்து கொள்ளத் தக்கது.
111	உரிமம் இன்றி அல்லது உரிமத்துக்கு மாருக, அருவருப்பான அல்லது அபாயகரமான தொழிலுக்காக ஓர் இடத்தைப் பயன்படுத்துவது.	நூறு ரூபாய்.	ஷை

(1961 எப்ரல் 26ஆம் தேதிய 1248ஆம் எண் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசு ஆணை.)

87. பொதுவான அல்லது தனியார் ஊற்றுகள், குளங்கள், கிணறுகள் முதலியவற்றைப் பயன்படுத்தக்கூடாதென்று தடுப்பது அல்லது அவ்வாறு பயன்படுத்துவதை முறைப் படுத்துவது.—1. பொது மக்கள் உடல் நலத்தை முன்னிட்டு ஊராட்சிக்கு பொதுவான ஊற்று, குளம் அல்லது கிணறு அல்லது பொது நீர்க்காலில் அல்லது அதன் பாகத்தில், விலங்குகளை அல்லது துணிகளை அல்லது வேறு பொருள்களைக் கழுவுவதையோ மீன் பிடிப்பதையோ முறைப் படுத்தலாம் அல்லது அவ்வாறு கழுவக்கூடாதென்று அல்லது மீன் பிடிக்கக் கூடாதென்று தடுக்கலாம், குடிப்பதற்காக அல்லது குளிப்பதற்காக அல்லது விலங்குகளையோ துணிகளையோ கழுவுவதற்காக அல்லது குறிப்பிட்ட வேறொரு காரியத்துக்காக அத்தகைய ஓரிடத்தை ஒதுக்கி வைக்கலாம்.

2. தனியார் ஊற்று, குளம், கிணறு அல்லது நீர்க்கால் இவற்றைப் பொறுத்தவரை 12 ஆவது விதியில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை ஊராட்சி அந்த இடத்துச் சொந்தக்காரரின் சம்மதத்துடன் செலுத்தலாம்.

3. எந்தத் தனியார் ஊற்று, குளம், கிணறு அல்லது நீர்க்காலிலிருந்து குடிப்பதற்காகத் தண்ணீர் எடுத்துக்கொள்ளப் பொதுமக்களுக்கு உரிமை இருக்கிறதோ அந்த ஊற்று, குளம், கிணறு அல்லது நீர்க்காலில் விலங்கு களையோ துணிகளையோ மற்றப் பொருள்களையோ கழுவுவதை, ஊராட்சிப் பொது மக்கள் உடல் நலத்தை முன்னிட்டு முறைப்படுத்தலாம் அல்லது அவ்வாறு கழுவக்கூடாதென்று தடுக்கலாம்.

4. ஊரில் அல்லது பேரூரில் பொதுமக்கள் போகக்கூடிய ஒரு குளம், கிணறு, ஊற்று அல்லது வேறு நீர் வழங்கு ஆதாரத்திலிருக்கிற தண்ணீர், கேடு விளைவிக்குமெனக் கண்டு அல்லது அபாயமான நோய் பாவும்படிச் செய்யுமெனக் கண்டு அரசாங்கத்தாரின் ஊராட்சியின் அல்லது ஊராட்சி ஒன்றிப்பின் பணியிலிருக்கிற ஒரு மருத்துவ அலுவலர் கொடுக்கும் சான்றினைப் பெற்றுக் கொள்வதன் பேரில் ஊராட்சியின் செயல் அதிகாரி, அத்தண்ணீரைப் பயன்படுத்தக் கூடாதெனப் பொது அறிக்கை மூலமாகத் தடுத்து விடலாம். அந்த அறிக்கையின் நகல் ஒன்றை நீர்வழங்கு ஆதாரத்தின் அருகே ஒட்டுவது மூலமாக அல்லது தண்டோராப்போட்டு அதைச் சேர்ப்பிக்க வேண்டும். அத்தடை எத்தனை நாட்கள் நீடிக்குமென்பது அதில் கண்டிருக்க வேண்டும். மேற்கொண்டு சான்று வாங்காமல் செயல் அதிகாரி அந்த அறிக்கையின் காலத்தை நீட்டிக்கலாம் அல்லது அதை மாற்றியமைக்கலாம்.

5. எவரும்.—(அ) குடிப்பதற்காக அல்லது சமையல் காரியங்களுக்காக ஊராட்சியினால் அல்லது தனியார் உடைமையைப் பொறுத்த அதன் சொந்தக் காரரால் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள ஓரிடத்திலிருக்கிற தண்ணீரில் குளிக்கவுங் கூடாது, அதன் தூய்மையைக் கெடுக்கவுங் கூடாது ; அல்லது

(ஆ) குடிப்பதற்காக மேற்சொன்னவாறு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ஓரிடத்தின் வற்றிப்போன உள்வாயில் அருவருப்பான அல்லது தீங்கிழைக்கும் பொருள் எதையும் போடக்கூடாது ; அல்லது

(இ) குடிப்பதற்காக அல்லது குளிப்பதற்காக மேற்சொன்னவாறு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ஓரிடத்தில் துணிகளைக் கழுவக்கூடாது ; அல்லது

(ஈ) குடிப்பதற்காக அல்லது குளிப்பதற்காக அல்லது துணிகளைக் கழுவுவதற்காக மேற்சொன்னவாறு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ஓரிடத்திலே, விலங்கையோ சமையல் பாத்திரத்தையோ கம்பளத்தையோ தோல்களையோ வேறு அருவருப்பான அல்லது தீங்கிழைக்கும் பொருளையோ கழுவக்கூடாது ; அல்லது அருவருப்பான அல்லது தீங்கிழைக்கும் பொருளைப் போடக்கூடாது ; அல்லது

(உ) குடிப்பதற்காக அல்லது குளிப்பதற்காக அல்லது துணிகளைக் கழுவுவதற்காக மேற்சொன்னவாறு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள ஓரிடத்துக்குள், தமக்குச் சொந்தமான கழிவு நீர்த் தொட்டி, சாக்கடை, வடிகால், பொறி, அல்லது கொதி கலம் அல்லது வேறு அருவருப்பான பொருளிலிருந்து வரும் அல்லது தமக்குச் சொந்தமான அல்லது தம் ஆட்சிக்குட்பட்ட ஒரு கட்டிடம் அல்லது நிலத்திலிருந்து பாய்ந்து வரும் தண்ணீர் புகவிடக்கூடாது.

6. எவராகிலும் 1, 2, 3 ஆவது விதிகளில் கண்டுள்ள நிபந்தனைகளில் எதன்படியாவது பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையை, அல்லது 4-வது விதியின் படிக்கான அறிக்கையை அல்லது 5 ஆவது விதியின் ஏற்பாடுகளில் எதை யேனும் மீறினாலும், இவ்விதிகளில் எதன்படியாகிலும் சட்டப்படி அவருக்குப் பிறப்பிக்கப்பட்ட கட்டளையை அல்லது சட்டப்படி அவருக்கு இடப்பட்ட ஆணைக்கு உடன்பட்டு நடக்கத் தவறினாலும் அவருக்கு ஐம்பது ரூபாய் வரையில் தண்டப்பணம் விதிக்கப்படத்தக்கதாகும். அவ்வாறு தொடர்ந்து மீறிக்கொண்டே வந்தால், மீறி நடந்ததற்காகக் குற்றவாளியென்று தீர்மானிக் கப்பட்ட பிறகு அவ்வாறு மீறி நடந்து கொண்டே வரும் ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாய்க்கு மேற்படாமல் அவருக்குத் தண்டப் பணம் விதிக்கப்படத்தக்கதாகும்.

(1961 ஏப்ரல் 26-ஆம் தேதிய 1248-ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

88. மேல் முறையீடுகளுக்கான காலவரையறை.—(1958 ஆம் ஆண்டின் XXXV வது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தில் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளில் வேறு

விதமாக வெளிப்படையாய் ஏற்பாடு கண்டிருந்தாலன்றி மற்றப்படி, அச்சட்டத்தின்படிக்கான அல்லது அத்தகைய ஒரு விதியின்படிக்கான மேல் முறையீடு ஒவ்வொன்றையும், (1908 ஆம் ஆண்டின் IX ஆவது மையச் சட்டமாகிய) 1908 ஆம் ஆண்டின் இந்திய காலவரையறைச் சட்டத்தில் கண்ட 5 ஆவது பிரிவின் நிபந்தனைகளுக்குட்பட்டு—

(அ) ஓர் உரிமம் அல்லது அனுமதி வழங்கும் ஆணையை எதிர்த்து அந்த மேல் முறையீடு செய்து கொள்ளப்பட்டால் ஊராட்சி அறிக்கைப் பலகையில் அந்த ஆணை வெளியிடப்பட்ட தேதிக்குப் பிறகு முப்பது நாட்களுக்குள்ளும்,

(ஆ) மற்றவைகளில் எந்த ஆணையை அல்லது நடவடிக்கைக் குறிப்பை எதிர்த்து அந்த மேல் முறையீடு செய்து கொள்ளப்படுகிறதோ அந்த ஆணை அல்லது நடவடிக்கைக்குறிப்பு வந்து சேர்ந்த தேதிக்குப் பிறகு முப்பது நாட்களுக்குள்ளும் மாவட்ட ஆட்சியாளரிடம் கொடுத்துக் கொள்ள வேண்டும்.

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1248 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

89. ஊராட்சிகள் துணைச் சட்டங்கள் செய்தல்.—1. ஊராட்சி துணைச் சட்டங்களைச் செய்வதற்கு அல்லது மாற்றுவதற்கு முன், கருத்திலிருக்கிற துணைச் சட்டங்களின் அல்லது மாற்றங்களின் வரைவு ஒன்றையும், இன்ன தேதியன்று அல்லது தேதிக்குப் பிறகு அந்த வரைவு ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்று குறிப்பிட்டிருக்கிற அறிக்கை ஒன்றையும் வெளியிட வேண்டும்; துணைச் சட்டங்களை அல்லது மாற்றங்களைச் செய்வதற்குமுன், அந்த வரைவு சம்பந்தமாக, அதில் அக்கறையுள்ள ஒருவர் அவ்வாறு குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன் செய்யக்கூடிய ஆட்சேபணையை அல்லது சொல்லக்கூடிய ஆலோசனையைப் பெற்றுக்கொண்டு அதன் மீது கருத்துச் செலுத்த வேண்டும்.

இவ்விதியின்படிக்கான அறிக்கையை 3 ஆவது விதியில் கண்டுள்ள விதமாக வெளிப்படுத்த வேண்டும், மறுப்புகள் அல்லது கருத்துக்கள் வந்து சேருவதற்காகக் குறிப்பிடப்படும் கால அளவு முப்பது நாட்களுக்குக் குறையாமலிருக்க வேண்டும்.

2. ஊராட்சியினால் செய்யப்பட்ட துணைச் சட்டம் எதுவும் அல்லது அவர்களால் ரத்து செய்யப்பட்ட அல்லது மாற்றப்பட்ட எதுவும், நீர் வழங்கும் வடிகால் பணிகள் ஆகியவைகளுக்குச் சம்பந்தப்பட்டவையல்லாத வேறு, துணைச் சட்டங்களைப் பற்றியவரை சம்பந்தப்பட்ட கோட்ட ஆட்சியாளரா

லும், நீர்வழங்கீடு—வடிகால் பணிகள் ஆகியவைகளுக்குச் சம்பந்தப்பட்ட துணைச் சட்டங்களைப்பற்றியவரை உடல் நலப் பொறியாளராலும் அது ஒப்புக் கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்படுகிற வரையில் செல்லுபடியாக மாட்டாது.

3. ஒரு துணைச் சட்டம் அல்லது ஒரு துணைச் சட்டத்தை ரத்து செய்திருப்பது அல்லது மாற்றியிருப்பது முறைப்படி உறுதி செய்யப்படும்போது அது தமிழில் இராவிட்டால், அதைத் தமிழில் மொழிபெயர்த்து ஊராட்சி அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டும்; அதன் நகல் ஒன்றை, அந்த அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையிலும் ஊராட்சி கட்டளையிடக் கூடிய இடங்களிலும் தெரியும்படி வைக்க வேண்டும். அத்தகைய நகல் ஒன்று அவ்வாறு வைக்கப்பட்டிருக்கிறதென்றும், பிரதியை ஊராட்சி அலுவலகத்தில் பார்வையிடலாம் என்றும் கண்டுள்ளபொதுச் சாற்றுணை ஒன்றை ஊராட்சி அதிகார வரம்புப்பரப்பு முழுவதிலும் தண்டோரா போட்டு அல்லது மற்றப்படி வெளியிடவும் வேண்டும்.

4. ஒரு துணைச் சட்டம் அல்லது ஒரு துணைச் சட்டத்தை ரத்து செய்திருப்பது அல்லது மாற்றியிருப்பது ஊராட்சி அலுவலகத்தில் வைக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதம் கழித்தவுடன் அமலுக்கு வரத் தொடங்கும்.

(1961-ம் வருடம் ஏப்ரல் மாதம் 26-ம் தேதிய 1248-ம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணை.)

90. ஒதுக்கப்படாத காடு ஒன்றை ஊராட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து குறிப்பிட்ட காலம் வரையில் எடுத்துவிடலாமென்பது.—72-ஆவது பிரிவைச் சேர்ந்த (ஆ) பகுதியின் படிக் கால நீட்டிப்புகள் செய்யப்பட்டால் அவை உட்பட ஒதுக்கப்பெறாத காடு ஒன்றை எந்தக் காலம் வரையில் கோட்ட ஆட்சியாளர் அப்பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் கண்ட (அ) பகுதியின் படி ஊராட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து எடுத்துவிடலாமோ அந்தக் காலம் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படக்கூடாது.

(1961-ம் வருடம் ஏப்ரல் மாதம் 26-ம் தேதிய 1248-ம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை பல்வகை அரசாணை.)

(121) ஒதுக்கப்பெறாத காடுகளைப் பேணுவது சம்பந்தமான விளக்க உரைகள்—(1) மேய்ச்சல்.—(அ) ஊராட்சிப் பரப்பளவுகளில் ஒதுக்கப்படாத காட்டினை ஊராட்சி வழங்கும் அனுமதிச் சீட்டுகளைப் பெற்றுக் கொண்டு ஊர்க் கால்நடைகளின் மேய்ச்சலுக்காக முக்கியமாகப் பயன்படுத்த வேண்டும்.

(ஆ) காட்டில் ஆடுகளின் மயிரைக் கத்தரிக்கவிடக்கூடாது.

(இ) காட்டுப் பரப்புகளில் ஒவ்வோர் ஆண்டிலும் இரண்டு அல்லது மூன்று மாதம் எவ்வகைப்பட்ட மேய்ச்சலும் நடக்காதபடிப் பார்த்துக் கொள்ள வேண்டும். காடு முழுவதையும் இவ்வாறு மூடிவிடுவது வசதியாயிரா விட்டால் அதை மூன்று வசதியான தொகுதிகளாக பிரித்து, ஒவ்வொரு தொகுதியையும் முறைபோட்டுக்கொண்டு ஒன்றன்பின் ஒன்றாக மூடிவிட வேண்டும்.

(2) **வெட்டுவது அல்லது ஏலத்தில் விற்பது.**—(அ) ஊராட்சிக்கு ஒதுக்கப் படாத காடுகளில் உள்ள பச்சை மரங்களை மாவட்ட ஆட்சியாளரின் ஒப் பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், வெட்டி அப்புறப்படுத்தவுங் கூடாது; ஏலத்தில் விற்கவும் கூடாது. ஊர்வாசிகளின் நியாயமான தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வெட்டுக்காடுகளை அமைத்து, எளிதான குறுங்காடு முறையில் அவைகளில் மரங்களை வெட்ட வேண்டும். பிறகு, முள் செடிகள், விவசாயத் தேவைகளுக்கான சிறு வெட்டு மரம் ஆகியவற்றை அந்த ஆண்டுக்கான வெட்டுக் காட்டிலிருந்து மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பு.—(அ) எளிதான குறுங்காடு முறை என்பது, புத்துயிரூட்டும் முறையாகும்; இதன்படி, அடிக்கட்டைகளிலிருந்து தோன்றும் வெட்டு முளைகளிலிருந்து மரம் மீண்டும் துளிர்க்கச் செய்யும் நோக்கத்துடன் அது தரைக்கு நேர்தளப்பரப்பாக வெட்டப்படும். மரங்கள் அவ்வாறு ஒரேயடியாக வெட்டப்பட்டுள்ள பரப்புகளில் ஏறத்தாழ ஐந்தாண்டுக் காலம் மேய்ச்சல் நடக்காத படிப் பார்த்துக் கொள்ள வேண்டும்; அப்போதுதான் அடிக் கட்டைகளிலிருந்து தோன்றும் வெட்டு முளைக் குருத்துக்களைக் கால் நடைகள் சேதப் படுத்தாமலிருக்கும்.

(ஆ) மூன்றில் ஒன்றைக் காட்டிலும் செங்குத்தாயுள்ள சரிவுகளில் எச் சந்தர்ப்பத்திலும் மரங்களை வெட்டவிடக் கூடாது.

(இ) அந்தப் பரப்பில் சந்தன மரங்கள் இருந்தால் அவற்றை எடுக்கவோ சந்தனக் கட்டையிலிருந்து வருமானம் பெறவோ ஊராட்சிக்கு உரிமையில்லை. இம் மரங்களைத் தக்கவாறு பாதுகாப்பதற்கு ஊராட்சி பொறுப்புள்ளதாகக் கொள்ளப்படும்.

(3) **சிறு காட்டு விளைவு.**—காட்டிலுள்ள சிறு காட்டு விளைவினைச் சேகரிக்கும் உரிமையை ஊராட்சி ஏலத்தில் விற்பனை செய்யலாம். இவ்விற்பனை மாவட்ட ஆட்சியாளரால் உறுதிப்படுத்தப்படுவதற்குட்பட்டதாகும்.

(4) பலவகை.—மாவட்ட ஆட்சியாளர் முன்னதாக ஒப்புக்கொள்வதற்குட் பட்டு, ஊராட்சி, மாவட்ட ஆட்சியாளரால் நிச்சயிக்கப்படும் வீதங்களில் மணல், சரளை முதலியவற்றை அப்புறப் படுத்துவதற்கு அனுமதி வழங்க லாம்.

(5) புத்துயிரூட்டல்.—புரோசோபியா (Prosophia) தேக்கமரவகை (Sissoo) நீலகிரித் தைல வகை (Eucalyptuarata) முதலியவை போன்ற விரைவில் வளரும் மரவகைகளை வளர்ப்பதன் மூலம் வெற்றிடங்களைத் துளிர்க்கச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

(6) பாதுகாப்பு.—காவற்காரர் ஒருவரை ஊராட்சி அமர்த்திக் கொள்ள வேண்டும், ஒதுக்கப்படாத காடுகளைப் பாதுகாத்து அவற்றின் எல்லைகளைப் பேணுவது இவருடைய கடமையாகும். முழு நேரக் காவற்காரர் ஒருவரை நியமிக்க வேண்டியிராதவற்றில், ஊராட்சி பரப்புத் துப்புரவு செய்பவரை ஒதுக்கப்படாத காடுகளைக் காவல் காக்கும்படி அனுப்பி வைத்து, அவருக்கு அதிகப்படியாக ஏதேனும் ஊதியம் கொடுக்கலாம்.

(7) பொது.—வட்டாட்சியாளரும் அல்லது துணை வட்டாட்சியாளரும் கோட்ட ஆட்சியாளரும் கூடிய வரையில் அடிக்கடி இப்பரப்புகளைப் பார்வை யிட வேண்டும்.

(8) கணக்குகள்.—ஊராட்சி கீழே விவரித்துள்ளவாறு வருவாயையும் செலவையும் பற்றிச் சரியான கணக்குகள் வைத்து வரவேண்டும்.

(i) ஏலத்தில் விற்கப்பட்ட சிறு காட்டு விளை பொருளைச் சேகரிக்கும் உரிமையின் குத்தகையையும், குறுங்காடு முறை மூலமாக விறகு முள் செடிகள், வேளாண்மைத் தேவைகளுக்கான சிறு வெட்டுமரம் ஆகியவற்றின் விற்பனையையும், பல்வகைக் கேட்புப் பதிவேட்டில் தனித் தொகுதியான பக்கங்களில் எழுத வேண்டும்.

(ii) மணல், உலோகம் முதலியவற்றை அப்புறப்படுத்துவது போன்ற மற்ற பல்வகை இனங்களைப் பல்வகை விற்பனைப்பதிவேட்டில் எழுத வேண்டும்.

(iii) ஊராட்சி பேணிவரும் ஒதுக்கப்படாத காடுகளிலிருந்து கிடைக்கும் வருவாய்களை, "ஒதுக்கப்படாத காடுகள்—வருவாய்கள்" என்ப தாகப் புதிய தலைப்பு ஒன்றைத் தொடங்கி வரவுகள்—சாதாரணம் VI பயன்தரும் தொழில்கள்" என்பதன் கீழ்க் கணக்கில் எழுத வேண்டும்.

(iv) காடுகளைப் பேணுவதற்காகவும் வெற்றுப் பரப்புகளில் மரங்களை வளர்ப்பதற்காகவும் அமர்த்திக்கொள்ளப்படும் பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கவும், 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தில் கண்ட 72 (2) (ஆ) பிரிவின்படி வாடகை கொடுக்கவும் பிடிக்கும் செலவை, "ஒதுக்கப்படாத காடுகளைப் பேணுதல்- (i) பணியாளர்கள் சம்பளம், (ii) சில்லறைச் செலவுகள்" என்னும் தனியான ஒரு தலைப்புக்கு எதிரே "செலவு —சாதாரணம் V பயன்தரும் தொழில்கள்" என்பதன் கீழ்க் கணக்கில் காட்ட வேண்டும்.

(1955-ம் வருடம் ஜனவரி 20-ம் தேதிய 912-ம் எண் உள்ளாட்சித் துறை அரசாணை.)

91. அசையாப் பொருளை அடைவதும் மாற்றுவதும்—அசையாப் பொருளை அடைவது.—1. (1) பின் வரும் நிபந்தனைகளுக்குப் பொருந்துவதாயிருந்தாலொழிய அசையாப் பொருள் எதையும் ஊராட்சி அடையக் கூடாது :—

(அ) சாலைகள்—பாலங்கள்—மதகுகள்—கல் வெட்டி எடுக்குமிடங்கள் ஆகியவையல்லாத வேறொரு காரியத்துக்காக அந்த உடமை கருதப்படுமானால் அக்காரியத்துக்காக உடல்நல நோக்கத்தோடு பார்க்கும்போது தகுதியானதென்று அந்த உடைமை மாவட்ட உடல்நல அலுவலரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

(ஆ) மதிப்பீடான செலவு 1,000 ரூபாய்க்கு மேற்பட்டால் கருதப்பட்ட காரியத்துக்கு அந்த உடைமை தகுதியானதென்று (நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) கோட்டப் பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

(இ) அந்த உடைமையின் மதிப்பு 1,000 ரூபாய்க்கு மேற்பட்டிருந்து, அது கல்விக் காரியங்களுக்காகக் கருதப்பட்டால், மாவட்டக் கல்வி அலுவலராலும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

(ஈ) அந்த உடைமையின் மதிப்பு 1,000 ரூபாய்க்கு மேற்பட்டிருந்து, அது மருந்தகங்களுக்காகக் கருதப்பட்டால் மாவட்ட மருத்துவ அலுவலராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(உ) அதற்காக மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதலை முன்னதாகப் பெற்றுக்கொண்டிருந்தாலன்றி (1894 ஆம் ஆண்டின் 1 ஆவது மையச்சட்டமாகிய) 1894 ஆம் ஆண்டின் நிலம் அடைவதற்கான சட்டத்தின்படியன்றி மற்றப்படி அந்த உடைமையை அடையக் கூடாது ;

(ஊ) மேற்படி சட்டத்தின்படி அன்றி மற்றபடி அடையப்படும் நிலங்களைப் பொறுத்த வரை வருவாய்த் துறையினிடமிருந்து ஒரு மதிப்பீட்டைப் பெற வேண்டும். இதன் பொருட்டு மாவட்ட ஆட்சியாளரின் திட்டவட்டமான ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளாமல், அந்த மதிப்பீட்டுக்கு அதிகமான தொகையைக் கொடுக்கக்கூடாது.

(எ) கட்டிடங்களைப் பொறுத்தவரை மதிப்பீட்டையும், கட்டுமான உறுதி பற்றிய சான்றினையும் (நெடுஞ்சாலை ஊராட்சிப் பொறியியல் பணிகள்) கோட்டப் பொறியாளரிடமிருந்து, அல்லது கோட்டப் பொறியாளரின் ஆணைகளின்படி செயலாற்றுகிற (நெடுஞ்சாலை ஊரகப் பொறியியல் பணிகள்) உதவிப் பொறியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். இதன் பொருட்டு மாவட்ட ஆட்சியாளரின் திட்டவட்டமான ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளாமல் அந்த மதிப்பீட்டுக்கு அதிகமான தொகையைக் கொடுக்கக் கூடாது;

(ஏ) உடைமைக்கான ஈடு 200 ரூபாய்க்குக் குறையாமலிருக்கிற ஒவ்வொன்றிலும் அந்த உடைமை சம்பந்தமாக ஆவணப் பதிவு அலுவலகத்திலிருந்து வில்லங்கச் சான்று ஒன்றைப் பெற வேண்டும்; அதை ஊராட்சியின் சட்ட அறிவுரையாளர் ஆய்ந்து பார்க்க வேண்டும். ஆனால், சட்டப்படி எவ்வித வில்லங்கமும் இல்லாமல் உடைமை ஒப்புக்கொள்ளப்படக் கூடியவாறு விவகாரத்தின் தன்மை இருந்தால், மேற்சொன்னவாறு வில்லங்கச் சான்றினைப் பெற வேண்டியதில்லை.

ஆனால், (இ) பகுதியிலாவது (ஈ) பகுதியிலாவது உள்ளது எதுவும் ஒரு ஊராட்சிக்குப் பொருந்தாது.

(2) உடைமையை ஊராட்சிக்கு மாற்றுவதற்கான ஆவணம் இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டிருக்கிற 1 ஆம் அட்டவணையிலுள்ள பொருத்தமான படிவப்படி இருக்க வேண்டும்; சூழ்நிலைக்கேற்றவாறு அதில் மாறுதல்களைச் செய்துகொள்ளலாம்.

(3) ஊராட்சி பெற்ற தீர்ப்பினை நிறைவேற்றும் வகையில் விற்பனைக்குக் கொண்டுவரப்பட்ட அசையாப் பொருளை அது வாங்கவேண்டியவற்றிற்கு (1), (2) உள் விதிகளின் நிபந்தனைகள் பொருந்தமாட்டா.

2. அசையாப் பொருளை மாற்றுவது.—ஊராட்சிக்குச் சொந்தமாயிராமல் அதனிடம் உரித்தாக்கப்பட்டுள்ள அசையாப் பொருளைக் குத்தகைக்கு விடுவது மூலமாகவல்லாமல் மற்றபடி மாற்றுவது.—(1) (ஊராட்சிக்குச் சொந்தமாயிராமல் அதனிடம் உரித்தாக்கப்பட்டுள்ள அசையாப் பொருளை, எந்த

நிபந்தனைகளுக்குட்பட்டு அப்பொருள் ஊராட்சியினிடம் உரித்தாகி விட்டிருக்கிறதோ அந்த நிபந்தனைகளுக்கு மாறாக அதை மாற்றவுங் கூடாது, அதன்மீது பொறுப்பேற்றவுங்கூடாது.

(2) மாற்றுவதற்கான ஆவணம் இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள ஆம் அட்டவணையில் கண்ட பொருத்தமான படிவத்தின்படி இருக்க வேண்டும்; சூழ்நிலைக்கு ஏற்றவாறு அதில் மாறுதல்களைச் செய்து கொள்ளலாம்.

3. ஊராட்சிக்குச் சொந்தமான அசையாப் பொருள்களைக் குத்தகைக்கு விடுவது மூலமாகவல்லாமல் மற்றப்படி மாற்றுவது.—(1) ஊராட்சி மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல், தனக்குச் சொந்தமான அசையாப் பொருளை, குத்தகை மூலமாகவல்லாமல் மற்றப்படி மாற்றவுங்கூடாது, மாற்றுவதற்கு ஒப்பளிக்கவுங்கூடாது, இப்பொருளின்மீது பொறுப்பு ஏற்படுத்தவுங்கூடாது; பொறுப்பு ஏற்படுத்த ஒப்பளிக்கவுங் கூடாது; அவ்வாறு மாற்றப்பட்ட சொத்தின் மதிப்பு அல்லது அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பொறுப்புக்குரிய தொகை 1,000 ரூபாய்க்கு மேற்பட்டால், அந்த விவகாரத்துக்கு அரசாங்கத்தாரின் ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளவும் வேண்டும்.

(2) மாற்றுவதற்கான ஆவணம் இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள 2 ஆம் அட்டவணையில் கண்ட பொருத்தமானபடிவத்தின் படி இருக்க வேண்டும்; சூழ்நிலைக்கேற்றவாறு அதில் மாறுதல்களைச் செய்து கொள்ளலாம்.

4. ஊராட்சிக்குச் சொந்தமான அசையாப் பொருளைக் குத்தகை மூலமாக மாற்றுவது.— (i) ஊராட்சி தனக்குச் சொந்தமான அசையாப் பொருளைக் குத்தகைக்கு விடலாம்.

ஆனால், அத்தகைய குத்தகையின் கால அளவு மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தால் அல்லது கல், செங்கல், மரம், மண், அல்லது வேறு ஏதேனும் பொருளைக் கொண்டு கட்டிடம் அல்லது கட்டுக் கோப்பு எழுப்பக் குத்தகைதாரருக்கு அனுமதி வழங்கப்பட்டால், அதற்காக மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பினைப் பெற்றுக் கொண்டாலன்றி, அக்குத்தகை செல்லாது.

(ii) குத்தகை ஆவணம் இந்த விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள IIIஆம் அட்டவணையில் கண்ட III (அ) படிவத்தின்படி இருக்க வேண்டும், சூழ்நிலைக்கேற்றவாறு அதில் மாறுதல்களைச் செய்து கொள்ளலாம்.

5. ஊராட்சிக்குச் சொந்தமாயிராமல் அதனிடம் உரித்தாக்கப்பட்டுள்ள அசையாப் பொருளைக் குத்தகை மூலமாய் மாற்றுவது.—( )' ஊராட்சி, சாலை

ஓரங்களும் தெரு ஓரங்களுமாயிராமல், தனக்குச் சொந்தமாயிராத ஆனல் தன்னிடம் உரித்தாக்கப் பட்டிருக்கிற வேறு சொத்தினைக் குத்தகைக்கு விடலாம், ஆனல்

(அ) எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அச்சொத்து ஊராட்சியினிடம் உரித்தாகிவிட்டிருக்கிறதோ அந்த நிபந்தனைகளுக்கு மாருக, அல்லது

(ஆ) மாவட்ட ஆட்சியாளருடைய ஒப்பளிப்பை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல் பன்னிரண்டு மாதத்துக்கு மேற்பட்ட கால அளவுக்கு குத்தகை எதுவும் வழங்கக் கூடாது.

மேலும், கல்—செங்கல்—மரம்—மண் அல்லது வேருெரு பொருளைக் கொண்டு கட்டிடம் அல்லது கட்டுக்கோப்பு எழுப்பக் குத்தகைதாரருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்து, அதற்காக மாவட்ட ஆட்சியாளரின் ஒப்பளிப்பை பெற்றுக் கொண்டாலன்றி, அத்தகைய குத்தகை எதுவும் செல்லாது.

(ii) குத்தகை ஆவணம் இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள III ஆம் அட்டவணையில் கண்ட III (அ) படிவத்தின்படி இருக்க வேண்டும். சூழ்நிலைக்கேற்றவாறு அதில் மாறுதல்களைச் செய்து கொள்ளலாம்.

6. (1) **சாலை ஓரங்களையும் தெரு ஓரங்களையும் குத்தகைக்கு விடுவது.—** அடியிற்கண்ட சான்றுகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு, ஊராட்சியினிடம் உரித்தாக்கப்பட்டுள்ள சாலை ஓரங்களையும் தெரு ஓரங்களையும் குத்தகைக்கு விட வேண்டும் ;

(i) குத்தகைக்காக விண்ணப்பம் செய்து கொள்ளும் ஒவ்வொருவரும், நிலம் எவ்வாறு உபயோகிக்கப்படுமென்பது பற்றியும் எவ்வளவு காலத்துக்குக் குத்தகை வேண்டு மென்பது பற்றியும் தகவல் கொடுக்குமாறு ஒவ்வொரு ஊராட்சியும் கேட்கவேண்டும். அதன்மீது கட்டுக்கோப்பு ஏதேனும் எழுப்பத் தகுதியிருந்தால், கட்டுமானத்தில் பயன்படுத்தப்போகும் பொருள்களைப் பற்றியும் தகவல் தெரிவிக்க வேண்டும்.

(ii) பனை ஓலை அல்லது தென்னம் ஓலை, மூங்கில் அல்லது ஓலைப்பாய் அல்லது கோணித்துணி போன்ற தற்காலிகப் பொருள்கள், அல்லது அது போன்ற வேறு பொருள்கள் அல்லது அன்ருடம் அகற்றப்படத்தக்க தன்மையுள்ள பொருள்கள். ஆகியவைகளைக் கொண்டு கட்டுமானம் எழுப்பப்படப் போவதாயிருந்து, குத்தகைக் காலம் பன்னிரண்டு மாதத்திற்கு மேற்படாவிட்டால், ஊராட்சி குத்தகை வழங்கலாம், ஒவ்வொரு குத்தகைக்காகவும் முன்னதாகக் கட்டணம் விதித்து வசூலிக்க வேண்டும்.

(iii) (ii) இனத்தில் சொல்லப்பட்டிருப்பவையல்லாத வேறு பொருள் மாதத்துக்கு மேற்பட்ட கால அளவுக்கான குத்தகை எதையும், ஊராட்சிகளைக் கொண்டு எழுத்தப்பட்ட கட்டுமானத்துக்கு அல்லது பன்னிரண்டு மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதலை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல் வழங்கக்கூடாது; மாவட்ட ஆட்சியாளர் தாம் ஒப்புதல் அளிக்கையில், தாம் அவசியமெனக் கருதக்கூடிய எந்த நிபந்தனைகளுக்குட் பட்டு ஊராட்சி, குத்தகை வழங்க வேண்டுமோ அந்த நிபந்தனைகளை விதிக்கலாம். ஊராட்சி குத்தகை வழங்குவதற்கு முன் அதில் அந்த நிபந்தனைகளைச் சேர்க்க வேண்டும் குத்தகை அமலில் இருக்கிற வரையில் குத்தகைத் தொகையை ஊராட்சிக்கு முன்னதாகச் செலுத்திவிட வேண்டு மென்பதையும், அத்தொகையைச் செலுத்தத் தவறினால் குத்தகை ரத்து செய்யப்படுவதற்குள்ளாகு மென்பதையும் ஒவ்வொன்றிலும் வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்.

(iv) சாதாரணமாக ஒரே காலத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்துக்குக் குத்தகை வழங்கக்கூடாது. இவ்விதியின்படி வழங்கப்பட்ட குத்தகையைப் புதுப்பிப்பதற்கு மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதல் அவசியமாக மாட்டாது.

(v) (ii) அல்லது (iii) இனத்தின்படிக்கான குத்தகை ஒவ்வொன்றி லும் பின்வருமாறு வெளிப்படையாக ஏற்பாடு கண்டிருக்க வேண்டும்; அதாவது.—நிலத்தின் மீது எழுத்தப்பட்டுள்ள கட்டுக்கோப்பினைப் பொது நலனை முன்னிட்டு அகற்றுவது அவசியமென ஊராட்சியாவது மாவட்ட ஆட்சி யாளராவது கருதினால் குத்தகைக்காரருக்கு ஈடுகொடுக்காமலேயே குத்தகைக் கால அளவுக்குள் எப்போதேனும் குத்தகை இறுதி செய்யப்படும்.

(vi) சாலை ஓரத்தைச் சாகுபடிக்காகக் குத்தகைக்கு விடக்கூடாது.

(2) குத்தகை ஆவணம் இவ்விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள III ஆம் அட்டவணையில் கண்ட III (ஆ) படிவப்படி இருக்க வேண்டும்; சூழ்நிலைக் கேற்றவாறு அதில் மாறுதல்களைச் செய்து கொள்ளலாம்.

7. **யோசனையிலிருக்கிற மாற்றங்களைப் பற்றியும் குத்தகைகளைப் பற்றியும் வெளியிடுவது.**—(1) 3, 4, 5 அல்லது 6-வது விதியின் கீழ்வரும் மாற்றத்தின் அல்லது குத்தகையைப் பற்றி ஒவ்வொன்றிலும், ஊராட்சி யோசனையிலிருக்கிற மாற்றம் அல்லது குத்தகையைப் பற்றி ஓர் அறிவிப்பு வெளியிட வேண்டும்; மாற்றப்படவிருக்கிற அல்லது குத்தகைக்கு விடப்படவிருக்கிற சொத்து, இன்ன பெயருள்ளவருக்கு மாற்ற அல்லது குத்தகைக்குவிடக் கருதியிருக்கிறதென்பது, மாற்றுவதற்குக் கிடைக்கும் விலை அல்லது குத்தகையின்படி கிடைக்கும்

வாடகை ஆகியவைபற்றிய முழு விவரங்கள் அந்த அறிவிப்பில் கண்டிருக்க வேண்டும். அந்த அறிவிப்பை—

(அ) மாற்றலுக்கு கிடைக்கும் விலை 1,000 ரூபாய்க்கு மேற்பட்டால், அல்லது குத்தகை வாடகை ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய்க்கு மேற்பட்டால், மாவட்ட அரசிதழிலும்,

(ஆ) (i) ஊராட்சியின், மாவட்ட ஆட்சியாளரின் கோட்ட ஆட்சியாளரின் அலுவலகத்திலும்,

(ii) வட்ட அலுவலகத்திலும்,

(iii) உடைமை இருக்கிற ஊர்ச்சாவடியிலும் அல்லது பேரூரிலும்,

மாற்றப்படப்போகிற அல்லது குத்தகைக்கு விடப்போகிற உடைமையிலும் முதன்மையான ஓரிடத்தில் ஒட்டுவது மூலமாகவும் அவ்வாறு வெளியிட வேண்டும்.

(2) வெளிப்படையான ஏலம் மூலமாக அவ்வாறு மாற்றப்போகும் அல்லது குத்தகைக்குவிடப் போகும் ஒவ்வொன்றிலும் மாற்றப்படப்போகும் அல்லது குத்தகைக்கு விடப்போகும் உடமை பற்றிய முழு விபரங்களுன்கூடிய அறிவிப்பு ஒன்றை—

(அ) மாற்றத்துக்கு கிடைக்கும் விலை 1,000 ரூபாய்க்கு மேற்பட்டால் அல்லது குத்தகையின் வாடகை ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய்க்கு மேற்பட்டால் மாவட்ட அரசிதழிலும், ஊராட்சியின் அதிகார வரம்பிற்குள் வழங்கும் ஒன்று அல்லது இரண்டு முதன்மையான உள்ளூர்ச் செய்தித்தாள்களிலும்,

(ஆ) உள்விதியைச் சேர்ந்த (ஆ) பகுதியில் குறிப்பிட்டிருக்கிற விதமாகவும்,

(இ) தகுந்த இடங்களில் தண்டோரா போட்டும் வெளியிட வேண்டும்.

(3) முதல் குத்தகைதாரர் தமது குத்தகையின் வரையறைகளை நிறைவேற்றத் தவறிப் போனது காரணமாக ஒரு நிதி ஆண்டின் போது வழங்கப்படும் குத்தகைகளைப் பொறுத்த வரை, (1) (2) உள் விதிகளில் சொல்லியிருக்கிறபடி மாவட்ட அரசிதழில் வெளியிடுவதை ஊராட்சி தவிர்த்துவிடலாம்.

8. மாற்றப்பெற்றவர் அல்லது குத்தகைக்காரர் அரசாங்கத்துக்குத் தீர்வை, மனைத் தீர்வை ஜமீன் உரிமைவரி (பேஷ்கஷ்) அல்லது விடுவரி செலுத்த வேண்டுமென்றும் நிபந்தனைக்கு மாற்றங்களும் குத்தகைகளும் உட்பட்டவையாகுமென்பது.—(1) இவ்விதியின் (3) (4) உள்விதிகளின் கீழ்வருவனவற்றில்

தவிர மற்றவைகளில் ஊராட்சி அசையாப்பொருளை மாற்றுவதில் அல்லது குத்தகைக்கு விடுவதில் அடியிற்கண்டவைகள் நிபந்தனைகளாக இருந்தாலன்றி மற்றப்படி அது செல்லாது; அந்த நிபந்தனைகள் எவையென்றால்,—மாற்றப் பெற்றவர் அல்லது குத்தகைக்காரர், அப்பொருள் சம்பந்தமாகச் செலுத்தத் தக்கதென்று மாவட்ட ஆட்சியாளர் நிச்சயிக்கக்கூடிய தீர்வை, மனைத் தீர்வை, ஜமீன் உரிமைவரி அல்லது விடுவரியை அரசாங்கத்தாருக்குச் செலுத்துவதற் குட்பட்டவராவார். உரிமையளிக்கப்பெற்ற இனாம் நிலங்கள் மீதான விடுவரி, ஜமீன் ஊர்களில் தனியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தி ஊராட்சி அடைந்த நிலங்கள் மீதான ஜமீன் உரிமை வரி ஆகியவை சம்பந்தமானவகைகளன்றி மற்றப்படி திருத்தியமைக்கும் காலத்தில் அமலில் இருந்த விதிகளுக்கிணங்க, அத்தீர்வை, மனைத்தீர்வை, ஜமீன் உரிமைவரி அல்லது விடுவரி அவ்வப்போது திருத்தியமைக்கப் படுவதற்குட்பட்டதாகும்.

(2) விற்பனை அல்லது பரிமாற்று அல்லது நிலையான உரிமை மாற்றம் செய்யப்பட்டிராத நிலங்களில்மீது விதிக்கப்படத்தக்க தீர்வை, மனைத்தீர்வை, ஜமீன் உரிமை வரி அல்லது விடுவரியை ஊராட்சியினிடமிருந்து தண்டல் செய்ய அரசாங்கத்தாருக்குள்ள உரிமை இவ்விதியில் உள்ளது எதனாலும் பாதிக்கப்படமாட்டாது.

(3) மாற்றப்பட்ட பிறகு நிலத்தின்மீது விதிக்கப்படத்தக்க தீர்வை, மனைத்தீர்வை, ஜமீன் உரிமை வரி அல்லது விடுவரியை ஊராட்சி ஏற்கெனவே செலுத்திக் கொண்டிருந்து, அந்த நிலம் விற்பனை அல்லது பரிமாற்று மூலமாக மாற்றப்படாவிட்டால், அல்லது நிலையான குத்தகைக்குவிடப்படாவிட்டால், அல்லது நிலையான உரிமை மாற்றம் செய்யப்படாவிட்டால் அத்தீர்வையை, மனைத் தீர்வை, ஜமீன் உரிமை வரியை அல்லது விடுவரியை ஊராட்சி செலுத்திக் கொண்டுவர வேண்டும், மாற்றப்பெற்றவர்மீது அப்பொறுப்பைச் சுமத்தக் கூடாது.

(4) 6 ஆவது விதியின் கீழ்வரும் குத்தகைகளைப் பொறுத்தவரை அக் குத்தகைகள் பற்றிய விவர அறிக்கை ஒன்றை ஊராட்சி மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்ப வேண்டும்; அதன்பேரில் மாவட்ட ஆட்சியாளர் அந்த விவர அறிக்கையிலுள்ள தகவலை ஆதாரமாகக் கொண்டு தீர்வையை அல்லது மனைத் தீர்வை நிச்சயித்து, அதை ஊராட்சியினிடமிருந்து தண்டல் செய்ய வேண்டும்.

அட்டவணை I

[1 (2) விதியைப் பார்க்கவும்]

படிவம் I (அ).

விற்பனை மூலமாக மாற்றங்கள்.

19 ஆம் ஆண்டு மாதம் தேதியன்று (இதனால் பின்னால் "விற்பவர்"—என்ற இச்சொல்லில் சந்தர்ப்பம் இடம் கொடுக்குமானால், அவருடைய வழிமுறையினர் நிறைவேற்றுபவர்கள் ஆட்சியாளர்கள்—சட்டச் சார்வாளர்கள்—உரிமையாளர்கள் என்பவையும் அடங்கும். ல் வசிக்கிற என்பவரின் மகனாகிய என்பவருக்கும் (இதில் பின்னால் "வாங்குபவர்" என்ற சொல்லில் சூழ்நிலை இடம் கொடுக்குமானால், அதனுடைய வழியுரிமை பெற்றவர்கள்—அதன் உரிமையாளர்கள் என்பவையும் அடங்கும்—1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஊராட்சிக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை என்னவென்றால் :—

விற்பவர், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கிற நிலத்துக்கும் இடத்திற்கும் போதுமான அளவுக்கு நன்றாக உரிமை பெற்றிருக்கிறபடியாலும்.

அது சம்பந்தமாகச் செலுத்தப்படத்தக்க (ஏதேனும்) விடுவரிக்குட்பட்டதும் ஆனால் மற்றப்படி வில்லங்கங்கள் இல்லாததும், இதன் மூலம் வழங்கவும் கொடுக்கவும் ஒப்படை செய்யவும் கருதப்பட்டிருப்பதுமான மேற்படி நிலத்தையும் இடத்தையும் ரூபாய் விலைக்கு வாங்கி, வாங்குபவர் தனக்குள்ள அதிகாரங்களைக் கொண்டு விற்பவருடன் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறபடியாலும்.

இப்போது இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்னவென்றால்.— மேற்படி உடன்படிக்கையைப் பின்பற்றி, இந்தப் பத்திரம் எழுதப்படுவதன் பேரில் அல்லது அதற்கு முன் வாங்குபவர் விற்பவருக்குச் செலுத்திய ரூபாயுள்ள தொகையைக் கருதியும் (அதைப் பெற்றுக் கொண்டதாக விற்பவர் இதன் மூலம் ஒப்புக் கொள்கிறார்), விற்பவராகிய அவர் ல் இருப்பதும், இதில் பின்னால் எழுதப்பட்டிருக்கிற அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதுமான நிலம் எல்லாவற்றையும், அதன் மேல் எழுதப்பட்டுள்ள குடியிருப்பு வீடு அல்லது குடியிருப்புடன் சேர்ந்து, இதற்குச் சாதாரணமாக

என்று பெயர்—இதன் மூலம் வழங்கிக்கொடுத்து ஒப்படை செய்கிறார்; அவற்றோடு கூட, மேற்படி நிலம் அல்லது பாகம், குடியிருப்பு வீடு, இடம் ஆகியவற்றுடன் எவ்விதமாகிலும் சேர்ந்துள்ள கட்டிடங்கள், கிடங்குகள், மரங்கள், பொது நிலங்கள், எல்லாக் குறுமா வரிசைகள், பள்ளங்கள், வேலிகள், வழிகள், நீர்நிலைகள், நீர்க் கால்கள், உரிமைகள் சலுகைகள், வழி உரிமைகள், அனுகூலங்கள் சார்ந்தவைகள் எல்லாவற்றையும் அல்லது அதை எவ்விதமாகிலும் சார்ந்துள்ள அல்லது அதனுடன் இதற்கு முன் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட அவைகளில் எதையேனும் மேற்படி இடத்திலும் அதன் பேரிலும் விற்பவருக்குள்ள எவ்விதமான உடைமையின் உரிமை—உரிமை மூலம் பற்று—சொத்துக் கேட்புரிமை, கேட்பு ஆகிய எல்லாவற்றையும் அவ்வாறு வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்கிறார்; வாங்குபவருக்கு இதனால் வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்யப்பட்ட மேற்படி நிலம் அல்லது பாகம், குடியிருப்பு வீடு, இடம் ஆகியவற்றை எல்லாம் என்றென்றும் கைப்பற்றில் வைத்திருப்பதற்காக அவ்வாறு வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்கிறார்; மேலும், விற்பவர் வாங்குபவருடன் இதனால் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்றால், விற்பவராகிய அவருக்கு, மேற்சொன்னவாறு வாங்குபவருக்கு இதனால் வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்யப்பட்ட இடத்தை வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்ய இப்போது முழு உரிமை இருக்கிறது; வாங்குபவர் இனிமேல் எல்லாக் காலங்களிலும், விற்பவரால் அல்லது வேறெவர் அல்லது மற்றவர்களால் எவ்விதமாகவும் சட்டப்படி வெளியேற்றப்பெறாமல் இடையூறு செய்யப் பெறாமல் பாத்தியத்தை அல்லது கேட்புரிமை பெறாமல், எவ்விதமான எல்லா வில்லங்கங்களும் இல்லாமல் சமாதானமாகவும் அமைதியாகவும் அந்த இடத்தை சுவாதீனப்படுத்தி அனுபோகத்தில் வைத்துக்கொண்டு, அதன் வாடகைகளையும் ஆதாயங்களையும் அவ்வாறு பெற்றுக் கொண்டும் வரலாம்; அன்றியும், விற்பவராகிய அவரும், விற்பவரிடமிருந்து, அவருக்குக்கட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாக, அல்லது அவருடைய முன்னோர்களில் ஒருவரிடமிருந்து அல்லது அவருக்குக்கட்பட்டு மேற்படி இடங்களில் அல்லது அவைகளில் ஒன்றில் அல்லது அவற்றில் பாகத்தில் பாதியதையை சட்டப்படி அல்லது நியாயமாக உரிமை கொண்டாடிக் கேட்கும் எல்லாரும், அவ்வப்போதும் இனிமேல் எல்லாக் காலங்களிலும், வாங்குபவர் கேட்டுக் கொள்வதன் பேரிலும் அவர் செலவிலும், நியாயமாகத் தேவைப்படக்கூடிய படி மேற்சொன்னவாறு அந்த இடங்களை அதன் ஒவ்வொரு பாகத்தையும் வாங்குபவருக்கு இன்னும் அதிக நிறைவாகக் கிடைக்கும்படிச் செய்யும் பொருட்டு எவ்விதமான எல்லாச் செயல்களையும் ஒப்பாவணங்களையும் காரியங்

களையும், எழுதிப் பதிவு செய்ய வேண்டும் அல்லது செய்வித்து, எழுதுவித்துப் பதிவு செய்விக்க வேண்டும்; அவ்வாறு எல்லாம் செய்யவும், செய்விக்கவும் செய்வார்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

பதிவுத் துறை மாவட்டத்திலே பதிவுத் துறை உள் மாவட்டத்தில் ஊரில்/பேரூரில் இருப்பவையும், என்பதற்குத் தெற்கிலும் என்பதற்கு வடக்கிலும் என்பதற்கு மேற்கிலும், என்பதற்குக் கிழக்கிலும் இருப்பவையும், புதிய நில அளவை எண்ணும் பழைய நில அளவை எண்ணும் கொண்டவையும், அளக்கும்போது மொத்தத்தில் (ஏறத்தாழ) இருப்பவையுமான நிலத் துண்டு அல்லது பாகம்-வளவு எல்லாம்
மேலே பெயர் குறிப்பிட்டிருப்பவரால் முன்னிலையில் கையெழுத்திட்டு, முத்திரைபோட்டு ஒப்புவிக்கப்பட்டது.

இதற்குச் சான்றாக விற்பவர் மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் நாளிலும் இதில் தமது கையெழுத்தும் முத்திரையும் போட்டிருக்கிறார்.

படிவம் I (ஆ).

குத்தகை மூலமாக மாற்றங்கள்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஆண்டு மாதம் தேதியன்று (இதில் பின்னால் "குத்தகைக்கு விடுபவர்" என்ற சொற்றொடரில் சூழ்நிலை இடங் கொடுக்குமானால் அவருடைய வழிமுறையினர் நிறைவேற்றுபவர்கள் — ஆட்சியாளர்கள்—சட்டச் சார்பாளர்கள் — உரிமையாளர்கள் என்பவையும் அடங்கும்) ல் வசித்துக் கொண்டு ல் தொழில் நடத்துகிற என்பவருக்கும், (இதில் பின்னால் "குத்தகைதாரர்" என்ற இச் சொல்லில் சூழ்நிலை இடங்கொடுக்குமானால் பதவியில் அதனுடைய பின்னவர் உரிமை பெற்றவர், உரிமையாளர்கள் என்பவையும் அடங்கும்), 1958 ஆம் ஆண்டின் ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஊராட்சிக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை என்னவென்றால்—

1. நிபந்தனைகளாவன.—இதனால் ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையைக் கருதியும் (இதில் கண்டுள்ள) குத்தகைதாரரின் ஒப்பந்தங்களைக் கருதியும், குத்தகைக்கு விடுபவர் குத்தகைதாரருக்கு, என்று வழங்கப்படு

வதும், பதிவுத் துறை மாவட்டத்திலே பதிவுத் துறை உள்மாவட்டத்தில் இருப்பதும், நில அளவை எண் கொண்டிருப்பதும், இதனுள் இணைந்துள்ள அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப் பதுமான நிலம் அல்லது பாகம் எல்லாவற்றையும் கட்டிடத்தையும் வளவையும் 19 ஆண்டு மாதம் நாளிலிருந்து ஆண்டுக் காலத்துக்கு உரிமைமாற்றிக் கொடுக்கிறார்; அதற்காக, கழிவுத் தொகைகள் எல்லாம் நீங்கலாக ரூபாய் மாத வாடகையை முன்னதாகக் கொடுக்கிறார். ஆண்டு மாதம் நாளன்று, முதலவாதாகக் தொகை செலுத்த வேண்டும்.

2. குத்தகைதாரர் குத்தகைக்குவிட்டவருடன், அடியிற் கண்டபடி ஒப்பந்தம் செய்து கொள்கிறார் :—

(1) ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையை, ஒவ்வொரு மாதத்திலும் முதல் தேதியன்றாவது, அதற்கு முன்பாவது மேற்சொன்னவிதமாகச் செலுத்த வேண்டும்.

(2) மேற்படி இடம் சம்பந்தமாக இப்போதும் இனிமேலும் செலுத்தப் படத்தக்க வரிகள்—பொறுப்புகள்—தீர்வைகள்—செலவுகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு, செலுத்தித் தீர்க்க வேண்டும்.

(3) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட இடத்தின் வெளிப்புறத்தையும் உட்புறத்தையும், அதன் சேர்க்கைகள் எல்லாவற்றையும் அதன் எல்லைச் சுவரையும் வேலிகளையும், வடிகால்களையும் நிலத்தையும், மற்றக் குழாய் களையும், துப்புரவு, தண்ணீர் ஆகியவற்றின் கருவிகளையும், மின் இசைப்பு களையும் பொருத்தங்களையும் குடியிருக்கத்தக்க நல்ல நிலையில் செப்பனிட்டு வைத்திருக்க வேண்டும்.

(4) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட கட்டிடத்தில், குத்தகைக்கு விட்டவரின் எழுத்து மூலமான இசைவை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், எந்தச் சூழ்நிலையிலும் மாறுதல்கள் செய்யவுங்கூடாது, எவற்றையேனும் சேர்க்கவுங் கூடாது, அவ்வாறு செய்வதற்கு அல்லது சேர்ப்பதற்கு அனுமதி கொடுக்கவுங் கூடாது; ஆனால் எப்போதும், மாறுதல்கள் எவற்றையேனும் செய்யக் குத்தகைக்குவிட்ட குத்தகைதாரருக்கு அனுமதி கொடுத்திருந்தால், அதற்காக ஈடு எதையும் பெற குத்தகைதாரர் உரிமை உள்ளவராகமாட்டார்.

(5) முன்னதாக ஒரு நாள் அறிக்கை கொடுத்து, உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட இடத்தில் நுழையவும் அதன் நிலையைப் பார்வையிடவும், நியாயமான எல்லாக் காலங்களிலும் வேலையாட்களுடன் அல்லது மற்றவர்களுடன் அல்லது அவர்கள் இல்லாமலோ குத்தகைக்குவிட்டவருக்கு அனுமதி கொடுக்க வேண்டும்; குத்தகைக்கு விட்டவர் அறிவிப்புக் கொடுப்பதன் பேரில் அந்த அறிவிப்பு சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்துக்குள் மேற்படி இடத்திற்கு செப்பனிட அனுமதி கொடுக்க வேண்டும்.

(6) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட இடத்தின் அல்லது அதன் பாகத்தின் சுவாதீனத்தைக் குத்தகைக்கு விட்டவரின் எழுத்து மூலமான இசைவை முதலில் பெற்றுக் கொள்ளாமல் ஒப்படை செய்யவுங் கூடாது. கீழ்க் குடிக் கூலிக்கு விடவுங் கூடாது. உடைமையைக் கைவிடவுங் கூடாது.

(7) குத்தகை முடிவடைவதன் பேரில், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட இடத்தையும் அதன் எல்லா இணைப்புகளையும், சேர்க்கைகளையும், இதில் அடங்கியுள்ள ஒப்பந்தங்களின்படி நல்ல நிலையில் செப்பனிட்டுக் கொடுத்துவிட வேண்டும்.

3. குத்தகைக்கு விட்டவர் குத்தகைதாரருடன் அடியிற்கண்டபடி ஒப்பந்தம் செய்து கொள்கிறார்:—

(i) குத்தகைதாரர் இதனால் ஒதுக்கப்பட்ட வாடகையைக் கொடுத்துக் கொண்டு, தம்முடையதென்று இதில் கண்டுள்ள பற்பல உடன்படிக்கைகளையும், நிபந்தனைகளையும் அனுசரித்துக் கடைப் பிடிக்கும்போது, குத்தகைக்கு விட்டவரிடமிருந்து அல்லது அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாகச் சரியாய் உரிமை கொண்டாடும் ஒருவரிடமிருந்து எவ்வித இடையூறும் இல்லாமல் மேற்படி கால அளவில், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட இடத்தை அமைதியாக வைத்திருந்து அனுபவிக்க உரிமை உண்டு.

(ii) நியாயமான தேய்வுமாய்வுகளினால் முக்கியமான சுவர்களுக்கும் கூரைக்கும் அடிப்படைகளுக்கும் எல்லாச் செப்பனீடுகளையும் செய்ய வேண்டும்; அத்தகைய செப்பனீடுகள் அவசியமானவையா என்பதுபற்றி, அந்த அந்தக் காலத்தில் கோட்டத்தின் செயல் பொறியாளரின் தீர்மானம் முடிவானதாகும்.

4. ஆனால் எப்போதும் இதற்குரிய இருதிறத்தாராலும் அவர்களுக்கிடையிலும் இதனால் வெளிப்படையாக உடன்படிக்கை செய்து கொள்ளப்படுவது என்னவென்றால்.—(1) இதனால் ஒதுக்கப்பட்ட வாடகை அல்லது அதன்

ஏதேனும் பாகம் (முறைப்படி கேட்கப்பட்டாலும் கேட்கப்படாவிட்டாலும்) செலுத்தப்படத்தக்கதாகிவிட்ட பிறகு பதினுன்கு நாட்கள் வரை செலுத்தப் படாமலிருந்தால், அல்லது குத்தகைதாரருடையதென்று இதில் கண்டுள்ள ஏதேனும் உடன்படிக்கை நிறைவேற்றப்படாவிட்டால், அல்லது அனுசரிக்கப் படாவிட்டால், அப்போது அப்படிப்பட்டவற்றில் எதிலேனும், குத்தகைக்கு விட்டவர் அதற்குப் பிறகு எப்போதேனும் உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட இடத்தில் அல்லது முழுமையின் பெயரால் அதன் ஒரு பாகத்தில் மீண்டும் நுழைவது சட்ட சம்மதமாகும். அதன் பேரில் இந்த உரிமை மாற்றம் முழுமையாக அற்றுப்போய் விடும்; ஆனல், குத்தகைதாரருடையதென்று இதில் கண்டுள்ள உடன்படிக்கைகளில் ஏதேனும் மீறப்பட்டது சம்பந்தமாகக் குத்தகைக்கு விட்டவருடைய செயல் உரிமைக்குப் பாதகம் உண்டாக மாட்டாது.

(2) தற்போதைய உரிமை மாற்றத்தை இறுதி செய்து விடக் குத்தகை தாரர் விரும்பி, அவ்விருப்பத்தைப் பற்றி எழுத்து மூலமாக மூன்று நாட் குறிப்பு மாத அறிவிப்பைக் குத்தகைக்குவிட்டவருக்கு முன்னதாகக் கொடுத்தால், அப்போது, மூன்று நாட்காட்டி (காலண்டர்) மாதங்கள் கழிந்தவுடனே தற்போதைய உரிமைமாற்றமும் இதில் கண்டுள்ள ஒவ்வொன்றும் அற்றுப் போய்ச் செல்லாததாகிவிடும்; ஆனல், முன்னதான ஏதேனும் பாத்தியத்தை அல்லது உடன்படிக்கை மீறப்பட்டது பற்றி இருதிறத்தாரில் ஒருவர் மற்றவரைத் தீர்வழி கேட்பதற்கு ஊறு உண்டாக மாட்டாது.

(3) குத்தகைக்கு விட்டவர் இதனுல் வழங்கப்பட்ட காலம் கழிந்து போவதற்கு முன் மூன்று நாட்காட்டி மாதங்களுக்குள் குத்தகைதாரர் எழுதிக் கேட்டுக் கொள்வதன் பேரில், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட இடத்தில் குத்தகையை இன்னும் ஆண்டுக் காலத்துக்குக் குத்தகை தாரருக்கு வழங்க வேண்டும்; புதுப்பிப்பதற்கான உடன்படிக்கை நீங்கலாக உட்பட இதில் கண்டுள்ளவைகளைப் போன்ற உடன்படிக்கைகளும் விலக்கு ஏற்பாடுகளும் அக்குத்தகையில் அடங்கியிருக்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

பதிவுத் துறை மாவட்டத்திலே பதிவுத் துறை உள் மாவட்டத்தில் ஊரில்/பேரூரில் இருப்பவையும் என்பதற்குத் தெற்கிலும் என்பதற்கு வடக்கிலும், என்பதற்கு மேற்கிலும், என்பதற்கு கிழக்கிலும் இருப்பவையும், புதிய

நில அளவை எண்ணும் பழைய நில அளவை எண்ணும் கொண்டவையும், அளக்கும்போது மொத்தத்தில் (ஏறத்தாழ) இருப்பவையுமான நிலம் அல்லது பாகம் இடம் எல்லாம்.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால் முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரை போட்டு ஒப்புவிக்கப்பட்டது.

முன்னிலையில் ஊராட்சியின் செயல் அதிகாரியால் கையெழுத்திடப்பட்டது. முன்னிலையில் ஊராட்சியின் பொது முத்திரை இதில் போடப்பட்டது.

இதற்குச் சான்ருக, மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் நாளிலும், குத்தகைக்குவிட்டவர் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிருர்; குத்தகைதாரராகிய ஊராட்சியின் பொது முத்திரை இதில் போடப்பட்டிருக்கிறது.

படிவம் I (இ)

அடைமான மூலமாக மாற்றம்.

19 ஆம் ஆண்டு மாதம் நாள் (இதில் பின்னுல் "அடைமானம் வைப்பவர்" என்ற இச் சொற்ருெடரில் சந்தர்ப்பம் இடம் கொடுத்தால் அவருடைய வழிமுறையினர் நிறைவேற்றுபவர்கள்—ஆட்சியாளர்கள்—சட்ட சார்பாளர்கள்— உரிமையாளர்கள் என்பவையும் அடங்கும்). ல் வசிக்கிற என்பவர் மகனுகிய என்பவருக்கும் (இதில் பின்னுல் "அடைமானம் பெறுபவர்" என்ற சொற்ருெடரில் சூழ்நிலே இடங் கொடுத்தால் பதவியில் அதன் பின்னவர் உரிமையாளர்கள் என்பவையும் அடங்கும்). 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஊராட்சிக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை என்னவென்ருல் :—

அடைமானம் வைப்பவருக்கு, இதனுடன் இணைக்கப்பட்டிருக்கிற அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிலம் அல்லது பாகம், இடம் இவற்றில் உண்மையாக முழு உரிமை இருக்கிறபடியாலும், அவருக்கு அவை சுவாதீனமாயிருக்கிறபடியாலும்,

அடைமானம் பெறுபவர் ரூபாய் உள்ள தொகை இதில் பின்னுல் சொல்லப்பட்டுள்ள விதமாகத் திருப்பிச் செலுத்தப்படுமென்னும் நிபந்தனையின் பேரில் அத்தொகையை அடைமானம் வைப்பவருக்குக் கடனுகக் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறபடியாலும்,

இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்னவென்றால், இந்தப் பத்திரம் எழுதப்படும் நாளன்று அல்லது அதற்கு முன் அடைமானம் பெறுபவர் அடைமானம் வைப்பவருக்குக் கொடுத்த ரூபாயுள்ள தொகையைக் கருதி (அடைமானம் வைப்பவர் இதைப் பெற்றுக் கொண்டதாக இதனால் ஒப்புக் கொள்கிறார்), அடைமானம் வைப்பவராகிய அவர், -ல் இருப்பதும், இதில் பின்னால் எழுதப்பட்டிருக்கிற அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதுமான நிலம் அல்லது பாகம் எல்லாவற்றையும் அதில் எழுப்பப்பட்டுள்ள குடியிருப்பு வீடு அல்லது குடியிருப்புடன் சேர்ந்து இதற்குச் சாதாரணமாக என்றுபெயர்—இதன் மூலம் கொடுத்து, வழங்கி, சுவாதீன அடைமானமாக ஒப்படை செய்கிறார்; அவற்றோடு கூட மேற்படி நிலம் அல்லது பாகம், குடியிருப்பு வீடு, இடம் ஆகியவற்றுடன் எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள கட்டிடங்கள், கிடங்குகள், மரங்கள், பொது நிலங்கள், எல்லைக் குறுமா வரிசைகள், பள்ளங்கள், வேலிகள், வழிகள், நீர் நிலைகள், நீர்க் கால்கள், உரிமைகள், சலுகைகள், வழக்க உரிமைகள், அனுகூலங்கள் சார்ந்தவைகள் எல்லாவற்றையும் அல்லது அதை எவ்விதமாகவேனும் சார்ந்துள்ள அல்லது அதனுடன் இதற்கு முன் அல்லது இனிமேல் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக்கொள்ளப்பட்ட அல்லது வைத்துக்கொள்ளப்படும் அவைகளில் எதையேனும், அந்த இடத்திலும் அதன் பேரிலும் அடைமானம் வைப்பவருக்குள்ள எவ்விதமான உடைமையின் உரிமை, உரிமைமூலம் பற்று, சொத்துக் கேட்புரிமை, கேட்பு ஆகிய எல்லாவற்றையும் அவ்வாறு கொடுத்து, வழங்கி, ஒப்படை செய்கிறார்; மீட்பு சம்பந்தமாக இதில் பின்னால் கண்டுள்ள விலக்கு ஏற்பாட்டுக்குட்பட்டு, அடைமானம் பெறுபவருக்கு இதனால் வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்யப்பட்ட அல்லது அப்படியெல்லாம் சொல்லப் பட்ட மேற்படி நிலம் அல்லது பாகம், குடியிருப்பு வீடு, இடம் ஆகியவற்றை என்றென்றும் பெற்றுக் கைப்பற்றில் வைத்திருப்பதற்காக அவ்வாறு கொடுத்து, வழங்கி, ஒப்படை செய்கிறார். அடைமானம் வைப்பவர் இதனால் அறிவிப்பது என்னவென்றால், அடைமானச் சொத்தை அடைமானம் பெறு பவரின் சுவாதீனத்தில் தாம் விட்டுவிட்டிருக்கிறார்; ரூபாயுள்ள மேற்படி தொகை அடைமானம் பெறுபவரிடம் திருப்பிக் கொடுக்கப்படுகிற வரையில், அடைமானம் பெறுபவர் அச்சொத்தினைத் தொடர்ந்து சுவாதீனத்தில் வைத்துக் கொண்டிருப்பார்; அடைமானம் பெறுபவர், அடைமானப் பணம் சம்பந்த மாகச் சேர வேண்டிய வட்டிக்குப் பதிலாக, அச் சொத்திலிருந்து கிடைக்கும் வாடகைகளையும் ஆதாயங்களையும் பயன்படுத்திக் கொள்வார். மேலும், அடைமானம் வைப்பவர் அடைமானம் பெறுபவருடன் இதனால் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்றால், அடைமானம் வைப்பவராகிய அவர், இப் பத்திரத்தின் ஈட்டின் பேரில் இன்னும் ஏதேனும் பணம் சேர வேண்டியதா

யிருக்கிற வரையில், இதனுல் வழங்கப்படுவதாக, கொடுக்கப்படுவதற்காக—ஒப்படை செய்யப்படுவதாக இதில் முன்னுல் சொல்லப்பட்ட மேற்படி இடத்திரின் பேரில் இப்போதுள்ள அல்லது இனிமேல் எழுப்பப்படப்போகும் குடியிருப்பு வீடுகள், கட்டிடங்கள் எல்லாவற்றையும், நல்ல திடமான நிலேயில் செப்பனிட்டு வைத்திருக்க வேண்டும்; நெருப்பினுல் இழப்பு அல்லது சேதம் நேரிடுவதை முன்னிட்டு, குறைந்தது ரூபாயுள்ள தொகைக்கு, அடைமானம் பெறுபவரால் ஒப்புக் கொள்ளப்படும் அலுவலகம் அல்லது அலுவலகங்களில் அவர் பெயரில் அவற்றை ஈட்டுறுதி செய்து வைக்க வேண்டும்; அதன்பொருட்டும் அந்த ஈட்டுறுதி அடியில் இருக்கும்படிச் செய்யும்பொருட்டும் அவசியமான எல்லாத் தவணேக் கட்டணங்களேயும் பணத் தொகைகளேயும் முறைப்படி காலந் தவருமல் செலுத்திவிட வேண்டும். மேற்படி இடங்கள் அல்லது அவைகளில் யாதொன்று சம்பந்தமாக அந்தந்தக் காலத்தில் செலுத்தப்படத்தக்க அல்லது அவைகள் மீது அந்தந்தக் காலத்தில் பொறுப்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள விடுவரி, தீர்வை, வீதங்கள், வரிகள், மற்றச் செலவுகள் ஆகிய எல்லாவற்றையுங் கூட முறைப்படிக்காலந் தவருமல் செலுத்திவிட வேண்டும், ஈட்டுறுதிப் பத்திரம் அல்லது பத்திரங்களேயும் மேற்சொன்னவாறு செலுத்தப்படத்தக்க ஒவ்வொரு தொகைக்குமான பற்றுச் சீட்டையும் அடைமானம் பெறுபவரிடம் உடனே ஒப்புவித்துவிட வேண்டும். மேற்படி கட்டிடங்கள் அவ்வாறு செப்பனிட்டு வைத்திருப்பதில் அல்லது அந்த ஈட்டுறுதிகளே ஏற்படுத்துவதில் அல்லது அவைகள் அமலில் இருக்கும் படிச் செய்வதில் அல்லது மேற்சொன்னவாறு அத்தகைய ஏதேனும் விடுவரி, தீர்வை, வீதங்கள், வரிகள், மற்றச் செலவுகள் ஆகியவற்றைச் செலுத்துவதில் அல்லது மேற் சொன்னவாறு பத்திரத்தை அல்லது பத்திரங்களே அல்லது பற்றுச் சீட்டினே அவ்வாறு ஒப்புவிப்பதில் தவறிப் போனுல் அடைமானம் பெறுபவர், அந்த இடத்தை செப்பனிட்டுத் தக்க திடமான நிலேயில் வைப்பது அல்லது சந்தர்ப்பத்துக்கேற்ப மேற்சொன்ன தொகைக்கு மேற்படாத ஒரு தொகைக்கு அக் கட்டிடங்களே ஈட்டுறுதி செய்து, அந்த ஈட்டுறுதி அமலில் இருக்கும்படிச் செய்து, தவணேக் கட்டணங்களேயும் அவ்வாறு செய்வதற்குப் பிடிக்கும் எல்லாச் செலவுகளேயும் அல்லது (சந்தர்ப்பத்துக்கேற்ப) மேற்சொன்னவாறு அத்தகைய ஏதேனும் விடுவரி, தீர்வை, வீதங்கள், வரிகள் அல்லது மற்றச் செலவுகளேச் செலுத்துவது சட்ட சம்மதமாகும்; ஆனுல், இப்படியெல்லாம் செய்ய அவர் கடமைப்பட்டவர் ஆக மாட்டார். அன்றியும் அடைமானம் வைப்பவர், அத்தகைய தவணேக் கட்டணங்கள், செலவுகள், மற்ற பணங்கள் எல்லா வற்றையும், ஒவ்வொரு தடவையும் தொகை செலுத்திய காலத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு சதவீதப்படி அவற்றின் மீதான

வட்டியையும் அடைமானம் பெறுபவருக்கு உடனே திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்; அவ்வாறு திருப்பிக் கொடுக்கிற வரையில், இதனால் அடைமானம் வைக்கப்படும் இடத்தின் மீது, திருப்பிச் செலுத்த வேண்டிய தொகையும் மேற்சொன்ன விதப்படி அதன் மீதான வட்டியும் பொறுப்பாக ஏற்றப்படும்; ஈட்டுறுதி சம்பந்தமாகப் பெற்றுக் கொள்ளப்படும் எல்லாப் பணங்களையும், அடைமானம் பெறுபவரின் விருப்பப்படி, ஈட்டுறுதி செய்யப்பட்ட கட்டிடங்களைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு, அல்லது இப் பத்திரத்தின் ஈட்டின் பேரில் அந்தந்தக் காலத்தில் பணம் செலுத்துவதில் அல்லது செலுத்துவதற்குப் பயன்படுத்த வேண்டும்; மேலும், அடைமானம் வைப்பவர் அடைமானம் பெறுபவருடன் இதனால் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்றால், அடைமானம் பெறுபவருக்கு இந்தச் சுவாதீன அடைமானத்தைக் கொடுக்கவும் வழங்கவும் அடைமானம் வைப்பவராகிய அவருக்கு இப்போது அதிகாரம் உண்டு; அன்றியும், இதன் மூலம் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு அறிவிப்பது என்ன வென்றால், அடைமானம் வைப்பவர் மேற்சொன்ன ரூபாயுள்ள தொகையையும் இப் பத்திரத்தின்படி வேறு எவையேனும் பணங்கள் சேர வேண்டியிருந்தால் அவற்றையும் அடைமானம் பெறுபவருக்கு எப்போதேனும் கொடுத்துவிடுவதன் பேரில், அடைமானம் பெறுபவர், அடைமானம் வைப்பவர் கேட்டுக் கொள்வதன் பேரிலும், அவர் செலவிலும் இதன் மூலம் வழங்கப்பட்டதாக, கொடுக்கப் பட்டதாக, அல்லது ஒப்படை செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் நிலம் அல்லது பாகம், இடம் ஆகிய எல்லாவற்றையும் அடைமானம் வைப்பவருக்கு அல்லது அவர் கட்டளையிடக்கூடியபடி மீண்டுங்கொடுத்து, மீண்டும் ஒப்படை செய்துவிட வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

பதிவுத் துறை மாவட்டத்திலே

பதிவுத் துறை உள் மாவட்டத்தில்

ஊர்/பேரூரில் இருப்பவையும் என்பதற்குத் தெற்கிலும்

என்பதற்கு வடக்கிலும்

என்பதற்கு மேற்கிலும்

என்பதற்குக் கிழக்கிலும் இருப்பவையும், புதிய நில அளவை எண்ணும் பழைய நில அளவை எண்ணும் கொண்டவையும், அளக்கும்போது மொத்தத்தில் (ஏறத்தாழ) இருப்பவையுமான நிலம் அல்லது பாகம், இடம் எல்லாம்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால்

முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரை

போட்டு ஒப்புவிக்கப்பட்டது.

இதற்குச் சான்ருக அடைமானம் வைப்பவர் மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் நாளிலும் இதில் தமது கையெழுத்தையும் முத்திரையையும் போட்டிருக்கிரூர்.

படிவம் I (ச).

நன்கொடை மூலமாக மாற்றம்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஆண்டு மாதம் நாளில் (இதில் பின்னுல் "கொடையளிப்பவர்" என்ற சொற்ரெடரில் சூழ்நிலை இடங் கொடுக்குமானுல் அவருடைய வழிமுறையினர் நிறைவேற்று பவர் — ஆட்சியாளர்கள் — சட்டச் சார்பாளர்கள் — உரிமையாளர்கள் என்பவையும் அடங்கும்) -ல் வசிக்கிற என்பவரின் மகனுகிய என்பவருக்கும் (இதில் பின்னுல் "கொடை பெறுபவர்" என்ற இச் சொற்ரெடரில் சூழ்நிலை இடங் கொடுக்குமானுல் பதவியில் அதனுடைய வழியுரிமை பெற்றவர்கள் அதன் உரிமையாளர்கள் என்பவையும் அடங்கும்.) 1958 ஆம் ஆண்டின் XXXV வது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப் பட்ட ஊராட்சிக்கும் ஏற்பட்ட இந்த உடன்படிக்கை என்னவென்ருல்:—

இதில் பின்னுல் விவரிக்கப்பட்டிருப்பவையும், இதன் மூலம் வழங்கி கொடுத்து, ஒப்படை செய்யக் கருதியிருப்பவையுமான நிலம் அல்லது பாகம், இடம் ஆகியவற்றில் வில்லங்கங்கள் இல்லாமல் கொடையளிப்பவர் போதிய அளவு நன்ருக உரிமை பெற்றிருக்கிறபடியாலும்,

மேற்படி நிலம் அல்லது பாகம், இடம் சம்பந்தமாக இப்போதைய வருங்காலத்திய வரிகள், செலவுகள், தீர்வைகள் மனைத் தீர்வை எல்லா வற்றையும் கொடை பெறுபவர் செலுத்துவதற்குட்பட்டு, கொடையளிப்பவர் அவற்றைக் கொடை பெறுபவருக்கு நன்கொடையாக மாற்ற ஒப்புக் கொண்டிருக்கிறபடியாலும், கொடை பெறுபவர் அந்த நிபந்தனைகளுக்குட் பட்டு அதை ஏற்றுக் கொள்ள உடன்பட்டிருக்கிறபடியாலும்,

முத்திரை வரியினிமித்தம் அந்த நிலமும் அல்லது பாகமும் இடமும் ரூபாய் மதிப்புள்ளதாயிருக்கிறபடியாலும்,

இப்போது இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்னவென்ருல்.— நில அளவை எண் கொண்டதும், பதிவுத் துறை மாவட்டத்திலே பதிவுத் துறை உள் மாவட்டத்தில்

ஊரில் இருப்பதும், இதன் பின்னல் எழுதப்பட்டுள்ள அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதுமான நிலம் அல்லது பாகம், எல்லாவற்றையும் அவற்றோடு கூட மேற்படி நிலம் அல்லது பாகம், கட்டிடங்கள், இடம் ஆகியவற்றுடன் எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பொது நிலங்கள், உரிமைகள், சலுகைகள், வழக்க உரிமைகள், அனுகூலங்கள், சார்ந்தவை எல்லாவற்றையும், அதை எவ்விதமாகவேனும் சார்ந்துள்ள அல்லது அதனுடன் இதற்கு முன் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட அவைகளில் எதையேனும், மேற்படி இடத்திலும் அதன் பேரிலும் கொடை அளிப் பவருக்குள்ள எவ்விதமான உடைமையின் உரிமை, உரிமை மூலம் பற்று, சொத்துக் கேட்புரிமை, கேட்பு ஆகிய எல்லாவற்றையும், கொடை அளிப்பவர் கொடை பெறுபவருக்கு இதனல் அளித்து, வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்கிருர் ; கொடை பெறுபவர் அவற்றை இதன் மூலம் ஏற்றுக் கொள்கிருர் ; கொடை பெறுபவருக்கு இதனல் வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்யப்பட்ட மேற்படி நிலம் அல்லது பாகம் இடம் என்றென்றும் பெற்றுக் கைப்பற்றில் வைத்திருப்பதற்காக அவ்வாறு அளித்து வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்கிருர். மேலும் கொடை அளிப்பவர் கொடை பெருபவருடன் இதனல் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்ருல், கொடை அளிப்பவருக்கு மேற்சொன்னவாறு கொடை பெறுபவருக்கு இதனல் வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்யப்பட்ட இடங்களை வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்ய இப்போது முழு உரிமை இருக்கிறது ; அன்றியும், கொடை பெறுபவர் இனிமேல் எல்லாக் காலங்களிலும், கொடை அளிப்பவரிடமிருந்து அல்லது அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாகப் பாத்தியதை கொண்டாடுபவரிடமிருந்து அல்லது அவரால் எவ்விதமாகவும் சட்டப்படி வெளியேற்றப்பெருமல், இடையூறு செய்யப் பெருமல், கேட்புரிமை அல்லது கேட்பு கேட்கப்பெருமல், எவ்விதமான எல்லா வில்லங்கங்களும் இல்லாமல் சமாதானமாகவும் அமைதியாகவும் அந்த இடங்களை சுவாதீனப்படுத்தி அனுபோகத்தில் வைத்துக் கொள்ள வேண்டியதுமல்லாமல், அவ்வாறு வைத்துக் கொள்ளவும் செய்யலாம் ; அன்றியும், கொடை அளிப்பவரும், கொடை அளிப்ப வரிடமிருந்து அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாக அல்லது அவருடைய முன்னேர்களில் ஒருவரிடமிருந்து அல்லது அவருக்குட்பட்டு மேற்படி இடத்தில் அல்லது அதன் பாகத்தில் உரிமை அல்லது பாத்தியதையை உடைய அல்லது சட்டப்படி அல்லது நியாயமாக உரிமை கொண்டாடிக் கேட்கும் எல்லாரும் அவ்வப்போதும் இனிமேல் எல்லாக் காலங்களிலும், கொடை பெறுபவர் கேட்டுக் கொள்வதன் பேரிலும் அவர் செலவிலும், மேற் சொன்னவாறு, அல்லது நியாயமாக தேவைப்படுகிறபடி அல்லது தேவைப்

படக்கூடியபடி அந்த இடத்தையும் அதன் ஒவ்வொரு பாகத்தையும் கொடை பெறுபவருக்கு இன்னும் அதிக நிறைவாகக் கிடைக்கும்படிச் செய்யும் பொருட்டு, எவ்விதமான எல்லாச் செயல்களையும் ஒப்பாவணங்களையும் காரியங்களையும் செய்து, எழுதிப் பதிவு செய்ய வேண்டும் அல்லது செய்வித்து எழுதுவித்துப் பதிவு செய்விக்க வேண்டும், அவ்வாறெல்லாம் செய்யவும் செய்விக்கவும் செய்வார்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

பதிவுத் துறை மாவட்டத்திலே

பதிவுத் துறை உள் மாவட்டத்தில் ஊரில்/பேரூரில்
இருப்பவையும் என்பதற்குத் தெற்கிலும்
என்பதற்கு வடக்கிலும்
என்பதற்கு மேற்கிலும் என்பதற்குக் கிழக்கிலும்
இருப்பவையும், புதிய நில அளவை எண்ணும் பழைய நில அளவை எண்ணும் கொண்டவையும், அளக்கும்போது மொத்தத்தில் (ஏறத்தாழ) கொண்டவையுமான நிலம் அல்லது பாகம் எல்லாம் மேலே பெயர் குறிப்பிடப் பட்டவரால் முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரைபோட்டு ஒப்புவிக்கப்பட்டது.

ஊராட்சிச் செயல் அதிகாரியால் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

ஊராட்சியின் பொது முத்திரை முன்னிலையில் இதில் போடப்பட்டது.

இதற்குச் சான்றாக, மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும், நாளிலும், கொடை அளிப்பவர் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிறார்; கொடை பெறுபவராகிய ஊராட்சி பொது முத்திரை இதில் போடப்பட்டது.

அட்டவணை II

[2 (2), 3 (2) விதிகளைப் பார்க்கவும்.]

படிவம் II (அ).

விற்பனை மூலமாக மாற்றம்.

19 ஆண்டு மாதம் நாள் (இதில் பின்னால் "விற்பவர்" என்று இந்த சொல்லில் சந்தர்ப்பம் இடங்கொடுக்குமானால் அதனுடைய வழியுரிமை பெற்றவர்கள்—அதன் உரிமையாளர்கள் என்பவையும்

அடங்கும்)—1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஊராட்சிக்கும் (இதில் பின்னால் "வாங்குபவர்" என்ற இச் சொல்லில் சூழ்நிலை இடங்கொடுக்குமானால் அவருடைய வழிமுறையினர் நிறைவேற்றுபவர்கள்—ஆட்சியாளர்கள்—சட்டச் சார்பாளர்கள்—உரிமையாளர்கள் என்பவையும் அடங்கும்) ல் வசிக்கிற என்பவர் மகனாகிய என்பவருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை என்னவென்றால் :—

விற்பவர் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கிற நிலம் அல்லது பாகத்தையும் இடத்தையும் சுவாதீனத்தில் வைத்துக் கொண்டு அவற்றிற்கு உரிமை பெற்றிருக்கிறபடியாலும், அவை சம்பந்தமாகச் செலுத்தப்படத்தக்க (ஏதேனும்) விடுவரிக்குட்பட்டவையும் ஆனால் மற்றப்படி வில்லங்கங்கள் இல்லாதவையுமான அவைகளை ரூபாயுள்ள தொகைக்கு வாங்குபவருக்கு விற்பனை செய்ய அவருடன் உடன்பட்டிருக்கிற படியாலும்,

இதில் பின்னால் கண்டுள்ள உடைமையை விற்பதற்கு, 19 ஆண்டு மாதம் நாளிட்ட எண் ஆணை மூலமாக மாவட்டத்தின் ஆட்சியாளர் ஒப்பளிப்பு வழங்கியிருக்கிற படியாலும்,

* இதில் பின்னால் கண்டுள்ள உடைமையை விற்பதற்கு 19 ஆண்டு மாதம் நாளிட்ட எண் ஆணை மூலமாகத் தமிழ்நாடு அரசாங்கத்தினரும் ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்,

இதில் பின்னால் கண்டுள்ள உடைமையின் விற்பனையை பற்றி, அதற்குச் சம்பந்தப்பட்ட விதிகளில் கண்ட நிபந்தனைகளின்படி முறைப்படி அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும்,

இப்போது இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்னவென்றால் :—மேற்படி உடன்படிக்கையை அனுசரித்தும், இந்தப் பத்திரம் எழுதப்படுவதன் பேரில் அல்லது அதற்கு முன், வாங்குபவர் விற்பவருக்குக் கொடுத்த ரூபாயுள்ள தொகையைக் கருதியும் (விற்பவர் அதைப் பெற்றுக் கொண்டதாக இதன் மூலம் ஒப்புக் கொள்கிறார்), விற்பவர், சொந்தக்காரர் என்னும் முறைமையிலும், இதன் பொருட்டு அதற்கு அதிகாரமளிக்கும் சட்ட முறையான—மற்ற விதமாக ஒவ்வோர் அதிகாரத்தை அனுசரித்தும், . இல் இருப்பதும், இதில் பின்னால் எழுதப்பட்டிருக்கிற அட்டவணையில் இன்னும்

---

* மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால் மாத்திரம் இதை வைத்துக் கொள்ளவும்.

விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதுமான நிலம் அல்லது பாகம் எல்லாவற்றையும்—அதன் மேல் எழுதப்பட்டுள்ள குடியிருப்பு வீடு அல்லது குடியிருப்புடன் சேர்ந்து இதற்குச் சாதாரணமாக என்று பெயர்—வாங்குபவருக்கு இதன் மூலம் வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்கின்றது ; அவற்றோடு கூட ; மேற்படி நிலம் அல்லது பாகம் குடியிருப்பு வீடு, இடம் ஆகியவற்றுடன் எவ்விதமாகவேனும் சேர்ந்துள்ள கட்டிடங்கள், கிடங்குகள், மரங்கள், பொது நிலங்கள், எல்லைக் குறுமர வரிசைகள், பள்ளங்கள், வேலிகள், வழிகள், நீர்நிலைகள், நீர்க்கால்கள், உரிமைகள் சலுகைகள், புழக்க உரிமைகள், அனுகூலங்கள், சார்ந்தவைகள் எல்லாவற்றையும், அல்லது அதை எவ்விதமாகவேனும் சார்ந்துள்ள அல்லது அதனுடன் இதற்கு முன் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட அவைகளில் எதையேனும், மேற்படி இடத்திலும் அதன் பேரிலும் விற்பவருக்குள்ள எவ்விதமான உடைமை, உரிமை, உரிமை மூலம், பற்று, உடமை கேட்புரிமை, கேட்பு ஆகிய எல்லாவற்றையும் அவ்வாறு வழங்கி; கொடுத்து, ஒப்படை செய்கின்றது ; வாங்குபவருக்கு இதனால் வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்யப்பட்ட மேற்படி நிலம் அல்லது பாகம், குடியிருப்பு வீடு, இடம் ஆகியவற்றை என்றென்றும் பெற்றுக் கைப்பற்றில் வைத்திருப்பதற்காக அவ்வாறு வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்கின்றது; மேலும், விற்பவர் வாங்குபவருடன் இதன் மூலம் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்றால், மேற்சொன்னவாறு வாங்குபவருக்கு இதனால் வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்யப்பட்ட இடத்தை வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்ய விற்பவருக்கு இப்போது முழு உரிமை இருக்கிறது ; அன்றியும், வாங்குபவர் இனிமேல் எல்லாக் காலங்களிலும், விற்பவரிடமிருந்து அல்லது வேறொருவர் அல்லது மற்றவர்களிடமிருந்து அல்லது அவரால் எவ்விதமாகவேனும் சட்டப்படி வெளியேற்றப்பெறாமல், இடையூறு செய்யப் பெறாமல், கேட்புரிமை அல்லது கேட்பு கேட்கப் பெறாமல் எவ்விதமான சகல வில்லங்கங்களும் இல்லாமல் சமாதானமாகவும் அமைதியாகவும் அந்த வளவைச் சுவாதீனப்படுத்தி அனுபோகத்தில் வைத்துக் கொண்டு, அதன் வாடகைகளையும் ஆதாயங்களையும் பெற வேண்டியதுமல்லாமல், அவ்வாறு பெற்றுக் கொண்டும் வரலாம் ; அல்லாமலும், விற்பவரும், அவரிடமிருந்து அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாக மேற்படி இடங்களில் அல்லது அவைகளில் ஒன்றில் அல்லது அவற்றின் பாகத்தில் உரிமை அல்லது பாத்தியதையை உடைய அல்லது சட்டப்படி அல்லது நியாயமான உரிமை கொண்டாடிக் கேட்கும் எல்லாரும், அவ்வப்போதும் இனிமேல் எல்லாக் காலங்களிலும் வாங்குபவர் கேட்டுக் கொள்வதன் பேரிலும் அவர் செலவிலும், நியாயமாகத் தேவைப்படக் கூடியபடி மேற்சொன்னவாறு அந்த இடத்தை அதன் ஒவ்வொரு பாகத்தையும் வாங்குபவருக்கு இன்னும் அதிக நிறைவாகக் கிடைக்கும்படிச் செய்யும் பொருட்டு,

எவ்விதமான எல்லாச் செயல்களையும் ஒப்பாவணங்களையும் காரியங்களையும் செய்து எழுதிப் பதிவு செய்ய வேண்டும் அல்லது செய்வித்து, எழுதுவித்துப் பதிவு செய்விக்க வேண்டும். அவ்வாறெல்லாம் செய்யவும் செய்விக்கவும் செய்வார்கள்; மேலும் வாங்குபவர் விற்பவருடன் இதனால் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்றால், மேற்சொன்ன வாங்குபவராகிய அவர் இனிமேல் எல்லாக் காலங்களிலும், இப்போது செலுத்தப்படத் தக்கவையாயிருக்கக் கூடிய அல்லது இனிமேல் எப்போதேனும் இதனால் கொடுக்கப்படும் இடத்தின் மீது, அது போன்ற நிலங்கள்—இடங்களின் பேரில் தீர்வைகளையும் வரிகளையும் விதிப்பது பற்றி இப்போது அமலில் இருக்கிற அல்லது இனிமேல் அமலில் இருக்கக் கூடிய எந்த விதிகளின்படியேனும் தமிழ் நாடு அரசாங்கத்தினரால் வாங்கப்படும் அல்லது விதிக்கப்படும் எல்லாத் தீர்வைகளையும் வரிகளையும் செலுத்த வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

பதிவுத் துறை மாவட்டத்திலே பதிவுத் துறை உள்மாவட்டத்தில் ஊரில்/பேரூரில் இருப்பதும், புதிய நில அளவை எண்ணும் பழைய நில அளவை எண்ணும் கொண்டிருப்பதும், என்பதற்குத் தெற்கிலும் என்பதற்கு வடக்கிலும் என்பதற்கு மேற்கிலும் என்பதற்குக் கிழக்கிலும் இருப்பதும், அளக்கும்போது அல்லது ஏறத்தாழ அவ்வளவு கொண்டதுமான நிலம் அல்லது பாகம் எல்லாம்

ஊராட்சி செயல் அதிகாரியால் முன்னிலையில் கையெழுத்திடப் பட்டது.

ஊராட்சியின் பொது முத்திரை முன்னிலையில் இதில் போடப்பட்டது.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால் முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரை போட்டு ஒப்புவிக்கப்பட்டது.

இதற்குச் சான்றாக மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் நாளிலும் ஊராட்சியின் பொது முத்திரை இதில் போடப்பட்டது; என்பவர் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிறார்

படிவம் II (ஆ).

பரிமாற்றம் மூலமாக மாற்றம்.

19 ஆண்டில் மாதம் நாள் இதில் பின்னால் "ஊராட்சி" என்ற இச்சொல்லில் சூழ்நிலை இடங்கொடுக்குமானால் அதனுடைய வழியுரிமை பெற்றவர்கள்—அதன் உரிமையாளர்கள் என்பதும் அடங்கும்—1958-ம் ஆண்டின் XXXV-வது தமிழ் நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஊராட்சிக்கும், (ஒன்றும் தரப்பினர்) (இதில் பின்னால் இரண்டாம் தரப்பினர் என்ற இச்சொற்றொடரில் சூழ்நிலை இடங்கொடுக்குமானால் அவருடைய வழிமுறையினர், நிறைவேற்றுபவர்—ஆட்சியாளர்கள்—சட்டச் சார்பாளர்கள்—உரிமையாளர்கள் என்பதும் அடங்கும்) -ல் வசிக்கிற என்பவரின் மகனாகிய என்பவருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை என்னவென்றால் :—

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள முதலாவது அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கும் நிலம் அல்லது பாகம் அதன் மேலுள்ள கட்டிடங்கள் ஆகியவை பற்றி ஊராட்சி வில்லங்கங்கள் இல்லாமல் உண்மையாய் நல்ல உரிமை இருக்கிறபடியாலும், அவற்றை அது சுவாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறபடியாலும், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டாவது அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கும் நிலம் அல்லது பாகம் அதன் மேலுள்ள கட்டிடங்கள் ஆகியவை பற்றி இரண்டாம் தரப்பினருக்கும் வில்லங்கங்கள் இல்லாமல் உண்மையாய் நல்ல உரிமை இருக்கிறபடியாலும் அவற்றை அவர் சுவாதீனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறபடியாலும்,

இதில் தொடர்புடைய இரு தரப்பார்களும், இதனுடன் முறையே இணைக்கப்பட்டுள்ள முதலாவது, இரண்டாவது அட்டவணைகள் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிற மேற்படி நிலங்களை அல்லது பாகங்களை இதில் பின்னால் கண்டுள்ளவாறு பரிமாற்றம் செய்துகொள்ள ஒப்புக் கொண்டிருக்கிறபடியாலும்,

இதில் பின்னால் கண்டிருக்கிற விதமாக உடைமைகளைப் பரிமாற்றம் செய்து கொள்ள, 19 ஆண்டு மாதம் நாளிட்ட எண் ஆணை மூலமாக மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியாளர் ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்,

* இதில் பின்னால் கண்டிருக்கிற விதமாக உடைமைகளைப் பரிமாற்றம் செய்து கொள்ள, 19 ஆண்டு மாதம் நாளிட்ட எண் ஆணை மூலமாக அரசாங்கத்தாரும் ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்,

* இதில் பின்னல் கண்டிருக்கிற விதமாகப் பரிமாற்றம் செய்து கொள்வதைப் பற்றி, அதற்குச் சம்பந்தப்பட்ட விதிகளில் கண்ட ஏற்பாடுகளின்படி, முறைப்படி அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும்,

இப்போது இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்னவென்றல்.—இதில் பின்னல் கண்டுள்ள இரண்டாம் தரப்பினர் உடைமையை மாற்றியிருப்பதைக் கருதி, ஊராட்சி, இதன் பொருட்டு அதற்கு ஆற்றல் அளிக்கும் சட்டமுறைப் படி மற்றப்படியான அதிகாரம் ஒவ்வொன்றையும் அனுசரித்து ல் இருப்பதும், இதில் பின்னல் எழுதப்பட்டிருக்கிற முதலாவது அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதும், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள 'அ' என்று அடையாளமிட்டிருக்கிற நிலப் படத்தில் அல்லது உருவரைப் படத்தில் வர்ணமிட்டிருப்பதும், ரூபாய் அல்லது ஏறத்தாழ அவ் வளவு மதிப்புள்ளதுமான நிலம் அல்லது பாகம் எல்லாவற்றையும், அவற்றோடு கூட, மேற்படி நிலம் அல்லது பாகம், இடம் ஆகியவற்றுடன் எவ்விதமாகவும் சேர்ந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பொது நிலங்கள், எல்லைக் குறு மர வரிசை கள், பள்ளங்கள், வேலிகள், வழிகள், நீர்நிலைகள், நீர்க்கால்கள், உரிமைகள், சலுகைகள், வழக்க உரிமைகள், அனுகூலங்கள், சார்ந்தவைகள் எல்லாவற் றையும், அல்லது அவற்றை எவ்விதமாகவும் சார்ந்துள்ள அல்லது அவற்றுடன் இதற்குமுன் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட அவைகளில் அதையேனும், மேற்படி இடத்திலும் அதன்பேரிலும் ஊராட்சிக் குள்ள எவ்விதமான உடைமை உரிமை, உரிமை மூலம், பற்று, உடைமை கேட்புரிமை, கேட்பு ஆகிய எல்லாவற்றையும் இரண்டாம் தரப்பினருக்கு இதனல் வழங்கிக்கொடுத்து ஒப்படை செய்கின்றது, இரண்டாம் தரப்பினருக்கு இதனல் வழங்கி ஒப்படை செய்யப்பட்ட அல்லது அப்படியென்று சொல்லப் பட்ட மேற்படி நிலம் அல்லது பாகத்தையும் இடத்தையும் என்றென்றும் பெற்றுக் கைப்பற்றில் வைத்திருப்பதற்காக அவ்வாறு வழங்கிக்கொடுத்து ஒப்படை செய்கின்றது; மேலும் இரண்டாம் தரப்பினர் ஊராட்சியுடன் இதனல் ஒப்பந்தம் செய்து சொள்வது என்னவென்றல்,—இரண்டாம் தரப்பி னராகிய அவர் இனிமேல் எல்லாக் காலங்களிலும் தீர்வையையும் அல்லது மனைத் தீர்வையையும், அல்லது மாவட்ட ஆட்சியாரால் அவ் வப்போது நிச்சயிக்கக் கூடிய வேறு தொகையையும், மேற்படி நிலம் அல்லது பாகம் அல்லது இடத்தின் மீது மைய அரசினரால் அல்லது தமிழ்நாடு அரசின ரால் அல்லது ஒரு உள்ளாட்சி அல்லது வேறு அதிகாரிக் குழுவினரால் விதிக் கப்படுகிற அல்லது அவ்வப்போது விதிக்கப்படக் கூடிய தீர்வையையும் வரிகளை

* மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால் மாத்திரம் இதை. வைத்துக் கொள்ளவும்.

யும் செலுத்துவார் ; அன்றியும் இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்ன வென்றால், இதில் முன்னால் கண்டுள்ள ஊராட்சி கொடுப்பதைக் கருதி, இரண்டாம் தரப்பினர் இருப்பதும், இதில் பின்னால் எழுதப்பட்டிருக்கிற இரண்டாவது அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதும், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள 'ஆ'என்று அடையாளமிட்டிருக்கிற நிலப் படத்தில் அல்லது உருவரைப்படத்தில் வர்ணமிட்டிருப்பதும் ரூபாய் அல்லது ஏறத்தாழ அவ்வளவு மதிப்புள்ளதுமான நிலம் அல்லது பாகம் எல்லா வற்றையும், அவற்றோடு கூட, மேற்படி நிலம் அல்லது பாகம், இடம் ஆகிய வற்றுடன் எவ்விதமாகவும் சேர்த்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பொது நிலங் கள். எல்லைக் குறு மர வரிசைகள், பள்ளங்கள், வேலிகள், வழிகள், நீர்நிலைகள், நீர்க்கால்கள், உரிமைகள், சலுகைகள், தக்க உரிமைகள், அனுகூலங்கள், சார்ந்த வைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றை எவ்விதமாகவும் சார்ந்துள்ள அல்லது அவற்றுடன் இதற்கு முன் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட அவைகளின் எதையேனும், கடைசியாகச் சொல்லப் பட்ட மேற்படி இடத்திலும் அதன் பேரிலும் இரண்டாம் தரப்பினருக்குள்ள அவ்விதமான உடைமை, உரிமை, உரிமைமூலம், பற்று, உடைமை கேட்புரிமை, கேட்பு ஆகிய எல்லாவற்றையும் ஊராட்சிக்கு இதனால் வழங்கி கொடுத்து ஒப் படை செய்கிறார் ; ஊராட்சிக்கு இதனால் வழங்கி, கொடுத்து ஒப்படை செய் யப்பட்டதாக இதில் முன்னால் கடைசியாய்ச் சொல்லப்பட்ட மேற்படி நிலம் அல்லது பாகத்தையும் இடத்தையும் என்றென்றும் பெற்றுக் கைப்பற்றில் வைத்திருப்பதற்காக அவ்வாறு வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்கிறார் ; மேலும் ஊராட்சி இரண்டாம் தரப்பினருடன் இதனால் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்றால், ஊராட்சி இனிமேல் எல்லாக் காலங்களிலும், மைய அரசினால் அல்லது தமிழ்நாடு அரசால் அல்லது ஒரு உள்ளாட்சி அல்லது வேறு அதிகாரிக் குழுவினால் மேற்படி நிலம் அல்லது பாகம் அல்லது இடத்தின் மீது விதிக்கப்படுகிற அல்லது அவ்வப்போது விதிக்கப் படக் கூடிய தீர்வைகளையும் வரிகளையும் செலுத்தும் ; அன்றியும் இதில் தொடர் புடைய இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் ஒப்பந்தம் செய்து கொண்டு, ஒவ்வொருவரும் தங்களில் மற்றவருடன் உடன்படிக்கை செய்து கொள்வது என்னவென்றால்,—

இதற்கு மாறாக எந்தச் செயல் செய்யப்பட்டிருந்தபோதிலும் எந்த ஒப்பா வணம் எழுதப்பட்டிருந்தபோதிலும் எந்தக் காரியம் தெரிந்திருந்தே நடக்க விடப்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, மேற்சொன்ன விதமாக இதனால் வழங்கி, கொடுத்து ஒப்படை செய்வதாகச் சொல்லப்படும் மேற்படி இடங்களை முறையே வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்ய அவர்களுக்கு இப்போது நல்ல உரிமை இருக்கிறது ; இரு தரப்பாரில் எவரேனும் இனிமேல் எல்லாக் காலங்

களிலும், மற்றத் தரப்பினரிடமிருந்து அல்லது அந்தத் தரப்பினர் மூலமாக அல்லது அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாகச் சட்டப்படி அல்லது நியாயமாய் உரிமை கொண்டாடும் ஒருவர் அல்லது பலரிடமிருந்து அல்லது அவர்களால் எவ்விதமாகவேனும் சட்டப்படி வெளியேற்றப் பெரு மலும், தடுக்கப்படாமலும், கேட்புரிமை கொண்டாடப் பெருமலும் அல்லது கேட்பு கேட்கப் பெருமலும், இரு தரப்பினரில் ஒருவரால் அல்லது மேற் சொன்னவாறு சட்டப்படி அல்லது நியாயமாக உரிமை கொண்டாடும் ஒருவர் அல்லது பலரால் உண்டாக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட எவ்வித சகல வில்லங்கங்களும் இல்லாமலும் கடைசியாகச் சொன்ன மேற்படி இடத்தைச் சமாதானமாகவும் அமைதியாகவும் சுவாதீனத்தில் வைத்துக் கொண்டு, அனு பவித்து அவற்றின் வாடகைகளேயும் ஆதாயங்களேயும் பெற வேண்டியது மல்லாமல், அவ்வாறெல்லாம் செய்யவும் செய்யலாம், மேலும் இரு தரப்பினரும், அத்தரப்பினர்களில் ஒருவரிடமிருந்து அல்லது அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொருப்பாக மேற்படி இடத்தில் அல்லது அதன் ஏதேனும் பாகத் தில் உரிமை அல்லது பற்றினே உடைய அல்லது சட்டப்படி அல்லது நியாயமாய் அதற்கு உரிமை கொண்டாடும் எல்லாரும், அவ்வப்போதும் இனிமேல் எல்லாக் காலங்களிலும் மற்றத் தரப்பினர் கேட்டுக் கொள்வதன் பேரிலும் அவர் செல விலும், நியாயமாகத் தேவைப்படக் கூடியபடி மேற்கொள்ளுமாறு கடைசியாகச் சொன்ன மேற்படி இடத்தையும் அதன் ஒவ்வொரு பாகத்தையும் மற்றத் தரப்பினருக்கு இன்னும் அதிக நிறைவாகக் கிடைக்கும்படி செய்யும் பொருட்டு, எவ்விதமான எல்லாச் செயல்களேயும் ஒப்பாவணங்களேயும் காரியங்களேயும் செய்து எழுதிப் பதிவு செய்யவேண்டும், அல்லது செய்வித்து— எழுதுவித்துப் பதிவு செய்விக்க வேண்டும், அவ்வாறெல்லாம் செய்யவும் செய்விக்கவும் செய்வார்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணே.

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள 'அ' என்று அடையாளமிட்ட உருவரைப் படத்தில் வர்ணமிட்டிருப்பதும் பதிவுத் துறை மாவட்டத்திலே பதிவுத் துறை உள்மாவட்டத்தில் ஊரில் /பேரூரில் இருப்பதும், புதிய நில அளவை எண்ணும் பழைய நில அளவை எண்ணும் கொண்டதும், என்பதற்குத் தெற்கிலும் என்பதற்கு வடக்கிலும் என்பதற்கு மேற்கிலும் என்பதற்குக் கிழக்கிலும் இருப்பதும், அளக்கும் போது அல்லது ஏறத்தாழ அவ்வளவு இருப்பதுமான நிலம் அல்லது பாகம் எல்லாம்.

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள 'ஆ' என்று அடையாளமிட்ட உருவரைப் படத்தில் வர்ணமிட்டிருப்பதும், பதிவுத் துறை மாவட்டத்திலே பதிவுத் துறை உள்மாவட்டத்தில் ஊரில்/பேரூரில் இருப்பதும், புதிய நில அளவை எண்ணும் பழைய நில அளவை எண்ணும் கொண்டதும் என்பதற்குத் தெற்கிலும் என்பதற்குக் வடக்கிலும் என்பதற்கு கிழக்கிலும் என்பதற்கு மேற்கிலும் இருப்பதும், அளக்கும்போது அல்லது ஏறத்தாழ அவ்வளவு இருப்பதுமான நிலம் அல்லது பாகம் எல்லாம்.

ஊராட்சியின் போது முத்திரை முன்னிலையில் இதில் போடப்பட்டது.

ஊராட்சியின் செயல் அதிகாரியால் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால் முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரை போட்டு ஒப்புவிக்கப்பட்டது.

இதற்குச் சான்ருக, மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் நாளிலும் ஊராட்சியின் பொது முத்திரை இதில் போடப்பட்டது; இரண்டாம் தரப்பினர் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிருர்.

படிவம் II (இ).

அடைமானம் மூலம் மாற்றம்.

19 ஆண்டு மாதம் நாளில் (இதில் பின்னல் "அடைமானம் வைப்பவர்" என்ற இச்சொற்ருெடரில் சந்தர்ப்பம் இடங் கொடுக்குமானல் அதனுடைய வழியுரிமை பெற்றவர்கள் அதன் உரிமையாளர் கள் என்பதும் அடங்கும். (1958)-ஆம் ஆண்டின் XXXV -ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஊராட்சிக்கும், (இதில் பின்னல் "அடைமானம் பெறுபவர்" என்ற இச்சொற்ருெடரில் சூழ்நிலை இடங்கொடுத் தால் அவருடைய வழிமுறையினர் நிறைவேற்றுபவர்கள் ஆட்சியாளர்கள் சட்டச் சார்பாளர் உரிமையாளர்கள் என்பதும் அடங்கும்). ல் வசிக்கிற என்பவர் மகனுகிய என்பவருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை என்னவென்ருல் :—

அடைமானம் வைப்பவருக்கு, இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை யில் விவரிக்கப்பட்டிருக்கிற நிலம் அல்லது பாகம், இடம் பற்றி உண்மையாக

நல்ல உரிமை இருக்கிறபடியாலும், அவைகள் அவர் சுவாதீனத்தில் இருக்கிற படியாலும்,

அடைமானம் பெறுபவர் ரூபாய் உள்ள தொகை இதில் பின்னால் கண்டுள்ள விதமாக ஈடு செய்யப்பட்டு, இதில் பின்னால் சொல்லப்பட்டிருக்கிற வீதப்படி வட்டியுடன் திருப்பிச் செலுத்தப்படுமென்னும் நிபந்தனையின் பேரில் அத்தொகையை அடைமானம் வைப்பவருக்குக் கடனாகக் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறபடியாலும்,

இதில் பின்னால் கண்டுள்ள விதமாக உடைமைகளை அடைமானம் வைக்க. 19 ஆண்டு மாதம் நாளிட்ட எண் ஆணை மூலமாக மாவட்ட ஆட்சியாளர் வழங்கியிருக்கிறபடியாலும்,

* இதில் பின்னால் கண்டுள்ள விதமாக அந்த உடைமைகளை அடைமானம் வைக்க, 19 ஆண்டு மாதம் நாளிட்ட எண் ஆணை மூலமாகத் தமிழக அரசாங்கத்தாரும் ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்,

இதில் பின்னால் கண்டுள்ள விதமாக அடைமானம் வைப்பதைக் குறித்து அதற்குத் தொடர்பான விதிகளில் கண்ட ஏற்பாடுகளின்படி முறையாக அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறபடியாலும்,

இப்போது இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்னவென்றால், இந்தப் பத்திரம் எழுதப்பட்டு அல்லது அதற்கு முன், அடைமானம் பெறுபவர் அடைமானம் வைப்பவருக்கு ரூபாயுள்ள தொகை கொடுத்திருப்பதைக் கருதி (அதைப் பெற்றுக் கொண்டதாக அடைமானம் வைப்பவர் இதனால் ஒப்புக் கொள்கிறார்), அடைமானம் வைப்பவர் அடைமானம் பெறுபவருடன் இதனால் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்றால், அடைமானம் வைப்பவர், கேட்கப்படுவதன் பேரில், ரூபாயுள்ள தொகையையும் அதன் மீது ஆண்டு ஒன்றுக்கு நூற்றுக்கு ரூபாய் வீதப்படி வட்டியையும் அடைமானம் பெறுபவருக்குச் செலுத்த வேண்டும்.

அன்றியும் இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்னவென்றால், அதனையே கருதி, அடைமானம் வைப்பவர் ல் இருப்பதும் இதில் பின்னால் எழுதப்பட்டுள்ள அட்டவணையில் இன்னும் விபரமாகச் சொல்லப்பட்டிருப்பதுமான நிலம் அல்லது பாகம் எல்லாவற்றையும் அதில் எழுப்பப்பட்டுள்ள

* மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால் மாத்திரம் இதை வைத்துக் கொள்ளவும்.

குடியிருப்பு வீடு அல்லது குடியிருப்புடன் சேர்ந்து இதற்குச் சாதாரணமாக என்று பெயர் அவற்ருேடு கூட மேற்படி நிலம் அல்லது பாகம் குடியிருப்பு வீடு இடம் ஆகியவற்றுடன் எவ்விதமாகவும் சேர்ந்துள்ள கட்டிடங்கள், கிடங்குகள், மரங்கள், பொது நிலங்கள், எல்லைக் குறு மர வரிசைகள், பள்ளங்கள், வேலிகள், வழிகள், நீர் நிலைகள், நீர்க்கால்கள், உரிமைகள், சலுகைகள், பழக்க உரிமைகள், அனுகூலங்கள், சார்ந்தவைகள் எல்லாவற்றையும், அல்லது அதை எவ்விதமாகவும் சார்ந்துள்ள அல்லது அதனுடன் இதற்கு முன் அல்லது இனிமேல் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட அல்லது வைத்துக் கொள்ளப்படும் அவைகளில் எதையேனும், அந்த இடத்திலும் அதன் பேரிலும் அடைமானம் வைப்பவருக்குள்ள எவ்விதமான உடைமை உரிமை—உரிமை மூலம்—பற்று உடைமை கேட்புரிமை, கேட்பு ஆகிய எல்லாவற்றையும் அடைமானம் பெறுபருக்கு சாதாரண அடைமானமாக இதனுல் கொடுத்து வழங்குகிருர்; அன்றியும் அடைமானம் வைப்பவர் அடைமானம் பெறுபவருடன் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்ருல், அடைமானம் வைப்பவர் இப்பத்திரத்தின் ஈட்டின் பேரில் ஏதேனும் பணம் இன்னும் சேர வேண்டியதாயிருக்க வரையில், இதனுல் வழங்கிக் கொடுத்து, ஒப்படை செய்யப் படுவதாக இதில் முன்னுல் சொல்லப்பட்ட மேற்படி இடத்தில் பேரில் இப்போதுள்ள அல்லது இனிமேல் எழுப்பப்படப் போகும் குடியிருப்பு வீடுகள் கட்டிடங்கள் எல்லாவற்றையும் நல்ல திடமான நிலையில் செப்பனிட்டு வைத்திருக்க வேண்டும்; நெருப்பினுல் இழப்பு அல்லது சேதம் நேரிடுவதை முன்னிட்டு குறைந்தது ரூபாயுள்ள தொகைக்கு அடைமானம் பெறுபரால் ஒப்புக் கொள்ளப்படும் அலுவலகம் அல்லது அலுவலகங்களில் அவர் பெயர் அல்லது பெயர்களில் அவற்றை ஈட்டுறுதி செய்துவைக்கவேண்டும்; அதன் பொருட்டு அந்த ஈட்டுறுதி அமலில் இருக்கும்படி செய்யும் பொருட்டும் அவசியமான எல்லாத் தவணைக் கட்டணங்களையும் பணத் தொகைகளையும் கிரமப்படிக் காலந்தவருமல் செலுத்திவிட வேண்டும்; மேற்படி இடங்கள் அல்லது அவைகளில் யாதொன்று சம்பந்தமாக அந்தந்த காலத்தில் செலுத்தப்படத்தக்க அல்லது அவைகள் மீது அந்தந்த காலத்தில் பொறுப்பாக ஏற்படுத்தப் பட்டுள்ள விடுவரி, தீர்வை, வீதங்கள், வரிகள், மற்றச் செலவுகள் ஆகிய எல்லாவற்றையுங் கூட முறைப்படி காலந்தவருமல் செலுத்திவிட வேண்டும்; ஈட்டுறுதி பத்திரம் அல்லது ஒப்பாவணங்களையும் மேற்சொன்னவாறு செலுத்தப்படத்தக்க ஒவ்வொரு தொகைக்குமான பற்றுச் சீட்டையும் அடைமானம் பெறுபவரிடம் உடனே ஒப்புவித்துவிட வேண்டும் அல்லது மேற்சொன்னவாறு பத்திரம் அல்லது பத்திரங்களை அல்லது பற்றுச் சீட்டினை அவ்வாறு ஒப்பளிக்கும் வகையில், அடைமானம் பெறுபவர் அந்த இடத்திலும் அதன் மேலும் நுழைந்து, அதைச் செப்பனிட்டு

நல்ல திடமான நிலையில் வைப்பது அல்லது (சந்தர்ப்பத்துக் கேற்ப) மேற்சொன்ன தொகைக்கு மேற்படாத ஒரு தொகைக்கு அக்கட்டிடங்களை ஈட்டுறுதி செய்து அந்த ஈட்டுறுதி அமலில் இருக்கும்படி செய்து தவணைக் கட்டணங்களையும் அவ்வாறு செய்வதற்குப் பிடிக்கும் எல்லாச் செலவுகளையும் அல்லது (சந்தர்ப்பத்துக்கேற்ப) மேற்சொன்னவாறு அத்தகைய ஏதேனும் விடுவரி தீர்வை வீதங்கள் வரிகள் அல்லது மற்றச் செலவுகளைச் செலுத்துவது சட்ட சம்மதமாகும்; ஆனால் இப்படியெல்லாம் செய்ய அவர் கடமைப்பட்டவர் ஆகமாட்டார்; அன்றியும் அடைமானம் வைப்பவர் அத்தகைய தவணைக் கட்டணங்கள் செலவுகள் மற்றப்பணங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொரு தடவையும் தொகை செலுத்திய காலத்திலிருந்து மேற்சொன்ன வீதப்படி அவற்றின் மீதான வட்டியையும் அடைமானம் பெறுபவருக்கு உடனே திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்; அவ்வாறு திருப்பிக் கொடுக்கிற வரையில் இதனால் அடைமானம் வைக்கப்படும் இடத்தின்மீது திருப்பிச் செலுத்த வேண்டிய தொகையும் மேற்சொன்ன வீதப்படி அதன் மீதான வட்டியும் பொறுப்பாக ஏற்றப்படும்; ஈட்டுறுதி சம்பந்தமாய்ப் பெற்றுக் கொள்ளப்படும் எல்லாப் பணங்களையும் அடைமானம் பெறுபவரின் விருப்பப்படி ஈட்டுறுதி செய்யப்பட்ட கட்டிடங்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு அல்லது இப்பத்திரத்தின் ஈட்டின் பேரில் அந்தந்த காலத்தில் பாக்கியாயிருக்கிற பணம் செலுத்துவதில் அல்லது செலுத்துவதற்குப் பயன்படுத்தவேண்டும்; மேலும், அடைமானம் வைப்பவர் அடைமானம் பெறுபவருடன் இதனால் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்றால்—அடைமானம் பெறுபவருக்குச் சாதாரண அடைமானத்தைக் கொடுக்கவும் வழங்கவும் அடைமானம் வைப்பவருக்குப் இப்போது அதிகாரம் உண்டு; அன்றியும், இதன் மூலம் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு அறிவிப்பது என்னவென்றால் . . . .இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டிருக்கிற உடைமைகளை விற்றால், இந்த அடைமானத்தின்படி சேர வேண்டிய தொகையைக் கொடுப்பதற்கு அவை போதுமானவையாயிராவிட்டால், இந்த அடைமானத்தின்படி அந்தந்த காலத்தில் சேர வேண்டியதாகவும் பாக்கியாகவும் உள்ள தொகைக்காக அடைமானம் வைப்பவர் நேரில் பொறுப்பாளியாவார்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

பதிவுத் துறை மாவட்டத்திலே

பதிவுத் துறை உள் மாவட்டத்தில் ஊரில்/

பேரூரில் இருப்பவையும் என்பதற்குத்

தெற்கிலும் என்பதற்கு வடக்கிலும்

என்பதற்கு மேற்கிலும் என்பதற்குக்
கிழக்கிலும் உள்ளவையும் புதிய நில அளவை எண்ணும்
பழைய நில அளவை எண்ணும்
கொண்டவையும், அளக்கும்போது மொத்தத்தில் (ஏறத்தாழ)
உள்ளவையுமான நிலம் அல்லது பாகம் வளவு எல்லாம்.

ஊராட்சியின் செயல் அதிகாரியால்
முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

ஊராட்சியின் போது முத்திரை
முன்னிலையில் இதில் போடப்பட்டது.

இதற்குச் சான்ருக மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும், நாளிலும், அடைமரனம் வைப்பவரின் பொது முத்திரை இதில் போடப்பட்டது.

படிவம் II (ஈ)

நன்கொடை மூலமாக மாற்றம்.

19 ஆண்டு மாதம்
நாளில் (இதில் பின்னுல் 'கொடை அளிப்பவர்' என்ற இச்சொற்ருெடரில் சந்தர்ப்பம் இடங்கொடுக்குமாளுல் அதனுடைய வழியுரிமை பெற்றவர்கள் அதன் உரிமையாளர்கள் என்பதும் அடங்கும்) 1958-ம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட
ஊராட்சிக்கும் (இதில் பின்னுல் "கொடை பெறுபவர்" என்ற இச் சொற்ருெடரில் சந்தர்ப்பம் இடங்கொடுக்குமாளுல் அவருடைய வழிமுறையினர் நிறைவேற்றுபவர்கள் ஆட்சியாளர்கள் சட்டச் சார்பாளர்கள் உரிமையாளர்கள் என்பதும் அடங்கும்).

இல் வசிக்கிற
என்பவரின் மகனுகிய என்பவருக்கும் ஏற்பட்ட
இந்த உடன்படிக்கை என்னவென்ருல் :—

இதில் பின்னுல் விவரிக்கப்பட்டிருப்பவையும் இதன் மூலம் வழங்கி. கொடுத்து, ஒப்படை செய்யக் கருதியிருப்பவையுமான நிலம், இடம் ஆகியவை பற்றி, கொடை அளிப்பவர்கள் வில்லங்கள் இல்லாமல் போதிய அளவு நன்ருக உரிமை பெற்றிருக்கிறபடியாலும்,

மேற்படி நிலம், இடம் சம்பந்தமாக இப்போதைய வருங்காலத்திய வரிகள். செலவுகள், தீர்வைகள், மனைத் தீர்வை எல்லாவற்றையும் கொடை பெறுபவர் செலுத்துவதிற்குட்பட்டு, கொடை அளிப்பவர் அவற்றைக் கொடை பெறு

பவருக்கு காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்காக நன்கொடையாய் மாற்ற ஒப்புக்கொண்டிருக்கிறபடியாலும், கொடை பெறு பவர் அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி நிலம், இடம் இனங்களை ஏற்றுக் கொள்ள உடன்பட்டிருக்கிறபடியாலும்,

முத்திரை வரியினிமித்தம் மேற்படி நிலம், இடம் ரூபாய் மதிப்புள்ளதாயிருக்கிறபடியாலும்,

இதில் பின்னால் கண்டுள்ள உடைமையை நன்கொடையாகத் தருவதற்கு ஆண்டு மாதம் நாளிட்ட எண் ஆணை மூலமாக மாவட்ட ஆட்சியாளர் ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்,

இதில் பின்னால் கண்டுள்ள விதமாக நன்கொடை அளிப்பதைப் பற்றி அதற்குத் தொடர்பான விதிகளில் கண்ட ஏற்பாடுகளின் பிரகாரம் முறைப்படி அறிக்கை கொடுத்திருக்கிறபடியாலும்,

* இதில் பின்னால் கண்டுள்ள உடைமையை நன்கொடையாகத் தருவதற்கு ஆண்டு மாதம் நாளிட்ட எண் ஆணை மூலமாக, தமிழ் நாடு அரசாங்கத்தாரும் ஒப்பளிப்பு வழங்கியிருக்கிற படியாலும்,

இப்போது இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்னவென்றால்.— நில அளவை எண் கொண்டதும் பதிவுத் துறை மாவட்டத்திலே பதிவுத் துறை உள்மாவட்டத்தில் ஊரில் இருப்பதும், இதன்கீழ் எழுதப் பட்டிருக்கிற அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டிருப்பதுமான நிலம் அல்லது பாகம் எல்லாவற்றையும் அவற்றோடு கூட மேற்படி நிலம் அல்லது பாகம் சம்பந்தமாக கட்டிடங்கள் இடம் ஆகியவற்றுடன் எவ்விதமாக வும் சேர்த்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பொது நிலங்கள், எல்லைக் குறுமா வரிசைகள், பள்ளங்கள், வேலிகள், வழிகள், நீர்நிலைகள், நீர்க்கால்கள், உரிமை கள், சலுகைகள், வழக்க உரிமைகள், அனுகூலங்கள், சார்ந்தவைகள் எல்லா வற்றையும் அல்லது அவற்றை எவ்விதமாகவும் சார்ந்துள்ள அல்லது இதற்கு முன் ஆட்சியில் அல்லது அனுபோகத்தில் வைத்துக் கொள்ளப்பட்ட அவை களில் எதையேனும், மேற்படி, இடத்திலும் அதன் பேரிலும் கொடையளிப்ப வருக்குள்ள எவ்விதமான உடைமை, உரிமை, உரிமை மூலம் பெற்று சொத்து கேட்புரிமை கேட்பு எல்லாவற்றையும் கொடை அளிப்பவர் கொடை பெறுப

---

*மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால் மாத்திரம் இந்த வைத்துக் கொள்ளவும்.

வருக்கு அளித்து வழங்கி கொடுத்து ஒப்படை செய்கிறுர் ; கொடை பெறுபவர் அவற்றை இதன் மூலம் ஏற்றுக்கொள்கிறுர் ; கொடை பெறுபவருக்கு இதனுல் வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்யப்பட்ட மேற்படி நிலம் அல்லது பாகம் இடம் இவைகளைப் பெற்று என்றென்றும் கைப்பற்றில் வைத்திருப்பதற்காக அவ்வாறு அளித்து, வழங்கி, கொடுத்து, ஒப்படை செய்கிறுர்; மேலும் கொடை அளிப்பவர், கொடை பெறுபவருடன் இதனுல் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்ருல், மேற்சொன்னவாறு கொடை பெறுபவருக்கு இதனுல் கொடுத்து, வழங்கி, ஒப்படை, செய்யப்பட்ட இடத்தை, வழங்கி, கொடுத்து, ஒப்படை, செய்ய கொடை அளிப்பவருக்கு இப்போது நல்ல உரிமை இருக்கிறது ; அன்றியும் கொடை பெறுபவர் இனிமேல் எல்லாக் காலங்களிலும் கொடை அளிப்பவரிடமிருந்து அல்லது அவரால் எவ்விதமாகவும் சட்டப்படி வெளியேற்றப் பெருமல் இடையூறு செய்யப்பெருமல் பாத்தியதை அல்லது கேட்பு கேட்கப் பெருமல் எவ்விதமான சகல வில்லங்களும் இல்லாமல் சமாதான மாகவும் அமைதியாகவும் அந்த இடத்தை சுவாதீனப்படுத்தி அனுபோகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது மல்லாமல், அவ்வாறு வைத்துக் கொள்ளவும் செய்யலாம் ; மேலும் ; கொடை அளிப்பவரும், கொடை அளிப்பவரிடமிருந்து அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாகி மேற்படி இடத்தில் அல்லது அதன் பாகத்தில் உரிமை அல்லது பாத்தியதையை உடைய அல்லது சட்டப்படி அல்லது நியாயமாக உரிமை கொண்டாடிக் கேட்கும் எல்லாரும் அவ்வப்போதும் இனிமேல் எல்லாக் காலங்களிலும் கொடை பெறுபவர் கேட்டுக் கொள்வதன் பேரிலும் அவர், செலவிலும், மேற்சொன்னவாறு அல்லது நியாய மாகத் தேவைப்படுகிறபடி அல்லது தேவைப்படக் கூடியபடி அந்த இடத்தை யும் அதன் ஒவ்வொரு பாகத்தையும் கொடை பெறுபவருக்கு இன்னும் அதிக நிறைவாக கிடைக்கும்படி செய்யம் பொருட்டு எவ்விதமான எல்லாச் செயல்களையும் ஒப்பாவணங்களையும், காரியங்களையும் செய்து எழுதிப் பதிவு செய்யவேண்டும், அல்லது செய்வித்து எழுதுவித்துப் பதிவு செய்விக்க வேண்டும். அவ்வாறெல்லாம் செய்யவும் செய்விக்கவும் செய்வார்கள் ; கொடை பெறுபவர் அளிப்பவருடன் இதனுல் ஒப்பந்தம் செய்துகொள்வது என்ன வென்ருல் அவர் இனிமேல் எல்லாக் காலங்களிலும் மேற்சொன்ன நிலம் இடம் சம்பந்தமாகச் செலுத்தப்படத்தக்க தற்போதைய வருங் காலத்திய சகல வரிகளையும் அல்லது செலவுகளையும் தீர்வைகளையும் ரூபாய் மனைத் தீர்வைய்யும் அல்லது வரியையும் அல்லது மைய அரசாங்கத்தின் அல்லது தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியாளரால் அந்த நிலம் அல்லது பாகத்தின் மீது அவ்வப்போது அந்த முறைமையில் விதிக்கப் படக் கூடிய தொகையையும் ஏற்றுக் கொண்டு செலுத்திக்கொடுத்துத் தீர்க்க வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை.

பதிவுத் துறை மாவட்டத்திலே பதிவுத் துறை
உள்மாவட்டத்தில் ஊரில்/
பேரூரில் இருப்பவையும், என்பதற்குத் தெற்கிலும்
என்பதற்கு வடக்கிலும்
என்பதற்கு மேற்கிலும் என்பதற்குக் கிழக்கிலும்
இருப்பவையும், நில அளவை எண் கொண்டவையும்,
அளக்கும் போது மொத்தத்தில் அல்லது ஏறத்தாழ அவ்வளவு

இருப்பவையுமான நிலம் அல்லது பாகம் இடம் எல்லாம்
ஊராட்சிச் செயல் அதிகாரியால்
முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால்
முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரை போட்டு ஒப்புவிக்கப்பட்டது.
ஊராட்சியின் போது முத்திரை முன்னிலையில் இதில்

போடப்பட்டது.

இதற்குச் சான்ருக மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் நாளிலும் கொடை அளிப்பவராகிய ஊராட்சியின் பொது முத்திரை இதில் போடப்பட்டது; கொடை பெறுபவர் இதில் தமது கையெழுத்தையும் முத்திரையையும் போட்டிருக்கிருர்.

அட்டவணை III

படிவம் XI (அ).

[4 (ii) 5 (ii) விதிகளைப் பார்க்கவும்]

குத்தகை மூலமாக மாற்றம்.

19 ஆண்டு மாதம்
நாளில் (இதில் பின்னுல், "குத்தகைக்கு விடுபவர்" என்ற இச்சொற்ருெடரில் சூழ்நிலை இடங் கொடுக்குமாஞல் அதனுடைய வழியுரிமை பெற்றவர்கள், உரிமையாளர்கள் என்பவையும் அடங்கும்) 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின் படி அமைக்கப்பட்ட . . ஊராட்சிக்கும், (இதில் பின்னுல் "குத்தகைதாரர்" என்ற இச்சொல்லில் சந்தர்ப்பம் இடம்

கொடுக்குமானால் அவருடைய வழிமுறையினர் நிறைவேற்றுபவர்கள் ஆட்சியாளர்கள் சட்டச் சார்பாளர்கள் அனுமதிக்கப்பட்ட பெற்று உரிமையாளர்கள் என்பவையும் அடங்கும்), ஆகத் தொழில் நடத்திக் கொண்டு -ல் வசிக்கிற என்பவரின் மகனாகிய என்பவருக்கு ஏற்பட்ட இந்த உடன்படிக்கை என்னவென்றால் :—

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள முதலாவது அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப்பட்டுள்ள உடைமையை இதில் பின்னால் கண்டுள்ள கால அளவுக்கும் விதப்படியுள்ள வாடகைக்குட்பட்ட வரையறைகள் நிபந்தனைகளுக்குட்பட்டும், குத்தகைக்கு விடுமாறு குத்தகைதாரர் குத்தகைக்கு விடுபவரைக் கேட்டுக் கொண்டிருக்கிறபடியாலும்,

இதில் பின்னால் கண்டுள்ள விதமாக அந்த உடைமையைக் குத்தகைக்கு விடக் குத்தகைக்கு விடுபவர் ஒப்புக் கொண்டிருக்கிறபடியாலும்,

*(இதனுடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டாவது அட்டவணையில் தனி நிபந்தனைகளின் பேரிலும் அவைகளுக்குட்பட்டும் அந்த உடைமையைக் குத்தகைக்கு விடுவதற்கு ஆண்டு மாதம் நாளிட்ட எண் ஆணை மூலமாக, மாவட்ட ஆட்சியாளர் ஒப்பளிப்பு வழங்கியிருக்கிறபடியாலும்)

அந்த உடைமையைக் குத்தகைக்கு விடுவதைப் பற்றி அதற்குத் தொடர்பான விதிகளில் கண்ட ஏற்பாடுகளின்படி முறையாக அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும்,

இப்போது இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்னவென்றால் :—1. இதனால் ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையைக் கருதியும், இதில் கண்டுள்ள குத்தகைதாரரின் ஒப்பந்தங்களைக் கருதியும், குத்தகைக்கு விடுபவர் குத்தகைதாரருக்கு, என்று வழங்கப்படுவதும், பதிவுத் துறை மாவட்டத்திலே பதிவுத் துறை உள் மாவட்டத்தில் இருப்பதும், நில அளவை எண் கொண்டிருப்பதுமான நிலம் அல்லது பாகம் எல்லாவற்றையும், கட்டிடத்தையும் இடத்தையும் 19 ஆண்டு மாதம் நாளிலிருந்து ஆண்டுக் காலத்துக்கு உரிமை மாற்றிக் கொடுக்கிறார்; அதற்காக, கழிவுத் தொகைகள்

---

* மதிப்பு 10,000 ரூபாய்க்கு மேற்பட்டால் மாத்திரம் இதை வைத்துக் கொள்ளவும்.

எல்லாம் நீங்கலாக ரூபாய் மாத வாடகையை முன்னதாக எல்லாம் கொடுக்கிறார்; 19 ஆண்டு மாதம் நாளன்று முதலாவதாகத் தொகை செலுத்த வேண்டும்.

2. குத்தகைதாரர் குத்தகைக்கு விடுபவருடன் அடியிற்கண்டபடி ஒப்பந்தம் செய்து கொள்கிறார் :—(1) ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையை ஒவ்வொரு மாதத்திலும் முதல் தேதியன்றாவது அதற்கு முன்பாவது மேற்சொன்ன விதமாகச் செலுத்த வேண்டும்.

(2) ரூபாயுள்ள மனைத் தீர்வை அல்லது மைய அரசினரின் அல்லது தமிழ்நாடு அரசினரின் சார்பில் மாவட்ட ஆட்சியாளரால் மேற்படி நிலத் துண்டு அல்லது பாகத்தின் மீது அந்த முறையில் அவ்வப்போது விதிக்கப்படக் கூடிய வேறொரு தொகை உட்பட, மேற்படி இடம் சம்பந்தமாக இப்போதும் இனிமேலும் செலுத்தப்படத்தக்க பொறுப்புகள் தீர்வைகள் செலவுகள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு செலுத்தித் தீர்க்க வேண்டும்.

(4) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட கட்டிடங்களில் குத்தகைக்கு உட்புறத்தையும், அதன் சேர்க்கைகள் எல்லாவற்றையும் அதன் எல்லைச் சுவர்களையும் வேலிகளையும் வடிகால்களையும் நிலத்தையும் மற்றக் குழாய்களையும் துப்புரவு தண்ணீர் ஆய்கருவிகளையும் மின் இசைப்புகளையும் பொருத்தங்களையும் குடியிருக்கத் தக்க நல்ல நிலையில் செப்பனிட்டு வைத்திருக்க வேண்டும்.

(4) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட கட்டிடங்களில் குத்தகைக்கு விடுபவரின் அல்லது அதனிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்ற அலுவலர்களின் எழுத்து மூலமான சம்மதத்தை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், எச்சந்தர்ப்பத்திலும் மாறுதல்கள் செய்யவுங் கூடாது, எவற்றையேனும் சேர்க்கவுங்கூடாது ; அவ்வாறு செய்வதற்கு அல்லது சேர்ப்பதற்கு அனுமதி கொடுக்கவுங்கூடாது, அல்லது ஆனால் எப்போதும் மாறுதல்கள் எவற்றையேனும் செய்யக் குத்தகைக்கு விடுபவராவது அதனிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்ற அலுவலர்களாவது குத்தகைதாரருக்கு அனுமதி கொடுத்திருந்தால், அதற்காக ஈடு எதையும் பெறக் குத்தகைதாரர் உரிமை உள்ளவராகமாட்டார்.

(5) முன்னதாக ஒரு நாள் அறிக்கை கொடுத்து, உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட இடத்தில் நுழையவும், அதன் நிலையைப் பார்க்கவும், நியாயமான எல்லாக் காலங்களிலும் வேலையாட்களுடனோ மற்றவர்களுடனோ அவர்கள்

இல்லாமலோ குத்தகைக்கு விடுபவருக்கும் அதனிடமிருந்து அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கும் அல்லது சார்பாளர்களுக்கும் அனுமதி கொடுக்க வேண்டும்; குத்தகைக்கு விடுபவராவது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற அலுவலர்களாவது அறிக்கை கொடுப்பதன் பேரில் அந்த அறிக்கை சேர்ப்பிக் கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்துக்குள் அதற்கிணங்கச் செப்பனிட வேண்டும்.

(6) ஆய்வாளரால் நிர்ணயிக்கப்பட்டவையும் இதனுடன் இணைக்கப்பட் டுள்ள இரண்டாவது அட்டவணையில் கண்டிருப்பவையுமான வரையறைகளையும் (நிபந்தனைகளையும் கடை பிடித்து நிறைவேற்றவேண்டும்.)

(7) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட இடத்தின் அல்லது அதன் பாகத் தின் சுவாதீனத்தைக் குத்தகைக்கு விடுபவரின் அல்லது அதனிடமிருந்து அதிகாரம் பெற்ற அலுவலர்களின் எழுத்து மூலமான சம்மதத்தை முதலில் பெற்றுக் கொள்ளாமல் ஒப்படை செய்யவும் கூடாது, கீழ்க்குடிக் கூலிக்கு விடவுங்கூடாது, கைவிடவுங்கூடாது.

(8) குடிவாரம் முடிவடைவதன் பேரில், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட இடத்தையும் அதன் எல்லா இணைப்புகளையும் சேர்க்கைகளையும் இதில் அடங் கியுள்ள ஒப்பந்தங்களின்படி குடியிருக்கத் தக்க நல்ல நிலையில் செப்பனிட்டுக் கொடுத்துவிட வேண்டும்.

3. குத்தகைக்கு விடுபவர் குத்தகைதாரருடன் அடியிற்கண்ட படி ஒப்பந்தம் செய்து கொள்கிறார் :—

(1) குத்தகைதாரர் இதனால் ஒதுக்கப்பட்ட வாடகையைக் கொடுத்துக் கொண்டு, தான் ஏற்றுக் கொண்ட இதில் கண்டுள்ள பற்பல உடன்படிக்கைகளை யும், நிபந்தனைகளையும் அனுசரித்துக் கடைப்பிடிக்கும்போது, குத்தகைக்கு விடுபவரிடமிருந்து அல்லது அவருக்குட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப் பாகச் சரியாய் உரிமை கொண்டாடும் ஒருவரிடமிருந்து எவ்வித இடையூறும் இல்லாமல் மேற்படி கால அளவில், உரிமைமாற்றிக் கொடுக்கப்பட்ட இடத்தை அமைதியாக வைத்திருந்து அனுபவிக்கப்பட வேண்டும்.

(2) நியாயமான தேய்வுமாய்வுகளினால் முக்கிய சுவர்களுக்கும் கூரைக்கும் அடிப்படைகளுக்கும் எல்லாச் செப்பனிடுகளையும் செய்ய வேண்டும். அத்தகைய செப்பனிடுகள் அவசியமானவை என்பது பற்றி, அந்தந்த காலத்தில் கோட்ட செயல் பொறியாளரின் தீர்மானம் முடிவானதாகும்.

4. ஆனால் எப்போதும் இதற்குரிய இரு திறத்தாராலும் அவர்களுக்கிடையிலும் இதனால் வெளிப்படையாக உடன்படிக்கை செய்து கொள்ளப்படுவது என்னவென்றால்.—(1) இதனால் ஒதுக்கப்பட்ட வாடகை அல்லது அதன் ஏதேனும் பாகம் (முறைப்படிக் கேட்கப்பட்டாலும் கேட்கப்படாவிட்டாலும்) செலுத்தப்படத் தக்கதாகிவிட்ட பிறகு 14 நாட்கள வரை செலுத்தப்படாமலிருந்தால். அல்லது குத்தகைதாரருடையதென்று இதில் கண்டுள்ள ஏதேனும் ஒப்பந்தம் நிறைவேற்றப்படாவிட்டால் அல்லது அனுசரிக்கப்படாவிட்டால், அல்லது இதனால் உண்டாக்கப்பட்ட வரையறை அந்தந்தக் காலத்தில் எந்தக் குத்தகைதாரரிடம் அல்லது வேறு ஒருவரிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிறதோ அவர் நொடித்துப் போய்விட்டால், அப்போது அப்படிப்பட்டவற்றில் எதிலேனும் குத்தகைக்கு விடுபவர் அல்லது அவரிடமிருந்து அதிகாரம் பெற்ற அலுவலர்கள் அதற்குப் பிறகு எப்போதேனும் உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட இடத்தில் அல்லது முழு இடத்தின் பெயரில் அதன் ஒரு மாதத்தில் மீண்டும் நுழைவது சட்ட சம்மதமாகும்; அதன் பேரில் இந்த உரிமை மாற்றம் முழுமையாக அற்றுப் போய்விடும்; ஆனால் குத்தகைதாரருடையதென்று இதில் கண்டுள்ள உடன்படிக்கைகளில் எதுவேனும் மீறப்பட்டது சம்பந்தமாகக் குத்தகைக்கு விடுபவருடைய செயலுரிமைக்குப் பாதகம் உண்டாகமாட்டாது.

(2) பொதுநலனை முன்னிட்டு இக்குத்தகையை இறுதி செய்துவிடுவது அவசியமென எப்போதேனும் மாவட்ட ஆட்சியாளருக்கு அல்லது குத்தகைக்கு விடுபவருக்கு (த்தோற்றினால் இவருடைய தீர்மானம் முடிவானதாகும்), அந்த மாவட்ட ஆட்சியாளர் அல்லது குத்தகைக்கு விடுபவர், குத்தகைதாரரின் இருப்பிடமென்று கடைசியாகத் தெரிந்துள்ள இடத்துக்கு முகவரியிட்டு அனுப்பப்படும் எழுதியுள்ள அறிக்கை மூலமாக இக்குத்தகையை உடனே ரத்து செய்துவிடுவது சட்ட சம்மதமாகும்; அதன் பேரில் இந்த உரிமை மாற்றம் முழுமையாக அற்றுப் போய்விடும்; அவ்வாறு இறுதி செய்வது சம்பந்தமாக, குத்தகைதாரர் முன்னதாகச் செலுத்தியிருக்கக் கூடிய ஏதேனும் வாடகை விதாசாரப்படிக் குறைக்கப்படுவதைத் தவிர, எவ்வித ஈடும் பெறக் குத்தகைதாரர் உரிமை உள்ளவராகமாட்டார்.

மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை.

பதிவுத் துறை மாவட்டத்திலே பதிவுத் துறை

உள் மாவட்டத்தில் ஊரில்/பேரூரில்

இருப்பவையும் என்பதற்குக் கிழக்கிலும்

என்பதற்கு மேற்கிலும் உள்ளவையும், நில அளவை

என்னும் கதவிலக்கமும் கொண்டவையும், அளக்கும்போது மொத்தத்தில் ஏறத்தாழ உள்ளவையுமான நிலம் அல்லது பாகம் இடம் எல்லாம்

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை.

மாவட்ட ஆட்சியாளரால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள். ஊராட்சி செயல் அதிகாரியால் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

ஊராட்சியின் பொது முத்திரை முன்னிலையில் இதில் போடப்பட்டது.

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரால் முன்னிலையில் கையெழுத்திட்டு முத்திரை போட்டு ஒப்புவிக்கப்பட்டது.

இதற்குச் சான்றாக மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் நாளிலும், குத்தகைக்கு விடுபவராகிய ஊராட்சியின் பொது முத்திரை இதில் போடப்பட்டது; குத்தகைதாரர் தமது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிறார்.

படிவம் 111-(ஆ).

[6 (2) விதியைப் பார்க்கவும்.]

குத்தகை மூலமாக மாற்றம்.

19 ஆண்டு மாதம் நாளில் (இதில் பின்னால், "குத்தகைக்கு விடுபவர்" என்ற இச்சொற்றொடரில் சூழ்நிலை இடங்கொடுக்குமானால் அதனுடைய வழியுரிமை பெற்றவர்கள் உரிமையாளர்கள் என்பதும் அடங்கும்). 1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டத்தின்படி அமைக்கப்பட்ட

ஊராட்சிக்கும் (இதில் பின்னால் "குத்தகைதாரர்" என்ற இச்சொல்லில் சூழ்நிலை இடங்கொடுக்குமானால் அவருடைய வழியுரிமைகள் நிறைவேற்றுப்வர்கள் ஆட்சியாளர்கள் சட்டச் சார்பாளர்கள் அனுமதிக்கப்பட்ட உரிமையாளர்கள் என்ப்தும் அடங்கும்)

ஆகத் தொழில் நடத்தும் ல் வசிக்கிற

என்பவரின் மகனாகிய

என்பவருக்கும் ஏற்பட்ட இந்த உடன்படிக்கை என்னவென்றால்—

குத்தகைதாரர், இதில் பின்னால் கண்டுள்ள காலத்துக்கும் வாடகை வீதப்படியும் வரையறைகளுக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள முதலாவது அட்டவணையில் இன்னும் விவரமாகச் சொல்லப் பட்டிருக்கிற உடைமையைக் குத்தகைக்கு விடும்படி குத்தகைக்கு விடுபவரைக் கேட்டிருக்கிறபடியாலும், குத்தகைக்கு விடுபவர் இதில் பின்னால் கண்டுள்ள விதமாக மேற்படி உடைமையைக் குத்தகைக்கு விட ஒப்புக் கொண்டிருக்கிற படியாலும்,

*(இதில் இரண்டாவது அட்டவணையிலே கண்டுள்ள தனி நிபந்தனைகளின் பேரிலும் அவைகளுக்குட்பட்டும் அந்த உடைமையைக் குத்தகைக்குவிட, ஆண்டு மாதம் நாளிட்ட என் ஆணை மூலமாக மாவட்ட ஆட்சியாளர் ஒப்பளிப்பு வழங்கியிருக்கிற படியாலும்),

அந்த உடைமையின் குத்தகையைப் பற்றி அதற்குச் சம்பந்தப்பட்ட விதிகளில் கண்ட நிபந்தனைகளின் படி முறைப்படி அறிக்கை கொடுக்கப்பட்டிருக் கிறபடியாலும்,

இப்போது இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் என்னவென்றால்.—(1) இதனால் ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையைக் கருதியும், குத்தகைதாரருடைய வையென்று இதில் கண்டுள்ள ஒப்பந்தங்களைக் கருதியும், குத்தகைக்கு விடுபவர், இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் இன்னும் விவரமாகக் கண்டுள்ளதும், சாலைப் பக்கமாக தெரு ஓரமாக உள்ளதுமான நிலம் எல்லாவற்றையும் 19 ஆண்டு மாதம் நாளிலிருந்து ஆண்டுக் காலம் வரையில் குத்தகைதாரருக்கு உரிமை மாற்றிக் கொடுக்கிறார்; அதற்காகக் கழிவுத் தொகைகள் எல்லாம் நீங்க லாக ஒவ்வோர் ஆண்டுக்காகவும் ரூபாய் வாடகை முன்ன தாகச் செலுத்தப்படும்; முதல் தடவையாக 19 ஆண்டு மாதம் நாளன்று அவ்வாறு செலுத்தப்படும்.

2. குத்தகைதாரர் குத்தகைக்கு விடுபவருடன் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்றால்—

(அ) ஒதுக்கி வைக்கப்பட்ட வாடகையை மேற்சொன்னவாறு முன்ன தாக ஒவ்வோர் ஆண்டிலும் . மாதம் முதல் தேதியன்றாவது அதற்கு முன்பாவது செலுத்திவிட வேண்டும்.

---

* அவசியமானால் வைத்துக் கொள்ளவும்.

(ஆ) (ரூபாயுள்ள மனைத் தீர்வை அல்லது மைய அரசினரின் அல்லது தமிழ்நாடு அரசினரின் சார்பில், மாவட்ட ஆட்சியாளரால் அந்த நிலம் அல்லது பாகத்தின் மீது அந்த முறைமையினால் அவ்வப்போது விதிக்கப்படக் கூடிய ஏதாவது தொகை உட்பட) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட அந்த நிலம் சம்பந்தமாகச் செலுத்தப்படத் தக்க தற்போதைய வருங்கால வரிகள், பொறுப்புகள், தீர்வைகள், செலவுகள் எல்லாவற்றையும ஏற்றுக் கொண்டு செலுத்தித் தீர்க்க வேண்டும்.

(இ) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்.

(ஈ) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தில், குத்தகைக்கு விடுபவரின் அல்லது அவரிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்றுள்ள அலுவலரின் எழுத்து மூலமான சம்மதத்தை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல் எச்சந்தர்ப்பத்திலும் மாறுதல்கள் எவற்றையும் செய்யவுங் கூடாது அந்நிலத்துடன் எவைகளையும் சேர்க்கவும் கூடாது, அவ்வாறு செய்வதற்கு அல்லது சேர்ப்பதற்கு அனுமதி கொடுக்கவுங் கூடாது; ஆனால் எப்போதும், எவையேனும் மாறுதல்கள் செய்வதற்கு, குத்தகைக்கு விடுபவராவது அதனிடமிருந்து முறைப்படி அதிகாரம் பெற்றுள்ள அலுவலர்களாவது குத்தகைகாரருக்கு அனுமதி கொடுத்தால், அதற்காக ஏதேனும் ஈடு பெறக் குத்தகைதாரர் உரிமை உள்ளவராக மாட்டார்.

(உ) முன்னதாக ஒரு நாள் அறிக்கை கொடுத்து, உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தில் நுழையவும் அதன் நிலையைப் பார்வையிடவும், நியாயமான எல்லாக் காலங்களிலும், வேலையாட்களுடனே அவர்கள் இல்லாமலோ குத்தகைக்கு விடுபவர்க்கும் அதனிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள அலுவலர்களுக்கும் அல்லது அதன் சார்பாளர்களுக்கும் அனுமதி கொடுக்க வேண்டும்.

(ஊ) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலம் எந்தக்காரியங்களுக்காக குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறதோ அந்தக் காரியங்களுக்காக மாத்திரம் அதைப் பயன்படுத்த வேண்டும்.

(எ) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் சுவாதீனத்தை, குத்தகைக்கு விடுபவரின் அல்லது அதனிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள அலுவலர்களின் எழுத்து மூலமான சம்மதத்தை முன்னதாகப் பெற்றுக் கொள்ளாமல், ஒப்படை செய்யவுங் கூடாது. கீழ்குடிக் கூலிக்கு விடவுங் கூடாது, கைவிடவுங் கூடாது.

(ஏ) உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தை இதில் கண்டுள்ள ஒப்பந்தங்களின் பிரகாரம் நல்ல நிலையில் கொடுத்துவிட வேண்டும்.

3. குத்தகைக்கு விடுபவர் குத்தகைதாருடன் ஒப்பந்தம் செய்து கொள்வது என்னவென்றால், குத்தகைதாரர் இதனால் ஒதுக்கப்பட்ட வாடகையைக் கொடுத்துக் கொண்டு தம்முடையதென்று இதில் கண்டுள்ள பற்பல உடன் படிக்கைகளையும் நிபந்தனைகளையும் அனுசரித்துக் கடைப்பிடிக்கும்போது. குத்தகைக்கு விடுபவரால் அல்லது குத்தகைக்கு விடுபவருக்குக்கட்பட்டு அல்லது அவருக்குப் பொறுப்பாக நியாயமாய் உரிமை கொண்டாடும் ஒருவரால் இடையூறு செய்யப் பெறாமல், மேற்படிக் கால அளவில் உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தை அமைதியாக வைத்திருந்து அனுபவிக்கப் பட வேண்டும்.

4. பொது நலனை முன்னிட்டு உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தின் மீது எழுப்பப்பட்ட ஏதேனும் கட்டுக் கோப்பினை அகற்றிவிடுவது அவசிய மெனக் குத்தகைக்கு விடுபவர் அல்லது மாவட்ட ஆட்சியாளர் கருதினால், குத்தகைதாரருக்கு ஈடு எதுவும் கொடுக்காமலேயே குத்தகைக் கால அளவுக்குள் எப்போதேனும் குத்தகை இறுதி செய்யப்படுவதற்குட்பட்டதாகும்.

5. இதனால் ஒதுக்கப்பட்ட வாடகை அல்லது அதன் ஏதேனும் பாகம் இதில் கண்டுள்ள நிபந்தனையின்படி முறைப்படிக் கேட்கப்பட்டாலும் கேட்கப் படாவிட்டாலும் செலுத்தப்படாமலிருந்தாலும், அல்லது குத்தகைதாரருடையதென்று இதில் கண்டுள்ள ஏதேனும் ஒப்பந்தம் நிறைவேற்றப்படாவிட்டால் நல்லது அனுசரிக்கப்படாவிட்டால், அல்லது குத்தகைதாரராவது இதனால் உண்டாக்கப்பட்ட வரையறை அந்தந்த காலத்தில் வேறு எவர்களிடம் உரித்தாக்கப்பட்டிருக்கிறதோ அவர்களாவது நொடித்துப் போனால், அப்போது அப்படிப்பட்டவற்றில், எதிலேனும், குத்தகைக்கு விடுபவர் அல்லது அதனிடம் அதிகாரம் பெற்றுள்ள அலுவலர்கள் அதற்குப் பிறகு எப்போதேனும் உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தின் மீது அல்லது முழு இடங்கள் பெயரால் அதன் ஒரு பாகத்தின் மீது மீண்டும் நுழைவது சட்ட சம்மதமாகும்; அதன் பேரில் இந்த உரிமை மாற்றம் முழுமையாக அற்றுப்போய்விடும்; ஆனால், குத்தகைதாருடையவையென்று இதில் கண்டுள்ள ஒப்பந்தங்களில் எதுவேனும் மீறப்பட்டது சம்பந்தமாகக் குத்தகைக்கு விடுபவருக்குள்ள செயலுரிமைக்குப் பாதகம் உண்டாக மாட்டாது.

6. இரு தரப்பாரில் ஒருவர் தற்போதைய உரிமை மாற்றத்தை இறுதி செய்ய விரும்பி, அவ்விருப்பத்தைப் பற்றி மறு தரப்பாருக்கு மூன்று நாட்காட்டி (காலண்டர்) மாதங்களுக்கு முன்னதாக எழுத்து மூலமான அறிக்கை கொடுத்தால், அப்போது, அந்த மூன்று நாட்காட்டி (காலண்டர்) மாதங்கள் கழிவானவுடனே, இந்த உரிமை மாற்றமும் இதிலே கண்டுள்ள ஒவ்வொன்றும்

அற்றுப்போய் செல்லாததாகிவிடும்; ஆனால், முந்திய ஏதேனும் பாத்தியதை அல்லது ஒப்பந்தம் மீறல் சம்பந்தமாக இரு தரப்பாரில் ஒருவருக்கு மற்றவர் மீதான பரிகாரங்களுக்குப் பாதகம் உண்டாகமாட்டாது.

7. இந்தக் குத்தகை வழங்கப் பெற்றுள்ள கால அளவு கழிவாவதன் பேரில் குத்தகைக்கு விடுபவர் இக்குத்தகையைப் புதுப்பித்தாலன்றி, அல்லது 4 ஆவது பகுதியின்படி குத்தகை இறுதி செய்யப்பட்டால், குத்தகைதாரர், உரிமை மாற்றிக் கொடுக்கப்பட்ட நிலத்தின் மீதிருக்கிற கட்டுக்கோப்புகள் எல்லாவற்றையும் அகற்றிவிடக் கடமைப்பட்டவராவார். குத்தகை முடிவடைந்த தேதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிவாகிற தேதி அல்லது 4 ஆவது பகுதியின்படிக்கான அறிக்கை வந்து சேர்ந்த தேதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிவாகிற தேதி ஆகிய இவற்றில் எது முந்தியதாயிருக்கிறதோ அதற்குள் குத்தகைதாரர் அந்தக் கட்டுக்கோப்பினை அகற்றத் தவறிப் போனால், குத்தகைக்கு விடுபவர் குத்தகைதாரருக்குத் தெரிவிக்காமலேயே அதை அகற்றுவிக்கலாம்; அவ்வாறு அகற்றுவதற்குப் பிடிக்கும் செலவுக்காகக் குத்தகைதாரர் இதனால் தம்மை உட்படுத்திக் கொள்கிறார்; அவ்வாறு அகற்றப்பட்ட கட்டுக்கோப்புக்காக அல்லது அப்படி அகற்றியதனால் உண்டான ஏதேனும் சேதம் அல்லது இழப்புக்காக ஈடு செய்யும்படி குத்தகைதாரர் கேட்கக் கூடாது.

மேலே குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை.

பதிவுத் துறை மாவட்டத்திலே
பதிவுத் துறை உள்மாவட்டத்தில்
ஊரில்/பேரூரில் இருப்பவையும்,
என்பதற்குத் தெற்கிலும் என்பதற்கு
வடக்கிலும் என்பதற்கு கிழக்கிலும்
என்பதற்கு மேற்கிலும் உள்ளவையும்,
நில அளவை என்னும்
கதவிலக்கமும் கொண்டவையும், அளக்கும்போது மொத்தத்தில் ஏறத்தாழ
உள்ளவையுமான நிலம் அல்லது பாகம்
இடம் எல்லாம்

மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை.

மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியாளரால்
விதிக்கப்பட்ட நிபந்தனைகள்.

ஊராட்சியின் செயல் அதிகாரியான்
முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது.

ஊராட்சியின் பொது முத்திரை முன்னிலையில்
இதில் போடப்பட்டது.

மேலே பெயர் குறிப்பிட்டவரால் முன்னிலையில்
கையெழுத்திட்டு முத்திரை போட்டு ஒப்பளிக்கப்பட்டது.

இதற்குச் சான்றாக, மேலே முதலில் எழுதப்பட்ட ஆண்டிலும் நாளிலும், குத்தகைக்கு விடுபவராகிய ஊராட்சியின் பொது முத்திரை இதில் போடப்பட்டது; குத்தகைதாரர் தனது கையெழுத்தையும் முத்திரையையும் இதில் போட்டிருக்கிறார்.

(1962 பெப்ரவரி 1 ஆம் தேதிய 260 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அரசு ஆணை.)

92. பொதுச் சாலைகள் சந்தைகள் விழாக்கள் ஆகியவற்றை வகைப்படுத்துவது.—1. சிறு பெயர்—இவ்விதிகளை, 1964 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி (பொதுச் சாலைகள் சந்தைகள் விழாக்களின் வகைப்பாட்டு) விதிகள் என்று சொல்லலாம்.

2. பொதுச் சாலைகளை வகைப்படுத்துவது.—ஊராட்சி ஒன்றிய மன்றத்தை அல்லது ஊராட்சியைச் சேர்ந்த ஒரு ஊராட்சிப் பகுதியிலுள்ள பொதுச் சாலைகளை வகைப்படுத்த வேண்டுமென :—

(i) 1964 ஜூலை 1 ஆம் தேதிக்கு முன் ஏற்பட்ட பொதுச் சாலைகளைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சியாளருடனும் (நெடுஞ்சாலைகள்—ஊரகப் பொறியல் பணிகள்) தலைமை பொறியாளருடனும் கலந்தாலோசித்து, கூட்டு வளர்ச்சி ஆணையாளரும்.

(ii) மற்றவற்றில் (நெடுஞ்சாலைகள்—ஊரகப் பொறியியல் பணிகள்) கோட்டப் பொறியாளருடன் கலந்தாலோசித்து, மாவட்ட ஆட்சியாளரும் ஆணையிட வேண்டும்.

3. சந்தைகளையும் விழாக்களையும் வகைப்படுத்துவது.—ஊராட்சி ஒன்றிய மன்றத்தை அல்லது ஊராட்சியைச் சேர்ந்த ஒரு ஊராட்சிப் பகுதியில் சந்தைகளையும் விழாக்களையும் வகைப்படுத்த வேண்டுமென, பொது உடல் நலத் துறை இயக்குநருடன் கலந்தாலோசித்து கூட்டு வளர்ச்சி ஆணையாளர் ஆணையிட வேண்டும்.

4. ஊராட்சி ஒன்றிய மன்றங்களுடனும் ஊராட்சிகளுடனும் கலந்தாலோசிப்பது.—வகைப்படுத்த வேண்டுமென 2, 3 ஆவது விதிகளின்படி ஆணையிடுவதற்கு முன், ஊராட்சி ஒன்றிய மன்றமும் சம்பந்தப்பட்ட ஊராட்சி தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கு நியாயமான வாய்ப்பளிக்க வேண்டும்.

5. வகைப்பாட்டினை சீராய்வு செய்தல்.—கூட்டு வளர்ச்சி ஆணையாளரால் ஆணையிடப்பட்ட வகைப்பாட்டினைப் பொறுத்தவரை அரசாங்கத்தாரும், அதிகார வரம்புக்குள் ஊராட்சிகளைக் கண்காணிக்கும் அலுவலர்களாகவும் தாமே ஆணையிட்ட வகைப்பாட்டினைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சியாளரும், சம்பந்தப்பட்ட மாவட்ட வளர்ச்சி மன்றத்துடன் கலந்தாலோசித்து, வகைப்பாட்டினை சீராய்வு செய்யலாம்.

(1964 டிசம்பர் 1 ஆம் தேதிய 2500 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

93. கள்ளத்தனமாக மரங்களை வெட்டுவது.—ஊராட்சியினிடம் உரிமையாக்கப்பட்டுள்ள சாலை ஓரங்களிலும் நிலங்களிலும் இருக்கிற மரங்கள் கள்ளத்தனமாக வெட்டப்படும் ஒவ்வொரு நேர்விலும் ஊர்த் தலைவர், சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளர் மூலமாக வட்டாட்சியாளருக்கு அறிவிக்க வேண்டும்; அந்த அறிக்கையின் நகல் ஒன்றை செயல் அதிகாரிக்கு அனுப்பவும் வேண்டும். அதன் பேரில் செயல் அதிகாரி, அந்த அறிக்கையின் தேதியிலிருந்து இரண்டு வாரத்துக்குள், அவ்வாறு கள்ளத்தனமாக வெட்டியதற்குப் பொறுப்பு வாய்ந்த ஒருவர் அல்லது பலர் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட அல்லது எடுக்க உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கையைப் பற்றி வட்டாட்சியாளருக்குத் தெரிவிக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட காலத்துக்குள், செயல் அதிகாரியிடமிருந்து, வட்டாட்சியாளருக்குச் செய்தி எதுவும் வராவிட்டால், அவர், இது பற்றி ஊராட்சி நடவடிக்கை எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை யெனத் தெரிந்து கொண்டபிறகு, தாமே அந்தக் குற்றத்தைப் பற்றிப் பொருத்தமான நீதித்துறைக் குற்றவியல் நீதிபதிக்கு முன் குற்றஞ்சாட்ட வேண்டும்.

(1962 பெப்ரவரி 1 ஆம் தேதிய 260 ஆம் எண் ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

94. அறிவிப்புகள் அல்லாத வேறு ஆவணங்களைச் சேர்ப்பிக்கும் விதம்.—(1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட ஏதேனும் விதி, துணைச் சட்டம், ஒழுங்குமுறை அல்லது ஆணையின்படி அறிக்கை அல்லது ஆவணம் ஒன்று ஒருவரிடம் சேர்ப்பிக்க வேண்டியிருந்

தால் அல்லது அவருக்கு அனுப்ப வேண்டியிருந்தால், அடியிற்கண்ட விதமாக அதை அவ்வாறு சேர்ப்பிக்கலாம் அல்லது அனுப்பலாம் :—

அந்த ஆவணத்தை அவரிடம் கொடுப்பது அல்லது கொடுக்கும்படி செய்வது; அல்லது

(ii) அவர் காணப்படாவிட்டால், அவர் கடைசியாக வசித்திருந்ததாக அல்லது தொழில் நடத்தியதாகத் தெரியவரும் இடத்தில் ஆவணத்தைச் சேர்ப்பது அல்லது அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த ஒருவரிடம் அல்லது பணியாளரிடம் அதைக் கொடுப்பது அல்லது கொடுக்கும்படி செய்வது;

(iii) அவர் சந்தர்ப்பத்துக்கேற்ப அந்த ஊரில் அல்லது பேரூரில் வசிக்காமலிருந்து, வேறிடத்தில் அவருடைய முகவரி இன்னதென்று செயல் அதிகாரிக்குத் தெரிந்திருந்தால், அதை அவருக்குப் பதிவு அஞ்சலில் அனுப்புவது அல்லது.

(iv) மேற்சொன்ன வழிகளில் எதுவும் பயன்படா விட்டால், மேற்படி வசிக்குமிடத்தின் அல்லது தொழிலிடத்தின் முதன்மையான ஒரு பாகத்தில் அதை ஒட்டுவது,

(1961 ஏப்ரல் 26 ஆம் தேதிய 1243 ஆம் எண் ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

95. ஊராட்சிகளுக்கு உரியதாக்கப்பட்டுள்ள நிலங்களில் கல்வெட்டியெடுக்கும் உரிமைகளைப் பயன்படுத்துவதை முறைப்படுத்துவது.—1. சிறு பெயர்.— இவ் விதிகளை, 1963 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (ஊராட்சிகளுக்கு உரியதாக்கப்பட்டுள்ள நிலங்களில்) கல்வெட்டியெடுக்கும் உரிமைகளைப் பயன்படுத்துவதை முறைப்படுத்துவது பற்றிய விதிகள் என்று சொல்லலாம்.

2. 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 72 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படியும், 76 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படியும், 84 ஆவது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படியும், 86 ஆவது பிரிவைச் சேர்ந்த (2), (4) உட்பிரிவுகளின்படியும் ஒரு ஊராட்சிக்கு உரியதாக்கப்பட்டுள்ள ஏதேனும் பொது நிலத்தில் கனிப் பொருள்களை அகற்றுவதற்கான அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களிடம் உரியதாக்கப்பட்டுள்ளது.

3. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், மேலே 1 ஆவது விதியின்படி கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒப்புதலுடன், 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சிறு கனிப்பொருள்கள் சலுகை

விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கும் ஒழுங்கு முறைகளுக்கும் உட்பட்டுச் செலுத்த வேண்டும்.

(1963 சூலை 2 ஆம் தேதிய 1400 ஆம் எண் ஊரக வளர்ச்சி-
உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை

(1965 மார்ச் 22 ஆம் தேதிய 697 ஆம் எண் ஊரக வளர்ச்சி-
உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

96. **இணை வளர்ச்சி ஆணையாளர் கூட்டு வளர்ச்சி ஆணையாளர் இவர்களுக்கு அனுப்பும் கேட்புக் கடிதங்களுக்குப் பொருள் கொள்வது.**—(1958 ஆம் ஆண்டின் XXXV ஆவது தமிழ்நாடு சட்டமாகிய) 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட விதிகள், அறிவிக்கைகள், துணைச் சட்டங்கள், ஆணைகள், படிவங்கள் அல்லது திட்டங்களில் இணை வளர்ச்சி ஆணையாளர் அல்லது கூட்டு வளர்ச்சி ஆணையாளர் பற்றிய ஏதேனும் குறிப்பீட்டுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநர் பற்றிய குறிப்பீடு என்று பொருள் கொள்ள வேண்டும்.

(1965 டிசம்பர் 3 ஆம் தேதிய 2585 ஆம் எண் ஊரக வளர்ச்சி-
உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.)

97. **ஊராட்சியில் பெண் உறுப்பினரைச் சேர்த்துக் கொள்ளுதல்.**—ஒரு ஊராட்சித் தலைவரும் துணைத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அவ்வூராட்சியில் பெண் உறுப்பினரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு ஊராட்சியின் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையானது, அவ் வூராட்சியில் பெண் உறுப்பினரைச் சேர்த்துக் கொள்வதற்குப் பொருந்தும்.

(1966 ஜூன் 21 ஆம் தேதிய 1553 எண் ஊரக வளர்ச்சி-
உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசாணை)

(122) 1960 சனவரி 11 ஆம் தேதிய 17 ஆம் எண் ஊரகவளர்ச்சி உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணையில், கோட்ட ஆட்சியாளர்கள் தங்கள் அதிகார வரம்புக்குள் ஊராட்சிக்காக கண்காணிக்கும் அலுவலர்களாகவும் ஆய்வு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஊராட்சிகளை ஆய்வு செய்வதற்காக வினாப் பட்டியலைப் பயன்படுத்துவதில் ஒரு சீரான நடைமுறை எதுவும் அனுசரிக்கப்படவில்லையென அரசாங்கத்தாருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது பற்றி ஒரு சீரான நடைமுறை ஒன்றைப் பின்பற்றுவது விரும்பத்தக்கதென்று அரசாங்கத்தார் கருதுகிறார்கள்.

(2) ஊராட்சிகளை ஆய்வு செய்வதற்காகத் திருத்தியமைக்கப்பட்ட வினுப் பட்டியல் படிவம் ஒன்று இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சிகள் பற்றிய ஆய்வுக் குறிப்புகளைத் தயாரிப்பதற்காக இந்த வினுப் பட்டியலைப் பயன்படுத்தும்படி மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

திருத்தியமைக்கப்பட்ட வினுப் பட்டியல்.

மாவட்டம்

வட்டம்.

ஊராட்சியின் ஆட்சியைப் பற்றி

என்பவருடைய ஆய்வுக் குறிப்புக்கள்.

1. (அ) ஊராட்சியின் பெயர்.

(ஆ) அது இருக்கிற ஊராட்சி ஒன்றியம் பெயர்.

2. ஆய்வு அலுவலரின் பெயரும் பதவிப் பெயரும்.

3. ஆய்வு செய்த தேதி.

4. (என்பவர்) கடைசியாகப் பார்வையிட்ட தேதி.

5. ஆய்வு சம்பந்தப்பட்ட கால அளவு.

6. தலைவர் பெயர்.

7. துணைத் தலைவர் பெயர்.

பாகம் I.

1. அமைப்பு (அறிவிக்கையின் எண்களும் தேதியும்.)
   பேரூராட்சியாக மீண்டும் வகைப்படுத்திய தேதி.

2. அதிகார வரம்பு—
   மக்கள் எண்ணிக்கை.

   பரப்பு

3. ஊராட்சியின் சாதாரண வருமானம்..

4. மீட்டமைப்பு—
தொகுதிகளின் எண்ணிக்கை.

5. (அ) உறுப்பினர்களின் ஒப்பளிக்கப் பட்ட எண்ணிக்கை.

(ஆ) 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 15-ஆவது பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் சொல்லியிருக்கிறபடி தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப் பினர் எவரும் இராவிட்டால், பெண் உறுப்பினர் ஒருவர் சேர்த் துக்கொள்ளப்பட்டிருக்கிருரா?

(இ) அட்டவணையில் கண்ட இனத்தார் களுக்காகவும், அட்டவணையில் கண்ட பழங்குடியினர்களுக்காக வும் இடம் ஏதேனும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதா? அப்படி யாகுல் எத்தனை?

6. சாதாரண அல்லது தற்செயல் தேர் தல்—

(அ) தாமதம் ஏதாகிலும் நேரிட்டதா?

(ஆ) வரி செலுத்தாமைக்காக 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 26(i) பிரிவின்படி தகுதிக்குறைவு ஏதேனும் இருக்கிறதா? இதன் பொருட்டு ஆணையாளரால் நிர்ண யிக்கப்பட்ட பதிவேடு வைத்துவரப் படுகிறதா?

7. கூட்டங்கள்—

(அ) அவசரமானவை, சாதாரணமானவை, தனிப்பட்டவை.

1961 ஜூன் 16-ஆம் தேதிய 1964-ஆம் எண் ஊரக வளர்ச்சி உள் ளாட்சித் துறைப் பல்வகை அர சாங்க ஆணையின்படி ஒவ்வொரு மாதமும் 1-ஆம் தேதிக்கும் 10-ஆம் தேதிக்கும் இடையில்

கூட்டங்கள் நடத்தப்படுகின்றனவா? அடுத்த ஊராட்சி ஒன்றிய மன்றக் கூட்டத்துக்கான பொருள்கள் பொதுவாக விவாதிக்கப்படுகின்றனவா?

அறிவிப்புகள் சரிவரச் சேர்ப்பிக்கப் படுகின்றனவா?

1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 26(ஒ) பிரிவின்படி தகுதி குறைவு ஏதேனும் ஏற்பட்டிருக்கிறதா?

வருகைப் பதிவேடு வைத்து வரப் படுகிறதா?

கூட்டங்களில் முடிவு செய்யப்பட்டவைகளின் சதவீதம் என்ன? ஒத்தி வைக்கப்பட்ட பொருள்கள் பிந்திய கூட்டங்களில் கொண்டு வரப்படுகின்றனவா? கொண்டு வரப்படாவிட்டால் ஏன் கொண்டு வரப்படவில்லை? திட்டம் சம்பந்தமான கூட்டத்துக்கு கிராம அலுவலர்கள் வரவேண்டுமா? அவர்கள் கூட்டத்துக்கு வருகிறார்களா?

(ஆ) நம்பிக்கையின்மைத் தீர்மானம்—அறிக்கைக்குரிய ஆண்டிலே தலைவராவது துணைத் தலைவராவது பதவியிலிருந்து நீக்கப்பட்டாரா?

8. போக்குவரத்து—

சாலைகள் பற்றிய பதிவேடு வைத்து வரப்படுகிறதா?

சாலைகள் தெருக்கள் ஆகியவற்றின் மொத்த நீளம் என்ன (சரளைக் கல் போட்டவை, கற்கல்வை போட்டவை, தார் மேற்பரப்புள்ளவை முதலியன)?

ஊராட்சி ஒன்றியத்தால் ஒப்பளிக்கப்பட்ட ஊர்ப்பணிகள் திட்டத்தின் கீழ் ஊராட்சிப் பணி எதையேனும் செய்து கொண்டிருக்கிறதா? அப்படியானால் முன்னேற்றம் என்ன?

வேறு எந்த ஆதாரத்திலிருந்தேனும் சாலை, பாலங்கள், தரைப பாலங்கள், சிறு பாலங்கள் முதலியவை அமைக்கப்பட்டனவா?

அப்படியானால் விவரங்கள் கொடுக்கவும்.

கடந்த மூன்றாண்டுகளில் பிடித்த செலவு என்ன? ஊர்ப் பணிகள் கொடைத் திட்டத்தின் படி பெற்றுக் கொள்ளப்பட்ட உதவித் தொகை எவ்வளவு?

(வட்டாரத்தின் வகைப் பாட்டினை இங்கே கண்டெழுதவும்) சாலை எந்நிலையில் உள்ளது?

9. ஆக்கிரமிப்புகள்—

(அ) 1958-ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 82 (2) பிரிவில் சொல்லியிருக்கிறபடி ஆக்கிரமிப்புகளைப் பற்றிக் கர்ணம் அறிவிக்கிறாரா? ஊராட்சிகளிடம் உரித்தாக்கப்பட்டுள்ள உடைமைகளைப் பற்றி அச்சட்டத்தில் கண்ட 82(2) பிரிவின்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற ஊராட்சி நடவடிக்கை எடுத்துக்கொள்கிறதா?

(ஆ) ஊராட்சிப் பரப்பு நில அளவை செய்யப்பட்டிருக்கிறதா?

அப்படியானால், ஆக்கிரமிப்புகளைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா?

கடந்த ஆய்வின்போது தீர்வு செய்யப் படாமலிருந்த ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை, கண்டுபிடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை, தீர்வு செய்யப்பட்டவைகளின் எண் ணிக்கை எஞ்சியிருப்பவை.

ஆக்கிரமிப்புகள் பற்றிய பதிவேடு வைத்துவரப்படுகிறதா?

10. விளக்குகள்—

ஊராட்சி பேணி வருகிற விளக்கு களின் எண்ணிக்கை—

மண்ணெண்ணெய் விளக்குகள், பெட்ரோமாக்ஸ் வாயு விளக்குகள் மின விளக்கு, பாதரச விளக்கு, மிகு ஆற்றல விளக்கு, குழல் விளக்கு.

அவை போதுமானவையா?

எல்லாப் பகுதிகளிலும் விளக்கு போடப்பட்டிருக்கிறதா?

கடந்த மூன்றாண்டுகளில் பிடித்த செலவு என்ன?

11. கல்வி—

ஊராட்சிப் பகுதியில் ஊராட்சி ஒன் றிய மன்றத்தினால் வைத்துவரப் படும் பள்ளிகளின் எண்ணிக்கை யும் உதவி பெறும் மற்றப் பள்ளி களின் எண்ணிக்கையும்.

ஊராட்சியில் பள்ளி வயது அடைந் துள்ள சிறுவர்களின் மொத்த எண்ணிக்கை.

எல்லாப் பள்ளிகளிலும் உள்ள மாணவர்களின் மொத்த எண ணிக்கை.

எண்ணிக்கை குறைவாயிருந்தால் அதற்குக் காரணங்கள்,

கட்டாயக் கல்விக்காகவென்று அப் பகுதி அறிக்கையிடப்பட்டிருக் கிறதா?

பள்ளி வயது அடைந்துள்ள சிறுவர் கள் எல்லாருக்கும் கல்வி கற்பிக் கப்படுகிறதா?

கல்வி வசதி போதுமானதாயுள் ளதா?

1960 செப்டெம்பர் 27-ஆம் தேதிய 207ு-ஆம் எண் கல்வி துறைப் பலவகைஅரசு ஆணையில் சொல்லி யிருக்கிறபடி சமுதாயக் கல்விக்குழு ஒன்றை ஊராட்சி அமைத்திருக் கிறதா? அந்த ஆணையில் கட்டளை யிட்டுக்கிறவாறு அக் குழுவில் சார்பாண்மை வழங்கப்பட்டிருக் கின்றனவா?

அக்குழு ஒழுங்காகச் சபை கூடு கிறதா? இல்லையென்றால், என்?

ஒரு மாணவனுக்கு நான்கு காசுக்கு மேற்படாமல் மதிய உணவுத் திட் டத்துக்கு ஊராட்சி ஏதேனும் தொகை உதவுகிறதா?

ஊராட்சி பேணி வருகிற படிப்பகங் களின் எண்ணிக்கை,

சந்தா செலுத்தி வரவழைக்கப்படும் செய்தித் தாள்கள் எவை? படிப்பகம் எங்கே இருக்கிறது.

படிப்பகப் பணியைக் கவனித்துவரும் பணியாளர்களுக்கு ஏதேனும் படி கொடுக்கப்படுகிறதா? அப்படி யானால் எவ்வளவு? ஒப்பளிப்பு பெறப்பட்டிருக்கிறதா?

948-ஆம் ஆண்டின் தமிழ்நாடு நூலகங்கள்சட்டத்தின்படி ஊராட்சி நூலக வரி வசூலித்து, அத் தொகையை ஒழுங்காக உள்ளாட்சி நூலக அதிகாரிக் குழுவினருக்கு அனுப்பி வருகிறதா?

நூலக வரிக்கான கேட்பு—வருல் நிலுவைப் பட்டியல் தருக.

12. பூங்காக்களும் வானொலியும்—

பேணி வரப்படுகின்ற பூங்காக்களின் எண்ணிக்கை.

அவை நன்கு பேணி வரப்படுகின்றனவா?

சிறுவர்களுக்காக ஏதேனும் பூங்கா பேணி வரப்படுகிறதா?

முழு நேர அல்லது பகுதி நேர தோட்டக்காரர் எவரேனும் அமர்த்தப்பட்டிருக்கிறாரா? அப்படியானால் எவ்வளவு சம்பளம் கொடுக்கப்படுகிறது?

வைத்து வரப்படுகிற வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை; அவை செயற்படும் மணி நேரங்கள்; பணியாளர் இருந்தால் அவர்களுக்கு எவ்வளவு படி கொடுக்கப்படுகிறது?

கடந்த நிதி ஆண்டுக்காக வானொலி பேணுவதற்கு கட்டணம் செலுத்தப்பட்டதா?

13. குடிநீர் வழங்கிடு—

கிணறுகள், குளங்கள், ஆறுகள் முதலியவற்றின் எண்ணிக்கை.

குடிநீர் ஆதாரம் அழுக்கடையாமல் தடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா?

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடு இருக்கிறதா?

குடிநீர் வழங்கிடு போதுமானதாகவுள்ளதா?

இல்லையென்றால் என்ன செய்ய லாம்?

கடந்த ஆய்வுக்குப் பிறகு ஊரகப் பணிகள் திட்டத்தின்கீழ்ச் செய் யப்பட்ட பணிகள் யாவை?

கடந்த மூன்றாண்டுகளில் பிடித்த செலவு என்ன?

இந்த ஆண்டில் ஊரகப் பணிகள் கொடையின்கீழ் பெறப்பட்ட கொடை யாது?

தண்ணீர் வரி விதிக்கப்படுகிறதா? அப்படியானால், அந்த வரி விதிப்பதற்காக அரசாங்கத்திட மிருந்து அவசியமான ஒப்பளிப்புப் பெறப்பட்டிருக்கிறதா?

14. பொதுமக்கள் உடல்நலம்—

உடல்நலப் பணியாளர் யாவர்? பாதுகாப்புப் பொருள்கள் யாவை?

அவை போதுமானவையா?

ஊராட்சியில் துப்புரவுப் பிரிவு ஆய் வாளர் இருக்கிறாரா?

துப்புரவுப் பிரிவு ஆய்வாளரின் புற வேலையைப்பற்றி சிறு குறிப்பு கள் வரைக.

துப்புரவுப் பிரிவு ஆய்வாளர் மேலாட்களிடமிருந்து நாட்குறிப்பு களைப் பெற்றுக்கொண்டு ஆய்ந்து பார்க்கிறாரா?

15. வீட்டுக்காரர் துப்புரவு ஏற்பாடு—

வீட்டுக்காரர் துப்புர்வு ஏற்பாட்டுத் திட்டம் அமலில் இருக்கிறதா?

வீட்டுக்காரர் துப்புர்வு ஏற்பாட்டுக் கட்டணங்கள் என்ன விகிதத்தில் விதிக்கப்படுகின்றன?

வீட்டுக்காரர் துப்புரவு ஏற்பாட்டுக் கட்டணங்கள் பற்றிய காலாண்டுக் கேட்பு—வசூல்—நிலுவை விவரப் பட்டியல் வைத்துவரப் படுகிறதா?

பணியாளர் யாவர்?

இந்தத் திட்டம் தன் துணைச் சார்புடையதாயிருக்கிறதா?

வீட்டுப் பட்டியலின்படி இப்பகுதியிலுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது?

இந்தத் திட்டத்தின்கீழ் எத்தனை வீடுகள் இருக்கின்றன?

கடந்த ஆய்வுக்குப் பிறகு பட்டியலில் சேர்க்கப்பட்ட வீடுகள்.

இது சம்பந்தமாக தமிழ்நாடு பொது மக்கள் உடல்நலச் சட்டத்தில் கண்ட 39ஆவது பிரிவின்படி எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

பொதுக் கழிப்பிடங்களின் எண்ணிக்கை.

அவை போதுமானவையா? சரிவர வைத்து வரப்படுகின்றனவா?

16. வடிகால்—

வடிகால் திட்டம் ஏதாகிலும் இருக்கிறதா? அப்படியானால், கழிவு நீரை அப்புறப்படுத்துவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

நகரத் தொல்லைகள் சட்டம் அமலில் இருக்கிறதா?

17. பின்வரும் சட்டங்கள் பொருந்தும்படி செய்யப்பட்டிருக்கின்றனவா? பொருத்தமான பதிவேடுகள் வைத்துவரப்படுகின்றனவா?

(தயவுசெய்து அவைகள் ஒவ்வொன்றையும் பற்றி சிறு குறிப்பு வரைக.)

(அ) பிறப்பு—இறப்புப் பதிவுச் சட்டம்.

(ஆ) தமிழ்நாடு நகர அமைப்புச் சட்டம்.

(இ) 1920ஆம் ஆண்டின் தமிழ் நாடு வட்ட நகராட்சிகள் சட்டத் தின்படிக்கான கட்டிட ஒழுங்குமுறை விதிகள்.

(ஈ) பொதுமக்கள் கூடுமிடங்கள் பற்றிய சட்டம்.
(1958ஆம் ஆண்டின் தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 114-வது பிரிவு.)

18. தொத்து நோய்களும் குறித்த இடத்தில் காணும் கொள்ளை நோய்களும்—

ஊராட்சிப் பகுதியில் கடுமையான கொள்ளை நோய் எதாகிலும் கண்டதா? என்ன தடுப்பு முறைகள் கையாளப்பட்டன?

19. சந்தைகளும் விழாக்களும்—

ஊராட்சிப் பகுதியில் முக்கியமான சந்தைகளும் விழாக்களும் யாவை?

அவை எவ்வாறு அறிக்கையிடப்பட்டுள்ளன? ஊராட்சி விழா என்பதாகவா? ஊராட்சி ஒன்றிய விழா என்பதாகவா? ஊராட்சி விழாவில் விழாவின் போது சாலைச் சுங்கங்கள் விதித்து வாங்க ஊராட்சி அனுமதி பெற்றிருக்கிறதா?

ஊராட்சி துப்புரவு ஏற்பாடுகள் எவற்றையேனும் செய்திருக்கிறதா?

இதன்பொருட்டு ஊராட்சியின் வரவு–செலவு யாவை?

சந்தைகளுக்காகவும் விழாக்களுக் காகவும் துப்புரவு ஏற்பாடுகள் செயயும்பொருட்டு ஊராட்சி நிதி களுக்கு ஏதேனும் சமய நிறு வனத்திலிருந்து தொடரும் அல் லது தொடரா உதவித் தொகை வசூலிக்கப்படுகிறதா? அப்படி யானல் விவரங்கள் கொடுக்கவும்.

20. ஊராட்சி இடுகாட்டையும் சுடுகாட்டையும் வைத்திருக்கிறதா?

தனியார் சுடுகாடும் இடுகாடும் இருக்கின்றனவா?

இருந்தால் அவைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கிறதா?

ஊராட்சி விதித்து வாங்கும் கட்ட ணம் யாது?

21. ஆபத்தானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள்—

(பேரூராட்சிகளுக்கு மட்டும்)

ஆபத்தான, அருவருப்பான தொழில்கள் எல்லாவற்றிற்கும் உரிமம் வழங்கப்பட்டிருக்கிறதா?

மாதப் பட்டியல் பெறப்படுகிறதா?

1958ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் கண்ட 111-வது, 112-வது பிரிவின்படி வேண்டியிருக்கிற அறிக்கை கோட்ட ஆட்சியாளரின் ஒப்புத லுடன் வெளியிடப்பட்டிருக்கிறதா?

வழங்கப்பட்ட உரிமங்களின் எண் ணிக்கை யாது?.

வருமானம் யாது?

உரிமங்கள் பதிவேடு வைத்துவரப் படுகிறதா? தொழில் காரியங் களுக்காக, தனது அதிகாரவரம் புக்குள் குறிப்பிட்ட பகுதிகளை மாவட்ட உடல்நல அலுவலர், நகர அமைப்பு இயக்குநர் ஆகி யோர் ஒப்புதலுடன் ஒதுக்கி வைத்திருக்கிறதா ?

ஊராட்சிகளைப் பொறுத்தவரை அவ் வாறு கண்டுள்ள அறிக்கை ஒன்றை ஊராட்சி ஒன்றியம் வெளியிட்டிருக்கிறதா ?

ஊராட்சிக்குச் சேர வேண்டிய தொகையை ஊராட்சி நிதிகளில் ஒன்றியம் வரவு வைத்திருக் கிறதா ?

22. பயன்தரும் தொழில்கள்—

(அ) தனியார்/பொது அங்காடி களின் எண்ணிக்கை.

வார அங்காடிகளின், நாள் அங் காடிகளின் எண்ணிக்கை.

வசூல் வேலை மேலாண்மை செய்யப்படுவது துறையின ராலா ? ஒப்பந்த மூலமாகவா ?

(துறையினரால் என்றால், துறை யினர் மூலமாக வசூல் பதி வேடு வைத்து வரப்படுகிறதா?)

ஒப்பந்த மூலமாக என்றால், குத் தகை ஊராட்சியினால் உறுதி செய்யப்பட்டதா? குத்தகைத் தொகை ஒழுங்காக வசூலிக்கப் படுகிறதா?

பல்வகை கேட்புப் பதிவேடு மூல மாக வசூல் வேலை கவனித்து வரப்படுகிறதா ?

குத்தகைத் தவணைகளைச் செலுத்தத் தவறினால் தண்ட வட்டியுடன் நிலுவையை வசூலிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறதா ? (குத்தகைத் தொகை வழக்கமானதுதானா? இல்லையென்றால், அதற்குண்டான காரணம்.)

(ஆ) (i) பேருந்து நிலையம் இருக்கிறதா ?

(ii) அந்தப் பேருந்து நிலையத்தின் வகை யாது ?

(iii) 1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதியிட்ட 1922-ம் எண் உள்துறைப் பல்வகை அரசு ஆணையில் விதிக்கப்பட்டுள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா ?

(iv) வசதிகள் ஏற்கெனவே செய்து கொடுக்கப்பட்டிரா விட்டால், அவைகளைச் செய்து கொடுக்க என்ன ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன ?

(v) பேருந்து ஒன்றுக்கு வீதம் யாது?

(vi) கடந்த மூன்றாண்டுகளில் ஊராட்சிக்குக் கிடைத்த வருமானம் யாது ?

(இ) வண்டிப் பேட்டை இருக்கிறதா?

ஊராட்சிக்குக் கிடைக்கும் வருமானம் யாது ?

(ஈ) கால்நடை வெட்டுமிடம் ஊராட்சிக்கு இருக்கிறதா ?

ஒவ்வொன்றிலும் வெட்டப்படும் விலங்குகளின் எண்ணிக்கை.

விலங்கு ஒன்றுக்கு வீதம்.

பயிற்சிபெற்ற தோலுரிப்பவர் நிய மிக்கப்பட்டிருக்கிருரா ?

கடந்த மூன்ருண்டுகளில் ஊராட்சி யின் மொத்த வருமானம்.

(உ) கலவை உரம் தயாரிக்கப் படுகிறதா ?

மலத்தினுலான கலவை உரம் தயாரிப்பதற்கு அரசாங்கத்தார் கடன் ஒப்பளித்திருக்கிருர்களா ?

அது சரிவரப் பயன்படுத்தப்படு கிறதா ?

பொருத்தமானபதிவேடுகள் வைத்து வரப்படுகின்றனவா ?

களப்பணி எரு அலுவலர் கடைசி யாக எப்போது ஆய்வு செய் தார் ?

ஆய்வின் முடிவு யாது? .. ..

அது தன் துணைச் சார்பாக உள் ளதா ?

சேரவேண்டிய உதவித் தொகை கேட்டு வாங்கப்பட்டதா ?

23. நிழற்சாலைகள்—

(அ) நிழற் சாலையின் நீளமும் மரங்களின் எண்ணிக்கையும்.

(ஆ) 39-ம் எண் கி.ப. படிவத்தின் படி உள்ள பழமரங்கள் பற் றிய பதிவேடு, உரித்தாக்கப் பட்ட நிலங்களிலும், ஒப்படைக் கப்பட்ட நிலங்களிலும் இருக் கிற மரங்களுக்காகவென்று தனியாக வைத்து வரப்படு கிறதா? நிழற்சாலை மரங்களின் மேல் மாசூல்களைப் பயன்படுத்து வதனுல் கிடைக்கும் வருமா னம் யாது?

(இ) நெடுஞ்சாலை ஓரங்களில் நிழற் சாலைகள் இருக்கின்றனவா?

ஊராட்சி ஒன்றிய மன்றம் இவற்றை ஊராட்சி மேலாண்மைக்குக் கொடுத்துவிடத் தீர்மானித்திருக்கிறதா?

தீர்மானித்திருந்தால், இந்த ஆதாரத்திலிருந்து ஊராட்சிக்குக் கிடைக்கும் வருமானம் யாது?

(ஈ) ஊராட்சிகளிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற அரசினர் பொறியியல் பணித்துறை வாய்க்காலின் ஓரங்களில் புறம்போக்கு ஏதேனும் இருக்கிறதா? இருந்தால் இந்த ஆதாரத்திலிருந்து, நிழற் சாலைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் யாது?

(உ) வனமகோற்சவம் கொண்டாடப்படுகிறதா?

இந்த ஆண்டில் நடப்பட்ட கன்று, செடிகளின் எண்ணிக்கை, பிழைத்துக் கொண்டவைகளின் எண்ணிக்கை முதலியன.

24. வேளாண்மை—

(அ) ஊரக உற்பத்தித் திட்டமும் வேளாண்மைக் கொடை ஒதுக்கீட்டுத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கின்றனவா? ஊராட்சி அவற்றைத் தன் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டமாக ஏற்றுக்கொண்டிருக்கிறதா?

(ஆ) வேளாண்மைத் திட்டத்தின் சாதனை யாது? குறைவாயிருப்பதற்குக் காரணம் யாது? அடியிற் கண்டவைகளைப்பற்றி நிலைமைகளைச் சீர்திருத்த உங்கள் ஆலோசனை யாது?

(i) ஆய்வுக் காலத்தில் ஊராட்சி யினால் தயாரிக்கப்பட்ட தல எரு (யூனிட்டுகள்) அலகுகள் யாவை?

குறைவாயிருந்தால் அதற்குக் காரணம் யாது?

(ii) பசுந்தழை எருவைச் சீர் திருத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை கள்.

இதன்பொருட்டுத் தயாரிக்கப் பட்ட திட்டமும் வாங்கப்பட்ட கொடையும் யாவை?

(iii) எத்தனை ஊர்நலச் சேவகர் களை ஊராட்சிகள் தேர்ந் தெடுத்திருக்கின்றன?

(iv) "விதைப் பண்ணை உடன் படிக்கை" திருப்திகரமாகச் செயற்படுகிறதா?

'v) வேளாண்மைக் கொடை ஒதுக்கீட்டுத் திட்டத்தின்படி ஊராட்சிகளிடம் ஒப்புவிக் கப்பட்டுள்ள இனங்களி லிருந்து கிடைக்கும் ஈடு செய் யும் கொடை யாது?

(1961 செப்டெம்பர் 8 ஆம் தேதிய 2640 ஆம் எண் ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறைப் பலவகை அரசு ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள I ஆவது இணைப்பைப் பார்க்கவும்.)

(vi) செயல் விளக்கத்துக்காகவும் வாடகைக்காரியங்களுக்காகவும் ஊராட்சி சீர்திருத்தமான வேளாண்மைக் கருவிகளை உழவர்களுக்குக் கொடுக் கிறதா?

(இ) குடிமராமத்துப் பணிகளை மேற்கொள்கிறதா?

மேற்கொண்டால், என்ன வீதப்படி சட்டணங்கள் விதிக்கப்படுகின்றன?

ஆய்வுக்குட்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணியைப் பற்றி வரைக.

(ஈ) குடிமராமத்தில் குடியானவர்களை, தொழிலாளர்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வழக்கமான ஏற்பாடுகள் திருப்திகரமாகச் செயற்படுகின்றனவா? செயற்படாவிட்டால், இந்த இனங்களின் பராமரிப்பை மேற்கொள்வதற்கு ஊராட்சி எடுத்துக்கொண்ட நடவடிக்கை யாது?

(உ) புறம்போக்கு—

உரித்தாக்கப்பட்டவையும் முறைப்படுத்தப்பட்டவையுமான புறம்போக்குகளுக்காக வென்று, 83 ஆம் எண் ஊராட்சிப் படிவப்படி உள்ள புறம்போக்குகள் பதிவேடு தனியாக வைத்து வரப்படுகிறதா?

25. குடும்பக் கட்டுப்பாடு—

சமூகக் கல்விக் குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா?

குடும்பக் கட்டுப்பாட்டுப் பணி அக்குழுவினுடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா?

குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை செய்துகொள்ள எத்தனை சான்றுகள் வழங்கப்பட்டிருக்கின்றன?

ஒன்றியத்தின் மொத்த இலக்கில் ஊராட்சியின் வீதாசார இலக்கு எய்தப்பெற்றிருக்கிறதா?

இத்துறையில் ஊராட்சி எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?

பிறப்பு இறப்புகள் பதிவேட்டின் குறிப்பு ஊராட்சிகளின் மாதக் கூட்டங்களில் வைக்கப்படுகிறதா (ஊராட்சிகளுக்கு மட்டும்)?

இந்தத் திட்டம் சீர்படுவதற்காக ஆய்வு அதிகாரி கூறும் ஆலோசனை யாது?

26. குடிசைத் தொழில்கள்—

இப்பகுதியில் குடிசைத் தொழில்கள் எவையேனும் நடக்கின்றனவா?

நடந்தால் அவற்றின் விவரங்களைக் கொடுக்கவும்.

குடிசைத் தொழில்களை வளர்ப்பதற்காக இப்பகுதியில் ஊராட்சி ஒன்றியம் செய்து வைத்துள்ள வசதிகள் யாவை?

27. வரி விதிப்பு—

(அ) வீட்டு வரி—

விதிப்பு முறை யாது?

மூலதன மதிப்பா? ஆண்டு வாடகை மதிப்பா?

வரி விதிக்கப் பெற்ற வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாது?

குடிசைகள் எல்லாவற்றிற்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறதா?

சேர்க்கை, விடுகை ஆகியவற்றின் பட்டியல் வைத்து வரப்படுகிறதா?

ஐந்தாண்டுக் கொருமுறையான சீராய்வு எப்போது நடந்தது?

1950 மே 14 ஆம் தேதியிட்ட 945 எண் நில எடுப்புப் பலவகை அரசு ஆணையில் சொல்லியிருக்கிற படி, வரி செலுத்துவோருக்கு வழங்கப்பட்ட மூல பற்றுச் சீட்டுக் களை செயல் அலுவலர் சோதனை யாகச் சரிபார்த்தாரா?

முறைகேடாக ஏதாகிலும் தள்ளுபடி செய்யப்பட்டதா?

நிலுவைகளை வசூலிப்பதற்காக வலுக் கட்டாய முறைகள் மேற்கொள்ளப் பட்டனவா?

எதிலேனும் சான்றாணை பிறப்பிக்கப் பட்டதா? அல்லது உடைமை கைப் பற்றப்பட்டதா?

காலாவதியான வரியினங்கள் எவை யேனும் உண்டா?

அவற்றை வரப்பற்றுவதற்கு எடுத் துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:

பின்வரும் பதிவேடுகள் வைத்து வரப்படுகின்றனவா:—

(பேரூராட்சிகளுக்கு மட்டும்).

1. சீராய்வு மனுப் பதிவேடு.

2. மேல்முறையீடுகள் பதிவேடு.

3. வழக்குப் பதிவேட்கள்.

4. உறுப்பினரிகளிடமிருந்து சேர வேண் டிய வரிகள் பற்றிய பதிவேடு (எந்த உறுப்பினரேனும் தகுதியற்றவராகி விட்டாரா?)

5. குடியின்மை வரிக் குறைப்புப் பதிவேடு.

6. அசையாப் பொருள்கள் பற்றிய பதி வேடு.

7. உடைமைகள் மாற்றம் பற்றிய பதி வேடு.

8. வழக்குத் தொடர்வது பற்றிய பதிவேடு.

9. ஆணைகள் பற்றிய பதிவேடு.

10. தள்ளுபடி செய்வது பற்றிய பதிவேடு.

11. பல்வகை கேட்புப் பற்றிய பதிவேடு.

12. தண்டல் பதிவேடு.

13. வைப்பீடுகள் பற்றிய பதிவேடு.

14. வசூலிக்கப்படத் தக்க முன் பணங்கள் பற்றிய பதிவேடு.

பேரூராட்சியில் வசூல் பணியாளர் யாவர்?

ஒவ்வோர் இனத்தின் கீழும் வசூலிக்கப்பட வேண்டிய பட்டியல்களின் எண்ணிக்கை யாது?

வசூல் பணியை விரைவுபடுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

ஊராட்சியைப் பொறுத்தவரை, வசூல் வேலையை ஊராட்சித் தலைவர் கவனிக்கிறாரா?

1961 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் தேதியிட்ட 206144 ஆம் எண் அரசுக் குறிப்பாணையில் சொல்லியிருக்கிறபடி படிவங்களையும் பதிவேடுகளையும் கர்ணம் வைத்து வருகிறாரா?

வேண்டியிருக்கிற கேட்பு—வசூல்—நிலுவைப் பட்டியல் ஒவ்வொரு மாதமும் உரிய காலத்தில் அனுப்பப்படுகிறதா?

ஊர் வீட்டு வரியை ஈடு செய்வதற்கான கொடை நாளது தேதி வரை கேட்டுச் சரிக்கட்டப்படுகிறதா?

(ஆ) தொழில் வரி—

ஊராட்சி தொழில் வரி விதித்திருக்கிறதா?

விதிப்பு வீதம் என்ன?

ஒவ்வோர் அரையாண்டிலும் தொழில் வரி செலுத்துவதற்குட் பட்டவர்களின் பட்டியலை ஊராட்சி தயாரிக்கிறதா?

தொழில் வரிக் கேட்புப் பதிவேடு வைத்து வரப்படுகிறதா?

ஊராட்சிகளைப் பொறுத்தவரை இதன் பொருட்டு, 17, 18, 19, 20, 21 ஆம் எண் ஊராட்சிப் படிவங்களின்படி உள்ள பதிவுகளைக் கர்ணம் வைத்து வருகிறாரா?

(இ) வண்டி வரி—

வண்டி வரிக் கேட்புப் பதிவேடு ஒன்றை ஊராட்சி வைத்து வருகிறதா?

எல்லா வண்டிகளுக்கும் உரிமங்கள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா?

விதிக்கப்படும் வீதங்கள் யாவை?

இதன் கீழ் வருமானம் விளக்க முடியாமல் மறைந்து போகிறதென்று உமக்குத் தெரிய வந்திருக்கிறதா? அதனைத் தடுப்பதற்கான பரிகார முறைகள் யாவை?

(ஈ) மற்ற இனங்கள்—

பொது உடல்நலச் சட்டத்தின்படிக்கான தண்ணீர் வரியைப்போல், தனி வரி எதையேனும் ஊராட்சிகள் விதிக்கின்றனவா என்பதைக் கண்டெழுதவும்.

குறிப்பிட்ட காரியங்களுக்காகத் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 119 (3) பிரிவின்படி உழவு நிலங்களுக்குத் தனி வரி முதலியவை.

இதன் பொருட்டான கணக்குகள் விளக்க உரைகளின்படி வைத்து வரப்படுகின்றனவா?

அவைகளைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

(உ) ஊராட்சி உறுப்பினர்களிடமிருந்து சேரவேண்டிய வரிகளையும் கட்ட ணங்களையும் பற்றிய பதிவேடு வைத்து வரப்படுகிறதா? 1958 ஆம் ஆண்டின் தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் கண்ட 26 (1) பிரி வின்படி பாக்கிதாரர்களைப் பொறுத்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுறதா?

28. தணிக்கை—

கடைசியாக எப்போது ஊராட்சித் தணிக்கை செய்யப்பட்டது?

தணிக்கை அறிக்கை கிடைத்திருக் கிறதா?

தணிக்கையின் முடிவு யாது?

தணிக்கை முடியும்போது தீர்வாகாம லிருந்த ஆட்சேபனைகள் எத்தனை? அவற்றில் சம்பந்தப்பட்ட தொகை எவ்வளவு?

அவைகளைத் தீர்ப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

கணிசமான விடுபாடுகளும் செய்யத் தகாத செயல்களும் தணிக்கையில் காணப்பட்டனவா?

29. பணிகள்—

1. ஊராட்சிப் பணியை ஒப்படைப்பது, செய்து முடிப்பது, மதிப்பீடுகளைத் தயாரிப்பது, மதிப்பீடுகளுக்கு ஒப் பளிப்பு வழங்குவது, ஆட்சி-தொழில்

நுட்ப ஒப்பளிப்புகளை வழங்குவது, ஒப்ப அறிவிப்புகளை வரவழைத்து ஏற்றுக் கொள்வது, ஒப்பந்த உடன் படிக்கை, அளத்தல், அளவு சரி பார்த்தல், பட்டியல்களுக்குப் பணம் கொடுத்தல் ஆகியவைகளில் ஒழுங்கு முறைகள் எல்லாம் அனுசரிக்கப் பட்டிருக்கின்றனவா?

2 பின்வரும் பதிவுகள் சரிவர வைத்து வரப்படுகின்றனவா?

(அ) மதிப்பீடுகளையும் ஒதுக்கீடுகளையும் பற்றிய பதிவேடு.

(ஆ) ஒப்பந்தக்காரர்களைப் பற்றிய பதி வேடு.

(இ) ஒப்ப அறிவிப்புப் பதிவேடு.

(ஈ) அளவைச் சுவடி.

3. கட்டிடங்களும் முடிந்து போன மற்றப் பணிகளும் காலமுறைப்படி ஆய்ந்து பார்க்கபட்டிருக்கின்றனவா? கட்டிடம், பணிகள் ஆகியவற்றின் நிலைமை யைக் குறிப்பிடுக.

30. (அ) இழப்பு அல்லது தவருகப் பயன் படுத்தல் அல்லது கையாடல் ஏதேனும் நடந்திருக்கிறதா? நடந் திருந்தால், எவ்வளவு? யார் பொறுப்பாளி? இழப்பினை ஈடு செய்வது, அது போல் மறுபடியும் நடவாமல் பார்த்துக் கொள்வது முதலியவற்றிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கையைப் பற்றி முழுவதும் கண்டெழுத வேண்டும்.

(ஆ) செயல் அதிகாரிகள் புறக்கணிப் பால் அல்லது கவனக் குறை வினல் இழப்பு ஏற்பட்டதா? எவ் வளவு தொகை? அவை வசூலிக் கப்பட்டனவா?

(இ) தலைவர் அல்லது செயல் அலுவலர் மீது தண்டக் கட்டண விதிப்பு ஏதாகிலும் நிர்வாகமலிருக்கிறதா?

இருந்தால், விவரங்கள் கொடுக்க வேண்டும்.

பாகம் II.

1. **அலுவலக இடவசதி—**

ஊராட்சி அலுவலகம் எங்கே இருக் கிறது?

அது ஊராட்சியினால் வாடகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா? அல்லது அதற்குச் சொந்த மானதா?

அது போதிய இட அகலமுடையதா இருக்கிறதா?

அங்கே வெளிச்சமும் காற்றோட்டமும் இருக்கிறதா?

பணியாளர் தொகுதி—

ஒப்பளிக்கப்பட்ட பதவிகள் யாவை? சம்பள வீதங்கள் யாவை?

ஊராட்சியின் மொத்த செலவு என்ன? பின்வரும் பதிவேடுகள் வைத்துவரப்படுகின்றனவா?

(1) தகுதிகாண்பருவத்தினர் பற்றி பதிவேடு.

(2) பிணை வைப்புத் தொகைகள் பற்றிய பதிவேடு.

(3) ஊதிய உயர்வுகள் பற்றிய பதிவேடு.

(4) சம்பளச் செல்லுப் பதிவேடு.

(5) அதிகப்படி ஊதிய நிதிப் பதிவேடு.

(6) வசூலிக்கப்படத் தக்க முன் பணத் தொகைகள் பற்றிய பதிவேடு.

ஊராட்சியைப் பொறுத்தவரை, கோட்ட ஆட்சியாளரின் ஒப்புதலுடன் ஊராட்சிக் கர்ணத்தை ஊராட்சி எழுத்தராக நியமிக்க ஊராட்சி தீர்மானித்திருக்கிறதா?

அவருக்கு முறையாக படி கொடுக்கப் படுகிறதா? அது விதிகளின்படி இருக்கிறதா?

கர்ணமல்லாத வேறொருவர் எழுத் தராக நியமிக்கப்பட்டால், அவருக் குக் கொடுக்கப்படும் சம்பளம் யாது?

அது நிர்ணயிக்கப்பட்ட வரையறைக் குள் இருக்கிறதா?

அலுவலக ஆணைச்சுவடி.—

இது வைத்து வரப்படுகிறதா?

இக்கால அளவில் எத்தனை ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன?

விளக்க உரைகள் கருத்தாகக் கடைப் பிடிக்கப்படுகின்றனவா?

வருகைப் பதிவேடு—

இது வைத்து வரப்படுகிறதா?

ஊராட்சி அலுவலக நடைமுறை நூலில் கண்ட விதிகள் அனுசரிக் கப்படுகின்றனவா?

தற்செயல் விடுப்புப் பதிவேடு—

இது வைத்து வரப்படுகிறதா?

ஒவ்வொன்றிலும் அனுமதி முன்ன தாகப் பெற்றுக் கொள்ளப்படு கிறதா?

அதிகமாக நேர்வு விடுப்பு வழங்கப் பட்டுள்ளதா?

விண்ணப்பத்துடன் வருகைப் பதிவேட்டிலுள்ள பதிவுகள் சரிபார்க்கப்படுகின்றனவா?

பகிர்வுப் பதிவேடு—

மாவட்டக் கழக அலுவலக நடைமுறை நூலில் கண்ட விதிகளின் படி இது வைத்து வரப்படுகிறதா?

தன் பதிவேடு—

எத்தனை எழுத்தர்கள் இதை வைத்து வருகிறார்கள்?

மாவட்டக் கழக அலுவலக நடைமுறை நூலில் கண்டபடி இது சரிவர வைத்து வரப்படுகிறதா?

சில குறைபாடுகளைச் சொல்லுக; விளக்கவுரை தருக.

காலமுறைப் பதிவேடு—

இது வைத்து வரப்படுகிறதா?

காலமுறை இனங்கள் எத்தனை? அவை உரிய காலத்தில் அனுப்பப்படுகின்றனவா?

நடப்புக் குறிப்புக் கோப்பு—

இது வைத்து வரப்படுகிறதா?

தன் பதிவேடுகளையும் காலமுறைப் பதிவேடுகளையும் செயல் அதிகாரி ஒழுங்காகச் சரிபார்க்கிறாரா?

அவரது மறு ஆய்வைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

நிலுவைப் பட்டியலும் விவரமான நிலுவைப் பட்டியலும்—

இவை வைத்து வரப்படுகின்றனவா?

செயல் அலுவலர் அதை மறு ஆய்வு செய்து குறிப்புரைகள் வழங்குகிறாரா?

வைப்புத் தொகைப் பதிவேடு—

இது வைத்து வரப்படுகிறதா?

உள்ளூர்த் தபால் பதிவேடு இருக்கிறதா?

எல்லாவற்றிலும் ஏற்றுக் கோடல்கள் சரிவரப் பெறப்படுகிறன்னவா?

அஞ்சல் வில்லைக் கணக்குப் பதிவேடு—

இது வைத்து வரப்படுகிறதா?

அஞ்சல் வில்லைகளில் சூழ் வரிசைத் துளைகள் இடப்படுகின்றனவா?

கணக்கும் எஞ்சியிருக்கும் அஞ்சல் வில்லைகளும் சரிபார்க்கப்படுகின்றனவா?

தவிர்க்கக் கூடிய பதிவுக் கடிதங்கள் இருக்கின்றனவா?

மறு கவனிப்புப் பதிவேடு—

மாவட்டக் கழக அலுவலக நடைமுறை நூலில் கண்டுள்ளவாறு இது வைத்து வரப்படுகிறதா?

எழுதுபொருள்கள் பதிவேடு—

இது வைத்துவரப்படுகிறதா?

இது காலாண்டுக்கொரு முறை சரிபார்க்கப்படுகிறதா? செயல் அதிகாரி சான்று வழங்குகின்றாரா?

பணம் மதிப்புப் படிவங்களுக்காகப் பதிவேடு எதுவேனும் வைத்து வரப்படுகிறதா? அவைகளுக்குச் சரிவரக் கணக்கு காட்டப்படுகிறதா?

கருவிகள்—தளவாடங்கள் பதிவேடு—

இது வைத்து வரப்படுகிறதா?

இது காலாண்டுக்கொரு முறை அல்லது ஆண்டுக்கொரு முறை சரிபார்க்கப்படுகிறதா? சரிபார்த்தது பற்றிய சான்று வழங்கப்படுகிறதா?

பதிவான பொருள்கள் கிடைக்கின்றனவா?

அலுவலர் மந்தணக் கோப்புகள்

நிலைப் பணியாளர்கள் எல்லாருக்கும் இவை வைத்து வரப்படுகின்றனவா?

அவைகளில் சரிவரப் பக்கங்கள் குறித்து, அவைகளுக்குப் பொதி அட்டை இட்டு, செயல் அதிகாரி சுருக்கொப்பமிடுகிறாரா?

குறை உரைகளிருந்தால் அவை சம்பந்தப்பட்ட பணியாளருக்குத் தெரிவிக்கப்படுகின்றனவா?

பதிவுக் கட்டு அறை—

அது போதிய இட அகலமுடையதாயும் காற்றோட்டமுடையதாயும் இருக்கிறதா?

அட்டங்கள் ஏற்படுத்தி வைக்கப் பட்டுள்ளனவா?

அட்டவணைப் பதிவேடுகள் ஒவ்வொன்றும் வைத்து வரப்படுகிறதா?

பதிவுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளனவா?

குறைகளைக் காட்டி, விளக்கவுரை தருக.

தீப்பிடிக்காமலிருப்பதற்கு வேண்டிய பாதுகாப்புகள் இருக்கின்றனவா?

முக்கிய ஆணைத்தொகுப்பும் முடிவான கட்டுப் பதிவும்—

முக்கிய ஆணைத் தொகுப்பு வைத்து வரப்படுகிறதா?

முடிவான கட்டுப்பதிவுகள் வைத்து வரப்படுகின்றனவா?

முக்கிய ஆணைத் தொகுப்புகள் எல்லாவற்றிற்கும் சரிவரப் பக்க எண்கள் இட்டு, அவை அட்டவணைப்படுத்தப்படுகின்றனவா?

1966 மார்ச் 19 ஆம் தேதிய 755 ஆம் எண் ஊரக—வளர்ச்சி—உள்ளாட்சித் துறைப் பல்வகை அரசு ஆணை.